ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யஸபைப் பத்திரிகை.

[ஒரு வருஷத்திய 12 - ஸஞ்சிகைகள்.]

1911 — 1912.

(ஸாதாரண - விரோதிக்ருத்.)

வேதாந்த விசாரம் செய்யும்

## ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யன் பி.ஏ, எல்.டி.

கலா ரத்நாகரம் அச்சுக்கூடம்

சென்னை.

1912.

162434
600 008.

# விஷயங்களின் அகராதி.


அமலனாதி பிரான் ... ... ... 123
ஆதி வண் ஶடகோப ஸ்வாமி வைபவம் ... 5
ஆர்ய ஸஞ்ஜீவநம் ... ... ... 431,479.
உபாக்யாநங்கள் : ... ... ..
    கபோதோபாக்யாநம் ... ... 63,93.
    நாரத மஹர்ஷி ... ... ... 396.
    பதிவ்ரதா தர்மம் ... ... ... 307.
    ஶ்யேந கபோதீயம் ... ... 186.
    வ்ருத்ராஸுரன் ... ... ... 357.
    கஜேந்த்ர வரதன் ... ... ... 503.
கடிதங்கள் : —
    அஜாமிளன் முக்தி... ... ... 364.
    அஹோபிலம் ... ... ... 415.
    ஔபளாபுரம் ... ... ... 465.
    திருப்புல்லாணி அஹோபில மடம் ... 235.
    பாகவத தர்மம் ... ... ... 137,191,237,275.
    மடத்தின் சீர்திருத்தம் ... ... 72.
    ராகவன் கணையாழி ... ... 323,363,459.
    ராகவன் ப்ரதி ஶயநம் ... ... 363,411,456.
    லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்குச்
        சொந்தமான சொத்துக்கள் ... 322.
    வேதாந்த தீபிகை ... ... ... 367.
காளிதாஸன் காவ்யங்களும் அவர் மதக்
    கொள்கைகளும் ... ... ... 243,287.
கீதார்த்த ஸங்க்ரஹம் ... ... ... 212,298,388,440.
ஜார்ஜு சக்ரவர்த்யஷ்டகம் ... ... 464.
ஜார்ஜு மன்னரின் முடிசூட்டகவல் ... 462.
ஜீவாத்ம பரமாத்ம ஸம்வாதம் ... ... 12.
த்ராவிட வேத தாத்பர்யம் ... ... 141,179,266,345.
தத் க்ரது ந்யாய விமர்ஶம் ... ... 15,48,108.
நசிகேதஸ்ஸின் வரங்கள் ... ... 163,203.
பகவத் கீதை... ... ... ... 54.
பத்ராதிபரின் குறிப்புகள் : —
    அழகர் ஸந்நிதி ... ... ... 196.
    அழகிய சிங்கர் திருமேனி ... ... 120.
    அழகிய சிங்கரும் ஸபையும் ... ... 120.
    அஹோபில மடம் ... ... ... 423,472.
    ஆதிவண் ஶடகோப ஸ்வாமி ப்ருந்தாவநம் . 79,329.
    ஐந்தாவது ஜார்ஜ் பட்டாபிஷேகம் ... 467.
    கலெக்டர் ஆஷ் என்பவரின் வதம் ... 201.
    திருக்குடந்தை மஹாஸங்கம் ... ... 82.
    திருக்குறுங்குடி ஶிஷ்ய ஸபை .. 242.
    திருவெவ்வுளூர் ஏஜண்டு ... ... 121.
    திவ்யதேஶ மஹோத்ஸவங்கள் ... 158.
    நிகமாந்த மஹாதேஶிகன் உத்ஸவம் ... 325.

லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய விபூதி ... 239.
விவாஹத்தைப்பற்றிய ஒர் சட்டம் ... 241,280.
விஶிஷ்டாத்வைத ப்ரவசந ஸபை. ... 161.
வெண்ணாற்றங்கரைச் சங்கம் ... ... 35.
ஸ்ரீ கார்யம் ... ... ... 80,279,330.
ஸபையின் இரண்டாவது ஸங்கம் ... 371,427,471,527.
பத்ரிகையின் வரலாறு ... ... ... 1.
பாகவத தனிஶ்லோகி ... ... ... 148,229,262,317, 404,449.
புதிய க்ரந்தங்களின் விமர்ஶம் :—
தேஶிகன் ஸ்தோத்ரங்கள் ... ... 421.
பஞ்சகால ப்ரகாஶம் ... ... 321.
பகவத் கீதை ... ... ... 526.
வேங்கடநாதாசார்யர் சரித்ரச் சுருக்கம்... 422.
வேதாந்த தேஶிகன் ... ... 320.
மஹாஸங்கங்கள் :—
தஞ்சாவூர்ப் பிரிவின் மஹாஸங்கம் ... 77.
ஶிஷ்ய ஸபையின் முதல் மஹாஸங்கம் ... 25.
வார்த்தாமாலை .. ... ... 501.
விஶிஷ்டாத்வைதம் ... ... 99,128,172,221, 252,331.
வார்த்தாமாலை ... ... ... 501.
ஶிஷ்ய ஸபை :—
எக்ஸிக்யுடிவ் போர்ட் மெம்பர்கள் ... 30,515
எக்ஸிக்யுடிவ் போர்ட் மீடிங் ... ... 368,514.
முதல் மஹாஸங்கம் ... ... 25
முதல் மஹாஸங்கத்தின் தீர்மானங்கள் ... 29.
வரவு செலவு கணக்கு ... ... 154.
இரண்டாவது மஹாஸங்கம் ... ... 507.
வருஷாந்த அறிக்கை ... ... 518.
அங்கத்தினர்களின் மீடிங் ... ... 516.
2-வது ஸங்கத்தின் ஸ்வாகதம் ... 523.
2-வது ஸங்கத்தின் தீர்மானங்கள் ... 522.
ஸ்வாமிகளின் பரம்பரை ... ... 68.
ஸபாத்யக்ஷரின் முதல்மஹாஸங்கத்து உபந்யாஸம். 17,39,83.
,, ,, 2-வது ,, ,, அநுபந்தம்.
ஸபையின் பிரிவுகள் :—
கோயம்புத்தூர்ப் பிரிவு .. ... 32.
தஞ்சாவூர்ப் பிரிவு ... ... ... 76,278,370.
திருப்பதிப் பிரிவு ... ... ... 119.
தென் ஆர்க்காடு ஜில்லாப் பிரிவு 324.
மதிராஸ் - சைதாப்பேட்டைப் பிரிவு ... 31,74,117,156, 277,324,417,461
மைஸூர் பெங்களூர்ப் பிரிவு ... 33,324.
ஸாங்க்ய தர்ஶநம் ... ... ... 379,491.
ஸாமாந்ய நீதிகள் ... ... ... 47,67,78,92,98. 136,165.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
14 MAR 1911
MADRAS.

# வேதாந்த தீபிகை.

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை

ஸம்புடம் 1.] ஸாதாரண ஹு மாசி ௴. [சஞ்சிகை 1.

## பத்ரிகையின் வரலாறு.

நமது தேசத்தின் அபிவிருத்திக்கு ஏதுவான காரியங்களில் ஹிந்து மத பரிபாலனம் என்பது ஒரு அவசியமான காரியம். வியவசாய விருத்தியும் கைத்தொழில் விருத்தியும் ஐஹிகத்திற்குச் சாதனங்களாயிருப்பது போல, நம் மத ஆராய்ச்சி ஆமுஷ்மிகமென்கிற பரலோகப் பேற்றுக்கு முக்கியமான சாதனம். ஆனால், இது பரலோகத்திற்கு மாத்திரம் சாதனமென்பதில்லை : இவ்வுலகத்திலும் ஜனங்கள் அந்யோந்யமாய்க் கூடி வாழ்தற்கு, நற்குண நற்செய்கை முதலியன வழுவாமல் பொருந்தியிருத்தலும், தெய்வ பக்தியும், தீயன செய்வதில் அச்சமும் அவசியம் இருக்கவேண்டும். பகுத்தறிவு விசேஷமாயிருந்தாலும், பொதுவாய் நன்மையை நாடுவதில் விருப்பமிருந்தாலும், தெய்வ பக்தியென்னுங் கட்டு இல்லாவிட்டால் வேரற்ற மரம் போல நன்னடக்கை முதலியன சிதறிப்போய்விடும். இத்தெய்வ பக்தி, வரவர மதங்களின் திட்டமான கொள்கைகளை அறிந்து அவற்றிற்குத்தக்க

படி நடத்தலால் உண்டாக வேண்டிய ஒரு மனத்தின் நிலைமை. மதங்கள் பலவாறாக வேறுபட்டிருந்தாலும் தெய்வம் ஒன்று உண்டென்றும், அதனை வழிபடுவதே நற்கதிக்கு ஏது வென்றும் எல்லா மதங்களும் பொதுவாக ஒப்புக்கொள்ளுகின்றன. அப்படி ஒப்புக்கொள்வதில் நமது ஹிந்து மதம் முதன்மை பெற்றது. ஏனெனில், அநாதியாய் வழங்கிவரும் வேதாந்தமென்றும், உபநிஷத் என்றும் சொல்லப்படும் கிரந்தங்களை முதனூலாகக் கொண்ட இந்த ஹிந்து மதம், இந்த உலகமும் அதன் சுகங்களும் அநித்யமென்றும், பரலோகத்தின் முடிவற்ற நித்தியமான ஆனந்தத்தையே நாம் நாடுவது இன்றியமையாக் கடமை யென்றும் பலவாறாக முறையிடுகிறது. இக்காலத்தில் கலியின் கொடுமையினால் ஏற்படும் ஜீவன கஷ்டங்களினாலும், ஐரோப்பா அமெரிக்கா முதலான தேசங்களின் ஐசுவரியப் பெருக்கத்தை நோக்குவதில் உண்டாகும் வியப்பினாலும், பணம் தேடுவதில் நம்மவர்களுக்கு உண்டாகும் கவலைகளினாலும், நம் மதத்தின் உண்மைகளை அறிய வேணுமென்கிற எண்ணமே பலர்க்கு உண்டாவது அருமையாகி விட்டது. அப்படிச் சிலர்க்குச் சிலவேளை உண்டானாலும், அந்தந்த மதங்களில் விசேஷமாய் ஏற்பட்டுள்ள முறைமைகளையும் கட்டுப்பாடுகளையும் கடவாமல் தங்கள் தங்களுக்குத் தொன்றுதொட்டு வழக்கமாய் ஏற்பட்டுள்ள ஆசாரியர்களென்று சொல்லப்படும் குருக்களைத் தேடி ஆச்ரயித்து அவர்களிடம் தங்களுக்குத் தேவையான மதக்கொள்கைகளை உபதேச மூலமாக அறிந்துகொள்வது அசாத்தியமா யிருக்கிறது. அந்தக் குறையை இயன்றவளவு ஒருவாறு தீர்க்கலா மென்று எண்ணி, இந்த வேதாந்த தீபிகை என்னும் பத்திரிகையை நாளது மாதம் முதல், மாதம் ஒரு முறை பிரசுரப்படுத்துவதாக நாங்கள் நிச்சயித்திருக்கிறோம்.

தற்காலம் வெளிக்கு வாராமல் ஸம்ஸ்கிருத கிரந்தங்களிலும், தமிழ் நூல்களிலும், ஸம்ஸ்கிருதமும் தமிழும் கலந்த மணிப்ரவாளக் கிரந்தங்ப்ளிலும் அழுந்திக் கிடக்கும் விசிஷ்டாத்வைத மதத்தின் விசேஷதத்வங்களை வெளியாக்குவதே, இந்தப் பத்திரிகையின் முக்கியமான கருத்து. ஆனால், இதரமான அத்வைதம் த்வைதம் ஆகிய மதங்களின் ஸ்வபாவங்களும், அவற்றிற்கும் இதற்குமுள்ள பேதங்களும் அந்தந்த மதங்களை ஆராய்ந்தவர்களைக் கொண்டு எடுத்துக் கூறப்படும். மததூஷணை மென்பது



இந்தப் பத்திரிகையில் சிறிதும் வெளிவராது. நுட்பமான மதக்கொள்கைகளைத் தெளிவான தமிழ் நடையிலேயே பெரும்பாலும் விவரிப்போம். ஆனால், வைஷ்ணவ நூல்களில் வழங்கும் மணிப்ரவாள மென்னுங் கலப்பு நடையும், இதிற் சிறுபான்மை உபயோகிக்கப்படும். அந்த நடையிலே விசிஷ்டாத்வைத மதக் கிரந்தங்கள் ஏராளமாய் ஏற்பட்டிருப்பதால், அந்த நடையின் பழக்கமும் நம்மவர்க்கு அவசியந்தானே. உபநிஷத்துக்களிலிருந்தும் பகவத்கீதையிலிருந்தும் அருமையான விஷயங்கள், இந்த மதத்தின் ஸ்தாபகாசாரியர்களான பகவான் ராமாநுஜ னென்னும் ராமாநுஜாசாரியர். முதலானவர்கள் செய்தருளிய வ்யாக்யானங்களை அநுசரித்து, வியாஸங்கள் மூலமாய் இப்பத்திரிகையில் வெளிவரும். இந்த இரண்டு விஷயங்கள் மாத்திரமன்றி, இந்த மதத்திற்கென்றே ஏற்பட்டுள்ள ரஹஸ்யக் கிரந்தங்களிலிருந்தும், திருவாய்மொழி யென்றும் தமிழ்வேத மென்றும் சிறப்பித்துக் கூறப்படும் நம்மாழ்வார் பாசுரங்களிலிருந்தும், மற்றைய ஆழ்வார்களின் அருளிச்செயல்களிலிருந்தும் மிகவும் இனிமையான பல விஷயங்கள் எடுத்துக் கூறப்படும். அநேகமாய் ரஹஸ்ய க்ரந்தங்கள் ஸதாசாரியரிடத்தில் உபதேசமுகமாகப் பெறவேண்டுவதே கிரமமாயினும், அவைகளில் ச்ரத்தை யுண்டாக்க வேணுமென்றே இந்தப்பத்திரிகையில் அவைகளின் கருத்துக்கள் ஸ்தூலமாய் வெளியிடப்பட்டுவரும். ஸம்ஸ்கிருத பாஷையில் பயிற்சியில்லாதவர்களும் நாளடைவிலே அந்தப் பாஷையில் தேர்ச்சியடைய, மூலக்கிரந்தங்களின் வாக்கியங்களும், சுலோகங்களும் சமயம் நேர்ந்த விடங்களில் கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டு, தமிழில் தெளிவாக எழுதப்பட்ட பொருளோடு வெளியிடப்படும்.

இந்தப் பத்திரிகையை வெளியிடுபவர் "அகோபிலமட சிஷ்ய சபை" என்னும் சபையாராகையால், அந்தச் சபைக்கும் இதுவே பத்திரிகை யென்பது மேற் பெயரால் தெரியவரும். இந்தச் சபை, வைஷ்ணவர்களில் ஒரு பெருந்தொகையரான அஹோபில மடத்தின் சிஷ்யர்களில் சிலர் சேர்ந்து சில மாசகாலமாக ஏற்பட்டிருக்கிறது. தற்காலம் திருக்குடந்தைக்குச் சமீபத்திலிருக்கும் நரஸிம்மபுரமென்னும் கிராமத்தில் சில வருட காலமாய் எழுந்தருளி யிருக்கும் லக்ஷ்மீநரஸிம்மனும், அந்த எம்பெருமானுக்குரிய திருவாராதநம் முதலிய கைங்கரியங்களை நிர்வஹித்து

நடத்திவரும் ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீபராங்குசயதீந்த்ரமஹாதேசிகனென்னும் ஸ்வாமியுமே, இந்த அஹோபிலமடத்தாரென்னும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு முறையே தெய்வமும் ஆசாரியனுமாய் இருக்கிறார்கள். அந்த மடத்தின் நன்மைகளைக் கருதி அதை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர உத்தேசித்தே மேற் கூறிய சபை ஏற்பட்டிருக்கிறது. அடிக்கடி அந்த மடத்தினுடையவும் ஸ்வாமியினுடையவுமான விருத்தாந்தங்களும், மேல் பிரஸ்தாபித்த சபையின் கூட்டங்கள் விஷயமாயும் அதன்பாகங்களின் சம்பந்தமாயும் ஏற்படும் நடவடிக்கைகளும், இதில் பிரசுரமாகும்.

மேலும், ஸ்ரீமத் ராமாயணம் பாரதம் ஸ்மிருதிகள் முதலான கிரந்தங்களிலிருந்தும், ஸம்ஸ்கிருதபாஷையிலிருக்கும் காவ்ய நாடகங்கள் ஸ்தோத்திரங்கள் முதலானவைகளிலிருந்தும், ஸ்திரீகளுக்கும் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்னடக்கை தெய்வபக்தி குருவிச்வாஸம் முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் கதைகளும், இந்தப்பத்திரிகையில் வெளிவரும். இங்கிலீஷ்முதலான பாஷைகளிலிருந்தும் மேற்படி குணங்களைப் போதிக்கும் அம்சங்கள் அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழில் அச்சிடப்பட்டு வரும்.

இப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா. ரூபாய் இரண்டேயாகக் குறைவாய் ஏற்படுத்தியிருக்கிறது. இதன் உத்தேசங்கள் வெகுவாயிருந்தாலும் அவைகளை நிறைவேற்ற விசேஷமாய்ச் சந்தாதாரர்களுடைய உதவியே அவசியம் வேண்டும். ஆகையால், நம் ஹிந்துமதஸ்தர்களும், விசேஷித்து விசிஷ்டாத்வைதத்தில் அபிமானிகளும், பொதுவாய் மாணாக்கர்களும், இப்பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---



# ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி வைபவம். *

இந்த உலகத்தில் இப்பாரதகண்ட மொன்றே புண்ணியபூமி. இது புண்ணியக்ஷேத்திரங்களாலும் புண்ணிய தீர்த்தங்களாலும் விளங்கியுள்ளது. ராமகிருஷ்ணாதி அவதாரங்கள் நடந்த நிலம் இதுவே. ரிஷிகளாலும் ஆழ்வாராசாரியர்களாலும் மங்களாசாஸநம் செய்யப்பட்ட தேசமும் இதுதான். பரமஆப்தங்களான வேதாதி சாஸ்திரங்களும் இங்கே அவதரித்தன. இப்படி இது ஸர்வோத்கிருஷ்டமான கண்டமாகையால், அப்போதைக்கப்போது இதன் ரக்ஷணத்திற்கு வேண்டிய கிருஷியை பஹுமுகமாக ஸர்வேச்வரன் செய்துவருகிறான்.

பரமகாருணிகனான அந்த ஹிரண்யன், இந்தக்கண்டம் மிலேச்சாதிகளால் ஆக்கிரமிக்கப்படுமெங்காளில், தான் மகத்தான பிரயாஸையெடுத்து ஸ்தாபித்த ஸநாதந தர்மத்துக்குக் குறையொன்றும் வாராமலிருக்கும்படி அணைகோலக்கருதி, தன்திருவடிஸம்பந்தமே அதற்குச் சிறந்த அரணாகையால், உலகமெல்லாம் தன்னைப் பூர்வத்திலேயே ஆச்ரயித்து ஈடேறும்படி செய்யவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, தான் நேரில் அவதரிக்கும் காலம் வருங்காலமாகையால், அத்திருவுள்ளக்கருத்தை •ஸதாசாரிய னொருவரைக் கொண்டு பூர்த்திபண்ணக் கிருஷிசெய்யத் தொடங்கினான்.

அக்கிலத்தில், கல்யப்தம் 4480-† வதான சித்தார்த்தி வருஷம் புரட்டாசி மாஸம் சுக்லபக்ஷம் பஞ்சமி ஜ்யேஷ்டாநக்ஷத்திரம் கூடின வியாழக்கிழமையில் தனுர்லக்கினத்தில் மேல்நாட்டில் திருநாராயணபுரத்தில் கிடாம்பி கேசவாசாரியருக்கு ஒரு திருக்குமாரர் அவதரித்தார். ஜனித்தபோதே அக்குழந்தை அங்குரிக்

* (இந்த உபந்யாஸம் ஸம்ப்ரதாய ரக்ஷாவளியிலிருந்து ஸங்க்ரஹிக்கப்பட்டு, வெண்ணாற்றங்கரை மஹா சங்கத்தில் ஸ்ரீமாந். இ. ரங்கநாதாசாரியரால் செய்யப்பட்டது.)

† இது கி. பி. வருஷம் 1379-ன் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களுக்குச் சரியாகும்.

கும்போதே மணத்துடன்கூடிய திருத்துழாய்போல ஸதாசாரிய லக்ஷணங்களால் விலக்ஷணமாய் விளங்கக் கண்டு, கேசவாசாரியர் முதலானோர்கள் மிகுந்த ஸந்தோஷத்தை யடைந்து, ஜாதகர்மம், நாமகரணம் முதலியவற்றை விதிப்படிசெய்து குழந்தைக்கு ஸ்ரீநிவாஸன் என்று பெயரிட்டார்கள். பிறகு அந்நப்ராசநம், சௌளம், அக்ஷராப்யாஸம், உபநயநம் இவைகளை யதாகாலம் யதாசாஸ்திரம் செய்திட்டு வேதாப்யாஸமும் செய்வித்தார்கள்.

பிதாவான கேசவாசாரியர் இவருக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை ஓதுவித்தார். இவர் பால்யத்திலேயே அதிமேதாவியாய் ஸாமாந்ய சாஸ்திரங்களில் அதிஸமர்த்தராய், மயர்வறமதிநலமருளப்பெற்ற நம்மாழ்வாரைப்போல ஞானபக்திஸம்பன்னரா யிருக்கக் கண்டு, கேசவாசாரியர், இவருக்கு ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் தகுந்த ஆசாரியரைக்கொண்டு அதிகரிப்பித்து வைக்கவேணுமென்று நினைத்து, அப்போது பெருமாள்கோயிலில் வேதாந்த காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்த நடாதூர்அம்மாள்திருப்பேரரான கடிகாசதம்அம்மாள் என்று ப்ரக்யாதிபெற்ற வரதவிஷ்ணுவாசாரியர் ஸ்வாமி திருவடிகளில் வேதாந்தார்த்தங்களை யெல்லாம் ஸேவிக்கும்படி இவரை நியமித்தருளினர். அந்த நியமநப்படி உடனே ஸ்ரீநிவாஸாசாரியர் தம் பிதாவை வணங்கி விடைபெற்றுத் திருநாராயணபுரத்தினின்று பெருமாள்கோயிலை யடைந்து ஸ்ரீ வரத விஷ்ணுவாசாரியரிடத்தில் வந்தநபூர்வமாகத் தமது திருத்தகப்பனாரின் நியமநத்தை உள்ளபடி விஜ்ஞாபித்தார். அதுகேட்ட ஸ்ரீ வரத விஷ்ணுவாசாரியர் மிகுந்த ஸந்தோஷமடைந்து இவரிடத்தில் பூர்ண கடாக்ஷத்தை வைத்து, இவருக்கு ஸ்ரீ பாஷ்யம், ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரம், பகவத்விஷயம் முதலான தர்சந க்ரந்தங்களையும், ஸ்ரீ பாஷ்யகாரர் நாள்தொட்டுத் தமக்கு அவிச்சிந்நமாய்க்கிடைத்த ரஹஸ்யார்த்தங்களையும் ஸாங்கோபாங்கமாக ப்ரஸாதித்தார்.

இப்படி இவர் மஹாஜ்ஞாதாவாய், "இருமுப்பொழுதேத்தி" என்கிறபடியே பஞ்சகாலப்ரவணராய் நித்யம் பேரருளாளன் திருவடிகளைத் தொழுதுவரு நாளில், ஒருநாள் இரவில், "சிங்கவேழ்குன்றுடையான்" என்றும், "சிங்கவேழ்குன்றமே" என்றும் கூறப்பட்டுள்ள மிகுந்த வைபவத்தையுடைய ஸ்ரீமத் அஹோபிலக்

OFFICE OF THE ... BOOKS, REGISTERED 14 MAR 1911 MADRAS.



கிற் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பரமகாருணிகனான லக்ஷ்மீநரஸிம்மன், தாம் செய்த க்ருஷி பலித்ததென்று இவரைப்பற்றி மகிழ்ந்து இவர் சொப்பனத்தில் எழுந்தருளி ஸேவைஸாதித்துத் தம்மைச் சேவிக்கும்படி செய்து "நீர் நம் அஹோபிலத்துக்கு வாரும்; உமக்குத் துரீயாச்ரமம் தருகிறோம்" என்று அருளிச்செய்தார். மறுநாட் காலையில் பரமைகாந்தியான ஸ்ரீநிவாஸாசாரியர் தாம் கண்ட கனவைத் தமது ஆசார்யனிடத்தில் விண்ணப்பஞ் செய்யக் கேட்டு, குரு வியந்து "இது பகவானுடைய நியமநமாகும்; நீர் அஹோபிலம் போய் வாரும்" என்று நியமித்தார். இவர் அந்த நியமநத்தைச் சிரஸா வகித்துப் பேரருளாளனிடத்தில் விடைபெற்றுப் பெருமாள்கோயிலினின்றும் புறப்பட்டு வடநாட்டுத் திருப்பதியான அஹோபிலம் சென்று, அங்குப் பவநாசினியில் நீராடி அநுஷ்டாநங்களைச் செய்து பரபரப்புடனே சிங்கவேழ்குன்றுடையான்கோயிலுக்குப்போய் அழகியசிங்கரை அநேக ப்ரணாமபூர்வமாக மங்களாசாஸநம் செய்து நிற்க, அழகியசிங்கர் ஒரு யதிரூபியாய் இவருக்கு முன்னே எழுந்தருளி இவருக்கு ப்ரேஷமந்திரத்தை உபதேசித்து அவ்விடத்தில் இராமாநுஜன் ஸந்நிதியி லிருந்த காஷாயங்களைக் கொடுத்து "சடகோபஜீயர்" என்று தாஸ்யநாம மிட்டு, தம்மிடத்திலிருந்த திருவாழி திருச்சங்குகளைத் தந்து "நீரும் நம்மை ஆராதித்துக்கொண்டு, பிரதி கிராம நகரம் ஸஞ்சரித்து, ஆச்ரித ஜனங்களுக்குத் திருவிலச்சினை, மந்திர மந்திரார்த்த ப்ரதிபாதநம், பரந்யாஸம் முதலான உஜ்ஜீவந உபாயங்களைச் செய்துகொண்டு, ஆழ்வார், எம்பெருமானார், நிகமாந்த தேசிகன் முதலானவர்களாலே ப்ரதிஷ்டாபிதமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி நிர்வஹித்துக் கொண்டுவாரும்" என்று நியமித்தருளினர். * இந்த நியமநந்தான் ஸ்ரீ அஹோபில மட ஸ்தாபநத்தின் மூலசாஸனம்.

பின்பு லக்ஷ்மீ நரஸிம்மனுக்கு ஆராதநம் கண்டருளி, அங்கு எழுந்தருளியிருந்த த்ரிமூர்த்திகளில் பெரிய பிராட்டியாராலே அலங்கிருதரான லக்ஷ்மீநரஸிம்மன் என்னும் திவ்ய மூர்த்தியைப் ப்ரார்த்தித்து எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, மிகுந்த வைபவத்துடனே ஆராதித்து வந்தார். அந்தத் திவ்ய தேசத்து

* இப்படி இந்த ஆசாரியர் ஸந்யாஸம் வகித்தது அவர் 20 - வது திருநக்ஷத்திரத்தில் என்று தெரிகிறது.

ஆஸ்தாக நிர்வாஹகர்கள் இவருடைய மகிமையைப் பார்த்து ஸந்நிதியைச் சேர்ந்த அதிகாரமனைத்தையும் இவரிடத்தில் ஸமர்ப்பித்து, தங்களை உரிய கைங்கரியங்களில் நியமித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்படியே அவர்களை நியமித்துச் சிறிதுகாலம் அவ்விடத்தே எழுந்தருளி யிருந்து, பின்னர்ப் பாண்டியநாட்டிலுள்ள திருநகரியில் சென்று ஆழ்வாரைஸேவிக்கத் திருவுள்ளமாய், அழகியசிங்கரை ஒருதிருப்பல்லக்கிலே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு அநேக வாத்தியகோஷத்துடனும் அந்தணர் குழாங்களுடனும் கூடிப் புறப்பட்டுச் சென்றார். சென்று திருநகரியை அடைந்த பிறகு அங்கு ஆழ்வாரைக் காணாமையால் ஜீயர் மிக்க துக்கத்தை யடைந்தார். அப்பொழுது மதாந்தரஸ்தர்கள் ஆழ்வாரை ஸந்நிதியினின்றும் அப்புறப்படுத்தி ஒரு சுனையில் மறைத்துவிட்டு, அவ்விடத்தில் வேறு ஒரு தேவதையை ஸ்தாபித்து விட்டார்கள். ஜீயர் கண்ணும் கண்ணீருமாய் ஆழ்வாரைத் தியானித்திருக்கையில், அத்தேசாதிபதி வேட்டைக்காகத் தாம்ரபர்ணி நதிக்கரையில் வந்தவளவில், அதிதேஜிஷ்டரா யிருக்கிற நம் ஜீயரைக் கண்டு அருகேசென்று ஸேவிக்க, ஜீயரும் அவனைக் கடாக்ஷித்தார். தேசாதிபதி ஜீயரிடத்தில் மிகுந்தபிரதிபத்திவைத்து 'அடியேனுக்கு ஏதேனும் ஒரு கைங்கரியம் கிருபை செய்தருளவேணும்' என்று பிரார்த்திக்க, ஜீயரும் உகந்து ப்ரபந்ந ஜந கூடஸ்தரான ஆழ்வாரை அப்புறப்படுத்தியிருக்கும் விருத்தாந்தத்தை அவனுக்கு உரைத்து 'ஆழ்வாரை மீண்டும் திருப்பிரதிஷ்டைசெய்து நிருபத்திரவமாய் நித்திய உத்ஸவங்கள் நடத்திவரக்கடவாய்' என்று நியமிக்க, அத்தேசாதிபதியும் கவலையுடன் நடந்த சங்கதிகளை விசாரித்து ஆழ்வாரை மறைத்துவைத்திருக்குமிடத்தை யறிந்து ஸமஸ்தமான வரிசைகளுடனே ஜீயரை அழைத்துக்கொண்டு அவ்விடம் சென்று ஆழ்வாரைச் சுனையில்நின்றும் எழுந்தருளப் பண்ணினவளவில், ஜீயரும் மிகுந்த ஆநந்த பரிதராய் இரண்டு கைகளாலும் ஆழ்வாரை எடுத்து மார்பிலணைத்து 'லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி வேதம்தமிழ்செய்த நீர் நம் ஆழ்வாரன்றோ!' என்று அழைத்துக் கனகமயமான திருப்பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு அநேக வாத்திய கோஷத்தோடு அந்தணர்கள் வேதபாராயணமும் திராவிடபிரபந்தாநுஸந்தாநமும் செய்துவரத் திருநகரி யடைந்து பூர்வம்போலே ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணினார். உடனே பாண்டியராஜன் ஜீயர் நியமப் பிரகாரம் மண்



டபாதிகளைக் கட்டி அம் மண்டபத்தின் மேற்குப்புறத்தில் ஜீயரையும் பிரதிமாரூபமாக எழுந்தருளப் பண்ணுவித்து உத்ஸவாதிகளையும் நடத்தி வந்தான்.

ஒரு மஹோத்ஸவத்தில், ஜீயர் ஆழ்வாரையும் பொலிந்து நின்றபிரானையும் மங்களாசாஸநம் செய்தருளும்போது, ஆழ்வார், "நீர் நம்மை முன்போலப் பிரதிஷ்டாபித்து நிலைநிறுத்தினவாகையாலே, உமக்குப் பாரிதோஷிகமாக நாம் இப்போது பிரஸாதித்த வரிசைகளைப் பெற்று ராமாநுஜதரிசனத்தை நிர்வஹித்து வரக்கடவீர்" என்று நியமித்து, தாம் திருக்கையிற் கொண்டிருந்த ஹம்ஸமுத்திரையைப் பிரஸாதித்து ஆதிவண் சடகோப ஜீயர் என்ற திருநாமத்தையும் தந்தருளினார். பின்பு ஜீயர் அங்கே நம் நிகமாந்த தேசிகனைத் திருப்ரதிஷ்டைசெய்து நம்மாழ்வாருடனே திருப்புறப்பாடு செய்வித்து உத்ஸவம் கண்டருளப் பண்ணினார். முதல் தீர்த்தம், அருளிப்பாடு, திருமாலை, திருப்பரிவட்டம் முதலான வரிசைகளையும் பெற்று 'ஸ்ரீ சடகோப ஸ்ரீ' என்று ஸ்ரீமுகம் முதலானவைகளில் எழுத்திடும்படியாய் நியமிக்கப்பெற்றார்.

பின்பு ஆதிவண் சடகோப ஜீயர் திருநகரியை விட்டு வடதேச யாத்திரையாய் எழுந்தருளினார். விஜயநகரத்தில் ராஜவம்சத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தியான முகுந்த தேவராயன் என்பவன் ஜீயருடைய வைபவத்தில் ஈடுபட்டு, அவருடைய திருவடிகளை ஆஶ்ரயித்து ஸமஸ்தமான வரிசைகளையும் ஸமர்ப்பித்தான். ஜீயர் இவ்வரிசைகளைப் பெற்று ஸ்ரீ புருஷோத்தமத்திற்கு எழுந்தருளி, அவ்விடத்தில் அநேகர் தம்முடன் தர்க்கித்துச் சாஸ்திரவாதங்களைச் செய்ய, அவ்வாதங்களை நிரஸித்துப் பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை அங்கே நிலைநிறுத்தினார். ஜீயர் அந்தத் திவ்யதேசத்தில் ஆழ்வார் எம்பெருமானாருடைய ஸந்நிதிகள் இல்லாமையைக் கண்டு அவர்களுடைய திவ்யமங்கள விக்கிரகங்களை ஏறியருளப் பண்ணித் திருப்ரதிஷ்டை செய்தார். ஜீயர் புருஷோத்தமத்தை விட்டு மீண்டு கர்நாடக ஸம்ஸ்தானம் எழுந்தருள, அங்குள்ள ராஜாவும் அதிப்ரீதியுடனே ஸ்வாமியை ஆதரித்து வந்தான்.

இப்படி ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு வருங்காலத்தில் பிரஸித்தரான மணற்பாக்கம் தோழப்பர் என்னும் ஒரு வித்வான், ஜீயர் திருவடிகளிலே ஆஶ்ரயித்தார். ஜீயர், மஹாஜ்ஞா

நாவான அவரை நோக்கி "எல்லாரும் எளிதாக அநுஷ்டிக்கும்படி லோகோபகாரமாகச் சில தர்மசாஸ்திரங்களை நீர் பண்ண வேண்டும்" என்று நியமிக்க, தோழப்பரும் அந்நியமனப்படிக்கு ஆசௌச சதகம் முதலான * எட்டுக் கிரந்தங்களைச் செய்து ஜீயர் திருமுன்பே வைக்க, அவர் அவைகளைக் கடாக்ஷித்து உவந்து, இவருக்கு 'வைதிக ஸார்வ பௌமர்' என்ற திருநாமம் பிரஸாதித்தருளினர். இப்படி எழுபத்து நான்கு ஸிம்மாஸநாதிபதிகள் திருவம்சத்தார்களும் அழகியசிங்கர்திருவடிகளை ஆஸ்ரயித்தார்கள்.

இவ்வாறு ஜீயர், திவ்யதேசங்கள்தோறும் ஸஞ்சாரம் செய்துகொண்டு ஸத்சிஷ்யர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் முதலான ஸம்ப்ரதாயக் கிரந்தங்களை உபதேசித்து, ஆச்ரித ஜனங்களுக்குத் திருவிலச்சினை முதலான ஹிதவியாபாரங்களால் உபகரித்து, ஆதியில் தமக்கு அழகிய சிங்கர் செய்தருளிய நியமனத்தைத் தலைக்கட்டி அறுபது சாதுர்மாஸ்யம் † ஆஸ்தானத்தில் எழுந்தருளி யிருந்தார்.

இவர் செய்தருளின கைங்கரியங்களில், திருநகரியில் நம்மாழ்வார் திருப்பிரதிஷ்டை முதலான சில கைங்கரியங்கள் மேலே பிரஸ்தாபிக்கப்பட்டன. மற்றைக் கைங்கரியங்களுட் பிரதானமானவை: (1) திருமலைக்கு ஸோபாநமும், (2) காஞ்சிபுரத்திற் பேரருளாளன் ஸந்நிதியின் நூற்றுக்கால் மண்டபமும், வாகன மண்டபமும்,(3) அதையடுத்த தூப்புலில் நிகமாந்த தேசிகனுக்குத் தனிக்கோயிலும், (4) திருநாராயண புரத்தில் கோபுரநிர்மாணமும், தேசிகனுடைய திருப்பிரதிஷ்டையும், (5) திருநகரியிலும் திருநாராயணபுரத்திலும் மடங்களுமாம். திருநாராயணபுரத்தில் திருக்கல்யாணி தீரத்தில் இவர் பிருந்தாவனம்.

மேல் விவரித்த சரித்திரத்தினால், இந்த அஹோபிலமடம் அழகிய சிங்கர் நியமனத்தினால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், இந்த நியம

* அவையாவன:—ஆசௌசஸதகம், பித்ருமேதஸாரம், இவைகளின் வியாக்யானங்கள், ஊஹநிர்ணயம், [illegible], இதற்கு வியாக்யானம், கண்டபூஷணம், மிகவும் விஸ்தாரமான ஸ்மிருதிரத்நாகரம்—ஆகிய எட்டு.

† 'சாதுர் மாஸ்யம்' என்பது - வர்ஷாகால மென்று சொல்லப்படும் மாதங்களை முக்கியமாய்க் கருதி, அதன் மூலமாய் 'வருஷம்' என்று அர்த்தமாகும்.



கத்தின் பொருள், தம் ஆராதனத்திற்கு எழுந்தருளும் ஜீயர் தம்மை ஆராதித்துக்கொண்டு தேசாடனம்செய்து பூர்வாசாரியர்களால் பிரதிஷ்டாபிதமான சரணாகதிசாஸ்திரத்தைப் பிரவசநம் பண்ணி உலகத்தைத் திருத்தி உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமென்றும், ஆஸ்திகருக்கு ஸ்பஷ்டமாய் விளங்கும். இது, ஆதிவண் சடகோப ஜீயருடைய அநுஷ்டாநத்தை அடியொற்றி அவருக்குப் பின் அந்த ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்த ஜீயர்களுடைய சரித்திரங்களாலும் ஊர்ஜிதமாகிறது. "நிமித்தமாத்ரம் பவ" என்று ஸாது பரித்ராணம்செய்ய உத்யோகித்த பார்த்தஸாரதி பார்த்தனை நியமித்தது போல, ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்மன் ஆதிவண் சடகோபஜீயரை நியமித்துத் தம்முடைய பரமாசாரியத்வத்தை இந்தக்கலியிலும் காட்டி வருகையாலன்றோ இம்மடத்திற்கு ஏற்றம்?

இந்தமடத்தின்பிரபாவம் தற்காலம் மிகவும் குறைந்திருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இதனுடைய பிரபாவம் குன்றாமலிருக்கும்படி தகுந்த கிருஷிகளைச் செய்வதற்கென்றே ஸ்ரீ அஹோபிலமட சிஷ்ய சபை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கைங்கரியத்தில் அசேஷ ஸந்நிதி சிஷ்யர்களும் அந்வயிக்க வேண்டுமென்பது ஸபையாருடைய பிரார்த்தனை. ஆகையால்,

"வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்
வந்து மண்ணும் மணமும் கொண்மின்;
கூழாட்பட்டு நின்றீர்களை
யெங்கள் குழுவினில் புகுதலொட்டோம்."

# ஜீவாத்ம பரமாத்ம ஸம்வாதம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

---

இந்தச் சுலோகம் விசிஷ்டாத்வைதத்தின் முறையை யநுஸரித்து ஜீவாத்ம பரமாத்மாக்களின் சம்பந்தத்தை விவரிக்கிறது. இது பராசரபட்டரென்னும் ஆசாரியரால் ஒரு கால் ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாள் திருமஞ்சனங்கண்டருளி ஈரவாடையும் திருத்துழாய் மாலையுமாக எழுந்தருளியிருக்கிற அவஸரத்தைத் தியானித்து உத்ப்ரேக்ஷை யென்னும் அணி பொருந்த இயற்றப்பட்டது. இதன் கருத்து:—

பரமாத்மா (ஜீவனைப்பார்த்துச் சொன்னது): நீ என் தாஸன். [அதாவது—நீ எனக்கு அடிமை.]

ஜீவாத்மா: அல்ல, நான் எனக்கே உரியன்.

பரமாத்மா: ஏன் அப்படி?

ஜீவாத்மா: நீர் சொல்வதெப்படி?

பரமாத்மா: நான் சொல்வதற்கு வேதமாகிய [illegible] முண்டு.



(“[illegible]” என்று ஸ்ருதி இருப்பதால், எழுத்து ரூபமாயிருக்கும் வேதமே தனக்கு ஆதார மென்கிறார்).

ஜீவாத்மா: அநாதியான எனது அநுபவமே எனக்குப் பிரபல மான பிரமாணம்.

(தான் சம்மதியாத எழுத்துத் தன்னைக் கட்டுப்படுத்தாது என்றும், ஆக்ஷேபியாமல் அந்யனை அநுபவிக்கப் பார்த்திருந்தால் எழுத்தின்பலம் இழக்க நேரிடும் என்றும் ஜீவன் அபிப்பிராயம். “[illegible]” என்றார் யாஜ்ஞவல்க்யர்).

பரமாத்மா: அப்படியா! உன் அநுபவம் செல்லாது: நான் அடிக்கடி தடைசெய்திருக்கிறேன்.

(“[illegible]” என்கிற குணங்களுள்ள அநுபவம் வேண்டு மென்பது விஜ்ஞாநேச்வர வாக்கியம்).

ஜீவாத்மா: எங்கே தடை? யார் தடை செய்தார்கள்?

பரமாத்மா: கீதை முதலான இடங்களில் நானே தடைசெய் திருக்கிறேன்.

(“[illegible]” என்றும், “[illegible]” என்றும், “[illegible]” என்றும் சொல்லுகிற வசனங்கள் இங்கு அநுஸந்தேயங்கள்).

ஜீவாத்மா: அதற்கு ஸாக்ஷீ உண்டா?

பரமாத்மா: ஸ்ருதி ஸ்ம்ருதிகளையறிந்த வித்வானைக் கேள்.

ஜீவாத்மா: அவன் உன்னைச்சேர்ந்தவன்.

(“ஸஹாயிநஸ்தஸ்கரா:” என்றும், “த்ருஷ்டதோஷ:” என்றும், ஸாக்ஷித்துக்குத் தகுதியல்லாதவர்களைச் சொல்லியிருப்பதால், “ஜ்ஞாதீஸ்வாமிநமேவ ஸாக்ஷிகம்” என்று நீர் கொண்டாடும் உமது தோழன் வ்யவஹாரத்தில் ஸாக்ஷியாய் ஒப்புக்கொள்ளப்படமாட்டான் என்கிறுன்).

இப்படித் தன் விவிதத்தையும் அநுபவத்தையும் ஸாக்ஷியையும் ஶாஸ்த்ரத்துக்கநுகுணமான யுக்திகளைக்கொண்டு நிராகரித்த ப்ரதிவாதிக்கு நிஷ்ப்ரமாணமாகிற பயத்தைச் செய்து தன் சொத்தைக் கைப்பற்றத்துணிந்த ஹம்ஸவாஹு, “ஸசேலம் ஸ்நாத ஆஹூய ஸூர்யோதய உபோஷிதம் | காரயேத்ஸர்வதிவ்யாநி” என்கிற வசனத்துக்கு அநுகுணமாக, திருமஞ்சனஞ் செய்து ஆர்த்ரவாஸஸாய்த் துளஸிமாலையுடன் ப்ரமாணஞ்செய்வதுபோலிருக்கிறார் என்கிறார். த்ருஷ்டதோஷனுவது - வேறு ப்ரமாணமில்லாமல் தன் பயத்தையே கொண்டு வ்யவஹாரத்தை ஜயிக்கிறவன்.

டி. ராஜகோபாலாசாரியர்.

---



## தத்க்ரது ந்யாய விசாரம்.

ஸ்ரீமத்க்ருஷ்ணமுநீந்த்ரார்ய சரணௌ ஶரணம் பஜே |
யதநுத்யாநதோ ந்ருணாம் நஷ்டமஜ்ஞாநஜம் தம: ||

ஸ்ரீ ப்ரஹ்ம ஸூத்ரத்தில் ப்ரஹ்ம ஸ்வரூபம் போலவே ஜீவாத்ம ஸ்வரூபத்தையும் உபாஸநம் செய்யவேண்டியது என்று, “ஆர்யாணாமேவமேவம் ந்யாஸ: ப்ரஹ்மஸ்வ”, “ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச” என்கிற ஸூத்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஆத்ம ஸ்வரூபத்தை ஸம்ஸார தசையிலிருக்கிற கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை யுடையதாக உபாஸிக்கிறதா, அல்லது மோக்ஷதசையில் வருகிற அபஹதபாப்மத்வம் முதலிய ஆகாரங்களை யுடையதாக உபாஸிக்கிறதா என்கிற ஸம்சயத்தில், “ஏக ஆத்மந: ஶரீரே பாவாத்” என்கிற ஸூத்ரத்தால் பூர்வபக்ஷம் சொல்லப்படுகிறது. இந்த ஸூத்ரத்தின் அர்த்தம்:—ஜீவாத்மா கர்மக்ருதமான சரீரத்துக்குள்ளிருப்பதனுல், ஜீவாத்மோபாஸநம் பண்ணுங்காலத்தில் இந்த ஸமயத்தில் இவ்வாத்மாவுக்கிருக்கிற ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை யுடையவனுகவே உபாஸநம் செய்யவேண்டியது என்று சிலர் சொல்லுகிறுர்கள். இந்த பூர்வபக்ஷத்திற்கு “வ்யதிரேகஸ்தத்பாவபாவித்வாத்” என்கிற ஸூத்ரத்தால் ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது. இதின் அர்த்தம்:—மாறுன தர்மங்களோடு கூடினவனுகவே, அதாவது ஸம்ஸார தசையிலிருக்கிற தர்மங்களுக்கு விருத்தமான அபஹதபாப்மத்வம்முதலான தர்மங்களோடு கூடினவனுகவே உபாஸநம் செய்யவேண்டியது; ஏனென்றுல், அந்தமாதிரி உபாஸநம் செய்து அப்படியே பலம் பெறவேண்டியிருக்கிறபடியால். இவ்விதமான நியமம் எங்கே சொல்லி இருக்கிறது? உபாஸநம் எப்படியோ, அப்படியே பலம் என்பது ஏன்? என்று கேட்டால் “யதாக்ரதுரஸ்மிந் லோகே புருஷோ பவதி ததேத: ப்ரேத்ய பவதி” என்

கிற ஶ்ருதியில் காணலாம் என்று ஸ்ரீபாஷ்யகாரர் இந்த ஸூத்ரத்தை விவரிக்குமிடத்தில் பாஷ்யம் செய்திருக்கிறார். இந்த ஶ்ருதிவாக்யத்தின் பொருள்:— இந்த லோகத்தில் புருஷன் எவ்வகைப்பட்ட உபாஸநத்தையுடையவனாக இருக்கிறானோ, அவன் இந்தலோகத்திலிருந்து மோக்ஷத்தை அடைந்த பிறகு அப்படியே ஆகிறான். "ததா" என்கிற சப்தத்திற்கு, "ஸர்வம் வாக்யம் ஸாவதாரணமிதி ந்யாயேந" (எல்லா வாக்யமும் விரோதமில்லாவிடில் ஏவ என்கிற அவதாரணத்தோடு கூடியது) என்கிற ந்யாயத்தினால், "ததைவ" அதாவது அப்படியே என்று அர்த்தம். ஏவம் ச, தன் ஸ்வரூபத்தையாவது பரமாத்ம ஸ்வரூபத்தையாவது எந்தக்குணங்களோடு கூடினதாக உபாஸநம் செய்கிறானோ அந்தக்குணங்களோடே அநுபவிக்கிறான், என்று ஶ்ருதிவாக்யத்தின் தாத்பர்யம். இப்படி இதில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஏவ என்கிற சப்தத்தின் அர்த்தத்தில் ஒரு சந்தேகம், அதாவது, அதற்கு அந்யயோகவ்யவச்சேதம் அர்த்தமா? அயோகவ்யவச்சேதம் அர்த்தமா? இவன் உபாஸிக்கிற குணங்களைத் தவிர மற்றைக்குணங்கள் அநுபவிக்கப்படுகிறதில்லை யென்பது அந்யயோக வ்யவச்சேதம்; மற்ற குணங்கள் அநுபவிக்கப்பட்டாலும் அநுபவிக்கப்படாமற் போனாலும் உபாஸிக்கப்பட்ட குணங்கள் அவசியமாய் அநுபவிக்கப்பட்டே தீரும் என்பது அயோகவ்யவச்சேதம். இந்த விஷயத்தைப் பற்றிக்கொஞ்சம் விமர்சிப்போம்.

சே. நரஸிம்மாசாரியர்.

(இன்னும் வரும்.)



ஸ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# ஸபாத்யக்ஷர் உபந்யாஸம்.*

யஸ்யாபவத் பக்தஜநார்த்திஹந்து:
பித்ருத்வமந்யேஷ்வவிசார்ய தூர்ணம் ।
ஸ்தம்பே(அ)வதாரஸ்தமநந்யலப்யம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥

ஶுபாஸ்ய தேஹம் ஜகதாம் த்ரயாணாம்
பாபஸ்ய மோஹம் விதயே பராய: ।
தமேநாத ஸஹஸ்ராணி தயாவயோமி:
ஸ நோ ரக்ஷதாந் நரஸிம்ஹமூர்த்தி: ॥

ஸ்ரீஸந்நிதிஸம்ப்ரதாயத்தில் அத்யந்தவிஶ்வாஸமுள்ள இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸமாஜத்துக்கு விஜ்ஞாபநம் :—

இந்தப் பாகவதஸமாஜத்துக்கு என்னைச் சபாத்யக்ஷர் ஸ்தானத்தில் நியமித்தவர்களுக்கு என்னுடைய ப்ரதம வந்தநத்தை விஜ்ஞாபநம் செய்கிறேன். வித்வையாலும் ப்ரஸித்தியாலும் பிரவசந சக்தியாலும் இந்த ஸ்தாநத்துக்கு அர்ஹதையுள்ளவர்களாய் பஹுபேர்களிருக்க, மிதஜ்ஞனான என்னை இந்த ஸ்தாநத்தில் நியமித்ததில் ஏற்படும் லாபாலாபங்களை தேவரீர்களுடையனவே தவிர எனக்கு ஒரு விதமான பாரமும் இருப்பதாய் நான் எண்ணவில்லை. இதை நிர்வஹித்து இந்தச் சபைசேர்ந்ததில் இருக்கிற உத்தேசங்களை நிர்விக்நமாய்ப் பரிபூர்த்திசெய்யவேண்டியதில் என்னுடைய பரிமிதமான புத்தி

* இந்த உபந்யாஸம், தஞ்சாவூரில் 26—12—1910-ல் நடந்த அஹோபில மட சிஷ்யஸபை மஹாஸங்கத்தில் ஸ்ரீமான் டி. ராஜகோபாலாசாரியரால் செய்யப்பட்டது.

சக்திகள் ஸங்கோசிதங்களானாலும், அவைகளை வ்யாஜமாத்ரமாய்க் கொண்டு பூர்ணஸஹாயஞ் செய்து என்னுடைய ஸ்வாலித்யங்களை க்ஷமித்து ஐகமத்யமாய் அந்தந்தச் சமயங்களில் ஒவ்வொரு அம்சங்களிலும் ஹிதபோதநஞ்செய்து இந்தப் பெரிய காரியத்தைத் தலைக் கட்ட அனுகூலிப்பீர்களென்று பிரார்த்திக்கிறேன்.

“ஆஹாரம் ஹோ மநுஷ்யாணாம் ஹ்ருதயம் பக்ஷிலக்ஷணம் | ஶ்ரீஷ்வஸ்யாஹமநம் த்விதீயம் பக்ஷிலக்ஷணம்” என்கிற நியாயம் லோகப்ரஸித்தமல்லவா ?

2 · இந்த ஸபஸ்ஸில் அத்யக்ஷஸ்தாநத்தில் என்னைத் தேவரீர்கள் நியமித்த ப்ரீத்யதிசயத்தைவிட, இந்த ஸ்ரீ அஹோபிலமட சிஷ்ய ஸபை யென்னும் மஹாசங்கத்துக்கு என்னை அத்யக்ஷனாய் நியமித்திருக்கிற ப்ரீத்யநுக்ரஹத்துக்கு நான் பஹுமடங்கு அதிகமாய் க்ருதஜ்ஞதையை விவரிக்கவேண்டுவதில் என்னுடைய கடமையும் இஷ்டமும் ஏகமுகமாய் என்னைப் பிரேரணை செய்கின்றன. நம்முடைய காரியங்களில் ஸமர்த்தராயும் விசேஷ உத்ஸாஹியாயுமிருக்கிற காரியதரிசி உஸ. ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியர் என்னை இந்த விஷயத்தில் முதலில் நியோகிக்க இஷ்டப்பட்டகாலத்தில் அதில் என் அநர்ஹதையும் அஸாமர்த்யமும் வ்யக்தமாய் எனக்குத்தெரிந்ததால், அந்த ஸ்தானத்தை நிஸ்ஸங்கமாய் நிராகரிக்க ஸித்தமாயிருந்தேன் ; ஆனால், இந்தச் சபையைச் சேர்ந்தவர்கள் பகுவாய் என்னை நியமிக்க அபிப்பிராயப்பட்டதையும், அர்ஹதமர்களான சிலர் தங்கள் கார்ய கௌரவத்தினலோ அன்றி என்னைப் பரீக்ஷைசெய்ய வேணுமென்கிற அபிஸந்தியாலோ இந்த ஸ்தாநத்தைத் தாங்களே அப்யுபகமம் செய்யாதபடியையும் நம்முடைய காரியதரிசி எனக்கு அறிவிக்க, நான் நிருத்தரனாய் அவர்முகமாய்க் கிடைத்த தேவரீர்கள் நியமநத்தை அங்கீகரிக்கத் துணிந்தேன்.

3. நாம் இப்போது சபைசேர்ந்திருக்கும் விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறதற்குமுன், சபை சேர்ந்திருக்கும் ஸ்தானமாகிய இந்தத் தஞ்சைமாநகரின் பெருமைவிஷயமாய்க் கொஞ்சம் எடுத்துச்சொல்வது உசிதமாயிருக்கும். மிகவும் பிராசீநமான அயோ-



த்தி, மதுரை, காசீ, காஞ்சி முதலான பட்டணங்களைப்போல அவ்வளவு பிரஸித்தி யடையாதிருந்தாலும், இந்த நகரம் ஏறக்குறைய 1400 வருஷகாலமாய்ப் பிரதானபட்டணமாக வழங்கிவருகிறது. இந்தச் சோழமண்டலத்துக்கு அதிபதிகளான சோழராஜாக்கள் 2000 வருஷங்களுக்குமுன் முதல், முதலில் உறையூரிலும் பிறகு காவிரிப்பூம்பட்டணத்திலும் இருந்து அரசாண்டு வந்து, பிறகு இந்தத் தஞ்சைநகரத்தையே ராஜதானியாய் ஏற்படுத்திக்கொண்டதாய்ச் சரித்திரத்தால் தெரிகிறது. கிறிஸ்தவாப்தம் 935 - வது வருஷம் முதல் ராஜராஜன் அல்லது ராஜகேசரி வர்மன் என்று பெயர்பூண்ட ராஜா மிகப்பிரஸித்திபெற்றவராய் இந்த நகரத்தில் அரசாண்டுவந்தார். அவர்காலத்தில்தான் நம் ஆளவந்தாரென்னும் யாமுநாசார்யர் நமது ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்தைப் பிரவசநம்பண்ணி வந்ததாய்த் தெரிகிறது. அவர் இந்த ராஜராஜ னென்னும் அரசரையே உத்தேசித்து “யயா வோடநயவ: ஸம்ராட் க்ஷிதீஶ்யோஹி ஹரேர்மதெ” என்கிற சுலோகத்தை உதாஹரித்ததாகத் தோன்றுகிறது. இந்த ஸம்ராட் அல்லது சக்ரவர்த்தி என்கிற விசேஷணம் அவருக்கேதகுமென்பதை ப்ராசீநசரித்திரங்களை ஆராய்ந்திருக்கும் வித்வான்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த மகாராஜர்தான் தஞ்சை நகரை விசேஷமாய்ப் புதுப்பித்துப் பிரபலமான அரண்மனைகளையும் மிக விசித்ரமான கோவிலையும் கட்டினதாய்த் தெரியவருகிறது. ஆனால், அவருக்கு முற்பட்ட காலத்திலேயே இந்த நகரம் ஏற்பட்டுப் பிரஸித்தி யடைந்திருந்ததென்றும், அவருக்கு முன்காலத்திலேயே அநேக வைஷ்ணவாலயங்களும் சிவாலயங்களும் இருந்தனவென்றும் நினைக்கவேண்டியதாயிருக்கிறது. முதலாழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வாரென்பவர் விஷ்ணுஸ்தலங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்குந் தருணத்தில் “தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்” என்னும் பாசுரத்தில் இந்த ஸ்தலத்தை முதலில் எடுத்துரைத்தார். திருமங்கையாழ்வாரும் பெரியதிருமொழி முதற்பத்தின் ஆரம்பத்தில் “வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக்கோயில்” என்று இதை முதற்கோயிலாகப் பாடினர். அவரே மறு

படியும் இங்குள்ள பெருமாளை "தஞ்சைக்கோயில் தவநெறிக்கோர் பெருநெறியை" என்று சிறப்பித்தார். இவைகளாலும், ஸ்ரீப்ருஹதீச்வரருடைய பிராசீநமான கோபுரத்தில் விசேஷமாய் வைஷ்ணவப்பிரதிமைகள் இருப்பதனாலும், வைஷ்ணவாலயங்கள் புராதநமான காலங்களிலும் இங்கே இருந்திருக்கக்கூடுமென்று தோன்றுகிறது. ராஜராஜன் காலத்துக்கு முந்திச் சில நூற்றாண்டுகளில் இந்த நகரம் யாரோ விரோதிகளால் உபப்லுதமாயிருந்ததென்றும், அந்தக் காலத்துக்குப்பிறகு பாஷ்யகாரர்காலத்தி லிருந்தவரான ஆல்பிரூனி யென்னும் அரேபியயாத்ரிகர் இங்குவந்தகாலத்தில் இந்த நகர் பாழடைந்திருந்ததாகவும் புராதந சரித்திரத்தில் தெரிகிறது. மறுபடி துலுஷ்கர்கள் கலக மேற்பட்டு ஹிந்துக்களுக்கெல்லாம் கஷ்டம் நேர்ந்தது. 16 - ஆம் நூற்றாண்டில் நாயகர்களரசாண்டகாலத்தில் இந்தப் பட்டணத்தின் கோயில்களும் மாளிகைகளும் விசேஷமாய்ப் புதுப்பிக்கப்பட்டன. சோழர்கள் முதலான எல்லா ராஜாக்களும் சைவ வைஷ்ணவங்களிற் பொதுவாகப் பக்ஷபாத மில்லாமலிருந்தாலும், சோழர்கள்காலத்தில் சைவத்துக்கும் நாயகர்கள்காலத்தில் வைஷ்ணவத்துக்கும் விசேஷமாய் ஆதரமுண்டானதாகத் தெரியவருகிறது. பின்பு மகாராஷ்ட்ரர்கள் அதிப்பிரபலர்களாயும் வைதிகசிரத்தை யுள்ளவர்களாயும் ராஜ்யம் செய்துவந்தார்கள். அவர்கள்காலத்திலும் முந்தின நாயகர்கள் காலத்திலும் ஏற்பட்ட அரண்மனைகளும் ராஜமால்களும் இப்பொழுதும் நமக்குப் பார்க்கக்கூடிய காட்சிகளாயிருக்கின்றன. மகாராஷ்டிரர்களான ராஜாக்கள்காலத்தில் வித்வான்கள் விசேஷமாய் ஆதரிக்கப்பட்டு அநேகம் காவியநாடகங்களையும், தர்க்கம் வியாகரணம் மீமாம்ஸை வேதாந்தம் இவைகளில் சில கிரந்தங்களையும் செய்தார்கள். அந்த க்ரந்தங்களும் இன்னும் அநேக க்ரந்தங்களும் இந்த நகரத்திலுள்ள "ஸரஸ்வதிமால்" என்னும் புஸ்தகசாலையில் இப்பொழுதும் இருக்கின்றன. இந்த க்ரந்தங்களையெல்லாம் வெகு சிரத்தையாய்க் கவனித்து அட்டவணைசெய்தவர், இவ்விடத்தில் உத்தியோகமாயிருந்த டாக்டர் பர்னல் என்னும் ஸம்ஸ்கிருத பாண்டித்யமுள்ள ஆங்கிலவித்வான்தான். பூர்வராஜாக்களால்



பல இடங்களிலிருந்து சம்பாதித்துச் சேர்க்கப்பட்ட இந்தக்கிரந்தங்கள், நம் பண்டிதர்களால் விசேஷமாய் ஆதரிக்கப்படவேண்டும். இந்த நகரத்திற்கு, இதரப்பிரஸித்திகளுடன் நம்முடையஆதரத்துக்கு விசேஷஹேதுவான ஒரு ப்ரஸித்தியும் உண்டு. அதாவது - நம்முடைய ஆசாரியர்களில்பிரஸித்தரான ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனுக்குப் புத்திரரானநயினாராசாரியர் இந்தநகரத்தில் ஒரு ஸந்தர்ப்பத்தில் எழுந்தருளியிருந்தகாலத்தில் திருவாய்மொழிமுதலான திவ்ய ப்ரபந்தங்கள் அநுஸந்திக்கக்கூடாத அநத்யயநகாலமா யிருந்ததாகவும், அப்போது நயினாராசாரியரும் பிரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் தேசிகப்பிரபந்தத்தையும் நாலாயிரத்தனியன்களையும் அநுஸந்திக்கும்படி நியமித்தார்களென்றும், இந்த வழக்கம் அதுமுதல் நாளதுவரையில் எல்லாக்கோயில்களிலும் நடந்துவருகிறதென்றும் பெரியவர்கள் சொல்லுகிறார்கள். ஸ்ரீ அஹோபிலார்யன் என்னும் ஆசாரியர் தமது கிரந்தத்தில் "திவ்யப்ரபந்தய க்ரமஸமிஷ்டவஶ்யமாயா: வேதாந்ததேஶிககதா ஸுவிதே ப்ரபந்தா: ॥ யஸ்ய ஸந்நிதௌ ப்ரயதஸம்வஹிதா ஸஹஸ்ரா: தம்தேஜஸ்ஸ்ரோதஹந்த்ரமஹ தே ஸஸ ஶ்ரீமதேவ:" என்று நிபந்தித்தார். இதனாலும், இந்த நகரம் நமக்கு விசேஷித்து ஆதரிக்கக்கூடிய ஸ்தாநம்.

4. நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்கு ஆலம்பநமான ஸ்ரீ அஹோபிலமடம் தத்காலம் எழுந்தருளியிருக்கும் அழகியசிங்கருக்கு முற்பட்ட ஸ்ரீ. ஸ்ரீநிவாஸசடகோபஸ்வாமி காலத்துக்கு முந்திச் சிலவருஷங்கள் ஒருவராலும் அதிஷ்டிதமாகாமலிருந்து ஸர்வசிஷ்யர்களும் ஆமுஷ்மிகமான காரியங்களுக்கு நியந்தாக்களில்லாமல் பரிதபித்துவந்தது எல்லாருக்கும் நன்றாய்த்தெரியும். பிறகு ப்ராயேண சிஷ்யஸமூஹங்களின் ஐகமத்யத்தையும் அந்த ஸ்வாமியின் ஆபிஜாத்யத்தையும் சாஸ்த்ரஜ்ஞாநத்தையும் சைஷ்ட்யத்தையும் லௌகிகஸாமர்த்தியத்தையும் நன்றாய் விசாரித்து, நியாயாதிகாரிகள், அந்த ஸ்வாமியை ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளப்பண்ணும்படி நியமித்து அதற்கு வேண்டிய ஸௌகரியங்களையும் செய்துகொடுத்தார்கள். அந்தப்படி ஆஸ்தாந நிர்வாஹகராய் எழுந்தருளின அந்த அழகியசிங்கர், சிஷ்யர்கள் புண்யாநுகுணமாகச் சிலகாலமாத்திரமே ஜீவித்தி

ருந்து அநேகசிஷ்யஹிதங்களைச் செய்து, மடத்துச் சொத்துக்களின் பரிபாலநவிஷயமாய் அநேக காரியங்களை உபக்ரமித்து அவைகள் பூர்த்தியாகிறதற்குமுன்னமே ஸர்வரும் துக்கஸாகரத்தில் மூழ்கும்படி திருநாட்டை யலங்கரித்துவிட்டார். அப்புறம், அவர்நியமநத்தை முன்னிட்டுத் தற்காலம் அழகியசிங்கரான ஸ்ரீபராங்குசயதீந்த்ர மகாதேசிகன் இந்த ஆஸ்தாநநிர்வாஹஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கிறார். இந்த ஆஸ்தாநத்துக்குப் பூர்வர்களின் பிரபாவத்தினாலும், சிஷ்யர்களின் ஆநுகூல்யத்தாலும், ஆஸேதுஹிமாசலம் விசேஷமாய்ப் பூமிகளும் திரவியங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைப் பரிபாலித்து அவைகளிலிருந்து எவ்வளவுபலம் கிடைக்கக்கூடுமோ அவ்வளவையும் சிதறாமல் சேகரித்து அதைச் சிஷ்யர்களின் ஆமுஷ்மிகமான ஜ்ஞாநோபதேசார்த்தங்களிலும், ததீயாராதநங்களிலும், அங்கங்கே அவசியமான மடம் முதலானவைகளை நிர்மாணஞ் செய்வதிலும், சிதிலமான அம்சங்களைப் புதுப்பிப்பதிலும் உபயோகிப்பதே இந்த ஆஸ்தாநாதிபதிகளான அழகியசிங்கர்களுக்குக் கர்த்தவ்யமான விஷயம். இந்தக் காரியங்களெல்லாம் தற்காலம் பூர்ணமாய்நடந்துவரவில்லையென்பது எல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். அதற்குக்காரணம் - தற்காலம் எழுந்தருளியுள்ள அழகியசிங்கரின் வார்த்தகப்ரயுக்தமான அசக்தியும், ஸமர்த்தர்களும் ஹிதகாரிகளுமான ப்ரேஷ்யர்கள் வேண்டியவளவு நியமிக்கப்படாமலிருப்பதுமே என்று பகுவாய்த் தோன்றுகிறது. ஆனால், இவைகள் மாத்திரம் காரணமல்ல; அழகியசிங்கர் எவ்வளவு ஸமர்த்தராயிருந்தாலும், பகுவாய்ப் பலதேசங்களிற் பலபேர்கள் விசாரணையிலிருக்கும் பூமிமுதலானவைகளை இரண்டொருத்தர்ஒத்தாசைமாத்திரம்கொண்டே பராமரிப்பது அஸாத்தியமானகாரியம். மேலும், விசேஷமாய் ஜ்ஞாநாநுஷ்டாந ப்ரவசந சக்தியாதிகளே, இந்த ஸ்தாநத்துக்கு முக்யமாய்வேண்டும் அம்சங்கள். லௌகிக ஸாமர்த்தியமிருந்தாலும் ஜ்ஞாநாநுஷ்டாநஸம்பத்து இல்லாவிட்டால் சிஷ்யர்களுக்கு அநர்த்தகரமாயும் இதரர்களுக்குப் பரிஹாஸ்யமாயும் முடியும். விசேஷஜ்ஞாநமும் பாரமைகாந்தியமும் அமைந்த அழகிய சிங்கர்பக்கல், லௌகிக ஸாமர்த்தியமும் சேர இருப்பது மிகவும் துர்க்கடம். ஆகையால், இப்படிப்பட்ட ஸம்பவங்களுக்குப்



பரிகாரந்தேடுவது சிஷ்யர்களின் கடமை. லௌகிக காரியங்களில் அழகியசிங்கருக்குக்காஷாஹித்கமான நியந்த்ருத்வம்மாத்திரம் இருக்கவேணுமே யல்லது அதுவிஷயமான விசேஷபாரம் ஏற்படக்கூடாது. அப்படி ஏற்பட்டால், அவர்களின் முக்கியகாரியமான தேசஸஞ்சாரங்களும் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநமும் நடந்துவரா ஹேதுவில்லாமற்போய்விடும். சிஷ்யர்களுக்கு அத்ருப்தியும் ஸ்வஸம்பிரதாயத்தில் அகௌரவ புத்தியும் இதரஸம்ப்ரதாயத்தில் நோக்கும் பிரசாரமாகும். இன்னும் அநேக அநர்த்தபரம்பரைகளுக்கும் இவைகளே மூலமாகும்.

5 இவ்வித துரவஸ்தைகள் ஏற்படாமல் நிவாரணஞ் செய்யவும், அசிந்திதமாய் ஏற்பட்டிருக்கும் குறைவுகளைப் பரிஹரிக்கவும் தான், நம்முடைய "ஸ்ரீ அஹோபிலமடசிஷ்யஸபா" என்னும் சங்கம், சென்ற சித்திரை மாஸம் முதல் ஏற்பட்டு நடந்துவருகிறது. இந்தச்சபைக்கு, நம்முடைய ஸம்ப்ரதாயத்தின் அபிவ்ருத்தியும், நம்முடைய மடத்தை உச்ராயமான தசைக்குக் கொண்டுவருவதுமே முக்கியமான உத்தேசங்கள். இந்த இரண்டு அம்சங்களிலும் இந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் விரோதமிருக்க நியாயமில்லை. தத்காலம் குறைவுபட்டிருக்கும் நம்ஸம்பிரதாயத்தைத் தழைக்கச்செய்து அதை எங்கும் பரவச்செய்யவும், அதுமூலமாய் நமக்கு ஆசாரியபரம்பரையாய்க் கிடைத்திருக்கும் ஸ்ரீபகவத்ராமாநுஜஸித்தாந்தத்தை நாம் எல்லோரும் நன்றாய் அறியும்படி செய்யவும், இந்த ஸம்ப்ரதாயக்ரந்தங்களையும் ஆசாரங்களையும் நிரந்தரமாய் உபதேசங்கள்செய்தும் பிரகடனஞ்செய்தும் சிஷ்யர்களுடைய ஆமுஷ்மிகச்ரேயஸ்ஸை ஸ்திரீகரணம் பண்ணும்படி ஆஸ்தாநநிர்வாஹகர்களான அழகியசிங்கர்களைப் பிரார்த்திக்கவும், ஒரு அழகியசிங்கர் நிர்யாணகாலம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மற்றொரு அழகிய சிங்கரைத் தகுந்தபடி சிஷ்டதமராயும் ஜ்ஞாநநிதியாயும் விரக்தாக்ரேஸராயும் தெரிந்தெடுக்கவேண்டிய விஷயத்தில் சிஷ்யர்கள் ஏகோபித்து யோஜித்துப் பாதகரஹிதமான ஒரு மார்க்கத்தை ஏற்படுத்தவும், அப்படி ஏற்படுத்துவதில் மடத்தின் யுக்தமான பூர்வாநுஷ்டாநங்களையும் தத்காலரீதிக்கு அநுகுணமான புடிகளையும் கலந்து ஏற்பாடுசெய்யவும், இந்த ஸபையார் ஏப்

பொழுதும் ஜாகரூகராய்ப் பிரயத்நஞ்செய்யவேண்டும். "ஸஹ்ருத் ஸஹ்ருத்ஞ்ஜாநாதி" என்றும், "ஸோஜாகோ யேந மத: ஸஹ்ருயா:" என்றும் நியாயங்கள் ஏற்பட்டிருப்பதாலும், நாம் செய்யுங் காரியங்களால் உண்டாகும் லாபநஷ்டங்களில் எல்லாருக்கும் அம்சமுண்டாதலாலும், மடத்துச் சிஷ்யர்களில் விசேஷமாய் எவ்வளவுபேர்கள் சேருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு லாபமும் சபையின் தீர்மானங்களுக்குக் கௌரவமும் ஏற்படும். சிஷ்யர்கள் அபரிமிதமாயிருந்தாலும் அந்தந்தப்பாகமிருக்கும் சபையின் மெம்பர்களான சிஷ்யர்கள் அந்தந்த முக்ய இடங்களிற் கூடிப் பொதுவான காரியங்களை யோஜிக்கவும், ஸம்ப்ரதாய ப்ரஸித்திக்கு வேண்டிய உபந்யாஸாதிகளை ஏற்படுத்தவும், எல்லாப்பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகளாய்ச் சிலபேர்கள் சேர்ந்து சபையின் முக்கிய நிர்வாக கமிடி யென்று பேரிட்டுப் பொதுக்காரியங்களை விதிக்கவும், வருஷம் ஒருதடவை தகுந்த இடத்தில் சபை கூட்டங்கூட ஏற்பாடுசெய்யவும், இன்னும் நம்முடைய உத்தேசங்களை நிறைவேற்றவும் அநுகூலமான பொதுவிதிகள் எங்களில் சிலரால் யோஜித்து நிர்மிக்கப்பட்டுச் சபை மெம்பர்களான ஸ்வாமிகளுடைய அங்கீகாரத்துக்குக் கொண்டுவரப்படும்; அவைகளில் யுக்தாயுக்தங்களைப் பரிசீலநம்செய்து அப்யுபகமம் பண்ணவேண்டியது, இந்தச் சங்கத்தின் முக்யமான காரியம். எந்தக் காரியமும் தத்காலத்திற் புதிதாய் யோஜிக்கப்படாமல் கிரமமாய் முந்தியே பரிபாடி ஏற்படுத்துவது ரொம்பவும் சௌகரியம். ஆகையால், தேவரீர்களனுமதிக்குக் கொண்டுவரப்படும் விதிகளை நிர்மத்ஸரமாய் யோஜித்து ஒப்புக்கொண்டால், அவைகளை ராஜாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் உத்தியோகஸ்தர்களிடத்தில் அனுப்பித் தர்மாதிசங்கங்களைப்பற்றின ஆக்டின்படி இந்தச்சபையை ரிஜிஸ்தர் செய்யலாமென்று இந்தச் சபைநிர்வாஹகர்களுக்கு உத்தேசம். அப்படிச்செய்வது சபை நிரந்தரமாய் நடப்பதற்கும், சொத்துக்கள் அல்லது வசூல்செய்யப்படும் சந்தாக்கள் சரிவர விநியோகப்படுவதற்கும் ஹேதுவாகும். ஆகையால், அப்படி ரிஜிஸ்தர் செய்விக்கவும் தேவரீர்கள் அனுமதி கொடுக்கவேணும்.

(இன்னும்வரும்.)



# ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபையின் மகாசங்கம்.

சென்ற மார்கழிமீ 12உ திங்கட்கிழமை பகல் 12-மணிக்குத் தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில் ஷை சபையின் மகாசங்கமொன்று கூடிற்று. அப்பொழுது அநேக இடங்களிலிருந்து பெரிய வித்வான்களும், லௌகிகத்தில் உயர்ந்த பதவியில் இருக்கும் பிரபுக்களும், இதர ஸம்பிரதாயஸ்தர்களான சில கனவான்களும் வந்திருந்தார்கள். முதலில் தஞ்சாவூர் வக்கீல் ஸ்ரீமாந் டி. கோதண்டராமஐயங்கார், நாநாதேசங்களிலிருந்து அவ்விடம்வந்திருந்த ஸ்வாமிகளெல்லாருக்கும் குசலப்ரச்நபூர்வகமாக ஸ்வாகதஞ்சொன்னார். பிறகு, ஸ்ரீமாந் டி. ராஜகோபாலாசாரியரை இந்த மகாசங்கத்திற்கு அக்கிராஸநாதிபதியாக இருக்கவேண்டுமென்று ஸ்ரீமாந் இ. ரங்கநாதாசாரியர் பிரார்த்திக்கவும், ஸ்ரீமாந் வேலாமூர். கிருஷ்ணமாசாரியர் அப்படியே நடக்கவேண்டுமென்று ஆமோதிக்கவும், ஸ்ரீமாந் ராஜகோபாலாசாரியர் அக்கிராஸநத்தை அங்கீகரித்து, கேட்கிறவர்களெல்லாருக்கும் ஆநந்தமுண்டாம்படி விசேஷித்த விஷயங்களோடு கூடின ஓர் உபந்யாஸம் செய்தார். அதற்குப் பிறகு ஸ்ரீமாந் இஞ்சிமேடு-ரங்கநாதாசாரியர் ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமியின் வைபவத்தைப்பற்றி ஒரு உபந்யாஸம்செய்து, அப்படிப்பட்ட ஜ்ஞாநவைராக்யநிஷ்டையுள்ளவர்களான ஸ்வாமிகள் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளுவதுதான் லக்ஷ்மீநரஸிம்ஹன் திருவுள்ளத்திற்கு உகப்பாயிருக்குமென்றும், அப்படி ஸ்வாமிகளை எழுந்தருளப்பண்ணவேண்டிய விஷயத்தில் கவனிக்கவேண்டிய சில நியாயங்களையும் விவரித்துச் சொன்னார். பிறகு ஸ்ரீமாந் தில்லியம்பூர் சக்ரவர்த்தியாசாரியர் பிரபத்தி விஷயமாக ஓர் உபந்யாஸம் செய்தார்.

உபந்யாஸங்களெல்லாம் நடந்த பிறகு, விஷயஸூசிகையிற் குறித்திருந்தபடி அன்றைக்கே நடக்கவேண்டியதான அங்கத்தார்களின் சங்கம், சில அஸௌகரியங்களால், மறுநாள் காலையில் நடத்தும்படி குறிக்கப்பட்டது. அன்று இரவு ததீயாராதநம் ஆன பிறகு, பெருகவாழ்ந்தான் ஸ்ரீமாந் ராமபத்ராசாரியர், ஸ்ரீமத் ராமாயணத்தில் விபீஷணசரணாகதி கட்டத்தைப் பாராயணஞ்செய்து அதன் அர்த்தத்தை எல்லாரும் கேட்டு ஆநந்திக்கும்படி எடுத்து உபந்யஸித்தார்.

மறுதினம் காலை 9-மணிக்குச் சபையைப்பற்றின சிலவிதிகளை ஏற்படுத்தவும், இன்னும் சில நிர்ணயங்களைத் தீர்மானிக்கவும் அங்கத்தார்களின் சங்கம் சேர்ந்தது. அந்தச் சங்கத்தில் அங்கத்தார்களன்றி மற்ற அநேக ஸந்நிதி சிஷ்யர்கள் ஸாக்ஷிகளாக வந்திருந்தார்கள். எல்லாரும் ஒன்றுசேர்ந்தபிறகு

பின்வரும் தீர்மானங்களும் தனி ஸஞ்சிகையாக அச்சிடப்பட்டிருக்கும் விதிகளும் ஏற்படுத்தப்பட்டன. வந்திருந்தவர்களில் சபையைச் சேராத பலர், அங்கேயே அங்கத்தார்களாகித் தங்களுக்குச் சபை விஷயமாக இருக்கும் சிரத்தையைப் பலவாறாக வெளியிட்டார்கள்.

பகல் 2 - மணிக்குமேல் புத்தங்கோட்டகம் ஸ்ரீமாந் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்ரீபகவத்கீதையைப்பற்றியும், பிறகு ஸ்ரீமாந் முனிசிப் ஸ்ரீநிவாஸஐயங்கார் பகவத்விஷயத்தைப்பற்றியும் உபந்யாஸம் செய்தார்கள். விஷயஸூசிகையிற் குறித்திருந்தபடி உபநிஷதுபந்யாஸமும் வேதாந்த விஷயோபந்யாஸமும் அவகாசமில்லாததனால் செய்யப்படவில்லை. தாம் நேரில் வரக்கூடாமலிருக்கையிலும் மிகுந்த சிரத்தையுடன் வேதாந்த விஷயமான உபந்யாஸத்தை எழுதியனுப்பின ஸ்ரீமாந் மைசூர் கோவிந்தாசாரியரிடத்தில் அங்கத்தார்கள் தங்களுக்குண்டான க்ருதஜ்ஞதையை வெளியிட்டபிறகு, அக்ராஸநாதிபதி தாம் செய்யவேண்டிய உபஸம்ஹாரத்தைச் செய்தார். பிறகு இந்த வருஷத்திற்குச் சபாநிர்வாஹகாதிகாரிகளாக 30 - வது பக்கத்திற் குறிக்கப்பட்டிருக்கும் ஸ்வாமிகள் நியமிக்கப்பட்டார்கள். அப்பால் திருப்புல்லாணியிலிருந்து வந்திருந்த ஸ்ரீமாந் ரகுபதி ஐயங்கார், ஷை மகாசங்கத்திற்கு வந்திருந்த ஸ்வாமிகள் எல்லாருக்கும் பிரதிநிதியாக இருந்து, இச்சங்கத்தை இவ்வளவு திருப்திகரமாக நடத்திவந்த அக்ராஸநாதிபதியான ஸ்ரீமாந் ராஜகோபாலாசாரியருக்கு வந்தநம் அளிக்க யத்தனித்து, அந்தச்சமயத்தில் அத்யாஹ்லாதகரமான ஒரு உபந்யாஸத்தைச் செய்தார். பிறகு, தங்களுடைய சிரமத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் இதம்பரமாகவே வெகு தூரத்திலிருந்து வந்து எல்லாராலேயும் கொண்டாடப்பட்ட உபந்யாஸங்களைச் செய்த வித்வான்களுக்கும், விதேசங்களிலிருந்து வந்திருந்தவர்களை ஆதரிக்கும்படி மகத்தான சிரமத்தை வஹித்துத் திருப்திகரமான ஏற்பாடுகள் செய்த ஸ்ரீமாந் வேலாமூர் கிருஷ்ணமாசாரியர், ஸ்ரீமாந் டி. கோதண்டராம ஐயங்கார் இவ்விருவர்க்கும், சங்கத்திற்காகச் சத்திரத்தை யதேச்சமாக உபயோகித்துக்கொள்ளும்படி அநுமதி கொடுத்த ஜில்லா போர்டு பிரஸிடெண்டு அவர்களுக்கும் வந்தனம் அளிக்கப்பட்டது.

இதுவரையில் சபையின் சம்பந்தமான மகாசங்கம் நடந்தது. இச்சங்கத்தில் ஆலோசிக்கப்படாமல் விடுபட்ட சில முக்யமான விஷயங்களை ஆலோசித்து ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டுமென்கிற எண்ணம் சிலருக்கு உண்டாகி, அதற்காகச் சந்நிதி சிஷ்யர்கள் எல்லாரும் சேரும்படி மற்றொருகூட்டம் கூட்டப்பட்டது. அதற்கும் ஸ்ரீமாந் டி. ராஜகோபாலாசாரியரே அக்ராஸநாதிபதியாக ஏற்படுத்தப்பட்டார். அப்பொழுது ஆலோசிக்கப்பட்ட விஷயமாவது :—

(1) லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் தற்காலம் எழுந்தருளியுள்ள அழகியசிங்கர் அசக்தராகவும் நோவு சாத்திக்கொண்டும் இருக்கிறபடியால், ஒருகால் ஆஸ்தான நிர்வாஹத்திற்காகத் தக்க யாராவது ஒருஸ்வாமியை இப்பொழுதே நியமித்துவிடலாமென்கிற எண்ணம் ஸ்வாமிக்கு ஜநித்து ஸ்வாமி அப்



படி ப்ரவ்ருத்திக்கும் பக்ஷத்தில், அந்தவிஷயத்தில் சிஷ்யர்களுடைய நோக்கம் எப்படியிருக்கிறது என்பதை ஸ்வாமியிடம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறதா? வேண்டாமா?

(2) அப்படி செய்து கொள்ளும் பக்ஷத்தில் ஸங்க்யாநியமமில்லாமல் அநேக ஸ்வாமிகளைப் பற்றி விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறதா, அல்லது இரண்டு மூன்று என்கிற ஸங்க்யா நியமம் வைத்துக் கொள்ளுகிறதா?

(3) அப்படி நியமம் வைத்துக்கொண்டால் ஸர்வசிஷ்ய ஸம்மதர்களான ஸ்வாமிகளைப்பற்றி மாத்திரம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறதா? அல்லது சிஷ்யர்களின் அபிப்ராயங்களைக் கணக்கிட்டு ஒவ்வொரு ஸ்வாமியைப்பற்றியும் இவ்வளவு சிஷ்யர்கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள் என்று குறித்து விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறதா?

(4) மேற்சொல்லியிருக்கும் விஷயங்களைப்பற்றி ஒரு விதமான நிர்ணயத்திற்கு வந்தால், எந்த எந்த ஸ்வாமிகள் சிஷ்யஸம்மதர்கள் என்பதைக் குறிக்கிறது?

என்கிற இந்தநான்கு விஷயங்கள்தான். இவைகளைப்பற்றிப் பலவிதமான அபிப்ராயங்கள் அப்போது பலபெயர்களால் வெளியிடப்பட்டன. ஆனால், அக்ராஸநாதிபதி, இப்படி ஐகமத்யமின்றியிருந்தால் ஒருவிதமான நிர்ணயத்திற்கும் வரமுடியாது என்றும், எல்லாரும் ஏகோபித்து விஜ்ஞாபநஞ்செய்துகொண்டால்தான் அந்த விஜ்ஞாபநத்திற்கு ஒரு கௌரவம் ஏற்படுமென்றும் எடுத்துச் சொன்னதின் பேரில், ஸந்த்யாவந்தநம் செய்த பிறகு கூடி ஆலோசிக்கலாமென்று எல்லாரும் கலைந்தார்கள். மறுபடியும் 7 - 30 மணி சுமாருக்குச் சங்கம் ஆரம்பித்தது. அதில் அநேக விதமான சர்ச்சைக்குப் பிறகு பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன :—

முதல்விஷயத்தைப் பற்றி - சிஷ்யர்கள் தங்களுடைய நோக்கத்தை ஸ்வாமியினிடம் விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டியதுதான் என்றும்,

இரண்டாவதைப்பற்றி - மூன்று என்கிற ஸங்க்யா நியமம் வைத்துக் கொள்ள வேண்டியது என்றும்,

மூன்றாவதைப் பற்றி - ஸர்வஸம்மதர்களான ஸ்வாமிகளைத்தான் குறிப்பிடுகிறது என்றும்,

நான்காவதைப்பற்றி - கீழ்க் கண்டிருக்கும் மூன்று ஸ்வாமிகளின் திருநாமங்களை விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறது என்றும், தீர்மானிக்கப்பட்டது.

(1) ஸ்ரீமாந் ஸ்ரீமுஷ்ணம் ஸ்வர்ணம் - கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி
(2) ,, திருக்கோட்டியூர் - ஸௌம்ய நாராயணாசாரியர் ஸ்வாமி
(3) ,, குறிச்சி ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமி.

இதனுடன் இந்தச் சங்கமும் கலைந்தது. அன்று இரவு 10-மணிக்குமேல் பாதுகா பட்டாபிஷேகத்தைப்பற்றி, ஸ்ரீமாந் திருவல்லிக்கேணி தாதாசாரியர் ஒரு ஹரிகதை காலக்ஷேபம் செய்தார். தஞ்சாவூரிலுள்ள பெரியமனுஷியர்களில் அநேகர் வந்திருந்தார்கள். எல்லாரும் நிரம்பவும் ஆநந்தத்துடன் ரஸாநுபவம் செய்து காலக்ஷேபத்தைச் சிலாகித்தார்கள்.

இந்தப்படி சங்கம் முடிந்த பிறகு மறுதினம் ஸாயங்காலம் ஸபாத்யக்ஷரும் மற்றும் சில சிஷ்யர்களும் நரஸிம்மபுரம் போய் ஸ்வாமியினிடம் தண்டன் ஸமர்ப்பித்து மகாஸங்கத்தின் முடிவான தீர்மானங்களை விநயஸஹிதமாக விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். முதலில் ஸ்வாமிக்குச் சபையைப்பற்றி விபரீதமான திருவுள்ளம் உண்டாகி யிருந்தது. சிஷ்யர்கள் செய்துகொண்ட விஜ்ஞாபநத்தைக் கேட்கவே, ஸ்வாமியின் திருவுள்ளம் திரும்பி, சங்கத்தில் ஏற்படுத்தின தீர்மானங்களை நிதானித்துக் கேட்டு, 'சிஷ்யர்கள் குறிப்பிட்டிருக்கும் ஸ்வாமிகளைத் தவிர மற்றொருவர்க்கு ஆஸ்தாநத்தைக் கொடுப்பது சிஷ்யர்களுக்கு அஸம்மதம் தானோ?' என்று ஸ்வாமி ப்ரச்நம் செய்ய, 'அஸம்மதம் தான்' என்று சிஷ்யர்கள் பதில்சொல்ல, 'அப்படிக் கொடுத்தாலோ?' என்று ஸ்வாமி மறுபடி கேட்க, 'அப்படிக் கொடுத்தால் அந்த ஸ்வாமி அநர்ஹராயிருந்தால் லக்ஷ்மீந்ருஸிம்மன் விபூதிக்குக் குறைவு ஏற்படும்' என்று சிஷ்யர்கள் சொல்ல, இவ்வாறு சில உக்தி ப்ரத்யுக்திகள் நேர்ந்தன. இவை யெல்லாவற்றையும் திருவுள்ளத்திற் கிரகித்து ஸ்வாமி பின்வருமாறு நியமித்தார். 'சிலகாரணங்களால் இப்பொழுதே ஏதாவது ஒரு நிஷ்க்ருஷ்ட வியவஸ்தை செய்வது தமக்கு அபிமதமில்லை, உசிதத்திற்கும் விருத்தம்' என்றும், என்ன வியவஸ்தை செய்தால் லக்ஷ்மீந்ருஸிம்மன் ஆராதநம் திருப்தியாக நடந்து வருமோ அப்படிப்பட்ட ஏற்பாட்டைத் தாம் செய்கிறதாகவும், ஆனால் இன்னார்தான் நியமிக்கப்படுவரென்பதை இப்பொழுது சொல்ல முடியாது என்றும் நியமித்தார். இந்த நியமநம் நாநாவிதமான தாத்பரியங்களுக்கு இடம்கொடுக்கத் தகுந்ததாக இருந்த போதிலும், ஸ்வாமி காஷாயம் ஸமர்ப்பிக்கும் விஷயத்தில் அநேகமாகப் பிசகிவிடமாட்டார் என்கிற நம்பிக்கை எல்லாருடைய மனத்திலும் ஜநித்தது. ஸ்வாமி மந்திராக்ஷதை ஸாதிக்கவே, வந்திருந்தவர்களெல்லாரும் அவ்விடமிருந்து திரும்பினார்கள்.

மறுநாள் உதயத்தில் சிஷ்யர்களில் முக்கியமான இரண்டு பெயரை ஸ்வாமி பார்க்கவேண்டு மென்று இச்சிப்பதாக ஸமாசாரம் வந்தது. சபாத்யக்ஷர் ஸ்ரீமாந் டி. ராஜகோபாலாசாரியர், ஸ்ரீமாந் டெப்டி கலெக்டர் டி. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஆகிய இரண்டுபெயருமாக ஸந்நிதிக்குப்போனார்கள். ஸ்வாமி 4, 5, நாழிகைக்கும் மேலாகவே கிருபையாக அவர்களோடு ஸம்பாஷணம் செய்தார். அந்தக்காலத்தில் மற்ற எவரும் வரக்கூடாது என்று ஸ்வாமி நியமித்து விட்டபடியால், நடந்த விஷயம் இன்னதென்று சொல்ல முடியவில்லை. ஆனால் ஸபாத்யக்ஷரிடமிருந்து தெரிந்துகொண்ட விஷயத்தில், ஸ்வாமி தமக்குப் பின் வருமவரை நியமிக்கும் விஷயத்தில் இருக்கும்படியான பாரத்தின் கௌரவத்தைப் பூர்ணமாக அறிந்திருப்பதாகவும், சில நிர்ப்பந்தங்களால் கொஞ்சம் ஆலோசித்துக்கொண்டிருக்கிறாரே யொழியச் சபையின் தீர்மானங்களை ஆதரிக்கக் கூடாதென்கிற எண்ணமுள்ளவராயில்லை யென்றும் தெரியவந்தது. முதல்நாள் இராத்திரியில் அங்கு வந்திருந்த சிஷ்யர்களுக்குச் சரியான உபசாரங்கள் நடக்கவில்லை யென்று கேட்டு ஸ்வாமி வருத்தப்பட்டதாகவும் தெரிந்தது.



## சங்கத்தின் தீர்மானங்கள்.

(1) இவ்விடத்தில் இப்பொழுது சேர்ந்திருக்கும் ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை அங்கத்தாரின் மகாசங்கம், ராஜ பிரதிநிதியாக வைஸிராய் என்றும், கவர்னர் ஜெனரல் என்றும் சொல்லப்படுகிற மகாகனம்பொருந்திய லார்டு ஹார்டிஞ்சு என்னும் பிரபு அவர்களுக்கு ஸ்வாகதம் சொல்லித் தங்களுக்கு ராஜாவினிடத்தில் இருக்கும் விச்வாஸத்தைத் தெரிவிக்க அநுமதி கொடுக்கவேணுமென்று பிரார்த்திக்கிறது. [சபாத்யக்ஷர் ஸ்ரீமாந் ராஜகோபாலாசாரியரால் ப்ரேரணை செய்யப்பட்டு, ஸர்வஸம்மதமாகத் தீர்மானிக்கப்பட்டது.]

(2) இந்தச் சங்கம், ஸ்ரீஅஹோபில மடத்தின் ஸ்வாமியாக இப்போது எழுந்தருளியிருக்கும் அழகியசிங்கரைச் சபைக்கு அபிமானியாக எழுந்தருளியிருக்கும்படி பிரார்த்திக்கிறது. [ஸ்ரீ. வே. கிருஷ்ணமாசாரியரால் பிரேரிப்பிக்கப்பட்டு, ஸ்ரீ. வி. ராகவாசாரியரால் ஆமோதிக்கப்பட்டு ஸர்வஸம்மதமாக உறுதிசெய்யப்பட்டது.]

(3) இந்தச்சங்கம், திருநாராயணபுரத்தில் இருக்கும் ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமியின் பிருந்தாவநத்தை ஜீர்ணோத்தாரணம் செய்யும்பொருட்டு இரண்டாயிர ரூபாய் விநியோகிக்கும்படி ஸ்வாமி நியமித்ததாகக் கேட்டு ஆநந்த பரிதமாய் ஸ்வாமிக்கு க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் செய்து அந்த ஜீர்ணோத்தாரண விஷயத்தில் கொஞ்சம் பிரயத்நம் எடுத்துச் சீக்கிரமாகவே பூர்த்திசெய்யும்படி ஸ்வாமி கடாக்ஷித்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறது. [ஸ்ரீ. டி. கோதண்டராம ஐயங்கார் பிரேரிப்பித்து, ஸ்ரீ. எஸ். ஆராவமுது ஐயங்காரும், ஸ்ரீ. எஸ். கிருஷ்ணமாசாரியரும் ஆமோதிக்க, ஸர்வஸம்மதமாய் உறுதியடைந்தது.]

(4) ஸ்ரீ ஸந்நிதி விஷயங்களை நன்றாகப் பராமரிசிக்கவும், முக்கியமாக லௌகிக ரீதிப்படி கணக்கு வைத்துக் கொள்ளவும், சரியான யோக்கியதையோடு கூடின ஒரு மானேஜரென்னும் அதிகாரியைத் தகுந்த சம்பளம் கொடுத்து நியமிக்க ஸ்வாமி கிருபைசெய்யவேண்டு மென்று இந்தச் சங்கம் பிரார்த்திக்கிறது. [ஸ்ரீ. டி. ரங்கஸ்வாமி ஐயங்காரால் பிரேரிப்பிக்கப்பட்டு, ஸ்ரீ. பி. கே. வெங்கடாசாரியரால் ஆமோதிக்கப்பட்டு, ஸர்வஸம்மதமாய் உறுதி செய்யப்பட்டது.]

(5) அந்த மானேஜரின் வேலையைப் பரிசீலநம் செய்தும், அவர் வைத்திருக்கும் கணக்கை அடிக்கடி சோதித்துப்பார்த்தும், ஸந்நிதியின் ஜங்கம ஸ்தாவர சொத்துக்களை உசிதகாலங்களில் பராமரிசித்து, அவைகளின் ஸ்திதியை ஸ்வாமியிடம் விஜ்ஞாபநம் செய்யும் பொருட்டுச் சில தகுந்த மனுஷியர்களுக்கு அதிகாரம் கொடுக்கும்படி ஸ்வாமி கிருபைசெய்யவேண்டு மென்று

இந்தச் சங்கம் பிரார்த்திக்கிறது. [ஸ்ரீ. வி. வி. ரங்கஸ்வாமி ஐயங்காரால் பிரேரிப்பிக்கப்பட்டு, ஸ்ரீ. வி. பங்காராசாரியாராலும், ஸ்ரீ. ஜீ. எஸ். கிருஷ்ணமாசாரியாராலும் ஆமோதிக்கப்பட்டு, ஸர்வஸம்மதமாகத் தீர்மானம் செய்யப்பட்டது.]

(6) மேற்சொல்லியிருக்கும் தீர்மானங்களை ஸ்வாமி ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்து அவைகளின் தாத்பரியத்தை எடுத்து உரைக்க இங்கு வந்திருக்கும் சிஷ்யர்களில் எவ்வளவு பெயருக்கு ஸௌகரியமாக இருக்குமோ அவ்வளவு பெயரும் நரஸிம்மபுரம் போய் ஸ்வாமியைத் தண்டன் ஸமர்ப்பித்துக்கொள்ள வேண்டியது என்றும் இந்தச் சங்கம் தீர்மானித்தது. [சபாநாயகரால் பிரேரிப்பிக்கப்பட்டது.]

(7) இன்று உறுதிசெய்யப்படும் ஸபைஸம்பந்தமான விதிகள் எல்லாம் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்படவேண்டுமென்றும் இந்தச்சங்கம் தீர்மானித்தது.

---

## சபை நிர்வாஹக அதிகாரிகளின் பெயர்.

(1) சபாத்யக்ஷர் - ஸ்ரீமாந் டி. ராஜகோபாலாசாரியர், சென்னபட்டணம்.
(2) உப சபாத்யக்ஷர் ,, வே. கிருஷ்ணமாசாரியர், தஞ்சாவூர்.
(3) காரியதரிசி ,, வி. ராஜகோபாலாசாரியர், சித்தூர்.
(4) ஸ்ரீமாந் வி. ராகவாசாரியர், சென்னபட்டணம்.
(5) ,, எஸ். வாஸுதேவாசாரியர், ,,
(6) ,, வி. துரைஸாமிஐயங்கார், கூடலூர்.
(7) ,, எஸ். ராஜகோபாலாசாரியர், ,,
(8) ,, இ. ராகவாசாரியர், செங்கல்பட்டு.
(9) ,, பி. டி. சேஷாத்திரியாசாரியர், சித்தூர்.
(10) ,, வே. வீரராகவாசாரியர், ,,
(11) ,, டி. கோதண்டராமஐயங்கார், தஞ்சாவூர்.
(12) ,, எஸ். கிருஷ்ணமாசாரியர், ,,
(13) ,, டி. ரங்கஸாமிஐயங்கார், திருச்சினப்பள்ளி.
(14) ,, எஸ். டி. கிருஷ்ணஐயங்கார், மதுரை.
(15) ,, டி. கே. வெங்கடாசாரியர், திருநெல்வேலி.
(16) ,, பி. கே. கருடாசாரியர், மைசூர்.
(17) ,, எஸ். கிருஷ்ணஸாமிஐயங்கார், ,,
(18) ,, வி. வி. ரங்கஸாமிஐயங்கார், கோயம்புத்தூர்.
(19) ,, என். ஆர். ராஜகோபாலாசாரியர், நெல்லூர்.
(20) ,, ஏ. ஸந்தாநராமஐயங்கார், ,,
(21) ,, டி. ஸ்ரீநிவாஸஐயங்கார், திருநெல்வேலி.

---



## மதிராஸ் - சைதாபேட்டை பிரிவு.

### முதல் கூட்டம்.

இந்தப் பிரிவின் முதல் கூட்டம், நாளது தைமீ 2உ ஞாயிற்றுக்கிழமை பகல் 3 - மணிக்குத் திருவல்லிக்கேணி அஹோபில மடத்திற் கூட்டப்பட்டது. அப்பொழுது ஏறக்குறைய 40-பெயருக்கு மேலாகவே வந்திருந்தார்கள். இந்தக் கூட்டத்தில் முக்கியமாக நடந்த விஷயங்களாவன:—

(1) சென்ற மார்கழி மாஸத்தில் தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில் நடந்த மகாசங்கத்தின் வரலாறு எல்லாருக்கும் தெரிவிக்கப்பட்டது.

(2) இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அந்த மகாசங்கத்தின் தீர்மானங்களை ஆமோதித்து, தாங்கள் அவ்விதமாக ஆமோதித்ததை ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்யும்படி காரியதரிசியை நியமித்தார்கள்.

(3) இந்தப் பிரிவின் காரியங்கள் சரிவர நடக்கும்பொருட்டுச் சில பொது விதிகள் அப்போது செய்யப்பட்டன.

(4) அந்த விதிகளை அநுசரித்து 9 - பெயர் அடங்கிய ஒரு மானேஜிங் கமிட்டி நியமிக்கப்பட்டது:— அதில்

ஸபாத்யக்ஷர் ஸ்ரீமாந் டி. ராஜகோபாலாசாரியர்
உப ஸபாத்யக்ஷர் ,, வி. ராகவாசாரியர்
காரியதரிசி ,, எஸ். வாஸுதேவாசாரியர்.

30 - பெயர்கள் வரையில் அக்காலத்திலேயே அங்கத்தார்களாகச் சேர்ந்து, சபையை வ்ருத்திக்குக் கொண்டுவருவதில் தங்களுக்கு உள்ள சிரத்தையைப் பலவாறாக வெளியிட்டார்கள்.

---

### இரண்டாவது கூட்டம்.

இரண்டாவது கூட்டம், சென்ற 23உ ஞாயிற்றுக்கிழமை சேர்ந்தது. அப்பொழுது ஸ்ரீமாந் இஞ்சிமேடு ரங்கநாதாசாரியர், வைசுவாநர வித்தையைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்தார். அந்த உபந்யாஸத்தில் மிக அபூர்வமான விஷயங்கள் தெரிந்துகொள்ளக் கூடியனவாக இருந்தன. அவ்விடம் வந்திருந்த ஸ்ரீமாந் சேட்டலூர் நரஸிம்மாசாரியர், ஸபாத்யக்ஷரால் பிரார்த்திக்கப்பட்டு, உபந்யாஸ ஸம்பந்தமான சில விஷயங்களுக்கு ஸமாதாநம் ஸாதித்தார். ஆநந்தத்தைக் கொடுக்கக் கூடியதும், ஆத்ம விஷயக ஜ்ஞாந ப்ரதமுமான அந்த உபந்யாஸத்தையும், அதற்குப் பிறகு நடந்த சர்ச்சையையும் கேட்டு வந்திருந்தவர்கள் எல்லாரும் அதிக சந்தோஷத்துடன் தங்களுடைய க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரித்துக் கலைந்தார்கள்.

இப்பொழுது இந்தப் பிரிவில் 63 - அங்கத்தார்கள் இருக்கிறார்கள். இன்னும் அநேகர் சேரலாம்.

1911ஞு ஜனவரி மாஸத்திய வரவு செலவு கணக்கு:—

| | விவரம். | வரவு | | | செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1910-11 வருஷச்சந்தா வரவு ... ரூ. | 27 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2 | ஸ்டாம்பு காகிதம் வகைரா செலவு ரூ. | 0 | 0 | 0 | 8 | 0 | 0 |
| 3 | சபை பொதுக்காரியதரிசிக்கு 26-வது விதி பின்படி, அனுப்பியது ... ... ரூ. | 0 | 0 | 0 | 10 | 12 | 9 |
| 4 | பிப்ரவரிமீ 1உயில் கையிருப்பு ... ரூ. | 0 | 0 | 0 | 18 | 3 | 3 |
| | ஆகு ரூபா | 27 | 0 | 0 | 27 | 0 | 0 |

மயிலாப்பூர் }
1911ஞு பிப்ரவரிமீ 1உ }

எஸ். வாஸுதேவாசாரியன்,
காரியதரிசி,
மதிராஸ் பிரிவு.

---

## கோயம்புத்தூர் பிரிவு.

ஈனது பிப்ரவரிமீ 5-ம் தேதி, ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமாந் கிருஷ்ண ஸாமி ஐயங்கார் கிருஹத்தில் இந்தப் பிரிவின் முதல் கூட்டம் சேர்ந்தது. ஸ்ரீமாந் வி. வேதாந்தாசாரியர் அக்ராஸநாதிபதியாக இருந்தார். பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

(1) பொதுக்காரியதரிசி அனுப்பிய சபையின் விதிகள் அடங்கிய அச்சுப் புஸ்தகங்களும், சபையின் மாஸப் பத்திரிகை விஷயமான ஜனவரிமீ 16-ம் தேதியுள்ள லிகிதமும் கிடைத்ததைப்பற்றி, பொதுக் காரியதரிசிக்குத் தாங்கள் க்ருதஜ்ஞர்களாக இருக்கிறார்கள். [சபையின் விதிகள் கூட்டத்தில் படிக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டன.]

(2) 25-வது விதியை அநுஸரித்து 12-பெயர் அடங்கிய ஒரு மானேஜிங் கமிட்டி நியமிக்கப்பட்டது. அதில் ஸபாத்யக்ஷர்—ஸ்ரீமாந் வி. வி. ரங்கஸாமி ஐயங்கார். காரியதரிசி - பி. என். கிருஷ்ணஸாமி ஐயங்கார்.

(3) மாஸப் பத்திரிகையின் முதல் ஸஞ்சிகை வெளிவந்தவுடன், இந்தப் பிரிவின் அங்கத்தாருக்குப் பத்திரிகையின் வரலாறை விசதமாகச் சொல்லி, எல்லாரையும் அந்தப்பத்திரிகையை வாங்கும்படி காரியதரிசி கேட்டுக்கொள்வர்.

கோயம்புத்தூர், }
1911ஞு பிப்ரவரிமீ 5உ. }

வி. வேதாந்தாசாரியர்,
அக்ராஸநாதிபதி.

---



## பெங்களூர் பிரிவு.

சென்ற 1910-ம்ஞு நவம்பர்மீ 12-ம் தேதியில் பெங்களூரில் ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யர்கள் ஒரு சபை கூடி ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் ஸமர்ப்பித்த விஜ்ஞாபந பத்ரிகையின் முக்கிய அம்சங்கள்:—

"(1) ஸ்ரீ மஹா தேசிகன் சில நாளைக்கு முன் திருமேனியில் நோவு சாத்திக்கொண்டிருந்து இப்பால் திருமேனி பாங்காய் எழுந்தருளி யிருப்பதைக் கேட்டு அத்யந்த ஹ்ருஷ்டர்களாய், இப்படியே "இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்கிறபடி சிரகாலம் ஸம்பிரதாயப்ரவசநம் செய்துகொண்டு ஆஸ்தாந நிர்வாஹ துரந்தரராய் எழுந்தருளியிருந்து அடியோங்களுடைய பாக்யோதயத்தைப் பரிபூர்ணமாய் விகாஸப்படுத்தவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

(2) ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனியில் வார்த்தகப்ரயுக்தமாய் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஆராதநாதி கைங்கரியத்திற்குத் திருமேனி பாடவம் போதாமல் ஒருகால் அசக்ததைதோன்றி ஆஸ்தாந நிர்வாஹத்திற்குப் பிரத்யேகமாய் ஸ்வாமியை நியமிக்கவேண்டுமென்று திருவுள்ளத்தில் தோன்றியபோது, ஜ்ஞாந வைராக்கிய ஸம்பந்நர்களாகவும், உபயவேதாந்த ப்ரவசந துரந்தரர்களாகவும் சம தமாதி குண ஸம்பந்நர்களாகவு முள்ள ஸ்வாமிகளில் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்திற்கும் சிஷ்யவர்க்கத்திற்கும் சமர்ப்பகர்களானவர்களை ஏற்படுத்தும்படிக்கும், அப்படி ஏற்பாடு செய்யவேண்டியபோது ஸ்ரீ பெருமாள்கோவிலில் ஸம்பிரதாயப் பிரவசநம் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீ. உ. ஸ்ரீமுஷ்ணம் ஸ்வர்ணம் - கிருஷ்ணமாசாரியர், திருக்குறுங்குடி ஸ்ரீ. உ. ராமாநுஜாசாரியர், திருக்குடந்தை ஸ்ரீ. உ. குறிச்சி ஸ்ரீநிவாஸராகவாசாரியர் இந்த மூன்று திருநாமங்களில் ஒருவரை எழுந்தருளப்பண்ணும் விஷயத்தில் நாங்களெல்லோரும் ஏகாபிப்பிராயத்தோ டிருக்கிறோம். அதிலும் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதித்யாதி ஸ்வர்ணம் கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமியின் சமதமாதி குணங்களும், ஜ்ஞாந வைராக்யங்களும் மிகுதியாகக் கேட்கப்பட்டிருக்கிறபடியால், அந்த ஸ்வாமியை முக்கியபக்ஷமாய் எழுந்தருளப்பண்ணும்படி அதீவ பிரார்த்தநம் செய்கிறோம்.

3. ஆனால், ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனி பாடவக் குறைவால் ஸ்ரீஸந்நிதியில் காலக்ஷேபத்திற்கு அநுகூலமில்லாமலிருக்கிறதாக அவ்விடமிருந்து வந்தவர்களால் தெரிய வருகிறபடியால், உத்தரோத்தரம் ஆஸ்தாந நிர்வாஹத்துக்காக உத்தேசித்திருக்கும் ஸ்வாமியை இப்போதே ஸந்நிதிக்கு வரும்படி நியமித்து, அந்தஸ்வாமி மூலமாகக் காலக்ஷேபம் முதலான ஸம்பிரதாயவிருத்தியைப் பண்ணுவித்து, அஸ்மதாதி சேதந வர்க்கங்களை உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். ஒருகால் துரீயாச்ரமத்

ஷையும் பரிபாலித்துச் சிலகாலம் சமீபத்தில் வைத்துக் கொண்டு துரீயாச்ரம நடவடிக்கைகளையும் உபயவேதாந்த ப்ரவசநத்தையும் செலுத்திப்பித்துக்கொண்டிருந்தால் அது மிகவும் உசிதமா யிருக்குமென்று நாங்க ளெல்லோரும் ஏகாபிப்ராயத்தோடு பிரார்த்திக்கிறோம்.

4. ஸ்ரீ ஸந்நிதி ஸம்பிரதாயஸ்தர்களான அநேகருக்கு, ஸ்ரீ ஸந்நிதிக்கே வந்து காலக்ஷேபம் முதலியவைகளைச் சிலகால மிருந்து செய்ய அநுகூல மில்லாததால், திருவள்ளூர் (திரு எவ்வுளூர்), திருவல்லிக்கேணி, மைசூர், பெங்களூர், திருநாராயணபுரம் முதலான இடங்களில் உபய வேதாந்த பிரவசந ஸமர்த்தர்களான ஸ்வாமிகளை நியமித்து அவர்கள் மூலமாய் ஸம்பிரதாயாபிவிருத்தி செய்வித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

5. ஸ்ரீ ஸந்நிதி ததீயாராதநாதி கைங்கரியங்களுக்காக மைசூர் மஹாராஜா ஸமர்ப்பித்திருக்கும் கிராம பூமிகளின் வரவு செலவு முதலிய நடவடிக்கையும், இதற்காக ஸ்ரீ ஸந்நிதியில் நியமிக்கப்பட்ட ஏஜண்டு கணக்கு முதலியவைகளைச் சரியாய்க் கொடாமல் பிரதாரித்துக் கொண்டிருப்பதும், எல்லோருக்கும் தெரிய வந்து, இந்த அம்சம் மிகவும் விஷாதாஸ்பதமாயிருப்பதாலும், இதைப் போலவே ஸ்தலாந்தரங்களிலும் இருக்கக்கூடுமென்னும் அநுமாநம் பிராப்தமா யிருக்கிறபடியாலும், ஸமுதாயமாய் ஸ்ரீ ஸந்நிதி காரியங்களை நிஸ்ப்ருஹர்களாய் நடத்தும் லௌகிகாதிகாரிகளைப் பொது ஏஜண்டாய் நியமித்து வரவு செலவுகளைச் சமீகரித்து அந்தந்த இடங்களிலிருக்கும் மடம் பிருந்தாவநம் முதலியவைகளை ஜீர்ணோத்தாரணம் பண்ணும் படிக்கும், அதிலும் மைசூர் ராஜதானியிலிருக்கும் மடம் ஸ்ரீ திருநாராயணபுர மடம் பிருந்தாவனங்களின் ஸ்திதி மிகவும் கேவலமாயிருப்பதாலும், ஸ்ரீ திருநாராயண புரம் பிருந்தாவனத்துக்குப் பிரதி வருஷத்திலும் எழுந்தருளிக் கொண்டிருந்த பெருமாள் இந்த வருஷத்தில் எழுந்தருளாமற்போன ஸந்நிவேசம் ஸ்ரீ ஸந்நிதிக்கும் ஸ்ரீ ஸந்நிதி திருவடிகளான அடியேங்களுக்கும் அத்யந்தாவமாநகரமா யிருப்பதாலும், இதன்விஷயமாய் ஸ்ரீமான் பி. கே. கருடாசாரியர் இப்பால் ஸ்ரீ ஸந்நிதிக்கு விஜ்ஞாபித்திருக்கும் பத்திரிகாபிரகாரம் பரமாசாரியரான ஸ்ரீமத் ஆதிவண்சடகோப மஹாதேசிகன் திவ்யஸ்தாநமான பிருந்தாவநம் மடம் முதலியவைகளை அதிசீக்கிரத்தில் ஜீர்ணோத்தாரணம் பண்ணுவித்து அங்கு ஆராதநாதிகள் கிரமப்படி நடத்திவைக்கும் படிக்கும் பிரார்த்திக்கிறோம்.

6. இந்த ராஜ்யத்திலிருக்கும் சிஷ்ய கோடிக்காக, பெங்களூரில் 7-பேர்கள் அடங்கிய ஒரு நிர்வாக சபையும், அதன் காரியதரிசியாக ஸ்ரீமான் பி. கே. கருடாசாரியரும் ஏற்பட்டதை அங்கீகரிக்கவேண்டும்."

---



ஸ்ரீ:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**வெண்ணாற்றங்கரைச் சங்கம்.**

தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில், சென்ற மார்கழி மாஸத்தில் சேர்ந்த சங்கம் ஸர்வ ப்ரகாரத்திலும் அத்யந்தம் திருப்திகரமாக இருந்தது. ஶாஸ்திர பரிசீலநம் செய்திருந்த வித்வான்களும், ஸாஷாந்தராப்யாஸத்தில் நிஷ்பத்தியை அடைந்த லௌகிகர்களும், கர்மாநுஷ்டாந பரர்களான வைதிகர்களும், பெருத்த ஸமவாயத்தைப் பார்ப்பதில் உத்ஸாஹசீலர்களான ஸாமாந்ய ஜநங்களும் ஆகிய இவர்கள் எல்லாரும் சேர்ந்து பரஸ்பரம் ஸம்பாஷித்ததும், அடிக்கடி விஷயங்களைப்பற்றிச் சர்ச்சை செய்ததும், காம க்ரோதாதிகளை மறந்து ஸாமவதாராதநத்தில் ஈடுபட்டிருந்ததுமான இந்தக்கோஷ்டி ஸுகம் மிகுந்த த்ருப்தியுடன் அநுபவிக்கத் தகுந்ததாகவே இருந்தது. "[illegible]" என்கிறபடியே வாதம் செய்பவர்சிலரும், தர்மார்த்த குசலர்கள்சிலரும், மஹாவ்ரதர்கள்சிலரும், ஆஸ்திக்ய ஸம்பந்நர்கள்சிலருமான ப்ராஹ்மணோத்தமர்களால் நிறைந்திருக்கும் சபையின் சோபையைப்பார்த்து வந்தவர்கள் எல்லாரும் ஆநந்தித்தார்கள். சங்கம் சேர்ந்த ஸந்நிவேசமும் ரமணீயமாகவே இருந்தது. பெரிய ததீயாராதந கோஷ்டிக்கு உசிதமான ஸத்ரமும், மநோஜ்ஞமாய் ஸ்நாநாதிகளைச்செய்ய ஸமீபத்தில் நதியும், விசாலமாக நின்றுகொண்டு ஸம்பாஷணம் செய்யத்தகுந்த உபவந ப்ரதேசங்களும், ஆகிய இவையெல்லாம் மனஸின் த்ருப்திக்கு ஹேதுக்களாக இருந்தன. இப்படி ஒருவருக்கும் ஒருவிதத்திலும் குறையில்லாமல் ஸுகமாக இருந்த விஷயத்தைப் பற்றி உண்டான ஸபையர்களின் க்ருதஜ்ஞதைக்கு, முக்கியமாக ஸ்ரீமான் வேலாமூர் க்ருஷ்ணமாசாரியரும், ஸ்ரீ. டி. கோதண்டராமஐயங்காருமே பாத்ரம்.

உபந்யாஸங்கள்.

இப்படி பூர்ணமாக அநுபவிக்கநேர்ந்த ஆநந்தத்திற்கு, சங்கத்தில்நடந்த உபந்யாஸங்களும், ஹரிகதா காலக்ஷேபாதிகளும் காரணங்களாயின. ஸபாத்யக்ஷரின் உபந்யாஸம் முதல், முடிவில்நடந்த பகவத்விஷயோபந்யாஸம் வரையிலுமான உபந்யாஸங்கள் எல்லாவற்றிற்கும், பெரிய கூட்டம் வந்ததுடன் ச்ரோத்ராளுக்களான ச்ரோதாக்கள் பலபெயர்கள்வந்து இருந்தார்கள்; ச்ரோதவ்யமான அம்சங்களும், அளவற்றனவாக இருந்தன. ஸபாத்யக்ஷருடைய உபந்யாஸம், இதே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யப்படுகிறது. அதில் இருக்கும் வேதாந்த விஷயங்களின் விசத ப்ரதிபாதநத்தையும், அந்யூநாதிகமான வஸ்துஸ்திதி கதநத்தையும் எல்லாரும் உணரலாம். அந்த உபந்யாஸத்தைப் பார்க்கும்பொழுது, அதின்மூலமாக வெளியாகும் அவருடைய ஜ்ஞாநபாகமும், அளவற்ற ச்ரத்தையும், இப்படிப்பட்ட ஸாமர்த்யமுடையவரே அந்த அத்யக்ஷ ஸ்தாநத்திற்குத் தகுந்தவர் என்பதைத் தெளிவாகக்காட்டுமென்று எல்லாரும் தெரிந்துகொள்ளலாம். "ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி" என்கிறபடி இந்த ஸபைக்கு எவ்விதமான விக்நங்கள் நேர்ந்தாலும், இந்த அத்யக்ஷரின் அவலம்பம் இருக்கும்வரையில் சங்கைக்கு அவகாசமே யில்லை.

ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்.

இந்த ஸமிதியில் நடக்கும் ஒவ்வொரு காரியத்திற்கும் பகவத்ஸங்கல்பமே காரணம். இந்தச்சபை விஷயமாக விசேஷித்த பகவத்ஸங்கல்பம் இருப்பதாகவே பலஹேதுக்களால் தெரியவருகிறது. பூர்ண யோக்யதையோடு கூடின சத்ரான அத்யக்ஷர் கிடைத்ததுடன், கூடச்சேர்ந்திருக்கும் சில ஸப்யர்களின் யோக்யதையைப்பற்றி ஆலோசிக்கும் காலத்திலும் நிச்சயமாகப் பகவான் இந்த முயற்சியை ஸபலமாகச் செய்துவைப்பார் என்று தெரியவருகிறது. சங்கத்தில் உபந்யாஸம் செய்த ஸப்யர்கள் ஒவ்வொருவரும் அப்படிப்பட்ட வ்யக்திதான். ஆனால், திருப்புல்லாணி ஸ்ரீமாந் ரகுபதிஐயங்கார் ஸ்வாமியின் ஸாமர்த்யம் அந்யாத்ருசம். ஸபையின் அவதாரத்தைப்பற்றி அவர் செய்த உபந்யாஸமும், "ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்" என்கிற வாக்யத்திற்கு அவர் எடுத்து உபந்யஸித்த அர்த்தங்களும், ஸாக்ஷாத் நடக்கிறது போலவும் கேட்கப்படுகிறது போலவுமிருக்கின்றன. "ஜகதி பவிதா கச்சித் த்ரஷ்டும் விபச்சித" என்கிற வாக்யத்தைச்சொல்லி, அதை நிறைவேற்றுவதற்கன்றோ இந்த ஸபையைப் பகவான் அவதரிப்பித்திருக்கிறாரென்று அந்தஸ்வாமி ஸாதித்த விஷயம் யதார்த்தமே. அதை நிறைவேற்றுவதற்குத்தான் ஸபையின் ப்ராணஸ்தாநமான இம்மாதிரியான வ்யக்திகளை எம்பெருமான் ஸ்ருஷ்டித்திருக்கிறார்போலும்.



ஸபையின் தீர்மானங்கள்.

ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியை உத்தேசித்து இந்தச் சங்கத்தில் சேர்ந்த ஸப்யர்கள் எல்லாரும் ஸர்வஸம்மதமாகச் சில தீர்மானங்களைச் செய்து, அவைகளை ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்துகொள்ளவேண்டுமென்று நிர்ணயம் செய்தார்கள். அந்தத் தீர்மானங்கள் இந்தப் பத்ரிகையின் மற்றொரு பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளின் தாத்பர்யமென்னவென்றால், அவைகளிற் கண்டிருக்கும் விஷயங்களைப்பற்றி ஸப்யர்கள் இம்மாதிரியாக அபிப்ராயப்பட்டிருக்கிறார்களென்பதை ஸ்வாமி ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்துகொள்ளவேண்டியது என்பதே ஒழிய, சிலர் நினைத்திருப்பதுபோல் ஸ்வாமியை நிர்பந்திக்கும் பொருட்டுப் ப்ரயத்நப்பட்டதன்று. ஸர்வவிதத்திலும் பாதந்த்ர்யர்களாக இருக்கையிலும் அயோத்யா புரவாஸிகளான ஜநமுக்யர்கள் ஒன்று சேர்ந்து மந்த்ராலோசனைசெய்து ஐகமத்யத்தை யுடையவர்களாகக்கொண்டு, வார்த்தகத்தை யடைந்த தசரத சக்ரவர்த்தியிடம் போய் எந்த ரீதியை அநுஸரித்து "அநேகவர்ஷஸாஹஸ்ரோ வ்ருத்தஸ்த்வமஸி பார்த்திவ' என்றும், 'இச்சாமோ ஹி மஹாபாஹும்' என்றும் தங்களுடைய மநோகதமான அபிப்ராயத்தை ஸவிநயமாக நிவேதநம் செய்துகொண்டார்களோ, அந்த ரீதியை அநுஸரித்தே இந்த ஸப்யர்கள் எல்லாரும் ஸ்நேஹத்தாலும் பஹுமாநத்தாலும் ஸ்வாமியை ஸ்மரிப்பிக்கத் துணிந்தார்களே ஒழிய, ஸ்வாமிக்குத் தர்மம் சொல்லவாவது, ஸ்வாமியை இப்படித்தான்

அநுஷ்டிக்க வேணுமென்று நிர்பந்திக்கவாவது ப்ரயத்நப்பட்டவராக இல்லை. ஏதாவது ஒரு காரண விசேஷத்தால் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளத்தில் அல்பதா க்ரஹணம் நேர்ந்த போதிலும், "[illegible]" என்கிறபடி ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளைப்பிடித்துக்கொண்டே கலக்கத்தைத் தெளிவிக்கவும், நியாய்யமும் உசிதமுமான பதார்த்தங்களின் இஷ்டப்ராப்தியை ஸாதித்துக்கொள்ளவும் இந்த ஸபையார்கள் ப்ரயத்நப்பட்டிருக்கிறார்கள். பாலூட்டவேண்டிய குழந்தை தானாகவே பால் வேணுமென்று கேட்பதைப்பார்த்துப் பிதா ஆநந்திப்பதுபோல், ஸ்வயமாகவே ஸ்ரீ ஸந்நிதி விஷயத்தில் ச்ரத்தையோடு ஆத்மோஜ்ஜீவநத்தைத் தேடிக்கொள்ளப் பிரயத்நப்பட்டிருக்கும் சிஷ்யர்களின் அஞ்ஜலிகளை, "[illegible]" என்கிறபடி ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றி இந்தச் சபைக்கு முக்கியபோஷகராயிருந்து அநுக்ரஹிப்பரென்று நம்புகிறோம்.

---

# The VEDANTA DIPIKA.

A Monthly Tamil Journal of Hindu Religion and Philosophy.

## ORDER FORM.

*To*

*The Manager,*

*Vedanta Dipika,*

*Mylapore, Madras, S.*

SIR,

Please enrol me as a subscriber to The Vedanta Dipika for the year 1911, and send me the next number by Value Payable Post.

Yours truly,

..............................................................

*Address.*

..............................................................

..............................................................

..............................................................

.............................................
............................................. }

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை மானேஜர்

அவர்களுக்கு

மயிலாப்பூர், சென்னை.

ஐயா,

வேதாந்த தீபிகை என்னும் பத்ரிகைக்கு என்னை ஒரு சந்தாதாராகப் பதிவு செய்துகொண்டு, அடுத்த ஸஞ்சிகையை V. P. P. வழியா அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் விதேயன்,

........................................

விலாஸம் ........................................

........................ } ........................................

........................ } ........................................



வண் சடகோபஸ்வாமி பிருந்தாவனம்
திருநாராயணபுரம் (மேல் கோட்டை).

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த திபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] ஸாதாரண ஸ்ரீ பங்குனிமீ. [ஸஞ்சிகை 2.

## ஸபாத்யக்ஷர் உபந்யாஸம்.

(தொடர்ச்சி.)

6. மேலும் நம் ஆசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கும் விஷயங்கள் பொதுவாய் எல்லார்க்கும் மனத்திற்பட்டு அவைகளில் ருசி பிறக்கவும், ஏற்கனவே யதாக்ரமம் காலக்ஷேபாதிகள் செய்திருக்கும் ஸ்வாமிகளுக்கு "ஸந்தோஷாய ச விதுஷாம் ..." என்கிற ஸ்ரீஸூக்தியாக குதூஹலஜநகமாகவும், மற்றும் சில பேர்களுக்கு ஸுவர்ணநிவந்தநமாய் விஜ்ஞாநார்ணவமாகவும் உத்தேசித்துச் சில முக்கியமான விஷயங்களில் ஜ்ஞாதாக்களைக்கொண்டு உபந்யாஸங்கள் செய்விக்கப்படும். இவைகளை ஸ்ரவணம் பண்ணி ஸ்ரவணைக ஸ்ரீயர்களாய் அநுமோதிக்கும்படி ஸ்வாமிகளைப் ப்ரார்த்திக்கிறேன். அன்றியும், மடத்தின் காரியங்களில், இந்தச் சபையாருக்கு எந்தெந்த அம்சங்களில் ஸ்வாமிக்கு விஜ்ஞாபநம் செய்யவாவது, வேறுவிதமான ஏற்பாடுசெய்யவாவது அவசியமென்று தோன்றுகிறதோ அந்தந்த விஷயங்கள் ஸம்பந்தமாகச் சீர்

மானங்கள் ஏற்படுத்தி இந்தச் சபையார்களின் பெருந்தொகையாரது அபிப்பிராயத்தை அநுஸரித்து அவைகளை உறுதிசெய்யவேண்டும். 'இந்தச்சபையிற் சேர்ந்தவர்கள் சிலபேர்கள் தானே; சிஷ்யர்கள் ஸஹஸ்ரஸஹஸ்ரங்கள் இருக்கிறார்களே; நாம்செய்வது என்னபிரயோஜநம்?' என்று எண்ணி நாம் மந்தோத்ஸாஹராய் இருக்கக்கூடாது. எல்லா ஶிஷ்யர்களும் நம்மைச்சேர யாதொரு ப்ரத்யவாயமுமில்லை. சேர்ந்தமட்டில் ஏகோபித்துச் செய்யும் தீர்மானங்களுக்குக் கௌரவம் குறையாது. ஸமவாயத்துக்கு இருக்கும் பலம் விஶிஷ்டமாய் வெளிப்படும் அபிப்பிராயங்களுக்கு இராது. 'நம்முடைய தீர்மானத்தினால் ஸத்ஃபலமே மேற்படவில்லையே' என்று நாம் அவஸரப்பட்டுச் சோகிப்பதும் அநுசிதம். யுக்தாயுக்தங்களை நாம் ஆலோசித்து ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் விண்ணப்பம்செய்தால் ஹிதவசநியுடன் சொல்லும் விஷயங்களைக் கவனிக்கும்படியாகவேயிருக்கும். உடனே பலம் இல்லாவிட்டாலும் க்ரமஶ: ஸுகம் ஏற்படும். பொதுநன்மையைக்குறித்து மஹாஜநங்கள் செய்யும் ப்ரயத்நம் வீண்போகாது. எந்தப் பக்ஷத்திலும் ஸமவாயத்துக்கு எந்தக்காரியங்கள் அவசியமோ அவைகளை நாம் உடனே யோஜித்துச்செய்யவேண்டியதுதான். அப்படிப்பட்ட காரியங்கள்விஷயமாயும் தேவரீர்கள் யோஜனைக்குச் சில தீர்மானங்கள் இந்தச்சபை நிர்வாஹகர்களாற் கொண்டுவரப்படும். அவைகளையும் க்ரமமாய்ப் பரிசீலநம் பண்ணவேணும்.

7. இந்தச் சபையினால் உண்டாகக்கூடிய ப்ரயோஜநங்களையும், அதுவிஷயமாய் நாமெல்லோரும் தாம்தாமிருக்கும் பாகங்களில் விஶேஷ ப்ரயத்நங்கள் செய்யவேண்டுமென்பதையும் நான் அதிகமாக விவரிக்கவேண்டுவதில்லை. நம்மவர்களில் ஸ்வார்த்தபரதையை விட்டு, பொது நன்மையில் ஶ்ரத்தையாய் த்ரவ்யவ்யயமோ ஶ்ரமவ்யயமோ செய்கிறவர்கள் துர்லபம். அப்படி செய்தாலும் ஆரம்பஶூரத்வத்தை மாத்திரம் ஆதரிக்காமல் அநுஸ்யூதமான உத்ஸாஹத்தை அவலம்பித்து, கார்யஸித்திபர்யந்தம் ஶ்ரமத்தை வஹிப்பவர்கள் அதிலும் துர்லபம். இந்த இரண்டு விஷயமும் த்ருடமாய் அங்கீகரித்தாலொழிய ஒரு காரியமும் நிறைவேறாது.



ஆஸ்திகமான ஸம்ஸ்தைகளும் தேஶத்தில் மஹோத்ஸாஹர்களான ப்ரயாஸிகளும் ஸஹஸ்ரமாய் நமக்குத் தெரிந்திருக்கிறார்கள். அந்தக் கோஷ்டியில் நாமும் சேராமல் நிரந்தரமாய் நம்முடைய சபை நடக்கவேண்டிய உபாயங்களை நாம் ஒவ்வொருவரும் தேடவேண்டும். அப்படிச்செய்வதில் நம் ஸ்ரீதேவநாயகன் அநுக்ரஹித்திருக்கும் ஸௌஶீல்யாதி குணங்களே நமக்கு ஶரணம். நிவ்ருத்தவ்யாபாரரான ப்ரபந்நர்களுக்கு இந்த வியாபாரங்கள் அநுசிதமென்று தேவரீர்கள் அதிஶங்கை பண்ணுவது உசிதமன்று. ஸம்ப்ரதாயவ்ருத்தியும் ததநுகுணமான வியாபாரங்களும் பகவத் கைங்கர்யரூபமாயும் நம் ஆசாரியர்கள் ஆஜ்ஞாநுபாலநரூபமாயும் ஆகுமே யொழிய ஸ்வரூபத்துக்கு பாதகங்களாகமாட்டா. இவ்விஷயங்களை யெல்லாம் நன்றாய்ப் பராமர்சித்து இந்தச் சபைக்கு உத்தரோத்தராபிவிருத்தி உண்டாகும்படி ஸவிமர்சளான ஸாத்வதர்களும் அநுக்ரஹிக்கவேண்டும்.

8. இதுவரையில் நம்முடைய சபையின் உத்தேசங்களையும் அதன் அவச்யகர்த்தவ்யங்களையும் இவைகள் விஷயமான ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானங்களையும்பற்றிச் சொல்லிவந்தேன். இனி நம் ஸம்ப்ரதாயத்தின் மகிமையையும், அதில் நமக்குப்பூர்வாசார்ய க்ருபாலப்தமான உபகாரங்களையும், ஸ்ரீவைஷ்ணவஸமாஜத்தில் நாம் கவனிக்கக்கூடிய ஏற்றங்களையும், இதரமதஸ்தர்கள் நம்மிடத்தில் ஆரோபிக்கும் தோஷங்களையும், அவைகளைப் பரிஹரிக்கவும் நம் மதவ்ருத்தியை ஸாதிக்கவும் உசிதமான மார்க்கங்களையும் பற்றி, யதாமதி, ஸங்க்ஷேபமாய்ச் சொல்லுகிறேன். ஏற்கெனவே ப்ரஸ்தாபித்த விஷயங்களிலாவது, இனிமேற் சொல்லப்போகிறவைகளிலாவது விசேஷமாய்ப் புதுவிஷயங்களாய் ஸப்யர்களுக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் செய்வதாய் எண்ணி நான் ஒன்றும் சொல்லவில்லை. எல்லாரும் நம் ஸமாஜ விஷயமாய்க் கவனித்து, இதர ஸமாஜிகள் ஶ்ரத்தையாலே செய்யும் காரியங்களும் ப்ரசாரம் பண்ணும் உபந்யாஸங்களும் நமக்கு பாதகமாகாமல் இருக்கவேண்டியதற்காக வஸ்துஸ்திதியையும் கர்த்தவ்யாம்ஶங்களையும் தேவரீர்கள் ஸ்மரணத்துக்கு விஷயமாக்குகிறதே எனக்கு உத்தேசம்.

9. மதமென்கிற சொல்லுக்கு - அபிப்பிராயமென்பது அர்த்தம். "யேமே மதமிதம் நித்யம்" என்றும், "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" என்றும் ஸ்ரீ கீதாசார்யன் ப்ரயோகித்தார். ஆனால், லோகவ்யவஹாரத்தில், மதமென்பது ப்ரக்ருதிவாதாதிஷ்டர்களின் ஸ்வாத்யாத்ம ஸம்ப்ரதாயங்களைப்பற்றி அந்தந்த ஜநஸமூகங்கள் பஹுமாநமாய் அவலம்பிக்கும் நோக்கங்களுக்கு வாசகமாய் உபயோகப்பட்டு வருகிறது. ப்ராயேண அந்தந்த நோக்கங்களின் ஆதிபான கல்பகர்கள் அல்லது ப்ரவக்தாக்கள் யாரோ அவர்கள் பேரால் அவை நிர்தேசிக்கப்பட்டு, இல்லது மதமென்றும், பௌத்தமதமென்றும் பெயர்வழங்கிவருகிறது. "ஹிந்துமதம்" என்று நம்முடைய மதத்தை எல்லாரும் குறிப்பது இந்த மதத்தை அவலம்பிக்கும் வ்யக்திகளை உத்தேசித்தும் கல்பகர்களாவது பிரவக்தாக்களாவது ஸாமாந்யமாய் இல்லாததனால் அவர்களை நிர்தேசிக்காமலும் ஏற்பட்டிருக்கிறபடி. ரிஷிகளின் மதமென்றும், வேதங்களின் அல்லது உபநிஷத்துக்களின் மதமென்றும், பிராஹ்மணர்கள் மதமென்றும் நம்முடைய மதத்தையே ப்ரவர்த்தகர்களடியாகச் சிலர் நிர்த்தேசிக்கிறதும் உண்டு. ஆனால் இந்த நாமபேதங்களில் அர்த்தபேதங்கள் உண்டென்று சிலர் எண்ணலாம். முக்கியமான ஸாதாரணாம்சங்களைக்கொண்டு ஏகமதமாய் ஸங்க்ரஹித்தாலும் சில அம்சங்களில் அபிப்பிராயபேதங்களை நிஷ்கர்ஷித்து மதாந்தரமாய் த்வைதமென்றும் விசிஷ்டாத்வைதமென்றும் வ்யவஹரிப்பது வழக்கம். சங்கரத்வைதமென்றும் ராமாநுஜவிசிஷ்டாத்வைதமென்றும் சொல்லுகிற பிரயோகங்கள் இதுக்கு நிதர்சனங்கள். சேதநனுக்கு தத்வஹித புருஷார்த்தங்களை நிஷ்கர்ஷித்து விவேகியாத மதங்கள் மதங்களாக மாட்டா. அதில் தேஹாத்மவாதங்களை மட்டும் ஒப்புக்கொண்டு லோகாந்தரத்தை அங்கீகாரம் பண்ணாத மதங்களை நாஸ்திக மதங்களென்று நம்மவர்கள் நிராகரித்துவிட்டார்கள். ஜீவேஸ்வரதத்வங்களில் ஒன்றை நிராகரித்தாலும் வேதஸ்வாதந்த்ர்யத்திற் பலவாறாய் விப்ரதிபத்தி செய்தாலும், ப்ராமாணிகர்களில் ஸர்வ ப்ரமாணமாகிய வேதத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்களை ஆஸ்தி



கர்கள் என்று அங்கீகரித்தார்கள். அந்த வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளாதவர்களை பாஹ்யர்கள் என்று நிராகரித்தார்கள். பௌத்தமதம் நமக்கு பாஹ்யமானாலும் விசேஷமாய் வேதப்ராமாண்யத்தை வாதித்தும் வைதிகத்தில் யாகங்களை உபபாதித்தும் ஆஸ்திகத்தை ஸாக்ஷாத்தாய் திரஸ்காரம் செய்யாமலும் ஏற்பட்டதாலும், ஜாதிவைஷம்யத்தை உபதேசித்ததாலும், ஆதியில் நம்முடைய தேசத்திலும் தற்காலம் லங்கை டிபட் சீனா முதலான தேசங்களிலும் பிரசுரமாயிற்று. தர்க்கவாதங்களில் பிரவணராய் யுக்தியால் ஈஸ்வரஸத்தையை நிரூபிக்க மனமில்லாதிருக்கும் அர்வாசீனர்களான பாஸ்சாத்யர்களுக்கும், ஸ்ம்ருதியிலும் ப்ராஹ்மணர்களிடத்திலும் ப்ரத்வேஷிகளான சில நம்தேசத்தார்களுக்கும் அந்தமதம் ரொம்பவும் ஆதரணீயமாயிருக்கிறது. நம் மதத்தில் பிரஸித்தமாய்ச் சொல்லப்படும் அஹிம்ஸையும் வைராக்யமுமே அதற்கு முக்கியமான குணங்கள். இந்த குணங்கள் ஸித்திபெற்றிருந்த பிராக்காலத்தில் அந்த மதம் நம்தேசத்தில் கௌதம புத்தர் என்னும் க்ஷத்திரியரால் பிரவர்த்திக்கப்பட்டது. ஜைநமதமும் ஸமாந காலத்தில் ஸமாநகாரணத்தைக்கொண்டு ஏற்பட்டதுதான். இந்த மதங்கள் இரண்டும், சுமார் 2400 - வருஷகாலமாய் லோகத்தில் நடந்துவருகின்றன. கபிலமதம் அவைகளுக்குப் பிராசீநமானாலும் தற்காலம் அநுஷ்டாநத்தில் இராமல் கேவலம் க்ரந்தநிஷ்டமாயிருக்கிறது. ஸ்ம்ருதியிலும் புராணங்களிலும் கபிலமதத்தையாவது கபிலரையாவது தூஷித்த வசனங்கள் இல்லை. ப்ராயேண பாரதத்திலும் பகவத்கீதையிலும் கபிலர் ஆப்தராகவே நிர்தேசிக்கப்படுகிறார். ப்ரஹ்மஸூத்ரத்தில் காபிலத்தின் ஈஸ்வராம்சத்தில் மாத்திரம் கண்டநம் வ்யக்தமாயிருப்பது ஸர்வப்ரஸித்தம். ப்ராசீனர்களான நம் ஆசாரியர்களும் ஈஸ்வராம்சத்தில் காபிலவாதங்களை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார்கள். நம்தேசத்தில் ந்யாயசாஸ்த்ரத்துக்கு காபிலமே மூலஸூத்ரமென்று ஸம்ப்ரதாயவிதுக்கள் நிரூபிக்கலாம். "பௌத்தர்களில் ப்ரமாணமான ந்யாய விஸ்தாரங்களை ஸம்ஷிக்க கௌதமஸூத்ரம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. நம்மவர்கள் கௌதமஸூத்ரீய

தர்சனத்தின் விருத்தமான அம்சங்களை நிராகரித்து அதில் ஆநுஷங்கிகமாய் ஏற்பட்ட ந்யாயவாதோபாயங்களையும் அநேக விசாரங்களையும் அநேகப்ரமேயங்களையும் பூர்ணமாய் அங்கீகரித்திருக்கிறார்கள். ஆனால், ந்யாயவாதிகளின் விசேஷப்ரயோகத்தால் நவீநவேதாந்தம் ந்யாயாநபிஜ்ஞர்களுக்கு துர்க்ராஹ்யமாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீவேதாந்ததேசிகர், ஸ்ருதப்ரகாசிகாசார்யர் முதலான ப்ராசீநாசார்யர்களின் க்ரந்தங்களும் அவர்களுடைய லலிதமான வாக்யரசனையுமே ஸுகமங்களாயிருக்கின்றன. அந்த சைலியையே நம் பண்டிதர்கள் அநுகரித்தால் ஸ்ராவ்யமாயிருக்கும். பூர்வமீமாம்ஸா விஷயமாய் நம் ஆசார்யர்கள் விசேஷமாய் ஸ்ரமப்பட்டு வேதசாஸ்த்ரம் ஸமர்த்தித்திருக்க, தற்காலம் அந்த தர்சநம் ப்ராசுர்யவசனங்கள் விசேஷமாய் இல்லாமலிருப்பது யுக்தமன்று. "ப்ரமாணம் யச்ச சாஸ்த்ரம் ச வேதசாஸ்த்ராவிரோதினா। யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே" என்று மநு வசனத்தால் நிர்தேசித்ததும் மீமாம்ஸாந்யாயரூபமான தர்க்கமென்றே யுக்தியால் பர்யவஸிக்கும். உத்தரமீமாம்ஸையில் காதாசித்கமாய்வரும் பூர்வமீமாம்ஸா ஸம்பந்திகளில் த்ருப்தர்களாயிராமல் ப்ரமாணபரர்களான நம் சிஷ்டர்களும் ஆசார்யர்களும் பூர்வமீமாம்ஸையில் ஸ்ரத்தை வைக்கவேண்டும்.

"சப்தஸ்ய வ்யாக்ரியாதோஷம் ச ஸமுத்ப்ரேக்ஷ்ய தத்த்வஜ்ஞா:।
ந்யாய: ஸ்ப்ருசிகதைவ்யேத ஜஹ்யாதேவ ஜவாத்ராதச ॥"

என்று கவிதார்க்கிகஸிம்ஹம் அருளிச்செயலை நமக்கே அநுபவிக்கும்படியான ஸ்திதிக்குக் கொண்டுவரக்கூடாது.

10. இப்படி அந்தந்தவம்சங்களில் ஆதரணீயமான பல மதங்களும் ஸித்தாந்தங்களும் இருக்க, வேதாந்தத்துக்கும் அதிலும் விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்துக்கும் வந்த ஏற்றமென்னவெனில்:—வேதங்களின் ஸாரமாகிய உபநிஷத் பாகங்களில் ஸாரஸமாய் ஏற்படும் பரப்ரஹ்மத்தை உத்தமமான தத்த்வமாய் ஒப்புக்கொண்டு இதர தத்த்வங்கள் அதனால் வ்யாப்தமென்றும், ப்ரஹ்மப்ராப்தியே மோக்ஷமென்றும், அது பரமாநந்தரூபமென்றும், அது தத்த்வஜ்ஞாநஸாத்யமென்றும் நிரூபிப்பதால், வேதாந்தஸித்தாந்தங்களெல்லாம் இதரஸித்தாந்தங்களைப்பார்க்கிலும் ஸ்லாக்யங்கள். வேதங்களைப் பிரமாணமாகக் கொள்ளாதவரும், அநுமானத்தினால், ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் ஸர்வவ்யாபியாய் லோகஸ்ரஷ்டாவாய் இதரவேதந விலக்ஷணனாய் ஒரு ஈச்வரனை ஸாதிக்கலாமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட ஈச்வரன் நமக்கு யுக்திஸாத்யனாய் இல்லாமல் அநாதியான சாஸ்த்ரைகஸித்தனாய் ஏற்பட்டிருப்பது நம்முடைய வேதாந்தத்தில் விசேஷ விச்வாஸத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் ஆகிய மூன்றும், வேதாந்தத்தில் முக்யங்களான ஸித்தாந்தங்கள். இவைகளின் ஸமாநாகாரங்கள் ஏற்கெனவே மேலே சொல்லப்பட்டன. பேதங்கள் ப்ரஸித்தங்களாயிருப்பதால், விவரிக்க வேண்டியதில்லை. பேதச்ருதிகளுக்கும் அபேதச்ருதிகளுக்கும் விரோதம் வாராமைக்காக, விசிஷ்டாத்வைதத்தில் ஈச்வரனுக்கு ஜீவர்களை பிரகாரமாகவும், சித்தும் அசித்தும் ஸர்வாவஸ்தைகளிலும் ஈச்வரனுக்கு சரீரமாயிருப்பதால் சிதசித்விசிஷ்டனான ஈச்வரன் ஏகதத்த்வமென்றும் ஐக்யம் சொல்லும் ச்ருதிகளை நிர்வாஹம் பண்ணினார்கள். ஈச்வரனை ஸித்ததத்த்வமாயும், "ஜ்ஞா ச்ருஹீதாஸிதோ ராமதேஹ:" என்கிறபடி ஸர்வோபாயமான விக்ரஹவிசிஷ்டனாயும் ஒப்புக்கொள்ளுகிற நமக்கு உபாயோபேயங்களில் தெளிவும், பக்தியென்கிற உபாஸநத்துக்கு ஆலம்பநமும், ப்ராப்திதசையில் அதுவரையில் இருந்த ஆத்மஸாக்ஷாத்காரத்துக்கு லோபமில்லாமல் பரிபூர்ணாநந்தமும் ஸித்திக்கும். ச்ருதிஸ்ம்ருதிகளில் ஸர்வப்ரவர்த்தகரென்றும் புருஷோத்தமனென்றும் ப்ரஸித்திபெற்று, எல்லார்க்கும் பொதுவான பாரதராமாயணங்களில் ப்ரதிபாத்யரான ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைச் செய்தவராகிய ஸ்ரீமந்நாராயணனே நமக்கு பரதேவதை. இதனால், பரதத்த்வத்துக்கு இதர நாமங்கள் வாசகங்களன்றென்று சொல்லக்கூடாது: ஸர்வசப்தவாச்யனான ஈச்வரனுக்கு சிவாதிநாமங்களும் பொருந்தும். ஆகிலும், தேவதாபேதங்களைப் பிர

மாணமென்று ஒப்புக்கொள்ளுகிறவர்கள் அவர்களில் தாரதம்மியத்தை ஒப்புக்கொள்ள வேண்டிவரும். அப்பொழுது பரதத்வமான தேவதைக்கும் ஸமஸ்தகல்யாணகுண விசிஷ்டதையும் ஹேயகுணராஹித்யமும் அவசியமாய் ஒப்புக்கொள்ளவேணும். நம் ஆசாரியர்கள் சாஸ்த்ராதிக்ரந்தங்களில் இந்த உபயலிங்கமே ஈச்வரனுக்கு அஸாதாரணமான லிங்கமென்று நிரூபித்திருக்கிறார்கள். எல்லா மதஸ்தர்களிலும் அநுஷ்டானத்தில் இவைகளை ஒப்புக்கொள்ளாதவர்களில்லை. ஒப்புக்கொள்ளாதவரையில் ஈச்வரனை உத்தேசித்து ப்ரணாமாதிகளும் ஸ்துதிப்ராயங்களையும் உசிதமாகாது. ஸகுணவித்யைகளும் நிர்குணவித்யைகளும் உபநிஷத்துக்களில் ஸங்கலிதமாய் ஸ்வபேத நியமமில்லாமல் உபதேசிக்கப்பட்டிருப்பதால், நிர்குணோபாஸநமே உபநிஷத்துக்குத் தாத்பர்யமென்று இதரர்களுடைய த்விஷ பக்ஷத்தை நம் ஸித்தாந்தத்தில் அங்கீகரிக்கவில்லை. உபாஸநங்கள் விசேஷமாய் ஸகுணமாயிருப்பதால் ஸகுணோபாஸநங்களை ஒருபடி இறக்கி அவைகளுக்கு க்ரமமுக்திதான் பலமென்று நம் ஆசார்யர்கள் ஒப்புக்கொள்ளாமல், எல்லா உபாஸநங்களையும் விகல்பிதங்களாயும் ஸமானங்களாயும் (அதாவது ஸாக்ஷாத்தாய் மோக்ஷோபாயங்களென்றும்) சொல்லுகிறார்கள். நித்யர்கள் விஷயத்திலும் முக்த விஷயத்திலும் ப்ரக்ருதிஸாதநமான வைகுண்ட விஷயத்திலும் இதரர்கள் யுக்தியால் அநேக குதர்க்கங்கள் சொன்னாலும், அவைகள் நேரில் ச்ருதிவிஹிதங்களாய் இருப்பதுபற்றி அந்த ச்ருதிகளின் ப்ராமாண்யங்களை ஸமர்த்தித்து அவைகளின் ஸத்தையையும் ப்ரஸாவங்களையும் ஈச்வரனுடைய நித்யஸங்கல்பங்களாக நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். காரணதோஷங்களினாலும் ப்ராந்தியினாலும் சிலவேளை சிலர்க்கு ப்ரத்யக்ஷவிஷயங்கள் விபரீதமாய் பாஸித்தாலும், ஸர்வஸாதாரணமாய் ஏற்பட்டிருக்கும் ப்ரத்யக்ஷங்களை ஸத்யமாக நம்பி அவைகள் ப்ராந்திகளென்றும் அயதார்த்தங்களென்றும் சொல்லுகிற பக்ஷத்தை நம் ஆசாரியர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இதையெல்லாம் ஸ்ரீவேதாந்ததேசிகரும் திருவுள்ளத்தில்வைத்து, "[illegible]



[illegible]" என்று தத்த்வமுக்தாகலாபத்தில் அருளிச்செய்தார்.

(இன்னும் வரும்.)

---

## ஸாமாந்ய நீதிகள்.

தர்கோऽப்ரதிஷ்ட: ச்ருதயோ விபிந்நா நைகோ முநிர்யஸ்ய மதம் ப்ரமாணம் । தர்மஸ்ய தத்த்வம் நிஹிதம் குஹாயாம் மஹாஜநோ யேந கத: ஸ பந்தா: ॥

யுக்தியோ எல்லையில்லாதது; வேதங்களோ நாநாவிதங்களாக இருக்கின்றன; ருஷிகளின் மதத்தை ஒப்புக்கொள்வோமென்றால் அப்படிப்பட்ட ருஷிகள் அநேகர் உளர்; தர்மத்தின் நிச்சயம் மிகவும் ஸூக்ஷ்மம்; ஆகையால், மஹாஜநங்கள் எந்தவழி போகிறார்களோ அதுவே தர்ம்யமான மார்க்கம்.

ப்ருத்வீ விஹாணம் [illegible] ஸூர்யாக்நிநா ராத்ரிதிவேந்தநேந । மாஸர்துதர்வீபரிகட்டநேந பூதாநி கால: பசதீதி வார்த்தா ॥

உலகத்தில் விசேஷ ஸமாசாரமாவது: பூமியாகிற பாத்ரத்தில் ப்ராணிகளைப் போட்டு, ஆகாயமாகிற உலமூடியால் மூடி, பகல் இரவாகிற விறகோடு கூடிய ஸூர்யனாகிற ஜ்வாலையில் அடிக்கடி மாஸம் ருது இவைகளாகிற துடுப்பினால் கிளறி, காலனாகிற பாசகன் நம் எல்லாரையும் பாகம்செய்கிறான் என்பதுதான்.

---

ஸ்ரீ:.

## தத்க்ரதுந்யாய விமர்சம்.

(தொடர்ச்சி.)

அந்யயோகவ்யவச்சேதம் சொல்லுகிறவர்களின் கருத்து என்னவென்றால்:—மோக்ஷ தசையில் அபஹதபாப்மத்வம் முதலிய குணங்கள் உண்டாகவேண்டியதாக இந்த அதிகரணத்தில் ஏற்படுகிறபடியால், அந்தக் குணங்களோடு கூடினதாகவே உபாஸிக்க வேண்டும்; இல்லாவிட்டால் தத்க்ரது ந்யாய விரோதம் வரும் என்று சொல்லியிருப்பதால், அந்யயோகவ்யவச்சேதம் தான் இந்த ந்யாயத்திற்கு அர்த்தமென்று ஒப்புக்கொள்ளவேண்டும். அயோகவ்யவச்சேதமென்னில் உபாஸிக்கப்படாமலிருந்தபோதிலும் அபஹதபாப்மத்வம் முதலான குணங்கள் உண்டாகலாமாகையால், இந்த ந்யாயவிரோதம் வருமென்று சொல்ல இடமில்லை. ஆதலால், ந்யாயவிரோதம் வருமென்று சொன்ன ஸ்ரீபாஷ்யகாரருடைய அபிப்ராயம் அந்யயோகவ்யவச்சேதம் என்பதுதான்.

### உபாஸநங்கள்தோறும் வெவ்வேறு குணங்களும் ரூபங்களும்.

இதற்குச் சிலர் ஆக்ஷேபம் சொல்வார்கள்: எல்லா உபாஸநங்களிலும் ப்ரஹ்மத்தைச் சிற்சில குணங்களையுடையதாக த்யாநிக்க வேண்டியதென்று ப்ரஹ்மஸூத்ரத்திற் சொல்லியிருப்பதாக ஸ்ரீபாஷ்யத்தில் வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. "ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய" (3-3-11) என்கிற ஸூத்ரத்தில், உபாஸிக்க வேண்டிய ப்ரஹ்மம் எல்லா உபாஸநங்களிலும் ஒன்றாகையால் அதைச்சேர்ந்த ஆநந்தம் முதலியவைகளும் எல்லா உபாஸநங்களிலும் த்யாநிக்கவேண்டியவைகள்தான் என்று சொல்லிவிட்டு, அடுத்ததாகிற "ப்ரியசிரஸ்த்வாத்யப்ராப்திருபசயாபசயௌ ஹி பேதே" (3-3-12) என்கிற ஸூத்ரத்தால் ஒரு பூர்வபக்ஷம் செய்துகொண்டு அதற்கு ஸமாதாநமும் சொல்லுகிறார். அந்தப் பூர்வபக்ஷமாவது:—இப்படி ஆநந்தாதிகள் எல்லா உபாஸநங்களிலும் ப்ராப்தமானால், தைத்திரீய ஆநந்தவல்லியிற் சொல்லியிருக்கும்



படியான ப்ரியசிரஸ்த்வாதிகளும் வரட்டும் என்பதுதான். அதாவது - அந்த ஆநந்த வல்லியில் "தஸ்ய ப்ரியமேவ சிர:—மோதோ தக்ஷிண: பக்ஷ:—ப்ரமோத உத்தர: பக்ஷ:" என்று ஆநந்தத்தில் ஒவ்வொரு பாகங்களான ப்ரியம், மோதம், ப்ரமோதம் என்பவைகள், முறையே தலை வலப்பக்கம் இடப்பக்கம் முதலியவைகளாகப் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படி ப்ரியத்தைத் தலையாகவுடைத்தாயிருக்கை முதலான குணங்களும் எல்லா உபாஸநங்களிலும் த்யாநிக்கவேண்டிவரும் என்று அர்த்தம். இதற்கு ஸமாதாநமாவது:—இந்த ப்ரியசிரஸ்த்வம் முதலானவைகள் ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூபமன்று: ஸ்வரூபமாக இருந்தால், அவைகளுக்குச் சிறுத்தல் பெருத்தல் முதலிய விகாரங்கள் இயற்கையாகையால் ப்ரஹ்மத்திற்கு விகாரங்களுண்டாக வேண்டிவரும்; அது ச்ருதி வாக்யங்களுக்கு விருத்தம்; ஆகையால், ஸ்வரூபமல்லாததான ப்ரியசிரஸ்த்வம் முதலிய குணங்கள் எல்லா உபாஸநங்களிலும் த்யாநிக்கவேண்டியதாயிருக்கமாட்டா என்பதுதான். அடுத்த ஸூத்ரமாகிற "இதரே த்வர்த்தஸாமாந்யாத்" (3-3-13) என்பதனால், ப்ரியசிரஸ்த்வாதிகளைக் காட்டிலும் வேறுபட்டிருக்கும் ஆநந்தம் முதலிய குணங்களோ அப்படியன்று; ஏனென்றால், அந்தக் குணங்களை விட்டு ப்ரஹ்மஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள முடியாது என்று சொல்லுகிறார்; அதாவது - தர்மங்களை ஸ்வரூபத்தைத் தெரிவிக்கக்கூடிய தர்மங்களென்றும், ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டபிறகு அதற்கு விசேஷணங்களாகத்தோன்றும் தர்மங்களென்றும் இருவகையாகப்பிரித்து, முதல் வகைப்பட்ட தர்மங்கள் எல்லா உபாஸநங்களிலும் வருமென்றும், இரண்டாவது வகைப்பட்டவைகள் அப்படி வாராவென்றும் ஸித்தாந்தம் செய்திருக்கிறார். முதல் வகைக்கு ஸ்வரூப நிரூபகதர்மமென்றும், இரண்டாவது வகைக்கு நிரூபித ஸ்வரூப விசேஷணமென்றும் ஸம்ஸ்க்ருதத்தில் வ்யவஹாரம். ரூபங்களைப்பற்றியும் ஒவ்வொரு உபாஸநத்திலும் பேதம் சொல்லப்பட்டிருக்கிறது. தஹர வித்யையில் தாமரையரும்புபோன்ற ஹ்ருதயமென்கிற சரீரத்துக்குள் மிகவும் அல்பமான இடத்தில் அடங்கிய ஒரு ரூபமும், வைச்வாநர வித்யையில்

ஸ்வர்க்கலோகத்தைத் தலையாகவும், ஸூர்யனைக்கண்ணாகவும் என்ற இவை முதலியவைகளோடு கூடிய ஒரு ரூபமும், இப்படியே வெவ்வேறு ரூபங்கள் உபாஸநங்கள் தோறும் அந்தந்த ஶ்ருதிகளில் ஏற்படுகின்றன.

### ஸமம் பரிபூர்ணப்ரஹ்மாநுபவம்.

இப்படி உபாஸநங்கள் சிற்சில குணங்களையும் ரூபங்களையும் பற்றியிருந்தாலும், ஸமமோ ஸ்வரூபம் ரூபம் குணங்கள் விபூதிகள் எல்லாவற்றோடும் கூடின பரப்ரஹ்மத்தை அநுபவிப்பதேயொழிய, எந்தக் குண ரூபங்களோடு த்யாநம்செய்யப்பட்டதோ அந்தக்குண ரூபங்களோடு மாத்திரம் அநுபவிப்பதுதான் என்று ஏற்படவில்லை. அது எங்ஙனே என்னில், "ஸர்வம் ஹ பஶ்ய: பஶ்யதி" (அறியுந் தன்மையுள்ள முக்தன் எல்லாவற்றையும் பார்க்கிறான்), "ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" (எல்லாவற்றையும் அறியுந்தன்மையுள்ள ப்ரஹ்மத்தோடுகூட எல்லாக் கல்யாண குணங்களையும், பாலுடன் சோறு உண்பதுபோல அநுபவிக்கிறான்) என்கிற இடங்களிற் காணலாம். இப்படியே ஸ்ரீபாஷ்யத்தில் 'ஸகல ஐஶ்வர்யங்களோடும் ஸகல கல்யாணகுணங்களோடும் கூடிய பரப்ரஹ்மத்தை மோக்ஷமடைந்தவன் அநுபவிக்கிறான்' என்கிற அர்த்தமுள்ள "பரம் ப்ரஹ்ம ஸவிபூதிகம் ஸகலகல்யாணகுணகணம் அநுபவதி முக்த:" என்கிற வாக்யம் ஜகத்வ்யாபார வர்ஜாதிகரணத்தில் "விகாராவர்த்தி ச ததா ஹி ஸ்திதிமாஹ" (4-4-19) என்கிற ஸூத்ரத்திற்கு வ்யாக்யாநம் செய்யுமிடத்திற் காணப்படுகிறது. ஶ்ருதப்ரகாஶிகையிலும் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் ஸித்தாந்தத்தின் ஆரம்பத்தில் இந்த அர்த்தமே "ஸ்ருத ஏவ ஸர்வஸாக்ஷாத்காரோ மோக்ஷ:" என்று ஆரம்பிக்கும் வாக்யத்தால் ஸவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீரங்ககத்யமென்னும் சிறிய க்ரந்தத்திலும் "ஸ்வாபாவிகாநவதிகாதிஶயஸௌஶீல்யாத்யநந்தகுணகணார்ணவ" என்று உபக்ரமிக்கும் வாக்யத்தில் இந்த அர்த்தத்தையே காணலாம்.

மேலும் சிற்சில குணங்களோடு கூடிய ப்ரஹ்மாநுபவம்தான் ஃபலமோ? என்கிற ஶங்கைக்கு ஸ்ரீபாஷ்யகாரர் அவகாஶம்கொடு

REGISTERED ... 1911 ... OFFICE ... BOOKS ... MADRAS.



க்கவில்லையென்பதை மற்றோரிடத்திலிருந்தும் தெரிந்துகொள்ள
லாம். ஸ்ரீபாஷ்யத்தில் விகல்பாதிகரணமென்று ஒரு அதிகரண
முண்டு. அதில் உபநிஷத்திற் சொல்லப்பட்டிருக்கும் ஸத் வித்யை
முதலான 32-வித்யைகளுக்கும் ப்ரஹ்மாநுபவமே ஃபலமானால்,
அதிக ஃபலத்தை அபேக்ஷித்து அநேக வித்யைகளைச்சேர்த்து அநு
ஷ்டிக்கலாமா? அல்லது ஏதாவது ஒரு வித்யையை அநுஷ்டித்தால்
போதுமா? என்கிற ஸந்தேஹத்தை உண்டுபண்ணிக்கொண்டு, 'எப்
படி அக்நிஹோத்ர ஜ்யோதிஷ்டோமாதிகளில் அதிக ஸ்வாநு
பவத்திற்காகவும் அதிக நாள் அநுபவிக்கிறதற்காகவும் ஒருவனே
அநேக உபாயங்களை அநுஷ்டிக்கிறானோ அதுபோல, இந்த ப்ரஹ்ம
வித்யைகளில் அதிக அநுஷ்டாநம் அதிக ஃபலத்திற்குக் காரணமா
காது; ஏனென்றால், எல்லாவித்யைகளுக்கும் எல்லையில்லாத ப்ரஹ்
மாநுபவமே ஃபலம், அது தேஶத்தாலும் காலத்தாலும் அளவிடப்
படாதது, ஒரே மாதிரியானது. ஆகையால் ஏதாவது ஒருவித்யை
யை அநுஷ்டித்தால் போதும்' என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸித்தாந்தம்
செய்திருக்கிறார். இந்த ஸித்தாந்தத்தால் சிற்சில குணங்களோடு
கூடிய ப்ரஹ்மாநுபவம் ஃபலமன்றென்றும், பூர்ணாநுபவமே ஃபல
மென்றும் விளங்குகிறது. இப்படியே பிள்ளைலோகாசார்யர் அரு
ளிச்செய்திருக்கும் தத்வஶேகரம் என்கிற ரஹஸ்யம் நான்காவது
ப்ரகரணத்தில், 'எல்லா ஐஶ்வர்யங்களுடனும் எல்லாக் கல்யாண
குணங்களுடனும் கூடின ப்ரஹ்மத்தின் உண்மையை அநுபவித்து
அதனால் உண்டாகிற ப்ரீதியாற் செய்யப்படுகிற கைங்கர்யம் ஃபலம்'
என்கிற அர்த்தமுள்ள "ஸவிபூதிக ஸமஸ்தகல்யாண குணா
த்மக பரமாத்மயாதாத்ம்யாநுபவ ஜநித ப்ரீதிகாரித கைங்
கர்யம்" என்று உபக்ரமிக்கிற வாக்யம் காணப்படுகிறது. இப்படி
உபாஸநங்களிற் சிற்சில குணங்களையும் ரூபங்களையும் த்யாநிக்க
வேண்டியதென்றும், ஃபலத்தில் உபாஸிக்கப்பட்ட குணங்கள்
மாத்திரமன்றிக்கே எல்லாக் கல்யாண குணங்களும் ஸகல ரூபங்க
ளும் அநுபவிக்கப்படுகின்றனவென்றும் சொல்லுகிற ஶாஸ்த்ரத்
திற்கும் ஆசார்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளுக்கும் அந்யயோக
வ்யவச்சேதார்த்தம் விருத்தமன்றோ?

மேலும் ஸ்ரீநிகமாந்தமஹாதேஶிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் உபாய விபாகாதிகாரத்தில் 'உபேயமாகிற ஜ்ஞாந விகாஸ விஶேஷம்' என்று தொடங்கி, 'குணவிபூத்யாதிகள் எல்லாவற்றாலும் பரிபூர்ண ப்ரஹ்ம விஷயமுமாயிருக்கும்' என்று முடித்து, தத்க்ரது ந்யாய விரோதம் வாராதோ வென்று ஶங்கித்துக் கொண்டு, "உபாஸிதகுணாதேர்யா ப்ராப்தாவப்யபரிச்யுதி: - ஸா தத்க்ரதுநயக்ராஹ்யா நாகாராந்தரஸங்க்ரம:" என்று அருளிச்செய்திருக்கிறார். இதன் அர்த்தமாவது :—'உபாஸநத்தில் த்யாநம் செய்யப்பட்ட குணங்கள் முதலியவை பரப்ரஹ்மாநுபவத்தில் அநுபவிக்கப்படாமலிரா' என்பதுதான் தத்க்ரது ந்யாயத்தால் அறிந்துகொள்ளவேண்டியது; மற்றைக்குணங்களும் ரூபங்களும் அநுபவிக்கப்படமாட்டா என்பது அர்த்தமன்று என்பதுதான். ஆகையால், அந்யயோக வ்யவச்சேதம் அர்த்தமென்பது மேற்சொல்லிய ஶ்ருதி ஸூத்ர பாஷ்ய ஆசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு விருத்தமென்று தோன்றுகிறது.

இப்படிச்சொல்வதற்கு ஸமாதாநமாவது :—கீழ் உதாஹரிக்கப்பட்ட "ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய" என்கிற ஸூத்ரத்தில், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபநிரூபக தர்மங்கள் என்று சொல்லப்படும் குணங்கள் எல்லா உபாஸநங்களிலும் த்யாநிக்கத் தக்கவைகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தர்மங்கள் ஐந்து; அவை யாவன - ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம் ஆகிய இவைகளே. இவற்றை "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" முதலான ஶ்ருதிகளிற் காணலாம். ஸத்யத்வமாவது - விகாரமற்றிருக்கை; ஜ்ஞாநத்வமாவது - ஒருபொழுதும் ஸங்கோசத்தை அடையாத ஜ்ஞாநத்தை ஸ்வபாவமாக உடைத்தாயிருக்கை; அநந்தத்வமாவது - தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும் அளவற்றிருக்கும் தன்மை; ஆநந்தத்வமாவது - தன்னை த்யாநிக்கிறவர்களுக்கும் அநுபவிக்கிறவர்களுக்கும் ப்ரியமாக இருக்கும் தன்மை; அமலத்வமாவது - ப்ரக்ருதி ஜீவன் இவர்களிடத்திலிருக்கும் மல மற்றிருக்கை. இதில் அநந்தத்வம் என்பதற்கு வ்யாக்யாநம் செய்கிற



இடத்தில் 'ப்ரஹ்ம ஸ்வரூபம் எல்லாக்குணங்களையும் உடையதாகை லால் ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் அளவற்றதன்மையே அநந்தத்வ ஶப்தத்திற்கு அர்த்தம்' என்று ஸ்ரீபாஷ்யகாரர் "ஸவிஶேஷத்வாத் ஸ்வரூபஸ்ய ஸ்வரூபேண குணைஶ்சாநந்த்யம்" என்கிற வாக்யத்தாற் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட அநந்தத்வம் ஸ்வரூபநிரூபக தர்மமாக இருந்து எல்லா உபாஸநங்களிலும் த்யாநிக்கப்பட்டுவருகிறபடியால் ஃபலதஶையில் எல்லாக் குணங்களும் அநுபவிக்கப்பட்டாலும் அந்யயோக வ்யவச்சேதமே தத்க்ரது ந்யாயத்திற்கு அர்த்தமென்று சொல்லுகிற பக்ஷத்திற்கு விரோதமில்லை.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸ்ரீநிகமாந்தமஹாதேஶிகன் அருளிச்செய்ததாக முன் உதாஹரிக்கப்பட்ட "உபாஸிதகுணாதேர்யா" என்கிற ஶ்லோகத்திற்கும் இந்த அர்த்தம் விரோதமாகாது. ஏனெனில், 'உபாஸநத்தில் த்யாநிக்கப்படுகிற குணம் முதலியவைகளுக்கு ஃபலதஶையில் தள்ளுதலில்லாமை தத்க்ரது ந்யாயத்தின் அர்த்தம்; அதாவது - உபாஸநத்தில் எவ்வளவு விஷயமோ அதற்குக்குறைவாக ஃபலதஶையில் அநுபவமிருக்கிறதில்லையென்பதுதான். "நாகாராந்தரஸங்க்ரம:" என்பதற்கு 'உபாஸநத்தில் த்யாநிக்கப்படாத குணம் முதலியவை ஃபலத்தில் அநுபவிக்கப்படமாட்டா' என்பது அர்த்தமன்று. ஏனெனில், கீழ்ச் சொல்லியபடி எல்லாக் குணங்களும் எல்லா உபாஸநங்களிலும் த்யாநிக்கப்படுகிறபடியால் த்யாநிக்கப்படாத குணமில்லை என்று அர்த்தம். ஆகையால் அந்யயோக வ்யவச்சேதமே தத்க்ரது ந்யாயத்திற்குத் தாத்பர்யம்.

(இன்னும் வரும்.)

சே. நரஸிம்ஹாசாரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

---

# ஸ்ரீபகவத்கீதை. *

ஸ்ரிய: பதியாய் அவாப்த ஸமஸ்த காமனும் அநந்த கல்யாண குண கண மஹோததியாய் அஸ்ப்ருஷ்ட தோஷ ஸங்கனுய், "பிதா மாதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" என்கிறபடி நமக்கு ஸர்வவித நித்ய பந்துவாய், "ஜோகம் வைகுண்ட நாதநம் திவ்யம் ஷாட்குண்ய ஸம்யுதம்" இத்யாதி வாக்யங்களால் ப்ரஸித்தமான நித்ய விபூதியில் நித்யஸூரிகளால் ஸேவிக்கப்பட்ட சரணாரவிந்தங்களை யுடையவனுய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந் நாராயணன், தான் இவ்விதம் அநுபவிக்கிற பரமாநந்தத்தை ஸர்வகாலத்திலும் நித்ய ஸூரிகளை அநுபவிக்கும்படி செய்வது போல, அநாதி கர்ம ப்ரவாஹ மஹா ஸமுத்ரத்தில் மூழ்கியும், "மக்ஷ்யாத்தீவ்ர த்விஷம் தீவ்ரா பவிஶமயஸம்—ஸ்மாஹி ஜாவஸீம்யஸதே நாகம்பம்யமவேக்ஷதே" என்கிறபடி அக்ஞ மூலத்வாதி தோஷ துஷ்டங்களான ஸாம்ஸாரிக துஃக்க பரம்பரையில் ஶ்ரமப்பட்டுக்கொண்டும் இருக்கிற நம்மிடத்தில், தரித்ர ஆதுரர்களான புத்ரர்கள்பக்கல் விஶேஷப்ரீதி பண்ணும் பிதாவைப் போல விஶேஷ க்ருபை கூர்ந்து நம்மையும் அந்தப் பரமாநந்தத்தை அநுபவிப்பிக்கத் திருவுள்ளம் பற்றி, தனக்கு வைஷம்யாதிகள் வாராமைக்காகச் சதுர்முகாதிகளைக் கொண்டு நமக்கு ஜ்ஞாநத்தை

* இந்த உபந்யாஸம், தஞ்சாவூரில் 26-12-1910-ல் நடந்த அஹோபில மட ஶிஷ்ய ஸபை மஹா ஸங்கத்தில் ஸ்ரீமான் புத்தங்கோட்டகம் - ஸ்ரீநிவாஸாசாரியாரால் செய்யப்பட்டது.



உண்டுபண்ணி அது வழியாக ஆஶ்ரித ஸம்ரக்ஷணம் செய்து வருகிறான். இப்படி வருகையில் குரு ஶிஷ்யர்களுடைய புத்தி மாந்த்யத்தாலும் கால வைகுண்யத்தாலும் அந்த ஜ்ஞாநத்துக்குக் குறைவு உண்டான காலங்களில் ஸ்ரீபராஶரர் முதலான மஹர்ஷிகளிடத்தில் எம்பெருமான் தான் அநுப்ரவேஶாவதாரங்களைச்செய்து ஸ்ரீவிஷ்ணு புராணம் முதலான க்ரந்தங்களை ப்ரவர்த்திப்பித்து, அவை மித புத்திகளால் அறியக்கூடாத அர்த்தங்களோடு கூடியிருப்பதால், தானே ஸ்ரீவேதவ்யாஸ பகவானுக அவதரித்து ஐந்தாவது வேதமென்று ஶ்லாகித்துச் சொல்லப்படும் இதிஹாஸஶ்ரேஷ்டமான மஹாபாரதத்தையும், அதில் ஸாரதமமான ஸ்ரீகீதாம்ருதத்தையும் நம்முடைய உஜ்ஜீவநத்தையே பரம ப்ரயோஜநமாகத் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்தான். இந்தக் கீதாஶாஸ்த்ரம் ஸர்வவேதார்த்த ஸாரபூதமாய், அதிக விஸ்தாரமாகவும் அதிக ஸங்க்ரஹமாகவும் இல்லாமல் அநுஷ்டிக்க வேண்டிய எல்லா அர்த்தங்களையும் தெளிவாக ப்ரதிபாதிக்கிறபடியால், ஆத்மோஜ்ஜீவநத்தை அபேக்ஷிக்கும் நமக்கு ப்ரதாநதமமான ஶாஸ்த்ரமாக இருக்கிறது.

இந்தக் கீதா ஶாஸ்த்ரமானது, 18 - அத்யாய பரிமிதமாய் இருக்கிறது ; விஷய பேதங்களை உத்தேஶித்து 6 - அத்யாயங்கள் அடங்கிய மூன்று பாகங் [ஷட்கங்]களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் முதற்பாகத்தில், பக்தி யோகத்திற்கு அங்கமான கர்ம யோக ஜ்ஞாநயோகங்களும், அவைகளின் ஸாத்யமான ஜீவாத்ம ஸாக்ஷாத்காரமும், ப்ராஸங்கிகமான அவதார ரஹஸ்யங்களும் சொல்லப்படுகின்றன. இரண்டாவது பாகத்தில், பரப்ரஹ்மாநுபவத்திற்கு முக்கிய காரணமான பக்தி யோகமும், அதற்கு அபேக்ஷிதமான ஸர்வேஶ்வரனுடைய யதாவஸ்தித ஸ்வரூப ஸ்வபாவாதிகளும், அவைகளை அறியவொட்டாமல் தடுக்கிற அநாதி கர்ம ப்ரவாஹத்தால் உண்டாயிருக்கும் ப்ரக்ருதி ஸம்பந்தமும், அதை விலக்கக்கூடிய பகவச்சரணாகதியும், அப்படி பகவானை யடைகிற பக்தர்களுள் நான்குவித பேதமும், அவர்களுக்குள் முமுக்ஷுவாகிற பக்தருக்கு இருக்கும் அளவற்ற உத்கர்ஷமும், தங்கள் தங்கள் புருஷார்த்தங்களுக்கீடாக உண்டாகும் இந்த நான்குவித பக்தர்களின் உபாஸநா பேதங்களும், ஸர்வேஶ்வரனுடைய விபூதி

விஸ்தார ஸாக்ஷாத்காராதிகளும் சொல்லப்படுகின்றன. மூன்றாவது பாகத்தில், ப்ரக்ருதி புருஷன் ஸர்வேச்வரன் இவர்களின் விவேகமும், ஸத்வாதி குணங்களின் கார்ய பேதங்களும், தைவாஸுர ஸம்பத்விபாகங்களும், ஈச்வரனுக்கேயுள்ள ஸ்வாதீந கர்த்ருத்வமும், ஸத்வகுணத்திற்கே உரிய உபாதேயத்வமும் சொல்லப்பட்டு, கீழ்க்கூறிய பக்தி யோகத்திற்கு விக்நம் வாராதபடி அங்க ப்ரபத்தியும், ஜாதியினாலாதல் சக்தியினாலாதல் பக்தியோகம் அநுஷ்டிக்கும் விஷயத்தில் குறைவுடையவர்களுக்கும் கால விளம்பத்தை ஸஹிக்காதவர்களுக்கும் மோக்ஷம் முதலான ஸர்வ பலத்தையும் கொடுக்கக்கூடிய ப்ரபத்தியின் அநுஷ்டாநமும், அதனாலுண்டாகும் ப்ரஹ்மாநந்தாநுபவ ப்ராப்தியும் சொல்லப்படுகின்றன.

இதில், கர்மயோகமாவது - அந்தந்த வர்ணாச்ரமங்களுக்குச் செய்யவேண்டியதாய் சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் நித்ய நைமித்திகங்களையும், பலாபிஸந்தியை விட்டிருக்கிற காம்யங்களையும் அநுஷ்டிப்பதுதான். ஆனால், அதை அநுஷ்டிக்கும்போது, தனக்கு ஆதாரமாயும் நியந்தாவாயும் சேஷியாயுமிருக்கிற ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனான ஈச்வரனுடைய ஆராதநமென்றே அவைகளைச் செய்வதுடன், தபஸ் தீர்த்தயாத்ரை தாநம் யஜ்ஞம் இவை முதலானவைகளில் ஏதாவது ஒன்றை அங்கமாக நியமத்தோடு அநுஷ்டிக்கவேண்டும். இதை, "த்ரவ்யயஜ்ஞாஸ் தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ் ததாபரே" என்கிற வாக்யத்திற் காணலாம். நித்யகர்மங்களாவன—எதைச்செய்யாவிடில் பகவானுடைய நிக்ரஹமுண்டாகுமோ அவ்விதமான ப்ரதிதினம் அநுஷ்டிக்கவேண்டிய ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்ஞாதிகள். நைமித்திக கர்மங்களாவன—ஒரு நிமித்தத்தைக் குறித்து உண்டாகும் க்ரஹண ஸ்நாந தாநங்கள்போன்ற கர்மங்கள். இவைகளின் அநுஷ்டாநமும், ஈச்வர நிக்ரஹத்திற்குக் காரணமே. காம்ய கர்மங்கள் - வேதத்திற் சொல்லியிருக்கும் ஜ்யோதிஷ்டோமம் முதலானவைகள். இவைகளைச் செய்யாவிட்டால், ஈச்வர நிக்ரஹமில்லை; ஆனால் செய்ய ஆரம்பித்து அவைகளுக்கு உரிய நியமங்களில் தவறினால் பாபமுண்டு.



ஜ்ஞாநயோகமாவது—கீழ்ச்சொன்ன கர்மாநுஷ்டாநத்தால் அந்தஃகரணஜய முண்டான பின்பு ஸ்வாதீநமான இந்த்ரியங்களோடு ஆத்ம ஸ்வரூபத்தை யதாவஸ்திதமாய் இடைவிடாமல் சிந்திப்பதுதான். இதற்கு பலம், "யம் லப்த்வா சாபரம் லாபம்" என்கிறபடி ஜீவாத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்காரம். இந்த ஜ்ஞாந யோகாநுஷ்டாநம், நித்ய நைமித்திக கர்மங்கள் செய்வதை ஒழிக்காது. ஆனால், தபஸ், தீர்த்தம், தாநம், யஜ்ஞம் என்ற இவைகளில் ஒன்றை நியமத்தோடு செய்யவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. நித்ய நைமித்திகங்களை அநுஷ்டிக்குங்காலத்தில், கர்மயோகத்திற்போலவே அந்தர்கத ஜ்ஞாநத்தோடே அநுஷ்டிக்கவேணும். அந்தக் கர்மங்களை விட்டுவிட்டுக் கேவலம் சிந்திப்பதுதான் ஜ்ஞாநயோகமென்று சொல்வது பிசகு. மேலும், ஜ்ஞாநாகார கர்மயோகத்தை அநுஷ்டிப்பதில் அநேக ஸௌகர்யங்கள் உண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்" என்று ஆரம்பித்து ப்ரக்ருதிஸம்பந்த முள்ள வரையில் நிர்வ்யாபாரனாக ஒருவனாலும் இருக்க முடியாது என்றும், "யுக்தாஹார விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு" என்கிறபடி யோகம் நிறைவேறும்பொருட்டு உசிதமான ஆஹார விஹாரம் முதலியவைகள் வேண்டுமென்றும், "யஜ்ஞசிஷ்டாசிந: ஸந்த:" என்கிறபடி ஸத்வசுத்திக்கு ஹேதுவான ஆஹாரசுத்தி பஞ்சமஹாயஜ்ஞாதிகளால் ஏற்படுகிறதென்றும் சொல்லி, இவ்விதமாக நித்ய நைமித்திக கர்மாநுஷ்டாநங்களில் இருக்கும் ஸௌகர்யங்களைப் பலமுறையாக ஸ்ரீ பகவான் ச்லாகித்திருக்கிறார். ஜ்ஞாநாகார கர்மயோகமே ஜ்ஞாநயோகத்தின் பலமாகிற ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அநந்யாபேக்ஷமாகக்கொடுத்துவிடு மென்றும் சொல்லியிருக்கிறார். கேவல ஜ்ஞாநயோகத்திற்கு உண்டாகும் ப்ரமாதங்கள் ஒன்றும் இப்படி அநுஷ்டிப்பதில் நேராது. "யஸ்த்விந்த்ரியாணி மநஸா நியம்யாரபதே(அ)ர்ஜுந — கர்மேந்த்ரியை: கர்மயோகமஸக்த: ஸ விசிஷ்யதே" என்று இம்மாதிரி அநுஷ்டிப்பதைப் புகழ்வதாலும், "கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மநஸா ஸ்மரந் — இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே" என்றும் வெளிக்கு மாத்திரம் கர்மத்தை விட்டுவிட்டு மநஸ்ஸால்

விஷயங்களை த்யாகித்திருப்பதை இகழ்வதாலும், அந்தர்க்கத ஜ்ஞானத்துடன் கர்மங்களை அநுஷ்டிப்பதே உசிதமென்று தெரியவருகிறது.

பக்தியோகமாவது:— கீழ்ச்சொன்னபடி ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்தவன் நிகிலஹேய ப்ரத்யநீகனாய் ஸமஸ்த கல்யாண குணாகரனாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனை, ஶுபாஶ்ரய மென்று சொல்லப்படுவதாயும் "[illegible] பும்ஸாம்" என்கிறபடி ஸௌசீல்யம் ஸௌந்தர்யம் லாவண்யம் முதலானவைகளால் மநஸ்ஸுக்கும் பாஹ்யேந்த்ரியங்களுக்கும் ஆகர்ஷகமாயுமிருக்கிற ஸுந்தரனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்துடன் காற்றில்லாத இடத்தில் இருக்கும் ஜ்வாலைபோலும் தைலதாரைபோலும் இடைவிடாமல் அளவற்ற ப்ரீதியுடன் த்யாநம் செய்வதுதான். "ஸ்நேஹபூர்வம் அநுத்யானம் பக்திரித்யபிதீயதே" என்று சொல்லியிருக்கிறது. இதற்குத்தான், ஸமாதி யென்றும் பெயர். இதற்கு யம நியம ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார தாரணா த்யாநங்க ளென்று ஏழு அங்கங்கள் உண்டென்றும், அங்கியாகிற ஸமாதியுடன் எட்டாகிறபடியால் அஷ்டாங்கயோக மென்றும் அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இந்தப் பக்தியோகத்தை அநுஷ்டிக்கிறவர்களில் நான்கு வகை உண்டு. "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப" என்கிறபடி நஷ்டமான ஐஶ்வர்யத்தை விரும்பிப் பக்தி செய்கிறவன் ஒருவன், கேவலம் ஆத்மாநுபவத்தை அபேக்ஷித்துப் பக்தி செய்கிறவன் மற்றொருவன், புதியதான ஐஶ்வர்யத்தை அபேக்ஷித்துப் பக்தி செய்கிறவன் மூன்றாமவன், மோக்ஷத்தை அடையவேண்டுமென்று பக்தி செய்கிறவன் நான்காமவன். இவர்களில் ஐஶ்வர்யத்தை அபேக்ஷிக்கிற இருவரும் "[illegible]" என்கிற ஶ்ருதியின்படி தங்களுடைய ஸத்கர்மங்களின் பலனை இந்த்ராதி லோகத்திற் சென்று அநுபவித்து, அந்தக் கர்மபலத்திற்குக் குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் பூர்வ கர்மாநுகுணமாய் ஜந்மாந்தரங்களை அடைவார்கள்.



"கேவல:" என்று சொல்லப்படும் இரண்டாவது பக்தர்கள் ப்ராண வித்யா நிஷ்டரென்றும், பஞ்சாக்நிவித்யாநிஷ்டரென்றும் இருவகைப்படுவார்கள். விஷ்ணுபதமென்கிற கைவல்ய லோகத்தில் ப்ராக்ருதி ஸம்பந்த மில்லாத ஜீவாத்மாவினுடைய நிர்மல ஸ்வரூபாநுபவம் இவ்விருவர்க்கும் சிலகால முண்டு. ஆனால், ப்ராண வித்யாநிஷ்டன் அந்த அநுபவம் முடிந்தவுடன் மறுபடியும் திரும்பிக் கர்மலோகத்திற்கு வருகிறான். மற்றொருவன் அந்தக் கைவல்ய லோகத்தில் ஆத்மாநுபவம் செய்த பிறகு ப்ரஹ்ம லோகத்திற்குப் போய் ஸ்ரீமந்நாராயணனோடு பரமஸாம்ய மென்கிற மோக்ஷத்தை அடைகிறான்.

சிலர், 'இந்தப் பஞ்சாக்நி வித்யாநிஷ்டன் கேவல லோகத்திலேயே எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருக்கிறான்' என்று சொல்லுகிறார்கள். அதற்கு ப்ரமாணத்தைக் காணோம். ஶ்ருதிகளில் "தஸ்ய [illegible]" என்று இவ[illegible] சொல்லியிருக்கிறபடியாலும், அர்ச்சிராதிமார்க்கம் சொல்லியிருக்கிறபடியாலும், அர்ச்சிராதி மார்க்கத்தாற் சென்றவனுக்குப் பரமாத்மாநுபவத்தை "[illegible]" என்கிற ஸூத்ரத்தில் ஸ்ரீவேதவ்யாஸ பகவானும், அர்ச்சிராதிமார்க்க ப்ரவணத்தை அக்ஷிபுருஷனுக்குப் பரமாத்மத்வஸாதகமாய் ஸ்ரீபாஷ்யத்திலும் ஶ்ருதப்ரகாஶிகாதிகளிலும் நம் ஆசார்யர்களும் அருளிச்செய்திருக்கிறபடியாலும், ஸ்ரீபகவத் கீதையிலும் "[illegible] ப்ராணமாஸ்திதோ யோகதாரணாம் — ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந் — ய: ப்ரயாதி த்யஜந் தேஹம் ஸ யாதி பரமாம் கதிம்" என்கிற இடத்தில் பஞ்சாக்நி வித்யா நிஷ்டனுக்கு உத்க்ராந்தி ஸமயத்தில் மூர்த்தந்ய நாடி வழியாக கமநத்தை விதிக்கையாலும், அந்த நாடியினாற் செல்லுகிறவனுக்குப் பரமபத ப்ராப்தியை ஸுபாலோபநிஷத்திலே "[illegible]" என்று ஆரம்பித்து "[illegible] பவதி" என்று முடிகிற வாக்யங்களில் ஏற்படுகிறபடியாலும், பஞ்சாக்நி வித்யா நிஷ்டன் கேவலலோகத்தை விட்டு ப்ரஹ்மத்தை அடைகிறானென்பது வ்யக்தமாகிறது. ஆனால்,

தஹரவித்யாதிகளில் வ்யாஹ்ருதி ஶரீரகராய்ப் பரமாத்மோபாஸநம் செய்பவர்க்கு நடுவழியிற் சில விளம்பங்கள் நேர்வதுபோல இவனுக்கும் ஆத்மாநுபவம் செய்யவேண்டிய லோகத்திற் சிலகாலம் வாஸம் நேர்ந்து, பிறகு ப்ரஹ்மாநுபவம் உண்டாகிறது என்பதில் ஸந்தேஹமில்லை.

இந்த விஷ்ணுபதமென்கிற கைவல்ய லோகமானது ப்ரக்ருதி மண்டலத்திற்கு மேற்பட்டதா? அல்லது உட்பட்டதா? நித்யமா? அநித்யமா? என்கிற விஷயங்களைப்பற்றி விவாத முண்டு. ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் முதல் அம்சம் ஆறுவது அத்தியாயத்தில் "ப்ராஜாபத்யம் ப்ராஹ்மணாநாம் ஸ்ம்ருதம் ஸ்தாநம் க்ரியாவதாம்" என்று உபக்ரமித்து ஸாமாந்யமான புண்ய கர்மங்களைச் செய்கிறவர்களுக்குக் கிடைக்கும் பலனைச் சொல்லிவருமிடத்தில் "யோகிநாம் அம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்மஸந்தோஷ காரிணாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது - ஆத்மாநந்தத்தை அநுபவிக்கிற யோகிகளுக்கு அம்ருதஸ்தாநமென்று ஒரு லோகம் உண்டு என்று அர்த்தம். இதற்கு வ்யாக்யாதாவான ஸ்ரீவிஷ்ணு சித்தாசார்யர் "ஆத்மஸ்வரூபமேவ ப்ரதீகோபாஸகா: தேஷாமிதம் விஷ்ணுபதாக்யம் ப்ராப்யம் பரிமிதகாலாமரணம் யதா மஹாப்ரளயாவதி" என்று வ்யாக்யாநம் செய்திருக்கிறார். அதாவது—ஆத்மோபாஸநம் செய்கிறவர்கள் விஷ்ணுபதமென்கிற ஒரு லோகத்தை அடைகிறார்கள் என்றும், அது த்ருவ லோகத்திற்கு மேற்பட்டிருக்கிறது என்றும், கங்கை அதிலிருந்து ப்ரவஹிக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார். ஆனால், 'அம்ருத லோகமென்று வ்யவஹாரம் வருவானேன்?' என்று கேட்டால், "ஆபூத ஸம்ப்லவம் ஸ்தாநம் அம்ருதத்வம் ஹி பாஷ்யதே - த்ரைலோக்ய ஸ்திதிகாலோऽயம் அபுநர்மார உச்யதே" என்கிறபடி ப்ரளய பர்யந்தம் இருக்கிற லோகத்திற்கு அம்ருதமென்று பெயர் வழங்குவது உண்டு. இந்தக் காரணத்தாலும், இன்னும் ஸ்ரீபாரதம் மோக்ஷ தர்மம் 324-வது அத்யாயத்தில் 'முக்தன் ஒருவன் நீங்கலாக மற்ற எல்லாருக்கும் புநராவ்ருத்தி உண்டு' என்கிற அர்த்தமுள்ளதான "ஸமேத்யாவ்யவதாநேந யதீநாம் ப்ரதிஸம்ஸ்ரய: மோக்ஷதாக"



என்கிற வாக்யம் இருக்கிறபடியாலும், இந்தக் கேவல லோகம் அநித்யமென்று தோன்றுகிறது.

நான்காவது பக்தனுகிற ஜ்ஞாநீ அடைகிற பதவியாவது, ஸ்ரீமந்நாராயணனுடைய நித்ய வாஸஸ்தாநமாயும், "தத்விஷ்ணோ: பரமம் பதம்" என்றும் "யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" என்றும் ப்ரஹ்மாதி லோகங்கள் எல்லாம் நரகதுல்யங்களாகும்படி அளவற்ற உத்கர்ஷத்தையுடைத்தான ஸ்ரீவைகுண்டமென்கிற அப்ராக்ருத ஸ்தாந விசேஷம். இந்த லோகத்தை அடைந்தவர்கள் மறுபடியும் கர்மவஶ்யர்களாகப் புநராவ்ருத்தியை அடைகிறதில்லை. "ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே" என்கிற ஶ்ருதியும், "மாமுபேத்ய புநர்ஜந்ம" என்கிறது முதலான ஸ்ரீகீதா வாக்யங்களும் இதற்கு ப்ரமாணம். இந்த ஜ்ஞாநீ அநுபவிக்கும் ப்ரஹ்மாநந்தமாவது— "யதோவாசோ நிவர்த்தந்தே" என்கிறபடி வாங்மந ஸாகோசரமான மாஹாத்ம்யத்தோடு கூடின ஸ்ரீமந்நாராயணனை உள்ளபடி அநுபவிக்கையும், "ஸ யதி பித்ருலோககாமோ பவதி" என்கிறது முதலான சாந்தோக்ய வாக்யங்களின்படி தனது இஷ்டாநுகுணமாக வேண்டிய போக்யங்களை அநுபவிக்கையும், பூர்ணமாக ஸ்வரூபாவிர்பாவத்தைப் பெறுவதும், இம்மாதிரியான அளவற்ற ஸுகாநுபவங்கள். இவ்வநுபவங்களில் ஈஶ்வரனோடாவது அந்ய முக்தர்களோடாவது இவனுக்குத் தாரதம்யம் கிடையாது.

இப்படி இந்தக் கீதாஶாஸ்த்ரத்தில் முக்யமாக ப்ரதிபாதிக்கப் படுகிற விஷயம் கீழ்ச்சொல்லப்பட்ட ப்ரஹ்மாநந்தாநுபவத்திற்கு ப்ரதாந காரணமான பக்தி யோகம்தான். ஆகிலும், ஸ்ரீகீதாசார்யனுகிற ஸர்வேஶ்வரனுடைய தாத்பர்யம் ப்ரதாநமாகக் கர்மாநுஷ்டாநம் செய்யவேண்டுமென்றே அநேக வாக்யங்களிலிருந்து ஏற்படுகிறது. "ஸ்வதர்மமபிசாவேக்ஷ்ய", "யஜ்ஞதாநதப: கர்ம", "நியதம் குரு கர்ம த்வம்", "யஜ்ஞஶிஷ்டாஶிந: ஸந்த:", "யஜ்ஞார்த்தாத் கர்மணோऽந்யத்ர லோகோऽயம் கர்மபந்தந:" முதலான வாக்யங்கள், எவ்வளவு நிரதிஶய பக்தியை ஒரு

"வன் அடைந்திருந்த போதிலும் ஸ்வ வர்ணாஶ்ரம தர்மங்களை விடக்கூடாது என்பதை வ்யக்தமாகத் தெரிவிக்கின்றன. மேலும், த்யாஜ்யோபாதேய கர்ம ஸம்பந்தமாக ப்ரஶ்நம் செய்த அர்ஜுநனுக்கு, சிலர் காம்யகர்மத்யாகத்தைச் சொல்லுகிறார்கள் என்றும், சிலர் கர்மாநுஷ்டாநம் செய்யவேண்டியதுதான், ஆனால் பலத்தை அபேக்ஷிக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள் என்றும் விப்ரதிபத்தியைப் பண்ணிக்கொண்டு, "நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர" என்று ஈஶ்வரன் தன் அபிப்ராயத்தைச் சொல்லுகையில் "யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்" என்று ஆரம்பித்து "கர்தவ்யாநீதி மே பார்த நிஶ்சிதம் மதமுத்தமம்" என்றும், "நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே" என்றும் அநேக இடங்களில் கர்மங்களை அநுஷ்டிக்கவேண்டியதுதான் என்று ஸ்ரீபகவான் த்ருடமாக விதிக்கிறார். இவையெல்லாவற்றையும் பார்க்கும் பொழுது, ஶரீரஸம்பந்தம் உள்ள வரையில் ஶாஸ்த்ரத்திற்கு வஶ்யனாகவே கர்மாநுஷ்டாநம் செய்ய வேண்டியதுதான் என்று தோன்றுகிறது.

இப்படி "பரித்ராணாய ஸாதூநாம்" என்கிறபடியே தர்ம ஸ்தாபநம் செய்து அந்தத் தர்மத்தை நம்மை அநுஷ்டிக்கும்படி செய்வித்து அந்த வ்யாஜத்தைக் கொண்டு நம்மை ரக்ஷிப்பதே தன்னுடைய முக்ய தாத்பர்யமாய் ஸ்ரீகீதா ஶாஸ்த்ரமாகிற திவ்யாம்ருதத்தை ஸம்ஸாரமாகிற மருகாந்தாரத்தில் தபித்துக்கொண்டிருக்கிற நமக்கு ஸ்ரீகீதாசார்யனான ஸர்வேஶ்வரன் வர்ஷித்தான்.

---

ஸ்ரீ:

## கபோதோபாக்யாநம்.

"ஶ்ரூயதே ஹி கபோதேந ஶத்ரு: ஶரணமாகத: ।
அர்சிதஶ்ச யதாந்யாயம் ஸ்வைஶ்ச மாம்ஸைர்நிமந்த்ரித: ॥
ஸ ஹி தம் ப்ரதிஜக்ராஹ பார்யாஹர்தாரமாகதம் ।
கபோதோ வாநரஶ்ரேஷ்ட கிம் புநர்மத்விதோ ஜந: ॥"

ஶரணாகதனான விபீஷணாழ்வானைப் பரிக்ரஹிக்கக் கூடுமாவென்று ஸுக்ரீவ மஹாராஜ ப்ரப்ருதிகளுடன் ஸ்ரீராமன் ஆலோசனை செய்யுங்காலத்தில், "ராக்ஷஸோ ஜிஹ்மயா புத்த்யா ஸந்திஷ்டோ(அ)யமிஹாகத: - ப்ரஹர்தும் த்வயி விஶ்வஸ்தே ப்ரச்சந்நோ மயி வாநக" இத்யாதியான அநேக ஹேதுக்களால் ஸபரிகரனாக விபீஷணன் வத்யன் என்று ஸுக்ரீவ மஹாராஜன் நிர்ப்பந்தமாகச் சொல்ல, அந்த நிர்ப்பந்த ஹேதுவைத் தான் திருவுள்ளத்திலே நிரூபித்து அதற்கநுரூபமாக வார்த்தையை ப்ரஸ்தாவித்து அதற்குப் பிறகு, ஶரணாகதனை எவ்விதமான காரணத்தாலும் விடவொண்ணாமைக்கு அடியான ஸத்துக்கள் அநுஷ்டித்த இதிஹாஸத்தை "ஶ்ரூயதே ஹி" இத்யாதி வாக்யத்தால் கபோதோபாக்யாநரூபமாக ஸ்ரீராமன் அருளிச்செய்கிறார். இந்த உபாக்யாநத்தை விஸ்தாரமாக ஸ்ரீமஹாபாரதம் ஶாந்திபர்வாவில் ஶரணாகதரக்ஷணமாகிற தர்மத்தைப்பற்றி யுதிஷ்டிரரால் கேட்கப்பட்டவராக் கொண்டு, பீஷ்மர், முசுகுந்தரைக்குறித்துப் பார்க்கவரால் சொல்லப்பட்ட க்ரமப்படி சொல்லுகிறார்.

பஹுகாலத்திற்குமுன் ஒரு பெருங்காட்டில் அதிக்ஷுத்ராசாரனான வேடனொருவன் இருந்தான். அவனுடைய தேஹத்தைப் பார்த்தாலும், க்ரியைகளை ஆலோசித்தாலும், ம்ருத்யுதான் இந்தப் பூமியில் இப்படி ரூபமெடுத்துக்கொண்டு வந்துவிட்டானோ வென்று நினைக்கும்படியாக இருக்கும். அவனுக்கு ஸுஹ்ருத்தென்று ஒருவரும் கிடையாது; பந்துக்களும் அவனுடைய ரௌத்ர கர்மாவைப் பார்த்து அவனை வெறுத்து ஒழித்துவிட்டார்கள். அத

னுல் யாதொரு க்லேஶத்தையும் அடையாமல், அவ்வேடன் கண்ணியுங் கையுமாகக் காடு முழுவதும் ஸஞ்சரித்துப் பக்ஷிகளைப் பிடித்து விக்ரயம் செய்து ஜீவித்துவந்தான்; இதைத்தவிர மற்றொன்றையும் அறியாதவனாதலால், அவ்வநசரன் இந்தத் தௌராத்ம்யத்தையே பரமபோக்யமாகக் கொண்டு வேறே ஒரு வ்ருத்தியையும் இச்சிக்கவில்லை. இப்படி தைவஹதனாக வர்த்தித்து வருங்காலத்தில், ஒருதினம் பெருங் காற்றுமழை அடித்தது. அப்பொழுது அந்தக்காட்டிலுள்ள மஹா வ்ருக்ஷங்களெல்லாம் வேரோடு பிடுங்கப்பட்டு சிந்நபிந்நமாக நாலு பக்கங்களிலும் விழவும், ஆகாச மண்டலம் முழுவதும் மேக ஸங்குலமாகவும், மின்னல் மின்னி இடி இடித்து ஒரு முகூர்த்தத்திற்குள்ளாக, ஓடங்களால் மூடப்பட்ட ஸமுத்ரம்போல் நாலுபக்கங்களும் ஸஞ்சக்கங்களாகி விட்டன. இந்திரனும், மிகவும் ஸந்தோஷித்துப் பெரிய மேகங்களைக்கொண்டு மழை பெய்வித்துப் பூமி முழுவதும் ஜலமயமாகத் தோன்றும்படி நீரால் எல்விடத்தையும் நிரப்பிவிட்டான். இப்படிப்பட்ட காற்றுமழையில் அகப்பட்டுக்கொண்டு அந்த வேடன் நடுக்காட்டிற் சுற்றிச்சுற்றி அலைந்து மதிமயங்கிக் குளிராற் பிடிக்கப்பட்டவனாய்த் தங்குமிடமகப்படாமல் மனஞ்சோர்ந்து 'எப்படி வீடுபோய்ச் சேரப்போகிறோம்? மார்க்கமெல்லாம் ஜலத்தால் நிரப்பப்பட்டதாக, மேடு பள்ளம் தெரியாமலிருக்கிறதே' என்று வருந்தினான். அவன் இப்படிக் கஷ்டப்பட்டுக்கொண்டு மரத்தினடிகளில் தங்கி ஓரிடம் விட்டு மற்றோரிடம் போய்க்கொண்டிருக்கையில், அங்கு ஓரிடத்தில் குளிரால் ப்ரமப்பட்டு மழையில் நனைந்த சிறகுகளுடன் பறக்கக்கூடாமல் கீழே விழுந்துகிடந்த ஓர் பெண்மாடப்புறாவைக் கண்டான். அவ்வேடன் மஹா பாபாத்மாவாகையால், கிஞ்சித்தேனும் இரக்கமின்றி அந்தப்பக்ஷியைப் பிடித்துக் கதறிக்கொண்டிருக்கையிலேயே அதைத் தன்னுடைய கூட்டிற்குள் போட்டுக்கொண்டான். தனக்கு மஹத்தான ச்ரமதசை வந்திருக்கையிலும் அதை மறந்து தனக்கு இயற்கையான க்ரூர கர்மாக்களில் ப்ரவர்த்திப்பது இம்மாதிரியான துராத்மாக்கள் விஷயத்தில் ஆச்சர்யமன்று. அவ்வாறு அவ்வேடன் அந்தக்கூட்டைத் தோளில் மாட்டிக்கொண்டு சாரல்தாங்கமாட்டாமல் தகுந்த ஓர்இடத்தைத் தேடிக்கொண்டு போகுங்காலத்தில், அவனுக்கு எதிரில் நீருண்டமேகம்போலக்



கறுத்துப் பெரிய தொருமரம் தென்பட்டது. அது அநேகபக்ஷி ஜாலங்களுக்கு நிழலையும் தங்குமிடத்தையும் ஆஹாரத்திற்குரிய பழங்களையும் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்பொழுது, இந்த லோகத்தில் ஸாதுக்கள்போலப் பரோபகாரத்திற்காகவே ப்ரஹ்மாவால் இதுவும் ஸ்ருஷ்டிக்கப்பட்டதோவென்று நினைக்கும்படியாக இருந்தது பிறகு ஒரு க்ஷணத்திற்குள் மேகங்களெல்லாம் விலகி மலர்ந்த ஆம்பல்மலர்களுடன் கூடிய ஸரஸ்போல, ஆகாசம் நிர்மலமான நக்ஷத்ரங்களால் நிறைந்ததாக ஆய்விட்டது. குளிராற் கஷ்டப்பட்ட அந்தவேடன் வெளியில் வந்துபார்த்து அந்த இடத்திலிருந்து தன் க்ருகம் வெகுதூரத்திலிருப்பதை ஆலோசித்து அன்றிரவு அந்த மரத்தினடியிலேயே தங்கிவிடுவதாகத் தீர்மானித்தான். பசியால் உபத்திரவமடைந்து மிகுந்த துக்கத்துடன் அவன் அந்தமரத்தினடியிற் கிடந்ததொரு பாறையின்மீது படுக்கப் போகும் பொழுது, அந்த மரத்தை நிமிர்ந்து பார்த்து அஞ்சலிசெய்து "இந்த மரத்திலிருக்கும் தைவதங்களை ஶரணமாக அடைந்தேன்" என்று சொல்லிவிட்டுப் படுத்து உறங்கினான்.

அந்த வ்ருக்ஷத்தில் பஹுகாலமாக ஸுஹ்ருத்பந்துக்களுடன் ஓர் கபோதம் வஸித்துக்கொண்டிருந்தது. அன்றைத்தினம் விடியற்காலத்திலேயே ஆஹாரம்தேடும்பொருட்டு வெளியில் ஸஞ்சரிக்கப்போன தன் பார்யை இரவாகியும் வீட்டுக்குத் திரும்பிவராததைப்பார்த்து அந்தப்பக்ஷி பின்வருமாறு பரிதபித்தது: "பெரிய காற்றுமழை அடித்ததே! அதற்கும் என்மனைவி திரும்பிவரக் காணோம்; என்ன காரணமோ? இந்தப் பெருத்த காட்டில் அவள் க்ஷேமமாக இருப்பாளா? வீட்டில் புத்ரபௌத்ரர் வேலைக்காரர்கள் முதலான அநேகர் இருக்கையிலும் அவள் ஒருத்திமாத்திரம் இல்லாததால் வீடு ஶூந்யமாகவே தோன்றுகிறது. மிகவும் இனிமையாகவும் மிகுந்த வாஞ்சையுடனும் பேசும் அந்த ப்ரியை வீட்டுக்குத் திரும்பிவராவிட்டால் இந்த உயிரை நான் வைத்துக்கொள்வதனால் என்னபயன்? நான் ஆஹாரம் புஜிக்காமல் இருக்கும்பொழுது அவள் புஜிக்கமாட்டாளே; நான் உட்காராமல் இருக்கும்பொழுது அவள் உட்காரமாட்டாள்; நான் படுத்தபிறகே படுப்பள்; நான் ஸந்தோஷப்பட்டால் அவளுக்கு ஸந்தோஷமும், எனக்குத் துக்கம் நேர்ந்தால் அவளுக்குத் துக்கமும் உண்டாகுமே! நான் வெளி

யிற் போயிருந்தால் ஸௌக்யமாகத் திரும்பிவரவேண்டு மென்று
ஸதா விசாரத்துடன் எதிர் பார்த்திருப்பாளே! நான் எந்தக்கார
ணத்தாலாவது கோபித்துக்கொண்டால் ப்ரியமாய்ப் பதில்சொல்
வளே! பதியின் நோக்கம்போலவே நடக்கிற மஹா ஸாத்வி,
என் ப்ராணனைவிட மிக அருமையாச்சுதே! அப்படிப்பட்ட
பார்யையை யுடைய புருஷனே தந்யன். அவ்வளவு அதுரக்தை,
ஸ்திரமான ஸௌஹார்தத்துடன் கூடினவள். மரத்தினடியாக இருந்த
போதிலும் அப்படிப்பட்ட தயிதை யிருக்குமிடமே க்ருஹம்;
அரண்மனையாக இருந்தாலும் அப்படிப்பட்டவள் இல்லாவிட்டால்
அந்த இடம் காடுதானே. தர்மம், அர்த்தம், காமம் இம்மூன்றுவித
புருஷார்த்தங்களிலும் பார்யைதான் புருஷனுக்கு ஸஹாயம்.
விதேசம் போயிருந்தால் ஸர்த்தாவின் மனத்திற்கு ஆறுதலைக்
கொடுக்கிறவள்; அவள் தான் முக்யமான அர்த்தம்; இந்த லோக
யாத்ரையில் ஸஹாயமற்ற புருஷனுக்கு அப்படிப்பட்டவளே ஸ
ஹாயம்; வியாதியால் வருந்திக் கஷ்டப்படுகிறவனுக்குப் பார்யை
யைப்போன்ற மற்றொரு மித்ரன் இந்த லோகத்தில் உண்டோ?
எவனுக்கு இப்படிப்பட்ட பதிவ்ரதையான பார்யை வீட்டில் இல்
லையோ அவன் காட்டிற்குப் போகவேண்டியதுதான்; ஏனென்
றால், அவனுக்குக் காடுபோலவே வீடு."

இவ்வாறு அந்தப் பக்ஷி வருத்தத்துடன் விலபிக்கிறதை
வேடனால் பிடிக்கப்பட்டுக் கூட்டிலுள்ள அதன் பார்யையான
பெண்புறாக் கேட்டு "அஹோ! நானே அத்ருஷ்டசாலி! என்
பேரில் எவ்வளவு ப்ரீதி என் ஸர்த்தா வைத்திருக்கிறார்! எவளிடத்
தில் ஸர்த்தாவுக்கு ஸந்தோஷம் உண்டாகிறதோ அவள்தான்
ஸ்த்ரீ. ஸர்த்தா ஸந்தோஷத்தை யடைந்தால் ஸகல தேவதைக
ளும் ஸந்துஷ்டர்களானாற்போலும். எவள் தன் ஸர்த்தாவின் அத்
ருப்திக்குப் பாத்ரமாகிறாளோ அவள் காட்டுத்தீயில் அகப்பட்ட
பூங்கொத்துகளுடன் கூடிய லதைபோல ஸஸ்மமாகிறாள்" என்று
நினைத்துப் பர்த்தா கஷ்டப்படுவதைப் பார்த்து மிகவும் வருந்தி,
தான் வேடன்கூட்டில் அகப்பட்டுக்கொண்டிருக்கையிலும், அங்கி
ருந்தபடியே பின்வருமாறு பதில் வார்த்தை சொல்ல ஆரம்பித்தது.
"ஹேகாந்த! உமக்கு மஹத்தான ச்ரேயஸ்கரமான கார்யமொன்று
சொல்லுகிறேன் கேளும்: இந்த வேடன் உம்முடைய க்ருஹத்
திற்கு வந்து படுத்து உறங்குகிறான். குளிரில் அகப்பட்டுப் பசியி



னால் வருந்திக் கஷ்டதசையை அடைந்திருக்கிறான். இவனுக்குத்
தகுந்த ஸத்காரத்தைச் செய்யும். யார் சரணாகதனை ஸம்ரக்ஷிக்
காமல் மரணமடையப் பார்த்திருக்கிறாரோ, அவர் ப்ராஹ்மண
ஹத்தி மொஹத்தி முதலிய பாதகங்களுக்கு உரிய பாபத்தை
அடைகிறார். யாதொரு க்ருஹஸ்தன் தர்மத்தைவிட்டு விலகாமல்
இருக்கிறானோ அவன் சாச்வதமான லோகங்களை அடைகிறான்
என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆதலால், நீர் இப்பொழுது
உம்முடையகஷ்டத்தைச் சிறிதும் ஆலோசிக்காமல் உம்முடைய
தேஹ ஸௌக்யத்தை மறந்து தர்மத்தை ஆச்ரயித்து இந்தவேடன்
எப்படி த்ருப்தி யடைவனோ அப்படிப்பட்ட பூஜையை இவனுக்
குச் செய்யும். அப்படிச் செய்தால், புத்ரர் முதலானவர்கள் க்ஷேம
த்தை யடைவார்கள்; சரீரவிஷயமாக நீர் ஒருவித ஸந்தாபத்தை
யும் அடையக்கூடாது. உம்முடைய ஸார்யையாகிற என் விஷ
யத்திலும் வருத்தம் வேண்டாம்" என்று அந்தக்கூட்டில் அகப்
பட்ட அந்தப் பெண்பக்ஷி மஹா தைந்யத்தோடு சிலவார்த்தை
சொல்லிவிட்டு மிக்க துக்கத்துடன் கூட்டிலிருந்தபடியே ஸர்த்
தாவை நிமிர்ந்து பார்த்தது.

(இன்னும் வரும்).

ஓர் பௌராணிகர்.

---

'கர்ம யோக ஜ்ஞாந யோகங்களை அங்கமாக வுடைய பக்தி
யோகத்தைஅநுஷ்டிக்கச் சக்தி யில்லாதவர்களுக்கு ப்ரபத்தி என்
கிற ஸுகரமான உபாய மொன்று உண்டு' என்பதைக் கேட்ட எம்
பார், அந்த ப்ரபத்திக்கு அங்கமாக இருக்கும் மஹாவிச்வாஸத்
தின் ச்ரமத்தை நினைத்து 'கல எள் கட்டுப்போய் கலஎண்
ணெய் ஆயிற்று' என்று அருளிச் செய்தார். கல எள் வாரம்
கொடுக்க அசக்தனாக இருக்கிற குடியானவனை 'கல் எள்ளுக்குப்
பதிலாகக் கல எண்ணெய் கொடுத்துவிடு' என்று சொல்லுமாப்
போலும் என்று தாத்பர்யமாம்.

---

## ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்வாமிகள் பரம்பரை.

இதனடியில் அச்சிட்டிருக்கும் பரம்பரை ஸஸ் ஸம்ப்ரதாய முக்தாவளியிலிருந்து எடுத்துச் சோதிக்கப்பட்டது. இதில் ஒவ்வொரு ஸ்வாமியின் ஆஸ்தான ஆரம்பகாலமும் இன்னும் சில விவரங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. நிர்யாணகாலம், அநேகமாய் அடுத்தபட்டத்தின் ஆரம்பகாலந்தான். ஆனால், 27-ம் பட்டம் ஸ்வாமியின் காலத்துக்குப் பிறகும், 37-ம் பட்டம் ஸ்வாமியின் காலத்துக்குப்பிறகும், முறையே சுமார் 1 - வருஷம் 10 - மாசமும், 4 - வருஷம் 6 - மாசமும் ஸ்வாமிகள் எழுந்தருளாத காலமாயிருந்தது. ஒவ்வொரு கல்யப்தத்திலிருந்தும் 3102 - குறைத்தால், கி. பி வருஷம் கிடைக்கும்.

டி. ராஜகோபாலாசாரியர்.

| பட்டம். | திருநாமம். | பெயரின் வரிசை. | பூர்வாச்ரமம் கிராமம், குடிப்பெயர். | ஆஸ்தானாரம்ப கல்யப்தம். | ஹேமவாசிவருஷம் மாஸம். | மொத்த காலம். | பிருந்தாவனம் ஏற்பட்ட இடம். |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வ. மா. | |
| 1 | ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்திரமஹாதேசிகன். | க | திருநாராயணபுரம்—கிடாம்பி. | 4500 | பகுதான்ய-சித்திரை | 60—1 | திருநாராயணபுரம். |
| 2 | ஸ்ரீ 2ஆ நாராயணயதீ...கன். | ங | கம்பாக்கம்—திருமலை. | 4560 | பகுதான்ய-சித்தி | 14—11 | ,, |
| 3 | ஸ்ரீபராங்குசயதீ...கன். | க | மலையாங்குளத்தார்—கந்தாடை. | 4574 | கரன—பங்குனி | 12—10 | ஸ்ரீமுஷ்ணம். |
| 4 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீ...கன். | க | ,, | 4586 | குரோதி—தை | 8—3 | சிங்கர்கோயில். |
| 5 | ஸ்ரீசடகோபயதீ...கன். | உ | மைஸூர்—ஸ வடூகம்ஆஸ கம்தூ. | 4595 | பிரமாதீச-சித்தி | 5—9 | திருக்குறுங்குடி. |
| 6 | ஸ்ரீஷஷ்டபராங்குசயதீ...கன். | உ | காளபாக்கம்—வங்கிபுரம். | 4600 | காளயுக்தி—தை | 14—1 | அஹோபிலம் குகையில் பிரவேசித்துவிட்டார். |
| 7 | ஸ்ரீசடகோபயதீ...கன். | க | இளங்காடு—வங்கிபுரம். | 4614 | ஆங்கீரஸ—மாசி | 9—1 | ,, |
| 8 | ஸ்ரீபராங்குசயதீ ..கன். | ங | ,, | 4623 | விஷு—பங்குனி | 15—9 | ஸ்ரீரங்கம். |
| 9 | ஸ்ரீ 2ஆ நாராயணயதீ...கன். | உ | ,, | 4639 | ஏவிளம்பி-மார்கழி | 4—6 | அஹோபிலம். |
| 10 | ஸ்ரீசடகோபயதீ...கன். | ச | ,, | 4644 | சுபகிருது—ஆனி | 17—1 | திருநாராயணபுரம். |
| 11 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீ...கன். | உ | திருவெவ்வுளூர்—வங்கிபுரம். | 4661 | சித்தார்த்தி—ஆனி | 38—10 | ஸ்ரீரங்கம். |
| 12 | ஸ்ரீநாராயணயதீ...கன். | ங | ஷை | 4700 | விளம்பி—சித்திரை | 84—5 | திருநாராயணபுரம். |
| 13 | ஸ்ரீவீரராகவயதீ...கன். | க | ஷை | 4784 | ஆங்கீரஸ-புரட்டாசி | 44—1 | ஸ்ரீரங்கம். |
| 14 | ஸ்ரீநாராயணயதீ...கன். | ச | புள்ளம்பூதங்குடி-ஸ்ரீவத்ஸாங்கம். | 4778 | ஙள—ஐப்பசி | 9—9 | திருக்கண்டியூர். |
| 15 | ஸ்ரீகல்யாணவீரராகவயதீ...கன். | க | யசஹூர்—தட்டை. | 4788 | அக்ஷய—ஆடி | 8—2 | பெருமாள்கோயில். |
| 16 | ஸ்ரீசடகோபயதீ...கன். | ௬ | சோகத்தூர். | 4796 | பவ—புரட்டாசி | 3—8 | திருக்குடந்தை. |
| 17 | ஸ்ரீவீரராகவவேதாந்தய...கன் | க | திருவெள்ளியங்குடி. | 4800 | பகுதான்ய-வைகாசி | 35—8 | திருப்புட்குழி. |
| 18 | ஸ்ரீநாராயணயதீ...கன். [ன் | ௬ | திருவெவ்வுளூர்—வீரவல்லி. | 4835 | பிரமாதீச—தை | 1—6 | ஸ்ரீரங்கம். |
| 19 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீ...கன். | ங | திருவல்லிக்கேணி—கடாதூர். | 4837 | ராக்ஷஸ—ஆடி | 10—7 | புள்ளம்பூதங்குடி. |
| 20 | ஸ்ரீவீரராகவயதீ...கன். | உ | பிள்ளைபாக்கம்—தட்டை. | 4847 | குரோதன—மாசி | 2—1 | வடதேசம். |
| 21 | ஸ்ரீபராங்குசயதீ...கன். | ச | தெய்யாறு—வங்கிபுரம். | 4849 | பிரபவ—பங்குனி | 9—9 | பாலமேடு. |

| பட்டம். | திருநாமம். | பெயரின் வரிசை. | பூர்வாச்ரமம் கிராமம், குடிப்பெயர். | ஆஸ்தாநஆரம்ப ம்கல்ய ப்தம். | ப்ருந்தாவநவருஷம் மாசம். | மொத்த காலம். | ப்ருந்தாவநம் ஏற்பட்ட இடம். |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வ. மா. | |
| 22 | ஸ்ரீநாராயணயதீ...கன். | சு | மதுராந்தகபுரம்—ஸ்ரீவசுஸாரங்கம் | 4859 | ஈச்வர—மார்கழி | 0—7 | ஷை |
| 23 | ஸ்ரீவீரராகவயதீ...கன். | க | திருவெள்ளியங்குடி. | 4860 | பகுதான்ய—ஆடி | 5—6 | ஸ்ரீரங்கபட்டணம். |
| 24 | ஸ்ரீபராங்குசராமாநுஜயதீ...கன். | க | கல்யாணபுரம்—சக்ரவர்த்தி. | 4865 | சுபாநு—தை | 12—2 | கொக்கருயம்பேட்டை. |
| 25 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீ...கன். | ச | மதுராந்தகபுரம்—ஸ்ரீவசுஸாரங்கம் | 4877 | மன்மத—பங்குனி | 35—9 | நரஸிம்மபுரம். |
| 26 | ஸ்ரீரங்கநாதயதீ...கன். | க | ஷை | 4918 | பிரஜோத்பத்தி—கார்த்திகை. | 17—1 | ஷை |
| 27 | ஸ்ரீவீரராகவவேதாந்தயதீ...கன். | உ | மதுராந்தகபுரம்—ஸ்ரீவசுஸாரங்கம் | 4930 முதல் 4933 | சர்வதாரி-மார்கழி முதல் கர-ஆவணிவரை | 2—8 | மதுவால். |
| 28 | ஸ்ரீரங்கநாதசடகோபயதீ...கன். | ... | திருக்குறுங்குடி—நடாதூர்—ஸ்ரீவசுஸாரங்கம். | 4935 | விஜய - ஆனி | 8—6 | மதுராந்தகம். |
| 29 | ஸ்ரீபராங்குசராமாநுஜயதீ...கன். | உ | வஜ்ரம்—லாலாபேட்டை. | 4938 | துர்முகி—கார்த்திகை. | 0—4 | திருப்பாற்கடல் இந்த ஸ்வாமி அடுத்தபட்டம்ஸ்வாமியிடம்முத்திரையை ஸாதித்துவிட்டு ஏவிளம்பி மார்கழியில் பரமபதம் அடைந்தார். |
| 30 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸவேதாந்தயதீ...கன். | ... | மதுராந்தகபுரம்—ஸ்ரீவசுஸாரங்கம் | 4938 | துர்முகி—பங்குனி | 5—8 | நரஸிம்மபுரம். |
| 31 | ஸ்ரீநாராயணவேதாந்தயதீ...கன். | ... | ஆதிரங்கம்—விஞ்சமூர். | 4944 | சுபக்ருது—கார்த்திகை | 4—4 | ஷை |
| 32 | ஸ்ரீவீரராகவயதீ...கன். | க | ஸ்ரீவில்லிபுத்தூர்—ஆதனூர். | 4948 | பராபவ—பங்குனி | 6—5 | திருவெவ்வுளூர். |
| 33 | ஸ்ரீசடகோபயதீ...கன். | க | பாக்கூர்—வங்கிபுரம் | 4955 | பிரமாதீச—ஆவணி | 26—1 | ஷை |
| 34 | ஸ்ரீசடகோபராமாநுஜயதீ...கன். | ... | அத்திப்பட்டு—மாடபூசி. | 4981 | பிரமாதி—ஆவணி | 8—1 | ஷை |
| 35 | ஸ்ரீரங்கநாதயதீ...கன். | உ | களத்தூர்-வங்கிபுரம். | 4984 | சித்திரபாநு—புரட்டாசி | 5—10 | ஷை |
| 36 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீ...கன். | ௫ | பாக்கூர்—வங்கிபுரம் | 4990 | சர்வதாரி—ஆடி | 11—6 | பாதூர். |
| 37 | ஸ்ரீவீரராகவசடகோபயதீ...கன். | ... | பிள்ளைபாக்கம்—இளையவில்லி. | 5001 முதல் 5002 | விகாரி—தை முதல் சார்வரி—மார்கழி | 1—11 | நரஸிம்மபுரம். |
| 38 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸசடகோபயதீ...கன். | ... | மதுராந்தகபுரம்—திருக்குடந்தை-ஸ்ரீவசுஸாரங்கம் | 5007 | விச்வாவஸு—ஆனி | 3—11 | ஷை |
| 39 | ஸ்ரீபராங்குசயதீ... கன். | ௫ | மன்னார்கோவில். | 5011 | ஸர்வஜித்-வைகாசி அஉ ஆஸ்தானத்துக்கு எழுந்தருளினது. | ... | இந்த ஸ்வாமி இப்போது ஆஸ்தாநத்தில் ஸுகமாய் எழுந்தருளி யிருக்கிறார். |

# கடிதங்கள்.

வேதாந்த தீபிகை பத்திராதிபருக்கு,

ஸ்ரீ அகோபிலமடத்தின் சிஷ்யரும், சென்னையில் தமிழ்ப்பண்டிதருமான ஸ்ரீமான் தி. வெங்கடராம ஐயங்கார், சென்றமாஸத்தில், இந்நகரில் பிரதிவாரம் இருமுறை பிரசுரமாகும் இந்துநேசன் என்னும் பத்திரிகையில் நம் மடத்துச் சிஷ்யர்கள் விஷயமாயும், மடத்தின் காரியங்கள் விஷயமாயும், அநேக வியாஸங்கள் எழுதிப் பிரசுரப்படுத்தியிருக்கிறார். அவ்விஷயங்கள் மடத்தின் ஹிதத்தைக் கோருபவர்கள் எல்லாரும் அநுமோதிக்கக் கூடியவைகளாயிருப்பதால், அவைகளை அந்தப்பத்திரிகையையே வரவழைத்துப் பூர்த்தியாய்ப் படிக்கும்படி நம் சங்கத்தார் எல்லாரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பத்திரிகையில் அதிக அவகாசமில்லாமைபற்றி, அதன்முக்கிய அம்சங்கள்மாத்திரம் எடுத்துக்காட்டப்படுகின்றன.

1-வது. இந்தமடத்திற் ஸ்ரீ அழகியசிங்கர், லௌகிக காரியங்களைச் சீராய் நடத்திவரும்படி தக்க காரியதரிசிகளை ஏற்படுத்தி, கணக்கு வழக்குகளை வருஷம் ஒருமுறை தெரிந்தவர்களைக்கொண்டு பரிசோதித்துப் பிரசுரஞ் செய்துவருவது ரொம்பவும் கிரமமாயிருக்கும். மடத்தின் வரவுசெலவு கணக்குகள் ஒழுங்காய் ஏற்படுமானால், வழக்கத்துக்கு விரோதமாய்ப் பெருந்தொகைகள் செலவிடவும், யாருக்கும் கண்டபடி தாராளமாய்த் தொகைகள் கொடுக்கவும் இடமிராது.

2-வது. சகல உத்தரவுகளும், ஸ்ரீமுகங்கள்போல ஸ்ரீ அழகிய சிங்கர் கையெழுத்து முத்திரை இவைகளுடன் வெளியில் அனுப்பப்படவேண்டும். இப்படிச் செய்தால், பக்கத்திலிருப்பவர்கள் தங்கள் நோக்கங்களை இடையில் நுழைக்க இடமிராது.

3-வது. தூரதேசங்களில் வசிக்கும் அநேக சிஷ்யர்களுக்கு ஆசாரிய ஸம்பந்தம் நேராமலிருப்பது, ஸ்ரீ அழகிய சிங்கர் ஸஞ்சாரஞ் செய்யாமலிருப்பதனாலேதான்; வெகுபேர்கள், தகப்பனார் பாட்டனார் முதலானவர்கள் சிஷ்யர்களாயிருக்க அந்த ஸம்பந்தத்தால் மடத்தின் ஸம்பிரதாயத்தில் சிரத்தையையும், மடத்துச் சிஷ்யனென்கிற க்யாதியையும் பெற்றிருந்தும், இந்த ஸஞ்சாரம் இல்லாமலிருத்தலினாலேயே ஸமாஸ்ரயணம், க்ரந்தாந்வயம், ப்ரபத்தி முதலானவைகள் கிடைக்காமல், ஜந்மத்தின் பலத்தை இழப்பதுடன், மடத்துச் சிஷ்யர்களோ அல்லவோ என்கிற ஸந்தேஹத்துக்கும் ஆஸ்பதமாகிறார்கள். அவர்களைச் சிதறிப்போகாமல் ஒருங்குசேர்க்கும்பொருட்டு அவசியம் ஸ்ரீ அழகிய சிங்கர் தேசஸஞ்சாரம் செய்யவேணுமென்று ஏற்படுகிறது. தற்காலம் ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனி வரவர அநுகூலமாகி வந்திருப்பதனால், இனி ஸமீபமான இடங்களுக்கும், கிரமமாய் மற்ற இடங்களுக்கும் எழுந்தருளும்படியிருக்குமென்று எண்ணலாம். பொதுவாய் மடாதிபத்தியம் வகிக்கும் ஸ்வாமிகள் ஸஞ்சாரம் செய்வது ஸஹஜம். மேலும் நம் பூர்விகர்களான அழகியசிங்கர்கள் தென்தேசங்களிலும், மேல் நாட்டிலும், ஸ்ரீ அகோபிலத்திலும் எம்பெருமான்களை மங்களாஶாஸநம் செய்வதற்காகத் தங்கள் காலத்தில் ஒருமுறையாவது எழுந்தருளுவது வழக்கமாயிருந்தது.

4-வது. ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருக்குமிடத்திலும், மடங்களும் சிஷ்யர்களும் ஏற்பட்டிருக்கும் இதரஸ்தலங்களிலும் ச்ருதி, ஸ்ம்ருதி, புராணங்கள், வேதபாஷ்யங்கள், ஸூத்ரங்கள், ஸூத்ரபாஷ்யங்கள், நம் ஸம்பிரதாயக் கிரந்தங்கள் இவைகளடங்கிய புஸ்தகாலயங்கள் அவசியம் வேண்டும். சிஷ்யர்களுடைய ஜ்ஞாநவிருத்திக்கும், ஸந்தேஹ நிவ்ருத்திக்கும் புஸ்தகங்கள் முக்கியமாய் வேண்டும். ப்ராசீந ஏட்டுக் கிரந்தங்களை அந்யர்கள் எவ்வளவோ ச்ரத்தையாய்ப் பாதுகாப்பதனால், நாமும் அவைகளை அநாதரிக்காமல் சேர்த்துவைப்பதே நலம்.

5-வது. அங்கங்கே மடத்தைச்சேர்ந்த கட்டடங்கள் பிருந்தாவனங்கள் முதலியன ஜீர்ணமடையாமல் அப்போதைக்கப்போது பழுதுபார்த்தல் வேண்டும். ஸ்ரீராஜமன்னார் ஸந்நிதியிற்போல, திருப்பதி முதலான பல இடங்களில் ஜீர்ணமாய்க் கட்டடங்கள் கட்டவேண்டுவன பஹுவாய் இருக்கின்றன. ஸ்ரீ அழகியசிங்கர் இவ்விஷயத்தில் ச்ரத்தை வைப்பதாய்த் தெரிந்தால் அங்கங்கே ஆஸ்திகர்களும் புஷ்டர்களுமான சிஷ்யர்கள் சக்திக்கநுகுணமாய்த் திரவியவ்யயம் செய்து உபகரித்துக் கைங்கரியத்தில் உத்ஸாஹத்தோடு அந்வயிக்கச் சித்தமாயிருப்பார்கள்.

6-வது. மடத்துக்குச் சொந்தமான நிலம் கட்டடம் முதலானவைகளுக்குச் சரியாய் ஜாபிதா ஒன்று ஏற்படுத்தி, தூரதேசங்களில் இருக்கும் ஸ்தலங்களுக்குத் தகுந்த சிஷ்யர்கள் மூலமாய்ப் பராமரிசம் ஏற்படவேணும்; இது இல்லாவிட்டால் ஸ்தலங்களே இதரர்களால் ஆக்ரமிக்கப்பட்டு காளடைவில் ஸ்வாதீநத்தையே இழக்கும்படி ஸம்பவிக்கும்.

7-வது. தகுந்த மாஸச் சம்பளத்துடன் ஸமர்த்தரான ஒரு ஸ்ரீ காரியக்காரரை ஏற்படுத்தி, அவர்மூலமாய்க் கணக்கு வழக்குகளையும், வசூலாகும்படிகளையும் மிகவும் சீர்திருத்தல் வேண்டும். இது விஷயம் ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் ஷை இந்துநேசன் மாசிமீ 30உ *பத்திரிகையில் வெகுவிரிவாயும் வசநதாடியாயும் விரித்துரைத்திருப்பதால், நம் பத்திரிகையைப் படிப்போர்களை அந்தப் பத்திரிகையைப் பார்த்து அறிந்துகொள்ளும்படி வேண்டுகிறேன்.

மேற்கண்ட விஷயங்களெல்லாம், ரொம்பவும் உசிதமாயும் ஸ்ரீ சிஷ்ய சபையின் தீர்மானங்களை அநுஸரித்தவைகளாயும் இருக்கின்றன. அவைகளை ஸ்ரீ அழகிய சிங்கரும், அந்த ஸ்வாமிக்கு அந்தரங்கமானவர்களும் கவனிப்பார்களென்று நம்புகிறேன்.

சென்னபட்டணம்,
20-8-1911.

ஓர் சிஷ்யர்.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு

சென்ற மாசிமீ 15உ ஞாயிற்றுக்கிழமை 3-30 மணிக்கு, திருவல்லிக் கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் ஷெ பிரிவின் மூன்றாவது கூட்டம் சேர்ந்தது. ஸ்ரீமாந் ஸ்ரீமுஷ்ணம் ஸ்வர்ணம் க்ருஷ்ணமாசாரியர் ஸ்ரீ. திருவஹீந்த்ரபுரம் சேட்டலூர் - ராமாநுஜாசாரியர், ஸ்ரீ. டி. என். தேசிகாசாரியர், ஸ்ரீ. இஞ்சிமேடு ரங்கநாதாசாரியர் முதலான வித்வான்களும், இன்னும் ஸபாத்ய க்ஷர் ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர் முதலான சபையின் அங்கத்தார்களு மாக ஏறக்குறைய 100 ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ. சே. நரஸிம்மாசாரியர் திருப்பாணாழ்வார் அருளிச்செய்த 'அமலனாதி பிரான்' என்கிற க்ரந்தத்தைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்தருளினர். அந்த உபந்யாஸத்தில் அர்ச்சாவதாரமே நமக்கு மிகவும் ஆதரணீய மென்றும், ஸமஸ்த பாப நிவர்த்தகத்வமும் ஸகல இஷ்ட ப்ரதத்வமும் அந்த அர்ச்சாவ தாரரூபத்திற்கே உண்டென்றும், ப்ரபந்நரான நமக்கு சரணமந்த்ரமாகிற த்வயத்தில் "சரணௌ" என்கிற பதம் அர்ச்சாவதாரத்தையே காட்டுகிறபடி யால் அந்த அர்ச்சாவதாரமே உபாயகோடியில் அநுப்ரவிஷ்டமென்றும், ஸௌலப்யம் என்கிற குணம் இந்த ரூபத்திலேயே அதிகமாக ப்ரகாசிக்கிற படியால் அதுவே நமக்கு அநுஸந்தேய மென்றும், இவ்வளவு விசேஷங்க ளுள்ள அர்ச்சாவதாரத்தின் மஹிமையை இதம்பரமாக இந்த ப்ரபந்தம் ப்ரதி பாதிக்கிறதாகையாலும் மற்ற ப்ரபந்தங்களுக்குப்போல விஸ்தாரம் விரஹ க்லேசம் தூதப்ரேஷணங்களாகிய வருத்தங்கள் இல்லாமல் முழுமையும் அநுபவரஸமாக இருக்கிறபடியாலும் இது அவசியம் உபாதேய மென்றும் விஸ்தாரமான ஒரு அவதாரிகையால் ப்ரதிபாதிக்கப்பட்டது. பிறகு ப்ரபந் தத்தின் முதற்பாசுரத்தை எடுத்துக்கொண்டு, அது அகாரத்தை முதலக்ஷர மாகவைத்துக்கொண்டு ஆரம்பிக்கிறபடியால் ப்ரணவம் முதலக்ஷரத்தின் அர்த் தத்தை விசதப்படுத்துகிறதென்றும், அப்படி விசதப்படுத்தப்படுகிற ப்ரகாரம் இன்னது இன்ன தென்றும், 'அடியார்க்கென்னை யாட்படுத்த' என்கிற இடம் பாகவத கைங்கர்யமே ஜீவனுக்கு அபேக்ஷிக்கத் தகுந்ததாகிய உயர்ந்த ப்ர யோஜந மென்றும், அந்தப்பாட்டில் 'அமலன்,' 'விமலன்,' 'நிமலன்', 'நின்மலன்' என்கிற நாலு பதங்களுக்கும் தனித்தனியான அர்த்தம் அதன் ப்ரயோஜநம் இன்னது இன்னதென்றும், இன்னும் இப்படிப்பட்ட அநேகவி சேஷார்த்தங்களை ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த 'முநிவாஹந போகம்' என்கிற ரஹஸ்யத்தையும், பெரிய 'வாச்சான் பிள்ளை அருளிச்செ ய்த வ்யாக்யாநத்தையும் இன்னும் ஸ்ரீமத் பாஷ்யம் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் தழுவி, வந்திருந்தவர்கள் எல்லாரும் அதிமாத்ரம் ஆநந்திக்கும்படி எடுத்து உபந்யஸித்தார். மூன்றரைமணிக்கு ஆரம்பித்த உபந்யாஸம், 6-மணிவரையில் நடந்தது. ஸ்ரீ. டி. என். தேசிகா சாரியர், ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர், ஸ்ரீ. டி. வெங்கடராம ஐயங்கார் இவர்கள் மூன்றுபெயரும் ஷெ உபந்யாஸம் முடிந்தவுடன், அந்த உபந்யாஸத்



தின் கௌரவத்தை அநேகவிதமாக எடுத்து ச்லாகித்தார்கள். ஸ்ரீ ஸ்வர்ணம் க்ருஷ்ணமாசாரியரும் பஹுப்ரகாரமாக உபந்யாஸத்தின் குணத்தையும் உப ந்யாஸம் செய்த ஸ்வாமியின் யோக்யதையையும் புகழ்ந்து ஸாதித்தார். பிறகு ஸப்யர்களின் க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் நடக்க, கூட்டம் கலைந்தது.

நாளது பங்குனிமீ 6உ ஞாயிற்றுக்கிழமை பகல் 4-மணிக்கு, திருவல் லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஷெ பிரிவின் நான்காவது கூட்டம் சேர்ந் தது. ஏறக்குறைய 70 ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீமாந் சே. நரஸிம்மாசாரியர் இதற்கு முந்தி உபந்யஸித்து அவசிஷ்டமாகவிட்டிருந்த அ மலனாதிபிரான் க்ரந்தத்தில் 2-3-4- பாசுரங்களைப்பற்றி உபந்யாஸம்செய்தார். அதில் இரண்டாவது பாசுரம் ப்ரணவத்திலுடைய இரண்டாவது அக்ஷரமா கிற உகாரத்தின் அந்யசேஷத்வ வ்யாவ்ருத்தி ரூபமாகிற அர்த்தத்தையும், மூன்றாவது பாசுரம் மகாரத்தின் அர்த்தமாகிற மூன்றுவித ஜீவன்கள் பேதத் தையும் அந்த ஜீவன்கள் ஈச்வரன்பக்கல் பட்டிருக்கும் அடிமைத்தனத்தை யும், நான்காவது பாசுரம் நமஸ் ஸப்தத்தின் அர்த்தமாகிய அஹங்கார மமகார நிவ்ருத்தியையும் ப்ரதிபாதிக்கிறது என்று தெளிவாக விவரிக்கப்பட்டன. உபந்யாஸகாலத்தில் அந்த ஸ்வாமி ஸாதித்த விசேஷார்த்தங்களை எடுத்து உரைக்க ஸாத்யமில்லை. அந்த விசேஷார்த்தங்கள் ப்ரத்யக்ஷத்திற் கேட்டு அநுபவிக்கத்தகுந்தனவே. ஸ்ரீமாந். டி. வெங்கடராம ஐயங்கார் உபந்யாஸம் முடிந்தவுடன் ஆநந்த பரிபூர்ணராய் 'இந்த உபந்யாஸங்கள் எல்லாம் க்ரந்த ரூபமாக ஏற்பட்டால் எல்லார்க்கும் பரம ப்ரயோஜநமாக இருக்கும்' என்று சொல்லி, ஸப்யர்களின் க்ருதஜ்ஞதையை அந்த ஸ்வாமி அங்கீகரிக்கவேண்டு மென்று ப்ரார்த்தித்தார். அதனுடன் கூட்டம் முடிந்தது.

1911ஹு பிப்ரவரிமீத்து வரவு செலவு கணக்கு.

| | விவரம். | | வரவு. | | | செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பிப்ரவரிமீ 1உயில் கையிருப்பு ... | ரூ. | 13 | 3 | 3 | 0 | 0 | 0 |
| 2 | 1910-11 வருஷசந்தா வரவு ... | ரூ. | 27 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | ஸ்டாம்பு கூலி வகையரா செலவு ... | ரூ. | 0 | 0 | 0 | 0 | 11 | 6 |
| 4 | அச்சுச் செலவு ... ... | ரூ. | 0 | 0 | 0 | 5 | 8 | 9 |
| 5 | சபைப் பொதுக்காரியதரிசிக்கு 26-வது விதி பின்படி அனுப்பியது ... | ரூ. | 0 | 0 | 0 | 10 | 12 | 9 |
| 6 | மார்ச்சுமீ 1உயில் கையிருப்பு ... | ரூ. | 0 | 0 | 0 | 23 | 2 | 3 |
| | ஆக ரூ. ... | | 40 | 3 | 3 | 40 | 3 | 3 |

மயிலாப்பூர்.<br>1911ஹு மார்ச்சுமீ 1உ

எஸ். வாஸுதேவாசாரியன்,<br>காரியதரிசி.<br>மதிராஸ் சைதாப்பேட்டை பிரிவு.

## தஞ்சாவூர்ப் பிரிவு.

1911-ம் வரு பிப்ரவரிமீ 12உ ஞாயிற்றுக் கிழமை மாலை 6-மணிக்குத் திருக்குடந்தையில் டிை பிரிவின் முதல் கூட்டம் சேர்ந்தது. ஸ்ரீமாந் வே. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி அக்ராஸநாதிபதியாக இருந்தார். பின்வரும் தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன :—

(1) இந்தப் பிரிவுக்குத் தாத்காலிகமாய் நியமிக்கப்பட்டிருந்த அடியிற் கண்ட கமிட்டி மெம்பர்கள், இந்தப்பிரிவின் வர்ஷாந்தக் கமிட்டி மெம்பர்களாக ஸ்திரப்படுத்தப்பட்டார்கள் :—(1) ஸ்ரீ. டி. கோதண்டராம ஐயங்கார்—ஸபாத்யக்ஷர், (2) ஸ்ரீ. எஸ். ஆராவமுது ஐயங்கார்—உபஸபாத்யக்ஷர், (3) ஸ்ரீ. எஸ். கிருஷ்ணமாசாரியர்—கார்யதர்சி, (4) ஸ்ரீ. ஜி. ஆர். ஆராவமுது ஐயங்கார்—பொக்கிஷதாரர்.

(2) ஸபாத்யக்ஷராலும், ஸ்ரீ. கிருஷ்ணமாசாரியராலும் சித்தஞ்செய்யப்பட்ட விஷயங்கள் படிக்கப்பட்டு இந்தப் பிரிவின் நோக்கங்களாக அங்கீகரிக்கப்பட்டன.

(3) இந்தப் பிரிவின் ஸம்பந்தமாக விதிகளைச் செய்து அடுத்த ஜநரல் மீடிங்கில் வைக்கும்படி ஸபாத்யக்ஷர் ப்ரார்த்திக்கப்பட்டார்.

(4) இந்தப் பிரிவுக்குப் போஷகராக இருக்க ஸ்ரீ அழகியசிங்கரைப் ப்ரார்த்திக்கவேணுமென்று தீர்மானித்து, இந்தத் தீர்மானத்தை ஸ்ரீ அழகியசிங்கரிடம் கார்யதர்சியும், ஸ்ரீ. சக்ரவர்த்தி ரங்காசாரியரும் விஜ்ஞாபநம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

(5) வருகிற மார்கழி 11, 12-ம் தேதிகளில் இந்தப்பிரிவின் ஆதரவையில் ஒரு பெரிய சங்கம் கூட்டவேணும் ; அது ஸம்பந்தமாக எல்லா ஏற்பாடுகளையும் ஸ்ரீ. ச. ரங்காசாரியரும் சேர்ந்து செய்யவேண்டியது. டிை ஸ்ரீ. ச. ரங்காசாரியர் உபகார்யதர்சியாக ஏற்படுத்தப்பட்டார்.

(6) பிரிவின் காரியங்களை நடத்தவேண்டியதற்காக மாஸம் 1-க்கு ரூ. 10-க்குமேற்படாமல் ஒரு குமாஸ்தாவைக் கார்யதர்சி வைத்துக்கொண்டும் அவசியமான வரவு செலவுகளைச் செய்துகொண்டும் அந்த வரவு செலவு கணக்கை அடுத்த மீட்டிங்கின் அங்கீகாரத்திற்கு வைக்கவேணும்.

(7) நாளது வரையில் உத்தேசம் முதல்வகுப்பில் 25 - பெயரும், இரண்டாவதில் 25 - பெயரும், ஆக 50 - மெம்பர்களைச் சேர்த்திருக்கிற ச்ரமத்திற்காகக் கார்யதர்சிக்கு இந்தப் பிரிவின் அங்கத்தார்கள் வந்தநம் செய்தார்கள்.

12-2-11 }
கும்பகோணம். }

வே. கிருஷ்ணமாசாரியர்,
அக்ராஸநாதிபதி.

## திருக்குடந்தையில் நடந்த மகாசங்கம்.

ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய சபையின் தஞ்சாவூர்ப் பிரிவின் ஆத
ரவையில் நாளது மார்கழிமீ 12உ காலை 11-மணிக்குத் திருக்குடந்தையில் ஓர்
மகா சங்கம் சேர்ந்தது. திருக்குடந்தைக்கு ஸமீபத்திலிருக்கும் அநேக வித்
வான்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் வேலாமூர் கிருஷ்ணமாசாரியர், அக்
ராஸநாதிபதியாக இருந்தார். முதலில் திருக்குடந்தை காலேஜில் ஸம்ஸ்
க்ருத பண்டிதராயிருக்கும் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியர், ஆசாரியர்களுக்கு அவசி
யம் இருக்கவேண்டிய குணங்களைப்பற்றி உபந்யாஸம் செய்தார். அந்த உப
ந்யாஸத்தில் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீராகவசடகோப யதீந்த்ர மகா தேசிக
ஞகிற ஸ்ரீ பிள்ளைபாக்கம் ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்களைப்பற்றி
மிகவும் புகழ்ந்து, அவருடைய பூர்வாச்ரமத்தின் ஆஜாந சுத்ததையையும் ஸந்
யாஸியாக எழுந்தருளியிருந்தகாலத்தில் அவருடைய ஜ்ஞாநவைராக்ய ஸம்
பத்தையும் பற்றி ஏராளமாக திருஷ்டாந்தங்களை எடுத்துச் சொல்லி, உபந்யாஸத்
தை முடித்தார். அதற்குப் பிறகு ஸ்ரீ. தில்லியம்பூர் சக்ரவர்த்தியாசாரியர் பக்
தியைப் பற்றி ஓர் உபந்யாஸம் செய்து ஸ்ரீ பாகவதத்தில் பக்தி ஸம்பந்தமாக
இருக்கும் அநேக ப்ரகரணங்களை எடுத்து உபபாதநம் செய்தார். கடைசி
யாகத் திருக்குடந்தை வித்வாந் மா. சேஷாசாரியர் ஸ்ரீ பகவத் ராமாநுஜ
ஸித்தாந்த விஷயமாய் உபந்யாஸம் செய்தார். அந்த உபந்யாஸ ஸம்பந்த
மாக வர்ணாஸ்ரம தர்மங்களை அநுஷ்டிப்பது அவசியமென்றும், அவைகளை
ஸரியாக அநுஷ்டிக்காவிடில் பெரிய க்ஷோபத்திற்கு ஹேதுவான பகவதாஜ்
ஞாதிலங்கநம் ஏற்படுகிறதென்றும், இம்மாதிரியான தர்மவிபாகங்களைத்தான்
ஸ்ரீபகவத்கீதையிலிருக்கும் "யஜ்ஞார்த்தவதிவஜந்த்ரு:" இத்யாதி ஸ்லோ
கங்கள் சொல்லுகின்றனவென்றும் உபபாதித்தார். உபந்யாஸத்தின் அந்
தத்தில் ஆசார்யபுருஷர்கள் முநித்ரய ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஸந்நிதி சிஷ்யர்
கள் என்று வேறுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லாரும் எப்படியும் ஒரே
கூடஸ்தரைச் சேர்ந்தவர்களென்றும், தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தை அநு
ஷ்டிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களும் அம்மாதிரியாகவே நம்மைச்சேர்ந்தவர்களே
யொழிய வேறுபட்டவர்களன்று என்றும், ஸ்ரீ அஹோபிலமடம் எல்லாருக்கும்
ஆஸ்ரயணீயமான இடமென்றும் அநேக உபபத்திகளைக்கொண்டு விவரித்தார்.

பிறகு அக்ராஸநாதிபதி நடந்த உபந்யாஸங்களைப்பற்றி ஸ்லாகித்துவிட்டு
நாநாப்ரதேசங்களில் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸம்பந்தமாக ஏற்படும் ஸபை
களையும் அவைகளின் அபிவ்ருத்தியையும் பார்த்தால் இந்த ஸித்தாந்த ப்ர
வர்த்தகர்களின் கோரிக்கையை ஸமீபத்திலேயே பகவான் தலைக்கட்டுவரென்
றும், அதில் இந்தச் சபையும் ஒரு நிமித்தமாகும் என்பதை நினைக்க மிகவும்

ஸந்தோஷமாக இருக்கிறதென்றும் சொன்னார். பிறகு இந்தக் கூட்டம் கலையவே, சபையின் அங்கத்தார்கள் மாத்திரம் சேர்ந்து பின்வரும் தீர்மானங்களை ஏற்படுத்தினார்கள்.

(1) ஸ்ரீ அழகிய சிங்கர் முதலில் சேவை சாத்திக்கொண்டிருந்ததைப் பற்றித் துக்கித்திருந்த இந்தப்பிரிவின் அங்கத்தார்கள் எல்லாரும் இப்பொழுது ஸ்வாமி திருமேனி பாங்காக எழுந்தருளியிருப்பதைப்பற்றி மிகவும் ஆனந்த பரிதர்களாக இருப்பதை ஸவிநயமாக ப்ரகடனம் செய்கிறார்கள்.

(2) ஸபாத்யக்ஷரால் ஏற்படுத்தப்பட்ட பிரிவின் விதிகள் அங்கீகரிக்கப்பட்டன.

(3) பிரிவின் மானேஜிங் கமிட்டி மெம்பர்கள் கிருபைசெய்து தங்கள் தாலூகாவில் இருக்கும் ஸ்ரீ ஸந்நிதிக்கு ஸொந்தமான ஸொத்துக்களின் விவரத்தைக் காரியதரிசிக்கு எழுதி அனுப்பவேணுமென்று இதனால் பிரார்த்திக்கப்படுகிறது.

வி. ராஜகோபாலாசாரியர்,

சித்தூர்.
18-3-11.

சபையின் பொதுக் கார்யதர்சி.

---

ஒரு மஹான் பின்வருமாறு பகவானுடைய சேஷ்டிதத்தை அநுபவிக்கிறார். "ஹே க்ருஷ்ண, புண்யம் எது? பாபம் எது? என்று பரிசீலனம் செய்து பார்த்தால், உமக்கு எது ப்ரீதிகரமோ அதுதான் புண்யம்; உமக்கு அப்ரியமாக இருப்பதே பாபமென்று தோன்றுகிறது; அப்படிக்கில்லாவிட்டால் ஸ்ரீ பராஶரர் முதலானவர்கள் ராஸக்ரீடா கோஷ்டியில் "[illegible]" என்கிறபடி நீர் செய்த அக்ரமங்களை அத்யந்த பரிசுத்திகரமென்று படிப்பார்களோ'?

"யத்த்வத்ப்ரியம் ததிஹ புண்யமபுண்யமந்யந் நாந்யத்த்வயோரனுபவதி லக்ஷணமத்ர ஜாதா — யத்ப்ரியம் தவ ஹி யத்குலராஸ கோஷ்ட்யாம் தத்தத்ப்ரஸம் பராஶரமுநிர்ஜகாத." (கூரத்தாழ்வான் அருளிச்செய்த அதிமாநுஷஸ்தவத்தில் 53-வது ஶ்லோகம்.)

---

ஸ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி ப்ருந்தாவனம்.

"மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்கிற ப்ரகாரப்படி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனையே அநந்ய ஶரணர்களாக அடைந்திருக்கும் ஶிஷ்யர்களில் அநேகர், கொஞ்சகாலமாக ஸ்ரீ ஸந்நிதி விஷயங்களைப்பற்றி பஹுவித விஜ்ஞப்திகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். சென்னையில் ப்ரசுரமாகிவரும் 'சுதேச மித்ரன்', 'ஹிந்துநேசன்' என்னும் பத்ரிகைகளிலும் ஸ்ரீ ஸந்நிதி விஷயமான கடிதங்கள் அநேகம் வந்துகொண்டிருக்கின்றன. அந்த விஜ்ஞப்திகள் எல்லாவற்றையும் பர்யாலோசித்துப் பார்க்கும்பொழுது, அவைகளில் இரண்டு அத்யந்தம் முக்யமாகத் தோன்றுகின்றன. திருநாராயணபுரத்தில் ஸ்ரீ ஆதிவண்சடகோபஸ்வாமியின் ப்ருந்தாவனம் இருக்கிறதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அது மிகவும் ஶிதிலமான ஸ்திதியில் இருக்கிறதென்றும், பஹுகாலமாக அந்த ப்ருந்தாவனத்திற்கு ப்ரதி ஸம்வத்ஸரம் எழுந்தருளிக்கொண்டிருந்த செல்வப்பிள்ளை இப்பொழுது ப்ருந்தாவனத்தின் ஶைதில்யத்தை உத்தேசித்து எழுந்தருள்வதில்லையென்றும் மனஸ்ஸில் தாபங்கொண்ட அவ்விடத்திலுள்ள ஶிஷ்யர்கள் ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபனம் செய்ய, அவ்விண்ணப்பத்தைத் திருவுள்ளத்திற்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் அந்த ப்ருந்தாவனத்தை உத்தாரணம் செய்யும் பொருட்டு இரண்டாயிரம் ரூபாய் வரையில் செலவுசெய்யும்படி நியமித்ததாகச் சென்ற கார்த்திகை மாஸத்தில் கேள்விப்பட்டோம். அப்படி நியமித்ததைக் குறித்து ஸந்துஷ்டர்களாகச் சிஷ்யர்களில் அநேகர் தஞ்சாவூரில் சென்ற மார்கழி மாஸத்தில் நடந்த மஹாஸங்கத்தில் தங்களுடைய க்ருதஜ்ஞதையை ஸவிநயமாக ஆவிஷ்கா

ணம் செய்ததுடன், அந்த உத்தாரணத்தைச் சீக்கிரத்திலேயே பூர்த்தி செய்யும்படி ஸ்ரீ அழகியசிங்கர் நியமநமாகவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். நாளதுவரையில் எந்த அஸௌகர்யத்தாலேயோ அந்த விஷயமாக ஏற்பாடு ஒன்றும் செய்யப்படவில்லை.

ஸ்ரீகாரிய நியமநம்.

இரண்டாவது, ஸ்ரீ ஸந்நிதியின் லௌகிக வ்யாபாரங்களை த்ருப்திகரமாகப் பராமர்சித்துப் பார்க்கத் திறமையும் ஆர்ஜவமும் பொருந்திய மானேஜர் என்னும் அதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டுமென்று ஸபாப்ரகாரமாக ஸ்ரீ அழகியசிங்கர்ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற மார்கழி மாஸத்தில் சில சிஷ்யர்கள் ஸ்வாமியினிடம் நேரில் போய் இதுவிஷயமாக விஜ்ஞாபநம் செய்துகொண்டபொழுது, ஸ்ரீ அழகியசிங்கர் அதை உசிதமென்றே அங்கீகரித்து, 'தகுந்த வ்யக்தியை நிர்தேசித்துச்சொன்னால் நியமித்து விடுகிறோம்,' என்று கிருபைசெய்ததாகக் கேள்விப்பட்டோம். இப்பொழுது விசாரித்ததில், தகுந்த யோக்யதையோடு கூடின ஒரு வ்யக்தி ஸ்ரீஸ்வாமிக்குச் சிபார்சு செய்யப்பட்டாரென்றும், ஸ்ரீஸ்வாமி என்னகாரணத்தினாலோ அதற்குப் பிறகு அந்த விஷயமாய் ஒன்றும் கிருபை செய்யவில்லையென்றும் தெரியவருகிறது.

இவ்விதமாக சிஷ்யர்களின் விஜ்ஞாபநங்களுக்குச் செவி கொடாமல் ஸ்ரீஸ்வாமி ஸாபேக்ஷமாக எழுந்தருளியிருப்பது சிஷ்யர்களின் துரத்ருஷ்டம்தான். ஸந்நிதியிற் செய்த விஜ்ஞப்திகள் அத்யந்தம் ஸாரவத்துக்களாக இருந்தாலும், ஸ்வாமி உபேக்ஷியாமல் அவைகளைத் திருச்செவிசாத்தி உசிதாநுசித பர்யாலோசனைசெய்து, நியாயமாக அங்கீகரிக்கக்கூடியது எதுவென்று திருவுள்ளத்தில் படுகிறதோ அதை அங்கீகரித்து, எது அநுசிதமாகத் தோன்றுகிறதோ அதை ஸோபபத்திகமாய் நிரஸநம் செய்ததாகத் திருவாய் மலர்ந்தருளினால், விஜ்ஞாபநம் செய்துகொண்டவர்களுக்கு ஒரு ஆறுதல் உண்டாகும். "யுக்தியுக்தம் வசோ க்ராஹ்யம் பாலாதபி சுகாதபி" என்று சொல்லியிருக்கிறதன்றே.



மேலும் வாத்ஸல்யாதியான கல்யாணகுணங்கள் நிறைந்துள்ள ஸ்ரீ அழகிய சிங்கருக்கு இப்படி கிருபை செய்வது ஒரு ஆச்சரியமாகுமா? "யோ த்வம் ஸகலஜகந்நேதா நாதஸ்யாநாத நாதோ பவ" என்று ஜடாயுஸ்ஸுக்கு ஸாமீப்ய ப்ரதாநம் செய்யக்கூடிய ப்ரபாவமும், "ஜிதேஷ்வ ஸத்ரு: ஸாகாஸ்வஸ்தேகேந ஏகேந பாணா—த்ரிலோகஸாதகம்வேவ" என்று ஒரு பாணத்தின் அல்பவேகத்தால் அண்டபித்தியை பேதிக்கக் கூடிய சக்தியும், இத்யாதியான மஹாகுணங்கள் ஏராளமாக இருக்கையிலும், ஸ்ரீராமன் ஸீதா வியோக விவசராகவும், அவனுடைய சக்தி இன்னதென்று தெரிந்து கொள்ளாமல் ஸ்வாபேக்ஷயா அத்யந்தம் அல்ப சக்தியை உடைத்தாயிருக்கிற சாகாம்ருகமாகிற ஸுக்ரீவனை ஸஹாயமாகத் தேடினதும், வைராக்யனாக இருந்த அந்த ஸுக்ரீவனுக்குத் தான் சக்தன்தான் என்று நிரூபணம் செய்ய ஸுக்ரீவாதிகளை விதாரணம் செய்ததும், ஆச்ரிதனான அந்த ஸுக்ரீவனிடத்தில் உண்டான ஸௌசீல்யத்தாலன்றோ? இச்சையிருந்தால் தான் இருந்தவிடத்திலிருந்தே ராக்ஷஸஸம்ஹாரம்செய்வது துர்லபமா? அப்படிச்செய்துவிட்டால் ஸுக்ரீவாதிகள் கடைத்தேறுவது எப்படி? அதே மாதிரி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹாபிந்நராக ஸ்ரீ அழகிய சிங்கர் ஸர்வஜ்ஞாராகவும் ஸர்வசக்தராகவும் இருந்தாலும், ஆச்ரிதர்களுடைய தோஷங்களைப் பாராமல் மந்தர்களான சிஷ்யர்களை லாலித்து அவர் திருவடிகளை ஆச்ரயித்திருக்கும் சிஷ்யர்கள் பக்கல், அவர்களுடன் கலந்து பரிமாறி, அவர்கள் செய்யும் விஜ்ஞாபநங்களுக்குச் செவிகொடுத்து அவர்களை உஜ்ஜீவிக்கும்படி செய்வது ஸ்ரீ அழகிய சிங்கருக்கு அதிசயாவஹமன்றே? "நிஹீநோ ஜாத்யாவா ஸ்ருசகம்சவோவாப் ஸுவசிதோ வாசா நிர்த்தயசகஷ்டி ஸாத்ருணவிஸ்ராஷ்டாணா தஸ்மஜம்தம் தம் வஸ்யீக்ருஷ்ணவந்தா தாஸ்யேவீ ய:" என்கிறபடி ஜாதியினாலாதல் வ்ருத்தங்களாலாதல் நிஹீநனாகவும், குணவிஷயங்களில் அசேதநப்ராயனாக நாமக்ரஹணத்திற்குக் கூட அயோக்யனாகவும்

ஒருவன் இருந்த போதிலும், 'நம்மை ஆஶ்ரயித்து விட்டான்' என்கிறதை மாத்ரம் வ்யாஜமாகத் திருவுள்ளத்திற்கொண்டு, அந்த ஜநத்தை, "த்விஷோகம் வதநீயாநாஞ்சைவ ஹாராமாஶ்ரீவ வம வதே:" என்று ஸாக்ஷாத் அநந்தனுக்குத் துல்யமாக ஸ்ரீமதவாரு ஸாவிக்கிறதுபோல ஆஶ்ரிதர்களிடத்தில் இருக்கும் தோஷத்தை மறந்து, அவர்கள் செய்யும் விஜ்ஞாபநங்கள் வைராக்யத்தையாலே ஏற்பட்டிருந்தபோதிலும் அவைகளை ஸாமந்யமாக அங்கீகரித்து ஸ்ரீ அழகியசிங்கர் சீக்கிரத்தில் பூர்ணக்ருபை செய்தருள்வரென்று நம்புகிறோம்.

திருக்குடந்தை மகாசங்கம்.

சென்ற மாசிமீ 29உயில் திருக்குடந்தையில் ஓர் ஸ்ரீ வைஷ்ணவ மகா சங்கம் சேர்ந்தது. அதில் நடந்த விஷயங்களை அப்பொழுது அங்கே போயிருந்த சபையின் பொதுக் காரியதரிசி ஸங்க்ரஹமாக எழுதி அனுப்பியிருக்கிறார். அது இந்த ஸஞ்சிகையில் அச்சிடப் பட்டிருக்கிறது. ஸ்ரீ பிள்ளைபாக்கம் ஸ்வாமியின் திருநக்ஷத்ரம் அந்தக் காலத்தில் சேர்ந்து வந்தது பெரியதொரு விசேஷமே. திருக்குடந்தை தேவஸ்தாநம் மானேஜர் ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரியர் மிகவும் ஶ்ரமத்தை வஹித்து அந்தத் திருநக்ஷத்ரத்தை விசேஷமாக நடத்தினதுடன், இந்தச் சங்கத்தையும் நிஷ்பத்திக்குக் கொண்டுவந்ததாகத் தெரிய வருகிறது. இப்படிச் செய்த விஷயத்தில், ஶிஷ்ய ஸபையின் எல்லா அங்கத்தார்களுடைய க்ருதஜ்ஞதைக்கும் அவரே பாத்ரமாகிறார். பெரிய வித்வத் ஸம்வும் சேர்வதும், விசேஷித்த உபந்யாஸங்கள் நடப்பதும், ஸபையின் அபிவிருத்திக்கு ஸமமான ஹேதுக்கள். இம்மாதிரியாகவே இதர இடங்களிலும் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 18 MAY 1911 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்ஸு சித்திரைமீ. [ஸஞ்சிகை 3.

## ஸபாத்யக்ஷர் உபந்யாஸம்.

(தொடர்ச்சி.)

11. இப்படி யுக்திஸஹமாயும் ஶாஸ்த்ரஸம்மதமாயும் இருக்கும் நம்முடைய ஸித்தாந்தத்தை அநுஷ்டாநபர்யந்தமாய்ச் செய்து கர்த்தவ்யாம்ஶங்களைத் தெளிவாய் நிஷ்கர்ஷித்தது, ஸ்ரீமத்பகவத்கீதை. இதில் தர்மயுத்தத்தில்நின்றும் பந்துப்ரீதியால் நிவ்ருத்தனான விஜயனை, பரமகாருணிகனான பகவான், யுத்தமே அக்காலம் அவனுக்குக் கர்த்தவ்யமான தர்மமென்றும், அது செய்யாவிட்டால் தோஷமுண்டாகுமென்றும் போதித்து, அதன் மூலமாய் லோகங்களுக்கு வர்ணாச்ரம தர்மங்கள் அவஶ்ய கர்த்தவ்யங்களென்றும், பலாபிஸந்தியில்லாமல் ஈஶ்வரார்ப்பணம்செய்து செய்யப்படும் ஒவ்வொருகர்மமும் பந்தகமாகாதென்றும், அதுவே கர்மயோகமென்றும், தத்வஜ்ஞாந பூர்வகமாகச் செய்யப்படும் கர்மயோகம் பக்தியோகத்துக்கு உபாயமென்றும், அந்தப் பக்தியோகம் அவிச்சின்னமாயும் அதிப்ரியமாயும் செய்யப்படும் பகவத்த்யாநரூபமென்றும், இது யாவஜ்ஜீவம் அநுஷ்டேயமென்றும், செய்யச்செய்ய ஜ்ஞாந வைஶத்யமும் ஸத்வோத்ரேகமும் பாபநாஶமும் உண்டாகி ஸம

வத்ஸாக்ஷாத்கார ஸத்ருஶமான ஆநந்தத்தை இந்த லோகத்திலேயே கொடுத்து நிஶ்ஶேஷமான கர்மக்ஷய முண்டானவுடனே மோக்ஷத்தைக் கொடுக்குமென்றும் உபதேசித்தார். மிகவும் ஶ்ரேஸாத்யமான பக்தியோக பர்வாக்களை எப்படி நடக்கப்போகிறோமென்று துக்கித்த அர்ஜுநனுக்கு ஶாஸ்த்ர மத்யத்தில் தன் அவதார ரஹஸ்யத்தையும் ஸ்வரூபஸ்வபாவங்களையும் உபதேசித்து விஶ்வரூப ஸாக்ஷாத்காரத்தையும் அநுக்ரஹித்து, கடைசியில் ஸமவச்ஶரணாகதியே ஸர்வோபாய விரோதிகளையும் போக்கக்கூடிய ஸுஹ்ருஹ்ருமென்று சொல்லித் தேற்றினர். உபநிஷத் என்று வ்யவஹரிக்கப்படுகிற இந்த கீதாஶாஸ்த்ரம் ஸார்வஜநீநமாக ஆதரிக்கப்பட்டு நமது தேசத்தில் பண்டித பாமர ஸாதாரணமாய் எல்லாரிடத்திலும் புஸ்தகரூபமாய் ஹஸ்தகதமாயிருப்பதுடன் பாஶ்சாத்யவித்வான்களும் மதப்ரவர்த்தகர்களும் இதை பாஷாந்தராநுவாதங்கள் மூலமாயும் கீர்வாண வ்யுத்பத்தியுள்ளவர்கள் ஸாக்ஷாத்தாயும் நன்றாய்ப் பரிசீலித்து அதன் குணதோஷங்கள் விஷயமாய் எவ்வளவோ க்ரந்தங்கள் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். சிலர், இந்த ஶாஸ்த்ரத்தின் லளிதமான சப்தரசனையையும் ப்ராஹ்மணர்களின் ஶ்லாகையையும் கர்மங்களின் ப்ரஶம்ஸையையும் உத்தேசித்து இதைப் பௌத்தாதி மதங்களுக்குப் பிற்பட்ட காலத்தில் ப்ராஹ்மண்யத்துக்கு அநுகூலமாய் ஸாங்க்ய யோக மதங்களை ஒருவாறு அவலம்பித்து ஏற்பட்ட க்ரந்தமென்று ஊஹிக்கிறார்கள். சிலர், பக்தி ப்ரதாநமான இந்த ஶாஸ்த்ரத்தைக் கிறிஸ்துமதத்துக்கு ஸச்சாயமென்றும், அந்த மதத்தின் ஆரம்பத்துக்குப்பிறகு அந்த மதப் பிரவர்த்தகர்களிற் சிலர் நம்தேசத்துக்கு வர அவர்களால் இந்தச் சாஸ்திரத்தின் ப்ரதாநாம்ஶங்கள் நமது தேசத்தார்க்குத் தெரிந்தன என்றும் உபபாதிக்கிறார்கள். சிலர், க்ஷத்திரியரான புத்தி ஸௌக்ஷ்மமுள்ள க்ருஷ்ணனென்கிற ராஜா ஒருவர் இருந்திருக்கக்கூடுமென்றும், அவர் சேஷ்டிதங்கள் தத்காலம் விஸ்மயஜநகமாயிருந்ததனால் ஜநங்களுக்கு அவரிடத்தில் விஶ்வாஸமுண்டாயிற்றென்றும், பின்பு அவரிடத்தில் ஜநங்கள் அவதாரத்வத்தை ஆரோபித்து அவருக்குக் கௌரவமுண்டாக்க வேண்டியதற்காக அர்ஜுநனுக்கு



ஶாஸ்த்ரோபதேஶம் பண்ணினதாக வைதிகர்கள் கல்பித்தார்கள் என்றும் அநுமாநம் செய்கிறார்கள். மற்றும் சிலர், இந்தக்ரந்தம் பாரதகாலத்துக்கு முந்தியே ப்ரவர்த்தித்ததென்றும், பாரதகர்த்தா இதைத் தமது க்ரந்தத்தில் கொஞ்சம் ஸங்கதியைக் கல்பித்துச் சேர்த்துவிட்டார் என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர், இதில் பூர்வாபர விரோதங்கள் பஹுளமாய் இருப்பதால் ஆபாதரமணீயந்தானென்று சொல்லி, "[illegible]" என்றும், "நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே" என்றும் சில இடங்களிலும், "ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே" என்றும், "ஸர்வம் ஜ்ஞாநப்லவேநைவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி" என்றும் வேறிடங்களிலும் இருக்கிறதைக்கொண்டும், "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" என்று ஓரிடத்திலும் "நமே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:" என்று மற்றோரிடத்திலும் இருப்பதைக்கொண்டும், இன்னும் சில உதாஹரணங்களாலும் தாங்கள் சொன்ன விரோதங்களை ஸமர்த்திக்கப் பார்க்கிறார்கள். வேறு சிலர், இந்த ஶாஸ்த்ரோபதேஷ்டாவாகிய க்ருஷ்ணன் கேவலம் மநுஷ்யர்களில் யோகஸித்தி யடைந்த ஒரு மஹாத்மாவென்றும், அவர் தம்மை ஈஶ்வரனாயும் ப்ராப்யனாயும் சொல்லும் இடங்களில் தம்மை ஸர்வேஶ்வரனுடன் ஐக்யபுத்திபண்ணி அப்படிபேசுகிறாரென்றும், அவரும் க்ரமஶ: விஶேஷஜ்ஞாநம்ஸம்பாதித்து மேன்மேல் உத்க்ருஷ்டமான பதவியை அடையவேண்டிய ஒரு அதிகாரிபுருஷனாகிய சேதநமாத்ரமே என்றும் ஸாதிக்கிறார்கள்.

12. இப்படிப் பலவாறாகப் பாஶ்சாத்யர்களுடையவும், அவர்களபிப்ராயங்களில் பூர்ண விஶ்வாஸம் வைக்கிற நம்மைச் சேர்ந்தவர்களுடையவும் பகவத்கீதை விஷயமான யுக்திகளை நான் விவரித்தது, அவைகள் ப்ரபலமான பூர்வபக்ஷங்கள் என்றாவது, அவைகளுக்குத் தத்காலமே ஸமாதாநம் சொல்வதாய் உத்தேசித்தாவது செய்த காரியமன்று. இந்த யுக்திகள் ஏற்பட்டிருப்பதும், அவைகள் ராஜபாஷை அப்யஸிக்கும் மாணவர்களிடத்தில் விசேஷமாய்ப் ப்ரசாரமாயிருப்பதும், அதனால் நமது ஸித்தாந்தங்களிலும் [illegible]

னும் அநாதரம் உண்டாகக்கூடியதாயிருப்பதும், நமது ஸித்தாந்தத்
தைப் பாதுகாக்கவேண்டிய கடமையுள்ள ஶாஸ்த்ரஜ்ஞர்களான
பண்டிதர்களுக்கு விசேஷமாய்த் தெரியாதென்று எண்ணி அவை
களை விவரித்தேன். நம் ஆசார்யர்கள் பரபக்ஷ ப்ரதிக்ஷேபார்த்த
மாக எவ்வளவோ இதரமத க்ரந்தங்களைப் பரிசயம் செய்தார்கள்.
ஆதுநிகர்கள், இதரமதங்களின் ரீதிகளை விசாரித்தால் தோஷமென்
றும், அதனால் நமக்குக் கர்த்தவ்ய மொன்றுமில்லை யென்றும் ப்ர
மித்திருக்கிறார்கள். இது சரியன்று. மதங்களும், வ்யாயகங்கள்
ஏற்பட்டால் ஸூர்யரஶ்மிபோல் விஸ்தரிக்கிறதை ஒழிந்து மாலின்
யத்தை அடைந்து விடும். பண்டிதர்கள் விசேஷமாய் உபந்யாஸங்
கள்செய்து லளிதமான நடையில் நமது ஸித்தாந்தத்தின் ஸாராம்
ஶத்தைப் போதிப்பது அவஶ்யமான காரியம். ராஜபாஷை அப்ய
ஸித்தவர்களில் கீர்வாணபாஷை தெரிந்தவர்களும் ஸுலபமாய் மத
க்ரந்தங்களை அறிவது ஸாத்யமில்லை. அவர்கள் லௌகிக வ்யா
பாரங்களை விட்டுச் சிலகாலம் ஶாஸ்த்ரபாடத்துக்கு அவகாஶம்
ஏற்படுத்திக்கொண்டாலும் தமக்கு வேண்டிய அம்ஶங்களில் ஜ்ஞா
நம் ஸம்பாதிப்பதே பெரியகாரியமாகிவிடுவதால், பரோபதேஶத்
துக்கு உசிதமான ஸாமர்த்தியத்தை அடைவது துர்லபம். ஆகை
யால், மதப் பிரவர்த்தநமும், இதர மதங்களின் ஆக்ராந்திநிவர்த்
தநம் செய்வதும், நமது ஶாஸ்த்ரஜ்ஞர்களான வைதிகர்களே
செய்யவேண்டிய காரியம். அப்படி அவர்கள் செய்யாதவரையில் நம்
தேசத்தில் ஆஸ்திகதை சீக்ரமாய்ச் சிதிலமாய்விடும். இதரமதஸ்
தர்கள் நமது பாலர்களுக்குத் தங்கள் மதவிஷயமாய்ச் செய்யும்
உபதேசங்கள் உடனே ஏதி ரஹஸ்யமாய் மதாந்தரப்ரவேஶத்தை
உண்டுபண்ணிவிட்டால், நாம் கடைசியில் ஸங்கதி தெரிந்து பண்ணும்
பரிதாபங்கள் எல்லாம் மதஜல ஸேதுபந்தமாய்ப் பரிஹாஸ்ய
மாய் முடியும். நாம் நம்மால் இயன்றமட்டில் நமது பாலகர்
களுக்கு யுக்தமான தர்மோபதேஶங்களையும் அவரவர்கள் குலக்ர
மாநுகுணமான ஆசாரங்களையும் போதித்து, அவைகளில் உறுதி
யுண்டாக்குவதே உசிதம். இதற்கு ஜ்ஞாநமும் உபந்யாஸ
சக்தியுமுள்ள பண்டிதர்கள் ஸ்வக்ருத்யமாய் நிஶ்சயித்துப் பல



இடங்களிற்போய் ஹிதப்ரவர்த்தநம் பண்ணுவதுதான் உபாயம்.
அப்பொழுதுதான் நான் விஸ்தரித்துச்சொன்ன நமது ஸித்தாந்
தத்தின் குணபாகங்கள் வெளியாகி ஸர்வருக்கும் விஶ்வாஸத்து
டன் ஆதரத்துக்கு ஹேதுவாகும்.

13. இவ்விதமான மதப்ரவர்த்தநத்தையும் மதரக்ஷணத்தை
யும் உத்தேசித்தே, பரஸ்பரவைமத்தியங்கள் ஏற்பட்டு விரோதமான
உபதேஶங்கள் செய்யாதபடி எல்லாத்தேசங்களிலும் மடங்கள் ஏற்
பட்டிருக்கின்றன. அந்த மடங்களின் அபிப்பிராயங்களுக்கு ஸம்ப்ர
தாயமென்று பேர்வழங்கிவருகிறது. ஆசார்யபரம்பரை தொடர்
ச்சியாய் வந்தால் உபதேசங்கள் பிந்நமாகாது என்று தாத்பரியம்.
மதங்களுக்கு முக்கியமானவையும் விஶ்வாஸத்துடனும் கௌரவத்
துடனும் அறிந்து தரிக்கவேண்டியவையுமான அர்த்தங்களுக்கு,
ரஹஸ்யங்களென்று பேரிட்டிருக்கிறார்கள். அவைகளை ஆசார்ய
முகமாய் க்ரஹித்தால் வித்யை ஸாயிஷ்டமாக ஆகுமென்று ஶ்ருதி
சொல்லுகிறது. ஒரு ஆசாரியபரம்பரையை விட்டு இதர பரம்ப
ரையை ஆஶ்ரயிப்பதும் தோஷாவஹமென்று பெரியவர்கள் நிந்திப்
பார்கள். இதற்கு ஹேது ஆசார்யர்களிடத்தில் கௌரவம் குறைந்
தால் வித்யையில் ஆஸ்தை குறையும் என்பதும், அதனால் தத்வ
ஹித புருஷார்த்தங்களைத் தெரிந்துகொள்ளாமற்போக ஸம்பவிக்கு
மென்பதும்தான். இதை உத்தேசித்துத்தான் ஆசார்யப்ரபத்தி
யே விஶேஷமாய்ச் சிலரால் சொல்லப்படுகிறது. நமது அஹோபில
மட ஸம்ப்ரதாயம் ஏற்பட்டுச் சுமார் 500 வருஷகாலமாயும் ஆசார்ய
ஶிஷ்ய பரம்பரை தொடர்ந்துவருவது, இந்த மடத்தின் வழக்கத்
தில் அந்யஶிஷ்யர்களை ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளப்பண்ணும
லிருப்பதனால் தான். நம் ஸம்ப்ரதாயத்தை விருத்திசெய்து விஶேஷ
மாய் ஜ்ஞாதாக்கள் காலக்ஷேபாதிகள் செய்துவந்தால்தான் அந்
தந்தச்சமயத்தில் புதிதாய் ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளப்பண்ணும்
படி அநேகம் பேர்கள் யோக்யர்களாக ஏற்பட்டு, அவர்களுக்குள் வி
ஶேஷகுணங்களைப் பராமர்சித்து வ்யக்திநிர்ணயம் செய்ய ஸம்பவிக்
கும். முற்காலங்களில் விஶேஷமாய் யோக்யர்கள் ஸம்பிரதாயத்தில்
இருந்தும் கலகங்கள் இல்லாமல் ஸ்வாமிகள் ஏற்படுத்திவந்ததற்குக்

ஸாதனம், அந்தக் காலங்களில் ஸ்வாமிகளும் ஶிஷ்யர்களும் ஸம
ஆஸ்திகர்களாய் ஸமுதாயஹிதத்தையே கருதி வந்ததனால் இவ்வம்
ஶயமாய் யார் மிகவும் அர்ஹரோ அந்தஸ்வாமியை எழுந்தரு
ளப்பண்ண எல்லாரும் ஸம்மதித்து வந்தார்கள்.

14. நம் மடத்துக்கு அதிபதிகளான ஸ்வாமிகளை, விஶேஷ
மாய் ஸம்ப்ரதாயப்ரவர்த்தநம் செய்யும்படிக்கும், ஸதஸ்ஸுகள்
அடிக்கடி சேர்க்கும்படிக்கும், வித்வான்களுக்குத் தக்க ஸம்மாநங்கள்
செய்யும்படிக்கும், பாடசாலைகள் ஏற்படுத்தி வித்யார்த்திகள் நிர்ப்
பயராய் ஶாஸ்த்ரங்கள் அப்யஸித்துக் காலக்ஷேபாதிகளுக்கு யோக்
யதை ஸம்பாதிக்கும்படிக்கும் செய்ய ப்ரார்த்திக்கவேண்டியது முக்
கியம். மேலும், பலவிடங்களில் ஶிஷ்யர்கள் பஹுவாயிருப்பதா
லும், ஶக்தராயிருந்தாலும் ஸ்வாமி அடிக்கடி எல்லா இடங்களி
லும் ஸஞ்சாரம்பண்ண அஶக்யமானதால், ஸந்நிதிக்கு மடங்கள்
ஏற்பட்டிருக்கும் இடங்களிலும், ஶிஷ்யர்கள் விஶேஷமாயிருக்கும்
இடங்களிலும், அப்போதப்போது ஸம்ப்ரதாயத்துக்கு அவஶ்யமான
காரியங்களைத் திருப்தியாக நடப்பிக்கும்படி க்ருஹஸ்தர்களையாவது
ஸந்யாஸிகளையாவது வித்வான்களாயும் ஶிஷ்டர்களாயும் விரக்தர்
களாயும் ஏற்பாடுசெய்யவேண்டியது அவஸியம். அப்படி ஏற்படு
கிறவர்கள் தத்காலம் மடாதிபதிகளுக்கு அநுகூலர்களாகவும், அடிக்
கடி தங்கள் க்ருத்யங்கள் விஷயமாய் நியமநங்கள் பெற்று வர்த்திக்
கிறவர்களாகவும் ஏற்படவேணும். அவஶ்யமானால், ஒரே இடத்
தில் ஒருவரை விஶேஷகாலம் வைக்காமல் அடிக்கடி மாற்றலாம்.
இப்படிப்பட்டவர்களில் சில பேர்களாவது முக்கியமான ஸ்தலங்
களில் ஸந்யாஸிகளா யிருந்தால், விஶேஷமாய் ஶிஷ்யர்கள் சேரு
கிறதற்கும் உபதேஶங்கள் பெறுகிறதற்கும் ஸௌகர்யமாயிருக்கும்.
ஒருகால் அழகிய சிங்கருக்கும் ஶிஷ்யஜநங்களுக்கும் யுக்தமாய்த்
தோன்றினால், அவர்களையே ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளப் பண்ணு
வது உசிதமாகவும் ஏற்படும். ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும்
ஒரு ஸ்வாமிக்குப் பலபேர்கள் பவ்யர்களாய்ப் பல இடங்களிலிருந்து
ஸம்ப்ரதாயப்ரவசநம் செய்துவந்தால், இந்த ஸம்ப்ரதாயம் மிக
வும் செழிப்படைந்து உஜ்ஜ்வலதரமாய் ஆகுமென்பதற்குச் சந்தேக



மில்லை. அப்படி செய்வதில், ஶிஷ்யர்களின் முயற்சியும் த்ருடமான
ஸங்கல்பமும் ததநுகுணமான ஐகமத்யமுமே வேண்டியவை. இந்
தச் சபையில் விஶ்வஸித்து இதை விஸ்தரிக்கச்செய்து அடிக்கடி
உத்தர தக்ஷிண தேசத்திய ஶிஷ்யர்கள் பரஸ்பரம் ஸஹ்ருதயர்க
ளாகிச் சேர்ந்து ப்ரயத்நம்செய்தால் முடியாதகாரியம் ஒன்றுமில்லை.
மடத்தின் த்ரவ்யங்களைக் க்ரமமாய் உபயோகிப்பதில் எல்லாருக்
கும் அபிஸந்தி இருக்கும்பக்ஷத்தில் தேஶப்ரயுக்தமான மாத்ஸர்
யம் வரவேண்டியதில்லை.

15. நமது ஸித்தாந்தத்துக்கு, முக்கியமாய் மோக்ஷோபா
யம் - ஶரணாகதி அல்லது ப்ரபத்தி. இதை, ப்ரஹ்ம ஸூத்ரத்
தில் உபாதித்திருக்கிற ப்ரஹ்மவித்யைகளைப்போல ஸ்வதந்த்ரமாய்
மோக்ஷோபாயம் என்று ஆசாரியர்கள் ஶ்ருதி ஸ்ம்ருதிகளைக்
கொண்டும், பகவத் ஶாஸ்த்ர வசநங்களைக்கொண்டும் நிர்த்தார
ணம் செய்திருக்கிறார்கள். இதில் ஸ்வரூபமும், அங்கங்களும், ப்ர
மாணங்களும், நம் ஶாஸ்திரங்களில் நன்றாய் விவரிக்கப்பட்டுள்
ளன. இந்த ஶரணாகதி தர்மம், ஸர்வவர்ணாஶ்ரமங்களுக்கும்
ஸாதாரணம். இது, அநாதியாய்ச் சிலரால் மாத்திரம் அநுஷ்
டிக்கப்பட்டுவந்து, பகவான் ராமாநுஜனால் இதற்கு ப்ரயோகம்
க்ரந்தரூபமாய் ஏற்பட்டுச் சிறப்புப்பெற்றது. பின்பு நிகமாந்த
தேஶிகன் இதுவிஷயமாய் அநேக க்ரந்தங்களைச் செய்து இதை
நிலைநிறுத்தியிருக்கிறார். இது, ஸக்ருத்ப்ரார்த்தனையால் ஈஶ்வ
ரன் மோக்ஷபர்யந்தம் அநுக்ரஹிக்கிறான் என்கிற ஸுலபமான
உபாயமாயும், ஸர்வஜந ஸாதாரணமாயு மிருக்கிறது. இதன் அங்
கங்களில் மஹாவிஶ்வாஸமே முக்கியமானது. இந்த உபாயத்தை
லபிப்பிக்கச் செய்வதையே நம்முடைய ஆசார்யர்கள் முக்கிய ஆசார்ய
க்ருத்யமாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

16. இந்த உபாயத்தைப் பூர்ணமாய் நாம் அநுஷ்டாநத்தி
லுங் கொண்டுவந்தால், நாம் கடைத்தேறுவதோடு கூட, நம் மதத்
தைச் சேர்ந்திருந்தும் நம்மால் அநுகூலிக்கப்படாமல் விட்டுவிடப்
படுகிற சதுர்த்த பஞ்சம வர்ணத்தார்களும் நல்லநிலைக்கு வர இடமே
ஸுகமாகும். இந்த வர்ணத்தார்கள் வேதத்துக்கு அதிகாரிகளாய்

இராவிட்டாலும், புராணங்களுக்கும் ப்ரபத்தி அநுஷ்டானத்துக்கும் அதற்கு வேண்டிய ஜ்ஞானோபதேசத்துக்கும் அதிகாரிகள் தான். ஒரு சரீரத்தில் எல்லா அவயவங்களும் பாடவத்தோடு இருந்தால்தான் அந்த சரீரம் கார்யங்களில்ப்ரவ்ருத்திக்க யோக்யமாகும். சதுர்த்த பஞ்சம வர்ணத்தார்கள் நம்மவர்களல்லர் என்று அவர்களை நாம் அலக்ஷ்யம் செய்தால் நம்மிடம் அவர்களுக்கு த்வேஷம் உண்டாகி நமக்கு விரோதம் செய்வதே ஸ்வதர்மமாய் எண்ணுவார்கள். "[illegible]" என்றும், "[illegible]" என்றும் நம் சாஸ்த்ரங்கள் முறையிடுவதை நாம் கவனிக்கவேண்டும். ஸச்சூத்ரர்கள் ப்ராக்காலங்களில் ப்ராஹ்மணாதிகளுக்கும் அந்ந ஸம்ஸ்கர்த்தாக்களாயிருந்தார்கள் என்பது ஆபஸ்தம்பாதி ஸூத்ரங்களில் ப்ரஸித்தம். இந்தத் தக்ஷிணதேசத்துக்கு வடக்கே இருக்கும் தேசங்களில் சூத்ர சண்டாளர்களிடத்தில் ப்ராஹ்மணர்கள் இவ்வளவு வைமுக்யத்தைப் பாராட்டவில்லை. நாம் இந்த விஷயத்தில் அநாதரம் செய்யாமல் மடத்தின் ஸம்ப்ரதாயத்தில் ஏற்படக்கூடிய சூத்ராதிகள்விஷயத்தில் ப்ரீதியைச் செலுத்தவேண்டும்.

17. பஞ்சமர்கள்விஷயத்தில் நாம் மிகவும் அபராதிகளாய் இருப்பதாய்த் தத்காலம் அகிலர்களும் அபிப்ராயப்பட்டு, அதில் நாம் செய்யவேண்டிய விஷயங்களுக்காகத் தகுந்த பிரபுக்கள் சேர்ந்து "ஹீந ஜனங்களைப் பரிபாலிக்கிற ஸங்கங்கள்" என்று பேரிட்டு அநேக ஸங்கங்கள் சேர்த்து விசேஷ உபந்யாஸங்கள் செய்து வருகிறார்கள். இந்தப் பஞ்சமர்கள் நமக்கு அத்யந்தம் வ்யவஸாயாதிகளுக்கு உபகாரிகளாய் இருந்தும், அவர்களுக்குப் படிப்பு விவேகம் ஈச்வரபக்தி முதலியவைகளை நாம் போதிக்காததாலும், சிலர்க்குச் சரியான வ்ருத்தியை நாம் கற்பிக்காததனாலும் இதரதேசங்களுக்குப் போய்க் கஷ்டப்படுகிறதும், சௌர்யம் முதலான ஹேயகார்யங்களைச் செய்து ராஜதண்டனைக்கு உள்ளாகிறதும், மதாந்தரங்களில் ஏதோ ஜீவனத்துக்கும் கௌரவத்துக்கும் ஆஸ்பதமிருப்பதாய் எண்ணி விசேஷமாய் அவைகளில் ப்ரவேசிப்



பதும், அவர்கள் தத்காலம் அநுஷ்டிக்கிற கார்யங்களாக இருக்கின்றன. இப்படி அவர்களை விடுவது நம்மை ஸ்வார்த்தஹானிக்கும் ப்ராணி ஹிம்ஸாதோஷத்துக்கும் உட்படுத்துகிறபடியால், இது விஷயத்தில் நம்மால் இயன்றமட்டில் பராமர்சிக்க வேண்டியது முக்யமான காரியம். வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் "[illegible]" என்று உத்கோஷித்திருப்பதால், நம் ஆசார்ய ஸம்ப்ரதாயத்தை அவர்களை அடையச்செய்வது நமக்கு அபஸித்தாந்தமும், அக்ருத்யமுமன்று. இதனால், ஜாதி நியமங்களை நாம் விடவேண்டியும் ஆகாது. தேவாலயங்களிலும் உத்ஸவங்களிலும் நாம் அவர்களை ஸ்பர்சித்தாலும் தோஷமில்லையென்று சாஸ்த்ரமும் அநுஷ்டானமும் இருக்கிறது. இதர ஸமயங்களிலும் த்ருணகாஷ்டங்களைப் பார்க்கிலும் ஹேயமாய் அவர்களை எண்ணாமல் நமது கடமையை அவர்கள் விஷயத்தில் அநுஷ்டிக்கவேண்டும். அவர்களும் பரமாத்மாவுக்கு சரீர பூதரென்பதையும், ஸ்ரீ திருப்பாணாழ்வார் அவதரித்த ஜாதியார் என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

18. இப்படி ப்ரஸக்தாநுப்ரஸக்தமாய் பஹு விஷயங்களைத் தேவரீர்களுக்குத் தெரியாததுபோலவும் எனக்கு விசேஷ வக்தவ்யமிருப்பதுபோலவும் எண்ணிப் ப்ரஸ்தாவித்துத் தேவரீர்கள் காலத்தை அபஹரித்ததற்கு க்ஷமிக்கவேணும். இந்த ஸபையை ஆதரித்து அதிற் சேர்ந்து நமது மடத்தை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்து நமது ஸம்ப்ரதாயத்தைப் பரவச்செய்ய வேண்டியதென்கிற விஷயத்தில் எனக்கு இருக்கும் ஆஸ்தையே என்னை இவ்வளவுதூரம் விஸ்தரித்துப் பேசும்படி செய்தது. இதை இங்கு எழுந்தருளியிருக்கும் ஒவ்வொருவரும் ஸ்வக்ருத்யமாய் நினைத்து அதற்கு அநுகூலமான வியாபாரங்களைச் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். இதுவரையில் என் வசனங்களை க்ருபைசெய்து ச்ரவணம் செய்ததற்கு என்னுடைய க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபநம் செய்கிறேன். இந்த ஸங்கத்தின் மற்றைக் காரியங்களை நிறைவேற்றி வைக்கும்படி அகிலரையும் ப்ரார்த்திக்கிறேன். எல்லாவற்றிற்கும்

நியந்தாவான ஈஸ்வரனே, ஐகமத்யத்துடன் நம் தீர்மானங்கள் ஏற்படவேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறேன்.

நாநாஸூரிவிஹரிவஸ்யாத்க்ஷிதாநாம் யதீநாம், வதயாமந்நாயாதாந் பஞ்சமாவாந் ஹரிதேஷா । நிஜபலியந்த்வேதாந்த ஸ்ராவணோபோஸ்யன, நிமஞ்சிவாராந்தம் ரக்ஷதாஸீமசேவ: ॥

---

ஸ்ரணாகதி.

---

காட்டுத்தீப் போன்ற ஸம்ஸாரத்தில் அகப்பட்டுத் தபித்துக்கொண்டிருக்கும் நமக்குத் தப்பும் வழி ஏதாவது உண்டோ? எந்த உபாயத்தை அநுஷ்டித்தால் நல்ல கதி பிறக்கும்? என்று பல விதமாக ஆலோசித்து, "அநுஜோ ராவணஸ்யாஹம் தேநசாப்யவமாநித:—த்யக்த்வா புத்ராம்ஸ்ச தாராம்ஸ்ச ராகவம் ஸரணம் கத:" என்கிறபடி பகவானுடைய திருவடிகளையே ஸரணமாக அடைவதுதான் உபாயம்; மற்றெதுவும் செய்ய எவ்விதத்திலும் சக்தியற்றிருக்கிறோம் என்பதை ஓர் மஹான் பின்வருமாறு விளக்குகிறார்:—

"தாவதார்த்திர்பயந்வாநமு துஹ்ய்யாதம் த்ஸஹ்யம் தமந்தமபயம் தமந்த தேவ-ஸ்யாதம் வ்யாதார்வயாதம் மநீஸமீஸ ஹஸ்தீஸ துஷ்டதுஷ்டதவ ஷிஹிராஜயா:" (கூரத்தாழ்வான் அருளிச்செய்த வரதராஜஸ்தவத்தில் கூஉ - வது ஸ்லோகம்).

ஹே ஸ்வாமிந் அநந்த! ஆத்யாத்மிக ஆதிதைவிக ஆதிபௌதிகங்களாகிற மூன்றுவித தாபங்களே ஓர் பெரிய காட்டுத்தீ; அதனால் தவிக்கப்பட்டு மோஹத்தை அடைந்து இந்தக் கஷ்டத்திற்கு முடிவு எப்பொழுது என்பதை அறியாமலும், ஸ்திதிக்காவது ப்ரவ்ருத்திக்காவது நிவ்ருத்திக்காவது அசக்தனாகவும் புழுத்துடிப்பதுபோலத் துடித்துக்கொண்டிருக்கும் என்பேரில் உம்முடைய கடாக்ஷங்களாகிற அம்ருத மழையைப் பெய்து நாலுபக்கத்திலும் நான் குளிரும்படி நீரே க்ருபை செய்யவேண்டும்—"ஜீவே துஃகாகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே" என்கிறபடி என்னைக் கடாக்ஷிக்க வேணும்.

"குளித்து மூன்றனலையோம்புங்குறிகொளந்தணமைதன்னை
ஒளித்திட்டேனென்கணில்லை நின்கணும் பத்தனல்லேன்;
களிப்பதென் கொண்டு நம்பி கடல்வண்ணா கதறுகின்றேன்"

என்று தொண்டரடிப்பொடி யாழ்வார் கதறினான்றோ?

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
18 MAY 1911
MADRAS.

# கபோதோபாக்யாநம்.

(தொடர்ச்சி.)

இப்படி தர்மத்திற்கும் யுக்திக்கும் ஒத்ததான தன் பத்நியாற் சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டு அந்தக் கபோதம் மிகவும் ஸந்தோஷத்தை அடைந்து பக்ஷிகளைக் கொன்று ஜீவித்துவரும் அந்த வேடனுக்குச் சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கிற விதிப்படி பரபரப்புடனும் ஸ்ரத்தையுடனும் ஸத்காரம்செய்ய ஆரம்பித்தது. "ஸ்வாமிந்! நல்வரவா? நான் என்னசெய்யவேண்டுமென்று தங்களுடைய இச்சை? கிருபைசெய்து ஆஜ்ஞாபிக்கவேணும். எங்கேயோ புதிதான ஓரிடத்தில் அகப்பட்டுக்கொண்டதாக நினைத்து வருத்தப்படவேண்டாம். சொந்த கிருகத்தில் இருப்பதுபோலவே நினைத்துக்கொள்ள வேணும். நீர் இந்தவிடத்தை ஸரணமாக அடைந்துவிட்டபடியால், என்னால் இயன்றவரையில் ஸஹாயம் செய்யவேண்டியது எனது கடமையாகிவிட்டது. மிகுந்த ப்ரீதியுடன் சொல்லுகிறேன்; விபரீதமாக நினைக்கக்கூடாது. சத்ருவானாலும் ஒருவன் நம்முடைய வீட்டுக்கு வந்துவிட்டால் அவனுக்கு யதோசிதம் ஸத்காரம் செய்யவேண்டியது அவசியம். தன்னை வெட்டுகிற மனிதனுக்கு நிழலைக் கொடுக்கக்கூடாதென்று மரம் தனது நிழலைச் சுருக்கிக்கொள்ளுகிறதா? சாஸ்திரங்களில் கிருஹஸ்தனுக்குப் பஞ்ச மஹாயஜ்ஞங்கள் விதிக்கப்பட்டில்லையோ? எவனொருவன் புத்திக் குறைவால் கிருஹஸ்தனாக இருக்கையிலும் இந்த ஐந்து யஜ்ஞங்களைச் செய்யாமல் விட்டுவிடுகிறானோ அவனுக்கு இந்த லோகத்திலும் ஸுகமில்லை, பரலோகத்திற்கும் ஹானி உண்டாகிறது. ஆகையால், என் பேரில் கிருபை செய்து என்னுடைய கிருஹஸ்த தர்மத்தை நடத்திக்கொள்ளும்படி நியமிக்க வேணும். கிஞ்சித்தேனும் சோகமின்றி ஸ்வாதீநமாக நம்பிக்கையுடன் அபேக்ஷிதம் இன்னதென்பதைச் சொன்னால் அதைச்செய்ய நான் ஸித்தமாய்க் காத்திருக்கிறேன்" என்று அந்தக் கபோதம் சொல்லிற்று. அதைக் கேட்ட வேடன் தன்னைக் குளிர்

மிகவும் வருத்துகிறதென்றும், அதிலிருந்து தன்னை எப்படியாவது
ஸம்ரக்ஷணம் செய்யவேண்டுமென்றும் சொல்ல, கபோதம் அந்த
மரத்தினடியில் உதிர்ந்துகிடந்த சருகுகளைப் பொறுக்கி ஓரிடத்
திற்சேர்த்து அவைகளை எரிக்கும்பொருட்டு ஸமீபத்திலிருந்த
ஒரு கம்மாளனுலைக்களத்தினிடம் போய்ப் பாதித் தணலுடன்
கூடின ஓர்கரியைக் கொத்திக்கொண்டுவந்து சருகுகளைப் பற்ற
விட்டு, "ஸ்வாமின்! சிறிதும் விசாரமின்றி இந்த நெருப்பண்டை
உட்கார்ந்து அங்கங்களைக் காய்ச்சிக்கொள்ளும்" என்று விண்ணப்
பம் செய்தது. பிராணன் போனதுபோல அவ்வளவு களைத்து வி
றைத்திருந்த அந்த வேடன் குளிர்காய்ந்த பிறகு கொஞ்சம் தென்
புடன் "பக்ஷியே! குளிர் நிவ்ருத்தி ஆகிவிட்டது, பசி உபத்ரவிக்
கிறதே, என் செய்வேன்!" என்று பரிதபிக்க, அந்தப் பக்ஷி மிகுந்த
வருத்தத்துடன் "ஐயோ! பூர்வஜந்மகர்மத்தால் நான் பக்ஷியாய்ப்
பிறந்ததனால் உம்முடைய பசியைப் போக்கக்கூடிய பதார்த்தங்
கள் ஒன்றும் என்னிடம் இல்லையே! காட்டில் வஸிக்கிற நாங்கள்
அப்போதைக்கப்போது அகப்படும் ஆஹாரத்தைக் கொண்டு
ஜீவித்து வருகிறோமே யொழியச் சேர்த்து வைத்துக்கொள்வ
தென்பதைச் சிறிதும் அறியோம்" என்றுசொல்லி 'எவ்விதமான
முயற்சி செய்து இந்த அதிதியைத் திருப்திசெய்விக்கப் போகி
றோம்' என்கிற விசாரத்தால் முக்ம்லாடி, விடேறிவந்த அதிதி
யின் பசியைத் தணிக்கமுடியாத தங்களுடைய வ்ருத்தியை நிந்
தித்துக்கொண்டு ஒரு முகூர்த்த காலம் சுணங்கி நின்றது. பிறகு
மனத்தில் ஓரெண்ணம் தோன்றவே முகமலர்ச்சியுடன் "அஹோ!
சற்று நேரம் இரும். நான் தங்களைத் திருப்தி செய்துவைக்கி
றேன்" என்று சொல்லிவிட்டு, அங்குள்ள தீயில் இன்னும் சருகு
களைப் பொறுக்கிப்போட்டு அதை நன்றாக வளர்த்து, மிகுந்த ஸந்
தோஷத்துடன் "ஸ்வாமின்! பல பெரியோர்களிடத்தில் பஹு
ப்ரகாரமாக அதிதி பூஜையின் மாஹாத்ம்யத்தைப்பற்றிக் கேள்
விப்பட்டிருக்கிறேன். இன்றையதினம்தான் என்னுடைய ஜந்மம்
ஸாபல்யத்தை அடையப்போகிறது; நான் மனத்தில் நிச்சயம்
செய்துவிட்டேன்; கிருபை செய்யவேணும்" என்கிற வார்த்தை
யைச் சொல்லிக்கொண்டே ஸந்தோஷத்தால் மலர்ந்த முகத்து
டன் அக்நியை மூன்று தடவை ப்ரதக்ஷிணம் செய்து மஹாமதி
யுடன்கூடிய அந்தப்பக்ஷி எரிகிற அழலில் விழுந்தது. அப்படித்



தீயிற்குதித்த பக்ஷியைப் பார்த்துக்கொண்டிருந்த வேடன் திடுக்
கிட்டு "அஹோ! என்ன காரியம் செய்தேன்? இப்படிக் கெட்ட
க்ருத்யம் செய்கிற பாபியும் இந்தலோகத்தில் உண்டோ? பரோப
காரமும், சிறிதாயினும் தயையும் கனவிலும் கண்டும் அறியேன்;
மாம்ஸத்தைத்தின்று மாம்ஸதேகத்தை வளர்த்த பெரும்பாவி,
கோரநரகத்திற்குப் போவேன். ஒரு பாபத்தையும் அறியாத இந்
தப் பக்ஷி எனக்காக ப்ராணனை விட்டதே! என்ன பெருந்தன்
மை? இதன் ஜந்மம் அல்லவோ ஸபலமான ஜந்மம். நிச்சயம்
அத்யந்தம் பாபியாகி விட்டேனே! கொஞ்சமேனும் புத்தியில்லா
மல் இப்படிப்பட்ட பாதகத்திற்கு ஆட்பட்டேன்! இந்த ஜந்மத்
தைச் சுடலாம். பிறந்தது முதல் துர்ப்புத்தி பிடித்துச் செய்த
காரியங்களினும் பிறருக்கு ஹிம்ஸையைக் கொடுத்துக்கொண்டு
இப்படி அலைவேனே! எங்கே போனால் இந்தப்பாபம் என்னை
விட்டுத் தீரும்? யார்காலில் விழலாம்? யாரிடம் போய் நான்
செய்த பாபங்களைச் சொல்லி என்னைத் தண்டித்துக்கொள்வேன்?
அஹோ தைவமே!" என்று பலவாறாகக்கதறி, "இனி நான் ப்ரா
ணனை வைத்துக்கொள்ளுகிறதில்லை; பெண்டாட்டி பிள்ளை வீடு
ஒன்றும் எனக்கு வேண்டாம். இந்த மஹாத்மாவான கபோதம்
எனக்குத் தர்மத்தை உபதேசம் செய்துவிட்டது. இன்று முதல்
இந்தத்தேஹத்தைக் கோடைக்காலத்தில் ஸரஸ் உலருகிறதுபோல
உலர்த்திவிடுகிறேன். பசி தாஹம் வெயில் மழை ஒன்றையும்
கவனியாமல் உபவாஸாதிகளாலும் மற்றும் அம்மாதிரியான கஷ்
டங்களாலும் இந்தத் தேஹத்தை க்ருசமாக்கி மனத்திற்கு நிர்
வ்ருத்தியைத் தேடிக்கொள்ள வேணும். இந்தக் கபோதத்தின்
பெருந்தன்மையை என்ன சொல்வேன்? அந்த மாதிரியன்றோ தர்
மம் அநுஷ்டிக்க வேண்டும்" என்று புத்தியில் நிச்சயம் செய்து
கொண்டு, கையிலிருந்த கண்ணி, தடி, கூடு எல்லாவற்றையும்
எறிந்துவிட்டுக் கூட்டுக்குள் கட்டுண்டிருந்த பெண்பக்ஷியையும்
விடுவித்து 'மஹா ப்ரஸ்தானம்' என்னும் பெரியதொரு வ்ரதத்
தை மிகுந்த உறுதியுடன் அநுஷ்டிக்க ஆரம்பித்தான்.

இப்படி வேடனால் விடப்பட்ட அந்தப் பெண்கபோதம்
உயிரினுஞ்சிறந்த தன் பர்த்தா அக்நியில் விழுந்து எரிந்துவிட்ட
தைப் பார்த்துச் சோகம் தாங்கமாட்டாமல் கதறி அழுதது.
"ஹே காந்த! ஒருநாளும் உமக்கு நான் ஒருவிதமான விப்ரியத்

தையும் செய்ததில்லையே! அநாதையான என்னைத் தனிமையாக விட்டு இப்படி தீர்க்கயாத்ரை புறப்பட்டுப் போகலாமா? ஸ்வாமிந்! நான் என்ன செய்வேன்? பதிஹீனையான ஸ்த்ரீ ஜீவித்திருப்பதும் ஒரு இருப்பாகுமோ? எவ்விதமான ஸந்தான ஸம்பத்துக்கள் இருந்தபோதிலும் அவளுடைய தசை ஸர்வவிதத்திலும் சோசிக்கத் தகுந்ததே. அத்யந்தம் செல்வத்துடனும் பஹுமானத்துடனும் இதுவரையில் வளர்த்துவிட்டு இனிக் கஷ்டத்திற்குப் பாத்ரமாக வேண்டுமே! தகப்பனார் இருந்தென்ன? ஸஹோதரன் இருந்தென்ன? புத்ரன் இருந்தென்ன? இவர்கள் எல்லாரும் கொடுக்கக் கூடியது மிதமே. அளவில்லாமல் உபகரிக்கிற பர்த்தாவன்றோ பந்து அவனைத்தவிர வேறு ஶரணம் கிடைக்குமோ? ஹே நாத! நீர் இல்லாமல் ஜீவித்திருக்கமாட்டேன். நானும் கூட வந்துவிடுகிறேன். அநுமதி கொடுக்கவேணும். ஸ்வாமிந்!" என்று பஹுவிதமாக விலபித்து அந்தப் பதிவ்ரதை ஜ்வலித்துக்கொண்டிருந்த அக்நியிற் ப்ரவேசம் செய்தது. உடனே தன் பாதிவ்ரத்யத்தின் பயனால், ஒரு திவ்யஸ்த்ரீ ஆகி, தன் பர்த்தாவை விமானத்தில் ஸர்வாபரண பூஷிதராகவும் உத்தமமான மாலை வஸ்த்ரம் இவைகளைத் தரித்துக்கொண்டு புண்யாத்மாக்கள் அநேகரால் சூழப்பட்டு ஸ்தோத்ரம் செய்யப்படுகிறவராகவும் பார்த்து, தானும் அவருடன்கூடி பஹுவித பூஜைக்குப் பாத்ரமாகப் பஹுகாலம் ஆநந்தாநுபவம் செய்தாள்.

அந்த வேடனோ விமானஸ்தர்களான கபோத தம்பதிகளைப் பார்த்து ஆஶ்சரியமடைந்து மஹா ப்ரஸ்தாபத்திலேயே உறுதியுடையவனாய் வாயுவையே ஆஹாரம் செய்துகொண்டு அஹங்கார மமகாரங்களைத் தூர விலக்கி ஒருவிதமான வ்யாபாரத்திலும் இந்த்ரியங்களைச் செலுத்தாமல் உபவாஸத்தால் இளைத்துப்போய்க் கொடிய மிருகங்களால் வ்யாபரிக்கப்பட்ட இருண்டகாட்டிற்குள் ப்ரவேசித்தான். பசி தாகங்களால் வருத்தியும், மார்க்கத்திலிருந்த ரமணீயமான ஸரஸ்ஸுக்களைக் கண்ணெடுக்கப்பாராமல் ஒரே உறுதியாய் கோரமப்போரையில் முட்கள் தேஹத்தில் தைக்கவும், கிளைகள் மேலே பிறவும், தேஹம் முழுவதும் காயமாய் ரக்தத்தால் பூசப்பட்டு அலைந்து திரிந்து, மரங்கள் செடிகள் மிருகங்கள் பக்ஷிகள் எல்லாவற்றையும் தஹித்துக்கொண்டு காலாக்நிபோல வளர்ந்து எரியும் காட்டுத்தீயால் வ்யாபரிக்கப்பட்ட ஓர் இடத்திற்கு



வந்தான். அக்நியைப்பார்த்து ஸந்தோஷமடைந்து 'எனக்கும் விமோசநகாலம் வந்துவிட்டது' என்று எண்ணி வியப்புடன் தாயைக்கண்ட குழந்தைபோல ஓடி அக்நியில் விழ, அந்த அக்நி அவனைப் பஸ்மமாகச் செய்துவிட்டது. இம்மாதிரியான ப்ராயஶ்சித்தத்தால் கழிந்த கல்மஷத்தோடு கூடினவனாக உயர்ந்த ஸித்தியை அடைந்து அந்த வநசரன் யக்ஷ கந்தர்வ ஸித்தர்களுக்கு நடுவில் இந்த்ரன்போல ஸ்வர்க்கலோகத்திற்கு உரிய போகங்களை அநுபவித்தான்.

"ஹரிஶ்சந்த்ரோ ரந்திதேவ உஞ்சவ்ருத்தி: ஶிபிர்பலி: —
வ்யாத: கபோதோ பஹவோ ஹ்யத்ருவேண த்ருவம் கதா:"

என்று ஜராஸந்தனாலேகூடப் புகழக்கூடிய சரித்ரத்தையுடைய இந்தக் கபோதத்தின் உபாக்யாநத்தின் கருத்து என்னவென்றால், ஶாஸ்த்ராதிகாரியாய்க் குணதோஷ விசாரத்திற்கு யோக்யதையில்லாமலிருக்கும் கேவலம் ஒரு திர்யக், தனக்கு ஸாக்ஷாத் ஶத்ருவாகவும், தனக்கு ஸஹதர்மசாரிணியாய்த் தன்னைப்பிரியமாட்டாத பார்யையைப் பிரித்தவனாகவுமுள்ள வேடன் விஷயத்தில், தானிருந்த நிழலில் வந்ததையே ஒரு பெரிய காரணமாகக் கொண்டு அவனைப் பூஜ்யரைப்போல ஆராதித்து, தானான மாம்ஸங்களாலே தன்னை அழிய மாறி விருந்திட்டு, அவனுக்கு ஸர்வரக்ஷணமும் பண்ணக்கடவதாகப் பரிக்ரஹித்தால், விவேகத்தையுடைய நாம் ஶரணாகதன் விஷயத்திற் செய்யவேண்டியது எத்தனை இருக்கவேணும்? கேவலம் அவனை ஹிம்ஸியாதே விடுமது போதாது, தன் ப்ராணனை விட்டாவது ரக்ஷிக்க வேண்டும் என்பது அத்யவஶ்யம் என்பதுதான். இன்னும், இதைத்தான் ஸர்வவிதத்திலும் அநுபாலநீயமாக *ஸங்கல்பமாகக் கொண்டிருக்கிறானன்றோ, நம்மை ரக்ஷிக்கவேணுமென்கிற வ்ரதத்தையுடைய பகவான். "ஸக்ரு வ்ரதம் மம" என்றும், "மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:" என்றும் கதறியிருக்கும் அமோக ஸங்கல்பனான பகவான் பக்கல் விஶ்வாஸம் ஜநிக்காமல் நாம் அலைந்து திரிவது ந்யாயமாகுமா? நாம் எவ்வித ஹேயமான ஆஜ்ஞாதிலங்கநங்களைச் செய்திருந்தபோதிலும், ஹேய குணங்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாக இருந்தாலும், நாம மஹத்தான அபராதங்க க்ரஹணத்திற்குக்கூட அநர்ஹர்களாய் இருந்தபோதிலும், யாரேனுக்கெல்லாம் உத்பத்தி ஸ்தாநமாக இருந்தபோதிலும்,

மாகிலும், "நநமேயம்" என்கிற விம்பை விட்டு, அவன் திருவடிகளே ஶரணமென்று தன் போக்யதையைப் பாராமல் பகவானுடைய குணத்தையே விஶ்வஸித்துக் காலில் விழுந்துவிட்டால், அளவற்ற கருணையோடு கூடின பகவான் நம்மை ஸம்ஸாரமாகிற மஹா ஸமுத்ரத்திலிருந்து நிஶ்சயமாக ஸம்ரக்ஷிப்பானென்பது தான், இந்த உபாக்யாநத்தின் முக்கியமான கருத்து.

ஓர் பௌராணிகர்.

---

இந்தப் பத்ரிகையில் இப்பொழுது தத்க்ரது ந்யாயமென்கிற ஒரு வேதாந்த ந்யாயம் விசாரிக்கப்பட்டுவருகிறது. அந்த ந்யாயமாவது:—'இந்த லோகத்தில் ஒரு புருஷன் எவ்விதமான உபாஸநம் செய்கிறானே, அவன் மரணம் அடைந்த பிறகு அப்படியே ஆகிறான்' என்பதுதான். இந்த ந்யாயத்தின் கருத்து என்னவென்பதைப்பற்றி வேதாந்திகள் விவாதம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த விவாதம் நமக்கு இப்பொழுது வேண்டாம். ந்யாயமே பொய்யாகிவிட்டதே! வீணில் ஏன் வேதாந்திகள் கஷ்டப்படுகிறார்கள்? என்பது நம்முடைய விசாரம். ஏனென்றால் "விஹ்வலேத்யம் ஸூரவ்ருத்தநாத விசக்ஷ்ணம் ஸூஜஹ்வாஸம்" என்கிறபடி க்ருஷ்ணனை உரலிற் கட்டுண்டவனாக நாம் த்யாநிக்க த்யாநிக்க நாமும் கட்டு அடையவேண்டியது போக, ஏற்கெனவே பஹுகாலமாக நமக்குச் சொந்தமான நம்முடைய கர்மக்கட்டும் விலகிவிடுகிறதே! இது இந்த ந்யாயத்திற்கு விருத்தமன்றோ?

"வஶம் ததா ஸர்வஜநம் விதந்வந்தமீக்ஷ்ய விஷ்ணுர்நிகடேஷு வம்யே - தவாஸிநீ தத்ர தநீகிராஸ்யா ஸ்ம்ருத்யைவ ரோஹண்யபாஸ்ததஸ்ய" (யாதவாப்யுதயம், 4 - வது ஸர்க்கம் 85 - வது ஶ்லோகம்.) இப்படி நம்முடைய வார்த்தை பொய்யாகிவிட்டதே என்பதை ஆலோசித்தன்றோ அந்தத் தத்க்ரதுநீதி முகம்வாடி லஜ்ஜையுடன் எங்கேயோ உபநிஷத்தாகிற காட்டுக்குள் ஒளிந்துகொண்டது.

---

ஸ்ரீ:

# விஶிஷ்டாத்வைதம்.

## I. ப்ரஹ்மம் என்பது என்ன?

வேதம் அறிந்தவர்களின் ப்ரக்ரியைகளில் விஶிஷ்டாத்வைதம் என்பது ஒன்று. அதன் கொள்கைகளாவன:—

தத்வம் என்பது—பரதத்வமென்றும், அவரதத்வம் என்றும் இருவகைப்படும். பரதத்வம் என்பது பரப்ரஹ்மத்தைக் குறிக்கும்; அவரதத்வம் அவனை ஒழிந்தவற்றைக் காட்டும். இந்த அவரதத்வம் சேதநமென்றும், அசேதநமென்றும் இரண்டு வகையாயிருக்கும். அறிவுடன் கூடியது சேதநம், அறிவு இல்லாதது அசேதநம். சேதநம் - பத்தர்கள், முக்தர்கள், நித்யர்கள், என்று மூவகை. ஸம்ஸாரத்தில் அகப்பட்டுப் பிறப்பு இறப்புடன் கூடினவர்கள், பத்தர்கள்; ஸம்ஸாரத்திற் சில காலம் இருந்து பிறகு அது கழிந்தவர்கள், முக்தர்கள். ஒரு காலத்திலும் ஸம்ஸாரத்தில் அகப்படாதவர்கள், நித்யர்கள். அசேதநம் - த்ரிகுணத்ரவ்யம், காலம், ஶுத்தஸத்வம், தர்மபூதஜ்ஞாநம் என்று நான்குவகைப்படும். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்று குணங்கள் எந்த த்ரவ்யத்திற்கு உண்டோ அது, த்ரிகுணத்ரவ்யம். க்ஷணம் முதலான பிரிவுடன் கூடியது, காலம். ரஜஸ் தமஸ் அன்றிக்கே ஸத்வகுணத்திற்கே ஆஶ்ரயமாக இருக்குமது, ஶுத்த ஸத்வம். பரதத்வத்திற்கும், அவரதத்வத்திற் சேதநர்களுக்கும், தங்களையும் தங்களை நீக்கி மற்ற வஸ்துக்களையும் எந்த ஜ்ஞாநம் ப்ரகாசிப்பிக்கிறதோ, அது தான் தர்மபூதஜ்ஞாநமென்னப்படும். இந்த அறிவுக்குத் தர்மபூதஜ்ஞாநமென்று பெயர் வருவானேன் என்றால், இந்த ஜ்ஞாநத்தைத் தர்மமாக உடைத்தாயிருக்கும் பரதத்வமாகிற ப்ரஹ்மமும், அவரதத்வமாகிற சேதநமும், ஜ்ஞாந ஸ்வரூபம்; ஸ்வ

ரூபமாகிற ஜ்ஞானத்திலிருந்து தர்மமாகிற ஜ்ஞானத்தைப் பிரித்துப் பேசும் பொருட்டு அதற்குத் தர்மியாகிற ஜ்ஞான மென்றும், இதற்குத் தர்மமாகிற ஜ்ஞான மென்றும் பெயர் வழங்குகிறது. அதாவது - பரப்ரஹ்மத்திற்கும், சேதநர்களுக்கும் இருக்கும் ஸ்வரூபமானது ஒரு ஜ்ஞாநம், அந்த ஜ்ஞான ஸ்வரூபத்திற்கு ஜ்ஞானமென்கிற ஒரு தர்மமுண்டு; அதற்குத்தான் தர்மபூத ஜ்ஞானமென்று பெயர். த்ரிகுண த்ரவ்யமான அசேதநத்திற்கு ப்ரக்ருதி என்றும் பெயர்; இது மஹத், அஹங்காரம் முதலானவைகளாக மாறும், இவைகளுக்கு விக்ருதி யென்று பெயர். இவைதான் பத்தர்களான சேதநர்களுக்கு ஶரீரமாகவும் இந்த்ரியங்களாகவும் ஆகி, அவர்களைத் தங்களுடையவும் பரப்ரஹ்மத்தினுடையவுமான யதார்த்த ஸ்வரூபத்தை அறியவொட்டாமல் தடுக்கும். ரஜஸ் தமஸ்ஸுக்களின்றிக்கே யிருக்கும் சுத்தஸத்வத்ரவ்யம், ப்ரஹ்மத்திற்கும் நித்யருக்கும் முக்தருக்கும் விக்ரஹம் முதலானவைகளாக ஆகும்.




(1) ப்ரஹ்மத்திற்கும், மூவகைச் சேதநருக்கும், ஸ்வரூபமும் ஜ்ஞாநம்; ஜ்ஞாநம் என்கிற தர்மமும் உண்டு.

(2) ப்ரஹ்மத்திற்கும், முக்த சேதநருக்கும், நித்ய சேதநருக்கும் சுத்த ஸத்வ மென்கிற அசேதநம் விக்ரஹாதி ரூபத்தால் போக்யமாகிறது.

(3) பத்தசேதநருக்கு, த்ரிகுணம் என்கிற அசேதநம், ஶரீரா ஸம் முதலானவைகளாகப் பரிணமிக்கிறது.



162434

(4) த்ரிகுணமாகிற அசேதநத்திற்கு, பகவானுடைய ஸ்வரூபத்தை அறியவொட்டாமல் தடுக்கும் போக்யதை உண்டு.

(5) சுத்த ஸத்வத்திற்கு, அம்மாதிரியான கெடுதல் இல்லை.

(6) ஜ்ஞாநமாகிற அசேதநத்தைக் கொண்டே, ப்ரஹ்மமும் சேதநமும் வஸ்துக்களைத் தெரிந்துகொள்ளுகிறது.

"த்ரிவித அசேதந" என்கிற வாக்யத்தில் அசேதநத்தை மூன்று விதமாக ஸ்ரீ பாஷ்யகாரர் நிரூபித்திருக்க, இங்கு அசேதநம் நான்கு விதமென்று சொன்னதற்குக் காரணம், தர்மபூத ஜ்ஞாந மென்பது ஸ்வரூப ஜ்ஞாநத்தைக் காட்டிலும் விலக்ஷணமாயும், த்ரிகுண த்ரவ்யம் முதலான மூன்றுவித அசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்ட த்ரவ்யமாயும் இருப்பது தான். இந்த அர்த்தத்தை "இவ்வாத்மாக்களுக் கெல்லார்க்கும் தர்மிஸ்வரூபம்போலே தர்மபூதஜ்ஞாநமும் த்ரவ்யமாயிருக்க இதின் ஸ்வரூபத்தைத் தனித்தின்கருளிச் செய்யாதொழிந்தது சேதநரென்றெடுத்த விஶிஷ்டத்திலே விஶேஷணமாய்ச் சொருகி நிற்கையடியாக." என்று ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்திருக்கிறார்.

பரதத்வமாகிற பரப்ரஹ்மம் என்பது என்ன? யஜுர் வேதத்திலிருக்கும் ஆநந்த வல்லியிலும், ப்ருகு வல்லியிலும் ப்ரஹ்மத்தின் லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆநந்த வல்லியிற் சொல்லப்பட்டிருக்கும் வாக்யமாவது "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்பது. இதன் அர்த்தம்:—ப்ரஹ்மம் என்பது - ஸத்யமாயும், ஜ்ஞாநமாயும், அநந்தமாயும் இருக்கும். 'ஸத்யம்' என்கிற பதத்திற்கு - விகாரத்தை அடையாமலிருக்கும் இருப்புடன் கூடியது என்பது அர்த்தம். நம்முடைய இருப்பும் நாம் செய்யும் வியாபாரங்களும் எப்படி கேவலம் நம்மைப் பொறுத்தனவாகவே இராமல் வேறு ஸ்வாதீநங்களாக மாறிக்கொண்டே இருக்கின்றனவோ அப்படி அந்த ப்ரஹ்மத்தின் இருப்பு மற்றொரீஸ்வாதீநமன்று என்பது தான் தாத்பர்யம். ஸத்தை யென்றால் இருப்பு; ஸத்தையுடன் கூடியது ஸத்யம். இதனால் அடிக்கடி மாறுதலை ஸ்வபாவமாக உடைத்தாயிருக்கும் அசேதநமும், அந்த அசேதநத்தைக் ஶரீரமாயுடைய

RKSMALLNLLYD

மாக உடைத்தாயிருக்கும் சேதநமும் இப்படி 'ஸத்யம்' அன்று என்று ஏற்படும். இந்த அர்த்தம்தான் ப்ரஹ்மம் "நிருபாதிக ஸத்தாயோகி" என்று ஸம்ஸ்க்ருதத்தில் வ்யவஹரிக்கப்படுகிறது.

'ஜ்ஞாநம்' என்கிற பதம் எக்காலத்திலும் குறைவற்ற ஜ்ஞாநமான ஆகாரத்தைச் சொல்லுகிறது. அதாவது - ப்ரஹ்மம் இவ்வளவைத்தான் அறியும், இதற்கு மேற்பட்டு அறியாது என்கிறது முதலான ஜ்ஞாநக் குறைவையுடையதன்று; எப்பொழுதும் குறைவற்ற ஜ்ஞாநத்துடன் கூடியது என்று அர்த்தம். ஆகையால், இந்தப் பதத்தால், பூர்வம் ஸம்ஸாரத்திலிருந்த காலத்தில் குறைவுடன் கூடிய ஜ்ஞாநத்தை யுடைத்தாயிருந்தபடியால் முக்தர்களாக இருக்கும் சேதநர்கள் விலக்கப்பட்டார்கள். இந்த அர்த்தம், "நித்யாஸங்குசித ஜ்ஞாநைகாகாரம்" என்று ஸம்ஸ்க்ருதத்தில் வ்யவஹரிக்கப்படுகிறது. மேலும், ப்ரஹ்மம் ஜ்ஞாநத்தோடு கூடியது என்று மாத்திரம் சொல்லக்கூடாது. மற்றோரிடத்தில் ஸ்ருதியில் "யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" என்று சொல்லியிருப்பதை ப்ரமாணமாகக்கொண்டு 'ப்ரஹ்மம் ஜ்ஞாநத்தைக் குணமாக வுடைத்தாயிருக்கிறது என்பது மாத்திரமன்று; ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமும் ஜ்ஞாநம் தான்' என்று வேதம் அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இப்படி ஜ்ஞாந குணகமாகவும் ஜ்ஞாந ஸ்வரூபமாகவும் இருக்கும் தன்மை, ப்ரஹ்மத்திற்கும் அவாந்தத்வமாகிற சேதநத்திற்கும் பொது. ஆனால், ப்ரஹ்மத்தின் குணமும் ஸ்வரூபமும் அளவற்றது; சேதநத்தினது அளவற்றதன்று என்பது முக்கியமான வ்யத்யாஸம்.

"அநந்தம்" என்கிற பதம், தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும் அளவிடக்கூடாத ஸ்வரூபத்தைக் குறிக்கிறது. ஒரு பொருள் ஓரிடத்தில் இருக்கிறது மற்றோரிடத்தில் இல்லை என்பது—தேசத்தால் அளவு; ஒரு பொருள் ஒரு காலத்தில் இருக்கிறது மற்றொரு காலத்தில் இல்லை என்பது—காலத்தால் அளவு; ஒரு பொருள் இது தான் மற்றொன்று அன்று என்பது—வஸ்துவால் அளவு; அல்லது ஸ்வபாவத்தைக் கொண்டு அளப்பது—வஸ்துவினால் அளவு என்றும் சொல்லலாம். எப்படியானால் ஸமான



மான ஆகாரமும் எடையும் இருக்கையிலும் தஸவர்ண ஸ்வர்ணத்தைக் காட்டிலும் கலதௌதம் முதலானவைகள் ஸ்வபாவத்தால் குறைவுள்ளது என்று வ்யவஹரிக்கிறோமோ அப்படி ப்ரஹ்மத்தைப்பற்றி வ்யவஹரிக்க முடியாது; அதாவது—ப்ரஹ்மத்தின் குணங்களோடு ஸமமான குணங்களுடன் கூடின பொருளும் இல்லை, ப்ரஹ்மத்தின் குணங்களைக் காட்டிலும் உயர்ந்த குணங்களோடு கூடின பொருளும் இல்லை என்பது தான் 'வஸ்துவினால் அளவு இல்லை' என்பதற்குத் தாத்பர்யம். ஸ்ம்ருதியிலோ "நாந்தம் குணாநாம் கச்சந்தி தேநாநந்தோ(அ)யமுச்யதே" என்று சொல்லியிருக்கிறது. அதாவது - ப்ரஹ்மத்தின் குணங்களுக்கு எல்லையில்லாததால் ப்ரஹ்மத்திற்கு 'அநந்தம்' என்று பெயர் என்று அர்த்தம். இந்த விடத்தில் 'குணங்களுக்கு எல்லை இல்லை' என்பதற்கு அர்த்தம், 'அவை தேசத்தாலாவது காலத்தாலாவது ஒரு எல்லைக்குட்பட்டதன்று' என்பது இந்த ஸித்தாந்திகளின் அபிப்ராயம். இப்படி ஸத்யமாயும் ஜ்ஞாநமாயும் அநந்தமாயும் இருப்பதுதான் ப்ரஹ்மம் என்று நிஷ்க்ருஷ்டமாயிற்று.

ப்ருகு வல்லியில் வரும் வாக்யமாவது, "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம" என்பதுதான். இந்த வாக்யத்தின் சப்தார்த்தமாவது:—"இமாநி பூதாநி யதோ ஜாயந்தே" எந்தக் காரணத்திலிருந்து இந்தப் பொருள்களெல்லாம் உண்டாகின்றனவோ, "ஜாதாநி (பூதாநி) யேந ஜீவந்தி"—இப்படி உண்டான பொருள்கள் எதனால் ஜீவத்திருக்கின்றனவோ, "ப்ரயந்தி (ஸந்தி பூதாநி) யத் அபிஸம்விசந்தி" லயத்தை அடைகிறவைகளாகக் கொண்டு எதில் லயிக்கின்றனவோ, "தத் விஜிஜ்ஞாஸஸ்வ" அதை அறிந்து கொள், "தத் ப்ரஹ்ம" அது தான் ப்ரஹ்மம், அதாவது, நமக்குத் தென்படும் ஜங்கம ஸ்தாவரமான பொருள்களெல்லாம் எந்தக் காரணத்திலிருந்து உண்டாகின்றனவோ, எதனால் ஜீவித்திருக்கின்றனவோ, எதில் லயத்தை அடைகின்றனவோ அதுதான் ப்ரஹ்மம் என்று தாத்பர்யம்.

«யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி» என்றுமிடத்தை, «யத் ப்ரயந்தி» என்பதொன்று «(யத்) அபிஸம்விஶந்தி» என்பது மற்றொன்று, ஆக இரண்டு வாக்யங்களாகப் பிரித்துக்கொண்டு, «யத் ப்ரயந்தி» என்பது மோக்ஷத்தையும், «யத் அபிஸம்விஶந்தி» என்பது லயத்தையும் குறிக்கின்றன வென்றும் அர்த்தம் சொல்வதுமுண்டு. இந்தப் பக்ஷத்தில் மொத்த அர்த்தமாவது, ஜகத்தின் ஜந்மத்திற்கும் ஸ்திதிக்கும் மோக்ஷத்திற்கும் லயத்திற்கும் எது காரணமோ, அது தான் ப்ரஹ்மம் என்பது தான். இந்த அர்த்தத்தை மனத்தில் வைத்துக்கொண்டே ஆளவந்தார் «ஜந்மஸ்திதித்வம்ஸமோக்ஷைகஹேதவே» என்று ஆகம ப்ராமாண்யம் என்னும் க்ரந்தத்திலும், «ஜகஜ்ஜந்மஸ்திதிப்ரணாஶஸம்ஸாரவிமோசநாதய:» என்று ஸ்தோத்ர ரத்நத்திலும், ஸ்ரீ பாஷ்யகாரர் «உத்பவஸ்திதிப்ரளயஸம்ஸாரநிவர்த்தநைக ஹேதுபூத:» என்று வேதார்த்த ஸங்க்ரஹத்திலும், «நிகிலஜகதுதயவிபவலய மோக்ஷைக காரணம்» என்று ஸ்ரீ பாஷ்யத்திலும் மோக்ஷத்தைக் குறித்து ப்ரஹ்மத்திற்குக் காரணத்தைத் தனியாக அருளிச்செய்திருக்கிறார்கள்.

இந்த வாக்யத்தின் அர்த்தத்தைச் சொல்லுமிடத்தில் இரண்டு மூன்று விசாரம் ஏற்படும். முதலாவது, ஜகத்தின் உத்பத்திக்கு எது காரணமோ அது ப்ரஹ்மம், ஸ்திதிக்கு எது காரணமோ அது ப்ரஹ்மம் என்று; இம்மாதிரி தனித்தனியாக ப்ரத்யேகம் ப்ரஹ்மத்தின் லக்ஷணமென்று சொல்லலாமா? உத்பத்தி முதலானவைகளுக்கு எது காரணமோ அது ப்ரஹ்மம் என்று ஸமுதாயத்தில் லக்ஷணமாக எடுத்துக்கொள்ளலாமா? என்று ஸம்ஶயம் செய்துகொண்டு, அநேக காரணங்களினால், ஸமுதாய காரணத்தைத் தான் ஒப்புக்கொள்ளவேணுமென்று ஆசாரியர்கள் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். இரண்டாவது விசாரம்—«விஜிஜ்ஞாஸஸ்வ» என்கிற ஶப்தத்தைப்பற்றியது. அந்த ஶப்தத்தின் அர்த்தம் என்ன? ப்ரஹ்மத்தைப்பற்றி விசாரம் செய் என்று அர்த்தமா? உபாஸனம் செய் என்று அர்த்தமா? என்று கேட்டுக்கொண்டு அநேக காரணங்களினால் இவை இரண்டும் அர்த்தமன்று என்றும், உபதேசிக்கப்படும்



அர்த்தத்தில் ஸாதநமாக இருக்கும் பொருட்டாவது, ஸந்தேஹ நிவ்ருத்தியின் பொருட்டாவது «எது கந்தத்துடன் கூடினதோ அதை ப்ருதிவீ என்று அறி» என்று சொல்லுமிடத்தில் 'அறி' என்கிற வினையை ப்ரயோகம் செய்திருப்பதுபோல இவ்விடத்தில் «விஜிஜ்ஞாஸஸ்வ» என்கிற ஶப்தம் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

மூன்றாவது, «ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம» என்கிற ஒரு லக்ஷணமிருக்கையில் மற்றொரு லக்ஷணம் வருவானேன்? ஸன்னால் அதற்கும் இதற்கும் என்ன பேதம்? என்பதுதான். ஒரு பொருளுக்கு லக்ஷணம் சொல்லுங் காலத்தில் இரண்டு விதமாகச் சொல்லக்கூடும். அந்தப்பொருளுக்கே இருக்கும்படியான ஸ்வரூபத்தையும் குணங்களையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். அந்த ஸ்வரூபமும் குணங்களும், மற்ற இடங்களில் அப்ரஸித்தமாயும், இன்னவை யென்று தெரிந்துகொள்ளக் கூடாதனவாயும் இருந்தால், நம்முடைய ஜ்ஞாநத்திற்கு எட்டக்கூடிய பொருள்களைக் காட்டி அவைகளுக்கும், லக்ஷணம் கொடுக்கவேண்டிய பொருளுக்கும் என்ன ஸம்பந்தம் என்று குறிப்பிட்டும் சொல்லலாம். «ஸத்யம் ஜ்ஞாநம்» என்கிற வாக்யம், ப்ரஹ்மத்திற்கே அஸாதாரணமான குணங்கள் எவையோ அவைகளைக் காட்டி ப்ரஹ்மத்தின் லக்ஷணத்தைச் சொல்லுகிறது; «யதோ வா» என்கிற வாக்யம் நமது இந்த்ரியங்களுக்குத் தோற்றப்படும் ஜகத்தைக் குறிப்பிட்டு, அந்த ஜகத்தின் உத்பத்தி முதலியவற்றிற்கு எது காரணமோ அது ப்ரஹ்மமென்று ப்ரஹ்மத்தின் லக்ஷணத்தைச் சொல்லுகிறது. முதல் லக்ஷணத்தை, விஶேஷ்யமாகிற ப்ரஹ்மம் எதுவோ தந்நிஷ்டமான லக்ஷணமென்றும், இரண்டாவதை ப்ரஹ்மத்திற்கு விஶேஷணமாகிற ஜகத்துடன் கூடிய விஶிஷ்டம் எதுவோ தந்நிஷ்டமான லக்ஷணமென்றும் வ்யவஹாரம் செய்வதும் உண்டு. மேலும், நமது ஸித்தாந்தத்தில் இந்த ஜகத்முதலியவற்றை ப்ரஹ்மத்தின் விபூதி யென்றும், அந்த விபூதி நாம் உபாஸிக்கவேண்டியதில் உட்பட்டதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. «ஸத்யம் ஜ்ஞாநம்» என்

றெ லக்ஷணத்தில் கேவலம் ஸ்வரூபத்தைச் சொல்லும் தர்மங்களைக் கொண்டு ப்ரஹ்மம் குறிக்கப்படுகிறபடியால், அந்த ப்ரஹ்மத்திற்கு வெளிப்பட்டிருக்கும் விபூதி உபாஸிக்கவேண்டியதாக இருக்கையிலும் சொல்லப்படாமலே போய்விட்டது; "யதோ வா" என்கிற லக்ஷணத்திலோ, விபூதியாகிற ஜகத்தைக்கொண்டு, அதன் உத்பத்தி முதலியவைகளுக்குக் காரணமென்று ப்ரஹ்மம் குறிக்கப்படுகிறபடியால், விபூதியும் சொல்லப்படுகிறது. இன்னும், விபூதிக்கும், அதன் ஸ்ருஷ்டி முதலியவைகளுக்கு வேண்டிய ஜ்ஞானம் முதலிய குணங்களுக்கும் இந்த "யதோ வா" என்கிற லக்ஷணத்தில் தோற்றம் ஏற்படுகிறதென்பது மற்றுமொரு விசேஷம். ஆனால் விபூதி இந்த ஜகத்மாத்ரமன்றே, ஜகத் நீங்கலாக த்ரிபாத் விபூதி என்கிற நித்ய விபூதிக்கு இந்த லக்ஷணத்தில் தோற்றமில்லையே, அது இந்த லக்ஷணத்திற்குக் குறைவன்றோ? என்கிற ஒரு ஸந்தேஹம் ஏற்படலாம். அந்த ஸந்தேஹத்திற்கு இடமில்லையென்பதை "யபிஸம்விசந்தி" என்கிற வாக்யம் வெளிப்படுத்துகிறது. இதில் "யத்" என்கிற ஸப்தத்தால் முக்தனால் அடையக்கூடிய ப்ரஹ்மம் தோன்றுகிறது, முக்தனால் அடையப்படும் ப்ரஹ்மமோ நித்யவிபூதியோடு கூடினதாகவே இருக்கும்; ஆகையால், நித்ய விபூதிக்கும் தோற்றம் ஏற்படுகிறது என்பது ஸித்தம்.

இப்பொழுது "யதோவா" என்கிற வாக்யத்தில் ப்ரஹ்மத்தின் லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அந்த லக்ஷணம் 'ஜகத்தின் உத்பத்தி, ஸ்திதி, மோக்ஷம், லயம் ஆக நான்குக்கும் எது காரணமோ அது தான் ப்ரஹ்மம்' என்பது என்றும், சொல்லப்பட்டது. அதாவது - ப்ரஹ்மம் காரணம், ஜகத் கார்யம் என்று ஏற்பட்டது. நம் ஸித்தாந்தத்தில் ஜகத்திற்கு உபாதான காரணமும் ப்ரஹ்மம், நிமித்த காரணமும் ப்ரஹ்மம்; காரணவஸ்துவிற்கும் கார்யவஸ்துவிற்கும் பேதமில்லை என்று வ்யவஸ்தை. அது எப்படி ஸம்பவிக்கும் என்பதை விசாரிப்போம். உபாதானகாரணமாவது எது மாறுதலடைந்து வேறொரு பொருளாக ஆகிறதோ, அது மாறுதலடைந்த த்ரவ்யத்தைக் குறித்து உபாதானகாரணம்; சட்டி பானைகளைக்குறித்து மண் உபாதானம். யார் மாறுதலுக்குக் கர்த்தாவோ அவன் நிமித்தகாரணம்; சட்டி பானைகளுக்குக் குசவன் நிமித்தம். இந்த ஜகத்தின் விஷயத்தில் உபாதானம் நிமித்தம் இரண்டும் ப்ரஹ்மமே. அது எப்படியென்னில்:—ப்ரஹ்மம் ஆத்மா, சேதநாசேதநங்கள் ப்ரஹ்மத்தின் சரீரம், ராமன் க்ருஷ்ணன் என்கிற ஸப்தங்கள் சரீரத்துடன் கூடிய ஆத்மாவைக் குறிப்பதுபோல, ப்ரஹ்மம் என்கிற ஸப்தம் சேதநாசேதநங்களாகிற ஸரீரத்தோடுகூடிய பரதத்வத்தைக் குறிக்கிறது. இந்தச் சேதநாசேதநங்களுக்கு இரண்டு அவஸ்தை உண்டு; ஸூக்ஷ்மாவஸ்தையென்றும், ஸ்தூலாவஸ்தையென்றும். ஸூக்ஷ்மாவஸ்தையாவது - நாமம், ரூபம் இவையில்லாத அவஸ்தை; ஸ்தூலாவஸ்தையாவது - நாமம் ரூபம் இவையுற்ற அவஸ்தை. இந்த அவஸ்தைகளின் மாறுதலை ப்ரளயம் என்றும், ஸ்ருஷ்டியென்றும் சொல்வார்கள். இம்மாறுதலுக்கு ப்ரஹ்மத்தின் ஸங்கல்பமே காரணம். தன்னுடைய ஸரீரமாகிற சேதநாசேதநங்களுக்கு இந்த மாறுதல் உண்டாகிறபடியால் தானே உபாதான காரணமென்றும், தன்னுடைய ஸங்கல்பத்தினாலுண்டாகிறபடியால் தானே நிமித்தகாரணமென்றும் ஏற்படுகிறது. இப்படி காரணமும் தன்னுடைய சரீரம், காரியமும் தன்னுடைய சரீரமாக இருக்கிறபடியால், காரணம் காரியம் என்கிற இரண்டுவித அவஸ்தைகளும் ப்ரஹ்மத்திற்கே இதனால்தான் இரண்டுமொன்று என்கிற வ்யவஹாரம் ஏற்பட்டது. இந்த அர்த்தத்தைத்தான் ஸம்ஸ்கிருதத்தில் பின் வருமாறு சொல்லுகிறார்கள். சேதநம் அசேதநம் இரண்டும் ப்ரஹ்மத்திற்கு விசேஷணம்; ப்ரஹ்மம் விசேஷ்யம்; விசேஷணத்துடன் கூடிய விசேஷ்யத்திற்கு விசிஷ்டம் என்று பெயர். ஸூக்ஷ்ம சேதநாசேதந விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் ஸ்தூலசேதநாசேதந விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் உள்ள அபேதத்தை விசிஷ்டாத்வைதம் என்கிற ஸப்தம் காட்டுகிறது. இதுதான் விசிஷ்டாத்வைத ஸப்தத்தின் அர்த்தம்.

பத்ராதிபர்.

# தத்க்ரது ந்யாய விமர்ஸம்.

(தொடர்ச்சி.)

இதில் அபோகவ்யவச்சேதம் அர்த்தமென்று சொல்லுகிறவர்களின் தாத்பர்யம்:—அனந்தத்வம் ஸ்வரூப நிரூபக தர்மமாகையால் எல்லா வித்யைகளிலும் உபாஸிக்கப்படுகிறதே. ஆனால், அந்த அனந்தத்வமாவது என்ன? ஸ்ருதப்ரகாஸிகையில் "இதி ஸத்யம் தேஶ்தோ பரிச்சேதராஹித்யம்; ஸர்வ ஸ்வாஸாராபி காரணத்வாத் வஸ்துபரிச்சேத ராஹித்யம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்: இந்த இந்த வஸ்து ப்ரஹ்மமன்றென்று சொல்ல முடியாமை, எல்லா வஸ்துக்களுடனும் சேர்த்துச்சொல்லக் கூடியதாயிருக்கை. ப்ரஹ்மம் எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவாயிருப்பதால், சைத்ரன் மைத்ரன் சமையற்காரன் குள்ளன் கிளன் கூலிக்காரன் என்கிற வார்த்தைகள், ஆத்மாவுக்கு இவ்வகைப்பட்ட தொழில்களும், பெயர்களும், உருவங்களும் இல்லையாகிலும், இவைகளையுடைய சரீரத்தைச் சொல்லி அவ்வழியால் அதற்குள்ளிருக்கிற ஆத்மாவைச்சொல்வது போலவே, குடம் மரம் துணி முதலிய வார்த்தைகளும் அவைகளைச் சொல்லி அவைகளுக்கு ஆத்மாவாகிய பரப்ரஹ்மத்தைச் சொல்லுகின்றன. ஆகையால் "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம"-[இந்த எல்லா வஸ்துக்களும் ப்ரஹ்மம்] என்கிறபடி ப்ரஹ்மத்துக்கு வஸ்துபரிச்சேத மில்லையென்று ஏற்படுகிறது. ஸ்ரீபாஷ்யத்திலும் "ஸமஸ்தஸாமான்யஸ்ய ஸ்வரூபேண ஸ்வகுணைஸ்சாநந்த்யம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம் 'ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமும் குணங்களையுடையதாதலால் ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் அனந்தமாயிருக்கையை அனந்த பதம் சொல்லுகிறது.' என்பதுதான். குணங்களுக்குத் தேசத்தாலும் காலத்தாலும் அள



வில்லாமையால், தேசத்தாலும் காலத்தாலும் அனந்தத்வமுண்டு; ஆனாலும், கீழ்ச்சொன்ன வஸ்துபரிச்சேதம் [அதாவது வஸ்துவிலும் அளவில்லாமை] இல்லை; அது ஸ்வரூபம் மாத்திரத்திற்குத்தான் என்று ஸ்ருதப்ரகாஸிகையில் வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால், குணங்களால் அனந்தமாயிருக்கையாவது தேசத்தாலும் காலத்தாலும் அளவில்லாத குணங்களையுடைத்தாயிருக்கையென்று ஸ்பஷ்டமா யேற்படுகிறதே தவிர, எண்ணிறந்த குணங்களை யுடைத்தாயிருக்கை யென்று ஏற்படவில்லை. இந்த ஸ்ரீபாஷ்ய வாக்யத்திற்கு வேறுவிதமான வ்யாக்யாநம் செய்கிறார்.

"யதா ஸ்வரூபாநந்த்யவஸ்துபரிச்சேதராஹித்யம்" என்று தொடங்கி 'தஸ்ய ஸ்வரூபஸ்ய நிரதிஶயஸ்வபரிச்சேதம், ஶாஶ்வதவஸ்துபரிச்சேதம் ஸ்வாபாவிகஸ்ய குணாநாம் ஸங்க்யே......ஸர்வஸ்வ ஸாமாநாயிகாரண்யாதஸ்வ வாஸ்துஸங்கம்" என்றுமனவாக எல்லாவிதத்தாலும் எல்லையில்லாத மென்மையுடைத்தா யிருக்கை, முன் சொன்ன வஸ்துபரிச்சேத மில்லாமையும் இதற்குள்ளடங்கியதுதான் என்று; ஸ்ரீ ஸாஷ்யத்திலும் இந்த அர்த்தத்தைத் திருவுள்ளம்பற்றியே "ஸாதிஶய ஸ்வாபாவிக குணா நிரூபாவ்யாவ்ருத்தா:" என்று சொல்லப்பட்டது. அதாவது, இந்தப் பதத்தால் எல்லையுள்ள ஸ்வாபாவிக குணங்களையுடைய நித்யஸூரிகள் விலக்கப்பட்டார்கள். [அதாவது - ஈஶ்வரனுடைய ஸ்வாபாவிக குணங்களைவிடத் தாழ்ந்த ஸ்வாபாவிக குணங்களையுடைய நித்யஸூரிகள் இந்த வாக்யத்தாற் சொல்லப்படவில்லை என்று தாத்பர்யம்]. இப்படியிருக்கையில், ப்ரஹ்மம் எண்ணிறந்த குணங்களையுடையதென்று உபாஸிக்கப்படாமையால் முன்சொன்ன ஸ்ருதி ஸ்ம்ருதி ஸூத்ர ஸாஷ்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கு விரோதம் வரும். முதல் பக்ஷத்தில் ஸ்ருதப்ரகாஸிகையில் குணங்களுக்குத் தேசத்தாலும் காலத்தாலும் அனந்தம் மாத்திரம் சொன்னதா யேற்படுகிறபடியால் அந்தப்பக்ஷத்திலும் கீழ்ச்சொன்ன விரோதம் வரும்.

எல்லாக்குணங்களும் எல்லா வித்யைகளிலும் த்யாநிக்கப்படுகிறதாயிருந்தால் "ஆத்யாநாய" என்கிற ஸூத்ர வ்யாக்யாநத்தில் ஆத்யாநத்துக்காக இவ்வளவு குணங்கள்தான் த்யாநிக்கவேண்டியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு ஆத்யாநமாவது மற்ற வஸ்துக்களைவிட வேறுபட்டது என்று தெரிந்துகொள்வதானென்று ச்ருதப்ரகாசிகையில் வ்யாக்யாநம் செய்யப்பட்டுள்ளது; ஆதலால், அப்படி தெரிந்து கொள்வதற்கு உபயோகமில்லாத ஸர்வ கர்மத்வம் முதலிய குணங்கள் எந்த வித்யையில் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அந்த வித்யையிலே மாத்திரம் அந்தக்குணங்களைத் த்யாநிக்கவேண்டியது என்று அருளிச்செய்யப்பட்டதற்கு விரோதம் வரும்.

மேலும், உபாஸநத்தில் எண்ணிறந்த குணங்களென்று மொத்தமாய் உபாஸிக்கப்பட்டால் ஸாதந தசையில் த்யேயமாகவும் ஸர்வஜ்ஞத்வமாகவும் அந்தந்தக்குணங்கள் தனித்தனியே எப்படி தோன்றக்கூடும்? உபாஸிக்கப்பட்ட ஆகாரமொழிய வேறு தோன்றக்கூடாதாகையால் தோன்றுகிறதில்லையெனில் எல்லாக் கர்மங்களும் நீங்கினபிறகு வரக்கூடிய மோக்ஷ தசையில் அந்தந்தக் குணங்கள் தனித்தனியே தோன்றாமலிருப்பதற்குக் காரணமாய் ஏதாவது ஒரு தடை சொல்வது ஸ்ரீ பாஷ்யாதிகளுக்கு விருத்தம். ஜகத்வ்யாபாராதிகரணத்தில் "யதா க்ஷீணாநி ப்ரத்யக்ஷமேவ மோக்ஷ இதி" என்கிற வாக்யத்திற்கு ச்ருதப்ரகாசிகையில் அருளிச்செய்யப்பட்டிருக்கிற 'தடங்கல் நிவர்த்தித்தால் தானாகவே எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாய் அறியக்கூடிய ஜ்ஞாநம், ப்ரஹ்மத்தின் குணம் ஐச்வர்யம் ஸௌந்தர்யம் முதலியவற்றையும் ப்ரத்யக்ஷமாய் அறிகின்றது' என்று அர்த்தமுள்ள வாக்யத்திற்கும் விருத்தமாம். மேலும், இதே வாக்யத்தில் முக்தர்களுக்கு வருகிற அநுபவம் ப்ரத்யக்ஷமென்று ஏற்படுகிறது. ச்ருதியிலும் 'ஸர்வம் ஹ பச்ய: பச்யதி' [எல்லாவற்றையும் பார்க்கிறான்] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பாஷ்யத்தில் "ஜகத்வ்யாபாரவர்ஜம்" என்கிற ஸூத்ர வ்யாக்யாநத்தில் "ப்ரஹ்மயாதாத்ம்யாநுபவரூபமோக்ஷாநந்தரம் ஸ்வஸ்ய ப்ரஹ்மஸாம்யாவிர்பாவ இதி ஸ்திதம் வாக்ய" என்கிற வாக்யம் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது; அதன் அர்த்தம் :— ப்ரஹ்மத்தின் உண்மையை அநுபவிக்கிறதாகிற போகம் மாத்திரத்தில் ப்ரஹ்மத்தோடு முக்தனுக்கு ஸமமாயிருக்கை சொல்லியிருக்கிறபடியால் என்பதுதான். ப்ரஹ்மத்தின் அநுபவமோ ப்ரத்யக்ஷமென்று "யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந்" இத்யாதி ப்ரமாணங்களால் ஏற்படுகிறதாகையால் அதற்கு ஸமமான முக்தனுடைய அநுபவமும் ப்ரத்யக்ஷமென்று ஏற்படுகிறது. அப்படி ப்ரத்யக்ஷமாக வஸ்துவை அறியும்போது அதனுடைய ஆகாரம் ரூபம் முதலியவற்றையும் கூடவேயறியுமல்லது கேவலம் வஸ்துவைமாத்திரம் அறியாது. அந்த ஆகாரம்தான் ஜாதி தர்மம், மற்ற வஸ்துக்களைவிட பேதமும்; ஆனால் இதை விட வேறு என்று சொல்லுகிறபோது இதை யென்று சொல்லப்படுகிற வஸ்துவின் அறிவும், இது வென்றுசொல்லப்படுகிற வஸ்துவின் அறிவும் வேண்டும் என்று விவரமாய் ஜிஜ்ஞாஸாதிகரண பாஷ்யத்தில் மஹாஸித்தாந்தத்தில் "ப்ரத்யக்ஷேண வஸ்துஸம்ஸ்தாநமேவ ப்ரதீயதே, ஸகலேதரவ்யாவ்ருத்தமேவ ப்ரதீயதே, வ்யாவ்ருத்திச் சாகாராதிஸம்ஸ்தாநவிசேஷவிசிஷ்டதயைவேதி ப்ரதீதே:" என்றும், "த்ரிகோணஸாஸ்நாதிஸம்ஸ்தாநவிசேஷேண விநா கஸ்யசித் பதார்த்தஸ்ய க்ரஹணாயோகாத்" என்றும், "ப்ரத்யக்ஷேண ஸஸம்ஸ்தாநமேவ வஸ்து க்ருஹ்யதே" என்றும், "ஜாத்யாதிவிசிஷ்டஸ்யைவ வஸ்துந: ப்ரத்யக்ஷவிஷயத்வாத் ஜாத்யாதேரேவ ப்ரதியோக்யபேக்ஷயா வஸ்துந: ஸ்வஸ்ய ச வ்யவஹாரஹேதுத்வாச்ச" என்றும் இன்னும் பலவிடங்களிற் சொல்லப்பட்டிருக்கிறதாகையாலும், முக்தி தசையில் குணங்கள் தனித்தனியே த்யேயமாகவும் வாத்ஸல்யமாகவும் அந்தந்தப் பிரிவுகளுடன் தோன்றுகின்றனவென்று ஒப்புக்கொள்ளவேண்டியது அவச்யம்.

இதனால், அந்யயோகவ்யவச்சேதமும் அர்த்தமென்பவர்கள் ப்ரஹ்மத்தோடுசேர்ந்து அந்வயிக்கும்பொழுது குணங்கள் மொத்தமாய்த் தோன்றுகின்றனவென்றும், மற்ற ஸமயத்தில் அந்தந்த ஸ்வபாவங்களோடு தனித்தனியே தோன்றுகின்றனவென்றும், ஆகையால் ஸர்வஜ்ஞனும் உண்டென்றும், அப்படிக்கல்லாமல் ஓரே தடவையில் ப்ரஹ்மமும் அதன்குணங்களும் அவைகளின் ஸ்வபாவங்களும் அறியப்படவேண்டுமென்றால் ஒரு குணத்தில் அநேகமான குணங்களைக்காட்டிலும் பேதமுண்டாகையால் எல்லாம் ஓரே தடவையில் அறிவதற்கு அஸாத்யமாகும் என்றும் சொல்வது அந்தந்த வஸ்துவின் ஆகாரமே மற்ற வஸ்துக்களைவிடப் பேதமாகையால் அந்த ஆகாரத்தைத்தெரிந்த மாத்திரத்திலேயே எல்லாப் பேதங்களும் அறியப்படுகின்றனவென்றும், அந்த ஆகாரமில்லாமல் வஸ்து ப்ரத்யக்ஷமாய் அறியப்படுகிறதில்லையென்றும், அந்த ஆகாரமே ஜாதியென்று சொல்லப்படுகிறதென்றும் அர்த்தமுள்ள மேற்கண்ட ஸ்ரீ பாஷ்யவாக்யங்களுக்கு விருத்தமென்று விளங்குகின்றது.

மேலும், ‘ஏவ’ என்பதன் அர்த்தத்தை விசாரித்தாலும் இவ்விடத்தில் அயோகவ்யவச்சேதமே அர்த்தமென்று சொல்லவேண்டியது அவச்யம் என்று தோன்றுகிறது. எப்படியெனில் ‘ஏவ’ என்பது விசேஷணம், விசேஷ்யம், க்ரியை என்ற மூன்றுடனும்சேரலாம். அந்தந்தப்பதங்களுடன் சேரும்போது வெவ்வேறு அர்த்தத்தைக் காட்டக்கூடிய சக்தியைப் பெறுகின்றது. இந்தவிஷயத்தை "விசேஷணவிசேஷ்யாப்யாம் க்ரியயாபி ஸஹோதித: | அயோகம் யோகமபரைரத்யந்தாயோகமேவ ச ‖ வ்யவச்சிநத்தி தர்மஸ்ய நிபாதோ வ்யதிரேசக:" என்கிற ஸ்லோகங்கள் சுக்கிக்காட்டுகின்றன. இதில் விசேஷணத்தோடு சேர்ந்த ஏவகாரம் "சங்க: பாண்டுர ஏவ" [சங்கு வெண்மையாகவே யிருக்கும்] என்பது; இவ்விடத்தில் சங்கு வெண்மையா யல்லது இராதென்று அயோகவ்யவச்சேதம் அர்த்தம்: அன்றி, மற்றைப் பின்வர்ணங்களைத்தரித்திருத்தல் முதலிய ஆகாரங்களில்லையென்பது அர்த்த



மன்று. விசேஷ்யத்தோடுசேர்ந்த ஏவகாரத்திற்கு உதாஹரணம் "பார்த்த ஏவ தநுர்தர:" [அர்ஜுனனே வில்லாளி] என்பது; இது அர்ஜுனன்தவிர மற்றவன் வில்லாளி யல்லனென்று அந்யயோகவ்யவச்சேதத்தைக் காட்டுகிறது. க்ரியையோடு சேர்ந்த ஏவகாரத்திற்கு உதாஹரணம் "ஜீர்ணம் பர்ணம் பதத்யேவ" [பழுத்த இலை விழவே விழுகின்றது] என்பது இதுவும் அவச்யமாய் விழுமென்று காட்டுகிறபடியால் அயோகவ்யவச்சேதத்தின் உறுதியைச் சொல்லுகிறது. ஸ்ரீதயாசதக வாக்யத்தில் ‘தயைவ’ என்கிற ஏவகாரம் ‘தயா’ என்கிற விசேஷணத்தோடு சேர்ந்திருப்பதால் அயோகவ்யவச்சேதத்தையே காட்டும்.

ஸ்ரீ நிகமாந்தமஹா தேசிகன் அருளிச்செய்த "உபாயவிதமஜ்ஞாநசேஷ:" என்கிற ஸ்லோகத்தின் அர்த்தத்தையும், இந்த ஸ்லோகம் இவ்விடத்தில் எந்த ஸம்பந்தத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டது என்பதையும் விசாரிப்போம். இந்த ஸ்லோகத்தையுடைய அதிகாரத்தில் "முமுக்ஷுக்களுக்குக் கர்த்தவ்யமான உபாயமாவது—ஒரு ஜ்ஞாநவிகாஸவிசேஷம்; இதனால் ஸாத்யமாய் ப்ராப்யரூபமான உபேயமும் ஒரு ஜ்ஞாந விகாஸ விசேஷம்" என்று உபாயம் ஃபலம் இந்த இரண்டும் ஜ்ஞாநத்தின் பாவுதல் என்றுசொல்லி, அதன்மேல் ஜ்ஞாநங்களுக்கு ரூபம் முதலிய ஆகாரங்களொன்றுமில்லையாகையால் அதனால் அறியப்படும் விஷயங்களைக்கொண்டு பேதம் சொல்லவேண்டுமென்று சொல்லுகிற "அதோ நைவ விசேஷோ ஹி நிராகாரதயா தியாம்" என்கிற ஸ்லோகத்தின்படி மாட்டைப்பற்றிய ஜ்ஞாநம் மனிதனைப்பற்றியஜ்ஞாநம் என்று பேதம் சொல்லவேண்டியபடியால் இவ்விருவகை ஜ்ஞாநமும் ப்ரஹ்மத்தையும் அதன் குணங்களையும் பற்றியதாதலால் எப்படி பேதம் சொல்ல முடியுமென்கிற ஆக்ஷேபத்தில் இந்த ஜ்ஞாநங்களுக்குள் ஒன்றுக்கொன்றுள்ள பேதத்தைக் காட்டுகிறார். மேல் வாக்யத்தால் "இவற்றில் உபாயமாகிற ஜ்ஞாநவிகாஸ விசேஷம்

காரணஸாபேக்ஷமுமாய் ஶாஸ்த்ரவிஹிதமுமாய் ஸத்யகாமாதி களான ஸ்வாபாவிகாஸ்வாபாவிகலக்ஷணங்கள் அஞ்சோடே கூடின அவ்வோவித்யா ப்ரதிநியதலக்ஷணாதிகளினாலே பிந்ந ப்ரஹ்மவிஷயமுமாயிருக்கும்; இதன் கருத்து—ஸத் ப்ரப்ருதிகளாகிற உபாஸங்கள் மனத்தினாற் செய்யக்கூடியதாய் "உபாஸீத" "நிதித்யாஸிதவ்ய:" "ஶரணம்வ்ரஜ" இவை முதலியவற்றால் செய்ய வேண்டியதாக ஶாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டதாய் ஸத்யகாம முதலான ஸ்வாபாவிகாஸ்வாபாவிகலக்ஷணங்கள் அஞ்சுடன் சேர்ந்ததாயும் அந்தந்த வித்யைகளில் மாத்ரம் ப்ராதிக்கவேண்டியதாக ஏற்பட்டதாயுமுள்ள லக்ஷணம் ரூபம் இவைகளால் அளவிடப்பட்ட ப்ரஹ்மத்தைப்பற்றியதாயிருக்கும்; என்பதுதான். உபேயமாகிற ஜ்ஞாநவிகாஸவிஶேஷம் காரணநிரபேக்ஷமுமாய் ஸ்வபாவப்ராப்தமுமாய் லக்ஷணவிஶிஷ்டாதிக ளெல்லாவற்றாலும் பரிபூர்ண ப்ரஹ்மவிஷயமுமாயிருக்கும். காரணநிரபேக்ஷமாயிருக்கையாவது- கண் மநஸ் முதலிய இந்திரியங்கள் வழியாய்ப்பரவவேண்டாதபடியிருக்கை. ஸம்ஸாரதஶையில் கண் முதலிய வழியாயன்றோ ரூபம் முதலியவைகளை அறியவேண்டியிருக்கின்றது; இப்படியில்லாமல் தானே எல்லாவற்றையும் அறியக்கூடியதாயிருக்கை. ஸ்வபாவப்ராப்தமாயிருக்கையாவது-ஆத்மாவுக்கு ஸ்வபாவத்தாலேயே ஏற்பட்டதாயிருக்கை; அதாவது, அப்படிப்பட்ட ஜ்ஞாநத்தின் பரவுதல் ஸம்ஸாரதஶையில் கர்மத்தால் தடுக்கப்பட்டிருந்து அந்தத்தடை நீங்கினபிறகு தானே உண்டாகிறது. மற்றத்திற்கு அர்த்தம் ஸுலபமாகையால் இங்கு விவரிக்கப்படவில்லை.

இதற்குப்பிறகு, உபாஸநம் சிற்சில குணங்களைப்பற்றியதாகவும், அநுபவம் எல்லாக்குணங்களையும் பற்றியதாகவுமிருந்தால் தத்க்ரதுந்யாய விரோதம் வருமே; அந்த ந்யாயத்திற்கு உபாஸிக்கப்பட்ட குணங்கள் தவிர மற்றைக்குணங்கள் அநுபவிக்கப்படமாட்டா என்கிற அந்யயோகவ்யவச்சேதம் அர்த்தமன்றோ என்கிற



ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம் அருளிச்செய்கிறார், "உபாஸிதகுணாதேர்யா ப்ராப்தாவப்யபஹிஷ்க்ரியா । ஸா தத்க்ரதுநயக்ராஹ்யா நாகாராந்தரவர்ஜநம்" என்கிற ஶ்லோகத்தால். [உபாஸிக்கப்பட்ட குணங்கள் அநுபவத்தில் அவஶ்யம் விஷயமாகுமல்லது அநுபவிக்கப்படாமற்போகிறதில்லை]. இப்படி அயோகவ்யவச்சேதத்தில் தத்க்ரதுந்யாயத்திற்குத் தாத்பர்யமேயொழிய உபாஸிக்கப்படாத குணங்கள் அநுபவிக்கப்படமாட்டா வென்கிற அந்யயோகவ்யவச்சேதத்தில் தாத்பர்யமில்லை. இந்த ஶ்லோகம் 'கீழ்ச் சொல்லியபடி உபாஸிக்கப்படாத குணங்கள் அநுபவிக்கப்படுகிறதில்லை; ஏனெனில், உபாஸிக்கப்படாத குணங்களில்லை' என்கிற அர்த்தமுள்ளது என்று சொல்லில், இந்த ஶ்லோகமில்லாமலே இந்த அர்த்தம் ஏற்பட்டுவிடும்; உபாஸநத்தில் அநந்தமென்று உபாஸிக்கப்படுகிறபடியால் உபாஸிக்கப்படாத குணங்களேயில்லை: ஆகையால், விரோதமில்லை. இவ்வளவு ஸமாதாநம் அவஶ்யமாயும் போதுமானதாயுமிருக்க, இந்த ஶ்லோகம் வ்யர்த்தம்; இந்த ஶ்லோகத்திற்குப்பிறகும் 'ஏனெனில்' என்று ஆக்ஷேபம்வந்து அதற்கு மேற்சொல்லியபடி வாக்யம் நாமே வருவித்துக்கொள்ள வேண்டியிருப்பதாலும், அதனாலேயே ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம் வந்துவிடுகிறபடியாலும் நிஷ்ப்ரயோஜநமாய் இந்த ஶ்லோகம் என் அருளிச்செய்தார்! மேலும் 'நியதப்ரஹ்ம விஷயமாயிருக்கும்' என்று கீழ் அருளிச்செய்த வாக்யத்திற்கும் விரோதம்வரும். "ஸா தத்க்ரதுநயக்ராஹ்யா" என்கிறவரையில் அர்த்தம் இரண்டு வாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறபடியால் அது இவ்விடத்தில் மிகவும் நிஷ்ப்ரயோஜநம். ஆகையால், இந்த ஶ்லோகத்திற்குமேல் விவரித்தபடியே அர்த்தம் கொள்ளவேண்டியதென்று தோன்றுகிறது.

ஆதலால், 'ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வம்' முதலியவைகளை உபாஸித்தாலும் [illegible] முதலிய உபாஸிக்கப்படாத குணங்களும் அநுபவிக்கப்படலாமாகையால், இந்த அதிகரணத்தில் தத்க்ரு

ஸாதூர்ய விரோதம் எப்படி சொல்லலாம் எனில், "ஸ்வேநரூ பேணாபிநிஷ்பத்யதே" என்றபடி அர்ச்சிராதி மார்க்கத்தால் பரமபதமடைந்து தன்னுடைய ஸ்வாபாவிகமான ரூபத்தின் ப்ரகாசமுண்டாகிறது என்றும், தன்னுடையதான ரூபத்தோடு சேருகிறான் என்றும், அபஹதபாப்மத்வம் முதலான குணங்கள் முக்தி தசையில் ப்ரகாசிக்கின்றன வென்றும் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அப்பொழுது, ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள்கூட ப்ரகாசிக்கின்றனவென்று ஒப்புக்கொள்ள இடமில்லை; இவ்விரண்டுவகைக் குணங்களும் ஒன்றுக்கொன்று விரோதமுள்ளவைகளாதலால். எப்படி விரோதமென்னில், கர்த்ருத்வமென்பது - புண்ய பாபங்களைச் செய்தல்; போக்த்ருத்வமென்பது-அந்தப் புண்யபாபங்களின் பலமான ஸுகதுக்கங்களை அநுபவித்தல்; ஜ்ஞாத்ருத்வமென்பது - கர்மங்களை யநுஸரித்து இந்திரியங்களின்வழியாய் அறியும் தன்மை யுடைத்தாயிருக்கை; அபஹதபாப்மத்வமோ - புண்யபாபமற்றிருக்கை; விஸோகத்வமாவது - துக்கமில்லாமை; இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமுள்ளவைகள் ஆகையால், மேற்சொல்லிய ஜ்ஞாத்ருத்வாதிகளை உபாஸித்தால் அவை அவஸ்யம் அநுபவத்தில் வரவேண்டியிருக்கும். அப்பொழுது அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களும் உண்டாகின்றனவென்று சொல்லமுடியாது. அபஹதபாப்மத்வம் உண்டாகிறதில்லை யென்னில், ஸ்ருதிவ்ருத்தாதிவிரோதம்வரும். ஆகையால், அந்த அபஹதபாப்மத்வம் முதலியவைகளே உபாஸிக்கத்தக்கவைகள். இந்த அபிப்ராயத்தால் தான் ஸூத்ரத்தில் 'விரோதமான தன்மையுள்ள' என்று அர்த்தமுள்ள 'வ்யதிரேக' என்கிற ஸப்தத்தால் அந்த அபஹதபாப்மத்வம் முதலிய குணங்கள் சொல்லப்பட்டன.

சே. நரஸிம்ஹாசாரியர்.

(முற்றிற்று.)

---

# பிரிவுகளின் மாஸ அறிக்கை.

## 1. மதிராஸ் - ஸைதாப்பேட்டை பிரிவு.

சென்ற ஸாதாரண௵ பங்குனி௴ 27௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 4-மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் டை. பிரிவின் ஐந்தாவது கூட்டம் சேர்ந்தது. ஏறக்குறைய 50 - ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீமாந் சே. நரஸிம்ஹாசாரியர் இதற்குமுந்தி உபந்யஸித்துப் பாக்கியாக விட்டிருந்த "அமலனாதிபிரான்" க்ரந்தத்தில் 5-6-பாசுரங்களைப்பற்றி உபந்யாஸம் செய்தார். இந்த இரண்டு பாசுரங்களும் நாராயண ஸப்தார்த்தத்தை விவரிக்கின்றன வென்றும், அதில் முதற்பாசுரத்தில் லக்ஷ்மீ ஸம்பந்தமே நாம் விசேஷித்து அறியவேண்டியதென்றும், மற்றைத் தேவதைகளைக் காட்டிலும் நாராயணனுக்கு விசேஷத்தைக் காட்டக்கூடியது இந்த லக்ஷ்மீ ஸம்பந்தமே என்றும், புருஷஸூக்தத்தில் இந்த லக்ஷ்மீ ஸம்பந்தத்தை முன்னிட்டுப் பரமனுக்கு விசேஷம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதை அநுஸரித்துச் செந்தமிழ் பாடும் முதலாழ்வார் மூவரில் மூன்றுமவரான பேயாழ்வார் உபக்ரமோப ஸம்ஹாரங்களில் இப்படியே அருளிச்செய்திருக்கிறாரென்றும், மற்ற ஆழ்வார்களும் அவரபிப்ராயத்தை அடியொற்றின பூர்வாசாரியர்களும் அப்படியே அருளிச்செய்திருக்கிறார்களென்றும், ஆகையால்தான் இங்கும் அந்த நாராயணஸப்தத்தை விவரிக்குமிடத்தில் முதற்பாசுரத்தில் லக்ஷ்மீ ஸம்பந்தத்தை அநுஸந்திக்கிறாரென்றும், அதில் ஸர்வபாபத்தையும் போக்கடிக்கும் ஈஸ்வரனுடைய தன்மையும் தானே ஸித்தோபாயமாய் நின்று எல்லாப்ரகாரமாகவும் சேதநர்களை ரக்ஷிக்குந் தன்மையும் மறுபடி சேதநர்கள் வாஸநாவிசேஷ வசத்தால் பாபம்செய்யாமலிருக்கும்பொருட்டு அவர்களின் நெஞ்சில் என்னுள் என்னைப்போலத் தான் குடிகொண்டிருக்குந் தன்மையும், இதனால் தனக்கு இருக்கும் அந்தர்யாமித்வமும், இவ்வளவு பேறு பெறுவதற்குத் தங்களிடத்தில் ஸரியான ஹேது இல்லாமலிருக்கச்செய்தேயும் தங்களுடைய இவ்வளவு ப்ரயோஜநத்திற்கும் தானே முக்கிய காரணமாக இருக்கிறான் என்கிற கரைபுரண்ட கருணையும், ஸ்வாமித்வம் முதலான ஸம்பந்தங்களும் ஸ்ரிய:பதியாக இருக்குந் தன்மையும், திவ்யமங்கள விக்ரஹ யோகமும் விவரிக்கப்பட்டுள்ளன வென்றும்; இரண்டாவது பாசுரத்தில், ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷித்துத் தன்னை ஆஸ்ரயித்தவர்களையும் தான் ரக்ஷிக்கிறு

னென்றும், அதனால் ஈஶ்வரனென்று ஸங்கிக்க யோக்யதையுள்ளவர்களும் கர்ம வஶ்யர்கள் என்றும், அவர்களும் ப்ரஜாபதியினால் ரக்ஷிக்கப்பட்டவர்களாவரென்றும், ஆகையினால் நாராயண ஶப்தத்தால் சொல்லப்பட்ட ஸர்வ ரக்ஷகத்வத்திற்கு ஓரிடத்திலும் ஸங்கோச மில்லையென்றும், ப்ரபந்நனுக்கு ப்ரபத்திவித்யையில் அவஶ்யம் அநுஸந்திக்க வேண்டுவதான ஸௌலப்யமும் கர்மத்தினால்வந்த பிதா முதலியவர்கள் நிக்ரஹித்தாலும் அவன் ரக்ஷணமே செய்கையால் அவன் நிருபாதிக பிதா வென்றும், இதனால் நாராயண ஶப்தத்திற்கு வ்யாக்யானம் செய்த "மாதா பிதா" என்கிற ஶ்ருதியின் அர்த்தம் விவரிக்கப்பட்டதென்றும், எல்லா லோகங்களுக்கும் காரணமும் லயிப்பதற்கு இடமும் தானே என்றும், இவ்விதமாக இரண்டு பாசுரங்களாலும் நாராயண ஶப்தார்த்தம் வ்யக்தம் செய்யப்பட்டிருக்கிற தென்றும் தெளிவாக விவரித்துச்சொல்லி, ஸ்ரீ நரஸிம்மாசாரியர் உபந்யாஸத்தை முடித்தார். உபந்யாஸம் முடிந்தவுடன் வந்திருந்தவர்கள் எல்லாரும் ஸ்வாமியின் அநுமதியின்பேரில், அடுத்த இரண்டு ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூட்டம் சேர்ந்து "அமலனாதிபிரான்" உபந்யாஸத்தைக் கோடை விராமகாலத்திற்குமுந்தியே முடித்துவிட வேண்டியது என்று தீர்மானித்தார்கள். பிறகு கூட்டம் கலைந்தது.

நாளது சித்திரை௴ 4௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 4-மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஷை பிரிவின் 6-வது கூட்டம் சேர்ந்தது. 100 ஸ்வாமிகளுக்குமேல் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீமாந் சே. நரஸிம்மாசாரியர் "அமலனாதிபிரான்" 7-8-வது பாசுரங்களைப்பற்றி உபந்யாஸம் செய்தார். முதல் 6 பாசுரங்களால் ப்ரணவத்தினுடையவும் நமஶ் ஶப்தத்தினுடையவும் நாராயண ஶப்தத்தினுடையவும் அர்த்தம் சொல்லப்பட்டதென்றும், இப்பொழுது நாராயண ஶப்தத்தைச் சேர்ந்த சதுர்த்தீ விபக்தியின் அர்த்தம் சொல்லப்படுகிறதென்றும், அந்த விபக்திக்கு 'ஸம்ப்ரதானே சதுர்த்தீ' என்கிற ஸாமாந்ய அர்த்தம் இருக்கையிலும், இங்கே அது விவக்ஷிதமன்று என்றும், எல்லாருக்கும் உத்தேஶ்யமான கைங்கர்யம் தான் அர்த்தமென்றும், அப்படிப்பட்ட கைங்கர்யத்தைக் காட்டக்கூடிய திருவாழி திருச்சங்குகளை ப்ரஸ்தாவித்து, திருவரங்கத்தெம்பெருமானுடைய திருவதாரத்தின் அழகிலும் திருக்கண்களின் அழகிலும் ஆழ்வார் ஈடுபடுகிறார் என்றும் விவரித்து உபந்யாஸம் செய்தார். ஸம்ஸ்க்ருத ஸ்கூல் இன்ஸ்பெக்டரான வித்யாநிதி என்னும் பிருதுபெற்ற ஸ்ரீமாந் ஆர். கிருஷ்ணமாசாரியர் முதலான அநேக வித்வான்கள் வந்திருந்தார்கள். எல்லாரும் உபந்யாஸத்தின் ஆகர்ஷத்தை அநுபவித்து, உபந்யாஸத்தைப் பஹுவிதமாக ஶ்லாகித்தார்கள். 6-30-க்குக் கூட்டம் கலைந்தது.



1911௵ மார்ச்சு௴த்து வரவு செலவு கணக்கு.

| | விவரம். | | வரவு. | | | செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மார்ச்சு௴ 1௳யில் கையிருப்பு ... | ரூ. | 23 | 2 | 3 | 0 | 0 | 0 |
| 2 | 1910-11 வருஷசந்தா வரவு .. | ரூ. | 9 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | அச்சுச் செலவு ... | ரூ. | 0 | 0 | 0 | 1 | 13 | 0 |
| 4 | ஸ்டாம்பு கூலி வகையரா செலவு .. | ரூ. | 0 | 0 | 0 | 0 | 11 | 6 |
| 5 | சபைப் பொதுக்காரியதரிசிக்கு 26-வது விதிப்படி அனுப்பியது ... | ரூ. | 0 | 0 | 0 | 3 | 9 | 7 |
| 6 | மார்ச்சு௴ 31௳யில் கையிருப்பு ... | ரூ. | 0 | 0 | 0 | 26 | 0 | 2 |
| | ஆக ரூ. ... | | 32 | 2 | 3 | 32 | 2 | 3 |

மயிலாப்பூர்.<br>1911௵ ஏப்ரல்௴ 1௳ } எஸ். வாஸுதேவன்,<br>காரியதரிசி.

மதிராஸ் சைதாப்பேட்டை பிரிவு.

## 2. திருப்பதிப் பிரிவு.

நாளது 1911௵ பிப்ரவரி௴ 20௳ கீழ்த்திருப்பதியில் இருக்கும் மைஸூர் மஹாராஜா ஸத்திரத்தில், ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யர்களும் அபிமானிகளுமாகச் சேர்ந்து ஓர் கூட்டம் கூடினார்கள். ஸ்ரீமாந் வே. அநந்தாசாரியர் அக்ராஸநாதிபதியாக இருந்தார். ஸ்ரீமாந் கபிஸ்தலம் தேசிகாசாரியர் முதலில் இச்சபையின் முக்கிய நோக்கங்களை விவரித்துரைக்க, வந்திருந்தவர்கள் எல்லாராலும் ஐகமத்யத்துடன் அவைகளை ஆலோசித்து, பின்வருமாறு தீர்மானம் செய்யப்பட்டது.

(1) ஸ்ரீ அஹோபிலமட சிஷ்ய ஸபை ஸம்பந்தமாக இவ்விடத்தில் ஓர் பிரிவு ஏற்படுத்தவேண்டியது. அந்தப் பிரிவுக்கு ஸ்ரீ. வே. அநந்தாசாரியர் ஸபாத்யக்ஷராகவும், ஸ்ரீ. மா. ஸுந்தராசாரியர் காரியதரிசியாகவும், ஸ்ரீ. ம. காசி. நா. ஜகந்நாதாசாரியர் உபகாரியதரிசியாகவும் ஏற்படுத்தப்பட்டார்கள்.

(2) இன்றையதினம் இவ்விடத்தில் நடந்த கூட்டத்தின் அறிக்கையின் நகல் ஒன்று சித்தூரில் இருக்கும் சபையின் பொதுக்காரியதரிசி ஸ்ரீ. வி. ராஜகோபாலாசாரியருக்கு அனுப்பவேண்டியது.

(3) கீழ்த்திருப்பதியிலும் மேல்திருப்பதியிலும் உள்ள மடங்களின் ஜீர்ணமான ஸ்திதியைப்பற்றி ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாபனம் செய்யவேண்டியது.

திருப்பதி,<br>மார்ச்சு௴, 1911. } வே. அநந்தாசாரியர்,<br>ஸபாத்யக்ஷர்.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனி.**

சென்ற மாஸத்திய ஸஞ்சிகை ப்ரசுரமான பிறகு நம்முடைய ஸபையின் அங்கத்தினர்களில் சிலர் போய் ஸ்ரீ அழகிய சிங்கரைத் தண்டன் ஸமர்ப்பித்ததில் வரவர ஸ்ரீஸ்வாமி திருமேனி பாங்காகிக்கொண்டு வருகிறதென்று தெரிந்துகொண்டதாகச் சொல்லக் கேள்விப்பட்டு நிரம்பவும் ஸந்தோஷத்தோடு கூடினவர்களாக இருக்கிறோம். ப்ரஜைகள் எல்லாவற்றிற்கும் நிச்ரேயஸத்தையே செய்யவேணுமென்கிற திருவுள்ளம் கொண்டிருக்கும் பகவான் அஹோபிலத்திலிருக்கும் அழகியசிங்கர் ... [illegible] ... கிருபைசெய்து, நமக்கு ஸர்வவிதத்தாலும் ஆப்ததமான ஸ்ரீ அழகியசிங்கரைப் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கும்படி கடாக்ஷிக்க வேணுமென்பதுதான் அனந்யசரண்களான சிஷ்யர்களின் அநுஸந்தானம் ப்ரார்த்தனை.

**ஸ்ரீ அழகியசிங்கரும், ஸபையும்.**

நம்முடைய பத்ரிகையை ஸ்ரீ அழகியசிங்கர் கடாக்ஷித்துத் திருவுள்ளம் பற்றவேண்டுமென்று ப்ரதிமாஸம் அனுப்பிக்கொண்டு வருகிறோம். எவ்வளவு வரையில் ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் ஸௌஹார்த்தாநுஸந்தாந பூர்வகமாக ப்ரதிபத்திவைத்திருக்கிறோமென்பது இந்தப்பத்ரிகையினால் விளங்கும். இப்படியிருக்கச்செய்தேயும், நாம் ஏதோ ஸாபராதிகளாக இருக்கிறதாகவும், தம்முடைய நியமநத்தை ப்ரதீக்ஷிக்காமலே சில வ்யாபாரங்களில் நாம் ப்ரவ்ருத்திக்கிறதாகவும், அதுதான் தமக்குக்கொஞ்சம் அஸமாதாநத்திற்கு ஹேதுவாக இருக்கிறதென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றியிருப்பதாக அவ்விடம்போய் வந்தவர்கள் சொல்லுகிறார்கள். இது, எங்கள் மனத்திற்குத் தாபத்தை ஜநிப்பிக்கிறது. நம்முடைய பாக்ய விப்லவத்தாலேயே



இப்படிப்பட்ட க்ருபா ஸங்கோசம் ஏற்பட்டிருக்கவேண்டுமே யொழிய நம்மிடத்திலுள்ள தோஷத்தாலுமன்று, ஸ்ரீ அழகிய சிங்கரின் வைஷம்யத்தாலுமன்று. சென்ற ஸம்வத்ஸரத்தில் இம்மாதிரியான ஸபை சேர்வதற்கு முன்னும், ஸபை சேர்ந்தபிறகும், இரண்டு மூன்று ஸமயங்களில், ஸபாத்யக்ஷர் முதலான சில முக்யமான சிஷ்யர்கள் ஸ்ரீ அழகியசிங்கர்ஸந்நிதிக்குப் போய்த் தங்களுடைய மநோகதமான அபிஸந்திகளை விண்ணப்பம் செய்துகொண்டதும், தஞ்சாவூர்ச் சங்கத்தில் செய்த தீர்மானப்படி, ஸ்ரீ அழகியசிங்கரை இச்சபைக்குப் போஷகராக இருக்கக் கிருபைசெய்யவேணுமென்று இதம்பரமாக காஞ்சீபுரம்போய் ஸபையின் அங்கத்தினர்கள் ப்ரார்த்தித்ததும், எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இப்படியிருக்க, ஸ்ரீஅழகியசிங்கரை உபேக்ஷிக்கிறோமென்பது எப்படி ஸம்பாவிதமாகும்? அப்படி அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றுவதும் ந்யாய்யமன்று. 'இதைச்செய், இதைச்செய்யாதே' என்று ஸ்வாமி யால் எப்பொழுது நியமிக்கப்படப்போகிறோம் என்று சாதகபக்ஷி போலக் காத்துக்கொண்டிருக்கும் நம்முடைய விஷயத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் கிருபைசெய்யவேணும். அஜ்ஞாந க்ருதங்களாக அபசாரங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவைகளை க்ஷமித்து, "[illegible]" என்கிறபடி அடியோங்களுக்கு ஜந்ம ஸாபல்யத்தை ஸ்ரீ அழகியசிங்கர் கொடுத்தருள வேணுமென்று ஸஹஸ்ரம் ப்ரார்த்திக்கிறோம். "[illegible]."

**திருவெவ்வுளூர் ஏஜண்டு.**

திருவெவ்வுளூர் ஸ்ரீவீரராகவன் ஸந்நிதி, ஸ்ரீ அஹோபில மடம் அழகிய சிங்கருடைய தர்மகர்த்ருத்வத்தைச் சேர்ந்ததென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இப்போது, ஸ்ரீ அழகிய சிங்கர் காவி வீரராகவ ஐயங்கார் என்னும் ஓர் ஸ்வாமியை ஏஜண்டாக நியமித்து அந்தத் தர்மகர்த்ருத்வத்தைப் பார்த்துவரும்படி ஏற்பாடு செய்

திருக்கிறார். அந்த ஸ்வாமி பராமர்சித்து வருவதில் சில தர்மக் குறைவுகள் நடப்பதாக மதிராஸில் ப்ரசுரமாகும் 'ஸ்டாண்டர்டு' என்னும் இங்கிலீஷ் பத்திரிகையில் வந்திருக்கும் கடிதங்களாலும், இன்னும் கர்ணாகர்ணிகமாகவரும் வார்த்தைகளாலும் தெரியவருகிறது. அவை என்னவென்றால்:—(1) ஸ்ரீவீராகவனுக்குச் சொந்தமான ஸந்நிதிவீதியை முனிசிபாலிட்டியார் ஆக்ரமிக்கும்படியாகவும், அப்படி ஆக்ரமித்து உத்ஸவகாலங்களில் அந்த வீதியில் கடைவைக்கும் வியாபாரிகள் கொடுக்க வேண்டிய ஸந்நிதிக்கு வரவேண்டியதான குடிக்கூலிகளை முனிசிபாலிட்டியாரே வஸூல் செய்து போகும்படியாகவும் பார்த்திருக்கிறாரென்றும், (2) அந்த வீதியில் இருக்கும் வீட்டுக்காரர்களில் சிலர் நியாயத்திற்கும் வழக்கத்திற்கும் விரோதமாக வீதியில் பிரவேசித்துக் குறடு முதலியவைகளைக் கட்டினதற்காக யாதொருவிதமான ஆக்ஷேபமும் செய்யாமலிருப்பதுடன், ஸந்நிதிக்காகப் பரிந்து சிலர் அந்த வீட்டுக்காரர்களின்பேரில் செய்திருக்கும் வியாஜ்யத்தில் தான் பிரதிவாதியாக ஏற்பட்டு ஸந்நிதிக்கு விரோதமாகக் காரியங்களைச்செய்கிறார் என்றும், ஆக முக்கியமாக இவை யிரண்டும்தான். இதன் உண்மை எவ்வளவோ ஏற்படவில்லை. உண்மையாக இருந்தால், அது மிகவும் க்ரமவிரோதமே. தான் பகடும் நியமிக்கப்பட்டு வந்திருக்கிறாரோ அந்தத்தர்மஹானி வருவதுடன்கூட ஸ்ரீ [illegible]ய சிங்கருடைய திருவுள்ளத்திற்கு உகப்பில்லாத காரியத்தைச் செய்வதாகவும் ஏற்படும். அதற்கு இடமில்லாமல் ஸ்ரீவீராகவ ஐயங்கார் ஸ்வாமி நடந்துகொள்வரென்று நம்புகிறோம்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUN 1911
MADRAS.

ஸ்ரீ:.

[illegible]

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்ஸு வைகாசிமீ. [ஸஞ்சிகை 4.

## அமலனாதிபிரான்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

காட்டவேகண்ட பாதகமல நல்லாடை யுந்தி
தேட்டருமுதரபந்தந் திருமார்பு கண்டஞ் செவ்வாய்
வாட்டமில்கண்கள் மேனி முனியேறித்தனிபுகுந்து
பாட்டினாற்கண்டுவாழும்பாணர்தாள்பரவினோமே.

[illegible] *

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---

* இது திருப்பாணாழ்வார் அருளிச்செய்த அமலனாதிபிரான் என்னும் ஸ்தோத்ரம். ஸ்ரீமாந் டி. ராஜகோபாலாசாரியரால் ஸம்ஸ்க்ருதத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 23–4–1911–ல் கூடின ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யஸபை சென்னபட்டணப் பிரிவின் சங்கத்தில் படிக்கப்பட்டது. படிப்பவர்களுக்கு அநுகூலமாய் அமலனாதிபிரானும் இதற்கடுத்து அச்சிடப்படுகிறது.

(க) அமலனாதிபிரானடியார்க்கென்னையாட்படுத்த
விமலன்விண்ணவர்கோன்விரையார்பொழில்வேங்கடவன்
நிமலனின்மலனீதிவானவனீண்மதிலரங்கத்தம்மான்திருக்
கமலபாதம்வந்தென்கண்ணினுள்ளனவொக்கின்றதே.

(உ) உவந்தவுள்ளத்தனாயுலகமளந்தண்டமுற
நிவர்ந்தநீண்முடியனன்றுநேர்ந்தநிசாசரரைக்
கவர்ந்தவெங்கணைக்காகுத்தன்கடியார்பொழிலரங்கத்தம்மான [ரைச்
சிவந்தவாடையின்மேற்சென்றதாமென்சிந்தனையே.

(௩) மந்திபாய்வடவேங்கடமாமலைவானவர்கள்
சந்திசெய்யநின்றானரங்கத்தரவினணையான்
அந்திபோனிறத்தாடையுமதன்மேலயனைப்படைத்ததோரெழி [ல்
உந்திமேலதன்றோவடியேனுள்ளத்தின்னுயிரே.

(ச) சதுரமாமதிள்சூழிலங்கைக்கிறைவன்தலைபத்
துதிரவோட்டியோர்வெங்கணையுய்த்தவனோதவண்ணன்
மதுரமாவண்டுபாடமாமயிலாடரங்கத்தம்மான்திருவயிற்
றுதரபந்தமென்னுள்ளத்துணின்றுலாகின்றதே.

(௫) பாரமாயபழவினைப்பற்றறுத்தென்னைத்தன்
வாரமாக்கிவைத்தான்வைத்ததன்றியென்னுள்புகுந்தான்
கோரமாதவஞ்செய்தனன்கொலறியேனரங்கத்தம்மான்திரு
வாரமார்பதன்றோவடியேனையாட்கொண்டதே.

(௬) துண்டவெண்பிறையன்றுயர்தீர்த்தவனஞ்சிறைய
வண்டுவாழ்பொழில்சூழரங்கநகர்மேயவப்பன்
அண்டரண்டபகிரண்டத்தொருமாநிலமெழுமால்வரைமுற்று [ம்
உண்டகண்டங்கண்டீரடியேனையுய்யக்கொண்டதே.



[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ க ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ உ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௩ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ச ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௫ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௬ ॥

(எ) கையினார்சுரிசங்கனலாழியர்நீள்வரைபோல்
மெய்யினார்துளபவிரையார்கமழ்நீண்முடியெம்
ஐயனாரணியரங்கனாரரவினணைமிசைமேயமாயனார்
செய்யவாயையோவென்னைச்சிந்தைகவர்ந்ததுவே.

(அ) பரியனாகிவந்தவவுணனுடல்கீண்டவமரர்க்
கரியவாதிப்பிரானரங்கத்தமலன்முகத்துக்
கரியவாகிப்புடைபரந்துமிளிர்ந்துசெவ்வரியோடிநீண்டவப்
பெரியவாயகண்களென்னைப்பேதைமைசெய்தனவே.

(கூ) ஆலமாமரத்தினிலைமேலொருபாலகனாய்
ஞாலமேழுமுண்டானரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும்முத்துத்தாமமும்முடிவில்லதோரெழில்
நீலமேனியையோநிறைகொண்டதென்னெஞ்சினையே.

(க0) கொண்டல்வண்ணனைக்கோவலனாய்வெண்ணெய்
உண்டவாயனென்னுள்ளங்கவர்ந்தானை
அண்டர்கோனணியரங்கனென்னமுதினைக்
கண்டகண்கள்மற்றொன்றினைக்காணாவே.

முற்றிற்று.

---



OFFICE OF THE REGISTRAR OF ... 26 JUN 1911 MADRAS.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ எ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ அ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ கூ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௰ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ கக ॥

[illegible]

---

ஸ்ரீ:

# விஶிஷ்டாத்வைதம்.

## 2. பரதத்வத்தின் ஜகத்காரணத்வம்

சென்ற ஸஞ்சிகையில் தத்வங்களின் விபாகத்தையும், அதில் முக்யமாகப் பரதத்வத்தின் ஸ்வரூபத்தையும் சொல்ல யத்நித்து, "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்கிற ஶ்ருதிப்படி ப்ரஹ்மம் ஸத்யமாயும் ஜ்ஞாநமாயும் அநந்தமாயுமிருக்குமென்றும், "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" என்கிற ஶ்ருதிப்படி ப்ரஹ்மம், புரோத்ருஶ்யமான ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, மோக்ஷம், ப்ரளயம் இவைகளுக்குக் காரணமென்றும் சொல்லப்பட்டது. ப்ரஹ்மம் ஜகத்காரணமென்று சொல்லுமிடத்தில் எவ்விதமான காரணமென்று விசாரித்து 'உபாதாந காரணமும் ப்ரஹ்மம், நிமித்தகாரணமும் ப்ரஹ்மமே' என்று சொல்லி, சேதநாசேதநங்களடங்கிய இந்த ஜகத் ப்ரஹ்மத்திற்கு ஶரீரமென்றும், ஈஶ்வரன் ஸ்ருஷ்டிகாலத்தில் ஸ்தூலசேதநாசேதந விஶிஷ்டனாகவும் ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்ம சேதநாசேதந விஶிஷ்டனாகவும் இருக்கிறபடியால் விஶிஷ்ட வஸ்துவின் அபேதம் ஏற்படுகிறதென்றும், இதுவே 'விஶிஷ்டாத்வைத' ஶப்தத்தின் அர்த்தமென்றும் விவரிக்கப்பட்டது.

இப்படி விஶிஷ்டாத்வைதத்திற்கு முக்யமாக இருக்கும் இந்தக் கொள்கைக்கு உள்ள ஶ்ருதிப்ரமாணத்தை விசாரிப்போம்; அதாவது—சேதநாசேதநங்களடங்கிய இந்த ஜகத் ப்ரஹ்மத்தின் ஶரீரம், இந்த ஜகத்திற்கு ப்ரஹ்மம் ஆத்மா, ஶரீரமாக இருக்கும் சேதநாசேதநங்களுக்கு ஸ்தூலாவஸ்தையென்றும் ஸூக்ஷ்மாவஸ்தையென்றும் இரண்டுவித அவஸ்தை உண்டு; இந்த அவஸ்தைகளின் மாறுதலுக்குப் பகவத்ஸங்கல்பமே காரணம் என்கிற கொள்கைகளுக்கு எந்த ஶ்ருதிவாக்யம் ப்ரமாணமென்பதை விசாரிக்க வேண்டியது.



பரமதத்வஹித புருஷார்த்தத்தை ப்ரதிபாதிக்கும் யஜுர்வேத ஆநந்தவல்லியில் முதலில் "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்று ப்ரஹ்மத்தின் லக்ஷணத்தைச் சொல்லிவிட்டு, அந்த லக்ஷணத்தாற் சொல்லப்படும் ப்ரஹ்மம் ஆநந்தஸ்வரூப மென்று சொன்னபிறகு பின்வருமாறு வாக்யங்கள் காணப்படுகின்றன. "ஸோऽகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி - ஸ தபோऽதப்யத—ஸ தபஸ்தப்த்வா இதம் ஸர்வமஸ்ருஜத - யதிதம் கிஞ்ச - தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத்—ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத்—...... ...ததப்யேஷ ஶ்லோகோ பவதி - அஸத்வா இதமக்ர ஆஸீத் - ததோ வை ஸதஜாயத—ததாத்மாநꣳ ஸ்வயமகுருத—தஸ்மாத் தத்ஸுக்ருதமுச்யத இதி" இவற்றின் அர்த்தம். ஸ: - அந்த ஆநந்தமயனான பரமாத்மா, பஹு ஸ்யாம் - தேவ மநுஷ்யர்கள் முதலான ரூபத்தாலே பஹுவாக ஆகவேண்டுமென்றும், (ததர்த்தம்) ப்ரஜாயேய - அப்படி ஆவதற்காக ஆகாஶம் முதலான பூதரூபமாக ஆகவேண்டுமென்றும், அகாமயத - சேதநாசேதந ஸம்பந்தமான ஸங்கல்பத்தைச் செய்தான். ஸ தபோऽதப்யத, ஸ தபஸ்தப்த்வா - அந்தப் பரமாத்மா ஸ்ருஷ்டிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்து, இதம் ஸர்வமஸ்ருஜத - இவையெல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்தான். யதிதம் கிஞ்ச, தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் - இப்படி எல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்து, ஒவ்வொரு வஸ்துவிலும் புஷ்கல ப்ரதீதிக்கு யோக்யமான யாதொரு விஶேஷித்த ஸ்திதி உண்டோ, அப்படிப்பட்ட அநுப்ரவேஶத்தைச் செய்தான். ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத் - இப்படி அநுப்ரவேஶித்ததாலேயே, மாறுதலற்று எப்பொழுதும் ஒரே ஜ்ஞாந ஸ்வரூபத்தோடு இருக்கும் சேதநங்கள் என்ன, ஒவ்வொரு க்ஷணத்திலும் மாறுதலை யடையும் அசேதநங்கள் என்ன, ஆக இவை இரண்டு ரூபங்களோடுங் கூடினவனாக ஆனான். ததப்யேஷ ஶ்லோகோ பவதி - இப்படி ப்ராஹ்மண மென்கிற வேதபாகத்தாற் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தத்தைப் பின்வரும் மந்த்ர ரூபமான

ஶ்லோகம் சொல்லுகிறது. அஸத்வா இதமக்ர ஆஸீத் - இப்பொழுது நம்முடைய கண்களுக்குத் தென்படும் சேதநாசேதநங்களாகிற ஶரீரத்தோடு கூடிக்கொண்டிருக்கும் ப்ரஹ்மம் ஸ்ருஷ்டிக்கு முந்தி அபிவ்யக்தமாகாத நாமரூபங்களோடு கூடின சேதநாசேதந விஶிஷ்டமாக இருந்தது. ததோ வை ஸதஜாயத - அந்த ப்ரஹ்மத்திலிருந்தே அபிவ்யக்தமான நாமரூபங்களோடு கூடின இந்த ஜகத் உண்டாயிற்று. ததாத்மாநம் ஸ்வயமகுருத - இவ்விதமான ஸ்ருஷ்டியை உபாதாந காரணமான தன்னைக்கொண்டே தானே செய்தான். தஸ்மாத்தத் ஸுக்ருதமுச்யத இதி - எந்தக் காரணத்தால் தானே தன்னுடைய கார்யமாக ஆனானோ அந்தக் காரணத்தாலேயே நல்ல கார்யத்தோடு கூடினவனென்று சொல்லப் படுகிறான். கார்யத்தின் நன்மையாவது - க்லேசமன்றிச்செய்யப் படுந் தன்மை. கார்யம் தன்னைவிட வேறுபட்டு இருந்தாலன்றோ கார்யத்தைச் செய்வதில் க்லேஶத்திற்கு ப்ரஸக்தி உண்டு. “நிஶ்வஸிதமேதத்யஸ்ய மஹிதஸ்ய” என்கிறபடி அக்லிஷ்ட கார்யத்தோடு கூடினவனன்றோ பரமாத்மா!

இந்த ஶ்ருதியின் தாத்பர்ய மென்ன? ‘ஸோ(அ)காமயத’ என்கிற வாக்யத்தால் பகவத் ஸங்கல்பமே ஸ்ருஷ்டிக்குக் காரண மென்றும், ‘தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத்’ என்பதனால் அநந்தமான ப்ரஹ்மம் எல்லாவற்றிலும் அந்தராத்மாவாக அநுப்ரவேசித்திருக்கிறதென்றும், ‘ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத்’ என்பதனால் ‘ஸத்’, ‘த்யத்’ என்று சொல்லப்படும் சேதநாசேதநங்கள் அம்மாதிரியான அநுப்ரவேஶத்தாலேயே பரமாத்மாவுக்கு ஶரீரமாக ஆகின்றன என்றும், ‘அஸத்வா இதமக்ர ஆஸீத்’ என்பதனால் ஸ்ருஷ்டிக்குமுந்தி இந்தச் சேதநாசேதநங்கள் நாமம் ரூபமற்றிருந்தன வென்றும், ‘ததோ வை ஸதஜாயத’ என்பதனால் அந்தப் பகவானுடைய ஸங்கல்பத்தாலேயே அவனுடைய ஶரீரமாகிற சேதநா சேதநங்கள் நாம ரூபங்களுடன் கூடினவையாக ஆகின்றன வென்றும், ‘ததாத்மாநம் ஸ்வயமகுருத’ என்பதனால் தானே இந்த ஜகத்திற்கு உபாதாந காரணம் என்றும், ‘தஸ்மாத்தத் ஸுக்ருதமுச்யதே’ என்பதனால் இவ்விதமான ஸ்ருஷ்டியாகிற வ்யாபாரத்தில் ப்ரஹ்மத்திற்கு யாதொரு க்லேஶமும் இல்லை, “இச்சாமாத்ரம் ப்ரபோ: ஸ்ருஷ்டி:” என்கிற கேவல ஸங்கல்பத்தாலேயே ஸகல ஸ்ருஷ்டியும் ஏற்படுகின்றன என்றும் வ்யக்தமாகத் தெரியவருகிறது.



இந்த அர்த்தத்தையே சாந்தோக்யத்திற் காணப்படும் ஸத் வித்யையிலும் சொல்லியிருக்கிறது. “ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்” என்று ஆரம்பித்து, “ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி” என்றும், “ஸேயம் தேவதைக்ஷத ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநா(அ)நுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி” என்றும், “ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:” என்றும் சொல்லி, “ஸய ஏஷோ(அ)ணிமா - ஐததாத்ம்யமிதம் ஸர்வம் - தத்ஸத்யம் - ஸ ஆத்மா - தத்த்வமஸி ஶ்வேதகேதோ” என்று உபஸம்ஹரித்திருக்கிறது. இதன் அர்த்தம்— உத்தாலகரென்னும் மஹர்ஷி தம்முடைய புத்ரனாகிற ஶ்வேதகேதுவுக்கு உபதேசம் செய்யுமிடம் இது. ஶ்வேதகேது குருகுலம் போய்ப் பன்னிரண்டு வருஷகாலம் வஸித்து எல்லா வேதங்களையும் அத்யயநம் செய்து தன்னைப் பரிபூர்ணனாக எண்ணிக்கொண்டு வித்யாப்ரயுக்த கர்வத்துடன் தகப்பனிடம் திரும்பி வந்தான். அப்படிவந்த குமாரனைப் பார்த்து ‘ஸோமத்திற்கு யோக்யனாயிருக்கும் ஶ்வேதகேதோ! எதைத் தெரிந்து கொண்டால் எல்லாம் தெரிந்ததாக ஆகிவிடுமோ அப்படிப்பட்ட வஸ்துவைப்பற்றி விநயபூர்வமாக ஆசார்யனைக் கேட்டுத் தெரிந்துகொண்டாயா?’ என்று பிதா கேட்டபோது, ‘ஒரு வஸ்துவின் ஜ்ஞாநத்தால் மற்றொரு வஸ்துவின் ஜ்ஞாநம் எப்படி ஏற்படும்?’ என்று ப்ரமித்து நிற்கும் புத்ரனைப் பார்த்து உத்தாலகர் தாம் சொன்னதை நிரூபிக்கும்பொருட்டு ‘ஜகத்திற்கு ப்ரஹ்மம்தான் காரணம்; ஆகையால், ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொண்டால், ஜகத் எல்லாம் தெரிந்ததாக ஆகிவிடும்,’ என்று உபதேசம் செய்கிறார். எப்படியானால் கட

ஶராவாதிகளுக்கு ம்ருத்பிண்டம்தான் உபாதாநகாரணமென்று சொல்ல யத்நித்தவன் 'முதலில் இந்த கட ஶராவங்கள் ம்ருத் பிண்டமாக இருந்தன; இப்பொழுது கட ஶராவங்களாகத் தெரி கின்றன' என்று சொல்ல ஆரம்பிப்பனோ, அந்த ரீதியாக ப்ரதி பாதிக்கிறார். ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஏகமேவாத்வி தீயம் - விபக்தமாக இருக்கும் நாம ரூபங்களோடு கூடினதாகவும் அநேகமான அவஸ்தையை யுடையதாகவும் காணப்படும் இந்த ஜகத் ஸ்ருஷ்டிக்குமுந்தி அவிபக்தமான நாம ரூபங்களை யுடைத் தாயிருந்தபடியால் ஒன்றென்றும், மற்றொரு 'அதிஷ்டாதா' என்று சொல்லப்படும் நிமித்தகாரண மில்லாமலிருந்தபடியால் இரண்டாவதற்றதென்றும் வ்யவஹரிக்கக்கூடிய 'ஸத்' ஆகவே இருந்தது. 'ஸத்' என்கிற ஶப்தத்திற்கு - 'சேதநா சேதநங் களை ஶரீரமாக வுடைத்தாயிருக்கும் பரமாத்மா' என்று அர்த் தம். ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி - இப்படி 'ஸத்' என்கிற ஶப்தத்தாற் சொல்லப்படும் பரப்ரஹ்மம், விசித்ர மாகவும் அளவற்றதாகவுமிருக்கும் சேதநாசேதநங்க ளடங்கிய ஜகத்ரூபமாகத் தான் ஆகவேண்டுமென்று எண்ணி 'அதற்காக நாம் தேஜஸ்ஸாகவும் ஜலமாகவும் ப்ருதிவியாகவும் ப்ரகாஶித்து ஆகுவோம்' என்று ஸங்கல்பித்தான். ஸேயம் தேவதைக்ஷத ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநாநு ப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி - அப்படி ஆனபிறகு அந்த ஈஶ்வரன் பின்வருமாறு ஆலோசித்தான்; 'தன் தனக்குரிய அபிமாநி தேவதைகளால் அதிஷ்டிதமாக இருக்கும் தேஜஸ் ஜலம் ப்ருதிவீ இவைகளில் நான் ஜீவனை ஶரீரமாகக்கொண்டே அநுப்ரவேசித்து அவைகளுக்கு நாம ரூபங்களைக் கொடுக்கிறேன்; அதாவது - தேவன் முதலான விசித்ர ஸ்ருஷ்டியையும் அவை களுக்குப் பெயர்களையும் செய்கிறேன்' என்று ஆலோசித்தான். ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா: - ஆகையால், இப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட சேதநா சேதநங்கள் அடங்கிய ஜகத் 'ஸத்' என்னும் ப்ரஹ்மத்தை மூல



மாக உடைத்தாயும், அதையே ப்ரதிஷ்டையாக உடைத்தாயும், அதையே ஆயதநமாக உடைத்தாயும் இருக்கிறது. அதாவது - இந்த ஜகத்திற்கு உத்பத்தி ப்ரஹ்மத்திலிருந்து, லயமும் ப்ரஹ்ம மத்தினிடத்தில், ஆதாரமும் ப்ரஹ்மமே என்று தாத்பர்யம். 'ஸந்மூலா:', 'ஸத்ப்ரதிஷ்டா:' என்கிற இரண்டுபதங்களும் - ப்ரஹ் மம் ஜகத்திற்கு உபாதாநகாரணமாக இருக்குந் தன்மையைக் காண் பிக்கின்றன; 'ஸதாயதநா:' என்கிற பதம், ப்ரஹ்மம் ஜகத்திற்கு அந்தர்யாமியாக இருக்குந் தன்மையைக் காட்டுகிறது. ஸய ஏஷோऽணிமா - அப்படிப்பட்ட ப்ரஹ்மம் வேறே ப்ரமாணங்களால் அறியக்கூடாதது. ஐததாத்ம்யமிதம் ஸர்வம் - இந்த ஜகத் திற்கு அந்த ப்ரஹ்மமே ஆத்மா. தத்ஸத்யம் - அப்படி அதுவே ஆத்மா வென்பது ப்ராமாணிகம். ஸ ஆத்மா - இப்படி ப்ராமாணிக மானதால், ஜகத்திற்கு ப்ரஹ்மமே ஆத்மாவென்பதை நன்றாக அறிந்துகொள். தத்த்வமஸி ஶ்வேதகேதோ - ஹே ஶ்வேதகேதோ, ஆகையால் உனக்கு அந்தர்யாமியாக இருக்கும் பரமாத்மா 'ஸத்' என்று சொல்லப்படும் ப்ரஹ்மமே.

இப்படி இந்த ஶ்ருதி சொல்லுகிறதாவது:—'ததைக்ஷத' என்பதால், பகவான் ஸர்வஜ்ஞனென்றும், 'அஸ்ருஜத' என்ப தால் இந்த ஜகத்திற்குப் பகவான் நிமித்தகாரணமென்றும், 'பஹு ஸ்யாம்' என்பதால் அவனே உபாதாநகாரணமென்றும், 'அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய' என்பதால் எல்லாவற்றிற்கும் பக வான் அந்தராத்மாவாக இருக்கிறானென்றும் சொல்லப்பட்டதாக ஆகிறது.

இன்னும் மற்ற அநேக ஶ்ருதி வாக்யங்கள் இந்த அர்த்தத் தையே விளக்குகின்றன. அவைகளின் அர்த்தத்தை விசாரிக்க அவகாசமில்லாததால் அந்த வாக்யங்களிற் சிலவற்றைமாத்திரம் இவ் விடத்திற் சொல்லிவிட்டுப் பின் அவகாசம் நேரும்பொழுது அர்த்த விசாரம் செய்வோம். 'பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்' [இந்த ப்ரபஞ் சத்திற்குப் பதியும், ஆத்மாவும், ஈஶ்வரனும் பகவான்], 'ஶாஶ்வதம்,

ஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:' [இவை யெல்லாவற்றிற்கும் உள்ளிலும் வெளியிலும் நாராயணன் வ்யாபித்து நிற்கிறான்], 'ஸர்வம்கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி ஶாந்த உபாஸீத' [இந்த ஜகத் பகவானிடமிருந்து உத்பத்தியாகிறபடியாலும், அவனிடத்தில் லயிக்கிறபடியாலும், அவனாலேயே இந்த ஸ்திதியுடன் கூடியிருக்கிறபடியாலும், அவன் ஸர்வத்திற்கும் ஆத்மாவாக இருக்கிறானென்று உபாஸிக்கவேணும்], 'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' [ம்ருத் பிண்டமே நம்முடைய வ்யவஹாரத்திற்கு யோக்யமாகும் பொருட்டு நாமரூபங்களை அடைந்ததாக ஆகிறது], 'ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தரோ யம் ப்ருதிவீ ந வேத யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் ய: ப்ருதிவீமந்தரோ யமயத்யேஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:' [பூமியில் இருந்துகொண்டு, அதற்குள்ளாக அதனால் அறியக்கூடாதவனாகவும் அதை ஶரீரமாக உடைத்தாயிருக்கிறவனாகவும் எவன் உள்ளே ப்ரவேஶித்து ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி லக்ஷணமான நியமநத்தைச் செய்கிறானோ அவன்தான் உன்னுடைய ஆத்மா; அவன் நிருபாதிகமான அம்ருதத்வத்தை உடையவன்], இத்யாதியான வாக்யங்களும் பரப்ரஹ்மம் காரணம் என்றும், சேதநா சேதநங்களடங்கிய இந்த ப்ரபஞ்சம் கார்யமென்றும், காரணத்தைவிடக் கார்யம் வேறுபட்டதன்று என்றும் சொல்லுகின்றன.

ஒரு ஆக்ஷேபம் இந்த ஸம்பந்தத்தில் உண்டாகலாம். கீழ்ச் சொன்ன ஶ்ருதிவாக்யங்களெல்லாம் இம்மாதிரியான அர்த்தத்தைத் தான் கொண்டனவோ? வேறு அர்த்தம் கூடாதோ? 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம', 'ஏகமேவாத்விதீயம்,' 'தத்த்வமஸி ஶ்வேதகேதோ' இத்யாதியான வாக்யங்கள் 'எல்லாம் ஒன்று' என்று சொல்லுகிறபடியால், 'ஈஶ்வரன் ஒருவனே உண்டு, அவனைவிட வேறுபட்டதான வஸ்து இல்லை' என்கிற தாத்பர்யத்தைக்கொண்டு இந்த வாக்யங்களுக்கு அர்த்தம் சொல்லக்கூடாதா? என்கிற ஸந்தேஹம் உண்டாகலாம். இப்படி அர்த்தம் சொல்லக்கூடும் என்பது யதார்த்தமே. ஶங்கராசார்யர் முதலான மஹான்கள் அம்மாதிரியாகவே அர்த்தம் செய்திருக்கிறார்கள். ஆனால் உபபத்திகளைப் பார்த்தால் சேத-



நம், அசேதநம், ஈஶ்வரன் இவர்களுடைய ஸ்வரூபங்கள் ஒன்றைவிட மற்றொன்று அத்யந்தம் வேறுபட்டன என்னும் தாத்பர்யத்தை ஸ்வபாவமாக விவக்ஷித்துக்கொண்டே இந்த வாக்யங்கள் ப்ரவ்ருத்தித்திருக்கின்றனவென்று தோன்றுகிறது. அந்த உபபத்திகள் என்ன என்பதை விசாரிப்பது இந்த விடத்தில் துஸ்ஸாத்யம். கீழ்ச் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தங்கள் நம்முடைய ஆசார்யர்களால் அங்கீகரிக்கப்பட்ட அர்த்தங்கள் என்று மாத்திரம் நாம் தெரிந்துகொள்வது தத்காலத்திற்குப் போதுமான விஷயம்.

இந்தப் பாகத்தை முடிக்கும்முன் இந்த ஸம்பந்தத்தில் இன்னும் சிலரால் செய்யப்படும் மற்றொரு ஆக்ஷேபத்தையும் சற்றுக்கவனிப்போம். இப்படி ஶ்ருதியிற் சொல்லியிருக்கும் அர்த்தம் யுக்திக்கும் லோகவ்யவஹாரத்திற்கும் விருத்தமாக இருக்கிறதே! அப்படிப்பட்ட அர்த்தத்தை நாம் ஸம்மதிப்பானேன்? நமக்கு அறிவு என்று ஒரு வஸ்து இருக்கிறதே; அதை உபயோகப்படுத்தி ப்ரத்யக்ஷப்ரமாணத்தைக்கொண்டு ஒரு யுக்தியுக்தமான ஸித்தாந்தத்திற்கு நாம் ஏன் வரக்கூடாது? இத்யாதியான ஆக்ஷேபங்களைச் சிலர் செய்கிறார்கள். அவர்களுக்குப் பதில் ஓரே வாக்யம். நம்முடைய ஜ்ஞாநம் மிதம்; மிகுந்த ஸங்கோசத்தை அடைந்திருக்கிறது; இன்றைக்கு ஸரியாகத் தோன்றும் விஷயம் நாளைக்கே பிசகாகத் தோன்றுகிறது; இப்படி ப்ரமத்திற்கும் விப்ரலம்பத்திற்கும் ஆஸ்பதமான நம்முடைய புத்தியை நம்பி இறங்குவது ந்யாயமா? மேலும், ஈஶ்வரன் அதீந்த்ரியமான வஸ்துவாச்சுதே! அந்த வஸ்துவினிடத்தில் நம்முடைய அத்யந்தம் குறைந்த ஶக்தியுடன்கூடிய இந்த்ரியங்களை உபயோகித்து ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தைக்கொண்டு எப்படி ஒரு ஸித்தாந்தத்திற்கு வரலாம்? இந்த விஷயங்களைச் சற்று ஆலோசித்தால் இம்மாதிரியான ஆக்ஷேபத்திற்கு இடமில்லையென்பது வ்யக்தமாகும். ஈஶ்வரனுடைய ஆஜ்ஞையாகிற ஶ்ருதியே நமக்கு ப்ரமாணமென்றும், மற்ற ப்ரமாணங்களெல்லாம் தோஷதுஷ்டங்களாக இருக்கிறபடியால் ஶ்ருதிக்கு விருத்தமாகும்பொழுது நமக்கு அநுபாதேயங்களென்றும், ஈஶ்வரனுடைய வைபவம் "பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூய

தே' 'ஸ்வாபாவிகீ ஜநநவாத்ஸல்யதா ச'' என்கிறபடி லௌகிக த்ருஷ்டாந்த நிபந்தநமாகிற ஆக்ஷேபத்திற்கு அநர்ஹமென்றும் ஸ்ரீ கூரத்தாழ்வான் பின்வரும் இரண்டு ஶ்லோகங்களில் அருளிச் செய்திருக்கிறார்.

(1) "ஆஜ்ஞாநவாத்ஸல்யவதீ விதிதா ஸ்துயீஸா தாம் ஹி ஸ்த்ரீணாம் ஸ்வஜந்யஜநநீம் ஹ்ருதயே ப்ரஸாத்ய — ஆஸாஸ ஸம்ப்ரயமஸியாஸ்து வராணி தோஷே ரஷோத தோஷாந்தஹிதா ஸஹிதா வரராணி" ॥

(2) "கிம் ஸாயகஃ ஸ்வநிவஸத் கிஸ்வபாதிதாஃ கஸ்யோஸ ஸமாய ஸ்வஜநீஶஜநம் ஸமஸ்தம் — ஜந்த்ராத்ரிஷ்விதகந்தகஸ்தக ஸ்யஸ்தோஸவம் ஶ்ருதிவிதோ விதுர ஸ்ரீகந்தம்."

பத்ராதிபர்.

---

"தாதூநாமிவ ஶைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந்" என்கிறபடி, ஹிமவத் பர்வதம் தாதுக்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாக இருப்பதுபோல ஸ்ரீ ராகவன் ஸகல கல்யாண குணங்களுக்கும் ஆகரமாக இருக்கையிலும் மஹாபராதிகளாயிருக்கிற நமக்கு அவனுடைய க்ருபை என்னும் குணமே ஶரணம் என்று ஓர் மஹான் அநுஸந்திக்கிறார்.

யத்த்வம் க்ருதாகஸமபி ப்ரணிபத்ய ஸந்தம் வாயஸம் வர தயா பரிரக்ஷிதோऽஸி — தேநைவ தேவ ஶரணாகதரக்ஷணே மே விஸ்ரம்பஸம்பதவிஶங்கதயா ஸ்ரயாமி [கூரேஶன் அருளிச்செய்த அதிமாநுஷஸ்தவத்தில் 32 - வது ஶ்லோகம்.]

பிராட்டியினிடத்தில் மஹத்தான அபராதத்தைச் செய்த வாயஸத்தை, தன்காலில்விழ உத்யுக்தனாக இருந்தான் என்கிற ஒரு வ்யாஜத்தைக்கொண்டு, "வ்யாஹதாபராதிகாகஸ்ஸு க்ருபயா பர்யபாலயத்" என்கிறபடி ஸ்ரீபகவான் அளவற்ற தயைக்கு விஷயமாகச்செய்தான் என்பது யாதொன்று உண்டோ, அதுவே நமக்கும் அவன் கையினால் ரக்ஷணம் கிடைக்கும் என்கிற மஹா விஶ்வாஸமுண்டாகப் பெருத்த காரணமாகும். ஸம்ஸாரத்தில் உழல்வதால் மஹத்தான ஶ்ரமத்தை அடைந்தும் கர்மஜ்ஞாந பக்தி ஶூந்யர்களாகவுமிருக்கிற நமக்கு, "பாத்ரம் பவாமி பவதோ தயாயாஃ" என்கிறபடி அவன்கிருபையே கதியன்றோ.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
26 JUN 1911
MADRAS.

ஸ்ரீ:

# பாகவத தர்மம்.

ஒரு ஸமயத்தில் வஸுதேவர் பாகவத தர்மங்களைத் தெரிந்து கொள்ளவேணுமென்கிற எண்ணத்துடன், 'அஹோ! ஜந்மத்தை எவ்விதமாகக் கழித்துவிட்டேன்? விசித்ரங்களான கணக்கற்ற வ்யஸநங்களுடன் கூடியிருக்கும் ஸம்ஸாரத்திலிருந்து விடுவித்துக்கொள்ளும் வழியைத் தேடவில்லையே! முந்தின ஸ்ருஷ்டியில் ஸுதபஸ் என்ற ரிஷியாக அகல்மஷமான ஜந்மத்தை எடுத்து மஹத்தான தபஸ்ஸைச் செய்தேன். தேவ மாநத்தால் பன்னீராயிரம் வருஷம் தபஸ் செய்து பகவானை ப்ரத்யக்ஷமாக அடைந்தும் பகவானுடைய மாயையால் மோஹிதனாகக் கொண்டு ஆத்யந்திகமான க்ஷேமத்தை வரிக்காமல் அல்பஸுகத்தைக் கொடுக்கக் கூடிய ஸம்ஸார போகங்களையே ப்ரார்த்தித்து விட்டேன். "அஹம் கில புராநந்தம் ப்ரஜார்த்தோ புவி முக்திதம் — அபூஜயம் ந மோக்ஷாய மோஹிதோ தேவமாயயா", என்று அநுதபித்து, தம்முடைய க்ருஹத்திற்கு வந்திருந்த நாரதமஹர்ஷியைப் பார்த்து, 'ஸ்வாமிந், தேவரீர்களையொத்த மஹாத்மாக்களுடைய யாத்ரை, க்ருஹஸ்தர்களாகத் தாபத்ரயத்தால் வருத்தப்படும் எங்களுடைய அநுக்ரஹத்திற்காக ஏற்பட்டதன்றோ? ஸகல விதமான பயத்திலிருந்தும் ஸம்ரக்ஷிக்கக்கூடிய பாகவத தர்மமென்னும் உத்தம தர்மத்தைக் கிருபைசெய்து அடியேனுக்கு உபதேசிக்கவேணும்' என்று ப்ரார்த்தித்தார். அதைக் கேட்டு நாரதர் மிகுந்தமகிழ்ச்சியை யடைந்து ஆர்ஷபர்களுக்கும் விதேஹ ராஜனுக்கும் நடந்த ஸம்வாத ரூபமான ஓர் இதிஹாஸத்தை ப்ரஸ்தாவித்து ஆர்ஷபர்களுள் கவி என்னும் மஹர்ஷி விதேஹ ராஜனுக்கு உபதேசித்ததான பின்வருந் தர்மத்தைச் சொன்னார்.

"மந்யேऽகுதஶ்சித்பயமச்யுதஸ்ய பாதாம்புஜோபாஸநமத்ர நித்யம் — உத்விக்நபுத்தேரஸதாத்மபாவாத் விஶ்வாத்

நாயத்ர நிவர்த்ததே:" என்கிறபடி தேஹாத்ம விவேகமில்லாமலும் பகவானுடைய யதார்த்த ஸ்வரூபம் தெரியாமலும் உத்வேகத்தை அடைந்திருக்கும் புத்தியையுடைய ஜநங்களுக்கு இடைவிடாமல் செய்யும் அச்யுதனுடைய பாதாரவிந்தோபாஸநம்தான் ஸம்ஸாரம் முதலான ஸகலவித பயஹேதுக்களையும் போக்கடிக்கத் தகுந்தது. பகவான் ஜங்கம ஸ்தாவரங்கள் எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக இருக்கிறாரென்பது விளங்கினால் பயம் என்பது எப்படி உண்டாகும்? யாதொரு உபாஸகன் பரமாத்ம த்யானத்தில் ஸ்வல்பமாகவாவது விச்சேதத்திற்கு இடம் கொடுக்கிறானோ அவனுக்கன்றோ பயம். "யந்முஹூர்த்தம் க்ஷணம் வாऽபி வாஸுதேவோ ந சிந்த்யதே - ஸா ஹாநிஸ்தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ் ஸா ச விக்ரியா" என்றும், "வரம் ஹுதவஹஜ்வாலாபஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி:—ந ஶௌரிசிந்தாவிமுகஜந ஸம்வாஸ வைஶஸம்" என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். வாஸுதேவனுடைய த்யானம் எந்த க்ஷணத்தில் தவறுகிறதோ அந்த க்ஷணந்தான் பெருத்தநாஶம். நாலு பக்கத்திலும் தீயாற் சூழ்ந்த கூட்டிற்குள் வஸித்தாலும் வஸிக்கலாம்; பகவானுடைய கதைகளிலிருந்து விமுகர்களாக இருக்கும் ஜநங்களுடைய மத்யத்தில் வாஸம் செய்வது கூடவே கூடாது. மநோவாக்காயங்களாற் செய்யும் க்ரியைகளெல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம்செய்து, அத்யந்தம் மங்களகரங்களான பகவானுடைய அவதாரங்களையும் சேஷ்டிதங்களையும் காநம் செய்துகொண்டு, ஸம்ஸார ஸங்கங்களிற் பற்றில்லாமல், லஜ்ஜையற்று, "ஹஸத்யதோ ரோதிதி ரௌதி காயத்யுந்மாதவந்ந்ருத்யதி லோகபாஹ்ய:" என்கிறபடி பித்தனென்று பிறர் சொல்லும்படி சிலகாலங்களிற் சிரித்தும், சிலகாலங்களில் அழுதும், சிலகாலங்களில் கதறியும், சிலகாலங்களில் பாடியும், சிலகாலங்களில் பிதற்றியும், கண்ணில் தென்படும் பொருள்கள் எல்லாவற்றையும் பகவானுடைய ஶரீரமென்று அறிந்து எதைக் கண்டாலும் ப்ரணாமங்களைச் செய்தும் எவன் ஸஞ்சரிக்கிறானோ அவன் தான் பாகவதோத்தமன். இவ்விதமாக இருந்துகொண்டு வந்தால் வரவரப் பக்தி தேர்ந்து பகவத் ப்ரபோதம் ஜநித்துப் பரமமான ஶாந்தியை அடைகிறான்.



இவ்வாறு கவி உபதேசம் செய்ய, விதேஹராஜா, 'பாகவதர்களுடைய அடையாளங்களை ஸூக்ஷ்மமாக எடுத்துச் சொல்லவேணும்' என்று ப்ரார்த்திக்க, மஹர்ஷி "ஸர்வபூதங்களும் பகவானுடைய ஶரீரமென்றும், ஸர்வபூதங்களுக்கும் பகவானே ஆத்மாவென்றும் பார்க்கிறவன் உத்தம பாகவதன். ஈஶ்வரனிடத்தில் பக்தியையும் ததீயர்களிடத்தில் ஸ்நேஹத்தையும், பாலிசர்களிடத்தில் க்ருபையையும், ஶத்ருக்களிடத்தில் உபேக்ஷையையும் எவன் செய்கிறானோ அவன் மத்யமன். எவன் பகவத் பக்தர்களை அநாதரித்து விக்ரஹத்திலேயே பகவத் பூஜையைச் செய்கிறானோ அவன் அதமன்" என்று சொல்லிவிட்டு "ந யஸ்ய ஜந்மகர்மப்யாம் ந வர்ணாஶ்ரம ஜாதிபி:—ஸஜ்ஜதேऽஸ்மிந்நஹம் பாவோ தேஹே வை ஸ ஹரே: ப்ரிய:" 'இந்தத் தேஹ ப்ரயுக்தமாகக் கிடைத்திருக்கும் வர்ணாஶ்ரமம் முதலானவைகளில் எவனுக்கு அஹம்பாவமில்லையோ அவன்தான் பகவானுடைய அநுக்ரஹத்திற்குப் பாத்ரமாகிறான்' என்று நிகமநம் செய்தார்.

மற்ற ஆர்ஷபர்களும் இம்மாதிரியாகவே அநேகவித உபதேசத்தைச் செய்ததாகவும், அந்தஉபதேசத்தைக்கேட்டு விதேஹராஜா ஆசார்ய கடாக்ஷத்தால் தானும் அம்மாதிரியே அநுஷ்டித்து நல்லகதியை அடைந்ததாகவும் சொல்லி, நாரதர், 'நீரும் இந்தத் தர்மத்தை நடத்தும். க்ருஷ்ணனிடத்தில் புத்ரஸ்நேஹத்தைச் செய்து, தர்சநம், ஆலிங்கநம், ஆலாபம் முதலியவைகளால் உம்முடைய ஆத்மா அத்யந்தம் பரிசுத்தியை அடைந்திருக்கிறது. இனிக் க்ருஷ்ணனிடத்தில் நம்முடைய குழந்தை யென்றிருக்கும் ஜ்ஞாநத்தைத் தூர விலக்கி, ஸாக்ஷாத் பகவான் இவ்விதமாக ஜகத்தின் க்ஷேமத்திற்காக அவதரித்திருக்கிறான் என்று அநுஸந்தாநம் செய்யும்; நல்லகதியை அடைவீர்' என்று சொல்லி முடித்தார்.

இதனால், தெரிந்துகொள்ள வேண்டியது என்ன? எங்கும் பகவான் நிறைந்திருக்கிறான் என்பதை நன்றாக உணர்ந்து ஜாதி முதலானவைகளால் உண்டாகும் தேஹ ப்ரயுக்தமான அஹம் பாவத்தை விலக்குவது பாகவத லக்ஷணங்களில் முக்கியம் என்பதன்றோ? நாரத மஹர்ஷி வஸுதேவருக்கு உபதேசம் செய்த

விஷயம் அத்யந்தம் ஆப்தமாச்சுதே. இந்தத் தாத்பர்யத்திற்கு ஒரு விதத்திலும் நாம் குறைவைச் செய்யக் கூடாதன்றோ?

மேலும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் புருஷார்த்த காஷ்டாதிகாரத்தில் பாகவத கைங்கரியத்தின் ப்ராதாந்யத்தைச் சொல்லுமிடத்தில் "ஸத்ரேஷு விபாஹேஷ்வேஷா பக்ஷிணோஹேதுஹேதுஃ விவக்ஷிதே - ஸவிஶேஷம்ஶேஷா ஃஃ ஸ்ரீமாந் ஸமயீஃ ஸம வர்ணிதஃ - தஸ்மேஷ ஷேயம் தவேதாஷ்யம் ஸ்வவர்ணஜ்யேஷ்ட யபாஹ்யஷம்" என்கிற வாக்யத்தை எடுத்து, "இத்யாதி ப்ரமாணங்களை ஆராய்ந்தால் ராஜாவுக்கு ராஜகுமாரோபலாளநம் போலே பாகவத கைங்கர்யம் பகவானுக்கு அபிமதமாயிருக்கையால் ஶேஷபூதனான இவன் செய்யும் கிஞ்சித்காரங்களில் பாகவத கைங்கர்யம் ப்ராதாநமாயிற்று" என்று நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்திருக்கிறார். இன்னும் இதேவிதமாகப் புராணாந்தரங்களிலும் இதர ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளிலும் ஏற்படுகிறது.

இப்படி பாகவத தர்மம் ஜாதிப்ரயுக்தமன்றென்றும், ஜாதியால் ஹீனனாக இருந்தாலும் பக்தனாக இருந்தால் அவனை ப்ராஹ்மண ஶ்ரேஷ்டனென்றும், முநியென்றும், ஸ்ரீமாந் என்றும், ஈஶ்வரன் எப்படி ஆராதிக்கத்தகுந்தவனோ அப்படியே அவனும் ஆராதநார்ஹனென்றும் பஹுப்ரகாரமாக ஶாஸ்த்ரங்கள் கதறியிருக்க, இப்பொழுது நடந்துவரும் ஸ்ரீவைஷ்ணவர்களின் அநுஷ்டாநத்தில் என் விரோதம் வந்திருக்கிறது? 'அப்படிப்பட்ட பக்தனிருந்தால் அவன் ஹீனஜாதியாக இருக்கும்பக்ஷத்தில் மாநஸிகமாக வந்தியன், உத்க்ருஷ்டமான ப்ராஹ்மணதேஹத்தால் அவனுடைய ஹீநதேஹத்திற்கு வந்தநம் செய்யவேண்டியது என்பது இந்த ஶாஸ்த்ரங்களின் அர்த்தமன்று' என்பது ஒருஸமாதாநமாகுமா? "ஸஜ்ஜாதிர்விஜ்ஞாநஸமாவேஶோஹோ" என்கிற வாக்யத்திற்கு இந்த ஸமாதாநம் எப்படி ஒத்துவரும்? இந்த ஸந்தேஹத்தை மஹான்கள் யாராவது நிவ்ருத்தி செய்வார்களென்று எண்ணி இந்த விஷயத்தைப்பற்றி எழுதத் துணிந்தேன்,

ஓர் வைதிகன்.

# திராவிடவேத தாத்பரியம்.

சடகோபன் என்றும், பராங்குசன் என்றும் சொல்லப்படும் நம்மாழ்வார், எல்லா ஆழ்வார்களிலும் முக்கியமானவர். இவர் தான், தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் பேசப்படும் தென் னிந்தியா தேசமாகிய இந்நாட்டில் ஸ்ரீவைஷ்ணவமதம் என்று சொல்லப்படும் மதத்துக்குப் பரமாசாரியர்: இவருடைய மதத்தைத்தான், இவருக்குப் பிற்பாடு, ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பூர்வாசாரியர்களில் ஒருவரான ஸ்ரீமந் நாதமுனிகள் எல்லாவிடத்திலும் நன்றாகப் பிரகாசம்செய்தார். இவர், ஆழ்வார்கள் பன்னிருவரும் தனித்தனியே திருவாய்மலர்ந்தருளிய தமிழ்வேதமாகிய அநேகம் பாசுரங்களைத் திரட்டிக் கணக்கிட்டு முன்பின் சரிபார்த்துப் பரிசோதித்து ஒழுங்குபடுத்தி நாலாயிரமென்னும் திவ்யப் பிரபந்தமாக, வியாஸர் ஸம்ஸ்கிருத வேதங்களை ஒழுங்குபடுத்தினது போலத் திராவிடவேதத்தை வகுத்து ஒழுங்குபடுத்தினார். இரண்டு பாஷையிலும் வெளியிடப்பட்ட வேததாத்பரியம் ஒன்றென்றும், இரண்டும் உபயவேதாந்தம் என்றும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய கொள்கை. நாதமுனிகளுக்குப் பிற்பாடு முக்கியமான ஆசாரியர், யாமுனாசாரியர் என்கிற ஆளவந்தார். இவருக்குப்பின் முக்கியமானவர் - எம்பெருமானார் என்றும், உடையவர் என்றும், ஸ்ரீபாஷ்யகாரர் என்றும் சொல்லப்படும் ராமாநுஜாசாரியர். இந்தியா தேசம் முழுவதிலும் வழங்கும் அநேகவிதமான வைஷ்ணவ மதங்களுக்கும் இந்த ராமாநுஜாசாரியருடைய ஸித்தாந்தம் மூலம் என்று சொல்லலாம். இந்த ராமாநுஜ மதத்துக்கு ஒரு முக்கிய கிரந்தம், முற்கூறிய திராவிட வேதமாகிய நாலாயிரப் பிரபந்தம். அந்த நாலாயிரத்திலும் எவ்விதத்திலும் முக்கியமானது, நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியென்பது. இந்தத் திருவாய்மொழியானது திராவிட உபநிஷத்து என்றே பூர்வாசாரியர்களுடைய அபிப்பிராயம்.

2. ஸ்ரியஃபதியாய் ஸமஸ்தகல்யாண குணகண பரிபூர்ணனான பகவான், இந்த நம்மாழ்வார் தாமே தமது அநுபவத்தை "என் அவாவறச் சூழ்ந்தாய்" (X. 10 - 10) என்றும், "அவா

விஷயம் அத்யந்தம் ஆப்தமாச்சுதே. இந்தத் தாத்பர்யத்திற்கு ஒரு விதத்திலும் நாம் குறைவைச் செய்யக் கூடாதன்றோ?

மேலும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் புருஷார்த்த காஷ்டாதிகாரத்தில் பாகவத கைங்கரியத்தின் ப்ராதான்யத்தைச் சொல்லுமிடத்தில் "[illegible]" என்கிற வாக்யத்தை எடுத்து, "இத்யாதி ப்ரமாணங்களை ஆராய்ந்தால் ராஜாவுக்கு ராஜகுமாரோபலாலனம் போலே பாகவத கைங்கர்யம் பகவானுக்கு அபிமதமாயிருக்கையால் ஶேஷபூதனான இவன் செய்யும் கிஞ்சித்காரங்களில் பாகவத கைங்கர்யம் ப்ரதானமாயிற்று" என்று நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்திருக்கிறார். இன்னும் இதேவிதமாகப் புராணாந்தரங்களிலும் இதர ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளிலும் ஏற்படுகிறது.

இப்படி பாகவத தர்மம் ஜாதிப்ரயுக்தமன்றென்றும், ஜாதியால் ஹீனனாக இருந்தாலும் பக்தனாக இருந்தால் அவனை ப்ராஹ்மண ஶ்ரேஷ்டனென்றும், முநியென்றும், ஸ்ரீமாந் என்றும், ஈஶ்வரன் எப்படி ஆராதிக்கத்தகுந்தவனோ அப்படியே அவனும் ஆராதநார்ஹனென்றும் பஹுப்ரகாரமாக ஶாஸ்த்ரங்கள் கதறியிருக்க, இப்பொழுது நடந்துவரும் ஸ்ரீவைஷ்ணவர்களின் அநுஷ்டானத்தில் ஏன் விரோதம் வந்திருக்கிறது? 'அப்படிப்பட்ட பக்தனிருந்தால் அவன் ஹீனஜாதியாக இருக்கும்பக்ஷத்தில் மாநஸிகமாக வந்த்யன், உத்க்ருஷ்டமான ப்ராஹ்மணதேஹத்தால் அவனுடைய ஹீநதேஹத்திற்கு வந்தநம் செய்யவேண்டியது என்பது இந்த ஶாஸ்த்ரங்களின் அர்த்தமன்று' என்பது ஒருஸமாதானமாகுமா? "[illegible]" என்கிற வாக்யத்திற்கு இந்த ஸமாதாநம் எப்படி ஒத்துவரும்? இந்த ஸந்தேஹத்தை மஹான்கள் யாராவது நிவ்ருத்தி செய்வார்களென்று எண்ணி இந்த விஷயத்தைப்பற்றி எழுதத் துணிந்தேன்,

ஓர் வைதிகன்.

# திராவிடவேத தாத்பரியம்.

சடகோபன் என்றும், பராங்குசன் என்றும் சொல்லப்படும் நம்மாழ்வார், எல்லா ஆழ்வார்களினும் முக்கியமானவர். இவர்தான், தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் பேசப்படும் தென்னிந்தியா தேசமாகிய இந்நாட்டில் ஸ்ரீவைஷ்ணவமதம் என்று சொல்லப்படும் மதத்துக்குப் பரமாசாரியர்: இவருடைய மதத்தைத்தான், இவருக்குப் பிற்பாடு, ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பூர்வாசாரியர்களில் ஒருவரான ஸ்ரீமந் நாதமுனிகள் எல்லாவிடத்திலும் நன்றாகப் பிரசுரம்செய்தார். இவர், ஆழ்வார்கள் பன்னிருவரும் தனித்தனியே திருவாய்மலர்ந்தருளிய தமிழ்வேதமாகிய அநேகம் பாசுரங்களைத் திரட்டிக் கணக்கிட்டு முன்பின். சரிபார்த்துப் பரிசோதித்து ஒழுங்குபடுத்தி நாலாயிரமென்னுந் திவ்வியப் பிரபந்தமாக, வியாஸர் ஸம்ஸ்கிருத வேதங்களை ஒழுங்குபடுத்தினது போலத் திராவிடவேதத்தை வகுத்து ஒழுங்குபடுத்தினார். இரண்டு பாஷையிலும் வெளியிடப்பட்ட வேததாத்பரியம் ஒன்றென்றும், இரண்டும் உபயவேதாந்தம் என்றும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய கொள்கை. நாதமுனிகளுக்குப் பிற்பாடு முக்கியமான ஆசாரியர், யாமுநாசாரியர் என்கிற ஆளவந்தார். இவருக்குப்பின் முக்கியமானவர் - எம்பெருமானார் என்றும், உடையவர் என்றும், ஸ்ரீபாஷ்யகாரர் என்றும் சொல்லப்படும் ராமானுஜாசாரியர். இந்தியா தேசம் முழுவதிலும் வழங்கும் அநேகவிதமான வைஷ்ணவ மதங்களுக்கும் இந்த ராமானுஜாசாரியருடைய ஸித்தாந்தம் மூலம் என்று கொள்ளலாம். இந்த ராமானுஜ மதத்துக்கு ஒரு முக்கிய கிரந்தம், முற்கூறிய திராவிட வேதமாகிய நாலாயிரப் பிரபந்தம். அந்த நாலாயிரத்திலும் எவ்விதத்திலும் முக்கியமானது, நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியென்பது. இந்தத் திருவாய்மொழியானது திராவிட உபநிஷத்து என்றே பூர்வாசாரியர்களுடைய அபிப்பிராயம்.

2. ஸ்ரிய:பதியாய் ஸமஸ்தகல்யாண குணகண பரிபூர்ணனான பகவான், இந்த நம்மாழ்வார் தாமே தமது அநுபவத்தை "என் அவாவறச் சூழ்ந்தாய்" (X. 10 - 10) என்றும், "அடியை

யடைந்து உள்ளந்தேறி ஈறிலின்பத்திருவெள்ளம் யான் மூழ்கி னன்' (II. 6. 8.) என்றும், "அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" (X. 10 - 11) என்றும் சொல்லும்படியான பகவத் குணாநுபவத்தை அவருக்குக் கொடுத்துக் கடாக்ஷித்தான். ஆழ்வார், ஒருக்ஷணம்கூடத் தவறாமல் எப்போதும் பகவத்குணாநு பவமே செய்துகொண் டிருந்தார். "𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑍍" என்று பகவானாகிய வாஸுதேவனே தனக்கு ஸகலவித பந்து வென்றும், அந்த வாஸுதேவனே தான்பற்றுதற் குரியவன் என் றும், தனக்கு ஸகலவித ஆநந்தமும் அந்த வாஸுதேவனே என் றும் உள்ளந் தேறியிருக்கும் ஜ்ஞாநி ரொம்பவும் துர்லபரன்றோ? இப்படிப்பட்ட ஜ்ஞாநியையே தனக்கு ஆத்மாவாகப் பகவான் கீதையிற் சொல்லுகிறார்.

இந்த ஆழ்வாரை அந்த ஜ்ஞானிகளில் தலைவர் என்று சொல்ல லாம். "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்று தமக்குத் தாரக போஷக போக்ய மான ஸகலவித ஆநந்தமும் கிருஷ்ணனே என்று ஆழ்வார் சொல் லுகிறார் (VI, 7 - 1). ராமாயணத்தில் இளையபெருமாள் என்று சொல்லப்படும் லக்ஷ்மணனையும் இவ்வாழ்வாரையும் ஒப்பிடலாம். இளமைப்பருவம் தொடங்கிப் பெரிய பெருமாளாகிய ஸ்ரீராம னுடைய தொட்டிலோடுகூட ஸமீபத்தில் தன்னை உறங்க விடாத போது லக்ஷ்மணன் உறங்காமல் அழுவராம். ராமனுடைய ஸம்பந் தமே இளமைப்பருவமுதல் லக்ஷ்மணனுக்குத் தாரகம்; அதுபோல, இவ்வாழ்வார் "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய் வித்து" (II. 3. 3.) என்றும், தம்மை நாயகியாகச் சொல்லுமிடத் தில் "முலையோ முழுமுற்றும் போந்தில, பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகம்" என்றும் தம்மைப்பற்றிச் சொல்லுகிறார். இளமைப்பருவம்முதல் பகவத்குணாநுபவம் தவிர ஆழ்வாருக்கு வேறே தாரகமில்லை. ஸ்ரீராமன் காட்டுக்குப்போகும் ஸமயத்தில் லக்ஷ்மணன் ராமனைப்பார்த்து 'உம்மைவிட்டுப் பிரிந் தால் பிராட்டி (ஸீதை) யாவது அடியேனாவது ஜீவிக்க முடியாது; ஒருகால் ஜீவித்தால் ஒரு முகூர்த்தகாலம்மாத்ரம் ஜீவிக்கலாம்; ஜலத்தைவிட்டு எடுக்கப்பட்ட ஒருமீன் நீர்ப்பசையறுமளவும்தான் ஜீவிக்கும்; அதுபோல நீர் எங்களை விடுத்துப் போகிறதாக உம்மு டைய மநஸ்ஸில் நிச்சயம் பண்ணிவிட்டீரென்று எங்களுக்குத்



தெரியும்வரையில் நாங்கள் அந்த ஒரு முகூர்த்தம் ஜீவிக்கலாம்; அதற்குப் பிற்பாடு நாங்கள் ஜீவிப்பதென்பது இல்லை' என்று சொன்னார். ["𑌨 𑌚 𑌸𑍀𑌤𑌾 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌹𑍀𑌨𑌾 𑌨 𑌚𑌾𑌹𑌮𑌪𑌿 𑌰𑌾𑌘𑌵 । 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌮𑌪𑌿 𑌜𑍀𑌵𑌾𑌵𑍋 𑌜𑌲𑌾𑌨𑍍𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌵𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑍌".] அது போல் ஆழ்வாரும் "இன்னலா விலேன்" என்கிறார். பரமபதமாகிற மோக்ஷம், கைவல்யம் என்கிற ஜீவாத்மாநுபவம், பிரஹ்மலோக முள்படச் சேர்ந்த ஐச்வரியம் இவையித்தனையும் தமக்குப் புறம் பாய் எனக்குக் கிடைத்தாலும் எனக்கு வேண்டாம் ["𑌨 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌾𑌕𑍍𑌰𑌮𑌣𑌂 𑌨𑌾𑌮𑌰𑌤𑍍𑌵𑌮𑌹𑌂 𑌵𑍃𑌣𑍇 । 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌮𑌯𑍇 𑌨 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾"] என்று சொன்ன லக்ஷ்மண னைப்போல, "பாவியேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ" (VI. 9 - 9), "எம்மா வீட்டுத்திறமும் செப்பம்," "திருவொடு மருவிய இயற்கை மாயா பெருவிறலுலகம் மூன்றினொடு நல்வீடு பெறினும் கொள்வது எண்ணுமோ" என்று பகவத் கைங்கரி யம் தவிர இதர புருஷார்த்த ப்ரஸ்தாவத்தைக்கூட ஆழ்வார் ஸஹியார்.

'எனக்குத் தசரத சக்கரவர்த்தி தகப்பனாரல்லர்; எனக்கு ஸ்வாமி ஸஹோதரன், தகப்பன்; இன்னம் எவ்வித பந்துவும் ராகவனே' ["𑌅𑌹𑌂 𑌤𑌾𑌵𑌨𑍍𑌮𑌹𑌾𑌰𑌾𑌜𑍇 𑌪𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌨𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌯𑍇 । 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌚 𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍍𑌚 𑌪𑌿𑌤𑌾 𑌚 𑌮𑌮 𑌰𑌾𑌘𑌵𑌃 ॥"] என்று லக்ஷ்மணன் சொன்னபடி "சேலேய்கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரே" (V. 1 - 8 - ) என்று ஆழ்வார் வெளியிடுகிறார். லக்ஷ்மணன் 'ஸர்வதேச ஸர்வகால ஸர்வ அவஸ்தைகளிலும் ராமனிடத்தில் கைங்கரியம் செய்தல்லது தரியேன்' ["𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌃 𑌸𑍍𑌵𑌪𑌤𑌶𑍍𑌚 𑌤𑍇 । 𑌭𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌸𑌹 𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾 𑌗𑌿𑌰𑌿𑌸𑌾𑌨𑍁𑌷𑍁 𑌰𑌂𑌸𑍍𑌯𑌤𑍇 ॥] என்றதுபோல், "ஒழிவில் காலமெல் லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமைசெய்யவேண்டும்" (III. 3-1) என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார். இந்தப் பகவத் குணங்களை இவர் எவ்வளவு அநுபவித்தாலும் "அப்பொழுதைக் கப்பொழுது என் ஆராவமுதம்" என்னும்படி மேன்மேற் பெருகி

வருகிற அந்தக் குணாநுபவத்தில் ஆழ்வார் ஆராத ப்ரேமத்தை யுடையவரா யிருந்தார்.

3. இப்படி பகவத் குணாநுபவத்தில் ஈடுபட்டுக் குணாநுபவ பரீவாஹ ரூபமாய் உள்ளடங்காமல் நம்மாழ்வார் தம் அநுபவத்தை வெளியிட்டது, இந்தத் திருவாய்மொழிப் பிரபந்தம். கேவலம் பகவத் கடாக்ஷத்தினாலே பகவானே இவர் மூலமாய் நமக்காக வெளியிட்டார் என்பதை, இவ்வாழ்வாரே (VII. 9-2, 3, 4 X 7. 2 - 5.) "என் சொல்லால் யான் சொன்ன இன்கவி என்பித்துத், தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்" என்றும், (2) "நாமுதல் வந்து புகுந்து...தான் தன்னைச் சொன்ன" என்றும், (3) "தப்புதலின்றித் தனைக்கவிதான்சொல்லி" என்றும், (4) "தானே யானென்பானாகித் தன்னைத் தானே துதித்து" என்றும், "தன்னைத்தான் பாடி" என்றும் சொல்லுகிறார்.

பதினொரு பாசுரம் கொண்டது, ஒரு பதிகம் அல்லது திருவாய்மொழி; நூறு திருவாய்மொழிக ளடங்கிய இந்தப் பிரபந்தத்துக்குத் திருவாய்மொழி யென்று பெயர். இதில் - 10 திருவாய்மொழிகளடங்கிய 110 - பாட்டுக்களுள்ள ஒரு பாகத்துக்கு ஒரு பத்து என்று பெயர். இந்தப் பிரபந்தத்துக்கு ஆதி வ்யாக்யானம் ஆறாயிரப்படி என்னும் கிரந்தம். இதை உடையவரின் முக்கிய சிஷ்யரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்பவர் அருளிச்செய்தார். உடையவர் திருவாய்மொழியின் விசேஷார்த்தங்களை உபந்யஸிக்கும்போது கேட்டிருந்து பிறகு அந்த அர்த்தத்தின் சுருக்கத்தைப் பிள்ளான் எழுதிக் காண்பிக்க, அதை உடையவரும் பார்த்து நியாயமான வ்யாக்யானம் என்று ஒப்புக் கொண்டார் என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். அதற்குப் பிற்பாடு மிகவும் விஸ்தாரமான ஈடு 36000 - ப்படி யென்னும் வியாக்கியானமும், இன்னும் அநேக வியாக்கியானங்களும் இந்தத் திருவாய்மொழிக்கு ஏற்பட்டன. மேலும் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் இத்திருவாய்மொழியின் அர்த்தத்தை த்ரவிடோபநிஷத் ஸாரம் என்றும், த்ரவிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி என்றும் வழங்குகிற இரண்டு ஸம்ஸ்கிருத கிரந்தங்களிலும், ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதி என்கிற தமிழ்க்கிரந்தத்திலும் சுருக்கமாய் அருளிச்செய்திருக்கிறார்கள். ஆறாயிரப்படி எழுதப்பட்டு ஏறக்குறைய 800 - வருஷமாகிறது. ஈடு முப்பத்தா



றாயிரப்படி எழுதப்பட்டு ஏறக்குறைய 650 - வருஷமாகிறது. இவ்விரண்டும், திருவாய்மொழிக்கு முக்கிய வ்யாக்யானங்கள். திருவாய்மொழிக்கும், அதன் வியாக்யானங்களுக்கும் பொதுவாய் 'பகவத் விஷயம்' என்று பெயர்.

4. திருவாய்மொழியின் அர்த்தங்களை இரண்டு பிரகாரமாக நாம் விசாரிக்கலாம். மொத்தமாக இந்தக் கிரந்தத்தின் தாத்பர்யம் என்ன? அதாவது - நம் ஸித்தாந்தத்தின் முக்கியமான விஷயங்களைப்பற்றி அதில் எப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்பது, ஒரு பிரகாரம்; ஏனெனில், நம்மாழ்வாருக்குப் பகவான் "மயர்வற மதிநல மருளினன்" என்கிறபடி கொஞ்சமும் ஸந்தேஹம் விபரீதம் தவறு ஒன்று மில்லாமல் தத்வங்களைப் பூர்ணமாக அறிவித்து, ப்ரத்யக்ஷத்துக்கு ஸமானமான ஆராத பக்திரூபமாகிய ஜ்ஞாநஸாக்ஷாத்காரத்தைக் கொடுத்துப் பகவத் குணங்களை இவர் அநுபவிக்கும்படி பண்ணினான். அவன், அப்படி தன் குணங்களை ஆழ்வார் அனுபவிக்கும்போது ஒவ்வொரு திருவாய்மொழியிலும் ஒவ்வொரு குணத்தை அனுபவிக்கப்பண்ணி, கடைசியில் 10-ம் பத்து 9-ம் திருவாய்மொழியில் மோக்ஷத்துக்குப் போகும் மார்க்கமாகிற அர்ச்சிராதிகதியை ஆழ்வாருக்குக் காட்டி, 10-ம் பத்து 10-ம் திருவாய்மொழியில் "பெரிய என் அவா அறச் சூழ்ந்தாயே" என்றும், "அரியை அயனை அரனை யலற்றி அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்" என்றும் சொல்லுகிறபடி மோக்ஷத்தைக் கொடுத்தான் என்றும் தெரிகிறது. ஒவ்வொரு திருவாய்மொழியிலும் ஆழ்வார் எந்தப் பகவத்குணத்தை எவ்விதமாய் எந்த வரிசையில் முதலிலிருந்து கடைசிவரையில் அனுபவித்தார் என்கிறது, இரண்டாவது பிரகாரம். முதலிற் சொன்ன பிரகாரப்படி' இப்போது சுருக்கமாய் விவரிக்கிறோம்.

5. நமது ஸித்தாந்தப்படி ஒருவன் அறியவேண்டிய விஷயங்கள் அல்லது அர்த்தங்கள் ஐந்து; அவையாவன—(1) பரமாத்மஸ்வரூபம், (2) ஜீவாத்மஸ்வரூபம், (3) உபேயஸ்வரூபம்—(ஃபலம்) முடிவான பயனின் ஸ்வரூபம், அதாவது மோக்ஷஸ்வரூபம், (4) இந்த நித்யமான மோக்ஷத்தைக் கிடைக்கவொட்டாமல் தடுக்கும் விரோதிகளின் ஸ்வரூபம், (5) விரோதியை நிவ்ருத்திசெய்து நிரந்தரமான மோக்ஷத்தை யடைவிக்கும் உபாயத்தின் (வழியின்) ஸ்வரூபம்; ஆக ஐந்து. நம் ஆசாரியர்கள் இவ்விஷயங்களை 'அர்த்த

பஞ்சகம்' என்று சொல்வார்கள். 100 - திருவாய்மொழிகளடங்கிய இந்தப் பிரபந்தத்திற் சில திருவாய்மொழிகளால் இந்த அர்த்த பஞ்சகத்தில் ஒவ்வொரு விஷயம் முக்கியமாய் விவரிக்கப்படுகிறது. மற்றத் திருவாய்மொழிகள், இவைகளைச் சேர்ந்த ஜ்ஞானங்களை உண்டுபண்ணும்படியாயிருக்கும்.

6. முதலாவது-பரஸ்வரூபம் அல்லது பரமாத்ம ஸ்வரூபம்; இது, நான்கு திருவாய்மொழியில் நன்றாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதில் பரமாத்மாவினுடைய ஸ்வரூபம் இப்படிப்பட்டது என்று உபநிஷத்துக்களை அநுஸரித்து முதல்திருவாய்மொழியாகிற "உயர்வற" என்பதிற் சொல்லப்பட்டது. அவன், "உயர்வற உயர்நலமுடையவன்" என்றதால் இவ்வளவு என்று கணக்கிட முடியாதனவும் மனத்தாலும் வாயாலும் இவ்வளவு என்று அளவிட்டுச் சொல்ல முடியாதனவுமான ஆநந்தம் முதலிய குணங்களையுடையவன் என்றும், "அயர்வறு மமரர்களதிபதி" என்றதால் இந்த ஜகத்திலே பிறவாமல் எப்போதும் பகவானையே அநுபவிக்கும் நித்யஸூரிகளுக்கெல்லாம் மேற்பட்டவன் அவர்களுக்கும் அதிபதியென்றும், "உணர்முழுநலம், மிகுநரையிலன்" என்றும், "நிலனிடை விசும்பிடை யுருவின னருவினன்," "ஆமவை யாயவையாய் நின்றவவர்," "கரவிசும்பு எரிவளி நீர்நில மிவைமிசை, வரனவில் திறல்வலி யளி பொறையாய் நின்ற பரன்," "உடல்மிசை யுயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்" என்றும், மற்றை அடிகளால் ஸகல வஸ்துக்களும் அடங்கிய ஸகல ஜகத்துக்கும் அவனே ஸ்ருஷ்டி ஸ்திதி நாசத்துக்குக் கர்த்தா, அவன் எல்லா வஸ்துக்களிலும் அந்தர்யாமியாயிருப்பவன் என்றும், பிருஹதாரண்ய உபநிஷத்தில் அந்தர்யாமி ப்ராம்ஹணத்திலும் தைத்திரிய உபநிஷத்தில் ஆநந்தவல்லியிலும் இன்னும் அநேக இடங்களிலும் சொல்லியிருக்கிற மாதிரி அவன் ஸ்வரூபத்தை வெளியிட்டார். அவன் ஸர்வாதிகன், ஸமஸ்த கல்யாண குணாத்மகன், உபய விபூதிக்கும் நாதன் என்பதுதான், "நாராயண" என்னும் பதத்துக்கு அர்த்தம்.

7. இப்படி ச்ருதிச்சாயையாலே முதல் திருவாய்மொழியில் அறிவித்து, இப்படிப்பட்ட அந்தர்யாமியும் முதற்காரணமுமான நாராயணனே ஸாதுக்களைக் காப்பாற்றித் துஷ்டநிக்ரஹம் செய்வதற்கு ராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்தவன் என்



றும், அவதாரங்களிலும் பரத்வத்தை விடாதவன் என்றும், இதிஹாஸ புராணச் சாயையாலே "திண்ணன்வீடு" என்கிற (II, 2-ம்) திருவாய்மொழியில் "மண்ணும் விண்ணும் எல்லா முடனுண்ட நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே", "மால்தனில் மிக்கும் ஓர்தேவு முளதே" என்றும் வெளியிட்டார்.

8. "அணைவ தரவணைமேல்" என்னும் (II. 8.) திருவாய்மொழியில் "எப்பொருட்கும் வீடுமுதலாம்" (மோக்ஷத்துக்குக் காரணம்) "வன்பிறவிக்கடல் நீந்துவார்க்குப் புணை" (தெப்பம்) (II. 8. 1) என்றும், "துயரில்லா வீடுமுதல்" (காரணம்) என்றும் (11. 8. 2.), "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" (II. 8. 4) என்றும் சொல்லி அந்தப் பகவான் மோக்ஷத்தைக் கொடுக்குமவன் என்று நிச்சயித்தார்.

9. இப்படி ச்ருதியாலும் இதிஹாஸ புராணங்களாலும் சொல்லப்பட்ட ஸர்வாந்தர்யாமியானவனும் மோக்ஷத்தைக் கொடுக்குமவனுமான நாராயணனே ராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்வதுமல்லாமல், கோயில்களிலும் திருப்பதிகளிலும் அர்ச்சாவதாரம் செய்துவந்திருப்பவன் என்று "ஒன்றுந் தேவும்" என்கிற 4 - ம்பத்து 10 - ம் திருவாய் மொழியில் "யாதுமில்லா அன்று நான்முகன்தன்னொடு தேவர் உலகோடுயிர் படைத்தான் திருக்குருகூரதனுள் நின்ற ஆதிப்பிரான்" என்று உபதேசித்தார்.

10. அவனுடைய திருநாமம் நாராயணன் என்றும், மற்றைத் திருநாமங்களைவிட இந்தத் திருநாமமே முக்கியம் என்றும், தமக்கு அந்தத் திருநாமத்தில் இருக்கும் ஆதரம், தோற்ற முதற்பத்தில் "வண்புகழ் நாரணன்" என்று ஆரம்பித்து "வாழ்புகழ் நாரணன்" என்று பத்தாம் பத்தில் மோக்ஷமார்க்கத்தை ஸாக்ஷாத்கரிக்குமிடத்திலும் மத்தியில் பல இடங்களிலும் சொல்லுகிறார். "மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்" என்று முதற்பத்திலும், "கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பே" என்று 10 - ம் பத்திலும், மத்தியில் அநேக இடங்களிலும் இவ்விதமாயச் சொல்வதால், ஸ்ரீலக்ஷ்மியோடுகூடின நாராயணனே ஸர்வேச்வரன் என்று பரமாத்ம ஸ்வரூபத்தை நிச்சயித்தார்.

(இன்னும்வரும்.)

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதந பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:.

அஸ்மத் குருப்யோ நம:.

# ஸ்ரீ பாகவத தனிஶ்லோகி.

[illegible]

பரீக்ஷித் மஹாராஜா வேட்டையாடக் காட்டுக்குச் சென்று பசி தாஹத்தினால் வருந்தி அங்குச் சமீபத்திலிருக்கும் ஶமீக மஹர்ஷியின் ஆஶ்ரமத்திற்குப் போய் அந்த மஹர்ஷியைத் தாஹத்திற்குத் தண்ணீர் கேட்டான் அப்பொழுது அவர் இந்த்ரியங்களை விஷயங்களிற் போகவொட்டாமல் அடக்கி ஶரீரத்திற் சேஷ்டைகளற்று மூர்ச்சை யடைந்திருப்பது போலவே ஶரீரத்திற் ப்ரஜ்ஞையில்லாமல் ப்ரஹ்மத்யாநத்தில் ஊன்றியிருந்தமையால் அதிதிகளுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்யாமலிருந்ததைப் பார்த்து, அந்த அரசன், கர்வத்தினால் அவர் அப்படி உபேக்ஷித்திருந்து விட்டதாக நினைத்துக் கோபங்கொண்டு அருகிற் செத்துக் கிடந்ததொரு பாம்பை வில்லினாற்கொந்தி அவர் கழுத்திற் போட்டுவிட்டு அப்புறம் சென்றான். பிறகு அந்த ருஷியின் குமாரரான ஶ்ருங்கி என்பவர் தமது தகப்பனார் கழுத்திற் கிடக்கும் பாம்பின் உடலைப் பார்த்து, மிகுந்த கோபத்துடன், பரீக்ஷித் இவ்விதம் செய்துவிட்டதாக யோக த்ருஷ்டியினால் அறிந்து, 'இப்படிச் செய்தவன் இன்றுமுதல் ஏழாவது நாளில் பாம்புதீண்டி இறக்கக் கடவன்' என்று ஶபித்தார். இந்த



ஸமாசாரம் தெரிந்த அவ்வரசன் அநுதாபத்தினால் மிகுந்த வைராக்ய முடையவனாகி ராஜ்யத்தைப் புத்ரனிடத்தில் ஒப்பித்துக் கங்காநதிக் கரையில் ஆஹாராதிகளில்லாமல் ப்ராயோபவேஶம் செய்தான். இது தெரிந்து அவ்விடத்தில் அரசனைப் பார்க்க அநேக மஹர்ஷிகள் வந்து சேர்ந்தார்கள். ஶுக யோகியும் அப்படியே தமது ஶிஷ்யர்களுடன் வந்தார். அவரைப் பார்த்தவுடன் அரசன் அவருக்குச் செய்யவேண்டிய மர்யாதை யெல்லாவற்றையும் செய்து அவர் ஆஸநத்தில் வீற்றிருந்தபிறகு பின்வருமாறு ப்ரஶ்நம் செய்தான். "ஸ்வாமிந் ஜாதஸ்ய [illegible]" என்கிறபடி ஸித்தமாய் மரண மடையப்போகிற மனிதனுக்கு எப்பொழுதும் செய்யவேண்டிய கார்யமென்ன? கேட்க வேண்டியது எது? அச்சமயத்தில் அவஶ்யம் செய்ய வேண்டியது எது? நினைக்கவேண்டியதும் அடையவேண்டியதும் எது?"

இப்படி ப்ரஶ்நம் செய்த அரசனைப்பார்த்து ஶுகர் உத்தரம் சொன்னார்:— "ஹே அரசனே! ஸர்வாந்தர்யாமியாகவும், ஜ்ஞாநம் ஶக்தி முதலிய கல்யாண குணங்கள் நிறைந்தவனாகவும், எல்லாவஸ்துக்களுக்கும் நியந்தாவாகவு மிருக்கிற ஸ்ரீமந்நாராயணனே மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் கேட்கத்தகுந்தவன் "கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லாற் கேட்பரோ?" என்றதிறே.

பேசத்தகுந்தவனும் அவனே. "ஆசைவாய்ச்சென்ற சிந்தையராகி அன்னையத்த னென் புத்திரர் பூமி, வாசவார் குழலாளென்று மயங்கி மாளுமெல்லைக்கண் வாய் திறவாதே, கேசவா புருடோத்தமா வென்றும் கேழலாகிய கேடிலீ யென்றும், பேசுவாரவரெய்தும் பெருமை பேசுவான் புகில் நம் பரமன்றே" என்றன்றோ ஓதப்பட்டது. "[illegible]" என்கிறபடியே ப்ரளயகால பர்யந்தம் செய்தாலும் முடிக்கவொண்ணாத காரியத்தில் ஆசையை வைத்து அதிற் செலுத்திய சிந்தையை யுடையவர்களாய் என் தாய், என் தகப்பன், என் புத்திரர், என்பூமி என்று மரண காலத்தில் வாய் பிதற்றாமல், 'கேசவா' 'புருடோத்தமா' 'கேழலாகிய கேடிலீ' என்று பேசி அநுஸந்திப்பவர் அடையும் பெருமையைப் பேசுவதாக ஆரம்பித்தால் நமக்கு

ஶக்யமன்றென்று பகவந்நாமத்தைப் பேசவுமிருக்கும் மாஹாத்ம்யத்தைப் பலவாறாகப் பெரியோர்கள் புகழ்ந்திருக்கிறார்கள். கேசவா — நரகத்திற்குப்போன ஆத்மாவை, 'கேசவ என்னும் நாமத்தைச் சொல்லவில்லையோ?' என்றன்றோ யமதூதர்கள் கேட்கிறார்கள்? அந்தப் பழிதீர்த்துக்கொள்ள அந்த நாமத்தைச் சொல்ல வேண்டியதே. புருடோத்தமா - புருஷோத்தமனாயிருந்தாலன்றோ ஆச்ரிதர் திறத்தில் குற்றம் பார்ப்பது; "நஹ்யஸ்ய க்ருதகாரணம் ஶதவேஷ்டவ்யதயா" என்றல்லவோ உன்னபடி இருப்பது. கேழலாகிய கேடிலீ—ப்ரளயார்ணவத்தில் மூழ்கிக்கிடந்த பூமியை உத்தாரணம்செய்த உமக்கு ஸம்ஸார ஸமுத்ரத்தில் மூழ்கிக் கிடக்கும் என்னைக் கைதூக்கிவிடுவது அஶக்யமோ? என்கிறபடி. கேடிலீ—நாசமில்லாதவனன்றோ நீ; அதாவது - இப்படிப்பட்ட ஸ்வபாவத்துக்கு மாறுதலன்றிக்கே இருப்பவனன்றோ நீ என்கிறபடி.

நினைக்கத்தகுந்தவனும் அவனே. "ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே ஶரீரே ஸதி யோ நர: । தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்தா விஶ்வரூபம் ச மாமஜம் ॥ ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாணஸந்நிபம் । அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்" 'எவனொருவன் ஶரீரம் முதலியவைகள் ஸ்வஸ்தமாக இருக்கும்பொழுது என்னை ஒருதடவையாவது நினைக்கிறானோ, அவன் மரணகாலத்தில் கட்டை கல்போல அறிவற்றிருந்தாலும் நான் அவனை நினைத்து என்னுடைய உயர்ந்த கதிக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்' என்கிற இது "செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த, மெய்ம்மைப் பெருவார்த்தை" யல்லவோ? ஆகையால், நினைக்க வேண்டியவனும் அவனே."

இப்படி உத்தரம் சொன்ன ஶுகமஹர்ஷியிடமிருந்து பகவானுடைய சரித்ரத்தைச் சுருக்கமாய் அருளிச் செய்யக் கேட்டுத் திருப்தி பிறவாமல் 'க்ருஷ்ணனுடைய சரித்ரத்தை விஸ்தாரமாய் அருளிச் செய்ய வேணும்' என்று ப்ரார்த்தித்து, 'அந்தச் சரித்ரத்தைக் கேட்பதில் போதும் என்கிற எண்ணம் ஒருவருக்கும் வராது' என்று பரீக்ஷித் ஸயுக்திகமாகப் பேசுகிறார்:—



நிவ்ருத்ததர்ஷைருபகீயமாநாத் பவௌஷதாச் ச்ரோத்ரமநோऽபிராமாத் । க உத்தமஶ்லோககுணாநுவாதாத் புமாந் விரஜ்யேத விநா பஶுக்நாத் ॥

உலகத்தில் ஜீவராசிகள் மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்; "பல்வினை வன்கயிற்றால் பந்தமுற்றுழல்கின்றனரும், கல்வினைமுட்டிய காரணனார் பதம் பெற்றவரும், தொல்வினையொன்றுமில்லாச் சோதி வானவரும் கருதி, சொல்வினை யோர்ந்தவர் சிவரென்றோதச் சிறந்தனரே" என்கிறபடி, பலவகைப்பட்டதாகவும் பகவானைக் கால் கட்டி அவிழ்த்துக்கொண்டாலன்றி மற்றை யெவ்விதத்திலும் அவிழ்க்கக் கூடாததாகவுமிருக்கிற கர்ம பாசங்களாற் கட்டுண்டு உழலுகிற பத்தர்களும், பக்தி ப்ரபத்தியாகிற ஶாஸ்த்ரங்களிற் சொல்லிய ஸத்கர்மங்களால் ஸ்ரீய:பதியின் ஸ்தாநமான நித்ய விபூதியை அடைந்த முக்தர்களும், "ஸவயஸ உவ பேஶீ நித்யநிமிஷாயுஷமாயா:" என்கிறபடி ஸர்வேச்வரனோடு ஸம வயஸ்ஸையுடைய தோழன்மார்கள் போல ஒருபொழுதும் கர்ம ஸம்பந்தமில்லாத நித்யஸூரிகளும் ஆக இம்மூன்று வகுப்பினரும், வேதத்தை ஸார்த்தமாக அறிந்தவர்களால் ஜீவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள். இதில் ஸம்பத்தர் புபுக்ஷுக்கள், முமுக்ஷுக்கள் என்று இருவகையர். ஸம்ஸார ஸுகங்களை அநுபவிக்க ஆசையுள்ளவர்கள், புபுக்ஷுக்கள்; மோக்ஷத்தில் ஆசையுள்ளவர்கள், முமுக்ஷுக்கள். இந்த நான்கு வகுப்பினர்க்கும் பரமாத்மாவின் திவ்ய சரித்ரத்தைக் கேட்பதில் போதும் என்கிற த்ருப்தி உண்டாகாது.

நிவ்ருத்ததர்ஷை:—நிவ்ருத்தமான தர்ஷத்தை யுடைத்தாயிருக்கிறவர்களால்; இங்கு தர்ஷமாவது - ஶப்தாதி விஷயங்களில் ஆசை. அந்த ஆசையாற் செய்யப்படுவதும் அந்த ஆசைக்குக் காரணமுமான கர்மங்கள் இதனாற் சொல்லப்படுகின்றன. இவை நிவ்ருத்திக்கையாவது, "நஸாக்ருதம் ந த்யக்தம் ஸர்வே வாஸநாதோ நிவர்த்ததே" என்றும், "தத்ப்ரேக்ஷிதே வாஸ்மேன ஶப்தம் ப்ரணஶ்யதி பச்சாத்தபோ ஹ்யஸ்ய ஸர்வே வாஸநா ப்ரணஶ்யந்தே" என்றும், "போய பிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசாகும்" என்றும் சொல்லுகிறபடி,

புண்ய பாபங்களாகிற கர்மங்கள் முன்பு ஒரு காலத்திலிருந்து விட்டுப் பின்பு குடிபோயிற்று என்று தெரிந்து கொள்ளாதபடியாகவும், மறுபடியும் திரும்பி வருவதற்கு ஸம்பாவனையில்லாதபடியாகவும் ஸவாஸநமாகப் போகை. இதனால், முக்தரும், அநாதியாக நிவ்ருத்தமான கர்மங்களை யுடையரான நித்யரும் சொல்லப் படுகிறார்கள்.

[illegible] — பாடப்படுகிற. இங்கு வர்த்தமான காலத்தைக் காட்டுகிறபடியால், ஒரு கால விசேஷத்தில் பாடி அதன் ப்ரயோஜநம் பெற்றுத் திரும்பிப்போகை யன்றிக்கே, இதுவே ஸ்வயம் ப்ரயோஜநமாக ஸர்வதா பாடிப் போருவார்களென்றதாய்த்து. உப - ஸமீபத்திலே பாடப்படுகிற என்று அர்த்தம். "பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே" என்றன்றோ அருளிச்செய்திருக்கிறார்கள். பல்லாண்டும் - அநேகவருஷ காலங்களும். நித்யவிபூதியிற் காலத்தாலளவில்லையானாலும் இந்த விபூதி பழக்கத்தாற் சொல்லப்பட்டது. பரமாத்மனை - எல்லா ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியாக இருக்குமவனை, இதனால், "சோராத காதல் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலை யொன்றும், பாரா தவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன்" என்கிறபடி அளவில்லாத ப்ரீதி பாரவச்யத்தால் அவனுடைய நித்யத்வம் முதலான குணங்களொன்றையும் ஆலோசிக்காமல் பல்லாண்டென்று மங்களாசாஸநம் செய்யும் ஸ்வபாவத்தை உடையவர்களாதலால் அஸ்தாந பயசங்கிகளாக அவனுடைய ஸர்வாந்தர்யாமித்வாதிகளை அறியாநிற்கச்செய்தே ஏத்துவார்களாய்த்து. சூழ்ந்து — "[illegible]" என்கிறபடி அவயவங்கள் தோறும் அழகுநிறைந்துள்ள ஸ்ரீ பரவாஸுதேவனுடைய திருமேனியை அநுபவித்து த்ருப்தியில்லாதவர்களாய் ஸமுத்ரத்திற் கிடக்கும் துரும்புபோலத் தத்தளித்து ஒவ்வொரு அவயவத்தின் அழகுக்கும் பரவசர்களாகி நாலு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டு என்றபடி. இருந்து — "[illegible]" "[illegible]" என்கிறபடி தாம் இப்படி சூழ்ந்துகொண்டு வருகையில்



அந்தத் திவ்யாவயவங்களின் சோபை கண்ணையும் மனத்தையும் தன் வசமாக்கிக் கொள்ள அவைகளை மீட்கச் சக்தியற்றவர்களாய் அங்கே இருந்து என்றபடி. ஏத்துவர் பல்லாண்டே—மங்களாசாஸநம் செய்வார்களென்பது.

யத்வா, உப - ஸமீபத்தில் - பாகவதர்கள் திரளிலே, அவர்கள் ஸமீபத்திலே என்னுதல். "குழாங்களாயடியாருடன் கூடிநின்றாடினே" என்றார்களிறே, இதன் சீர்மை யறிந்தவர்கள். இதன் கருத்தென்னவெனில்:—சிலர் பகவத்குணங்களைக் கேட்டும் ஆஸுரத்தன்மையை அடைந்திருப்பதால் சிவட்கென் றிருப்பார்கள்: சிலர் அப்படி யில்லையேயாகிலும், "உண்டியே யுடையே யுகந்தோடும், இம்மண்டலத்துள்ளார்" என்கிறபடி இதன் சீர்மையறியாதே க்ஷுத்ர புருஷார்த்தங்களிலுள்ள ஆதராதிசயத்தால் பகவத்குண காநத்தைக் கேட்டும் அவிக்ருதரா யிருப்பார்கள். இவர்களிடத்தில் இந்தக் காநத்தைப் பாழே போக்காமல், அதைக் கேட்டவாறே, ஆடியாடி யகங்கரைந் திசைபாடிப்பாடிக் கண்ணீர் மல்கி நிற்கும் ஸத்வோத்தரர்கள்பக்கல் சொல்லப் பாருங்கோளென்றபடி. அன்றிக்கே, "பாலாழி நீ கிடக்கும் பண்பை யான் கேட்டேயும், காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்கிறபடி பகவத் குணங்களைக் கேளாநிற்கச் செய்தே கால் தளர்ந்து மதி லாந்தஃ காணராய்க் கண்ணும் சுழலையிட்டுப் போமிறே இவர்களுக்கு. "எத்திறம்" என்று ஆறுமாஸமும், "பிறந்தவாறும்" என்று ஆறுமாஸமும் மோஹித்துக் கிடந்தவர்களு முண்டிறே. "[illegible]" என்று வால்மீகி பகவாக் கேட்க, ஸ்ரீநாரத பகவாந் "[illegible]" என்றானிறே. இவன் இனி ஒருவரிடத்திற் கேட்டுத் தெரிந்துகொண்டு சொல்லப்போகிற தில்லையே! ஆகையால், பகவத்குணங்களைச் சொல்லக் கேட்ட வளவிலே நெஞ்சு அபஹ்ருதமா யிருக்கையாலே சொல்லுகிறா னத்தனையன்றோ. ஆகையால், இன்னகத்திலே யிழிவார் துணைதேடிக்கொண்டு இழியுமாப்போலத் துணையோடு குழாம் குழாமாய்க் கூடியிருந்து பாடியாடுங்கோ ளென்கிறது.

(இன்னும் வரும்).

சே. நரஸிம்ஹாசாரியர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ அஹோபிலமட சிஷ்ய ஸபை.

ஸபையின் பொதுக்காரியதரிசி ஸ்ரீமாந். வி. ராஜகோபாலாசாரியர் பின்வருமாறு ஸபையின் வரவு செலவு கணக்கு அனுப்பி யிருக்கிறார்.

1910 - வது வருஷத்து வரவு செலவு கணக்கு.

| நம்பர். | விவரம். | வரவு. ரூ. | அ. | ப. | செலவு. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1910௵ ஜனவரி௴ 15௳ முதல் டிஸம்பர்௴ 31௳ வரையில் சந்தா மூலமாய் வரவு ... | 328 | 7 | 0 | | | |
| 2 | 1910௵ ஜனவரி௴ 15௳ முதல் டிஸம்பர்௴ 20௳ வரையில் சபையின் செலவு ... | | | | 201 | 1 | 0 |
| 3 | 1910௵ டிஸம்பர்௴ 20௳ முதல் 31௳ வரையில் தஞ்சாவூர் மகாசங்கத்திற்குச் செலவு... ... ... ... | | | | 88 | 8 | 6 |
| 4 | 1910௵ டிஸம்பர்௴ 31௳ இருப்பு .. | | | | 38 | 13 | 6 |
| | ஆக ரூ. ... | 328 | 7 | 0 | 328 | 7 | 0 |



1911௵ ஜனவரி௴ 1௳ முதல் மார்ச்௴ 31௳ வரையில் வரவு செலவு கணக்கு.

| நம்பர். | விவரம். | வரவு. ரூ. | அ. | ப. | செலவு. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1911௵ ஜனவரி௴ 1௳ இருப்பு ... ... | 38 | 13 | 6 | | | |
| 2 | தெலுங்கு விஜ்ஞாபன பத்திரிகை அச்சிட (1000 - பிரதி) ... ... ... | | | | 5 | 0 | 0 |
| 3 | ஷை க்குக் காகிதம் கிரயம் ... ... ... | | | | 2 | 4 | 0 |
| 4 | சபையின்விதி இங்கிலீஷில் அச்சிட அச்சுக் கூலி ... ... ... ... ... | | | | 1 | 14 | 0 |
| 5 | ஷை விதிகளைத் தமிழில் அச்சிடக் காகிதம் கிரயம் உள்பட ... ... ... | | | | 5 | 9 | 0 |
| 6 | ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி பிருந்தாவனம் படம் கட்டடம் கண்ணாடி போட ... | | | | 2 | 12 | 0 |
| 7 | கன்னடத்தில் விஜ்ஞாபன பத்திரிகை அச்சிடக் காகிதம் கிரயம் உள்பட ... ... | | | | 15 | 0 | 9 |
| 8 | சந்தா மூலமாய் வரவு ... ... ... | 26 | 0 | 0 | | | |
| 9 | சென்னப்பட்டணம் சைதாப்பேட்டை பிரிவின் காரியதரிசி 26-வது விதிப்படி பிப்ரவரி௴ அனுப்பியது ... ... ... | 10 | 12 | 9 | | | |
| 10 | ஷை மார்ச்௴ அனுப்பியது ... ... | 10 | 12 | 9 | | | |
| 11 | வட ஆற்காடு ஜில்லா காரியதரிசியால் ஷை விதிப்படி வரவு ... ... ... | 7 | 0 | 0 | | | |
| 12 | தபால் ஸ்டாம்பு செலவு ... ... ... | | | | 6 | 15 | 6 |
| 13 | இதர சில்லறைச் செலவுகள் ... ... | | | | 10 | 1 | 0 |
| 14 | 1911௵ மார்ச்௴ 31௳ கையிருப்பு ... | | | | 43 | 14 | 9 |
| | ஆக ரூ. .. | 93 | 7 | 0 | 93 | 7 | 0 |

வி. ராஜகோபாலாசாரியர்,
ஸ்ரீ. அ. ம. சிஷ்யசபையின்,
பொதுக்காரியதரிசி.

சித்தூர்.
1911௵ ஏப்ரல்௴ 5௳.

ஸ்ரீ:

# பிரிவுகளின் மாஸ அறிக்கை.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

சென்ற சித்திரைமீ 11௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 4 - மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஷ பிரிவின் 7 - வது கூட்டம் சேர்ந்தது. (பிரஸிடென்ஸி காலேஜ்) ஸ்ரீமாந். எம். ரங்காசார்யர் எம். ஏ. முதலிய வித்வான்கள் அநேகர் வந்திருந்தார்கள். ஸ்ரீமாந். சே. நரஸிம்ஹமாசாரியர் "அமலனாதிபிரான்" 9 - 10 - வது பாசுரங்களைப்பற்றி உபந்யாஸம் செய்தார். இதில் முதற்பாசுரத்தில் - பகவானுடைய அகடிதகடநா ஸக்தியையும், மற்ற எல்லாத் தேவதைகளையும் ரக்ஷிக்கும் தன்மையையும், ஆகையால் அவனே எல்லாருக்கும் ஸேவ்யனாக இருக்கிறான் என்பதையும், ஒருகால விசேஷத்தில் ரக்ஷிப்பது போதாதென்று ஸர்வகாலத்திலும் ரக்ஷிக்கிறதற்காகவே ஸ்ரீரங்கத்தில் அர்ச்சாவதாரங் கொண்டு எழுந்தருளியிருக்கிறான் என்பதையும், கௌஸ்துபம் முதலிய திவ்யாபரணங்களுக்குக்கூட சோபையைக் கொடுக்கக்கூடிய திவ்யமங்கள விக்ரஹமும் அதின் அளவற்ற தேஜஸ்ஸும் தமது திருவுள்ளத்தைப் பரவஸமாக்கினபடியையும் ஆழ்வார் அருளிச்செய்திருக்கிறார் என்றும்; இரண்டாவது பாசுரத்தில் - மேகம்போல ப்ரத்யுபகாரத்தை எதிர்பாராமலும் தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்கிற வ்யத்யாஸத்தை ஆலோசிக்காமலும் ஸர்வோபகாரங்களையும் ஸர்வருக்கும் செய்து கொடுக்கும் ஸ்வபாவத்தோடு பகவான் கூடியிருக்கிறான் என்பதையும், ஸேவித்த மாத்ரத்திலே ஸர்வதாபங்களையும் போக்கடிக்கும் திவ்யகாந்தியோடு கூடிக்கொண்டிருக்கிறான் என்பதையும், இவ்வளவு உபகாரங்களைச் செய்தும் இவைகளைத் தன்னுடைய ப்ரயோஜநத்திற்காகவே தான் செய்கிறதாக நினைக்கும் ஸ்வபாவத்தோடு கூடினவன் என்பதையும், இப்படி எங்ஙனே செய்திருக்கிறான் என்னில் க்ருஷ்ணாவதாரத்தில் மிகவும் தாழ்ந்தவரான இடங்கை வலங்கை யறியாத கோபாலர்களுடன் ஸமரஸமாய்க் கலந்தும் அவர்களுடைய த்ரவ்யத்தைக் களவுகொண்டும் செய்த சேஷ்டிதங்களை த்ருஷ்டாந்தமாகக் காட்டி இவ்விதமாகவே தம்முடைய மனத்தையும் அபஹரித்து விட்டான் என்பதையும், நித்யஸூரிகளுக்கெல்லாம் தான் நிர்வாஹகனாக இருந்தும் அந்தக் கிருஷ்ணாவதாரமும் பரதசையென்று சொல்லும்படியான ஸௌலப்யத்தில் மிகுந்த அர்ச்சாவதாரத்தைப் பரிக்ரஹித்திருக்கிறான் என்பதையும், அந்தத் திவ்யமங்கள விக்ரஹத்தோடு சேர்ந்திருக்கும் தசையிலேயே தமக்கு அத்யந்த போக்யனானான் என்பதையும், இப்படி ஸ்வல்ப பக்தி லேஸமுடையார்க்கும் தான் போக்யனானபடியால் கடல்பட்டுக் கிடந்ததும் மிகுந்த ஆயாஸத்தினால் கடைந்தெடுக்கப்பட்டதுமான தேவதைகளின் அம்ருதத்தைக்காட்டிலும் விசேஷித்த அம்ருதமாக இருக்கிறான் என்பதையும், இவ்வளவு குணநிக்யமுள்ள விடத்தில் அகப்பட்ட தன்னுடைய கரணங்கள், பரவ்யூஹ தசையோடும் அவதாராந்தரங்களோடும் வாசியற மற்றொன்றை விஷயீகரிக்காமலிருக்கும்படி பெரியபெருமாள்பக்கல் அவைகளுக்கு அதிசயித



ப்ராவண்யம் உண்டாயிருக்கிறது என்பதையும், அருளிச்செய்திருக்கிறார் என்றும், இப்படி முக்தனுடைய அநுபவதுல்யமான அநுபவத்தை ப்ரதிபாதிக்கையால், ந்யாயஸஞ்சாரங்களைச் செய்து பகவத் குணங்களை நிஷ்கர்ஷம்செய்ய ஸக்தியற்றவர்களுக்கு, அந்த ப்ரயாஸமன்றிக்கே எளிதில் ஸகல அர்த்தங்களையும் இந்த ப்ரபந்தமே தெரிவிக்கிறது என்றும், அப்படி ந்யாய ஸஞ்சாரம் செய்தாலும் அப்படிச் செய்வதில் இது விதைபோல எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக இருக்கிறது என்று நம் ஆசார்யன் இதைப் போர உகந்தருளினார் என்றும் உபபாதித்து உபந்யாஸத்தை முடித்தார். உபந்யாஸம் முடிந்த பிறகு ஸ்ரீமாந். டி. ராஜகோபாலாசாரியர் தம்மால் ஸம்ஸ்க்ருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த "அமலனாதிபிரான்" அர்த்தமடங்கிய 10 - ஶ்லோகங்களைப் படித்தார். அந்த ஶ்லோகங்களின் ரசனையையும் ஸாரஸ்யத்தையும் அர்த்தகௌரவத்தையும் பார்த்து எல்லாரும் ஆநந்தித்தார்கள். ஸ்ரீமாந். எம். ரங்காசாரியர், உபந்யாஸத்தை மிகவும் ஶ்லாகித்து, இம்மாதிரியான ஸபை உண்டானதையும் அந்த ஸபையிலிருந்து விளையக்கூடிய ஏராளமான நன்மைகளையும் பற்றிப் பலவாறாகப் புகழ்ந்து, இந்த ஸபைக்கு 'அஹோபிலமட சிஷ்ய ஸபை' என்று பெயரிட்டிருந்தபோதிலும் ஸகல வைஷ்ணவர்களும் ஆதரிக்கக் கூடியதென்றும், அப்படி ஆதரித்து எல்லாரும் ஒன்றுசேர்ந்தால் அளவில்லாத ப்ரயோஜநம் கிடைக்குமென்றும் வற்புறுத்திச் சொன்னார். பிறகு தம்முடைய ஶ்ரமத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் பிறருக்கு அத்யந்தம் உபகாரகங்களான இந்த உபந்யாஸங்களைச் செய்து அநுக்ரஹித்த ஸ்ரீமாந். சே. நரஸிம்ஹமாசார்யர்பக்கல் தமக்கு இருக்கும் க்ருதஜ்ஞதையை யதாஶக்தி ஆவிஷ்கரித்த பிறகு கூட்டம் கலைந்தது.

---

### 1911௵ ஏப்ரல்மாசத்து வரவு செலவு கணக்கு.

| நம்பர். | விவரம். | வரவு. | | | செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஏப்ரல்மீ 1௳ யில் கையிருப்பு ... ... ரூ. | 26 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2 | 1910 - 11 - ௵ச் சந்தா வரவு ... ரூ. | 5 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | உபந்யாஸ ஸம்மாநத்திற்காக வரவு ... ரூ. | 3 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | அச்சுச் செலவு... ... ... ... ரூ. | 0 | 0 | 0 | 0 | 14 | 6 |
| 5 | சபைப் பொதுக் காரியதரிசிக்கு 26 - வது விதியின்படி அனுப்பியது ... ... ரூ. | 0 | 0 | 0 | 2 | 0 | 0 |
| 6 | சே. நரஸிம்ஹமாசாரியருக்கு உபந்யாஸங்களுக்காகக் கமிட்டியார் உத்தரவின்படி ஸம்மாநமாகக் கொடுத்தது ... ரூ. | 0 | 0 | 0 | 18 | 0 | 0 |
| 7 | ஏப்ரல்மீ 30௳ யில் கையிருப்பு ... ரூ. | 0 | 0 | 0 | 13 | 1 | 8 |
| | ஆக ரூ. ... | 34 | 0 | 0 | 34 | 0 | 2 |

மயிலாப்பூர்.
1911௵ மேமீ 1௳.

எஸ். வாஸுதேவன்,
காரியதரிசி.
மதிராஸ் சைதாப்பேட்டை பிரிவு.

ஸ்ரீ:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**திவ்யதேசமஹோத்ஸவங்கள்.**

பற்பல திவ்யதேசங்களில் ஏககாலத்திலும் பிந்நகாலங்களிலும், ஸம்ஸாரத்திலகப்பட்டுத் தைந்யத்தையடைந்திருக்கும் சேதநர்கள் ஸேவித்து உஜ்ஜீவிக்கும்பொருட்டு, எம்பெருமான் மஹோத்ஸவங்களைக் கண்டருளிக்கொண்டேயிருக்கிறான். அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் பகவதநுபவத்தை, “கதா புநஸ் ஸங்கசக்ராங்கித பதம் த்ரிவிக்ரம” என்கிறபடி அபவர்க்க துல்யமாக நித்யமாய் ஸேவிக்கப்போகிறோமோவென்று ஸ்ரீ ஆசார்யர்கள் ப்ரார்த்திக்கும்படியன்றோ எம்பெருமான் உத்ஸவம் கண்டருள்வது. ஸமீபத்தில் இரண்டொரு மாஸகாலத்திற்குள்ளாகப் பல திவ்யதேசங்களில் மஹோத்ஸவங்கள் நடந்து வருகின்றன. பக்ஷிராஜன் முதலிய திவ்ய வாஹநங்களில் திருமாலை திருவாபரணங்களைச் சாத்திக்கொண்டு திருவீதிகளை அலங்கரிக்கும் தேவாதிராஜனுடைய திவ்ய ஸேவையை அநுபவிக்கும் சேதநரே சேதநர். “ஸ்ருஷ்டோ ஸ்ருஷ்ட: வாஹநகதி விஷேதாம்ப்ரவேகாஸ்யமாநா: ஸ்ருஷ்ட்யாபாஸ்யமாந: கநகவிபூஷா வாஷ்பவிந்து ஸந்ததம் ஸம்ஸ்பந்த ஸ்ருஷ்டயஸ்ஸ: ஸ்வாத்மநா விநயநிஷ்ட்தே ஸ்வாத்யயநே ஷடம் தே” என்கிறபடி அந்தத் திவ்ய மங்கள விக்ரஹத்தின் ஸோபையில் மனஸ் ஈடுபட்டு ஆநந்தம் தாங்கமாட்டாமல் ரோமாஞ்ச முண்டாகித் தேஹம் பூரித்து நீரால் நிரம்பியிருக்கும் கண்களுடனும் பாஹ்ய விஷயங்களிலிருந்து விரக்தங்களாயிருக்கிற அந்த:கரணங்களுடனுமன்றோ சில மஹாத்மாக்கள் எம்பெருமானுடைய



உத்ஸவமண்டபாதிகளை அலங்கரித்து அவனுடைய ஸேவையை அநுபவிக்கிறார்கள். எப்பொழுதும் பரிசிதமாக இருக்கையிலும் ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிதான பொருள் கிடைத்ததுபோல ஔத்ஸுக்யத்தை அடைந்திருக்கும் லக்ஷ்மீயுடன் கூடின நாராயணனை இந்த ஊனக்கண்களால் ஸாக்ஷாத்கரிப்பதும், அப்படிப்பட்ட நாராயணனுடைய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாவதும், எல்லா ஜநங்களுக்குமே கிடைத்துவிடுமோ? “யஸ்ச ராமம் ந பஸ்யேத்து யம் ச ராமோ ந பஸ்யதி—நிந்தித: ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே” என்றன்றோ வால்மீகி பகவான் அநுக்ரஹித்திருக்கிறான்.

அஹோ! எம்பெருமானுடைய வாத்ஸல்யம்! முதல் முதலில் அவ்வெம்பெருமான் ஸம்ஸாரிகள் படும் கஷ்டத்தைப் பார்த்து அந்தத்துக்கத்தை ஸஹிக்கமாட்டாமல் அவர்களைக் கரையேற்றும் பொருட்டு ஸாஸ்த்ரங்களைச் சொன்னான். அந்த ஸாஸ்த்ரங்களின் மாஹாத்ம்யத்தைக் கிஞ்சித்தும் அறியாமல் அவைகளை மீறிநடந்து இன்னும் மஹத்தரமான கஷ்டங்களை ஜீவன்கள் விளைவித்துக் கொள்வதை அவன் கண்டு ‘அந்தோ! ஜீவாத்மாக்கள் இப்படி நன்மைதீமைகளைப்பற்றிய ஜ்ஞாநமில்லாமலே தம்மைப் பாழாக்கிக் கொள்ளுகிறார்களே!’ என்று விசாரமடைந்து, ‘எவ்விதமாகத் தப்புவித்து வைப்போம்’ என்று எண்ணி, கொஞ்சமேனும் தாரதம்யம் பாராமல் பலபிறப்பும் பிறந்தான். அளவற்ற மந்த பாக்யத்தால் அந்த அவதார வைபவத்தைக் கொஞ்சமேனும் உணராமல் ஜநங்கள் அதையும் கைதவறவிட்டு, அநேக கோடி ஜந்மங்களால் தமக்குக் கிடைத்திருக்கும் வாஸநாவஸத்தினால் அவனையொழிந்த மற்ற அநர்த்தாவஹமான விஷயங்களையே ஆராதித்துப்போக, “ஜநந்யா ஜாயமாநஸ்ய தத்ஸ்யா ஸோத்யம் ஸம்” என்கிறபடி எவ்வளவுக்கெவ்வளவு மௌட்யம் வ்ருத்தியாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அஸமர்த்தனாக இருக்கும் ப்ரஜையினிடத்தில் தாயாருக்கு அதிக வாஞ்சை உண்டாவதுபோல, எம்பெருமான் அஜ்ஞர்களான இந்த நார்களிடத்தில் வாத்ஸல்யம் மிக்கவனாகி, தர்ஸநீயதமமான தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸோபையையும், அர்ச்சக பராதீநமான ஸீலவத்தையையும் காட்டி, ஒரு முதலுமில்லாமற் குறைவுபட்டு உருகி நிற்கும் ஜநங்களை ரக்ஷிக்

கைக் காகவன்றோ பற்பலதேசங்களிலும் எழுந்தருளி யிருப்பது? குறைவற்றோரை ரக்ஷிப்பதற்கு இங்கு வரவேணுமா? அங்கேயே யிருக்க அமையாதோ? இப்படி அளவற்ற வாத்ஸல்யத்துடன் நம்முடைய அபராதங்களையும் துர்க்குணங்களையும் ஸஹித்துக்கொண்டு, ஸர்வஶக்தனான அவன் பிணைத்த பிணையி லகப்பட்டிருக்கும் நாம் அவன்கால்கட்டி அந்தப்பிணையை யவிழ்த்துக்கொள்ள வேண்டியதுபோக, எம்பெருமான் நாம் பிணைக்கும் பிணையிலகப்பட்டு நாம் அவிழ்த்துவிட்டாலொழியத் தானே போகமாட்டாமல் நாம்கட்டியாட்டும் கூத்துக்கெல்லாம் உட்பட்டுக் குழந்தையின் கையி லகப்பட்ட பொம்மைபோலப் பரவசனாக நிற்கும் அர்ச்சாவதார நிலையைப் பார்த்தால், 'இதுதான் எம்பெருமானுக்கிருக்கும் வாத்ஸல்யத்திற்குப் பரா காஷ்டையோ? கோபீஜநங்களுக்கு வஶம்வதனாக இருந்தானென்று பெரியோர்கள் புகழும் கண்ணனுடைய வாத்ஸல்யமும் இதற்கு எதிர்நிற்குமோ?' என்று நினைக்கும்படி யன்றோ இருக்கிறது.

இப்படிப்பட்ட வாத்ஸல்யத்திற்கு நாம் செய்யும் கைம்மாறென்ன? நம்முடைய ஹிதத்தையே தேடும் அவனுடைய கடாக்ஷத்திற்கு உட்படாமல், சில மந்தபாக்யர்கள் போக்யதமமான பாலை மருந்தென்றால் அக்காரணங்கொண்டே இழப்பதுபோல, அவனுடைய தர்ஶநீயதமமான திவ்ய மங்கள விக்ரஹத்தையும் மோக்ஷப்ரதமா யிருக்கிற தென்கிற விஷயத்தைக் கொண்டே நாம் இழந்து விடுகிறோமென்பது மாத்ரமன்று. அவனுக்கு அத்யந்தம் அப்ரீதியை உண்டுபண்ணும் மஹத்தான ஆஜ்ஞாதிலங்கநத்தைச் செய்து நம்முடைய ஜந்மத்தைப் பாழே போக்கிக்கொள்ளுகிறோம். மஹோத்ஸவம் ஸமீபிக்கிறதென்றால், அவனை ஆஶ்ரயித்திருக்கும் நாமெல்லாரும் ஐகமத்யத்துடன் அவனுக்குக் கைங்கர்யம் செய்வதிலேயே ஊக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டுவது போக, பரஸ்பரம் ஸ்பர்த்தையைப் பாராட்டி நமக்குள் ஒருவர் மற்றொருவரை நிந்தித்தும், பலவிதமான தீமைகளைச் செய்வதில் ப்ரயத்நப்பட்டும், இன்னும் இம்மாதிரியான மிகவும் ஹீந வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தித்தும் நிற்கிறோமே! இது, நமக்குத்தான் லக்ஷணமா? நாம் உஜ்ஜீவிக்க வேண்டுமென்று இப்படிப் பாரதந்த்ரியத்தின் எல்லைநிலத்தைக் காட்டும் ஈஶ்வரனுக்குந்தான் உகப்பாகுமா? மற்ற எவ்விடத்தில் ஸம்பாவனைக்கு அர்ஹமானாலும், கலஹாதி





கள் எல்லாருக்கும் ஸர்வவித ஶேஷியாக இருக்கும் அவனுடைய முன்னிலையில் நம்தேஹாபிமாநத்தைப் பாராட்டுவது அவனுக்கு த்ருப்தியாக இருக்குமோ? குத்ஸிதமான வைஷம்யத்தை நாம் வஹித்தால், 'வைஷம்யமே இல்லாமலிருக்கும் பகவானை ஆஶ்ரயித்தவர்கள் நாங்கள்' என்பது நம்மிடத்தில் எப்படி ஏற்படும்? மஹாப்ரபுவாக இருக்கும் நாராயணனையே ஆஶ்ரயணீயனாக நம்பி, அவனால் ப்ரவர்த்திக்கப்பட்டிருக்கும் ஶாஸ்த்ரங்களையே ப்ரமாணமாகக்கொண்டு, அவனுக்குக் கைங்கர்யம் செய்வதையே பரமபுருஷார்த்தமாக நினைத்து இவ்வளவு தூரம் ஏறினபிறகு, ஒரே மார்க்கத்தில் ஒரே ப்ராப்யத்தை உத்தேஶித்துச் செல்லும் நாம் பரஸ்பரம் ஸ்பர்த்தையைச் செய்வது எந்த ஶாஸ்த்ரத்திற்கு ஸம்மதமாகும்? எந்த லோக ந்யாயத்திற்குத்தான் ஒத்துவரும்? நம்முடைய சச்சரவைத் தீர்க்கும்பொருட்டு ராஜ ஸேவகர்களின் ஸஹாயத்தை அபேக்ஷிக்கும்படியாக நேர்வதையும், திவ்யகோஷ்டிகளை அலங்கரிக்கும் பாகவதோத்தமர்கள் அந்தஸேவகர்களுடைய வேத்ர ஶிகரத்தின் ஸபந்தத்தில் வ்யவஸ்திதர்களாக நிற்பதையும் நினைக்க, அத்யந்தம் லஜ்ஜையாக இருக்கிறது. எப்பொழுது இந்த மாத்ஸர்யத்தைத் தூரவிலக்கி ஸத்வோத்தரர்களாகப் பகவத்பாகவதாபசாரத்திற்கு ஆட்படாமல் எம்பெருமானையே ஶரண்யனாக அடைந்திருக்கும் நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் பகவத்குணங்களிலேயே ஈடுபட்டு மஹோத்ஸவங்களை ஸேவிக்கப் போகிறோம்? என்பதுதான் பெருத்த விசாரத்திற்கு ஹேதுவாக இருக்கிறது. அங்கங்கிருக்கும் வ்யபதிஷ்டர்களான மஹான்கள் இந்த விஷயத்தில் நிர்மத்ஸரர்களாக ப்ரவ்ருத்தித்து இதைச் சீக்கிரத்தில் நிஷ்பந்நமாகச் செய்துவைக்க வேண்டுமென்று அதிமாத்ரம் ப்ரார்த்திக்கிறோம்.

---

**ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ப்ரவசந ஸபை.**

தென் ஆற்காடு ஜில்லாவிலிருக்கும் திருவஹீந்த்ரபுரம் என்னும் திவ்யதேஶத்தில் சென்ற புரட்டாசி மாஸம் ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் மஹோத்ஸவத்தைக் கண்டருளினபொழுது, ஸேவார்த்திகளாக அங்கு வந்திருந்த மஹான்களிற் சிலர் ஒன்று சேர்ந்து, ஸ்ரீவிஶிஷ்டாத்வைதமத ஸம்பந்தமான க்ரந்தங்கள் லுப்த

மாகாமல் ப்ரசாரம் செய்யப்படவேணும் என்கிற எண்ணத்துட
னும், அந்த ஸித்தாந்தம் அபிவ்ருத்தியாகி எல்லாரும் உஜ்ஜீவிக்
கும்படி பரவவேணும் என்கிற உத்தேசத்துடனும், 'ஸ்ரீ விசிஷ்
டாத்வைத ப்ரவசந ஸபை' என்று ஓர் ஸபையை உண்டுபண்
ணினார்கள். அந்த ஸபையின் நோக்கங்கள் லோகத்திற்கு ஹிதங்
களாக இருப்பதைப் பார்த்து, அந்தக் காலத்தில் அங்கு அஸந்நி
ஹிதர்களாக இருந்த சில ஆஸ்திகர்களும், பிறகு ஸபையின் அங்
கத்தினர்களாகி, அதை வ்ருத்தி செய்யும் பொருட்டு முயற்சி
செய்து வருகிறார்கள் என்று தெரியவருகிறது. இது, மிகவும்
ச்லாகநீயமான விஷயமே. ஆத்மோஜ்ஜீவநத்தைத் தேடிக்கொள்
வதில் ஶக்திக்கு இயன்றமட்டும் ஜநங்களுக்கு உதவி செய்வதைக்
காட்டிலும் மற்ற எதுவும் பெருத்த உதவியாகாது. இப்பொழுது
ப்ரதம ப்ரவ்ருத்தியாக, அச்ஸபையார் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக
னுடைய க்ரந்தங்கள் எல்லாவற்றையும் சேர்த்தியான புஸ்தகரூப
மாக அச்சிட ஆரம்பித்திருக்கிறார்கள். இதை ஸாதிக்க, ஜ்ஞானம்
அர்த்தம் இரண்டும் ஸஹகாரம் அபேக்ஷிதம். அவைகளுக்குக்
குறைவில்லாமல் வித்வான்களில் அநேகரும் தநவான்களில் அநே
கரும் சேர்ந்திருக்கிறபடியால், இது ஸித்தியை அடையுமென்ப
தில் யாதொரு ஸந்தேஹமு மில்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JUL 1911
MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்வரு ஆனிமீ. [ஸஞ்சிகை 5.

## நசிகேதஸ்ஸின் வரங்கள்.

முன்னொருகாலத்தில் அன்னதானஞ்செய்து கீர்த்திபெற்ற
வாஜஸ்ரவஸ் என்பவரின் புத்ரராகிய கௌதமரென்னும் ஓர்ரிஷி விஸ்வ
ஜித் என்கிற பெரியதொரு யாகம்செய்தார். இந்த யாகம் குறை
வற நிறைவேறினவுடன் தமக்குள்ள தனங்களை யெல்லாம் பசுக்
கள் முதலியவைகளையும் யாகம்செய்வித்த ரித்விக்குகளுக்கும்
மற்றைப் பிராமணர்களுக்கும் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டியது
கடமை யாதலால், அந்தப்படியே யாகமுடிவில் கௌதமர் செய்து
வந்தார். அப்போது அதிக பாலரான நசிகேதஸ் என்னும்
கௌதம புத்ரர் தகப்பனாரின் வேள்வி குறைவறமுடியவேண்டுதலிற்
கருத்துள்ளவராய் அவருடைமையான தன்னையும் யாருக்காவது
கொடுக்காதவரையில் யாகத்துக்குக் குறைவு என்று நிச்சயித்து
'ஐயனே! அடியேனை யாருக்குக்கொடுக்கப்போகிறீர்?' என்று கேட்
டார். அந்தக் கேள்விக்கு யாதொரு மறுமொழியும் சொல்லா
திருந்த கௌதமரை அவர்குமாரர் மறுபடியும் ஒருமுறை இரு
முறை அநேகமாதிரி 'அடியேனை யாருக்குக் கொடுப்பீர்' என்று
உறுத்திக் கேட்டார். இந்த நிர்ப்பந்தத்தால் கௌதமர் கோபம்

மூண்டு 'உன்னை ம்ருத்யுவென்னும் யமனுக்குக் கொடுத்தேன்' என்று விடையளித்தார். இந்தக் கடோரமான சொல்லைக் கேட்டும் அந்தப் பாலரிஷி மனம் சிறிதேனுந்தளராமல் "அளவிறந்த ஜனங்கள் தினந்தோறும் மாண்டு யமனிடம் போகிறார்கள். அவர்களில் நான் மனக்களிப்புடன் முந்தினவர்களுடனாவது கொஞ்சம் பிந்தினவர்களுடனாவது போகிறேன். ஆனால், என்னால் யமனுக்கு ஒருபயனுமில்லையே யென்று துக்கிக்கிறேன்" என்றார். பிறகு பிள்ளையை யமனுக்கு அளித்து அநுசோசிக்க தகப்பனாரை நசிகேதஸ் ஸத்யம் தவறக்கூடாதென்று தேறுதல்செய்து தமது தபோபலத்தால் சரீரத்துடனே யமனிருப்பிடம் போய்ச் சேர்ந்தார். அங்கு யமன் வெளியே போயிருந்ததனால் அவர்வரவை எதிர்பார்த்து அன்னம் ஆகார மில்லாமல் மூன்றுநாள் காத்திருந்தார். பிறகு யமன்வரவே அங்குள்ள பெரியவர்கள், "தர்மராஜனே, அக்நி போன்ற அதிதி யொருவர் மூன்று நாளாய் உமது வரவை எதிர் பார்த்திருக்கிறார்; அவர்க்கு அர்க்கிய பாத்தியம் அளித்து மரியாதைசெய்யும்; விருந்தாகவந்த பிராமணர் உபசாரமில்லாமல் பட்டினியிருத்தல் உபேக்ஷித்தவரது குடியைக் கெடுக்கும்; அவர்செய்த தவத்தையெல்லாம் வீண்போகச்செய்யும்; அவர்க்கு எல்லாத்தீமையையும் விளைவிக்கும்; ஆகலால், அவரைத் தகுந்த உபசாரணை செய்யும்" என்றார்கள். அதைக்கேட்ட யமன் அந்த ரிஷிபுத்ரரை நோக்கி "பிராமணோத்தமரே! மூன்று இரவுகள் என்கிருகத்தில்வந்து பட்டினியாய்க் கிடந்தீரே! நான் ரொம்பவும் பிழை செய்தவனாக ஆனேன். என்குறை தீர உமக்கு மூன்று வரங்கள் கொடுப்பதாக நிச்சயித்திருக்கிறேன்; அவைகளை நீர் இஷ்டப்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளும்" என்றார். அதற்கிசைந்து நசிகேதஸ் தமக்கு முதல் வரமாக "என்பிதா கவலைதீர்ந்து, கோபந் தெளிந்து, என்னிடத்திற் பிரியம்பாராட்டி நான் திரும்பிப்போனவுடன் என்னைக் கருணையுடன் ஆதரிக்கவேண்டும்" என்றார். "அந்தப்படி வரங்கொடுத்தேன். அவர் என்னிடமிருந்து மீண்ட உம்மைப் பிரியமாய்ச் சேர்த்துக்கொள்வர்" என்று யமன் சொன்னார். பிறகு இரண்டாவது வரம் கேட்க விரும்பி நசிகேதஸ் சொல்லு-



கிறார்: "ம்ருத்யுவே, ஸ்வர்க்கமென்று சொல்லப்பட்ட லோகத்தில் யாதொரு பயமுமில்லை யென்றும், அங்கே நீர் போகிறதில்லையென்றும், அங்குக் கிழத்தனமே உண்டாகாதென்றும், பசி தாகம் முதலியவை நீங்கி ஸம்ஸார துக்கங்களை யெல்லாம் கடந்து ஜீவன் ஆநந்தத்தில் மூழ்குகிறானென்றும் சாஸ்திரங்கள் சொல்கின்றன; அந்த ஸ்வர்க்கம் கிடைக்க ஹேதுவான ஓர் அக்நி வித்யையை நீர் அறிந்திருக்கிறீர். அதை எனக்கு உபதேசிக்க வேண்டும் நான் அதை விதிப்படி அநுஷ்டித்து பேராநந்தத்துக்கு இருப்பிடமாகிய அந்த ஸ்தானத்தை அடைய விரும்புகிறேன். இது தான் என்னுடைய இரண்டாம் வரம்" என்றார். அதற்கிசைந்த யமன் "நசிகேதஸ்ஸே, அந்த அக்னி வித்தியையோ பெரிய ரஹஸ்யம். ஆகிலும் உமக்குச் சொல்லுகிறேன். அதை அநுஷ்டித்து நீர் அநந்தமான உலகத்தை அடையலாம். திரும்பவும் ஜநநமில்லை" என்று சொல்லி அந்த விதியின் பிரகாரங்களை யெல்லாம் உபதேசித்தார். யமதர்மராஜா விரைவில் அவைகளைக் கிரகித்த சிஷ்யரிடத்திற் களிகூர்ந்து "நசிகேதஸ்ஸே, நீர் கூர்மையான அறிவும் ஸ்ரத்தையு முள்ளவர். நான் உமக்கு மற்றொருவரமும் அளிக்கிறேன். இந்த உபதேசத்திலடங்கிய விதி, நாசிகேதமென்று உமது பெயரால் இனி உலகத்தில் வழங்கும். உமது பெயர் நிலைபெற்று வாழும்; அன்றியும், இதோ காந்தியுள்ள ஒரு ரத்நமாலையும் உமக்கு அளித்தேன். இதைப் பெற்றுக்கொள்ளும். மேலும், இந்த நாசிகேதமென்னும் விதியை அநுஷ்டிப்பவர்கள், தங்களுக்கு விதிக்கப்பட்ட யாகம் அத்யயநம் தாநம் என்னும் மூன்று கர்மங்களையும் விடாமல் செய்பவராகிப் பிறகு அதன் மூலமாகப் பரமாத்மாவை உபாஸித்து அந்தப் பரமாத்மாவை ஆத்மாவாகவுடைய ஜ்ஞாநமயமான தன் ஸ்வரூபத்தைத் தெளிந்து முடிவற்ற பேரின்பத்தை அடைவார்கள்" என்று சொன்னார். ரிஷியும் இதைக்கேட்டு ஆநந்தித்துப் பிறகு மூன்றாவது வரத்தைக்கேட்கத் தொடங்கிச் சொல்லுகிறார்.

ரிஷி: தர்மராஜனே, உலகத்தில் ஜீவன் மரணத்தை அடைந்தால் அதன்பிறகு அவன் இருக்கிறானா? நசித்துவிடுகிறானா? இத

ளைப்பற்றிப் பலர் பலவாறாக எண்ணுகிறார்கள். அதன் உண்மையை நீர் சொல்லவேண்டும்; இதுதான் எனது மூன்றாவதுவரம்.

யமன்: நசிகேதஸ்ஸே, நீர் மிகவும் ஸூக்ஷ்மமான விஷயம் என்னைக் கேட்டீர். இதைப்பற்றித் தேவர்கள் பலவாறாகத் தர்க்கித்து இன்னும் அதன் உண்மையை அறிந்தார்களில்லை. இதை நான் சொல்வது சரியன்று; என்னை நிர்ப்பந்திக்கவேண்டாம். வேறு வரம் ஏதாவது கேளும்.

ரிஷி: தேவர்களும் இந்த விஷயத்தில் ஸம்ஶயப்பட்டார்களென்கிறீர். நீரும் இது அறிவதற்கு அரிதென்கிறீர். உம்மைத் தவிர இதைச்சொல்ல யாருக்குத் திறமையுண்டு? நீரே சொல்லவேண்டும். எனக்கு வேறுவரம் வேண்டாம்.

யமன்: நசிகேதஸ்ஸே, உமக்கு நூறுவயஸ் உயிரோடிருக்கும் பாக்யத்தைக் கொடுக்கிறேன். புத்ரபௌத்ராதிகள் எவ்வளவு வேண்டுமானாலும் பெறுவீர். பசுக்களும் யானை குதிரைகளும் செல்வமும் உம் இஷ்டப்படி கேளும். இந்தப் பெரும்பூமியில் வீடுமுதலானவைகளைக் கேளும். மநுஷ்யர்களுக்கு அருமையான எல்லாப் போகங்களையும் கேளும். மரண விஷயமான இந்த வரத்தை மாத்திரம் விட்டுவிடும்.

ரிஷி: எனக்குப் பிள்ளை பெண்கள் வேண்டாம். ஐஸ்வர்யம் பூமி, பசுக்கள், குதிரைகள், யானைகள், ஒன்றும் வேண்டாம். நீண்ட இவ்வுலக வாழ்வும் செல்வமும் கிடைத்தாலும் எத்தனை நாளைக்குவரும்? அவை ஒன்றும் வேண்டாம். நான் கேட்டவரமே எனக்கு வேண்டும்.

இப்படி யமன்சொல்லைத் தள்ளித் தான் கேட்ட வரத்தையே கொடுக்கவேணுமென்று நசிகேதஸ் நிர்ப்பந்திக்க, யமன் சொல்லுவார்: "உலகத்தில் ஜனங்கள் விரும்பும் புருஷார்த்தங்கள் இரண்டுவகைப்படும்; அவைகள்-ப்ரேயஸ் என்றும், ஶ்ரேயஸ் என்றும் பெயருடையன; இவைகளில் ப்ரேயஸ் என்பது - அநித்யமான இந்த உலகத்தின் வாழ்வும், சிற்றின்பங்களுமாம். ஶ்ரேயஸ் என்பது - முடிவில்லாத பேரின்பமாகிய முக்தியென்னும் பரலோகவாழ்க்கையாம்.



ஒன்றுக்கு அவித்யை காரணம். மற்றொன்றுக்கு வித்யை காரணம். இந்த இரண்டிலே பகுத்தறிந்து நீர் வித்யையென்கிற ப்ரஹ்மஜ்ஞானத்தையும் அதன் பலமான மோக்ஷத்தையும் விரும்பினது, உமது நல்லறிவையும், உமக்கு அல்பமான பலங்களில் ஆசையில்லாமையையும் காட்டுகிறது. செல்வத்திற் பேராவாவுற்று இந்த உலகமே உலகம், பரலோகமென்பதொன்றில்லை என்று கர்வமடைந்த மூடர்கள் பலர் உளர். அவர்கள் ஆசையால் என்னையே திரும்பித் திரும்பி அடைந்து ஸம்ஸாரத்தில் உழல்கிறார்கள். நீரோ இவைகளிற் சிறிதும் ஆசையில்லாதவராய் மோக்ஷத்தின் ரஹஸ்யத்தைக் கேட்டீர். நான் அதைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

இந்த உலகத்தில் தீரனாயிருக்கும் மநுஷ்யன், ஐம்புலன்களாலும் அறியக்கூடாமலும், கர்மமாகிய அவித்யையால் மறைக்கப்பட்டும், எல்லாச் சரீரங்களிலும் உள்நுழைந்தும், எல்லா ஹ்ருதயங்களிலும் மறைந்து வஸித்து எல்லாருக்கும் அந்தர்யாமியாகவுமிருக்கும் பகவானை, தன் ஆத்மவிஷயமான யோகத்தின் மூலமாக அறிந்து ஸுகதுக்கங்கள் எல்லாவற்றையும் துறக்கிறான்; இந்த ஸூக்ஷ்மமான அர்த்தத்தைத் தெளிந்தால் கர்மத்தின் பயனாகிய சரீரம் முதலானவைகளை விட்டு மிகவும் நுட்பமான ஆத்மதத்வத்தை ஸாக்ஷாத்கரித்துப் பிறகு பரமாநந்தரூபமான பரமாத்மாவை அநுபவிப்பான்; நசிகேதஸ்ஸே! உமக்குப் பரமாத்மாவினுடைய ஸ்தாநத்தின் கதவு திறக்கப்பட்டதாகவே நான் எண்ணுகிறேன். நீர் மோக்ஷமடைவதில் ஸந்தேஹமில்லை" என்று சொல்லி முடித்தார்.

இந்த உபாக்யானம் கடோபநிஷத்தில் விஸ்தாரமாய் உள்ளது; அதை இங்கே சுருக்கமாய் எடுத்துச்சொன்னோம். ஆனால், இதுவிஷயமாய் அநேக ஸந்தேஹங்கள் உண்டாகி உபநிஷத்பாஷ்யங்களிலும் ஸூத்ரபாஷ்யங்களிலும் இந்த உபாக்யாநத்தின் உண்மையானகருத்து என்னவென்று விசாரிக்கப்படுகிறது. முக்கியமாய் நாம் விவரிக்க உத்தேசிப்பவை இரண்டு விஷயங்கள்; அவற்றில், முதலாவது - நசிகேதஸ் இரண்டாவது வரத்திற் கேட்ட அக்நிவித்யை எதற்காக? அந்த வித்யையால் அடையப்படுவது

ஸ்வர்க்கமானல் அந்த ஸ்வர்க்கமென்பது என்ன? தேவலோகமா? வேறு? இரண்டாவது - கடைசிவரத்தினற் கேட்டது என்ன? ஆத்மாவென்கிற வஸ்து உண்டா? இல்லையா? என்றது கேள்வியின் பொருளா? அல்லது வேறு எவ்வித அர்த்தம்? அந்தக் கேள்விக்குக் கொடுத்த மறுமொழி கேள்விக்குத் தகுந்த ஸமாதாநமா? அல்லது இன்னம் பல விஷயங்களடங்கியதா? என்பவைதான்.

முதலாவது - இரண்டாவது வரத்திற்கேட்ட அக்நிவித்யை ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களைப்போ லுள்ள ஓர்வித யாகமென்றும், அதை அநுஷ்டிப்பதனல் ஸ்வர்க்கமும் தேவஜாதியிற் பிறப்பும் கிடைக்குமென்றும், அந்த யாகத்தின் அநுஷ்டாநகாலத்தில் தெளிந்த ஜ்ஞாநம் முதலான நற்குணமுள்ள ஈஸ்வரனை அறிந்து அநுஷ்டாநம் செய்பவர்கள் வைராஜம் என்னும் ஸ்தாநத்தை அடைகிறார்களென்றும் ஸ்ரீசங்கராசாரியரது உபநிஷத் பாஷ்யத்தினல் அர்த்தமாகிறது: அதாவது, நாம் ஸ்வர்க்கமென்று வ்யவஹரிக்கிற லோகங்களிற் சில இந்தக் கர்மத்துக்குப் பலமென்றும், அதையே விரும்பி நசிகேதஸ் கேட்டாரென்றும், பிறகு மூன்ருவது வரம் கேட்டபோது யமனுடைய வார்த்தைகளால் இந்தக் கர்ம பலங்கள் அநித்யங்களென்று தெரிந்து ஆத்ம ஜ்ஞானத்தையே கேட்டாரென்றும் ஏற்படுகிறது. இந்த யோஜனை செய்யுங்கால், இரண்டாவது வரத்தைச் சேர்ந்த வாக்யங்களில் "स्वर्गलोका अमृतत्वं भजन्ते" [ஸ்வர்க்கத்தில் சாகாமையை அடைகிறார்கள்] என்றும், அங்குச் செல்வதால் அநந்த லோகாப்தியும் ப்ரதிஷ்டையும் கிடைக்கின்றனவென்றும், பிறப்பையும் இறப்பையும் கடக்கிருனென்றும், "तरति जन्ममृत्यू" [மறுபடியும் ஜந்மமில்லை] "न पुनर्जायते" என்றும் சொல்லுகிற வசனங்களின் ஸ்வாரஸ்யம் குறைந்துபோய்விடுகிறது. மநுஷ்யர்களைக்காட்டிலும் கொஞ்சம் நீடித்த போகங்களை உபநிஷத் ஸ்லாகிப்பது அவ்வளவாக ஸம்பவிக்காதென்றும், இவ்வளவு ஸ்ரமப்பட்டு உபதேசித்து அதனல் யமன் ஸந்தோஷப்பட்டதாய்ச் சொன்ன அக்நிவித்யையை நிந்திக்கிற மேல்வாக்யம் ஒன்றுமில்லையென்றும் ஆலோசித்து, ஸ்ரீராமாநுஜாசாரியரும் அவர்கருத்தை அநுஸரித்த மற்ற வியாக்யாதாக்களும் இந்த விஷயத்தில் வேறு அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள்.



அதாவது - இந்தப் பிரகரணத்தில் 'ஸ்வர்க்கம்' என்னும் சப்தத்துக்கும் மோக்ஷம் என்றே அர்த்தம்; அப்ஸரஸ் முதலானவர்களுடன் சேருகிற போகங்களோடு கூடின ஸ்வர்க்கம் நல்லதன்றென்றே நசிகேதஸ்ஸுக்குத் தெரியுமானதால், அதை அவர் கேட்கநியாயமில்லை: ("श्वोभावा मर्त्यस्य") இந்த ஸுகங்கள் இன்றைக்குண்டு, நாளைக்கில்லையென்று தானே சொல்வதனல், நசிகேதஸ் சொல்லும் ஸ்வர்க்கம் முக்தி ஸ்தாநமான பரமபதமேயாகவேணும். (आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन) ப்ரஹ்ம லோகம்வரையிலுள்ள எல்லா லோகங்களும் அநித்யமென்று சொல்வதனல் அதிலடங்கிய வைராஜமென்னும் ஸ்தாநமும் பிரார்த்திக்கப்பட்டதன்று முக்தன் அடையவேண்டிய ஸ்தாநத்தையே குறித்தால்தான் மேற்சொன்ன வசநங்கள் பொருந்தும். ஆனல், "இந்த அக்நிவித்யைக்கு மோக்ஷத்தை யடைவிக்கும் பெருமை உண்டோ? அது உங்கள் ஸித்தாந்தத்தில் பக்தியென்று சொல்லும் உபாஸநங்களுக்குத் தானே உண்டு" என்று கேட்டால், அதற்கு உத்தரம்:—இந்த அக்நிவித்யையாகிற கர்மத்தை யாதொரு பலத்திலும் அபிஸந்தியில்லாமல் பகவானுடையவும் தன்னுடையவுமான ஸ்வரூபங்களின் இயற்கையை அறிந்து, ஒருவன் செய்வானகில், அவன் இதன்மூலமாய் ஏதாவதொரு உபாஸநத்தில் பிரவர்த்தித்து அதன் மூலமாய் மோக்ஷத்தை யடைவான்: அப்படிச் செய்யும் உபாஸநத்துக்கும் இந்தக் கர்மம் அங்கமாகும். இதுதான் இந்தக் கர்மத்தால் மோக்ஷ முண்டாகுமென்பதற்கு அர்த்தம். இந்த நாசிகேதாக்நிவித்தையின் பலத்தை யமனே "ब्रह्मजज्ञं देवमीड्यं विदित्वा निचाय्येमां शान्तिमत्यन्तमेति" என்கிறார். இதன் அர்த்தம்:—ப்ரஹ்மத்தினிடத்தில் உண்டானவனும் ஜ்ஞாந ஸ்வரூபனுமான ஜீவன் தன்னை ப்ரஹ்மாத்மகனாக அதாவது தனக்கு ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக அறிந்து மேற்சொன்ன ஜந்மம் மரணம் இவைகளைவிட்டு முடிவில்லாத ஒழிவை யடைகிருனென்பது: ஆனல், "ஸ்வர்க்கம் என்னும் பதத்

துக்குப் ப்ரஸித்தமாய் வழங்கும் தேவலோகமென்னும் பொருளை விட்டு மோக்ஷமென்னும் அர்த்தத்தைச் சொல்வது சரியோ? இந்த அர்த்தத்தை அதற்கு எங்கேயாவது கண்டிருக்கிறோமா? பிந்திய வாக்கியங்களில் "பிறப்பில்லை இறப்பில்லை" என்கிற சில சொற்களைக்கொண்டு ஸ்வர்க்க சப்தத்தின் அர்த்தத்தை மாற்றுவது 'ராமன் அழகன்' என்கிற வாக்யத்தைக் கேட்ட ஒருவன் தன்மனஸில் க்ருஷ்ணனை அழகனென்று உறுதிசெய்து ராமன் என்றாலும் க்ருஷ்ணனைத்தான் குறிக்கவேணு மென்கிறாப்போ லிருக்கிறதே. மேலும், 'பிறப்பு இறப்பு இல்லை' என்பது அமரர்களென்று ப்ரஸித்தியுள்ள தேவர்களுக்குந் தகும். மற்ற வாக்யங்களும் அவர்களுக்குப் பொருந்தாததில்லை. ஆகையால், ஆரம்பத்தில் அப்யாஸம் செய்யப்பட்டுள்ள ஸ்வர்க்க பதத்துக்குத் தேவலோகமென்றே பொருள்கொள்வது சரியல்லவா?" என்று மறுபடியும் ஆக்ஷேபிக்கிறவர்களுக்குப் பின்வருமாறு உத்தரம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்வர்க்கமென்னும் பதத்துக்கு நிரதிசயமான ஸுகமென்பது அர்த்தம். அந்த ஸுகம் மோக்ஷத்தில்தான் உண்டு; "தேந தீரா அபி யந்தி ப்ரஹ்மவித: ஸ்வர்கம் லோகமித ஊர்த்வம் விமுக்தா:" என்றும், "தஸ்யாம் ஹிரண்மய: கோஶ: ஸ்வர்கோ ஜ்யோதிஷாவ்ருத:" என்றும் இன்னம் சில உபநிஷத்துக்களில் ஸ்வர்க்கபதம் மோக்ஷமென்னுமர்த்தத்தில் கண்டிருக்கிறோம். பின் வாக்யங்கள் அநேகங்களில் நாசிகேதாக்நிவித்யைக்கு மோக்ஷமே பலமென்று வ்யக்தமாய்ச் சொல்லியிருக்கிறது. "அம்ருதத்வம் பஜந்தே" என்பதில் அம்ருதஶப்தம் வேதாந்தஶாஸ்த்ரங்களில் மோக்ஷத்தையே குறிக்கும். "அபயம் திதீர்ஷதாம் பாரம் நாசிகேதம் ஶகேமஹி" என்னும் வாக்யத்தாலும் பரப்ரஹ்ம ப்ராப்தியே இந்த அக்நிவித்யைக்கு பலமென்று ஏற்படுகிறது. மேல் வரும் ப்ரஶ்நத்திற் சொல்லப்போகிற ப்ரஹ்ம வித்யைக்கு இந்த அக்நி வித்யை அங்கம். இதற்குத் தனிமையாய்ச் சொன்ன பலங்களெல்லாம் அங்கியான ப்ரஹ்ம வித்யையில் பலங்களேயாகையால்,



இது அங்கமாகக்குறைவில்லை: மேலும், முக்தனுக்கு ஶ்ருதிகளிற் சொல்லும் அபஹதபாப்மத்வம் முதலான குணங்கள் இந்தப்ரகரணத்தில் அக்நிவித்யையின் பலமாகக் காணலாம். எப்படியென்னில்,—ப்ரஜாபதிவாக்ய மென்று சொல்லப்படும் சாந்தோக்யாஷ்ட பாகத்தில் ஜீவன் தன் நிஜஸ்வரூபத்தை யடையும்போது எட்டுக் குணங்கள் பொருந்தினவனாகிறதாகச் சொல்லியிருக்கிறது. இந்த எட்டுக் குணங்கள், "அபஹதபாப்மா, விஜரோ, விம்ருத்யு:, விஶோக:, விஜிகத்ஸ:, அபிபாஸ:, ஸத்யகாம:, ஸத்யஸங்கல்ப:" என்கிற வாக்யத்தில் கண்டவைகள். இவைகளின் அர்த்தம்,—'பாபமெல்லாம் நீங்கினவன்,' 'கிழத்தனமில்லாதவன்,' 'மரணமில்லாதவன்,' 'துக்கமில்லாதவன்,' 'பசியில்லாதவன்,' 'தாகமில்லாதவன்,' 'நினைத்த தெல்லாம் வாய்ந்தவன்,' 'நினைத்தபடி யெல்லாம் செய்யவல்லவன்' என்பனவாம். இந்தக் குணங்கள் நாசிகேதாக்நிவித்யையினால் ஸித்திக்குமென்பது, இதிற் சொல்லப்பட்டிருக்கிற 'நபயம் கிஞ்சநாஸ்தி,' 'ஶோகாதிக:,' 'மோததே ஸ்வர்கலோகே' என்கிற வாக்யங்களால் தெரிகிறது. இதனால், நாசிகேதத்தால் அடையும் ஸ்வர்க்கம் மோக்ஷமேயாகும். இது "அபயம் திதீர்ஷதாம் பாரம் நாசிகேதம் ஶகேமஹி" என்று முடிவிலுள்ள அநேக வாக்யங்களால் நிஸ்சயமாகிறது. இவைகளை யெல்லாம் ஆலோசிக்குமிடத்து, மூன்றாவது வரத்தாற் சொல்லப்போகிற ப்ரஹ்மஜ்ஞானத்துக்கு அங்கமாக யமன் நசிகேதஸுக்கு உபதேசிக்கிற அக்நிவித்யை அந்த உபாஸநத்தின் மூலமாகப் ப்ரஹ்மப்ராப்தியாகிற மோக்ஷத்திற்குக் காரணமென்றும், இதுதான் ஸ்வர்க்கமென்னும் பதத்தாற் சொல்லப்படுகிற தென்றும் தோன்றுகிறது.

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

# விஶிஷ்டாத்வைதம்.

## 3. ஶரீர ஶரீரி ஸம்பந்தம்.

சேதநா சேதநங்கள் எல்லாவற்றிற்கும், ப்ரளயகாலத்தில் நாமரூபமற்றிருக்கும் ஸூக்ஷ்மாவஸ்தை ஒன்று, ஸ்ருஷ்டி காலத்தில் நாமரூபங்களுடன் கூடிய ஸ்தூலாவஸ்தை ஒன்று, ஆக இரண்டுவித அவஸ்தை உண்டு என்றும், இந்த இரண்டுவித அவஸ்தையிலும் இவை ஈஶ்வரனுக்கு ஶரீரமாகவும், ஈஶ்வரன் இவைகளுக்கு ஶரீரி-(அதாவது ஆத்மா) வாகவும் இருக்கிறானென்றும் கீழ்ச்சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஶரீர ஶரீரி ஸம்பந்தத்தைச் சற்று விசாரிப்போம்.

இதை விசாரிக்குமுன், இரண்டொரு விஷயங்களை நாம் தெளிவாக மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது அவஶ்யம்.

முதலாவது—அவரதத்வங்களாகிற சேதநம் அசேதநம் இவை இரண்டும் ஈஶ்வரனைப்போல நித்யங்கள்; ஒருபொழுதும் அவைகளுக்கு நாஶமென்பது ஏற்படாது. ஆனால், ஈஶ்வரனுடைய ஸங்கல்பத்தால், அசேதநங்களுக்கு விகாரமென்கிற மாறுதலும், சேதநங்களுக்கு இயற்கையாகத் தமக்குள்ள பூர்ண ஜ்ஞாநத்திற்குத் தங்கள் கர்மாநுகுணமாக ஒரு குறைவும் ஏற்படுவது உண்டு. ஈஶ்வரன்தான் இவ்விதமாக ஸங்கல்பித்து அசேதநங்களுக்கு மாறுதலையும், சேதநங்களுக்கு ஜ்ஞாந ஸங்கோசத்தையும் எப்பொழுது செய்கிறானோ, அப்பொழுது அவன் ஸ்ருஷ்டிக்கிறானென்று நாம் வ்யவஹரிக்கிறோம். இல்லாத சேதநா சேதநங்களைப் புதிதாக உண்டுபண்ணுவதென்பதே ‘ஸ்ருஷ்டி’ என்னும் ஶப்தத்திற்கு அர்த்தமன்று.



இரண்டாவது—இப்படி சேதநங்களுடைய ஸ்வதஸ்ஸித்தமான பூர்ண ஜ்ஞாநத்தின் குறைவுக்கு ஈஶ்வரஸங்கல்பம் காரணமானாலும், சேதநங்களுடைய கர்மங்களுக்கு அநுகுணமாகவே ஈஶ்வரன் ஸங்கல்பிக்கிறான்; அப்படிப்பட்ட கர்மங்கள் அநாதிகாலமாக இருக்கின்றன: இந்தக் கர்மங்கள் எவ்வளவு வரையில் நஶிக்காமல் இருக்கின்றனவோ, அவ்வளவுவரையில்தான் சேதநங்களுக்குப் பந்தமுண்டு. கர்மங்கள் நஶித்தால், பந்தம் விட்டு மோக்ஷம் உண்டாகிறது.

மூன்றாவது — இவ்விதமாகக் கர்மங்கள் கழிந்து மோக்ஷம் கிடைத்த பிறகும் சேதநங்களுக்கு ஈஶ்வரனைக் குறித்திருக்கும் பாரதந்த்ரியம்-(அதாவது அடிமைத்தனம்) போகிறதில்லை. இந்தப் பாரதந்த்ரியமே ஜீவன்களுக்கு லக்ஷணமென்றும் சொல்லலாம். ஆனால், ஈஶ்வரன் இவ்வளவு ப்ரபுத்வத்தை வஹித்தாலும், ஜீவன்கள் அவனுக்கு ஸர்வவிதத்திலும் அடிமையானாலும், மோக்ஷத்தை யடைந்த ஜீவன்கள்விஷயத்தில் ஈஶ்வரன் மறுபடியும் ஜ்ஞாந ஸங்கோசத்தை ஸங்கல்பிக்கிறதில்லை. முக்தஜீவன்கள் தங்களுடைய ஸ்வரூபத்திற்குக் குறைவன்றியிலே ஶாஶ்வதமாகப் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் செய்துகொண்டிருக்கிறார்களென்பது நம்முடைய ஸித்தாந்தம்.

இந்த விஷயங்களெல்லாம், பிந்தி ஜீவதத்வத்தை விசாரிக்கும் காலத்தில் தெளிவாகச் சொல்லப்படும்; இப்பொழுது ப்ரக்ருதத்திற்கு உபயோகமானவளவு உரைக்கப்பட்டது.

அவரதத்வத்திற்கும் ஈஶ்வரனுக்குமுள்ள ஶரீர ஶரீரி ஸம்பந்தத்தைப்பற்றி விசாரிப்போம். எல்லா வஸ்துக்களுக்கும் ஸத்தை, ஸ்திதி, ப்ரவ்ருத்தி என்று மூன்றுவித யோக்யதை உண்டு. ஸத்தை என்பது - ஸ்வரூபம்; லோகத்தில் ஒரு பொருள் புத்திக்குத் தோன்ற வேண்டுமானால் தன்னுடைய அஸாதாரண தர்மங்களைக் கொண்டே தோன்றும். தோன்றும் பொருள் தர்மி; எவைகளால் நிரூபிதமாய்க் கொண்டு அது தோன்றுகிறதோ, அவை தர்மங்கள். தர்ம்யம்ஶம் மாத்திரம், தனியே புத்திஸ்தமாகாது. அப்படி இருந்தபோதிலும், நிரூபிக்கிற தர்மங்கள் வேறே, நிரூபிக்கப்படும் தர்ம்யம்ஶம் வேறே என்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளத் தகுந்தது. இப்படி தனக்கு அஸாதாரண

மான தர்மங்களாலே நிரூபிதமாய்க்கொண்டு புத்திஸ்தமாகிற தர்ம்யம்ஶத்தைத்தான் ஸ்வரூபம் என்று சொல்லுகிறார்கள். ஸ்திதியாவது - இந்த ஸத்தையின் காலாந்தராநுவ்ருத்தி; அதாவது - ஒரு க்ஷணம் மற்றொரு க்ஷணம் என்கிற கால விபாகங்களுடன் வஸ்துவுக்கு யாதொரு ஸம்பந்தமுண்டோ அந்த ஸம்பந்தத்தின் தொடர்ச்சிக்குத்தான் ஸ்திதி யென்று பெயர் வழங்குகிறது. ப்ரவ்ருத்தி என்றால், வ்யாபாரம். ஆகையால், நிவ்ருத்தியையும் குறிக்கும்; நிவ்ருத்தி என்பதும், 'செய்கிற தில்லை' என்கிற ஸங்கல்பரூபமானபடியால் ஒரு வ்யாபாரம்தான்.

இந்த ஸத்தை, ஸ்திதி, ப்ரவ்ருத்தி என்னும் இம்மூன்றும் ஈஶ்வரனுக்கு முண்டு; அவரதத்வ மாகிற சேதநா சேதநங்களுக்கு முண்டு. அவை ஈஶ்வரன்விஷயத்தில் மற்ற எதையும் சார்ந்தனவல்ல; அவரதத்வத்தின்விஷயத்தில் அவை ஈஶ்வராதீநங்கள். ஈஶ்வராதீநங்களான ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்திகளையுடைத்தா யிருப்பதால், அவரதத்வம் ஈஶ்வரனுக்கு ஶரீரமென்றும், அவரதத்வத்தின் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்திகள் தன் அதீநங்களாக இருப்பதால் ஈஶ்வரன் அவரதத்வத்திற்கு ஶரீரியென்றும் வ்யவஹரிக்கப்படுகின்றன. அதாவது - ஒரு வஸ்துவின் ஸத்தை முதலியவை மற்றொரு வஸ்துவைச் சார்ந்தனவாக இருந்தால், அந்த வஸ்து ஶரீரமென்றும், மற்றொன்று ஶரீரியென்றும் ஏற்படுகிறது.

சார்ந்திருப்பது என்றால் என்ன? சார்தல் அல்லது அதீநத்வம் இருவகைப்படும். அவையாவன - ஸ்வரூபாதீநத்வம், ஸங்கல்பாதீநத்வம். ஸ்வரூபாதீநத்வமாவது - 'எது ஆஶ்ரயமோ அது இல்லையாகில், எவை சார்ந்திருக்கின்றனவோ அவையுமில்லையாம்' என்று யுக்தி சொல்லும்படி நிற்கை. ஸங்கல்பாதீநத்வமாவது - 'ஆஶ்ரயம் இருந்தபோதிலும் அதற்கு இச்சை அல்லது ஸங்கல்பமில்லையாகில், சார்ந்திருக்கும் வஸ்துக்களும் இல்லையாகிவிடும்' என்னும்படி நிற்கை. அவரதத்வத்தின் ஸத்தையும் ஸ்திதியும் ஈஶ்வரனுடைய ஸ்வரூபாதீநங்கள். அதாவது - எப்படியானால் ஈஶ்வரன் தன்னுடைய ஸத்யத்வம் முதலிய குணங்களுக்கும் இன்னும் மற்ற விஶேஷணங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறானோ, அப்படி அவரதத்வத்தின் ஸத்தை ஸ்திதி இவை யிரண்டுக்கும்



ஆதாரமாக இருக்கிறான். இந்தக் காரணத்தாலேதான், ஈஶ்வரனை ஆதாரமென்றும், அவரதத்வத்தை ஆதேயமென்றும் சொல்லுகிறார்கள். அவர தத்வத்தின் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்தி இம்மூன்றும், ஈஶ்வரஸங்கல்பாதீநங்கள். அதாவது - ஈஶ்வரன் இச்சித்தால் அவரதத்வம் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்கு யோக்யமாகிறது; இச்சிக்காவிட்டால் அவைகளுக்கு யோக்யமாகாமற் போய்விடும். ஆனால், இது ஸம்பந்தமாக ஒரு ஆக்ஷேபம் உண்டாகலாம். அவரதத்வமாகிற சேதநா சேதநங்கள் நித்யங்களென்றும், சேதநங்களுக்கு ஜ்ஞாந ஸங்கோசமும் அசேதநங்களுக்கு மாறுதலும் ஏற்படக்கூடுமே யொழிய நாஶமென்பது உண்டாகாது என்றும் முந்திச் சொல்லி யிருக்கையில், இப்பொழுது 'ஈஶ்வரனுடைய இச்சை யில்லாவிடில் அவரதத்வம் இல்லையாகிவிடும்' என்று சொல்வது விருத்தமன்றோ? இவ்விதமான ஆக்ஷேபத்திற்கு இடமில்லை. ஏனெனில், ஈஶ்வரனுடைய ஸங்கல்பம் - நித்யமென்றும், அநித்யமென்றும் இருவகைப்படும். அநித்யமான பதார்த்தங்கள் அநித்யமான இச்சையால் உண்டாகின்றனவாகவும், நித்யமான பதார்த்தங்கள் நித்யமான இச்சையால் உண்டாகின்றனவாகவு மிருக்கின்றன. இப்படி அவரதத்வத்தின் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்திகள் ஈஶ்வர ஸங்கல்பத்திற்கு அதீநமாக இருக்கிறபடியால், ஈஶ்வரனை நியந்தாவென்றும், அவரதத்வத்தை நியாம்யமென்றும் வ்யவஹரிக்கிறார்கள். ஆகையால், அவரதத்வம் ஈஶ்வரனுக்கு ஆதேயம், நியாம்யம்; ஈஶ்வரன் அவரதத்வத்திற்கு ஆதாரன், நியந்தா என்பது ஸித்தம்.

இப்படி ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவுக்கு ஆதேயமாகவும், நியாம்யமாகவு மிருந்தாலும், ஏதாவதொரு வ்யாபாரத்தைச் செய்து அந்த வ்யாபாரத்தின் பயனைத் தானே அநுபவிப்பது கூடும். அப்படி இந்தச் சேதநா சேதநங்கள் தங்களுடைய வ்யாபாரங்களின் பயனைத் தாங்களே அநுபவிக்கிறார்களா? இல்லாவிட்டால் ஈஶ்வரன் அநுபவிக்கிறானா? அதாவது-ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்தி விஷயங்களிற் போலப் பலன்விஷயத்திலும் சேதநா சேதநங்கள் ஈஶ்வராதீநங்களோ? என்கிற கேள்விகளுக்கு நம் ஸித்தாந்தம் சொல்லும் உத்தரமாவது:— சேதநர் தமது ப்ரயோஜநத்திற்காகவே வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திக்கிறவராக மேலுக்குக் காணப்பட்ட போதிலும், ஈஶ்வரனுடைய ப்ரயோஜநத்தை

உத்தேசித்தே ப்ரவ்ருத்திக்கும் ஸ்வரூபத்தோடு கூடினவர்; கேவலம் தமது ப்ரயோஜநத்திற்காக ப்ரவ்ருத்திப்பது அவர்களுடைய ஸ்வரூபமன்று என்பதுதான். அதாவது - சேதந அசேதநங்கள் என்னும் இவ்விருவகைப்பட்ட அவரதத்வம் முழுவதும் ஈஶ்வரனுக்காகவே ஏற்பட்டது; அவரதத்வத்தின் ப்ரவ்ருத்தியினால் உண்டாகும் பலனுக்கு ஈஶ்வரனே பாத்ரம். கர்ம பந்தத்தை விலக்கிக்கொள்ளவேணு மென்னும் ஆவலுடன் ஈஶ்வரனுடைய திருவடிகளில் விழுந்து அவனுடைய க்ருபையை எதிர்பார்த்து நிற்கும் முமுக்ஷுக்களுடைய பரமோத்தேஶ்யமான கருத்து, பகவானுக்குக் கைங்கர்யத்தைச் செய்து அவனுடைய முகோல்லாஸத்தைப் பிறப்பிப்பதி லிருக்கும் ருசியே யொழிய வேறு ஸ்வப்ரயோஜந மொன்று மன்று. "கணம் ஸௌஜந்யம் ஃதஷநாணாஃ ஃபூதம் தஷிவளகலாம்—ஸ்வஶஷு விஷ்ணுணாஹாரள ஸஜொ ஊமொஸ்யக ஜீவநாஃ" என்கிறபடி தம்தம் அபிமாநத்திற்குத் தகுந்தபடி யன்றோ புருஷார்த்தங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. ஸத்துக்களுக்குப் புருஷார்த்தம் பகவத்தாஸ்யமே. இப்படித் தன் ப்ரயோஜநத்திற்காகவே சேதநா சேதநங்களை அங்கீகரித்து அவற்றால் தான் ஒரு அதிஶயத்தைப் பெறுகிறபடியால் ஈஶ்வரனை ஶேஷியென்றும், அப்படி ஈஶ்வரனுக்கு ஒருஅதிஶயத்தைச்செய்யும்பொருட்டே அங்கீகரிக்கப்படும் சேதநாசேதநங்களை ஶேஷங்களென்றும் நமது ஸித்தாந்திகள் வ்யவஹரிக்கிறார்கள்.

இந்த ஶேஷ ஶேஷி ஸம்பந்தத்தைச் சற்றுத் தெளிய விசாரிப்போம். வேதார்த்தஸங்க்ரஹ மென்னும் க்ரந்தத்தில் "பரகதாதிஶயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸஶேஷஃ பரஃ ஶேஷீ" என்று ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறார். இதன் அர்த்தமாவது - எந்த வஸ்துவின் ஸ்வரூபம் மற்றொரு வஸ்துவிற்கு ஒரு ப்ரயோஜநத்தை உண்டுபண்ணவேணு மென்னும் விருப்பத்தால் அங்கீகரிக்கத் தகுந்தது என்கிற தன்மையாகவே யிருக்கிறதோ, அந்த வஸ்து மற்றொன்றைக் குறித்து ஶேஷன்; மற்றொன்று ஶேஷீ இந்த லக்ஷணத்தைப் பரிஷ்கர்ஷித்



துப் பார்க்குமளவில், நிஷ்க்ருஷ்டமாக ஏற்படுவது என்னவெனில்- எந்தவஸ்துவின் பரமப்ரயோஜநமாவது மற்றொரு வஸ்துவின் ப்ரயோஜநமாகவே இருக்கிறதோ, அந்த வஸ்து ஶேஷன்; மற்றொன்று ஶேஷீ என்பதுதான். ஆடையாபரணங்களின் முக்கியமான ப்ரயோஜநம், எந்தத்தேஹத்தால் அவைகள் தரிக்கப்படுகின்றனவோ அந்தத் தேஹத்தின் ப்ரயோஜநமேயொழிய, தங்களுக்கு ஒரு அதிஶயத்தைச் செய்துகொள்வதன்று; ஆகையால், ஆடையாபரணங்களை ஶேஷங்களென்றும், தேஹத்தை ஶேஷியென்றும் சொல்லக் கூடும்; இம்மாதிரியாகவே வேலைக்காரன் ஶேஷனாகவும், யஜமாநன் ஶேஷியாகவு மாகிறான். இதுபோலவே, சேதநாசேதநங்களாகிற ஸகலவித அவரதத்வத்தின் ப்ரயோஜநமும் ஸர்வேஶ்வரனுக்கு ஒரு அதிஶயத்தைச் செய்வதுதான் என்று நாம் ஒப்புக்கொண் டிருக்கிறபடியால், ஈஶ்வரனைப்பற்ற அவரதத்வம் முழுவதையும் ஶேஷமென்றும், ஈஶ்வரனை ஸர்வஶேஷியென்றும் வ்யவஹரிக்கிறோம். ஆனால், 'பகவான் அவாப்த ஸமஸ்த காமனாச்சுதே, இந்த அவர தத்வத்தால் அவனுக்கு எவ்விதமான அதிஶயம் உண்டாகக் கூடும்?' என்று தோன்றலாம். 'அவாப்த ஸமஸ்தகாமன்' என்கிற ஶப்தத்தின் அர்த்தம் இச்சைஜநிக்கும் பொழுது அந்த இச்சையைத் தடைப்படாமல் நிறைவேற்றிக்கொள்ளும் ஶக்தியை யுடையவன் என்கிறதானபடியால், அம்மாதிரியான ஸந்தேஹத்திற்கு இடமில்லை. ஆகையால், இவ்விஷயமாக நம்முடைய ஸித்தாந்தத்திற் சொல்வது யாதெனில், சேதநா சேதநங்களெல்லாம் ஈஶ்வரனுக்கு ஒரு அதிஶயத்தைச் செய்வதையே பரமப்ரயோஜநமாக வுடைத்தா யிருக்கின்றன; ஈஶ்வரன் அந்த அதிஶயத்தைத் தன் ப்ரயோஜநமாகவே அடைகிறான்; ஆகையால், ஈஶ்வரன் ஶேஷீ, மற்றவை யெல்லாம் ஶேஷம் என்பதுதான்.

இப்படி சேதநா சேதநங்கள் எல்லாவற்றிற்கும் ஈஶ்வரன் ஆதாரன், நியந்தா, ஶேஷி என்றும்; ஈஶ்வரனைப்பற்ற அவரதத்வம் முழுவதும் ஆதேயம், நியாம்யம், ஶேஷம் என்றும் ஏற்பட்டது. இவ்விதமான ஆதேயத்வம் முதலியவைகள் சேதநா சேதநங்களுடைய ஸத்தையுள்ள காலமெல்லாம் இருக்கின்றன வென்றும் சொல்லுகிறார்கள். இப்படிக்கு இருக்கும் ஸம்பந்தந்தான் ஶரீர ஶரீரிஸம்பந்தம்.

ஈஸ்வரன் ஶரீரியென்று சொல்ல மூன்றுவித லக்ஷணங்கள் உண்டு:—

(1) சேதநா சேதநங்களுடைய ஸத்தையுள்ள காலமெல்லாம் சேதநாசேதநங்களைப்பற்ற ஈஸ்வரன் தாரகனு யிருக்கிறுன்,

(2) சேதநா சேதநங்களுடைய ஸத்தையுள்ள காலமெல்லாம் அவைகளைப்பற்ற ஈஸ்வரன் நியந்தாவாக இருக்கிறுன்,

(3) சேதநா சேதநங்களுடைய ஸத்தையுள்ள காலமெல்லாம் அவைகளைப்பற்ற ஈஸ்வரன் ஶேஷியாக இருக்கிறுன்.

இந்த அர்த்தத்தை லோக அநுபவத்திலும் காணலாம். நம்முடைய கரசரணுதிகளுடன் கூடிய தேஹத்தை ஶரீரமென்றும், ஆத்மாவை ஶரீரியென்றும் சொல்வதற்குக் காரணம் இதுவே. ஆத்மா இருக்குங் காலம்வரையில் இருந்து, ஆத்மா விட்டபோது அழிகையாலே தேஹத்திற்கும் ஆத்மாவிற்கும் தார்ய தாரக ஸம்பந்த மிருக்கிறதென்றும், ஜாக்ரதாதி தஶைகளில் ஆத்மா தன் ஸங்கல்பத்தால் தேஹத்தை விழாதபடி தாங்குகிறபடியால் அவற்றிற்கு நியாம்ய நியந்த்ரு ஸம்பந்த மிருக்கிறதென்றும், தேஹத்தின் பரமப்ரயோஜநம் ஆத்மாவுக்கே அதிஶயம் செய்கை யாகையாலே அவற்றிற்கு ஶேஷஶேஷி ஸம்பந்த மிருக்கிறதென்றும் காண்கிறோம்.

இப்படி ஈஸ்வரனுக்கும் சேதநா சேதநங்களுக்கு முண்டான ஸம்பந்தத்தைத்தான் நம் ஆசார்யர்கள் நம்முடைய ஸித்தாந்தத்திற்கு முக்கியமான அர்த்தமாகவும், மற்றுமுள்ள ஸித்தாந்திகளொருவருக்கும் இசையாதே நம்முடைய ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமான அர்த்தமென்றும் அருளிச்செய்திருக்கிறார்கள்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# திராவிடவேத தாத்பர்யம்.

(தொடர்ச்சி.)

11. இரண்டாவது—ஜீவஸ்வரூபம்; இதை "உடல்மிசையுயி
ரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" (1. 1. 7), "உம்முயிர் வீடுடை
யான்" (I. 2. 1) (உயிரை வீடாக வுடையான்) என்றும், "அடி
யேனுள்ளா னுடலுள்ளான்" (VIII. 8 3) என்றும்; ஜீவன்
பகவானுக்குப் பிரகாரம்; அதாவது-ஜீவன் அவனுக்கு ஶரீரத்தைப்
போன்ற வஸ்து; அவனன்றி இருக்கக்கூடிய வஸ்து வன்று; கேவ
லம் அடிமையாக இருக்கிறது என்பதை நிச்சயித்தார். இப்படி
யிருக்கும் இருப்பு, 'ஶேஷத்வம்' என்று நமது ஸித்தாந்தத்திற்
சொல்லப்படுகிறது. இந்த ஜீவஸ்வரூபம் பஞ்சபூதங்களாகப் பரி
ணமிக்கிற ப்ரக்ருதியாகிற அசித் என்னும் வஸ்துவுக்கு மேற்பட்
டதான ஜ்ஞாநாநந்தலக்ஷணமுடையது என்று "கண்கள் சிவ
ந்து" என்னும் எட்டாம்பத்தில் எட்டாந் திருவாய்மொழியிற்
சொல்லி, பகவான் தவிர வேறொருவஸ்துவுக்கு இது அடிமைப்
பட்டதன்று என்று 8-ம் பத்தில் "கருமாணிக்கமலை" என்
கிற 9-வது திருவாய்மொழியில் ஆழ்வார் தம்மை ஒருநாயகி
யாக வைத்துக்கொண்டு "அருமாயன்பே ரன்றிப் பேச்சிலள்"
(VIII. 9. 10) என்று ஜீவஸ்வரூபத்தை நிர்ணயித்தார். நாலாம்
பத்தில் "ஏறாளு மிறையோன்" என்கிற திருவாய்மொழியில்
பகவானுடைய இஷ்டத்துக்கு அநுகுணமில்லாமற் போனால், நாம்
இஷ்டப்படக்கூடிய ஸகலவஸ்துக்களும் விடவேண்டிய விஷயங்
கள் என்றும் சொல்லி, ஶேஷத்வத்தையே பிரதாநமாக, பகவான்
கவராத "உயிர்குறைவிலமே" என்று தமக்கு உயிர் உள்பட
யாதொன்றிலும் இஷ்டமில்லை, ஒன்றும் வேண்டாம் என்றும்
ஜீவஸ்வரூபத்தை வெளியிட்டார்.

12. மூன்றாவது—உபேயம் என்று சொல்லப்பட்ட முடிவில்
அடையப்படும் நிரந்தரமான மோக்ஷத்தின் ஸ்வரூபம்; 'இது பக

வான் திருவடிகளிற் செய்யும் கைங்கரியம்தான்' என்று "ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமைசெய்ய வேண்டும்" என்றும் (III. 3. 1), "பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட" (IV. 8. 2.) என்றும், "முகப்பே கூவிப்பணிகொள்ளாய்" (VIII. 5. 7.) என்றும், ஸர்வகாலத்திலும் ஸர்வதேசத்திலும் ஸர்வ அவஸ்தைகளிலும் அவன்திருவடிகளிற் செய்யும் கைங்கரியமே புருஷார்த்தம் என்றும், அந்த அடிமைசெய்கிற கைங்கரியம் பகவானுடைய முகோல்லாஸத்துக்கே தவிரத் தனக்குவரும் லாபத்துக்காகவன்று என்பதை "எம்மாவீட்" டில் (II. 9.) "எம்மாவீட்டுத்திறமும் செப்பம்", "நின் செம்மாபாத பற்புத்தலை சேர்த்து", "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்று நிச்சயித்தார்.

13. இப்படி அடிமையாயிருந்தால் கைங்கரியம் அவனோடு நில்லாது, பகவானுடைய பக்தர்களாகிய பாகவதர்கள் கைங்கரிய பர்யந்தமாகவேணுமென்று "பயிலும் சுடரொளி" (III. 7.), "நெடுமாற்கடிமை" (VIII. 10.) என்கிற திருவாய்மொழிகளிலே அருளிச்செய்தார். பாகவதர்களை "குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை, நலந்தானிலாத சண்டாளர் சண்டாளர்களாகிலும், வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுள், கலந்தார் அடியார்தம் அடியார் எம் அடிகள்" (ஸ்வாமி) என்றும், "அடியாரடியார்தம் அடியா ரடியோங்களே" என்றும் (111. 8.) மேற்சொன்ன இரண்டு திருவாய்மொழிகளில் பரக்க அருளிச்செய்து, "அடியார் குழாங்களோடு உடன் கூடுவது என்றுகொலோ" (II. 3. 10) என்று பிரார்த்தித்தபடி "அந்தமில் பேரின்பத்து அடியரோ டிருந்தமை" (X. 9. 11.) என்று முடிப்பதால், அந்தக் கைங்கரியம் பாகவத கைங்கரியத்தோடு முடியும் என்றும், பகவத் பாகவத கைங்கரியம்தான் புருஷார்த்தம் என்றும் ஏற்பட்டது.

14. ஸுகருபமான இந்தக் கைங்கரியாநுபவம் போக்யமாய் மஹா ஆநந்தத்தைக் கொடுக்குமது என்பதை "உயர்வற உயர்நல முடையவன்" என்று இவ்வளவு என்று அளவிடக் கூடாத ஸமஸ்தகல்யாண குணமுடையவன் என்றும், "சுவையன்" "திருவின்மணாளன்" (1. 9. 1.) "தூயவமுதைப்பருகி" (1 7, 3.)



"அப்பொழுதைக் கப்பொழுது என்னாராவமுதம்" (11. 5. 4.) என்று இந்தப் போகத்தை நித்யமாய் க்ஷணத்துக்கு க்ஷணம் புதியதான அம்ருதரூபம் என்று சொல்லி, "உகந்து பணிசெய்து உனபாதம் பெற்றேன்" என்றும், இதுவே எப்போழ்தும் வேண்டும் என்று "ஈதே யான் வேண்டுவது எந்தாய்" என்றும் பகவத் குணங்களை அநுபவிக்கும் அநுபவத்தால் உண்டாகிற ஸந்தோஷத்துடன் கூடிய பகவத் பாகவத கைங்கரியம்தான், ஸர்வதேச ஸர்வகால ஸர்வ அவஸ்தைகளிலும் ஒருவன் அடையவேண்டிய புருஷார்த்தமாகிற பயன் என்று நிர்ணயிக்கப்பட்டது.

15. நான்காவது—இப்படிப்பட்ட ஒப்பில்லாத புருஷார்த்தத்தை யடைவதற்கு விரோதியின் ஸ்வரூபம்; முதற்பத்தில் "வீடுமின்முற்றவும்" என்கிற இரண்டாந் திருவாய் மொழியில் பகவானைத்தவிர இதர விஷயங்களில் ஒருபற்று உண்டாவதற்குக் காரணமான அஹங்காரம் மமகாரம் கூடாது என "நீர் நுமதென்பவை, வேர்முதல் மாய்த்து" என்றும், அநித்யமான தொரு பொருளை உத்தேசித்து ஸேவிக்கத் தகாதவர்களை ஸேவித்து ஸ்தோத்ரம் செய்வது கூடாதென்று "சொன்னால் விரோதம்" என்னுமிடத்தில் "வாய்கொண்டு மானிடம்பாடவந்த கவியே னல்லேன், ஆய்கொண்ட சீர்வள்ள லாழிப்பிரா னெனக்கேயுளன், சாய்கொண்ட விம்மையுஞ் சாதித்து வானவர் நாட்டையும், நீகண்டுகொள் ளென்று வீடுந்தரும் நின்று நின்றே" என்றும், ஐச்வரியம் அநித்யமென்பதற்கு "ஒருநாயகமா யோட வுலகுட னாண்டவர் ... ... பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாங்கொள்வர்" (III. 9. 9.) என்றும், சிலர் மோக்ஷம் என்று சொல்லுகிற ஜீவாத்மாநுபவமாகிற கைவல்யமும் வேண்டாமென்றும் அநேக இடங்களில் வெளியிட்டார். சரீரஸம்பந்த காரணமாய் வரும் பந்துக்கள் நிஜமான பந்துக்களல்ல ரென்று "கொண்ட பெண்டிர்" என்னும் திருவாய்மொழியில் "கொண்ட பெண்டிர் மக்க ளுற்றார் சுற்றத்தவர் பிறரும், கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்றியாதுமில்லை" என்றும், "சுற்றத்தவர் பிறரும் ஆக்கமுண்டேல் அட்டைகள்போற் சுவைப்பர்" என்றும் இப்படி விடும்படியான அநேக கதைசொன்னார். விடுகிறதென்றால் வஸ்துக்களை நசிப்பிக்க முடியாது: ஜகத்தை விட்டு இன்னுமோரிடம் எப்படி போகிறது? அவைகளில்லாத இடம் போக முடியாது. ஆகையால், புத்தியால் "யானே என

தன்றே யென்றிருந்தேன்'' என்றும், ''நீர் நுமது'' என்னும் எண்ணத்தைத் தவிர்ந்து தேகத்தை ஆத்மாவாக எண்ணாமல் தேகஸம்பந்தமான விஷயங்களில் என்னுடையது என்கிற புத்தியைத் தவிர்த்து ''இறைசேர்மின்'' என்கிறபடி பகவானிடத்தில் பற்றுச் செய்வதுதான் விடுகிறது (II. 2.) என்பதற்கு அர்த்தம் என்றும் உபதேசித்தார்.

16. ஐந்தாவது—உபாயம்: இப்படிப்பட்ட விரோதியை நிவர்த்திசெய்து மேற்சொன்ன மேலான புருஷார்த்தத்தை அடைவதற்கு உபாயம் (வழி) ப்ரபத்திதான். பாதகண்டமாகிற இத்தேசத்தில் வெகுகாலமாக அநுஷ்டிக்கப்படும் பாகவதமதம் என்றும், சரணாகதி அல்லது ப்ரபத்தி ஶாஸ்திரம் என்றும் சொல்லப்பட்ட ஸித்தாந்தம் அநாதி. அதற்கு ஆதாரமாக உபநிஷத்துகளிலும், ஸ்ரீபகவத்கீதையிலும், ஸ்ரீபகவத்சாஸ்திரமென்று சொல்லப்படும் பாஞ்சராத்திர ஸம்ஹிதைகளிலும், இராமாயணத்திலும் அநேக பிரமாணங்க ளிருக்கின்றன. வேதாந்தங்களில் முக்கியமாய் விவரிக்கப்படும் மோக்ஷமார்க்கம்-பக்தியோக மென்றும், பிரபத்தியோக மென்றும் இருவகைப்படும். தத்காலத்தில் பக்தியோகம் என்கிற உபாயம் நமக்குள் அநுஷ்டானத்திலில்லை. ஸ்ரீ வைஷ்ணவர்கள் ப்ரபத்தி ஶாஸ்திரத்தைத் தான் இப்போது அநுஷ்டித்து வருகிறார்கள். இந்த ஸித்தாந்தத்தை அநுஷ்டிப்பவர்களுக்கு, ப்ரபந்நர்கள் என்று பெயர். ஆழ்வார்களில் முக்கியரான நம்மாழ்வார் ''பிரபந்நஜன கூடஸ்தர்'' என்று சொல்லப்படுவர். இந்தப் பிரபத்தி யென்னும் உபாயத்தின் ஸ்வரூபத்தை விவரிக்குமுன், பக்தி மார்க்கமென்று சொல்வதைச் சுருக்கமாய்ச் சொல்வோம்.

17. ஐச்வரியம் முதலான எந்தப் பயனையும் உத்தேசிக்காமல், 'நான் செய்தேன்,' 'என்னுடையது', 'எனக்காகச் செய்தேன்' என்கிற எண்ணத்தைத் தவிர்த்துப் பகவதாராதநரூபமாய்த் தன்னுடைய வர்ணாஶ்ரம தர்மங்களையும், தபஸ் தானம் யாகம் முதலிய கர்மங்களையும் அநுஷ்டிப்பது - கர்மயோகம். இப்படி இதை வைராக்யத்துடன் ஸகலமும் பகவததீநம் என்று ஒருவன் அநுஷ்டித்தால் ஜீவாத்ம தர்ஶநம் உண்டாகும். மநஸ்ஸை ஜயித்துப் பரிசுத்தமான ஜீவாத்ம ஸ்வரூபத்தில் தானே நிற்கை - ஜ்ஞாநயோகம். இந்தக் கர்ம ஜ்ஞாநயோகங்களை அங்கமாக வுடையது - பக்தியோகம். பகவானுக்கே என்று அற்றுத் தீர்ந்த ப்ரீதியோடு



வேதாந்தத்திற் சொன்னபடி பகவானையும் அவனுடைய குணங்களையும் த்யாநம் முதலானவை செய்து பரம புருஷனிடத்தில் ஆராத பக்தியைப் பண்ணி அந்தப்பரமபக்தியால் பகவானை அடைகிறது - பக்தியோகம். இப்படி உபநிஷத்துகளிற் சொல்லிய கர்ம ஜ்ஞாந யோகங்களை அங்கமாக வுடைத்தான பக்தியோகம் முதல் மூன்று வர்ணத்தார்மாத்திரமே அநுஷ்டிக்கக்கூடியது. மிகுந்த அப்யாஸம் வேணும், அநுஷ்டிக்கிறது மிகவும் கஷ்டம், ஆயுள் முழுவதும் அந்தத் தியாநத்திலேயே யிருந்து அந்திம தஶையில் அதே தியானமும் ஜ்ஞாபகமு மிருந்தால்தான், பக்தி யோகம் பிரயோஜநப்படும். இந்த மாதிரியான நிர்ப்பந்தங்கள் பிரபத்தி மார்க்கத்துக்கு இல்லை. ஆழ்வார் இந்த மார்க்கத்தை வெளியிடுவதை இனிச் சொல்வோம்.

18. 5-ம் பத்தில் ''நோற்றநோன்பு'' என்ற திருவாய்மொழியில் ''நோற்ற நோன்பிலேன்; நுண்ணறிவிலேன் ஆறு எனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்'' என்றும், ஷ்டி பத்தில் ''ஆராவமுது'' என்கிற திருவாய்மொழியில் (1) ''களைவாய் துன்பம், களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்'', ''கழல்கள் அவையே சரணாக்கொண்ட'' என்றும், கர்மஜ்ஞாந யோகத்தோடு கூடிய வேதாந்தத்திற் சொல்லப்பட்ட பக்தியோகம் செய்யத் தனக்குச் சக்தியில்லையென்றும், பகவான் ரக்ஷித்தாலும் சரி விட்டாலும்சரி வேறுகதியில்லை யென்றும், ஷை பத்தில் ''மானேய் நோக்கு'' என்கிற திருவாய்மொழியில் கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களை ஶாஸ்திரப்படி அநுஷ்டிக்க முடியாதிருக்கும்போதும், அளவில்லாத பக்தியினால் பரவசமாய்ப்போய் மெலிந்து ''வைகலும் வினையென மெலிய மனம் பெருமானடிமேல் செம்மைகொள் தென்குருகூர்ச் சடகோபன்'' என்றும், ஷை பத்தில் ''பிறந்தவாறு'' என்னும் திருவாய்மொழியில் ''எனதாவியையுருக்கியுண்கிற'' என்று தரித்து நின்று, அவன்குணங்களை அநுபவிக்கமாட்டாமல் மநஸ் கரைந்துபோய் ''நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்'' என்றும், இன்னும் அநேக இடங்களில் ''ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாவிலேன்'' (X. 10. 3.) என்றும், ''திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்து உய்ம்மினோ'' (IV. 1. 1.), ''புகலொன்றில்லா வடியேன்'' (VI. 10. 10.) என்றும் சொல்வதால், பகவானே உபாயம் என்கிறார்.

19. இந்த ப்ரபத்தி யென்னும் உபாயத்தை ஸகலஜாதியாரும அநுஷ்டிக்கலாம். இவன் செய்யவேண்டியது என்னவென்றால் “கழல்களவையே சரணாகக்கொண்ட” (V. 8. 11.), “உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன்” (VI. 10. 10.) என்று அவனுடைய திருவடிகளைப் பற்றவேண்டியதுதான் அவசியம் என்றதாயிற்று. “களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்” (V-8. 8.) என்றும், “நாள்தோறும் ஏகசிந்தையனாய்” (V. 10. 11.) என்றும் சொல்வதால் அவனே உபாயமென்பதில் மஹா விஸ்வாஸமான அத்யவஸாயம் [அதாவது முழுநம்பிக்கை] தான் முக்கியம் என்று ஏற்படுகிறது. எப்படிப்பட்ட பாபம் செய்தவரும் இந்த வழியை அநுஷ்டித்துக் கடைத்தேறலாம் என்று “நீசனேன் நிறைவொன்றுமிலேன்” (111. 3. 4), “ஒப்பிலாத் தீவினையேனை உய்யக்கொண்டு” (111. 9. 4.) என்கிற இடங்களில் ஸூசிக்கப்படுகிறது. இந்த வழியே ஸௌகரியம், ஸுலபம் என்று “சிற்றவேண்டா சிந்திப்பே அமையும்” (IX. 1. 7.) என்பதால் தெரிகிறது.

20. இந்த ப்ரபத்தி ஶாஸ்திரத்தை அநுஷ்டித்துத் தத்வத்தைத்தெரிந்தால் ஸகலத்துக்கும் பகவானே காரணம்; அவனுடைய கடாக்ஷந்தான் முக்கியம்; வைராக்யம் உள்பட ஸகலத்தையும் அவனே உண்டுபண்ணுகிறவன் என்று ஏற்படும். “என்னைத் தீமனங் கெடுத்தாய்” (II. 7. 8.) என்றும், “மருவித் தொழு மனமே தந்தாய்” என்றும், “மயர்வற மதிநல மருளினன்” (II. 7-8) என்றும் சொல்லுகையால் வைராக்ய முண்டான பிற்பாடு பகவதநுபவத்துக்கு வேண்டிய பக்தியையும் அவனே உண்டுபண்ணுகிறான்; “காதல்கடல்புரைய விளைவித்த காரமர்மேனிநங் கண்ணன்” என்று சொல்வதனால், அந்தப் பக்தியைப் பெருகப்பண்ணினதும் பகவானே; அசித் அல்லது ப்ரக்ருதி யென்கிற மஹத்தத்வத்தையும், ஜீவன் என்கிற அதற்கு மேற்பட்ட வஸ்துவையும், இந்த இரண்டுக்கும் அந்தர்யாமியாய் நிர்வாஹகனான ஸர்வேஸ்வரனையும், பூர்ணமாய்ப் ப்ரத்யக்ஷம்போல் ஸாக்ஷாத்கரித்த பிற்பாடும் இத்தனையும் கபளீகரிக்கும்படியான பெருகின பக்தி தன்னுடையது என்று “அதனிற் பெரிய என்னவா” (X. 10.) என்று அந்தப் பக்தியின் எல்லையைச் சொல்லி “என்அவாஅறச் சூழ்ந்தாய்”, “அவா அற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்” என்று



தம் வாயாலேயே தாம் மோக்ஷத்தை யடைந்ததையும் அருளிச்செய்தார். பக்தியோகநிஷ்டனுடைய முதிர்ந்த கடைசிநிலைதான் இந்தப் ப்ரபந்நனுடைய நிலையும் என்று சொல்லலாம்.

ஆகவே, (1) பரமாத்மா—ஸ்ரீலக்ஷ்மியோடு கூடிய நாராயணன், (2) ஜீவன்—அவனுக்கே சரீரமாக அடிமைப்பட்டவன், இன்னொரு வஸ்துவுக்கு அடிமைப்பட்டவனன்று, இப்படி சொல்லப்பட்ட அநந்யார்ஹ ஶேஷத்வமே ஜீவனுடைய ஸ்வரூபம், (3) பகவத் குணங்களை அநுபவித்து அவ்வநுபவத்தா லுண்டான ஆநந்தத்தோடு கூடிய பகவத் பாகவத கைங்கரியம்—நாம் அடையவேண்டிய புருஷார்த்தம் அல்லது பயன், (4) அஹங்காரம் மமகாரம்—இதற்கு விரோதி, (5) இந்த விரோதி நிவர்த்திக்கும் புருஷார்த்தத்தை யடைவதற்கும் உபாயம்—பகவான் திருவடிகளே என்று நம்மாழ்வார் திருவாய்மொழியால் அர்த்த பஞ்சகத்தை நிஶ்சயித்தார்.

(இன்னும்வரும்.)

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

---

“தண்ணீரும் கோபமும் தாழ்ந்தவிடத்தில்” என்கிறபடி பராக்ரமத்தைத் தாழ்ந்தவர்களிடமே செலுத்துவது மானிடர்களுக்குள்ள ஸ்வபாவம். பகவான் பக்கலிலும் இந்த ஸ்வபாவம் அநுவர்த்திக்குமோ? பகவான் செய்த விஷமங்களை ஸஹிக்காமல் யஶோதைப்பிராட்டி தாம்பினால் அவரைக் கட்டி “யதி ஶக்நோஷி [illegible]” என்று அதட்டினதும், அந்தக் கட்டை நிராக்ஷேபமாகப் பகவான் அங்கீகரித்ததும் ஜகத்ப்ரஸித்தம். “ஐயோ! இப்படி பகவான் கட்டுக்கு உட்படும்படியாச்சுதே!” என்று நாம் யாராவது பரிதபித்தால், நம்முடைய ஹ்ருதயத்தை இந்தப் பகவான் த்ருடமாகக் கட்டிவிடுகிறாரே! இது என்ன ந்யாயம்? பகவானோ, மனிதர்களோ, எல்லாருக்கும் வஶ்யர்கள்பக்கல் வீர்யத்தைச் செலுத்துவது என்பது ஸாமாந்யமாகிவிட்டதே!

“[illegible] യദി ത്വമസി [illegible]
[illegible]
[illegible]
[illegible].”

ஸ்ரீ:

# ஶ்யேந கபோதீயம்.

'ஶரணாகதனைப் பகவான் கைவிடமாட்டான்' என்பதை முக்கியமான விஷயமாகக் கொண்டது, நம்முடைய ஶாஸ்த்ரம். "வ்ரதம் மம" என்றும், "மா ஶுச:" என்றும் நமக்குப் பகவானே அபயம் கொடுத்திருக்கையில், நாம் அந்த உபாயத்தைக் கைப்பற்றாமல் வேறு உபாயங்களைத் தேடிப்போவது ந்யாயமன்று. "[illegible]" என்று 'ஶாஸ்த்ரத்திற் சொல்லியிருக்கும் ஸாதநாநுஷ்டாநங்களைச் செய்ய ஶக்தியில்லையே யென்று யார் அநுதபிக்கிறார்களோ, அவர்கள் விஷயத்தில் அங்கோபாங்க பூர்த்தி யெல்லாவற்றையும் நானே செய்துகொள்ளுகிறேன்' என்பது சரம ஶ்லோகத்தின் தாத்பர்ய மென்று அபியுக்தர்கள் அருளிச்செய்திருக்கையில், கர்ம ஜ்ஞாந பக்தி யோகங்களில் ப்ரவேஶம் கூட இல்லாமலிருக்கும் நாம், "[illegible] ஶரணம் ப்ரபத்யே" என்கிறபடி அவனுடைய தயையை அவலம்பித்து அவன் திருவடிகளில் விழுவதே உசிதம். இந்தத் தர்மம் பலவாறாக நமது ஶாஸ்த்ரங்களில் வெளிப்பட்டிருக்கிறது. புராணங்களில் அநேக உபாக்யாந ரூபமாக இந்தத் தர்மத்தையே மஹர்ஷிகள் வெளியிட்டிருக்கிறார்கள். சென்ற ஸஞ்சிகையில் கபோதோபாக்யாநரூபமாக வ்யாஸபகவான் ஸ்ரீ பாரதத்தில் இந்தத் தர்மத்தை வெளியிட்டதைப்பற்றிச் சொன்னோம். இப்பொழுது, ஐந்தாவது வேதமென்று சொல்லப்படும் அந்த ஸ்ரீ பாரதத்திலிருந்தே மற்றுமொரு உபாக்யாநம் எடுத்து எழுதுகிறோம்.

முற்காலத்தில் உஶீநரன் என்னும் ஓர் மஹாராஜன் இருந்தான். அவன், மிகுந்த தர்மத்துடன் ராஜ்ய பரிபாலநம் செய்து



வருவதுடன்கூட, தேஹாத்ம விவேகம் பொருந்தி வர்ணாஶ்ரம தர்மங்களுக்கு லோபமன்றியில் கர்மாநுஷ்டாநங்களை ஸரிவரச் செய்துகொண்டு ஸூக்ஷ்ம தர்மங்கள் எல்லாவற்றையும் தெளிவாக அறிந்தவனாகவும் இருந்தான். ஒருகாலத்தில் அவனுக்குப் பெரியதொரு யாகம் செய்யவேண்டு மென்கிற விருப்ப முண்டாயிற்று. அப்படியே அந்தராஜா அநேக ப்ராஹ்மணோத்தமர்களுடன்கூட யமுநாநதிதீரத்தி லிருக்கும் ஒரு புண்யஸ்தலத்தில் அந்தயாகத்தை முடித்து அவப்ருத ஸ்நாநம் செய்து ஸந்தோஷமாக ஸதஸ்ஸில் உட்கார்ந்திருக்குங் காலத்தில், ஓர் புறா அவனுடைய மடியில் வந்து விழுந்தது. அந்தப் புறாவின் பின்னாலேயே அதைத் துரத்திக்கொண்டு மிகுந்த ஆக்ரோஶத்துடன் ஓர் கழுகு வருவதைக் கண்டு, அந்த அரசன் புறாவை நன்றாகக் கட்டியணைத்துக் கழுகைத் தடுக்க, அந்தக் கழுகு தயங்கி நின்று பின்வருமாறு அரசனைப் பார்த்துச் சொல்லிற்று: "ஹே ராஜந், எல்லாஜநங்களும் உம்மை மஹா தர்மாத்மா வென்று புகழ்கிறார்களே! ஏன் இந்த அக்ரமத்தைச் செய்கிறீர்? மிகுந்த பசியால் வருந்தின எனக்குத் தைவிகமாக இந்த ஆஹாரம் கிடைத்தது; அந்த ஆஹாரத்தை எனக்குக் கிடைக்கவொட்டாமல் தடுப்பது மஹாபாபமன்றோ? ஏதோ தர்மம் செய்யவேணு மென்கிற பேராசையினால் பெருத்த அதர்மத்தையே செய்கிறீர்."

இந்த வார்த்தையைக் கேட்ட அவ்வரசன், "ஹே பக்ஷிராஜாவே! இந்தப்புறா உம்மிடத்திலிருந்து மிகவும் நடுங்கித் தன்னுடைய ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ளவேணு மென்று என்னை ஶரணமாக அடைந்திருக்கிறதே! இப்படி அபயத்தை ப்ரார்த்தித்துக்கொண்டு என்னை ஆஶ்ரயித்திருக்கும் ப்ராணியை நான் ஸம்ரக்ஷிக்க யத்நிப்பது தர்மமென்று ஏன் உம்முடைய புத்தியில் தோன்றவில்லை? இந்தப்புறாவோ பயத்தினால் ப்ராணன் போய்விட்டதுபோலவே நிஸ்ஸத்வமாகக் கிடக்கிறது. மிகவும் மனங்கலங்கி என்ன செய்யப்போகிறோமென்று நடுங்கியன்றோ என்னுடைய மடியில் வந்து விழுந்தது? அப்படிப்பட்ட ப்ராணியைக் கைவிடுவது அத்யந்தம் நிந்த்யமானதன்றோ? ப்ராஹ்மணனைக் கொல்லுகிறவர்களுக்கும், லோகத்திற்கெல்லாம் தாயென்று சொல்லப்படும்பசுவைக்கொல்லுகிறவர்களுக்கும், ஶரணாகதனைக் கைவிடுகிறவர்களுக்கும் ஸமமான பாபமென்று ஶாஸ்த்ரங்களிற் சொல்லி

யிருக்கிறதே!" என்று சொல்ல, அந்தப்பக்ஷி பின்வருமாறு உத்தரம் சொல்லிற்று: "ஓய் அரசனே! எல்லா ஜந்துக்களும் தங்கள் தங்களுடைய தேஹங்களை ஆஹாரத்தால் வ்ருத்திசெய்துகொண்டு ஜீவிக்கின்றன. அருமையான த்ரவ்யம் முதலியவற்றை இழந்து பஹுகாலம் ஜீவித்திருப்பது ஸாத்யம்; போஜநமின்றி ஸ்வல்ப காலம் ஜீவித்திருப்பதுகூட அஶக்யம். இப்பொழுது என்னுடைய பசியோ அதிதீவ்ரமாக இருக்கிறது. இந்த ஆஹாரம் போய்விட்டால் நான் ஜீவித்திருப்பதில்லை யென்பது நிஶ்சயம். நான் ப்ராணனைவிட்டால் என்னையே நம்பி அடுத்திருக்கும் என்னுடைய பெண்டு பிள்ளைகளும் நிஶ்சயமாக நாஶத்தை யடைந்துவிடுவார்கள். நீர் இந்த ஒருபுறாவை ரக்ஷிக்கும்பொருட்டு அநேக ப்ராணிகளின் வதத்திற்குக் காரணமாகிறீர். ஒரு தர்மத்தைச் செய்யுங்காலத்தில் அந்தத் தர்மாநுஷ்டாநம் ஏதாவது ஒரு அதர்மத்தை விளைவித்தால், அது மிகவுங் கெட்டதர்மமாகுமே யொழிய ஸரியான தர்மத்தைச் சேராது; ஒரு ப்ராணிக்கும் விரோதமில்லாமல் தர்மத்தை அநுஷ்டிப்பதுதான் ஸரியான தர்மமாகும். தர்ம ஸங்கடங்கள் நேருங்காலத்தில் குருலாகவவிசாரம்செய்து, எது பெரிதாகவும் ஶ்லாக்யமாகவு மிருக்கிறதோ அதை அநுஷ்டிக்க வேணும். ஒரு ப்ராணியைக் காப்பாற்றிப் பஹுப்ராணிகளின் வதத்தை உண்டுபண்ணுவது பெரிதா? ஒருப்ராணியைக் கெடுத்துவிட்டு அநேகம் ப்ராணிகளைக் காப்பாற்றுவது பெரிதா? என்பதை நீரே ஆலோசித்துத் தர்மநிஶ்சயம் செய்யும்."

இவ்விதமாக யுக்திக்கும் ஶாஸ்த்ரத்திற்கும் பொருந்ினது போல மிகுந்த ஸாமர்த்தியத்துடன் பேசின அந்தக் கழுகைப் பார்த்து, "ஹே ஶ்ரேஷ்டமான பக்ஷியே! நீர் தர்மம்சொல்வதைப் பார்த்தால், நீர் பக்ஷிகளுக்கெல்லாம் ராஜாவாக இருக்கும் கருடன்தானோ வென்று எனக்கு ஸம்ஶயம் உண்டாகிறது. மிகவும் விசித்ரமாக வார்த்தை சொல்லுகிறீர். உமக்கு ஸகல தர்மமும் தெரிந்திருக்கிறதுபோலத் தோன்றுகின்றதே! ஶரணமடைந்தவனைக் கைவிடுவது தர்மமென்று எப்படி நினைக்கிறீர்! உமக்கு ஆஹாரமில்லாமற் போய்விடுகிறதே என்கிற காரணத்திற்காகத் தர்மத்தையும் அதர்மமாகச் சொல்லும் பக்ஷத்தில், இதைவிடப் பதின்மடங்கு உயர்ந்த ஆஹாரம் நான் கொடுக்கிறேன்; அதைப் புஜித்துப் பசியைத் தீர்த்துக்கொள்ளும். எருதோ,



பன்றியோ, மானோ, எருமையோ எதை அபேக்ஷித்தாலும் கொடுக்கிறேன்" என்று அரசன் சொல்ல, அதைக் கேட்டு, அந்தப்பக்ஷி, "எனக்கு மற்றொன்றும் வேண்டாம். தைவத்தினால் எனக்குப் பக்ஷ்யமாக விதிக்கப்பட்ட இந்தக் கபோதமே வேண்டும். கழுகுக்குக் கபோதம் ஆஹாரமென்று பஹுகாலமாக ஏற்பட்டிருக்கவில்லையா? ஸாரத்தை அவலம்பிக்காமல் துர்ப்பலமான துரும்பைப் பிடித்துக்கொண்டு வீணாக மூழ்கிவிடவேண்டாம்" என்று சொல்லிற்று.

இந்த நிர்ப்பந்தத்தைப் பார்த்து மிகுந்த வருத்தத்துடன் அவ்வரசன், "ஹே பக்ஷியே! ஏன் என்னை வீணிற் க்லேஶப்படுத்துகிறீர்? என்னை ஶரணமடைந்திருக்கும் கபோதத்தை நான் ஒருகாலும் கைவிடமாட்டேன். வம்ஶ பரம்பரையாக எனக்குக் கிடைத்திருக்கும் மிகுந்த செல்வம் பொருந்திய இந்த ராஜ்யம் முழுவதையும் கொடுக்கிறேன்; இன்னும் எது கேட்டாலும் கொடுக்கிறேன். என்மனத்தை நோகச் செய்யாமல் இந்தக் கபோதத்தைத் தப்புவிக்கும் மார்க்கத்தை நீரே சொல்லவேணும்" என்று கேட்டான். அதைக்கேட்ட கழுகு, "ஹே ராஜந்! கபோதத்தின்பேரில் நீர் இவ்வளவு ஸ்நேஹம் வைத்திருக்கும் பக்ஷத்தில், நான் உம்மை நிர்ப்பந்திக்கவில்லை. ஆனால், அந்தக் கபோதத்தின் எடையுள்ள மாம்ஸத்தை உம்முடைய தேஹத்திலிருந்து அறுத்துக் கொடுத்தால் எனக்குத் திருப்தி யுண்டாகும்" என்று சொல்ல, அதைக் கேட்டு மிகுந்த ஸந்தோஷத்துடன் அந்த அரசன் "ஹே பக்ஷியே! நீர் என்னை இப்படிக்கேட்பது எனக்குப் பெருத்த அநுக்ரஹம். ஶரணமடைந்தவன் விஷயத்திலே என்னுடைய ஶரீரம் உபயோகப்படும்படி இம்மாதிரியான ஸுக்ருதம் எனக்கு இருந்ததே! என்னுடைய பாக்யமே பாக்யம்!" என்று ஆநந்தித்துப் பரபரப்புடன் ஓர் தராசு வருவித்து ஒரு தட்டில் அந்தக் கபோதத்தை வைத்து, மற்றொருதட்டில் தன்னுடைய தேஹத்திலிருந்து மாம்ஸத்தைத் தானே அறுத்து வைத்தான். அந்த மாம்ஸம் எடையிற் குறைந்ததைப் பார்த்து, அவ்வரசன் இன்னும் அறுத்து வைக்க, அதுவும் குறைவாக இருந்தது. இப்படி எவ்வளவு வைத்தும் குறைவாக இருப்பதைக் கண்டு, மாம்ஸம் எல்லாவற்றையும் இழந்த அந்த அரசன், தானே தட்டில் ஏறி உட்கார்ந்தான். உடனே அந்தக் கழுகு ஒரு திவ்ய புரு

னாக மாறி, உசீநரனுடைய கையைப் பிடித்து, "ஹே மஹாரா ஜனே! பரமமான தர்மத்தை அறிந்தவர் நீரே! இவ்விதமாக ஸூக்ஷ்ம தர்மத்தை அறிந்து கபடமற்று அதை அநுஷ்டிக்கும் மனிதர்கள் மிக அரியர். நான் இந்த்ரன், இந்தக் கபோதம் அக்நி பகவான்; நாங்களிருவரும் உமக்குத் தர்மாநுஷ்டானத்திலிருக்கும் உறுதியைப் பரீக்ஷிக்க இவ்விதமாக ரூபங்களை எடுத்து வந்தோம். நீர் உம்முடைய தேஹத்தில் கிஞ்சித்தேனும் அபிமானம் வைக்காமல் மாம்ஸங்களை அறுத்து வைத்தீரே: இந்த நடத்தையைக் கண்டு, இது வரையில் தர்மம் அறிந்தவர்களென்று கீர்த்திபெற்ற மஹான்கள் எல்லாரும் வெட்கப்படுவார்கள். உம்முடைய கீர்த்தியன்றோ கீர்த்தி! ஜங்கம ஸ்தாவரங்க ளடங்கிய இந்த ஜகத் எவ்வளவு காலம் தரித்திருக்கிறதோ அவ்வளவு காலம் உம்முடைய கீர்த்தி ஜ்வலித்துக்கொண்டிருக்கும்" என்று சொல்லிவிட்டு, அந்த இந்திரனும் அக்நிபகவானும் தங்களுடைய லோகம் போய்ச்சேர்ந்தார்கள். உசீநரனும் இந்த்ரனுடைய அநுக்ரஹத்தால் தன் தேஹத்தைத் திரும்பவும் அடைந்து, எல்லா ஜநங்களும் மிகுதியாகப் புகழும்படி முந்திச் செய்துகொண்டுவந்ததைப் பார்க்கிலும் நூறுமடங்கு அதிகமான தர்மத்துடன் ராஜ்யபரிபாலநம் செய்து, மஹத்தான போகங்களை யெல்லாம் அநுபவித்து, பஹுகாலம் சென்றபிறகு பகவத்கடாக்ஷம் பெற்றவர்கள் எந்த உத்தமகதியை அடைகிறார்களோ அப்படிப்பட்ட நல்லகதியை அடைந்தார்.

இப்படி தான் முக்யமான வ்ரதமாகக் கொண்ட தர்மத்தை உசீநரனைக்கொண்டு ஸர்வாந்தர்யாமியாக இருக்கும் பகவான் அநுஷ்டித்துக் காண்பித்தான். எவ்வளவு பாபிஷ்டனாக இருந்தாலும் ஸரியான அநுதாபத்துடன் 'சரணமடைந்தேன்' என்கிற சப்தத்தைச் சொல்லிக்கொண்டு அவன்திருவடிகளில் விழுந்துவிட்டால், அவனுடைய ஜ்ஞாநம் சக்தி கருணை முதலிய குணங்கள் உஜ்ஜ்ரும்பிதங்களாக இருக்குங் காலத்தில, நம்முடைய பாபம் நம்மை என்ன செய்யக்கூடும்?

"ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம" ॥

ஓர் பௌராணிகர்.

ஸ்ரீ:

# பாகவத தர்மம்.

வேதாந்த தீபிகையின் வைகாசி மாஸத்திய ஸஞ்சிகையில் "ஓர் வைதிகர்" என்கிற கையொப்பத்துடன் ஒருவர் பாகவத தர்மமென்னும் விஷயத்தைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்திருக்கிறார். அதற்கு உபஷ்டம்பகமாக வஸுதேவ ஸம்பந்தமான உபாக்கியானத்தை எழுதி, முடிவில் பாகவத கைங்கர்ய விஷயத்தில் ஜாதி முதலான நியமம் வேண்டாமென்றும், அதற்கு ப்ரமாணமாக ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடையதான "ஹ்ருஷீகேசே ... ஷா........" என்ற ச்லோகத்துடன் கூடிய திவ்ய ஸூக்தியை எழுதிவிட்டு, அதற்கு ஆபாத ப்ரதீதமான அர்த்தத்தை எழுதி, "இது விஷயமாக சாஸ்த்ர விருத்தமான அநுஷ்டானத்தை ஹீந ஜாதியார்பக்கல் இப்பொழுது இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நடத்துகிறார்கள்" என்றும் அப்படி நடத்துவது "ஸஜ்ஜநேஷ்வபி" என்கிற ஸ்ரீ பாகவத ச்லோகத்திற்கு விருத்தமென்றும் "ஓர் வைதிகர்" சொல்லியிருக்கிறார். இதற்கு ஸமாதானத்தை விஸ்தாரமாக அபேக்ஷித்தால் ரஹஸ்யத்ரயஸாரகாராதிகளான ஸ்ரீ நிகமாந்த தேசிகனுடைய திவ்ய ஸூக்தியை ஆசார்ய ஸந்நிதியில் அத்யயனம் செய்யவேணும். எனக்குத் தெரிந்த விஷயத்தை இப்பொழுது ஸங்க்ரஹமாக எழுதுகிறேன்.

(1) சூத்ர பாகவதனுக்கு ப்ராஹ்மணனே மற்றவனே கைங்கர்யம் செய்யவேணும் என்று சொல்லுகிறவர்களின் தாத்பர்யமென்ன? ச்ருதி ஸ்ம்ருதி முதலானவைகளில் சூத்ரபாகவதனை ப்ராஹ்மணன் வந்தநம் செய்யலாம் என்பதற்கு விசேஷித்த ப்ரமாணங்கள் காணப்படவில்லை. "யஸ்மிந் ப்ரதிஷ்டிதம் ... ஸர்வம் ... யதா ஹ்யஹம்" என்கிற வாக்யம் வந்தநாதிகளுக்கு விதாயகமாகாது. "பூஜ்ய:" என்னுமிடத்தில் பூஜை என்பதற்கு

அந்த அந்த வஸ்துக்களுக்கு அநுரூபமான ஸத்காரம் என்று அர்த்தம். ‘மாமனார் மாமியார் நாட்டுப்பெண்களைப் பூஜிக்கவேணும்’ என்று சொல்லுகிற “வத்⁴வோ ஜாமாத்ரு ஸ்நுஷாயி தவ்ராவ ஸம்ப³ந்தி⁴கஶ்வோண பூ⁴ஜ்யேத்” என்கிற வாக்யத்தில் ‘பூஜை’ என்கிற ஶப்தத்திற்கு-கந்த புஷ்ப வஸ்த்ர ஆபரணாதிகளினால் ஸந்தோஷப்படுத்துவது அர்த்தமாவது போல, இவ்விடத்திலும், மற்ற சூத்ரனைப்போல அநாதரிக்காமல் கௌரவப்படுத்துவதுதான் சூத்ர பாகவதனுக்குப் பூஜையாகும். இந்த அர்த்தத்தை “யஸ்ய ஶூத்³ரம் ஸமக்ஷகம் நிஷ்ரகம் ஶ்வபா தயா - வீக்ஷதே ஜாதிஸாமாந்யாச் ஸயாதி நரகம் நர:” என்கிற ஸ்ம்ருதி வாக்யமும் அநுமோதிக்கிறது. ஶ்ரீமத் ராமாயணாதிகளிலும் அநேக இடங்களில் “யதார்ஹம் ப்ரதிபூஜிதா:” என்கிற வாக்யம் காணப்படுவதால், அவரவர்களுடைய யோக்யதைக்கு அநுகுணமாகவே முன்னோர்கள் பூஜை செய்ததாகத் தெரிய வருகிறது. ஆகையால், ‘பூஜை’ என்கிற ஒரே ஶப்தம் ப்ரயோகம் செய்யப்பட்டிருந்தபோதிலும், அந்த ஶப்தத்தின் அர்த்தம் யோக்யதாநுகுணமாகவே இருக்க வேணும். ஆனால், “யதார்ஹம்” என்று விஶேஷித்துப் பகவத்துல்யமான பூஜை விதிக்கப்பட்டிருப்பதால் இவ்விடத்தில் “பூஜை” ஶப்தத்தின் அர்த்தத்திற்கு எவ்வித ஸங்கோசமும் செய்யக்கூடாது என்று சொல்லலாம். அது அநுசிதம். “ஸாரோ ஹ்யதா விஷ்ணுவத்³ பூஜ்ய:” என்னும் விஶேஷ விதியுள்ள இடங்களிலும் பகவானுக்கு யோக்யமான விஶேஷ ஆராதநங்கள் “பூஜா” ஶப்தத்திற்கு அர்த்தமாகாமையால, விஶேஷ நிர்த்தேஶமுள்ள இடங்களிலும் அநர்ஹ விஷயத்தில் அநுசித பூஜை செய்வது ப்ரமாணங்களுக்கும் ஶிஷ்டாசாரத்திற்கும் விருத்தம். பகவத்துல்யமான பூஜையை ஸர்வ விதத்தாலும் செய்யவேணுமென்றால் சூத்ர பாகவதர்களுக்கு ஆலய நிர்மாணமும் உத்ஸவாதிகள் முதலான கைங்கர்யங்களும் பண்ண ப்ரஸங்கிக்கும்.

(2) “ஸ விப்ரேந்த்³ரோ முநிஶ்ஶ்ரீமாந் ஸயதிஸ்ஸ ச பண்டித:” என்கிற ஶ்லோகத்தின்படி, சூத்ர பாகவதனுக்கு ப்ராஹ்மண ஜாதியையும் ஸந்யாஸாஶ்ரமத்தையும் ஒப்புக்கொள்வது, பஹு ப்ரமாண விருத்தம். ஏனென்றால், அவனுக்கு ப்ராஹ்மண்யமுண்டானால் தேவகார்ய பித்ருகார்யங்களுக்கும் விவாஹாதி ஸம்பந்தங்களுக்கும் யோக்யதை உண்டென்று ஒப்புக்கொள்ள வேண்டிவரும். இதற்கு விருத்தங்களான மஹர்ஷி வாக்யஶத மிருக்கிறது. பெரிய திருமொழி முதற் பத்து முதல்திருமொழி “குலந்தரும்” என்கிற பாசுரத்தில் பெரியவாச்சான்பிள்ளை பின்வருமாறு எழுதியிருக்கிறார். “ஜந்மம் முதலியதால் குறையநின்ற ஒருத்தனுக்குப் பகவத்ஸம்பந்தமுண்டானால் இவற்றால் உயர்ந்தான் ஒருத்தன் இவை இரண்டிலும் இவனுக்குத் தாழ்வு உண்டாகவும் தானுயர்ந்தானாகவும் நினைக்க இருக்கவுங்கூடக் கூசவேண்டும்படியாய்த்து பகவத்ப்ரபாவமிருப்பது. ஆகிலும் பெண்கொடுத்தல் கொள்ளுதல் செய்கிறாரில்லை. அதுக்கடி ஜாதிநிபந்தநமாகை; ஶ்லாகை குண நிபந்தநம்.” இதனால் ஶ்லாகையே சூத்ரபாகவதனுக்கும் பூஜையாகிறதென்றும், ஸம்பந்தாதிகள் ஜந்ம நிபந்தநங்கள் என்றும் வ்யாக்யாநம் செய்தவரின் அபிப்ராயமென்று தெரிய வருகிறது. 5-வது பத்து 8-வது திருமொழி “ஏழையேதலன்” என்கிற பாசுரத்தின் வ்யாக்யாநத்தில் - “ஏழை - அஜ்ஞன், ஏதலன் - ஶத்ரு, கீழ்மகன் - இவை பூஷணமாம்படியான ஜந்மத்தை யுடையவன், கீழ்ச் சொன்ன இரண்டும் ஜ்ஞாந ஸாத்யமாயும் ப்ராயஶ்சித்த ஸாத்யமாயு மிருக்குமிறே. இது வேறொன்றாற் கழிக்க வொண்ணாது” என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது - ஹீநஜாதியில் பிறந்துவிட்டால் அப்பிறப்பு வேறொன்றாலும் கழியாது என்பது தான் அர்த்தம். ஜ்ஞாநத்தினால் ப்ராஹ்மண்ய முண்டானால் இவ்வுக்தி விருத்திக்காதோ?

ஷை பத்து - ஷை திருமொழி 7-வது பாசுரத்தில் “அந்தணன்” என்கிற பதத்திற்கு “அத்யயநம் பண்ணுவிக்கைக்கு அதிகாரி” என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் பெரியவாச்சான் பிள்ளையின் அபிப்ராயமும் ஜ்ஞாநத்தால் ஜாதி உண்டாகாது என்பதுதான் என்று வ்யக்தமாகத் தெரிகிறது. விஶ்வாமித்ரருக்குச் சரு வ்யத்யாஸத்தால் ஜாதி வ்யத்யாஸம் உண்டாச்சுது என்பதும் புராண ப்ரஸித்தம்.

இப்படி ஸ்துதி பரங்களான வாக்யங்களைக்கொண்டு யதாஶ்ருதார்த்த க்ரஹணம் பண்ணினால் “ந ஶூத்³ரா ப⁴க³வத்³ப⁴க்தா விப்ரா பா⁴க³வதா: ஸ்ம்ருதா:” என்பதைக் கொண்டு வ்ருத்தனிடத்

தில் பாலனுக்கு யோக்யமான வ்யாபாரங்களைச் செய்யவும், "வை வாஹிகோ விதி: ஸ்த்ரீணாம் ஸம்ஸ்காரோ வைதிக: ஸ்ம்ருத:" என்பதைக் கொண்டு பாலனுக்கு தருணீ விவாஹம் செய்யவும் ப்ரஸங்கிக் கும். "யதிஹ்யா..........சாந்தாந்ர்யாஸ்ய பக்ஷாத்தம் கஸ்யசிந்நஸ்யஸ் ஸ்யமா" என்கிறபடியே சூத்ரபாகவதனையேகொண்டு ச்ராத்தம் பண்ணவும்ப்ரஸங்கிக்கும்.

(3) "ந யஸ்ய ஜந்ம கர்மப்யாம் ந வர்ணாச்ரமஜாதிபி: - ஸஜ்ஜதேऽஸ்மிந்நஹம்பாவோ தேஹே வை ஸ ஹரே: ப்ரிய:" என்கிற ச்லோகத்தில் சரீராத்ம ப்ரம நிராஸம் எவனுக்கு இருக் கிறதோ அவன் பகவத் பக்தன் (அல்லது - ப்ரியன்) என்று சொல் லப்படுகிறதே யொழிய, எல்லா வர்ணங்களையும் ஒன்ருக நினைக்க வேணுமென்று சொல்லப்படவில்லை. அதாவது - "நான் தேவன், நான் மனுஷ்யன், நான் ப்ரஹ்மசாரீ, நான் க்ருஹஸ்தன்" இம்மா திரியான தேவாதி சரீரங்களோடு "நான்" என்கிற சப்தத்திற்கு அர்த்தமான ஆத்மாவுக்கு உண்டாகிறதான அபேதப்ரமம் நிவர்த்த நீயமென்று தாத்பர்யம். இந்த அர்த்தத்தைத்தான் ஸ்ரீகீதையி லும் "சுநி சைவ ச்வபாகே ச பண்டிதாஸ் ஸமதர்சிந:" என்று ஜீவாத்ம ஸ்வரூபம் ஜ்ஞாநைகாகாரத்தன்மையால் ஸர்வ வஸ்துவி லும் ஸமமென்று பகவான் அருளிச்செய்தான். அல்லது ஒரு ஜாதி க்கு விதித்த தர்மத்தை மற்றவன் செய்யும்படி விதித்தபடியன்று. இவ்விதமான ஸம்சயம் ஜ்ஞாநவான்களுக்கும் இக்கலியுகத்தில் உண்டாகுமென்பதை நினைத்து ஸ்ரீபாரதத்தில் கலியுகக்கொடும் பாபங்களைச் சொல்லும் ப்ரகரணத்தில் "பவிஷ்யந்த்யவராத்தாம்" என்று வ்யாஸ பகவான் அருளிச்செய்தான்.

(4) ஆகையினல், இக்காலத்தில் நிக்ருஷ்ட ஜாதீயர்கள் ஜ்ஞாந வான்களானலும், "சூத்ராணாம் சூத்ர ஸேவகானாம் சூத்ரே ணைவ ஸமாகச்-சூத்ராணாம் நாமச்ராவி ஜலஸ்தேவி வாதயேத்", "யோ மோஹாத்யதமோ ஜாத்யா ஜீவேதுத்க்ருஷ்டகர்மபி: - தம் ராஜா நிர்தநம் க்ருத்வா க்ஷிப்ரமேவ ப்ரவாஸயேத்" என்கிற ஸ்ம்ருதி வாக்யங்களின்படி, சூத்ரனிடத்தில் உத்க்ருஷ்ட. வர்ணத் தான் ஜ்ஞாநோபதேசத்தைப் பண்ணிக்கொண்டால் பதிதனுகி



றுன்; சூத்ரன் உபதேசித்தால் அவன் தேசப்ரவாஸத்திற்கு அர் ஹனுகிறான். ஆகையால் "தமோமயாஹம்" என்பது வித்யா மந்த்ர க்ரஹண விஷயமன்று. ஆனல் "ப்ராப்யம் ஜ்ஞாநம் ப்ராஹ்ம ணாத்........நீசாதபீக்ஷணம்" என்ற க்ரமத்தில் பூர்வ பூர்வாலாபத்தில் அதி ஸங்கட விஷயத்தில் ஸாமாந்ய தர்ம க்ரஹணத்தைச் சொன் னபடி. இவ்வளவைத்தான் தர்ம வ்யாதாதிகள் அநுஷ்டித்தார்கள்; முக்யாசார்யகம் பண்ண வில்லை.

மநுஸ்ம்ருதியிலும் "விப்ராணாம் ஜ்ஞாநதோ ஜ்யைஷ்ட்யம்" என்றும், க்ஷத்ரியர்களுக்கு வீர்யத்தால் ஜ்யைஷ்ட்யமும், சூத்ரர் களுக்கு வயஸ்ஸினல் உண்டாகிற க்ரமத்தை உத்தேசித்து உத் கர்ஷமும் சொல்லப்பட்டிருக்கின்றன. கலியுக தர்ம ப்ரவர்த்தக ரான பராசரரும், 'ஹீநஜாதீயருக்கு ஜ்ஞாநமிருப்பதை மாத்திரம் கொண்டு ப்ராஹ்மண ஸாம்யம் உண்டாகாது' என்று சொல்லி யிருக்கிருர்.

(5) இப்படி ஒரு விதமான விரோதமும் இல்லாமலிருக்க எவ்விதமான அபிப்ராயத்தைக்கொண்டு "ஓர் வைதிகர்" விருத் தாநுஷ்டாநம் வந்திருப்பதாக எழுதியிருக்கிருரென்று தெரிய வில்லை. இப்பொழுது எழுதியிருக்கிற விஷயங்களில் ஏதாவது ஸமா விஷயாஸாங்கத்ய முண்டானல் அதை எழுதினல் அதற்கு ஸமா தாநம் எழுதுகிறேன். இதில் இருக்கிற ந்யூநாதிரிக்த விஷயங்களை உத்தேசித்தும் பின்னும் மற்றைத் தோஷங்களை உத்தேசித்தும் மஹாங்களுக்கு அபராத க்ஷாபணம் பண்ணிக் கொள்ளுகிறேன்.

யதசக்தம் க்ரியாசேஷம் ஹாஷணம் ச்வாதி ஜந்மநம் ।
ஸர்வம் தத் ஸர்வஜ்ஞாயாம் க்ஷமம் விஜ்ஞாப்ய ப்ரவர்த்ததே ॥

இவ்விஷயம் இப்படியிருப்பதால், "யஸ்யாநுஸேவயாऽஸா வஸ்யதே வ்யதிஷ்டிதா - தத்ப்ரஸிதோபராஸ்தஸ்ய ஸேவஸ்ய ஸத்க்ஷேஷ:", "பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே" இம்மாதிரியான ப்ரமாணங்கள் ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தால் அவரவர்களுக்கு உசிதவிஷயத்தி லாகக் கடவது.

புத்தங்கோட்டகம் - ஸ்ரீநிவாஸதாஸ:

ஸ்ரீ:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

"[illegible] - ஸ்ரீ[illegible]."

"[illegible]" என்கிறபடி எம்பெருமானுக்கு

ஸ்ரீ அழகர் ஸந்நிதி.

ரூபம் ஆகாரம் ஆயுதங்கள் முதலியவை இல்லாம லிருந்தாலும், பக்தர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு வாங்மநஸ் ஸுக்கு அபரிச்சேத்யமான லாவண்யம் ஸௌந்தர்யம் முதலிய குணங்கள் பொருந்திய புருஷாகாரத்துடன் வக்ஷஸ்தலஸ்ரீகராயும், பீதாம்பரம் தரித்தவராயும், ஆஶ்ரிதர்களுடைய அபீஷ்டங்களைக் கொடுக்கக்கூடிய குளிர்ந்த கடாக்ஷங்களை யுடையவராயும், பரி கோபமங்களான நீண்ட ஸுவ்ருத்த பாஹுக்களென்ன, தோளள வும் நீண்டிருக்கும் ப்ரஶஸ்தமான கர்ணங்களென்ன இவைகளோடு கூடினவராயும், "[illegible]" என்கிறபடி தம்முடைய ஸாந்நித்யத்தாலேயே ஸ்ரீமத் தாயிருக்கும்படியான வநகிரீந்த்ரத்தில் வஸிப்பதில் ஊர்ஜிதமான ஸங்கல்பத்தால் அபிவ்யக்தமாகியிருக்கும் ஸ்ரீ அழகர் நமக்கு ஸதா ஸாக்ஷாத்காரமாகும்படி ப்ரகாசிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

நமது பகவான் அர்ச்சாரூபியாக அபிவ்யக்தமாயிருக்கும் ஸ்தலங்களில் முக்கியமானவையும், நமது ஆசாரியர்கள் விசேஷவா ஸம் முதலானவை செய்து உகந்தருளினவையுமான திவ்யதேசங்க ளில் ஸ்ரீ அழகர் கோயில் என்னும் ஸந்நிதி, மிகச் சிறப்புள்ளது. இது, தென் மதுரைப் பட்டணத்திற்கு 12 - மைல் வடகிழக்கிலுள்ள திரு



மாலிருஞ்சோலை என்கிற பெயர்கொண்ட பழமையான ஒரு மலை யின் அடிவாரத்தில் இனிமையாய் அமைந்திருக்கிறது. இந்த மலையின் மேல் ஏறக்குறைய 3 - மைல் தூரத்தில் பாறைகள் வழியாகப் பெ ருகி வரும் ஓர் அருவி உண்டு. அதற்கு நூபுரகங்கை யென்று பெயர். சில இடங்களில் பஹுவேகமாயும் சில இடங்களில் அதி மந்தமாயும், சில விடங்களில் இடறி ப்ரமிக்கிறதுபோலவும், சில விடங்களில் மிகுந்த நுரை தப்பிக்கொண்டும், மற்றும் சில விடங் களில் அட்டஹாஸத்துடன் உயர்ந்த ப்ரதேசத்திலிருந்து விழுந்து கொண்டும் இந்த நதி ப்ரவஹிப்பதைப் பார்த்தால், ஸுந்தரபுஜ னென்று பெயர்பூண்ட ஓர் மதுவைப் பாநம்பண்ணி அதனால் மதத்தை யடைந்திருக்கும் ஸ்த்ரீதான் இப்படி ப்ரமித்து வருகிறா ளோவென்று நினைக்கும்படி யிருக்கும். "[illegible]" இந்த அருவி விழுமிடத்தில் ஸ்ரீ அழகருக்கு திருமஞ்சன மண்டபமொன்று ஏற் பட்டிருக்கிறது. அந்த விடத்தில் அந்த நதியின் தீர்த்தத்தை அதி புண்யமென்றும், அபிலஷிதமான ப்ரயோஜநங்களைக் கொடுக்கக் கூடியதென்றும் எல்லாரும் கொண்டாடுகிறார்கள். இந்த ஸந்நி வேசத்தின் அழகு நேரில் பார்த்து ஆநந்திக்கக்கூடியதே யொழிய வர்ணநத்திற்கு உட்பட்டதன்று.

இந்த ஸந்நிதி, நம்மாழ்வார் முதலான பல ஆழ்வார்களால் மிகவும் கொண்டாடிப் பாடப்பட்டுள்ளது. அப்பாட்டல்களில் "முடிச்சோதி" என்னும் நம்மாழ்வார் திருவாய்மொழி யொன்று மே, இந்தப் பெருமானது ஸ்வரூப ரூப குண விபூதிகளின் சிறப் பை நன்றாய் விளக்குகிறது. இந்தப்பெருமான்விஷயமாக நம் ஆசார்ய ஶ்ரேஷ்டரான கூரத்தாழ்வான் "ஸுந்தரபாஹு ஸ்தவம்" என்னும் ஒரு ஸ்தோத்ரம் செய்திருக்கிறார். இவர், பக வத் பாஷ்யகாருடைய பரம க்ருபையால் பராவரதத்வத்தின் யாதாத்ம்யத்தை அடைந்தவர்; பாஷ்யகாருடைய புத்ராவிர்

தத்தின் ஸேவையையே முக்கியமான தாரகமாக நினைத்தவர். ஒருகாலத்தில் அவரிருந்த சோள தேசத்திற்கு அதிபதியான ஒரு பாஷண்ட ப்ரபுவின் கொடுமையை ஸஹியாமல் ஸ்ரீ பாஷ்யகாரர் அத்தேசத்தை விட்டு வெளியே எழுந்தருளியிருந்த காலத்தில், இந்தத் திவ்யதேசத்தில் வஸித்திருந்த கூரத்தாழ்வான் தமது ஆசார்யரின் பிரிவைத் தாங்கமாட்டாமல் அவ்வாசார்யனுடைய சரணாரவிந்தாவலோகநத்தையே முக்கியமான ஃபலமாக ஸங்கல்பித்து உபநிஷத்தின் ஸூக்ஷ்மார்த்தங்கள் பொருந்திய இந்த ஸுந்தரபாஹுஸ்தவத்தைச் செய்தார். அந்த ஸ்தவத்தின் உபக்ரமத்திலும் உபஸம்ஹாரத்திலும் இருக்கும் "ராமாநுஜசரணவிலோகநாபிலாஷீ" என்கிற வாக்யமும், "விஜ்ஞாபநாம் வநகிரீஶ்வர ஸத்யரூபாம் அங்கீகுருஷ்வ கருணார்ணவ மாமகீநாம் - ஶ்ரீரங்கதாமநி யதாபுரமேஷ ஸோऽஹம் ராமாநுஜார்ய வஶக: பரிவர்த்திஷீய" என்கிற ஶ்லோகமுமே இந்த ஐதிஹ்யத்திற்கு முக்கிய ப்ரமாணம். ஆழ்வார் பாடல்களிலும், ஆழ்வான் ஸ்தோத்ரத்திலும் ஸ்ரீ அழகருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தின் வைபவங்கள் ஏராளமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிச் சொல்லியிருப்பதில் கொஞ்சமேனும் அதிஶயோக்திகளில்லையென்பது, இந்தப் பெருமாளை நேரில் ஸேவிப்பவர்களுக்குத்தான் நன்கு விளங்கும்.

**சித்ரா பூர்ணிமாவில் நடக்கும் உத்ஸவம்.**

ப்ரதிவருஷமும் சித்திரை மாஸத்திய பூர்ணிமையில், ஸ்ரீ அழகர், தம் சோலைமலையை விட்டு மதுரையின் வடக்கெல்லையாகிய வைகை யளவும் எழுந்தருளி, குதிரை நம்பிரான், வண்டியூர்ச் சப்பரம் முதலியவற்றின் உத்ஸவங் கண்டருளினபிறகு, இரண்டு மூன்று தினங்கள்வரையில் அங்கே தமக்காகக் கட்டப்பட்டுள்ள அளவிறந்த மண்டபங்களில் உத்ஸவங்களை பஹு விபவமாகக் கண்டருளிக் கோயிலுக்குத் திரும்புவது வழக்கம். இந்த உத்ஸவ காலங்களில் அளவற்ற ஸ்ரீ வைஷ்ணவர்களும் அங்யர்களும் திரள் திரளாய்க் கூடி எம்பெருமானை ஸேவிப்பார்கள். ஸமீப க்ராமங்களி லிருக்கும் அநேக ஆஸ்திகர்கள், வைகைக்கரையில் பெரிய



'பந்தல்கள் போட்டு 'சிறப்புகள்' என்னும் பாகஶாலைகளையும் போஜந ஶாலைகளையும் ஏற்படுத்தி விஶேஷ த்ரவ்யம் வ்யயம் செய்து, ஸேவார்த்திகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளை மிகுந்த உபசாரத்துடன் ஆராதித்து வருகிறார்கள். வர்ணக்ரமத்தை அநுஸரித்துப் பற்பல சிறப்புகள் ஏற்பட்டிருப்பதால், ஒருவருக்கும் யாதொரு அஸௌகர்யமும் நேரிடுகிறதில்லை. இது தவிர, அநேக ஆயர்குலத்தவர் இந்த உத்ஸவத்தில் ஸ்ரீ அழகருடன் கூடவே கூட்டங் கூட்டமாக வந்து பெரிய மாலைகளணிந்து உஜ்ஜ்வல வேஷர்களாய் இடுப்பில் துருத்திகளைக் கட்டிக்கொண்டு சந்தநக் குழம்புகளையும் நீர்த்தாரைகளையும் பெருமாள் பேரிலும் மற்ற ஸேவார்த்திகள் பேரிலும் வாரி யடிப்பதும் வழக்கம். வாஹநதாரிகளான கள்ளர்களும் கள்ளவேஷம்பூண்டு வாஹநாரூடரான பெருமாளைப் பந்துபோ லாட்டுவார்கள். இப்படி "ஸஹஸ்ராயந்த்ருஷ்ணி ஹிதகரோ ஹஸ்த ஜீவாதுரஸ்யாஜ்யாநிக்ருத்யாநி விஶ்வஸநோ ஸஸ்வீஸ்வதோஷ:" என்கிற அவஸரத்தை அநுகரிக்கும் அந்தக் கள்ளழகரின் உத்ஸவத்தைக் கண்டு களிப்பவர்களின் பாக்யமே பாக்யம்!

இவ்வருஷமும் இந்த உத்ஸவம் சென்ற சித்திரைமாஸக் கடைசியில் வெகு விமர்ஶையுடன் நடந்தது.

**ஸ்ரீஅஹோபில மடசிஷ்யஸபையும், சித்ராபூர்ணிமோத்ஸவமும்.**

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்ய ஸபையின் மதுரைப் பிரிவினுடைய கார்யதர்ஶியாகிற ஸ்ரீ சாத்தூர் கிருஷ்ண ஐயங்காரின் விடாமுயற்சியால், ஸபையின் அத்யக்ஷரும் பொதுக் கார்யதர்சியும் இன்னும் சில அங்கத்தினரும் இந்த வருஷ உத்ஸவத்தின் ஸேவையாகிற பாக்யத்தை அடையும்படி நேர்ந்தது. இவர்கள் கள்ளிக்குடி, வில்லூர், சோழவந்தான் முதலான சிறப்புகளில் அவைகளுக்கு நியந்தாக்களான ஸ்வாமிகளால் விஶேஷ உபசாரத்துடன் ஆதரிக்கப்பட்டு நிரந்தரமாய்ப் பகவத்ஸேவையை அநுபவித்து க்ருதார்த்தரானார்கள். இந்தப் பெரிய உத்ஸவத்தில் பகவத்ஸேவையும் பாகவத ஸேவையும் ததீயாராதநச் சிறப்பும் ஏற்பட்டிருக்க, பகவத்குண ஶ்ரவண ரூபமும் ஜ்ஞாநப்ரவர்த்தகமுமாகிய

உபந்யாஸங்கள் இல்லாம லிருப்பது பெரிய குறைவு என்று எண்ணி, நமது ஸபாத்யக்ஷரும், மற்றும் சிலரும் ஆலோசித்து, திருப்புல்லாணி வித்வான் ஸ்ரீ ரகுபதி ஐயங்கார் ஸ்வாமியைச் சில உபந்யாஸங்கள் செய்யும்படி ப்ரார்த்தித்தார்கள். அந்த ஸ்வாமி அந்தப் ப்ரார்த்தனைக்கு இணங்கி அந்த உத்ஸவ தினங்களில் இரண்டுநாள் ஸாயங்காலம் ஆசார்ய க்ருத்ய விஷயமாயும், ஶிஷ்ய க்ருத்ய விஷயமாயும் இரண்டு உபந்யாஸங்களைச் செய்தார். எல்லாரும் அந்த ஸ்வாமியின் ஜ்ஞாநத்தையும் ப்ரவசந ஶக்தியையும் பார்த்து ஆநந்தித்தார்கள். வித்வான் ஸ்ரீ. கோபாலஸ்வாமி தாதாசாரியர், திருப்புல்லாணி ஸ்ரீ அநந்தாசாரியர், ஸ்ரீ அழகராசாரியர், ஸ்ரீ. சேஷஐயங்கார், ஸ்ரீ. ராமஸ்வாமி ஐயங்கார் முதலான அநேக வித்வான்களும் ப்ரபுக்களும் ஸபைக்கு வந்திருந்து கௌரவப்படுத்தினதுடன் கூட, சிறப்புக் கைங்கர்யத்தை வஹிக்கும் ஸ்ரீ அழகராசாரியர் முதலான ஸ்வாமிகளில் சிலர் இந்த உபந்யாஸங்களை மிகவும் ஶ்லாகித்து, ப்ரதி வருஷமும் அதே இடத்தில் ஸதஸ் ஏற்படுத்த வேண்டுமென்றும், இந்த வருஷத்தில் இம்மாதிரியான ஸதஸ் ஆரம்பித்து நடந்தது தங்களுக்கு த்ருப்திகரமாக இருக்கிறதென்றும், ஸதஸ் விஷயமாக அடுத்த வருஷம் முதல் தாங்களே ஶ்ரமத்தை யெடுத்துக் கொள்வதாயும், அதற்குச் சபையார்கள் எல்லாரும் வந்திருந்து பூர்த்திசெய்ய வேணுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

இம்மாதிரியான ஆஸ்திகர்களை ஒன்று சேர்த்துப் பகவத் பாஷ்யகாருடைய ஸித்தாந்தம் தழைத்துப் பரவுவதற்கு வேண்டுவதான கார்யங்களைச் செய்வது, நமது ஸபையின் முக்ய நோக்கங்களில் ஒன்றன்றோ? ஆகையால், இம் மஹான்கள் வேண்டிக்கொண்டபடி வருகிற ஸம்வத்ஸரத்தில் நடக்கும் உத்ஸவத்திற்கு ஸப்யர்கள் எல்லாரும் போய் ஸதஸ்ஸுக்களை ப்ரபலமாக ஏற்படுத்திப் பகவத் குணங்களை ஶ்ரவணம் செய்தும், ஶ்ரவணம் செய்வித்தும், தாங்கள் க்ருதார்த்தர்களாவதுடன், மற்றும் அநேகரை க்ருதார்த்தர்களாகும்படி செய்வார்களென்று நம்புகிறோம். மதுரைப்பிரிவின் கார்யதர்சியும், அந்தப்பிரிவின் வ்ருத்தி



க்கு வேண்டிய கார்யங்களைப் பூர்ணமாய்ச் செய்துவருகிறார்; மதுரையில் நமது ஸம்ப்ரதாயத்தில் மிகுந்த ஶ்ரத்தையும், வயஸ்ஸிலும் ஜ்ஞாநத்தினாலும் பெருமையினாலும் ப்ரஸி[illegible]திய ஸ்ரீ ஶேஷாத்ரி ஐயங்காரை இந்தச் சபையின் அபிவ்ருத்தியில் ஆதரவுள்ளவராகச் செய்திருக்கிறார். வருகிற ஸம்வத்ஸரத்திற்கு முந்தி மதுரைப் பிரிவு ஓர் ப்ரபலமான பிரிவு ஆகி, த்வாரா ஸபைக்குப் பெருத்த அபிவ்ருத்தி யுண்டாகுமென்று த்ருடமாக நம்புகிறோம். ஸ்ரீ அழகர் நம்முடைய எண்ணங்களைப் பூர்த்திசெய்து வைக்கவேணும்.

கலெக்டர் ஆஷ் என்பவரின் வதம்.

நாளது ஜூன் மாஸத்தில் திருநெல்வேலி கலெக்டராகிய ஆஷ் என்னும் ஆங்கில பௌமரொருவர் மஹா பாபியான ஓர் ந்ருஶம்ஸனால் மணியாச்சி யென்னும் ரைல்வே ஸ்டேஷனில் நிஷ்காரணமாக வதம் செய்யப்பட்டாரென்பது எல்லாருக்கும் தெரிந்திருக்குமே. கொடைக்கானல் மலைக்குப் போகும்பொருட்டு ஆஷ் என்பவரும் அவருடைய பார்யையும் திருநெல்வேலியை விட்டுப் புறப்பட்டு மணியாச்சியில் ரையில் மாறுவதற்காகக் காத்துக்கொண் டிருக்குங் காலத்தில், இக் கொடிய பாபிஷ்டன், நிரபராதியான பக்ஷியை வேடன் சுடுவதுபோலத் தன்கையி லிருந்த துப்பாக்கியால் முதலில் கலெக்டரைச் சுட்டுவிட்டு, தன்னையும் சுட்டுக்கொண்டான். லோகத்தில் ஸ்வார்த்த பரர்களாகப் பிறருக்கு ஹிம்ஸை செய்பவரைக் கண்டிருக்கிறோம்: இப்படித் தனக்கு ஆத்யந்திகமான தீங்கை விளைவித்துக் கொண்டு பிறருக்கு உபத்ரவம் செய்யும் கொடியனைக் கண்டதேயில்லை. ம்ருகத்திற்கு லுப்தகன் போலவும், மீன்களுக்குத் தீவரர் போலவுமன்றோ, ஸஜ்ஜநர்களுக்கு இம்மாதிரியான துர்ஜநர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள்.

ஆஸேது ஹிமாசலமுள்ள ஸர்வ ப்ரஜைகளும், இந்தச் செய்தியைக் கேட்டு மிகவும் துக்கிக்கிறார்கள். பர்த்ருவியோக மாகிற மஹத்தான விபத்தை அடைந்திருக்கிற அந்தக் கலெக்டரின் பார்யை விஷயமாகவும் ஸர்வ ஜநங்களும் ஸமதுக்கர்கள் போல க்ரோஶிப்பதையும் காண்கிறோம். யார் க்ரோஶித்து என்ன? அப்

ரதீ கார்யமான இதைப் போன்ற விஷயங்களில் நிரூபணங்களால் மனத்திற்குத் தேறுதலைத் தேடிக்கொள்வதே ஸரியான மார்க்கம். அப்படிப்பட்ட நிரூபணங்களுக்கு உரிய ஶக்தியையும், துக்கத்தை ஸஹிக்கக்கூடிய தைர்யத்தையும் அந்தக் கலெக்டரின் ஸந்நிஹித பந்துக்களான பார்யை முதலானவர்களுக்கு ஈஶ்வரன் கொடுத்துக் கிருபை செய்ய வேணுமென்பது அஸ்மதாதிகளுடைய ப்ரார்த்தனை.

இக் கொலை சம்பந்தமாக விசாரிக்கவேண்டிய அம்ஶங்கள் சில உண்டு. இது, கேவலம் உந்மத்தன் செய்த கார்யமா? அல்லது ஏதோ வ்யக்தி நிஷ்ட த்வேஷத்தால் ஏற்பட்டதா? அன்றி, நமது ராஜ ப்ரதிநிதிகளாக இருக்கும் ஹூணர்களின்பேரில் ஜாதி ஸாமாந்யமாகவே ஜநித்திருக்கும் த்வேஷத்தின் பரீவாஹமோ? என்பவைதான். உந்மத்த கார்யமன்று என்பது வ்யக்தம். மற்ற இரண்டு கோடியில் எதுவாக இருந்தாலும், "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்றும், "[illegible]" என்றும் முறையிடுகிற நமது ஶாஸ்த்ரத்திற்கு அது அத்யந்தம் விருத்தமே. இப்படி ஶாஸ்த்ரத்தை அதிக்ரமித்து நடப்பவர்கள், அவஶ்யம் ராஜ ஶிக்ஷைக்குப் பாத்ரமாக வேண்டியவர்கள்தான். ப்ரக்ருத கொலை விஷயமாக இன்னும் யார் ஸம்பந்தப்பட்டிருக்கிறார்களென்றும், இம்மாதிரியான துஷ்டர்கள் இன்னும் யாராவது இருக்கிறார்களாவென்றும் கண்டுபிடிக்க ராஜஸேவகர்கள் அநேகர் ப்ரவ்ருத்தித்திருக்கிறார்கள். அவர்களுடைய ப்ரவ்ருத்தி ஸபலமாகி, இம்மாதிரியான கொடியர்களுக்கு ஶக்தி குன்றி, இனி ஒருவருக்கும் ஹிம்ஸை செய்யக்கூடாத அளவு ஶிக்ஷிக்கப் படுவார்களென்று நம்புகிறோம்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 17 AUG 1911 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்வருஷ ஆடிமீ. [ஸஞ்சிகை 6.

## நசிகேதஸ்ஸின் வரங்கள்.

(தொடர்ச்சி.)

முன் ஸஞ்சிகையில் நசிகேதஸ் தர்மராஜனை வேண்டிக்கொண்ட மூன்று வரங்களையும் சொல்லி, அவைகளில் இரண்டாவது வரத்தின் கருத்தை ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தின்படி விவரித்தோம். இப்பொழுது மூன்றாவது வரத்தின் பொருளையும், அதனையளித்த தர்மராஜனுடைய பிரதிவசனத்தின் பிரகாரத்தையும் விசாரிப்போம்.

இந்த மூன்றாவது வரம், "யேயம் ப்ரேதே" என்று தொடங்கி கடோபநிஷத் முதல் வல்லியின் 20 - வது வாக்யத்தில் கேட்கப்பட்டுள்ளது. அதன் பொருள்: 'மரணமடைந்த மநுஷ்யன் விஷயமாக இவன் இருக்கிறானென்று சிலரும், இல்லையென்று சிலரும் படும் சந்தேகம் ஒன்றுளது; உம்மிடத்தில் உபதேசங் கேட்டு, அதன் ஸந்தேகந்தீர அறிய விரும்புகிறேன். இதுதான் என்னுடைய மூன்றாவதுவரம்' என்பதுதான். இதைக்கேட்ட யமன், முன் ஸஞ்சிகையில் 166 - வது பக்கத்தில் விவரித்தபடி,

இந்த வரங்கேட்க வேண்டாமென்று நசிகேதஸ்ஸைப் பலவிதமாய் 9 - வாக்கியங்களால் திருப்பப் பார்த்து, அதற்கிசையாத ரிஷியின் மனவுறுதியை இரண்டாவது வல்லியின் முதல் 11 - வாக்கியங்களால் சிலாகித்து, "தம் துர்தர்ஶம்" என்று தொடங்கும் 12 - வது வாக்கியத்தையும், 13 - வது வாக்கியத்தையும் விடையாக அளித்தார். பிறகு நசிகேதஸ் 14 - வது "அந்யத்ர தர்மாத்" என்று தொடங்கும் வாக்கியத்தால் மறுபடி ஒரு கேள்வி கேட்கிறார். அதற்கு யமன், 3 - வாக்கியங்களால் பிரணவத்தையும், அதன் பெருமையையும் சொல்லி, "நஜாயதே" என்று தொடங்கும் வாக்கியம்முதல் வல்லியின் முடிவுவரையில் உள்ள வாக்கியங்களால் மறுமொழி அளிக்கிறார்.

இந்தப் பிரகரணத்தில் 3 - வது வரப்ரச்நத்தில் 'மரணம்' என்றால் பொருளென்ன? இந்தப் பதத்துக்குப் பிரஸித்தமான அர்த்தம் 'தேகவியோகம்'. இது அர்த்தமானால் 'ஶரீரம் நசித்த பிறகு ஜீவன் இருக்கிறனா இல்லையா'? என்பது கேள்வியின் பொருளாகும். ஒவ்வொரு ஜந்மத்தின் முடிவில் ஜீவன் அந்தந்த ஶரீரத்தை விட்டுப் பிறகு ஸ்வர்க்கம் முதலான பலன்களை யடைந்து, கடைசியில் மறுபடி பூமியில் ஜந்மமெடுப்பான் என்று அறிந்த நசிகேதஸ், இரண்டாவது வரத்தால் அக்நி வித்தையையும் அறிந்து, 3 - வது கேள்வியில் 'இவ்வளவு பிரஸித்தமான ஜீவன் தேகத்தைக்காட்டிலும் வேறான தத்வம்' என்னும் விஷயத்தை அறியாதவன் போலக் கேட்பதும், அதைப் பெரிய ரஹஸ்யம் என்று யமன் சிலாகிப்பதும் அஸம்பாவித மல்லவா? பரலோகமாகிற ஸ்வர்க்கத்துக்கு ஸாதநமான அக்நி வித்யையைக் கேட்டவன் தேகத்தைக் காட்டிலும் பிந்நமாக ஜீவன் இல்லையென்று எண்ண ஹேதுவில்லையே. ஒருகால் ஜீவஸ்வரூபத்தின் உண்மையைக் கேட்டானென்றாலும் அந்த ஜீவஸ்வரூபம் அத்வைதிகள் அபிப்ராயப்படி பரப்ரஹ்மமேயாகில் பிறகு "அந்யத்ர தர்மாத்" என்னும் வாக்கியத்தால் பரப்ரஹ்ம விஷயமான கேள்வி கேட்க நியாயமில்லை. ஜீவஸ்வரூபம் பரப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாகில்



"யேயம் ப்ரேதே" என்னும் கேள்விக்கு "தம் துர்தர்ஶம்" என்னும் ஶ்லோகத்தால் விடையளித்தது சரியன்று. ஏனென்றால், இந்த வாக்கியத்துக்கு ஏற்கெனவே முன் 167 - வது பக்கத்தில் எழுதினபடி 'தீரனாயிருக்கும் மநுஷ்யன் யாவராலும் காணக்கூடாமல் எல்லோர் ஹிருதயத்திலும் வஸிக்கும் தேவனை ஆத்ம யோகத்தால் அறிந்து ஸுகதுக்கங்களை விடவேணும்' என்பது சுருக்கமான கருத்து: ஸம்ஸாரிகள் ஸம்ஸாரத்தைக்கடக்கத் தியானம் செய்யவேண்டியது பரமாத்மாவையே யொழிய, தம்மைப்போன்ற ஸம்ஸாரியான ஜீவாத்மாவையன்று. மேலும் ஸம்ஸாரியான ஜீவனுடைய கதியைப் பிந்தித்தானே இந்த உபநிஷத்து 5 - வது வல்லியின் 7 - வது வாக்யமான "யோநிமந்யே ப்ரபத்யந்தே" என்னும் மந்திரத்தில், சிலர் ப்ராஹ்மணாதி ஜந்ம மெடுக்கிறார்களென்றும், சிலர் தங்கள் தங்கள் கர்மாநுகுணமாய் ஸ்தாவர ஜந்மமெடுக்கிறார்களென்றும் சொல்லியிருக்கிறது. இப்படி யிருக்க, மூன்று வரங்களில் கடைசி வரத்தால் ஜீவன் உளனா? இல்லையா என்றாவது, ஜீவன் சரீரநாசகாலத்தில் எப்படி ஸம்ஸரிக்கிறானென்றாவது கேட்டதாகச் சொல்வது உபபந்நமாகாது. மூன்றாவது வரத்துக்கு ஜீவவிஷயமே கருத்தாகில் அதற்கு உடனே விடையளிக்காமல், பிந்தின 5 - வது வல்லியில் அதற்கு மறுமொழி கூறினதாகச் சொல்வதும் ஸங்கதமாகாது. நடுவில் "அந்யத்ர தர்மாத்" என்னும் வாக்யத்தால் வேறொரு கேள்வியும், அதற்கு விஸ்தாரமான பிரதிவசனமும் செய்து, பிந்தி 3-வது வரமளித்ததாக அர்த்தம் பண்ணுவது சரியல்ல. இந்தப் பிரகரணத்தில் மூன்று வரங்களே யமன் கொடுத்ததாகையாலும், "யேயம் ப்ரேதே" என்னும் வாக்கியத்தில் இது மூன்றாவது வரமென்று வ்யக்தமாகச் சொல்லி யிருப்பதினாலும், அதை ஜீவப்பிரச்நமென்றும் "அந்யத்ர தர்மாத்" என்னும் வாக்கியத்தில் அடங்கிய கேள்வியை வேறு கேள்வியென்றும் சொல்வது கூடாது. இதுபோன்ற பலவிதமான ஆக்ஷேபங்களை உத்தேசித்து ஸ்ரீபாஷ்யத்தில் இந்த 3 - வது வரத்தின் பொருளையும், இந்தப் பிரகர

ணத்தின் மற்ற வாக்யங்களின் அர்த்தங்களையும் பின் வருமாறு பாஷ்யகாரர் உபபாதிக்கிறார்.

அதாவது:— "யெயஂவெ௵தெ" என்னும் வாக்யத்தில் 'வெ௵தெ - மரணமடைந்த' என்னும் பதம் ஸாதாரணமான சரீர வியோகத்தைச் சொன்னதன்று. ஒரு ஜீவனுக்குக் கடைசியில் சரீர வியோகமாகிக் கர்மபந்தமெல்லாம் விலகினபிறகு அவன் சுத்தஜீவனாய் மோக்ஷமடைந்த ஸ்திதியை மரணசப்தம் குறிக்கிறது: இந்த மோக்ஷமென்பது எப்படிப்பட்டதென்றுதான் கேள்வியின்பொருள். மோக்ஷத்தைப் பலபேர்கள் பலவிதமாய் வர்ணிக்கிறார்கள். சிலர், கேவலம் ஜ்ஞாநரூபமான ஆத்மா ஸ்வரூப நாஶமடைவதே மோக்ஷ மென்கிறார்கள். சிலர், இந்த ஜ்ஞாநஸ்வரூபமான ஆத்மா, ஸகல அவித்யையையும் நீக்கி ஸ்வயம்பிரகாசமாய் ஆவதே மோக்ஷமென்கிறார்கள் சிலர், ஆத்மா எல்லா விசேஷ குணங்களையும் விட்டுக் கருங்கல்லைப்போல் அறிவின்றி யிருத்தலே மோக்ஷ மென்கிறார்கள். பின்னும் சிலர், நிர்த்தோஷமான பரமாத்மாவுக்குச் சில உபாதிகளின் ஸம்பந்தத்தால் ஜீவனென்கிற அவஸ்தை நேர்ந்து அந்த உபாதிகள் விலகினவுடன் சுத்தமான பரமாத்மபாவம் திரும்புவதுதான் மோக்ஷமென்கிறார்கள். சில முதிர்ந்த வேதாந்திகளோ, எல்லாப் பிரபஞ்சத்துக்கும் காரணமாயும், குற்றமற்றதாயும், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாயும், அளவிறந்த நற்குணங்கள் பொருந்தினதாயுமுள்ள ஸர்வாந்தர்யாமியான பரப்ரஹ்மம் ஒன்றுண்டென்றும், அதற்கு ஜ்ஞாநஸ்வரூபனான ஜீவன் ஶரீரமென்றும், அவனுக்கு அநாதி கர்மபலமான அஜ்ஞாநம் விலகத் தன் சுத்தஸ்வரூபம் தெளிந்து பரமாநந்தமான பரப்ரஹ்மாநுபவம் கைகூடுமென்றும், அதுவே மோக்ஷமென்றும் சொல்லுகிறார்கள். இப்படிப் பலவிதமாய்ச் சந்தேகப்படும் மோக்ஷத்தின் ஸ்வரூபமென்ன என்பது 3 - வது வரத்திற் கேட்ட கேள்வி. இப்படி மோக்ஷத்தின் ஸ்வரூபத்தைக் கேட்டவர் அதன் ஸாதநங்களையும் கேட்பதாக வைத்துக்கொண்டு, யமன், "தஂது-ஶஂ" என்னும் வாக்யத்தால் பரமாத்மாவையும், ஜீவஸ்வரூபத்தையும், பகவதுபாஸநத்தையும், ஸங்க்ரஹமாய் உபதேசித்து



அந்தப் பரமாத்மாவை ஜீவன் அடைவதே மோக்ஷமென்று உபதேசித்தார். "தஂது-ஶஂ-ம-ஒ௯8த-வ௵விஷஂ ம-ஹா ஹிதஂமஹரெஷஂவ-ராணஂ। அ௯ாஅ8யொமாயிமெ8நதெவஂ 8கோயிரொஹஷூஶாகஜஹாதி" என்கிற வாக்யத்தில் 'தெவஂ' என்கிற பதத்தால் பரமாத்மாவையும், 'யீரஃ' என்கிற பதத்தால் ஜீவாத்மாவையும், 'அ௯ாஅ8யொமாயிமெ8ந 8கோ' என்கிற பதங்களால் உபாஸநமாகிற உபாயத்தையும் ஸூசிப்பித்தார். இதனால், மோக்ஷ விஷயமான பிரச்நத்துக்குப் பிரதிவசனமாக மோக்ஷத்துக்கு ஸாதநமான பராவர தத்வ ஜ்ஞாநத்தையும் மோக்ஷோபாயத்தையும் சொல்லி, அந்தப் பரமாத்மாவை ஜீவன் அடைந்து கர்மபந்தங்களைவிட்டு ஆநந்தாநுபவம் பண்ணுவதே மோக்ஷமென்று சொன்னதாயிற்று. ஆகையால், இந்தப் பிரதி வசனத்தில் உபாயம், உபேயம், உபேதாவாகிய மூன்றும் ஸங்க்ரஹமாய்ச் சொல்லப்பட்டதாலும், ப்ரச்நத்துக்கு அநுகுணமான பிரதிவசனமே யமன் சொல்லியிருக்க வேண்டியதாகையாலும், பிரச்நத்துக்கும் தாத்பர்யம் இந்த மூன்று விஷயங்களென்றே எண்ணவேண்டியதாயிருக்கிறது. கேவலம் ஜீவஸ்வரூபம் மாத்திரம் பிரச்நமானால் பிரதி வசனத்தில் அதிக விஷயங்களிருக்க நியாயமில்லை. இப்படி தத்வஹித புருஷார்த்தம் மூன்றும் இந்த மூன்றாவது வரத்திலும் அதன் பிரதிவசனத்திலும் அடங்கியிருப்பதால், இந்தக் கேள்விக்கு இவ்வளவு பிராதாந்யமும், இதைச்சொல்வதில் யமனுக்கு ஆக்ஷேபமும், நசிகேதஸ்ஸின் மநஸ்ஸைப் பரீக்ஷிக்க வெகுபிரகாரமான புத்ர பௌத்ர வித்தாதிகளின் தானங்களைச்சொல்லிப் பிரலோபநம் செய்ததும், கடைசியில் அவன் உறுதியை மெச்சினதும் ஸங்கதமாகும். இந்தக்கேள்வி வேதாந்திகள் அறிய வேண்டியதில் ஒரு அம்சம் மாத்திரமாகும் பக்ஷத்தில் இந்த உபதேசம் பூர்த்தியாகாமல் அவசேஷமாயிருப்பதாய் விடும். அப்படிப்பட்ட அடையாளங்கள் உபதேசவாக்யங்களில் ஒன்றும் இல்லை. ஆனால், பிந்தின 'அநூ௵யஊூாஅ' என்னும் வாக்யமும், அதற்குப்பிறகு விஸ்தாரமான உபதேசமும்

இருப்பதால், 3-வது வரம் ஸாவஶேஷமாகத்தா னிருக்குமென்று ஆக்ஷேபிக்கலாம். இந்த ஆக்ஷேபத்துக்கு ஸமாதாநம்: வேறு 4-வது வரம் யமனைக்கேட்கவில்லை யாதலால், பிந்தின ப்ரச்நமும் வாக்கியங்களும் 3-ம் வரத்தில் அடங்கின விஷயங்களைத் தெளிவாய் அறியக் கேட்டதும் அதற்கு மறுமொழியுமாகத்தான் அர்த்தம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது ‘𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍’ என்னும் வாக்கியத்தின் அர்த்தத்தைக் கவனித்தால் நன்ருய் விளங்கும்.

“𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑍃𑌤𑌾𑌕𑍃𑌤𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌭𑍂𑌤𑌾𑌚𑍍𑌚 𑌭𑌵𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌸𑌿 𑌤𑌦𑍍𑌵𑌦 ॥” இதன் பொருள்: ‘ஶாஸ்த்ரீய கர்யாநுஷ்டாநமாகிற உபாயத்தால் அடையப்படாததும், ஸவர்க்கம் முதலான ஸகல இதரமான ப்ராப்யங்களைக்காட்டிலும் வேறுபட்டும், இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமாகிய மூன்றுவித காலங்களினுலும் பரிச்சிந்நமாகாமலும் இருக்கும் வஸ்து எது’ என்பதுதான். அதாவது - பரமாத்ம வஸ்துவையும் அதையடைவிக்கத்தகுந்த உபாயத்தையும் அதையடையும் ஜீவஸ்வரூபத்தையும் முன்வாக்கியத்தால் சுருக்கமாய் அறிந்த நசிகேதஸ் அவைகளை விஸ்தாரமாய்த் தனக்குச் சொல்ல வேணுமென்று யமனைக்கேட்டதாகிறது. இதற்குப் ப்ரதிவசனமாக யமன் ‘𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾𑌃’ என்று தொடங்கின மூன்று வாக்கியங்களால் பரப்ரஹ்ம வாசகமாயும் அதைத்தியானிக்க ஸாதநமுமான ப்ரணவத்தை உபதேசித்து ‘𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇’, ‘𑌹𑌂𑌤𑌾𑌚𑍇𑌤𑍍’ என்கிற இரண்டு வாக்கியங்களால் ஜீவதத்வத்தின் ஸ்வபாவத்தை உபதேசித்து ‘𑌅𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌨𑍍’ என்று தொடங்கும் வாக்கியம் முதல் சில வாக்கியங்களால் பரப்ரஹ்மத்தின் ஸ்வபாவங்களையும் ‘𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾’ என்று தொடங்கும் வாக்கியத்தால் பக்தியாகிற மோக்ஷோபாயத்தையும் உபதேசித்தார். இந்த வாக்கியங்களை உபநிஷத் இரண்டாவது வல்லியில் பார்க்கக்கூடுமாகையால், இவ்விடத்தில் அவைகளை எடுத்து எழுதவில்லை. ‘𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍’ என்னும் மந்திரத்தின் வாஸ்தவமான அர்த்தம் பாஷ்யங்களில் விளங்கவில்லை. ஆகிலும், இரண்டுவிதமாய்



அதை அர்த்தம் செய்கிருர்கள் ‘𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰’ என்பதற்கு விலக்ஷணம் அல்லது வேறுபட்டதென்று பொருள். முதல் அர்த்தத்தில், கேள்வி முழுமையும் ப்ரஹ்மவிஷயம். “புண்யபாபங்களாகிற ஸாதனங்களால் அடையப்படாததும் காலத்திரயத்தினுல் பரிச்சேதிக்கப்படாததுமான வஸ்து என்ன?” கேள்வி. இரண்டாவது அர்த்தத்தில், புண்யபாபங்களைக் காட்டிலும் வேருன ஸாதனம் என்ன? மூன்று காலத்திலும் வேறுபாடில்லாத வஸ்து என்ன? என்று உபாய விஷயமாக ஒருகேள்வியும் ப்ராப்யமான பரப்ரஹ்ம விஷயமான ஒரு கேள்வியுமாகப் பிரித்து அந்வயிக்கப்படுகிறது. இரண்டு அர்த்தத்திலும் ஜீவன் விஷயமாகத் தனிக்கேள்வி இல்லை: இதைப் ப்ரஹ்மவிஷயமான கேள்வியில் அடங்கினதாக ஆசாரியர்கள் சொல்லுகிருர்கள். இப்படி ஒப்புக்கொண்டால்தான் இந்தக்கேள்வியில் மூன்று விஷயங்கள் அடங்கினதாகச்சொல்லி ஸாத்தியப்படும். பிந்தின வாக்கியங்களும், இதை அநுஸரித்து ஜீவன், ப்ரஹ்மம், உபாஸநம் ஆகிய மூன்று விஷயங்கள் அடங்கினதாகச் சொல்லப்படுகின்றன.

இந்தப் பிரகரணத்தின் கருத்தைத் தெளிவிக்க ஏற்பட்டது “𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌮𑍇𑌵 𑌚𑍈𑌵𑌮𑍁𑌪𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌶𑍍𑌚” என்னும் (I-4-6) ஸூத்ரம். இந்த ஸூத்ரத்தால் கடவல்லியில் இந்தப் பிரகரணத்தில் மூன்று விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவென்றும், அந்த மூன்று விஷயங்கள்ஸம்பந்தமானதுதான் கேள்வியென்றும், மூன்றுதவிர நாலாவது விஷயமான ப்ரதானத்தைப் பற்றின கேள்வியாவது மறுமொழியாவது இல்லை யென்றும் அர்த்தமாகிறது. ஆனல், இதில் உத்தேசிக்கிற மூன்று விஷயங்களென்ன? ஸூத்ரக்காரர் ஸ்பஷ்டமாய் இன்னதென்று சொல்லவில்லை. பாஷ்யகாரர்களும் இதில் வித்தியாஸமான அபிப்பிராயங்கள் கொள்ளுகிருர்கள். மூன்று வரங்களினுல் மூன்று கேள்விகளென்று சொல்வது ஸாத்தியமில்லை. ஏனெனில், முதல்வரம் பிதாவின் கோபத்தின் தணிவையும் ப்ரீதியையும் கேட்பதால், அது வேதாந்தத்தில் அறியவேண்டிய அம்சமன்று. ஆகையால், மற்ற இரண்டுவரங்களால்

மூன்று கேள்விகள் கேட்டதாய்ச் சொல்லவேணும். ஸ்ரீசங்கராசாரியர் தமது பாஷ்யத்தில் அக்நி, ஜீவன், பரமாத்மா என்னும் மூன்று விஷயங்களைப்பற்றிக் கேள்விகளென்று சொல்லுகிறார். அதாவது மூன்ருவது வரத்தில் கேட்டது ஜீவனைபோதிலும் அவன் பரப்பிரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவனல்ல வாகையால் அந்த வரத்தின் பிரதிவசனமாகிற 'தத்த்வமஸி' என்னும் வாக்கியத்தால் ஜீவபரப்பிரஹ்மங்களின் அபேதமே தோன்றுகிறதென்றும், 'அந்யத்ர தர்மாத்' என்னும் கேள்வியும் ஜீவனேடொன்ருன பரமாத்மவிஷயமென்றும் சொல்லப்படுகிறது. ஸ்ரீ பாஷ்யத்திலோ, 'ப்ரஶ்ந:' என்றும் 'உபந்யாஸ:' என்றும் ஏகவசநமாயிருப்பதினாலும், அக்நி விஷயமான பிரஶ்நம் பிரதானமல்லவென்கிற அபிப்பிராயத்தாலும், 'யேயம் ப்ரேதே' என்கிற பிரஶ்னத்தின் பிரதிவசனத்தில் மூன்று விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றவென்றும் அதைக்கொண்டே கேள்வியிலும் இந்த மூன்று விஷயங்கள்தான் கேட்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதையே 'அந்யத்ர தர்மாத்' என்னும் கேள்வியும் அதின் பிரதிவசனவாக்கியங்களும் விஸ்தரிக்கின்றன. அதாவது, ஜீவனையும் பரமாத்மாவையும் உபாஸநத்தையும் கேட்க உத்தேசித்துப் பொதுவாய் மோக்ஷஸ்வரூபத்தை முதலில் நசிகேதஸ் கேட்டார். மறுமொழியில் இந்த மூன்று விஷயங்களும் ஸூசிக்கப்பட்டவுடன் அவைகளையே மறுபடியும் வ்யக்தமாய்ச் சொல்லும்படி நசிகேதஸ் கேள்வி கேட்டார். இந்தக் கேள்விகள் வாக்யத்தில் வ்யக்தமாய்த் தெரியவில்லை. ஆனால், பிரதிவசனமாகிற 'நஜாயதே' 'அணோரணீயாந்' 'நாயமாத்மா' என்கிற வாக்கியங்களால் முறையே ஜீவனும் பரமாத்மாவும் பக்தியாகிற உபாயமும் அர்த்தமாகிறபடியால் கேள்விகளிலும் அவைகளே கேட்கப்பட்டிருக்க வேண்டும் என்று நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது. "ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சிந் நாயம் குதஶ்சிந் ந பபூவ கஶ்சித் । அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே" என்கிற வாக்கியம் ஶரீர ஸம்பந்தத்தை



யும் ஜநநமரணங்களையும் சொல்வதினாலும், அடுத்த வாக்கியமாகிய 'ஹந்த த இதம்' என்பதும் வ்யக்தமாய் ப்ரஹ்மத்துக்கு அஸம்பாவிதமான வயம் முதலானவைகளின் சம்பந்தத்தைச் சொல்வதாலும், இந்த இரண்டு வாக்கியங்களும், ஜீவபரமென்றும் அடுத்த வாக்கியமாகிற 'அணோரணீயாந்' என்பது பரமாத்மபரமென்றும் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படி உபநிஷத், ஸூத்ரம், பாஷ்யம் இவைகளைச்சேர்த்துப் பார்த்தால், இந்தப் பிரகரணத்தில் மூன்று பிரஶ்நங்களும் மூன்ருவது வரத்தின் விஷயமென்றும் ப்ர்ஹ்ம வித்யைக்கு அங்கமான கர்மாநுஷ்டானம் ௨-வது வரத்தில் கேட்கப்பட்டுள்ளதென்றும், ஜீவபரமாத்மாக்களின் பேதமே யொழிய அபேதம் இதில் தோன்றவில்லையென்றும் பிரதிவசனத்தைக்கொண்டு பிரஶ்நத்தின் பிரகாரத்தை நிச்சயிக்க வேண்டியிருப்பதால். ஸூத்ரத்தில் உபந்யாஸ பதத்தை முதலில் பிரயோகித்துப் பிந்தி ப்ரஶ்நபதத்தைப் பிரயோகித்தாரென்றும், மூன்று கேள்விகளும் ஒரு ப்ரஶ்நத்தில் அடங்கியிருப்பதால் 'ப்ரஶ்ந:' என்று ஏகவசநமாய்ப் பிரயோகிக்கப்பட்டதென்றும், ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தாலும் உபநிஷத்பாஷ்யங்களாலும் ஏற்படுகிறது. இந்த உபநிஷத்தில் மேல் கிரந்தத்தின் தாத்பரியம் பிந்தி விவரிக்கப்படும்.

(இன்னும்வரும்.)

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

# கீதார்த்த ஸங்க்ரஹம்.

விஶதயதி யாமுநீயம் கீதாஸங்க்ரஹம் வ்யஞ்ஜநதே ஹிதம் ।
நிரஸ்ஜிதஹ்ருதய ஸம்ஶயு யஸ்ய க்ருஷ்ண: க்ருதார்த்தவ: ॥

ஜ்ஞாத்வா யாமுநீயம் ஸ்ரீமந்நாராயணஸம்பந்தஸூரிணா ।
ஜ்ஞாநஸித்யை நீதாயுக்ஸம்க்ரஹஸ்ய விவ்ருதே ॥

“நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்”, “கமலாகாயீஶ நாயா ஆர்ய:” இத்யாதிகளிற் சொல்லுகிறபடி விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவர்த்தகரில் ப்ரதாநராயும், ஈஶ்வர ஸாக்ஷாத்காரமுள்ளவராயும், ப்ரஸித்திபெற்ற நாதமுநிகளுடைய பௌத்ரராயும், ஸ்ரீ பாஷ்யகாரருடைய ப்ராசார்யராயும், சோழராஜ ஸதஸ்ஸில் பரதத்வநிர்ணயம்செய்து ஆளவந்தாரென்று பெயர் பெற்றவராயுமுள்ள யாமுநாசார்யராலே விரசிதங்களான எட்டு க்ரந்தங்களில் அப்யர்ஹிதமான கீதார்த்தஸங்க்ரஹ மென்கிற க்ரந்தத்தின் யதாஶ்ருதமான அர்த்தத்தை, ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகனால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கும் ஸங்க்ரஹரக்ஷையை அநுஸரித்து யதாமதி ப்ரகாஶப்படுத்துகிறேன்.

கீதா ஶாஸ்த்ரத்தின் ப்ரதாநார்த்தத்தையும், மூன்று ஷட்கங்களின் அர்த்தங்களையும், பதினெட்டு அத்யாயார்த்தங்களையும், கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோக ஸ்வரூபங்களையும், அதிகாரி பேதம் முதலானவைகளையும் முப்பத்திரண்டு ஶ்லோகங்களாலே ஸங்க்ரஹிக்கத் திருவுள்ளங்கொண்டு, முதலில் மங்கள ஶ்லோகத்தாலே, ஸகலோபநிஷத் ஸாரபூதமான தத்வஹித ப்ரதர்ஶந பூர்வகமாகப் பரதத்வமான நாராயணனே கீதாஶாஸ்த்ரத்தின் ப்ரதாந ப்ரதிபாத்யார்த்த மென்கிறார்.



1-ஆ. ஸ்வதர்ம ஜ்ஞாந வைராக்ய ஸாத்ய பக்த்யேக கோசர: ।
நாராயண: பரம் ப்ரஹ்ம கீதா ஶாஸ்த்ரே ஸமீரித: ॥

ஸ்வதர்ம - ஸ்வீயமான தர்மங்கள்; ஶாஸ்த்ர விஹிதமான தம் தம் வர்ணாஶ்ரம தர்மங்கள். ஜ்ஞாந - ஜீவதத்வம் நாராயணனுக்கே ஶேஷமென்கிற ஜ்ஞாநம். வைராக்ய - பரமாத்மாவல்லாத வஸ்துக்களிடத்தில் ஆசையற்றிருக்கை. இந்தப் பதங்களினால் வைராக்யத்தோடுகூடிய கர்மயோக ஜ்ஞாநயோகங்கள் சொல்லித்தாயித்து. ஸாத்ய - இவைகளால் ஸம்பாதிக்கக்கூடிய. பக்த்யேகமோசர: - பக்தியொன்றுக்கே பலமாக விஷயமானவன்; அதாவது - தைலதாரைபோல நிரந்தரமாயும் ஸ்வயம்ப்ரீதிரூபமாயும் வைஶத்ய விஶேஷத்தாலே ப்ரத்யக்ஷத்திற்கு ஸமமுமான ஸ்ம்ருதித் தொடர்ச்சியாகிற பக்தியோகமொன்றாலேயே அடையத்தகுந்தவன். பரம்ப்ரஹ்ம - ஸர்வோத்க்ருஷ்டமான ப்ரஹ்ம பூதன். இதனால் குணலேஶ யோகத்தாலே ப்ரஹ்ம ஶப்த வாச்யங்களான ஜீவதத்வம் ப்ரக்ருதிதத்வம் முதலானவைகளின் வைலக்ஷண்யம் சொல்லப்பட்டது. நாராயண: - மற்றொருவருக்கும் பொருந்தாத நாராயணனென்கிற ஶப்தத்தால் சொல்லத்தகுந்தவன். கீதாஶாஸ்த்ரே - ஸர்வஜ்ஞனான க்ருஷ்ணனாலே கீதமாய் ஸர்வாநுஷ்டாந விதாயகமுமாய், “கீதாஸுகீதா கர்தவ்யா கிமந்யை: ஶாஸ்த்ரவிஸ்தரை:” என்று மஹர்ஷியால் ஶ்லாகிக்கப்பட்டதுமான கீதாஶாஸ்த்ரத்தில். ஸமீரித: - அஜ்ஞாந ஸம்ஶய விபர்யயமன்றிக்கே பரமப்ராப்யனென்றும், ப்ராபகனென்றும், ஸர்வகாரணனென்றும், ஸர்வரக்ஷகனென்றும், ஸர்வவேத வேத்யனென்றும், ஸர்வபாபமோசகனென்றும், ஸர்வ ஸமாஶ்ரயணீயனென்றும், பரம புருஷார்த்த பூதனென்றும் சொல்லப்பட்டான். இதனால், “நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:” இத்யாதி வாக்யங்களாலே ஸகல பர வித்யோபாஸ்ய நிர்ணயம் செய்கிற நாராயணாநுவாகத்தின் அர்த்தமே இந்தக்கீதா ஶாஸ்த்ரத்தின் முக்யமான அர்த்தமென்று சொல்லப்பட்டது.

இனி மூன்று ஶ்லோகங்களால் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் கீதா ஶாஸ்த்ரத்தின் மூன்று ஷட்கங்களுடைய அர்த்தங்களை ஸங்க்ரஹிக்கத் திருவுள்ளங்கொண்டு, முதலில் முதல் ஷட்கத்தின் அர்த்தத்தைப் பின்வரும் ஶ்லோகத்தால் ஸங்க்ரஹிக்கிறார்.

௨-ம். ஜ்ஞாநகர்மாத்மிகே நிஷ்டே யோகலக்ஷ்யே ஸுஸம்ஸ்க்ருதே।
ஆத்மாநுபூதிஸித்த்யர்த்தே பூர்வஷட்கேந சோதிதே॥

யோகலக்ஷ்யே - இங்கு யோகமாவது ஆத்மாவலோகநமாகிற சித்த ஸமாதி விஶேஷம். அதை லக்ஷ்யமாக உடையவைகளென்றால் தனக்கு ஸாத்யமான பலமாக உடையவைகள். ஸுஸம்ஸ்க்ருதே - நன்றாகப் பரிஷ்கரிக்கப்பட்டவைகள்; பரிஷ்காரமாவது - இவைகளைப் பரமாத்மாவே செய்து வைக்கிறானென்றும் அவன் ப்ரீதியே இவைகளுக்குப் பலமென்றும் தெரிந்துகொண்டு மற்றைப் பலங்களில் ஆசையற்று ப்ரவ்ருத்திக்கை. ஆத்மாநுபூதிஸித்த்யர்த்தே - ஜீவாத்மாநுபவரூபமான ஸித்தி விஶேஷத்தை ப்ரயோஜநமாக வுடையவைகள்; அதாவது - "ஸர்வகாமாந்" என்கிறபடி வைஷயிகாநந்த விலக்ஷணமாயும், இதரமான ஸமஸ்த பலங்களிலுமுள்ள ஆசையைப் போக்கடிக்கக்கூடியதாயுமுள்ள ஜீவஸாக்ஷாத்காரமென்கிற ஸித்தியைப் பலமாக உடைத்தாயிருக்கை. இப்படிப்பட்ட ஜ்ஞாநகர்மாத்மிகே நிஷ்டே - ஜ்ஞாந ஸ்வரூபமாயும் கர்மஸ்வரூபமாயு மிருக்கிற நிஷ்டைகள். அதாவது - பலம் கிடைக்கும் வரையில் ஸ்திரமாய்ப் பரிக்ரஹிக்கப்பட்டவைகளான கர்மயோக ஜ்ஞாநயோகமாகிற உபாயாநுஷ்டாநங்கள். பூர்வஷட்கேந சோதிதே - முதல் ஆறு அத்யாயங்களால் கர்த்தவ்யங்களென்று விதிக்கப்பட்டிருக்கின்றன. இதில் முதல் அத்யாயமும், "நத்வேவாஹம் ஜாது நாஸம்" என்கிற ஶ்லோகத்திற்கு முற்பட்ட இரண்டாவது அத்யாய ஶ்லோகங்களும் ப்ரக்ருதோபயுக்தங்களாகையால் இந்தக் கீதாஶாஸ்த்ரத்திற்குக் கடகங்களாக வ்யவஹரிக்கப்படுகின்றன. உ.

இரண்டாவது ஷட்கத்தில் பரப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாக்ஷாத் உபாயமான பக்தியோகம் சொல்லப்படுகிறது.



௩-ம். மத்யமே பகவத்தத்த்வ யாதாத்ம்யாவாப்திஸித்தயே।
ஜ்ஞாநகர்மாபிநிர்வர்த்யோ பக்தியோக: ப்ரகீர்த்தித:॥

மத்யமே - இரண்டாவது ஷட்கத்தில், பகவத்தத்த்வ - ஹேயப்ரத்யநீகமாயும் ஜ்ஞாநஶக்தி முதலான ஷாட்குண்ய பரிபூர்ண குண ஸமுத்ரமாயும் இருக்கிற பரதத்வத்தினுடைய, யாதாத்ம்ய - யதாவஸ்திதரூபத்தின். அதாவது - அபரிமிதமாயும் ப்ரஹ்மம்முதலானவைகளால் கல்பிதமல்லாமலு மிருக்கும்படியான ரூபத்தினுடைய என்றபடி. அவாப்திஸித்தயே அநுபவரூபமாகிற மோக்ஷப்ராப்தியின் ஸித்திக்காக, ஜ்ஞாநகர்மாபிநிர்வர்த்ய: - ஜ்ஞாந யோகத்தாலும் கர்மயோகத்தாலும் ஸாதிக்கக் கூடியதான, பக்தியோக: - பக்தியாகிற மோக்ஷோபாயம், ப்ரகீர்த்தித: - ஸ்வரூபத்தாலும், அங்கத்தாலும், விஷயத்தாலும், பலத்தாலும் உத்க்ருஷ்டமாகச் சொல்லப்பட்டது. ௩.

இதற்குமேல் மூன்றாவது ஷட்கத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹிக்கக் கருதி, அதில் தத்வஶோதகமான முதல் மூன்று அத்யாயங்களின் அர்த்தத்தைப் பூர்வார்த்தத்தாலும், அநுஷ்டாந விஶோதகமான மேல் மூன்று அத்யாயங்களின் அர்த்தத்தை உத்தரார்த்தத்தாலும் ஸங்க்ரஹிக்கிறார்.

௪-ம். ப்ரதாந புருஷ வ்யக்த ஸர்வேஶ்வரவிவேசநம்।
கர்மதீர்பக்திரித்யாதி: பூர்வஶேஷோ(அ)ந்திமோதித:॥

ப்ரதாந - மூலப்ரக்ருதியென்ன, புருஷ - ஜீவனென்ன, வ்யக்த - மஹத் முதலாகி ப்ருதிவீவரையிலான ப்ரக்ருதி விகாரங்கள், இவைகளுடன் கலந்துநிற்கும் தேவ திர்யக் மநுஷ்யர் முதலான சேதநர்கள், இவர்களுடைய ஸமுதாய ரூபமான ப்ரபஞ்சமென்ன, ஸர்வேஶ்வர - ஸர்வ நியந்தாவான பரதத்வமென்ன, விவேசநம் - இவைகளுக்குப் பரஸ்பரமுள்ள பேதத்தைக் காட்டும் தர்மத்தைக் கொண்டு இவைகளை வெவ்வேறாக அநுஸந்திக்கை; கர்ம - கர்மயோகமென்ன, தீ: - ஜ்ஞாநயோகமென்ன, பக்தி: - பக்தியோகமென்ன, இத்யாதி: - இவைகளை முதலாக வுடைய, பூர்வஶேஷ: - முற்சொல்லப்பட்ட இரண்டு ஷட்கங்களுக்கு

உபயுக்தமான விஷயங்கள், அந்திமோதித: - மூன்றாவது ஷட்கத்திற் சொல்லப்பட்டன. ௪.

இப்படி ஶாஸ்த்ரத்தின் முக்யமான அர்த்தத்தையும் மூன்று ஷட்கார்த்தங்களையும் நாலு ஶ்லோகங்களால் ஸங்க்ரஹித்து, மேல் பதினெட்டு ஶ்லோகங்களால் ப்ரத்யேகமாக அத்யாயார்த்தங்களைச் சொல்லக் கருதி முதல் ஶ்லோகத்தால் ப்ராக்ருத ஶாஸ்த்ரோபோத்காதரூபமான முதல் அத்யாயத்தினுடையவும், "ந த்வேவாஹம் ஜாது நாஸம்" என்கிற ஶ்லோக பர்யந்தமுள்ள இரண்டாவது அத்யாய ஶ்லோகங்களுடையவும் அர்த்தத்தை ஸங்க்ரஹித்துக் காட்டுகிறார்.

ஶ்லோ. அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலம் |
பார்த்தம் ப்ரபந்நமுத்திஶ்ய ஶாஸ்த்ராவதரணம் க்ருதம் ||௫.

அஸ்தாந - அஸமயத்திலுண்டான, ஸ்நேஹ - பந்துஸ்நேஹத்தாலும், காருண்ய - தயா விஶேஷத்தாலும் உண்டாயிருக்கிற, தர்மாதர்மதியா - க்ஷத்ரியனுக்குப் பரமதர்மமான யுத்தத்தில் அதர்ம புத்தியால், ஆகுலம் - வ்யாகுலமான மநஸ்ஸையும் புத்தியையும் ஶரீரத்தையுமுடையவனும், ப்ரபந்நம் - தர்மத்தை அறிந்துகொள்ளவேணுமென்கிற விருப்பத்தால் "ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று ஶரணமடைந்தவனுமான, பார்த்தம் - அர்ஜுநனை, உத்திஶ்ய - வ்யாஜீகரித்து (ஸமஸ்த லோகோஜ்ஜீவநார்த்தமாக), ஶாஸ்த்ராவதரணம் க்ருதம் - பரம நிஶ்ரேயஸத்திற்கு ஸாதகமான இந்த கீதாஶாஸ்த்ரம் ஆரம்பிக்கப்பட்டது. ௫.

இரண்டாவது அத்யாயத்தின் அர்த்தம் பின்வரும் ஶ்லோகத்தாற் சொல்லப்படுகிறது.

ஶ்லோ. நித்யாத்மாஸங்ககர்மேஹாகோசரா ஸாங்க்யயோகதீ: |
த்விதீயே ஸ்திததீலக்ஷா ப்ரோக்தா தந்மோஹஶாந்தயே ||

த்விதீயே - இரண்டாவது அத்யாயத்தில், நித்யாத்மா - நித்யனான ஜீவனையும், அஸங்ககர்மேஹா - பலம் முதலியவற்றில்



ஸங்கமற்றதாய் கர்மத்தில் முயற்சியையும், கோசரா - விஷயமாக உடையதும், ஸ்திததீலக்ஷா - ஸ்திதப்ரஜ்ஞதா ரூபமான ஜ்ஞாந நிஷ்டையைத் தன்னால் ஸாதிக்கத்தகுந்த பலமாக உடையதுமான, ஸாங்க்யயோகதீ: - ஜீவாத்மவிஷயமான புத்தியென்ன, கர்மயோகவிஷயமான புத்தியென்ன இவை யிரண்டும், [ஸங்க்யா என்றால் புத்தி, அதனால் நிர்ணயிக்கப்படுகையாலே ஜீவாத்மாவுக்கு ஸாங்க்யமென்று பெயர்], தந்மோஹஶாந்தயே - ஶோகத்தால் பீடிக்கப்பட்டவனும் தத்வத்தைத் தெரிந்துகொள்ளவேணுமென்கிற விருப்பத்தோடுகூடியவனுமிருக்கிற அர்ஜுநனுடைய தேஹாத்மப்ரமத்தை நிவ்ருத்திக்கும் பொருட்டு, ப்ரோக்தா - விஸ்தாரமாகச் சொல்லப்பட்டன; இங்கு இரண்டாவது பதத்தாற் சொல்லப்பட்ட ஸாங்க்ய யோகங்களுக்கு, முதற் பதமாகிற 'நித்யாத்மா ஸங்க கர்மேஹா' என்பது விஶேஷணமாகிறபடியால் வையர்த்த்ய தோஷம் இல்லை. ௬.

இதற்கு மேல் நாலு அத்யாயங்களாலும், இரண்டாவது அத்யாயத்திற் சொல்லப்பட்ட ஜீவாத்மதர்ஶநமே ஸாதநத்தோடு வெளியிடப்படுகிறது.

ஶ்லோ. அஸக்த்யா லோகரக்ஷாயை குணேஷ்வாரோப்ய கர்த்ருதாம் |
ஸர்வேஶ்வரே வா ந்யஸ்யோக்தா த்ருதீயே கர்மகார்யதா ||

அஸக்த்யா - ப்ரக்ருதி வ்யதிரிக்தமான ஸ்வர்க்காதி பலங்களில் ஆசை பண்ணாமே, லோகரக்ஷாயை - லோகத்தை ரக்ஷிக்கும்பொருட்டு - [இங்கு லோகத்தை ரக்ஷிக்கையாவது - ஜ்ஞாநயோகத்தில் ஶக்தனான தனக்குக் கர்மயோகத்தை அநுஷ்டிக்காமலிருப்பதில் பாதகமில்லாவிடினும், ஜ்ஞாநயோகத்திற்கு அஶக்தரான ஜநங்களும் "யத்யதாசரதி ஶ்ரேஷ்ட:" என்கிறபடி 'நாமும் கர்மயோகத்தை விட்டிருப்போம்' என்று எண்ணுமலிருக்கும்படி, தானும் கர்மாநுஷ்டாநம் செய்து அதனால் மற்றவர்களையும் கர்மாநுஷ்டாநம் செய்யும்படி செய்விக்கை. ஜ்ஞாநயோகத்திற்கு அஶக்தர் கர்மயோகத்தை விட்டு ஜ்ஞாநயோகத்தில் ப்ர

வ்ருத்தித்தால் நரகாநுபோக்தா வாவார்களன்றோ?] கர்த்ருத்வம் - தன்னுடைய ஸர்வகார்ய கர்த்ருத்வத்தையும், குணேஷு - ஸத்வ ரஜஸ் தமோ குணங்களில், ஆரோப்ய - ஆரோபணம்செய்து, [ஆரோபணமாவது - ஸர்வகார்யமும் ஸத்வம் முதலான குணங்களாற் செய்யப்படுகின்றன என்று எண்ணுகை.] ஸர்வேஶ்வரே - இந்தக் குணம் முதலான ஸர்வ வஸ்துக்களுக்கும் நியந்தாவான நாராயணனிடத்திலாவது, ந்யஸ்ய - முற்சொன்ன கார்யகர்த்ருத்வத்தை வைத்து, [ஸர்வேஶ்வரனிடத்தில் கர்த்ருத்வத்தை வைப்பதாவது - நாம் செய்யும் கார்யமெல்லாம் பகவததீநமென்று நினைக்கை.] கர்மகார்யதா - கர்மங்களுடைய அவஶ்யம் அநுஷ்டிக்கவேண்டும் தன்மையானது, த்ருதீயே உதிதா - மூன்றாவது அத்யாயத்தில் வ்யக்தமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. எ.

8-ம். ப்ரஸங்காத் ஸ்வஸ்வபாவோக்தி: கர்மணோऽகர்மதாऽஸ்ய ச।
பேதா ஜ்ஞாநஸ்ய மாஹாத்ம்யம் சதுர்த்தாத்யாய உச்யதே ॥

ப்ரஸங்காத் - ப்ரஸக்தாநுப்ரஸக்தியாலே, ஸ்வஸ்வபாவோக்தி: - வஸுதேவ புத்ரனாக அவதரித்தும் ஷாட்குண்ய பரிபூர்ணனான தன்னுடைய அஸாதாரண தர்மங்களைச் சொல்வதும், கர்மண: - கர்மத்தினுடைய, அகர்மதா - "கர்மண்யகர்ம ய: பஶ்யேத்" என்பதாற் சொல்லப்பட்ட ஜ்ஞாநாகாரத்தன்மையும், அஸ்ய - இந்தக் கர்மத்தினுடைய, பேதா: - பேதங்களும், [கர்மத்தினுடைய பேதங்களாவன - "தைவமேவாபரே யஜ்ஞம்" இத்யாதிகளிற் சொல்லப்பட்ட வர்ணாஶ்ரம தர்மங்களை அங்கமாகவுடையதும், ஜ்ஞாநத்திற்கும் ஶக்திக்கும் இச்சைக்கும் அநுகுணமாக அவ்வவ்வதிகாரிகளால் முக்யமாகப் பரிக்ரஹிக்கப்பட்டதுமான தேவார்ச்சநம், இந்திரிய நிரோதநம், ப்ராணாயாமம், யாகம், தாநம், தபஸ், தீர்த்தயாத்ரை, வேதாத்யயநம், வேதார்த்த சிந்தநம் இவை முதலானவைகள்.] ஜ்ஞாநஸ்ய - ஜ்ஞாநயோகத்தினுடைய, மாஹாத்ம்யம் - "ஶ்ரேயாந் த்ரவ்யமயாத்யஜ்ஞாத்" இத்யாதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் உத்கர்ஷமும், சதுர்த்தாத்யாயே - நான்காவது அத்யாயத்தில், உச்யதே - சொல்லப்படு

ன்றன. இவ்வத்யாயத்தில் பகவானுடைய அவதாரம் இந்த்ரஜாலம் போலன்றிக்கே ஸத்யமென்றும், அவதீர்ணனான பகவான் நம்மைப்போல ஸங்குசித ஜ்ஞாநவானன்றிக்கே ஸர்வஜ்ஞனென்றும், அவனுடைய திவ்யமங்கள விக்ரஹம் பாஞ்சபௌதிகமன்றிக்கே அப்ராக்ருதமென்றும், அவனுடைய ஜந்மம் புண்ய பாப ரூப கர்ம ஜந்யமன்றிக்கே தன்னுடைய இச்சா மாத்திரத்தால் உண்டாகிறதென்றும், அவனுடைய உத்பத்திகாலம் கர்மாதீநமன்றிக்கே ஜகத்தில் தர்மக்லாநி அதர்மாப்யுத்தாநம் முதலியவைகள் உண்டாகும் காலமென்றும், அவனுடைய ஜந்ம பலம் ஸுக துக்காத்யநுபவமன்றிக்கே ஸாது ஸம்ரக்ஷணமும் துஷ்ட நிக்ரஹமும் தர்ம ஸம்ஸ்தாபநமுமென்றும், இப்படி பகவஜ்ஜந்மாதிகள் ஸ்வரூபத்தாலும், விஶேஷணத்தாலும், த்ரவ்யத்தாலும், காரணத்தாலும், காலத்தாலும், ப்ரயோஜநத்தாலும் உத்க்ருஷ்டதமங்களென்று சொல்லப்படுகின்றன. இது "ஸ்வஸ்வபாவோக்தி" என்னுமிடத்தில் ஸ்வபாவ ஶப்தத்தால் விவக்ஷிதமான அர்த்தம். அ.

மூன்றாவது அத்யாயத்திற் சொன்ன கர்மயோகத்தின் ஸௌகர்ய ப்ரயுக்தமான உத்கர்ஷத்தை ஐந்தாவது அத்யாயத்திலும் கர்மயோகத்திற்கு இருக்கும் ஶீக்ரதையைக்கொண்டு நிரூபித்து, பிறகு கர்மயோகத்தைச் சேர்ந்த அகர்த்ருத்வாநுஸந்தாந ப்ரகாரத்தைச் சொல்லி, அதற்கு மூலமான ஜ்ஞாநமும் ஶோதிக்கப்படுகிறதென்பதை அடுத்த ஶ்லோகத்தால் ஸங்க்ரஹிக்கிறார்.

8-ம். கர்மயோகஸ்ய ஸௌகர்யம் ஶைக்ர்யம் காஶ்சந தத்விதா:।
ப்ரஹ்மஜ்ஞாநப்ரகாரஶ்ச பஞ்சமாத்யாய உச்யதே ॥ கூ.

கர்மயோகஸ்ய - கர்மயோகத்தினுடைய, ஸௌகர்யம் - ஸுலபமாகச் செய்யக்கூடுந் தன்மையும், ஶைக்ர்யம் - ஆத்மாவலோகந ஸாதந விஷயத்திலிருக்கும் ஶீக்ரதையும், காஶ்சந - சில, தத்விதா: - கர்மயோகத்தின் அங்கபேதங்களும், ப்ரஹ்மஜ்ஞாநப்ரகாரஶ்ச - ப்ரஹ்மத்திற்கு ஸமாநமான ஆகாரத்தையுடைய ஜீவன்களுடைய ஸமதர்ஶந ரூபமான ஜ்ஞாநத்தின் ரீதியும், பஞ்ச

அத்யாயே - ஐந்தாவது அத்யாயத்தில், உச்யந்தே - சொல்லப்படு கின்றன. ௯.

௧௦. யோகாப்யாஸவிதிர்யோகீ சதுர்தா யோகஸாதநம் ।
யோகஸித்திஃ ஸ்வயோகஸ்ய பாரம்யம் ஷஷ்ட உச்யதே ॥

யோகாப்யாஸவிதிஃ - ஜ்ஞாநயோக கர்மயோக ஸாத்ய மான ஆத்மாவலோகந ரூபமாகிற யோகத்தின் அப்யாஸவிதியும், (அதாவது - அநுஷ்டாந க்ரமமென்றபடி.) யோகீ சதுர்தா - யோகிகளுடைய நான்கு விதமான பேதங்களும், [இங்கு "ஸர்வ பூதஸ்தமாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி" இத்யாதியான ஶ்லோகங்களிற் சொல்லப்பட்ட ஸம தர்ஶந ரூபஜ்ஞாநம் நான்கு விதமாகப் பேதிக்கிறபடியால் யோகிகளும் அந்த ஜ்ஞாந பேதத்தால் நான்கு விதப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.] யோக ஸாதநம் - ஆத்மாவலோகநத்திற்கு ஸாதநமான அப்யாஸம் வைராக்யம் முதலியவை, யோகஸித்திஃ - யோகத்தின் ஸித்தி யும், [ஸித்தியாவது - யோகத்திலிருந்து நழுவினவனாகிற யோக ப்ரஷ்டனுக்கும் ப்ரத்யவாய மில்லாமை, புண்ய லோகப்ராப்தி, யோகிகளின் குலத்திற் பிறப்பு, 'ஆரம்பித்துச்செய்யப்பட்ட யோகம் பூர்த்தியாகாவிட்டாலும் நிஷ்ப்ரயோஜநமாகிறதில்லை' என்கிறபடி யால் பின்பு ஜந்மாந்தரங்களில் யோக பூர்த்தியால் மோக்ஷலாபம் முதலியவைகள்.] ஸ்வயோகஸ்ய - வாஸுதேவனுன தன்னு டைய யோகத்திற்கு, பாரம்யம் - அளவற்ற உத்கர்ஷமும், ஷஷ்டே உச்யதே - ஆறுவது அத்யாயத்திற் சொல்லப்படுகின்றன. கீதா ஶாஸ்த்ரத்தில் முதல் ஷட்கத்தில் ஜீவ யோகமும், இரண்டாவது ஷட்கத்தில் பகவத் பஜநரூப பக்தியோகமும் சொல்லப்படுகின்றன வென்பது நியதமானுலும், இங்கு இரண்டாவதிற் சொல்லப்படப் போகிற பக்தி யோகத்திற்கு ப்ரஸ்தாவநா ரூபமாக "யோகிநாமபி ஸர்வேஷாம்" என்கிற ஆறுவது அத்யாயத்தின் அந்திம ஶ்லோகத்தின் அர்த்தத்தில் நோக்காகையால் விரோத மில்லை. ௧௦.

(இன்னும் வரும்.)

இ. ரங்கநாதாசாரியர்.

ஶ்ரீஃ

# விஶிஷ்டாத்வைதம்.

## 4. கர்த்ருத்வ விசாரம்.

முந்தின ஸஞ்சிகையில் அவர தத்வத்திற்கும் பரதத்வத் திற்குமுள்ள ஶரீர ஶரீரி ஸம்பந்தம் விசாரிக்கப்பட்டது. அதா வது - அவரதத்வத்தின் ஸத்தையும் ஸ்திதியும் ஈஶ்வரனுடைய ஸ்வரூபாதீநங்க ளென்றும், அந்தக் காரணத்தாலே ஈஶ்வரனுக்குத் தாரகத்வமும் அவரதத்வத்திற்கு ஆதேயத்வமும் ஏற்படுகின் றனவென்றும்; அவரதத்வத்தின் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்தி இம்மூன்றும் ஈஶ்வரனுடைய ஸங்கல்பாதீநங்க ளென்றும், அந் தக் காரணத்தாலே ஈஶ்வரனுக்கு நியந்த்ருத்வமும் அவர தத்வ த்திற்கு நியாம்யத்வமும் ஏற்படுகின்றன வென்றும்; அவர தத்வம் முழுவதும் ஈஶ்வரனுக்கு ஒரு அதிஶயாதாயகமாக இருக்கிறதென்றும், அந்தக் காரணத்தாலே ஈஶ்வரனுக்கு ஶேஷித்வ மும் அவரதத்வத்திற்கு ஶேஷத்வமும் ஏற்படுகின்றன வென் றும்; இந்த ஸம்பந்தங்கள் அவர தத்வத்தின் ஸத்தையுள்ள கால மெல்லாம் ஸர்வாவஸ்தையிலும் இருக்கின்றனவென்றும், ஆகை யால் ஈஶ்வரனுக்கு ஶரீரித்வமும் அவரதத்வத்திற்கு ஶரீரத்வ மும் ஏற்படுகின்றனவென்றும் சொல்லப்பட்டது.

இந்த ஸம்பந்தத்தைச் சற்று நிதானித்து ஆலோசிக்குங்கால் சில ஶங்கைகளுக்கு அவகாசம் உண்டாகின்றது. அவை என்ன வென்றால் - அவரதத்வத்தில் அடங்கிய ஜீவன்கள் இவ்வளவு பராதீநங்களா? அவைகளுக்கு ஸ்வாதந்த்ரியம் என்பதே கிடையா தா? ஸத்தையிலும் ஸ்திதியிலும் அவர்கள் ஈஶ்வராதீநங்களாக இருந்தாலும், ப்ரவ்ருத்தியிலும் கேவலம் ஈஶ்வராதீநங்கள் தானோ? ஜீவன்கள் ஸ்வேச்சையாக ஸ்வபுத்தியாலே ஒருகார்யமும் செய்ய அஶக்தர்களா? அப்படி அஶக்தர்களாக இருந்து கேவலம் பொ ம்மைபோல ஈஶ்வரனால் ஆட்டிவைக்கப்படும் பக்ஷத்தில் 'இதைச் செய், இதைச் செய்யாதே' என்று ஜீவன்களைக் குறித்து ப்ரவ்

ருத்தித்திருக்கும் ஶாஸ்த்ரங்களின் கதி யென்ன? அவைகள் எல்லாம் நிரர்த்தகங்களா? அதர்மத்தைச் செய்தால் ஈஶ்வரன் ஶிக்ஷிக்கிறானென்றும் தர்மத்தைச் செய்தால் ஈஶ்வரன் அநுக்ரஹிக்கிறானென்றும் சொல்வதெல்லாம் வ்யர்த்தமாகிவிடுமே! மேலும் இவ்விதமாக ஒரு ஸித்தாந்தம் நிர்ணயம் செய்தால் அகார்யத்தைச் செய்யுமவர்கள் எல்லாரும் மஹத்தான அகார்யத்தைச் செய்துவிட்டு "நாங்கள் என்ன செய்வோம்? ஈஶ்வரன் செய்து கொண்டான்" என்று ஸித்தாந்தத்திற்கு ஒத்தே பேசமாட்டார்களா? லோகரக்ஷை எப்படி ஏற்படும்? லோகத்தின் நாஶத்தை விளைவிக்கும் இப்படிப்பட்ட ஸித்தாந்தமும் அங்கீகரிக்கக்கூடியதாகுமா? என்று இம்மாதிரியான ஶங்கைகள் அளவில்லாமல் உண்டாகின்றன. இவைகளைப் பற்றின யாதார்த்யத்தை கிஞ்சித் விசாரிப்போம்.

ஜீவன்களுக்கு ஸ்வாதந்த்ரியமில்லை யென்பது நமது ஸித்தாந்தத்தின் கொள்கையன்று. நமது ஸித்தாந்தம் சொல்லுகிறது என்னவென்றால் - புருஷோத்தமனும் அவாப்த ஸமஸ்த காமனும் ஸர்வஜ்ஞனும் ஸர்வேஶ்வரனும் ஸத்யஸங்கல்பனும் இருக்கிற பகவாந் 'இந்தக் கர்மங்கள் நல்லவை', 'இந்தக் கர்மங்கள் கெட்டவை' என்று கர்மங்களை இருவகையாகப் பிரித்து, அந்தக் கர்மங்களைச் செய்வதற்கு உசிதமான தேஹேந்த்ரியம் முதலானவைகளையும் அந்தத் தேஹேந்த்ரியங்களை நியமிக்கக்கூடிய ஶக்தியையும் எல்லா ஜீவன்களுக்கும் ஸாமாந்யமாகக் கொடுத்து, தன்னுடைய ஆஜ்ஞைகளைத் தெரிவிக்கக் கூடிய ஶாஸ்த்ரங்களையும் காண்பித்து, தானும் அந்தராத்மாவாக ஜீவன்களுக்குள் அநுப்ரவேஶித்து நிற்கிறான். ஜீவன்களோ வென்றால், ஈஶ்வராதீநமான ஶக்தியோடு கூடினவர்களாய் அவனால் கொடுக்கப்பட்ட கரண களேபரம் முதலியவைகளுடன் அவனை ஆதாரமாகக் கொண்டு, தாங்களே தங்களுடைய இச்சைக்கு அநுகுணமாகப் புண்யா புண்ய ரூபங்களாகிற கர்மங்களைச் செய்கிறார்கள். இப்படி கர்மங்களில் ப்ரவ்ருத்திக்கிற ஜீவன்களைப் பார்த்து, எவர்கள் தன்னுடைய ஆஜ்ஞையை அநுவர்த்தித்து நடக்கிறார்களோ அவர்களை ஈஶ்வரன் தர்மார்த்தகாமமோக்ஷங்களால் வ்ருத்தி செய்கிறான்; எவர்கள் தன்னுடைய ஆஜ்ஞையை மீறி நடக்கிறார்களோ அவர்களுக்கு விபரீதமான பலனைக் கொடுக்கிறான். இதுதான் நமது ஸித்தாந்தத்தின் கொள்



கை. அதாவது - கர்மங்களை அநுஷ்டிக்க வேண்டுவதான தேஹேந்த்ரியங்களைப் பெறுவதிலும், அவைகளை அடக்கிக்கொண்டு வரக்கூடிய ஶக்தியை உடைத்தாயிருப்பதிலும், அநுகூலமான கர்மங்கள் எவை ப்ரதிகூலங்கள் எவை என்பதைத் தெரிந்து கொள்வதிலும், ஜீவன்கள் கேவலம் ஈஶ்வராதீநங்கள். இப்படி ஜீவன்களுக்குக் கிடைத்திருக்கும் யோக்யதையைக்கொண்டு கர்மாவில் ஜீவன்கள் ப்ரவ்ருத்திக்கும் விஷயத்தில் அவர்கள் ஸர்வஸ்வாதீநர்கள்; ஸ்வேச்சையாகத் தங்கள் புத்தியைக்கொண்டே கார்யங்களைச் செய்கிறார்கள். ஆகையால், துஷ்கர்மாவைச் செய்தால் நிக்ரஹத்திற்குப் பாத்ரமாவதற்கும், ஸத்கர்மாவைச் செய்தால் அநுக்ரஹத்தைப் பெறுவதற்கும் ஜீவன்களுக்கு ந்யாயமுண்டு. 'இதைச் செய், இதைச் செய்யாதே' என்று ஜீவன்களைக் குறித்து ப்ரவ்ருத்தித்திருக்கும் ஶாஸ்த்ரங்களுக்கும் ஆநர்த்தக்யம் ஏற்படவில்லை. லோகரக்ஷைக்கும் யாதொரு ஹாநியு மில்லை. இவ்விதமாக ஜீவன்களுக்கு ஒரு அம்ஶத்தில் பாராதீநதையும் மற்றொரு அம்ஶத்தில் ஸ்வாதீநதையும் உண்டென்றே நமது ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. இப்படி ஒரு அம்ஶத்தில் இருக்கும் பாராதீநதையை விவக்ஷித்தே நமது ஸித்தாந்தம் 'ஜீவன்களின் ப்ரவ்ருத்தி ஈஶ்வர ஸங்கல்பாதீநம்' என்று சொல்லிற்று.

தவிரவும், இன்னும் கொஞ்சம் பரிஷ்கரித்துப் பார்க்குங்காலத்தில் முற்சொல்லப்பட்ட அம்ஶங்களைத்தவிர மற்றுமொரு அம்ஶத்திலும் ஜீவன்களுடைய ப்ரவ்ருத்திக்கு ஈஶ்வரப்ரயுக்தமான பாராதீநதை ஏற்படுகின்றதென்று தெரியவருகிறது. அது எப்படியென்றால் - ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் ஈஶ்வரன் அந்தர்யாமியாக அநுப்ரவேஶித்திருக்கிறானென்பது, நமது ஸித்தாந்தம். ஒரு ஜீவன், ஈஶ்வரனால் கொடுக்கப்பட்ட கரணகளேபரங்களைக்கொண்டும் அவனால் ஆஹிதமான ஶக்தியைக்கொண்டும் ஒரு கர்மாவிற் ப்ரவ்ருத்திக்குங் காலத்தில் முதல் முதலில் ஸ்வயமே ஸ்வபுத்தியாலேயே ஒருவனுடைய அநுமதியுமன்றி ப்ரவ்ருத்தித்தாலும், பிந்திய கர்மாவில் தனக்குள் அப்படி அநுப்ரவேஶித்த அந்தர்யாமியாக நிற்கும் ஈஶ்வரனுடைய அநுமதியைக் கொண்டே ப்ரவ்ருத்திக்கிறான். இப்படி ஜீவனுடைய ப்ரவ்ருத்தி ஈஶ்வரனுடைய அநுமத்யதீநமாக இருக்கிறபடியால், இந்த அம்ஶத்திலும் ஜீவனுக்குஞ் ஈஶ்வராபேக்ஷயா பாரதந்த்ரியம் உண்டு. ஆகையால்,

நிஷ்க்ருஷ்டமாகப் பலிக்கிறது என்னவென்றால் - ஜீவனுடைய ஸத்தை ஸ்திதி இவைகளுக்குத் தன் ஸ்வரூபத்தாலும் ஸங்கல்பத்தாலும் தான் காரணமாகி, அதுவழியாகத் தான் ஜீவன்களைக்குறித்துத் தாரகனாக நிற்கிறது தவிர, ஜீவன்களுக்கு ஸாமாந்யமாகத் தேஹேந்த்ரியம் முதலானவைகளைக் கொடுக்கிற காரணத்தாலும், அந்தர்யாமியாக நின்று ஜீவன்கள் கர்மாவில் ப்ரவ்ருத்திக்குங்காலத்தில் அநுமதியைக் கொடுக்கிற காரணத்தாலும், ஜீவன்களுக்கு ஈஶ்வர விஷயக பாரதந்த்ரியம் ஸித்திக்கிறது என்பதுதான்.

இப்படி ஜீவன்களுடைய ஸ்வாதந்த்ரியத்திற்கு அநேக ப்ரகாரத்தால் ஸங்கோசம் உண்டாகும் பக்ஷத்தில், அதை ஸ்வாதந்த்ரியம் என்று எப்படிச் சொல்லுகிறது? ஈஶ்வரனே கர்த்தாவென்றும், கர்ம பலன்களை அவனே அடைகிறானென்றும் சொல்வதற்கு இது துல்யமாகிவிடாதா? என்றுகேட்டால், அப்படி துல்யமாகாது. இவ்வள்வு ப்ரகாரங்களில் ஜீவன் ஈஶ்வராதீநமானாலும், ப்ரவ்ருத்தியில் தானே தன்னுடைய புத்தியைக்கொண்டு ஆரம்பிக்கத் திறமையுள்ளவனாக இருக்கிறான். ஒரு ப்ரவ்ருத்தியிலும் அவனை 'அப்படி ப்ரவ்ருத்திக்கக் கூடாது' என்று ஈஶ்வரன் தடுக்கிறதே இல்லை. இப்படி தான் ஸ்வதந்த்ரமாகச் செய்கிறபடியால், செய்யும் கர்மங்களின் பலன்களையும் தானே அடையத்தான் வேண்டிவரும். இதற்கு ஒரு நிதர்ஶநம்: ஒரு த்ரவ்யம் இரண்டு வ்யக்திகளுக்குப் பொதுவாக இருக்கிறது. அவர்களில் ஒருவன் மற்றொருவனுடைய அநுமதியைப் பெற்றுத் தன்னுடைய அம்ஶத்தை எடுத்து உபாயநமாகக் கொடுத்து ஒருராஜாவைக் கண்டால், அந்த ராஜாவின் ப்ரஸாதத்தால் உண்டாகும் பலம், முதலில் ப்ரவ்ருத்தனுக்குப் போகிறதேயொழிய அநுமந்தாவுக்கு வருகிறதில்லை; தநவிநியோகமாகிற கர்மாவுக்குக் கர்த்தாவும் அந்த ப்ரதம ப்ரவ்ருத்தன்தான், அநுமந்தாவன்று; அந்தக்கர்மப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ரியமும் அந்த ப்ரவ்ருத்தனுக்கு உண்டு. அதுபோலவே ஜீவன் கர்மாவில் ப்ரவ்ருத்திக்குங் காலத்தில் ஈஶ்வரனுடைய அநுமதியை வாங்கிப் பிரவ்ருத்தித்தாலும், அந்தக் கர்மாவிலிருக்கும் ஜீவனுடைய ஸ்வாதந்த்ரியம் அழியாது; அந்தக்கர்மாவுக்கு ஜீவன் கர்த்தா: அந்தக் கர்ம பலத்தை ஜீவன் அடையவேண்டியதுதான். மற்றொரு நிதர்ஶநம்: அநேக ஜநங்கள் சேர்ந்தே புரட்டக்கூடியதான ஓர் பெருத்த கல்லைப் புரட்டுவது, தேரை இழுப்பது முதலான



கார்யங்களில், கர்மகரர்களெல்லாரும் ஒரு அதிகாரி வஶமாக நின்று அவனுடைய அநுமதியின்பேரில் கர்மாவைச் செய்தாலும், செய்த கர்மாவைக்குறித்துக் கர்மகரர்கள் எல்லாரும் ஹேதுக்கள் என்றும், 'இதைச் செய்' என்கிற விதிக்கும், 'இதைச்செய்யாதே' என்கிற நிஷேதத்திற்கும் அவர்கள் பாத்ரமாகிறார்களென்றும் எப்படி ஒப்புக்கொள்ளுகிறோமோ, அப்படியே ஜீவன்கள் ஈஶ்வரன் அநுமதிக்குக் கீழ்ப்பட்டு நடந்தாலும், அவர்கள் செய்யும் கர்மாவைக் குறித்து அவர்களுக்குக் கர்த்ருத்வமும் உண்டு; விதி நிஷேத பாக்த்வமும் போகாது.

இப்பொழுது ஈஶ்வரன் ஜீவன்களுக்குள் அநுப்ரவேஶித்து ஜீவன்கள் செய்யும் ப்ரவ்ருத்திக்கு அநுமதியைக் கொடுத்து நியமநம் செய்கிறான் என்றும், அந்தக்காரணத்தால் ஈஶ்வரன் பரம கர்த்தாவானாலும் ஜீவனுக்குக் கர்த்ருத்வம் போகாதென்றும் சொல்லப்பட்ட விஷயத்தில், 'ஈஶ்வரன் அநுமதி கொடுக்கிறான்' என்றால் என்ன? 'அநுமதியைக்கொடுத்து நியமநம் செய்கிறான்' என்றால் என்ன? 'பாபகர்மாவைச் செய்யப்போகும் ஒரு ஜீவனுக்கு, அந்தக் கர்மாவிலிருந்து அந்த ஜீவனை நிவ்ருத்திப்பதில் ஸர்வ ஶக்தனாக இருக்கும் ஈஶ்வரன் அநுமதியைக் கொடுக்கிறான்' என்றால் ஈஸ்வரனுக்குத் தயை இல்லையென்றும், வைஷம்யம் உண்டு என்றும் ஏற்படாதா? இத்யாதியான ஶங்கைகள் உண்டாகலாம். இந்த ஶங்கைகளுக்கு ஸமாதாநம் தேடும்பொருட்டு 'அநுமதி கொடுக்கிறான்' என்கிற வாக்யத்தின் அர்த்தத்தைத் தெளிய விசாரிப்போம்.

உபேக்ஷகனாக இருக்குந்தன்மை, அநுமதி கொடுத்து அநுமந்தாவாக இருக்குந் தன்மை, ப்ரயோஜயிதாவாக இருக்குந் தன்மை ஆக மூன்று உண்டு. ஒருவன் ஒரு கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கும் பொழுது உதாஸீநனாக இருப்பதே, உபேக்ஷகனாக இருக்குந் தன்மை. ஒருவன் ஒருகார்யத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கும் பொழுது அவனை அதிலேயே இன்னும் ப்ரவ்ருத்தித்து நிற்கும்படி செய்கை, அநுமந்தாவாக இருக்குந் தன்மை. ப்ரவ்ருத்தியில்லாமலிருக்கும் ஒருவனை ஒரு கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்வது, ப்ரயோஜயிதாவாக இருக்குந் தன்மை. இம்மூன்றுவித அவஸ்தையும் ஈஸ்வரனுக்கு உண்டு. முதலில் ஒருஜீவன் ஒருகர்மாவில் இச்சித்து ப்ரவ்ருத்திக்கும்பொழுது ஈஸ்வரன் கேவலம் உபேக்ஷகனாகவே இருக்கிறான். பிறகு அடுத்தபடியாக ஜீவ

னுக்கு ஜநிக்கும் இச்சை ப்ரயத்நங்களில் ஈஶ்வரன் அநுமந்தாவாக இருக்கிறான்; அதாவது - ஒரு அபிமதமான கர்மாவில் ப்ரவ்ருத்தித்த ஒரு ஜீவன் ஏதாவது ஒரு விக்நத்தால் நிவ்ருத்தமாகும் பக்ஷத்தில், அந்த விக்நங்களை விலக்கி அந்தக் கர்மாவில் அந்த ஜீவனை மறுபடியும் ப்ரவர்த்திப்பிக்கிறபடியால், ஈஶ்வரன் அநுமந்தாவாகிறான். இப்படிக் கொஞ்சதூரம் கர்மாவில் ப்ரவ்ருத்தித்த ஜீவன் அதிமாத்ரம் அந்தக் கர்மாவில் ஸக்தமாகிவிடும் பக்ஷத்தில், அந்த ஜீவன் விஷயத்தில், அவனுடைய புண்ய கர்ம பாபகர்ம ப்ரவ்ருத்திக்குத் தக்கபடி தானே அவனை அநுக்ரஹிக்கிறதோ நிக்ரஹிக்கிறதோ தன்னை அடைவிக்கக்கூடியதான உத்க்ருஷ்டகப கர்மாக்களில் தானே அவனை மூட்டி அவைகளில் அதிமாத்ரம் ருசியை ஜநிப்பிக்கிறதோ, அல்லது தன்னை அடைவதில் விரோதிகளான அதோகதிக்கு ஸாதநங்களாக இருக்கும் நிக்ருஷ்ட கர்மாக்களில் தானே அவனை மூட்டி அவைகளில் ஊற்றத்தை உண்டு பண்ணுகிறதோ இது முதலானவைகளை ஈஶ்வரன் செய்கிறான்; இந்தக் காரணத்தால், அவன் ப்ரயோஜயிதாவாக ஆகிறான். ஆனால், இந்த ப்ரயோஜயிதாவாக இருக்குந் தன்மை, எல்லா ஜீவன்கள் விஷயத்திலும் நேராது. கர்மாவுக்கு யோக்யமான கரண களேபராதிகளைக் கொடுப்பது, ஈஶ்வரன் ஜீவன்களுக்குச்செய்யும் ஸாமாந்யமான உபகாரம்; ப்ரவ்ருத்தித்த ஜீவனைத் தான் அநுமந்தாவாக இருந்து ப்ரவ்ருத்திப்பிப்பதும், அதிமாத்ர ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்களிற் போனவர்களைத்தானே அததற்குத்தகுந்த இதரப்ரவ்ருத்திகளில் மூட்டி அநுக்ரஹிப்பதும் நிக்ரஹிப்பதும், ஈஶ்வரன் ஜீவன்களுக்குச் செய்யும் விஶேஷோபகாரங்கள். இந்த விஶேஷோபகாரங்கள் எல்லாம் ஜீவன் செய்த ப்ரதம ப்ரவ்ருத்தியின் பலமாகின்றன. ஆகையால், ஈஶ்வரன் அநுமதிகொடுக்குமிடத்தில் தயையற்றவனாக ஆகிவிடுகிறானென்றும், பக்ஷபாதியாக ஆகிவிடுகிறானென்றும் உண்டான ஶங்கைகளுக்கு அவகாசமில்லை. தன்னுடைய ஆஜ்ஞையை மீறிநடந்தவனை ஶிக்ஷிப்பது நிர்த்தயத்வமாகுமா? அப்படிப்பட்டவனை நிக்ரஹிப்பதே தயாளுவுக்கு அடையாளம். நிக்ரஹித்தாலொழிய அவன் நியந்தாவாகவும் கூடாது. இப்படி ஈஶ்வரன் தானே சில கர்மாக்களில் ருசியை உண்டுபண்ணித் தானே மூட்டிவிடுகிறபடியால், ஜீவனுக்குக் கர்த்ருத்வமே இல்லாமல் ஸ்வாதந்த்ரியஹாநி வந்துவிடுமோ வென்கிற ஶங்கையும்



வாராது. எப்படி ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரன் உபேக்ஷகனாக இருக்கும்பொழுது ஜீவன் ஸ்வதந்த்ரனோ, அப்படியே பிந்தின ப்ரவ்ருத்திகளிலும் ஜீவன் ஸ்வதந்த்ரனே. ஈஶ்வரன் அநுமந்தாவாகவும் ப்ரயோஜயிதாவாகவும் இருந்தபோதிலும், தன்னுடைய இச்சைப்படிக்கு ஜீவன் ப்ரவ்ருத்திப்பதில் ஒருவிதமான ஸாமர்த்யக்குறைவு ஏற்படவில்லை; ஒருவரும் தடைசெய்யவுமில்லை. அப்படிப்பட்ட ஸாமர்த்யக் குறைவன்றிக்கே ஒருவராலும் தடைப்படாமலிருப்பது தானே ஸ்வாதந்த்ரியம். இப்படிப்பட்ட ஸ்வாதந்த்ரியம் ஜீவனுக்கு எப்பொழுதும் உண்டு.

இப்படி ஈஶ்வரனுக்கு அநுமந்த்ருத்வம் இருக்கிறது என்று சொல்வதற்கு ப்ரமாணமென்ன? கேவலம் கல்பிதம் தானோ? என்று கேட்டால், கல்பிதமன்று; ஶ்ருதியே ப்ரமாணம். "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம்", "அந்தர்யாம்யம்ருத:", "ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி" இத்யாதியான கணக்கற்ற வாக்யங்கள் இருக்கின்றன. ஈஶ்வரன் உள்ளே சென்று ஜநங்களை ஶாஸித்துவருகிறானென்றும், அத்யக்ஷனாகவும் அநுமந்தாவாகவு மிருக்கிறானென்றும், ஈஶ்வரனே ஜநங்களை ஸத்கர்மாவையோ துஷ்கர்மாவையோ செய்விப்பிக்கிறானென்றும் ஶ்ருதிகள் சொல்லுகின்றன. இப்படிச் சொல்வதற்கு அர்த்தம் என்னவென்றால், ஈஶ்வரன் அநுமந்தாவாக இருந்து செய்விக்கிறான் என்பதே ஒழிய ஜீவனுக்குக் கர்த்ருத்வமன்றிக்கே தானே செய்துவிடுகிறான் என்பது அர்த்தமன்று. ஸ்பஷ்டமாக இருக்கும் ஶ்ருதிவாக்யத்திற்கு இவ்விதம் ஸங்கோசம் செய்யலாமோ வென்று கேட்டால் விதி நிஷேத ஶாஸ்த்ரங்களுக்கு ஆநர்த்தக்யம் வாராமலிருக்கும் பொருட்டு இந்த நியமநஶ்ருதிகளுக்கு ஒருவிதமான ஸங்கோசம் அபிமதமே, இப்படி ஸங்கோசம் செய்வது ந்யாய விரோதமாகாது என்பதுதான் ப்ரத்யுத்தரம்.

ஆகையால், இந்தக் கர்த்ருத்வ விஷயமாக நமது ஸித்தாந்தம் சொல்லுகிறதாவது:—

(1) ஜீவனுக்கு எவ்வித ப்ரவ்ருத்தியிலும் ஸ்வாதந்த்ரியமுண்டு.

(2) ஜீவன், அப்படிப்பட்ட ஸ்வாதந்த்ரியத்தை முன்னிட்டுக் கர்மாவில் ப்ரவ்ருத்திக்கிறபடியால், அந்தக் கர்ம பலத்திற்குப் போக்தாவாகிறான்.

(3) ஆனால், ஜீவனுக்கு இருக்கும் கர்த்ருத்வம் ஈஸ்வராதீநம்.

(4) இந்த அதீநதை மூன்று காரணங்களால் உண்டாகின்றது:—(i) ஈஸ்வரன் தனக்கு ஆதாரனாக இருக்கிறபடியாலும், (ii) ஈஸ்வரனிடமிருந்து தான் தன்னுடைய ப்ரவ்ருத்திக்கு உசிதமான கரணகளேபரங்களைப் பெறுகிறபடியாலும், (iii) ஈஸ்வரன் தனக்கு அநுமந்தாவாக இருக்கிறபடியாலும், இந்த மூன்று காரணங்களாலும் ஜீவனுக்குப் பாரதந்த்ரியம் உண்டாகின்றது.

(5) இந்தப் பாரதந்த்ரியம் ஸ்வதஸ்ஸித்தமாக இருக்கும் ஸ்வாதந்த்ரியத்திற்கு விருத்தமன்று.

(6) ஜீவனுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஸ்வரன் கேவலம் உபேக்ஷகனாக இருந்து, பிறகு அநுமந்தாவாகவும், சில ஜீவன்கள் விஷயமாய் ப்ரயோஜயிதாவாகவும் ஆகிறான்.

(7) இப்படி அநுமந்தாவாகவும் ப்ரயோஜயிதாவாகவும் ஈஸ்வரன் இருப்பது, அவனுடைய தயாளுத்வகுணத்திற்கும் நிஷ்பக்ஷபாதித்வ குணத்திற்கும் விருத்தமன்று. தான் அநுமந்தாவாக இருந்து ஜீவனை ப்ரவர்த்திப்பிப்பது ப்ரதம ப்ரவ்ருத்திகளின் பலதாரரூபமே ஒழிய வேறில்லை.

(8) ச்ருதிகளும், இம்மாதிரியான அநுமந்த்ருத்வமும் நியந்த்ருத்வமும் ஈஸ்வரனுக்கு இருப்பதாகவே சொல்லுகின்றன.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ பாகவத தனிஸ்லோகீ.

(தொடர்ச்சி.)

௪௭. நிவ்ருத்ததர்ஷைருபகீயமாநாத் பவௌஷதாச்
ச்ரோத்ரமநோऽபிராமாத் । க உத்தமச்லோககுணாநுவாதாத்
புமாந் விரஜ்யேத விநா பசுக்நாத் ॥

இப்படி இந்தப் பகவச்சரித்ரம் நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் மிகவும் ஆதரணீயமென்று உபபாதித்து, பிறகு ஸம்ஸாரிகளில் முமுக்ஷுவுக்கும் அவச்யம் ஆதரணீயமென்கிறார். பவௌஷதாத் - ஸம்ஸாரத்திற்கு மருந்தாயிருக்கிற.

"இதுகாண் மின்னன்னைமீர்இக் கட்டுவிச்சி சொற்கொண்டு நீர்;
எதுவானும் செய்தங்கோர் கள்ளு மிறைச்சியும் தூவேன்மின்,
மதுவார் துழாய்முடி மாயப்பிரான்கழல் வாழ்த்தினால், அதுவே
இவளுற்ற நோய்க்கும் அருமருந்தாகுமே."

என்றபடியே ஸம்ஸாரமாகிற நோய்க்கு மருந்து விதித்திருக்கிறது. இதுகாண்மின் - நான் சொல்லும் பரிஹாரம் கைகண்டது; அதை ப்ரத்யக்ஷமாய் நீங்களும் அநுபவிக்கலாம் கிடீர். அன்னைமீர் - தாய்மார்களே! தாயார்களென்றால் பிள்ளைகள் வார்த்தையைக் கேளாதொழியவேணுமோ? "யுக்தியுக்தம் வசோ க்ராஹ்யம் பாலாதபி சுகாதபி" என்று யுக்திக்குப் பொருந்தியிருந்தால் சிறுபிள்ளைகளிடத்திலிருந்தும் கிளியினிடத்திலிருந்தும் வார்த்தையை க்ரஹிக்கவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவோ? இக்கட்டுவிச்சி - இவளுடைய வேஷத்தைப் பார்த்தும் வார்த்தையைக் கேட்க வேண்டியிருந்ததோ உங்களுக்கு? "வெந்தாரென்பும் சுடுநீறும் மெய்யிற்பூசி" என்கிறபடியே காணிலுமுருப்பொலாரான தேவதாந்தரங்களுடைய விஷயங்களான

எலும்புமாலை தொடக்கமானவற்றைத் தரித்துக் கொண்டிருந்த இவள் வேஷத்தைக் கண்டீர்கோளோ? இச்சொல் என்று அந்வயிப்பது முண்டு. அப்பொழுது கட்டுவிச்சி என்றால் - என்ன உசிதத்தைச் சொன்னாளாகில் அதுவுமில்லை; செவிக்கினிய கீர்த்தியையுடைய தேவதாந்தரங்களுடைய ஸ்துதியைப் பண்ணிக்கொண்டிருக்கும்படியைக் கேட்டால் “மாலையணங்கி அவன் பெருமை, பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல” என்று உதாஸித்துப்போகவேண்டியது போக்கிக் கர்த்தவ்யமென்றும் தோற்றிற்றோ? என்றபடி. நீர் - “செய்யாதன செய்யோம்” என்றும், “மேலையார் செய்வனகள் வேண்டுவன” என்றும் பெரியோர்களுடைய அநுஷ்டானத்தையே முக்கியமாய் அங்கீகரித்த நீங்கள். எதுவானும் செய்து - “ஏழாட்காலம்பழிப்பிலோம் நாங்கள்” என்கிற அந்தப் பெரியோர்களுடைய அநுஷ்டானத்திற்கும், “உன்னித்து மற்றொரு தெய்வம் தொழா ளவனையல்லால்” என்கிற நம்முடைய பாரமைகாந்த்யத்திற்கும், “ப்ரஹ்மாணம் ஶிதிகண்டம் ச யாஶ்சாந்யா தேவதா: ஸ்ம்ருதா: - ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்” என்கிற ப்ரமாணங்களுக்கும் விருத்தமாய்த் தேவதாந்தரங்களை உத்தேசித்து வ்ருதாவாக ஜந்துஹிம்ஸை முதலான வ்யாபாரங்களைச் செய்து என்றபடி. இது தோஷபஹுளமாயும் தனக்கு இதன் பேர் சொல்வது கூட அஸஹ்யமாயுமிருந்தபடியால், ‘எதுவானும்’ என்று சொல்லுகிறது. அங்கு - “நிக்ருஹீதேந்த்ரியக்ராமோ யத்ர யத்ர வஸேந்நர: - தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிஶம் புஷ்கரம் ததா” என்கிறபடி ஜிதேந்த்ரியனான பகவத்யாநபரன் வஸிக்குமிடம் குருக்ஷேத்ரம் முதலான புண்யபூமியென்று சொல்லியிருக்கிறபடியால, அப்படிப்பட்ட ஸத்வோத்தரரான பாகவதர் வஸிக்கும் க்ருஹத்தில், ஓர் கள்ளுமிறைச்சியும் தூவேன்மின் - வாயாலே பெயர் சொல்வதற்கும் அஸஹ்யமான மத்பத்தையும் மாம்ஸத்தையும் சுணங்கையெறிய வேண்டா மென்றபடி. ஆனால் செய்யவேண்டியதென்னவெனில், சொல்லுகிறார் :—மது - தேனை, வார் - பெருக்காநிற்கிற, துழாய் - திருத்துழாயை, முடி - ஶிரஸ்ஸில் உடையவனை. இதனால் காணிலுமுருப்பொலாரான தேவதாந்தரங்களுடைய வைரூப்யத்திற்கு எதிர்த்தட்டாயிருக்கும் போக்யதா ப்ரகர்ஷத்தை விவ



க்ஷித்தபடி. “தாழ்சடையும் நீண் முடியும்” என்று அருளிச்செய்வார்களிறே. அவனுடைய போக்யதை நெஞ்சிற்பட்டால் அஸ்தாநபயஶங்கிகளாய் மங்களாஶாஸநம் செய்யவன்றோ அடுப்பதென்று தாத்பர்யம். மாய - ஆஶ்சர்யபூதனை, குணங்களாலும் சேஷ்டிதங்களாலும் ஆஶ்சர்யபூதனென்றபடி. ‘அவனுடைய குணசேஷ்டிதங்களை அநுஸந்தித்தால் வாயார வாழ்த்தாதிருக்கப்போமோ?’ என்று கருத்து. பிரான் - மஹோபகாரகன். இதனால், “பேணிலும் வரந்தரும் மிடுக்கிலாததேவர்” என்கிறபடியே, ஸர்வாநிஷ்டநிவ்ருத்திபூர்வக ஸர்வேஷ்ட ப்ராபகன் அவன் என்று சொல்லிற்றாய்த்து. “தாயிருக்கும் வண்ணமே உம்மைத் தன் வயிற்றிருத்தி உய்யக்கொண்டான், போயிருக்க மற்றிங்கோர் புதுத் தெய்வம் கொண்டாடும் தொண்டீர் பெற்ற, தாயிருக்க மணைவெந்நீராட்டுதிரோமாட்டாத தகவற்றீரே” என்றார்களிறே பகவதுபகாரத்தை அநுஸந்தித்தவர்கள். அவனுடைய, கழல் - திருவடிகளை, வாழ்த்தினால் - ஸ்தோத்ரம் செய்தால். ஸ்தநந்தய ப்ரஜை தாயார் ஸ்தநங்களிலல்லாது வாய்வைக்க அறியாதாப்போல இவர்கள் பகவத் விஷயத்திலு மடிபிடித்தன்றோ இழிவது. இங்கு வாழ்த்தினால் என்கிறது, வாழ்த்துகை தான் துர்லபமானபடியை நினைத்து; “நாக்கு நின்னையல்லாலறியாது” என்று இவர்கள் நாக்கு பகவத்குண கீர்த்தநமல்லாதது அறியாதாப்போலவே, ஸம்ஸாரிகள் நாக்கு விஷயாந்தர குணகீர்த்தந மல்லதறியாதென்பதைக் காண்பிக்கிறது. “பண்டுகாமரான வாறும் பாவையர் வாயமுத முண்டவாறும் வாழ்ந்தவாறு மொக்க வுரைத்திருமி” என்றன்றோ இவர்கள் அந்திமதசையைக் கழிக்கிறபடி. பகவத் ப்ரவணனாயிருப்பானொருவன் ஶ்ரமதசையிற் கிடந்தானாகில் “சோர்வினால் பொருள் வைத்ததுண்டாகில் சொல்லு சொல்லு என்று சுற்றமிருந்து”, “தாயொருபக்கம் தந்தையொருபக்கம் தாரமொருபக்கம் அலற்று”வார்கள்; அத்தனைபோக்கி இவன் படுகிற ஶ்ரமத்திற்குப் பரிஹாரமாகத் திருநாமத்தைச் சொல்லுவாரைக் கண்டிலோமே இஸ்ஸம்ஸாரத்தில். கூரத்தாழ்வான் அந்திமதசையில் ஶ்ரமத்தினால் வருந்திக் கிடக்க, அப்பொழுது உடையவர் அவரைக் கடாக்ஷிக்க எழுந்தருளிநிற்க, கூரத்தாழ்வானும் இவர்திருவடிகளைப் பிடித்திருக்க, உடையவர் கடாக்ஷித்தருளி, அவர் செவியில் த்வயத்தை உபதேசித்தாராம்; அப்பொழுது ஸேவித்திருந்த முதலிகள் ‘இப்படி

இந்தத்தசையில் உடையவர் திருவாக்கால் மந்த்ரோபதேஶம் பண்ணுவதாகிற ஶ்லாக்யமான ப்ரயோஜநம் நமக்குக் கிடைப்பது அரிதாகில் நாம் செய்வதென்?' என்று கலங்கி நிற்க, அப்பொழுது உடையவர் முதலிகளைக் கடாக்ஷித்தருளி அவர்கள் திருவுள்ளத்தை அறிந்து 'ஆழ்வான் ப்ரக்ருதி அறியீர்களோ? நாக்கொட்டிக்கிடக்கிற இவனுக்குக் கர்ப்பூரமும் கண்டசர்க்கரையு மிட்ட மாத்திரமன்றோ? இது, நாம் இவனுக்கு மோக்ஷோபாயமாகச் செய்ததல்ல' என்று ஸமாதாநம் செய்தருளினாராம். அதுவே அவனுடைய திவ்ய ரூப குண சேஷ்டிதங்களுடைய அநுஸந்தாநத்தால் பிறந்த ப்ரீதிக்குப் போக்கு வீடாகவும், அவன் செய்த உபகாரங்களுக்கு க்ருதஜ்ஞதாநுஸந்தாநமாகவும் அவஶ்ய கர்த்தவ்யமாக ப்ராப்தமுமான திருநாம ஸங்கீர்த்தநமே யென்றபடி. இவள்உற்ற நோய்க்கு - பகவத் விஶ்லேஷத்தாலல்லது மற்றெவ்விதத்தாலும் நோவுபடாத ப்ரக்ருதியையுடைய இவள் அடைந்த நோய்க்கு. பரதாழ்வானுடைய வ்யாதியைப்போலவேயிறே இவளுடைய நோயும். ஶ்ருங்கிபேரபுரத்தில் குஹப்பெருமான் பெருமாளுடைய த்ருணஶயநத்தைக் காட்ட அதைக்கண்டு மோஹித்துக் கிடந்த பிள்ளையை ஸ்ரீ கௌஸல்யா தேவியார் "வத்ஸ வ்யாதி நஷ்டே கஷ்டம் ஶரீரம் பரிஶோஷயதே" என்று கேட்டாளிறே. 'நோய்க்கும்' என்கிறவிடத்தில் 'உம்' என்பதை 'அருமருந்துமாகுமே' என்று கூட்டுவது. அரு - அருமையான, துர்லபமான; அதாவது - ஶ்லாக்யமான வென்றபடி; "அச்யுதாநந்த கோவிந்த நாமோச்சாரண பேஷஜாத் | நஶ்யந்தி ஸகலா ரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம் ||" என்று சொல்லப்பட்டதிறே. மருந்துமாகுமே - ஸாதநமுமாய் ஸ்வயம் ப்ரயோஜநமுமாய் போக்யதமமுமாய் அவஶ்யகர்த்தவ்யமுமான பரிஹாரமுமா யிருக்குமென்றபடி. இப்படி ஸம்ஸார ரோகத்தைத் தீர்க்கும் மருந்தாயிருக்கிறபடியால், முமுக்ஷுக்களுக்கு அவஶ்யாதரணீயமென்று சொல்லப்பட்டது.

இனி ஸம்ஸாரத்தைப் பூண்கட்டிக்கொள்ள விருப்பமுள்ள புபுக்ஷுக்களுக்கும் குணாநுவர்ணநம் ஆதரணீய மென்கிறது, 'ஶ்ரோத்ர மநோஹராய:' என்னும் பதம். காதுகளுக்கும் மனத்திற்கும் இனிதாயிருக்கிற - "செவிக்கின்பமாவதுவும் செங்கண் மால் நாமம்", "ஶ்ரோத்ர பூஷணாம் வாணீம்" என்கிறபடியே



ஶப்தத்தைக் கேட்ட மாத்திரத்தால் தென்றலும் சிறுதிவலையும் பட்டாற்போல, ஶப்தம் பட்ட விடத்தே ரஸித்திருக்கை. அர்த்தம் தெரிந்த பிறகு ஜநிக்கும் ப்ரீதி விஶேஷத்தைச் சொல்லுகிறது, 'மநோஹராய:' என்னும் பதம்; "மனத்துக்கினியானை" என்றார்களிறே.

இவ்வளவு நன்மைபகவத் குணாநுகீர்த்தநத்திற்கு உண்டாகில் அங்ஙனே ஏத்தார்களோ? அப்படிக் கண்டிலோமே யென்ன, அருளிச்செய்கிறார், 'உத்தமஶ்லோக குணாநுவாதாத்' என்பதனால். "உத்தமை: ஶ்லோக்யதே" என்று வ்யுத்பத்தி செய்து-நம்மில் ஜ்ஞாந ஶக்த்யாதிகளால் உத்கர்ஷம்பெற்ற ப்ரஹ்மாதிகளால் ஸ்துதிக்கப்பட்டவன் என்று அர்த்தம் சொல்லலாம். "வானவர் தம்மையாளுமவனும் நான்முகனும் சடைமுடியண்ணலும், செம்மையாலவன் பாதபங்கயம் சிந்தித்தேத்தித் திரிவரே" என்று சொல்லப்பட்டதிறே. உத்தம: ஶ்லோகோ யஸ்ய என்று வ்யுத்பத்திசெய்து - சிறந்த புகழுடையவன் என்றும் அர்த்தம் சொல்லலாம். "பத்யே யஶஸி ச ஶ்லோக:" என்கிற நிகண்டுவால் 'ஶ்லோக' என்னும் பதத்திற்கு - புகழ் என்று அர்த்தம் கிடைக்கிறது.

"ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது உன்னடியார்க்கென்செய்வ னென்றே யிருத்தி நீ - நின்புகழில், வைகுந்தன் சிந்தையிலும் மற்றினிதோ நீ யவர்க்கு, வைகுந்தமென்றருளும்வான்" என்றார்களிறே.

செங்கண்மால் - ஆஶ்ரிதர் விஷயத்தில் வாத்ஸல்யாதிஶயத்தாலே சிவந்த கண்களையுடைய ஸர்வேஶ்வரனே, யான் உரைப்பது ஒன்றுண்டு - 'ஸர்வஜ்ஞனான எனக்கு நீர் சொல்லவேண்டியது முண்டோ?' என்ன, 'இந்த விஷயத்தில் அந்யதா க்ரஹணம் பண்ணின உமக்கு யதாவத் க்ரஹணம் பண்ணின நான் சொல்லுவது ந்யாய்யங்காணும்' என்ன, 'நான் பண்ணின அந்யதா க்ரஹணமேது?' என்ன, அருளிச்செய்கிறார்: உன்னடியார்க்கென் செய்வனென்றே யிருத்தி நீ - நிரபேக்ஷரான ஆஶ்ரிதர்க்கு என்ன செய்யக்கடவோமென்று எண்ணியிருக்கிறாய் நீ; ஶரணாகதையான த்ரௌபதிக்காக, "மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்தவர்களையே மன்னராக்கி" என்கிறபடி துஶ்ஶாஸநன் தொட்டு

மூக்கையால் தூஷிதமாய் அதுமுதல் 'துஸ்ஸாஸநவத மானாலொழிய முடிகிறதில்லை' என்று ப்ரதிஜ்ஞை பண்ணிவைத்த த்ரௌபதியின் மயிர்களை முடிப்பித்தும், நூற்றுவரை வெல்வித்து இவளுடைய பர்த்தாக்களையே ஆதிராஜ்யத்தில் முடிசூட்டியும், தௌத்யஸாரத்யாதிகளைச் செய்தும், "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் - ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்ப்பதி" - 'அருகே நிற்கிற பர்த்தா வென்று பெயர் பெற்றவர்களைத் தஞ்சமாக நினையாதே பெருந்திரளில் லஜ்ஜா பயங்களை விட்டு மஹாவிஸ்வாஸபூர்வகமாய் என்பெயரைச் சொல்லிக்கூப்பிட்டாளே த்ரௌபதீ, அது மேல்மேலும் வட்டியிட்டுக் கொண்டிருக்கிற கடன் போல என்னுடைய மனத்தை விட்டுப்போகிறதில்லை' என்றன்றோ சொல்லியிருக்கிறாய். 'ஆனால், வஸ்து ஸ்திதிதான் எது?' என்று கேட்டால், நின்புகழில் வைகுந்தன் சிந்தையிலும் மற்று இனிதோ-நீ அவர்களுக்குக் கொடுக்கப் போகிறதாக நினைத்திருக்கும் பரமபதம் அவர்கள் உன்னுடைய குணாநுஸந்தாநத்திற் செலுத்திய சிந்தையிற்காட்டில் ஸுகமாயிருக்குமோ? என்றபடி. "இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றன்றோ பகவத்குணாநுஸந்தாந ரஸிகர்களின் பாசுரமிருக்கும்படி. க்ஷீரஸமுத்ரத்தின் கரையில் குடியிருக்குமொருவன் பாலுக்காகப் பாத்திரத்தைக் கையிலேந்தி இடையன்வீட்டைத் தேடிச்செல்வனோ? உத்தமஸ்லோக குணாநுவாதத்தின் ரஸத்தை அறியாதவனன்றோ அப்படித்தேடிப் போவன் என்று கருத்து.

(இன்னும்வரும்.)

சே. நரஸிம்ஹாசாரியர்.

# கடிதங்கள்.

## 1. திருப்புல்லாணி ஸ்ரீ அஹோபிலமடம்.

ஸ்ரீவேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

மதுரை ஜில்லாவுக்குத் தெற்கிலிருக்கும் ராமநாதபுரம் என்னும் ஜில்லாவில் தர்ப்பஸயநம் அல்லது திருப்புல்லாணி [திருப்புல்லணை] என்னும் ஒரு திவ்யதேசம் இருக்கிறது. திருவணையாத்திரைபோகிற ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் தர்ப்பஸயநம் போய் ஸ்ரீராமபிரானையும் பத்மாஸநித்தாயாரையும் மனம் ஆர ஸேவிக்காமல் திரும்பிவருகிறதில்லை. சிலர், திலஹோமம், நாகப்ரதிஷ்டை, ஸர்ப்பஸாந்தி முதலிய காம்ய கர்மாக்களை அந்த ஸ்தலத்தில் விசேஷமாகச் செய்கிறார்கள். அமாவாஸ்யை, க்ரஹணம் முதலிய புண்யகாலங்களில் அவ்விடத்தில் சேரும் ஸ்ரீவைஷ்ணவஸங்கம் மிகப் பெரிதாகவே இருக்கும். இப்படிப்பட்ட திவ்ய தேசத்தில் ஸேவார்த்திகளாய் வரும் ப்ராணிகளுக்குத் தங்கியிருக்க ஸந்நிவேஸமும், ஸ்நாநாதிகளுக்குத் தீர்த்தமும் மிகவும் துர்லபமாக இருக்கிறது.

இந்தக் குறைவுகளை உத்தேசித்தும், ஒரு ஸமயம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மன் அவ்விடம் எழுந்தருளும்படியிருந்தால் அப்பொழுது சேரக்கூடிய அஸௌகர்யங்களை உத்தேசித்தும், சில ஸ்ரத்தாளுக்களான ஸ்வாமிகள், மற்றை முக்ய ஸ்தலங்களிற்போலவே அவ்விடத்திலும் ஸ்ரீ அஹோபிலமடம் ஒன்று ஏற்படவேண்டுமென்று எண்ணி அதன் அநுக்ரஹத்திற்காகப் பூர்வம் எழுந்தருளியிருந்த ஸ்ரீ திருக்குடந்தை ஜீயரை ப்ரார்த்தித்தார்கள். அந்த ஸ்வாமி அந்தப் பிரார்த்தனையை அங்கீகரித்து அடியில் விவரித்திருக்கும் ஸ்ரீமுகங்களிற் கண்டபடி அந்தக் கைங்கர்யத்தின் ஆவஸ்யகதையை அநுமோதித்து அந்தக்கைங்கர்யத்தை நிர்வஹித்துப் பார்ப்பதற்காகச் சில ஸ்வாமிகளை ஏற்படுத்தி, தாமும் ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து ரூ. 100—0—0 கொடுக்கும்படி நியமித்ததும் தவிர, 'ஸிஷ்யர்களும், மற்றும் உபகரிக்கக்கூடிய ஸ்ரீ வைஷ்ணவர்களும் இவ்விஷயத்தில் ஸஹாயம் செய்ய வேண்டும்' என்று ஸ்ரீமுகமும் அருளிச்செய்திருக்கிறார்.

மேற்சொன்னபடி நியமிக்கப்பட்ட அந்த ஸ்வாமிகள், இந்தக் கைங்கர்யத்தில் ப்ரவ்ருத்தித்து, 1908-ம் வருஷம் ஆகஸ்டுமாஸம் 6-ம் தேதியில் திருப்புல்லாணித் தேரடி வீதியில் சிறியதொரு க்ருஹத்தை ரூ. 200-க்கு க்ரயம் வாங்கினார்கள். அக்காலத்தில் அது விஷயமாக அவர்கள் ஸ்ரீ ஸந்நிதிக்குப் போய்த் திருக்குடந்தை ஸ்வாமியால் ஸ்ரீமுகத்திற் காணப்பட்டிருக்கும் ரூ. 100-ம் கிருபைசெய்யவேணுமென்று கேட்டதாகவும், என்ன காரணத்தினாலேயோ அந்தப் பணம் கொடுக்கப்படவில்லையென்றும் தெரிய வருகிறது. ஆனால், ஸ்ரீ அழகிய சிங்கருக்கு இந்த ஸமாசாரம் எட்டியதோ,

இல்லையோ அது சொல்ல ஸாத்யமில்லை. எட்டியிருக்கும் பக்ஷத்தில் அந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கு மென்றே எண்ணுகிறோம்.

தவிரவும், மதுரை ராமநாதபுரம் ஜில்லாக்களில் இருக்கும் ஸிஷ்யர்களில் வ்யாபகர்களெல்லாரும், இந்தக் கைங்கர்யத்தில் அந்வயித்து, என்ன ஸ்ரமம் சேர்ந்தாலும் அதைப் பூர்த்திசெய்துவைக்க வேணு மென்று ப்ரார்த்திக்கிறோம். அப்படிப் பூர்த்திசெய்து வைத்தால், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளத்திற்கு உகப்பாகவேயிருக்கும்.

சித்தூர்,
21-7-11. } ஸி. ராஜகோபாலாசாரியர்.

## இது விஷயமாக ஸ்ரீ அழகியசிங்கர் நியமித்த ஸ்ரீமுகங்கள்.

(i.)

பராபவ௵ கார்த்திகை௴ 7௳.

திருப்புல்லாணி யென்கிற மஹா திவ்யதேசத்தில் ஸ்ரீ அஹோபிலமடம் கட்டுவதற்காகத் திருப்புல்லாணி நபாடி ஸ்ரீநிவாஸாசாரியரை நியமித்திருப்பதால், ஸ்ரீ வைஷ்ணவர்கள் முதலான எல்லாரும் தங்கள் ஸக்திக்குத் தக்கபடி உபகரித்து, ஷை கைங்கர்யத்தைப் பூர்த்தி பண்ணிவைக்கவேணும். ஷை கைங்கர்யத்திற்காக ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது ரூ. 100.

ஸ்ரீ ஸம்கோவஸ்ரீ :

(ii.)

இப்பால் நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கு அநேக திவ்ய தேசங்களில் மடம் இருக்கிறது. அதனால், அந்தந்தத் திவ்ய தேசங்களில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருந்து ததீயாராதநம் முதலானவைகள் நடப்பிக்கிறதற்கு நிரம்பவும் அநுகூலமாக இருக்கிறது. புராண ப்ரஸித்தமாயும், ஸ்ரீ ஆழ்வார் உகந்தருளின திவ்யதேசமாயு மிருக்கிற மதுரைஜில்லா திருப்புல்லாணி யென்கிற திவ்யதேசத்தில் நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கு ஒருமடம் ஏற்பட்டால், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அந்தத்தேசத்திற்கு எழுந்தருளும்போது அந்தமடத்தில் எழுந்தருளியிருந்து ததீயாராதநம் முதலானவை நடத்துவதற்கு ஸௌகர்யமாக இருப்பதுடன்கூட, அந்தத் திருப்புல்லாணியென்கிற திவ்யதேசம் திருவணைக்குப் போகிற மார்க்கமாக இருப்பதால், திருவணைக்குப் போய் வருகிறவர்கள் எல்லாரும் அந்த மடத்தில் இறங்கி இரண்டொருநாள் வஸித்து அந்தத் திவ்யதேசத்து எம்பெருமானை ஸேவித்துக்கொண்டு வருவதற்கும் அநுகூலமாக இருக்கும். அந்த ப்ரதேசத்திலிருந்து ஸந்நிதிக்கு வருகிறவர்கள் எல்லாரும், "திருப்புல்லாணி என்கிற திவ்யதேசத்தில் நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கு ஒரு மடம் அவசியம் ஏற்படவேணும்" என்று நிரம்பவும் சொல்லுகிறார்கள். எல்லாத் திவ்யதேசங்களிலும் மடம் இருப்பதுபோல அந்தத் திருப்புல்லாணியிலும் நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கு ஒரு மடம் அவசியம் இருக்கவேணு மென்று நமக்கும் தோன்றி யிருக்கிறது. அந்தமடம் கட்டுவதில் திருவணை யாத்ரிகர்கள் எல்லாரும் இரண்டொருநாள் வஸிப்பதற்கு அநுகூலமாக விசாலமுண்டாம்படி கட்டவேணும். அந்தக் கைங்கர்ய விஷயமாய் ஏற்கெனவே திருப்புல்லாணி நபாடி ஸ்ரீநிவாஸாசாரியரிடம்



ஒரு ஸ்ரீமுகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் தாம் ஒருவராகவே ப்ரவேஸித்து நடத்துவதிலுள்ள அஸௌகர்யத்தை நினைத்து ப்ரவ்ருத்திக்காமலிருக் ததாக நமக்குத் தோன்றினபடியால், அவருக்கு ஸஹாயமாக இப்பொழுது திருப்புல்லாணியிலிருக்கும் எளமனூர் - நடாதூர் சங்கரம்பாடி கிருஷ்ணமா சாரியர், திருப்புல்லாணி ஜகந்நாத ஐயங்கார் இவர்கள் இரண்டு பெயரையும் அந்தத் திருப்புல்லாணி மடம் கட்ட வேண்டிய கைங்கர்யத்தை வ்யாபரித்து நடத்தும்படியாய் நியமித்திருக்கிறோம். திருப்புல்லாணி திவ்யதேசத்தில் மடம் கட்ட வேண்டிய கைங்கர்ய விஷயத்தில் நீங்களெல்லாரும் விசேஷ அபிமாநம் வைத்து அவரவர்கள் சொந்தத்திலும், வேண்டியவர்களுக்குச்சொல்லியும் அந்தக்கைங்கர்ய விஷயத்தில் த்ரவ்ய ஸஹாயம் பண்ணி அந்தக் கைங்கர்யம் சீக்கிரத்தில் பூர்த்தியாகும்படி செய்ய வேணும். இந்தப்படி அநுக்ரஹித்து அநுப்பின ஸ்ரீமுகம்.

பிலவங்க௵
மார்கழி௴, 8௳ }
நரஸிம்ஹபுரம். ஸ்ரீ ஸம்கோவஸ்ரீ :

## (2) பாகவத தர்மம்.

பாகவத தர்ம விஷயமாக அடியேன் பூர்வம் விஜ்ஞாபநம் செய்து கொண்டதற்கு ஸ்ரீமாந் புத்தன்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர் க்ருபையாகப் பதில் நியமித்திருக்கிறதைப் பற்றி க்ருதஜ்ஞனாக இருக்கிறேன். ஆனால், அந்த ஸ்வாமி ஸாதித்திருப்பதில் மிதஜ்ஞனாக இருக்கும் அடியேனுக்கு இன்னும் இரண்டொரு ஸங்கை ஜநிக்கின்றன. அவையாவன :—

(i.) பாகவத ஸப்தார்த்த மென்ன? கேவலம் வாக்கினாலும் காயத்தினாலும் பகவத் ஸம்பந்தம் பெற்றதாகச் சொல்லிக்கொண்டும் பாவித்துக் கொண்டு மிருக்குமவரைப் பாகவதராக அடியேன் க்ரஹிக்கவில்லை. மனத்தினால் அகார்ய ஸதத்தை த்யாகம் செய்து கொண்டு, வெளியில் மாத்திரம் வைஷ்ணவவேஷத்தைத் தரித்திருப்பவர்களைப்பற்றி ப்ராக்ருத சர்ச்சை ப்ரவ்ருத்திக்கவில்லை. அப்படி மனத்தின் பரிபாகத்தை அடையாதவர்கள் விஷயத்தில் "[illegible]" என்கிற (புத்தன்கோட்டகம் ஸ்வாமி ஸாதித்திருக்கும்) வாக்யம் நன்றாக அந்வயிக்கும் என்பதை அடியேன் ஒப்புக்கொண்டவன்தான். ஸஜாதீயராக இல்லாமலிருந்தாலும் அப்படிப்பட்ட மநঃ பரிபாக மற்றவர்கள்விஷயத்தில் தாத்ருஸ ஸ்மரணம் செய்யலாமென்பது அடியேனுடைய கொள்கை. பாகவத ஸப்தத்தால் அடியேன் க்ரஹித்திருப்பது என்னவென்றால் - மநோ வாக் காயங்கள் மூன்றினாலும் பகவத் ஸம்பந்தம் பெற்றவன். ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரத்தில் ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச் செய்திருக்கும் லிங்கங்கள் யாரிடம் இருக்கின்றனவோ, ஸேஷத்வாநுஸந்தாநத்தைப் பரிபூர்ணமாகச் செய்து ஜ்ஞாநதார்ட்யத்தைக் குறைவற எவன் பெற்றிருக்கிறானோ, ஆழ்வாராதிகள்போலப் பகவத்குண சேஷ்டிதங்களையே த்யாநித்து அநுபவித்து ப்ரபஞ்சத்தில் மெய்மறந்து எவன் அலைந்து திரிகிறானோ, அந்தப் பாகவதவிஷயமாகத்தான் இந்த விசாரம் ஆரம்பித்தது.

கேவலம் டம்பத்திற்காகத் தாமும் ப்ரபந்நரென்று சொல்லிக்கொள்ளும் பேர்கூட்டு உபாயாநுஷ்டாந பாவனையைச் செய்து கொண்டு, தத் ப்ரயுக்தமான ஒரு அஹம்பாவத்தை அடைந்திருக்கும் போலிப்பாகவதர்களைப்பற்றி இந்த விசாரம் ஆரம்பிக்கவில்லை. இதுதான் அடியேன் பாகவத பதத்தால் க்ரஹித்த அர்த்தமென்பது, அடியேன் ஏற்கெனவே ஸ்ரீபாகவதத்திலிருந்து எடுத்துச்சொல்லியிருக்கும் "ஸர்வபூதேஷு ய: பச்யேத் பகவத்பாவமாத்மந: । பூதாநி பகவத்யாத்மந்யேஷ பாகவதோத்தம:" இத்யாதி வாக்யங்களால் நன்கு விளங்கும். இப்படிப்பட்ட ஜ்ஞாநியாகிற பாகவதனைக்கூட உத்தம குலப்ரஸூதனன்று என்கிற காரணத்தால் திரஸ்காரம் செய்யவேண்டியது தானோ? அவர்களுடைய தர்மங்களும் க்ரியாலோபி தானோ? 'அவர்கள் தேவகார்யங்களுக்கும் பித்ரு கார்யங்களுக்கும் விவாஹாதி ஸம்பந்தங்களுக்கும் வந்திலோர்களே' என்கிற பேச்சுக்கு அவகாசமேயில்லையே!

(ii.) ஏதோ ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தை அறியாமல் அடியேன் ஸ்ம்ருதி ப்ரமாணமான வாக்யங்களை யதார்த்தார்த்த க்ரஹணம் செய்து விட்டதாக ஸ்வாமி அபிப்ராயப்பட்டிருக்கிறார். அப்படிக்கு இல்லை. ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தை ப்ரயோகித்தே இந்த அநுமாநம் அடியேனுக்குக் கிடைத்தது. "ப்ரஹ்மக்ஷத்ரவிசாம் சூத்ராணாம் ஸ்வவைகமும் ஸாம்ப்ரதாய வ ஸர்வ... ஸ்த்ரீசூத்ராதாமஸேவாந் ஜந்மவேஷு வாதவேந" என்கிற வாக்யம், சூத்ர ஸாமாந்யத்தைக் குறித்து ப்ரவ்ருத்தித்த வாக்யம்: "...ஹீநஜாதிப்ரபவோ ... ஸ்ரீசோ ஸபக்திஸ்ஸ வக்தி - ஸர்வ ... யமாநுஜ." என்பது ஏதாத்ருச பக்தி விசிஷ்டரான ஹீநஜாதியரைப் பற்றி விசேஷித்துச் சொன்ன வாக்யம். ஆகையால், இதில் சொல்லியிருக்கும் அர்த்தத்திற்கு ஸங்கோசம் செய்ய யாதொரு காரணமும் தெரியவில்லை, ஸ்வாமி ஸாதிக்கிறபடி பக்தர்களுடைய உத்க்ருஷ்டத்தைச் சொல்லும் வாக்யமெல்லாம் ஸாமாந்ய வாக்யமெனவும், ஹீநஜாதியரை நிரஸிக்கும் வாக்யமெல்லாம் விசேஷ வாக்யமென்றும் ஒப்புக்கொள்ள அடியேனுக்கு ந்யாயமொன்றும் தெரியவில்லை. அப்படிக்கு ந்யாயமிருந்தால் "ஜ்ஞா" பதத்திற்கு ஸ்வாமி செய்த ஸங்கோசத்தை அங்கீகரிக்க ஸித்தமாக இருக்கிறேன்.

(iii.) 'ஹீநஜாதீயருக்குப் பக்தியால் ஜ்யைஷ்ட்யத்தை ஒப்புக்கொண்டால் அவர்களுக்கு ஆலய நிர்மாணம் முதலியவை ப்ரஸங்கிக்கும்' என்று ஸ்வாமி பயப்பட காரணமென்ன? அந்த ப்ரஸங்கம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அபிமதமான ப்ரஸங்கமா? ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸம்ப்ரதாயம் அதை ஒப்புக்கொள்ளவில்லையா?

இவைமுதலான சங்கைகளுக்கு ஸ்வாமி ஸமாதாநம் ஸாதிக்கும்படியாக இருக்குமென்று ப்ரதீக்ஷித்திருக்கிறேன்.

ஓர் வைதிகர்.

ஸ்ரீ:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸத்வம் ஸவந ... ஸ்தைந்யவாஹ ... ஸத்வம் தசைவ
பிதயா ... வாஜ்ய: - ஸாயாஸனே ... ஸரீஸ ...
ஜம்தா ... விசேஷ ஹேது: ॥

"ஹே வரத! முந்திக் கஜேந்த்ரமோக்ஷகாலத்தில் எப்படிப்பட்ட திவ்ய ரூபம் தேவரீருக்கு இருந்ததோ, அப்படிப்பட்ட (ஆர்த்தருடைய ஸம்ரக்ஷணத்தையே பலமாக உடைத்தாயிருக்கும்) திவ்ய ரூபம் இப்பொழுதும் இருக்கின்றது; வாங்மனஸ்ஸுக்கு எட்டாமலிருக்கிற வேகத்தோடு கூடிய கருடனும் தேவரீரைவிட்டு விலகவில்லை; இப்பொழுது திருக்கைகளில் காணப்படும் ஸுதர்சநத்திற்கும் யாதொரு மழுங்கலும் ஏற்படவில்லை; ரக்ஷணத்தைத்தேடுகிற நாங்களும் கஜேந்த்ரனைப்போல அநந்ய சரணர்களே; தேவரீருக்கு ஸ்வாபாவிகமாக இருக்கும் வைஷம்யாபாவம் இப்பொழுதும் இருக்கின்றது: இவ்விதமாக விபூதியெல்லாம் நிறைந்திருக்கையில், 'முந்திக் கூப்பிட்டது யானை, இப்பொழுது கூப்பிடுகிறவன் நரன்' என்பது, தேவரீர் ஔதார்யத்தை ஹரிக்க ஒரு விசேஷ ஹேதுவாகுமோ?"

ரக்ஷிதாவி னுடைய விபூதி பௌஷ்கல்யம்.

என்றன்றோ ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் கதறினது. அம்மாதிரி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிகளை ஆச்ரயித்த ஜநங்களெல்லாரும் கதறுகின்றார்களே! இப்பொழுது அர்ச்சா ரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன், பூர்வத்தில் தர்மஸம்ஸ்தாபநம் செய்துகொண்டுவந்த லக்ஷ்மீந்ருஸிம்ஹனைவிட வேறு? இப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆராதித்து வரும் அழகிய

சிங்கர் ந்ருஸிம்ஹனால் அங்கீகரிக்கப்பட்டு 'தர்மக்லாநி ஸம்பவிக்காமல் அணைகோலவேண்டும்' என்று நியமநம் பெற்ற ஸதாசாரியரன்றோ? ஸம்ஸார நோயால் வருந்தும் ஜீவன்கள்பக்கல் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு இருக்கும் தயைக்குத்தான் ஏதாவது குறைவுண்டோ? இப்படி ஸகல விபூதிக்கும் குறைவறப் பூர்த்தி ஏற்பட்டிருக்கையில், எவ்விதமான விசேஷ ஹேது இருந்து இப்பொழுது ஸம்பவிக்கும் தர்மக்லாநியை உபேக்ஷித்து நிற்கும்படி செய்கின்றது? 'ப்ரதி க்ராம நகரம் ஸஞ்சரித்து, ஆஸ்ரித ஜநங்களுக்கு உஜ்ஜீவந உபாயங்களைச் செய்துகொண்டு விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி செய்துவாரும்'' என்றன்றோ அழகிய சிங்கர்நியமந மிருக்கின்றது? அந்த நியமநத்திற்குப் பங்கம் வரும்படி பார்த்திருப்பானேன்? ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு ஸஞ்சாரம் நேர்ந்து எவ்வளவோ ஸம்வத்ஸரங்கள் ஆகிவிட்டதே! அநேக இடங்களில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குச் சொந்தமாக இருக்கும் சொத்தெல்லாம் அந்யாக்ராந்தமாகப் போய்விட்டதே. அநேக இடங்களில் சொத்துக்களிலிருந்து ந்யாயமாகக் கிடைக்க வேண்டிய வருமானமெல்லாம் குறைந்து விட்டது. அநேக இடங்களில் சொத்து நிர்ணயமே ஏற்படாமலிருக்கின்றது. இவையெல்லாவற்றையும் பராமர்சித்துச் சீர்திருத்தும்பொருட்டு லௌகிக ஸாமர்த்யமுள்ள ஓர் அதிகாரியை நியமிக்கவேண்டுமென்று ஸ்ரீ ஸ்வாமியிடம் விஜ்ஞாபநம் செய்து கொண்டால் அந்த விஜ்ஞாபநம் ஸபலமாகாமற் போய்விடுகிறதே! ஸ்ரீ ஸ்வாமிக்கு வார்த்தகப்ரயுக்தமாக, ஆஸ்ரித ஜநங்களுக்குத் திருவிலச்சினை, மந்த்ர மந்த்ரார்த்த ப்ரதிபாதநம் முதலிய உஜ்ஜீவநோபாயங்களைச் செய்ய அஸக்தி ஏற்பட்டால், தகுந்த ஸ்வாமிகளைக்கொண்டு அவைகளைச் செய்து வரும்படி ஸ்ரீ ஸ்வாமிக்கு ஏன் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தோற்றத்தை உண்டுபண்ணக்கூடாது? காரணஸாமக்ரி பூர்ணமாக இருந்தும் கார்யம் பலிக்காவிட்டால் ஏதோ பலீயஸ்ஸான ப்ரதிபந்தகமிருந்து கார்யத்தைப் பலிக்கவொட்டாமல் தடுத்துக்கொண்டிருக்கிறதென்றே சொல்லவேணும். இந்த விஷயத்தில் அப்படிப்பட்ட ப்ரதிபந்தகம் ஆஸ்ரித ஜநங்களுடைய தௌர்ப்பாக்யமே ஒழியவேறொன்றுமில்லை.



"[illegible] '' என்று சாதகபக்ஷிபோல நாமும் எம்பெருமானுடைய க்ருபா கடாக்ஷ வர்ஷத்தை எதிர்பார்த்திருப்போம்.

**விவாஹத்தைப்பற்றிய ஓர் சட்டம்.**

இந்த இந்தியா ராஜாங்கத்துப் பெரிய ஆலோசனை ஸபையின் அங்கத்தினரில் ஒருவராகிய ஸ்ரீமாந் பூபேந்த்ர நாத் பாஸு என்னும் பங்காள தேசத்துப் பிரபு ஒருவர், விவாஹத்தைப்பற்றி ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் ஒரு சட்டத்தில் கொஞ்சம் சீர்திருத்தம் செய்ய ப்ரயத்நப்பட்டுவருகிறார். நமது தேசத்தில் வெகுகாலமாக வழங்கிவரும் சட்டங்கள், ஸாஸ்த்ரத்திற்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் ஒத்து நடக்கும் விவாஹங்களைத்தான் அங்கீகரிக்கின்றன. ஏதாவது ஒரு விவாஹம் அஸாஸ்த்ரீயமென்றாவது அந்த வழக்கத்துக்கு விருத்தமென்றாவது ஏற்பட்டுவிட்டால், அந்த விவாஹத்தால் உண்டாகும் ப்ரஜைகளுக்கு நம்முடைய சட்டம் தாயபாகம் கொடுக்கிறதில்லை. இந்த ஸ்திதி ''ப்ராஹ்மர்கள்'' என்று கூறப்படும் (ஹிந்து மதத்தை விட்டு விலகிநிற்கிற) சிலஜநங்களுக்குப் பாதகமாக இருந்தபடியால், சென்ற 1872-ம் வருஷத்தில் அவர்களுடைய விவாஹத்திற்கு ஸாஸ்த்ர விருத்ததை இருந்தாலும் ப்ராமாண்யத்தைக் கொடுத்து ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அது, சில மதஸ்தர்களைக் குறிப்பிட்டு 'அவர்களைத்தவிர மற்றவருக்குத்தான் இந்தச்சட்டம் அந்வயிக்கும்' என்று சொல்லுகிறது. அப்படிக் குறிப்பிடப்பட்டவர்களில் ஹிந்துக்கள் அந்யதமர்களானபடியால், ஹிந்துக்களுடைய விவாஹம் ஸாஸ்த்ர ஸம்மதமாக இருந்தாலொழிய ப்ரமாணமாகாது. இப்பொழுது அந்த ஹிந்துக்களிலேயே சிலர், விவாஹ ஸம்பந்தமான ஸாஸ்த்ரக்கட்டுப்பாட்டை உபத்ரவகரமாக எண்ணி, அந்த நிர்ப்பந்தத்தை நிவ்ருத்தி செய்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன்பேரில் ஸ்ரீ. பூபேந்த்ரநாத் பாஸு என்பவர், இம்மாதிரியான சீர்திருத்தத்தைச் செய்விப்பிக்க யத்நித்திருக்கிறார். அவருடைய யத்நம் ஸபலமானால் விவாஹத்தைப்பற்றிய சட்டம் பின்வருமாறு நிற்கும்:—

பிந்ந ஜாதியானாலும் பிந்ந மதஸ்தரானாலும் ஒரு புமானும் ஒரு ஸ்த்ரீயும் ஏகமத்யத்துடன் "நாங்களிருவரும் பதிபத்நிகளாக இருக்க ஸம்மதித்திருக்கிறோம்" என்று ஒரு ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் ஒப்புக்கொண்டுவிட்டால், அவர்களுடைய விவாஹத்தை ப்ரமாணமென்று சட்டம் அங்கீகரித்துவிடும். வைதிக க்ரியைகளாவது ஜாதிப்ரயுக்தமான நிர்ப்பந்தங்களாவது நியாமகங்களில்லை. அப்படி ஏற்பட்ட விவாஹத்தால் ஜநிக்கும் ப்ரஜைகளுக்குத் தாயபாகத்திற்குப் பாத்யமுண்டு. இப்படிச் சட்டத்தை மாற்றுவதில் அநேக குணங்களிருந்தபோதிலும் வர்ண ஸாங்கர்யம் ஏற்படுமென்பதில் ஆக்ஷேபமில்லை. வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டிருக்கும் ஹிந்துக்களுக்கு வர்ண ஸாங்கர்யம் பெருத்த தோஷமானதால், இந்தச் சீர்திருத்தம் ந்யாய விருத்தமென்றே நமக்குத் தோன்றுகின்றது. இதைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் நன்றாக விசாரிப்போம்.

**திருக்குறுங்குடி சிஷ்ய ஸபை.**

சென்ற மாஸத்தில், திருநெல்வேலி ஜில்லா திருக்குறுங்குடி என்னும் திவ்யதேசத்தில் ஸந்நிதி சிஷ்யர்களில் அநேகர் ஒன்று சேர்ந்து சிஷ்ய ஸபை யொன்று ஏற்படுத்தியிருக்கிறதாக ஸமாசாரம் கேட்டு நிரம்பவும் ஸந்தோஷப்படுகிறோம். இம்மாதிரியாகவே மற்றை இடங்களிலும் ஆஸ்திகர்களெல்லாரும் ஶ்ரத்தையெடுத்துக்கொண்டு ஒன்று சேர்ந்து ஸபைகளை ஏற்படுத்த வேண்டுமென்று அஸ்மதாதிகளுடைய ப்ரார்த்தனை. ஸ்ரீவைகுண்டம் தாசில்தாராகிய ஸ்ரீமாந் வி. எஸ். சேஷாத்ரி ஐயங்கார் இந்தத் திருக்குறுங்குடி ஸபைக்குக் காரியதரிசியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். அவருடைய ஶ்ரத்தையும் பரிஶ்ரமமும் அந்தச் சபைக்கு அபிவ்ருத்தியை உண்டாக்கி அதுவழியாகப் பொதுச்சபைக்குப் பெரிய அவலம்பமாகுமென்று நம்புகிறோம்.

---


# பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் செவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழேகண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. |
|---|---|---|---|---|
| 5 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 6 முதல் 8 வரை |
| 5 | ,, | 3 | ,, | 7 ,, 9 ,, |
| 6 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 8 ,, 9 ,, |
| 6 | ,, | 3 | ,, | 9 ,, 12 ,, |
| 7 | ,, | 3 | ,, | 10 ,, 13 ,, |
| 8 | ,, | 3 | ,, | 12 ,, 15 ,, |
| 9 | ,, | 3 | ,, | 14 ,, 16 ,, |
| 10-12 | ,, | 3 | ,, | 15 ,, 20 ,, |
| 15-16-18 | ,, | $2\frac{1}{2}$-3, சேலைகள் | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் செவப்பு, ரோஸ், ஊதா நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

## பீதாம்பர பட்டுசேலைகள்.

16 முழம் நீளம் $2\frac{1}{2}$-அகலம் விளிம்பு. முந்தி ஜரிகை பூவேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். நயம் சேலை 1-க்கு ரூ. 30 முதல் 200 வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30 வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ. 35 முதம் 300 வரை. மட்டம் ரூ. 25 முதல் 30 வரை.

## ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும் உடலிலும் ஜரிகைபூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ 2 முதல் ரூ. 15 வரை கிடைக்கும்.

## பட்டுதுப்பட்டாக்கள்.

6 முதல் நீளம் $2\frac{1}{2}$ முதல் அகலம் விளிம்பு முந்தி ஜரிகைவேலைகளும் உடலில் ஜரிகைபூக்கள் போட்டதும். மட்டம் ரூ. 7 முதல் 15 வரை நயம் 15 முதல் 50 வரை.

## காஷ்மீர் சால்வைகள்.

கம்பிளி (Woolen) காஷ்மீர் சால்வைகள் 6 முழம் $2\frac{1}{2}$ அகலம் விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் மூலையில் மாங்காய் போட்டது. மட்டம் ரூ. 9 முதல 15 வரை, நயம் 15 முதல் 100 வரை.

சகலபட்டு பீதாம்பர காட்லாகு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—மானேஜர்

பட்டு பீதாம்பரகம்பெனி, காசி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
15 SEP 1911
MADRAS.

## ப்ருங்காமலக தைலம்.

மனத்திற்கு மிருந்த க்லேஸத்தைச் சொலிக்குமளவு கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களுக்கு இந்தத் தைலம் கிரம்ப ஆநுகூல்யத்தைச் செய்யும். தேஹத்திலிருக்கும் உஷ்ணுதிக்யத்தை ஸமனம் செய்து மனத்திற்கு ஒரு ஆஹ்லாதத்தை உண்டுபண்ணுவதுடன், புத்திக்குத் தெளிவையும் நிதானத்தையும் சொலிக்கக்கூடிய யோக்யதை இந்தத் தைலத்திற்கு உண்டு, ஸ்ரமப்பட்டுப் படிக்கும் மாணுக்கர்களுக்கு இது அத்யந்தம் உபகாரகம்.

### உபயோகிக்கும் மாதிரி.

காலையில் ஸிரஸ்ஸில் தேய்த்துக்கொண்டு சீயக்காயை உபயோகித்து ஸ்நாநம் செய்யவேணும். ஸோப் முதலியவற்றை உபயோகிப்பது ஸ்லாக்ய மன்று. உஷ்ண ஜலத்திலாவது குளிர்ந்த ஜலத்திலாவது யதா ஸௌகர்யம் ஸ்நாநம் செய்யலாம். ஆஹாரநியமங்கள் ஒன்றுமில்லை.

### இதன் விலை ஒரு புட்டி ரூபா. 1—2—0.

வேண்டுமவர்கள், வட ஆற்காடு ஜில்லா, சித்தூரிலிருக்கும் ஆயுர்வேத வைத்யர் பண்டித கே. எஸ். ராகவ ஐயரிடத்தில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

### ஸ்ரீ பாகவத ஸ்துதி ஸங்க்ரஹம்.

[illegible] பாகவதம் பன்னிரண்டு ஸ்கந்தங்களிலும் இருக்கும் முக்யமான [illegible]த்ரங்களை ஒன்று சேர்த்துக் கிரந்த லிபியில் அச்சிடப்பட்டி[illegible]. இதன் விலை அணு 6. வேண்டுமவர்கள், சென்னை திருவல்லிக் [illegible]ணப்தி முதலி தெருவில் இருக்கும் பென்ஷன் ஜில்லா ரிஜிஸ்த்ரார் [illegible]ய்யங்காரிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஸ்ரீ:.
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்
ஸ்ரீ அகோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்ஸு ஆவணிமீ. [ஸஞ்சிகை 7.

## காளிதாஸன் காவ்யங்களும், அவர் மதக்கொள்கைகளும்.

நமது தேசத்தில் ஸம்ஸ்கிருத கவிகளில் பிராசீநராயும் ச்ரேஷ்டராயு மிருப்பவர், காளிதாஸன் என்பவர். இவரை மிகவும் உத்தமமான கவியென்றும், நாடகம் இயற்றின எல்லாக் கவிகளிலும் இவரே ச்லாக்கிய ரென்றும் எல்லாரும் ஸாதாரணமாய் ஒப்புக் கொள்ளுகிறார்கள். வால்மீகீயமான ராமாயணத்துக்குப் பிறகு ரகுவம்சம், குமாரஸம்பவம் முதலான காளிதாஸ காவ்யங்களைப் பார்க்கிலும் இனிமையானவை இல்லை யென்பது எல்லாரும் அறிந்தவிஷயம். ஆனால், விசேஷமாய் நம்மில் ஸம்ஸ்கிருதம் படித்தவர்கள் ஆபாதமாய் இந்தக் காவ்யங்களைச் சிலாகிப்பது வழக்கமேயொழிய, அவற்றின் குணதோஷங்களைப் பரிசீலனம்செய்து இன்ன காவ்யகுணங்கள் இன்ன ஸ்தலங்களில் விளங்குகின்றன வென்று விவேகித்து அறிந்தவர்க ளில்லை: அப்படி காவ்யகுணங்களையும், அதன் ரஸங்களையும், அவற்றிற்கு ஏற்பட்டிருக்கும் ஸாஸ்த்ரங்களை அநுஸரித்துப் பகுத்தறிந்து ஆநந்திப்போர் விசேஷமான மனோல்லாஸத்தை அடைவார்க ளென்பது ஸர்வ

ஸம்மதம். காவ்ய நிர்மாணத்தின் பலங்களை “ காவ்யம் யஶஸே(அ)ர்த்தக்ருதே வ்யவஹாரவிதே ஶிவேதரக்ஷதயே ஸத்ய:பரநிர்வ்ருதயே காந்தாஸம்மிததயோபதேஶயுஜே” என்று பிராசீனர்கள் ஸங்க்ரஹித்தார்கள்; இதன்பொருள்:—‘காவ்ய நிர்மாணத்தாற் பெருங் கீர்த்தியும், திரவியமும், வ்யவஹார ஜ்ஞாநமும், அமங்கள விலக்கும், மநஸுக்கு உயர்ந்ததான ஸுகமும், மனமொத்த ஸ்த்ரீயின் உபதேசம்போல் இனிமையான உபதேசங்களும் உண்டாகும்’ என்பது தான். இந்தப் பிரயோஜனங்களில், கீர்த்தியும், திரவிய லாபமும் கவிக்கே ஏற்படக் கூடியவைகள். வால்மீகி, காளிதாஸன், பவபூதி முதலானவர்களின் பெயர்கள் இந்த லோகத்தில் நிலைபெற்றிருப்பது, அவர்கள் செய்த காவ்யங்களால் உண்டான பெருமையாலேயே. அந்தந்தக் காலாநுகுணமாக, ராஜாக்களாலும், தனவான்களாலும், கவிகள் ஆதரிக்கப்பட்டு வருவதினால், தனலாபம் காவ்யத்தின் பலந்தான். ஆனால், அது முக்கியமன்றென்று கருதி இரண்டாவதாகக் குறிக்கப்பட்டது. இனிச் சொல்லியிருக்கும் பலங்கள் கவிக்குஅல்லாமல் ப்ராயிகமாய்க் காவ்யங்களைப் படிப்பவர்களுக்கு உண்டாகக் கூடிய பலங்களென்றே சொல்லலாம். காவ்யநிர்மாண மென்னும் இந்த உத்தமமான வ்ருத்தி, விசேஷமாய்ப் பரப்ரயோஜநமே யொழிய ஸ்வப்ரயோஜநமன்று. அநேகமாய்க் கவிகளின் தாரித்ரியமும், அவர்கள் ஜீவித காலத்தில் அவர்களுக்குச் சரியான மரியாதைகள் கிடைக்காமலிருந்ததும், நமது தேசத்திற்போலவே இதர தேசங்களிலும் கவிசரித்திரங்களால் நன்கு விளங்கும். இப்படிப்பட்ட பரார்த்தமான காவ்ய பலன்களில், வ்யவஹார ஜ்ஞாநமே பிரதாநபலமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. வியவஹாரம், சப்த வ்யவஹாரமென்று பொருளானால், பதங்களைச் சுத்தமாய் உபயோகிக்கிற சக்தியும், அந்தந்த அர்த்தத்துக்கு அநுகுணமான வாக்கியங்களைப் பாஷைகளில் உபயோகிக்கும் திறமையும் காவ்யத்தின் பலமென்று சொன்னதாகும். ஆனால், இங்கு ஔசித்யத்தினால் அர்த்த வ்யவஹாரம் அல்லது லோகாநுபவம் என்று நாம் பொருள் கொள்ளுகிறோம். இப்படி அர்த்தம் செய்வதில் பாதகம் ஒன்றுமில்லை. இந்த அர்த்தத்தில், வ்யவஹார மென்றால், ராஜாங்க ஸம்பந்தமான சட்டதிட்டங்களின் அறிவு அன்று; பொதுவான லோகவ்யவஹாரம்: அதாவது - ஸுகதுக்க காலங்களில் ஜனங்கள் நடந்துகொள்ளும் மாதிரியும், அவர்கள் காமக்ரோதாதிகளால் அடையும் மனோ விகாரங்களும், அந்த ஸமயங்களில் இதரர்கள் அவர்களிடத்தில் வர்த்திக்கும் மாதிரிகளும், பற்பல தேசாசாரங்களும், நடை உடை பாவனைகளும், பசு பக்ஷி மிருகங்களின் ஸ்வபாவங்களும், சேஷ்டிதங்களும், நதி பர்வதம் ஸமுத்ரம் காடு முதலானவைகளின் ஸ்வபாவங்களும், ஜனங்களுக்கு அவைகளைப்பார்த்து அநுபவிப்பதால் உண்டாகும் ஸுகதுக்கங்களும், இன்னும் பல தேச ஸஞ்சாரத்தினால் உண்டாகும் அநுபவ பேதங்களும் ஆகிய இவைகளெல்லாம் வ்யவஹார மென்னும் பதத்துக்குப் பொருளாகக் கொள்ளலாம். நமது கிருகத்தைவிட்டு வெளியிற் போகாமலே, கவிகளின் புத்தியினாலும், விசித்திர வர்ணந சக்தியினாலும், ஸர்வ ஜனங்களின் ஸுகதுக்கங்களையும் தம்முடையனவாகப் பாவித்து அவைகளை யதாவஸ்திதமாய் இதரர்கள் அறிய வெளிப்படுத்தும் பரமகாருண்யத்தாலும், ஸுலபமாய்க் காவ்யங்களிலிருந்தே ஸகல விஷயங்களையும் நாம் அறிகிறோம். உயர்ந்த குணங்க ளமைந்த நாயகன் ஸம்பந்தமாகவே காவ்யங்கள் இருக்கவேணு மென்பது, நல்ல அநுபவங்களும் ஜ்ஞாநங்களும் போதிக்கப்படவேண்டு மென்கிற எண்ணத்தினாலேயே சொல்லப்படுகிறது. இதையே போஜராஜன் “ கவேரல்பாபி வாக்வ்ருத்தி: வித்வத்கர்ணாவதம்ஸதி। நாயகோ யதி வர்ண்யேத லோகோத்தரகுணோத்தர:” என்னும் ஶ்லோகத்தால் ‘கவியின் சொல்லமைப்பு அல்பகுணமாயிருந்தாலும் உத்தமமான நாயகன் விஷயமானால், எல்லா வித்வான்களாலும் சிலாகிக்கப்படும்’ என்கிறார். இப்படி லோகவ்யவஹார ஜ்ஞாநத்தை அறிவிப்பது காவ்யங்களின் ஸ்வபாவமானாலும், அவற்றின் உத்தேசம், ஜனங்களுக்குத் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்குவித புருஷார்த்தங்களின் ரீதிகளை அறிவித்து அவைகளின் தாரதம்யங்களை எடுத்துக் காட்டுவதுதான். இதைப் பின்னால் செவ்வையாய் விவரிப்போம்.

காவ்யங்களினால் படிப்பவர்களின் பாபங்கள் அல்லது அசுபங்கள் போமென்பது, அடுத்த பலமாகக் குறிக்கப்பட்டது. இதனை, ராமாயணம் முதலான உத்தம காவ்யங்களைப் பாராயணம் செய்யும் வழக்கத்தினால் நாம் அறியலாம். அர்த்த ஜ்ஞாந மில்லா

மன் வேதம், புராணம், ஸம்ருதி, ஸ்தோத்ரங்கள் இவைகளைப் படிப்பதனாலேயே பாபங்கள் போகுமென்பது நம்மவர்கள் ஸித்தாந்தம்; அர்த்தமறியாத மந்திர ஜபங்களும், இதற்கு உதாஹரணங்கள். காவ்யங்கள் விசேஷமாய்ப் பாராயணம் செய்யப்படுவதில்லை. ஆனால், உத்தமமான ராமாயணம் முதலான காவ்யங்களின் பாராயணத்தைச் சிலாகிப்பது, அதனாலுண்டாகக்கூடிய அர்த்தஜ்ஞானத்தையும், பரம்பரையாய் உண்டாகும் புருஷார்த்த ஜ்ஞானத்தையும் உத்தேசித்தே சொன்னதாக எண்ணவேண்டியது. விசேஷமாய் மநஸ்ஸுக்குத் துக்கமான காலங்களிலும், நிர்வ்யாபாரமாய்ச் சோம்பலான காலங்களிலும், நல்ல ச்லோகங்களையும் வாக்யங்களையும் அநுஸந்திப்பதும், அதனால் மனஸ்ஸுக்கு ஸுகமுண்டாவதும் அநுபவ ஸித்தமாயிருக்கிறது. இவைகளை உத்தேசித்துக் காவ்யங்களால் பாப நிவ்ருத்தியென்று சொல்வதும் உசிதந்தான். ஸர்வஜகத்ரக்ஷகனான பகவானுடைய குணங்களைப் புகழ்ந்துபேசும் ராமாயண பாரத பாகவதாதி காவ்யங்களின் பாராயணங்கள் பாபங்களைப் போக்கடிக்குமென்பதில் என்ன ஸந்தேஹம்?

சீக்கிரமாய் மநஸ்ஸுக்குப் பேராநந்தத்தைக் கொடுப்பது காவ்ய நிர்மாணத்தின் அடுத்த பலமாகச் சொல்லியிருக்கிறது; இதையும், படிப்பவர்கள் ஸம்பந்தமான பலமென்று சொல்லலாம். ஆகிலும், கவிக்கும் இதில் ஸம்பந்தம் உண்டு: தேஹச்ரமத்தாலும் திரவியத்தினாலும் உண்டாகும் அநேக ஸுகங்களைக்காட்டிலும், நல்ல காவ்யங்களைப் படிப்பதனால் உண்டாகும் ஸுகம், ஸுலபமாயும் களைப்பற்றதாயும் களைப்புண்டாக்காததாயும் தர்மத்துக்கு விரோதமில்லாததாயுமிருக்கிறது. இதரஸுகங்கள், ஜீவிதகாலத்தில் சிற்சில காலங்களில் மாத்திரமே அநுபவிக்கக்கூடியவைகள். தேகம் தளர்ந்து வயஸ் முதிர்ந்தாலும், திரவியமில்லாவிடினும், ஸுஹ்ருத்துக்களில்லாவிட்டாலும், அந்யர்களபேக்ஷையில்லாமல் தானாகவே ஆநந்தம்பெறுவதற்குக் காவ்யங்களே முக்யஹேதுக்கள். ஆனால், இந்தஸுகம் அநுபவிக்க ஸஹ்ருதய மென்று சொல்லப்படும் ஓர்வித சிக்ஷிதமான புத்தி வேண்டும். உப்புவிற்பவன் கர்ப்பூரத்தின் அருமையை அறியாததுபோல, பாமரர்கள் காவ்யத்தின் அருமையை அறிவது துர்லபம். காநம் சித்ரம் காவ்யம் ஆகிய இவற்றின் ரஸத்தை அநுபவிக்க எல்லாருமே அர்ஹர்களல்லர்; ஆகிலும், எல்லாரும் அதுவிஷயத்தில் முயன்று ப்ரவ்ருத்தித்தால் இந்தப்பேராநந்தம் காவ்யத்தின் பலமென்பதை ஸ்வாநுபவமாய் அறியலாம்.



உலகத்தில் ஜந்மமெடுத்தவர் விரும்பியடைபவை நான்கு பொருள்களென்று நம்மவர்கள் வகுத்திருக்கிறார்கள்; அவைகளில் இந்த உலகத்திலும் ஸ்வர்க்கலோகத்திலும் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவை அறம் பொருள் இன்பம் என்றும், முடிவில்லாத பரலோக வாழ்க்கையைக் கொடுப்பது மோக்ஷமென்றும் சொல்லுகிறார்கள். இந்த நான்கு பொருள்களும், காவ்யத்தினால் உண்டாகக்கூடியவைதான்; அதாவது - அந்தந்தப் பொருளை யடைவிக்கத்தகுந்த உபதேசங்கள் காவ்யங்களில் இருக்கின்றன. அப்படியானால், இந்தப்பொருள்களையே உபதேசிக்கும் வேதத்துக்கும் புராணங்களுக்கும், காவ்யங்களுக்கும் பேதமென்ன? வேதங்களும் புராணங்களும் விஸ்தாரமாயிருக்க, காவ்யங்கள் செய்யப்படுவானேன்? என்றால்,—எல்லாம் புருஷார்த்த உபதேசங்களைச் செய்தாலும் உபதேசிக்கும் மாதிரியில் வேறுபட்டனவென்று ஏற்படுகிறது. அதாவது—வேதங்கள், ஒரு பிரபுவின் கட்டளைகள்போலச்சொல்லை முக்கியமாகக் கொண்டதாகவும், அணுவளவும் நாம் தட்டக்கூடாததாகவும், சிரமப்பட்டு அர்த்தம் அறியக்கூடியவைகளாகவுமுள்ள உபதேசங்களைச் செய்கின்றன. புராணங்கள், ஒரு ஸ்நேஹிதனைப் போல நமது ஹிதத்தை விஸ்தாரமான வசனங்களால் கதைகள் உபாக்யாநங்கள் முதலான உதாஹரணங்களுடன் நமது மனத்தில் இறங்கும்படி உபதேசிக்கின்றன. இவை வேதத்தைப்போல் செய் என்றும், செய்யாவிட்டால் அநர்த்தமென்றும் கடிந்து சொல்லாமல், பல பூர்வர்கள் சரித்ரங்களையும், கல்பிதங்களான கதைகளையும் நிதர்சநமாக்கி, கார்யாகார்யங்களை விவரிக்கும் காவ்யங்களோ உபதேசிப்பதில், பிரியமான சொற்களால் நமது ஹிதத்தை ஸமயம் அறிந்து கொஞ்சம் கொஞ்சமாய் நம்மனத்தில் போதிக்கும் பிரியமான பத்னியைப்போல, ரஸங்களையும் அர்த்தாலங்காரங்களையும் சப்தாலங்காரங்களையும் பூர்ணமாய் வகித்த சொற்களால் மேல்வகுக்கப்பட்ட நான்குவித புருஷார்த்தங்களின் உபாயங்களை உபதேசிக்கின்றன. இதுபற்றியே, தர்மோபதேசத்துக்குக் கருவிகளான பலவித கிரந்தங்களில் காவ்யத்தின் பெருமை சிலாகிக்கக்கூடியதாயிருக்கிறது: வேதத்துக்கு சப்தம் ப்ரதாநம்;

புராணங்களுக்கு அர்த்தம் முக்கியம்: காவ்யங்களோ, தாத்பரியங்களை வ்யஞ்ஜனையென்றும் த்வனி என்றும் சொல்லப்படுகிற ஸக்தியினால் வெளியிடுகின்றன.

“ யதேதாஸ வ்யாஸ ஸ்த்தாதி ப்ரமதம ஸப்தவ்யா நாத்ரம, யத்ராம ப்ரவணாத்வாணவநஷ்டம ஸஹ்ருத்தாஸ । காந்தாஸம்ஜ்தயா யயா ஸரஸதாரேவாத்ர காவ்யஸ்ரியா கதஞ்சேத் காந்தகீ ஸமயா விரஹ்ஸ்தேஸ ஸஹ்ருஹா காஞ்சேஹ॥”—வ்யாதாவராதீயம்.

இப்படி காவ்யங்கள் ஸ்வதஃ ஆநந்த ஹேதுக்களானுலும், புருஷார்த்தங்களை உபதேசிப்பதும் அவைகளின் தர்ம மாகையால், உத்க்ருஷ்டமான எல்லாக் காவ்யங்களும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் புருஷார்த்தங்களை உபதேசிக்கவேணும். அதாவது:—தர்மத்தை அநுஸரித்ததும் தர்மத்தை உத்தேசித்ததுமான அர்த்தார்ஜநமே சிலாக்கியமென்றும், தர்மத்துக்கு விரோதமில்லாததும் தர்மார்ஜிதமுமான அர்த்தத்தினுல் ஆகக்கூடியதே காமமென்றும், அந்தந்தப் பலங்களை உத்தேசித்த வேதவிஹிதங்களான கர்மங்களை அநுஷ்டிப்பதே தர்மம் என்றும், இது இஹபரஸாதகமானுலும் இதனுல் ஏற்படும் பரலோகங்கள் அநித்யமான லோகங்களென்றும், நித்தியமான ஆநந்தம் மோக்ஷமென்றும், அதற்கு உபாயங்கள் இன்னவைகளென்றும் சாஸ்திரங்களில் விவரித்திருப்பதை அநுஸரித்து முன்சொன்னபடி ரஸவத்தான சப்தங்களால் பாலூட்டுவதுபோலப் போதிப்பதே காவ்யங்களின் தன்மை. இத்தக்கடமையை மிகவும் நன்ருகக் காளிதாஸனுடைய க்ரந்தங்கள் நிர்வஹிப்பதனுல்தான், இந்தக்கவிக்கு விசேஷமான பெருமை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாய் மோக்ஷ சாஸ்திர ஸம்பந்தமான கொள்கைகளுக்கு மதமென்று பெயர் ஏற்பட்டிருந்தாலும், மற்றைய புருஷார்த்தங்களின் விஷயமான கொள்கைகளுக்கும் மதக்கொள்கை யென்னும் பெயர் வழக்கமாயிருக்கிறது. ஆனதுபற்றி, காளிதாஸன் மதக்கொள்கைகளை விவரிக்கப்புகுந்த நாம் முதலில் மோக்ஷமொழிந்த மற்றைப்புருஷார்த்தங்கள்விஷயமாய் அவரபிப்ராயங்களை அவரது க்ரந்தங்களைக்கொண்டே எடுத்துரைப்பது ந்யாயமென்று எண்ணுகிறோம்.



காளிதாஸன் என்பவர் ப்ராஹ்மணஜாதியிற் பிறந்தவர் என்றும், அவர் தேவதாநுக்ரஹத்தாலோ, குரு ஸிக்ஷையாலோ ஸஹஜமான மேதையாலோ, ஸ்ருதி, ஸ்ம்ருதி, புராணம், தர்மஸாஸ்த்ரம், வ்யாகரணம் முதலான ஸர்வசாஸ்திரங்களிலும் பூர்ணபாண்டித்திய முள்ளவர் என்றும் அவர்கிரந்தங்களைக்கொண்டே நாம் நிஸ்சயிக்கலாம். அவர் காலம், க்ரைஸ்தவாப்தம் 4 - வது 5-வது சதாப்தகங்களில் இருந்திருக்க வேண்டுமென்றும், பிந்திஇராதென்றும் பாஸ்சாத்ய வித்வான்களின் ஸித்தாரணம் ஏற்பட்டிருக்கிறது. அவர், தாராபுரியில் 11 - வது சதகத்தில் ஆண்ட போஜராஜன் காலத்துக்கு முற்பட்டவ ரென்றும், அவரையும் போஜனையும் பிந்தின கவிகளையும் பல கதைகளைக் கொண்டு ஸமகாலமாக்குகிற போஜசரித்திரக் கட்டுகள் மூலமற்றன வென்றும் நன்ருய் ஏற்படுகிறது. இவர் ஸ்ரௌத ஸ்மார்த்த ப்ரக்ரியைகளைக் க்ரந்தங்களில் ஆராய்ந்ததுமன்றி, அவைகளை அநுஷ்டாந பரியந்தமாகக் கொண்டுவந்தவரென்றும் ஊஹிக்க இடமுண்டு. ரகுவம்ஸத்தில்

‘ ஸ்ரியஃ ஸாயஜநஸ்யாஸ ஸதீஸப்த தபோநிபம் ’ (க, ௬௯)
‘ ஹவிராவர்ஜிதம்.....வ்யஷிதம்வதிஸஸ்ரா நாம ’ (க, ௬௨)
‘ தத்ஷ்ரயப்ய நிவேதிதவஸாநாம் ’ (க, கரு)
‘ ஸ்ஸிதவபஸாதிக்ஷாவ்ருணாதிம் கரஸேவ்யதம் ’ (ந, 70)
‘ ஜயவிபிஷேவஸாயஸ்ராத்ஸதூஷ்டம் ’ (ரு, எ௬)
‘ தள ஸாதஷெகவைத்ய சிகாவ ராஜ்ஞா...’ (எ, உ௮)
‘ தெத்ருதாம்ரி யஜ்ரோஹ்ருதிநிஷ்ருகீதேஷ்...’ (கந, ௬எ)
‘ வீராஸவெநயஸ்புராநஜஷாம் ’ (கந, ௫உ)

என்னும் வாக்யங்களும், இன்னும் அநேக வாக்யங்களும், மற்றைய காவ்யங்களிலும் ஸத்ருஸமான வாக்யங்களும், இவரது வைதிக ஜ்ஞாநாநுஷ்டாந ப்ராவீண்யத்தை நன்ருய்த் தெரிவிக்கின்றன. இவர் ராஜ தர்மங்களிலும் இதர தர்மங்களிலும் நிஷ்ணுதரென்பதும், இந்தக் காவ்யத்திலே நன்ருய் விளங்குகிறது.

‘ த்ராமாய ஸம்ஹ்ருதாயஜ்ஞாநாம்...’ (க, எ)
‘ ஸெவாரேத்ருஷேஷ் க்ஷணாய ’ (க, கஎ)

'தஸ்ய ஸா ஶ்யாமம் த்ருஸ்ய' (க, ௨௦)

'யதா வ்ருஷ்ணாதிநா ஷுஷ்ட்ர:' (அ, ௪௨)

என்னும் ஶ்லோகங்களும், இன்னும் அநேக வாக்யங்களும், இதற்கு நிதர்சனங்கள்.

தர்ம புருஷார்த்தம் அர்த்தகாமங்களைக் காட்டிலும் மேன்மைப்பட்ட தென்பதும், இவர் வசனங்களில் நன்றாய் உபதேசிக்கப்படுகிறது.

'ஸுரிமெத்ய த்ருணபஞ்சாம்ஷ்ய வஸிஷ்டே தபோ ப்ருஷஷுதயே ।
ஸைந்யபூகானெ ஸஸ்ரவஸாம் யாதவனவ உதீக்ஷிணா: ॥ (க, ௨௫)

'அதாக்ருஷ்டஸ்ய விஷயெஷ... தஸ்யபூர்வ்ஜா:' க, ௨, ௬

'ராஜ்ஞ ந கிம் தபிவர்த ஶ்யெதி' (௨, ௫௪)

'யஶ: ஶரீரெ பவ மெ...ஸகாஸ விஷ்ணுவிஷ்ணு ஷீலயா தாம்'

(௨, ௫௭)

'மவாப்ய பரீஸ...போஷதுக வரீவாத தவாவதாரா:' (௫, ௨௯)

'ஜஷிதெவ மணஷுயா ஹஜம்' (அ, 30)

'வஸ்ஸோதப வியோவ ஶாஸனெ...மாணவதாவி வாஸ்யெயொ ஜநா' (அ, 31)

துக்ககாலங்களில் மநஸ்ஸின் ஸ்தைர்யமே அவசியமென்றும், வைஷயிகஸுகங்கள் அநித்யங்க ளென்றும் பலவாக்யங்களிருக்கின்றன.

'அவஶோகநோர்...ஷுஜ நா ஶ்ருகீஜா கிஸந தம்... வ்ருவஷிதெ' (அ, ௮௬)

'ரோணம் ப்ரக்ருதி:...ஷணமேவ வதிஷ்டெதயதி...' (அ, ௮௭)

'ஸுமஸீர ஶஸீரிணா...' (அ, ௮௯)

லோகந்யாயங்களும் பஹுவாய் இவர்க்ரந்தங்களிற் சொல்லப்படுகின்றன.

'ஷுஜநஸ்ய ஷரீரிஷேஷ் தொ...' (குமாரஸம்பவம், ௫, 26)

'ஷயிதாஷு நவஷுதம்...' (கு. ௪, ௨௮)

'ஶ்ரேயா: வதிவதாரா:...' (௫, ௬௬)



'நஹீஶ்வர வ்யாஹ்ருதயம்...' (ரு. ௬௬)

'விகாரஹேது ஸதி...' (க, ௫௯)

'க்லேஶ: ஃபலெந ஹி புநர் நவதாம்...' (௫, ௫௬)

இன்னும் பரம்பராதமான ஶ்லோகங்கள் இந்த விஷயத்தில் உதாஹரிக்கலாமென்பது ஸுப்ரஸித்தம்.

ஸ்த்ரீ தர்மங்களும் அவஸரங்களில் இவர் க்ரந்தங்களில் உபதேசிக்கப்படுகின்றன.

'க்ருதவதி வி நாவயீரணாம்...' (ரகு. அ. ௪௮)

'க்ருஹிணீ ஸசிவ: ஸகீ...' (அ, ௬௭)

'நவாவதஸ மதநுவதவம்' (க௪, ௬0)

'ஸுயோயதா ஜநநந்தரோவி' (க௪, ௬௬)

'ஶுஶ்ருஷஸ்வ குருந்...' (ஶாகுந்தலம்)

'ஸம்தபூ வ்யவிஸாரிணோ...வதிவ்ரதா:' (கு. ௬, ௮௬)

'மாவலம்வித நிஷ்டுரஷ்டிப்யம்...' (கு. அ, க௫)

'அம்யதா தவஸ்ருதம்...' (கு. அ, ௬௬)

இவ்வளவு தர்மங்களும் லோகந்யாயங்களும் அடங்கியிருக்கும் இந்தக் கவியின்க்ரந்தங்களில் ஸஹ்ருதய ரஞ்ஜகமான பாகங்கள் அநேக மிருக்கின்றன வென்பது சொல்லவும் வேண்டுமோ? இதற்கு ரகுவம்ஶத்தில் ௬, அ, கக, க௬ - வது ஸர்க்கங்களும், குமாரஸம்பவமேகஸந்தேஶ ஶாகுந்தலம் முதலான கிரந்தங்களில் பல இடங்களும் உதாஹரணங்கள். இவர் கவித்திறமையை நம் தேசத்தவர்கள் மாத்திரமல்ல: பாஶ்சாத்யர்களான ஜோன்ஸ், வில்ஸன் முதலான பண்டிதர்களும் புகழ்கிறார்கள். ஜர்மனிதேசத்திய பிரஸித்தகவியான 'கத்தே' என்பவர் இவர் விஷயமாய்த் தமது பாஷையில் சொல்வதைப்பிந்தித் தமிழிலும் கீர்வாணத்திலும் மொழிபெயர்ப்போம்.

இனி மோக்ஷஸம்பந்தமான விஷயங்களிலும் இவர் கொள்கைகளையும் மனநிலைமையையும் பிந்தி விசாரிப்போம்.

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

# விஶிஷ்டாத்வைதம்.

## 5. ப்ரஹ்மத்தின் நிரஸ்த நிகில தோஷத்வமும், கல்யாண குணாகரத்வமும்

முதலில் தத்வங்களின் விபாகத்தைத் தெரிந்துகொண்டு, அப்படி விபக்தங்களான தத்வங்களின் லக்ஷணங்களை ஸ்தூலமாக விசாரித்து, பிறகு விஶேஷமாகப் பரதத்வமாகிற ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் விசாரிக்க யத்தனித்தோம். அதில் ஸம்பந்திப்பட்டதான, ப்ரஹ்மத்திற்கும் ப்ரபஞ்சத்திற்குமுள்ள ஶரீரி ஶரீரபாவம் ப்ரஸக்தமானதனால் அதை நிஷ்கர்ஷம் செய்துகொண்டு, அப்படி ஶரீரியாகவிருக்கும் ப்ரஹ்மத்திற்கு ஜீவன்களால் செய்யப்படும் கர்மங்களின் விஷயமாக எவ்விதமான கர்த்ருத்வம் ஏற்படுகிறதென்றும் விசாரித்தோம். இந்தக் கர்த்ருத்வ விசாரம் கிஞ்சித் ஸாவஶேஷமாக இருந்தாலும், மிந்தி ஜீவப்ரகரணத்தில் பூர்த்திசெய்துகொள்ளலாமென்று எண்ணி, ப்ரக்ருதமாகிற பகவத்ஸ்வபாவத்தை விசாரிக்க ஆரம்பிக்கிறோம்.

“[illegible]” என்றும், “[illegible]” என்றும் சொல்லப்பட்ட லக்ஷணங்களுடன்கூடின ஈஶ்வரனுக்கு ஏதாவது குணங்களுண்டோ? ஸம்ஸாரமாகிற தாபத்தில் கஷ்டப்படும் நம்மைப் பார்த்துத் தயை கொள்ளும்படியான ஸ்வபாவமுண்டா? இல்லாவிட்டால் அவன் கேவலம் ஜ்ஞான ஸ்வரூபனாக நின்றுகொண்டு நம்மைப்பற்றின ஆலோசனை யன்றிக்கே இருக்கிறானா? நஶ்வரமாகவும் விகாராஸ்பதமாகவுமிருக்கிற இந்த ப்ரபஞ்சத்தை அவன் ஶரீரமாகவுடைத்தாயிருக்கிறானென்று நாம் தெரிந்துகொண்டோமே; அப்படிப்



பட்ட ஶரீர ஸம்பந்தம் இருக்கிறபடியால் அவனுக்கு ஏதாவது தோஷங்கள் நேரிடுகின்றனவோ? நம்மைப் பற்றின தாபங்கள், நமக்கு அந்தர்யாமியாக இருக்கும் ஈஶ்வரனையும் தபிக்கின்றனவோ? இல்லாவிட்டால் அவன் ஸர்வஶரீரியாக இருக்கையிலும், நமக்கு உரிய தோஷங்களால் ஸ்பர்ஶிக்கப்படாமலிருக்கிறானா? என்பதை இப்பொழுது விசாரிப்போம்.

இது ஸம்பந்தமாகத் தஹர வித்யையை உபதேஶிக்கும் சாந்தோக்யோபநிஷத் 8-வது ப்ரபாடகத்தில் சில வாக்யங்கள் இருக்கின்றன. அவைகளாவன:—“[illegible]” இத்யாதிகள். இந்த வாக்யங்கள் வரும் ப்ரகரணமென்னவென்றால்,—நம்முடைய ஶரீரத்திலுள்ள ஹ்ருதய கமலத்தில் தஹரமென்று ஸூக்ஷ்ம ஆகாஶம் ஒன்று இருக்கிறதென்றும், அந்த ஸூக்ஷ்மாகாஶமும் அதிலிருக்கும்படியான சில குணங்களும் நமக்கு ஶ்ரவண மனந த்யானாதிகளுக்கு உரியவையென்றும் முதலில் சொல்லிவிட்டு, பிறகு அந்த ஆகாஶம் மற்ற ஆகாஶம்போலப் பரிமிதமன்று, ஆனால் நிரதிஶயபோக்யமென்றும், தானிருக்கும் ஸ்தலமாகிற ஹ்ருதயம்போலன்றிக்கே நிர்விகாரமென்றும் சொல்லி, ‘அந்த ஆகாஶத்தில் காமங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன; அதற்குத் தோஷஸம்பந்தமென்பது இல்லை, அது கல்யாண குணங்களோடுகூடினது, அது ஆத்மா’ என்கிற அர்த்தமுள்ள முற்கூறப்பட்ட வாக்யங்களை அந்த உபநிஷத் ப்ரஸ்தாவிக்கிறது. இப்படிச் சொல்வதின் தாத்பர்யமென்னவென்றால்;—நம்முடைய ஹ்ருதய கமலத்தில் ஈஶ்வரன் வஸிக்கிறான்; அவனைத்தான் ‘ஆகாஶம்’ என்று இந்த ஶ்ருதி வ்யவஹரித்து, ‘அவனைக் குறித்து ஶ்ரவணம் முதலானவைகளைச் செய்யவேணும்’ என்று சொல்லுகிறது; ‘காமங்கள்’ என்கிற ஶப்தத்திற்கு—‘[illegible]’ என்கிற வ்யுத்பத்தியால், கல்யாணகுணங்கள் என்று அர்த்தம்; இந்தக் கல்யாண குணங்கள் ‘ஆகாஶம்’ என்று சொல்லப்படும் அந்த ஈஶ்வர

னிடத்தில் இருக்கின்றன; அவைகளைப்பற்றியும் ஸ்ரவணம் முதலானவைகளை நாம் செய்யவேண்டும் என்பதுதான். 'ஆகாசம்' என்று ஈஸ்வரனுக்குப் பெயர் வந்ததற்குக் காரணமாக 'ஆ ஸமந்தாத் காசதே ப்ரகாசதே' என்கிற வ்யுத்பத்தியையும் ஆசார்யர்கள் சொல்லுகிறார்கள்; அதாவது - ஸகல திக்குக்களிலும் ப்ரகாசிக்கிறவன் என்று அர்த்தம்.

'இப்படிப்பட்ட ஈஸ்வரனிடத்திலிருக்கும் கல்யாண குணங்கள் யாவை?' என்று ப்ரஸ்நம் பண்ணுங்கால், அந்த ப்ரஸ்நத்திற்கு உத்தரமாக 'அபஹதபாப்மா' என்கிற வாக்யம் ப்ரவ்ருத்தித்து அபஹத பாப்மத்வம் முதலான எட்டுக் குணங்களைக் குறிப்பிட்டு 'இந்த எட்டுக்குணங்களோடு கூடினவன் பரமாத்மா' என்று சொல்லுகிறது. இந்த வாக்யத்திலிருக்கும் பதங்களின் அர்த்தத்தை விசாரிப்போம். அபஹத பாப்மத்வம் என்றால் - போக்கடிக்கப்பட்ட பாபத்தை யுடைத்தாயிருக்குந் தன்மை. 'போக்கடிக்கப்பட்ட' என்கிற பதம், பாபம் முந்தி இருந்ததாகவும் பிறகு நிவ்ருத்திசெய்யப்பட்டதாகவும் ஒரு அர்த்தத்தைக் கொடுக்கிறது; அது ஸரியான அர்த்தமன்று; "ஏதம் ஸேதும் அஹோராத்ரே தரத: ந ஜரா ந ம்ருத்யு: ந சோக: ந ஸுக்ருதம் ந துஷ்க்ருதம்" [ஸேது வென்னும் இந்தப் பரமாத்மாவை, அஹோராத்ர ரூபமான காலம், ஜரை, மரணம், சோகம், ஸுக்ருதம், துஷ்க்ருதம் ஒன்றும் அடைகிறதில்லை] என்று இந்த உபநிஷத்திலேயே பிந்திச் சொல்லப்பட்டிருக்கும் வாக்யத்தின்படி "ஒட்டாமலிருக்கிற பாபத்தை யுடையவன்', அதாவது - 'பாபத்தால் தொடப்படாதவன்' என்பது அர்த்தம். 'பாபமே செய்யாம லிருந்துவிட்டால் பாபம் தொடுவதற்கு ப்ரஸக்தியே இல்லை; அப்படிப் பாபத்தால் தொடப்படாமலிருப்பது ஈஸ்வரனுக்கும் மற்றவர்களுக்கும் ஸாதாரணம் தானே!' என்று ஆக்ஷேபித்தால், ஈஸ்வரன் விஷயத்தில் இது அர்த்தமன்று; ஸுக்ருத துஷ்க்ருத ரூபமாகிற கர்மத்தை அவன் செய்தாலும், அதன் பலன் அவனிடத்தில் ஒட்டுகிறதில்லை; அதாவது - சுபாசுப ரூபமான பலங்களைக் கொடுக்க ஈஸ்வரன்

OFFICE ... MADRAS.



விஷயத்தில் அந்தக் கர்மங்கள் ஸக்தியற்றவைகள் என்பது தான் அர்த்தம். மேலும், இந்த ஸப்தத்திலிருக்கும் 'பாப்ம' என்கிற பதத்திற்கு - புண்ய பாபம் இரண்டும் அர்த்தம். பரமாத்ம ப்ரகரணங்களில், இந்தப் பதம், ஸுக்ருத துஷ்க்ருத ஸாதாரணமாகவே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. "ஸர்வே நிரயா யத் ஸ்தாநஸ்ய பரமாத்மந:" 'பரமாத்மாவின் ஸ்தாநத்தைப் பார்க்கு மளவில் ஸ்வர்க்காதிகளெல்லாம் நரகங்களாகின்றன' என்றன்றோ சொல்லியிருக்கிறது? அப்படிச்சொல்வதன் தாத்பர்யமென்னவென்றால் - அநிஷ்டத்தை ஸாதித்துக்கொடுக்கும் கர்மங்களெல்லாம் பாபங்கள்; முமுக்ஷுக்கள் விஷயத்தில் ஸ்வர்க்காதிகளும் அநிஷ்டங்களாகையால், அந்த ஸ்வர்க்காதிகளை ஸாதித்துக்கொடுக்கக்கூடிய ஜ்யோதிஷ்டோமாதிகளான கர்மங்களும் பாபங்களே; லௌகிக வ்யவஹாரத்தில் இம்மாதிரியான கர்மங்களை ஸுக்ருதமென்று சொன்னாலும், அவைகள் பாபங்களென்றே பரமாத்ம ப்ரகரணங்களில் வ்யவஹரிக்கப்படுகின்றன என்பதுதான். ஆகையால், அபஹத பாப்மத்வமாவது - ஸுக்ருதமாக இருந்தாலும் துஷ்க்ருதமாக இருந்தாலும், தங்களுடைய பலங்களைக் கொடுக்கவொட்டாமல் அந்தக் கர்மங்களைத் தடுக்கக்கூடிய ஓர் ஸ்வபாவ விசேஷம்; அதாவது - கர்மத்திற்கு வஸ்யமாகாமலிருக்குந்தன்மையென்று ஏற்படுகிறது.

இம்மாதிரியாகவே 'விஜர:', 'விம்ருத்யு:', 'விசோக:', விஜிகத்ஸ:', 'அபிபாஸ:' என்கிற பதங்களும் - கிழத்தனம், மரணம், துக்கம், பசி, தாஹம் முதலிய ப்ராக்ருதி ஸம்பந்தமான தோஷங்கள் ஒன்றுமில்லாதவன் என்கிற அர்த்தத்தைக் கொடுக்கின்றன. 'ஸத்யகாம:' - ஸத்யங்களாக இருக்கும் காமங்களை உடைத்தாயிருக்கிறவன். 'ஸத்யங்கள்' என்றால் 'நித்யங்கள்' என்று அர்த்தம். 'காமங்கள்' என்கிற பதம் - போகோபகரண ரூபமாயும், போக ஸ்தாந ரூபமாயு மிருக்கும் நித்ய விபூதியைக் காண்பிக்கிறது. ஆகையால், 'ஸத்யகாமன்' என்கிற பதத்திற்கு - "தத்க்ஷரே பரமே வ்யோமந்" என்கிறபடி 'நித்ய விபூதியை யுடையவன்' என்பது அர்த்தமாகிறது. 'ஸத்ய

ஸத்யஸங்கல்ப:' என்றால் 'தடைப்படாமலிருக்கும் ஸங்கல்பத்துடன் கூடியவன்' என்று அர்த்தம்; அதாவது - அவன் ஸங்கல்பித்தால் அந்த ஸங்கல்பம் நிறைவேறாமல் வீணாவதில்லை.

இப்படி முதல் ஆறு பதங்களால் ஈஶ்வரனிடத்தில் ஹேய குணங்களில்லையென்றும், மற்ற இரண்டு பதங்களால் ஈஶ்வரனிடத்தில் கல்யாண குணங்கள் நிறைந்திருக்கின்றனவென்றும் சொல்லி, நிரஸ்த நிகில தோஷத்வம், கல்யாண குணாகரத்வம் ஆகிற இரண்டு லக்ஷணங்களோடு ஈஶ்வரன் பொருந்தினவன் என்று இந்த உபநிஷத் சொல்லுகிறது. இந்த ஶ்ருதியின் தாத்பர்யம் இது தான் என்பது, பின்வரும் ஸ்ரீபாஷ்ய வாக்யத்தால் நன்கு விளங்கும்:—"நிர்குண வாக்யானாம் ஸகுணவாக்யானாஞ்ச விஷயம் அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ இத்யுபக்ரம்ய ஹேயகுணாந் ப்ரதிஷித்ய 'ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:' இதி கல்யாணகுணாந் விதததீ இயம் ஶ்ருதிரேவ விவிநக்தி."

இப்படியே மற்றை உபநிஷத்துக்களிலும் அநேக வாக்யங்கள் தென்படுகின்றன. ஶ்வேதாஶ்வதரோபநிஷத்தில் "தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தேவதாநாம் பரமம் ச தைவதம் - ந தஸ்ய கார்யம் கரணம் ச வித்யதே ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே - பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச" என்கிற வாக்யமும் இந்த அர்த்தத்தையே காண்பிக்கின்றது. அதாவது - ஈஶ்வரன் நியந்தாவாகவும் தேவதையாகவு மிருக்கிறபடியால், அவன் ஜ்ஞாதாவென்றும், அவனுக்கு ஶரீரமும் இந்த்ரியம் முதலானவைகளும் இல்லையென்றும், மற்ற எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும் சொல்லிவிட்டு, இந்த ஶ்ருதி அந்த ஈஶ்வரனுக்கு ஜ்ஞாநம், பலம், நியமந ரூபமான க்ரியை இவையெல்லாம் ஸ்வாபாவிகம் என்று சொல்லுகிறது. முண்டகோபநிஷத்தில் "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" என்கிற வாக்யமும் ஈஶ்வரனுக்கு இருக்கும் ஜ்ஞாத்ருத்வத்



தையே காண்பிக்கிறது. 'ஸர்வ விஷய ஜ்ஞானமும் அவனுக்கு உண்டு, அந்தந்த வஸ்து ஸம்பந்தமான ஸர்வ ப்ரகார ஜ்ஞானமும் அவனுக்கு உண்டு' என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். தைத்திரீய உபநிஷத்தில் இருக்கும் "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ - ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் ந பிபேதி குதஶ்சந" என்கிற வாக்யம் ப்ரஹ்மத்தில் இருக்கும் ஆனந்தம் வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாததென்றும், அப்படிப்பட்ட ஆனந்தத்தைக் குணமாக வுடைய ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்தால் ஸர்வக்லேஶ பயத்திலிருந்தும் அத்யந்த நிவ்ருத்தி உண்டாகிறது என்றும் சொல்லி, ப்ரஹ்மத்திற்கு இருக்கும் ஆனந்தத்தைக் குணமாக வுடைத்தாயிருக்குந் தன்மையை வெளிப்படுத்துகிறது. சாந்தோக்ய உபநிஷத்தில் ஶாண்டில்ய வித்யையில் "ஸர்வகாம:" என்றும், "ஸர்வகந்த: ஸர்வரஸ:" என்றும் சில வாக்யங்களிருக்கின்றன. அவைகளின் தாத்பர்யமும், ஈஶ்வரனிடத்திலிருக்கும் கல்யாண குணங்களையே வெளியிடுகின்றது. 'ஸர்வகாம:' என்றால் - "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்கிறபடி அப்ராக்ருதமான கல்யாண குணங்கள் நிரம்பிய காந்தியுடன் கூடிய விக்ரஹத்தை யுடையவன்' என்று அர்த்தம். 'ஸர்வகந்த: ஸர்வரஸ:' என்பது - 'அப்ராக்ருதமான ஸர்வவித கல்யாண கந்தமும் ரஸமும் நிரதிஶயமாக அவனுக்கு உண்டு' என்பதைக் காண்பிக்கிறது. மறுபடியும் ஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில் இருக்கும் "நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்" என்கிற வாக்யமும் 'ஈஶ்வரனிடத்தில் தோஷகந்தமும் கிடையாது' என்பதைச் சொல்லி, அவனுடைய நிரஸ்த நிகிலதோஷத்வத்தை ப்ரகாஶிப்பிக்கின்றது. இப்படி பலமுறையாக ஶ்ருதிகள் ஓதுகிறபடியால், ஈஶ்வரனுக்கு இவ்விதமான இரண்டுவித லக்ஷணமுண்டு என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டியதுதான்.

ஆனால், 'இந்த ப்ரபஞ்சத்திலுள்ள ஸகல பதார்த்தங்களும் அவனுடைய ஶரீரம், அவன் ஸகலத்திற்குள்ளும் ப்ரவேஶித்து இருக்கிறான்' என்று ஶ்ருதி சொல்லுகிறதே! 'அசேதநமான பதார்

த்தங்களுக்குள்ளும் அவன் இருக்கவேண்டிவருமே! அப்படிக்கு வந்தால் அந்த அசுத்தம் அவனை எப்படி ஸ்பர்ஶிக்காமலிருக்கும்? தாபத்ரயத்தில் அகப்பட்டு வருந்தும் நமக்குள்ளும் அவன் இருக்கிறபடியால் நம்முடைய கஷ்டம் அவனை எப்படி கஷ்டப்படுத்தாமலிருக்கும்?' என்கிற ஓர் ஶங்கையொன்று உண்டாகலாம். இந்த ஶங்கைக்கு அவகாஶமில்லையென்பது, பின்வரும் விவரணத்தால் ஏற்படும். எந்த ஶ்ருதிவாக்யங்களைக் கொண்டு நாம் 'ஈஶ்வரன் ஸகலபதார்த்தத்திலும் அந்தர்யாமியாக ப்ரவேஶித்து நிற்கிறான்' என்று ஒப்புக்கொள்ளுகிறோமோ, அந்த வாக்யங்களிலேயே 'அந்த அந்த வஸ்து ஸம்பந்தங்கள் ஈஶ்வரனுக்கு உண்டாகிறதில்லை' என்று சொல்லியிருக்கிறது. "ய ஆத்மநி திஷ்ட²ந்..." "யஶ்சக்ஷுஷி திஷ்ட²ந்..." "யோ ரேதஸி திஷ்ட²ந்..." என்று ஆரம்பித்து ஈஶ்வரனுடைய அந்தர்யாமித்வத்தை விவரிக்கும் ஒவ்வொரு வாக்யத்தின் முடிவிலும், "ஏஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:" என்று அந்தர்யாமியாக நிற்கும் ஈஶ்வரனுக்கு அம்ருதத்வம் சொல்லி 'அவ்வவ்விடங்களில் ஸ்வேச்சையாகவே நியமநம் செய்துகொண்டிருக்கிறான்' ஈஶ்வரன், என்பதை வ்யக்தமாகத் தெரிவித்திருக்கிறது. ஆனால், 'நாம் ஸ்வேச்சையாக அக்நியைத் தொட்டால் அது நம்மைச் சுடாதா? ஒரு வஸ்துவின் ஸம்பந்தத்தை நாம் ஸ்வேச்சையாக அங்கீகாரம் செய்து கொண்டபோதிலும், அந்த வஸ்துவுக்கு ஸ்வபாவமாக இருக்கும் அபுருஷார்த்தம் நம்மைத் தொடாமல் எப்படி விலகிநிற்கும்?' என்று கேட்கலாம். இது யுக்தமன்று. கர்மவஶ்யர்களாக இருக்கும் நமக்கன்றோ இந்த ந்யாயம்? ஒரு வஸ்து அபுருஷார்த்த ஸ்வரூபமாகத் தோன்றுவது நம்முடைய கர்மாயத்தம். எவ்வளவு இடங்களில் ஒரு வஸ்துவே சில காலங்களில் ஸுகத்தின் பொருட்டும், மற்றும் சில காலங்களில் துக்கத்தின் பொருட்டும் ஆவதை நாம் பார்த்திருக்கிறோம்? அதே மாதிரி ஒரேவஸ்து புருஷபேதத்தாலும் ஸுகஹேதுவாகவும் துக்கஹேதுவாகவும் தோன்றுகிறது. இந்தத் தோற்றமெல்லாம் நம்முடைய கர்மத்தின் பலம். ஸ்வாதீநனாக இருக்கும் பரப்ரஹ்மத்திற்கோவென்றால், எந்த வஸ்துவுடன் ஸம்பந்தம் சேர்ந்தாலும், அவ



னுடைய விசித்ர நியமநத்தின் பொருட்டு ஆகுமேயொழிய அபுருஷார்த்தத்தின்பொருட்டு ஒருகாலும் ஆகாது.

நல்லது: "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம" என்கிற வாக்
யங்கள் 'ப்ரஹ்மம் ப்ரகாஶத்தையே ஸ்வரூபமாக உடைத்தாயிருக்
றது' என்று ப்ரதிபாதிக்கின்றன; அப்படியிருக்க, ஸர்வஜ்ஞத்வம்,
ஜகத்காரணத்வம், ஸர்வாந்தராத்மத்வம், ஸத்யகாமத்வம், ஸத்ய
ஸங்கல்பத்வம் முதலிய கல்யாண குணங்கள் அவனிடம் இருக்கின்
றனவென்று நாம் எப்படி ஒப்புக்கொள்ளக்கூடும்? மேலும் ப்ரு
ஹதாரண்யக உபநிஷத்தில் நாலாவது அத்யாயம் மூன்றுவது ப்ரா
ஹ்மண ஆரம்பத்தில் 'ப்ரஹ்மத்திற்கு இரண்டு விதமான ரூப
முண்டு' என்று உபக்ரமித்து, அவைகளைக் கடிநம் அகடிநம், நஶ்
வரம் அநஶ்வரம், வ்யாபகம் அவ்யாபகம், ப்ரத்யக்ஷமாக அறியக்
கூடியவை அப்படி அறியக்கூடாதவை என்கிற விஶேஷங்களைக்
கொண்டு விஸ்தாரமாக உபபாதநம் செய்தபிறகு, "அதா²த
ஆதே³ஶோ நேதி நேதி" என்று ஒருவாக்யம் தென்படுகிறதே;
அதன் அர்த்தம் 'முந்திச் சொல்லப்பட்டதெல்லாம் அப்படிக்கு
இல்லை, அப்படிக்கு இல்லை.' என்பது அன்றோ? அதாவது -
அப்படி வர்ணித்ததெல்லாம் பொய் என்று ஏற்படவில்லையா?
இந்த வாக்யபலத்தினால், கல்யாணகுணங்களைச் சொல்லும் வாக்
யங்களெல்லாம் மித்யாபூதங்களான குணங்களைச் சொல்லுகின்றன
என்று நாம் அறியவேண்டியதில்லையா? என்று கேட்கலாம்.

இதற்கு ஸமாதாநமாவது:—"ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம"
என்கிற வாக்யம் ப்ரஹ்மத்திற்கு ப்ரகாஶஸ்வரூபமிருக்கிறது என்
பதை மாத்திரம் சொல்லுகிறதேயொழிய, வேறு வாக்யங்களால்
ஏற்படும் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலான கல்யாணகுணங்கள் ப்ரஹ்
மத்திற்கு இல்லையென்று நிஷேதிக்கவில்லை. கல்யாண குணங்களை
அங்கீகரிக்காவிட்டால், அவைகளை ப்ரதிபாதிக்கும் வாக்யங்களு
க்கு வையர்த்யம் ஸம்பவிக்கும். ஆகையால், ப்ரகாஶ ஸ்வரூபத்
தை ஒப்புக்கொள்வது போலவே கல்யாண குணங்களுடன் கூடி
யிருக்குந் தன்மையையும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

"[illegible]" என்கிற வாக்யத்திற்கு முற்கூறியது சரியான அர்த்தமன்று. அந்த ப்ருஹதாரண்யக உபநிஷத், "[illegible]" என்று ஆரம்பித்து ஸமஸ்தமான ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமான ப்ரபஞ்சமும் ப்ரஹ்மத்தின் ரூபமென்று சொல்லி, "[illegible]" என்பதனால் ஆகார விசேஷத்தையும் சொல்லி, "[illegible]" என்கிற வாக்யத்தை ப்ரஸ்தாவித்திருக்கிறது. இப்படி அநேக வாக்ய ஜாதங்களால் ஸகல ப்ரபஞ்சத்தையும் ப்ரஹ்மத்திற்கு விசேஷணமாக விஸ்தரித்து ப்ரதிபாதநம் செய்துவிட்டு, முடிவில் 'இவ்விதமாகச் சொன்னது எல்லாம் அப்படியில்லை' என்று எவன் சொல்வன்? ஆகையால், அந்த அர்த்தம் ஸமஞ்ஜஸமன்று. சரியான அர்த்தம் என்னவென்றால்—'ப்ரஹ்மத்திற்குச் சில விசேஷங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவே; இவ்வளவுதானோ விசேஷங்கள்? இன்னும் உண்டோ?' என்கிற சங்கை வந்து, 'இவ்வளவுதான் என்பது இல்லை, இன்னும் வாங்மநஸ்ஸுக்கு எட்டாமல் எவ்வளவோ இருக்கின்றன' என்பதைத்தான் இந்த வாக்யம் சொல்லுகின்றது. '[illegible]'—இப்பொழுது ஓர் உபதேசம் செய்யப்படுகிறது; '[illegible]'—சொல்லப்பட்ட ப்ரகாரங்களோடு மாத்திரம் கூடினது அன்று ப்ரஹ்மம். இவ்விடத்தில் '[illegible]' சப்தத்தால், ப்ரஹ்மத்திற்குச் சிலப்ரகாரங்களைச் சொல்லி அவைகளால் ஓர் அளவு தோற்றிற்றே, அந்த அளவு சொல்லப்படுகிறது. ஆகையால், '[illegible]' என்பதற்கு 'அந்த அளவு இல்லை' என்று அர்த்தம். ப்ரஹ்மத்திற்கு ப்ராக்ருத விசேஷணங்களால் தோன்றும் அளவை இவ்விதமாக ப்ரதிஷேதித்த பிறகு, இந்த உபநிஷத் என்ன சொல்லுகின்றது என்றால்:—"[illegible]" '[illegible]'—'இவ்விதமாக அளவுடன் கூடினது



அன்று என்று' எந்த ப்ரஹ்மம் சொல்லப்பட்டதோ, '[illegible]'-'அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உத்க்ருஷ்டமான வேறு வஸ்து கிடையாது' என்றும், "[illegible]"—ஸத்யத்திற்கு ஸத்யம் இந்த ப்ரஹ்மம், அதாவது - ப்ராணன் என்னும் ஜீவன்கள்தான் ஸத்யம், அந்த ஜீவன்களைவிட இந்தப் பரப்ரஹ்மம் இன்னும் ஸத்யம்: [கர்மத்திற்குத் தகுந்தவிதமாகவே ஜீவன்களுக்கு ஜ்ஞாநக்குறைவும் வ்ருத்தியும் ஏற்படுகின்றன; ப்ரஹ்மத்திற்கு அதுவும் இல்லையென்று தாத்பர்யம்.] என்றும் சொல்லி, ப்ரஹ்மத்திற்கு இன்னும் முள்ள கல்யாண குணங்களின் ஸம்பந்தத்தை விவரிக்கின்றன. முதலிற் சொன்னபடி ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்பட்ட ப்ரகாரங்களையே '[illegible]' என்கிற வாக்யம் தடுக்கும் பக்ஷத்தில், இந்த வாக்யங்களெல்லாம் பாதிக்கும். இந்தக் காரணங்களால் '[illegible]' என்கிற வாக்யம் கல்யாணகுண வைசிஷ்ட்யத்தை ப்ரதிஷேதிக்கவில்லை என்று சொல்லவேண்டும். ஆகையால், அந்தப் பக்ஷத்தைக்கொண்டு குணங்களைப் பொய் என்று சொல்ல முடியாது.

ஆகையால், ப்ரஹ்மத்தினிடத்தில் [illegible], [illegible] ஆகிற இரண்டு லக்ஷணமும் அந்வயிக்கும்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# ஸ்ரீபாகவத தனிஸ்லோகீ.

(தொடர்ச்சி.)

௨௭. நிவ்ருத்ததர்ஷைருபகீயமாநாத் பவௌஷதாச் ச்ரோத்ரமநோபிராமாத் - க உத்தமச்லோககுணாநுவாதாத் புமாந் விரஜ்யேத விநா பசுக்நாத் ||

"பத்தாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவவாதிந:" என்கிறபடியே தொழுது உகந்து தோத்திரங்கள் பாடி உழலுகிற முக்தைஸ்வர்யத்தைப் பகவான் தருவதாயிருந்தாலும், "அவன் பெயரெட்டெழுத்தும் வாரமாகவோதுவார்கள் வல்லர் வானமாளவே", "ஆண்மின்கள் வானக மாழியான்தமர்" என்கிறபடி பரமபதநாதன் ஐஸ்வர்யத்தையே தருவதாயிருந்தாலும், "இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று சொல்லும்படியன்றோ நிற்கிறது, பகவானுடைய குணாநுவாதத்தின் ருசி. "ஆவலிப்புடைமை கண்டாய்", "நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடையநம்பி", "குலந்தருஞ் செல்வந்தந்திடும் அடியார்படுதுயராயினவெல்லாம், நிலந்தரம் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும், வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதாயினுமாயின செய்யும், நலந்தருஞ் சொல்", "ஸதாவதாஸ்மி ஸேவா நிஷ்ப்ரத்யூஹாய பூஸ்ஸம் ஸம்கீர்த்தநம் ஸமவேதா குணகீர்த்தநம் - ஸ்ரீமத்பாதாரவிந்தஸேவாநிரதோ நாராயணேதி ஸ்மரணம் உபைதி கீர்த்திம்" என்றார்களிறே!

க உத்தமச்லோககுணாநுவாதாத் - முற்கூறியதை அநுஸரித்துச் சொல்லுவதிலிருந்து: அதாவது - "அறிந்தன வேதவரும் பொருளுள்



கள்" என்றும், "எங்கனுமாக மெய்ய நின் வியப்பே, அங்கனேயொக்க வறிவதாரணமே" என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமான் பெருமையை உள்ளபடியே அறியவல்ல வேதங்களும் வைதிக புருஷர்களும் சொன்னதைக்கொண் டேத்தலாமத்தனை போக்கி, பரிமிதஜ்ஞாந ஶக்தியையுடையவர்களான நாம் ஸ்வயமாய் அறியவும் ஸ்துதிக்கவும் கூடாதவர் என்று கருத்து. "பேசிற்றே பேசிலல்லால் பெருமையொன்றுணரலாகா, ஆசற்றார் தங்கட்கல்லாலறியலாவானுமல்லன், மாசற்றார் மனத்துளானை வணங்கிநாமிருப்பதல்லால், பேசத்தானுவதுண்டோ பேதை நெஞ்சே நீ சொல்லாய்"—வேதங்களாலும் வைதிகபுருஷர்களாலும் பேசப்பட்டதே நம்மால் பேசமுடியுமே அல்லது, ஏகதேஶமும் அவனுடைய மஹிமை நம்மால் அறியமுடியாது. "ஸஸம்ஶயாந் ஹேதுபலைர் த்யஜ்ய ஸர்வாந் ஸ்தாயீ வஸதி ஶாயத:" - "ராமாதிஷு ஸந்நிஹிதே தஸ்மின் நாஸ்தி ஶயா ஸந்நிதிஷு நம:" - "ஸஞ்ஜாயதே ஸர்வம் ஹேலா கஷாயகலிதோ ஸம்ஸார ஸர்வக்ஷணம்" என்கிறபடியே காமக்ரோதங்களாலும் ஸ்ருதிவக்த்ரி முதலான தோஷங்களாலும் கலக்கமற்றவர்கள் மனத்தில் வஸிக்கிற ஸர்வேஸ்வரனை அவனுடைய ஐஸ்வர்யத்திற்குத் தோற்று வணங்கவேண்டியதொழிய, பேசுவதென்றால் நம்மால் ஶக்யமாவதொன்றோ?

பசுக்நாத் விநா - பசுவைக் கொல்லுகிறவனைத் தவிர. "ஸர்வதேவமயீ" என்று ஸர்வதேவ ஸ்வரூபமாயும், பஞ்சகவ்யாதிகளாலும் கண்டூயநாதிகளாலும் ஸர்வபாப நிவ்ருத்திகரமாயும், பால் தயிர் முதலியவைகளால் ஸர்வோபகாரகங்களாயுமிருக்கிற பசுவை எவன் கொல்லத்துணிவனோ, அவனைத்தவிர என்று அர்த்தம். அன்றிக்கே, "அபசுக்நாத்" என்று பதம்பிரிப்பதுமுண்டு. அப்பொழுது, 'அபசு' என்றால் ஆத்மா என்று அர்த்தம், "யஸ்த்வா அபஹதபாப்மா" என்கிறபடி ஆத்மா துக்கமற்றிருப்பதனால்; அப்படிப்பட்ட ஆத்மாவைக் கொல்லுகிறவன் 'அபசுக்ந:'. ஆத்மாவைக் கொல்லுகிறதாவது—"அஸ

[illegible] - [illegible] [illegible]" என்றபடி ப்ரஹ்ம விஷயக ஞானமிருந்தால் ஆத்ம ஸத்தை உண்டு; அந்த ஞானமில்லாவிடில் ஆத்ம ஸத்தையில்லை என்கிற அபாயம் நிற்கிறபடியால் அந்த ஞானமற்றவனையே ஆத்மாவைக்கொன்றவன் என்று சொல்வது ப்ரஸித்தம். இவ்வர்த்தத்தையே, "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்று திருமழிசையாழ்வாரும் அருளிச்செய்தார். ஆகையால், 'ஆத்மஹா' என்றால் ப்ரஹ்மஞானமில்லாமல் ஆத்மாவை நாசஞ்செய்தவனைத்தவிர என்று அர்த்தம்.

[illegible] - எந்த மனிதன். "ஆன்விடை யேழடர்த்தார்க் காளானாரல்லாதார், மானிடவரல்லரென் றென்மனத்து வைத்தேனே"—ப் பின்னைப் பிராட்டிக்கு ஸ்வ ஸம்ஶ்லேஷ விரோதிகளாய்ச் சேர்ந்த எழு எருதுகளையும் முறித்த ஆஶ்ரித ரக்ஷணனான ப்ராணனுக்கு ஸதுகுதாஸ்யத்தை அங்கீகரியாதவர்கள் மனுஷ்யரல்லர். "[illegible] [illegible] [illegible]", "சரணமடைந்த தருமனுக்காப் பண்டு நூற்றுவரை, மரணமடைவித்த மாயவன் தன்னை வணங்க வைத்த, கரணமிவை யுமக்கன்று" இத்யாதிகளின்படியே இவைகளைப் பகவதேக ப்ரவணங்களாக்கி உஜ்ஜீவிக்க என்று ஸர்வேஶ்வரன் தன் நிருபாதிக க்ருபையாலே தந்தருளின கரணகளேபரங்களைக்கொண்டு, "திருக்கோட்டியூர் திருமாலவன் திருநாமங்க, ளெண்ணாக் கண்ட விரல்களால் இறைப்பொழுது மெண்ணகிலாதுபோய், உண்ணக்கண்ட தம்மூத்தை வாய்க்குக் கவளமுந்துகின்றார்களே" என்றபடியே, விஷய ப்ராவண்யம் ஸம்பாதித்தும் பாபங்களை விளைவித்துக்கொண்டு மனுஷ்ய ஜன்மத்தின் ப்ரயோஜனத்தை இவர்கள் அடையாமற் போய்விடுகிறார்களே என்பதுபற்றி இவர்களை 'மானிடவரல்லர்' என்றோராகவுமாம். ஆறு கடக்கக்கொடுத்த தெப்பத்தைக் கொண்டு அவ்வாற்றின் நீர்வழியே போய் ஸமுத்ரத்தில் புகுவாரைப்போலவும், ஶத்ருவை ஒழிப்பதற்காகக் கொடுத்த கத்தியைத் தன் கழுத்தில் வைத்துக் கொண்டு உயிரை மாய்த்துக்கொள்ளும் மூடனைப்போலவு



ம் நிற்கிறார்கள் இவர்கள்? "[illegible] [illegible] - [illegible] [illegible]" என்றபடி ஸம்ஸார ஸாகரத்தினின்றும் தாண்டி அக்கரை சேருகிறதற்குக் கொடுக்கப்பட்ட இந்த மனுஷ்ய ஜன்மத்தை வேறு விஷயங்களில் ப்ரயோஜனப்படுத்துகிறவர்கள் மானிடரல்லரே. அன்றிக்கே, "ஜ்ஞாநம் விஶேஷோ [illegible] நராணாம் ஜ்ஞாநேந ஹீநா: பஶுபி: ஸமாநா:" என்றபடியே விஶேஷாகாரமான ஞான மில்லாமையாலே இவர் இவர்களுக்கு மற்றவர்கள் மானிடரல்லரென்றோராகவுமாம். இவர்களுக்கு மற்ற விஷயங்களில் ஞானமிருந்தாலும், "[illegible] [illegible]" என்று சொல்லப்படுகிற ப்ரஹ்மஞான மில்லாமையாலே ஞானமில்லையென்ன தட்டில்லையிறே. ஆக '[illegible]' என்றால் 'எந்த ஞானமுள்ளவன்' என்று அர்த்தம்.

[illegible] - த்ருப்தி யுடையவன்? "கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றும் கேட்பரோ" என்றும், "[illegible] [illegible]" என்றும், "கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாயே" என்றும், காதுபடைத்ததற்கு ப்ரயோஜனமாயும், "கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லை" யும், "[illegible] [illegible]" என்றபடி போக்யமாயும் இருக்கிற இந்த விஷயத்தில் போதுமென்று த்ருப்தியடைபவர்களும் உண்டோ? என்று தாத்பர்யம்.

ஆக, இந்த ஶ்லோகத்தால், பகவத்கதா ஶ்ரவணத்தில் விமுகராயிருப்பவன் ஆஸுரப்ரக்ருதியாகையால், "[illegible] - [illegible]" என்கிற பகவத் ஸங்கல்பத்துக்கு இலக்காவனென்று கருத்து.

(முற்றிற்று.)

ஸ்ரீ. நரஸிம்ஹாசாரியர்.

ஸ்ரீ:

# திராவிடவேத தாத்பரியம்.

21. முதல் சஞ்சிகையில் நான்காவது பாராவில் 'திருவாய்மொழியை இரண்டு பிரகாரமாய் விசாரிக்கலாம்' என்று சொன்னோமல்லவா? பகவானுடையவும், ஜீவாத்மாவினுடையவும், மோக்ஷத்தினுடையவும், விரோதியினுடையவும், நாம் அநுஷ்டிக்க வேண்டிய மார்க்கத்தினுடையவும் ஸ்வரூபத்தைத் திருவாய்மொழியில் எப்படி வெளியிட்டிருக்கிறது என்பதை முதல்பிரகாரமாக இதுவரையில் காண்பித்தோம். இப்போது பகவத்குணங்களை ஆழ்வார் அநுபவித்த கிரமத்தையும் முக்கியமாய் எந்த எந்தத் திருவாய்மொழியில் எந்தஎந்தப் பகவத்குணத்தை எப்படி அநுபவித்தார் என்பதையும் இன்னொரு பிரகாரமாய் வெகு சுருக்கமாய்ச் சொல்லலாம். ஆழ்வாருடைய அநுபவத்தில் ஒருவிதமான தொடர்ச்சியிருப்பதை அறிவதற்காகவும், திருவாய்மொழி போகிறமாதிரி தெரிகிறதற்காகவும், முதற்பத்தில் கொஞ்சம் விவரமாக எல்லாத் திருவாய்மொழிகளையும், மற்றைப் பத்துக்களில் முக்கியமான சில திருவாய்மொழிகளையும் எடுத்துக்கொண்டு சொல்வோம்.

(1.) எம்பெருமான் குணத்தையும் ஸ்வரூபத்தையும் ஐசுவரியத்தையும் தனித்தனியில்லாமல் மொத்தமாகப் பொதுவாய்த் திரள "உயர்வற உயர்நல முடையவன்" என்று ஸர்வேசுவரனுடைய பரத்வத்தை முதல் திருவாய்மொழியில் அநுபவித்தார்.

(2.) இப்படி பகவான் அளவிடக்கூடாத இவ்வளவு உயர்ந்தவன் என்றால், நம்மால் அடையக்கூடாதவனோ? என்று தோன்றலாம். அப்படியல்லவென்றும், ஸகல ஜனங்களும் பகவத்பக்தராக வேண்டுமென்றும், இதர விஷய வைராக்யத்தை முன்னிட்டுக்கொண்டு பகவத்பக்தியால் அவனை அடையலாம் என்றும், "வீடுமின் முற்றவும்" என்று இவை, வேர் முதல் மாய்த்து, இறைசேர்மின்"



என்று பரோபதேசம் செய்துகொண்டு பஜநீயன் என்பதை I. 2-ம் திருவாய்மொழியில் அநுபவித்தார்.

(3.) பக்தி பண்ணலாம், பக்தி பண்ணத்தகுந்தவன் என்று சொன்னால் போதுமோ? இருகையுமில்லாத ஒரு முடவனை யானை ஏறு என்றால் என்ன உபயோகம்? அப்படிச் சொல்வதிற் இல்லாமல் அந்தப்பகவானே நித்தியமான தனது குணத்துக்கு யாதொரு குறையுமில்லாமல், மனிதர்கள் நேரில் பார்க்கும்படியான மநுஷ்யாவதாரம் செய்தவன் என்று அவனது ஸௌலப்யமென்னும் குணத்தை மூன்றாம் திருவாய்மொழியில் "பிறவாமல் பலபிறப்பாய்" என்று அநுபவித்தார்; இப்படி மானிடப்பிறவி பிறந்ததினாலேயே, இவன் இடையன் தாழ்ந்தவன் என்று துர்யோதனாதிகள் போன்ற மூடர்கள் மாத்திரமே சொல்லும்படிக்கும், பீஷ்மர் தர்மபுத்திரர் வியாஸர் முதலானவர்கள் இவ்வளவு பெரியவன், தாழ்ந்த ஜன்மத்தில் நமக்காகப்பிறந்தானே என்று ஆச்சரியப்பட்டுப் பக்திபண்ணுவதற்கும் அந்த எளிமையே காரணமாகிறது. "பத்துடையடியவர்க்கு எளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்" என்று அநுபவித்தார்; இந்த ஸௌலப்யத்தைக் காண்பிக்கும் கண்ணனுடைய நவநீத சௌரியத்தில் ஈடுபட்டு "வெண்ணெய்களவினில் உரவிடையாப்புண்டு + எங்ஙனே எளிவு + எத்திறம்" என்று மோஹித்து ஆறு மாஸம் மூர்ச்சையிலிருந்து தானே தெளிந்து, 'பிரஹ்மாவுக்குக் கிடைக்காத எம்பெருமானுடைய மூவுலகளந்த திருவடித்தாமரைகளை உபதேசமில்லாமல் நான் அடையப்பெற்றேன்' என்று "பெருநிலங்கடந்த நல்லடிப்போது, அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்" என்று சொன்னார்.

22. அவன் பராத்பரனுமட்டுமன்று; பஜநீயன்; பஜநீயனுக்கு அவதாரங்களைச்செய்த எளிமையுடையவன் என்றுசொன்னார். அவன் அவ்வளவு ஸுலபனாயிருந்தாலும் நாம் கணக்கில்லாத அபராதத்தைச் செய்தவர்களாயிருக்கிறோமே யென்று பயப்பட வேண்டாம். ஸ்ரீராமாயணத்தில் ஸுக்ரீவன், தன்பட்டாபிஷேகத்துக்குப்பின்பு ராமலக்ஷ்மணர்களை மறந்து சிற்றின்பத்தில் அழுந்திக் குடித்துக்கொண்டு காலக்ஷேபம் செய்து இவர்களுடைய காரியங்களைக் கவனியாமலிருக்க, இவர்களுக்குக் கோபம்வர— "[illegible]" [நீங்கள் கிருபா ஸமுத்திரமா [illegible], அந்தக் கிருபையால் ஸஹிக்காத தப்பிதம் இருக்

றந்தோ] என்று தானே சொன்னதுபோல, "திருவடியின் தகவினுக்கு என் பிழைத்தான்" தேவர் திருவடிகளால் பொறுக்கக் கூடாத அபராத முண்டோ? என்று அவனுடைய அபராத ஸஹத்வம் என்கிற குணத்தை I. 4 - திருவாய்மொழியில் ஆழ்வார் அநுபவித்தார்.

23. இப்படி ஆழ்வார் கூப்பிட, அவன் இவரிடத்தில் கிருபை கூர்ந்தவர, தமது முன்னைய அவஸ்தை தெளிந்து தம்முடைய தாழ்ச்சிக்கும் அவனுடைய உயர்வுக்கும் பார்த்து, தான் நீசன், தனது ஸம்பந்தத்தால் அவனுக்குக் கெடுதல் உண்டாகும் என்று இவர் பயப்பட, அப்படியன்று, ஆச்ரிதரின் த்ரவியமே தனக்குத் தாரகம் என்று 'தான் ஸௌசீல்யமுடையவன், தான் உயர்ந்திருந்தாலும் அது பாராட்டாமல் ஒருநீராகக் கலக்கும் ஸ்வபாவமுடையவன்' என்று "வளவேழுலகு" என்னும் திருவாய்மொழியில் "இமையோர் பலரும் முனிவரும் + வணங்கினால் உன்பெருமை மாசூணாதோ" என்று சொல்லி "உண்டாய ஏழுலகும் + உண்டாய் வெண்ணெய் + சிறிதும் அண்டாவண்ணம் கண் கரைய நெய்யூண் மருந்தோ மாயோனே" என்று கீழ்ப்பட்ட இடைச்சி தொட்ட வெண்ணெய் அவருக்குத் தாரகமா யிருப்பதை அநுஸந்தித்து ஆச்வஸித்தார்.

அவன் அபராதத்தையும் ஸஹித்தாலும், சில குணத்தை யுடையவனா யிருந்தாலும் அவனைப் பக்திபண்ணுவது மகா கஷ்டமான காரியமோ? என்னும் ஸந்தேஹத்தை நிவர்த்திக்கிறார், ஆறாந் திருவாய் மொழியில்.— "பத்ரம் புஷ்பம் ஃபலம் தோய மக்ரீத ஸுலபம் [illegible] [illegible] ஸதா" [என்னை ஆராதிக்க, ஸாதாரண சுத்த ஜலமும் பழமும் மலருமே போதும். மனத்தில் சுத்தமான பக்தி தவிர, வேறு வேண்டாம். அப்படி பக்தியுடன் அளிக்கும் வஸ்துவை, யாதொன்றும் குறைவில்லாத நான், பக்தன் ப்ரேமத்தால் கலங்கித் தருவது போல் நானும் அவனிடத்திலிருக்கும் மஹாப்ரீதியால், ஒன்றுமில்லாதவன் புஜிப்பதுபோல அடைவுகெடப் புஜிக்கிறேன்] என்று கீதையில் வெளியிட்ட ப்ரகாரம் "நல்நீர் தூய், புரிவதுவும் புகை பூவே" என்று சொல்லி, அவன் ஸ்வாராதன் என்று ஆராதனையின் ஸ்வல்பதையை வெளியிட்டு, 1. 7 - ல் 'அந்த ஆராதனம் ஸுகருபம்—பாலே மருந்தாகு மதுபோல—ஆராதிக்கும் போதே



ஒருகஷ்டம் தோன்றாமல் ஆநந்தத்துடன் கூடியிருக்கும், "தூய அமுதைப்பருகிப் பருகி யென் மாயப்பிறவி யறுத்தேன்" என்று அவன் ஆராதனம் ஸுகருபம் என்று வெளியிட்டார்.

சிறியாருக்குத் தான் கண்ணுக்குத் தோன்றும்படி தாழ விடுதல் - ஸௌலப்யம். தாழவிட்டோம் என்று மனத்தில் கொஞ்சமும் தோன்றாமல் ஒரு நீராய்க் கலக்கை - ஸௌசீல்யம். இப்படிக் கலக்குமவன், பத்தர் (ஸம்ஸாரி), முக்தர், நித்யர் என்று சொல்லப்பட்ட மூன்று விதமான சேதநரோடு தான் பரிமாறுமிடத்தில், அவர்அவர்களுக்குத் தகுந்தபடி தன்னை யமைத்துக் கொண்டு அநுபவிக்கப்பண்ணும் ஆர்ஜவ குணத்தை ஆழ்வார் 8-ம் திருவாய்மொழியில் "புன்னேறியோடும்", "தண்துழாய்சூடும்", "வேங்கட விண்ணோர் வெற்பன்" என்றும் அநுபவித்தார்.

அடுத்த ஒன்பதாந் திருவாய்மொழியில், இந்த ஆர்ஜவ குணாநுஸந்தாநத்தால், ஆழ்வாருடைய பக்திரூபமான ஜ்ஞானத்தை விசதமாக்கி ஆழ்வாரை ஸாத்மிக ஸாத்மிக (பொறுக்கப் பொறுக்க) அநுபவிப்பித்தார்.

முதல்பத்து 10 - ம் திருவாய்மொழியில் இப்படி அவன் தன் ஸ்வரூப குணங்களை அநுபவிக்கப்பண்ணுவதற்குக் காரணம் தன்னிடத்தில் யாதொன்று மில்லை, அவன் நிர்ஹேதுக கிருபையே முக்ய காரணம் என்று அநுஸந்தித்துக் கொண்டு, கீழ்த் திருவாய்மொழியிற் பிறந்த ஸம்ச்லேஷ ரஸத்தில் நிர்ஹேதுகத்வ அநுஸந்தாந பூர்வமாக ஸுகித்து, "எண்ணிலும்வரும்," "அந்த என்தானுமின்றியே யியலும்", "கல்லி என்னை விட்டான்", "மறப்பற என்னுள்ளே மன்னினான்தன்னை மறப்பனோ" என்று சொல்லி முடிக்கிறார்.

இப்பத்தால், பகவான் (1) ஸர்வஸ்மாத் பரன் (2) பஜநீயன் (3) ஸுலபன் (4) அபராதஸஹன் (5) சீலவான் (6) ஸ்வாராதன் (7) நிரதிசய போக்யன் (8) ஆர்ஜவ குணமுடையவன் (9) பொறுக்கப் பொறுக்கப் போகப்ரதன் (10) நிர்ஹேதுக கிருபையுடையவன் என்று அவன் குணங்களை அநுபவித்து, "துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" என்று முக்யமாய் முதற் பத்தால் (121 - பாட்டால்) இப்படிப்பட்ட குணமுடையவனது கைங்கரியமே நமது கடமை யென்று நிச்சயித்தார்.

24. பகவதநுபவமாகிற கல்வியின் ரஸத்தில் களித்து "தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுது மொத்தே", "எனதாவி உள் கலந்து, முன்னல் யாழ் + முதிர்சுவையே" என்று II. 3-ல் அநுபவித்து, அந்த அநுபவத்தை ஸம்ஸார ஸம்பந்த மல்லாத நித்ய ஸூரிகளோடு அநுபவிக்க வேண்டு மென்று "அடியார் குழாங்களோடு கூடுவது என்றுகொலோ" என்கிற ஆற்றாமை கனத்து நாயகி யவஸ்தையை "ஆடி யாடி" என்னும் II. 4-ல் அடைந்தார். ஸ்ரீராமாயணத்தில் ராமனுக்குப் பரதனை விட்டுப் பிரிந்த பிரிவில் தன்னோடுகூட இருந்த இலக்ஷ்மணன்கூட இல்லை போலவும், குஹப்பெருமாளுடன் சேர்ந்தபிறகுதான் லக்ஷ்மணனும் ஸீதையும் இருந்ததாகத் தோற்றிற்று — "கதாநு கலு ஸௌமித்ரிர்ஹஸிதேந ஸஹோதர: । ஸத்ருக்நேந ஸவீரேண ஸுபார்ஸ்வஸ்தேந ராகவ: । ஸங்கமேந ஸஹிதோ ராகவோ லக்ஷ்மணேந ஸஹ ஸீதயா"

பாகவதர்களின் சேர்க்கையும் பிரிவும் இப்படிப்பட்டது; அப்படிப் பெருமாளுக்கு அடியாருடன் கூடுவதும் பிரிவதும் தோற்றுவதுபோல II. 3-ல் அநுபவித்த அநுபவம் ஒன்று மில்லை, நித்ய ஸூரிகளோடு சேர்ந்து அநுபவம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

II. 3-ல் அவனுடன் கலந்தபின் பாகவதர்கள் பரியந்தம் ஆழ்வாருக்குப் ப்ரீதி சென்றது. அவன் ஆழ்வாரிடத்தில் செய்த ப்ரீதி இன்னும் அதிகம். பகவானுக்கு, இவர் எங்கே நைச்யாநுஸந்தானத்தால் தன்னைவிட்டு அகல்வரோ என்று மகா விடாயுடையவனாக, அப்படி நான் விடேன் என்று அவனுக்கு ஸமாதானம் இவர் பண்ணுகிறார்; அதாவது - பகவானுக்குப் பாகவதர்களிடத்திலிருக்கும் ப்ரேமம் பக்தர்களுக்குப் பகவானிடத்தி லிருப்பதைவிட மிகவும் அதிகம். "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அடியை அடைந்து உள்ளந்தேறி, ஈறிலின்பத்தில் யான் மூழ்கினன் விடுவேனோ உன்னை எங்ஙனம் விடுகேன்" என்று II. 6-ல் அநுபவித்தார்.

ஸ்ரீராமன் பஞ்சவடியில் எழுந்தருளினபோது 'நீரும் நிழலும் வாய்த்து உமக்குத் தகுந்த தாய்த் தோன்றுகிற இடத்தைப் பார்த்து ஒரு பர்ணசாலையைக் கட்டும்' என்று லக்ஷ்மணனை நியமிக்க, லக்ஷ்மணன் தன் தலையில் ஸ்வாதந்த்ரியத்தை வைத்தபோதே பெருமாள் கைவிட்டாரோ என்று நினைத்து, வருந்தி, பிராட்டி



முன்னிலையில் கையும் அஞ்சலியுமாய் நின்று, "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யஸே । ஸீதாஸௌக்ஷம் காகுத்ஸ்த ... அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே ।"— என்று கைங்கரியம் செய்யுமளவில், நான், என்னுடையது என்கிற தோஷம் கலவாத படி தேவரீருக்கு உசிதமாகத் தோற்றுமிடத்தில் இப்படிச்செய் என்று கைங்கரியங்களில் ஏவிக்கொள்ளவேண்டுமே யொழிய நான் பாரதந்த்ரிய முடையவன், ஸ்வதந்திரனல்லன் என்று விண்ணப்பம் செய்ததுபோல, II. 9-ல் 'பகவத்கைங்கரியம் நம்முடைய ஆநந்தத்துக்காக அன்று, பகவந் முகோல்லாஸத்துக்கே' என்று "எம்மாவீட்டுத்திறமும் செப்பம் செம்மாபாதபற்புத் தலைசேர்ப்ப, தனக்கே யாக என்னைக் கொள்ளுமீதே" என்று மோக்ஷ ஸ்வரூபமான பகவத் கைங்கரியத்தை ஸந்தேகமற நிஷ்கர்ஷித்தார். முதற் பத்தில் புருஷார்த்தமாக நிச்சயித்த பகவத் கைங்கர்யத்தின் ஸ்வரூபம் தன்னுடைய ஆநந்தத்துக்காகவன்றென்பதை இப்பத்தில் முக்கியமாக உபதேசித்தார்.

25. III. 2-ல் "அந்நாள் நீதந்த ஆக்கையின் வழி உழல்வேன், எந்நாள் யான் உன்னை இனிவந்து கூடுவேன்" என்று ஆழ்வார் ஆத்திரப்பட, 'நீர் அப்படிப் படவேண்டாம். பரமபதத்திலும் குணாநுபவம்தானே முக்கியம்; அங்குள்ளவர்களும் சீலாதி குணங்களை அநுபவிக்கிறது இவ்விடத்துக்கு வந்து தான்; விரோதியாகிற இந்த உடம்பே கைங்கரியம் பண்ணுகைக்கும் உபயோகம்' என்றும், 'திருமலையில் ஸர்வஸுலபனாய் நிற்கிற என்னை அநுபவியும்' என்றும், பகவான் அந்த நிலையை ஆழ்வார் ஸாக்ஷாத்கரிக்கும்படி பண்ண, III. 3-ல் திருவேங்கட முடையான் திருவடிகளில் ஸகலவித கைங்கரியம் செய்யவேண்டுமென்று "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும்" என்றும், "ஈசன் வானவர்க்கென்றால் அது தேசமோ திருவேங்கடத்தானுக்கு, நீசனேன் நிறையொன்றுமிலேன் என்கண், பாசம்வைத்த—பரஞ்சுடர்ச் சோதிக்கே" என்று பகவானுடைய வாத்ஸல்யகுணத்தை இத் திருவாய் மொழியில் அநுபவித்தார். இப்படிப்பட்ட வாத்ஸல்யத்துக்குக் காரணம், அவனுடைய ஸர்வாந்தர்யாமித்வம்.

ஸர்வதேச ஸர்வகாலத்திலும் ஸர்வஅவஸ்தையிலும் ஸகலவித கைங்கரியமும் செய்ய, ஆழ்வாருடைய பாரிப்புக்குத் தக்கபடி அவனும் ஸர்வ வஸ்துக்களுக்கும் தான் ஆத்மா என்று தன்னுடைய ஸர்வாத்மதையைக் காண்பித்துக் கொடுத்தான். இவருக்கு இந்த ஜகத்தில் ஆஸ்தையில்லாமற் போனாலும் எம்பெருமானுடைய ஐசுவர்யமாக ஸகல விபூதியையும் அவனில் அந்தர்பூதமாக அநுபவிக்கிறார். அர்ஜுநனுக்கு விச்வரூபம் காண்பித்தது போல இவருக்கு எம்பெருமான் III, 4-ல் காண்பிக்க, அதைப் பற்றிப் பேசுகிறார்.

'அவன் அரியன் என்றிருக்கவேண்டாம். அவன் எளியன்' என்று முன்னே I, 3-ல். தேவ மநுஷ்யாவதாரம் செய்தான் என்று சொன்னது போதாது. 'ஸம்ஸாரிகளுக்காக அர்ச்சாவதாரம் செய்து கோயில்களிலும் திருப்பதிகளிலும் அவதரித்திருக்கிறான்' என்றும், 'என்பக்தர்கள் எவ்விதமாக என்னைக்கோரி எவ்விதமாக என்னை அநுபவித்துத் தர்சிக்கவேண்டுமென்கிறார்களோ, அப்படியே அவர்களுக்குத் தக்கபடி என்னை அமைத்துக்கொண்டு அவர்களிஷ்டப்படி அவர்களுக்குத் தர்சநம் கொடுக்கிறேன்' என்று "யே யதா² மாம் ப்ரபத்³யந்தே தாம்ஸ்ததை²வ ப⁴ஜாம்யஹம்" என்று கீதையிலும் அர்ச்சாவதார விஷயத்தை வெளியிட்டபடியே, "நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள் கடல்வண்ணனே", 'யாதொன்றை அவனுக்கு ரூபமாக நினைத்தீர்களோ, அதையே அவன் திவ்யரூபமாகக் கொண்டருளுவன்' என்று III-6-ல் அர்ச்சாவதார ஸௌலப்யத்தை வெளியிட்டார்.

இப்படிப்பட்ட ஸௌலப்யத்திலும் நெகிழாத ஸம்ஸாரிகளின் ஸ்திதியைப் பார்த்து இவர் வருத்தப்படும்பொழுது எம்பெருமான் பாகவதர்களை ஆழ்வாருக்குக் காட்டிக்கொடுக்க, 'அவர்களுக்கும் அவர்கள் ஸம்பந்திகளுக்கும் அடிமைசெய்வதே உயர்ந்த கைங்கர்யம்' என்று பாகவதசேஷத்வ ஸ்வரூபத்தை நன்றாய் III. 7-ல் அநுபவிக்கிறார்; பகவத்பக்தியை விடப் பாகவத பக்தி விசேஷமென்று. — "க³ச்ச²தா மாதுலகுலம் ப⁴ரதேந ததா³நக⁴: । ஶத்ருக்⁴நோ நித்யஶத்ருக்⁴நோ நீத: ப்ரீதிபுரஸ்க்ருத:" என்கிற ராமாயண ச்லோகத்தின்படி, "பும்ஸாம் த்³ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்று, ராமனுடைய ஸௌந்தரியம் ஆண்களைப் பெண்ணுடை யுடுக்கும்படி ஆஸ்தை யுண்டாக்கத் தக்கது. அதில் ஈடுபட்டால் பரதபக்திக்கு ஏதாவது குறைவுபடுமோ? என்று ராமபக்தியைக்கூட வேண்டாம் என்றும், பரதனிடத்தில் பக்தியே விசேஷமென்று அநுஷ்டித்துக் காட்டியருளின சத்ருக்நன் நிலையை "சண்டாள சண்டாளர்களாகிலும் + எம்பிரான் தனக்கு அடியார் அடியார்தம் அடியார் அடியோங்களே" என்று III. 7-ல் உபதேசிக்கிறார். முதல்பத்தில் 'பகவத் கைங்கர்யம்தான் புருஷார்த்தம்' என்றும், இரண்டாம் பத்தில் 'அந்தக் கைங்கர்யம் தன்னுடைய ஆநந்தத்துக்கு அன்று' என்றும், இந்த மூன்றாம்பத்தில் 'அந்தக்கைங்கரியம் பாகவத கைங்கர்ய பர்யந்தம் முடியவேணும்' என்றும் அறிவித்தார்.



26. ப்ரஹ்மலோக முள்படச் சேர்ந்த ஐசுவர்யமும் ஆத்மாநுபவமும் தனக்கு வேண்டிய புருஷார்த்தம், 'வாழ்ந்த நாள் வாழ்ந்தே நிற்பர் என்ப தில்லை; ஸ்வர்க்கம் எய்தியும் மீள்வர்மள்; எல்லாம் விட்ட இறுக லிறப்பு (ஜீவாத்மாநுபவம்) என்னும் ஜ்ஞானிக்கும் பயனில்லை' என்றும் பகவதநுபவமே ஸ்வரூபத்துக்குத் தகுந்த புருஷார்த்தம் என்று IV. 1-ல் ஐசுவர்ய கைவல்யங்களை நிஷேதிக்கிறார்.

IV. 5-ல் 'இதுவே மோக்ஷம்' என்று சொல்லும்படியான பரமபதத்தில் தன் இருப்பை ஜ்ஞாந ஸாக்ஷாத்காரம் பண்ணும்படிக்கு நித்ய விபூதியையும், நித்ய ஸித்தர்களோடுகூட இருக்கும் இருப்பையும் காட்டிக்கொடுக்க அதை 'இதற்கு மேற்பட்டது ஒன்றுமில்லை, எனக்கு விஞ்சி ஒருவரில்லை' என்று இந்த ஜ்ஞாநத்துக்கு விஞ்சி வேறு ஒரு அநுபவமில்லையென்று தோன்றி "என்னகுறை (யெழுமையும்)" என்றும், "வீவில் இன்பமிக வெல்லை நிகழ்ந்த நம் அச்சுதன்" என்றும் அநுபவித்தார்.

முதல் 3-பத்தில் 'தன்னுடைய ஆநந்தத்துக்காக வல்லாமல் அவனுடைய முகோல்லாஸத்துக்காகவே, பாகவத கைங்கர்யம் சேர்ந்து பகவத் கைங்கர்யமே புருஷார்த்தம்' என்று சொல்லி ஐசுவரிய கைவல்யங்கள் பகவத் கைங்கர்ய விரோதி என்று 4-ம் பத்தில் நிஷேதித்தார்.

இப்படி ஸம்ஸாரியான தனக்கு இப்படிப்பட்ட ஜ்ஞாநத்தைத் தன் நிர்ஹேதுக கிருபையால் கொடுத்தது மல்லாமல் அதில் அவன் பெருப் பேறு அடைவதாக வியாமோஹத்துடன் இவரு

டன்-கலக்கிறதை V. I. ல்-“கையார் சக்கர”த்தில் (நான்) “சில கூத்தச் சொல்ல, அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யான் ஆர் எம்மா பாவியர்க்கும் தானேயின்னருள்செய்து என்னை முற்றவுந் தானுனன்” என்று ஆகக்தித்தார். தன்னிடத்தில் கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகம் யாதொன்று மில்லை; “நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் — கார்முகில் வண்ணா வானமாமலையே அடியேன்தொழ வந்தருளே” என்று, V. 7-ல் வானமாமலை திவ்ய தேசத்தில் பகவானுடைய ஔதார்யத்தையும், V. 8-ல் திருக்குடந்தையில் “ஆராவமுதே யடியேன் உடலம், நின்பாலன்பாயே, நீராய்அலைந்து கரைந்து உருகுகின்ற திருமாலே” என்று அவனுடைய மாதுர்யத்தையும் அநுபவித்து அலற்றி “பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரியபாரதம் கைசெய்து ஐவர்க்குத், திறங்கள் காட்டி + மாயங்கள்-என் ஆவியை நின்று நின்று உருக்கி உண்கின்றது” என்று V. 10-ல் “பிறந்தவாறு” என்கிற திருவாய்மொழியில் அவதாரங்களில் மிகவும் ஈடுபட்டு இப்பத்தை முடிக்கிறார்.

28. முதல் மூன்று பத்தில் கைங்கர்ய ஸ்வரூபம் சொல்லி, நாலாம் பத்தில் விரோதத்தைச் சொல்லி, ஐந்தாம் பத்தில் விரோதியைப் போக்குமவன் அவனே என்றார்.

ஆறும் பத்தில் முக்யமான திருவாய்மொழி VI. 10. “உலகமுண்ட பெருவாயா”—இதில் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் ஆழ்வார் “புகலொன்றில்லா அடியேன், உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன், அலர்மேல் மங்கை உறைமார்பா”—என்று லக்ஷ்மியோடு கூடிய எம்பெருமானிடத்தில் பிரபத்தி செய்தார். பெரிய திருமந்திரமாகிய திரு அஷ்டாக்ஷரத்துக்கு விவரணமான த்வயம் என்று சொல்லப்பட்டதன் முதற்பாதிக்கு மேற்சொன்ன அடி தமிழாகிறது. வேறொரு கதியில்லாத அடியேன் உன் திருவடியைப் பற்றுகிறேன்; இரண்டாம் பாதியின் அர்த்தத்தை முதல் மூன்று பத்தால் முன்னமே நிஷ்கர்ஷித்தார். அதற்கு விரோதியையும், விரோதிநிரஸனை உபாயம் எம்பெருமானே என்றதையும் 4-5-பத்துக்களில் சொல்லி, இந்த ஆறும்பத்தில் பெரிய பிராட்டியார் முன்னிலையாகப் பிரபத்தி செய்தார்.

(இன்னும்வரும்.)

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

# கடிதங்கள்.

---

## பாகவத தர்மம்.

ஸ்ரீவேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

பாகவத தர்ம விஷயமாய்க் கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு அடியேன் எழுதின ஸமாதாநத்தைத் திருவுள்ளம் பற்றி அடியேனை மறுபடியும் கேள்விகேட்டிருக்கிற ஸ்வாமி விஷயத்தில் அடியேன் க்ருதஜ்ஞனாக இருப்பதோடு, “ஶ்ருதி ஸ்ம்ருதி முதலான ப்ரமாணங்களுக்கு விருத்தமான விஷயத்தை ‘வைதிகர்’ திருவுள்ளம் பற்றமாட்டார்” என்கிற நிஶ்சயத்தோடு மேல் விஷயங்களை எழுதத்துணிகிறேன்.

1. “ஹீநஜாதி பாகவதன் பூஜ்யன்” என்னும் வாக்யத்திலிருக்கும் ‘பூஜா’ ஶப்தத்தால் ஸர்வவித பூஜையும் விவக்ஷித மன்று. அது விவக்ஷிதமானால், ஹவ்யகவ்யாதிகளில் அவனுக்கு அந்வயம் ப்ரஸங்கிக்கும். அது [illegible] என்கிற பராஶர ஸ்ம்ருதிக்கு விரோதிக்கும். மேலும், அநர்ஹ பூஜை பண்ணினால் “[illegible]” என்கிறபடி நரகப்ராப்தியும் உண்டாகும். இது வரையில் பாகவத சூத்ராந்விதமான வைதிக தர்மாநுஷ்டாநமும் நடந்தது இல்லை.

2. “[illegible]” என்கிற வாக்யத்தின் அர்த்தம் ‘அவன் தன்னுடைய ஜாதீயர்களுக்குள் உயர்ந்தவன்’ என்பது தான். ‘அவனுக்கு ப்ராஹ்மண்யம் வந்துவிடுகிறது, அல்லது ப்ராஹ்மண்ய துல்யதை வந்து விடுகிறது’ என்று அர்த்தம் கொள்வது ஸரியன்று. “[illegible]” என்கிற விதுரருடைய வாக்யமும், “உண்டான ஜாதி ஒன்றும் நிவ்ருத்திக்க முடியாது” என்கிற பெரிய வாச்சான் பிள்ளையின் வாக்யமும், சூத்ரனுக்கு சூத்ரத்வம் போகாது என்றே காண்பிக்கின்றன. மேலும், இதே வாக்யத்தில் பிந்திவரும் ‘யதிः’ என்கிற பதத்தை அவஶ்யம் கௌணார்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டி யிருக்கையில், ‘[illegible]’ என்கிற பதத்தை மாத்திரம் முக்கியார்த்தமாக எடுத்துக்கொள்வது ந்யாய விருத்தம்.

3. இந்த விஷயத்தில் ஸாமாந்ய விசேஷந்யாய ஸம்பந்தமாக அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொண்டதாவது - அவரவர்களுக்குத் தகாத பூஜையைச் செய்யக் கீழ்ச்சொன்ன பராஶராதி வாக்யம் விரோதிக்கிறபடியால், பொதுவாய்ப் பக்தனுக்குத் தகாத பூஜையை ஸாமாந்ய விஶேஷ ந்யாயத்தினால் உத்க்ருஷ்ட பாகவத விஷயமாகச் செய்வது என்பதுதான். “ஶூத்ராணாம் ஶுஶ்ரூஷைவ து” என்கிற வாக்யம் ஸாமாந்ய வாக்ய மென்றும், “ஸத்ரஷ்டவ்ய:” என்கிற வாக்யம் விஶேஷ வாக்யமென்றும் வைதிகர் எழுதியிருப்பது, ஸாமாந்ய விசேஷ ந்யாயத்திற்குப் பொருந்தாது. உத்ஸர்க்காபவாத ந்யாயத்தை ஸாமாந்ய விஶேஷ ந்யாயமாக ஸ்வாமி க்ரஹித்ததாக வைத்துக்கொண்டாலும், அதுவும் ஶ்ரமப்படும்போலத் தோன்றுகிறது.

4. தவிரவும், மநுஸ்ம்ருதியில் 87 - வது ஶ்லோகத்தில் “ப்ராயஶ்சித்தம் ந ஶூத்ரஸ்ய” என்றும், 91 - வது ஶ்லோகத்தில் “ஏகமேவ து ஶூத்ரஸ்ய” என்று பரிசர்யை தவிர வேறு தர்மம் ஶூத்ரனுக்கு இல்லை யென்றும், 93 - 96 - 97 - வதில் ப்ரஹ்ம வித்தான ப்ராஹ்மணனுக்கே உத்கர்ஷமென்றும் அநேக வாக்யங்க ளிருப்பதனால், “ஶூத்ராஸ ஜ்ஞாநாமபி” என்கிற வாக்யம் பாதக வாக்யமே. மேலும், “ப்ராஹ்மணோ வா பரம் ஸாதம் ப்ரபத்யேத:” “தஸ்யாபி ப்ரணவ:”, “த்ருவம் ஜந்மாந்தரம் ஶ்ரோத்ரு ப்ரவசநம்”, “வேதாக்ஷர விசாரேண ஶூத்ரஸ்ய நரகம் ப்ருவம்” இத்யாதியான ஶ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களும், இதுவரையில் நடந்து வந்திருக்கும் ஶிஷ்டாநுஷ்டாநமும் “வைதிகர்” உக்திக்கு ப்ரபலமாக விரோதிக்கு மாகையால், கீழ்ச்சொல்லப்பட்டிருக்கும் ப்ரமாணங்களைக்கொண்டு அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொண்டிருப்பதை “வைதிகர்” அங்கீகரிப்பர் என்று நம்புகிறேன்.

ஸாயகம் ஸத்ருஶி நாத வீக்ஷணம் ஸாபி கலா ।
மண்டூகேந விசிந்தயந் வ ஜ்யம்ஸேத வஹ்நிமேதமோஹா ॥

புத்தங்கோட்டகம் - ஸ்ரீநிவாஸாசார்யர்.

---

# பிரிவுகளின் மாஸ அறிக்கை.

## 1. மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

சென்ற ஆடிமீ 29௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 4 - மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் ஷை பிரிவின் கூட்டம் ஒன்று சேர்ந்தது. ஏறக்குறைய 60 - ஸ்வாமிகள் எழுந்தருளி யிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீமான் சேட்லூர் நரஸிம்ஹமாசாரியர், மதுரகவியாழ்வா ரருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பைப் பற்றி ஓர் உபந்யாஸம் செய்தார். முதலில் உபோத்காத ரூபமாக, ‘மற்ற விஷயங்கள் அனைத்தையும் விட்டுத் திருவாய்மொழி பாடுவதையே முக்கியமாகக் கொண்டு ஆழ்வார் குணங்களுக்குத் தோற்று அவரொருவருக்குமாத்திரமே அடியவராகப் பெற்றவர் ஸ்ரீமதுரகவி யாழ்வார்’ என்று அவருடைய ஆசார்ய நிஷ்டா ப்ரகாரத்தைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லிவிட்டு, பிறகு முதல் இரண்டு பாசுரங்களையும் எடுத்துக்கொண்டு அவைகளின் பதவுரையையும் தாத்பர்யத்தையும் மிகவும் விசேஷமாக உபபாதநம் செய்தார். முதல் பாசுரத்தால் ‘ஆஶ்ரித ஸுலப னை கண்ணபிரான் திருநாமங்களைப் பார்க்கிலும் ஆழ்வார் திருநாமமே நாக்குக்கு இன்பத்தைத் தருகின்றது’ என்றும், இரண்டாவது பாசுரத்தால் ‘ஆழ்வாரை ஸ்துதிசெய்யவும் அவர் திருவடிகளைப் பற்றவும் நான் பெற்றேன்’ என்றும், ‘எப்பொழுதும் அவர் திருவாய்மொழியைப் பாடிக்கொண்டே நான் திரிவேன்’ என்றும், ‘நான் அவரையன்றி வேறொன்றையும் தெய்வமாக நினையேன்’ என்றும் ஆழ்வார் அருளிச்செய்திருக்கிறார் என்று அந்த உபபாதநத்தால் ஏற்பட்டது.

இரண்டு மணி காலம் இம்மாதிரி உபந்யாஸம் செய்த பிறகு, அங்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளில் அந்யதமரான தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் கோபாலாசாரியர் உபந்யாஸத்தின் ப்ரகாரத்தைப் பலவிதமாக ஶ்லாகிக்கக் கூட்டம் கலைந்தது.

மயிலாப்பூர்,<br>விரோதிக்ருத்ஸு<br>ஆவணிமீ 5௳.

எஸ். வாஸுதேவன்.<br>காரியதரிசி.

## 2. தஞ்சாவூர்ப் பிரிவு

நாளது ஆவணிமீ 2உ வெள்ளிக்கிழமை ஸாயம் 6 - மணிக்குத் திருக்குடந்தையில் ஸ்ரீமாந் எஸ். ஆராவமுது ஐயங்கார் திருமாளிகையில் ஷை பிரிவின் கூட்டமொன்று சேர்ந்தது. ஸ்ரீமாந் டி. கோதண்டராம ஐயங்கார் அக்ராஸநாதிபதியாக இருந்தார். அந்தக்கூட்டத்தில் முக்கியமாக நடந்த விஷயங்களாவன:—

1. வருகிற புரட்டாசிமீ த்தில் திருக்குடந்தை ஸ்ரீ அஹோபில மடத்தில் நடக்கப்போகிற ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி உத்ஸவ ஸம்பந்தமாக ஓர் வித்வத் ஸபை ஏற்படுத்தவேண்டியதென்றும், அந்த விஷயங்களைப் பராமர்சித்துப் பார்க்க 21 ஸ்வாமிகளடங்கிய ஓர் கமிட்டியும் அந்தக்கமிட்டிக்கு ஸ்ரீமாந் எஸ். கிருஷ்ணமாசாரியர் கார்யதர்சியாக நியமிக்கப்பட வேண்டுமென்றும்,

2. இந்த வித்வத் ஸபையை ஏற்படுத்துவதற்கு முதலில் வேண்டுவதான பத்ரிகைகளையும் அறிக்கைகளையும் அச்சிடுவது முதலான கார்யங்களைப் பார்க்க ஸ்ரீ. வித்வான் சக்ரவர்த்தியாசாரியர், ஸ்ரீ. எஸ். கிருஷ்ணமாசாரியர், ஸ்ரீ. வி. எஸ். ரங்காசாரியர் ஆக இம்மூவரும் நியமிக்கப்பட வேண்டுமென்றும்,

3. நாளது வருஷத்தில் வித்வான்களுக்கு ஸம்மாநமாகக் கொடுக்கப்படும் தொகை குறைந்தது ரூ. 250 ஆக இருக்கவேண்டுமென்றும்,

4. ஸம்ஸ்க்ருத பாஷை, ஶாஸ்த்ரங்கள் இவைகளின் ப்ரவசநத்தின் பொருட்டு ஒரு பாடசாலை ஏற்படுத்த வேண்டுமென்றும், அப்படி ஏற்படுத்துவதற்கு உரிய ஸம்விதாநங்களைச் செய்ய, ஸ்ரீ. எஸ். கிருஷ்ணமாசாரியர், பசுபதிகோயில் ஸ்ரீ. ராஜகோபால ஐயங்கார், நெடுந்தெரு ஸ்ரீ. சாரங்கபாணி ஐயங்கார் ஆக இம் மூன்று பெயர் அடங்கிய கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும்,

5. தவிரவும் தகுந்த வித்வான்களைக்கொண்டு ப்ரதிமாஸமும் திருக்குடந்தை மடத்தில் உபந்யாஸங்களைச் செய்விக்க வேண்டுமென்றும்,

6. இந்தத் தஞ்சாவூர்ப்பிரிவுக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் போஷகராக இருக்கக் கிருபைசெய்ய வேணு மென்று ப்ரார்த்திக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன..................................(ஹிந்து பத்ரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.)

---

ஸ்ரீ:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

வயபூரகாஶம் ஜதகிம் வ்யஸநாம்பராஶள வஶ்யஞ்ச
விஷயதி ஜொஷிவஷிதஸ்யம—ஷாரெகஷணெவி கிஷதி துயி
நிதிபூஷம் வாரெ கரொதி காருணா தவ தீநிபவாரா ॥

**ஸந்நிதி ஸ்ரீ கார்யம்.**

சென்னையில் ப்ரசுரமாகும் ‘ஹிந்து’ பத்ரிகையின் நாளது மாஸத்திய ப்ரதிகளில் ஒன்றில், ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மன் ஸந்நிதி ஸம்பந்தமாக, ஏஜண்டு ஸ்ரீமாந் குப்புஸாமி ஐயங்கார், ஸ்ரீ அழகிய சிங்கர் நியமநத்தின் பேரில் ஓர் நோட்டீஸ் ப்ரசுரம் செய்திருக்கிறார். இது வரையில் ஸ்ரீ கார்யத்தைப் பார்த்துவந்த குறிச்சி ஸ்ரீ. சேஷாத்ரியாசார்யர் அந்தக் கைங்கர்யத்திலிருந்து நிரஸநம் செய்யப்பட்டிருக்கிறாரென்று அந்த நோட்டீஸிலிருந்து தெரியவருகிறது. என்ன காரணங்களால் இந்த நிஷ்பத்தி நேர்ந்ததென்று வ்யக்தமாக ஏற்படவில்லை. எது காரணமாக இருந்தபோதிலும், இந்த ஸமயத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் அஸ்மதாதிகளுக்கு விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டிய விஷயம் ஒன்றே. அது என்னவென்றால்,—இந்த ஸ்ரீகார்யத்தை நிர்வஹித்துப்பார்க்கக் கேவலம் ஸௌஷ்ட்யமும் ஶாஸ்த்ர ஜ்ஞாநமும் போதாது; ஸ்ரீ மடத்திற்கு ஏராளமான சொத்திருப்பதால் அந்தச் சொத்துக்களையெல்லாம் ஸாவதாநமாகப் பராமர்ஶித்துப்பார்க்கக் கொஞ்சம் லௌகிகஸாமர்த்யமும், ராஜாங்கரீதிப்படி வ்யவஹாரங்களை நடத்தக்கூடிய ஜ்ஞாநமும் அவஶ்யம் அபேக்ஷிதங்கள்: ஆகையால், இந்த லக்ஷணஸம்பந்நர்களான தகுந்த வ்யக்திகளை விசாரித்துப் பார்த்து அவர்களிடம் இந்தப் பரத்தை ஒப்புவிக்கும்படி ஸ்ரீ அழ

கியசிங்கர் திருவுள்ளம்பற்றவேண்டும் என்பதுதான். இது தாத்காலிகமாக ஸந்ததிக்கு ஸ்வல்ப வ்யயாதிக்யத்தை உண்டுபண்ணினாலும் காலக்ரமேண ஆயத்தின் அபிவ்ருத்திக்கு ஹேதுவாகுமே ஒழிய மற்ற எவ்விதமான குறைவுக்கும் காரணமாகாது. இவ்வளவு குணங்களும், ஸர்வதா அபேக்ஷிதங்களான ஆஸ்திக்யம், ஆர்ஜவம், ஶ்ரத்தை முதலியவைகளும் பொருந்திய வ்யக்திகள் ஸுலபமாகக் கிடைக்கமாட்டார்கள் என்று தோன்றினால், மிகுந்த ப்ரதிபத்தியுடன் கூடிய ஶிஷ்யர்கள் அநேகர் பலவிடங்களில் தகுந்த ஸ்திதியில் இருக்கிறபடியால், அவர்களுடைய ஸஹாயத்தைக்கொண்டு ஒரு வ்யக்தியை ஸம்பாதித்துக்கொள்ளலாம். அநந்ய ப்ரயோஜநர்களாய் ‘இவ்விதமாக ஸ்வாமி நியமிக்கவேணுமே’ என்று ப்ரதீக்ஷித்திருக்கிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஸ்ரீ அழகிய சிங்கர் அவர்களை ப்ரீதி புரஸ்ஸரமாக அங்கீகரிக்க வேண்டியது மாத்திரம் அவஶிஷ்டமே ஒழிய வேறு ஒன்றும் தேவையில்லை. இப்படி ஏதாவது ஒரு ஏற்பாடு செய்தால்தான் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் விபூதிக்கு உத்தரோத்தர அபிவ்ருத்தி உண்டாகுமென்பது அஸ்மதாதிகளின் த்ருடமான நம்பிக்கை. ஸ்வாமி அப்படியே க்ருபைபண்ண வேணுமென்று நிரம்பவும் ப்ரார்த்திக்கிறோம்.

**ஹிந்துக்களின் விவாஹத்தைப் பற்றிய சட்டம்.**

சென்ற ஸஞ்சிகையில் இந்தச் சட்ட விஷயத்தைப்பற்றி ஸங்க்ரஹமாக எழுதினோம். இப்பொழுது அதன் குணதோஷங்களைக் கொஞ்சம் விஸ்தாரமாக விசாரிப்போம். இம்மாதிரியான சட்டம் ஏற்படவேணுமென்று கோருகிறவர்களின் கருத்து அநேகமுண்டு. அவைகளிற் சிலவாவன:—

(1) இந்நாளில் முற்காலத்திற்போலல்லாமல் ஸஞ்சாரஸௌகர்யங்களாலும், தேசம் விட்டுத் தேசம் போய்ப் பலபல வித்யைகளையும் தொழில்களையும் கற்றுக்கொள்ளக்கூடிய மார்க்கங்கள் பஹுவாக ஏற்பட்டிருக்கிறபடியாலும், அப்படி வித்யாபிவ்ருத்தியையும் அர்த்தார்ஜநத்தையும் குறித்து வெளியில் புறப்பட்டுப் போகும் நம்முடைய ஹிந்து பாலர்களுக்குப் பிந்நஜாதியருடைய ஸமாகமம் தன்னடைவே ஏராளமாக ஏற்படுகிறதென்பது எல்லா



ருக்கும் தெரிந்தவிஷயமே. இவ்விதமாக சிர விப்ரவாஸம் நேர்ந்து இதர மதஸ்தர்களோ இதரஜாதியர்களோ இவர்களுடைய மத்யத்தில் சிறுவயதாயிருக்கும் நமது பிள்ளைகள் வருஷக்கணக்காக வஸித்துக்கொண்டு வந்தால், அவர்களுடன் போஜந ப்ரதிபோஜநமும் விவாஹத்திற்கு ஹேதுவாக இருக்கும் அநுராகமும் உண்டாவது ஸஹஜமே. இந்த அநுராகத்தையே முக்கியமாகக்கொண்டு அநேகம் பெயர்கள் அப்படிப்பட்ட பிந்நஜாதிய விவாஹத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். சிலர், தங்களுடைய ஜாதிக்கட்டுப்பாட்டாலும், இப்படி விவாஹம் செய்துகொள்வதால் பூர்வ பந்துக்களை இழந்துவிடவேண்டிவரும் என்கிற அச்சத்தாலும், தங்களுக்குப் புதிதாக ஏற்பட்டிருக்கும் அநுராகம் பலீயஸ்ஸாக இருந்தபோதிலும் அதை அடக்கித் திரும்பித் தமது நாட்டுக்கு வந்தபிறகு தமக்கு உரிய விவாஹங்களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். இப்பொழுது வழங்கி வருவதில், இப்படி ஜாதியைவிட்டு விலகி விவாஹம் செய்துகொள்ளுகிறவர்களை ஹிந்துக்களல்லர் என்றும், எவ்வளவு தூரம் மற்ற ஹிந்து ஆசாரங்களை இழந்திருந்தபோதிலும் ஜாதிக்குள் விவாஹம் செய்துகொண்டிருக்குமவர்களை ஹிந்துக்களென்றும் நாம் வ்யவஹரித்துவருகிறோம். இவர்கள் விஷயத்தில் ஒருவன் ஹிந்துவா? ஹிந்துவன்றா? என்பதை நிர்ணயம் செய்யும் ப்ரமாணம் அவனுடைய விவாஹத்தை மாத்திரம் பொறுத்ததாகப் போய்விட்டதே தவிர, அவனுடைய மற்ற ஆசாரங்களையாவது நோக்கங்களையாவது பொறுத்ததாகத்தோன்றவேயில்லை. இப்பொழுது இருக்கும் சட்டமும், ஜாதியை விட்டு விலகி விவாஹம் செய்துகொள்ளுகிறவர்களைத்தான் ஹிந்துக்களன்று என்றே நிராகரிக்கின்றது. வாஸ்தவமாக ஸஹவாஸ பலத்தினாலும் அநுராக பலத்தினாலும் ஒருவன் ஜாத்யந்தரத்தில் விவாஹம் செய்துகொண்டபோதிலும், அவனுக்கு ஹிந்துமதத்திலிருக்கும் அபிமாநமும் ஹிந்துவேதங்களிற் சொல்லியிருக்கும் தைவ பக்தியும் பூர்ணமாக இருந்து தன்னை ஹிந்துவென்றே வ்யவஹரித்துக்கொள்ள வேண்டும் என்று ஆஸைப்பட்டால், அவனுடைய மனச்சாக்ஷிக்கு விருத்தமாக ‘தான் ஹிந்து அன்று’ என்று எழுதி

வைக்கும்படி சட்டம் ஏன் கட்டாயப்படுத்த வேணும்? அப்படிக் கட்டாயப் படுத்துவது அபந்யாய மன்றோ? அந்த அபந்யாயத்தை நிவ்ருத்தி செய்து, இப்பொழுது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஜநங்களுக்கு நம்மால் இயன்றவரையில் ஸௌக்யத்தைத் தேடுவது நம்முடைய கடமை யன்றோ? இப்படிச் செய்வதனால் ஹிந்து மதத்திற்கே ஒரு பலம் ஏற்படாதா?

(2) மேலும், நமக்குள் ஜாதிபேதங்கள் கணக்கில்லாமல் உண்டாகிப் பரஸ்பரம் நாம் செய்துகொள்ளக்கூடிய ஸஹாயத்தைப் பலவாறாகக் கை தவறவிட்டு அதனால் வருந்துவதும் தவிர, ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற ஐகமத்யத்தை இழந்து வெளிநாட்டிலிருந்து வந்த இதர ஜாதியார்களுக்கு இடம் கொடுத்து நாம் சிதிலர்களாகிவிட்டோம் என்பதும் வ்யக்தமான விஷயம். இப்படி சைதில்யத்தை யடைந்ததற்கு நமக்குள் ஏற்பட்டிருக்கும் ஜாதி பேதங்கள் முக்கியமான காரணமன்றோ? இப்படி நமக்கு நாஶத்தை விளைவித்த ஜாதிபேதத்தை மட்டுப்படுத்தி ஹிந்துக்களாகிற நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து நமக்குப் பூர்வமிருந்த பலத்தைத் தேடிக்கொள்வது நமது தர்மமாயிற்றே. இப்படி ஒன்றுசேர்வதற்கு அத்யந்தம் உபகாரகமாக இருக்கும் இந்த ஏற்பாட்டைச் சட்டமாக்கக்கூடாது என்று ஏன் தடுக்கவேணும்?

இன்னும் இம்மாதிரியான அநேக குணங்கள் இந்தச்சட்டத்திற்கு இருக்கின்றன வென்று இதைப்பற்றி அநுகூலமாகப் பேசுகிறவர்கள் சொல்லுகிறார்கள். இவைகள் யதார்த்தமாகக் குணங்கள்தானா என்பதை ஆலோசித்துப் பார்ப்போம். முதலில், ஜாத்யந்தரங்களிலும், ஸ்ம்ருதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் விதிகளுக்கு விருத்தமாகவும் விவாஹம் செய்துகொள்ளும் ஒரு மனிதனுக்கு 'நான் ஹிந்து' என்று சொல்லிக்கொள்ளும்பொருட்டு ஆஸ்தை உண்டாவது ஏன்? ஹிந்துமத வேதங்களிற் சொல்லப்பட்டுள்ள தைவத்தினிடத்திலிருக்கும் பக்தியும், அவைகளில் உபபாதநம் செய்யப்பட்டிருக்கும் மதக்கொள்கைகளிலிருக்கும் அபிநிவேஶமும் அந்த ஆஸ்தையை உண்டாக்குகின்றனவோ; அப்படி இருக்கும் பக்ஷத்தில் அவர்களை ஹிந்துவல்லர் என்று நிராகரிப்பது



அநுசிதமே. ஆனால், அந்தத் தைவத்தினிடத்தில் பக்தி இருப்பது யதார்த்தமாக இருந்தால், அந்தத் தைவத்தினுடைய அப்ரீதியை ஜநிப்பிக்கக்கூடிய அதன் ஆஜ்ஞாதிலங்கநங்களைச் செய்ய எப்படி புத்தி தோன்றும்? ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகள் வேதத்தின் உபப்ருஹ்மணங்களென்றும், அவைகளிற் சொல்லியிருக்கும் விதிகளுக்கு விருத்தமாக ஒருவன் அநுஷ்டித்தால் அவன் வேதத்தை ஒப்புக்கொள்ளாதவனென்றும் நாம் எண்ணுகிறோம். 'உபநிஷத்துக்களிற் சொல்லியிருக்கும் வேதாந்தத்தை மாத்திரம் நான் ஒத்துக்கொண்டவன், ஸ்ம்ருதி முதலானவைகளை நான் அங்கீகரிக்கவில்லை' என்று ஒருவன் சொல்லும் பக்ஷத்தில், அவன் வாதத்திற்கு மாத்திரம் இவ்விதமான ப்ரத்யுக்திகளைச் சொல்லுகிறானே ஒழிய அவைகளை அவன் ஹார்த்தமாக உணரவில்லையென்றே சொல்லலாம். ஏனென்றால், உபநிஷத்தில் விஶ்வாஸமும் ஸ்ம்ருதி முதலானவைகளில் அவிஶ்வாஸமும் ஸமாநாதிகரணங்களல்ல. மேலும், இம்மாதிரியான யுக்தி சொல்லுகிறவனுக்கு எவ்விடத்தில் எல்லை ஏற்படும்? நாளையதினம் இவனைப்போன்ற மற்றொருவன் 'உபநிஷத்தில் ஏகதேஶத்தை மாத்திரம் அங்கீகரிக்கிறேன், மற்றபாகங்கள் எனக்கு அநாதரணீயங்கள்; ஏகதேஶாங்கீகார மிருப்பதால் நான் வேதபாஹ்யனல்ல' என்று சொல்லலாம். அவனையும் ஹிந்துவென்று ஒப்புக்கொள்ள வேண்டிவரும். இப்படிப்பட்ட அநவஸ்தையாகிற தோஷம் வருகிறபடியால், ஸ்ம்ருதி முதலான உபப்ருஹ்மணங்களுடன் கூடிய ஶ்ருதியை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளுகிறவர்கள்தான் ஹிந்துக்கள், மற்றவர்கள் ஹிந்துக்களல்லர் என்று சொல்வதுதான் ஸரி.

'வேதங்களிலிருக்கும் விஶ்வாஸத்தைக் காரணமாகக்கொண்டு நான் ஹிந்துவென்று சொல்ல வரவில்லை; நான் ஹிந்து வென்று சொல்லிக்கொள்வதில் ஒரு த்ருப்தி உண்டாகிறது; அந்தத் த்ருப்தியை நீ ஏன் தடுக்க வேணும்?', என்று கேட்டால், அப்படி தடுப்பதனால், ஒருவிதமான பாதகமும் தெரியவில்லை. தைவத்தினிடத்திலிருக்கும் பக்தி காரணமாக இருந்தால், அவருடைய அடியார்களை அடியார்களல்லர் என்று சொல்வது அந்தத் தைவத்தை ஒப்புக்

கொண்டவர்களுக்கு அத்யந்தம் பிசகுதான். கேவலம் தமது த்ருப்தியைக் காரணமாகக் கொண்டவர்கள் விஷயத்தில் அவர்களின் அபத்தமான பெயரை நிராகரிப்பதுதான் தர்மம். அப்படி நிராகரிப்பதனால் ஒருவருக்கும் யதார்த்தமான கஷ்டம் நேராது. அப்படிப்பட்டவர்களை 'நாங்கள் ஹிந்துக்களல்ல' என்று உறுதி மொழி கொடுக்கும்படி செய்கிற சட்டம் சரியான சட்டமே. அதை மாற்றும்படி ப்ரயத்நப்படுவது மிகவும் ந்யாயவிரோதம்.

ஆனால், 'ஸ்ம்ருதி முதலானவைகளை ஒப்புக்கொள்ளுபவர்களுக்குள் ஏராளமான பேதம் உண்டாயிருக்கிறதே! அவர்களுக்குள் ஐகமத்யமிருந்தாலன்றோ ஸ்ம்ருதிகள் ஒன்றோடு ஒன்று விருத்தமில்லாமலிருக்கின்றன என்று சொல்லலாம். பரஸ்பரம் விருத்திக்கும் ஸ்ம்ருதிகளில் எதைத்தான் ஸரியான ப்ரமாணமென்று நாம் ஒப்புக்கொள்ளுகிறது?' என்று கேட்டால், 'ஸ்ம்ருதிகள் எல்லாம் ப்ரமாணங்கள்; அவைகளுக்குள் விரோதம் கிடையாது: ஸமந்வயம்செய்து அர்த்தம் செய்வதில்தான் பேதம் ஏற்படுகின்றது; அந்தப் பேதங்களை வரவொட்டாமல் தடுப்பது நாம் மநுஷ்யத்வத்தை வஹிக்கும் வரையில் ஸாத்யமன்று; ஸமந்வயத்தில் வரும் இம்மாதிரியான பேதங்களால் நாம் நம்முடைய மதத்தை இழந்து விடவில்லை' என்று ப்ரத்யுத்தரம் சொல்லக்கூடும்.

இரண்டாவது - 'ஹிந்துக்களுக்குள் விவாஹமும் போஜந ப்ரதிபோஜநமும் ஒருவிதமான நிபந்தனையுமில்லாமல் ஏற்பட்டுவிடும் பக்ஷத்தில், ஐகமத்யம் உண்டாகும்' என்கிற விஷயத்தைப் பற்றி நாம் சொல்லும் பதில் ஒன்றே; அதாவது - இது சுத்த ப்ரமம் என்பதுதான். இப்பொழுதாவது சில சில பெயர்கள் ஒவ்வொரு கூட்டமாகச் சேர்ந்து ஐகமத்யத்தை அடைந்திருக்கிறார்கள். ஸ்வச்சந்த விவாஹம் ஏற்பட்டால், எவ்வளவு வ்யக்திகள் இந்தத் தேசத்தி லிருக்கிறார்களோ அவ்வளவு ஜாதிபேதம் உண்டாகுமென்பதில் ஸந்தேஹமே இல்லை. இப்பொழுது இருக்கும் கட்டுப்பாட்டை உடைத்து விட்டு இன்னும் கலக்கத்தில் நாம் அமிழ்ந்து விடுவோமே ஒழியத் தெளிவோமென்பதற்குக் கொஞ்ச மேனும்



ஹேது வில்லை. இப்பொழுது நம்மை வருத்தும் தாபங்கள் போதாதென்று எண்ணினால் இந்தத் தாபத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். ஜநங்களுக்கு ஸௌக்யம்செய்வதாக ஸ்வப்நத்திலும் நினைக்க இடமிராது. தவிரவும், ஹிந்து ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் வர்ண பேதங்கள் நமக்கு இப்பொழுது நேர்ந்திருக்கும் தாழ்ந்திலை உண்டுபண்ணிற்று என்று சொல்வது சுத்த தப்பிதமென்பது அநேகதேசசரித்ரங்களை நன்றாக வாசித்துப் பார்த்தால் ஏற்படும். !ஒருவிதமான ஜாதி வ்யத்யாஸத்தையும் அறியாத சில தேசத்தார்கள் ஹீந ஸ்திதியை அடைவதும், ஜாதி வ்யத்யாஸத்தைக் காட்டிலும் பலிஷ்டங்களான வ்யத்யாஸங்களைப் பாவித்து வரும் தேசத்தார்கள் அபிவ்ருத்திக்கு வருவதும் ஸஹஜமாக இருக்கிறது ஆகையால், வீணில் ஜாதிபேதங்களை நமக்கு நேர்ந்திருக்கும் எவ்வகைத் தாழ்வுக்கும் காரணமாகச் சொல்வது ந்யாயமன்று; அவைகளால் தீமைகள் விளையலாம்; ஆனால், அவைகளால் உண்டாகும் நன்மை அதிகமாக இருக்கிறபடியால் அவைகளை ஒழிக்க ப்ரயத்நப்படுவது நமக்கு மாறக்கூடாத நஷ்டத்தின் பொருட்டு ஆகுமே தவிர ஒருவிதமான லாபத்தின் பொருட்டும் ஆகாது என்பது நம்முடைய நிஶ்சயம்.

"ப்ராஹ்மணா꞉ க்ஷத்ரியா வைஶ்யா꞉ ஸங்கீர்யந்தே வர்ணஸம்" "நக்ஷத்ராணி யாஸ்யந்தே கஷ்டிநாவி க்ஷத்ரா ஶூத்ரீயதே -" "ஶூத்ரே ஸ்வயம்பூர்ஹ்யா ஹவிஷ்யந்தி யஶோ ஹ்யஸ்மிந் ஸம்வஸிதே" "ஸங்கம் ஜநஸ்த்வயம் ஹவிஷ்யந்தி ந ஸம்ஶய꞉" இத்யாதி மார்க்கண்டேயவாக்யம் இப்பொழுதே பலிக்கும்போலிருக்கின்றதே!

---

ஸ்ரீ [illegible]

[illegible]

இந்தப் பகவத்விஷய க்ரந்தத்தில் நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி மூலமும், அதற்கு வ்யாக்யானமாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படியும், ஸ்ரீ [illegible] ஸ்வாமி அருளிச்செய்த தமிழ் பதினெண்ணாயிரப்படியும், ஸ்ரீ [illegible] அருளிச்செய்த த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியும், இதின் ஸாரமும் இவை யிரண்டுக்கும் வ்யாக்யானங்களும் அடங்கியிருக்கின்றன. பத்து ஒன்று ஒரு ஸஞ்சிகையாக அச்சிடப்பட்டு, 4 - பத்து வெளியாகி யிருக்கின்றது. 5-வது பத்து அச்சிலிருக்கிறது. பத்து ஒன்றுக்கு வி. பி. சார்ஜ் உள்பட விலை அணா 7. வேண்டியவர்கள் இந்த விலாஸப்படி பெற்றுக்கொள்ளலாம்.

கிடாம்பி, ஸ்ரீ. வரதாசாரியர், சுண்டப்பாளையம்,
கோயமுத்தூர் ஜில்லா.

---

ப்ருங்காமலக தைலம்.

மனத்திற்கு மிகுந்த க்லேஶத்தைக் கொடுக்குமளவு கஷ்டப்பட்டு வேலை செய்யுமவர்களுக்கு இந்தத் தைலம் நிரம்ப ஆநுகூல்யத்தைச் செய்யும். தேஹத்திலிருக்கும் உஷ்ணாதிக்யத்தை ஶமநம் செய்து மனத்திற்கு ஒரு ஆஹ்லாதத்தை உண்டுபண்ணுவதுடன், புத்திக்குத் தெளிவையும் திடத்தையும் கொடுக்கக்கூடிய யோக்யதை இந்தத் தைலத்திற்கு உண்டு, ஶ்ரமப்பட்டுப் படிக்கும் மாணாக்கர்களுக்கு இது அத்யந்தம் உபகாரகம்.

உபயோகிக்கும் மாதிரி:—காலையில் ஶிரஸ்ஸில் தேய்த்துக்கொண்டு சீயக்காயை உபயோகித்து ஸ்நாநம் செய்யவேணும். ஸோப் முதலியவற்றை உபயோகிப்பது ஶ்லாக்ய மன்று. உஷ்ண ஜலத்திலாவது குளிர்ந்த ஜலத்திலாவது யதா ஸௌகர்யம் ஸ்நாநம் செய்யலாம்.

இதன் விலை ஒரு புட்டி ரூபா. 1—2—0.

வேண்டுமவர்கள், வட ஆற்காடு ஜில்லா, சித்தூரிலிருக்கும் ஆயுர்வேத வைத்யர் பண்டித கே. எஸ். ராகவ ஐயரிடத்தில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

OFFICE OF THE REGISTRAR
3 - OCT 1911
MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீ [illegible] நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத் வருஷ புரட்டாசிமீ. [ஸஞ்சிகை 8.

## காளிதாஸன் காவ்யங்களும், அவர் மதக்கொள்கைகளும்.

II.

“ [illegible] ” [‘கற்றறிந்தோர் கேட்டுக் களித்தாலொழிய என் கவித்திறமையை நான் மதியேன்’] என்று காளிதாஸன் தாமே சொல்வதால், ஜர்மனிதேசத்துப் பெரியகவியும் பண்டிதருமாகிய கீத்தே என்பவர் இவர்விஷயத்தில் சொல்வது நாம் மதிக்கத் தகுந்ததே. அவர்சொல்வதாவது “ஒருவன், பால்ய வயஸ்ஸின் புஷ்பங்கள் போன்ற ஸுகங்களையும், முதிர்ந்த வயஸ்ஸின் பழங்கள்போன்ற ஆநந்தங்களையும், மனத்தைக் கவர்வனவாயும் மயக்குகின்றனவாயும் உள்ள வஸ்துக்களையும், மிகவும் போஷகமாயும் திருப்திகரமாயு முள்ள பொருள்களையும், இஹலோகத்தி னுடைய வும் பரலோகத்தினுடையவும் உத்தமமான இன்பங்களையும் ஒன்று சேர்த்து அநுபவிக்க விரும்பினால், அவனைச் சாகுந்தளம் என்னும் நாடகத்தைப் பார் என்பேன்; அது இவையெல்லாம் அடங்கியுள்ளது என்பது என் கருத்து.”

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]".
[illegible]
[illegible]

இனி, காளிதாஸ காவ்யங்களில் முமுக்ஷுக்களுக்கு அநுகூலமான வாக்யங்களை உதாஹரிக்கிறோம்.

முமுக்ஷுவானவன், நாசத்தையே ஸ்வபாவமாகவுடைய ஐஹிக ஸுகங்களிலும், ஸ்வர்க்க ஸுகங்களிலும் மனம் வைக்கக்கூடாது;

"விஷயேஷு விநாசதர்மஸு த்ரிதிவஸ்தேஷ்வபி நிஸ்ப்ருஹோऽபவத்"
(ரகு. ௮, ௰)

யோகாப்யாஸம், எப்பொழுதும் அழிவில்லாத பதவியை அடைய ஹேதுவாகும்;

"[illegible]"
(௮, ௰௬)

அப்படி யோகம் செய்வதில் யோக சாஸ்திரத்திற் கூறியுள்ள யம நியமாதி நியமங்கள் வேண்டும்;

"[illegible]"
(௮, ௰௮)

"[illegible]"
(௮, ௰௯)

இப்படிச் செய்கிற யோகம் ஜ்ஞாநரூபமானதையால், ப்ராசீக கர்ம பலங்களை யெல்லாம் நசிப்பித்து மனத்தின் சுத்தியை உண்டாக்கும்;

"[illegible]"
(௮, ௨௰)



இப்படி யோகம் செய்பவன், கல்லையும் கநகத்தையும் ஸமமாகப் பாவிப்பான்; "மாநாபமாநயோஸ்துல்ய:", "ஸமலோஷ்டாச்மகாஞ்சந:" என்கிற பகவத் கீதா வசநங்களை அநுஸரித்து ப்ரக்ருதி விகாரமாகிய சரீரத்தின் ஸம்பந்தத்தால் உண்டான குணத்திரயத்தின் கார்யங்களை அவன் ஜயிப்பான்;

"ரகுரப்யஜயத் குணத்ரயம் ப்ரக்ருதிஸ்தம் ஸமலோஷ்டகாஞ்சந:"
(௮, ௨௧)

இப்படி ஸ்திரபுத்தியுடன் யோகஞ்செய்தால் ஆத்மஸாக்ஷாத்காரமுண்டாகி ஸமாதி யென்று சொல்லப்படும் யோகிகளின் முதிர்ந்த அவஸ்தை ஏற்பட்டு, கடைசியில் மோக்ஷ ஸித்தி உண்டாகும்;

"[illegible]"
(௮, ௨௨)

இப்படி யோகஞ்செய்த ரகுமஹாராஜனுடைய முடிவைச் சொல்லுமிடத்தில் "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம், [illegible]" என்கிற ச்ருதியையும், "[illegible]" என்கிற ஸ்ரீமத் பகவத்கீதை வசநத்தையும் அநுஸரித்து அடியிற்கண்ட ச்லோகம் கவியினுற் சொல்லப்பட்டிருக்கிறது.

"[illegible]
[illegible]" (௮, ௨௪)

முமுக்ஷுக்களல்லாதார் கதியையும், ஜீவன் சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவ னென்பதையும், அவன் பலதேஹங்களில் கர்மாநுகுணமாக ஸம்பந்தப்பட்டவன் என்பதையும் பின் வரும் வாக்யங்கள் சொல்லுகின்றன;

"[illegible]
[illegible]"
(௮, ௮௫)

"[illegible]
[illegible]"
(௮, ௮௭)

“ ஸ்யஸீரஸரீரிணாகவிரு—தஸம்யொமவிவய—ஜ்யனயதா ”

(அ, அக)

ஜீவன்களைக் காட்டிலும் வேறுபட்டதான பரமாத்மா ஒன்று உண்டென்று காளிதாஸன் ஒப்புக்கொண்டதாகவே எண்ணவேணும்; ஏனெனில், ஸ்ரீ ஸங்கராசார்யரால் உபபாதிக்கப்படுகின்ற ஆமெத்கு விஷயமான வாக்யங்கள் இவர் கிரந்தங்களில் ஒன்றுமில்லை.

“ கனோ தூவிமெ வஷ் நா ” (கு. ரு, உக) என்றும்,
“ கூா ஷைவஸு வெ ஷஜ நு கீ ” (ர. அ, எஅ) என்றும்,
“ ஐமதாசிர நாஷிவ ஐபதெனா கிரஷகஃ ” (கு. உ, கூ) என்றும்,
“ யொமிநெயமிவ் நுதி கெ த ஹ ஷரவதி நம் ” (கு. ரு, எஎ)

என்றும் சொல்லப்பட் டிருப்பதனால், தெஹீ என்றும், ஜமசு என்றும், யொமிநஃ என்றும் சொல்லப்படும் சேதநர்களைக் காட்டிலும் பரமாத்மா வேருகவே நிர்த்தேசிக்கப்பட்டிருக்கிருன். மேலும், இந்தக்கவி, ஜமசு தீமெயு என்றும், மாயையினுல் உண்டான தோற்றமென்றும், ப்ரஹ்மமொன்றே ஸத்யமென்றும், மற்று எல்லாம் வ்யாவஹாரிகமென்றும் சொல்லுகிற மாயாவாதத்தைக் கொஞ்சமேனும் அறிந்தவராக இவர் கிரந்தங்களிற் காணப்படவில்லை. இந்த மாயாவாதம் ஸங்கராசாரியர் காலத்துக்கு முந்தியே இருந்ததாக, ஸபரஹாஷ்யம் முதலான க்ரந்தங்களால் தெரிய வருகிறதனுல், காளிதாஸன் இதைச் சொல்லாதுவிட்டது அவர் அங்கீகரிக்காததினுலேயே இருக்கலாம். ஜைவிலாபத்தின் முடிவில் வஸிஷ்டராற் செய்யப்படும் ஆஸ்வாஸப் பிரகரணத்திலும், மற்ற எவ்விடத்திலும் காளிதாஸன் இந்த வாதத்தைப் பிரஸ்தாவிக்காததனுல், இது அவர் அறியாத தர்ஸநமென்றே எண்ணவேண்டி யிருக்கிறது. இப்படிப் பகவத்கீதையையும் உபநிஷத்துக்களையும் அநுஸரித்து ஜீவ பிந்நமான ப்ரஹ்மதத்வத்தையும், அதன் அவதார பேதங்களையும் காளிதாஸன் ப்ராமாணிகமாக எண்ணினவரென்றே தெரிய வருகிறது. இவரது காவ்யங்களில் தேவாலய ப்ரஸ்தாவங்கள் விசேஷமாய் இல்லாவிட்டாலும், விக்ரஹாராதநம் முன்காலங்களி லில்லையென்று ஆதுநிகர்கள் சொல்லும் வதந்திக்குக் காளிதாஸன் கிரந்தங்களில் சிறிதும் இடமில்லை.



“ கூவனகேஸாகாலஉ கிகெதநஸு ஸணுஉ ஒரெகிகவம ஜனஷெஃ ”

(ர சு, 34)

“ கூபொாயவிடிகஷிணொடியெஃ ஸ்ரீ தபொாகணைஷி கெதசீஷூரு ”

(ர. அ, 33)

என்னும் ஸ்லோகங்களில் வ்யக்தமாய்த் தேவாலயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இது போன்ற அநேக ஸிவஸ்தலங்களும் விஷ்ணுஸ்தலங்களும் இவர்காலத்தி லிருந்தன வென் பதற்கு ஸந்தேஹமில்லை. மஹாபாரதத்திலும், பல புராணங்களிலும் தேவாலயங்கள் இருந்ததாக ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனுல், அந்த ஸ்தலங்கள் ப்ராக்ஷிப்தங்களென்றும், பௌத்த ஜைநகாலத்துக்குப் பிறகுதான் இந்தத்தேசத்தில் தேவாலயங்கள் உண்டாயினவென்றும் ஆதுநிகர்கள் ஸித்தாந்தம். இதன் உண்மை எப்படியிருந்தபோதிலும் காளிதாஸன்காலம் ஸம்பந்தப் பட்ட வரையில் இந்த ஸந்தேஹத்துக்கு இடமில்லையென்று இந்தவாக்யங்களால் விளங்கும்.

காளிதாஸனை மதத்திற் சைவனென்றே பஹுவாய் எல்லாரும் சொல்லுகிருர்கள். இதற்குக்காரணம், அவர் க்ரந்தங்களின் ஆரம்பங்களில் நாந்தீ ஸ்லோகங்கள் ஸிவபரமாகவே இருப்பது தான். அவையாவன:—

“ வாமய—ாவிவஸம்வ்ரு க்த ” (ர. க, க)
“ யா ஸ்ருஷ்டிஸ் ஸ்ருஷ்டுராத்யா ” (ஸாகுந்தலம்)
“ வெதாணெஷு யமாஹுரெக ” (விக்ர)
“ ஸ்வெகைஸ்வர்யெ ஸதஸ்யபி ” (மாலவிகா)

இந்த ஸ்லோகங்கள் ஸிவபரமாகையால், அவரை ஸிவபக்தரென்றே சொல்லவேணும். ஆனுல், தற்காலத்துச் சைவர்கள்போல த்ரிமூர்த்திகளில் சிவனே உத்க்ருஷ்டரென்றும், மற்ற இரண்டு பேரான ப்ரஹ்மவிஷ்ணுக்கள் கீழ்ப்பட்டவரென்றும் இவருக்கு அபிப்பிராயமில்லை; மூன்று மூர்த்திகளையும் ஒருவரேயென்றும், அவர்கள் ஸ்ருஷ்ட்யாதி கார்யங்களுக்காக வேறுபட்டவரென்றும், வேறு எவ்விதத்தாலும் அவர்களில் தாரதம்யமில்லையென்றுமே இவரது த்ருடமான அபிப்பிராய மென்று தெரிகிறது.

“ஸமெகவ ஸிகிஃபிஹிதெத்யாவா வாசோ நிஜெஷாவ்ய வாவரகம்”

(கா. ௭, 44)

என்று இவர் வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறார்.

“ஏகைவ மூர்த்திர் பிபிதே த்ரிதா ஸா
ஸாமாந்யமேஷாம் ப்ரதமாவரத்வம் ।
விஷ்ணோர் ஹரஸ் தஸ்ய ஹரி: கதாசித்
வேதாஸ் தயோஸ் தாவபி தாதுராத்யௌ”

என்று பர்த்ருஹரி சொல்வதுபோல, இவரும் மூன்றுமூர்த்திகளையும் ஸமமாகவும் அபிந்நமாகவும் பாவித்து அந்த அந்த அவஸரங்களில் ப்ரஹ்மாவையும் ருத்ரனையும் விஷ்ணுவையும் பரப்ரஹ்ம மாகவே எண்ணி ஸ்துதி செய்கிறார். இவர் ப்ரஹ்மாவை ஸ்துதிக்கும் காலத்தில்:—

“நமஸ் த்ரிமூர்த்தயே துப்யம் ப்ராக் ஸ்ருஷ்டே: கேவலாத்மநே । குண த்ரயவிபாகாய பஶ்சாத் பேதமுபேயுஷே”

(கா. ௨, 4)

“ஸ்த்ரீபும்ஸாவாத்மபாகௌ தே பிந்நமூர்த்தே: ஸிஸ்ருக்ஷயா । ப்ரஸூதிபாஜ: ஸர்கஸ்ய தாவேவ பிதரௌ ஸ்ம்ருதௌ”

என்று தொடங்கி,

“த்வமேவ ஹவ்யம் ஹோதா ச போஜ்யம் போக்தா ச ஶாஶ்வத: । வேத்யம் ச வேதிதா சாஸி த்யாதா த்யேயம் ச யத்பரம் ॥” என்று முடிக்கிறார்.

இந்த ஸ்லோகங்கள் கேவலம் பொய்யான பெருமையைச் சொல்லுகின்ற ஸ்துதி வாக்யங்களல்ல வென்பதை “யதார்த்தார்த்தா விஷயம் ஸ்தோத்ரம்” என்று தாமே சொல்லுகிறார். விஷ்ணுவின் நாபீ கமலத்திலுண்டாகி, வேதத்தைப் பறிகொடுத்து, ஸம்ஸாரிகளில் முதன்மையடைந்து, ‘ஸ்ருஷ்ட்வா ஸ்ருஜ்ய நாஶ’ என்கிறபடி ஒரு அதிகாரி புருஷரான சதுர்முக ப்ரஹ்மாவுக்கு இந்த ஸ்லோகங்கள் அந்வயிக்காதவைகள். அந்த ப்ரஹ்மாவை “ஜகத்காரண காரணம்” என்றும், “ஸர்வஸ்ய ஸர்வஜ்ஞ” என்கிற ஸ்ம்ருதி வாக்யத்தின் அர்த்தத்தை அநுஸரித்து “பிதாமஹம் பிதுர் அபி ஜ



ஜநகம்” என்றும், “உத்காத ப்ரணவோ யாஸாம் ...... தாஸாம் ஸ்வரமுகீரணம்” என்றும், “ஸாமவேதம் த்விஷாம்” என்றும், “த்யேயம் ச யத்பரம்” என்றும் சொல்வது அத்யந்தம் அநுசிதமாகவும், ப்ரமாண விருத்தமாகவும் தோன்றுகிறது ஆகையால், இப்படி ஸ்துதி பண்ணின கவியின்தாத்பர்யத்தை இரண்டு பிரகாரமாய் நாம் ஊஹிக்கலாம் ஏற்கெனவே நாம் சொன்னபடி ப்ரஹ்மாவைப் பரமாத்மா வாகவே எண்ணி அவரை ஸ்துதிக்குங்கால் பரமாத்மாவுக்கு அநுகுணமான ஶப்தங்களால் கவி ஸ்துதிக்கிறார். ராஜவேஷம் தரித்த ஒரு நடனை நாம் பெயர் சொல்லி அழைத்தால் அது பொய்யன்றாகிலும் அவன் காலாநுகுணமாக அந்த ராஜ வேஷத்துக்கு யோக்யமான பதிலையே நமக்குச் சொல்வதுபோல, ப்ரஹ்மாவின் ப்ரதி வசநத்தில் தன்னையும் விஷ்ணு ருத்ரர்களையும் பிரித்துத் தேவதைகள் அபேக்ஷித்த ஸேநாநியைத் தான் ஸ்ருஷ்டிக்காததற்கு “ஜகத்ஸ்ருஷ்டி” என்கிற (௨,௫௫) ஸ்லோகத்தால் காரணம் சொல்லி, தேவதைகளுக்கு விஸ்வாஸம் பிறக்க வேண்டியதற்காக, “ஸம்ஹிதம்” (௨, ௫௮) என்கிற ஸ்லோகத்தால் ருத்ர ரூபமான தன்னையே ஸ்லாகித்து, அந்த ருத்ரன் குமாரராக அவர்கள் அபேக்ஷிக்கும் ஸேநாபதி உண்டாகப் போகிறதாக வரமளிக்கிறார். ‘இப்படி அபேதமாய் ப்ரஹ்மாவையும் பரப்ரஹ்மத்தையும் எண்ணுவது பிரமாணவிருத்த மன்றோ? பரமாத்மாவைக் காட்டிலும் பிரஹ்மா பின்னமான சேதநரல்லவா?’ என்று சந்தேகித்தால் இந்தப்பக்ஷத்திலும் கவிவாக்யங்கள் உபபந்நமென்று நிரூபிக்கலாம் அதாவது - சதுர்முகப்ரஹ்மா - பரமாத்மாவைக் காட்டிலும், வேறானாலும், அவருக்கும் ‘பரமாத்மா அந்தர்யாமி யாகையாலும், அந்தப் பரமாத்மாவின் சக்தியே அவர்சக்திக்கு ஹேது வாகையாலும், அந்தப் பரமாத்மாவே ஸர்வபலப்ரத ராகையாலும், இந்தத் தத்வமறிந்த தேவதைகள் பரப்ரஹ்மஸமாதியால் பிரஹ்மாவை ஸ்துதித்தது பிரமாண விரோதமன்று. உபநிஷத்தில் ப்ரதர்தநவித்யையில் இந்திரன் “மாமுபாஸ்வ” என்று சொல்வதைப் பரப்ரஹ்ம பரமாக வேதாந்திகள் அர்த்தம் செய்திருப்பது “ஶாஸ்த்ர த்ருஷ்ட்யா தூபதேஶோ வாமதேவவத்” என்னும் (I. 1 - 31)

ஸூத்ரத்திலும் அதன் பாஷ்யத்திலும் விளங்கும். இந்தத் தத்வத்தையே "[illegible]" என்றும், "[illegible]" (ஸ 14) என்றும் கீதையில் சொல்லியிருப்பதால், ப்ரஹ்மாவை ஸ்துதிக்கப்புகுந்த தேவதைகள் அவர் அந்தர்யாமி பர்யந்தம் அந்த ஸ்தோத்ரத்தைச் செய்தார்கள். அதை அறிந்த ப்ரஹ்மாவுக்கு ஸ்தோத்ரம் பரமாத்ம விஷயமாகையால் ஸ்ரூதபமமாயிற்று. ஆனால் ப்ரதிவசநத்தில் ப்ரஹ்மா தன்னை வேறுபிரித்துச்சொன்னது, மேல் தேவதைகள் நினைத்த பலத்துக்கு உபாயாநுஷ்டாநம் செய்ய வேண்டியதற்காக என்று ரஸிகர்கள் அறிய வேணும். பொய்யான ஸ்தோத்ரத்தைத் தேவதைகள் செய்தார்கள் என்பதும், அதனால் ப்ரஹ்மா துஷ்டி யடைந்தார் என்பதும் கவியின் சாதுர்யத்துக்கும் தேவாதிகள் கௌரவத்துக்கும் விரோதம். ப்ரஹ்மாவைப் பிந்நசேதநமாய் எண்ணுபவர்களுக்கு இந்த ஸமாதாநமே ஸ்வரஸம்.

குமாரஸம்பவம் 6-வது ஸர்க்கத்தில் ருத்ரஸ்துதிப்ரகரணத்திலுள்ள கவியின் வாக்கியங்கள், இந்த அபிப்ராயத்தினாலேயே ஸமாதாநம் செய்யப்பட வேண்டியவைகள். அங்கும் கவி ருத்ரனைப் பரமாத்மாவாகவே எண்ணுகிறார். "[illegible]" (ஸ, உக.) இது, பாரதத்தில், விதுரர், ஸ்ரீக்ருஷ்ணன் தௌத்யப்ரகரணத்தில் தன் க்ருஹத்துக்கு வந்தபோது சொன்ன வாக்கியம்; அங்கு "[illegible]" என்று ஆரம்பத்தில் மாத்திரம் பேதம். இங்குச்சொன்ன அந்தராத்மத்வம், அபேதபக்ஷத்திலும் அந்தர்யாமி பர்யந்த பக்ஷத்திலும், ருத்ரனுக்கு மேலே விவரித்தபிரகாரம் அந்வயிக்கும். ருத்ரனைப் பரதேவதையாகவும், ப்ரஹ்ம விஷ்ணுக்களைத் தணிந்தவர்களாகவும் அர்த்தம் செய்வது ப்ரகரணவிருத்தம். ஏனென்றால், ஸப்தருஷிகள் நேரில் ருத்ரனைப்பார்க்கும்போதே நீர் ப்ர



ஹ்மாவா? விஷ்ணுவா? ருத்ரனா? என்று ஸந்தேஹப்பட்டுக்கேட்கிறார்கள்.

"[illegible]" (ஸ, உஉ).

மேல்வாக்கியங்களும், பரமாத்மா பேதபுத்திக்கும் பரமாத்ம ஸமாதி புத்திக்கும் இரண்டு பக்ஷத்துக்கும் அநுகுணங்கள்.

"[illegible]..." (ஸ, எஎ)

"[illegible]" (ஸ, எரு)

"[illegible]" என்கிற (உ, 44) வாக்யம் ருத்ரனுக்குப் பரமாத்ம பாவத்தையே அவலம்பித்தது.

இப்படி பரமாத்ம பாவத்தை அவ்யவஸ்திதமாய் ப்ரஹ்ம ருத்ர விஷ்ணுக்கள் எல்லாருக்கும் சொல்வது காளிதாஸனுக்கு ஸ்வபாவமென்பது, விஷ்ணுஸ்துதிப் பிரகரணங்களாலும், விஷ்ணு ஸம்பந்தமான ஶப்தங்களாலும், நன்றாய் விளங்குகிறது.

"[illegible]" என்னும் (ங,உஎ) வாக்கியத்தில் ஸத்வ ப்ரதாநரான விஷ்ணுவை ப்ரஹ்மாவின் மூர்த்தி பேத மென்கிறார்.

"[illegible]" (கூ, 6)

என்னும் ஶ்லோகத்தால் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு ஹேதுவான புருஷனென்னும் நாராயணனே பரதத்வமென்றும், ப்ரஹ்மா அவரிடத்தில் உண்டானவரென்றும் வ்யக்தமாய்த் தோன்றுகிறது.

"[illegible]" (கூ, [illegible])

என்பதும் விஷ்ணு பரதத்வத்தையே காட்டுகிறது.

"[illegible]
[illegible]" (கஅ, உஉ)

என்பதும், விஷ்ணுவைப் பரமாத்மாவென்று ஸாக்ஷாத்தாகச் சொல்லுகிறது. மேலும், "[illegible]" என்றும், "[illegible]" என்றும் உள்ள விஷ்ணு விஷயமான ப்ரயோகங்களும் இந்த அபிப்ராயத்துக்கு அநுகுணங்கள்.

இப்படி மூன்று மூர்த்திகளையும் அபேதமாக எண்ணினபோதிலும், சிற்சில விடங்களில் அவர்களில் ஒருவனை உயர்த்தியும், ஒருவனைத் தாழ்த்தியும் பேசுகிற இடங்களும் இருப்பதால்,

"[illegible]
[illegible]" (கு. கஎ, 44)

என்கிற இவர் வாக்கியத்துக்கு இவரே பக்ஷபாத மில்லாமல் புராணங்களிற்போல நிதர்சநம் கொடுப்பவராக இருக்கிறார்.

ரகுவம்சம் 10-வது ஸர்க்கம் விஷ்ணுஸ்துதி ப்ரகரணம்விஷ்ணுவையே பரமாத்மாவாக ஸ்துதிக்கிற தென்று இனிச் சொல்ல வேண்டியதில்லை. இந்த ஸ்துதியும் யதார்த்தமான குணங்களைச் சொல்லுகிற தென்பது, "[illegible]" என்கிற (கo, 33) வாக்யத்தால் ஸ்பஷ்டம்.

"[illegible]
[illegible]"

என்கிற ச்லோகத்தை அநுஸரித்தது

"[illegible]
[illegible]"

என்னும் (கo - 32) ச்லோகம்.

"[illegible]
[illegible]"

என்கிறது, ஸத்ருசமான ஸமவச கீதாவாக்யங்களை ஸ்மரிப்பிக்கிறது.



"[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

இந்தப் பத்யரத்நங்கள் மாத்திரமே, இந்தக்கவி பரமஸாத்விக ரென்றும் உத்தமபாகவத ரென்றும் சொல்லப் போதுமானவைகள். இவைகளில் அடங்காத உபநிஷதர்த்தங்களும் ஸ்ம்ருதி புராணார்த்தங்களும் வேறு ஒன்று மில்லை. இவரைச் சைவ ரென்று நினைத்து வைஷ்ணவர்கள் அநாதரிக்காமல், 'கவிஸார்வபௌமன்' என்று ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் கொடுத்த பஹுமதியைக் காட்டும் பிருதைக் கவனித்து சிலாகிக்க வேண்டும். இவர் ஸகலதர்சநங்களையும் கற்று ஸாரமாய்ச்சொன்ன பத்யம்:—

"[illegible]
[illegible]"

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

# கீதார்த்த ஸங்க்ரஹம்.

இனி ஏழாவது அத்யாயத்தை ஸங்க்ரஹித்துச்சொல்லுகிறார்.

௧௧. ஸ்வயாதாத்ம்யம் ப்ரக்ருத்யாஸ்ய திரோதி: சரணாகதி: ।
பக்தபேத: ப்ரபுத்தஸ்ய ச்ரைஷ்ட்யம் ஸப்தம உச்யதே ॥

ஸப்தமே - ஏழாவது அத்யாயத்தில், ஸ்வயாதாத்ம்யம் - உபாஸிக்கத்தகுந்தவனாயிருக்கும் பரமபுருஷனாகிற தன்னுடைய யாதாத்ம்யமும், ப்ரக்ருத்யா - ப்ரக்ருதியினால், அஸ்ய - பகவானுடைய யாதாத்ம்யத்திற்கு, திரோதி: - மறைவும், [இந்த ச்லோகத்திற் சொல்லியிருக்கும் ப்ரக்ருதி சப்தத்தால் “தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா” என்பதிலுள்ள மாயா சப்தத்தின் அர்த்தம் ப்ரகாசிதமாய்த்து.] சரணாகதி: - “மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே” என்று சொல்லப்பட்ட பகவத் ப்ரபதநமும். [இந்த ப்ரபதநமே மாயாரூபமான மறைவை நிவ்ருத்திக்கிறது.] பக்தபேத: - “ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு:” என்கிற இடத்திற் சொல்லப்பட்டிருக்கும் பக்தர்களுடைய பேதமும், ப்ரபுத்தஸ்ய - அவர்களில் ப்ரபுத்தனான ஜ்ஞாநிக்கு, ச்ரைஷ்ட்யம் - “ஏகபக்திர் விசிஷ்யதே” என்று சொல்லப்படும் உத்கர்ஷமும், உச்யதே - சொல்லப்படுகிறது. ௧௧.

எட்டாவது அத்யாயத்தை ஸங்க்ரஹித்துக் காட்டுகிறார்.

௧௨. ஐச்வர்யாக்ஷரயாதாத்ம்ய பகவச்சரணார்த்திநாம் ।
வேத்யோபாதேயபாவாநாம் அஷ்டமே பேத உச்யதே ॥



ஐச்வர்ய - ப்ரஹ்மா ருத்ரன் இவர்கள் முதலான தேவதைகளுடைய போகத்தைக்காட்டிலும் அதிசயிதமான போகத்தையும், அக்ஷரயாதாத்ம்ய - ப்ரக்ருதி ஸம்பந்தமற்ற சுத்த ஜீவ ஸ்வரூபத்தையும், பகவச்சரண - பரம ப்ராப்யமான வாஸுதேவ பாதாரவிந்தங்களுடைய பரிசரணத்தையும், ஆக இவைகளை, அர்த்திநாம் - தங்கள் தங்கள் பலமாகக் கோருகிற ஐச்வர்யார்த்திகள் என்ன, கைவல்யார்த்திகள் என்ன, மோக்ஷார்த்திகள் என்ன இம்மூவருக்கும், வேத்யோபாதேய பாவாநாம் - அறிய வேண்டுவனவும் அநுஷ்டிக்க வேண்டுவனவுமான பதார்த்தங்களுடைய, பேத: - விசேஷமானது, அஷ்டமே உச்யதே - எட்டாவது அத்யாயத்திற் சொல்லப்படுகிறது. [இம்மூவருக்கும் ஜ்ஞாதவ்யமான அம்சங்களாவன - “அக்ஷரம் ப்ரஹ்ம பரமம்” இத்யாதிகளிற் சொல்லப்பட்ட சுத்தாத்ம ஸ்வரூபம் முதலானவை. இம்மூவராலும் அநுஷ்டிக்கவேண்டிய அம்சங்களாவன - தங்கள் தங்களுடைய இஷ்டபலத்திற்குத் தகுந்த பகவதுபாஸநம், அந்திம ஸ்ம்ருதி, கதிசிந்தநம் முதலியவை.] ௧௨.

ஒன்பதாவது அத்யாயத்தை ஸங்க்ரஹிக்கிறார்.

௧௩. ஸ்வமாஹாத்ம்யம் மநுஷ்யத்வே பரத்வம் ச மஹாத்மநாம் ।
விசேஷோ நவமே யோகோ பக்திரூப: ப்ரகீர்த்தித: ॥

ஸ்வமாஹாத்ம்யம் - “மயா ததமிதம் ஸர்வம்” இத்யாதிகளிற் சொல்லப்பட்ட தன்னுடைய மாஹாத்ம்யமும், மநுஷ்யத்வே - மநுஷ்யனாக அவதரித்த தசையிலும், பரத்வம் - “அவஜாநந்தி மாம் மூடா:” இத்யாதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் உத்கர்ஷமும். [இங்கு ப்ரஸ்துதமாகையாலே மநுஷ்யாவதாரத்தைச் சொன்னபடி. எல்லா அவதாரங்களும் வ்யூஹாதிகளும் இம்மாதிரியான உத்கர்ஷத்துடன் கூடியவைதான்.] மஹாத்மநாம் - “மஹாத்மாநஸ்து மாம் பார்த்த” இத்யாதிகளிற் சொல்லப்பட்ட மஹாத்மாக்களுடைய, விசேஷ: - விசேஷமும். [விசேஷமாவது - வேறொன்றிலும் மநஸ் செல்லாதவர்களாகவும், எப்பொழுதும்

பகவந்நாம ஸங்கீர்த்தநத்துடன் கூடினவர்களாகவும் இருக்குந் தன்மை.] ஸ்வஸ்தித்யவாப்த்யேகோபாய: - ப்ரீதிரூபாபந்நமாயும், தர்ஸந ஸமாநாகாரமாயும் தைல தாரைபோல இடைவிடாத ஸ்ம்ருதிஸந்ததிரூபமாயும் இருக்கிற பகவத் பக்தியாகிற பகவத்ப்ராப்த்யுபாயமும், நவமே வ்யக்திருதீரித: - ஒன்பதாவது அத்யாயத்தில் விஸ்தாரமாக ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ௰௩.

பத்தாவது அத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹித்துக்காட்டுகிறார்.

௰௪-ம். ஸ்வகல்யாண குணாநந்த்ய க்ருத்ஸ்ந ஸ்வாதீநதா மதி: ।
பக்த்யுத்பத்தி விவ்ருத்த்யர்தா விஸ்தீர்ணா தஶமோதிதா ॥

பக்த்யுத்பத்திவிவ்ருத்த்யர்தா - கீழ்ச் சொல்லப்பட்ட ஸபரிகரமான பக்தியோகத்தினுடைய ஸ்வரூபோத்பத்தியையும் அபிவ்ருத்தியையும் ப்ரயோஜநமாக உடையதான, மதி: - ஜ்ஞாநமானது, விஸ்தீர்ணா - அதி விஸ்தீர்ணமாக, தஶமோதிதா - பத்தாவது அத்யாயத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ளது. அந்த 'மதி' எப்படிப்பட்டது என்றால், ஸ்வகல்யாண குணாநந்த்ய க்ருத்ஸ்ந ஸ்வாதீநதா - தன்னுடைய மங்களகுணங்களுடைய முடிவில்லாமையையும், ஸமஸ்த ஜகத்தும் பகவானுக்கு அதீநமாக இருக்குந் தன்மையையும் விஷயீகரித்து நிற்கும். "யோமாமஜமநாதிஞ்ச" இத்யாதிகளில் மங்களகுணங்கள் சொல்லப்பட்டுள்ளன. "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:" இத்யாதிகளில் ஜகத்தின் பகவததீநதை சொல்லப்பட்டிருக்கிறது. ௰௪.

பதினோராவது அத்யாயத்தில் அர்ஜுநனுக்குத் தன்னுடைய விஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கக் கூடியதான திவ்யசக்ஷுஸ்ஸைக் கொடுப்பதும், தன்னுடைய ஜ்ஞாநமும் தர்ஸநமும் வேண்டுமானால் பக்தியொன்றாலேயே அவைகள் அடையத்தகுந்தவைகளென்பதும் சொல்லப்படுகின்றன என்கிறார்.

௰௫-ம். ஏகாதஶே ஸ்வயாதாத்ம்ய ஸாக்ஷாத்காராவலோகநம் ।
உக்தமேகம் விதிப்ராப்த்யோர் பக்த்யேகோபாயதா ததா ॥



OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. REGISTERED 1911

ஏகாதஶே - பதினோராவது அத்யாயத்தில், ஸ்வயாதாத்ம்ய - ஸமஸ்த சித் அசித் இந்த வஸ்துக்களை ஶரீரமாக வைத்திருக்கும் தன்னுடைய யதாவஸ்தித ஸ்வபாவத்தை, ஸாக்ஷாத்கார - ஸாக்ஷாத்கரிக்கக் காரணமான, அவலோகநம் - திவ்யநேத்ரமானது, தத்தம் - (வாஸுதேவனால்) கொடுக்கப்பட்டதாக, உக்தம் - சொல்லப்பட்டிருக்கிறது. ["வஸ்யாமி தேவாந் தவ தேவ தேஹே" என்றன்றோ அர்ஜுநன் ஸாக்ஷாத்கரித்தது. அவலோகநம் என்பதனால் ஸாமாந்யமாக 'பார்வை' என்னும் அர்த்தம் கிடைத்தாலும், 'அவலோக்யதே அநேந' என்று வ்யுத்பத்தி செய்து 'நேத்ரம்' என்னும் அர்த்தமும் கிடைக்கலாம்.] விதிப்ராப்த்யோ: - பகவத்ஜ்ஞாந மென்ன, ப்ராப்தி யென்ன இவைகளுக்கு, பக்த்யேகோபாயதா - பக்தியையே ப்ரதாநமான உபாயமாக உடைத்தாயிருக்கையும், ததா - முன்போலச் சொல்லப்பட்டுள்ளது. [ஜ்ஞாநம், ப்ராப்தி இவ்விரண்டை மாத்திரம் இவ்விடத்திற் சொன்னபோதிலும், அந்தப் பதத்தை தர்ஸநத்திற்கும் உபலக்ஷணமாக எடுத்துக்கொள்ள வேணும். ஏனென்றால், "பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோ(அ)ர்ஜுந । ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப" என்றன்றோ கீதாவாக்யம் நிற்கிறது.] ௰௫.

பன்னிரண்டாவது அத்யாயத்தை ஸங்க்ரஹிக்கிறார்.

௰௬-ம். பக்தே: ஶ்ரைஷ்ட்ய முபாயோக்தி ரஶக்தஸ்யாத்மநிஷ்டதா ।
தத்ப்ரகாராஸ் த்வதிப்ரீதிர் பக்தே த்வாதஶ உச்யதே ॥

பக்தே: - பகவத் பக்திக்கு, ஶ்ரைஷ்ட்யம் - ஆத்மப்ராப்திக்கு ஸாதநபூதமான ஜீவோபாஸநத்தைக் காட்டிலும் இருக்கும் உத்கர்ஷமும், [இந்த உத்கர்ஷம், தன்னுடைய பலத்தை ஸாதித்துக் கொடுக்கும் விஷயத்தி லிருக்கும் ஶைக்ர்யத்தாலும் ஸுகதையாலும் ஏற்படுகிறது.] உபாயோக்தி: - "மய்யேவ மந ஆதத்ஸ்வ" இத்யாதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் பக்த்யுபாயம்

162434
R65 m2...

விவரணமும், அஶக்தஸ்ய - பர்வக்ரமமாகச் சொல்லப்பட்ட சித்த ஸமாதாநத்திலும், பகவத்குணப்யாஸத்திலும், பகவானுக்கு அஸாதாரணமாக இருக்கும் மண்டபம் கோபுரம் முதலியவைகளைக் கட்டுவதிலும் அஶக்தனை அதிகாரிக்கு, ஆத்மநிஷ்டா- ஜீவோபாஸநமும், [இந்த ஜீவோபாஸநம் பகவத் பக்திக்குக் காரணம்; முதல் ஆறு அத்யாயங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.] தத்ப்ரகாரா: - அப்படிப்பட்ட உபாஸநத்திற்கு உபயோகியாக நிற்கும் கர்மயோகத்திற்கு அபேக்ஷிதங்களான உபாதேய குணங்களின் ப்ரகாரங்களும், பக்தே - பக்த விஷயத்தில், அதிப்ரீதி: - அளவற்ற ப்ரீதியும், ["ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:" என்னுமிடத்தில் இந்த ப்ரீதி காண்பிக்கப்பட்டிருக்கிறது.] த்வாதஶ உச்யதே - பன்னிரண்டாவது அத்யாயத்திற் சொல்லப்படுகிறது. ௧௬.

இது வரையில் முதல் இரண்டு ஷட்கங்களிலடங்கிய பன்னிரண்டு அத்யாயங்களின் அர்த்தங்கள் ஸங்க்ரஹிக்கப்பட்டன. இதற்குமேல் மூன்றாவது ஷட்கத்தின் அத்யாயார்த்தங்கள் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன. இந்த மூன்றாவது ஷட்கம் இரண்டு பாகமாகப்பிரிந்து, அதில் முதல் மூன்று அத்யாயங்களடங்கிய முதற் பாகமாகிய ப்ரதம த்ரிகத்தால் தத்வங்களின் ஸ்வபாவத்தையும், அடுத்த மூன்று அத்யாயங்களடங்கிய இரண்டாவது பாகமாகிய த்விதீய த்ரிகத்தால் கர்மயோகம் முதலிய கர்த்தவ்யங்களின் ஸ்வபாவத்தையும் நிரூபித்துச் சொல்லுகிறது. இந்த ஷட்கத்தின் மொத்த அர்த்தத்தை ஸங்க்ரஹிக்கும் பொழுதே, இம்மாதிரியான விபாகத்தை மநஸ்ஸில் வைத்து ஸங்க்ரஹித்திருக்கிறார்; 'ப்ரதாந புருஷவ்யக்த ஸர்வேஶ்வர விவேசநம்' என்கிற முதற்பாதி தத்வ நிரூபணத்தையும், 'கர்மதீர்பக்திரித்யாதி: பூர்வஶேஷோऽந்திமோதித:' என்கிற இரண்டாவது பாதி கார்ய நிரூபணத்தையும் காட்டுகிறது. இப்பொழுது



ப்ரதம த்ரிகத்தில் முதலத்யாயமாகிற பதின் மூன்றாவது அத்யாயத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார்.

௧௭. தேஹஸ்வரூபமாத்மாப்திஹேதுராத்மவிஶோதநம்।
பந்தஹேதுர்விவேகஶ்ச த்ரயோதஶ உதீர்யதே ॥

தேஹஸ்வரூபம் - 'மஹாபூதாந்யஹங்கார:' என்று தொடங்கி 'ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேந ஸவிகாரமுதாஹ்ருதம்' என்கிறவரையிலுள்ள ஶ்லோகங்களாற் சொல்லப்பட்ட ஸகார்யகமான ஶரீரத்தின் ஸ்வரூபமும், [இது ஆத்ம ஸ்வரூபத்திற்கும் உபலக்ஷணமென்று ஸ்ரீபாஷ்யகாரரின் திருவுள்ளம்.] ஆத்மாப்திஹேது: - ப்ரக்ருதியை விட்டுப் பிரிந்து நிற்கும் ஜீவனுடைய அடைதலுக்குக் காரணமும், ['அமாநித்வமதம்பித்வம்' இத்யாதிகளாற் சொல்லப்பட்டிருக்கும் குணவிஶேஷங்கள் தான் ஜீவனை அடைதலுக்குக் காரணம்.] ஆத்மவிஶோதநம் - அப்படிப்பட்ட ஜீவனுடைய விஶேஷித்த ஶோதநமும், ['ஜ்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி' இத்யாதிகளில் இது சொல்லப்பட்டிருக்கிறது.] பந்தஹேது: - ப்ரக்ருதி ஸம்பந்தமாகிற பந்தத்திற்குக் காரணமும், [இது 'காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு' என்கிற இடத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.] விவேகஶ்ச - 'ய்ருதேதாநி பஶ்யதி' என்று தொடங்கி, நம்மாற் பார்க்கப்பட வேண்டிய பொருள் என்று சொல்லப்பட்டிருக்கும் ஆத்மாவினுடைய விவேசித்து அநுஸந்தாநம் பண்ணுகையும், [இங்கு 'விவேக' ஶப்தத்தாலே தேஹாத்மாக்களுடைய விவிக்த ஜ்ஞாபநமாவது அவைகளுடைய பேதமாவது விவக்ஷிதமன்று; 'ஆத்மவிஶோதநம்' என்று கீழ்ச்சொல்லப்பட்டிருக்கிற ஶப்தத்தாலே இந்த அர்த்தம் கிடைத்து விட்டது.] த்ரயோதஶ உதீர்யதே - ஆக இவைகளெல்லாம் பதின் மூன்றாவது அத்யாயத்திற் சொல்லப்படுகின்றன. ௧௭.

பதின்மூன்றாவது அத்யாயத்தில் ஸத்வம் முதலான குணங்களாகிற பந்த ஹேதுக்கள் சொல்லப்பட்டன வென்றார். இனிப் பதினான்கில் குணபந்த ப்ரகாரமும், அதனை நிவ்ருத்திக்கக்கூடிய உபாயமும் சொல்லப்படுகின்றன வென்கிறார்.

௧௮. குணபந்தவிதா தேஷாம் கர்த்ருத்வம் தந்நிவர்த்தநம் ।
கதித்ரயஸ்வமூலத்வம் சதுர்தச உதீர்யதே ॥

குணபந்தவிதா - ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களுடைய பந்தந ப்ரகாரமும், [‘ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாந ஸங்கேந சாநக’ என்கிற ஸ்லோகத்தால் ஸுக ஸங்கத்தாலும் ஜ்ஞாந ஸங்கத்தாலும் ஸத்வகுணம் பந்தக மென்றும், “தந்நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம்” என்பதனால் யஜ்ஞம் முதலான கர்ம ஸங்கத்தால் ரஜோகுணம் பந்தக மென்றும், “ப்ரமாதாலஸ்ய நித்ராபிஸ் தந்நிபத்நாதி பாரத” என்பதனால் கவனக்குறைவினாலும், சோம்பலாலும், தூக்கத்தாலும் தமோகுணம் பந்தக மென்றும், பந்தந ப்ரகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.] தேஷாம் கர்த்ருத்வம் தந்நிவர்த்தநம் - அந்த ஸத்வம் முதலான குணங்கள்தான் ஸமஸ்த வ்யாபாரங்களுக்கும் கர்த்தாக்கள் என்று உணர்வது அந்தக் குணங்களிலிருந்து விடுவித்துக்கொள்ளும் உபாய மென்பதும், [இது “நாந்யம் குணேப்ய: கர்த்தாரம்” என்பதனாலும், “மாம் ச யோ(அ)வ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே - ஸ குணாந் ஸமதீத்யைதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே” என்பதனாலும் சொல்லப்பட்டிருக்கிறது.] கதித்ரயஸ்வமூலத்வம் - பரிச்சிந்நனான ஜீவனை அடைவது, ஐஸ்வர்யத்தை அடைவது, ப்ரஹ்மத்தை அடைவது ஆகிற மூன்று கதிகளுக்கும் ஸர்வேஸ்வரனான தானே மூலமாக இருக்கிறானென்பதும், [இங்குச் சொல்லப்பட்டிருக்கும் மூன்று கதிகளும் இவைகள்தானென்பது, “ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹம் அம்ருதஸ்யாவ்யயஸ்ய ச - சாஶ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச” என்கிற கடைசி ஸ்லோகத்தால் தெரிகிறது. “ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா:” என்கிற இடத்திற் சொல்லப்பட்டுள்ள மூன்று கதிகள் இங்கு விவக்ஷிதங்களல்ல. அப்படியாகில், “ஊர்த்வம்” இத்யாதி ஸ்லோகங்கள் “மாம் ச யோ(அ)வ்யபிசாரேண” என்கிற ஸ்லோகத்திற்கு முற்பட்டவைகளாகையால், ஸங்க்ரஹஸ்லோகத்தில் க்ரம பங்க தோஷம் ப்ரஸங்கிக்கும்.] சதுர்தச உதீர்யதே - இவைகளெல்லாம் பதினான்காவது அத்யாயத்திற் சொல்லப்படுகின்றன. ௧௮.

பதினான்காவது அத்யாயத்தில், குணஸங்கத்தை நிவ்ருத்தி செய்துகொள்ளவும், அதன்பிறகு ஆத்ம யாதாத்ம்யத்தை அடையவும் பகவத் பக்தியே மூலமென்று “மாம் ச யோ(அ)வ்யபிசாரேண” இத்யாதிகளிற் சொல்லப்பட்டது. பதினைந்தாவது அத்யாயத்தில், நம்மால் பக்தி பண்ணக்கூடியவனும் ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனுமிருக்கிற பகவானுக்குப் புருஷோத்தமத்வம் சொல்லப்படுகிறதென்றும், அந்தப் புருஷோத்தமத்வம் ‘பகவான் சுத்தாசுத்த ஜீவன்களைக்காட்டிலும் உயர்ந்தவன்’ என்பதனால் ஏற்படுகிறதென்று ப்ரதிபாதிக்கப்படுகிற தென்றும் ஸங்க்ரஹிக்கிறார்.

௧௯. அசிந்மிஶ்ராத் விஶுத்தாச்ச சேதநாத் புருஷோத்தம: ।
வ்யாபநாத் பரணாத் ஸ்வாம்யாத் அந்ய: பஞ்சதஶோதித: ॥

புருஷோத்தம: - “யஸ்மாத் க்ஷரமதீதோ(அ)ஹம் அக்ஷராதபி சோத்தம: - அதோ(அ)ஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:” என்கிற ஸ்லோகத்தில் க்ஷராக்ஷரர்களான பத்த முக்தர்களைக் காட்டிலும் உத்தமனாகச் சொல்லப்பட்டிருக்கும் பகவானானவன், [இந்த ‘புருஷோத்தம’ ஶப்தத்திற்கு ‘புருஷேஷு உத்தம:’ என்றும், ‘புருஷாணாம் உத்தம:’ என்றும்,

'𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌷𑍁 𑌉𑌤𑍍𑌤𑌮𑌃' என்றும் ஆக இம்மூன்று விதமாகவும் வ்யுத்பத்தி செய்யலாம். ஶ்ருத ப்ரகாஶிகை, ஸ்தோத்ர பாஷ்யம் இவை இம்மூன்று வித வ்யுத்பத்தியையும் அங்கீகரிக்கின்றன.] 𑌅𑌚𑌿𑌨𑍍𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌚 𑌚𑍇𑌤𑌨𑌾𑌤𑍍 - ப்ரக்ருதிகலந்த பத்தன், ப்ரக்ருதி வியுக்தனான முக்தன் இவ்விருசேதநரைக் காட்டிலும், 𑌅𑌨𑍍𑌯𑌃 - அத்யந்தம் வேறுபட்டவன். இப்படி வேறுபட்டவனென்று சொல்லக் காரணங்களென்ன வென்றால்:—𑌵𑍍𑌯𑌾𑌪𑌨𑌾𑌤𑍍 - வெளியிலும் உள்ளும் வ்யாபித்திருப்பதனாலும், 𑌭𑌰𑌣𑌾𑌤𑍍 - தாரணத்தாலும், 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍 - ஸ்வாமித்வத்தாலும், ஆக இம்மூன்று காரணங்களால் '𑌅𑌨𑍍𑌯𑌃' என்று ஏற்படுகின்றது. [இவைகள், "𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃" என்கிற ஶ்லோகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.] இது தான், 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍋𑌦𑌿𑌤𑌃 - பதினைந்தாவது அத்யாயத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. "𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃" என்பதில் இதைக்காணலாம். இப்படி முக்யமாகச் சித், அசித், ஈஶ்வரன் என்னும் மூன்று தத்வங்களின் ஶோதநம் க்ரமமாக இம்மூன்று அத்யாயங்களிற் செய்யப்பட்டிருக்கிற தென்பது வ்யக்தம்.

யக.

(இன்னும்வரும்.)

இ. ரங்கநாதாசாரியர்.

ஸ்ரீ:

# பதிவ்ரதாதர்மம்.

பாண்டவர்கள், வநவாஸஞ் செய்யுங்காலத்தில் பன்னிரண்டு வருஷம் கதப்ராயமாக இருந்தபொழுது, ஒரு ஸமயத்தில், காம்யக வநத்தில் வஸித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, ஸதா அவர்களுக்கு ஶ்ரேயஸ்ஸைத் தேடிக்கொண்டிருக்கும் ஸ்ரீ க்ருஷ்ண பகவான், அவர்களைப் பார்க்கவேணு மென்கிற ஆஸ்தையுடன், ஸத்யபாமையை அழைத்துக்கொண்டு புறப்பட்டு அங்கு வந்தார். மஹத்தான க்லேஶங்களை யெல்லாம் அநுபவித்துக் கஷ்டப்பட்டு வந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து ஶோகித்து, [illegible]தராய், "[illegible] 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍 - 𑌸𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 [illegible] 𑌲𑍋𑌕𑌾𑌃" என்று தர்மபுத்ரருடைய ஸத்யத்தையும் ஆர்ஜவத்தையும் பலவாறாக ப்லாகித்து, "[illegible]" என்று அவருக்கு மனந்தேறும்படி தைர்யம் சொன்னார். வநவாஸமாக வந்துள்ள அவர்களுள் மிகவும் வருந்தினவள் த்ரௌபதீ. ராஜ்ய ப்ரம்ஶமும் பெருத்த கஷ்டங்களுக்கெல்லாம் ஆஸ்பதமான வநவாஸமும் எல்லாருக்கும் பொதுவாக இருக்கையிலும், ஸ்த்ரீ யாகையாலும், இனித் தான் எவ்வளவோ போகங்களை ஹஸ்திநாபுரத்து ராஜ்ஞியாக இருந்து அநுபவிக்கப்போவதாக மநோரதஞ் செய்துகொண்டிருந்த படியாலும், த்ரௌபதிக்கு இந்தத் துக்கம் பாண்டவரைக்காட்டிலும் ஆயிரம்மடங்கு அதிகமாக இருந்தது. இதையெல்லாம் அறிந்த க்ருஷ்ணன், த்ரௌபதிக்குத் தனியாக ஸாந்த்வநம் செய்து எதைச் சொன்னால் அவ

ளுக்குச் சிறிது ஆறுதல் உண்டாகுமோ அதைப்பற்றி விஸ்தார மாக விவரித்துக்கூறினர். பாண்டவர்கள் வநத்திற்குப் புறப் பட்டபொழுது த்ரௌபதியின் குமாரர்கள் அதிபாலர்களாக இருந்தார்கள். உபபாண்டவர்களாகிய அந்தக் குழந்தைகள் கூடக் காட்டுக்குப்போவது அநுசிதமென்று கருதி க்ருஷ்ணன் அவர் களைத் தம்முடைய த்வாரகா பட்டணத்திற்கு அழைத்துப்போ யிருந்தார். அந்தக் குழந்தைகள் இப்பொழுது யுக்தவயஸ் வந்த வர்களாகவும், தநுர்வித்யை முதலியவைகளில் அதிஸமர்த்தர்க ளாகவும், „மஹாவலி வீர்யுத ஹஸ்தேஷு ஸம்ப்ராத ஶஸ்த்ரேஷு ஶிக்ஷாஸு ஸர்வாஸ்வாயாஸ்தே" என்றபடி பித்ருதுல்ய பராக்ரமர்க ளாகவும் வளர்ந்துவருகிறார்க ளென்று க்ருஷ்ணனிடமிருந்து கேட்கவே, த்ரௌபதி மனங்குளிர்ந்து "ஈன்றபொழுதிற் பெரி துவக்குந் தன்மகனைச், சான்றோனெனக் கேட்ட தாய்" என்றபடி தனக்கு ஏதோ ஒரு பெருத்த பலம் கிடைத்து விட்டதுபோலத் தன்னுடைய தாத்காலிக துக்கத்தை மறந்துவிட்டாள். இப்படி ஜகத்துக்கெல்லாம் ஆநந்த கரனாகிற க்ருஷ்ணனை அடைந்து பாண் டவர்கள் ராஜ்யத்தை மீண்டும் பெறுவதனா லுண்டாகும் ஸந் தோஷத்தைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமான ஸந்தோ ஷத்தை அநுபவித்து வருகையில், பஹு வத்ஸர ஜீவியான மார்க்கண்டேய மஹர்ஷி அவ்விடம் எழுந்தருள, எல்லாரும் எழுந்திருந்து அந்தத் தபோவ்ருத்தருக்கு உசிதமான ஸத்கா ராதிகளைச் செய்து புராவ்ருத்தங்களான புண்யகதைகளையும், ஸநா தநங்களான ஸதாசாரங்களையும் அவரைக்கொண்டு கேட்கவேணு மென்கிற ஆசையுள்ளவர்களாய் ப்ரார்த்தித்தார்கள். அக்காலத் தில் நாரத மஹர்ஷியும் வந்துசேரவே, ஒரு பெரிய ஸமவாயம் சேர்ந்தது. அப்பொழுது மார்க்கண்டேயரும் ஐஹலௌகிகமாயும் பாரலௌகிகமாயுமுள்ள அநேக தர்மங்களைச் சொல்லி அங்கு வந்துள்ள எல்லாருக்கும் ஆநந்தத்தை உண்டுபண்ணினர்.

இது இப்படியிருக்க, ஸத்ய பாமையும் த்ரௌபதியும் ஏகாந்த மாக அந்த ஆச்ரமத்தினுள் உட்கார்ந்து பரஸ்பரம் பார்த்துப் பஹுகால மானதனால், அந்யோந்ய ப்ரீதியை மிகுவிக்கக் கூடிய தங்கள் தங்கள் வம்ச ஸம்பந்தமான கதைகளைச் சொல்லிக் கொ ண்டு உத்ஸாஹமா யிருந்தார்கள். ஆனால், ஸத்யபாமையின் மனத்



தில் விசேஷமான ஓர் எண்ணம் பஹுகாலமாக உண்டு. தான் ரூபலக்ஷண ஸம்பந்நையாகவும் ஸமர்த்தையாகவு மிருக்கையி லும் க்ருஷ்ணன் தனக்கு அத்யந்தம் வச்யனாக இருக்கவில்லை யென்றும், த்ரௌபதியோ ஸ்வாதீந பதிகையாக இருந்து பரம ஸுகத்தை அநுபவித்துவருகிறா ளென்றும், ஒரு விசாரம் பஹு காலமாக ஸத்யபாமையைப் பிடித்துக்கொண் டிருந்தது. 'என்ன உபாயத்தால் த்ரௌபதீ இந்தப் பதவியை அடைந்தாள்?' என்ப தைப்பற்றி அவளைக் கேட்கவேணு மென்றும் இவளுக்கு ஓர் ஆவலுண்டு. அதற்கு அவகாசம் இதுவரையில் நேராமல் இப் பொழுது நேர்ந்ததுபற்றி ஸந்தோஷ மடைந்து, இந்த அவகா சத்திற்கு விக்நம் நேருமுன்னமே இதைக் கேட்டுக்கொள்ள வேணுமென்கிற பரபரப்புடன் த்ரௌபதியைப் பார்த்து ஸத்ய பாமை பின் வருமாறு ப்ரச்நம் செய்தாள். ஒருகால் ஸ்ரீ க்ருஷ்ண னும் இம்மாதிரியான அவகாசத்தை ஸத்யபாமைக்குக் கொடுக் கும்பொருட்டே அழைத்துவந்திருக்கலா மென்றும் தோன்று கிறது. இம்மாதிரியாகக் கர்வபங்கம் செய்வது அவருக்கு வழக் கந்தானே.

"அயி த்ரௌபதி! எவ்விதமான உபாயத்தைச் செய்து உன் னுடைய பர்த்தாக்களை இவ்வளவு ஸ்வாதீநமாக வைத்துக்கொண் டிருக்கிறாய்? அவர்கள் ஸாமாந்ய மனிதர்க ளல்லவே! லோக பாலர்களுக்கு ஸமமான பராக்ரம சாலிகள்; பெரியோர்களால் அநுமோதிக்கக்கூடிய நடத்தை யுடையவர்கள்: இப்படிப்பட்ட ஜகத் ப்ரக்யாதர்களான வீரர்கள் உன்னுடைய இங்கிதங்களுக் குப் பராதீநர்களாக இருப்பது எப்படி? எப்பொழுதும் உன் முகத்தையே எதிர்பார்த் திருக்கிறார்களே யொழிய உன்பேரில் அவர்கள் கோபித்துக் கொண்டதை நான் இதுவரையில் பார்த் ததேயில்லை. என்ன உபாயத்தைச் செய்து இவ்விதமாக வசம் செய்துகொண்டாய்? உண்மையைச் சொல்லவேணும். ஏதாவது வ்ரதாநுஷ்டாநம் செய்தாயோ? மணி மந்த்ர ஔஷதங்களிலே ஏதாவது உண்டோ? என்ன வித்யையின் வீர்யம் இது? ஜப ஹோ மங்கள் ஏதாவது அநுஷ்டித்தாயோ? இல்லாவிட்டால் ஏதாவது மூலிகைகளை ப்ரயோகம் செய்திருக்கிறாயோ? எதுவாக இருந்தா லும் உனக்கு அத்யந்தம் தோழியாயுள்ள எனக்கு அதை உபதே சிக்கவேணும். பர்த்தா ஸ்வாதீநமாக இருப்பதைக்காட்டிலும் உயர்

ந்த யஶஸ் ஸ்த்ரீகளுக்கு உண்டோ? அந்தப் பாக்யத்தை நான்
சிறிதும் அறியேன். உன்னிடமிருந்து உபாயத்தைத் தெரிந்து
கொண்டு க்ருஷ்ணனை எனக்கே வஶ்யமாகச் செய்துகொள்ள
வேணுமென்று ஆசை யிருக்கின்றது. நீ ஸஹாயம் செய்யவேணும்."

இந்த வார்த்தையைக் கேட்டு, பதிவ்ரதோத்தமையான த்ரௌ
பதி, மனங்கலங்கி, ஆனாலும் புத்தியின் குறைவால் இம்மாதிரி
யாக இவள் கேட்டாளென்று தெரிந்துகொண்டு பின் வருமாறு
மறுமொழி சொன்னாள்.

"ஸத்யபாமே! என்ன, இவ்விதமாக என்னைப் பார்த்துக்
கேட்கிறாய்? நீ சொல்வதெல்லாம் அஸத் ஸ்த்ரீகளின் செய்கை
யன்றோ? இப்படிக் கேட்பதும், என்னைப்பற்றி இம்மாதிரி ஸம்
ஶயப்படுவதும், உனக்கு அழகன்று. க்ருஷ்ணனுடைய பத்நியாக
இருக்கும் உனக்கு இந்தப் புத்தி எப்படி உண்டாயிற்று? தன்
னுடைய பத்நீ, மந்த்ரம் மூலிகை இவைகளை உடைத்தா யிருக்கி
றாள் என்று எப்பொழுது பர்த்தாவுக்குத் தெரிகிறதோ, அப்
பொழுதே க்ருஹத்திற்குள் வந்துவிட்ட ஸர்ப்பத்தைக் கண்டாற்
போலப் பர்த்தா நடுங்குகிறான். அப்படி நடுங்கினால் மநஸ்ஸுக்கு
ஸமாதாநம் உண்டாகுமோ? ஸமாதாந மில்லாமல் தபிக்கும்
மநஸ்ஸுக்கு ஸுகமேது? மந்த்ரத்தாலும் மருந்தாலும் பர்த்தா
ஸ்வாதீந மாகிறான் என்பதே பொய். இம்மாதிரியான மருந்துகள்
பர்த்தாவுக்கு உதரரோகம், குஷ்டம் முதலான வ்யாதிகளை உண்டு
பண்ணி மரணத்தின்பொருட்டே முடிகின்றன. எவ்வளவு புமாங்
கள் இம்மாதிரியான துஷ்ட ஸ்த்ரீகளின் மருந்துக்கு இரையாகி,
ஜடமாகவும், குருடாகவும், செவிடாகவும் தங்களுடைய இந்த்ரிய
பாடவத்தை அடியோடு இழந்து திரிவதை நாம்பார்த்திருக்கிறோம்?
இவ்விதம் பர்த்தாவுக்கு விப்ரியத்தைச் செய்யும் ஸ்த்ரீகள் மஹா
பாபிஷ்டர்கள்; அவர்களுடைய முகாவலோகநம் செய்வது கூட
உசிதமன்று. நான் என்னுடைய பர்த்தாக்களிடம் நடக்கும் மாதி
ரியைச் சொல்லுகிறேன்; ஸாவதாநமாகக் கேள்: அஹங்காரம்,
காமம், க்ரோதம் இவைகளை அடக்கிக்கொண்டு, அவர்களுக்கு
எப்படி உபசரித்தால் த்ருப்தி உண்டாகுமோ அவ்விதமே எப்
பொழுதும் உபசரிக்கிறேன். ஈர்ஷ்யையை நான் கொள்ளுகிறதே
யில்லை; மதம் என்பதும் கிடையாது. கெட்ட வார்த்தைகளி
லிருந்து மிகவும் பயப்படுவேன்; நிற்பதிலும், இருப்பதிலும்,



நடப்பதிலும், ருஜு ஸ்வபாவமாகவே இருக்கிறேன். கபடமான
பார்வையை நான் செய்வதே யில்லை. ஸூர்யன் போலவும், சந்த்
ரன் போலவும், அக்நி போலவும் இருக்கும் மஹாரதர்களான
என் பர்த்தாக்களே எனக்கு எப்பொழுதும் கதி; தேவ கந்தர்வர்க
ளைப்போல மஹாரூபவான்களாகவும், யௌவநம் தநம் பொருந்
தினவர்களாகவும், இன்னும் ஸர்வ விதத்திலும் உயர்ந்தவர்க
ளாகவும் அந்ய புருஷர்கள் இருந்தாலும், அவர்களை நான் கண்
ணெடுத்துப் பார்ப்பதே யில்லை. போகாநுபவங்களிலே எந்தப்
போகத்தையும் எனது பர்த்தா அநுபவித்த பிறகே நான் அநுப
விப்பேன். வெளியிற்சென்று க்ருஹத்துக்குத் திரும்பிவரும் பர்த்
தாவுக்கு ப்ரத்யுத்தாநம் முதலான உபசாரங்களைச் செய்து மனத்
திற்கு இனிமையான வார்த்தைகளைச் சொல்லிப் போஜநாதிகளை
ஸமர்ப்பிப்பேன். அவர்கள் ஸம்பாதித்து வரும் பதார்த்தங்களை
மிகுந்த ஜாக்ரதையுடன் க்ரஹித்து, கொஞ்சமேனும் ஆலஸ்ய மில்
லாமலே பாதுகாத்து வருவேன். வீணுக்குச் சிரிப்பதும், எப்பொ
ழுதும் வீட்டு வாசலில் நிற்பதும், அடிக்கடி உத்யாநாதிகளுக்குப்
போவதும் என்னிடமிராது. ஸத்யம் தவறுவதில்லை; பாபகர்
மாக்களைச் செய்வது மில்லை பர்த்தாவுக்கு அஹிதமானது ஒன்
றும் எனக்கு இஷ்டமாக இராது. எப்பொழுதாவது குடும்ப
விஷயமாகப் பர்த்தா அயல்தேசம் போயிருந்தால், அப்பொழுது
நான் அதிகமான அலங்காரங்களைச் செய்து கொள்வதில்லை. முத
லில் நான் புதிதாகப் பர்த்ருக்ருஹம் வந்த காலத்தில் என் மாமி
யார் எந்தத் தர்மங்களை எனக்கு உபதேசித்தாரோ, அந்தத் தர்
மங்களை யெல்லாம் மறவாமல் அநுஷ்டித்து வருகிறேன். பர்த்தா
வுக்கு எந்த எந்த க்ருஹஸ்த தர்மங்கள் விதிப்பட்டவைகளோ,
அந்த அந்தத் தர்மங்களில் நான் ஸஹதர்மசாரிணியாக இருந்து
ஒன்றுக்கும் லோபமில்லாமல் ஸம்ரக்ஷித்து வருகிறேன். வ்ரதா
நுஷ்டாந விஷயங்களில் என்னுடைய பர்த்தாக்கள் எந்த எந்த
வ்ரதங்களை அநுஷ்டிக்கிறார்களோ அவை அவைதான் எனக்கும்
வ்ரதங்கள்; வேறு வ்ரதம் ஒன்றையும் நான் அநுஷ்டிப்பதில்லை.
ஸ்த்ரீக்குப் பர்த்தாவே தேவன், அவனே கதி, அவனே பரதே
வதை. எப்பொழுதும் என் மாமியார்க்குக் கீழ்ப்படிந்தே நடந்து
மிகுந்த ஶ்ரத்தையுடன் நானே ஶுஶ்ரூஷை முதலியவைகளைச்

செய்வேன்; நான் ராஜஸ்த்ரீ யென்பதைப் பாவித்து மற்றைச் சேடிகளைக்கொண்டு செய்விப்பதே கிடையாது. ஹஸ்திநாபுரத்தில் மிருந்த ஸம்பத்துக்களால் நிரம்பினவர்களாக நாங்கள் இருந்த பொழுது எங்கள் க்ருஹத்தில் கணக்கற்ற ப்ராஹ்மணர்கள் ப்ரதிதிநம் போஜநம் செய்வார்கள்; அவர்கள் ஸ்நாதகர்களோ, க்ருஹஸ்தர்களோ, யதிகளோ, எந்த ஆஸ்ரமத்தில் இருந்த போதிலும் அவர்கட்கு நானே யதார்ஹம் பூஜை செய்வேன். என்னுடைய பர்த்தாக்களுக்கு அக்காலத்திலிருந்த யாவத் ஸேவகர்களுக்கும் நானே யஜமானியாக இருந்து அவரவர்களுக்குத் த்ருப்தி வரும்படி நடந்து கொள்வேன்; அவர்கள் ஒவ்வொருவரின் பெயரும், ஸ்வபாவமும், நடவடிக்கைகளும் எனக்கு நன்றாகத் தெரியும்; ராஜாவின் ஸகல வருமானமும் செலவும் எனக்குத் தெரியும்; என்னுடைய பர்த்தா என்னிடத்தில் குடும்ப பாரம் முழுவதையும் ஒப்புவித்துத் தத்ப்ரயுக்தமான கவலையின்றி இருப்பர். எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், அந்தப் பாரத்தை ஸந்தோஷத்துடன் வஹித்து, இராப்பகல் பாராமல் அதற்கு உரிய கர்மாக்களைச் செய்து, ஒன்றிலும் ஒருவிதமான குறைவுமின்றி நான் பார்த்துவருவேன். மஹாராஜாவின் அளவற்ற பொக்கிஷம் முழுவதும் என் கணக்கில் இருந்தது. இவ்விதமாக உபசரித்துப் பர்த்தாக்களை த்ருப்தி செய்வதில் எனக்கு இருந்த உத்ஸாஹம் அளவிட முடியாது; அதனால் எவ்விதமான ஸ்ரமம் உண்டானாலும் அந்த ஸ்ரமம் ஸ்ரமமாகவே தோன்றுவதில்லை. நான் காலையில் எல்லாருக்கும் முந்தி எழுந்து, இரவில் எல்லாருக்கும் பிந்திப் படுப்பேன். இது தான் ஸத்யபாமே! என்னுடைய மந்த்ரம், இதுதான் என்னுடைய மூலிகை. அஸத் ஸ்த்ரீகளின் ஸமாசாரத்தை நான் செய்வதுமில்லை, மனத்தால் விரும்புவது மில்லை."

இப்படி த்ரௌபதியாற் சொல்லப்பட்ட தர்மயுக்தமான வார்த்தையைக் கேட்ட ஸத்யபாமை மிகவும் வெட்கமடைந்து "அம்மா த்ரௌபதி, நான் செய்த அபராதத்தைப் பொறுத்துக் கொள்ள வேணும். ஸகியென்கிற தைர்யத்தால் பரிஹாஸஞ்செய்தேனே ஒழிய யதார்த்தமாகக் கேட்டதாக நீ நினைக்கக்கூடாது" என்று ஸமாதாநம் சொல்லவே, த்ரௌபதி மறுபடியும் பின்வருமாறு உபதேஸஞ் செய்தாள்.



ஸ்வாதீனமாக இருக்க

"ஸத்யபாமே! க்ருஷ்ணன் உனக்கே ஸ்வாதீனமாக இருக்க
வில்லை யென்கிற விசாரம் உன்னைப் பிடித்துக்கொண்டிருப்பது
எனக்குத்தெரியும். நீ அதைப்பற்றி விசாரப்படவேண்டாம். நான்
சொல்லும் உபாயத்தை அநுஷ்டித்தால், உன்னிடத்திலேயே ப்ரீத
ராக அவர் இருப்பர். ஸுகம் ஸுகத்தால் ஒருநாளும் கிடைக்
காது. நீ கொஞ்சம் உன்னுடைய ஸ்ரமத்தைப் பாராட்டாமல் ப்ரீதி
யுடனே ஹார்த்தமாக க்ருஷ்ணனுக்கு ஸுஸ்ருஷை செய். வாச
லில் அவர் குரல் கேட்டால், உடனே எழுந்திருந்து அவருக்கு
அர்க்ய பாத்ய ஆசமநீயங்களைக் கொடு; அவர் ஏதாவது ஒரு கார்
யம் செய்விக்கும் பொருட்டு ஒரு வேலைக்காரரை நியமித்தால்,
உடனே அந்த நியமநத்தை நீயே ஏற்றுக்கொண்டு செய்துவிடு.
எப்பொழுதாவது அவர் உன்னிடத்தில் ஒரு விசேஷ ஸமாசார
த்தைச் சொன்னால், அது அதிக ரஹஸ்யமான விஷயமாக இல்
லாவிட்டாலும், நீ அதை வெளியிடக்கூடாது. அவர்க்கு யார்யார்
இஷ்டர்களோ அவரவர்களை நீ ஆதரித்து வா; அவருக்கு அநிஷ்
டர்களாக இருக்குமவரிடம் நீ ப்ரீதி செய்யாதே; மதம், அஜா
க்ரதை இவைகளைத் தூர விலக்கவேணும்; உன்னுடைய சொந்த
குமாரர்களான ப்ரத்யும்ந ஸாம்பர்களாக இருந்தாலும், அவர்க
ளுடன் ஏகாந்தத்தில் காரியமின்றி அதிக காலம் நெருங்கியிராதே.
இப்படிக்கெல்லாம் நீ நடந்து வந்தால் உன்னுடைய குறைவு நிவ்
ருத்தியாகும். நீயும் என்னைப்போலவே இந்த விஷயத்தில் ஸுகி
மாக இருக்கலாம்."

"ந கார்யே ஸத்ருசீ பார்யா ந ஸுகம்
ந கார்யே ஸத்ருசீ பார்யா ஸிவம் ।
ந கார்யே ஸத்ருசீ பார்யா ஸ்ரியம்
ந ஸத்ருசீ நா வ்ருத்தா ஜீவிதம் ॥"

என்று ஸாவித்ரீ சொல்லியிருக்கிறபடி யன்றோ நிற்கின்றது பதிவ்ரதாதர்மம்.

|

ஓர் பௌராணிகர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ பாகவத தனிஸ்லோகீ.

உ௬. தமத்3பு4தம் பா3லகமம்பு3ஜேக்ஷணம் சதுர்பு4ஜம் ஶங்க2க3தா3த்3யுதா3யுத4ம் - ஸ்ரீவத்ஸலக்ஷ்மம் க3லஶோபி4கௌஸ்துப4ம் பீதாம்ப3ரம் ஸாந்த்3ரபயோத3ஸௌப4க3ம் ॥ மஹார்ஹவைடூ3ர்யகிரீடகுண்ட3லத்விஷா பரிஷ்வக்தஸஹஸ்ரகுந்தலம் - உத்3தா3மகாஞ்ச்யங்க3த3கங்கணாதி3பி4ர் விரோசமானம் வஸுதே3வ ஐக்ஷத ॥

"பூ4மிர்த்3ருப்தந்ருபவ்யாஜ தை3த்யாநீக ஶதாயுதை: ஆக்ராந்தா பூ4ரிபா4ரேண" என்றும், "துவரிக்கனிவாய் நிலமங்கை துயர்தீர்ந்துய்யப் பாரதத்து, இவரித்தரசர் தடுமாற விருள்நாள் பிறந்த வம்மான்" என்றும் சொல்லுகிறபடியே கொழுப்படைந்து அதார்மிகர்களான அஸுராம்ஶமாய்ப்பிறந்த ராஜாக்களால் நிறைந்து பாரம் தாங்கமுடியாமல் ஶரண மடைந்த பூமிதேவியின் பாரத்தைத் தீர்க்கவேண்டுமென்று ப்ரஹ்மாதி தேவர்களால் ஸ்ரீமந்நாராயணன் ஒருகாலத்தில் ப்ரார்த்திக்கப்பட்டான். அந்த ஸமயத்தில், "ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப" என்கிறபடி நெடுங்காலங் கழிந்தபடியாலும், யுகதர்மத்தாலுண்டான புத்திக்குறைவினாலும், பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பிக்கக்கூடிய பக்தியோகமென்கிற உத்தமமான தர்மம் மிகவும் அழிந்து போயிருந்தது. "யதா3யதா3ஹி த4ர்மஸ்ய க்3லாநிர் ப4வதி பா4ரத - அப்4யுத்தா2நம் அத4ர்மஸ்ய ததா3த்மாநம் ஸ்ருஜாம்யஹம்" என்கிறபடி அழிந்துபோன தர்மத்தை ஸம்ஸ்தாபநம் செய்யும் பொருட்டு, "கருமமும் ஞானமும் கொண்டெழுங் காதலுக் கோரிலக்கென்று, அருமறையி னுச்சியு ளாதரித்தோது மரும் பிரான், திருமகளோடு வரும் திருமாலென்று தானுரைத்தான், தருமமுகந்த தனஞ்சயனுக்கவன் சாரதியே" என்



கிறபடி கர்மயோகம் ஜ்ஞானயோகம் வைராக்யம் முதலிய பரிகரங்களோடுகூடிய கீதாஶாஸ்த்ரத்தை, எம்பெருமான் "உபநிஷத்3பி4: ... ஶரணாக3தவத்ஸல ஸ்வாமின் தே ஶாஸ்த்ரம் யதா2" என்கிறபடியே தனஞ்ஜயன் ஶரணமடைந்தான் என்கிற வ்யாஜத்தைக் கொண்டு தர்மங்களை உபதேஶித்தும், "வர்த ஏவ ச கர்மணி" என்கிறபடி தான் அநுஷ்டித்தும் ப்ரகாஶம் செய்யத் திருவுள்ளம்பற்றினன் அப்படி உபதேஶிக்கவும் அநுஷ்டித்துக்காட்டவும் இந்தப் பூமியில் அவதரிப்பது அவஶ்யமானதனால், அந்தப்பரமாத்மா, எங்கே அவதரிக்கலாமென்று ஆலோசித்து, "வஸத்யத்ர ஸமஸ்தம் ச வாஸயத்யகி2லம் ஜக3த்" என்கிறபடியே தன்னிடத்தில் எல்லா வுலகங்களும் வஸிக்கின்றனவென்றும், தான் அவைகளைத் தனக்கு இருப்பிடமாக்கிக் கொள்ளுகிறானென்றும் பொருளுள்ள வாஸுதேவன் என்ற நாமதேயம் தனக்குக் கிடைத்திருக்க, "வஸுதே3வஸ்யாபத்யம்" என்கிறபடி வஸுதேவருடைய புத்ரனென்கிற வ்யுத்பத்தியினாலும் தனக்கு வாஸுதேவன் என்கிற நாமதேயம் கிடைக்கவேணுமென்று நினைத்து, முன் மண்கொள் வசுதேவர் தம்மகனாய் வந்து அவதரிக்க ஸங்கல்பித்தான். அவ்வாறுகொண்ட ஸங்கல்பத்தின்படி ஸ்ரீ தேவகீ தேவியாரின் கர்ப்பத்திலிருந்து, "ஆவிராஸீத்3 யதா2 ப்ராச்யாம் தி3ஶீந்து3ரிவ புஷ்கல:" என்கிறபடி பூர்ண கிரணங்களோடு கிழக்குத்திக்கில் சந்த்ரனுதித்தாற்போல, அஸாதாரணங்களான ஸகல சிஹ்நங்களோடும் அவதரித்த பகவானை வஸுதேவர் பூர்ணமாய்க் கண்டுகொண்டாரென்று அந்த ஸ்ரீ வஸுதேவரைக் கொண்டாடுகின்றான் மஹர்ஷி.

தம் - தான் ஸுதபஸ் என்கிற ப்ரஜாபதியாய்த் தபஸ் செய்த காலத்தில் தனக்கு முன்னே எந்த ரூபத்தோடு வந்து நின்றானோ அந்த ரூபத்தோடு அவதரித்த; யத்3வா, அதுவது வென்று மொத்தமாய்ப்பேசுமதொழியப் பிரியப் பேசவொண்ணாத வடிவழகை யுடைய.

அத்புதம். ஆஶ்சர்யமான; லோகத்துப் பிள்ளைகளிற்காட்டில் வ்யாவ்ருத்தமா யிருக்கிறபடியால், ஆஶ்சர்யமான என்கிறது. அன்றிக்கே, "எப்பொழுதும் நாள் திங்க ளாண்டூழி யூழிதொறு, மப்பொழுதைக் கப்பொழு தென்னாராவமுதமே" என்கிறபடி ஒருநாள் முதல் கல்பங்களளவாக வுள்ள காலங்களிலெல்லாம் ஒவ்வொரு க்ஷணந் தோறும் புதிது புதிதாக ஆஶ்சர்யமாய் அநுபவிக்கக் கூடியதா யிருக்கிறபடியாலும், ஆஶ்சர்யமான என்று சொல்லலாம்.

அதுவன்றிக்கே, நாரத பகவானால் கண்டு பிடிக்கப்பட்டுத் துர்யோதநாதிகளுக்கு உபதேஶித்தபடியே "ஆமையாய்க் கங்கையா யாழ்கடலா யவனியா யருவரைகளாய் நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த் தானு"மான ஆஶ்சர்யத்தை நினைக்கிற தாகவுமாம். அதாவது - துர்யோதநாதிகளுடைய யாகத்தில் வந்த ராஜாக்களெல்லாரும் ஶ்ரீமத் த்வாரகையாகிற திருப்படைவீட்டி லுண்டான அரணும், அதிலிருக்கும் ஸம்ருத்தியும், அங்கு க்ருஷ்ணன் எழுந்தருளியிருக்கிற மதிப்பும் எல்லாம் சொல்லக் கேட்டு, "க்ருஷ்ணனோடே நாம் உறவு செய்து கொண்டிருக்க வேணும்" என்னுமத்தைப் பற்ற, துர்யோதநாதிகளும் பாண்டவர்களும், தாங்களும் எல்லாருமாக, தங்கள் தங்களுடைய பரிகரங்களோடு கூட ரைவதகமென்கிற பர்வதம் போய், தாங்கள் ஸேவார்த்திகளாக வந்த ஸமாசாரத்தை க்ருஷ்ணனுக்கு விண்ணப்பம் செய்துபோகவிட, க்ருஷ்ணனும் 'இவர்கள் ஸபரிகராய்த் திரளவருகைக்கு ஹேது வென்?' என்று சிந்தித்து, நம்பிமூத்தபிரான், ஸாத்யகி யாழ்வான் இவர்கள் முன்னாகப் பரிவாரங்களுடனும் ஆயுதங்களுடனும் துர்யோதநாதிக ளிருக்கிற இடத்திற்கு எழுந்தருளி எல்லாரையும் குஶலப்ரஶ்நம் செய்து, அவரவர்களுக்கு அநுகுணமாக ஆஸந மிடுவித்து, தாமும் தமக்கு அநுகுணமான தொரு திவ்யஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளி யிருந்தார். அப்பொழுது, ஶ்ரீ நாரதபகவான் வந்து ஸேவித்து, "ஆஶ்சர்யோ(அ)ஸி [illegible] தேவ [illegible] - [illegible] லோகேஷு [illegible]" "எல்



லாத் தேவதைகளுக்குள்ளும் நீர்தான் மிகவும் ஆஶ்சர்யபூதர்; நீர்தான் தந்யர்; உம்மைப்போல மற்றொருவரும் இந்தலோகத்தி லில்லை" என்று விண்ணப்பம் செய்தார். இந்த விண்ணப்பத்தைக் கேட்டு ஶ்ரீ க்ருஷ்ணன் புன்சிரிப்புக்கொண்டு மஹர்ஷியைப் பார்த்து, "ஆஶ்சர்ய: [illegible] தக்ஷிணாபி: ஸஹ [illegible] த:"—"தக்ஷிணைகளுடனன்றோ நான் ஆஶ்சர்யனாகவும் தந்யனாகவும் சொல்லப்பட்டவன்?" என்று அருளிச்செய்ய, மஹர்ஷி மிகவும் ஸந்தோஷித்து "[illegible] யதாகதம்" தேவரீர் அருளிச்செய்த வாக்யத்தினால் நான் பர்யாப்த னாகாநின்றேன்; இனி வந்தவழியே போகின்றேன்" என்று விண்ணப்பஞ்செய்து புறப்பட்டுப் போக ஆரம்பித்தார். இப்படிப் போக வழிதேடுகிற நாரதபகவானைக் கண்டு அவராலே சொல்லப்பட்ட இந்த ரஹஸ்யத்தைத் தாங்கள் அறியாமையாலே அங்கு வந்து சேர்ந்திருந்த ராஜாக்கள் எல்லாரும் க்ருஷ்ணனுடைய திருமுக மண்டலத்தைப் பார்த்து நிற்கவே, ஶ்ரீ க்ருஷ்ணன் "அந்த மஹர்ஷிதன்னையே கேளுங்கோள்; அவர் உங்களுக்குச் சொல்லக்கடவர்" என்று ராஜாக்களைப் பார்த்துச் சொல்லிவிட்டு, நாரதரையும் 'நீர் இவர்களுக்குச் சொல்லும்' என்று நியமித்தார். அப்பொழுது நாரதர் "அஹம் கதாசித் [illegible] ஸ்நாதும் த்ரிஷவணார்த்தி[illegible]" என்று தொடங்கிப் பின்வரும் இதிஹாஸத்தைச் சொன்னார்.

"முன்பு ஒருகால் நான் கங்கைக்கரையில் ஸ்நாநாதிகளைச் செய்து வர்த்தியாநிற்கச்செய்தே, ஒருநாள் ராத்ரிபோய் ஆதித்யனுதித்தவாறே, கூப்பிடுதூரம் அகலமும் அதிலிரட்டிப்பு நீளமுமாய் நீருக்குள் நனைந்து உடம்பெங்கும் பாசிபிடித்துக் கண்ணுக்கு ப்ரியமாயிருப்பதொரு கூர்மத்தைக் கண்டு "[illegible] । [illegible]" என்று அதன் ஶரீரத்தின் அழகையும் அது நிர்ப்பயமாகவும் நிர்விசாரமாகவும் ஸஞ்சரிப்பதையும் ஆலோசித்து

அதுதான் தந்யமானதென்றும், ஆஶ்சர்யமான ஶரீரத்தையுடைய தென்றும் சொல்லி ஶ்லாகித்தேன். அதைக்கேட்ட அந்தக் கூர்மம் ஒரு மநுஷ்யன் பேசுமாப்போல என்னைப்பார்த்து "வாராய் மஹர்ஷியே! என்பக்கல் ஆஶ்சர்ய மேது? யான் எங்ஙனே தந்யனாகாநின்றேன்? யாதொன்றிலே என்னைப்போலப் பதினாயிரம் ஸத்வங்கள் ஸஞ்சரிக்கின்றனவோ, அப்படிப்பட்ட கங்காநதியன்றோ ஆஶ்சர்யையும் தந்யையும்" என்று சொல்ல, அந்தக் கங்கையைக்குறித்து நான் "அஹோ கங்கே! நீ அத்யந்தம் ஆஶ்சர்யையாகாநின்றாய்; தந்யை யாகாநின்றாய்" என்று முன்போலவே ஶ்லாகித்தேன். அதைக் கேட்ட அந்தக் கங்கை ஒரு வடிவு கொண்டு நின்று, "நான் ஆஶ்சர்யையுமன்று, தந்யையுமன்று; யாதொன்றில் என்னைப்போல அநேக நதிகள் புகுகின்றனவோ, அப்படிப்பட்ட ஸமுத்ரமன்றோ ஆஶ்சர்யமும் தந்யமும்" என்று மறுமொழி சொல்லிற்று. அநந்தரம் அந்த ஸமுத்ரத்தைப் பார்த்து நான் பூர்வம் போல ஶ்லாகிக்க, அந்த ஸமுத்ரம் "இப்படிப்பட்ட புகழ்ச்சி என்னைத் தாங்கும் பூமிக்கன்றோ தகும்?" என்ன, நான் பூமியைப் பார்த்து ஸ்துதித்தேன். பூமி அதுகேட்டு லஜ்ஜைப்பட்டு, தனக்கு ஆதாரமாக நிற்கும் பர்வதங்களைக் காட்ட, நான் அந்தப் பர்வதங்களைக் கிட்டின பொழுது, அவை "எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கும் ப்ரஹ்மாவே அப்படிப்பட்டவன்" என்று சொல்லின. ப்ரஹ்மாவும் "நான் அப்படிப்பட்டவனன்று" என்றும், 'என்னையும் மற்ற லோகங்களையும் தரியாநிற்கும் வேதங்கள் அப்படிப்பட்டவை' என்றும் சொல்ல, நான் வேதங்களை அணுகி ஸ்துதித்த பொழுது, அவை யதார்த்தங்களாகத்தாங்கள் ஸ்ருஷ்டிக்கப்பட் டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட யஜ்ஞங்களைக் குறிப்பிட, அந்த யஜ்ஞங்களை நெருங்கி நான் பலவாறாக ஶ்லாகித்தேன். அந்த யஜ்ஞங்கள் என்னைப்பார்த்து, "ஆஶ்சர்யம் ஶப்தோ நாஸ்மாஸு யத்யஸ்மாஸு வா ஸ்திதே - ஆஶ்சர்யம் பரமம் விஷ்ணுஃ ஸர்வலோகம் பராமதிஃ" என்று "விஷ்ணுதான் பரமமான ஆஶ்சர்யபூதன்; அவனே எங்களுக்குப் பரமமான கதி" என்று சொல்ல, இதைக் கேட்டு, நான் பூமியில் வந்து, உங்கள்



திரளின் நடுவே நிற்கும் க்ருஷ்ணனைக் கண்டு ஸேவித்து ஸந்தோஷம் தாங்காமல், "நீர் ஆஶ்சர்யராகாநின்றீர், தந்யராகாநின்றீர்" என்று விண்ணப்பம் செய்தேன். அதற்கு ப்ரத்யுத்தரமாக "தக்ஷிணாபிஃ ஸஹோதிதஃ" என்று க்ருஷ்ணன் அருளிச்செய்த வார்த்தை எனக்குப் பர்யாப்தமான வசநம்; எங்ஙனேயென்னில், "யஜ்ஞாநாம் ஹி கதிர் விஷ்ணுஃ ஸர்வேஷாஞ்ச ஸதக்ஷிணஃ - தக்ஷிணாபிஃ ஸஹைதத்வை ப்ரோக்தா ஸ்ம ஸதக்ஷிணாஃ" ['எல்லா யஜ்ஞங்களுக்கும் தக்ஷிணைகளோடு கூடியிருக்கும் ஸர்வேஶ்வரன் கதியாகையால், "தக்ஷிணாபிஸ்ஸஹ" என்கிற வார்த்தையினால் என்னுடைய ப்ரஶ்நம் முடிந்துவிட்டது.'] "கதிதம் தக்ஷிணாபிர்ஹி தம் வசநம் பர்யாப்தமா கதம் - ஸர்வதக்ஷிணேஷ்வஸிந்து வசநேஷு தத்வாக்யம் ப்ரதிபாதிதம்" ['கூர்மத்தாலே முன்பு சொல்லப்பட்டதாய், பரம்பரையாக இதுவரையில் வந்த இந்த "ஆஶ்சர்யபூதன் தந்யன்" என்னும் வார்த்தையைப் பரம புருஷனை ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திற் சொன்னேன்.'] என்று ஸ்ரீ நாரத பகவான் துர்யோதநாதிகளிடம் சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றான் என்று ஹரிவம்ஶத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், 'அத்புதம்' என்று சொன்னபடி.

அத்புதம் பாலகம் - ஆஶ்சர்யமான குழந்தையை. "மாயத்தெல்லையில் பிள்ளை" என்கிறபடியே, 'இவருடைய அவதாராந்தரங்களிலும் இந்த ஆஶ்சர்யமில்லை' என்று தாத்பர்யம். அது எங்ஙனே யென்னில், "ஊநஷோடஶ வர்ஷோ மே ராமோ ராஜீவலோசநஃ" என்று சொல்லப்படுகிற சக்ரவர்த்தித் திருமகனும் பன்னிரண்டாவது வயதில் விஶ்வாமித்ர மஹர்ஷியை அநுவர்த்தித்துப் பித்ருவசந பரிபாலநஞ் செய்யத் தொடங்கினான். க்ருஷ்ணனோ அவதரித்த உத்தரக்ஷணத்திலேயே "உபஸம்ஹர விஶ்வாத்மந் ரூபமேதத் அலௌகிகம்" என்று ப்ரார்த்தித்ததைத் தலைக்கட்டினானிறே.

(இன்னும் வரும்.)

சே. நரஸிம்ஹாசாரியர்.

# புதியக்ரந்தங்களின் விமர்ஶம்.

## 1. வேதாந்ததேஶிகர்:

### அவர் சரித்ரமும், காவ்யங்களும்.

(ஸ்ரீஎம். கே. தாதாசாரியரால் இயற்றப்பட்டது; விலை-அணா-8.)

இத்தப் பெயர்கொண்ட ஒரு சிறிய புஸ்தகம் நமக்குக் கிருபையுடன்
அனுப்பப் பட்டதைப் பெற்றிருக்கிறோம். இது, ஸ்ரீமான். எம். கே. தாதா
சாரியரால் ஆங்கில பாஷையில் ஸ்ரீ வேதாந்த தேஶிகன் விஷயமாய் இயற்
றப்பட்டுப் படிப்பவர்களுக்கு மிகுந்த ஸந்தோஷத்தையும் ஆசார்யனிடத்
தில் பக்தியையும் உண்டுபண்ணக் கூடியதாக இருக்கிறது. இதில் ஸ்ரீ வேதா
ந்த தேஶிகனுடைய சரித்ரம் தெளிவாயும் விஸ்தாரமாயும் வைபவ ப்ரகா
ஶிகை முதலான மூலக்ரந்தங்களை அநுஸரித்து லளிதமான இங்கிலீஷ் நடை
யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆசார்யருடைய புத்தியின் ப்ரபாவ
மும் அவர் வைராக்யமும் அத்விதீயமான ராமாநுஜ பக்தியும் விநயமும்
இந்த க்ரந்தத்தில் நன்றாய் விவரிக்கப்பட்டுள்ளன. இவர் அவதரிக்காவிட்
டால் நமது விஶிஷ்டாத்வைதமதம் தற்காலம் அடைந்திருக்கும் பெருமை
ஒருகாலும் ஏற்பட்டிராதென்பது வாஸ்தவமே. இவர் நிர்மத்ஸராயிருந்
தும் இவர் காலத்திலும் பிந்தியும் ஏற்பட்ட சில சில்லரை அபிப்ராய
பேதங்களால் வடகலை தென்கலை என்கிற பேதம் உண்டாயிருப்பது எல்
லோர்க்கும் தெரிந்த விஷயமே. இந்தப் பேதங்கள் எவ்வகைப்பட்டன
வென்று இந்த க்ரந்தத்தில் சரித்ர முடிவில் ஸ்ரீ. தாதாசாரியர் நன்றாய்
விவரித் திருக்கிறார்.

இந்த க்ரந்தத்தின் இரண்டாவது பாகமான ஸ்ரீ வேதாந்த தேஶிகர்
காவ்ய நாடக விஷயமான விசாரம் நமக்கு விஶேஷித்த ஆஹ்லாதத்தை
உண்டுபண்ணிற்று. ஸ்ரீ தாதாசாரியருடைய ரஸிகதையும் ஸாஹித்ய பரீக்ஷை
யில் வல்லமையும், காளிதாஸ னுடையவும் தேஶிக னுடையவுமான ஸமாந
ஶைலியுள்ள க்ரந்தங்களைச் சேர்த்துக்கி விவேகித்திருப்பதில் நன்றாய் விளங்கு
கின்றன. இவர் சர்ச்சையால், ஹம்ஸ ஸந்தேஶம் காளிதாஸனுடைய மேக
ஸந்தேஶத்தை அநுகரித்ததாயினும், அதன் ஸந்தர்ப்பத்துக்கு அநுகுண
மானவும் ஸ்வதந்த்ரமுமான பல ரத்நங்கள் போன்ற பாகங்க ளடங்கினது
என்று ரஸிகர்களுக்கு நன்றாய்த் தெரிகிறது. இன்னும் ஸ்ரீநிகமாந்த தேஶிக
னுடைய மற்றை க்ரந்தங்களின் ஸாராம்ஶம் இந்தச் சிறிய புஸ்தகத்தில்
விவரிக்கப்பட் டிருக்கிறதுபற்றி நம்மவர்களில் இங்கிலீஷில் கொஞ்சமே
னும் பரிசயமுள்ள எல்லோரும் இதை வாங்கிப் படிப்பார்களென்று நம்பு
கிறோம்.

---

## 2. பஞ்சகால ப்ரகாஶம்.

இந்த க்ரந்தம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லாருக்கும் மிகவும் உபயோக
முள்ளது. இது, ஸ்ரீமான் டெங்கணிக்கோட்டை திருமலை ஸ்ரீநிவாஸாசார்ய
ரால் ப்ராசீந ஸாம்ப்ரதாயிக ஆஹ்நிகங்களை ஸங்க்ரஹித்துச் சேர்க்கப்பட்
டது. இது, தெலுங்குலிபியில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இது,
இந்த க்ரந்தத்தின் இரண்டாவது பதிப்பு என்பதனாலேயே இதன் உபயோ
கம் நன்றாய் விளங்குகின்றது. இதில் அபிகமநம், உபாதாநம், இஜ்யா, ஸ்வா
த்யாயம், யோகம் என்று குறிக்கப்பட்ட தினத்தின் ஐந்துபாகமான காலங்
களிலும் பாஞ்சராத்ரத்தின் படியும் தர்மஶாஸ்த்ரப்படியுமாக ஸ்ரீ வைஷ்ண
வர்கள் அநுஷ்டிக்கவேண்டிய கார்யங்கள் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிரு
ப்பதுடன், அந்தந்த ஸமயங்களில் உச்சரிக்க வேண்டிய மந்த்ரங்கள் ஸ்வரத்
துடன் அச்சிடப்பட் டிருக்கின்றன. 40 - பக்கம் ஹோமவிதாராதந க்ரமமும்,
10-பக்கம் வைஶ்வதேவ க்ரமமும் விஸ்தாரமாய் இருப்பது ஆஸ்திகர்களுக்கு
ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடியது. ஸங்க்ரஹ ருசிகளான ஆஸ்திகர்களுக்கு
இதில் அவஶ்யாநுஷ்டேயமான பாகம் எது வென்று அடையாளங்களால்
தெரிவித்தால் மிகவும் உபகாரகமா யிருக்கும். கடைசியில் ஸந்த்யார்த்த
தீபிகை என்கிற ஸந்த்யாவந்தந மந்த்ரங்களின் தமிழ் அர்த்தமும், ஶ்ராத்தம்
முதலான அவஶ்யகர்மங்களின் ப்ரயோகங்களும் அடங்கின அநுபந்தம்
இந்தப் புஸ்தகத்தின் உபயோகத்தை விஸ்தரிக்கின்றது. இதை ஶ்ராத்தாளுக்
கள் விசேஷமாய் வாங்கி உபயோகிப்பார்கள் என்று நம்புகிறோம்.

---

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## 1.

ஸ்ரீவேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹமன் ஸந்நிதிக்குச் சொந்தமாக அநேக விசேஷ சொத்துக்கள் பலவிடங்களில் ராஜாக்களாலும் இதர சிஷ்யர்களாலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்பதும், அந்தச்சொத்துக்கள் இப்பொழுது நன்றாகப் பராமர்சிக்கப் படவில்லை யென்பதும் ஸகல சிஷ்யர்களுக்கும் தெரிந்த விஷயமே. இந்தச் சொத்துக்களின் விவரங்களைத் தெரிந்துகொள்ள வேணுமென்று அடியிற் கையொப்பம் செய்திருக்குமவர் ஜில்லா கலெக்டர் அனைவருக்கும் மனு செய்து கொண்டதில், அந்த அதிகாரிகளில் சிலர் மிகுந்த ப்ரீதியுடன் 'ஸாத்யமான தகவல்கள் கொடுக்கப்படும்' என்றும், அப்படிக் கொடுக்கும்பொருட்டு, எந்தஎந்தத் தாலூகாக்களிலும் எந்த எந்த க்ராமங்களிலும் சொத்து இருப்பதாக இப்பொழுது தெரியவருகிறதோ அந்தஅந்தத் தாலூகாக்களையும் க்ராமங்களையும் கண்டுதெரியப் படுத்தினால் தாங்கள் அந்தந்தத் தாலூகா தாசில்தாரர்களைக் கொண்டு விவரங்களை விசாரித்து மனுதாரர்களின் கோரிக்கையைப் பூர்த்தி செய்வதாகவும் பதில் சொல்லியிருக்கிறார்கள். சொத்துக்கள் ஏராளமானதாலும், ஸ்ரீ ஸந்நிதி தஸ்தாவேஜுகளை எதிர்பார்க்காமல் தெரிந்துகொள்ளக் கூடாததாக இருக்கிறபடியாலும், ஸ்ரீ அழகிய சிங்கர் இந்த விஷயத்தில் கூடிய ஸஹாயம் செய்யும்படி க்ருபைபண்ண வேணுமென்று ப்ரார்த்திக்கப்பட்டிருக்கிறார். இது விஷயமாக ஸந்நிதி சிஷ்யர்கள் அனைவரையும் அடியேன் கேட்டுக்கொள்வது என்னவென்றால் இப்பத்ரிகை மூலமாகவாவது நேரிலாவது தங்கள் தங்களுக்குத் தெரிந்திருக்கும் விவரத்தை அடியேனுக்கு வெளிப்படுத்தும்படி க்ருபை செய்யவேணு மென்பதுதான்.

இப்படிக்கு

சித்தூர், 16-9-11. } ஸி. ராஜகோபாலாசாரியர். பீ-ஏ., பீஎல்.

## 2.

ஸ்ரீவேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

ஸ்ரீ வால்மீகி பகவானால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட ஸ்ரீ ராகவ ப்ரபாவமான ஸ்ரீ ராமாயணத்தில் ஸுந்தர காண்டத்தில் "வாநரோஹம் மஹாபாகே தூதோ ராமஸ்ய தீமத: - ராமநாமாங்கிதம் சேதம் பஶ்ய தேவ்யங்குலீயகம்" என்கிற ஶ்லோகத்திலும் "ப்ரத்யயார்த்தம் தவாநீதம் தேந தத்தம் மஹாத்மநா - ஸமாஶ்வஸிஹி பத்ரம் தே க்ஷீணது:கபலா ஹ்யஸி" என்கிற இடத்திலும் திருக்கணையாழியின் ப்ரஸ்தாவம் ஏற்பட்டிருக்கிறது. கிஷ்கிந்தா காண்டத்திலும் 45-வது ஸர்க்கத்தில் "ததௌ தஸ்ய தத: ப்ரீத: ஸ்வநாமாங்கோபஶோபிதம் - அங்குலீயம் அபிஜ்ஞாநம் ராஜபுத்ர: பரந்தப:" என்கிற ஶ்லோகத்தில் ப்ரஸ்தாவம் நேர்ந்திருக்கிறது. "ஸகலதநத்தையும் விட்டுவிட்டு வந்ய வ்ருத்தியில் வர்த்திக்க வந்த ராமனுக்கு அங்குளீயகம் ஏது?" என்கிற பூர்வபக்ஷத்தை ஸ்ரீகோவிந்தராஜர் தம்முடைய வ்யாக்யாநத்தில் செய்துகொண்டு மூன்று விதமாக ஸமாதாநம் செய்திருக்கிறார். அவையாவன:—(1) ஸ்ரீராமன் இந்த ஒரு ஆபரணத்தை மாத்திரம் கார்யார்த்தமாக ரக்ஷித்து வைத்திருந்தார்; ஆகையால்தான் 'மோதிரத்தைக் கழற்றி விட்டார்' என்று சொல்லப்பட வில்லை. (2) இந்த மோதிரம் ஸீதையினுடையது; ஒருகால் ராவணனால் ஸீதை அபஹரிக்கப்படுமுன் ஸீதையினிடமிருந்து ப்ரணயத்தால் ஸ்ரீராமன் வாங்கிப்போட்டுக்கொண்டு இருக்கலாம். (3) விவாஹ காலத்தில் ஜநகமஹா ராஜாவால் வராலங்காரமாக ஸ்ரீராமனுக்குக் கொடுக்கப்பட்டு ஸ்ரீராமன் ஸதா பார்யா ஸ்நேஹத்தால் தேசாசாரப்படி கையில் தரித்துக்கொண்டிருந் திருக்கலாம். இந்த ஸமாதாநங்களில் ஒன்றும் எந்த ஸமயத்தில் இந்தக் கணையாழி ஸ்ரீராமனுக்குக் கிடைத்தது என்பதும், என்ன காரணத்தால் ஸ்ரீராமன் வநவாஸம் வரும்பொழுது கூட இந்த ஆபரணத்தைக் கையில் தரித்துக்கொண்டிருந்தார் என்பதும் வ்யக்தமாக ஏற்பட வில்லை. இதைப்பற்றி வ்யாக்யாநத்தில் ஏற்பட்டிருக்கிற விஷயங்களைத்தவிர விஷயாந்தரங்கள் ஏதாவது இருந்தால் ஸ்ரீவேதாந்த தீபிகையைப் படித்துவரும் வித்வாங்களில் யாராவது க்ருபைசெய்து அடியேனுடைய சங்கையை நிவ்ருத்தி செய்வார்கள் என்று நம்பி இத்தப்பத்ரிகையை விஜ்ஞாபநம் செய்து கொண்டிருக்கிறேன்.

கண்டனூர் ராமநாதபுரம் ஜில்லா, 1—9—1911. } மாடபூசி. வெங்கடாசாரியன்.

ஸ்ரீ:.

# ஸபையின் பிரிவுகள்.

## 1.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

சென்ற ஆவணிமீ 11உ ஞாயிற்றுக்கிழமையிலும், நாளது புரட்டாசி மீ 1உ, 8உ ஞாயிற்றுக் கிழமைகளிலும், ஷை ஸபையின் ஸங்கங்கள் வழக்கம் போலத் திருவல்லிக்கேணி ஸ்ரீஅஹோபிலமடத்திற் சேர்ந்தன. ஶ்ரத்தாளுக்களான ஆஸ்திகர்கள் அநேகர் வந்திருந்தார்கள். கண்ணிநுண் சிறுத்தாம்பில் இதற்கு முந்தி உபக்ரமித்து நடந்ததற்குமேலுள்ள பாசுரங்களின் அர்த்தத்தை ஸ்ரீ சே. நரஸிம்மாசார்யர் உபந்யாஸம் செய்தார். உபந்யாஸங்கள் அத்யந்தம் ஆநந்தகரமாகவும், வந்திருந்த வித்வான்கள் எல்லாரும் புகழக் கூடியனவாகவும் இருந்தன.

மயிலாப்பூர்,
விரோதிக்ருத்ஸூ
ஆவணிமீ 9உ.

காரியதரிசி,
மதிராஸ். சைதாப்பேட்டைபிரிவு.

## 2.

### i. தென் ஆர்க்காட்டு ஜில்லா பிரிவு.

இந்தப் பிரிவு, சென்ற ஜூலைமாஸம் 1உ யில் ஏற்பட்டது. அதற்கு, ஷை ஜில்லாவில் வ்யாபகரான ஜில்லா கோர்ட்டு வக்கீல் ஸ்ரீ - ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸபாத்யக்ஷராகவும், ஸ்ரீ. எஸ். ராஜகோபாலா சார்யர் கார்யதர்ஶியாகவும் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். இவர்களுடைய அவலம்பம் நமக்கு ஏற்பட்டதுபற்றி நாம் நிரம்பவும் ஸந்தோஷிக்கிறோம்.

சென்ற ஆகஸ்டுமாஸம் 27-ம் உயில் இப்பிரிவின் ஸங்கம் ஒன்று சேர்ந்து பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(1) ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீகார்ய விஷயமாகச் சென்ற ஸம்வத்ஸரத்தில் தஞ்சை நகரில் கூடின மஹாஸங்கத்தாற் செய்யப்பட்ட தீர்மானத்தை ஸ்ரீ அழகிய சிங்கரிடம் மறுபடியும் இப்பொழுது விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டியது.

(2) ஸ்ரீ ஸந்நிதியின் சொத்துக்களை யெல்லாம் நன்றாகப் பராமர்ஶித்துப் பார்க்கும் பொருட்டு, தகுந்த யோக்யதையுடன் கூடின மானேஜர் ஒருவரை ஸ்ரீ ஸ்வாமி நியமிக்க க்ருபை செய்யவேணுமென்று ஸ்ரீ ஸ்வாமியை எல்லாரும் ப்ரார்த்திக்கிறதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### ii. மைஸூர் பெங்களூர் பிரிவு

சென்ற ஆகஸ்டுமாஸம் 6-ம் உ யில் ஷை பிரிவின் ஸங்கம் ஒன்று பெங்களூரில் சேர்ந்தது. அப்பொழுது ஸ்ரீ - காஞ்சீபுரம் திருவேங்கடாசாரியர் விஶிஷ்டாத்வைத விஷயமாக ஓர் உபந்யாஸம் செய்தார். பெங்களூரிலிருக்கும் வ்யாபகர்களில் அநேகர் வந்திருந்தார்கள்.

இம்மாதிரியான ஸங்கங்கள் அடிக்கடி பல இடங்களில் சேர்ந்து பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தழைப்பிக்க வேணுமென்பது தான் இந்தச் சபையின் அபிவ்ருத்தியை அபேக்ஷிக்கிறவர்களின் முக்கியமான கோரிக்கை.

சித்தூர்,
6—9—11.

ஸபையின் பொதுக் கார்யதர்ஶி.

ஸ்ரீ:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகன் உத்ஸவம்.

“ஜீவநம் ஜகதாம் ஜீயாத் நிர்வ்யூடமதஸ்பூர்ஹம் - ஸூதம் ஸத்வ நிஷ்டம் வேங்கடேஶாஹ்வயம் மஹ:”, “அநிதர ஸாதாரணமான வைராக்யத்துடன் ஸம்பந்நமாயும், ஸமஸ்தமான தந்த்ரங்களிலும் அநந்யாதீநமான கௌஶலத்துடன் கூடினதாயுமுள்ள ஏதோ ஒரு அநிர்வசநீயமான தேஜஸ்ஸை, நிகில சேதநரும் உஜ்ஜீவிக்கும்பொருட்டு ஸ்ரீ வேங்கடேஶனாக வந்து அவதரித்தது” என்றன்றோ ப்ரதிவாதி பயங்கரார்யன் ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனைப்பற்றி அருளிச்செய்திருக்கிறார்? அந்த மஹா தேஶிகனுடைய வர்ஷோத்ஸவம் நாளது புரட்டாசி மாஸம் 8-ம் உ ஞாயிற்றுக் கிழமை ஆரம்பித்து 17-ம் உ செவ்வாய்க்கிழமை வரையில் அநேக திவ்ய தேஶங்களில் பஹு விஶேஷத்துடன் நடந்து வருகின்றது. ஸேவார்த்திகளாக வரும் பாகவதர்களை ஆராதிக்கும்பொருட்டும், உத்ஸவத்தைக் கண்டருளும் ஆசார்யன் விஷயத்தில் உபசாராதிகளை ப்ரபலமாக நடத்தும் பொருட்டும் ஏராளமான த்ரவ்யத்தை அங்கங்கு இருக்கும் ஆஸ்திக ஶிரோமணிகள் சேகரித்து வருகிறார்கள். இப்படி இதற்காகப் பரிஶ்ரமப்படுவது உசிதமே. பரமோபகாரகர்களான ஆசார்யர்கள் விஷயத்தில் உபசாராதிகளாலும் உத்ஸவாதிகளாலும் நம்முடைய க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரணம் செய்வது ந்யாய்யம்தான். கேவலம் க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் மாத்ரமன்று; இவ்விதமாக ஆராதநம் செய்வதனால், அந்த ஆசார்யர்களுடைய கடாக்ஷத்திற்கு நாம் பாத்ரமாகி அது வழியாக ஆத்மஜ்ஞாநாதிகளை ஸம்பாதித்துக்கொண்டு பகவத் ப்ராப்திக்கு வேண்டுவதான உபாயத்தையும் தேடிக்கொள்ளுகிறோமென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால், இந்த ஆராதநம் ஆராத்யராகிற ஆசார்யர்களுடைய திருவுள்ளத்திற்கு உகப்பாக இருக்க வேண்டுமானால், சில நியமங்கள் வேண்டுவது அவஶ்யமன்றோ?

ஒரு விதமான நியமமுமில்லாமல் மனத்திற்குத் தோன்றும் வழியெல்லாம் உபசரிப்பதாக நாம் ப்ரயத்நப்பட்டால், அந்த உபசாரம் மஹத்தான அபசாரமாகப் பரிணமித்து நிக்ரஹ ஹேதுவாக ஸம்பவிக்குமே! அப்படிக்கு ஏதாவது நியமங்களை இப்பொழுது நாம் அநுஸரித்து வருகிறோமா' என்பதைச் சற்று ஆலோசித்துப்பார்ப்போம்.

முதலில், இந்த உத்ஸவம் உபகார ஸ்மரண பூர்வகமான ஆராதநம் என்பதையே நாம் அநேகமாக மறந்துவிட்டோம் உத்ஸவ காலங்களிற் சேரும் பெருங் கூட்டங்களில் எவ்வளவு பெயர்களுடைய மனதில், 'இந்த ஆசார்யன் நமக்கு உபகாரகன், அதற்காக நாம் அவனை இப்பொழுது இம்மாதிரி ஆராதிக்கிறோம் என்கிற எண்ணம் உண்டாகியிருக்கிறது' என்று நாம் பரிசோதித்துப் பார்த்தால், ஆயிரத்தில் ஒருவராவது அந்த எண்ணத்துடன் கூடியிருப்பதாக அகப்படுவது துர்லபமாக இருக்கும். ஸாமாந்யமாக மற்றை ஜநங்கள் எல்லாரும் வேடிக்கை பார்க்கவும், தங்கள் தங்கள் ஸம்பத்தையும் சோபையையும் பத்துப்பெயர் பார்த்துப் புகழும்படி வெளிப்படுத்திக் கொள்ளவுமே சேருகிறார்கள். உத்ஸவங்களை நடத்திவைக்கும் அதிகாரிகளும் கூட, இந்த வேடிக்கை ப்ரயுக்தமாக ஜநங்களுக்கு இருக்கும் உத்ஸாஹத்தை த்ருப்திசெய்யும் மார்க்கத்தைத் தேடுகிறார்களே ஒழிய வேறு மூலபூதமான அபிப்ராயத்தைப் புத்தி விஷயமாகச் செய்யும் வழியைத் தேடக்காணோம். இந்த உத்ஸாஹ ஸம்பாதகமான உபாயங்களை நிறுத்திவிடவேண்டுமென்கிற எண்ணத்துடன் இந்த விஜ்ஞாபநம் செய்து கொள்ளப்படவில்லை. அந்த உத்ஸாஹத்தின் த்ருப்தியைத் தேடி வரும் ஜநங்களின் மனதில் இந்த உத்ஸவத்தின் ஆத்யந்திகமான கருத்தையும் அர்த்தத்தையும் வற்புறுத்தும் உபாயங்களை ஸம்பாதித்தால், மிகவும் ஶ்லாக்யமாகவும் நன்மையின் பொருட்டும் ஆகும் என்கிற எண்ணத்துடன் இப்படி எழுதத் துணிந்தோம். சில இடங்களில் 3, 4, ஸம்வத்ஸரங்களாக முற்கூறிய வழியில் சில ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பாஷாந்தரத்தை அப்யஸித்து லௌகிகத்திற் ப்ரவ்ருத்தர்களான சில ஆஸ்திகர்கள் முற்கூறிய மநோரதத்தை நிறைவேற்



றும்பொருட்டு ஸமாஜங்களை ஏற்படுத்தி, ஆசார்யர்கள் ஜகத்துக்குச் செய்திருக்கும் உபகாரங்களைப்பற்றித் தகுந்த வித்வாங்களைக் கொண்டு உத்ஸவ காலங்களில் உபந்யாஸங்களைச் செய்விப்பித்து வருகிறார்கள். ஆனால் இந்த ஏற்பாடு செழிப்பாக வளர்ந்து வரக்காணோம்; இப்படி வளராம லிருப்பதற்கு முக்கிய காரணம், வைதிகரென்று பெயர் பூண்டு பாஷாந்தரத்தில் ப்ரவ்ருத்திக்காம லிருப்பவர்களின் ஔதாஸீந்யமே. ஏன் இப்படி அவர்கள் உதாஸீநமாக இருக்கவேண்டும் என்பது வ்யக்தமாக ஏற்படவில்லை. சில வித்வாங்கள் மாத்திரம் யத்கிஞ்சித்தாகத் தங்களுக்கு ஸமர்ப்பித்துக் கொள்ளப்படும் ஸம்மாநாதிகளை க்ருபையுடன் திருவுள்ளம்பற்றி உபந்யாஸம் செய்ய மாத்திரம் எழுந்தருளுகிறார்களே தவிர, ஸாமாந்யமாக வைதிகர்களின் அவலம்பம் கிடைக்கவில்லை. இப்படிப் பராங்முகமாக இருக்காமல் அவர்களும் ஒன்று சேர்ந்து, இந்த ஶாஸ்த்ராவிருத்தமான ஏற்பாட்டைத் தலைக்கட்டி வைத்தால் மிகவும் ஶ்லாக்யமாக இருக்கும்.

இரண்டாவது—நாம் செய்யும் உபசாரங்கள் ஆராத்யரான ஆசார்யர் இந்த விபூதியில் எழுந்தருளியிருந்த பொழுது நடந்துகொண்ட மாதிரிக்கு அநுகுணமாக இருக்கவேண்டுமன்றோ? நித்ய ஸூரிகளான ஆசார்யர்களுடைய தேஜஸ்ஸுக்கு அநுகுணமான உபசாரத்தைக் கர்மவஶ்யர்களான நாம் எப்படிச் செய்யக் கூடும் என்பது வாஸ்தவமே. அந்த ஆநுகுண்யத்தைப்பற்றி நாம் ப்ரஸ்தாவிக்க இல்லை. "யதந்ந: புருஷோ பவதி ததந்நாஸ்தஸ்ய தேவதா:" என்கிறபடி நமக்கு எந்த எந்த வஸ்து ஶ்லாக்யமாகப் படுகிறதோ அந்த அந்த வஸ்துவைத்தான் நாம் உபஹாரமாக ஸமர்ப்பிக்கக் கூடும். ஆனால், அப்படி ஸமர்ப்பித்து ஆராதிப்பதில் அவர் எழுந்தருளியிருந்த உபஶாந்திக்கும் வைதிக ஶ்ரீக்கும் அநுரூபமாக ஆராதித்து லௌகிகாடம்பரங்களை மட்டுப்படுத்துவது ஸாத்யமான விஷயமே. "ஸிம்ஹாஸநஸ்தம் ஸ்வேததமௌளஷம் ஸூர்யதேஜஸம்" என்கிறபடி எழுந்தருளியிருந்த விசத்த ஸஜ்ஜந ஸங்க ஶிரோமணிக்கு தாஸீநர்த்தநாதிகள் அநுகுணமோ? வீதிகளில் புறப்பாடு ஆகுங் காலத்திலும், ப்ரஸாத

விச்சேத காலங்களிலும் தாஸிகளைப் பகவத்தாஸர்களில் அந்ய தமர்களாக நாம் கொண்டுபோய்ச் சேர்ப்பானேன்? இம்மாதிரியான துர்ஜந மநஃப்ரீதிகர ஆடம்பரங்களைத் தூர விலக்கி வைதிக ஸம்பத்தால் நிறைந்ததாக இந்த உத்ஸவங்களை நடத்தக்கூடாதா? மேலும் "ஸ்ரீமதாம் ஹரிதா ஸாதாம் பாதரக்ஷாவலம்பிநா" என்றும், "விஷ்ணு விஷ்ணுஸ்ரிதேஷு வ்யக்த விநய வைஶேஷ்யவ்ருத்தி:" என்றும், "ஶேஷத்வம் ஸ்ரீஶதாஸஜந விஷயகம் யாரதம்யம்வதது" என்றும், "உபகரணபரிநிஶேவகரணமிஶேஷவி" என்றும் ஶ்லாகிக்கப்பட்ட தேஶிகன் விஷயத்தில், ஏதோ சில ஸ்வல்ப காரணங்களால் நம்மிடமிருந்து பேதித்திருக்கும் பாகவதோத்தமர்களிடத்தில் ஆத்யந்திக த்வேஷத்தைப் பாராட்டிக்கொண்டும், உத்பாதகங்களான சேதோவ்ருத்திகளை வளர்த்துக் கொண்டும், டாம்பிகமான வ்யாபாரங்களில் ஆஸக்தியை வைத்துக் கொண்டும் உத்ஸவாதிகளைச் செய்வது எப்படி அந்தத் தேஶிகனுக்கு ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கும்? உபஶாந்தர்களாகவும் விரக்தர்களாகவும் அங்கங்கு எழுந்தருளியிருக்கும் மஹாந்கள் இந்த விஷயத்தைக் கொஞ்சம் மநஸ்ஸில் வாங்கி உசிதமான சீர்திருத்தங்களைச் செய்ய ப்ரயத்நப் படுவார்கள் என்று நம்புகிறோம்.

மூன்றாவது—ஆசார்யர்கள் ஜகத்துக்குச் செய்திருக்கும் உபகாரம் இயத்தையில் அகப்படாததே. விஶேஷமாய் ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் அபாரக்ருபையால் ஸகல சேதநர்களும் உஜ்ஜீவிக்கும்படி செய்திருக்கும் உபகாரத்தை இவ்வளவு என்று பரிச்சேதித்துப் பேசுவது துஸ்ஸாத்யமான விஷயம் பண்டிதர்கள் முதல் பாமரர்கள் வரையில் எல்லாருடைய யோக்யதைக்கும் அநுகுணமாகப் பரஶ்ஶதமான க்ரந்தங்களை இவர் அருளிச் செய்திருக்கிறார். அந்த க்ரந்தங்களிற் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் இன்னது என்றாவது, அது ஸமர்மகமாகத் தெரிந்து கொள்ளப் படாமற் போனாலும் ஸ்தூலமாக இம்மாதிரியான தாத்பர்யத்தை யுடையது என்றாவது, அறிந்து கொள்ளாமல், கேவலம் அவருடைய ஶ்லோகா பாமான சில வாக்யங்களை உச்சைஸ் ஸ்வரத்தால்



ஸந்நிதிகளில் கோஷிப்பதால் மாத்திரம் தேஶிகனுடைய கடாக்ஷம் ஏற்பட்டு விடுமோ? பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தி வைத்த இந்த மஹாநுடைய திவ்ய ஸூக்திகளை அர்த்தாநுஸந்தாந பூர்வகமாக அத்யயநம் செய்வதன்றோ அவருடைய திருவுள்ளத்திற்கு அத்யந்தம் உகப்பாக இருக்கும்? இப்பொழுது நடத்துவதுபோல உத்ஸவங்களை நடத்துவதுடன் அவருடைய க்ரந்த ப்ரசாரத்திற்கு ஹேதுவான உபாயங்களைச் செய்வதும் அவருடைய பெருத்த ஆராதநமாகும். ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகன் ஸந்நிதிகளின் தர்ம கர்த்தாக்கள் இந்த விஷயத்தைத் திருவுள்ளம்பற்றி யதோசிதம் பரிஶீலநம் செய்வார்களென்று நம்புகிறோம். ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ப்ரவசந ஸபையார் இது ஸம்பந்தமாகச் செய்யும் ஏற்பாடு மிகவும் புகழத்தக்கது. ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகனுடைய க்ரந்தங்கள் எல்லாவற்றையும் அச்சிடுவதை முதல் வ்யாபாரமாக எடுத்துக் கொண்டிருக்கும் இந்தச் சபையார் ஸ்ரீ தேஶிகனுக்கு அதீவ ஹ்ருதயங்கமமான உத்ஸவத்தைச் செய்கிறார்கள் என்று நம்முடைய த்ருடமான அபிப்ராயம்.

**ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமி ப்ருந்தாவநம்.**

திருநாராயணபுரத்திலிருக்கும் ஸ்ரீ ஆதிவண்ஶடகோபஸ்வாமியின் ப்ருந்தாவநம் அத்யந்தம் ஶிதிலமான ஸ்திதியிலிருக்கிறது என்று அவ்விடத்திலுள்ள ஶிஷ்யர்கள் சென்ற வருஷம் விஜ்ஞாபநம் செய்து கொண்டதின்பேரில, ஸ்ரீ அழகிய சிங்கர் அந்த ப்ருந்தாவநத்தை உத்தாரணம் செய்யும் பொருட்டு இரண்டாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்யும்படி நியமித்திருந்தார். அப்படி நியமித்திருந்தும் அந்த உத்தாரணத்தைப் பூர்த்திசெய்ய நாளது வரையில் ஒருவிதமான ஏற்பாட்டையும் செய்யாதது பற்றி நம்முடைய தௌர்ப்பாக்யத்தை நிந்தித்துக் கொண்டு, சென்ற ஸாதாரண வருஷம் பங்குனிமாஸத்திய ஸஞ்சிகையில் நாம் வருத்தப்பட்டு எழுதியிருந்தோம். அப்படிச்செய்யாமலிருந்தது மைஸூரில் ஸ்ரீமடத்திற்கு ஏஜண்டாக இருந்த ஸ்ரீ புள்ளம்பூதங்குடி க்ருஷ்ணமாசாரியருடைய ஔதாஸீந்யத்தால் என்று இப்பொழுது தெரியவருகிறது. அநேகம் தட்வை

களில் ஸ்ரீ ஸ்வாமி இது ஸம்பந்தமாக ஷை ஸ்ரீ. க்ருஷ்ணமாசார்யருக்கு ஸ்ரீமுகம் நியமித்திருக்கிறார். அப்படி நியமிக்கப்பட்டிருக்கையிலும் என்ன காரணத்தினாலோ அவர் உதாஸீநமாகவே இருந்துவிட்டார். இப்பொழுது அவரை ஏஜண்டு வேலையிலிருந்து நிவ்ருத்தி செய்து, அவர் ஸ்தாநத்தில் ஸ்ரீ. ஆண்டாபுரம் க்ருஷ்ணமாசார்யரை நியமித்து, அவருக்கு இந்த ப்ருந்தாவந ஸம்பந்தமான மராமத்துக்களைச் செய்ய ஸ்ரீ ஸ்வாமி அதிகாரம் கொடுத்திருக்கிறதாகக் கேள்விப்பட்டு நாம் மிகவும் ஸந்தோஷிக்கிறோம். ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமியின் ப்ருந்தாவநம் இந்த ஶிதிலமான ஸ்திதியிலிருப்பது ஸ்ரீ மடத்திற்கு அழகன்று. சீக்கிரத்தில் இந்த ஜீர்ணோத்தாரணம் பூர்த்தியடைந்து, முன்போல ப்ருந்தாவநம் நல்ல ஸ்திதியில் இருக்குமென்று நம்புகிறோம்.

**ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீ கார்யம்.**

ந்ருஸிம்ஹபுரத்தில் ஸ்ரீ. குறிச்சிஶேஷாசாரியர் நிவ்ருத்தரான பிறகு மற்ற ஒருவரும் அந்த ஸ்தாநத்திற்கு நியமிக்கப்படவில்லையாம். தாத்காலிகமாக ஏஜண்டு ஸ்ரீ. குப்புஸாமி ஐயங்காரே அந்தக் கார்யத்தை நிர்வஹித்து வருவதாகக் கேள்விப்படுகிறோம். நாம் ஏற்கெனவே விஜ்ஞாபநம் செய்து கொண்டிருக்கிறபடி அந்த ஸ்தாநத்திற்குத் தகுந்த யோக்யதையுள்ள ஒரு வ்யக்தியை ஸ்ரீ ஸ்வாமி ப்ரதிஷ்டித்தருப்பதால்தான் இந்த விளம்பம் ஏற்பட்டிருக்கலாமென்று நினைக்கிறோம். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஆராதநத்துக்கும் ஸ்ரீ. காறக்குறிச்சி ஸ்வாமி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறாரென்று கர்ணாகர்ணிக ஸமாசாரம். அப்படியிருந்தால் அது ஶோசிக்க வேண்டிய விஷயமன்று. ஜ்ஞாநத்தினாலும் வைஶிஷ்ட்யத்தாலும் சிறந்த அந்த ஸ்வாமி ஆராதநம் செய்வது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவுள்ளத்திற்கு அத்யந்தம் உகப்பாக இருக்குமென்பது நம்முடைய த்ருடமான அபிப்ராயம்.

“[illegible]”

---

# The VEDANTA DIPIKA.

## BUSINESS NOTICE.

Business letters, money orders and other communications should be addressed to *the Manager*, 11, *Kesavaperumal Sannidhi Street, Mylapore, Madras, S.*

The annual subscription is Rs. 2, including postage. Subscription may commence any month, and must be paid in advance.

### Literary Contributions.

All literary matter should be written on one side only and addressed to *the Editor*, 11, *Kesavaperumal Sannidhi Street, Mylapore, Madras, S.* Every article must have the name and address of the writer clearly written, not necessarily for publication.

### Sections of the Sri A. M. S. Sabha.

The Secretaries of the various sections are requested to send every month, reports of meetings, etc., for publication.

---

*Complaints.*—We have received several complaints as to non-delivery of copies of this journal, and very much regret this. We hope subscribers who do not receive their magazines regularly will advise the Editor at once.

*To Advertisers.*—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ... | ... | ... | ... | Rs. | 5 | a page. |
| One insertion | ... | ... | ... | ... | ,, | 7½ | ,, |
| Two insertions | ... | ... | ... | ... | ,, | 10 | ,, |
| Three ,, | ... | ... | ... | ... | ,, | 20 | ,, |
| Six ,, | ... | ... | ... | ... | ,, | 30 | ,, |
| Twelve ,, | ... | ... | ... | ... | | | |

Wanted active agents to canvas subscribers for the Vedanta Dipika. Liberal commission.

# வேதாந்த தீபிகை.

## ஸ்ரீ ஸஹஸ்ரகீதி பகவத்விஷய
## க்ரந்த ப்ரகடந பத்ரிகா.

இந்தப் பகவத்விஷய க்ரந்தத்தில் நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி மூலமும், அதற்கு வ்யாக்யாநமாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படியும், ஸ்ரீ கேசவ ஸம்பத்குமார ஸ்வாமி அருளிச்செய்த தமிழ்ப் பதினெண்ணாயிரப்படியும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியும், இதின் ஸாரமும், இவை யிரண்டுக்கும் வ்யாக்யாநங்களும் அடங்கியிருக்கின்றன. பத்து ஒன்று ஒரு ஸஞ்சிகையாக அச்சிடப்பட்டு, 4 - பத்து வெளியாகி யிருக்கின்றது. 5-வது பத்து அச்சிலிருக்கிறது. பத்து ஒன்றுக்கு வி. பி. சார்ஜு உள்பட விலை அணா 7. வேண்டியவர்கள் இந்த விலாஸப்படி பெற்றுக்கொள்ளலாம்.

கிடாம்பி, ஸ்ரீ. வரதாசாரியர், சுண்டப்பாளையம்,
கோயமுத்தூர் ஜில்லா.

---

# ப்ருங்காமலக தைலம்.

மனத்திற்கு மிகுந்த க்லேசத்தைக் கொடுக்குமளவு கஷ்டப்பட்டு வேலை செய்யுமவர்களுக்கு இந்தத் தைலம் நிரம்ப ஆநுகூல்யத்தைச் செய்யும். தேஹத்திலிருக்கும் உஷ்ணாதிக்யத்தை சமநம் செய்து மனத்திற்கு ஒரு ஆஹ்லாதத்தை உண்டுபண்ணுவதுடன், புத்திக்குத் தெளிவையும் நிதாநத்தையும் கொடுக்கக்கூடிய யோக்யதை இந்தத் தைலத்திற்கு உண்டு. ச்ரமப்பட்டுப் படிக்கும் மாணாக்கர்களுக்கு இது அத்யந்தம் உபகாரகம்.

### உபயோகிக்கும் மாதிரி.

காலையில் பிரஸ்ஸில் தேய்த்துக்கொண்டு சீயக்காயை உபயோகித்து ஸ்நாநம் செய்யவேணும். ஸோப் முதலியவற்றை உபயோகிப்பது ச்லாக்யமன்று. உஷ்ண ஜலத்திலாவது குளிர்ந்த ஜலத்திலாவது யதா ஸௌகர்யம் ஸ்நாநம் செய்யலாம். ஆஹாரநியமாதிகள் ஒன்றுமில்லை.

### இதன் விலை ஒரு புட்டி ரூபா. 1—2—0.

வேண்டுமவர்கள், வட ஆற்காடு ஜில்லா, சித்தூரிலிருக்கும் ஆயுர்வேத வைத்யர் பண்டித கே. எஸ். ராகவ ஐயரிடத்தில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

வேதநயம்! வேதுசுகம்!!

# நாகரிக மெடிகல் ஹால் மயிலாப்பூர்,

## மதராஸ்.

### ஆயுர்வேத பூஷணம்
### பண்டிட். U. ராமநாதசாஸ்திரி.

அழகான கலரும் அளவிலாத ருசியும்
அடங்காதவாஸனையும் கூடிய சில மருந்துகள்.

### (1) ஆனந்தப் பற்போடி.

பற்பொடிக்கு வேண்டிய எல்லாக்குணமும் இதில் குடிகொண்டு இருப்பதால், இதனால் உண்டாகும் ஆச்சரியகரமான சுகத்தை அளவிட முடியாது. தந்தத்தில் உண்டான ஈறு, ரத்தம் வருதல், சொத்தை, ஆட்டம், நாற்றம் முதலான எல்லா விகாரங்களும் பறந்தோடும். பல்தேய்த்த வுடனே பற்களைச் சங்கம்போல் வெளுக்கக்காணலாம். பல்தேய்த்தபிறகுகூட வெகுநேரம்வரையில் வாய்க்குள் சுகந்தமானவாசனை வீசிக்கொண்டே இருக்கும். இதற்கு மகாகனவான்களான அநேகம் ஜட்ஜிகள் முதலான பிரபுக்களால் அபாரமான ஸர்ட்டிபிகேட்டுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வளவு ப்ரஸித்தி பெற்ற இதற்கு விலையும் ரொம்பவும் ஸ்வல்பம்.

டப்பி 1-க்கு ரூபா. 0—2—6.
டஜன் 1-க்கு ரூபா. 1—8—0.

### (2). சிரேஷ்டமான ஸிரப்புகள்.

ரோஜாபுஷ்பம் - ஆரஞ்சுபழம் - எலுமிச்சம்பழம் - பாதம் கொட்டை, பேயன் வாழைப்பழம் முதலான ஷர்பத்துக்கள் எக்காலத்திலும் கெடாமல் இருக்கும்படி கையினால் தொடாமல் யந்திரத்தினால் செய்யப்படுகின்றன. இதைப் பார்த்த வுடனே வாஸனையாலும், ருசியாலும், அந்தந்த வஸ்துவின் ஸ்வரூபத்தை அந்தந்தப்படி பரீக்ஷித்துக்கொள்ளலாம். இது, தாதுபுஷ்டிக்கு வெயிற்காலத்திலும் மழைக்காலத்திலும் காலபேதம் இராமல் பணிக்காக உபயோகிக்கக் கூடியது. இவைகளின் ருசியும் குணமும் அநந்தம். எல்லா ஸிரப்புகளுக்கும் விலை ஒன்றுதான்.

$\frac{1}{4}$-வீசை கொண்ட சீசா 1-க்கு ரூபா. 1—0—0.

அநேக பேபர்களிலும் விளம்பரம் இருப்பதால், ஆர்டர் கடிதத்தில் இந்தப் பத்திரிகையைக் குறித்துக்காட்டி எழுதவேண்டும்.

சாஸ்திரீயமான எந்த ஔஷதமும் ஷை மருந்துஷாப்பில் விற்பனைக்குத் தயாராக இருக்கும். இவைகளுக்கு V. P. பிரத்தியேகம்.

## பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

**திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.**

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழேகண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. |
|---|---|---|---|---|
| 5 | ,, | 2½ | ,, | 6 முதல் 8 வரை |
| 5 | ,, | 3 | ,, | 7 ,, 9 ,, |
| 6 | ,, | 2½ | ,, | 8 ,, 9 ,, |
| 6 | ,, | 3 | ,, | 9 ,, 12 ,, |
| 7 | ,, | 3 | ,, | 10 ,, 13 ,, |
| 8 | ,, | 3 | ,, | 12 ,, 15 ,, |
| 9 | ,, | 3 | ,, | 14 ,, 16 ,, |
| 10-12 | ,, | 3 | ,, | 15 ,, 20 ,, |
| 15-16-18 | ,, | 2½-3, சேலைகள் | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

### பீதாம்பர பட்டுச்சேலைகள்.

16 முழம் நீளம் 2½-அகலம் விளிம்பு முந்தி ஜரிகை பூவேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். நயம் சேலை 1-க்கு ரூ. 30 முதல் 200 வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30 வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ 35 முதல் 300 வரை. மட்டம் ரூ. 25 முதல் 30 வரை.

### ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகைபூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ. 2 முதல் ரூ. 15 வரை கிடைக்கும்.

### பட்டுதுப்பட்டாக்கள்.

6 முதல் நீளம் 2½ முதல் அகலம் விளிம்பு முந்தி ஜரிகைவேலைகளும் உடலில் ஜரிகைபூக்கள்போட்டதும். மட்டம் ரூ. 7 முதல் 15 வரை நயம் 15 முதல் 50 வரை.

### காஷ்மீர் சால்வைகள்.

கம்பிளி (Woolen) காஷ்மீர் சால்வைகள் 6 முழம் நீளம், 2½-அகலம். விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் மூலையில் மாங்காய் போட்டது. மட்டம் ரூ. 9 முதல் 15 வரை. நயம் 15 முதல் 100 வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.


OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED ... 1911 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்ஸு ஐப்பசிமீ. [ஸஞ்சிகை 9.

## விசிஷ்டாத்வைதம்.

### 6. பரப்ரஹ்மத்தின் திவ்ய மங்கள விக்ரஹம்.

‘பரம் ப்ரஹ்மம்’ என்னும் பரமாத்மா, நிகில ஜகத்துக்கும் காரணமென்றும், ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம் முதலிய தர்மங்களையுடையவனென்றும், ஸர்வ வஸ்துக்களிலும் வ்யாபித்துக்கொண்டு அவைகளுக்குத் தாரகனாகவும் நியந்தாவாகவும் சேஷியாகவுமிருக்கிறானென்றும், ஸர்வாவஸ்தைகளிலும், ஹேய குணங்களற்றுக் கல்யாண குணங்கள் நிரம்பி நிற்கிறானென்றும் இதுவரையிற் சொன்னதனால் தெரிந்துகொண்டோம். இப்பொழுது ‘அந்தப் பரமாத்மா சரீரமுடையவனா? பாணி பாதம் முதலிய இந்த்ரியங்களுடன் கூடிய விக்ரஹ விசிஷ்டனா? இல்லாவிட்டால் அவயவங்களொன்று மில்லாமல் கேவலம் விஜ்ஞாநமயனாக இருக்கிறவனா?’ என்பதை விசாரிப்போம்.

நமது ஸித்தாந்தம் இது விஷயமாகச் சொல்லுகிறதாவது—‘பரமாத்மாவுக்குத் திவ்ய ரூபமொன்றுண்டு; அது, ஸர்வலோகத்தையும் வ்யாபித்திருக்கும் தேஜஸ்ஸுடன் கூடியது; ஸூர்யன்,

சந்த்ரன், மின்னல், அக்நி முதலிய தேஜஸ்ஸுக்களெல்லாவற்றிற்கும் அதுதான் காரணம்; ஸ்வாபாவிகமான இந்த ரூபத்தை, பரம காருணிகனான பகவாந், உபாஸகர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு அவரவர்கள் ப்ரதிபத்திக்கு அநுகுணமான ஸம்ஸ்தாநங்களுடன் கூடினதாகத் தன்னுடைய இச்சைமாத்ரத்தாலே செய்து கொள்ளுகிறான்' என்பது தான். இந்தத் திவ்யரூபத்தைப்பற்றி இன்னும் அநேக விசேஷணங்களை நமது ஸித்தாந்தம் ப்ரஸ்தாவிக்கிறது. அவைகள் இப்பொழுது அப்ராக்ருதங்களானபடியால், பின் இப் பராமர்சிக்கப்படும்.

பரமாத்மா இவ்விதமான ரூபவிசிஷ்டனென்று சொல்வதற்கு ஶ்ருதிப்ரமாணமுண்டோவென்று விசாரிக்க யத்நித்தால், இது ஸம்பந்தமாக அநேக வாக்யங்கள் தென்படுகின்றன; அவை யாவன:—

1. முதலில்—“அத ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே. ஹிரண்யஶ்மஶ்ருர்ஹிரண்யகேஶ ஆப்ரணகாத்ஸர்வ ஏவ ஸுவர்ண:. தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ. தஸ்யோதிதி நாம. ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:” என்கிற வாக்யம், சாந்தோக்யம் முதல் அத்யாயம் ஆறுவது கண்டத்தில் காணப்படுகிறது. இதன் அர்த்தம்—“ஆதித்ய மண்டலத்தின் மத்யத்தில் யாதொரு கமநீயமான விக்ரஹத்துடன் கூடிய புருஷன் யோகிகளால் காணப்படுகின்றானோ, அவன் அதி ரமணீயமான ஶ்மஶ்ரு, கேசம், அவயவங்கள் இவைகளுடன் கூடியவன். அவனுடைய கண்கள் மலர்ந்த ரக்தாம்போஜத்தின் தளம்போல ஸ்வச்சமாயும் நீண்டுமிருக்கின்றன. அவன் ஸர்வ விதமான புண்ய பாபங்களிலிருந்தும் உத்கதனாக இருக்கிறபடியால், அவனுக்கு 'உத்' என்று பெயர்.”

அந்தராதித்யே த்ருஶ்யதே—யோகிகளுக்கு ஸூர்யமண்டலத்தின் மத்யத்திலும், கண்ணினுள்ளும் பகவாந் ப்ரத்யக்ஷமாகிறதாக ஶ்ருதி சொல்வது ஸுப்ரஸித்தம். இதே உபநிஷத்தில்



மிந்தி “அத ய ஏஷோऽந்தரக்ஷிணி புருஷோ த்ருஶ்யதே” என்று சொல்லப்படுகிறது. “த்ருஶ்யதே த்வக்ர்யயா புத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்ஶிபி:”—“ஸூக்ஷ்ம தர்சிகளான யோகிகள் தங்களுடைய ஸூக்ஷ்ம புத்தியைக் கொண்டு பகவானை ஸாக்ஷாத்கரிக்கிறார்கள்”—என்கிறபடி, இங்கும் 'த்ருஶ்யதே' என்பதற்கு 'யோகிகளால் காணப்படுகிறான்' என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது.

ஹிரண்மய:, ஹிரண்யஶ்மஶ்ரு:, ஸுவர்ண: என்கிற சப்தங்களுக்கு உஜ்வலமான விக்ரஹத்துடன் கூடியவனென்றும், ரமணீயமான அவயவங்களையுடையவனென்றும் அர்த்தம் செய்யப்பட்டிருக்கின்றது. முக்கியார்த்தத்தை விட்டுக் கௌணார்த்தத்தைப் பரிக்ரஹித்ததற்குக் காரணம், நீருண்டமேகம்போல நீலநிறமாக இருக்கும் பகவானுக்கு ஹிரண்மயத்வம் அநுபபந்நமாகுமோ? என்கிற சங்கைதான். முக்கியார்த்தத்தைக் கொள்வதிலும் அநுபபத்தி இல்லையென்பது ஆசார்யன் திருவுள்ளம். நீலமாக இருக்கும் மயில்தோகைக்கு ஸுவர்ணத்தின் காந்தியுமிருப்பதுபோல, நீலமேக ஶ்யாமளமாக இருக்கும் பகவானுடைய விக்ரஹத்திற்கு ஹிரண்ய வர்ணத்வம் ஸம்பவிக்கலாம். ஸ்ரீமத் ராமாயணத்திலும் நீலமாக இருக்கும் ஸ்ரீராமனுடைய திருமுகமண்டலத்தைப்பற்றி ஹேம ஸமாந வர்ணமாக ஸ்ரீ வால்மீகி பகவாந் “கநகத்யுதே ஸ்வேந வர்ணேந தஸ்யாநநம்” என்கிற வாக்யத்தில் அருளிச்செய்திருக்கிறார். ஆகையால், முக்கியார்த்தமாக இந்தப் பதங்களை எடுத்துக்கொள்வதில் பாதக ஸம்பாவனை ஒன்றுமில்லை. எந்த அர்த்தத்தைக் கொண்டாலும் ப்ராக்ருத விஷயம் அபாதிதமாகவே நிற்கும்.

கப்யாஸம் புண்டரீகம்—இதில் 'கப்யாஸம்' என்னும் பதம் கொஞ்சம் ஸவிசேஷம். இதற்கு மூன்று விதமாக ஆசாரியர்கள் அர்த்தம் சொல்லுகிறார்கள். (1) 'கபி:' என்று ஸூர்யனுக்குப் பெயருண்டு. தேநாஸ்யதஇதி கப்யாஸம்—'ஸூர்ய

ஞல் மலரச்செய்யப்பட்ட' என்று அர்த்தம். ஸூர்யகிரணங்க ளால் மலர்ச்சியை யடைந்திருக்கும் தாமரஸ புஷ்பத்தின் ஶோபை ப்ரஸித்தமே. (2) 'கபி:' என்ருல் தாமரைத்தண்டுக்குப் பெயர் சொல்லலாம். [கம் - ஜலத்தை, பிபதி - குடிக்கிறது, என்று கபி: என்கிற வ்யுத்பத்தி இதற்குக் காரணம்.] கபிநா ஸ்த இதி கப்யாஸம் - 'நிரம்பத் தண்ணீரைக்குடித்து ஸம்ருஷ்டமாக இருக்கும் தாமரைத்தண்டிலிருக்கும்படியான' என்று அர்த்தம். பறிக்கப்பட்ட தாமரஸ புஷ்பத்தைக்காட்டிலும் தண்டுடன் கூடிய புஷ்பம் அதிஶயித ஶோபையை உடைத்தாயிருக்கிறபடியால், இந்த விஶேஷணம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. (3) 'கம்' என்ருல் ஜலம்; அதில் 'கப்யாஸே' நிற்கிறது என்று 'கப்யாஸம்'; அதாவது - 'ஆழமான ஜலத்திலிருக்கிற' என்று தாத்பர்யம். இந்த மூன்றுவித வ்யுத்பத்தியையும் மனத்தில் வைத்துக்கொண்டே ஸ்ரீ பாஷ்யகாரர் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் இந்த வாக்யத்திற்குப் பின் வருமாறு வ்யாக்யாநம் அருளிச்செய்திருக்கிருர்:—"கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸம்ருஷ்டநால ரவிகரவிகஸித புண்டரீகதலாமலாயதேக்ஷண:". 'கப்யாஸம்' என்கிற ஶப்தத்திற்கு - 'குரங்கின் ஜகநம் போன்ற' என்று அர்த்தம் சொல்வது அஸ்லீலாதி தோஷ துஷ்டமாக இருப்பதால், ஆசார்யர்களால் அங்கீகரிக்கப்படவில்லை. 'புண்டரீகம்' என்கிற பதம் ஸாமாந்யமாக லோகத்தில் வெண்தாமரை யென்கிற அர்த்தத்தில் ப்ரயோகிக்கப்படுகிறது; ஆனல், இந்த ஸ்தலத்தில் செந்தாமரையையே காட்டுகிறது என்று அநேக யுக்திகளைக்கொண்டு ஆசார்யர்கள் ஸாதித்திருக்கிருர்கள்.

இவ்விதமாக இந்த ஶ்ருதிக்கு அர்த்தத்தைச் செய்துகொண்டு 'பகவானுக்கு இதில் வர்ணித்திருப்பதுபோன்ற விக்ரஹமுண்டு' என்று ஆசார்யர்கள் ஸித்தாந்தம் செய்திருக்கிருர்கள். ஆனல், ஒரு ஶங்கை ஜநிக்கலாம்:—'இந்த ஶ்ருதி ஆதித்ய மண்டலத்தின் மத்யத்திலிருக்கும் ஒரு புருஷனைப்பற்றியன்ருே பேசுகிறது? பகவானைப்பற்றிப் பேசுவதென்று வ்யக்தமாக ஏற்படவில்லையே; பகவானுக்கு ஶரீரமுண்டு என்று ஸ்தாபிப்பதற்கு இந்த வாக்யம் எப்படி அவலம்பமாகும்?' இந்தப் பூர்வ பக்ஷத்தை ஸூத்ரகாரரான ஸ்ரீவ்யாஸ பகவானே எதிர் பார்த்து, "அந்தஸ்தத்தர்மோபதேஶாத்" [க-க-உக] என்கிற ஸூத்ரத்தில் நிர்ணயம் செய்திருக்கிருர். அந்த நிர்ணயமாவது - ஆதித்ய மண்டலாந்தர்வர்த்தி யென்று சொல்லப்படும் புருஷன் பரமாத்மாவே; அபஹதபாப்மத்வம் முதலான பகவானுடைய அஸாதாரண தர்மம் இந்த ஶ்ருதியில் உபதேஶிக்கப்படுவதே இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்பதுதான். இதுதான் ஸூத்ரார்த்தம்; [அந்த: — ஆதித்யாக்ஷ்யந்த: ஶ்ரூயமாண: புருஷ: பரம்ப்ரஹ்ம; தத்தர்மோபதேஶாத் — தஸ்யாஸாதாரணாபஹதபாப்மத்வாதிதர்மோபதேஶாத்.] இந்த உபதேஶம் எங்கே செய்யப்பட்டிருக்கிறது என்ருல், "ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:" என்கிற விடத்திற் காணலாம். ஸ்ரீபாஷ்யகாரரும் இந்த ஸூத்ரத்தின் அர்த்தத்தை விவரித்த பிறகு பின்வருமாறு க்ரோடீகரித்திருக்கிருர். "யதா பரஸ்ய ப்ரஹ்மணோ நிகிலஹேயப்ரத்யநீகாநந்தஜ்ஞாநைகஸ்வரூபதயா ஸகலேதரவிலக்ஷணஸ்ய ஸ்வாபாவிகாநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுண கணா ஸந்தி - ததைவ ஸ்வாபிமதாநுரூபைகரூபாசிந்த்ய திவ்யாத்புத நித்ய நிரவத்ய நிரதிஶயௌஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்த குணநிதி திவ்யரூபமபி ஸ்வாபாவிகமஸ்தி". இதன் கருத்தாவது - 'எப்படியானல் ஸமஸ்த வஸ்துவைக் காட்டிலும் விலக்ஷணனுக இருக்கும் பரமாத்மாவுக்கு அளவற்ற கல்யாணகுணங்கள் ஸ்வதஸ்ஸித்தமாக உண்டென்று ஏற்படுகிறதோ, அப்படியே தனக்கு அபிமதமாகவும் அநுரூபமாகவு முள்ள ஒரு திவ்ய ரூபமும் ஸ்வாபாவிகமாகவே உண்டு என்பதுதான். தவிரவும், 'புருஷ:' என்கிற ஶப்தம் ப்ரயோகிக்கப்பட் டிருக்கிறபடியால், "ஸமஸ்தாதித் ஶப்ரோ>யம் ததா புருஷ இத்யபி -

𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌯𑍀𑌵 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌸𑌨𑌾𑌤𑌨𑍇" என்கிறபடி இந்த வாக்யம் பகவத்பரம்தான்.

2. இரண்டாவது:—"𑌤𑌸𑍍𑌯 𑌹𑍈𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌂 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌹𑌾𑌰𑌜𑌨𑌂 𑌵𑌾𑌸𑍋 𑌯𑌥𑌾 𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌵𑌾𑌵𑌿𑌕𑌂 𑌯𑌥𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌗𑍋𑌪𑍋 𑌯𑌥𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌃 𑌯𑌥𑌾 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌯𑌥𑌾𑌽 𑌸𑌕𑍃𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌂" என்கிற வாக்யம், ப்ருஹதாரண்யகம் 4-வது அத்யாயம் 3-வது ப்ராஹ்மணத்தில் தென்படுகிறது. இந்த ப்ராஹ்மணம், முதலில் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமான ஸமஸ்த ப்ரபஞ்சத்தையும் பரப்ரஹ்மத்தின் ரூபமாகப் பராமர்ஶித்துவிட்டு, பிறகு இந்த வாக்யத்தால் பரப்ரஹ்மத்தின் ரூபவிஶேஷத்தைச் சொல்லுகிறது. 'இந்தப் பரமாத்மாவின் ரூபம் கௌஸும்ப வஸ்த்ரம் போலவும், கம்பளம் போலவும், இந்த்ரகோப மென்னும் பட்டுப்பூச்சிபோலவும், அக்நிஜ்வாலை போலவும், தாமரை புஷ்பம் போலவும், ஒரேகாலத்தில் உண்டான அநேக மின்னல் போலவுமிருக்கின்றது.'

3. மூன்றாவது—"𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 𑌰𑍁𑌕𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍀𑌶𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌂 - 𑌤𑌦𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇 𑌵𑌿𑌧𑍂𑌯 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿" என்பது, முண்டகோபநிஷத்தில் 2-வது கண்டத்தில் வருகிறது. இதன் அர்த்தம் - ஜ்வலித்துக் கொண்டிருக்கும் திவ்ய ரூபத்துடன் கூடினவனாகவும், ஜகத்துக்குக் கர்த்தாவாகவும், ஈஶிதாவாகவும், உபாதாநகாரணமாகவுமிருக்கும் புருஷ ஶப்தத்தாற் சொல்லப்படும் பரமாத்மாவை எப்பொழுது ஒருவன் பார்க்கிறானோ, அப்பொழுதே ப்ராக்ருத ஸம்பந்தத்தை விலக்கி அபஹத பாப்மத்வம் முதலான லக்ஷணங்களுடன் கூடிய ப்ரஹ்மத்துடன் பரமமான ஸாம்யத்தை அடைகிறான். இவ்விடத்தில் '𑌰𑍁𑌕𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌂' என்கிற ஶப்தம் தான், ப்ராக்ருதத்திற்கு முக்கியமானது. '𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍' என்றும், '𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌃 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌶𑌃' என்றும் செய்யப்பட்டிருக்கும்



ப்ரயோகங்கள் எப்படி பகவானுக்கு விக்ரஹமுண்டு என்பதைக் காண்பிக்கின்றனவோ, அப்படி இந்தப் பதமும் விக்ரஹவைஶிஷ்ட்யத்தை ஸூசிப்பிக்கிறது என்று ஆசார்யர்களின் திருவுள்ளம். '𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃' என்கிற பதத்திற்கு 'நாமரூபங்களால் விடப்பட்டவன்' என்று அர்த்தம்; அதாவது - ப்ரக்ருதி ஸம்பந்தம் நீங்கினவன் என்று தாத்பர்யம். இங்குக்காணப்படும் நாமரூபங்களெல்லாம் ப்ரக்ருதி ஸம்பந்தத்தைக் காரணமாக வுடைத்தானவையன்றோ? அப்படிப்பட்ட நாமரூபங்களற்று என்று நிஷ்க்ருஷ்டமாச்சுது.

இம்மாதிரியான வாக்யங்களை அவலம்பித்துக்கொண்டுதான் பரமாத்மாவுக்கு விக்ரஹமுண்டு என்று நமது ஸித்தாந்தம் சொல்லுகிறது. 'இது துர்ப்பலமான அவலம்பமாக இருக்கிறதே! கீழ்ச்சொல்லப்பட்ட வாக்யங்கள் எல்லாவற்றிலும் பகவானுடைய தேஜஸ்ஸே முக்கியமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறதே தவிர, விக்ரஹத்தின் ஆகாரத்தைப் பற்றியாவது, அவயவங்களின் ஸந்நிவேஶத்தைப்பற்றியாவது ப்ரஸ்தாவத்தையே காணோம். விக்ரஹம் என்னும் பதமே ஓரிடத்திலுமில்லை; அந்த அர்த்தமுள்ள வேறுபதமுமில்லை. ஹிரண்மயனென்றும், மின்னல்போன்றவனென்றும், ருக்ம வர்ணனென்றும் ஏற்பட்டிருக்கும் வர்ணநங்கள் அவனுடைய தேஜஸ்ஸிலேயே பர்யவஸிக்கத்தகுந்தவைகள். அவனுக்கு ஶரீரமுண்டென்று ஶ்ருதி விவக்ஷித்திருந்தால் அந்த விவக்ஷையை எங்கேயாவது ஓரிடத்தில் வெளியிட்டிருக்காதா? ஆகையால், இந்த வாக்யங்களை அவலம்பித்து இம்மாதிரியாக ஸித்தாந்தம் செய்வது ந்யாய்யமன்று. ஆசார்யர்கள் செய்யும் அர்த்தமும் ஸ்வரஸமாகப் படவில்லை' என்று ஓர் ஆக்ஷேபமுண்டாகலாம். இந்த ஆக்ஷேபம் நிற்காது. ஏனென்றால், முதலில் வ்யக்தமாக அர்த்தத்தை விவரித்துரைப்பது ஶ்ருதிகளின் ரீதியன்று. எவ்வளவோ இடங்களில் ஶ்ருதி பரோக்ஷமாக அர்த்தத்தை ஸூசிப்பிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இந்த வாக்யங்கள் துர்ப்பலமான அவலம்பமென்பதற்கு இது பெருத்தகாரண மாகமாட்டாது. இரண்டாவது, 'ஶ்மஶ்ரு' என்றும், 'கே

ஸம்' என்றும், 'அவயவங்கள்' என்றும் சொல்லும் ஸ்ருதியும், கண்களைத் தாமரைப் புஷ்பத்திற்கு ஸமாநமாக வர்ணிக்கும் ஸ்ருதியும் பகவானுக்கு விக்ரஹமுண்டு என்பதைக் காண்பிக்காமற் போனால், மற்ற எந்த அர்த்தத்தைத்தான் காண்பிக்கின்றன? இவைகளெல்லாம் ஆரோபிதமான ஆகாரங்களென்று சொல்வதற்கும் ஸாத்யமில்லை: "யதா² பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம்" என்னும் ப்ரகரணத்தில், "ஜ்ஞாநப்ரஸாதே³ந விஶுத்³த⁴ஸத்த்வ:" என்று 'இந்த ஆகாரங்களுடன் கூடிய பகவான் விஶுத்தமான மநஸ்ஸால் க்ரஹிக்கத்தகுந்தவன்' என்று சொல்லியிருக்கிறதே! ஆரோபிதமான ஆகாரத்திற்கு விஶுத்த மநஸ்ஸால் க்ரஹிக்கப்படுந் தன்மை கிடையாதே.

தவிரவும், நமது ஸித்தாந்தம், ஸ்ருதிகளைச் சார்ந்து நிற்பது போல, ஸ்ருதிக்குத் துல்யமான 'பாஞ்சராத்ரம்' என்னும் ஒரு ஆகமத்தையும் சார்ந்து நிற்கிறது. இந்த ஆகமம் இப்பொழுது அப்ரஸித்தமாக இருந்தாலும் ஸாக்ஷாத் நாராயணனாலேயே வெளியிடப்பட்டது என்றும், ஆகையால் ஸ்ருதியைப் போலவே இதுவும் நமக்கு ஆதரணீயமென்றும் ஆசார்யர்கள் நியமித்திருக்கிறார்கள். ப்ரஹ்ம ஸூத்ரத்தில் பாஶுபதம் முதலான தந்த்ரங்களைக் கண்டிக்கும் ப்ரகரணத்தில், பாஞ்சராத்ர ஸம்பந்தமாக வரும் நாலு ஸூத்ரங்கள் பாஞ்சராத்ர ஸ்தாபநத்திற்காக ப்ரவ்ருத்தித்தன வென்று ஸ்ரீ பாஷ்யகாரரின் பாஷ்யம். ஸ்ரீ ஆளவந்தாரும் 'ஆகம ப்ராமாண்யம்' என்னும் க்ரந்தத்தில் இந்த ஆகமத்தின் ஏற்றத்தைப் பலவாறாக உறுதி செய்திருக்கிறார். ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனும் இந்தப் பாஞ்சராத்ரத்தின் பெருமையைத் தம்முடைய 'பாஞ்சராத்ரரக்ஷை' என்னும் க்ரந்தத்தால் நன்றாக விளக்கியிருக்கிறார். இப்படி ஸ்ரீ வைஷ்ணவர் எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட பாஞ்சராத்ரம், ப்ரக்ருத விஷயத்தைப்பற்றி த்ருடமாகப் பலவிடங்களில் பகவானுக்கு விக்ரஹமுண்டென்றே சொல்லுகிறது. ஸ்ருதியிற் சொல்லப்படாமல் நமது ஸித்தாந்தமென்று நாம் அங்கீகரித்து வந்திருக்கும் மற்ற அநேக விஷயங்களிற் போல, இந்தத் திவ்யமங்கள விக்ரஹ ஸம்பந்தத்திலும் பாஞ்சராத்ர



மே நமக்கு ஶரணம். ஆகையால், ஸ்ருதி ஸஹாயம் இந்த விஷயத்தில் துர்ப்பலமாக இருந்தாலும் பாஞ்சராத்ர பலம் பலீயஸ்ஸாக இருக்கிறபடியால், ஸ்ருதிக்கு விருத்த மில்லாமலிருக்கும் வரையில் விக்ரஹவைஶிஷ்ட்யத்தை நாம் ஒப்புக்கொள்வதில் யாதொரு ந்யாய விரோதமும் தெரியவில்லை.

ஆனால், 'அநேக ஸ்ருதிகள் பகவானுக்கு விக்ரஹமில்லையென்று சொல்லுகின்றனவே! அவைகளுக்குக்கதி என்ன?' என்று கேட்கலாம். அந்த வாக்யங்களிற் சிலவற்றைப் பராமர்ஶித்துப் பார்ப்போம்.

முண்டகோபநிஷத் முதல்கண்டத்தில் பின் வரும் வாக்யம் இருக்கின்றது. "அத² பரா யயா தத³க்ஷரமதி⁴க³ம்யதே - யத்தத³த்³ரேஶ்யமக்³ராஹ்யமகோ³த்ரமவர்ணமசக்ஷு:ஶ்ரோத்ரம் தத³பாணிபாத³ம் நித்யம் விபு⁴ம் ஸர்வக³தம் ஸுஸூக்ஷ்மம் தத³வ்யயம் யத்³பூ⁴தயோநிம் பரிபஶ்யந்தி தீ⁴ரா:" இந்த உபநிஷத், 'ப்ரஹ்மத்தை அடைய வேண்டுமென்று ஒருவன் விரும்பினால், அவனுக்கு இரண்டுவித்யைகள் உபாதேயங்கள்' என்று உபக்ரமித்து, அவைகளில் ஒரு வித்யையைப் பற்றிச் சொல்லிவிட்டு, "அத² பரா" என்கிற ப்ரக்ருத வாக்யத்தால் மற்றொரு வித்யையைப் பற்றிச் சொல்ல ஆரம்பிக்குமிடத்தில், "அந்த வித்யைக்கு விஷயமாகிற பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் அத்ரேஶ்யம், அக்ராஹ்யம், அகோத்ரம், அவர்ணம், அசக்ஷு:ஶ்ரோத்ரம், அபாணிபாதம் என்று வர்ணிக்கிறது. ஸாமாந்யமாக இந்த வாக்யத்தின் அர்த்தமாவது—'பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் கண்ணாற் பார்க்கவாவது, கையாற்பிடிக்கவாவது கூடாதது; அதற்குக் குலமில்லை, ஜாதியில்லை; கண் காது கை கால் ஒன்றும் கிடையாது; காலத்தாலும் தேஶத்தாலும் அபரிச்சிந்நம்; அத்யந்தம் ஸூக்ஷ்மம்: ஆகையால், எவ்விடத்திலும் வ்யாபித்து நிற்கும்; அழிவற்றது; அதை ஸர்வபூதத்திற்கும் உபாதாந காரணமாக ப்ராஜ்ஞாஶாலிகள் பார்க்கிறார்கள்' இந்த வர்ணநத்தால் பகவானுக்கு விக்ரஹமில்லையென்றே ஏற்படுவது போலத் தோன்றும். ஆனால், நமது ஆசாரி

யர்கள் அப்படி வ்யாக்யாநம் செய்யவில்லை. அவர்கள் செய்திருக்கும் அர்த்தம் என்னவென்றால் - ப்ராக்ருத ஸம்பந்தமான கண் காது முதலிய ஜ்ஞாநேந்த்ரியங்களும், கை கால் முதலிய கர்மேந்த்ரியங்களும் பரப்ரஹ்மத்திற்கு இல்லை யென்று நிஷேதிக்கப் படுகிறதே தவிர, அப்ராக்ருதமான ஶரீரமில்லை யென்று சொல்லவில்லை யென்பது தான். இன்னும் பகவானுடைய ஸ்வரூபத்தைச் சொல்லும் அநேக இடங்களில் ‘அமூர்த்தம்’ [மூர்த்தியில்லாதது], ‘நிஷ்கலம்’ [அவயவ மில்லாதது] இத்யாதியான பதங்களை ஶ்ருதியில் ப்ரயோகம் செய்திருக்கிறது. அவை எல்லாவற்றிற்கும் இம்மாதிரியாகவே ஆசார்யர்கள் நிர்வாஹம் செய்திருக்கிறார்கள். ஆகையால், ஶ்ருதிகளுக்குள் பரஸ்பர விரோதமாவது, அல்லது ஶ்ருதிக்கும் பாஞ்சராத்ரத்துக்கும் விரோதமாவது ஏற்படுகிறதற்கு அவகாஶமில்லை.

இவ்வளவு தூரம் சொல்வதால் ஏற்பட்ட விஷய மென்ன? ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைப்பற்றி மூன்று விதமான விசிகித்ஸைகள் உண்டாயின:—(1) பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் கேவலம் சைதந்ய மாத்ரமோ? (2) இல்லாவிட்டால் சைதந்யமாக இருந்து கொண்டு யாதொரு விஶேஷித்த விக்ரஹமொன்று மில்லாமல் அபஹத பாப்மத்வம் முதலான குணங்களுடன் மாத்ரம் கூடியிருக்கிறதா? (3) இல்லாவிட்டால் அபஹதபாப்மத்வம் முதலான குணங்களுடன் கூடிய சைதந்யமாக இருந்துகொண்டு. அவயவ விஶிஷ்டமான ஒரு ஆகாரத்தையும் அவலம்பித்து நிற்கிறதா? இந்த மூன்று விதமான விசிகித்ஸைகளில் முதல் கோடி, ஶ்ருதி ஸம்மதமில்லை யென்று ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது செய்யப்பட்ட விசாரத்தால், இரண்டாவது கோடியில் விஶேஷித்திருக்கும் குணவைஶிஷ்ட்யம்மாத்ர முண்டு என்பது இல்லை; மூன்றாவது கோடியில் சொல்லியிருக்கிறபடி ஒரு ஆகாரவிஶேஷமு முண்டு என்று ஸித்தாந்திதமாயிற்று.

ஆனால், ‘ஆகாரவிஶேஷ மிருக்கும் பக்ஷத்தில், அது தேஶ பரிச்சிந்நமாக இருக்கவேண்டுமே! கண், காது, கை, கால் முதலிய



இந்த்ரியங்கள் இருந்தால், அப்படி இந்த்ரியங்களுடன் கூடிய ஶரீரம் ஓரிடத்தில்தானே இருக்கக்கூடும்! அவ்விதமாகப் பரமாத்மா ஓரிடத்திலிருக்கிறான், மற்றோரிடத்தி லில்லை என்கிற வ்யவஹாரம் ஶாஸ்த்ர ஸம்மதமன்றோ! இவ்விதமான பரிச்சேதம் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்துக்குக் கூடுமோ?’ என்று கேட்கலாம். ஸர்வ வ்யாபியாக இருக்கும் பகவானுக்குப் பரிச்சேதத்தை ஒப்புக்கொள்வது ந்யாய்யமன்றுதான். பரப்ரஹ்மத்தின் ஸர்வ வ்யாபித்வத்தையும் தேஶ பரிச்சிந்ந விக்ரஹ வைஶிஷ்ட்யத்தையும் அங்கீகரிக்கும் ஆசார்யர்களின் திருவுள்ளம் பின்வருமாறு உள்ளது. ‘நாம் ஒப்புக்கொள்ளும் விக்ரஹம் பகவானால் தன் இச்சைப்படிக்கு அந்தந்தக்காலங்களில் க்ரஹிக்கப்பட்டுள்ளது [“இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:”]; ஶங்க சக்ர கதாதரமாகவும் சதுர்ப்புஜமாகவுமிருக்கும் ரூபம் அப்படி க்ரஹிக்கப்பட்டவைகளி லொன்று; ஆனால், நித்யேச்சையால் க்ரஹிக்கப்பட்டதானபடியால், இந்த விக்ரஹம் நித்யமாக இருக்கின்றது. [அதாவது - பகவானுடைய இச்சை இருவகைப்பட்டது:—நித்யேச்சை, அநித்யேச்சை. நித்யேச்சா ஸித்தங்களெல்லாம் நித்யங்கள், அநித்யேச்சாஸித்தங்களெல்லாம் அநித்யங்கள்.] பரிச்சிந்ந விக்ரஹ வைஶிஷ்ட்யமும் ஸர்வ வ்யாபித்வமும் பரஸ்பர விருத்தமான தர்மங்களானாலும், அப்படிப்பட்ட விக்ரஹத்தை க்ரஹிப்பது அவனது ஸர்வ வ்யாபித்வத்துக்கு விருத்தமென்று சொல்லமுடியாது. ப்ருஹதாரண்யகத்திற் சொல்லியிருக்கிறபடி பரப்ரஹ்மம் உப்புக்கட்டிபோல முழுவதும் [உள்ளிலும் வெளியிலும்] விஜ்ஞாநகநமானாலும், அந்தப் பரப்ரஹ்மம், லீலார்த்தமாகவும், பக்தர்களை அநுக்ரஹிக்கவும், அவர்களுடைய போகத்தை வ்ருத்திசெய்யவும் விவிதமான ரூபங்களை அப்பொழுதைக்கப்பொழுது எடுத்துக் கொள்ளுகிறது. அப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட விக்ரஹத்தைப்பற்றித்தான் ஶ்ருதியும் பாஞ்சராத்ரம் முதலியவைகளும் பேசுகின்றன.’

‘இந்த விக்ரஹம் இப்படித் தன் இச்சையால் க்ருஹீதமன்று; தன்னுடைய இச்சைக்கு வஶமன்றியில் அநுவாகவே ஏற்பட்டது; அந்த விக்ரஹமன்றியில் பரமாத்மா இருப்பது ஸாத்ய

மில்லை; அந்தவிக்ரஹ மிருக்குமிடத்தில்தான் பரமாத்மாவினுடைய ஸாந்நித்யம்: மற்றஇடத்தில் அந்த ஸாந்நித்யமில்லை’ என்று நமது ஸித்தாந்தம் சொல்லவில்லை. புராணங்களில் மஹர்ஷிகளும், பாசுரங்களில் ஆழ்வாராதிகளும், ஸ்தோத்ர ஜாலங்களில் ஆசார்யர்களும், வர்ணிக்கும் விக்ரஹம், இம்மாதிரி பரமாத்மாவால் தன் ஸங்கல்பத்தால் ஒரு கார்யார்த்தமாக எடுத்துக்கொள்ளப்பட்ட விக்ரஹமே இந்த அர்த்தத்தைத்தான், ஸ்ரீ பாஷ்யகாருடையதான இந்த வாக்யம் விவரிக்கின்றது; “தஷெவாவா ஸகாநாஜொமெண தத்தத் திவதுூநாரூவஸஂஷூாநஂகரொதி ஸவாரகாரூணூவஸளஶீஶுவாதுூளஷாயஜஶநியிஃ நிரஸநிவிஶஹெமயமொாஃவஷதவாவா வாஶாதா வாஂ வ்யூஹ நாராயணஃ” [ஸ்ரீ பாஷ்யம், க - க - உ௰௧]. [அளவற்ற கருணை முதலிய குணங்களுடன் கூடிய பரமாத்மா, தன்னுடைய அநந்த குணகண நிதியாக இருக்கும் திவ்யரூபத்தை, உபாஸகர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு, அவரவர்களுடைய ப்ரதிபத்திக்கு அநுரூபமான ஸம்ஸ்தாநங்களுடன் கூடியதாகச் செய்கிறான்]. கடோபநிஷத்தில், “அஂமஷ்ஶாதூஃ வாஷொ ஶயூ ஞாதநி திஷதி” - [நிகில சேதநா சேதநங்களுக்கும் ஈஶ்வரனை இருக்கும் புருஷன் உபாஸகனது ஶரீரத்தின் மத்யத்தில் அங்குஷ்டபரிமாணமுள்ளவனாக இருக்கிறான்] என்கிற வாக்யத்திற் சொல்லப்பட்டிருக்கும் ஆகாரமும் உபாஸகனுடைய அநுக்ரஹத்திற்காகவே எடுத்துக்கொள்ளப்பட்ட ஶரீரம்.

தவிரவும், ‘புண்டரீகாக்ஷனென்றும், சதுர்ப்புஜனென்றும், அங்குஷ்டமாத்ரனென்றும், பலவிதமாக வர்ணிக்கப்பட்டிருக்கும் ரூபங்கள், சிற்சில காரணங்களுக்காக க்ரஹிக்கப்பட்ட ரூபங்கள்; அபஹத பாப்மத்வாதி விஶிஷ்டமாகவும் அநந்த குணகணநிதியாகவுமிருக்கும் சைதந்யம்தான் பரமாத்மாவின் ஸ்வாபாவிகமான திவ்யரூபம்’ என்பதை மற்றொரு ஹேதுவினாலும் நாம் ஊஹிக்கலாம். ப்ரஹ்ம ஸூத்ரம் 4 - வது அத்யாயம், 4 - வது பாதத்தில் முக்தனுடைய ப்ரஹ்மாநுபவ ப்ரகாரம் சிந்திக்கப்படு மிடத்



தஷா விதாஶ வாணூவாவெ விய‍ூய நிரஂஜநஃ வாஶ
தில் “ தஷா விதாஶ வாணூவாவெ விய‍ூய நிரஂஜநஃ வாஶ ஶஂ ஸாஶூஶ‍ெவெதி” என்கிற ஶ்ருதிப்படி முக்தனுக்குப் பரப்ர
ஹ்மத்துடன் பரமஸாம்யத்தை உபபாதித்துவிட்டு, முக்தனுக்குத்
தேஹேந்த்ரியங்களுண்டோ வென்று ஆக்ஷேபித்துக்கொண்டு,
‘தன்னுடைய ஸங்கல்ப மாத்ரத்தாலே ஶரீரமிருக்கலாம்; இல்லா
மலு மிருக்கலாம்’ என்பதைத் தன்மதமாக ஸ்ரீ வ்யாஸபகவாந்
“உபயவியஂ வாஷராயணொாஃதஃ” [ச - ச - ௰உ] என்கிற
ஸூத்ரத்தில் அருளிச்செய்திருக்கிறார். அவருடைய தாத்பர்யம்
என்னவென்றால் - ‘பரம ஸாம்யமாகிற அபஹதபாப்மத்வாதி
விஶிஷ்டமான சைதந்யத்தன்மையுட னிருந்தாலு மிருக்கலாம்;
இச்சையிருந்தால் எவ்விதமான ஶரீரத்தையும் எடுத்துக்கொள்ள
லாம்; எப்படியானால் பரமபுருஷன் தன் லீலார்த்தமாக அபிமத
மான ரூபங்களை எடுத்துக்கொள்ளுகிறானே, தஶரத வஸுதே
வாதி பித்ருலோகாதிகளைத் தனக்கு ஸ்ருஷ்டித்துக்கொண்டு
அவர்களுடன்கூட மநுஷ்ய தர்ம லீலா ரஸத்தை அநுபவிக்கிறானே, அப்படியே முக்தர்களும் அபிமதமான ரூபங்களை எடுத்
துக்கொள்வதும், தங்களுடைய லீலைக்காகப் பித்ருலோகாதிகளை
ஸ்ருஷ்டித்துக் கொள்வதும் அநுபபந்நமன்று’ என்பது தான்.
ஆகையால், பரப்ரஹ்மத்தின் ஶரீரமோ, அந்த ப்ரஹ்மத்துடன்
பரம ஸாம்யத்தை அடைகிறவர்களின் ஶரீரமோ, எல்லாம் இச்சை
யால் க்ரஹிக்கப்படுகிறவைகள்; ஸ்வபாவ ஸித்தமான ரூபம் அப
ஹத பாப்மத்வாதி விஶிஷ்ட சைதந்யந்தான் என்பது வ்யக்தம்.
இந்தக் காரணத்தினாலேயே பரமஸாம்யமாகிற முக்த போகங்களை
வ்யவஹரிக்குமிடங்கள் எல்லாவற்றிலும், ஸ்ரீ பாஷ்யகாரர் “ஸ்வ
யாயாதூூநாஹவாஶூவாநவயிகாதிஶயாநஂஷஂ” [ஸ்ரீ பா
ஷ்யம், ச - ச - உ௰உ] என்றே வ்யவஹரிக்கிறார். ஸ்ரீ வ்யாஸ
பகவானும், ப்ரத்யகாத்மாவுக்குப் பரமாத்மாவுடன் பரமஸாம்யமா
கிற முக்த தஶையை விவரிக்குமிடத்தில் ஶரீரத்தின் உத்பத்தி
யைப்பற்றி ஒன்றும் சொல்லாமல், தன் ஸ்வரூபாவிர்ப்பாவத்தையே
ப்ரத்யகாத்மாவின் முக்ததஶை யென்று “ஸஂவஷூாவிஹூாவஃ

ஸ்வேந ஶப்தாத்" [௪ - ௪ - ௧.] என்கிற ஸூத்ரத்தில் விவரித்திருக்கிறார். அபஹத பாப்மத்வாதி விஶிஷ்ட சைதந்யமே ப்ரத்யகாத்மாவின் ஸ்வரூபமென்று ஶ்ருதி சொல்லுகிறபடியால், இப்படிப்பட்ட ஶரீரம் ஸ்வரூபத்தில் அந்தர்ப்பூதமென்று சொல்வதும் ஸாத்யமில்லை. ஆகையினால், இம்மாதிரியான ரூபங்களெல்லாம் இச்சையால் க்ரஹிக்கப்படுகிறவைகளென்று நாம் அறியவேணும் 'அப்படி க்ரஹிக்கப்படும் ரூபம் மித்யையன்று; எப்பொழுதிலும், எந்த இடத்திலும், எம்மாதிரியாகவும் அந்த ரூபக்ரஹணம் நேர்ந்தாலும், அது யதார்த்தமே; ஸதா அப்ராக்ருதமே' என்பது நமது ஸித்தாந்தம்.

இதன் ஸங்க்ரஹம்:—

(1) அபஹத பாப்மத்வம் முதலான குணங்களுடன் கூடியிருக்கும் சைதந்யம் தான் பகவானுடைய ஸ்வரூபம்; அது உஜ்வலமான தேஜஸ்ஸுடன் கூடியது;

(2) உபாஸகர்களை அநுக்ரஹிப்பது முதலான கார்யார்த்தமாக இச்சை மாத்ரத்தாலே அந்தப் பகவாந் அநேக விதமான தேஹங்களை எடுத்துக்கொள்ளுகிறான்;

(3) திவ்யாயுதாதிவிஶிஷ்ட திவ்ய மங்கள விக்ரஹமென்பது இப்படி க்ரஹிக்கப்பட்ட தேஹங்களிலொன்று; ஆனால் அது நித்யேச்சையால் உண்டானது, நித்யமாக இருக்கின்றது;

(4) இப்படி ஒரு விதமான விக்ரஹம் பகவானுக்கு உண்டு என்று நாம் ஒப்புக்கொள்வதற்கு ஆதாரம்-ஶ்ருதி வாக்யங்களும், அவைகளை அநுஸரித்திருக்கும் பாஞ்சராத்ர ஆகமமுமே;

(5) விக்ரஹ வைஶிஷ்ட்யத்தை நிஷேதிக்கும் ஶ்ருதி வாக்யமெல்லாம் ப்ராக்ருத விக்ரஹ மில்லை யென்று தான் சொல்லுகின்றன;

(6) பகவான் க்ரஹிக்கும் விக்ரஹமெல்லாம் யதார்த்தம், அப்ராக்ருதம், பொய்யன்று.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

# திராவிடவேத தாத்பரியம்.

(தொடர்ச்சி.)

29. ஏழாம் பத்தில் இப்படி பிரபத்திபண்ணின பிற்பாடும் உடனே மோக்ஷம் உண்டாகாமையால் ஆழ்வார் வியஸநமடைந்து "கடல்ஞாலம் காக்கின்ற மின்னுநேமி" என்று VII. 1-ல் தாயாரைப்பார்த்துக் குழந்தை முறையிட்டுக் கூப்பிடுவது போலக் கூப்பிட,—"கூராராழி வெண்சங்கு ஏந்திவாராய்"—என்று இவர் ஆசைப்பட்டபடியே எம்பெருமான் "வெள்ளைச் சுரி சங்கொடு ஆழி ஏந்தி"—[சங்கசக்ரகதாபாணியாய்] இவருக்கு ப்ரத்யக்ஷ ஸமாநமாய்த் தன்னைக்காட்ட, VII. 4-லும், ஹநுமானை ராமன் பட்டாபிஷேகத்துக்குப் பிற்பாடு 'உமக்கு என்னவேண்டும்?' என்று கேட்க, "ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித: । பக்திஶ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி" [ராமனிடத்தில் எனக்கு ஸ்நேஹமும் பக்தியும் நன்றாய் ஊன்றி நிலைத்திருக்கிறது; என்மனஸ் மோக்ஷமாகிற பரமபதத்திலும் இதர அவதாராநுபவத்திலும் கூடச் செல்லாது] என்று சொன்னதுபோல, VII. 5-ல் "கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" என்று எம்பெருமானை ஜ்ஞாநத்தால் அநுபவித்து வெளிப்படையான கலவி கிடைக்கவில்லை யென்று வ்யஸநமடைந்தார்.

30. எட்டாம் பத்தில் "பக்தர்கள் உகந்த ரூபமே உனக்கு ரூபமாய் உன்னிடத்தில் அன்பை யுடையவர்கள் இட்டவழக்காயிருக்கிறு யென்கிற அறிவால் நான் தரித்திருக்கிறேன்; அதுவும் பொய்யோ? என்று இப்போது சங்கிக்கிறேன்" என "உமருகந்துகந்தவுருவம் நின்னுருவமாகி + உன்மாயை யறிவு ஒன்றும் சங்கிப்பன்" என்று சங்கித்துத் தெளிந்து "வணங்குமாறு அறியேன்" என்று VIII. 1-லும், 'ஆனால் எனக்கு

இவ்வுலகில் ஏதாவது நசையுண்டோ வென்று அவன் சங்கிக்கிறானோ, அதனால்தான் இன்னம் பகவானை அடையவில்லையோ? என்று தமக்கு நசை யாதொன்றிலு மில்லை' என்று VIII. 2-ல், "என் நெஞ்சு, என்னைவிட்டு நீங்கி உன்மலர்ப்பாத மடைந்தது" என்றார். பகவானுக்கு இவரை அடையும் விஷயத்தில் இவரைவிட விடாய் அதிகமாய் இவருடன்வந்து ஸம்ச்லேஷித்தான். அவனுடைய ப்ரேமத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு, லங்கையில் ஸீதாபிராட்டி ஹநுமான் சொன்ன ராமகதையையும் சரித்திரத்தையும் இவனுக்குமேல் அவசரப்பட்டுக்கொண்டு அவர் வருவதையும் கேட்டு, 'இந்நிலத்தில் நடக்கத்தகுந்த காரியமா? இது சித்தமோஹத்தால் வந்ததோ? (மனக்கலக்கமோ)? வாதகதியோ? பித்த விகாரமோ? கானலை ஜலமாகப்பிரமிக்கும் மிருகத்ருஷ்ணிகையோ?' என்று சங்கிக்க, ஹநுமான் நேரில் வார்த்தை சொல்லித் திருப்தியாகித் தெளிந்ததுபோல ["ஸம்ஹ்ருதே வ யதாஸ்வாக்ஷம்; கிந்நுஸ்யாச்சித்தமோஹோயம் பவேத்வாதகதிஸ்த்வியம் । உந்மாதஜோ விகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா".] ஆழ்வாரும், இந்தக் கலவியின் ரஸத்தை VIII. 7 - ல் "மருள்தானீதோ மாயமயக்கு மயக்கே - மாயமயக்குமயக்கால்" என்று இது ப்ரஹ்மஸ்வப்நமோ? என்று சங்கித்துத் தெளிந்து ப்ரீதராய், அவனது ஆச்ரித பாரதந்திரியத்தையும் நீர்மையையும் அநுஸந்தித்து "மற்றொன்றும் யான் அறியேன், வெறிதே யருள்செய்தார்" என்று ஆச்சரியப்பட்டார்.

31. ஒன்பதாம் பத்தில் இப்படி மாறிமாறிக் கலவியில் ஆநந்தத்தையும் பிரிவில் வியஸனத்தையும் பார்த்து— 'நான் நாராயணன், ஸர்வ சக்தியுக்தன், உமக்கு ஸர்வவிதபந்து, உம்முடைய அபேக்ஷிதப்படி செய்கிறேன்' என்று IX. 3 - ல் தன் நித்யமான ஸம்பந்தத்தை ஸ்பஷ்டமாகத் தெரிவித்து, IX. 10 - ல் 'நான் உம்மைத்தேடிக்கொண்டு மோக்ஷத்தைக் கொடுக்க வந்துகொண்டிருக்கின்றேன்' என்று "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்," "சீலமெல்லையிலான்" என்று திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கு மிருப்பில் மோக்ஷப்ரதத்வத்தைக் காட்டிக் கொடுத்தான். வேதாந்தங்களிற் சொன்ன கர்ம ஜ்ஞாநயோகத்தை அங்கமாகவுடைய பக்தி யோகத்தை அநுஷ்டித்த ஒருவ



னுக்குப் ப்ராரப்த கர்மத்தால் இன்னும் ஏதாவது ஜன்மம் இருந்தால் அது ஆனபிற்பாடுதான் மோக்ஷம்; இந்தப்பிரபத்தியோகநிஷ்டராய் ஆழ்வாரைப்போலப் பக்தியுள்ளவர்களுக்கு ப்ராரப்த கர்மம்கூடத் தடுக்காது; 'மரணமானால் வைகுந்தம்' என்று உபதேசிக்கப்படுகிறது.

32. பத்தாம் பத்தில் எம்பெருமான் ஆழ்வாருடைய ஆற்றாமையைக் கண்டு இவருக்கு அர்ச்சிராதிகதியை X. 9 - ல் காண்பித்து, "முனியே நான்முகனே" என்னும் 10 - ம் திருவாய்மொழியில் "அவாவற்று வீடுபெற்ற சடகோபன்" என்று மோக்ஷத்தைக் கொடுத்தான்.

---

முதலிற் சொன்ன பிரகாரமாய் அர்த்த பஞ்சகத்தைப்பற்றிச் சொல்லும்போது அநேகம் திருவாய்மொழிகளிலும், இந்த இரண்டாவது பிரகாரத்தில் அநேகம் திருவாய்மொழிகளிலும், ஆழ்வார் பகவதநுபவம் பண்ணினதைச் சொன்னோம். "ப்ரேமத்தில் பெண்பேச்சு" என்று சொல்லுகிற தாய், தோழி, மகள் என்ற மூன்று அவஸ்தைகளைச் சொல்லும் திருவாய்மொழிகளிலே ஆழ்வார் அநுபவத்தையும், அதன் உள் ரஹஸ்யார்த்தத்தையும், அர்ச்சாவதார விஷயத்தில் சில திருப்பதிகளிலே சிலகுணத்தை அநுபவித்த க்ரமத்தையும், சுருக்கமாய்ச்சொல்லி இத்திராவிட வேததாத்பரியத்தை முடிப்போம்.

## நாயகி அவஸ்தை.

33. பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் - மாதா, புத்ரி; ஆண்டான், அடிமை; ஸ்வாமி, சொத்து; என்று அநேகவித ஸம்பந்தம் இருப்பதாகச் சொல்வது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். பர்த்தா பாரியை என்கிற ஸம்பந்தம் எல்லாவற்றையும்விடத் தெளிவாக அதைக்காண்பிக்கிறது. அநேக பிரகாரத்தால், பரிசுத்த ஜீவாத்ம ஸ்வரூபத்தை நாயகியாகச் சொல்லலாம். 'பகவான்தவிர இன்னுமொரு வஸ்துவுக்குச் சேஷப்பட்டதன்று' என்கிற அநந்யார்ஹ சேஷத்வத்தாலும், 'நமக்கு அவன்தவிர வேறு உபாயமில்லை' என்கிற அறிவாலும், அவனோடு கலவியிலே தரித்தும் அவன் பிரிவில் தரியாமலும் இருக்கும் ஸ்வபாவத்தாலும், 'அவன்தவிர வேறு ஒன்றில் போக்ய

மில்லை' என்கிற அநந்யபோக்யத்வத்தாலும், இப்படி அநேக ப்ரகாரத்தால் சுத்த ஜீவாத்ம ஸ்வரூபத்துக்கு லக்ஷ்மியோடு ஸாம்யம் [ஒப்பு] சொல்வதுண்டு.

34. பகவானைப் ப்ரத்யக்ஷ ஸமாநமாக அநுபவிப்பதற்கு 'கலவி' அல்லது 'ஸம்ச்லேஷம்' என்று பெயர். ஆழ்வாருக்கு "ஞானத்தில் தன்பேச்சு". இப்படி அநுபவிக்கும்போது இந்தத் தேகத்துடன் வெளிப்படையாக அநுபவிக்க வேண்டுமென்கிற பாஹ்ய ஸம்ச்லேஷத்தை ஆசைப்பட்டு அது கிடையாமல் தாம் முன்பு ஜ்ஞாந ஸாக்ஷாத்காரமாய் அநுபவித்ததற்குக்கூட ஒரு கலக்கம் வந்துவிடுகிறது; இந்தக்கலக்கம் வந்தால் ஆழ்வார் நாயகியவஸ்தை அடைவர். "ப்ரேமத்தில் பெண் பேச்சு":—நாயகனாகிற புருஷனைப் பிரிந்து அப்பிரிவால் ஆற்றாமை தோன்றும்படி ஆழ்வார் பேசுவர். மேற்சொன்ன கலக்கத்துக்கு 'பிரிவு' அல்லது 'விச்லேஷம்' என்று பெயர். 1-4 திருவாய்மொழியில் ("அஞ்சிறைய மட நாராய்") ஆழ்வார் இந்த அவஸ்தை யடைந்தார். அதாவது - மேற்சொன்ன பாஹ்ய ஸம்ச்லேஷத்தை ஆசைப்பட்டுக் கிடையாமல் இப்படிப்பட்ட பிரிவால் மிக்க ஆற்றாமையை அடைந்தார். பகவத் வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்துக் குலமர்யாதையை ஆராயாமலே அந்த அநுபவம் கிடைப்பதற்குத் தாமஸமாகிறது என்பதைப் பொறுக்காமல் கிட்டி அநுபவித்தல்லது தரியாதபடி யிருக்கிற ப்ராப்யத்வரையாகிற தசைதான், நாயகிதசை. இப்படிப்பட்ட நாயகியாகிற புத்திரியாய் 17 திருவாய்மொழிகளிலும் [170 பாட்டுக்கள்], ஸகி அல்லது தோழியாய் 3 திருவாய் மொழிகளிலும் [30 பாட்டுக்கள்], தாயாகி 7 திருவாய்மொழிகளிலும் [70 பாட்டுக்கள்], பேசியிருக்கிறார். இப்படி திருவாய்மொழி 1100 பாட்டுக்களில், 300 பாட்டுக்கள், பெண் பேச்சாயிருக்கின்றன. அவனே உபாயம் என்றிருக்கும் த்ருடமான முழு நம்பிக்கை குறைந்திருப்பதுபோல, புத்ரி இப்படிப் பொறாமல் அவஸரப்படுதலால் தோன்றும்; இப்படி அவஸரப்படுதற்குக்காரணம், அவனை அடைய வேண்டுமென்கிற ருசியும் ஆஸ்தையுமே தவிர வேறில்லை.

35. இந்தத் தசையில், தூது விடுதல், ஒரு அவஸ்தை: ஆழ்வார் நான்கு திருவாய்மொழிகளில் தூது விடுகிறார்.



(1) I-4-ல் "அஞ்சிறை"யில் "அடலாழி யம்மானைக் கண்டக்கால்" என்று க்ஷீராப்தி நாதனுக்கு "என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" [நான் என்னதப்பிதம் செய்தேன்? திருவடி பொறுக்கக்கூடாதது என்ன இருக்கிறது?] என்று அபராத ஸஹத்வத்தை, அநுஸந்தித்து, 'அவனைக்கூப்பிடுங்கள்' என்று அநேகவிதமான பக்ஷிகளைத் தூதுவிட்டு அவனுக்குத் தெரிவித்தார்.

(2) VI. "வைகல் பூங்கழிவாய்" என்னும் 10 பாட்டில் "சிறந்த செல்வமல்கும்" என்று அவன் தன்னுடைய ஐசுவரியத்தில் என்னை மறந்திருக்கிறானோ என்னவோ? "மாறில்போரரக்கன் மதிள் நீறெழ - சேவகனார்க்கு என்னையு முளள் என்மின்." [பிராட்டி நிமித்தமாக, ராவணனைத் தூளாக்கின ஏகவீரனுக்கு ரக்ஷகம் செய்ய நானும் ஒருத்தி இருக்கிறேன் என்று சொல்] என்பதால், ஆர்த்தரக்ஷணம் என்பதை ஜ்ஞாபகப்படுத்தும்படி ஆர்த்தரக்ஷக குணாநுஸந்தாநம்செய்துகொண்டு விபவமாகிற மநுஷ்யாவதாரத்தில தூது.

(3) VIII. 1 "பொன்னுலகாளி"யில் "வானவர்கோனை எங்குச் சென்றாகிலும் கண்டு" என்று பரத்வத்திலும், அந்தர்யாமித்வத்திலும் தூது. "முன்னுலகங்களெல்லாம் படைத்த" என்றதில் ஜகத்ரக்ஷணையில் மனஸ் சென்று ஆச்ரிதரோடு ஒரு நீராக [ஒரே ரஸமாக] அநுபவிப்பவன் என்னும் ஐகரஸ்யமாகிய குணத்தை ஜ்ஞாபகப்படுத்த, மூன்றாந்தூது.

(4) IX "எங்கானல்" என்னும் திருவாய்மொழியில் "திருமூழிக்களத்தார்க்கு" என்பதால், அர்ச்சாவதாரத்தில், தூது. "செக்கமலத் தலர்போலும் கண் கை கால் செங்கனிவாய், அக்கமலத்திலைபோலும் திருமேனி அடிகளுக்குத் தக்கிலமே" 'அவன் வடிவழகைப் பிரிந்தவர் தரியார்' என்றும், அந்த ஸௌந்தர்யத்தையும் பிரிந்து நாங்கள் படுகிற பாட்டைத் தெரிவித்தால் வருவன் என்றும் நாலாந் தூது.

நாரை குருகு கிளி அன்னம் இப்படிப்பட்ட அநேக பட்சிகளைத் தூதாக நாயகி அனுப்பினாள்; இப்பட்சிகள், ஸ்வாபதேசத்தில் [வேதாந்த உள் அர்த்ததில்] ஆசாரியர்களைக் குறிக்கின்றன. ஜ்ஞான கர்மங்கள் - பக்ஷிகளின் பக்ஷங்கள், நாரை-சுத்தவெளுப்பு.

உத்தமான ஜ்ஞானத்தையுடையராய், குயிலைப்போல மதுரபாஷியராய், அன்னத்தைப்போல ஸாராஸார விவேகத்தை யுடையவராய், கிளியைப்போலப் பேசினதே பேசும்படியான [அதாவது-தாம் ஸர்வஜ்ஞராகிலும் பூர்வம் ஆசார்யனிடத்தில் தாம் கேட்ட வார்த்தையல்லது அருளிச்செய்யாமல் இருக்கும்படியானவர்களாய் ஆசாரியர்கள் இருக்கவேண்டும். இதனால, ஜ்ஞானம் அநுஷ்டானம் இரண்டும் சேர்ந்திருக்கும் ஆசார்யனை யடைந்து, ஸேவைசெய்து, பகவத் பாகவத கைங்கரியத்தில் நிலைநின்றிருக்கவேண்டுமென்று] பிறது. இவ்விஷயத்தில் ஒவ்வொன்றின் ரஹஸ்ய அர்த்தத்தை விவரித்தால் மிகவும் விஸ்தாரமாய்விடும். நாயகி இப்படி நாலு அவஸ்தையில் தூதுவிட்டாள்.

## நாயகியின் வேறு சில அவஸ்தைகள்.

36. (1) II-1 திருவாய்மொழியில் தூது விடக்கூட க்ஷமையில்லாமல், கண்ணுற் கண்ட பதார்த்தங்கள் எல்லாம் அதன் அதன் இயல்பிலிருக்க [நாரை வெளுத்திருக்கையும் கடல் இரைகிறதும் மேகம் மழைபெய்வதும் இயல்பாயிருக்க], அவைகள் பகவானைப் பிரிந்து வியஸனப்பட்டு அத்தசையை அடைந்ததுபோல எண்ணிக்கொண்டும்—"நீயும் திருமாலால நெஞ்சம் கோட்பட்டாயே", "யாமுற்றது உற்றாயோ" என்று அவைகளுக்கும் தாம் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ஆற்றாமையைக் காண்பித்தார்.

(2) நாயகனைப்பிரிந்து கூப்பிட்டுவாராததால் ஆற்றாமை மிகுந்து 'அவனுக்கு வேண்டாத பதார்த்தம் எனக்கு வேண்டாம்' என்று IV 8-ல் "மணிமாயன் கவராத, நெஞ்சால், உடம்பினால், நிறத்தால், உயிரினால் குறைவிலமே" என்று, "[illegible] [illegible]" — [மஹாரதரான பெருமானைப்பிரிந்து ராக்ஷஸிகளின் நடுவே இருக்கிற எனக்குப் பிராணனாலும் பொருளாலும் பூஷணங்களாலும் யாதொரு பிரயோஜனமுமில்லை; இவையெல்லாம அவனுடைய உகப்புக்கேயல்லாமல் தனக்கானபோது அகங்கார ஸம்பந்தப்பட்டது விடவேண்டியது] என்று ஸூசிப்பித்துப் பிராட்டி சொன்னாற்போல, ஆழ்வார் "இவைகளால் குறைவிலமே" என்கிறார்.



(3) இன்னும் ஸ்திரீகளுக்கு ஸஹஜமான லஜ்ஜையையும் விட்டுப் பிறர், 'அவன் கடியன், கொடியன், அவன்மேல் ஆசைவையாதே' என்று சொன்னாற்கூட "அன்னை என் செய்யில் என் ஊர் என் செய்யில் என் என்னை யுமக்கு ஆசையில்லை அகப்பட்டேன் வல்லியுள்" என்றும், "கொடியனாகிலும் என்நெஞ்சம் அவன் என்றே கிடக்கும்" என்றும் V 3-ல் அவஸ்தைப்பட்டு, அவன் நம்மைக் கைவிட்டானே என்று தற்கொலைபுரியப் புக்க பின்னும், 'நான் அவனுக்கு ஆள்பட்டவன், பிராணனும் அவனுடையது' என்று "காகுத்தன் வாரானால் மாயும்வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்தேன்" என்று மிகவியஸநத்தை யடைந்தார்.

## ப்ரணய ரோஷம்.

37. இப்படி அநேக திருவாய்மொழிகளில் அவனை அடைய ஆற்றாமைப்பட்டு ப்ரேமத்தால் மனம்முறிந்து பிரணய ரோஷ கோபம் என்கிற தசையை யடைந்து அவன் வந்தால்கூட அவனையும் "என்னுடைய பந்தும் கழலும் தந்துபோகு நம்பீ", "கழகமேறேல்" என்று கோபிப்பன். மிக்கபிரேமத்தால் இப்படிக்கோபிக்கும் தசை ஒன்று உண்டு — "[illegible] [illegible] [illegible] [illegible]" ॥ "[illegible] [illegible] [illegible]" [ஸ்ரீராமன் காட்டுக்குப் போகுங்காலத்தில் 'அவரைவிட்டு இரேன்' என்று சொன்ன பிராட்டிக்கு, கேவலம்ப்ரேமமே. தலையெடுத்து ராமனைக் கோபத்துடன் மரியாதை யில்லாமல் 'என் ஒருத்தியையும் காப்பாற்ற மாட்டாமையாலோ இங்கு வைத்துவிட்டுப் போகிறீர்? என்பிதா இதைக்கேட்கில் மிகவும் வெறுப்பர்; 'ஒரு ஸ்திரீ ஆண் உடையுடுத்து என்புத்ரியைக் கைக்கொண்டு போனான்' என்று அவர் எண்ணாமலிருக்கும்படி என்னைக் கூட அழைத்துக்கொண்டுபோம். பிறர் உயர்த்திகண்டால் பொறுக்கவேண்டாமோ? உம்முடன் வருவதால், எனக்குவரும் மேன்மையைக் கண்டு பொறுக்கக்கூடாத கோபம் அஸூயை முதலானவற்றை விடும்'] என்று ஸீதாபிராட்டி தன்னுடைய ஸ்நேஹத்தாலும் ப்ரீதியாலும் பிரிவாற்றாமையாலும் மேலிட்டுக் கோபத்துடன் வார்த்தை சொன்னாள்;

ஸ்ரீகிருஷ்ண சரிதத்தில், கிருஷ்ணன் கோகுலத்தைவிட்டபிறகு மறுபடி அவர் பிரிவில் கோபிகள் விஸனமடைந்து ஆற்றாமை அதிகரித்து "க்ருஷ்ணஸம்ஸ்ரயஸ்கதை:" "அலமாகின தோர்ஷ்யெக:" [கிருஷ்ணனைப்பற்றி இக்தப்பிதற்றல் எதற்கு? கிடக்கட்டும். அவன் பேச்சு என்ன? நமக்கு வேண்டாம்; வேறுபேச்சுப்பேசலாம்] என்று சொல்லும்படி மனம்முறிந்தது போலவும் ஆழ்வாருக்குப் பிரணயரோஷம் VI. 2 - ல் தலையெடுத்தது.

## தாய்.

38. நாயகி இப்படி அவனுடைய அழகிலும் குணத்திலும் ஈடுபட்டுப் பிரிவில் தரிக்கமுடியாமல் ஆற்றாமையிலிருக்குமிருப்பு அவனே உபாயம் என்றிருக்கும் த்ருடமான முழுநம்பிக்கைக்கு விரோதம்போலத் தோற்றுகிறபடியால், அந்தநம்பிக்கையைக் குறிக்கும் தாய்பேச்சால், ஆழ்வார் சில இடங்களில் பேசுகிறார்; இந்த உபாய ஜ்ஞானந்தான் புத்ரியின் அவஸாதத்துக்கும் துடிப்புக்கும் முதற்காரணமானதால் இந்த தசைக்கு, 'தாய்' என்றுசொல்வது ந்யாயம்;—ஏழு திருவாய்மொழிகளில் தாய் அவஸ்தை தெரிகிறது; அதில் இரண்டைச்சொல்வோம்.

i VII. 2 - "கங்குலும் பகலும் கண்துயிலறியாள், கண்ணநீர் கைகளால் இறைக்கும், சங்குசக்கரங்களென்று கைகூப்பும்; இவள் திறத்தில் என்செய்யப்போகிறீர்?" [உம்முடைய கிருபையொழிய வேறேவழியில்லை; இப்படி இவளைத் துடிக்க விடலாமா? என் பெண் இப்படி யிருக்கிறளே! நீர் ரக்ஷிக்கவேண்டாமா?] என்று ஸ்ரீரங்கநாதனிடத்தில். கொண்டுவந்துவிடுகிறாள்.

ii. VI. 6 - திருவாய்மொழியில் புத்ரிக்கு ஆற்றாமை மிகுந்து ஆத்மாவைத் தரிக்கமுடியாமல், ஆத்மதாரணத்தின் பொருட்டு கோபிகளைப்போல அவன்செய்த செயல்களையும் அவனுடைய ஜகத் ஸ்ருஷ்டி முதலான வியாபாரத்தையும் நினைத்து, அவைகளைத் தான் செய்கிற மாதிரியாகப் பாவித்துச்சொல்லி அநுகரித்து அந்த ஜ்ஞாபகத்தாலாவது தரிக்கப் பார்க்கிறாள். கிருஷ்ணசரிதத்தில் அவன்பிரிந்த பிற்பாடு பிரிவு பொறுக்காமல் "க்ருஷ்ணோஹமேதல் லலிதம் வ்ரஜாம்யாலோக்யதாம் கதி:" என்றும், "துஷ்டகாளிய திஷ்டாத்ர" என்றும் [ஒருகோபி நான் கிருஷ்ணன், இப்படி



நடக்கிறேன்பார்; எல்லாரும் பாருங்கள், எப்படி யிருக்கிறது?
ஒரு கோபி காளியனாகவும் ஒருத்தி கிருஷ்ணனாகவும் எண்ணிக்
கொண்டு, கிருஷ்ணன் செய்வதுபோல ஒருத்தி செய்யக் காளி
யன் படுப்பதுபோல ஒருத்திபடுக்க, ஒருத்தி தான் கிருஷ்ணனென்
றும் எண்ணிக்கொண்டு ஏறி ஆட, இன்னொருத்தி எதிரியாகிற
காளியனைப்போலவாவது தன்னை யெண்ணிக்கொண்டு கிருஷ்ண
ளுக ஆடுகிறவளின் கால்பொடிபட்டால் போதும் என்று நினைத்
துப் போதுபோக்குச் செய்துகொண்டு தரித்தாள்] அநுகரித்தது
போலப் புத்ரி அநுகரிக்கிறது தெரியாமல் பகவான்செயலைத் தன்
செயலாகச் சொல்வதால் எம்பெருமான் தன்புத்ரியினிடத்தில்
ஆவேசித்திருப்பதாக எண்ணி "கடல்ஞாலஞ் செய்தேனும்
யானே" என்றும், "ஈசன்வந்தேறக்கொலோ" என்றும் ஆழ்வார்
பேசுகிறார். இத்தசையில் தாய் கலங்கியிருக்கிறாள்.

## தோழி.

39. i. புத்ரி மோஹித்து மூர்ச்சைபோயிருக்குங் காலத்தில்,
[பகவானே உபாயம்] என்கிற நினைவும் கொஞ்சம் கலங்கியிருக்
குங் காலத்தில் பேய்பிடித்திருக்கிறதோ என்று தாய்கூடக் கலங்
கினாள். அப்போது தாயைப்பார்த்து 'இந்தப்புத்ரிக்குப் பேய்
பிடிக்கவில்லை; இந்த மந்திரவாதிகளும் வேண்டாம்; அவளுக்கு
நாராயணன் திருவடித் திருத்துழாயே மருந்து; பேய்க்கு உரிய
நிஷித்தபூஜைகள் செய்யக்கூடாது' என்று தோழிசொல்லுகிறாள்
(IV-6);

ii. 'இவள் அந்ய ஸம்பந்தம் ஸஹியாள்' என்றும், புத்ரி
தன் ஊரைவிட்டுத் தொலைவில்லிமங்கலத்துக்குப் போக, 'புத்ரி
யின்பேரில் உங்களுக்கு ஆசைவேண்டாம்; நீங்கள்தான் இந்த
ருசியை உண்டாக்கினீர்கள்' என்றும் தோழியானவள் தாயைப்
பார்த்து VI. 5 - ல் சொல்லுகிறாள்;

iii. புத்ரி திருப்புளியூர் எம்பெருமானை "திருவருள் மூழ்
கினள்" என்று பூர்ணமாய் அநுபவம் பண்ணி, அவ்வநுபவத்
துக்குப் பிற்பாடு, அவள் ஸ்வபாவத்திலும் பேச்சிலும் வேறு
பாடு தோற்ற, இதையறியாமல் தாயும் பிறரும் இவளை ஒருமனி
தனுக்குக் கல்யாணம் செய்ய யத்னிக்க 'இவள் புளியூர் எம்பெரு
மானுக்குத் தான் தகுந்தவள்' என்று VIII. 9 - ல் மணம்

விலக்கி 'இன்னொருவருக்கு சேஷப்பட்டவளல்லள்' என்னும் அநந்யார்ஹ சேஷத்வ தசையையும் தோழிபேச்சால் மூன்று திருவாய்மொழிகளில் பேசினார். தோழி - நாயகநாயகிகளைச்சேர்த்து வைக்குமவள்; ஈச்வரனோடு ஆத்மாவுக்குச் சொல்லப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வம் முதலான ஸம்பந்த ஜ்ஞாநமே, அவனோடு இவ்வாத்மா சேர்வதற்குக் காரணம்; அது, தோழியாக வ்யவஹரிக்கப்படும். இப்படி மூன்று தசைகளிலும் ஆழ்வார் பேசினார். இப்படி 27 - திருவாய்மொழிகளில் அநேகம் திருவாய்மொழிகளில் ஆழ்வார் அவஸ்தையைச் சுருக்கிச்சொன்னோம்.

## அர்ச்சாவதாரம்

40. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் பகவானுடைய அர்ச்சாவதார வைபவம் முக்கியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை முன்னமே ஸூசிப்பித்தோம். பகவான் ஐந்துவிதமாக ஸேவை ஸாதிக்கிறார். பரமபதத்தி லிருக்கு மிருப்பை 'பரத்வம்' என்றும், திருப்பாற்கடலி லிருக்கு மிருப்பை 'வ்யூஹம்' என்றும் சொல்வார்கள். பகவான் எல்லாவிடத்திலும் வியாபித்திருப்பதும் தவிர ஜ்ஞானிகளின் ஹ்ருதயத்திலும் ஸேவை ஸாதிப்பர்; இது, அந்தர்யாமித்வம். ராமக்ருஷ்ணாதி அவதாரரூபம், 'விபவம்.' ஐந்தாவது-திருப்பதிகளிலும் க்ருஹங்களிலும் க்ருபைகூர்ந்து எழுந்தருளுகிறது, 'அர்ச்சாவதாரம்.' வஸ்து ஒன்றாகையாலே, எல்லாவிடத்திலும் பூர்ணம்; நமக்கு எல்லாம் முக்கியம் தான். ஆனால், ஸௌலப்யம் முதலானவை நன்றாய்ப்பிரகாசிக்கு மிடம், அர்ச்சாவதாரம். பரத்வம், வ்யூஹம் இப்போது நேரில் கிடைக்க முடியாது: விஷயம்கண்டு பற்றவேணும் என்று ஆசைப்படுகிறவனுக்கு ஹ்ருதயத்தி லிருந்தாலும் கண்ணுக்கு விஷயமான அஷ்டாங்கயோக ரூபயத்நத்தாலே வேதாந்தங்களிற் சொன்ன பக்தியோகத்தை அநுஷ்டித்துக் காணவேண்டும் படியானது, 'அந்தர்யாமித்வம்.' தற்காலத்தில் ஆச்ரயிக்கும்படி யில்லாமலும் பிற்காலத்திலுள்ள நமக்குக் கிட்டாதபடியு முள்ளவை, ராமக்ருஷ்ணாதி அவதாரங்கள். இப்படியில்லாமல் அர்ச்சாவதாரம் யாரும் பற்றக்கூடியது; ஸம்ஸாரிகளுக்கும் அஜ்ஞாநிகளுக்கும் மாத்திரம் அல்ல: நித்யஸூரிகள் உள்பட எல்லாராலும் அவனுடைய ஸௌலப்யம், ஸௌசீல்யம், அபார ஸுஹ்ருத்வம் முதலான குணங்கள் அநு



பவிக்கத்தகுந்தவை. ஜ்ஞாநிகளுக்கு ஸௌலப்யம் முதலானவற்றைக் காண்பிப்பதல்லாமலும் ஸம்ஸாரிகளுக்குக்கூடப் பற்றுவதற்கு ஸுலபமானது; ஸம்ஸாரிகளும் ஞானிகளும் எல்லாரும் பற்றக்கூடியது அர்ச்சாவதாரம் என்று நமது ஸித்தாந்தம்.

## சில முக்கிய திருப்பதிகள்.

41. ஜ்ஞாநிகளில் தலைவரான ஆழ்வார் அநேக இடங்களில் ப்ரபத்தி பண்ணினதும், அர்ச்சாவதாரத்தில்தான். அவர் பாசுரங்களைக்கொண்டு பார்த்தால், ஒவ்வொரு திவ்யதேசத்தில் ஒவ்வொரு பகவத் குணத்தை ஆழ்வார் அநுபவித்ததாகத் தெரிகிறதென்று பூர்வாசாரியர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். இதில் மிகவும் முக்கியமான சிலவற்றைச் சொல்வோம்.

(1) ஸ்ரீரங்கத்தில், "இவள் திறத்தில் என் சிந்தித்தாய் என்கொலோமுடிகின்றது இவட்கு" [இவள்விஷயத்தில் என்ன செய்கிறது? இவள்காரியம் எப்படி முடிகிறது? எது நல்லது?] என்று திருப்பாற்கடலில் யோகநித்ரையில் சிந்தைசெய்கின்ற ஸௌஹார்த்தம் என்கிற குணம் பிரகாசிக்கும்.

2. திருவேங்கடம் என்று சொல்லப்படும் திருமலையில், "கண்ணாய் ஏழுலகுக்கு உயிராய்" [ஸர்வகாலமும் ஸர்வாத்மாக்களுக்கும் ஸர்வவித பந்துவாய் ஸர்வருக்கும் ஆத்மாவாய்] இருக்கிற அந்தர்யாமியினுடைய குணமான வாத்ஸல்யம், ஸகலருக்கும் கிழா யிருக்கிற "என்கண் பாசம் வைத்த நிகரில் புகழாய்" என்று (II 3 & VI 10)-ல் பிரகாசிக்கிறது.

3. IV 10-ல் ஸுலபனை அர்ச்சாவதார நிலையிலே பரத்வ லக்ஷணமான ஈச்வரத்வம், ஆழ்வார்திருநகரியில் பிரகாசிக்கிறது.

4. "வந்தருளி என் நெஞ்சிடம் கொண்ட, காரார் முகில் வண்ணன்" என்று, தோதாத்ரியென்கிற வாநமாமலையில் ஔதார்யம் பிரகாசிக்கிறது.

5. 'வேறு ஒரு ரக்ஷகமில்லை' என்று நம்பினவர்களை "நீராய் அலைந்துகரைய உருக்குகின்ற" ஆரா அமுதமான மாதுர்யம், கும்பகோணமென்னும் திருக்குடந்தையில் பிரகாசிக்கும்.

6 "சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான்" என்று திருக்கண்ணபுரத்தில், மோக்ஷப்ரதத்வகுணம் ப்ரகாசிக்கும்.

7. நித்ய ஸூரிகள், தேவதைகள், ஸம்ஸாரிகள் என்று வித்தியாஸம் பாராத ஸாம்யகுணம், அநந்தசயநம் என்கிற திருவநந்தபுரத்தில் வ்யக்தமாகத் தெரியும்.

இப்படி எல்லாத் திவ்விய தேசங்களிலு மிருக்கும் இருப்பை விவரித்தால், மிகவிஸ்தாரமாய்விடும். ஆகவே, அர்த்த பஞ்சகம் என்று சொல்லப்பட்ட பகவானுடையவும், ஜீவாத்மாவினுடையவும், மோக்ஷத்தினுடையவும், மோக்ஷவிரோதியினுடையவும், நாம் அநுஷ்டிக்க வேண்டிய மார்க்கத்தினுடையவும், ஸ்வரூபத்தை ஆழ்வார் உபதேசித்த கிரமத்தையும், முக்கியமான அநேக திருவாய்மொழிகளில் அவர் அநுபவித்த பகவத்குணத்தையும், 110 பாட்டுக்களடங்கிய ஒவ்வொருபத்தின் முக்கியார்த்தத்தையும், அர்ச்சாவதாரங்களில் ஆழ்வார் சில திவ்வியதேசங்களில் அநுபவித்த கிரமத்தையும், நாயகி யவஸ்தை அடைந்து, தாய், புத்ரி, தோழி, தூதுவிடுதல் என்னும் அவஸ்தைகளில் அவருடைய அநுபவத்தையும், அவற்றின் உள் அர்த்தங்களையும் இந்த வேதாந்ததீபிகையில் நாலு ஸஞ்சிகைகளில் சுருக்கமாகச்சொல்லி இந்தத் திராவிடவேத தாத்பரியம் முடிக்கப்பட்டது.

இதில், ஏதாவது ஒருவேளை தவறுதலாவது, சிலர் ஒப்புக்கொள்ளாத யோஜநாபேதமாவது இருக்கக்கூடும். அப்படி ஏதாவது இருந்தால், மஹான்கள் க்ஷமிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

ஸ்ரீ:

# வ்ருத்ராஸுரன்.

"அஹம் ஹரே! தவ பாதைகமூல
தாஸாநுதாஸோ பவிதாஸ்மி பூய: |
மந: ஸ்மரேதாஸுபதேர் குணாம்ஸ்தே
க்ருணீத வாக் கர்ம கரோது காய: ||

ந நாகப்ருஷ்டம் ந ச பாரமேஷ்ட்யம்
ந ஸார்வபௌமம் ந ரஸாதிபத்யம் |
ந யோகஸித்தீரபுநர்பவம் வா
ஸமஞ்ஜஸ! த்வா விரஹய்ய காங்க்ஷே ||

அஜாதபக்ஷா இவ மாதரம் ககா:
ஸ்தந்யம் யதா வத்ஸதரா: க்ஷுதார்த்தா: |
ப்ரியம் ப்ரியேவ வ்யுஷிதம் விஷண்ணா
மநோऽரவிந்தாக்ஷ! திதிருக்ஷதே த்வாம் ||

மமோத்தமஸ்லோகஜநேஷு ஸக்யம்
ஸம்ஸாரசக்ரே ப்ரமத: ஸ்வகர்மபி: |
த்வந்மாயயாऽऽத்மாத்மஜதாரகேஹே
ஷ்வாஸக்தசித்தஸ்ய ந நாத! பூயாத் ||"

"ஹே பகவந்! தேவரீருடைய பாதாரவிந்தங்களையே சரணமாக அடைந்திருக்கும் பாகவதோத்தமர்களின் தாஸனாக நான் எப்பொழுதும் ஆகவேணும்; எல்லா வுயிருக்கும் உயிராக நிற்கும் தேவரீருடைய திவ்யகுணங்களையே என்னுடைய மநஸ் ஸ்தா த்யா

கம் செய்யவேணும்; எனது வாக்கும் அவைகளையே எப்பொழுதும் கீர்த்தநம் செய்யவேணும்; என்னுடைய காயமும் தேவரீருடைய கைங்கர்யத்தையே அநவரதம் செய்யவேணும்; இந்தப் பாக்யம் எனக்குக் கிடைக்குமோ? ஹே நிகில ஸௌபாக்ய நிதியே! ஸத்யமாகச் சொல்லுகிறேன்; கொஞ்சம் செவிகொடுத்துக் கேட்கவேணும்; தேவரீரை விட்டுவிட்டு எவ்விதமான மஹாபலமும் எனக்கு அபேக்ஷையில்லை: அபுநராவ்ருத்திரூபமான முக்தைஸ்வர்யமும் எனக்குப் பெரிதன்று. தேவரீரது ஸாந்நித்யமே எனக்குப் பரமபோகம். இறகு முளையாத பக்ஷிகள் தங்கள் தாய்ப் பறவைகளை எதிர்பார்ப்பது போலவும், பசியினால் வருந்தும் பால வத்ஸங்கள் ஸ்தந்யத்தை ப்ரதீக்ஷிப்பதுபோலவும், விரஹாபத்ரவத்தால் துக்கிதையாக இருக்கும் ஸ்த்ரீ தனது ப்ராணநாதன் வரவை எதிர்நோக்கி நிற்பது போலவும், என்னுடைய மநஸ், ஹே அரவிந்தாக்ஷ! எப்பொழுது எப்பொழுதென்று தேவரீரையே எதிர்பார்த்து நிற்கின்றது. ஹேஸ்வாமிந்! மஹத்தான கர்மங்களைச் செய்து, அவைகளின் பலமாக இந்த ஸம்ஸாரத்தில் உழன்றுகொண்டிருக்கிறேன்; அப்படி உழன்றுகொண்டிருக்கும் இந்தத்தசையிலும், எனக்கு இந்த ஐஹிக போகங்களில் வைராக்யம் ஜநித்து, பாகவதர்களிடம் ஸக்யம் நேர்ந்தால், அதுவே எனக்குப் போதுமானது. அவ்வளவு க்ருபை செய்ய வேணும்" என்றன்றோ மஹாத்மாவான வ்ருத்ராஸுரன் கதறினது! யுத்த களத்தில் ஶத்ருவின்மீது ஆக்ரோஶங்கொண்டு வெற்றியிலேயே தத்தத்ருஷ்டியாக நிற்கவேண்டியிருக்க, தனது ப்ராணனை அபஹரிக்கக் கையில் வஜ்ராயுதத்தையெடுத்து ஐராவதத்தின்மீதேறியும் மனந்தளர்ந்து நிற்கும் இந்த்ரனைப் பார்த்து, வ்ருத்ராஸுரன், 'அடே இந்த்ர! ஏன் தழுதழுத்துத் தியங்குகிறாய்? பகவாந் உன்னுள்ளும், நீகைக்கொண்டுள்ள உனது வஜ்ராயுதத்தினுள்ளும் ப்ரவேஶித்து நிற்கிறார். அவருடைய க்ருபைக்குப் பாத்ரமாகி நான் அவரால் இந்தத் தேஹ வியோகத்தை அடையும்படியான ஸுக்ருதத்தைச் செய்திருக்கிறேன். நீ நிமித்த மாத்ரமாக இருக்கிறாய்; பயப்படாமல் ஆயுதத்தை ப்ர



யோகஞ்செய்' என்று சொல்லிவிட்டு, பகவானுடைய வாத்ஸல்யத்
தையும் இதர குணங்களையும் நினைத்து முற்கூறியபடி கதறினன்.
«ஜம்வெஜ ஷூவீதவி தவாஷி ஸீவ தமௌஜ ஜயுஷி ஙக்தி
ஈதவா கஙிமௌஜநாய - ஸஂஸூஜஹு தெவ யதி உாஸஜநஷு
தீயஃ ஸஂஸாஈ வஷ ஹமவஹவவமு வவ" [ஹே சரிஸைல
நாத! ஸதா தேவரீருடைய ஸாமீப்யத்தையும், தேவரீரிடத்தில்
ஏகாந்தபக்தியையும், தேவரீரது தாஸர்களாகிற பாகவதர்களது
ஸம்ஸர்க்கத்தையும், இந்த ஸம்ஸாரதசையில் தேவரீருடைய
க்ருபையால் நான் அடைந்தேனே யானால், இந்த ஸம்ஸாரமே
எனக்கு முக்தைஶ்வர்யத்திற்கு ஒப்பாய்விடும்] என்றும், «ஸத்யம்
ஶபெ வாஈணமௌஜநாய மெவகுண்ண வாஸெஸவி நமெஜ
ஹிஷாஷஃ" [ஸத்யமாக ஶபதம் செய்கிறேன்: பகவானுடைய
திவ்ய ஸௌந்தர்யாதிகளை அநுபவிக்கும் எனக்கு, வைகுண்ட
வாஸத்திற்கூட இச்சை யில்லை] என்றும் பகவதநுபவத்தில் தமக்
கிருந்த ஔத்ஸுக்யத்தை ஆவிஷ்கரித்த ஸ்ரீ நிகமாந்த மஹா
தேஶிகனுடைய பக்திக்குத் துல்யமாகவன்றோ நிற்கிறது, "நநா
கபூஷ்஠ம்...ஙாஂ விஈஹய்ய காங்க்ஷெ" என்று கதறின வ்ருத்
ராஸுரனுடைய பக்தி?

அவனுடைய சரித்ரத்தில் ஸாமாந்யமாகவும் யாதொரு தோ
ஷமும் தென்படவில்லை. சுத்தமான எண்ணங்களும், நல்வார்
த்தைகளும், நிர்துஷ்டமான க்ரியைகளும் அவனுடைய ஸ்வ
பாவத்தை விளக்குகின்றன. மஹாபலியை அஸுரனென்று
சொல்ல மனங்கூசுவது போலவே, இந்த வ்ருத்ரனை அஸுரனென்
று அழைக்க மனந்துணியவில்லை. இதற்கு நிதர்ஶநமாக அவனு
டைய காம்பீர்யத்தைக் காண்பிக்கும் ஒரு நடத்தையை உதாஹ
ரிப்போம். இந்த்ரன் பகவத்க்ருபையால் வஜ்ராயுதத்தைப்பெற்று
வ்ருத்ரனைக் கொல்வதற்காக முதலில் யுத்தத்திற்கு வந்தபொழுது,
பஹு ஆக்ரோஶத்துடன் தன்கையிலிருந்த கதாயுத மொன்றை
வ்ருத்ரன்மீது அவ்விந்த்ரன் சுழற்றி எறிய, வ்ருத்ரன் அந்தக்

கதையை லீலையாகவே கையிற்பிடித்து ஓங்கி இந்த்ரனுடைய வாஹநமான ஐராவதத்தைக் கும்பஸ்தலத்தில் அடித்தான். அந்த அடி தாங்கமாட்டாமல் ஐராவதம் வெகுதூரம் பின்வாங்கிற்று. ஏற்கெனவே அத்யந்தம் பயந்திருந்த இந்த்ரன் இதுகண்டவுடனே ப்ரமித்துப்போய் 'என்ன செய்யப்போகிறோம்?' என்று எண்ணி மெய்மறந்து நின்றான். அந்தக் காலத்தில் வ்ருத்ரன் ஒரு அல்ப ஶஸ்த்ரப்ரயோகம் செய்திருந்தாற் கூட, இந்த்ரனுக்கு மஹத்தான விபத் நேர்ந்திருக்கும். அப்படிச் செய்யாமல் தன் பெருந்தன்மையைப் பாராட்டி இந்த்ரனைப்பார்த்து, "பயப்படாதே; கையிலிருக்கும் வஜ்ராயுதத்தை நினைத்துக்கொள்; அதை எடுத்துக்கொண்டு யுத்தத்திற்கு வா" என்று சொல்லி யுத்தம் செய்யாமல் நின்றுவிட்டான். "ந ஸஹவாஹாய விஷ்ணவே தவெ ப்ராயச்சத் ஸஞ்ஜ்ய ஸுமஹாம் ஹோதா". தன்திறத்தில் அத்யந்தம் அபராதத்தைச்செய்த ராவணனிடத்தில் கருணாநிதியான ஸ்ரீ ராமனன்றோ அப்படி அநுஷ்டித்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்? "கச்சாநுஜாநாமி ரணார்திதஸ்த்வம் ப்ரவிஶ்ய ராத்ரிஞ்சரராஜ! லங்காம் - ஆஶ்வாஸ்ய நிர்யாஹி" [ஹே ராக்ஷஸராஜனே! நீ இப்பொழுது யுத்தத்தில் மிகுந்த ஶ்ரமத்தை அடைந்திருக்கிறாய். உனக்கு நான் அநுமதி கொடுக்கிறேன்; நீ இப்பொழுது லங்கையிலுள்ள உன்னுடைய க்ருஹத்திற்குப் போய்க் கொஞ்சம் ஶ்ரம பரிஹாரஞ் செய்துகொண்டு நாளைக்குவா; யுத்தஞ்செய்வோம்] என்று ஸ்ரீ ராமன் அவனுக்கே அநுரூபமான வார்த்தையைச் சொன்னான். வ்ருத்ரன் நடந்துகொண்டமாதிரியும் அவனுக்கே தகும்.

இப்படிப்பட்ட பெருந்தன்மையும், பகவானிடத்தில் பக்தியும், அஸுரனுக்கு எப்படி ஸம்பவித்தது? பகவத் த்வேஷிகளாகவும் பாபாத்மாக்களாகவுமன்றோ ஸாமாந்யமாக அஸுரர்கள் இருக்கிறார்கள்? வ்ருத்ரனுக்கு என்ன காரணத்தால் இந்த த்ருட பக்தி உண்டாச்சுது? என்று ஒரு ஸம்ஶயம் தோன்றலாம். 'வ்ருத்ரனாக ஜநித்த ஜீவன் மஹாபரிசுத்தாத்மா; மஹர்ஷி



களுடைய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகி ஆத்மஜ்ஞான மடைந்தவன்; ஒரு ஶாப விஶேஷத்தால் இந்த அஸுரயோநியில் ஜந்மம் அவனுக்கு நேர்ந்தது' என்று ஸ்ரீ பாகவதத்திலிருந்து ஏற்படுகின்றது. பூர்வஜந்மத்தில் இவன் ஶூரஸேந தேஶத்தில் சித்ரகேது வென்னும் ஓர் அரசனாக இருந்தான். ஸந்ததியில்லாமல் மனவருத்தத்தை அடைந்திருந்த அவனுக்கு, அங்கிரஸ் என்னும் மஹர்ஷி, க்ருபைசெய்து ஒருயஜ்ஞத்தைச் செய்விப்பித்து, 'முதலில் ஸந்தோஷத்தையும் பிறகு ஶோகத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு புத்ரன் ஜநிப்பன்' என்று அநுக்ரஹித்தார். அப்படியே ஒரு புத்ரன் உண்டாகி ஸுகமாக வளர்ந்துவருகையில், திடீரென்று ஸபத்நீமாதாவால் விஷமிடப்பட்டவனாய் அந்தப் புத்ரன் ம்ருதியை அடைந்தான். ராஜாவும் ராஜ்ஞியுமாக இந்தத்துக்கம் தாங்கமாட்டாமல் கதறி அழுதுகொண்டிருக்கையில், அங்கிரஸ் மஹர்ஷி நாரதருடன் கூட அவ்விடம் வந்து, அந்த ராஜாவுக்கு அநேகவிதமாகத் தேஹாத்மஜ்ஞானத்தைப் போதித்தார்; நாரத பகவானும் மிகுந்த க்ருபையோடு அந்த ராஜாவுக்கு ஒரு மந்த்ரோபநிஷத்தை உபதேஶஞ் செய்தார். இந்த உபதேஶம் த்ருடமாக அவன் புத்தியில் பதியும் பொருட்டு நாரதர் அந்த ம்ருத ஶிஶுவைத் தட்டியெழுப்ப, அந்த ஜீவன் எழுந்திருந்து, "மஹர்ஷியே! எந்த ஜந்மத்தில் இவர்கள் என்னுடைய மாதா பிதாக்கள்?" என்று கேட்டு, தத்வத்தை உணர்த்தக்கூடிய வார்த்தைகளைச் சொல்லிற்று. இதைக் கேட்டு ஆஶ்சர்யமடைந்து எல்லாரும் வ்யஸநத்தையும் விட்டார்கள். சித்ரகேதுவும் நாரதமஹர்ஷியின் உபதேஶபலத்தாலும், தன்னுடைய ஸுக்ருத பரிபாகத்தாலும், வித்யாதர ராஜபதவியை அடைந்து, பரமாத்ம ஸாக்ஷாத்காரம் பெற்று, அந்தப் பரமாத்மாவைத் தன் பக்தியின் ப்ரவாஹமாக அநேக விதமாக ஸ்தோத்ரஞ்செய்து, அவரால் நியமிக்கப்பட்டவனாய், இந்த லோகத்திலேயே கொஞ்ச காலம் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தான்.

ஒரு ஸமயம் தன் விமாநத்தில் இவன் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கையில், பரமேஶ்வரன் தன்மடியி லுட்கார்ந்திருந்த பார்வதி

யை ஆலிங்கநஞ் செய்துகொண்டு ஸித்த சாரணர்களுடன் போவதைப்பார்த்துப் பரிஹஸிக்க, கருணாநிதியான பரமேஶ்வரன் அதை க்ஷமித்துப்போயும், பார்வதிக்கு மிக்க கோபஞ் ஜநித்தபடியால், இவன் அஸுரயோநியில் வந்து பிறக்கும்படியான ஶாபத்துக்குப் பாத்ரமாகும்படி நேர்ந்தது. பார்வதி கொடுத்த அந்த ஶாபத்தை வருத்தமில்லாமலே அங்கீகரித்து, அந்தச் சித்ரகேது த்வஷ்டாவின் தக்ஷிணாக்நியில் வ்ருத்ரனாக வந்து ஜந்மமெடுத்துப் பகவானால் அநுப்ரவேஶிக்கப்பட்ட வஜ்ராயுதத்திற்கு இரையாகி, கர்ம பந்தத்தை நீக்கிக்கொண்டு முக்தர்களால் அநுபவிக்கப்படும் பரமைஶ்வர்யத்தைப் பூர்ணமாகப் பெற்றான்.

பகவான் அநுக்ரஹிக்கிறது என்று நேர்ந்தால், அஸுர ஜந்மமும் நம்முடைய யோக்யதைக்குறைவுமா அந்த அநுக்ரஹத்தைத் தடுக்கும்?

“கிம்வா கரீஶ! க்ருபணே மயி ரக்ஷணீயே
ஸர்வஜ்ஞ பாஹ்ய ஸஹகாரி ஸமீக்ஷணேந ।
நந்வஸ்தி விஶ்வபரிபாலந ஜாகரூகஃ
ஸங்கல்ப ஏவ பவதோ நிபுணஃ ஸஹாயஃ ॥”

ஓர் பௌராணிகர்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## ஸ்ரீ ராகவனுடைய கணையாழி.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீமத்ராமாயணத்தில் அங்குளீயக விஷயமாக ஒரு ப்ரஶ்நம் கேட்கப்பட்டிருக்கிறது. அது விஷயத்தில் கோவிந்தராஜீய வ்யாக்யாநத்திற் சொல்லியிருப்பது ஏன் உசிதமான ஸமாதாநமாகக் கூடாது? அதைப்பற்றி வேறு ஸ்புடதரமான ப்ரமாணம் தெரியவில்லை. தவிரவும், ஸ்ரீ ராமன் வநத்துக்குப் போகும்பொழுது ஸர்வாபரணத்தையுங் கழற்றி விட்டதாக ராமாயணத்தில் ப்ரமாணமொன்றுங் காணப்படவில்லை. ஆகையால், மோதிரம் ஏன் இருந்திருக்கக் கூடாது? அத்யாத்மராமாயணத்திலும் ஸ்ரீ ராமன் தன் கை விரலிலிருந்து மோதிரத்தைக் கழற்றி ஹநுமானிடம் கொடுத்ததாக இருக்கிறது. ஆகையால், அந்த மோதிரம் ஜநக மஹாராஜனால் ஸ்ரீ ராமனுக்குக் கொடுக்கப்பட்டதாக இருந்தாலும், ஸ்ரீராமனுக்கு அது வேறு எவ்விதமாக வந்திருந்தபோதிலும், ஸ்ரீராமன் அதைத் தன் கையில் தரித்திருந்தாரென்பதைப்பற்றி ஆக்ஷேபமே இல்லை.

கண்கொடுத்தவனிதம், 20 - 10 - 1911. } புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர்.

## (2)

## ஸ்ரீமத் ராமாயண விஷயமாக மற்றும் ஒரு ப்ரஶ்நம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,

ஸ்ரீமத் ராமாயணம் அயோத்யாகாண்டத்தில் 111 - வது ஸர்க்கத்தில் 13-வது ஶ்லோகத்தில் ஆரம்பித்து பரதன் ப்ராயோபவேஶம் பண்ணினதா

யும், "ந த்வேவ மூர்த்தாபிஷிக்தாநாம் விதி: ப்ராயோபவேஶநே"— (க்ஷத்ரியன் ப்ராயோபவேஶம் செய்யக்கூடாது) என்று ஸ்ரீராமன் பரதனைப் பார்த்து விதித்ததாகவும் ஏற்படுகிறது. மூர்த்தாபிஷிக்தாநாம் என்னும் பதத்திற்கு ராஜ்ஞாம் என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது.

யுத்தகாண்டம் 21-வது ஸர்க்கத்தில் 9-வது ஶ்லோகத்தில் ஸ்ரீராமன் ப்ராயோபவேஶம் பண்ணினதாகச் சொல்லியிருக்கிறது. இது ஶரணாகதியன்று என்று "ப்ரதிஶயந ப்ரதாநமாகையினாலே" இத்யாதி வாக்யத்தால் ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் சரமஶ்லோகாதிகாரத்தில் அருளிச்செய்திருக்கிறார். ப்ராயோபவேஶம் செய்ய க்ஷத்ரியனுக்கு விதி இல்லையென்று பரதனுக்குச்சொல்லிவிட்டு, ஸ்ரீ ராமன் தாம் ப்ராயோபவேஶம் எப்படிச் செய்தாரென்கிற ஸம்ஶயம் ஜநிக்கிறது.

மேலும், இவ்விடத்தில் "ப்ரதிஶயநம்" என்கிற ஸ்ரீ ஸூக்திக்கு விருத்தமாக அபய ப்ரதாந ஸாரத்தில், "ஸ்ரீ ராமன் செய்தருளின ஶரணாகதி ஏன் பலிக்கவில்லை?" என்கிற ஶங்கா பரிஹாரமாக, 'ஶக்தன் அஶக்தனை உத்தேசித்துப் பண்ணினபடியினால் பலிக்கவில்லை' என்கிற அர்த்தத்தை ஸ்ரீ தேஶிகனே ஸாதித்திருக்கிறார். சரம ஶ்லோகாதிகாரத்தில் "ப்ராயோபவேஶம்" என்று சொல்லி, அபயப்ரதாந ஸாரத்தில் ஶரணாகதியை அங்கீகரித்து ஸமாதாநம் சொல்லியிருக்கிறது விருத்தமன்றோ? இது விஷயம் ஸஹ்ருதயவேத்ய வாக்யம் என்கிற ஸமாதாநமும் உபவாஸ தர்ப்பஶயநாதி விஶிஷ்டமாயிருப்பதனால் ஸ்வரஸமாகாது. இதைத் தவிர்த்து வேறு ஸமாதாந மிருந்தால், வித்வாங்கள் யாராவது இந்தப் பத்ரிகை மூலமாக அந்த ஸமாதாநத்தை ஸப்ரமாணமாக எழுதவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

கண்கொடுத்தவணிதம், 20 - 10 - 1911.

புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

(3)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற ஆவணி மாஸத்திய ஸஞ்சிகையில், 262 - வது பக்கத்தில் பின்வரும் ஶ்லோகம் காணப்படுகிறது.

"ஸ தாவதாத்மஜஸ்நேஹபூர்ணாய பும்ஸ: ஸங்கீர்த்ய நாம ஸமவேதா மரணகாலாந்தரம் - விக்ருஶ்ய புத்ரமேவாந்த்ய யதஜாமிளோ஽பி நாராயணேதி ம்ரியமாண உபேதி முக்திம்"



இந்த ஶ்லோகத்தால் அஜாமிளன் அந்த்ய கால ஸ்மரணத்தால் முக்தியடைந்ததாகத் தெரியவருகிறது. நமது ஸித்தாந்தம், "பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத் - ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத்" என்கிற ஸதாசார்ய கடாக்ஷமன்றிக்கே ஸத்கதி கிடையாது என்று சொல்லுகிறது. இந்த அஜாமிளனுக்கு அப்படிப்பட்ட ஸதாசார்ய கடாக்ஷம் ஏதாவது ஏற்பட்டதோ? ஏற்படாமலிருந்தால் எவ்விதமாக அவனுக்கு முக்திகிடைத்தது?

மேலும், அவன் அடைந்த முக்தி அந்த ஜந்மத்தின் அந்தத்திலேயே கிடைத்ததா? அல்லது மறு ஜந்மத்தில் கிடைத்ததா?

இந்த இரண்டு விஷயங்களுக்கும் ஸமாதாநம் நியமிக்க ப்ரார்த்திக்கிறேன்.

16-10-11. ராணிப்பேட்டை.

பி. விஜயராகவாசாரியன்.

[(1) அஜாமிளன் அந்த்ய கால ஸ்மரணத்தால் முக்தி யடைந்தானென்று சொல்வது ஸரியன்று. "புத்ரம் விக்ருஶ்ய" என்று சொல்லியிருக்கிறபடியால் வைகுண்ட ஸ்மரணமே அவனுக்கு ஏற்படவில்லையென்றும், புத்ரஸ்நேஹ பரவஶனாக 'நாராயண' என்கிற நாம மாத்ரத்தை உச்சரித்தானென்றும் வ்யக்தமாகத் தெரிகிறது. விஷ்ணு தூதர்களும், "யத் வ்யாஜஹார விவஶோ" என்றும், "ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா" என்றும் பகவந் நாமத்தை விவஶனாகவே இவன் உச்சரித்ததாகச் சொல்லி யிருக்கிறார்கள். ஆகையால், இவனுடைய மோக்ஷ ப்ராப்திக்கு அந்த்யகால ஸ்மரணரூபமான ஸாமக்ரிகூட இல்லை. ஆனால், மோக்ஷம் எப்படி ப்ராப்தமாச்சுது? கேவலம் பகவந்நாம க்ரஹணம் மோக்ஷத்தைக் கொடுத்துவிடுமோ? என்று கேட்கலாம். ஸ்ரீ பாகவதத்திலிருக்கும் "ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேலநமேவ வா - வைகுண்ட நாமக்ரஹணம் அஶேஷாகஹரம் விது:" "அஜ்ஞாநாதத²வா ஜ்ஞாநாத் உத்தமஶ்லோக நாம யத் - ஸங்கீர்த்திதமகம் பும்ஸோ தஹேதேதோ யதாநல:" இத்யாதியான வாக்யங்கள், 'எந்த விதமாகவாவது ஒரு தடவை பகவந்நாமத்தை உச்சரித்துவிட்டால், அந்த உச்சாரணம் ஸகல பாபத்தையும் நஶிப்பித்துவிடும்' என்று சொல்லுகின்றன. இதன் பாவம் என்னவென்றால்—'ஒருதடவை ப்ரவர்த்திதமான தீபத்தால் இருள் விலகிவிடுவது போல, ஒரு தடவை உச்சரிதமான பகவந்நாமத்தால் பாபக்ஷயமுண்டாவது நிஶ்சயம். அப்படி ஏற்

றின தீபத்தைத் தொடர்ச்சியாகத் தரித்துவைத்துக் கொண்டால் வேறு இருள் அணுகாமலிருப்பதுபோல, பகவந்நாமத்தைத் திருப்பித் திருப்பி ஆவ்ருத்தி செய்தால் பாபாந்தரம் உத்பத்தியாகாது. இம்மாதிரி பாபவாஸனை க்ஷயித்தால் ஹ்ருதய ஶுத்தி ஏற்பட்டு, மஹாபுருஷ தர்ஶநாதிகள் ஸம்பவித்து முக்தைஶ்வர்யம் ப்ராப்தமாகும்' என்பதுதான். இந்த அபிப்ராயத்தை விளக்கும்பொருட்டே ஸ்ரீ பாகவதத்தில் அஜாமிளோபாக்யாந ப்ரகரணத்திலேயே "பாபக்ஷயஶ்ச பவதி ஸ்மரதாம் தமஹர்நிஶம்" என்றும், "ஶ்ராணாநாதாஃ பஶூ ஸத்வஸாவநம்" என்றும் அநேக இடங்களில் பகவந்நாம ஆவ்ருத்தி விதிக்கப்பட்டிருக்கிறது.

ஸதாசார்ய கடாக்ஷமன்றிக்கே ஸத்கதி கிடைக்காது என்பது யதார்த்தமே. தேஹாத்ம விவேகஜ்ஞாநம் முதலியவை ஸத்கதிக்கு அத்யந்தம் அவஶ்யங்களான ஹேதுக்கள்; அந்த ஜ்ஞாநம் ஸதாசார்ய கடாக்ஷமில்லாமல் கிடைக்காததாலால் ஆசார்யவத்தை மோக்ஷப்ராப்திக்கு ஹேதுவென்று சொல்லப்படுகிறது. அந்த ஆசார்யவத்தை எப்படி நேருமென்றால், இவனுடைய பூர்வ ஸுக்ருதங்கள் அதை மூட்டிவிடவேணும். ப்ராப்தாவாகிற ஜீவனுடைய மஹாபூர்வ ஸுக்ருத கர்மாக்களில்லாமல், ஆசார்ய கடாக்ஷமோ, நல்ல ஜ்ஞாநமோ, த்ருடபக்தியோ ஒன்றும் உண்டாகாது. அஜாமிளன் விஷயத்தில் இப்படிப்பட்ட பூர்வ ஸுக்ருத மிருந்ததென்றும், அதனால் ஆசார்ய கடாக்ஷம் ஸம்பவித்ததென்றும், அதனால் ஸம்யக்ஜ்ஞாநமுண்டாகி பகவத் ப்ராப்தி நேர்ந்ததென்றும், அவனுடைய சரித்ரத்திலிருந்து ஏற்படுகின்றன. "அயம் ஹி ஶ்ருதஸம்பந்நஃ ஶீலவ்ருத்த குணாஶ்ரயஃ - த்ருதவ்ரதோ ம்ருதுர்தாந்தஃ ஸத்யவாந் மந்த்ரவிச்சுசிஃ" என்று அஜாமிளனுடைய பூர்வ வ்ருத்தாந்தம் அவனை நல்ல தர்மிஷ்டனாக வர்ணிக்கிறது. ஏதோ ஒரு பாபவிஶேஷத்தால் கொஞ்ச காலம் அவன் தர்மத்தை விட்டு விலகித் தாஸீபதியாக இருந்தும், பூர்வ ஸுக்ருத பரிபாக காலம் நேர்ந்த பொழுது அவனுக்கு விஷ்ணு தூதர்களான ஸாதுக்களுடைய கடாக்ஷம் உண்டாயிற்று. "இதி ஜாதஸுநிர்வேதஃ க்ஷணஸங்கேந ஸாதுஷு" என்கிறபடி, அந்த ஸாதுக்களின் கடாக்ஷத்தால் ஸரியான வைராக்ய முண்டாகி, ஸர்வாநுபந்தங்களையும் விட்டுக் கங்காத்வாரத்தில் யோகாப்யாஸம் செய்து தேஹத்தை த்யஜித்து, பிறகு முக்தியை அடைந்தான். இதனால் அவனுக்கு ஆசார்ய கடாக்ஷ பூர்வகமாகத்தான் மோக்ஷப்ராப்தி உண்டாயிற்று என்பது ஸித்தம்.

(2) அஜாமிளனுக்கு அந்த ஜந்மத்தின் முடிவிலேயே முக்திகிடைத்தது. 'நாராயண' என்று நாமோச்சாரணம் செய்த பிறகு, அவனுக்கு நேர்வதாக இருந்த மரணம் விலகிற்று என்றும், அதனுடன் அவனுடைய பாபபுத்தியும் நீங்கி, பஹு காலம் விரக்தனாக "யாவஜ்ஜீவம் ஹரேர்பக்திம் ஶ்ரத்தயா நாஸிஹாத்" என்கிறபடி பகவத் பக்தி செய்தானென்றும் அவனுடைய உபாக்யாநத்திலிருந்து தெரிகிறபடியால், அந்த ஜந்மத்திலேயே அவனுக்கு மோக்ஷம் கிடைத்ததில் யாதொரு ந்யாயவிரோதமும் தெரியவில்லை. பத்ராதிபர், ஸ்ரீ வேதாந்த தீபிகை.]



---

## (4)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

இப்பெயர்பூண்ட பத்திரிகையின் எட்டு மாதத்திய ஸஞ்சிகைகள் நாளது வரை வெளியிடப்பட்டுள்ளன. ஸ்ரீ அஹோபில மடத்தின் சிஷ்ய வர்க்கத்தாருள் ஒருவனாகவும், இப்பத்திரிகையின் அபிவிருத்தியைக் கோருமவருள் ஒருவனாகவும் அடியேன் சிலமொழிகள் மொழியலானேன்.

இப்பத்திரிகையின் பாஷைநடையினாலேயே தமிழுணர்ந்த எல்லோருக்கும் இப்பத்திரிகை அவ்வளவாய்ப் பயன்படாதென்பது உண்மையே. அபய ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன் அருளிச்செய்துள்ள பலரஹஸ்யங்கள், ப்ரதாநஸாரம், ரஹஸ்யத்ரயஸாரம், பரமதபங்கரஹஸ்யம் முதலிய கிரந்தங்களின் மணிப்ரவாள நடையில் பழக்கமுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கெல்லாம் இப்பத்திரிகையில் எடுத்தாளப்படும் நடை ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன் திருவுள்ளத்திற்கு உகப்பானதே என்பது அடியேன் கருத்து.

இன்றைக்கு 650 வருஷங்களுக்குமுன் ஜைனர்கள் தங்கள் புராணத்தையும் மதநூல்களையும் மணிப்ரவாளநடையி லெழுதித் தமிழ்நாட்டில் பெருந்தொகையார்க்குச் சித்தாந்த மர்மங்கள் இனிது விளங்க வெளிப்படுத்தியிருந்தார்கள். இதன்நோக்கத்தைக்கண்டுணர்ந்த நம்தேசிகர் கலிநாளில் பிற்காலத்தில் உபயவேதாந்த வுண்மைக்குரிய பாஷைகளில் பழக்கங்குன்றுமென்றும், பெருந்தொகையார்க்கு மணிப்பிரவாளநடைநூல்கள் வழிகாட்டிகளாய்ப் பெரும்பய னளிக்குமென்றும் ஆராய்ந்துணர்ந்து பலமணிப் பிரவாளநடைநூல்களை அருளிச்செய் திருக்கின்றனர். அவைகள் தமிழ்நாட்டு வாசிகளாம் நம்மவர்க்கு இன்றியமையாதனவாம். ஒருவாறு எழுத்தின்வடிவமும் ஓசையும் வடமொழிக்குந் தமிழ்மொழிக்கும் ஒன்றுபோ லிருப்பதால் அவைகள் மணிப்பிரவாளங்கள்போன்றே விளங்குகின்றன. இவ்வகை நூல்களையெல்லாம் திரட்டிச் சுத்தப்பிரதியாய் அச்சியந்திரவாயிலாக வெளிப்படுத்துவது வெகுமுக்கியம். தமிழெழுத்துக்களால் வடசொற்களை இனிதாய் விளக்கக்கூடிய இடங்களொழிய மற்றைய இடங்களில் வடசொற்களைக் கிரந்த எழுத்துக்களால் விளக்குவது நலம். எவ்விடத்திலும் சொற்களையெல்லாம் ஒன்றின்மே லொன்றைப் புணர்த்திப் பிரித்துணர வழியில்லாது செய்வ

தைக்காட்டினும் சொற்களைப்பிரித்துச் சாத்தியப்படு மிடங்களிலெல்லாம்சந்தி யில்லாமல் எழுதுவது படிப்பவர்களின் சிரமத்தைக் குறைக்கும்.

இப்பொழுது நடைபெற்றுவரும் வேதாந்த தீபிகையின் மணிப்பிரவாள நடை வெகு சேர்த்தியாயும் ஸித்தாந்த மர்மதரிசினியாயும் விளங்குகின்றது. இதைக் கண்ணுற்றபின் அடியேனுள்ளத்தே உதித்த ஆநந்த மேலீட்டை வரிவடிவா லுணர்த்த அடியேன் ஸமர்த்தனல்லேன்.

வெளியிடங்களில் வேதாந்த தீபிகையைக் கண்ணாரக்கண்டு களிக்கும் நம்மவர்களெல்லோரும் தமது மித்திரர்களை இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச்சேரும்படி செய்தல்வேண்டும். எவ்வகைத் தொழிலுக்கும் கூட்டுறவு முக்கியமாதலால், இக்கலிகாளில் ஸநாதன தர்மமார்க்கம் சீர்குலையாதிருக்கப் பலர்கூட்டுறவு திடப்படுமாகில், உபய வேதார்த்த மார்க்கங்கள் பத்திரிகை வாயிலாக நாடெங்கும் பலப்படும். பொதுநன்மைக்கு உழைக்குமவர்கள் மானிடர்களில் முக்கியர்கள்; இவர்களின் பாஞ்சபௌதிக சரீரம் நீங்கினும் இசையினால் இவர்கள் நித்திய ஜீவிகளேயாவர்.

இப்படிக்கு,

| | |
|---|---|
| நுங்கம்பாக்கம் சென்னை, 4-10-11. | அகோபிலமடத்துச் சிஷ்யர்களின் தாஸாநுதாஸன் |

**தி. வெங்கடராம ஐயங்கார்,**
தமிழ்ப்பண்டிதர்.

---

ஸ்ரீ:

# ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் மாஸ அறிக்கைகள்.

## 1. எக்ஸிக்யூடிவ் போர்டாரின் கூட்டம்.

சென்ற புரட்டாசி மாஸம் 8௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணிக்கு மயிலாப்பூர் ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர் க்ருஹத்தில் ஷை போர்டாரின் கூட்டமொன்று சேர்ந்தது. அப்பொழுது மேலே குறிக்கப்பட்டிருக்கும் போர்டு மெம்பர்கள் வந்திருந்தார்கள்.



(1) ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர், எம்-ஏ., பி-எல்., ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் ஸபாத்யக்ஷர்,

(2) ஸ்ரீ. பி. கே. கருடாசாரியர், பெங்களூர்ப் பிரிவின் காரியதரிசி,

(3) ஸ்ரீ. வி. ராகவாசாரியர், பி-ஏ., பி-எல்., மதிராஸ் பிரிவின் உப ஸபாத்யக்ஷர்,

(4) ஸ்ரீ. எஸ். ராஜகோபாலாசாரியர், பி-ஏ., பி-எல்., தென் ஆர்க்காட்டுப் பிரிவின் காரியதரிசி,

(5) ஸ்ரீ. ஸி. துரைஸாமி ஐயங்கார், பி-ஏ., தென் ஆர்க்காட்டுப் பிரிவின் ப்ரதிநிதி,

(6) ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசாரியர், பி-ஏ., எல்-டி., சென்னைப் பிரிவின் காரியதரிசி,

(7) ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியர், பி-ஏ., பி-எல்., ஸபையின் பொதுக் காரியதரிசி.

அந்தக் கூட்டத்திற் செய்யப்பட்ட தீர்மானங்களாவன:—

(1) ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹாஸங்கம், தஞ்சாவூர் ஜில்லாவில் தகுந்ததான ஓரிடத்தில், வருகிற மார்கழி மாஸத்தில் சேரவேண்டியது; அந்தச் சங்கத்தின் செலவு முழுவதும், அதற்காக விசேஷித்து வசூல் செய்யப்படும் சந்தாவைக்கொண்டே நடத்தப்படவேணும்.

(2) ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர், ஸ்ரீ. வி. ராகவாசாரியர், ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசாரியர், ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியர் இவர்களடங்கிய கமிட்டி யொன்று, ஸபையின் விதிகளைப் பராமர்சித்துப் பார்த்து, அவைகளில் எந்த மாறுதல்களைச் செய்யவேண்டு மென்று தோன்றுகிறதோ அந்த மாறுதல்களை, எக்ஸிக்யூடிவ் போர்டாரின் ப்ரதிநிதிகளாக இருந்து கொண்டு, தீர்மான ரூபங்களாக மஹாஸங்கத்தின் பர்யாலோசனைக்குக் கொண்டுவரவேணும்.

(3) ஸபையின் காளது வருஷத்திய வரவு செலவு கணக்கைப் பரிசோதனம் செய்ய, சித்தூர் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரைக் கேட்டுக்கொள்ளவேணும்.

(4) ஸ்ரீ. பெருகவாழ்ந்தான் மஹாமஹோபாத்யாய ரங்காசார்யர் ஸ்வாமி, வருஷக்கட்டண மில்லாமலே ஸபையின் கௌரவ அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

| | |
|---|---|
| சித்தூர், 2-10-11. | **ஸி. ராஜகோபாலாசாரியர்,** (ஸபையின் பொதுக் காரியதரிசி.) |

## 2. தஞ்சாவூர்ப் பிரிவு.

ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் தஞ்சாவூர்ப் பிரிவினுடைய முக்கிய அங்கத்தினர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து, அந்தப்பிரிவைச் சார்ந்ததாக "விஶிஷ்டாத்வைத வர்த்தநீ" என்னும் ஒரு ஸங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஸங்கத்தின் ப்ரதம ப்ரவ்ருத்தி, சென்ற புரட்டாசி மாஸத்தில் நடந்த ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமியின் திருநக்ஷத்ர காலத்தில் ஒரு வித்வத்ஸதஸ் ரூபமாக உண்டாயிற்று. திருக்குடந்தையில் பெரியதெருவி லிருக்கும் ஸ்ரீ அஹோபில மடத்தில் அந்த ஸதஸ் நடந்தது: அப்பொழுது அங்கு வந்திருந்த அநேக வித்யார்த்திகள், ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் இவைகளில் பரீக்ஷிக்கப்பட்டார்கள்; வித்வாங்களநேகர் வேதாந்த விஷய விசாரம் செய்தார்கள்; பக்தி முதலான விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்களும் பகவத்விஷயத்தில் சில பாகங்களின் ப்ரவசநமும், ருக்வேத யஜுர்வேதங்களில் கனபாடமும், பாஞ்சராத்ர வைகாநஸ ஆகம ஸூத்ரங்களின் உபபாதநமும் நடந்தன. புரட்டாசி மாஸம் 10வ ஸாயங்காலத்தில், பரீக்ஷையில் நிஷ்பந்நரான வித்யார்த்திகளுக்கும், அங்கு வந்திருந்த வித்வாங்களுக்கும் ஸம்மாநம் கொடுக்கப்பட்டது. இது ஸம்பந்தமாக ரூபா 415 - 0 - 0 செலவிடப்பட்டது; உத்தேசம் 50 - வித்வாங்கள் ஸம்மாநிக்கப்பட்டார்கள். இந்த ஸதஸ் சேர்ந்த நாலு தினங்களிலும் ஸ்ரீ ஶார்ங்க பாணி ஸந்நிதியில் ததீயாராதநங்கள் நடந்தன. இந்த ஸதஸ் விஷயமாக மஹத்தான ஶ்ரமத்தை வஹித்தவர்களுள், திருக்குடந்தை தேவஸ்தாநம் மானேஜர் ஸ்ரீ. எஸ். கிருஷ்ணமாசாரியரின் பெயரை முதன்மையாகப் பேசவேணும்; அவருடைய பரிஶ்ரமத்தாலேயே இந்த ஸதஸ் இப்படிப்பட்ட த்ருப்திகரமான நிஷ்பத்தியை அடைந்தது. திருக்குடந்தையில் எழுந்தருளியிருக்கும் ராவ்பஹதூர் ஸ்ரீ. என். கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் இந்த ஸதஸ் விஷயமாகச் செய்த ஸஹாயம் மிகப்பெரிது; ஸ்ரீ ஸபையாரின் க்ருதஜ்ஞதைக்கு அவரும் முக்கிய பாத்ரமே. அவரைப் போஷகராக அவலம்பித்துப் பலமான கமிட்டியொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியாரின் முக்கிய கார்யம், ப்ரதி ஸம்வத்ஸரமும் ஸ்ரீ. ஆதிவண் ஶடகோபஸ்வாமி திருநக்ஷத்ர காலத்தில் இம்மாதிரியான ஸதஸ்ஸை நடத்திவருவதுடன், இந்தச் சங்கத்தை ஶாஶ்வதமாக ஒரு ப்ரபலமான ஸபையாகச் செய்யும்பொருட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதுதான்.

டி. கோதண்டராம ஐயங்கார்.

[ஹிந்துபத்ரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.]

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

"ஸாராஸாரந்தி கவய: கருணார்த்ரதாஸ்பிம் ஸாரமேவ ஸம்
ஸ்ருதஜநிவஹதேவதாஷாம்—வஹேஷாம் வ்ருஜிநஹஹதி மோசந
மோசநகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹ! பரிவஸஸிஷெ ஹஸாம் ந: ॥"

**ஸ்ரீ ஸபையின் இரண்டாவது வருஷாந்தச் சங்கம்.**

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தால், அடுத்து வருகிற மார்கழி மாஸத்தில், ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது வருஷாந்த மஹா ஸங்கம் சேரப்போகிறதென்று எக்ஸிக்யூடிவ் போர்டாரது தீர்மானங்களிலிருந்து தெரிந்துகொள்ள மிகுந்த ஸந்தோஷமுண்டாகிறது. இந்த ஸபை உண்டான காலம் முதல், அநேக ஆஸ்திகர்கள், ஸபையின் நோக்கங்களின் நன்மையைப் பராமர்ஶித்துப்பார்த்து, ஸபையைச் சேர்வது லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவுள்ளத்திற்கு உகப்பாகவேயிருக்குமென்று எண்ணி, ஸபையைச் சேர்ந்ததுமல்லாமல், அதன் அபிவ்ருத்திக்கு ஹேதுவான பஹுவித ஸஹாயத்தையும் செய்து வருகிறார்கள். பலவிடங்களில் இந்த ஸபையைச் சார்ந்து அநேக உப ஸபைகளும் உண்டாகி யிருக்கின்றன. ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களில் பரிகணிதர்களான அநேக வித்வாங்களும், தங்களால் இயன்றமட்டும், அங்கங்கிருக்கும் ஜநங்களுக்கு இம்மாதிரியான ஸபையொன்று ஏற்பட்டிருப்பதையும், அந்த ஸபையை அபிவ்ருத்த

மாகச் செய்வதால் ஜநிக்கும் நன்மைகளையும் போதிப்பித்து, அவர்களை இந்த ஸபை விஷயங்களில் ஶ்ரத்தாளுக்களாகச் செய்து வருகிறார்கள். ஆனால், சென்ற வருஷ ஆரம்பத்தில் நாம் எதிர்பார்த்திருந்த வளவு இந்த ஸபை பரவியிருப்பதாக நமக்குத் தெரியவில்லை. தகுந்த வ்யக்திகள் மாத்திரம் அங்கங்கேபோய், இந்த ஸபையின் நோக்கங்களுடைய ஸாதுத்வத்தை வற்புறுத்தி உபதேஶித்து வரும் பக்ஷத்தில், இன்னும் ஆயிரக்கணக்கான ஜநங்கள் ஸபையைச் சேர்ந்து, ஸபை மிகுந்த ஏற்றத்தை யடைந்திருக்கும் என்பதில் ஸந்தேஹமே யில்லை. ஸாமாந்யமாக எந்த விஷயத்திலும் ஜநங்கள் கிஞ்சித் ப்ரோத்ஸாஹநத்தை அபேக்ஷித்து நிற்கிறார்களே தவிர, ஸ்வயமாகவே குணதோஷ விவேசநம் செய்து ஒரு வஸ்துவை அங்கீகரிப்பதும், மற்றொன்றை த்யஜிப்பதும் காணோம். லௌகிகமாய் ப்ரத்யக்ஷமாக நிற்கும் விஷயங்களிலேயே இப்படி இருந்தால், பரோக்ஷமாக இருக்கும் ஆத்மஜ்ஞாந ஸம்பாதகமான இம்மாதிரி விஷயங்களில் ப்ரோத்ஸாஹநம் அபேக்ஷிதமென்பதைச் சொல்லவும் வேணுமோ?

**ஸபையின் அபிநிவேஶம்.**

தவிரவும், சில இடங்களில் இந்தஸபையைப்பற்றி விபரீதமான அபிப்ராயங்களும் இருந்து வருகின்றன. ‘ஏதோ சில ஸ்வாமிகளைத் தங்கள் மனத்தில் வைத்துக்கொண்டு, அவர்களை ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளப்பண்ண வேணுமென்று, இந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள் ஆரம்பித் திருக்கிறார்கள்’ என்கிற எண்ணம் சிலர் மனத்தில் உண்டு. இன்னும் சிலர், ‘ஔத்தர தாக்ஷிண்ய ஸம்பத்தமான ஆக்ரஹமே இந்த ஸபைக்கு முக்கிய காரணம்’ என்று எண்ணியிருக்கிறார்கள். இவையெல்லாம் ப்ரமத்தால் உண்டானவை. லோகத்தில் பொது நன்மையைக்குறித்து ப்ரவ்ருத்தித்திருக்கும் ஸபைகள் உண்டானால், இது அவைகளில் ஒன்று. ஸாமாந்யமாகப் பகவத் ராமாநுஜ ஸித்தாந்தம் லோபத்தை



அடையாமலிருக்கும் பொருட்டும், அந்த ஸித்தாந்தத்தைப் பா
வச்செய்ய ஹேது பூதங்களான ஸாமக்ரிகளில் அந்யதமமான
ஸ்ரீ அஹோபில மடத்தின் விபூதியை அபிவ்ருத்த மாக்கும்பொ
ருட்டுமே, இந்த ப்ரயத்நம். சில ஸ்வாமிகளையே ஆஸ்தாநத்திற்கு
எழுந்தருளப்பண்ண வேணுமென்கிற ஆக்ரஹம் இந்த ஸபைக்
குப் பெரும்பாலும் கிடையாது; தெற்குத்தியார் வடக்குத்தியார்
என்கிற தாபிநிவேஶமும் இல்லை. மஹநீயர்களாகத் தகுந்த யோக்
யதையுடன் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளத்திற்கு உகப்புண்
டாகும்படி, யாராவது ஒரு ஸ்வாமி நமது ஸதாசார்யராக எழுந்
தருளவேணு மென்பதுதான் ஸபையின் ஏகாந்த நோக்கம்.
இதைத் தவிர வேறு அஸப்யமான எண்ணங்கள் இந்த ஸபை
யின் ப்ரவர்த்தகர்களுடைய மநஸ்ஸில் இருக்கின்றன வென்று
நினைப்பது சுத்த அந்யாய்யம். நிஷ்பக்ஷபாதிகளான மஹாந்
கள் இந்த உறுதி மொழியைத் திருவுள்ளம் பற்றி இனித் தாங்
கள் அப்படிப்பட்ட எண்ணத்தைக் கைக்கொள்ளாம லிருப்பது
டன்கூட, இன்னும் யாராவது அப்படி எண்ணியிருந்தால் அந்த
எண்ணத்தையும் விலக்க ப்ரயத்நப் படுவார்க ளென்று நம்புகி
றோம்.

**ஸபையும், அந்ய ஸம்ப்ரதாயஸ்தர்களும்.**

மேலும், இந்த ஸபையைப் பற்றிச் சொல்லவேண்டிய அம்
ஶம் மற்றொன்று உண்டு. ஸ்ரீ அஹோபில
மடத்துச் சிஷ்யஸபை யென்று இதற்குப் பெயர்
வழங்கி வருவதால், மடத்துக்குப் பஹிர்பூதர்
களான அந்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் ‘இந்த
ஸபையால் நமக்கு ஆகவேண்டுவது ஒன்றுமில்லை’ என்று நினைத்து
ஔதாஸீந்யத்தை வஹிக்கும் படியாக இருக்கலாம். அப்படி
அவர்கள் நினைத்திருப்பது பிசகு என்று நாம் சொல்ல முடியாது.
ஆனாலும், நம்முடைய ஸபையின் நோக்கங்களை ஶோதித்துப் பார்
க்குங்கால், முதன்மையாகச் சொல்லக்கூடியதாகவும், அத்யந்தம்
ப்ரதாநமுமாக இருப்பது, பகவத் ராமாநுஜஸித்தாந்தத்தின் ப்ர

வர்த்தநமே. இந்த விஷயத்தில் நமக்கு விப்ரதிபத்தி யாதொன்று மில்லாதபடியால், இந்த முக்கிய அம்ஶத்தில் நாமெல்லாரும் ஒன்று சேர்வதில் எவ்விதமான ஆக்ஷேபமும் உண்டாகக் காரணமில்லை. ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றிப் பேசுவதும், அந்த அம்ஶங்களைப் பர்யாலோசிப்பதும் காதாசித்கமாகத்தா னிருக்கும். அது விஷயத்தில் இதர ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குக் கரணீயம் அதிகமாக இல்லாவிட்டாலும், முக்கியவிஷயம் ஸமாநமாக இருக்கிறபடியால், அவர்களது ஸஹாயமும் இந்த ஸபைக்கு அவஶ்யமே. ஆஸ்திகர்களான அவர்களெல்லாரும் இதை உணர்ந்து நமக்கு அபேக்ஷிதமான அவலம்பத்தைக் கொடுத்து, கைங்கர்யமாக ஏற்றுக்கொண்டிருக்கும் நமது ப்ரவ்ருத்திக்கு ஸமீசீந நிஷ்பத்தியை ஸம்பாதித்து வைப்பார்களென்று நம்புகிறோம். வருகிற மார்கழி மாஸத்திய ஸங்கத்தில் இந்த இஷ்ட ப்ராப்தி நமக்குக் கிடைக்க வேணுமாகப் பகவாந் அநுக்ரஹிக்கவேணும். அங்கங்கே எழுந்தருளியிருக்கும் ஆஸ்திக ஶிரோமணிகள் எல்லாரும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்களோ அந்ய ஸம்ப்ரதாயஸ்தர்களோ ஒன்று சேர்ந்து, இனிவரும் மஹாஸங்கத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து, இந்த ஸங்கத்தில் வ்யாப்ருதர்களாக இருக்கும் நமது ப்ரவ்ருத்தியை ஸந்மார்க்கத்தில் ப்ரவர்த்திப்பித்து, இன்னும் தங்களால் செய்யக்கூடிய ஸஹாயத்தைச் செய்தால் மிகவும் அழகாக இருக்கும். இந்த விஷயம் ஒரு வ்யக்திக்கு மாத்திரம் சொந்தமான கார்யமன்று; ஆஸ்திகர்கள் எல்லாருக்கும் ஸாமாந்யமானது. ஆகையால், எல்லாரும் ஶ்ரத்தையோடு இதில் ப்ரவ்ருத்திப்பதுதான் ந்யாயமானது; அநுபவக்குறைவாலாதல் பர்யாலோசனைக்குறைவாலாதல் நேரக்கூடிய பிசகுகளும் நிவ்ருத்தியாகும். அப்படியே எல்லாரும் கிருபை செய்யவேண்டுமென்று நிரம்பவும் ப்ரார்த்திக்கிறோம்.

---

# ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை.

ஸ்ரீ அஹோபில மடத்து ஸம்ப்ரதாயம் அபிவ்ருத்தமாகும்பொருட்டும், அதுமூலமாக ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்யும்பொருட்டும் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை என்னும் ஓர் ஸபை சென்ற ஸாதாரண௵ சித்திரை௴ முதல் ஏற்பட்டு நடந்து வருகின்றது. அதைப் பற்றிய சில விதிகள் கீழே சொல்லப்பட்டிருக்கின்றன :—

1. மடத்தின் சிஷ்யர்கள் எல்லாரும் இதிற் கூறப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கத்தாராகச் சேரலாம்.

2. சபையின் அங்கத்தாராகச் சேர விருப்ப முள்ளவர்கள் விதிகளில் காட்டியிருக்கிற மாதிரிப்படி மனுச் செய்து கொள்ள வேணும். மனுதாரர், அந்த மனுவைத் தாம் வசிக்கும் பிரிவின் காரியதரிசிக்கு ஒரு வருஷக் கட்டணத்தொகையுடன் அனுப்பவேண்டும்.

3. முதல் வகுப்பு அங்கத்தாராகச் சேர்வதற்கு ஒரு வருஷச் சந்தா ரூபாய் 5. இரண்டாவது வகுப்பு அங்கத்தாராக ஒரு வருஷச் சந்தா ரூ. 1.

4. அங்கத்தார்களில் யாராவது எப்பொழுதாவது ஒரே தடவையில் மொத்தமாய் ரூபாய் 50 அல்லது ரூபாய் 10 கட்டிவிட்டால், அவர்கள் ஜீவதசை வரையில் முறையே 1-வது அல்லது 2-வது அங்கத்தாராக ஏற்படுத்தப்படுவார்கள். அவர்கள் பிறகு வருஷச்சந்தாத் தொகை கட்டவேண்டிய தில்லை.

5. கீழே சொன்ன 1-வது விதியின்படி அங்கத்தினராக வரக்கூடாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாராயிருந்தாலும் வருஷம் சந்தாவாக ரூபாய் 3 செலுத்தி விட்டால், அவர்கள் அபிமானிகளாக (Associates) நியமிக்கப்படுவார்கள். சபையில் அபிப்ராயங் கொடுக்கவும், வேறுவேலைகளில் மாறவும், கார்யநிர்வாக சங்கத்தின் அங்கத்தாராக இருக்கவும் இவர்களுக்கு அதிகாரமில்லை.

6. கீழே காட்டிய விதியின்படி சபையிற் சேரத்தக்கவர்கள் தங்களைச் சேர்த்துக் கொள்ளும்படி சபையின் பொதுக்காரியதரிசிக்கு நேராக மனு அனுப்பிக்கொள்ளலாம்.

7. ஒரு வருஷத்திற்குள் எப்பொழுதாவது அங்கத்தார்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம். ஆனால், முழு வருஷச் சந்தாத்தொகையைக் கட்டிவிட வேண்டும்.

8. ஒவ்வொரு வருஷத்திலும் அக்டோபர்௴ முதல்தேதிமுதல் அடுத்த செப்டம்பர்௴ 30உ முடிவு வரையிலுள்ள காலமே, சபையின் வருஷம்.

இன்னும் சபையின் மற்ற விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டு மென்கிற விருப்ப முள்ளவர்கள், சபையின் பொதுக்காரியதரிசியாகிய சித்தூர், வக்கீல் ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ ஸஹஸ்ரகீதி வ்யாக்யான பகவத்விஷய

மாஸிக பத்ரிகா.

இந்தப் பகவத்விஷய க்ரந்தத்தில், நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி மூலமும், அதற்கு வ்யாக்யானமாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படியும், ஸ்ரீ [illegible] ஸ்வாமி அருளிச்செய்த தமிழ்ப் பதினெண்ணாயிரப்படியும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியும், இதின் ஸாரமும், இவை யிரண்டுக்கும் வ்யாக்யானங்களும் அடங்கி யிருக்கின்றன. பத்து ஒன்று ஒரு ஸஞ்சிகையாக அச்சிடப்பட்டு, 4 - பத்து வெளியாகி யிருக்கின்றது. 5-வது பத்து அச்சிலிருக்கிறது. பத்து ஒன்றுக்கு வி. பி. சார்ஜுஉள்பட விலை அணு 7. வேண்டியவர்கள் இந்த விலாஸப்படி பெற்றுக்கொள்ளலாம்.

கிடாம்பி, ஸ்ரீ. வரதாசாரியர், சுண்டப்பாளையம்,

கோயமுத்தூர் ஜில்லா.

# ப்ருங்காமலக தைலம்.

மனத்திற்கு மிகுந்த க்லேஶத்தைக் கொடுக்குமளவு கஷ்டப்பட்டு வேலை செய்யுமவர்களுக்கு இந்தத் தைலம் நிரம்ப ஆநுகூல்யத்தைச் செய்யும். தேஹத்திலிருக்கும் உஷ்ணாதிக்யத்தை ஶமநம் செய்து மனத்திற்கு ஒரு ஆஹ்லாதத்தை உண்டுபண்ணுவதுடன், புத்திக்குத் தெளிவையும் கிதாகத்தையும் கொடுக்கக்கூடிய யோக்யதை இந்தத் தைலத்திற்கு உண்டு. ஶ்ரமப்பட்டுப் படிக்கும் மாணாக்கர்களுக்கு இது அத்யந்தம் உபகாரகம்.

### உபயோகிக்கும் மாதிரி.

காலையில் ஶிரஸ்ஸில் தேய்த்துக்கொண்டு சீயக்காயை உபயோகித்து ஸ்நாநம் செய்யவேணும். ஸோப் முதலியவற்றை உபயோகிப்பது ஶ்லாக்யமன்று. உஷ்ண ஜலத்திலாவது குளிர்ந்த ஜலத்திலாவது யதா ஸௌகர்யம் ஸ்நாநம் செய்யலாம். ஆஹாரநியமாதிகள் ஒன்றுமில்லை.

**இதன் விலை ஒரு புட்டி ரூபா. 1—2—0.**

வேண்டுமவர்கள், வட ஆற்காடு ஜில்லா, சித்தூரிலிருக்கும் ஆயுர்வேத வைத்யர் பண்டித கே. எஸ். ராகவ ஐயரிடத்தில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

வேதநயம்! வேதசுகம்!!

# நாகரிக மெடிகல் ஹால் மயிலாப்பூர்.

## மதராஸ்.

ஆயுர்வேத பூஷணம்.

பண்டிட். U. ராமநாதசாஸ்திரி.

அழகான கலரும் அளவிலாத ருசியும்

அடங்காதவாஸனையும் கூடிய சில மருந்துகள்.

### (1) ஆனந்தப் பற்பொடி.

பற்பொடிக்கு வேண்டிய எல்லாக்குணமும் இதில் குடிகொண்டு இருப்பதால், இதனால் உண்டாகும் ஆச்சரியகரமான சுகத்தை அளவிட முடியாது. தந்தத்தில் உண்டான ஈறு, ரத்தம் வருதல், சொத்தை, ஆட்டம், நாற்றம் முதலான எல்லா விகாரங்களும் பறந்தோடும். பல்தேய்த்த வுடனே பற்களைச் சங்கும்போல் வெளுக்கக்காணலாம். பல்தேய்த்தபிறகுகூட வெகுநேரம்வரையில் வாய்க்குள் சுகந்தமானவாசனை வீசிக்கொண்டே இருக்கும். இதற்கு மகாகனவான்களான அநேகம் ஜட்ஜிகள் முதலான பிரபுக்களால் அபாரமான ஸர்டிபிகேட்டுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வளவு ப்ரஸித்தி பெற்ற இதற்கு விலையும் ரொம்பவும் ஸ்வல்பம்.

டப்பி 1-க்கு ரூபா. 0—2—6.
டஜன் 1-க்கு ரூபா. 1—8—0.

### (2), சிரேஷ்டமான ஸிரப்புகள்.

ரோஜாபுஷ்பம் - ஆரஞ்சுபழம் - எலுமிச்சம்பழம் - பாதம் கொட்டை, பேயன் வாழைப்பழம்முதலான ஷர்பத்துகள் எக்காலத்திலும் கெடாமல் இருக்கும்படி கையினால் தொடாமல் யந்திரத்தினால் செய்யப்படுகின்றன. இதைப் பார்த்த வுடனே வாஸனையாலும், ருசியாலும், அந்தந்த வஸ்துவின் ஸ்வரூபத்தை அந்தந்தப்படி பரீக்ஷித்துக்கொள்ளலாம். இது, தாதுபுஷ்டிக்கு வெயிற்காலத்திலும் மழைக்காலத்திலும் காலபேதம் இராமல் பணிக்காக உபயோகிக்கக் கூடியது. இவைகளின் ருசியும் குணமும் அநந்தம். எல்லா ஸிரப்புகளுக்கும் விலை ஒன்றுதான்.

$\frac{1}{4}$-வீசை கொண்ட சீசா 1-க்கு ரூபா. 1—0—0.

அநேக பேபர்களிலும் விளம்பரம் இருப்பதால், ஆர்டர் கடிதத்தில் இந்தப் பத்திரிகையைக் குறித்துக்காட்டி எழுதவேண்டும்.

சாஸ்திரீயமான எந்த ஔஷதமும் ஷை மருந்துஷாப்பில் விற்பனைக்குத் தயாராக இருக்கும். இவைகளுக்கு V. P. பிரத்தியேகம்.

# பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழேகண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ,, | $2\frac{1}{8}$ | ,, | 6 முதல் | | 8 | வரை |
| 5 | ,, | 3 | ,, | 7 | ,, | 9 | ,, |
| 6 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 8 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 9 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 10 | ,, | 13 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 12 | ,, | 15 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 14 | ,, | 16 | ,, |
| 10-12 | ,, | 3 | ,, | 15 | ,, | 20 | ,, |
| 15-16-18 | ,, | $2\frac{1}{3}$-3, சேலைகள் | | | | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

## பீதாம்பர பட்டுச்சேலைகள்.

16 முழம் நீளம் $2\frac{1}{2}$-அகலம் விளிம்பு முந்தி ஜரிகை பூவேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். நயம் சேலை 1-க்கு ரூ. 30 முதல் 200 வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30 வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ 35 முதல் 300 வரை. மட்டம் ரூ. 25 முதல் 30 வரை.

## ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகைபூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ. 2 முதல் ரூ. 15 வரை கிடைக்கும்.

## பட்டுதுப்பட்டாக்கள்.

6 முதல் நீளம் $2\frac{1}{2}$ முதல் அகலம்; விளிம்பு முந்தி ஜரிகைவேலைகளும் உடலில் ஜரிகைபூக்கள்போட்டது. மட்டம் ரூ. 7 முதல் 15 வரை நயம் 15 முதல் 50 வரை.

## காஷ்மீர் சால்வைகள்.

கம்பிளி (Woolen) காஷ்மீர் சால்வைகள் 6 முழம் நீளம், $2\frac{1}{2}$-அகலம். விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் மூலையில் மாங்காய் போட்டது. மட்டம் ரூ. 9 முதல் 15 வரை. நயம் 15 முதல் 100 வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்:—மனேஜர்

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.


OFFICE OF ... BOOKS, REGISTERED 1 DEC 1911 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்ஸ்ரு கார்த்திகைமீ . [ஸஞ்சிகை 10.

## ஸாங்க்ய தர்ஶநம். (I)

நமது தேசத்தில் வெகுநாளாய் வழங்கிவரும் தர்ஶநங்களில், சில பாஹ்யமென்றும், சில வைதிகமென்றும் பெயர்பெற்றிருக்கின்றன. சார்வாகம், பௌத்தம், ஜைநம் என்கிற தர்ஶநங்கள் பாஹ்யங்கள்; மற்றவைகள் அநேகமாய் வைதிகங்கள்; அதாவது-வேதத்தின் ப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டவைகள். வேதப் ப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டு ஈஶ்வர னில்லையென்றாலும், அவைகளுக்கு வைதிகமென்கிற பெயர்க்குக் குறைவில்லை. இந்த வைதிக தர்ஶநங்களில் ஆறு தர்ஶநங்கள் முக்கியமானவை. அவை யாவன:—ஸாங்க்யம், யோகம், ந்யாயம், வைஶேஷிகம், பூர்வமீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை என்பவைகள்தான். இந்தத் தர்ஶநங்களுக்கு முறையே, கபிலர், பதஞ்ஜலி, கௌதமர், அக்ஷபாதர், ஜைமிநி, பாதராயணர் என்று பெயருள்ள மஹர்ஷிகள் முதல்ப்ரவர்த்தகர்கள். ஒவ்வொரு தர்ஶநத்திலும் ஸூத்ரம், வ்ருத்தி, பாஷ்யம், வார்த்திகம், டீகை என்று பலவிதமான பெயர்களையுடைய க்ரந்தங்கள் உள்ளன. இந்த மதங்களில் எது முந்தியுள்ளது, எது பிந்தியுள்ளது என்று நிர்ணயிப்பது கஷ்டமான காரியம். ஆனால், பௌத்தம், ஜைநம் என்கிற பாஹ்ய தர்ஶநங்களிரண்டை அபேக்ஷித்து மற்ற வைதிக தர்ஶநங்கள் ப்ராசீநங்களென்றே சொல்லலாம். ஒவ்

வொரு தர்ஶநத்திலும் தம் தமக்கு ஆதி க்ரந்தமான ஸூத்ரங்களில் பூர்வர்களான ஆசார்யர்களின் பெயர் வருவதாலும், ஸூத்ரங்கள் விஸ்தாரமான உபதேஶங்களைச் சுருக்கிக் காட்டுவதாலும், ஸூத்ர நிர்மாண காலத்துக்கு முந்தியே அந்தந்தத் தர்ஶநங்கள் ப்ரவசநஞ் செய்யப்பட்டு வந்திருக்கவேணும். பாதராயணர் என்கிற வேத வ்யாஸரும் அவர் ஶிஷ்யரான ஜைமிநியும் கலியுக ஆரம்பத்தில் இருந்தபடியால், அவர்கள் காலம் இப்போதைக்கு 5000-வருஷத்திற்கு முந்தியதென்று நம் தேஶத்தவர்கள் ஸாமாந்யமாகச் சொல்வார்கள். பாஶ்சாத்ய பரீக்ஷகர்கள் இந்த ஸூத்ரங்களெல்லாம் இதற்கு முன் 2500 - வருஷங்களுக்குள் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று அபிப்ராயப் படுகிறார்கள். யோகஸூத்ர ப்ரவர்த்தகரும் மஹா பாஷ்யகாரருமாகிய பதஞ்ஜலிபகவான் இதற்கு 2060 - வருஷத்துக்குமுன் பாஷ்யம் செய்திருக்க வேண்டுமென்றும், "அருணத் யவநஃ ஸாகேதம்" என்னும் பாஷ்ய வாக்கியத்தைக் கொண்டும் யவநர்கள்சரித்ரத்தைக் கொண்டும் அவர்கள் அவ்வாறு நிச்சயிக்கிறார்கள். நந்தராஜ்யத்துக்குப் பிறகு ஏற்பட்ட மௌர்யவம்ஶத்தின் முதல் சக்ரவர்த்தியாகிய சந்திரகுப்த மௌர்யன் என்பவர் இதற்கு 2233 - வருஷத்துக்குமுன் [ அதாவது - க்றைஸ்தவாப்த ஆரம்பத்துக்கு முன் 322-வது வருஷத்தில்] பட்டத்துக்கு வந்தாரென்பதும் அவர்கள் ஸித்தாந்தம். பாஶ்சாத்ய கால நிர்ணயங்களில் அநேகம் ஸம்ஶய க்ரஸ்தமாயிருந்தாலும், இந்த இரண்டு அம்ஶங்களும் ப்ரபலமான யுக்திகளைக்கொண்டு ஏற்பட்டிருப்பதனாலும், மற்ற நிர்ணயங்களுக்கெல்லாம் இவை மூலபூதங்களானதனாலும், இவைகளின் யுக்திகளை நமது வைதிகர்கள் அறிந்து விசாரிப்பது அவசியமானது.

இந்தத் தர்ஶநங்களில் உத்தர மீமாம்ஸை யென்னும் வேதாந்தமே நமக்கு முக்கியமானபோதிலும், இதர தர்ஶநங்களின் மரியாதைகள் அவசியம் அறியப்பட வேண்டியவைகளே. வேதாந்தத்தில், இதர தர்ஶநங்களில் சிற்சில அம்ஶங்கள் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட விரோதமான பாகங்கள்தவிர மற்றைப் பாகங்கள் நமக்கு உபாதேயங்களாயிருக்கின்றன. முக்கியமாய் ந்யாயம் என்கிற தர்க்க ஶாஸ்த்ரமும் யோகமும் ஸாங்க்யமும் பூர்வ மீமாம்ஸையும் இந்த தேஶத்துப் பண்டிதர்களால் பாடப்ரவசநங்கள் செய்யப்பட்டு வ்ருத்தி யடைந்திருக்கின்றன. இவை



களில் ஸாங்க்ய ஸித்தாந்தமே நமக்கு முக்கியமாய்ப் பூர்வபக்ஷமாயுள்ளது. ப்ரஹ்ம ஸூத்ரத்தில் அநேக பாகங்களை அறிவதற்கு இந்த ஸித்தாந்தம் மிகவும் அவஶ்யமாய் வேண்டியிருக்கிறது. இந்த ஸித்தாந்தத்துக்கும் விஶிஷ்டாத்வைதமாகிற நம்முடைய மதத்துக்கும் தத்வபாகங்களில் ஸமாநமான கொள்கைகள் பல உண்டு. நமது இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் இந்த ஸாங்க்ய ப்ரவர்த்தகரான கபில மஹர்ஷியை விஷ்ணுவின் அவதாரமென்றும், பெரிய ஜ்ஞாநியென்றும் சொல்லியிருக்கின்றது. "ருஷிம் ப்ரஸூதம் கபிலம்" என்கிற ஶ்ருதி வாக்யத்தையும் கபிலர் ப்ராசீந மஹர்ஷியென்பதற்கு ஸாதகமாக உதாஹரிக்கிறார்கள். ஸர்வ ஶாஸ்த்ரங்களுக்கும் தேஹாத்ம விவேகம் ப்ரதாநமாதலால் இதை ஸ்திரமாய் ஸித்தாந்தித்த ஸாங்க்யஶாஸ்த்ர காரர்களை லோகோபகாரிகளென்றே நாம் சொல்லவேண்டும். ஆகையால், நாம் இந்தத் தர்ஶநத்தின் முக்கியமான ப்ரகாரங்களை இந்த வ்யாஸத்தில் விசாரிப்போம்.

இந்தத் தர்ஶநத்துக்கு மூலபூதமான க்ரந்தங்கள் நான்கு: அவையாவன - கபில ஸூத்ரம், ஷஷ்டிதந்த்ரம், தத்வஸமாஸ ஸூத்ரம், ஸாங்க்ய காரிகை. இவைகளின் வ்யாக்யாநங்களில், காரிகைகளின் வியாக்யாநங்களாகிய கௌடபாத பாஷ்யமும், வாசஸ்பதி மிஶ்ரராற் செய்யப்பட்ட ஸாங்க்ய தத்வ கௌமுதீ யென்னும் க்ரந்தமும், ஸூத்ர பாஷ்யமாகிய விஜ்ஞாந பிக்ஷு என்பவருடைய ஸாங்க்ய ப்ரவசந பாஷ்யமுமே முக்கியமானவைகள். தத்காலத்தில் வழங்கிவரும் கபிலஸூத்ரங்கள் கபிலரிஷியாற் செய்யப்பட்டவைகளல்லவென்றும், விஜ்ஞாந பிக்ஷுவாலோ அவருக்கு முந்தின யாராலோ செய்யப்பட்டவைகளென்றும் பரீக்ஷகர்கள் பஹுவாய் எண்ணுகிறார்கள். இதற்கு நிதாநம், வேதாந்த பாஷியகாரர்களும், ஸ்ரீநிகமாந்த தேஶிகன் அளவாயுள்ள ப்ரௌட க்ரந்தகர்த்தாக்களும் இந்த ஸூத்ரங்களில் ஒன்றையும் தமது க்ரந்தங்களில் உதாஹரிக்காததே: ஆர்யா ரூபமான காரிகைகளில் சில ஸூத்ரங்களாக அமைந்திருப்பதும், பரீக்ஷகர்களுக்கு வ்யக்தமாகத் தோன்றும். ஆகிலும், காரிகைகளில் இல்லாத அம்ஶங்கள் அநேகம் ஸூத்ரங்களில் இருப்பதனால், ப்ராசீந ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்தே ஸூத்ரங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த ஸாங்க்ய ப்ரவர்த்தகர்களில் முக்கியமானவர்கள் கபிலர், ஆஸுரி, பஞ்சஶிகர்

என்பவர்களே. இவர்களில் பஞ்சஶிகாசார்யரோ விஸ்தாரமான ஷஷ்டிதந்த்ரமென்னும் க்ரந்தத்தைச் செய்ததாகத் தெரிகிறது. இந்தக்ரந்தம் 60 - முக்கியமான தத்வார்த்தங்களைப் போதிப்பதால் இப்பெயர்கொண்டதென்று சொல்லுகிறார்கள். இந்த க்ரந்தம் இப்போது இல்லை: தத்வஸமாஸ ஸூத்ரம் இப்போ திருந்தபோதிலும் அது மிகவும் சிறிய க்ரந்தம்; அதிலும் இந்த 60 - அர்த்தங்கள் எண்ணப்பட் டிருக்கின்றன. இந்த ஶாஸ்த்ரத்துக்கு ஸாங்க்யமென்று பெயர் ஏற்பட்டதும், தத்வங்களை "ஸங்க்யா" அல்லது கணக்குச் செய்து நிச்சயிப்பதால்தான். இந்த 60 - அர்த்தங்களாவன:— ப்ரக்ருதி புருஷஸம்பந்தமான 10 - அர்த்தங்களும், அஜ்ஞாநம் என்கிற விபர்யயம் 5 - விதமும், 9 - துஷ்டிகளும், 28 - அஶக்திகளும், 8 - ஸித்திகளும், ஆக 60-விஷயங்கள். ஸாங்க்ய காரிகை யென்னும் க்ரந்தம், ஈஶ்வர க்ருஷ்ணன் என்கிற ஆசாரியரால் செய்யப்பட்டது. இதில் 70-ஆர்யைகளால் இந்த ஸாங்க்ய ஶாஸ்த்ரம் ஸங்க்ரஹிக்கப்பட் டிருக்கிறது. இதுவும் இதன் வ்யாக்யாநமான கௌமுதியுமே இந்த ஶாஸ்த்ரத்துக்குப் போதுமான க்ரந்தங்கள். இந்தக் கௌமுதி க்ரந்தத்தின் கர்த்தாவாகிய வாசஸ்பதி மிஶ்ரர் ஆறுதர்ஶநங்களிலும் க்ரந்தங்கள் செய்தவர். ஶாங்கரபாஷ்யத்தின் வ்யாக்யாநமான பாமதி யென்னும் க்ரந்தம், இவராற் செய்யப்பட்டது. இவர்காலம் க்றைஸ்தவாப்தம் 9 - வது ஶதகமென்று சொல்லுகிறார்கள்.

ஸாங்க்யத்தில் தத்வங்கள் 25. அதில், முதல்தத்வம் - ப்ரக்ருதி. இதன் பரிணாமங்கள் - 2-முதல் 24 - வரையிலுள்ள தத்வங்கள். புருஷன் அல்லது சேதந தத்வம் 25-வது. ஈஶ்வரனை இந்த ஶாஸ்த்ரத்தில் இருப்பதாய் ஒப்புக்கொள்ளவில்லை. இந்தத் தத்வங்களை ஸங்க்ரஹிக்கிறது அடியில்வரும் காரிகை:—

"மூலப்ரக்ருதிரவிக்ருதிர் மஹதாத்யா: ப்ரக்ருதிவிக்ருதய: ஸப்த ।
ஷோடஶகஸ்து விகாரோ ந ப்ரக்ருதிர் ந விக்ருதி: புருஷ: ॥" (கா. ௩.)

இதன் அர்த்தம்—அசித் என்று வ்யவஹரிக்கப்படும் எல்லா வஸ்துக்களுக்கும் ஆதியான அவஸ்தைக்கு ப்ரக்ருதி யென்று பெயர். இது ஒன்றுக்கும் விகாரமன்று; அதாவது - இதற்குமூலமான வஸ்து வேறொன்றும் இல்லை. இந்த ப்ரக்ருதியிலிருந்து



க்ரமமாய் ஏழுதத்வங்கள் உண்டாகின்றன; இவைகள் இன்னும் சிலவஸ்துக்களுக்குக் காரணமாகையால், ப்ரக்ருதியாகவும் விக்ருதியாகவும் சொல்லப்படுகின்றன. இவைகள் மஹாந், அஹங்காரம், ரு-தந்மாத்ரைகள், ஆகிய எ. 16-தத்வங்கள் கேவலம் விகாரங்கள்: அவையாவன - மநஸ், ரு - ஜ்ஞாநேந்த்ரியங்கள், ரு - கர்மேந்த்ரியங்கள், ரு - பூதங்கள். 25 - வது தத்வமாகிய புருஷன் ப்ரக்ருதியும் அல்ல, விக்ருதியுமல்ல.

ப்ரக்ருதிக்கு மூலம் சொல்ல வேண்டி வந்தால் அதற்கும் மூலமென்று அநவஸ்தைவருமாகையால், அதையே மூலதத்வமாக இந்த ஶாஸ்த்ரம் சொல்லுகிறது. இது மிகவும் ஸூக்ஷ்மமான தத்வமாகையால், கண்களுக்குப் புலப்படுவதில்லை. இது போலவே மற்றைத் தத்வங்களில் அநேகம் அதிக ஸூக்ஷ்மமென்கிற காரணத்தினாலேயே அப்ரத்யக்ஷங்களா யிருக்கின்றன.

வஸ்து இருந்தும் கண்ணுக்குப் புலப்படாமை பலகாரணங்களால் உண்டாகலாம். அவைகளை ஸங்க்ரஹிக்கிறது அடுத்த காரிகை.

"அதிதூராத் ஸாமீப்யாத் இந்த்ரியகாதாந் மநோऽநவஸ்தாநாத் । ஸௌக்ஷ்ம்யாத் வ்யவதாநாத் அபிபவாத் ஸமாநாபிஹாராச்ச" (கா, 7)

இதன் அர்த்தம்:— (அதிக உயரத்தில் பறக்கும் பக்ஷிபோல) அதிக தூரத்தினாலும், (கண்ணிலிட்ட மைபோல) அதிக ஸமீபத்தினாலும், (குருடன் கண்முதலியவைபோல) இந்த்ரியம் நாஶமடைவதாலும், (காமுகன் மனதைப்போல) மனம் வேறிடத்தில் நிற்பதாலும், (பரமாணுக்கள்போல) மிகுந்த நுட்பமாயிருப்பதினாலும், (சுவர் முதலானவற்றால்) மறைக்கப் படுவதினாலும், (பகலில் நக்ஷத்ரங்கள்போலப்) பலமான தேஜஸ்ஸினால் மலிநமாய்ப் போவதனாலும், ( மழைஜலம் ஸமுத்ரஜலத்திற் கலப்பதுபோல ) ஸமகுணமான வஸ்துவுடன் கலந்துபோவதனாலும், வாஸ்தவத்தில் உள்ளதான வஸ்துக்கள் ப்ரத்யக்ஷமாகிறதில்லை. இவைகளில், ப்ரதாநமென்னும் ப்ரக்ருதி அதிக ஸூக்ஷ்மமா யிருப்பதால், கண்களுக்குத் தென்படாது. அதன் கார்யமான பஞ்சபூதங்களினாலும், அவைகளால் உண்டான ஶரீரங்களினாலும் ப்ரக்ருதி முதலானவை உண்டென்று நிஶ்சயிக்கவேணும்.

ஸாங்க்யர்கள் ஸத்கார்யவாதிகள்; வேதாந்திகளும் அப்படியே. அதாவது - கார்யரூபமான குடம், குண்டலம் முதலான வஸ்துக்கள் தமக்கு முன்னுள்ள மண், ஸுவர்ணம் முதலான வஸ்துக்களிலிருக்கின்றன வென்றும், காரணமும் காரியமும் அவஸ்தா பேதமே யொழிய வஸ்து பேதமல்ல வென்றும் ஒப்புக்கொண்டவர்கள். ஆகையால், எந்த வஸ்து ப்ரக்ருதியோ அதே வஸ்து கார்யாவஸ்தையில் மஹாந் முதல் பூதங்கள்வரையிலுமுள்ள அவஸ்தைகளை யடைகிறது என்பது ஸித்தாந்தம். ப்ரக்ருதிக்கு அவ்யக்தம் என்றும், அதன் விகாரமான மற்றைத் தத்வங்களுக்கு வ்யக்தங்களென்றும் பெயர். இந்த இரண்டுக்கு முள்ள பேதங்கள், பின்வரும் காரிகையாற் சொல்லப்படுகின்றன.

“ஹேதுமதநித்யமவ்யாபி ஸக்ரியமநேகமாஶ்ரிதம் லிங்கம்।
ஸாவயவம் பரதந்த்ரம் வ்யக்தம் விபரீதமவ்யக்தம்”
(கா, 10)

ப்ரக்ருதி யல்லாத வ்யக்தமென்ற தத்வங்கள் - தங்கள் தங்களுக்குக் காரணமான பூர்வாவஸ்தை யுள்ளவைகள், அநித்யங்கள், எங்கும் வியாபித்திராதவைகள், சலநமுள்ளவைகள், பலவிதமான ஸ்வரூபமுள்ளவைகள், தம் தம் காரணவஸ்துவை ஆஶ்ரயித்தவைகள், ஒன்றோ டொன்று சேர்ந்த அவயவங்களையுடையவைகள், தம் தம் கார்யத்தை உண்டாக்குவதிலும் பிரதாநதத்வத்தின் உதவியை அபேக்ஷிப்பதால் பரதந்த்ரமானவைகள். மூலகாரணமான ப்ரக்ருதியோ, இதில் ஒவ்வொன்றுக்கும் விபரீதமான ஸ்வபாவமுள்ளது; அதாவது - நித்யமாய் ஸ்வதந்த்ரமாய் அவயவமில்லாததும் அசைவில்லாததும் ஸர்வ வ்யாபியுமான ஒரு மூல வஸ்து.

இந்த ப்ரக்ருதிக்கு ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்று பாகங்களுண்டு. இவைகள் ஸமமாய்ச் சேர்ந்தது ப்ரக்ருதிதத்வம். ஸத்வம், லகுவாய் ப்ரகாஶத்துக்கும் ஜ்ஞாநத்துக்கும் காரணமாய் ஸுகத்தைக் கொடுக்கும். தமஸ், கநமாய் மறைவுக்கும் அஜ்ஞாநத்துக்கும் காரணமாய் மோஹத்தைக் கொடுக்கும். ரஜஸ், இரண்டின் ப்ரவ்ருத்திக்கும் காரணமாய்த் துக்கத்தைக் கொடுக்கும். இந்த ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களுக்குக் குணங்களென்று பெயர் வழங்கினாலும், ஸாங்க்ய மதத்தில் இவைகள் த்ரவ்ய ரூபமே.



இந்தக் குணங்கள் வஸ்துக்களிலும் ஶரீரங்களிலும் ஏற்றக்குறை வாய் வ்யாபிப்பதால் அவைகளுக்குக் குணபேத முண்டாகிறது. ஶரீரஸம்பந்தமாகவே, ஸர்வப்ராணிகளும், ஸாத்விக குணம் மேலிட்டிருந்தால் ஸாத்விக ரென்றும், ராஜஸ குணத்தால் ராஜஸ ரென்றும், தாமஸத்தால் தாமஸ ரென்றும் சொல்லப்படுகிறார்கள்; அந்தந்தக் குணங்களின் ஆதிக்யத்தால் இந்தப்பெயர்கள் உண்டாவதே யொழிய, ப்ராக்ருதமான ஒருவஸ்துவிலும் இந்தக் குணங்கள் பிரிந்திருப்பதில்லை. இந்தக் குணங்களெல்லாம் ஸமமாய்ச் சேர்ந்து, இதர விகாரங்களின் காரியங்களுக்குச் சக்தியைக் கொடுப்பதும், மற்றைக் கார்யவர்க்கங்களின் குணங்களைத் தன்னில் அடக்கிக் கொண்டதும், பலவிதமான கார்யங்களுக்கு மூலபூதமு மானது, ப்ரக்ருதி தத்வம்; இந்த ஒன்றான ப்ரக்ருதி, மஹாந்முதலான வஸ்துக்களாய் மாறி ப்ரபஞ்சத்தை உண்டாக்குகிறது.

இந்த ப்ரக்ருதி விக்ருதிகளைத் தவிர இதர ஸித்தாந்தங்களில் ஆத்மாவென்றும் ஜீவனென்றும் சொல்லப்படுகிற புருஷனென்னும் சேதநவஸ்துவொன்று உண்டு. ஶரீரத்தைக் காட்டிலும் வேறான ஆத்மா உண்டென்று பின்வரும் காரிகை போதிக்கிறது.

“ஸங்காத பரார்தத்வாத் த்ரிகுணாதி விபர்யயாததி
ஷ்டாநாத். புருஷோஸ்தி போக்த்ருபாவாத் கைவல்யார்
தம் ப்ரவ்ருத்தேஶ்ச।” (கா, கஎ)

இந்த மஹாந் முதலான ஸர்வவஸ்து ரூபமான ஸமூஹம் வேறொரு வஸ்துவுக்குப் போக்ய மாகவேணுமே யல்லது அதற்கு ஒரு ப்ரயோஜந மில்லை; அப்படிப்பட்ட வஸ்து சேதநன். மேலும், மூன்று குணமுள்ள வஸ்துக்கள்போலே மூன்றுகுணமு மில்லாத வஸ்துவொன்று இருக்கவேண்டும்; (அசேதநமான ரதத்தையும் குதிரையையும் நடத்தும் ஸாரதிபோல) அசேதநமான வஸ்துக்களை ப்ரவர்த்திப்பது ஒன்று வேண்டும். எல்லாவஸ்துக்களையும் ஸாக்ஷியாய் அநுபவிக்கிற வஸ்து ஒன்று வேண்டும். ஶிஷ்டர்களெல்லாரும் மோக்ஷமடைய யத்நிக்கிறார்கள். ப்ரக்ருதிக்காவது அதன் விகாரங்களுக்காவது துக்கநிவ்ருத்தி ரூபமான மோக்ஷம் இருக்க நியாயமில்லை. இந்தக் காரணங்களால் இதர தத்வ பிந்நமான

புருஷனென்கிற தத்வமொன்று இருக்கிறதென்று நிச்சயிக்கப்படுகிறது. புருஷர்கள் அல்லது ஜீவன்கள் ஶரீரந்தோறும் வெவ்வேறாய் அநேகர்களென்றும் இந்த மதத்தின் கொள்கை. அப்படி இல்லாவிட்டால் வெவ்வேறு ஜநந மரணங்களும் ஸுகதுக்கஜ்ஞாநங்களும் தனித்தனியான ப்ரவ்ருத்திகளும் குணபேதங்களும் உண்டாகமாட்டா.

புருஷன் கேவலன் அல்லது குணரஹிதனென்றும், கர்த்ருத்வமில்லாத மத்பஸ்தனென்றும், ஸாக்ஷியேதவிர வேறு விதமான விகார மில்லாதவனென்றும், புருஷன்ஸந்நிதாநத்தால் ப்ரக்ருதிக்கு எல்லாவித சேஷ்டைகளும் உண்டாகின்றனவென்றும் இந்தத் தர்ஶநத்தின் கொள்கைகள். புருஷனுடைய சைதந்யம் ப்ரக்ருதியிலும் ப்ரக்ருதி கார்யங்கள் புருஷனிலும் பிரதிபிம்பிப்பதனால், புருஷனுக்கு, தான் செய்வதாயும் அனுபவிப்பதாயும் பிரமங்கள் உண்டாகின்றன. ஒருநொண்டியும் குருடனும் சேர்ந்தால், ஸ்வதந்த்ரமாகச் செல்ல ஶக்தியற்றிருந்தவர்கள் பரஸ்பரஸஹாயத்தைக்கொண்டு ப்ரவ்ருத்திப்பதுபோல, புருஷனுக்குப் பிரதாநத்தின் சேர்க்கையால் போகமும், பிறகு தனக்கும் பிரதாநத்துக்கும் இருக்கும் பேதத்தை விவேகித்தறிவதால் மோக்ஷமும் உண்டாகின்றன. ஸர்வஜகத்ஸ்ருஷ்டியும், ப்ரக்ருதிக்கு இந்தப் புருஷஸந்நிதாநமென்கிற சேர்க்கையாலே உண்டாகிறது. இதைப் பின்வரும் காரிகை சொல்லுகிறது.

> " புருஷஸ்ய தர்ஶநார்த்தம் கைவல்யார்த்தம் ததா ப்ரதா
> நஸ்ய । பங்க்வந்தவதுபயோரபி ஸம்யோகஸ்தத்க்ருத:
> ஸர்க்க: ॥" (கா, உக)

இப்படிப் புருஷன் கேவலனுய் நிர்க்குணனுய் நிர்வ்யாபாரனுயிருக்க மோக்ஷம் எப்படி யுண்டாகுமென்றால், புல் மேய்கிற பசுவுக்கு வத்ஸமிருந்தால் பால் சுரப்பதுபோல அசேதநமான ப்ரதாநத்துக்கும் புருஷன்மோக்ஷவிஷயமாய் ப்ரவ்ருத்தி உண்டாகிறது; அதாவது - புருஷ ஸந்நிதாநமிருந்தும் யாதொரு விகாரமு முண்டாகிறதில்லை. நாடக ஶாலையில் நர்த்தநம் செய்த ஸ்த்ரீ ப்ரேக்ஷகர்கள் பார்த்து ஸந்தோஷப்பட்ட பிறகு மறைந்து விடுவதுபோல, ப்ரக்ருதியும் புருஷனுக்கு விவேகம் பிறந்தவுடனே தன் ஸ்வபாவத்தால் தன் காரியத்தை நிறுத்திவிடுகிறது; இந்த ப்ரக்ருதி ஒரு உத்தமஸ்த்ரீயைப் போன்றது. பர்புருஷன் பார்த்தானென்று அறிந்ததும் லஜ்ஜையால் மறுபடி கண்ணில் படுகிறதில்லை; அதாவது - ஒருதரம் முக்தனான புருஷன் மறுபடியும் ஸம்ஸரிக்கிறதில்லை.



> " ப்ரக்ருதே: ஸுகுமாரதரம் ந கிஞ்சிதஸ்தீதி மே மதிர்ப
> வதி । யா த்ருஷ்டாஸ்மீதி புநர்ந தர்ஶநமுபைதி
> புருஷஸ்ய ॥" (கா, சுக.)

ஆகையால், பந்தமும் மோக்ஷமும் ஸம்ஸாரமும் எல்லாம் ப்ரக்ருதியைச் சேர்ந்தனவேயொழிய நிர்க்குணனான புருஷனுக்கு ஒருகாலும் ஒரு விகாரமும் ஏற்படுகிறதில்லை. " வ்யக்தாவ்யக்தஜ்ஞ விஜ்ஞாநம் " அல்லது ப்ரக்ருதி புருஷவிவேக மில்லாதவனாயில் தன ப்ரக்ருதிக்கு உண்டாகும் பந்த மோக்ஷங்களைப் புருஷன் தனக்கு உண்டாவதாக ப்ரமிக்கிறான்; வஸ்துஸ்வபாவத்தில் அவனுக்கு ஒன்றுமில்லை.

> " ஏவம் தத்த்வாப்யாஸாந்நாஸ்மி ந மே நாஹமித்யபரிஶே
> ஷம் । அவிபர்யயாத்விஶுத்தம் கேவலமுத்பத்யதே ஜ்ஞாநம் ॥"
> (கா, சுச.)

தத்வஜ்ஞாநம் பிறந்தபிறகு புருஷன் ப்ரக்ருதி ஸந்நிதாநத்தில் யாதொரு ப்ரமமும் கொள்ளாமல் மறுஶரீரத்திற்கும் காரணமில்லாமல் சுற்றிவிட்ட சக்கரம்போல எடுத்த சரீரம் விழும்வரையில் அதைத் தரித்துப் பிறகு முக்தியை யடைகிறான்.

> " ப்ராப்தே ஶரீரபேதே சரிதார்த்ததயா ப்ரதாநவிநிவ்ரு
> த்தௌ । ஐகாந்திகமாத்யந்திகமுபயம் கைவல்யமா
> ப்நோதி ॥" (கா, சுஅ.)

இவ்வாறு ஸாங்க்ய ஶாஸ்த்ரப்படி ப்ரக்ருதி புருஷர்கள் ஸ்வபாவத்தையும் மோக்ஷத்தின் ஸ்வரூபத்தையும் உபபாதித்தோம். இனி ப்ரக்ருதியின் ஸ்ருஷ்டி ப்ரகாரத்தையும், மோக்ஷ ஸாதநங்களையும் இந்த ஶாஸ்த்ரத்திற் சொல்லியபடியே அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:.

# கீதார்த்த ஸங்க்ரஹம்.

(தொடர்ச்சி.)

இனிக் கடைசியான இந்த மூன்று அத்யாயங்களால் "கர்மதீர் பக்திரித்யாதி: பூர்வசேஷோऽந்திமோதித:" என்கிறபடி கார்யநிரூபணம் செய்யப்படுகிறது என்று ஸங்க்ரஹிக்கத் திருவுள்ளம்பற்றி, முதலில் பதினாறுவது அத்யாயத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார்.

௨௰. தைவாஸுர விபாகோக்தி பூர்விகா சாஸ்த்ரவச்யதா ।
தத்வாநுஷ்டாந விஜ்ஞாந ஸ்தேம்நே ஷோடச உச்யதே ॥

தைவாஸுர விபாகோக்தி பூர்விகா-தைவ ஆஸுர விபாக கதநத்தை முதலாக வுடையதான, சாஸ்த்ரவச்யதா - சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்டிருக்குந் தன்மையானது [அதாவது - சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறபடியே ஸகல அநுஷ்டாநங்களையும் செய்கிற தன்மை], ஷோடச உச்யதே - பதினாறுவது அத்யாயத்திற் சொல்லப்படுகிறது. எதற்காக இது சொல்லப்படுகிறது என்றால், தத்வாநுஷ்டாந விஜ்ஞாந ஸ்தேம்நே - இதற்குமுன்னும் பின்னும் சொல்லப்படும் தத்வங்களின் விஜ்ஞாநமும், அநுஷ்டாநத்தின் விஜ்ஞாநமும் ஸ்திரமாக ப்ரதிஷ்டிதமாகும்பொருட்டு, இந்த சாஸ்த்ர பாதந்த்ரதை சொல்லப்படுகிறது. "தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ - ஜ்ஞாத்வா சாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி" என்கிற கடைசி ச்லோகத்தில் இந்த நியமநத்தைக் காணலாம். [தைவ ஆஸுர விபாகமும் "அபயம் ஸத்வஸம்சுத்தி:" என்று தொடங்கி, "த்வௌ பூதஸர்கௌ லோகேऽஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச" இத்யாதியான ச்லோகங்களிற் சொல்லப்படுகிறது.]

(௨௰)



பதினாறுவது அத்யாயத்தில் 'தத்வஜ்ஞாநமும், அதை அடைவிப்பிக்கக் கூடிய உபாயங்களின் ஜ்ஞாநமும், வேதத்தையே மூலமாக வுடையது' என்று சொல்லப்பட்டது. பதினேழாவது அத்யாயத்தில், சாஸ்த்ரங்களிற் சொல்லப்படாத கர்மம் ஆஸுரமாகையால் நிஷ்பலமென்றும், சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்குங் கர்மம் ஸத்வம் முதலிய குணபேதத்தால் மூவகைப்பட்டது என்றும் சொல்லப்படுவதுடன், சாஸ்த்ர ஸித்தங்களான கர்மங்களுக்கு அஸாதாரணமாக நிற்கும் மூன்று லக்ஷணங்களும் சொல்லப்படுகின்றன என்று ஸங்க்ரஹிக்கிறார்.

௨௧. அசாஸ்த்ரமாஸுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணத: ப்ருதக் ।
லக்ஷணம் சாஸ்த்ரஸித்தஸ்ய த்ரிதா ஸப்தசோதிதம் ॥

அசாஸ்த்ரம்-(ந விஹிதே விஷயாயகத்வேந சாஸ்த்ரம் யஸ்ய) சாஸ்த்ரங்களில் விதிக்கப்படாததான, க்ருத்ஸ்நம் - ஸமஸ்தமான கர்மமும், ஆஸுரம் - ஆஸுரமாகையால் அபலம். சாஸ்த்ரீயம் - சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மம், குணத: - ஸத்வம் முதலான குணங்களால், ப்ருதக் - வேறுபட்டது. சாஸ்த்ர ஸித்தஸ்ய - சாஸ்த்ர விஹிதமான கர்மத்திற்கு, த்ரிதா லக்ஷணம் - ஓம், தத், ஸத் என்று மூன்று விதமான லக்ஷணமும், இவையெல்லாம், ஸப்தசோதிதம் - பதினேழாவது அத்யாயத்திற் சொல்லப்பட்டுள்ளன.

௨௧.

இப்படிப் பதினாறு பதினேழு அத்யாயங்களில், 'வேதமாகிற சாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டிருக்கும் யஜ்ஞம், தபஸ், தாநம் முதலிய கர்மமே அப்யுதயத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஸாதநமென்றும், மற்றவை அவைகளை ஸாதித்துக் கொடுக்கமாட்டாவென்றும், வைதிக கர்ம ஸாமாந்யத்திற்கு ப்ரணவம் சேர்ப்பது லக்ஷணமென்றும், அதில் மோக்ஷத்தை ஸாதித்துக் கொடுக்கும் கர்மத்திற்கு 'தத்' சப்தம் சேர்வதும், அப்யுதயத்தை ஸாதித்துக்கொடுக்கும் கர்மத்திற்கு 'ஸத்' சப்தம் சேர்வதும் பிரித்துக்காட்டும் அடையாளமென்றும் சொல்லப்பட்டது. தவிரவும், பலத்தைத் தேடா

மற் செய்யப்படும் கர்மமே மோக்ஷத்தை ஸாதித்துக்கொடுக்குமென்றும், அப்படிப்பட்ட கர்மத்தை ஆரம்பிப்பதற்கு ஸத்வ குணம் மேலிட்டிருப்பது காரணமென்றும், அந்த ஸத்வோத்ரேகம் ஸாத்விகமான ஆஹாரத்தாலுண்டாகுமென்றும் ப்ராஸங்கிகமாகச் சொல்லப்பட்டது. இனிப் பதினெட்டாவது அத்யாயத்தில், 'ஸர்வேஶ்வரனே ஸர்வகர்மங்களுக்கும் கர்த்தா' என்கிற அநுஸந்தாநம் செய்யவேண்டுமென்றும், ஸத்வகுணமே அவஶ்யம் அங்கீகரிக்கப்படவேண்டியதென்றும், தங்கள் தங்கள் வர்ணாஶ்ரமங்களுக்குத்தகுந்த கர்மங்களைச் செய்யும்பொழுது 'இவை பரமபுருஷாராதநம்' என்கிற அத்யவஸாயத்துடன் செய்வது பரமபுருஷனை யடைவதற்குக் காரணமென்றும், இந்தக் கீதா ஶாஸ்த்ரத்திற்கு ஸாரபூதமானது பக்தியோகமென்றும் சொல்லப்படுகிறது என்று ஸங்க்ரஹிக்கிறார்.

ஶ்லோ. ஈஶ்வரே கர்த்ருதாபுத்தி: ஸத்த்வோபாதேயதாந்திமே ।
ஸ்வகர்மபரிணாமஶ்ச ஶாஸ்த்ரஸாரார்த்த உச்யதே ॥

ஈஶ்வரே - ஸர்வேஶ்வரனாகிற நாராயணனிடத்தில், கர்த்ருதாபுத்தி: - 'ஸர்வ கர்மங்களுக்கும் அவனே கர்த்தா' என்கிற புத்தியும், ஸத்த்வோபாதேயதா - 'ஸத்வ குணமே அவஶ்யம் அங்கீகரிக்கத்தகுந்தது' என்பதும், ஸ்வகர்மபரிணாமஶ்ச - 'தங்கள் தங்கள் வர்ணாஶ்ரமங்களுக்குத் தகுந்த கர்மங்களின் அநுஷ்டானம் பரமபுருஷனை அடைவிக்கிறது' என்பதும், ஶாஸ்த்ரஸாரார்த்த: - கீதாஶாஸ்த்ரத்திற்கு ஸாரபூதமான அர்த்தமாகிற பக்தியோகமும், அந்திமே - கடைசியான பதினெட்டாவது அத்யாயத்தில், உச்யதே - சொல்லப்படுகின்றன. [(1) ஸர்வகர்மங்களுக்கும் ஈஶ்வரனே கர்த்தா வென்பது "தைவம் சைவாத்ர பஞ்சமம்" என்கிற இடத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் கூறியிருக்கும் பாஷ்யமாவது:—"அத்ர - கர்மஹேதுகலாபே, தைவம் பஞ்சமம். பரமாத்மா அந்தர்யாமீ கர்மநிஷ்பத்தௌ ப்ரதாநஹேதுரித்யர்த்த:" இந்த ஸர்வ கர்ம கர்த்ருத்வத்தை "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:", "ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம்"



என்கிற இடங்களிலும் காணலாம். (2) 'கீதாஶாஸ்த்ரத்திற்கு ஸாரபூதமான அர்த்தம் பக்தியோகம்தான்' என்பது, "மந்மநா பவ மத்பக்த:" இத்யாதிகளிற் சொல்லப்பட்டிருக்கிறது.] ௨௨.

இனிப் பத்து ஸ்லோகத்தால், எளிதில் விளங்கும் பொருட்டுக் கர்ம யோக ஜ்ஞானயோக பக்தியோகம் முதலானவற்றின் ஸ்வரூபம் முதலியவைகள் ஸ்பஷ்டமாக ப்ரகாஶிக்கப்படுகின்றன. அதில் கர்மயோகம் முதலியவைகளின் லக்ஷணங்கள் முன்னமே சொல்லப்பட்டனவாகையால், இங்கு அந்தந்த அதிகாரிகளின் ஜ்ஞான ஶக்தி யோக்யதைகளுக்கு அநுகுணமாக அநுஷ்டிக்கவேண்டியவைகளாய் நாலாவது அத்யாயத்திற் சொல்லப்பட்டிருக்கும் கர்மயோகத்தின் பிரிவுகளையும், இதுவரையிற் சொல்லப்படாமலிருக்கும் சில அம்ஶங்களையும் இந்த ஸ்லோகத்தால் ஸங்க்ரஹித்துக் காட்டுகிறார் :—

ஶ்லோ. கர்மயோகஸ்தபஸ்தீர்த்ததாநயஜ்ஞாதிஸேவநம் ॥

தப: - க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலிய தபோவிஶேஷமென்ன, தீர்த்த - புண்ய தீர்த்தங்களென்ன, தாந - தானமென்ன, யஜ்ஞ - யாகமென்ன, ஆதி - இவைகளை முதலாகவுடைய ப்ராணாயாமாதிகளென்ன, ஸேவநம் - இவைகளின் அநுஷ்டானம், கர்மயோக: - கர்மயோக மென்னப்படும். [இங்கு இவைகளின் அநுஷ்டானமாவது - பலம் கிடைக்கும் வரையில் ஆதரவோடு இவைகளில் ஒன்றை அங்கியாக அவலம்பித்து அநுஷ்டிப்பதுதான்.] ௨௩.

அடுத்த பாதி ஸ்லோகத்தால், அந்தக் கர்மயோகத்தால் ஸாதிக்கக்கூடியதான ஜ்ஞான யோகத்தின் அதிகாரிகளையும், அதன் லக்ஷணத்தையும் சொல்லுகிறார் :—

ஶ்லோ. ஜ்ஞாநயோகோ ஜிதஸ்வாந்தை: பரிஶுத்தாத்மநி ஸ்திதி: ॥

ஜிதஸ்வாந்தை: - அந்தஃகரண ஜயமுள்ளவர்களால், பரிஶுத்தாத்மநி - ப்ரக்ருதியை விட்டுப் பிரிந்து நிற்கும் ஜீவனிடத்தில், ஸ்திதி: - இடைவிடாத சிந்தனத்தால் இருப்பு [அதாவது -

பரிசுத்தாத்மாவை இடைவிடாமல் சிந்தநம் பண்ணுகை], ஜ்ஞாநயோக³: - ஜ்ஞாநயோக மென்னப்படும். ௨௩.

அடுத்த ஶ்லோகத்தால், பக்தியோகத்திற்கு அந்தரங்கமான அர்ச்சநம் ப்ரணமம் முதலியவைகளையும், பக்தியோகத்திற்கு உரிய லக்ஷணத்தையும் சொல்லுகிறார்:—

ஶ்லோ. ப⁴க்தியோக³: தே³காந்தப்ரீத்யா த்⁴யாநாதி³ஷு ஸ்தி²தி: ।

ததே³காந்தப்ரீத்யா-பரப்ரஹ்மத்தினிடத்தில் ஏகாந்தமான ப்ரீதியை வைத்து [அதாவது - வேறொன்றையும் விஷயீகரிக்காமல் அவனையே விஷயீகரித்து], த்⁴யாநாதி³ஷு - தைல தாரைபோல இடைவெளியில்லாத தொடர்ந்த நினைவாகிற த்யாநத்தை முதலாகவுடைய அர்ச்சநமென்ன, வந்தநமென்ன இவைகளில், ஸ்தி²தி: - இருப்பு, ப⁴க்தியோக³: - பக்தியோக மென்னப்படும். [இதனால், பரமப்ரீதியோடு பரப்ரஹ்மத்தைச் சிந்திப்பதும், அதற்கு அநுகுணமாகப் பூஜையையும் ப்ரணமத்தையும் செய்வதுமே பக்தியோகமென்று சொல்லப்பட்டது.] ௨௫.

‘கீழ்ச் சொல்லப்பட்ட லக்ஷணங்களையும், கீதையின் தாத்பர்யத்தையும் பராமர்ஶித்துப் பார்த்தால், (1) கர்மயோகத்தில், ஆத்மஜ்ஞாநமும் ஆராத்யனுகிற தேவதையினிடத்தில் ப்ரீதியும் அவஶ்யம் வேண்டியவை யென்றும், (2) ஜ்ஞாநயோகத்திலும் அந்தக்கரண ஶுத்திக்காக நியத கர்மமும், அதனால் ஆராதிக்கப்படும் பகவானிடத்தில் ப்ரீதியும் ஆவஶ்யகமென்றும், (3) பக்தியோகத்திலும் கர்மயோக ஜ்ஞாந யோகங்களுக்கு அநுவர்த்தநம் ஆவஶ்யக மென்றும் தோன்றுகிறதே; அப்படியாகில் இம்மூன்றற்கும் விபாகம் சொல்வது கூடுமோ?’ என்று ஒரு ஶங்கை உண்டாக, அதற்குத் தாத்பர்யத்தால் ஸமாதாநமொன்று பின்வரும் பாதி ஶ்லோகத்தால் அருளிச்செய்கிறார்:—

ஶ்லோ. த்ரயாணாமபி யோகா³நாம் த்ரிபி⁴ரந்யோந்யஸங்க³ம: ॥

த்ரயாணாமபி யோகா³நாம்-மூன்று விதமான யோகங்களுக்கும், த்ரிபி⁴: - ஸ்வாத்மகமான மூன்றோடு, அந்யோந்ய



ஸங்க³ம: - பரஸ்பர ஸம்பந்தமானது இருக்கின்றது. இதனால், பாலும் சர்க்கரையும் கலப்பதுபோல ப்ரதாநமாக நிற்கும் ஒன்றுக்குள் மற்றவைகளுக்குக் குணபூதமாக அநுப்ரவேஶ மிருந்தாலும், அந்த அநுப்ரவேஶம் பரஸ்பர விபாகத்திற்கு விரோதமாக மாட்டாது என்று காண்பிக்கப்படுகிறது. ௨௪.

இதனால், மூன்று அதிகாரிகளுக்கும், பரமாத்மாவினிடத்தில் ஏகாந்தமான ப்ரீதியைச் செய்தல் ஆவஶ்யகமென்று ஏற்பட்டது. ஏகாந்த ப்ரீதியாவது - மற்றொரு தேவதையினிடத்தில் ப்ரீதி பண்ணுமல் பரமாத்மாவினிடத்தில் மாத்ரம் ப்ரீதிசெய்வதே என்று மோக்ஷ தர்மம் முதலியவைகளிற் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியாகில், அக்நி இந்த்ரன் முதலான தேவதைகளுடன் கலந்து நிற்கும் வர்ணாஶ்ரம தர்மங்களால் ஐகாந்த்யத்திற்குப் பங்கம் வருமாகையால், மூன்று யோகிகளுக்கும் வர்ணாஶ்ரமதர்மங்களைவிடுவதற்கு ப்ரஸங்கியாதோ? என்ன, ஸமாதாநத்தை ஸூசிப்பிக்கிறார்:—

ஶ்லோ. நித்யநைமித்திகாநாம் ச பராராத⁴நரூபிணாம் ।

இங்கு, ‘த்ரிபி⁴: ஸங்க³ம:’ என்று முந்தின ஶ்லோகத்திலிருந்து யோஜித்துக்கொள்ளவேண்டியது. பராராத⁴நரூபிணாம் - பரமபுருஷனுடைய ஆராதநரூபமான, நித்யநைமித்திகாநாம் ச - நித்ய நைமித்திக கர்மங்களுக்கும், த்ரிபி⁴: - மூன்று யோகங்களோடும், ஸங்க³ம: - ஸம்பந்த முண்டு. அதாவது - இந்தக் கர்மங்கள் அங்கங்களாகவும், யோகங்கள் அங்கிகளாகவும் நிற்கின்றன. இப்படி மூன்று யோகங்களுக்கும் நித்ய நைமித்திக கர்மங்கள் அங்கங்களாகச் சொல்லப்பட்டதன் தாத்பர்யம் என்னவென்றால் - கர்மங்களிற் கலக்கும் அக்நி இந்த்ரன் முதலிய ஶப்தங்கள் பகவானையே ப்ரதிபாதிக்கின்றன வென்றும், ஆகையால் அந்தக் கர்மங்களெல்லாம் பகவதாராதநரூபமாகின்றனவென்றும், ஆதலால் அந்தக் கர்மங்களின் அநுஷ்டாநத்தால் ஐகாந்த்யத்திற்குப் பங்கம் வாராதென்றும் ஏற்படுகின்றது. அக்நி இந்த்ரன் முதலிய ஶப்தங்கள் பகவானை எப்படிக் காட்டும்? என்றால், அதற்கு இரண்டு விதமாக ஸமாதாநமுண்டு: அவையாவன—(1) ப்ரதர்

தநாதி ந்யாயத்தால் ஸகல ஶப்தங்களும் பகவான்வரையில் ஏட்டும்; (2) 'ஸாக்ஷாத்வ்யபதேஶாத் அவிரோதம் ஜைமிநி:' என்கிற ந்யாயத்தால் ஸாக்ஷாத்தாகவே இந்த ஶப்தங்கள் பகவானை ப்ரதிபாதிக்கின்றன; நிருக்த்யாதி வ்யுத்பத்திகள் இதற்கு ப்ரமாணம். உசஅ.

இதற்குமேல் இந்த மூன்று யோகங்களும் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு யோகத்தின் வழியாகக் காரணங்களாகின்றன வென்கிறார் :—

௩-ஐ. ஶுத்தஸ்ய ஹ்யேதே யோகாஸ்த்ரயோ யோகத்வாரேண ஸாதகா: ॥

ஏதே த்ரயோऽபி - இந்த மூன்று யோகங்களும், யோகத்வாரேண - யோகத்தின் வழியாக, [இங்கு யோகமாவது - பரிசுத்த ஜீவனிடத்தில் ஸமாதிரூபமான அந்தஃகரணத்தின் ஐகாக்ர்யம்.] ஶுத்தஸ்ய - பரிசுத்தாத்மாவின் ஸாக்ஷாத்காரத்திற்கு, ஸாதகா: - காரணங்கள். 'ஜ்ஞாநயோகம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமென்றும், கர்மயோகமும் ஜ்ஞாநயோகத்தை இடைவிடாமல் அந்தர்க்கதஜ்ஞாநமாய்க்கொண்டிருக்கிறபடியால் ஆத்மஸாக்ஷாத்கார ஸாதகமென்றும் இதுவரையில் சொல்லப்பட்டது. இப்பொழுது சொல்வதிலிருந்து பக்தியோகமும் ஆத்ம ஸாக்ஷாத்கார ஸாதகமென்று ஏற்படுகிறதே! இது கூடுமோ? ஆத்ம ஸாக்ஷாத்காரமன்றோ பக்தியோகத்திற்கு ஸாதகமாக வேணும்?' என்று சில தாத்பர்யமறியாதவர்களின் சோதநம். பகவத் பக்திக்கு முடிவிலுள்ள ஜ்ஞாந தர்ஶந ப்ராப்தி ரூபமான உத்க்ருஷ்ட பர்வ பேதம்போல, ஆத்மாவலோகநத்திற்கு வேண்டிய பகவத் வந்தந கீர்த்தந ஹேது பூதமான பக்தியின் பர்வ விஶேஷமானது 'த்ரயோऽப்யேதே' என்கிறவிடத்தில் விவக்ஷிதமாகையால் விரோதமில்லை. ஆகையாலேயிறே, ஆத்மாவலோகநம் பிறந்த பின்பு பரமான பக்தியை யடைகிறானென்று 'மத்பக்திம் லபதே பராம்' என்கிற விடத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால், ஆத்மாவலோகநத்திற்குமுன் அபரமான பக்தி உண்டென்பது ஸித்தமிறே. உடு.



இதில் கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்கள் ஆத்மாவலோகநத்திற்கு ஸாதகங்களென்றார்; மேல் ஶ்லோகத்தால் தன் அதிகாராநுகுணமாகப் பரிக்ருஹீதங்களான மூன்று யோகங்களுக்கும் ஆத்மாவலோகநஸித்தி வழியாகப் பரபக்தி யுண்டாகும் ப்ரகாரத்தையும், ப்ரக்ருஷ்டமான பரபக்தியே பரமப்ராப்தியை ஸாதித்துக் கொடுக்கு மென்பதையும் சொல்லுகிறார் :

௩-ஏ. நிரஸ்தநிகிலாஜ்ஞாநோ த்ருஷ்ட்வாத்மாநம் பராநுகம் ।
ப்ரதிலப்ய பராம் பக்திம் தயைவாப்நோதி தத்பதம் ॥

நிரஸ்தநிகிலாஜ்ஞாந: - போக்கடிக்கப்பட்ட ஸமஸ்த அஜ்ஞாநத்தையுடைய அதிகாரி, பராநுகம் - பரமபுருஷாநுசரமான [பரஶேஷைகஸ்வபாவமான என்றபடி], ஆத்மாநம் - ப்ராக்ருதி வியுக்தமான ஜீவ ஸ்வரூபத்தை, த்ருஷ்ட்வா - ஸாக்ஷாத்கரித்து, பராம் - உத்க்ருஷ்டமான, பக்திம் - பக்தியோகத்தை, ப்ரதிலப்ய - (பகவதநுக்ரஹத்தால்) அடைந்து, தயைவ - பரமபக்தியின் பரிபாகத்தை யடைந்த அந்தப் பரபக்தியினாலேயே, தத்பதம் - அந்தப் பரமபுருஷனுடைய திருவடியை [அல்லது, முக்தர்களுக்கு ப்ராப்யதயா ஸித்தமான பரமபுருஷனுடைய அப்ராக்ருத ஸ்தாநத்தை, அல்லது ஸ்வரூபத்தை], ஆப்நோதி - அடைகிறான். இந்த அர்த்தங்களை, "ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி - ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் - பக்த்யா மாமபிஜாநாதி யாவாந் யஶ்சாஸ்மி தத்த்வத: - ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விஶதே ததநந்தரம்" என்கிற இரண்டு ஶ்லோகங்களில் கீதாசார்யன் அருளிச்செய்தார். உசு.

(இன்னும்வரும்.)

இ. ரங்கநாதாசாரியர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ நாரத மஹர்ஷி.

"அஹோ தேவர்ஷிர்தந்யோऽயம் யத்கீர்த்திம் ஶார்ங்கதந்வந:।
காயந்மாத்யந்நிதம் தந்த்ர்யா ரமயத்யாதுரம் ஜகத்॥"

அஹோ! நாரத மஹர்ஷியின் பாக்யமே பாக்யம்! நிரந்தரம் பகவானையே த்யானம் செய்துகொண்டும், பகவத் கதைகளையே வீணையில் கானம் பண்ணி அந்த கானத்தால் உண்டாகும் ஆநந்தத்தைத் தாமும் அநுபவித்து மற்றவர்களையும் அநுபவிக்கச் செய்துகொண்டும் பொழுதைப் போக்குவது பெருத்த பாக்ய மன்றோ? எப்பொழுதும் லோகத்தை உஜ்ஜீவிப்பிப்பதிலேயே இம் மாதிரியான மஹர்ஷிகளின் சிந்தை ப்ரவ்ருத்தித்திருக்கின்றது. ஸம்ஸார வ்யாதியினால் பீடிக்கப்படும் நமக்கு அவர்கள் செய்யும் உபகாரம் அளவற்றது. ஒரு ஸமயம் இருந்தவிடத்தில் மற்றொரு ஸமயம் இராமல், "எங்கே போய் யாருக்குத் தத்வஜ்ஞானம் உபதேஶம் செய்வோம்?" என்கிற எண்ணத்தையே மேற்கொண்டு அநவரதம் ஸஞ்சரித்துக்கொண்டே யிருக்கிறார்கள். "மஹத்விசலநம் ந்ருணாம் க்ருஹிணாம் தீநசேதஸாம் - நி:ஶ்ரேயஸாய பகவந் நாந்யதா கல்பதே க்வசித்" என்கிறபடியே ஸம்ஸாரத்தில் அகப்பட்டு தைந்யத்தை யடைந்திருக்கும் நமக்கு இந்த மஹாங்களுடைய ஸஞ்சாரம் இல்லாவிட்டால் நிஶ்ரேயஸ மென்பது எவ்விதமாக உண்டாகும்? புதிதாக ஸம்பாதித்துக் கொள்ளக்கூடிய காமங்கள் அவர்களுக்கு ஒன்றும் கிடையாது; நம்மைக் கரையேற்ற வேண்டுமென்கிற நோக்கமே அவர்களை இப்படி ப்ரவ்ருத்திப்பிக்கிறது. "ஸம்பஶ்யந் ஜகத் இவ த்யோகே ஸூர்யோ



வாயுரிவாத்மஸாக்ஷீ" என்கிறபடி அவர்கள் எப்பொழுதும் ஸூர்யன்போலவே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்து ஸஞ்சரிப்பதுடன் கூட, ஜீவன்களுடைய உள்ளிலும் யோகபலத்தால் ப்ராண வாயுவைப்போலப் பரவிநின்று அவர்களுடைய புண்ய பாப காரணத்திற்கு ஸாக்ஷியாகவும் நிற்கிறார்கள். இவையெல்லாம் பரோபகாரத்தின் பொருட்டே.

இப்படி லோகாநுக்ரஹ கர்த்தாக்களில் நாரத மஹர்ஷியென்பவர் அந்யதமர். இவரைப்பற்றி ஸாமாந்ய ஜநங்கள், "நாரத: கலஹப்ரிய:" என்று கலஹத்தில் நாரதருக்கு அதிக ப்ரீதி உண்டு என்றும், லோகத்தில் ப்ராக்ருதமான காமக்ரோதாதிகளுக்கு நாம் வஶ்யர்களாக இருப்பதுபோல நாரதரும் அவைகளுக்கு வஶ்யரென்றும் சொல்லிக்கொண்டு, அவரிடத்தி லிருக்கும் பரோபகார ஶீலதையான நிர்மல குணத்தை ஒளிப்பது மாத்ரமன்றிக்கே நமக்கு இயற்கையாக வுள்ள துர்க்குணங்களையும் அவரிடத்தில் ஆரோபணம் செய்கிறார்கள். இதுவும் ஒரு ஆஶ்சர்யமே! இப்படி நினைப்பது நம்முடைய அஜ்ஞதையை விவரிக்கிறதே தவிர அந்த நாரதருக்கு எவ்விதமான தோஷத்தையும் ஆவஹிக்கப் போகிறதில்லை. "நிரவத்யமநோஹராணி ராமே நிர்மலஸ்வபாவ ஸ்வபாவதூஷிதா லோகா லோகா வதந்தி ஸதந்தி கேசந தந்தாவத் ஸாத்ராஹம் விநாமவலம்பநம்" என்கிறபடி நிர்க்களமாகத் துஷ்ட வார்த்தையைச் சொல்வதிலிருக்கும் உத்ஸாஹத்தால் புத்தியை இழந்திருக்கும் ஜநங்கள், ஸகல கல்யாண குண கண நிதியாகவும் நிரஸ்தஹேயகந்தனாகவு மிருக்கும் ஸ்ரீராமனைப்பற்றியே ஸ்த்ரீவதம் செய்தானென்றும், வாலித்ரோஹம் செய்தானென்றும், யுத்தத்தில் பின்வாங்கினானென்றும் இம்மாதிரியான தோஷங்களை உத்காடநஞ் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். அதுபோல, நாரதரிடத்திலும் இப்படிப் பேசுவது நாக்குத் தினவின் நிவ்ருத்திக்காக யதேச்சம் தூஷிக்கிற ஸ்வபாவத்தையுடைய அஜ்ஞர்களின் ப்ரவ்ருத்தி யென்றே நினைக்கவேணும்.

நாரத மஹர்ஷியென்பவர், ப்ரஹ்மாவின் புத்ரர். ப்ரஹ்மா முதலில் லோகத்தை ஸ்ருஷ்டிக்குங் காலத்தில் பகவத்த்யாந பரிஶுத்த மநஸ்ஸோடே மாநஸிகமாக ஸநகர் ஸநந்தநர் ஸநாதநர் ஸநத்குமாரர் என்கிற நான்கு குமாரர்களை ஸ்ருஷ்டித்து, அவர்களைப் பார்த்து "ப்ரஜா: ஸ்ருஜத புத்ரகா:" என்று ப்ரஜைகளை வ்ருத்தி செய்யும்படி ஆஜ்ஞாபித்தார். அவர்கள் அதை அங்கீகரிக்காமல் மோக்ஷதர்ம பராயணர்களாகவே நிற்க, மிக்க வருத்தமடைந்து ப்ரஜா ஸ்ருஷ்டியைப்பற்றி ப்ரஹ்மா த்யாநம் செய்து கொண்டிருந்த காலத்தில் ப்ரஜாஸந்தாந ஹேதுக்களாகப் பத்துப் புத்ரர்கள் அவருடைய தேஹத்திலிருந்து உண்டானார்கள். அவர்களில் பத்தாவது புத்ரர், நாரதர். ஆனால், இவர் தம்முடைய ஜ்யேஷ்ட ப்ராதாக்களாகிற ஸநகாதிகளின் மார்க்கத்தை அநுஸரித்து, கார்ஹஸ்த்யத்தை அடையாமல் நைஷ்டிகராகவே நின்று விட்டார். இப்படி அகண்டித ப்ரஹ்ம சர்ய வ்ரதராகவே ஸ்ரீபகவானுடைய அநுக்ரஹ விஶேஷத்தால் எவ்விடத்திலும் அப்ரதிஹத கதியாகக் கொண்டு மூன்று லோகங்களிலும் ஸஞ்சரித்து, ஈஶ்வரனாற் கொடுக்கப்பட்ட வீணையில் பகவத் கதைகளை காநம் செய்துகொண்டு, "ப்ரகாயத: ஸ்வவீர்யாணி தீர்த்தபாத: ப்ரியஶ்ரவா: - ஆஹூத இவ மே ஶீக்ரம் தர்ஶநம் யாதி சேதஸி" என்கிறபடி பகவத் வீர்யங்களை காநம் செய்யும் பொழுதெல்லாம் ஓடி வந்து எதிரில் நிற்கும் பரம புருஷனுடைய தர்ஶநத்தை அநுபவித்துக்கொண்டு முக்தர்களுக்கும் தமக்கும் வாசியற நின்றுவருகிறார்.

மாற்றுத்தாயான ஸுருசியின் துஷ்ட வார்த்தைகளால் உண்டான மாநபங்கத்தை ஸஹிக்காமல் அழுதுகொண்டும், "ஆராதயாதோக்ஷஜபாதபத்மம் யதீச்சஸே(அ)த்யாஸநமுத்தமோ யதா" [உத்தமன்போல நீயும் அத்யாஸநத்தை இச்சிக்கும் பக்ஷத்தில் பகவானுடைய பாதபத்மத்தை ஆராதநம் செய்] என்று தாயான ஸுநீதியினால் ஏவப்பட்டவனைக் கொண்டும் க்ஷத்ரியனுக்கு ஸஹஜமான மநோ தைர்யத்துடன் பட்டணத்தை விட்டு வெளியில் தபஸ் செய்யப் புறப்பட்டுப்போன குழந்தையாகிய த்ருவனுக்கு அநுக்ரஹம்செய்தவர் இம்மஹர்ஷியே. ஸமஸ்த பாபத்தையும் போக்கடிக்கக் கூடிய தமது கையினால் குழந்தையின் ஶிரஸ்ஸைத் தொட்டு, "ஜநந்யா(அ)பிஹித: பந்தா: ஸ வை நி:ஶ்ரேயஸஸ்ய தே" [உன் தாயார் உனக்குக் காண்பித்த மார்க்கமே ஶாஶ்வதமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது] என்று ஆரம்பித்து, "ப்ரஸாதாபிமுகம் ஶஶ்வத் ப்ரஸந்நவதநேக்ஷணம்" இத்யாதியாகப் பகவானுடைய ஸௌப த்ரமான ரூபத்தை வர்ணித்து, "ஜபஶ்ச பரமோ குஹ்ய: ஶ்ரூயதாம் மே ந்ருபாத்மஜ" என்று அத்யந்தம் ரஹஸ்யமான மந்த்ரத்தையும் உபதேஶித்தார். "யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம் ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா - அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந் ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம்" என்று குழந்தையாக இருக்கையிலும் அத்புதமமான இப்படிப்பட்ட வாக்வ்ருத்தியால் பகவானை ஸ்தோத்ரம் செய்யும்படி நேர்ந்த பகவத்கடாக்ஷத்திற்கும், "வேதாஹம் தே வ்யவஸிதம் ஹ்ருதி ராஜந்யபாலக - தத் ப்ரயச்சாமி பத்ரம் தே துராபமபி ஸுவ்ரத" என்று மற்றவர்களாலடையக் கூடாததான த்ருவமான உந்நத ஸ்தாநம் கிடைத்ததற்கும் இந்த மஹர்ஷியின் உபதேஶமே மூலகாரணம். எது முடிவோடு கூடியதன்றோ, எப்படி உபதேஶித்தால் ஸம்ஸாரபந்தம் விலகுமோ, அம்மாதிரியான உபதேஶத்தைச் செய்ய, இந்த மஹர்ஷி பரிபக்வமான தஶையுடன் கூடிய ஜீவன்களைத் தேடித் திரிகிறார். த்ருவனுக்குக்கூட 'நாரத மஹர்ஷியின் உபதேஶத்தின் பயனை நான் பூர்ணமாக அடையாமல் போய்விட்டேனே! அவருடைய அநுக்ரஹத்தால் பகவானுடைய பாதமூலத்தை அடைந்தும், ஊர்த்வ ரேதஸ்ஸாக இருந்து மோக்ஷ மார்க்கத்தைத் தேடாமல் அந்தவத்தான ஐஹிக போக ஸௌகத்தை ப்ரார்த்திக்கும்படி என்னுடைய புத்தி தூஷிதமாகி விட்டதே!' என்கிற அநுதாபம் பிறகு உண்டாச்சுது. "அஹோ பத மமாநாத்ம்யம் மந்த

ஶாஶ்வதஸ்ய பதஸ்ய" என்றும், "யோ நாரதவசஸ்துஷ்யம் நாஶ்ரு ஹீஷி வேதஸ:" என்றும் பலவாறாக த்ருவன் தன்னைப்பற்றிப் பிந்தி நிந்தித்துக்கொள்வதை நாம் பார்க்கிறோம். யதார்த்தமாகவே நாரதருடைய அபிநிவேஶம், தம்முடைய உபதேஶத்துக்குப் பாத்ரமாக இருக்கும் எல்லாரையும் ஐஹிக போகங்களிலிருந்து நிவ்ருத்திப்பித்து மோக்ஷ மார்க்கத்தில் போகச் செய்யவேணுமென்பது தான். இந்தக் காரணத்தினாலேயே ஒரு ஸமயத்தில் இவர் தக்ஷப்ரஜாபதியின் ஶாபத்திற்குப் பாத்ரரானார்.

ப்ரசேதஸ்ஸின் புத்ரராகிய தக்ஷப்ரஜாபதி, அஸிக்னீ யென்னும் பெயருடைய பாஞ்சஜநியாகிய பார்யையினிடத்தில், பிதாமஹனுடைய ஆஜ்ஞையை அநுஸரித்து, ஹர்யஶ்வர்கள் என்கிற அநேக புத்ரர்களை உண்டுபண்ணினார். இவர்கள், ஸ்வயம் பாரமஹம்ஸ்யத்தில் ஊன்றின மனத்துடன் கூடியிருக்கையிலும், பிதாவின் நிர்த்தேஶத்தை அநுஸரிக்கவேணுமென்கிற எண்ணத்தோடு ப்ரஜாவ்ருத்தியின்பொருட்டு யத்நங்களைச் செய்யுங்காலத்தில், அவர்களைப்பார்த்த நாரதமஹர்ஷி 'ஐயோ! நல்ல நைஷ்டிகர்களாகவும் பகவத்பரர்களாகவுமிருப்பதற்கு அர்ஹர்களான இம் மஹான்கள் வீணாக ப்ரஜா ஸர்க்கத்திற்காக இம்மையில் ஊன்றுகிறார்களே!' என்று பரிதபித்துச் சில கூட ஸங்க்ராஹ உக்திகளைச் சொல்லி அவர்களுடைய புத்தியை மாற்றி, அவர்களை அபுநராவ்ருத்தி மார்க்கத்திற் செலுத்திவிட்டார். இவ்விதமாக 'நமது புத்ரர்கள் நாரதர் வார்த்தையைக்கேட்டு நஶித்துவிட்டார்களே!' என்று துக்கித்து, தக்ஷர் பிதாமஹரால் ஸாந்த்வநம் செய்யப்பட்டவராகக் கொண்டு மறுபடியும் அதே பார்யையினிடத்தில் அநேகம் புத்ரர்களை உண்டு பண்ணினார். இவர்களும் பரிஶுத்தாத்மாக்களாக இருக்கக்கண்டு, நாரதர், "ஹே தாக்ஷாயணர்களே! நான் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கள்" என்று ஆரம்பித்து முற்சொன்ன கூட ஸங்க்ராஹ உக்திகளைச் சொல்லி, அவர்களுடைய புத்தியில் தத்வ ஜ்ஞாநத்தை ஜநிப்பித்து, அவர்களையும் பகவானிடம் ப்ரீதிவைத்துத் தத்பாவஶர்களாகும்படி செய்துவிட்டு, 'பிதாவாகிய தக்ஷரும் விரக்தராகக்கூடாதா?' என்கிற எண்ணத்துடன் தக்ஷருடைய



ஸமீபத்திற் சென்றார். இந்த! ஸாதுத்தன்மையை அறியாத தக்ஷர் இப்படி ஸம்பவித்துவிட்டதைக் கேட்கவே, மிகுந்த கோபங்கொண்டு, "அஹோ அஸாதோ ஸாதூநாம் ஸாதுலிங்கேந நஸ்த்வயா - அஸாத்வகார்யர்பகாணாம் பிக்ஷோர்மார்க: ப்ரதர்ஶித:" என்று நாரதரை அஸாதுவென்றும், ஸாதுக்களான தமது புத்ரர்களைப் பிக்ஷு மார்க்கத்தில் மூட்டிக் கெடுத்து விட்டாரென்றும் பலவாறாக நிந்தித்து, "நாநு ஸம்ஸாரஸ்ய ந ஜாநாதி பந்தாநம் விஷயதீக்ஷ்ணதாம்" [நீர் விஷயாநுபவமறியாதவரானதால் இப்படிச்செய்யத் துணிந்தீர்] என்று நாரதருடைய ப்ரஹ்மசர்யத்தையும் தூஷித்து, பின் வருமாறு ஶாபத்தையும் கொடுத்தார்; "தந்தவ்யாஹத யஸ்த்வம்மேஹ்யபவேஶ: பதத: - தஸ்மாத் லோகேஷு தே மூட ந பவேத்ப்ரமத: பதம்" [ஹே ஸந்தாநச் சேதகரே! எந்தக் காரணத்தால் நீர் என் புத்ரர்களுக்கு அமங்களகரமான கார்யத்தைச் செய்தீரோ, அந்தக் காரணத்தால், ஒரு லோகத்திலும் பத்ரமான ஸ்தாநம் உமக்குக் கிடைக்காது]. ஸாது ஸத்தமராக இருக்கும் நாரதர் இந்த ஶாபத்தை 'நல்லது' என்று அங்கீகரித்தாரேதவிர, ப்ரதி ஶாபங் கொடுக்க ஶக்தராக இருக்கையிலும் அவ்வித ப்ரவ்ருத்தி செய்யவில்லை. "ஏதாவாந் ஸாதுவாதோ ஹி திதிக்ஷேதேஶ்வர: ஸ்வயம்" - இந்தப்பொறுமையன்றோ யதார்த்தமான பகவத்பக்தரின் லக்ஷணம்? "நாராயணபரா: ஸர்வே ந குதஶ்சந பிப்யதி - ஸ்வர்காபவர்கநரகேஷ்வபி துல்யார்த்ததர்ஶிந:" என்றும், "வாஸுதேவே பகவதி பக்தியுத்வஹதாம் ந்ருணாம் - ஜ்ஞாநவைராக்யவீர்யாணாம் நேஹ கஶ்சித்வ்யபாஶ்ரய:" என்றும் பகவத் பக்தியில் தேர்ச்சியடைந்தவர்களின் ஸ்திதி கூறப்பட்டுள்ளது. ஸ்வர்க்கம் நரகம், ஶாபம் அநுக்ரஹம் எல்லாவற்றையும் துல்யமாகப் பாவிக்கும் நாராயண பரர்களுக்கு எது கெடுதல்? எது நல்லது?

இம் மஹானுடைய பூர்வ கதையைக் கொஞ்சம் விசாரிப்போம். பூர்வஜந்மத்தில் இவர் ஒரு தாஸீபுத்ரராக இருந்தார்.

ஒரு ஸமயத்தில் இவர் பாலராக இருக்கையிலேயே வேத வாதிகளான யோகிகளுக்கு ஶுஶ்ரூஷை செய்யும்படியாக நேர்ந்தது. அப்பொழுது ப்ரதிதிநம் அவர்கள் பகவத் கதைகளைச் சொல்லிக்கொண்டு காலக்ஷேபம் செய்துவரும்பொழுதெல்லாம், இவர் மிகுந்த ப்ரேமத்தையுடன் அந்தக் கதைகளைக் கவனித்துவருவர். காலக்ரமேண ஸத்ஸங்கத்தாலும் யோகிகளுடைய கடாக்ஷத்தாலும் இவருக்கும் பகவானிடத்தில் த்ருடமான புத்தி உண்டாயிற்று. இவருடைய விநயத்தையும் ஆஸ்திகதையையும் பார்த்து ஆநந்தித்து, அந்த யோகிகள் அந்த ஸ்தாநத்தை விட்டுத் தாங்கள் புறப்பட்டுப் போகும்பொழுது இவருக்குப் பக்திரூபமான ஜ்ஞாநத்தை உபதேஶித்துவிட்டுப் போனார்கள். அதுமுதல் இவர் பகவானுடைய விசித்ரஶக்தியையும், அவனுடைய விவித சேஷ்டிதங்களையும் அநவரதம் த்யாநம் செய்துகொண்டு அந்த ஆநந்தத்திலேயே பஹு காலம் மூழ்கி யிருந்தார். இவருடைய தாயார்க்கு இவர் ஒரே குமாரராகையால், அவள் இவரிடத்தில் மஹத்தான ஸ்நேஹாநுபந்தத்தைச் செய்து, பஹுப்ரயாஸத்துடன் ஒருவிதமான குறைவும் இவருக்கு வராமல் பாதுகாத்துவர, சிலகாலம் இப்படிச் சென்றது. ஒருநாள் க்ருஹத்திற்கு வெளியிலே கட்டியிருந்த பசுவைப் பால் கறப்பதற்கு இவருடைய தாய் புறப்பட்டுப் போகையில், வழியில் கிடந்த ஒரு ஸர்ப்பம் காலால் மிதிக்கப்பட்டு அவளைக் கடித்தது. அதே வ்யாஜமாக அவளும் மரணமடையவே, இவர், அந்த விபத்தையும் ஒரு அநுக்ரஹ விஶேஷமாக எண்ணி, அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு வடக்குத்திக்குநோக்கிப் போய், மஹாபயங்கரமாயும் துஷ்ட ம்ருகங்கள் நிறைந்து முள்ள ஒரு காட்டினுள்ளே சென்று, அங்கிருந்த ஒரு தடாகத்தில் ஸ்நாநத்தை அநுஷ்டித்துவிட்டுக் கொஞ்சம் ஶ்ரம பரிஹாரஞ் செய்து கொண்டு, அங்கிருந்த ஒரு அஶ்வத்த வ்ருக்ஷத்தின் கீழே உட்கார்ந்து, இதற்கு முந்தி யோகிகளிடமிருந்து தாம் உபதேசங் கேட்டிருந்த பகவானைத் தமது ஹ்ருதயத்தி லிருப்பதாக த்யாநஞ் செய்தார். அந்த ஸமயத்தில் பகவான் ப்ரத்யக்ஷமாகவே, அந்தத் தர்ஶநத்தைக் கண்டு புளகித காத்ரராய் ஆநந்தம் தாங்க மாட்டாமல் பரவஶமாக, தாம் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து, கண்களினின்று பெருகின நீரைத் துடைத்து மறுபடியும் அந்தப் புருஷனைப் பார்க்க ப்ரயத்நப் பட்டபொழுது அந்தப் புருஷன் அந்தர்த்தாநத்தை யடைந்து, "ஹந்தாஸ்மிந் ஜந்மநி பவாந் மா மாம் த்ரஷ்டுமிஹார்ஹதி - அவிபக்வ கஷாயாணாம் துர்தர்ஶோஹம் குயோகிநாம்" என்று 'என்னை அவிபக்வ புத்தியினால் அநுபவிக்க முடியாது' என்றும், 'இந்த ஜந்மத்தில் த்ருடபக்தி செய்து அடுத்த ஜந்மத்தில் அடையலாம்' என்றும் இவர்காதில் விழும்படியாகச் சொல்லிவிட்டு மறைந்து போனான். இவர் அதுமுதல் மெய் மறந்து வெட்கத்தை விட்டு இடைவிடாமல் பகவந்நாமங்களைக் கூவிக்கொண்டு காலத்தை ப்ரதீக்ஷித்து நிற்க, அந்தக் காலமும் ஒரு ஸமயத்தில் நேர்ந்து, இவருடைய பாஞ்ச பௌதிகமான தேஹமும் இவரை விட்டது. அடுத்த ஜந்மந்தான், இவருக்கு நாரத ஜந்மம். இந்த ஜந்மத்தின் ஆரம்பம் முதல் இந்த மஹர்ஷி, "அந்தர்பஹிஶ்ச லோகாம்ஸ்த்ரீந் பர்யேம்யஸ்கந்திதவ்ரத: - அநுக்ரஹாந்மஹாவிஷ்ணோரவிகாதகதி: க்வசித்" என்கிறபடியே பகவதாஜ்ஞாகைங்கர்யமாகிற இந்தத் தேஶாடநம் செய்துகொண்டு அபார கருணையால் பகவானை யடையும்வழியை எல்லாருக்கும் உபதேஶித்துவருகிறார்.

யதார்த்தமாகவே, பரமபுருஷ யாதாத்ம்யத்தை அநுபவித்து, அதனால் உண்டாகும் அளவற்ற ப்ரீதியால் ஜகத் முழுவதையும் பகவதேகபோகமாகச் செய்யவேணு மென்றும், அந்த ஜகத்துடன் கூடப் பகவத்ஸ்வரூப ரூப குண சேஷ்டித விபவங்களைத் தாம் அநுபவிக்க வேணுமென்றும் அபேக்ஷை பிறந்து, "வீடுமின் முற்றவும்" என்றும், "சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்றும், "திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ" என்றும் கதறியிருக்கும் ஆழ்வாரைப்போல இந்த மஹர்ஷியும் பகவதநுசரர்களி லொருவரென்றே கொஞ்சம் நிதாநித்துப் பார்க்குமவர் புத்தியில் தோன்றும்.

ஓர் பௌராணிகர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ பாகவத தனிஸ்லோகி.

(தொடர்ச்சி.)

௯-௰. தமத்புதம் பாலகமம்புஜேக்ஷணம் சதுர்புஜம் ஶங்ககதாத்யுதாயுதம் - ஶ்ரீவத்ஸலக்ஷ்மம் கலஶோபி கௌஸ்துபம் பீதாம்பரம் ஸாந்த்ரபயோதஸௌபகம் ॥ மஹார்ஹவைதூர்ய கிரீட குண்டலத்விஷா பரிஷ்வக்த ஸஹஸ்ரகுந்தலம் - உத்தாமகாஞ்ச்யங்கத கங்கணாதிபிர் விரோசமாநம் வஸுதேவ ஐக்ஷத ॥

ஸ்ரீ கீதையில் "பஹூநி மே வ்யதீதாநி" என்று தொடங்கி "ஜந்ம கர்ம ச மே திவ்யம்" என்னுமளவாக இருக்கும் ஶ்லோகங்களில் ஸங்க்ருஹீதங்களாக இருக்கிற ஸ்ரீபகவதவதாரங்களின் ஸ்வரூப வைலக்ஷண்யம், விக்ரஹ வைலக்ஷண்யம், காலவைலக்ஷண்யம், காரண வைலக்ஷண்யம், ப்ரயோஜந வைலக்ஷண்யம் ஆகிற ஐந்து வித வைலக்ஷண்யங்களை 'அத்புத' என்கிற ஶப்தத்தால் ஸூசிப்பித்துவிட்டு, அவைகளுள் விக்ரஹ வைலக்ஷண்யமானது எல்லோரும் கண்டறியக் கூடியதாகவும், பண்டிதர் பாமரர் உள்பட எல்லாரையும் தன்னிடத்தில் ஈடுபடும்படி செய்வதற்கு "ரூபௌதார்ய குணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்கிறபடியே முதன்மையான ஸாதகமாகவும், அவன்தனக்கும் "ஸ்வீயம் ரூப த்ரைலோக்ய காந்தம் ருசிரம் யதத்ய ஹ்ருத்யம்" என்கிறபடியே அத்யந்தம் ஆகர்ஷகமாகவு மிருக்கிறபடியால், அந்த விக்ரஹ வைலக்ஷண்யத்தை உபபாதிப்பதாக ஆரம்பித்து, அதில் முற்பட ப்ரதாநமாகையால் திருக்கண்களைப்பற்றிப் பேசுகிறார் மஹர்ஷி:—

அம்புஜேக்ஷணம் - "ராம: கமலபத்ராக்ஷ: ஸர்வஸத்வ மநோஹர:" என்றும், "மோஹயித்வா ஜகத்ஸர்வம்" என்றும், "தாமரைக்கண்கள் கொண்டீர்தியாலோ - கஞ்சைக்காய்ந்த கருவில்லி கடைக்க ணென்னும் சிறைக்கோலால் நெஞ்சுடுருவ வேவுண்டு நிலையும் தளர்ந்து கைவேனை - கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்க ளென்னைப் பேதைமை செய்தனவே" என்றும் சொல்லுகிறபடியே, அத்யந்தம் ஸங்குசிதமான ஜ்ஞாநத்தை யுடைய திர்யக்குகளோடும், ஜ்ஞாநாதிகர்களான மஹர்ஷிகளோடும், காமாதிகைகளான கோபிகளோடும், ப்ரீத்யதிகர்களான ஆழ்வார்களோடும் வாசியற எல்லாரையும் தன்னிடத்தில் மிகவும் ப்ரவணராக்குவதற்கு அவன்தனக்கும் அம்மான்பொடியா யிருப்ப தொன்றுயிற்றிறே இக்கண்ணழகு; "அம்புஜேக்ஷணம் - தாமரைப்பூவைப்போன்ற கண்களையுடைய. "கௌஸல்யாஸூநோ: காகுத்ஸ்த ஸம்வர்த்தித காருணாகார" என்றும், "ஆநந்தஜத்வ ஶ்ரீரோஹிதேந ஶேஷ" என்றும் சொல்லுகிறபடியே மநுஷ்ய பாவனையாலே தன்னுடைய ஸர்வஜ்ஞத்வாதிகளை மறைத்துக்கொண்டு வந்து பிறந்தானாகிலும், ஸர்வ பரவித்யோபாஸ்ய வஸ்துவுக்கு அடையாளமாக "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ" என்கிற ஶ்ருதியிற் சொல்லப்பட்டிருக்கும் அஸாதாரண சிஹ்நம் தன்னாலும் மறைக்க வொண்ணாது என்கிறது. அன்றிக்கே, "உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணன்" என்றும், "விஶ்வாஸிரக்ஷண விஹாரக்ருத க்ஷணேந:" என்றும் சொல்லுகிறபடியே ஸகல ஜீவராஶிகளையும் ஓரே காலத்தில் கடாக்ஷித்து ரக்ஷிக்கத் தகுந்ததாயும், "ஆதீர்க்கமாவாப்ய வஷ்டிர்பிர் மேகவாஜை:" என்கிறபடியே கமர்பிளந்தவிடத்தில் ஒரு பாட்டம் மழை பெய்தாப்போலே ஸாம்ஸாரிக ஸகல

தாபங்களும் தீர்ந்து போம்படி தயையாகிற திவ்யாம்ருதத்தை வர்ஷிக்கின்ற கண்களை யுடையவ னென்றுகவுமாம். அன்றிக்கே, 'அம்பு₃ஜ' என்கிற பதத்தின் அவயவார்த்தத்தை விவக்ஷித்து, "கம் ஜலம் பிப₃தீதி கபிர் நாலம் தஸ்மிந் ஆஸ்தே இதி கப்யாஸம் யத்₃வா கபிராதி₃த்ய: தேந அஸ்யதே விகாஸ்யதே இதி கப்யாஸம் - ஶிஶிர ஸ்பர்ஶம் ஶ்ரீமத் புண்ட₃ரீகம் ஸுக₂ஸ்பர்ஶம் ப₄வதி ஸ்வாகார ஸ்வஸ்தி விகஸிதாக்ஷிவத்" என்றும், "க₃ம்பீ₄ராம்ப₄ஸ்ஸமுத்₃பூ₄த" என்றும் விவரிக்கப்பட்ட 'கப்யாஸ' ஶ்ருதியை உபப்ருஹ்மணம் செய்கிற தாகவுமாம். அன்றிக்கே, "கட்டுரைக்கில் தாமரை நின்கண் பாதம் கையொவ்வா" என்றும், "கஞ்ஜபுஞ்ஜ ஸ்யந்தி₃ஶோப₄ம் வநாந்தே நாயகஸ்ய விஶாலயோ த்₃ருஶோ:" என்றும் சொல்லுகிறபடியே ஒற்றைத் தாமரைப்பூ நேராக த்ருஷ்டாந்த மாகப் போதா தாகையினுல் 'அம்பு₃ஜ' ஶப்தத்தை ப₃ஹுவசநமாக்கி 'தாமரைப்பூக்களைப் போன்ற கண்ணையுடைய' என்றுகவுமாம். "தாமரைக்காடு மலர்க்கண்ணோடு கனிவாயுடையதுமாய் - மணித்தடம் தாமரைக்காடுகள் போல் திருமார்பு கால் கண் கை" என்றும், "பு₃ண்ட₃ரீக வநஶ்ரீ புண்ட₃ரீகஸ்ய நேத்ரம் புண்ட₃ரீகாக்ஷ ஸாக₃ர" என்றும் சொல்லுகிறபடியே காடாகப்பூத்த தாமரைப்பூக்களை த்ருஷ்டாந்தமாக விவக்ஷிக்கிற தாகவுமாம்.

பா₃லகமம்பு₃ஜேக்ஷணம் - ப்ரௌடனான த₃ஶையில் தாமரைப்பூ த்ருஷ்டாந்தமாகமாட்டாதாகிலும் சிறுகுழந்தைப் பருவமானதால் த்ருஷ்டாந்தமாகச் சொல்லலா மென்றுகவுமாம்.

அம்பு₃ஜேக்ஷணம் வஸுதே₃வ ஐக்ஷத - தாமரைப் பூப்போன்ற கண்களை யுடைய இந்தப் பகவானை வஸுதேவர் கண்டு அநுபவித்தார். யார் கண்டு அநுபவிக்கக் கூடிய வஸ்துவை யார் அநுபவிக்கிறுர்? "தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவுந் தலைமகனை" என்று நித்யஸூரிகள், "ஸதா₃ பஶ்யந்தி"



என்கிறபடி ஸர்வகாலமும் கண்டு அநுபவித்தாலும் கரைகாணவொண்ணாதபடி யிருக்கிறபடியைக் கண்டு "ஜிதம் தே புண்ட₃ரீகாக்ஷ" என்று எழுதிக்கொடுக்கும் கண்ணழகை, "மாயனைக் கண்மடவார்மயக்கிற் பட்டு" என்று க்ஷுத்ரவிஷயங்களின் கண்ணுக்கு இலக்காய் மயங்கிக் கிடக்கிற வஸுதேவர் கண்டாரென்று மஹர்ஷி ஆஶ்சர்யப்படுகிறார்.

சதுர்பு₄ஜம் - நான்கு திருக்கைகளையுடைய. ஆஶ்ரிதர்களைக் காப்பாற்றுவதில் "ஆவியின் தன்மை யளவல்ல பாரிப்பு" என்றும், "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்₄ருஶம் ப₄வதி து₃:கி₂த: - உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி" என்றும் சொல்லுகிறபடியே ஆனைக்கும் தனக்குத்தகுந்த வாதம் போலத் தன்னுடையபெருமைக்குத்தகுந்தபாரிப்புப் பாரிக்குமவனுகையாலே அந்தப் பாரிப்பின் மிகுதியாலே கல்பக வ்ருக்ஷம் பணைத்தாப்போலப் பணைத்துக்கொண்டு நின்றன திருத்தோள்கள். அன்றிக்கே, "சதுர்ணாம் புருஷார்தா₂நாம் தா₃தா தே₃வ: சதுர்பு₄ஜ:" என்கிறபடியே இவ்வவதார த₃ஶையிலும் தன்னையடைந்தவர்களுக்கு நான்குவித புருஷார்த்தங்களைக் கொடுப்பதற்காக நான்கு திருக்கைகளுடன் அவதரித்தா னென்னவுமாம். அன்றிக்கே, "நீலதோயத₃ நிபா₄கார ஹஸ்தாக்₃ரே ஶங்க₂ ஸம்ஹிதே ஸாரஸநே தவ ஶங்க₂சக்ரே - பாணௌ ப₃த்₃த்₄வா ஹஸ்த தா₃ஹேயமஸ்ய வ்ருத்₃தா₄யுதம் ஜக₃தி ஸர்வத: ஸ்வஹஸ்தௌ" என்கிறபடியே, ஒரு திருக்கை ஆஶ்ரிதர்களுக்கு அபய தானம் பண்ணிக்கொண்டிருந்தால் மற்றைத்திருக்கைகள் திவ்யாயுதங்களை ஏந்தி 'இந்த அபயதாநத்தை நாங்கள் நிறைவேற்றிவைப்போம்' என்று காட்டிக்கொண்டு ஆஶ்ரிதர்களுக்கு அந்த அபயதாநத்தில் நம்பிக்கையுண்டுபண்ணிக்கொண்டு நிற்கின்றன. "ஸுக்₃ரீவஸ்ய ஹிதம் ஶ்லாக்₄யம் வீர்யேண ராக₄வே" என்று ராகவனிடத்தில் ஶங்கையுள்ளவனுயிருந்த ஸுக்ரீவ மஹாராஜனே, "தத: ப்ரீத ப்ராஹ்ருஷ்ட விஶ்வஸ்த: ஸ மஹாகபி:" என்று நம்பிக்கை

வரும்படி செய்தது திருச்சார்ங்கத்தின் மிடுக்கன்றோ? ஆகையால், ஆஶ்ரிதர்களுக்கு அபயம் அளிக்கவும், அதில் அவர்களுக்கு விஶ்வாஸம் பிறப்பிக்கவும் நான்கு திருக்கைகளுடன் அவதரித்தா னென்கிறது. "ரஜஸ்வா [illegible] வாபி [illegible] ஸந்த்ராஸம் [illegible] ஸம்ஶ்ரிதா" என்றும், "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே நினைத்த மாத்ரத்தாலே ஆஶ்ரிதர் பயங்கெடுத்திரிகைக்கும், "[illegible]" என்று பார்த்தவர்கள் நெஞ்சாறல் படுவதற்கும், "[illegible]" என்றும், "[illegible]" என்றும் ஆஶ்ரிதர்களுடைய ஸமஸ்த ஸாம்ஸாரிக தாபங்களைப் போக்கக்கூடிய நிழலைத் தந்தளிக்கைக்கும், ஆஶ்ரித விரோதிகளை அழியச்செய்யுமிடத்து "[illegible]" என்கிறபடியே தன் ஏகதேஶமே பர்யாப்தமாய் நிற்கைக்கும், ப்ராணிகள் கண்டால் "நான்கு தோளும் அச்சோ ஒருவ ரழகியவா" என்று மதிமயங்கிக் கிடப்பதற்கும் உடலான நான்கு திருக்கைகளோடு அவதரித்தா னென்னவுமாம்.

ஶங்கசக்ராத்யாயுதம் - ஶங்கம் சக்ரம் முதலிய உத்தமங்களான ஆயுதங்களையுடைய. 'சங்கம் ஊதுகிற வாத்யவிஶேஷமாகச் சொல்லப்படுகிறதேயன்றி வாள் முதலியவை போல ஆயுதமாகவற்றோ?' என்னில், பகவானுடைய ஸ்ரீ பாஞ்சஜந்யத்திற்கு ஸ்ரீ ஸுதர்ஶநாதிகளைப்போலக் கையை விட்டுப் போய்க் கார்யம் செய்யவேண்டாதே, ஸ்ரீஶார்ங்கத்தைப்போல மற்றொன்றை ஏவிக் கார்யம் செய்யவேண்டாதே, "[illegible]" என்றும், "தீயவசுரர் நடலைப்



பட்டுழுங்கும் தோற்றத்தாய் நற்சங்கே" என்றும் சொல்லுகிறபடியே தானிருந்தவிடத்திலேயே யிருந்து தன்னுடைய த்வநி மாத்ரத்தாலே ஆஸுர ப்ரக்ருதிகளை நிரஸிக்கும் ஸ்வபாவமுண்டாகையாலே ஶங்கத்தை இங்கு ஒரு ஆயுதமாகச் சேர்த்தெடுத்தது. இங்கு உத்தமங்களாயிருத்தலாவது - "கையில் வெய்ய ஆழியொன்றேந்தி யோர் சங்கு பற்றி அச்சோ ஒருவ ரழகியவா" என்றும், "[illegible]" என்றும், "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே கல்பக வ்ருக்ஷம் பணைத்துக் கணுக்கள்தோறும் அரும்பினாற் போலே யிருக்கையாலே ஆபரணங்களென்று சொல்லும்படி நிற்கையும், அஸுர விஜயத்திற்குப் பரிகரமாயிருந்து ஆயுதங்களாக நிற்கையுமே. அன்றிக்கே, "[illegible]" என்று அருளிச்செய்தபடியே மிகவும் விசித்ரமான ஶக்தியை யுடையவைகளாயிருக்கை, அதாவது - "[illegible]" என்று அருளிச்செய்தபடியே, கோடாலி உளி குந்தாலி இவைகளால் தனித்தனியே கஷ்டப்பட்டுச் செய்யக்கூடியதான அதிகடினங்களையும், "புணராநின்றமரமேழு" என்கிறபடியே இலக்குக்குறிக்க வொண்ணாதபடி ஒன்றுக்கொன்று பின்னிக்கொண்டு நிற்கிற மராமரங்களேழு எய்ததும், மலையைத்துளைத்ததும், பூமியைப் பிளந்ததும் ஆகிய இவையெல்லாவற்றையும் ஒரே பாணமன்றோ செய்தது? அப்படிப்பட்ட ஆயுத மென்றபடி. மேலும், பகவானுடைய ஸங்கல்பத்துக் கிடாக நடக்கும் ஸ்வபாவத்தை நினைக்கிற தாகவுமாம். அதாவது - "இரவிந்றிரவியின் காலத்தை யழித்த வெழிற்படையோன்" என்கிறபடியே "கோடி ஸூர்ய ஸமப்ரப" என்றும், "சுடராழி" என்றும் சொல்லப்படுகிறதுதானே அவன் ஸங்கல்பத்தாலே தன்னுடைய தேஜஸ்ஸை மறைத்துக்கொண்டது மன்றி ஸூர்யனையும் மறைத்து அந்தகாரத்தை யுண்டாக்கிப் பகலை இராவாக்கிநின்றவண்ணம் ஆஶ்ரிதர்களைக் காப்பாற்றுவதில் அவனிலும் ஆஸக்தி விஞ்சின என்னவுமாம். "அறமுயலாழிப்

படையவன்" என்றதிறே. ஆகையாலிறே, ஆர்த்தையான த்ரௌபதி அவனை ஶரணம்புகும்போதும் "ஶங்க சக்ர கதாபாணே" என்று இவர்களை முன்னிட்டுக்கொண்டு புகுந்தான். 'உத்யுதா ந்யாயுதாநி யேந' என்கிற வ்யுத்பத்தியால் உயரத்தூக்கப் பட்ட ஆயுதங்களை யுடையவனென என்றாகவுமாம். இத்தால், "ஸோऽயம் இதி நிஶ்சித: ப்ரஹரணாதிபோ மஹாவ ஸ்வயம் வஹ ஸி நிதாயதஶதவி ரம்ய ப்ரஶீதே - ஸ்வரக்ஷணவிபாஹவ த்ருணதரக்ஷணம் தாவகம்" என்கிறபடி ஆஶ்ரிதர்களைக் காப்பாற்றுகிற விஷயத்தி லுள்ள த்வரையின் மிகுதியால் ஆயுதங்களை யெடுக்கவேண்டிய விளம்பத்தைப் பொறுக்காமையாலும் "ஸத்ருக்ஷோஷாம் வாரயேயாயம் ஶயாந:" என்கிறபடி அந்த த்வரையில் எல்லா வஸ்துக்களையும் வ்யத்யஸ்தங்களாகத் தரிக்க வேண்டி வருகையாலும், அப்படிக்கில்லாமல் முந்தியே ஆஶ்ரித விரோதிகளின்மேல் ப்ரயோகிப்பதற்காகத் தூக்கிக்கொண்டுவந்து பிறந்தவனென்றதாயிற்று. அன்றிக்கே, "உத்ஹ்ருதாந்யாயுதாநி யஸ்ய" என்கிற வ்யுத்பத்தியால் 'உயரக்கிளம்பிக்கொண்டுநிற்கிற ஆயுதங்களை யுடைய' என்று அர்த்தமாகக் கடவது. அப்போது மற்றை யவதாரங்களிலும் இந்த அவதாரந்தன்னிலும் சிற்சில ஸமயங்களிலும் பகவத் ஸங்கல்பத்தாலே அந்தர்ஹிதராயிருந்துகொண்டு கார்யம் வந்தவாறே அவனுடைய ஸங்கல்பத்தை அநுஸரித்து ப்ரகாஶமாவது என்று அர்த்தம்.

(இன்னும் வரும்.)

சே. நரஸிம்ஹாசாரியர்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

### ஸ்ரீ ராகவனுடைய ஸமுத்ர ப்ரதிஶயநம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,

இந்த வேதாந்த தீபிகையின் 9-வது ஸஞ்சிகையில் 363, 364-வது பக்கங்
களில் ஸ்ரீ. உ.ஹ. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியினுடைய
ப்ரஶ்நமாக ஒன்று எழுதப்பட்டுளது. அதாவது - "ஸ்ரீராமன் ஸமுத்ர ராஜ
னைக் குறித்துச் செய்தது ப்ரதிஶயநமா? அல்லது ஶரணாகதியா? ப்ரதிஶயந
மாக இருந்தால் அயோத்யாகாண்டத்தில் ஸ்ரீபரதாழ்வானை 'க்ஷத்ரியன் ப்ரதி
ஶயநம் செய்யக்கூடாது' என்று தாமே அருளிச்செய்திருக்க, இப்பொழுது
தாம் எப்படி செய்தருளினார்? ஶரணாகதியென்றால், ஸ்ரீமத்ராமாயணம் யுத்த
காண்டம் 19-வது ஸர்க்கம், 9, 10, 11-வது ஶ்லோகங்களின் ஸ்வாரஸ்ய
த்துக்கு விரோதம் வருவதோடு, தர்ப்பஶயநம் உபவாஸம் முதலிய நிய
மங்கள் ப்ரபத்திக்கு அங்கங்களன்றாகையால் அந்தநியமங்களை ஏன் அநு
ஷ்டித்தார்? தவிரவும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் அபயப்ரதாநஸாரத்
தில் 3-வது அதிகாரத்தில் இதை ஶரணாகதியாக அருளிச்செய்ததும், ஸ்ரீ
மத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ப்ரதிஶயநமாக அருளிச்செய்ததும் விருத்த
மன்றோ?" என்பதுதான். இதில் ஸ்வாமியைப்போலிருக்கும் பெரியோர்
கள் கூசி அடிவைத்த இடத்தில் அடியேன் மிதம்பசன் அடிவைக்க வேணு
மென்று எண்ணுவதே அதிஸாஹஸமாக இருந்தாலும், 'ஸ்ரீநிகமாந்தமஹா
தேஶிகனுடைய கட்டெழில் வாசகமாகிய ஸ்ரீ ஸூக்தங்களில் பரஸ்பரவிரோத
மென்கிற ஶங்கையும் வரலாமா?' என்கிற அபிநிவேஶமும், அந்தத் தேஶி
கன் திருவடிகளில் நிரவதிகமான பக்தியு மாகின்ற இரண்டு ஊன்றுகோல்
களைக்கொண்டு இழிந்தேனாகையால், பெரியோர்களெல்லாரும் என்னுடைய
இந்த ஸாஹஸத்தை க்ஷமித்தருளும்படி ப்ரார்த்திக்கிறேன்.

இந்த விஷயத்தில் ஆசார்யனுடைய திருவுள்ளம் 'ஸ்ரீராமன் ப்ரதிஶ
யநம் செய்தார்' என்பதுதானென்று சொல்லலாம். அயோத்யாகாண்
டம் 111-வது ஸர்க்கத்தில், "ப்ராஹ்மணோ ஹ்யேகபார்ஶ்வேந

நராசு ரொருஷ திஷாஷுதி - நதஃ 8ருயபூராவஷிகுா நாஂ வியீஃ வு தஹ்ஷவெஶரெந" என்கிற 17 - வது ஶ்லோகத்தில் 'ஷாக ஷாரஶ்வூந' என்றும், 'நராசு ரொருஷஂ' என்றும் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது - ஒருபக்கத்தினுல் படுக்கக்கூடாதென்றும், மநுஷ்யர்களுக்குப் போக்கு வரத்துக்குக் கூட வழியில்லாமல் வாசலில் மறைத்துக்கொண்டு கிடக்கக்கூடாதென்றும் ஸ்வாமி நிஷேதித்ததாக ஏற்படுகிறது. இந்த விஷயம் "ரெஶெஷ வஷாரஷா ஷாரஶா யாஃ" என்கிற வாக்யத்தாலும் விளங்கும். 'ஆஶ்ரம வாசலில் கிடக்கிறேன்' என்றன்றோ பரதாழ்வான் சொன்னது? அவ்விடத்தில் கோவிந்தராஜீய வ்யாக்யாநத்திலும் "வுதஹ்ஷவெகஷ்ராதி வுதிரொஷ்ராதி" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனுல், 17 - வது ஶ்லோகத்திலுள்ள 'ரொருஷஂ' என்கிற பதத்தின் அர்த்தமே இதற்கும்; அதாவது- 'தடுக்கிறது', 'நிர்ப்பந்தம் செய்கிறது' என்று வ்யக்தமாகத் தெரிகிறது. மேலும், அவ்விடத்திலிருக்கும் த்ருஷ்டாந்தத்தைப் பார்க்கையிலும் மேற்கூறியதுதான் ஸரியான அர்த்தமென்று ஏற்படும். "ஜநாஷாரொ நிராஶொகொ யநஹீநெ யயாத்விஜஃ" [பணமிழந்த ப்ராஹ்மணன் போல ஆஹாரமில்லாமலும் கண்ணை விழியாமலும் கிடக்கப்போகிறேன்] என்பது தான் த்ருஷ்டாந்தம். இதனுல், ஶாஸ்த்ர விஹித மன்றிக்கே கடன்காரன் வளைப்புக் கிடக்கிறுப்போலக் கிடப்பதுதான் பரதாழ்வான் அநுஷ்டித்தது; அப்படிக் கிடப்பதைத்தான் ஸ்வாமியும் தடுத்தார் என்பது ஸித்தம். ஸ்வாமி அநுஷ்டித்த இடத்திலோ "ஜயிஶிரெஶ ஸ விபிவக" என்றும், "வுயதஃ" என்றும் சொல்லியிருக்கிறபடியால், ஶாஸ்த்ர விதிப்ரகாரமாகவும் பரிஶுத்தியுடன் கூடவும் ஸ்ரீராமன் அநுஷ்டித்தார் என்று ஏற்படுகிறது. அதாவது - ஸ்ரீராமன் அநுஷ்டித்தது ஶாஸ்த்ரீயம் என்று ஆகும். மேலும், "நராசு" என்கிற பதத்தால் ஸ்ரீபரதன் அநுஷ்டித்தது மநுஷ்யர்களைக் குறித்து நிர்ப்பந்தமாகச் செய்த வ்யாபாரமென்றும் தெரிகிறது. இதுவோ தேவதையைக் குறித்து ப்ரஸாதார்த்தமாகச் செய்த வ்யாபாரம். அன்றிக்கே, "8ருயபூராவஷிகுா நாஂ" என்கிற பதத்திற்கு "ஜஷிஷிக்த க்ஷத்ரியாணாஂ" என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. 'க்ஷத்ரியாணாஂ' என்று சொல்வதே போதுமானதாக இருக்க, 'ஜஷிஷிக்த' என்று அதிகபதம் போட்டதற்கு, 'ராஜாவாய் அபிஷேகம் செய்யப்பட்டு ராஜ்ய பரிபாலநஞ் செய்கிற க்ஷத்ரியர்களைப்பற்றிச் சொல்லப்படுகிறது' என்று தாத்பரியம். ஸ்ரீ பரதன் அபி



ஷேகஞ் செய்யப்படா விட்டாலும், ஸேனை மந்த்ரி முதலான ராஜாங்கங்களுடன் வந்திருக்கிறபடியால் அபிஷேகஞ் செய்யப்பட்டாரென்கிற எண்ணத்தினுலோ, அல்லது பிதா எப்பொழுது ராஜ்யம் பரதனுக்கு என்று தீர்மானித்துத் தம்மைக் காட்டுக்கு அனுப்பினுரோ அப்பொழுதே ராஜ்யம் பரதனுடையதாக ஆகிவிட்டபடியால் அவர் அபிஷிக்த ப்ராயர்தான் என்கிற எண்ணத்தினுலோ, ஸ்ரீராமன் அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆகையால், ஸ்ரீராமன் நிஷேதித்தது அபிஷிக்த க்ஷத்ரியர்கள் விஷயம். ஆதலால் அபிஷேகஞ் செய்யப்படாமல் முநிவ்ருத்தியாக இருக்கிற தாம் அநுஷ்டித்தது ஸ்ரீ பரதாழ்வான் அநுஷ்டித்த க்ரியையை விட வேறு என்பது ஸித்தம். இப்படி "ஶ்ரூதிலிஙாவாக்யப்ரகரணஸ்தாநஸமாக்யாநாம்" என்று மீமாம்ஸகர்கள் சொல்லும் ஆறு ப்ரமாணங்களாலும் இவர்கள் அநுஷ்டித்த க்ரியைகளின் பேதம் ஸாதிக்கப்படுகிறபடியால் ஸ்ரீராமன் ஸம்பந்தமாகச் சொல்லப்பட்ட ஸ்வ வசந விரோதமென்கிற ஆக்ஷேபம் பரிஹரிக்கப்படுகிறது.

அபய ப்ரதாந ஸாரத்தில் "ஶரணுகதி பலியா தொழிந்த தத்தனை" என்று ஸாதித்திருப்பது ஜஹஷவஶர்ஜ வாதமாகவே ஒப்புக்கொள்ள வேணும். ஏன் அப்படி ஒத்துக்கொள்ளக்கூடாது? என்று தெரியவில்லை. 'உவவாஸ ஶஷ ஶயநாஷி விஶிஷ்டமா யிருப்பதால், இந்த ஸமாதாநம் ஸ்வரஸமாகாது' என்று ஸ்ரீ. உஸ. புத்தங்கோட்டகம் ஸ்வாமி ஸாதித்திருப்பதைக் கொஞ்சம் விசாரிப்போம். முதலில் இந்த இடத்தில் உபவாஸம் என்கிற அர்த்தத்தைச் செய்வோமென்னில், அப்படி வ்யாக்யாநமும் செய்யப்படவில்லை. அப்படிச் சொல்லப்பட்டதாக எடுத்துக்கொண்டாலும் அதன் வைஶிஷ்ட்யம் அந்த ஸமாதாநத்தின் ஸ்வாரஸ்யத்தை எப்படி பங்கம்செய்யும்? வைஶிஷ்ட்ய மென்பது இரண்டு விதமாக இருக்கலாம். அவையாவன—(1) அங்கங்களாகச் சேர்ந்திருக்கை, (2) ஒருகாலத்தில் எவ்விதமாவது சேர்ந்திருக்கை. 'வுதிஶிரெஶ' என்கிற பதத்துக்கு 'ஶரணுகதி பண்ணினுர்' என்கிற அர்த்தத்தை ஒப்புக்கொண்டு விசாரிப்போம்; இரண்டாவது அர்த்தம் சொல்வது உபபந்நமன்று; ஏனென்றுல், அப்பொழுது ஒருதர்மத்தோடும் ஒருவிதமான சேர்க்கை யிருக்கக்கூடாதாகையால், 'அங்கு அப்படிக்கில்லாமல் தர்ப்பஶயநம் உபவாஸம் முதலிய தர்மங்களுடன் சேர்ந்திருக்கிறபடியால் இது ஶரணுகதியாக இருக்கக்கூடாது' என்றுதானே அர்த்தம் சொல்லவேணும்? 'ஶரணுகதிக்கு எவ்வித தர்மங்களோடும் எவ்வித

மான சேர்க்கையுங் கூடாது’ என்று ஶ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுக்குத் திருவுள்ளமில்லை யென்பது, “ஸம்பாவிதமானவற்றினுடைய ஸ்வரூபத்யாகம் விதேயமாகில் அப்போது உண்டான பகவத் க்ஷேத்ரவாஸ ஶிகா யஜ்ஞோபவீத ஊர்த்வ புண்ட்ராதிகளையும் தவிர ப்ரஸங்கிக்கும்” என்று அந்ய[illegible]ரைப்பற்றி ஆபத்தி பண்ணுகையாலும், தாத்பர்ய சந்த்ரிகையிலும் ஶ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் ‘வ்ரஜ’ என்கிற பதத்துக்குச் செய்திருக்கிற அர்த்த நிர்ணயங்களாலும் ஸித்தம். இரண்டாவது அர்த்தத்தை எடுத்துக்கொள்வதும் உபபந்நமாகாது. ஏனென்றால், இவ்விடத்தில் தர்ப்பஶயநாதிகள் அங்கமாகச் சொல்லப்படவில்லை. «அஞ்ஜலிம் க்ருத்வா», «தர்பாநாஸ்தீர்ய» என்று இருக்கிறபடியால், தர்ப்பஶயநாதிகள் அங்கமாகத்தான் சொல்லப்பட்டிருக்கின்றன வென்று நிஶ்சயம் பண்ணமுடியாது. ‘க்த்வா’ ப்ரத்யயம் அங்கமென்கிற அர்த்தத்தைத்தான் சொல்லும் என்கிற நிர்ப்பந்தமில்லை. «அநித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்» என்கிற பகவத்கீதை 9-வது அத்யாயம் 33-வது ஶ்லோகத்தின் வ்யாக்யாநத்தில் ஶ்ரீ பாஷ்யகாரர் «ப்ராப்ய வர்தமாநஸ் ஸந்» என்று அருளிச்செய்திருக்கிறார். «த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:» என்கிற இடத்திலும் அப்படியே அநுவாதமாகவே ஒப்புக்கொள்ள வேணும். இல்லாவிடில் மூன்றுலோக பரிக்ரமணமும் ப்ரபத்திக்கு அங்கமாக ப்ரஸங்கிக்கு மாகையால், இவ்வர்த்தத்தை நம் தேஶிகன் “இப்படி அர்த்தாந்தரங்களினு முண்டாகையாலே ‘க்த்வா’ ஶ்ருதி மாத்ரத்தைக் கொண்டு த்யாகம் அங்கமென்ன வொண்ணாது” என்று சரம ஶ்லோகாதிகாரத்தில் அருளிச்செய்திருக்கின்றார். ஆகையால், «ஆஸ்தீர்ய», «க்ருத்வா», என்கிற பதங்கள் அங்கமென்கிற அர்த்தத்தைக் காண்பிக்கமாட்டா. ஏற்கெனவே பரிஶுத்திக்காகச் செய்ததை அநுவதித்துக்கொண்டு ஶரணாகதி பண்ணினதாக அர்த்தமாகையால், அந்த விரோதமும் ஸம்பவிக்காது. ஆகையால், ‘ஶ்ரீதேஶிகன் [illegible] வாதிக்கிறார்’ என்று சொல்வதில் ஸ்வாரஸ்ய பங்கம் தெரியவில்லை. தவிரவும், இவ்விடத்தில் ‘ப்ரதிஶிஶ்யே’ என்கிற க்ரியாபதத்தாலாவது வேறு க்ரியாபதத்தாலாவது ஶரணாகதி சொல்லப்படவில்லை; ஆகையால், ப்ரதிஶயநமே அர்த்தமென்று நிர்ணீத மாகிறது.

விரோதிக்ருத்வருஷ,
கார்த்திகை 1வ.

சே. நரஸிம்ஹாசாரியார்.

(2)

# ஶ்ரீ ஸந்நிதியைச் சேர்ந்த தேவஸ்தாநங்கள்.

## ஶ்ரீ அஹோபிலம்.

ஶ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

அஹோபிலம் என்பது, கர்நூல் ஜில்லா அல்லகட்டா தாலூக்காவில் உள்ளது. இது ‘சிங்கவேழ்குன்றம்’ என்று ஆழ்வார்களாலும், ஆசாரியர்களாலும் சிறப்பாய் மங்களாஶாஸநம் செய்யப்பட்டிருக்கிறது. ரெயிச்சூர் ரயில் மார்க்கத்தில் எர்ரகுண்டா ஸ்டேஷனில் இறங்கி அதற்கு 7-மைல் தூரத்திலுள்ள ப்ரொடத்தூர் வழியாய் இவ்வூருக்கு ஒருகாத தூரமான சாகலூர் என்கிற கிராமத்தை யடைந்து, அங்குநின்றும் பதினான்கு மைல் உள்ள ஶ்ரீ அஹோபிலத்திற்கு ஸேவார்த்திகள் போவார்கள்; நந்தியாலென்கிற ஊர்மார்க்கமாக ருத்ரவரம் என்கிற கிராமத்திற்குப் போய், அவ்வழியாக ஶ்ரீ அஹோபிலம் போவதும் உண்டு.

கீழ் அஹோபிலம், மேல் அஹோபிலம் என்று இரண்டு ஸந்நிதிகள் இருக்கின்றன. கீழ் அஹோபிலம் நல்லமலை யென்று ப்ரஸித்திபெற்ற மலையடிவாரத்திலும், மேல் அஹோபிலம் அம்மலையின் பேரிலும் உள்ளன. இவை இரண்டும்தான் பெரிய ஸந்நிதிகள். “நவந்ருஸிம்ஹன்” என்று இவ்விடத்தில் ந்ருஸிம்ஹன் ஒன்பது பிரகாரமாக அவதரித்தபடியால், இந்த ஸந்நிதிகளைத்தவிர ஏழு சிறிய ஸந்நிதிகளும் உண்டு.

இந் அஹோபிலத்தின் தத்காலநிலைமையைப் பார்த்தால், ஒரு காலத்தில் இது பஹுஜநங்களாலும் தடாகாதி ஜல ஸௌகர்யங்களினாலும் நிறைந்திருக்கவேண்டும் என்று ஊஹிக்க இடமுண்டாகிறது. ஸந்நிதியின் நாற்புறமும் மாடவீதிகளும், வீதிதோறும் திருமாளிகைகளும் இருந்தனவாகக் காணப்படுகின்றன! துருஷ்கர் கலாபத்தில் இவ்வூரை அவர்கள் பாழாக்கி விட்டார்கள் என்று அத்தேச சரித்திரங்களால் தெரியவருகிறது. ஸந்நிதியின்

திருவாசலுக்குமுன்னே இருசாரிலும் மண்டபங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கோவிலுக்குள்ளே சென்றால், ஓர் புறத்தில் புஷ்கரிணியும், அதைச்சுற்றி மண்டபங்களும் இருக்கின்றன. இவைகளின் ஸ்திதி மிகவும் கேவலம். ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் இவர்கள் ஸந்நிதிகள் மற்றொரு புறத்தில் உள்ளன. தேசிகன்ஸந்நிதியில் உத்ஸவபேரம் இல்லை. சூடிக்கொடுத்த நாச்சியார் ஸந்நிதியும், தாயார் ஸந்நிதியும் தனியாக இருக்கின்றன. பெருமாள் ஸந்நிதியில் உத்ஸவம் கண்டருளும் திருமூர்த்தி வரதராஜன். இந்த ஸந்நிதியின் முன்புறத்தில் கல்யாணமண்டபம் ஒன்று மிகுந்த அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஸந்நிதிகளின் மேல்பாகத்தில் செடிகள் முளைத்தும் நாற்புறத்திலும் மண்டபங்க ளெல்லாம் விழுந்தும் கிடக்கின்றன. இந்தத் திவ்ய தேசத்து எம்பெருமான் திருமாலை திருப்பரியட்டம் கண்டநாள் எக்காலமோ தெரியவில்லை. இவ்விடத்தில் திருவாராதநம் ஶூந்ய மென்றே சொல்லவேண்டும். சர்க்காரால் வருமானம் வருஷத்தில் 300-ரூபாய். இதைக்கொண்டு ஸர்வமும் நடக்கவேணும். இந்த ஸந்நிதியின் நிலைமை மிகுந்த துக்ககரமாயிருக்கிறது; ஆஸ்திகர்கள் மனம் கொதிக்கும் என்பதற்கு ஸந்தேஹமில்லை. ஸ்ரீ ஸந்நிதிக்கு மூலஸ்தாநமான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை அடியோடு அநாதரவு பண்ணிவிட்டு "அஹோபிலம்தான் வாழ" என்று மங்களாஶாஸநம் நடக்கிறதன்றோ? இது என்ன ஸாங்கேத்யம்!!

மேல் அஹோபிலத்தைப் பின்னால் விவரிப்போம்.

விரோதிக்ருத் ௵,
கார்த்திகை 1௳.

ஓர் ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்.

ஸ்ரீ:.

# பிரிவுகளின் மாஸ அறிக்கை.

## ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை

### (சென்னை சைதாப்பேட்டைப் பிரிவு.)

1911-வது வருஷத்திய வருஷாந்த அறிக்கை.

திருவல்லிக்கேணி ஸ்ரீஅஹோபிலமடத்தில் விரோதிக்ருத் ௵ ஐப்பசி ௴ 13௳ (29-10-11.) ல் சேர்ந்த சங்கத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

சென்ற ஸாதாரண ௵ தை ௴ 2௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 3-மணிக்கு, சென்னையிலிருக்கும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களில் சிலர் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்திற் சேர்ந்து, ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்ய ஸபைக்குப் பிரிவாகச் சென்னையில் ஓர் உபஸபை ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அப்பொழுது அங்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீ. தி. வெங்கடராம ஐயங்கார் ஸ்வாமி, இம்மாதிரியாக உபஸபை ஏற்படுவதிலிருக்கும் நன்மைகளைப்பற்றி விஸ்தமாக எடுத்துரைக்கவே, அங்கு எழுந்தருளியிருந்தவர்களுள் 30-ஸ்வாமிகள் அப்பொழுதே அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். பிறகு தஞ்சாவூர் மஹாஸங்கத்தில் அங்கீகரிக்கப்பட்டவையான பொது ஸபையின் விதிகளுக்கு அநுகுணமாக இத்தப் பிரிவின் வ்யவஹாரங்கள் நடந்து வரும் பொருட்டுச் சிலவிதிகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த விதிகளுக்கு இணங்கி 1911-ம் ௵த்திற்குப் பின்வருமாறு கமிட்டிமெம்பர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

| | |
|---|---|
| (1) ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர். | எம், எ, பீ-எல்., ஸபாத்யக்ஷர். |
| (2) ஸ்ரீ. வி. ராகவாசாரியர். | பி-எ, பி-எல்., உப ஸபாத்யக்ஷர். |
| (3) ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசாரியர். | பி-எ, எல்-டி., காரியதரிசி. |
| (4) ஸ்ரீ. ஆர். கிருஷ்ணமாசாரியர். | பி-எ., மயிலாப்பூர். |
| (5) ஸ்ரீ. ஸி. துரைசாமி ஐயங்கார். | பி-எ., திருவல்லிக்கேணி. |
| (6) ஸ்ரீ. ஸி. ஸ்ரீநிவாஸாசாரியர். | ஷை |
| (7) ஸ்ரீ. தி. வெங்கடராமஐயங்கார். | தமிழ்ப்பண்டிதர், நுங்கம்பாக்கம். |
| (8) ஸ்ரீ. ஆர். நரஸிம்ம ஐயங்கார். | பி-எ., சென்னை. |
| (9) ஸ்ரீ. கே. ஸ்ரீநிவாஸாசாரியர். | பி-எ., சென்னை. |

இந்த வருஷத்தில் ஸபையைச் சேர்ந்தவர்களின் தொகை 76; அதில்

| | | |
|---|---|---|
| முதல் | வகுப்பு அங்கத்தினர் | 10 |
| இரண்டாவது | ,, | 65 |
| அஸோஸியேட் | ,, | 1 |
| | ஆக | 76 |

இவர்களுள், ஏழு முதல் வகுப்பு அங்கத்தினர் நமது உபஸபை ஏற்ப டுவதற்கு முன்னமே பொதுக் காரியதரிசிக்கு 1911-ம் ௵த்திய சந்தாவைச் செலுத்திவிட்டபடியால், அவர்களுடைய சந்தாத் தொகை நமது பிரிவின் கணக்கில் வரவில்லை. 14 இரண்டாவது வகுப்பு அங்கத்தினர் சந்தாத் தொகையை இன்னும் கட்டவில்லை.

இந்த வருஷத்தில் மொத்தம் 11 - மீட்டிங் நடந்தன.

(1) ஸாதாரண௵ தைமீ 2௳ ஞாயிற்றுக்கிழமை பிரிவு ஏற்படுத்தப் பட்டது.

(2) ,, ,, 23௳ ,, ஸ்ரீ. இ. ரங்கநாதாசாரியர். "வைச்வாநரவித்யை" உபந்யாஸம்.

(3) ,, மாசிமீ 15௳ ,, ஸ்ரீ. சே. நரஸிம்ஹாசாரியர். "அமலனாதிபிரான்" உபந்யாஸம்.

(4) ,, பங்குனிமீ 6௳ ,, ஷை

(5) ,, ,, 27௳ ,, ஷை

(6) விரோதிக்ருத் சித்திரைமீ 4௳ ,, ஷை

(7) ,, ,, 11௳ ,, ஷை

(8) ,, ஆடிமீ 29௳ ,, ஸ்ரீ. சே. நரஸிம்ஹாசாரியர். "கண்ணிநுண் சிறுத்தாம்பு" உபந்யாஸம்.

(9) ,, ஆவணிமீ 11௳ ,, ஷை

(10) ,, புரட்டாசிமீ 1௳ ,, ஷை

(11) ,, ,, 8௳ ,, ஷை

இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் அநுபந்தத்திலிருந்து 1911 ௵த் தில் மொத்தம் வரவு ரூ. 90 என்றும், செலவு ரூ. 89 - 13 - 1 என்றும், நாளது ௵த்து ஆரம்பத்தில் கையிருப்பு ரூ. 0 - 2 - 11 என்றும் தெரிய வரும். வரவு மொத்தம் ரூ. 90 - ல், ரூ. 16 - சென்ற வருஷத்துத் தஞ் சாவூர் மஹாஸங்கத்தின் செலவுக்காக விசேஷித்து வசூல் செய்யப்பட்ட தானபடியால், அந்தத் தொகை அப்படியே பொதுக் காரியதரிசிக்கு அனு ப்பப்பட்டது. பாக்கி ரூ. 74 - ல் ரூ. 5, நமது பிரிவில் உபந்யாஸம்செய் தவரின் ஸம்மாநத்திற்காகச் சில ஆஸ்திகர்களால் கொடுக்கப்பட்டது. பாக்கி ரூ. 69 - அங்கத்தினரது சந்தாத்தொகை.



செலவு தொகையில் முக்கியமாக எடுத்துச் சொல்லவேண்டியவை, இர ண்டு விஷயங்கள்தான். உபந்யாஸம் செய்த ஸ்ரீ. சே. நரஸிம்ஹாசாரிய ருக்கு ஸம்மாநமாகக் கொடுக்கப்பட்ட ரூ. 28. ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யஸபையின் 26 - வது விதிப்படி பொதுக்காரியதரிசிக்கு அனுப்பின ரூ. 27 - 9 - 4.

சென்னையிலும் சைதாப்பேட்டையிலுமாக அநேக ஸச்சிதி ஸம்ப்ரதாய ஸ்தர்கள் இருக்க, நமது பிரிவில் சேர்ந்திருக்குமவர்களின் தொகை இவ்வ ளவு ஸ்வல்பமாயிருப்பது, கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம்தான். ஆனால், மற்ற இடங்களி லிருப்பதைக் காட்டிலும் சென்னையில் நமதுஸபை செழிப்பாக வளர்ந்து வருகிறது என்பதில் ஆக்ஷேபமில்லை. பலவிடங்களில் ஸபையின் நோக்கங்களெல்லாம் ஸ்லாக்ய மென்கிற எண்ணம் பரவியிருக் கையிலும், ஜநங்கள் ஒன்று சேர்வதற்குக் கூசுவதாக நாம் கேள்விப்படுகி றோம். அப்படிப்பட்ட கூச்சமில்லாமல் நாம் இதுவரையில் சேர்ந்து விய வகாரங்களை நடத்திவருவது நமக்கு மிகுந்த ஸந்தோஷத்தை உண்டுபண் ணுகிறது; ஆனாலும், நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக் கின்றன. இந்த வருஷத்தில் உபந்யாஸங்கள் ஏற்படுத்தினது தவிர நாம் வேறு ஒன்றும் செய்யவில்லை. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹமன் விபூதியின் அபிவ் ருத்தியை நாம் தேடுவது வாஸ்தவமாக இருந்தால், ஸித்தாந்த ப்ரவர்த்த நத்திற்கு ஹேதுவான உபந்யாஸங்களை ஏற்படுத்துவதுடன் கூட மடத்து ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றியும் அழகிய சிங்கர் திருவுள்ளத்திற்கு உகப்பாக இருக்கும்படி நாம் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டி யது அவச்யமே. அப்படிப்பட்ட முயற்சியைச் செய்வதையே முக்கியகாரிய மாக வுடைத்தா யிருக்கும் பொது ஸபையின் கார்ய நிர்வாஹக அங்கத் தினருக்குத் திரவியத்தாலும் பர்யாலோசனைகளினாலும் தகுந்த உதவியை யும் செய்யவேணும். இவற்றையெல்லாம் த்ருப்திகரமாகச் செய்வதற்குப் பெருத்த கூட்டம் தேவையானதால், இந்தச் சென்னையிலுள்ள மற்ற ஆஸ்தி கர்களும் இந்தஸபையிற் சீக்கிரத்தில் சேர்வார்க ளென்று நம்புகிறோம். ஏற்கெனவே சேர்ந்திருக்கும் அங்கத்தினர்களும் தங்களுக்குத் தெரிந்தவர் களிடம் ஸபையின் விஷயங்களைப் பற்றி ப்ரஸ்தாவித்து அவர்களையும் ஸபை விஷயத்தில் ஊக்கமுள்ளவர்களாகச் செய்யவேணு மென்று ப்ரார்த்திக்கி றோம். சென்ற ஸம்வத்ஸரத்தில் தங்களுடைய தேஹ ச்ரமத்தைக் கொஞ்ச மேனும் பாராட்டாமல் அம்மாதிரியான உபகாரத்தைச் செய்த ஸ்ரீ. பா. கோபாலாசாரியருக்கும், ஸ்ரீ. கே. ஸுந்தர்சநாசாரியருக்கும் இந்த ஸபை யார் அனைவரும் மிகுந்த க்ருதஜ்ஞதையுடன் கூடினவர்களாக இருக்கிறார்கள்.

## ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை

### (சென்னை - சைதாப்பேட்டை பிரிவு.)

### 1911-ம் ௵த்திய வரவு செலவு கணக்கு.

### (1911-ம் ௵ செப்டம்பர் ௴ 30௳ வரையில்.)

| நெம்பர் | விவரம். | தொகை. | | | நெம்பர் | விவரம். | தொகை. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சந்தா - முதல்வகுப்பினர் | 15 | 0 | 0 | 1 | உபந்யாஸ ஸம்மானம் ரூ. | 28 | 0 | 0 |
| | ,, இரண்டாவது ,, | 51 | 0 | 0 | 2 | பொது ஸபைக்கு, 26-வது விதிப்படி அனுப்பியது | 27 | 9 | 4 |
| | ,, அஸோஷியேட் | 3 | 0 | 0 | | | | | |
| 2 | 1910-வது தஞ்சாவூர் மஹாஸங்கத்துக்காக விசேஷ வசூல் ... ரூ. | 16 | 0 | 0 | 3 | 1910-வது தஞ்சாவூர் மஹாஸங்கச் செலவுக்காகப் பொதுக் காரியதரிசிக்கு அனுப்பியது. | 16 | 0 | 0 |
| | | | | | 4 | அச்சு, தபாற்கூலி... ரூ. | 16 | 2 | 3 |
| 3 | உபந்யாஸ ஸம்பந்தமாக விசேஷ வசூல்... ரூ. | 5 | 0 | 0 | 5 | சில்லறைச் செலவு... ரூ. | 2 | 1 | 6 |
| | | | | | | ஆக | 89 | 13 | 1 |
| | | | | | | கையிருப்பு ரூ. | 0 | 2 | 11 |
| | ஆக ரூ. | 90 | 0 | 0 | | ஆக ரூ. | 90 | 0 | 0 |

மயிலாப்பூர் } நான் இந்தக் கணக்கைப் பரி
30-9-1911. } சோதித்துப் பார்த்தேன்; எஸ். வாஸுதேவாசாரியன்.
இது ஸரியாக இருக்கிறது.
ஏ. வி. ராஜம் - ஆடிட்டர். காரியதரிசி.
28-10-1911.

ஸ்ரீ:

# புதிய க்ரந்தங்களின் விமர்சம்.

## 1. ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ரங்கள்.

(ஸ்ரீ. ரா. ச. க்ருஷ்ணமாசாரியரால் அச்சிடப்பட்டது; விலை. ரூ. 1—0—0)

இந்தப் பெயர்பூண்ட புஸ்தகம் ஒன்று, ஸ்ரீ. ராயம்பேட்டை க்ருஷ்
ணமாசாரியரால் வெளியிடப்பெற்று வெளிவந்திருக்கின்றது. இதில் ஸ்ரீநிக
மாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களில் 28 - ஸ்தோத்ரங்
கள் நாகர லிபியில் அச்சிடப்பட் டிருக்கின்றன. ஸ்ரீ தேசிகன் திவ்ய
ஸூக்திகளின் அநேக ப்ரதிகளைப் பரிசோதித்ததன் பயனாக அங்கங்கே
பாடபேதங்களைக் காட்டியிருப்பதுமன்றி, அந்தப் பிக்க பாடங்களின் தாரதம்
யத்தைத் தம்முடைய புத்தி கௌசலத்தைக்கொண்டு பரிசீலநம் செய்து
ஸமீசீநமாகத் தோன்றினவைகளை அங்கீகரித்தும், மற்றவைகளைப் பக்கங்
களின் அடியிற் காட்டியும் ஸ்ரீ க்ருஷ்ணமாசாரியர் இந்தப் புஸ்தகத்தைப்
பரிஷ்காரமாகவே அச்சிட்டிருக்கிறார். ‘ அச்யுத ஶதகம் ’ என்னும் ப்ரா
க்ருத ஸ்தோத்ரத்தில், ப்ராக்ருத வ்யாகரணத்தை ஸஹ்ருதயர் பரிசோ
தித்தே ப்ரவ்ருத்தித் திருப்பதாகத் தெரியவருகிறது. அச்சுப்பிழைகள் அதிக
மாகத் தலைநீட்டாம லிருப்பதுடன், உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் கடித
மும் த்ருடமாகவும் உத்தமமாகவும் இருக்கின்றது. நமக்கு அத்யந்தம் உப
காரகமாகவும் ஸர்வ விதத்திலும் ஶ்லாக்யமாகவு மிருக்கின்ற ஸம்ஸ்க்ருத
பாஷையும், ஸாமாந்யமாகத் தைவபக்தியும் காலவைகுண்யத்தால் லோப
த்தை யடைகிற ஸ்திதியில் நிற்கையில், இம்மாதிரியான க்ரந்தங்களுடைய
ப்ரகாஶநம் ஆவஶ்யகமே. பாஷாந்தரத்தில் ப்ரவ்ருத்தர்களாகவும், ஸம்ஸ்க்
ருதபாஷையில் மிதமான ஜ்ஞாநத்தை யுடையவர்களாகவு மிருக்கிற ஆஸ்திகர்
களுக்கு ஒவ்வொரு ஸ்தோத்ரத்தைப் பற்றியு முள்ள விசேஷ விஷயங்களை
ஸங்க்ரஹமாக ஒரு பூமிகா ரூபமாகவும், அங்கங்கு இருக்கும் கடிநஶ்லோக
ங்களின் விசேஷார்த்தத்தைச் சிறிய விமர்சரூபமாகவும் தெரிவித்திருந்
தால், மிகவும் உபகாரகமா யிருக்கும். ஸ்ரீ தேசிகன் திவ்யஸூக்திகளின்

ஸஹ்ருதயதையை அநுபவித்து, அதனால் உண்டான ஆநந்தத்தால் ஏவ்வித ஸ்ரமத்தையும் மறந்து ஸாதரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த ப்ரவ்ருத்தியை, ஆஸ்திக ஸிரோமணிகளெல்லாரும், தாங்கள் புஸ்தகத்தை வாங்கிப் படிப்பதும், தங்களுக்குப் பரிசிதர்களை அந்த விஷயத்தில் ப்ரோத்ஸாஹநம் செய்வதுமான வ்யாபாரங்களால் ஸபலமாகச் செய்வார்களென்று நம்புகிறோம். இந்தப் புஸ்தகம் வேண்டியவர்கள், தஞ்சாவூருக்கு அடுத்த திருவையாறு முநித்ரய மந்திரம் ஸ்ரீ. ரா. கிருஷ்ணமாசாரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) **ஸ்ரீ வேங்கடநாதாசாரியர் சரித்ரச் சுருக்கம்.** (தில்லையம்பூர் பண்டித ஸ்ரீ வெங்கடராம ஐயங்காரால் எழுதப்பட்டது. விலை - அணா 8.)

இந்தப் புஸ்தகத்தில் ஸ்ரீ நிகமாந்த மஹா தேஸிகன் சரித்ரம் காலநிலைக்கேற்க ஸளிதமான தமிழ் நடையில் எல்லாருக்கும் இனிது விளங்கும்படி ஒழுங்காக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ தேஸிகன் அவதாரமென்றும், வித்யாப்யாஸமென்றும், திவ்ய தேஸ வாஸங்கள் யாத்ரைகளென்றும், இதரவைபவங்களென்றும் இச்சரித்ரத்தைப் பகுத்து, ஒவ்வொரு பிரிவுக்கும் உப விபாகங்களாக அநேக விஷயங்களை ஏற்படுத்திக்கொண்டு 33 - அத்யாயங்களில் இச்சரித்ரத்தை ஸ்ரீ வெங்கடராம ஐயங்கார் எழுதியிருக்கிறார். நல்வழியிற் செல்வதற்கு ஹேதுவான அநேக ஸாதநங்களில், பெரியோர்களுடைய சரித்ரத்தைத் தெரிந்துகொண்டு அவைகளின் ஸாரத்தை க்ரஹித்து அப்படியே நாமும் அநுஷ்டிப்பது முக்கியமான ஒரு ஸாதநமாதலால், மஹத்தமராகிய ஸ்ரீ தேஸிகனுடைய சரித்ரத்தை எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி இவர் வெளிப்படுத்தினது ஓர் சிறந்த உபகாரமே. அந்த உபகாரத்தை நன்குணர்ந்து ஆஸ்திகர்களெல்லாரும் அதன் பயனை அடைய வேண்டிய மார்க்கத்தில் ப்ரவ்ருத்திப்பார்களென்று நம்புகிறோம். இந்தப் புஸ்தகம் வேண்டியவர்கள், சென்னை நுங்கம்பாக்கம் அக்ரஹாரம் 36-நம்பருள்ள க்ருஹத்திலிருக்கும் ஸ்ரீ. தி. வெங்கடராம ஐயங்காருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

“அஹோபிலே ஸ்ரீ ந்ருஸிம்ஹ: ப்ரத்யக்ஷம் ஸ்வயம் உதபூத்” என்கிறபடி ஸாக்ஷாத் ந்ருஸிம்ஹனாலே

ஸ்ரீ அஹோபில மடம்.

யே அநுக்ருஹீதராகக்கொண்டு, அந்த அநுக்ரஹரூபமான நியமநத்தை ஸிரஸா வஹித்து, ஸர்வ ஸ்ரீ ஆதிவண் ஸடகோப ஸ்வாமியால் ப்ரதிஷ் ஜந ப்ரயோஜகமாய் ஸ்ரீ அஹோபிலமடத்தின் ப்ரபாவம் தற்காலம் மிகவும் டாபிதமான குறைந்திருக்கின்றதுஎன்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இந்தக் குறைவுக்கு அநேக காரணங்களுண்டு. அவைகளில் முக் கியமானவை இரண்டு; முதலாவது - ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹமன் யஜமாநும் இந்த மடத்தை ஸ்தாபிக்கும்படி ஸ்ரீ ஆதிவண் ஸடகோப ஸ்வாமியை நியமித்தாரோ, அந்தக் கருத்து ஸரியாக அநுஷ்டிக் கப்படாமலிருப்பதுதான். ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளும் ஜீயர் கள் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆராதித்து வருவதுடன், தேஸாட நம் செய்து ஆஸ்ரித ஜநங்களுக்கு உஜ்ஜீவநோபாயங்களைச்செய்து கொண்டும், பூர்வாசார்யர்களால் ப்ரதிஷ்டாபிதமான ஸ்ரீ விஸிஷ் டாத்வைத ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி செய்துகொண்டும் வருவதன்றோ, ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய நியமநத்தின் பொருள்? பஹுகாலமாக ஸ்ரீ ஜீயர்களின் தேஸாடநமென்பதே நடக்கவில்லை. பல இடங்களில் அநேக ஏழை ஜநங்கள், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹமன் எழுந்தருளியிருக்குமிடத்திற்குப் போக அஸக்தர்களாய் உபாயா நுஷ்டாநங்களன்றிக்கே வருந்துவதை நாம் பார்க்கிறோம். ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய நியமநத்தை இவ்விதமாக அநாதரித்தால், ஸ்ரீ மடம் எப்படி செழிப்படையும்?

இரண்டாவது - ஸ்ரீ ஆதிவண் ஸடகோப ஸ்வாமியின் காலத் திலும், அவர் அநுஷ்டாநத்தை அடியொற்றி அவருக்குப் பின்

எழுந்தருளின அநேக ஜீயர்களுடைய காலத்திலும், அநேகம் ப்ரபு
க்களை வ்யாஜமாகக்கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் இந்த மடத்
திற்கு ஏராளமான சொத்தைச் சேர்த்து வைத்தார். சில ஜீயர்கள்,
அந்தச் சொத்துக்களைத் தகுந்தபடி பரிஶீலநஞ் செய்யாமலும்,
மற்றவர்களால் ஆக்ரமித்துப் போகும்படியாக உபேக்ஷித்தும்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய இந்த விபூதிக்குக் குறைவை ஸம்பாதித்து
விட்டார்கள். ஸம்பத்துக்குக் குறைவு ஏற்பட்டால் ப்ரபாவம் எவ்
விதமாகக் குன்றாமல் நிற்கும்?

இவை யெல்லாவற்றையும் ஆலோசித்துப் பல தடவைக
ளில் இந்தப் பத்ரிகை மூலமாக ஸ்ரீ ஸந்நிதிக்கு அநேக விஜ்ஞப்தி
களைச் செய்திருக்கிறோம். தகுந்த மானேஜர் ஒருவர் நியமிக்கப்
படவேண்டும் என்பது, அந்த விஜ்ஞப்திகளில் முக்கியமானவை
களில் ஒன்று. ‘அப்படி மானேஜர் நியமநம் அவஶ்யம் செய்ய
வேண்டியதுதானா? அம்மாதிரியான பராமர்ஶிப்பு இல்லாததால்
இப்பொழுது ஏதாவது சொத்து ஹாநி உண்டாகியிருக்கிறதா?’
என்பவைகளை விசாரிப்போம்.

இந்த மடத்திற்கு மூலஸ்தாநமான ஸ்ரீ அஹோபிலம் இருக்

ஸ்ரீ அஹோபிலம்.

கும் ஸ்திதியைப் பார்த்தால் இது நன்றாக விள
ங்கும். இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில்
ஸ்ரீ அஹோபிலத்தைப்பற்றி ஆஸ்திக ரொருவ
ரால் எழுதப்பட்டிருக்கும் ஒரு கடிதத்தை அச்சிட்டிருக்கிறோம்.
அதிற் சொல்லியிருப்பது எல்லாம் உண்மையே. கோவில் அத்
யந்தஶிதிலமான ஸ்திதியில்தா னிருக்கிறது. அந்தத் தேவ
ஸ்தாநத்தை நிர்வஹித்துப் பார்க்கவேண்டிய அதிகாரிகள் கொஞ்ச
மேனும் அதைக் கவனிப்பதாகக் காணோம். அந்தக் கோவிலி லுள்
ள ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கென்றும், ஸ்ரீ வரதராஜனுக்கென்
றும், ஸ்ரீ லக்ஷ்மித்தாயாருக் கென்றும் இன்னும் அநேக விதமாக,
அந்த க்ராமத்திலேயே சுமார் புன்செயில் 90 - ஏக்கர் நிலமும்,
நன்செயில் 30 - ஏக்கர் நிலமும் பல பெயர்களால் விடப்பட்டிருக்
கின்றது. இதைத்தவிர, ஸர்வே செய்யப்படாமல் சுமார் 20 -
ஏக்கர் நிலம் இருக்கின்றது. ஆக மொத்தம் 140 - ஏக்கரில் ஒரு



பாகம்தான் நிலமிருக்குமிடம் தெரியவந்து குத்தகை விடப்பட்
டிருக்கின்றது; மற்றவை இருக்குமிடமே தெரியவில்லையாம்.
கீழ் அஹோபிலத்திற்கு மேற்கிலிருக்கும் ஆலாமூர் க்ராமத்தி
லும், பத்வால் தாலூக்காவிலும், கோவிலகுட்டா தாலூக்கா
விலும், திருமிநாயக்கம்பேட்டை போயலா தாட்பத்தி முதலான
இடங்களிலும் அநேக ஸ்தலங்கள் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் பெய
ரால் மாந்யமாக விடப்பட்டிருக்கின்றன. இவைகளில் ஒன்றி
லிருந்தாவது ந்யாய்யமாக வரக்கூடிய வருமானம் கிடைக்க
வில்லை. சில இடங்களில் ஏக்கராவுக்கு 3 - அணா வீதமும், சில
இடங்களில் க்ராமத்திலிருக்கும் மான்யம் முழுமையும் - 10
அல்லது 12 ரூபாய்க்கும் குத்தகை விடப்பட்டிருக்கின்றது. அந்தத்
தொகையும் ஸரியாக வசூல் ஆகிறதில்லை. ஸ்ரீ அழகியசிங்கர் வரு
ஷத்தில் ஒரு தடவை யாராவது ஒருவரை அனுப்பி அகப்படும்
தொகையை எடுத்துக்கொண்டு வருவது வழக்கமாக இருக்கிறதே
தவிர, ஸரிவர வசூல் செய்யவாவது, அவ்விடத்தில் எழுந்தருளியி
ருக்கும் பெருமாளுடைய ஆராதநாதிகள் ஒழுங்காக நடக்கின்
றனவா வென்பதை விசாரிக்கவாவது எவ்வித முயற்சியும் செய்
யப்படவில்லை. அந்த ஸந்நிதிக்கு நடக்கும் உபசாராதிகளை நினைத்
தால் மிக வருத்தமாக இருக்கின்றது. ஸர்க்காரால் தஸ்திக்கா
கக் கொடுக்கப்படும் முந்நூறு ரூபாயைக்கொண்டு அங்கிருக்கும்
கைங்கர்யபரர்கள் திருவாராதநம் என்கிற பாவனையை நடத்திவரு
கிறார்கள். உத்ஸவ காலத்தில் ஸேவார்த்திகளிடமிருந்து சில வருமா
னமுண்டு. அதை ஸந்நிதி முத்ராகர்த்தா கொண்டுபோய்விடுகிற
தேதவிர அவ்விடத்தில் அதை விநியோகிக்கிறதில்லை. இவ்வளவு
அளவற்ற சொத்து இருக்கையில், ஸ்ரீ மடத்துக்கு மூலஸ்தாநமா
ன இந்த ஸந்நிதிக்கு இப்படிப்பட்ட தைந்யம் வந்ததே, இப்பொழு
து நடந்துவரும் விசாரணையின் அஸ்வாரஸ்யத்தை நன்றாக விளக்
குகின்றது. மற்றைச் சொத்துக்களின் பரிபாலநம் நடந்துவருவ
தைச் சற்றுப் பார்ப்போம். குத்தி தாலூக்காவில் குண்டாலா வெ
ன்று ஒரு க்ராமம் உண்டு. அந்தக்கிராமம் ஸ்ரீ அஹோபில மடம்
கோவிலுக்கு என்று விடப்பட்டிருக்கின்றது. அதன் விஸ்தீர்ணம்
5866 - ஏக்கர்; அதில் 23 - ஏக்கர்தான் நன்செய்; பாக்கியெல்லாம்

புன்செய். இந்தப் புன்செயில், ஈச்சஞ் செடிகளால் கிடைக்கும் வருமானம்தான் முக்கியமானது. அதம பக்ஷம் வருஷம் ஒன்றுக்கு மேல்வாரமாக ரூபா. 1000 - வரையில் வருமானம் வரலாம். இந்தச் சொத்து, குத்தகை விட்டவிடத்தில் ஶ்ருங்கலையில் அகப்பட்டுக்கொண்டு கோர்ட்டில் வ்யாஜ்யதிற்குப் போனவிடத்தில், ஸ்ரீ மடத்தின் பாத்யத்தை ஸ்தாபித்துக்கொள்ளத்தகுந்த ப்ரயத்நம் ஒருவரும் செய்யாததால், 1898 - ம் வரு நவம்பர்மீ 8உ பிறந்த கோர்ட்டு உத்தரவின்படி, ஸிவில்ப்ரொஸீஜர் கோட் 146 - வது ஸெக்ஷன்கீழ் ஸர்க்கார் ஜப்தியில் வைக்கப்பட்டிருக்கின்றது. அப்படி ஜப்தியில் வைக்கப்பட்டு 13 - வருஷ காலமாகியும், இதுவரையில் அதைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள யாதொரு ப்ரயத்நமும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

தாட்பத்திரி தாலூக்காவில் ஒபிளாபுர மென்னும் அஹோபிலபுரம் கிராமமும், ஸ்ரீ ஸந்நிதியைச் சேர்ந்ததே. இது ராயல்சேரு ரையில்வே ஸ்டேஷனுக்கு 4 - மைல் தென்மேற்கிலே இருக்கிறது. இதன் விஸ்தீர்ணம் 558 - ஏக்கர். இதுவும், குத்தகை விடப்பட்ட விடத்தில் கைதவறிப்போனவைகளில் ஒன்று. அந்த க்ராமத்தில் வ்யாபகர்களாக இருக்கும் எல்லாரும் அந்த க்ராம விஷயகமான ஸ்ரீ ஸந்நிதி பாத்யத்தை ஒரு ரிக்கார்டு மூலமாக அங்கீகரித்திருப்பதாகத் தெரிய வருகிறது. அப்படி ஒரு ரிக்கார்டு இருந்தும், அந்தச் சொத்தை ஸ்வாதீநத்துக்குக் கொண்டுவர இன்னமும் ஒரு ப்ரயத்நமும் செய்யக் காணோம்.

ஹைத்ராபாத் ஸம்ஸ்தாநத்தில் கத்தவாலைச் சேர்ந்ததாகச் சில க்ராமங்களும், ஸூரபுரம் ஸம்பத்தமாகச் சில க்ராமங்களும், கௌரவல்லி ஹக்கிம்பேட்டை ஜூக்கும்பல்லி முதலிய சில க்ராமங்களும், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனுக்குச் சொந்தமானவைகள். இவைகளில் ஸூரபுரம் நீங்கலாக மற்ற ஒன்றும் இப்பொழுது மடத்தின் ஸ்வாதீநத்தில் இல்லை. கைதவறிப்போயிருக்கும் மற்ற க்ராமங்களின் வருமானம், வருஷம் 1 - க்கு ரூ. 10000 - த்துக்கு மேற்பட்டது.

இன்னும் இந்த மாதிரி அநேக இடங்களில் மடத்துக்கு ஏராளமான நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நஷ்டங்க



ளுக்கெல்லாம் முக்கியகாரணம், ஸ்ரீ கார்யத்தை நிர்வஹித்துப் பார்த்து வந்தவர்களின் அஶக்தியோ அநார்ஜவமோ இரண்டிலொன்றே. பத்து ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ கார்யாதிகாரிகளிடமிருந்து வேறு எவ்விதமான பலத்தைத்தான் நாம் ப்ரதீக்ஷிக்கக் கூடும்? இப்படிப்பட்ட நஷ்டங்களொன்றும் வராமலிருக்க வேணுமானால், தகுந்த சம்பளத்தைக் கொடுத்து யோக்யதை யுள்ள ஒரு அதிகாரியை நியமிப்பதுடன், அந்த அதிகாரியின் வேலையைப் பராமர்ஶித்துப் பார்க்கத் தகுந்த கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி, அவர்களுடைய ஸஹாயத்தைக்கொண்டு ஸ்ரீ ஸந்நிதி விசாரணைகளை விசாரித்து வருவதுதான் ஸரியான மார்க்கம். ஏராளமான இந்தச் சொத்தை ஒருவருடைய அவலம்பமுமில்லாமல் தனிமையாகத் துரீயாஶ்ரமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்வாமியே பார்த்து வருவதென்பது துஸ்ஸாத்யமான விஷயம். ஸ்ரீ ஸந்நிதியின் அபிவ்ருத்தியை உத்தேஶித்துச் செய்யப்படும் இந்த விஜ்ஞாபநத்தை ஸ்ரீ அழகிய சிங்கர் கவனிக்கும்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனை ஸதா ப்ரார்த்திக்கிறோம்.

---

**ஸ்ரீ ஸபையின் இரண்டாவது மஹாஸங்கம்,**

அடுத்து வருகிற மார்கழி மாஸத்தில் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹாஸங்கம் சேரப்போகிறதென்று முந்தின ஸஞ்சிகையிலே வெளியிட்டிருக்கிறோம். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள நீடாமங்கலம் என்னும் இடத்தில் சேரலாமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது. அந்தக் காலத்தில், அநேக வித்வான்களும், இன்னும் சிறந்த ஆஸ்திகர்களில் அநேகரும் அங்குச் சேரப்போகிறார்கள் சிறந்த உபந்யாஸங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ மடத்து ஸம்பந்தமாக அநேக பர்யாலோசனைகளும் நடக்கும். ஸ்ரீ ஸந்நிதியின் அபிவ்ருத்தியைக் கோரும் எல்லாரும், எவ்விதமான அஸௌகரியமிருந்தாலும் அதைப் பாராட்டாமல் அங்கு வந்திருந்து ஸங்கத்தை நிறைவேற்றிவைப்பார்களென்று நம்புகிறோம்.

---

வேதநயம்!  வேதுககம்!!

# நாகரிக மெடிகல் ஹால் மயிலாப்பூர்.

## ம த ரா ஸ்.

ஆயுர்வேத பூஷணம்.
பண்டிட். U. ராமதாதசாஸ்திரி.

அழகான கலரும் அளவிலாத ருசியும்
அடங்காதவாஸனையும் கூடிய சில மருந்துகள்.

### (1) ஆனந்தப் பற்போடி.

பற்பொடிக்கு வேண்டிய எல்லாக்குணமும் இதில் குடிகொண்டு இருப்பதால், இதனல் உண்டாகும் ஆச்சரியகரமான சுகத்தை அளவிட முடியாது. தந்தத்தில் உண்டான ஈறு, ரத்தம் வருதல், சொத்தை, ஆட்டம், நாற்றம் முதலான எல்லா விகாரங்களும் பறந்தோடும். பல்தேய்த்த வுடனே பற்களைச் சங்கும்போல் வெளுக்கக்காணலாம். பல்தேய்த்தபிறகுகூட வெகுநேரம்வரையில் வாய்க்குள் சுகந்தமானவாசனை வீசிக்கொண்டே இருக்கும். இதற்கு மகாகனவான்களான அநேகம் ஜட்ஜிகள் முதலான பிரபுக்களால் அபாரமான ஸர்டிபிகேட்டுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வளவு ப்ரஸித்தி பெற்ற இதற்கு விலையும் ரொம்பவும் ஸ்வல்பம்.

டப்பி 1-க்கு ரூபா. 0—2—6.
டஜன் 1-க்கு ரூபா. 1—8—0.

### (2). சிரேஷ்டமான ஸிரப்புகள்.

ரோஜாபுஷ்பம் - ஆரஞ்சுபழம் - எலுமிச்சம்பழம் - பாதம் கொட்டை, பேயன் வாழைப்பழம் முதலான ஷர்பத்துக்கள் எக்காலத்திலும் கெடாமல் இருக்கும்படி கையினல் தொடாமல் யந்திரத்தினல் செய்யப்படுகின்றன. இதைப் பார்த்த வுடனே வாஸனையாலும், ருசியாலும், அந்தந்த வஸ்துவின் ஸ்வரூபத்தை அந்தந்தப்படி பரீக்ஷித்துக்கொள்ளலாம். இது, தாதுபுஷ்டிக்கு வெயிற்காலத்திலும் மழைக்காலத்திலும் காலபேதம் இராமல் பணிக்காக உபயோகிக்கக் கூடியது. இவைகளின் ருசியும் குணமும் அநந்தம். எல்லா ஸிரப்புகளுக்கும் விலை ஒன்றுதான்.

¼-வீசை கொண்ட சீசா 1-க்கு ரூபா. 1—0—0.

அநேக பேபர்களிலும் விளம்பரம் இருப்பதால், ஆர்டர் கடிதத்தில் இந்தப் பத்திரிகையைக் குறித்துக்காட்டி எழுதவேண்டும்.

சாஸ்திரீயமான எந்த ஔஷதமும் ஷை மருந்துஷாப்பில் விற்பனைக்குத் தயாராக இருக்கும். இவைகளுக்கு V. P. பிரத்தியேகம்.

# பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழ்கண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் முழம் | அகலம் | விலை ரூபா. |
|---|---|---|
| 5 ,, | 2½ ,, | 6 முதல் 8 வரை |
| 5 ,, | 3 ,, | 7 ,, 9 ,, |
| 6 ,, | 2½ ,, | 8 ,, 9 ,, |
| 6 ,, | 3 ,, | 9 ,, 12 ,, |
| 7 ,, | 3 ,, | 10 ,, 13 ,, |
| 8 ,, | 3 ,, | 12 ,, 15 ,, |
| 9 ,, | 3 ,, | 14 ,, 16 ,, |
| 10-12 ,, | 3 ,, | 15 ,, 20 ,, |
| 15-16-18 ,, | 2½-3, சேலைகள் | 20 முதல் 30 வரை. |

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

நயம் விலை ரூபா.

### பீதாம்பர பட்டுச்சேலைகள்.

விளிம்பு முந்தி ஜரிகை பூவேலை
16 முழம் நீளம் 2½-அகலம் சேலைகள் கிடைக்கும். நயம்
கள் உடல் சாதா. சகல நிறங்களிலும் மட்டம் சேலைகள் ரூ. 20
சேலை 1-க்கு ரூ. 30 முதல் 200 வரை. ஜரிகைப்பூபுட்டா
முதல் 30 வரை. ஷை சேலைகள் உடலிலும் மட்டம் ரூ. 25 முதல்
போட்டது. நயம் ரூ 35 முதல் 300 வரை.
30 வரை.

### ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகைபூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ. 2 முதல் ரூ. 15 வரை கிடைக்கும்.

### பட்டுதுப்பட்டாக்கள்.

6 முதல் நீளம் 2½ முதல் அகலம்; விளிம்பு முந்தி ஜரிகைவேலைகளும் உடலில் ஜரிகைபூக்கள்போட்டது. மட்டம் ரூ. 7 முதல் 15 வரை. நயம் 15 முதல் 50 வரை.

### காஷ்மீர் சால்வைகள்.

கம்பிளி (Woolen) காஷ்மீர் சால்வைகள் 6 முழம் நீளம், 2½-அகலம், விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் மூலையில் மாங்காய் போட்டது. மட்டம் ரூ. 9 முதல் 15 வரை. நயம் 15 முதல் 100 வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—மனேஜர்
பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.
பத்ராதிபர்.

# ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை.

ஸ்ரீ அஹோபில மடத்து ஸம்ப்ரதாயம் அபிவ்ருத்தமாகும்பொருட்டும், அதுமூலமாக ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்யும்பொருட்டும், ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை என்னும் ஓர் ஸபை சென்ற ஸாதாரண௵ சித்திரை௴ முதல் ஏற்பட்டு நடந்து வருகின்றது. அதைப் பற்றிய சில விதிகள் கீழே சொல்லப்பட்டிருக்கின்றன :—

1. மடத்தின் சிஷ்யர்கள் எல்லாரும் இதிற் கூறப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கத்தாராகச் சேரலாம்.

2. சபையின் அங்கத்தாராகச் சேர விருப்ப முள்ளவர்கள் விதிகளில் காட்டியிருக்கிற மாதிரிப்படி மனுச் செய்து கொள்ள வேணும். மனுதாரர், அந்த மனுவைத் தாம் வசிக்கும் பிரிவின் காரியதரிசிக்கு ஒரு வருஷக் கட்டணத்தொகையுடன் அனுப்பவேண்டும்.

3. முதல் வகுப்பு அங்கத்தாராகச் சேர்வதற்கு ஒரு வருஷச் சந்தா ரூபாய் 5. இரண்டாவது வகுப்பு அங்கத்தாராக ஒரு வருஷச் சந்தா ரூ. 1.

4. அங்கத்தார்களில் யாராவது எப்பொழுதாவது ஒரே தடவையில் மொத்தமாய் ரூபாய் 50 அல்லது ரூபாய் 10 கட்டிவிட்டால், அவர்கள் ஜீவதசை வரையில் முறையே 1-வது அல்லது 2-வது அங்கத்தாராக ஏற்படுத்தப் படுவார்கள். அவர்கள் பிறகு வருஷச்சந்தாத் தொகை கட்டவேண்டியதில்லை.

5. கீழே சொன்ன 1-வது விதியின்படி அங்கத்தினராக வரக்கூடாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாராயிருந்தாலும் வருஷம் சந்தாவாக ரூபாய் 3 செலுத்தி விட்டால், அவர்கள் அபிமானிகளாக (Associates) நியமிக்கப்படுவார்கள். சபையில் அபிப்ராயங் கொடுக்கவும், வேறுவேலைகளில் மாறவும், காரியநிர்வாக சங்கத்தின் அங்கத்தாராக இருக்கவும் இவர்களுக்கு அதிகாரமில்லை.

6. கீழே காட்டிய விதியின்படி சபையிற் சேரத்தக்கவர்கள் தங்களைச் சேர்த்துக் கொள்ளும்படி சபையின் பொதுக்காரியதரிசிக்கு நேராக மனு அனுப்பிக்கொள்ளலாம்.

7. ஒரு வருஷத்திற்குள் எப்பொழுதாவது அங்கத்தார்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம். ஆனால், முழு வருஷச் சந்தாத்தொகையைக் கட்டிவிட வேண்டும்.

8. ஒவ்வொரு வருஷத்திலும் அக்டோபர்௴ முதல்தேதிமுதல் அடுத்த செப்டம்பர்௴ 30௳ முடிவு வரையிலுள்ள காலமே, சபையின் வருஷம்.

இன்னும் சபையின் மற்ற விஷயங்களைத் தீர்த் தெரிந்துகொள்ள வேண்டு மென்கிற விருப்ப முள்ளவர்கள், சபையின் பொதுக்காரியதரிசியாகிய சென்னை, வக்கீல் ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.



क्षेमायसर्वजगतामुदधिं महान्तम्
सन्तीर्य ।डिल्लिपुरि लब्धमहाभिषेकम् ।
जार्ज्मेरिसंज्ञकमपास्तसमस्तखेदम्
श्रीचक्रवर्तिमिथुनं चिरमत्र जीयात् ॥

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்ஸு மார்கழிமீ. [ஸஞ்சிகை 11.

## ஆர்ய ஸஞ்ஜீவநம். *

“இந்தியா” என்று தற்காலம் பெயர்வழங்கும் நமது பரத நாட்டுக்கு “ஆர்யபூமி” என்பது அஸாதாரணமான நாமதேய மென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். இதற்குக் காரணம் - அநாதியாய்த் தொன்றுதொட்டு இத்தேசமே ஆர்யர்களுடைய வாஸஸ்தாநமாயிருந்து வருவதுதான். இப்படி இத்தேசத்துக்குச் சிறப்புப்பெயர்தந்த ஆர்யரென்போர் யாவர்? அவர்களது குணம், ஆசாரம் முதலியன எவ்வகைப்பட்டன? அவர் இத்தேசத்தில் மாத்திரம் இருப்பவரா? இதரதேசங்களிலும் இருக்கிறார்களா? இப்போது அவர்கள் இத்தேசத்தில் இருக்கிறார்களா? அப்படிக்கு இருந்தால் இத்தேசம் இம்மாதிரி எல்லாவிதத்திலும் துஸ்திதியை அடைந்திருப்பதேன்? இவை முதலிய அநேக ப்ரஶ்நங்கள் ஒவ்வொருவரது மனத்திலும் தோன்றுகிறபடியால், அவைகளுக்குக் கூடியவரையில் உத்தரம் அளிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

* இது, நாளது புரட்டாசிமீ 15உயில் திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் திருமாளிகையில் நடந்த ஸ்ரீவிசிஷ்டாத்வைத ப்ரசாரிணி ஸபையின் ப்ரதமவார்ஷிகோத்ஸவத்தில் செய்யப்பட்ட உபந்யாஸம்.

நமது தேசத்தை ஆண்டுவந்த அந்ய ராஜாக்களுக்குள் புத்தி
யிலும் வித்யாபிமாநத்திலும் சிறந்தவர்களான ஐரோப்பியர்களில்
சிலர், நமது ஆர்யபாஷையாகிய ஸம்ஸ்க்ருதத்தைத் தெரிந்துகொ
ண்டதுமுதல் அப்பாஷையின் ஶப்தஶக்தியையும் அர்த்தகௌரவத்
தையும் கண்டு வியப்புற்றதுடன், தங்கள் பாஷைகளின் பதங்களுக்
கும் நடைக்கும் ஸம்ஸ்க்ருத பாஷையின் பதங்களுக்கும் நடைக்கும்
சில அம்ஶங்களில் ஸாம்யமிருப்பதைக் கண்டு, ஸம்ஸ்க்ருதத்திலிரு
ந்து தங்களுடைய பாஷைகள் பிரிந்திருக்கவேண்டுமென்றும், அப்
படிப் பிரிவு ஏற்படுவதற்குமுன் ஸம்ஸ்க்ருத பாஷையொன்றே
இருந்திருக்கவேண்டுமென்றும், ஷை பாஷைகள் பிரிந்த காலத்தி
லேயேதான் ஷைபாஷைகளைப்பேசும் ஜனங்களும் பிரிவையடைந்
திருக்க வேண்டுமென்றும், பாஷை பிரிவுபடாத ஆதிகாலத்தில்
ஐரோப்பியரும் நாமும் ஆகிய எல்லாரும் ஒரே வகுப்பினராக இருந்
திருக்க வேண்டுமென்றும், அவ்வகுப்பினர்தான் ஆர்யர்களென்று
ஆதியில் பெயர்பூண்டவர்க ளென்றும், அந்த ஆர்யர்களுடைய
வாஸஸ்தாநம் இத்தேசத்தின் வடமேற்கு மூலை அதாவது ஸிந்து
நதிக்கரையிலாவது அல்லது அதற்கும் வடக்கேயாவது இருந்
திருக்க வேண்டுமென்றும் ஊஹித்து, இதுவிஷயமாக அநேக சர்ச்
சைகள் செய்து வருகிறார்கள். வேறு சில ஐரோப்பிய கிரந்தகர்த்
தாக்கள் மேற்கூறிய அநுமாநத்தை ஒப்புக்கொள்ளாமல், பாஷை
யின் ஸாம்யத்தைக்கொண்டு ஒன்றும் ஊஹிக்கமுடியாதென்றும்,
அநேக காரணங்களால் ஒரு பாஷையின் பதங்களும் நடையும் மற்
றொரு பாஷைக்கு வந்திருக்கலாமென்றும், ஒருதேசத்து ஜனங்
கள் மற்றொருதேசத்துக்கு வந்து வியாபாரம் செய்வதனாலும் ஒரு
தேசத்தார் மற்றொரு தேசத்தில் வித்யாப்யாஸம் செய்வதனாலும்
ஒருதேசம் அந்யதேசத்தாரால் ஸ்வாதீநம் செய்யப்படுவதனாலும்
மதங்களுடைய வ்யாப்தியினாலும் இன்னும் பலவித ஹேதுக்களா
லும் பாஷைகளின் ஸாம்யம் ஏற்படக்கூடியதென்றும், ஆகையால்
பாஷைகளுக்குள் சில அம்ஶங்களில் ஒற்றுமை யிருப்பதைக்கொ
ண்டே அப்பாஷைகளைப்பேசும் ஜனங்களும் ஒரு வகுப்பைச் சேர்
ந்தவர்களென்று ஊஹிப்பது ஸரியல்லவென்றும் ஆக்ஷேபித்து,
முகவடிவத்தாலும் தலை முதலிய அங்கங்களின் அமைப்பினாலும்
பல தேசங்களி லிருக்கும் ஜனங்களின் ஸரியான ஸம்பந்தத்தையும்
பேதத்தையும் கண்டுபிடிக்க முடியுமென்றும் சொல்லுகிறார்கள்.



அம்மாதிரி பரீக்ஷைசெய்யுமிடத்து, ஆர்யர்களென்பவர்கள் அழ
கிய நீண்ட முகம் வெண்மையானவர்ணம் கூர்மையானமூக்கு முத
லிய லக்ஷணங்கள் பொருந்தினவர்களென்றும், இப்போது அவ்
வடையாளங்களையுடைய ஜனங்களே ஆர்யவம்சத்தைச்சேர்ந்தவர்
களென்றும் கூறுகிறார்கள். இந்தப் பக்ஷத்துக்கும் பற்பல ஆக்ஷே
பங்கள் சொல்லப்படுகின்றன. எந்தக் காரணங்களைக்கொண்டு
பாஷைகளுக்கு ஸங்கர முண்டாகக்கூடு மென்று ஆக்ஷேபிக்கப்
பட்டதோ, அந்தக் காரணங்களினாலேயே ரக்தஸங்கரமுமுண்டா
கக்கூடும். மேலும், தேகத்தின் வர்ணம் வடிவம் முதலியன, காலத்
தினாலும் தேசத்தினாலும் வெவ்வேறு விதத் தொழில் செய்வதனா
லும் அநேக மாறுபாட்டை யடைகின்றன. ஆனதுபற்றி, இதுவும்
ஸரியான அநுமாந மல்லவென்று பலர் ஶங்கிக்கிறார்கள். இதே
மாதிரி இன்னும் சில நூதந அபிப்ராயங்களும் ஆக்ஷேபங்களுக்கு
இடமுள்ளவைகளாயிருக்கின்றனவேயொழிய இதுவரையில் நிரா
க்ஷேபமாகவும் ஸர்வஸம்ப்ரதிபந்நமாகவும் ஐரோப்பியர்களால்
ஆர்யர்கள் இன்னாரென்று நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால்,
இவ்விஷயத்தைக்குறித்துச் சர்ச்சை செய்திருப்பவர்களில் முக்கிய
மானவர்களெல்லாரும் ஸம்ஸ்க்ருதபாஷை ஆர்யபாஷை யென்பதை
யும், அதை ஸ்வபாஷையாகக் கொண்டாடுகிற நாம் ஆர்யவம்சத்
தினரென்பதையும் முதலில் ஒப்புக்கொண்டே, தங்கள் தங்களை
யும் தம்தம் பாஷைகளையும் ஆர்யகோடியில் சேர்த்துக்கொள்வ
தற்கு ப்ரயத்நப்பட்டிருப்பதாகவே தெரிகின்றது. இதனாலே,
"[illegible]" என்பதற்கு அநிர்வசநீயமான மஹிமை இருப்ப
தும், அதன் ஸ்வரூபத்தைச் சரியாய் அறிந்துகொள்ளாதவர்களுக்
குக்கூட அதில் ஒரு பற்றுதலிருப்பதும் வெளியாகிறது. இந்தக்
காரணத்தினாலும், நாம் இப்போது ப்ரஸ்தாவிக்கும் ஆர்யஸ்வ
ரூபம் இன்னதென்று விஶதமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது
அவசியமென்பது உறுதியாகிறது.

நமது பெரியோர்கள் ஆகாரம் பாஷை முதலியவற்றை ஆர்ய
த்வத்துக்கு ஹேதுவாக எண்ணாமல் ஜ்ஞாநத்தையே அதற்கு
ப்ரதாநலக்ஷணமாகக் கூறுகிறார்கள். அவ்விதமே நமது ஆசார்
யர்களும் '[illegible] ([illegible]) [illegible]
தெ [illegible]' என்று ஆர்ய ஶப்தத்தை நிர்வசநம் பண்ணியிருக்
கிறார்கள். அதாவது - தத்வதர்ஶிகள் தான் ஆர்யர்கள்; தத்வ

தர்ஶிகளல்லாதார் ஆர்யஶப்தத்துக்கு விஷயபூதர்களல்லரென்று ஏற்படுகிறது. இந்த நிருக்தியில் யாதொருதோஷமும் காணமுடியாதென்பதும், இதுவே எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டியதாகுமென்பதும், ஸர்வப்ரகாரத்தாலும் ஸ்தாபிக்கக் கூடியதாயிருக்கிறது. மேலும், இந்த நிருக்தியே, நமது பெரியோர்கள் தத்வதர்ஶிகளென்பதற்கும், இதரர்கள் அநேக லௌகிக ஸாதநங்களுடன் அநவரதம் அந்வேஷணம் பண்ணினாலும் ம்ருகத்ருஷ்ணையைப்போல அவர்களுக்குக் கிட்டாமலிருக்கும் தத்வமென்னும் பதார்த்தம் நமது பெரியோர்களுக்கு ஹஸ்தகதமாயிருந்ததென்பதற்கும், நிதர்ஶநமாகிறது. அப்படி ஆர்யர்கள் என்று வ்யபதேசிக்கத்தகுந்த தத்வதர்ஶிகள் இந்நாட்டில் நிறைந்திருந்ததால்தான், இத்தேசத்துக்கு 'ஆர்யபூமி' என்று அஸாதாரணமான பெயர் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது ஸ்பஷ்டம்.

இப்போது தத்வம் என்பது என்ன? அதை அறிவது எப்படி? அதையறிவதனால் என்ன ப்ரயோஜநம்? என்பது முதலியவற்றை விசாரிக்க நேருகிறது. ஒவ்வொரு வஸ்துவுக்கும் இன்றியமையாமல் அததற்கு உரியதாயிருக்கும் ஸ்வரூபமும், ஸ்வபாவமுமே அதனதன் தத்வமாகும். ஒவ்வொரு வஸ்துவின் யதாவஸ்திதஸ்வரூப ஸ்வபாவங்களை ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் நிரப்பரிஶோதிக்கும் பக்ஷத்தில், நம்முடைய பெரியோர்கள் பல ஆராய்ச்சிகள் செய்து அம்ருதம்போல் நிஷ்க்ருஷ்டமாகத் தெரிந்தெடுத்திருக்கும் அம்ஶமே ஸாரமென்றும், மற்றெல்லாம் உபயோகமற்றனவென்றும் நிச்சயப்படுமென்பதற்கு ஆக்ஷேபமில்லை. அப்படி ஆராய்ந்து கண்டு கொண்ட தீர்மானம் ஸ்ரீமஹாபாரதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது; "தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபி꞉ ஸர்வதோமுகை꞉ । தத்வமேகோ மஹாயோகீ ஹரிர்நாராயண꞉ பர꞉" — இதன் தாத்பர்யம்:— தத்வத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எல்லாவிதமாகவும் ஆராய்ச்சி செய்ததில் தேறின முடிவு யாதென்றால் - ஸர்வஶேஷியாகவும் ஸர்வாந்தர்யாமியாகவும் இருக்கும் நாராயணன் ஒருவனே தத்வமென்பதும், அவனே ஸர்வோத்க்ருஷ்டனென்பதும், மற்றெல்லாம் அவனுக்கு உபஸர்ஜநமாக உள்ளனவேயொழியத் தனிமையில் அவைகளுக்கு ஸ்திதியில்லையென்பதும் தான். இந்த ஸாராம்ஶத்தை நமது பெரியோர்கள் கேவலம் மூடாபிமாநத்தின் பேரில் கைக்கொண்டவர்களல்லர். "ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந꞉ புந꞉" என்று சொல்லியபடி பஹுப்ரகாரமாகவும், அநேக காலங்களாகவும், அநேக மஹர்ஷிகள் ஆராய்ச்சி செய்து கடைசியாகக் கடைந்தெடுத்த விஷயம் இது. அப்படி ஆராய்ச்சி செய்த க்ரமங்களும், அவைகளின் ஆநுபூர்வியும், இக்காலம் வரைக்கும் நடுவில் ஸம்பாவிதங்களான க்ஷோபங்களையெல்லாம் தாண்டி வந்த நமக்கு இப்போது கிடைக்கக்கூடியதாயிருக்கும் க்ரந்தங்களாலேயே வெளியாகும்.



இந்தக் காலத்தில் ஐரோப்பா முதலிய அந்யதேஶத்து வித்வான்கள் தத்வஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள ப்ரயத்நம்பண்ணி எத்தனை விதமான மதங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்களோ, அத்தனைவிதமும் அவர்களுக்கு இன்னும் தோன்றாத தர்ஶநங்கள் பலவும் இத்தேசத்தில் ஞாபகத்துக் கெட்டாத முன்னுளிலிருந்தனவென்பதும், அவைகளெல்லாம் சித்ரம் எழுத அப்யஸித்த ஒருவன் அப்யாஸ காலத்தில் தவறாகவும் அப்ரகாசமாகவும் வக்ரமாகவும் எழுதிய பிம்பங்களுக்கு ஒப்பானவையேயொழிய முதிர்ந்த ஞானவான் ஒப்புக்கொள்ளத் தக்கவையல்லவென்றும் தெளிவாய் ஏற்படுகிறது. ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய நம்முடைய ஆசார்யர்களுடைய க்ரந்தங்களையும், அவர்களுக்கு முன்னிருந்த மஹர்ஷிகளுடைய க்ரந்தங்களையும் சிறிது பரிசயம் பண்ணுவதாலேயே இது வெளியாகும். இப்படிப்பட்ட மஹாதத்வத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல நமதுபெரியோர் நமக்கு எடுத்துக் காண்பித்திருக்க, அதை நாம் கவனியாமல் பூமிமட்டம் வரையில் கூட எட்டாத பாதாளத்தில் தமஸ்ஸில் கண்டதெல்லாம் வழியென்று நினைத்துப் பொழுது தெரியாமல் போன விடிந்தவுடனே ஒரு புதுமதத்தை உத்கோஷித்துக் கொண்டிருப்பவர்களை ஆசார்யர்களாகக் கொண்டாடி, நமதுபெரியோர் நிர்மாணம் செய்திருக்கும் கண்டாபதத்தை விட்டுத் தவறிக் குழைகளிலும் புற்றுக்களிலும் புதர்களிலும் தமோசுறுவது, கலி புருஷனுடைய விசித்ரசக்தியை வெளியாக்குகிறதேயொழிய வேறில்லை.

மேற்கூறியபடி நமக்குப் புலப்படும் ஒவ்வொரு வஸ்துவின் தத்வத்தையும் அந்வேஷணம் பண்ணினால், பகவானே பரதத்வ

மாக ஸித்திக்கிறார் என்பது ஏற்பட்டது. இந்தத் தத்வாந்வேஷணத்தினாலேயே, பகவானுக்கு ஶேஷபூதமான ஜீவாத்மா ப்ரக்ருதி இவைகளின் ஸ்வரூப ஸ்வபாவங்களும் ஏற்படுகின்றன; அதாவது - ஜீவாத்மா ஜ்ஞாநமய னென்றும், ஸ்வயம்ப்ரகாச னென்றும், நித்ய னென்றும், ஸ்வரூப பரிணாம மில்லாதவ னென்றும், ப்ராக்ருதியோடு ஸம்பந்தப்படுவதால் மாத்திரம் அவனுக்கு ஜ்ஞாந ஸங்கோசமுண்டாய்த் துக்காநுபவம் ஏற்படுகிற தென்றும், ப்ரக்ருதி த்ரிகுணாத்மக மென்றும், ஸ்வரூப பரிணாம முள்ளதென்றும், அது ஜீவாத்மாவுடன் ஸம்பந்தப்பட்டு அதைத் தன்வசமாக்கும் ஸ்வபாவத்தை யுடையதென்றும், இவையிரண்டும் பகவானுடைய ப்ரகாரமென்றும், ஶேஷமென்றும், அவனல்லாது இவைகட்கு ஸ்திதியில்லை யென்றும் நமக்கு விளங்குகிறது. இந்தத் தத்வ ஜ்ஞாநம் ஒருவனுக்கு ஏற்பட்டவுடனே, தானாகிற ஜீவாத்மாவை ப்ரக்ருதியாகிற சிறையிலிருந்து விடுவித்து, தனக்குக் குலக்ருஹமாகிற பகவத் ஸந்நிதியை அடைவிக்கிறது எப்படி யென்று ஆஸ்தை ஸ்வரஸமாக ஆவிர்ப்பவிக்கிறது; அந்த ஆஸ்தையை மேன்மேலும் வ்ருத்திபண்ணி அதை எல்லோருக்கும் பரவச் செய்து ஒவ்வொருவரும் உஜ்ஜீவிக்கும்படி செய்வதே லோகத்துக்கு ப்ரதமோபகாரம். இதைத்தான் "தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று சொன்ன பகவான் ஒவ்வொரு அவதார காலத்திலும் நம்முடைய க்ஷேமத்தைக் கருதிச் செய்து வந்திருக்கிறார். இதற்குமுன்னே ஒவ்வொரு அவஶ்யமான ஸந்தர்ப்பத்திலும் அவ்விதம் நமக்கு உபகாரம் பண்ணியிருக்கும் பரமகாருணிகனான ஶ்ரீமந் நாராயணன் இப்போதும் நம்மை மறக்கமாட்டா னென்பதும், ஸர்வ தர்மங்களும் ஶைதில்யத்தை யடைந்து அதரோத்தரமாயிருக்கும் இந்தக் காலத்திலும் மறுபடியும் தர்மவ்யவஸ்தை ஏற்படுத்தி லோகமர்யாதையைச் சீர்ப்படுத்துவ னென்பதுமான நம்பிக்கை ஒவ்வொரு ஆஸ்திக ஹ்ருதயத்திலும் ஸ்திரமாயிருக்கவேண்டும்.

ஆனால், நாம் இவ்விஷயத்தில், முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் - பகவான் பரமகாருணிகனாயிருப்பதுடன், ஸர்வஜ்ஞனாயு மிருப்பதால், ஒவ்வொருவனுக்கும் அவனவன் அதிகாரத்துக்குத் தகுந்த பலத்தைக் கொடுப்பனேயொழிய, அதிகாரத்துக்குத் தகாததைக் கொடுப்பதே கிடையாது. அப்ப



டிக்கு இல்லாவிட்டால், பலமும் உபயோகப்படுகிறதில்லை. பலத்தை விரும்புகிறவனும் கெட்டுப்போகிறான். ஒரு பலத்திற்கு ஒருவன் அதிகாரி யாவதற்கு முதலங்கம் என்னவென்றால், அதுவே தனக்குப் புருஷார்த்தமென்று யதார்த்தமான அபிஸந்தியும், அது தனக்குக் கிடைக்கவேணுமென்று உத்கடமான ஒரு ஆவலுந்தான். இவை யெல்லாம் வெளிப்பூச்சாக அபிநயம் பண்ணிக்கொண் டிருப்பதில் ப்ரயோஜநமில்லை. அந்தக்கரணத்தில் பூர்ணமான ஆர்த்தி இருக்கவேண்டும். அது இருந்தால், பகவத்க்ருபைக்கு ஆக்ஷேபமில்லை. ஒரு மநுஷ்யனுக்குப் போலவே ஒரு தேசத்தி லுள்ள மஹாஜந ஸமுதாயத்துக்கும் செவ்வையுண்டாய் நல்ல ஸ்திதிக்கு வந்து ஒழுங்குபட வேண்டுமென்றால், அத்தேசத்தி லிருப்பவர்களெல்லாரும் அல்லது பெரும்பான்மையோர் தங்களுடைய தற்காலநிலைமை ஸரியான தன்றென்று உணர்ந்து, அதை ஒவ்வொருவரும் வற்புறுத்தி அதற்குப் ப்ரதீகாரம் தேடவேண்டிய விஷயத்தில் உத்யுக்தர்களாக இருக்கவேண்டியது அவசியம். அப்படி ஏகமதிகளாக ஜநங்கள் தங்களுடைய ஸமுதாயாபிவ்ருத்தியைக் குறித்து அவிச்சிந்நமான ப்ரார்த்தனையைக் கைக்கொண்டால் அவ்விஷயத்தில் பகவத்க்ருபை யுண்டாகு மென்பதற்குத் தடையில்லை. பகவத்க்ருபை ஏற்பட்டால் பல ஸித்தியைப்பற்றிச் சிந்தையேன்? பகவத்க்ருபைக்குப் பாத்ரமாவதற்கு நாம் முதலில் செய்யவேண்டிய தென்னவெனில், நம்மிடம் இப்போது எந்தக் காரணத்தினாலேயாவது (இப்போது அந்தக் காரணங்களை விசாரிப்பதற்கு அவகாஶமில்லை; மொத்தமாய் அவைகளைப் பூர்வ பாபபலமென்று குறிப்பிடுவது போதுமானது.) ஏற்பட்டிருக்கும் தோஷங்களைப் போக்கிக் கொள்வதுதான். ஒரு கண்ணாடி பிம்பத்தை ஸரியாக க்ரஹிக்கவேண்டுமானால் அது நிர்மலமா யிருக்கவேண்டியது அவசியமா யிருப்பதுபோல, பகவத் க்ருபைக்கு நாம் பாத்ரமாக வேண்டுமானால் நாம் உள்ளிலும் வெளியிலும் நைர்மல்ய முள்ளவர்களா யிருக்கவேண்டும். ஶிரஸ்ஸுக்கு ஸ்வாஸ்த்ய மில்லாத பக்ஷத்தில் ஶரீரத்துக்கு ஸ்வாஸ்த்யமில்லை யென்பதும், முதலில் ஶிரஸ்ஸின் தோஷங்களைப் போக்கி அதை ஸரியான ஸ்திதியில் வைப்பது குஶல சிகித்ஸைக்கு லக்ஷணமென்பதும், நமக்குத் தெரிந்தவிஷயம். தேகத்துக்கு எப்படியோ அப்படியேதான் தேஶத்துக்கும் ஶிரஸ்ஸில் சிகித்ஸையை ஆரம்பிக்கவேணும்.

ஜ்ஞாந ப்ரதாநமான நமது தேசத்தில் ஶிரமென்று சொல்லக் கூடியவர்கள் ப்ராஹ்மணர்களென்பதை வேதங்களே சொல்லியிருக்கின்றன. அநுபவத்திலும் இதன் உண்மை புலப்படுகிறது. ப்ராஹ்மணர்களுக்குள்ளும், அநாதியான ஸத் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களும் ஶ்ருதி ஸ்ம்ருதி முதலானவைகளின் ரஹஸ்யத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் பார்க்கும் ஸதாசார்ய பரம்பரையி னடிமை யென்கிற வ்யபதேஶத்துக்கு அர்ஹர்களுமான நாம் ஜ்ஞாந ஶக்தர்களாகவும் அவதாத ஶீலர்களாகவும் பரஸ்பராநுகூலர்களாகவும் ஏகமதிகளாகவும் ஶ்ரத்தா பக்தி ஸமந்விதர்களாகவும் இதரஜநங்களுக்கு உதாஹரணமாக எடுத்துக் கூறக் கூடியவர்களாகவும் இருந்தால்தான், இத்தேசத்துக்கு உண்மையில் க்ஷேமஹேது ஏற்படும்.

தனித்தனியே அவரவர்கள் க்ஷேமமும், தேஶத்தின் பொது க்ஷேமமும் அபிந்நமென்பதற்கு என்ன ஸந்தேஹம்? ஶரீரத்துக்குப் புஷ்டியிருந்தால்தான் அங்கங்களுக்கு ஸ்வாஸ்த்யமுண்டு. அங்கங்கள் அவிகலமாயிருந்தால்தான் ஶரீரத்துக்கு ஸௌக்யமுண்டு. இதேமாதிரி தேஶம் முழுவதும் அதாவது மஹாஜந ஸமுதாயம் முற்றிலும் க்ஷேமத்தையடைந்தால்தான் தேஶத்தில் வஸிக்கும் ஒவ்வொருவருக்கும் ஶாஶ்வதமான க்ஷேமமுண்டு. அப்படியே வ்யதிரேகமும் ஸித்திக்கிறது. ஆகையால், தேஶீயர்களுக்கும் தேஶத்துக்கும் அங்காங்கி பாவஸம்பந்தம் ஏற்பட்டிருப்பதால், தேஶத்தின் அபிவ்ருத்தி தேஶவாஸிகளின் அபிவ்ருத்தியைவிட வேறுபட்டதென்றும், தேஶவாஸிகள் தேஶத்தின் பொது க்ஷேமத்தைக் கருதாமலே தாங்கள் தனித்தனியே க்ஷேமமடையக்கூடுமென்றும் நினைப்பது யுக்திக்கும் அநுபவத்துக்கும் விரோதமாயிருக்கிறது.

ஒரு தேஶம் க்ஷேமப்பட வேண்டுமானால், அத்தேஶவாஸிகளுக்கு முக்கியமாய்த் தேவையாயிருக்கும் அம்ஶங்கள் மூன்று; அவை—ஆர்ஜவம், ஐகமத்யம், உத்யோகம் என்பவைகளே. ஒவ்வொரு வஸ்துவின் நிஜஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் அறிவதும் அவ்வித யதார்த்த ஜ்ஞாநத்துக்கு அநுகுணமான யதார்த்தமாகிய வாக்கும், யதார்த்தமான நடவடிக்கையும் உடைத்தாயிருப்பதுமே, ஆர்ஜவமாகும். பொது நன்மையை எப்போதும் கருதி அதற்கு விரோதிகளான அஸூயை, கோபம், கலஹம் முதலிய பேதகாம்ஶங்களை விலக்கிப் பரஸ்பரம் ஸ்நேஹத்தையே அவிச்சிந்நமாய்ப் பெருக்குவது, ஐகமத்யம். நம்மாலொன்றும் செய்யமுடியாதென்று அகாரணமான ஒருநைராஶ்யத்தினாலாவது அல்லது பரிஶ்ரமப்படுவதில் விருப்பமில்லாமையினாலாவது உண்டாகும் ஆலஸ்யத்தை உதறி மேன்மேலும் உத்ஸாஹத்தால் ப்ரேரணம் பண்ணப்பட்ட விடாமுயற்சியுடன் “[illegible]” என்கிறபடி இங்கிருக்கும்வரையில் நல்வழியில் முயற்சிசெய்வதே நமது கடமையென்கிற உறுதியுடன் அவரவருக்கு ஏற்படும் க்ருத்யங்களை ஸரிவரச்செய்வது, உத்யோகமாகும். இம்மூன்று குணங்களும் எந்தத்தேசத்தில் புஷ்கலமாய் அமைந்துள்ளனவோ அங்கே ஸர்வப்ரகாரமான யோகக்ஷேமங்களும் ஸித்தமாயிருக்குமென்பது புநருக்தமாகும். அத்தேஶத்தில் ஶத்ருபயம் இராது, வ்யாதி பயம் இராது, தைந்யம் இராது, தாரித்ரியம் இராது, சோரபயம் இல்லை, அக்நிபயம் இல்லை. ஸ்ரீராமன் ஆளுகையில் இந்தத் தேஶம் எந்தஸ்திதியிலிருந்ததோ அம்மாதிரி இருக்குமென்பதற்கு ஸந்தேஹமில்லை. ஏனென்றால், நம்முடைய துஃகங்களுக்கெல்லாம் காரணம், மேற்சொன்ன மூன்று குணங்களின் அஸம்ருத்தியே. இந்தக் காரணமில்லாவிட்டால், இதன் கார்யமாகிய துஃகம் ஸம்பவிக்காதென்பதற்கு என்ன ஆக்ஷேபம்?

மேற்கூறிய மூன்று குணங்களில் முதலாகிய ஆர்ஜவத்தின் முதற்பிரிவாகிய தத்வதர்ஶநமென்பது இவைகளெல்லாவற்றுள்ளும் ஶிரஸ்தாநீயமானது. ஏனென்றால், இச்சாத்வேஷாதி பாவங்களும் நம்முடைய ஜ்ஞாநாயத்தமானவையென்பது எல்லோர்க்கும் தெரிந்த விஷயம். அப்படி ஸர்வத்துக்கும் ப்ரவர்த்தகமாயிருக்கும் ஜ்ஞாநம் தத்வஜ்ஞாநமல்லாது அயதார்த்த ஜ்ஞாநமாயிருந்தால், அது நிஷ்பலமாய் முடிவது மாத்திரமல்ல; விபரீத பலத்துக்கும் ஹேதுவாகும். அதத்வாந்வேஷணத்துக்கு ஸஹகாரியாயிருக்கும் ஐகமத்யமும் உத்யோகமும் அஸுரராக்ஷஸாதிகளுக்குள்ள பல வீர்யாதிகளைப் போல அநர்த்தாநுபந்திகளாகின்றன. தத்வஜ்ஞாநத்துடன் ஐகமத்யமும் உத்யோகமும் சேர்ந்தால், ஶுக்தியில் விழுந்த வர்ஷபிந்துவைப்போல ஶ்லாக்யதமமான பலத்துக்கு ஆஸ்பதமாகிறது.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

# ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்.

கீழ் ஸ்லோகத்தால் பக்தியோகம் மோக்ஷ ஸாதநமென்று சொல்லப்பட்டது; இப்பொழுது அந்தப் பக்தியோகமே, இரண்டாவது ஷட்கத்திற் சொன்னபடி, அசித் த்ரவ்ய பரிணாம விஶேஷத்தின் அநுபவரூபமான ஐஶ்வர்யத்திற்கும் ஸாதகமென்று சொல்லப்படுகிறது :—

8-அ. பக்தியோக: ததர்த்தீ சேத் ஸமக்ரைஶ்வர்யஸாதக:.

ததர்த்தீ சேத் - அதிகாரியானவன் ப்ரஸித்தமான ஐஶ்வர்யத்தைக் கோரினானால் அந்த அதிகாரிக்கு, பக்தியோக:- பக்தியோகமானது, ஸமக்ரைஶ்வர்யஸாதக: - ப்ரஹ்மா முதலானவர்களின் ஐஶ்வர்யத்தைக் காட்டிலும் உத்க்ருஷ்டதமமான ஐஶ்வர்யத்திற்குக் காரணமாகிறது. 'பக்தியோக மொன்றே மோக்ஷத்தையும் ஸாதித்துக்கொடுக்கும், ஐஶ்வர்யரூபமான பந்தத்திற்கும் காரணமாகும்' என்று சொல்வது கூடுமோ?' என்னில்,— அது அதிகாரியின் கோரிக்கையைப் பொறுத்ததானதால் விரோதமில்லை. இப்படியே "ஸர்வேப்ய: காமேப்யோ ஜ்யோதிஷ்டோம:" என்கிற இடத்தில் 'ஒரு ஜ்யோதிஷ்டோம யாகத்திற்கே அதிகாரியினுடைய ராக விஶேஷத்தால் விசித்ரமான பலங்களை ஸாதித்துக் கொடுக்குந் தன்மை உண்டு' என்று மீமாம்ஸககோஷ்டியில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இப்படி பக்தியோகத்திற்கு ஐஶ்வர்ய ஸாதநத்வம் சொல்லப்பட்டது. இனி, 'அந்தப் பக்தியோகத்திற்கே சேதந ரூபமான ஆத்ம தத்வத்தினுடைய அநுபவரூபமாகிற அர்வாசீந கைவல்ய ஸாதகத்வத்தைக் காண்பித்துக்கொண்டு, கர்மயோக ஜ்ஞாநயோகங்களுக்கும் அர்த்த ஸ்வபாவத்தால் பரமபுருஷ ப்ரீதியை த்வாரமாகக் கொண்டு கைவல்யத்தை ஸாதித்துக்கொடுக்குந் தன்மை உண்டு' என்கிற அபிப்ராயத்தை வெளியிடுகிறார் :—



8-அ. ஆத்மார்த்தீ சேத் த்ரயோப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாதகா:.

ஆத்மார்த்தீ சேத் - அதிகாரியானவன் ஆத்மாநுபவத்தை இச்சித்தால் அவனுக்கு, ஏதே த்ரயோபி - கர்மயோக ஜ்ஞாந யோக பக்தியோகமாகிற இந்த மூன்று யோகங்களும், தத்கைவல்யஸ்ய - முன் சொல்லப்பட்ட கைவல்யத்திற்கு, [அதாவது- மோக்ஷமாகிற பகவதநுபவம், ஐஶ்வர்யமாகிற அசிதநுபவம் இவைகளைக் காட்டிலும் விலக்ஷணமான ஜீவஸ்வரூபாநுபவ ரூபமாகிற கைவல்யத்திற்கு என்றபடி.] ஸாதகா:—காரணங்கள்.

இனி, அடுத்து வருகிற பாதி ஸ்லோகத்தால், ஐஶ்வர்யார்த்தீ, கைவல்யார்த்தீ, பகவத் ப்ராப்த்யர்த்தீ ஆகிற இம்மூன்றுவித அதிகாரிகளுக்கும் அநுஷ்டாநார்த்தமாக ஸாரபூதமான பொது தர்மமொன்றைக் காட்டுகிறார் :—

8-அ. ஐகாந்த்யம் பகவத்யேஷாம் ஸமாநமதிகாரிணாம்.

ஏஷாமதிகாரிணாம் - இந்த மூன்றுவித அதிகாரிகளுக்கும், பகவதி - வாஸுதேவனிடத்தில், ஐகாந்த்யம் - மற்றொரு தேவதையை விஷயீகரிக்காமல் பரதேவதையினிடத்திலேயே பக்தியை உடைத்தாயிருக்குந் தன்மையானது, ஸமாநம்- துல்யம். இங்கு மூன்று அதிகாரிகளுக்கும் இம்மாதிரியான ஐகாந்த்யம் சொன்னது கூடுமோ? அப்படியாகில் "சதுர்விதா மம ஜநா பக்தா ஏவம் ஹி மே ஶ்ருதா: - தேஷாமேகாந்திந: ஶ்ரேஷ்டாஸ்தே சைவாநந்யதேவதா:" என்று ஜ்ஞாநிகளுக்கு மாத்ரம் ஐகாந்த்யம் சொல்லுகிற அநுகீதாவசநம் விரோதியாதோ? என்னில், அநுகீதையில் ஜ்ஞாநிகளுக்கு நித்யமான ஐகாந்த்யம் சொல்லிற்று; இங்கு மூன்று அதிகாரிகளுக்கும் பலத்தை அடையும் வரையில் ஐகாந்த்யம் துல்யமென்று

விவக்ஷிதமாகையால் விரோதமில்லை. இதனால், கர்ம யோகிகளும் ஜ்ஞாநயோகிகளும் பகவத் ப்ராப்தி நிஷ்டர்களாகையால், அவர்களுக்கும் ஐகாந்த்யம் ஆவஶ்யகமென்று ஸூசிதமாய்த்து. உஎ.

இப்படி ஐஶ்வர்யாத்மாநுபவங்களைக்காட்டிலும் விலக்ஷணமான பகவதநுபவத்தையே கோருகிற அதிகாரிக்கு அநிதரஸாதாரணமான பக்தி விஶேஷத்தாலே ஆத்யந்திகமான பகவத் ப்ராப்தியைச் சொல்லுகிறார்.

ஶ்லோ. யாவத்ப்ராப்தி பரார்த்தீ சேத் தத்ரைவாத்யந்தமஶ்நுதே.

யாவத்ப்ராப்தி - தான் கோரிய பலத்தை அடையும் வரையில், பரார்த்தீ சேத் - உத்க்ருஷ்டமான பதவியை ப்ரார்த்தித்தானாகில், தத்ரைவ - அந்தப் பரமபதத்தையே, அத்யந்தம் - முடிவில்லாமல், அஶ்நுதே - அநுபவிக்கிறான். ஒருவன் மற்ற எவ்வித பலத்திலும் ஸங்கமில்லாமல் உத்க்ருஷ்ட பதவியையே ப்ரார்த்தித்துப் பக்திசெய்தால், அவன் காலவிளம்ப மன்றிக்கே பகவானை அடைந்து மறுபடி ஸம்ஸாரத்தை அடையாமல் நிற்கிறான் என்று கருத்து.

உஅ.

இனி, "யேதாஸ் ஶிஷ்டாஸ்த்ரயோ பக்தா: ஸமீகாரோஹிதா: - ஸர்வே த்ருவநயப்ராண: ப்ரதிபாத்யஸ்ய மோக்ஷஸாக்" என்று அநுகீதையில் ப்ரதிபுத்தனைக் கொண்டாடப்பட்ட ஜ்ஞாநியாகிற அதிகாரிக்கு அநந்ய ஸாதாரணமான பாரமைகாந்த்யரூப விஶேஷம் இன்னதென்பதையும், அநுஷ்டாந ப்ரகாரம் இன்னதென்பதையும், பல ப்ராப்தி ப்ரகாரம் இன்னதென்பதையும், கீதா ஶாஸ்த்ரம் பூர்வோக்த அதிகாரியை ப்ரதாநமாக உடைத்தாயிருக்கையால் இந்தக் கீதை அபவர்க்க ஶாஸ்த்ரமென்பதையும் நாலு ஶ்லோகங்களால் வெளியிடுகிறார்:—

ஶ்லோ. ஜ்ஞாநீ து பரமைகாந்தீ ததாயத்தாத்மஜீவந: |
தத்ஸம்ஶ்லேஷ வியோகைக ஸுகது:க்கஸ் ததேகதீ:.

பரமைகாந்தீ - பரமாத்மாவை காங்க்ஷிக்கும் ஏகாந்திகளுக்குள் உத்க்ருஷ்டதமனான, [அல்லது - பரம: ஸகாம:



அநந்யத்ர ஐகாந்த்யஸ்திதி - மற்ற அதிகாரிகள் வேறு தேவதைகளை அறியாதவர்களானதனால் அவர்களுக்கு ஐகாந்த்யம் மாத்திரம்; ஜ்ஞாநிகளோவென்றால் அநந்ய தேவதாகர்களாக இருப்பதுடன்கூட வேறு ப்ரயோஜநத்தையும் அறியாதவர்களானதனால் இவர்களுக்குப் பாரமைகாந்த்ய மென்றபடி.] ஜ்ஞாநீ து - இதர விலக்ஷணனான ஜ்ஞாநியானவன், ததாயத்தாத்மஜீவந: - பரமபுருஷனுக்கு ஸ்வாதீநமான தன்னுடைய ப்ராணதாரணம் முதலிய வ்யாபாரங்களை உடையவனும், தத்ஸம்ஶ்லேஷ வியோகைக ஸுகது:க்க: - அந்தப்பகவானுடைய சேர்க்கையே ஸுகம், அவனுடைய பிரிவே து:க்கம் என்று உணருகிறவனும், ததேகதீ: - அந்தப் பகவானிடத்தில் அநந்யவிஷயகமான புத்தியை யுடையவனும், இதற்கு மேல் ஶ்லோகத்தோடு அந்வயம். [இங்குப் பகவானுடன் சேர்க்கையாவது - மநஸ் வாக் காயம் இவைகளால் ஸாத்யமாயும், பகவானுக்கு அபிமதமாயும், ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டதாயு முள்ள பூஜை முதலான வ்யாபாரமாகிற பகவத் ஸம்பந்தம். அவனுடைய பிரிவாவது - அந்தப் பூஜை முதலியவைகளின் விச்சேதமே. இதை மஹர்ஷிகளும் "யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே - ஸா ஹாநிஸ் தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்தி: ஸா ச விக்ரியா" இத்யாதிகளில் வெளியிட்டார்கள்.] உகூ.

ஶ்லோ. பகவத்த்யாந யோகோக்தி வந்தந ஸ்துதி கீர்த்தநை: |
லப்தாத்மா தத்கத ப்ராண மநோபுத்தீந்த்ரியக்ரிய: ||
நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:||

இதற்கு முன் ஶ்லோகத்தோடு அந்வயம். பகவத்த்யாந யோகோக்தி வந்தந ஸ்துதிகீர்த்தநை: லப்தாத்மா - பகவானுடைய த்யாநம், யோகம், உக்தி, வந்தநம், ஸ்துதி, கீர்த்தநம் இவைகளால் ஆத்மாவின் ஸத்தையை அடைந்தவனும், [த்யாநமென்றால் - அநுசிந்தநம். யோகமென்றால் - அந்தச் சிந்தநத்தைக் காரணமாக வுடைய ஸாக்ஷாத்காரம், அல்லது திவ்ய க்ஷேத்ரங்களிலுள்ள பரமபுருஷனுடைய ஸேவார்த்தம் கமநமாகவுமாம்;

“ஸத்ரயாஜிஸஹஸ்ரேப்ய: ஸர்வவேதாந்தபாரக: ஸர்வவேதாந்தவித்கோட்யா விஷ்ணுபக்தோ விஶிஷ்யதே” என்றார்களிறே. உக்தி பென்றால் - கேட்கவேணு மென்கிற விருப்ப முள்ள அதிகாரிகளுக்குப் பகவத் குணங்களைச் சொல்லுகை. வந்தந மென்றால் - மநஸ் வாக் காயம் இவைகளாற் செய்யப்படும் பூர்ண ப்ரணாமம். ஸ்துதியென்றால் - குணங்களையிட்டு ஸ்தோத்ரம் பண்ணுகை. கீர்த்தநமென்றால் - பகவானுடைய குண விபவ சேஷ்டாதிகளை ப்ரதிபாதிக்கிற பகவந்நாம ஸங்கீர்த்தநம்.] இதனால், பகவத்த்யாநாதிகளில்லாவிடில் ஆத்மாவு மில்லையென்று எண்ணும்படியாகுமென்பது ஸூசிதமாய்த்து; காண கணேபாங்களும் ஶதில்யத்தை யடையு மென்னவுமாம். தத்ந்யஸ்தப்ராணமநோபுத்தீந்த்ரியக்ரிய: - அந்தப் பகவானிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்ட ப்ராணன், மநஸ், புத்தி, இந்த்ரியம் இவைகளின் க்ரியைகளை உடையவனாயும், [ப்ராணனாவது - பஞ்சவ்ருத்தி ப்ராணன். மநஸ்ஸாவது - ஸங்கல்பம் முதலியவைகளை யுடைய மநஸ். புத்தியாவது - அத்யவஸாயம்; நிஸ்சயத்தோடு கூடின மநஸ்ஸாகவுமாம். இந்த்ரியமாவது - பாஹ்யேந்த்ரியங்கள். இவைகளின் க்ரியையாவது - ஸ்வாபாவிகமும் ஶாஸ்த்ர ப்ராப்தமுமான வ்யாபாரங்கள்.] ப்ரீத்யைவ - பகவானிடத்தில் ப்ரீதியாலேயே, காரித: - அந்தந்தக் கர்மங்களில் ப்ரேரிதனாய்க்கொண்டு, நிஜகர்மாதிபக்த்யந்தம் - வர்ணாஶ்ரம கர்மங்களடியாகப் பக்திவரையிலுமுள்ள க்ருத்யங்களை, குர்யாத் - பண்ணக்கடவன். [இதனால், “ஸததம் கீர்த்தயந்தோ மாம்” என்கிற இடத்தில் ‘ஸதத’ ஶப்தம் நித்ய நைமித்திக கர்மங்களுக்கு விருத்தமில்லாத காலத்தைக் காட்டுகிறதென்று ஏற்படுகிறது. நித்ய தாஸ்யத்தையே ஸ்வபாவமாக வுடைய ஜ்ஞாநிக்கும் முக்தனுக்குப்போலப் பகவத் பரிசர்யாதிகள் பகவதாஜ்ஞா பரிபாலநத்தில் ப்ரீதியினால் ஶாஸ்த்ரத்திற்கு ஒத்தும் தன் அதிகாரத்துக்கு அநுகுணமாகவும் அவிருத்தமான அந்தந்தக்காலங்களில் கிடைக்கத் தட்டில்லை. அப்படிக் கில்லாவிட்டால் “ஸம்ப்ராப்தே ... விதிக்ருத்யேஷு ஸர்வகர்மஸு” என்கிற ஶாஸ்த்ரத்தால் பகவானுடைய அர்ச்சனை



முதலான க்ரியைகளிலும் அநதிகாரம் ப்ரஸங்கிக்கும். ஆகையால், ஜ்ஞாநிகளுக்கும் அவஶ்யமாக அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களுடைய அநுஷ்டாநத்தில் ப்ரியதமர்களான ஸ்வஹ்ருத் புத்ர முதலானவர்களின் உபலாளநத்திற்போல ப்ரீதியே ப்ரேரகமென்று ஏற்படுகிறது. ஶாஸ்த்ரமும் “யதா யதாவதம்ராஜாநம் யதாவ ஸேவிதம் - யதா ப்ரியதிமம் ஸோமம் ஸமவேதம் ததாவத் யேஷு” என்றும், “யதாவத் ஸ்தூபம் ஸ்திதம் தபோயேவாவ வரேஷ்யம்” என்றும் நியமித்ததிறே.]

“ப்ரீத்யைவ காரித:” என்கிற இடத்திலுள்ள ‘ஏவ’ என்கிற ஶப்தத்தால் விலக்கக்கூடிய வேறு விஷயத்தைக் காட்டுகிறார்:—

௩௨. உபாயதாம் பரித்யஜ்ய.

உபாயதாம் - தன்னால் அநுஷ்டிக்கப்படும் வர்ணாஶ்ரம தர்மமடியாகப் பக்திவரையிலுள்ள வ்யாபாரங்கள் தனக்கு மோக்ஷத்தை ஸம்பாதித்துக் கொடுக்கக்கூடிய உபாயங்கள் என்கிற புத்தியை, பரித்யஜ்ய - விட்டுவிட்டு, [அதாவது - அந்த வ்யாபாரங்களுக்கு நாம் கர்த்தா வென்கிற புத்தியை விடுவதுடன், அவைகள் மோக்ஷோபாயங்களென்கிற புத்தியையும் விலக்கவேணும் என்பது தாத்பர்யம். முக்த கைங்கர்யம் போல வர்ணாஶ்ரம தர்மாதிகள் ஸ்வயமே இனியவையாகையாலே இவ்வதிகாரியால் அநுஷ்டிக்கப்பட்டாலும், க்ஷணிகமான இந்தக் கர்மங்கள் காலாந்தரத்தில் உண்டாகிற பலத்தை ஸாதித்துக்கொடுக்கக்கூடியவைகளாகா என்கிற ஜ்ஞாநத்தால் கர்மாதிகளில் மோக்ஷோபாயத்வ புத்தி உண்டாகாது என்று கருத்து.]

முற்கூறிய காரணத்தாலும் மற்றும் சில காரணங்களாலும் அந்தந்தக் கர்மாநுஷ்டாநத்தால் ப்ரீதியை அடையும் பகவானே அந்தந்தப் பலத்திற்கு உபாயமாகிறானதால், “மாமேகம் ஶரணம் வ்ரஜ” என்று சொன்ன அவனிடத்திலேயே மோக்ஷோபாயத்வ புத்தியைச் செய்யவேண்டுமென்கிறார்:—

8-ஶ. ந்யஸெத்தெவ த- தாஜீஸீ:.

தாம் - அந்த உபாயத்வ புத்தியை, தெவெ - தன் மாஹாத்
ம்யத்துக்கு அநுகுணமான லீலையாலே தன்னை ஆஶ்ரயிக்காதவர்
களுக்குப் பந்தத்தையும் தன்னை ஆஶ்ரயித்தவர்களுக்குப் பந்தமோச
நத்தையும் செய்கிற பகவானிடத்தில், அஸீ: - நிர்ப்பயனாய், ந்
ஸெஜ் - வைக்கக்கடவன். அவன்தான் உபாயம் என்கிற புத்தி
யைச் செய்யக்கடவ னென்றபடி. அளவற்ற காருண்யம், ஸௌ
ஶீல்யம், வாத்ஸல்யம், ஔதார்யம் முதலிய கல்யாண குணங்க
ளுக்கு நிதியாய், "ஶ்ரீத்ருஶாவெந ஸம்ஷ்ராத்ஹம்", "ஸக்ருதெவ
ஷ்ரபந்நாய", "அவிஜ்ஞாதாபராஷஸாவாராஃ", "க்ஷிப்ரம் ஹிதி
யதேத்பதா", "தேநா ஸஹ தேஹஃ", "ஸவ்வயத்தாந் பரித்ய
ஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்று சொல்லுகிற ஶரண்யனே
உபாயமாய் நிற்கும்போது, தன்னுடைய அபராதத்தாலும், அவ
னுடைய ஸ்வாதந்த்ர்யத்தாலும் இவ்வதிகாரிக்குப் பயஶங்கை
வேண்டாமென்று கருத்து.

௩௧.

இப்படிப்பட்ட அதிகாரிக்குத் தன் மநோரதப்படிக்கே விக்ந
மில்லாமல் பலஸித்தி யுண்டாகு மென்கிறார் :—

8-ஶ. ஜெகாஜாத்யஜஷாஜெஸ்யகாநதிஷ்டஷேத்ஹயாஜ.

ஜெகாந்த - தேவதாந்தர ப்ரயோஜநாந்தர ஸம்பந்தமற்ற,
அத்யஜ - அழிவில்லாத, ஷாஸ்ய - தாஸ க்ருத்யமான கைங்கர்
யத்திலே, ஜக - முக்கியமான, ரதிஃ - ப்ரீதியையுடைய ஜ்ஞாநி
யானவன், தஜ் - ப்ரஸித்தமான, வஷம் - ப்ராப்யமான பகவத்
ஸ்வரூபத்தை, [தத்ஷம் - பகவத் ஸ்தாநமாகிற வைகுண்டத்தை
யென்னவுமாம்.] ஆஹ்யாஜ் - விக்நமன்றியில் அடைவான்.
இப்படியே "ஷ்ரவ்ருத்திகாஜாஷாரஸ்ய ஆதஜாஹவஸாநிகம் -
யத்ராவகாஶோவிஹ்நாநாம் வத்தெ ந கஷாவந" என்று
பௌஷ்கர ஸம்ஹிதையில், பரமைகாந்திகளுக்குப் பகவத் பரிசர்
யையில் விக்நமில்லாமை சொல்லப்பட்டதிறே. "ஶ்ருயெத



MADRAS.

கிஞ் ஜொவிம்ஷெ ஹத்தேஜஹதாம் ந்ருணாம் - ஸம்ஸாரந்த்யந
தாஶீதா ஹ்ருஷஶாஃ வரிவம்யிநஃ" என்றும், "ஸத்யம் ஶ
தெந விஹ்நாநாம் ஸஹஸ்ரேண தயாதவஃ - விஹ்நாயத்தெந
ஜொவிம்ஷெ ந்ருணாம் ஹத்திநிவாரத்தெ" என்றும் பகவத் பக்
திக்கு விக்ந பாஹுள்யம் சொல்லியிருக்க, இங்குப் பக்திக்கு நிர்
விக்நமாய்ப் பலஜநகத்வம் சொன்னது கூடுமோ? என்னில்,—முன்
சொன்ன பௌஷ்கராதி வசநங்களில் பரமைகாந்தியின் பக்திக்கு
விக்நமில்லாமை சொல்லுகையாலே, இவைகள் பர பக்தியை விஷய
மாகக் கொண்டவைகள்; விக்நபாஹுள்யத்தைச் சொல்லுகிற
வசநங்களோ, பர பக்திக்கு முந்தின அவஸ்தையை ஆஶ்ரயித்திருக்
கும் பக்தியை விஷயமாகக் கொண்டவைகள் என்கிறபடியால்
௩௧௨.
விரோதமில்லை.

பூம வித்யையிற் போல இந்தக் கீதா ஶாஸ்த்ரத்திலும் ஐஶ்
வர்யாதிரூபமான அல்ப பலங்களைச் சொன்னது பரமபுருஷ ப்ரா
ப்தி ரூபமான முக்ய புருஷார்த்தத்திற்கு உத்கர்ஷம் சொல்லு
கைக்காகவும், "ஷ்ரத்யயாய்ஷ்வ மோக்ஷஸ்ய ஸித்ஷயஃ ஸம்ஷ்ரகீ
திதாஃ" என்று ஸ்ரீ ஸாத்வதத்திற் சொல்லியிருக்கிறபடி ஸாமா
ந்ய ஜநங்களுக்கு மோக்ஷத்தில் நம்பிக்கையை உண்டு பண்ணுகைக்
காகவுமாம். ஆகையால், இந்த ஶாஸ்த்ரம் பரம புருஷார்த்தத்
தையே முக்கியமாக உடைத்தாயிருக்கிறது என்கிறார் :—

8-ஶ. தத்ஷ்யாநவிஜம் ஶாஸ்த்ரம்.

ஜஷம் - இந்த, ஶாஸ்த்ரம் - ஸர்வ நியமந காரியான கீதா ஶா
ஸ்த்ரம், தத்ஷ்யாநம் - பரம புருஷார்த்தத்தை அடைவிப்பிக்கக்
கூடிய பக்தி ப்ரபத்திகளை ப்ரதாந ப்ரதிபாத்யமாக உடையது.
['தஜ்' என்கிற ஶப்தத்தால், ப்ராப்தாவான பரமைகாந்தியையும்,
அல்லது ப்ராப்யமான பரப்ரஹ்மத்தையும் சொல்லலாம்.]

இனி, மதாந்தர க்ரந்தங்கள் பகவானுடைய அபிப்ராயத்து
க்கு விருத்தங்கள் என்பதை ஸூசிப்பித்துக்கொண்டு, இதுவரை

பிற் சொல்லப்பட்ட ஸங்க்ரஹ ரீதியாலே ஶிஷ்யர்களுக்கு யதாவ ஸ்திதமான ஸமஸ்த கீதார்த்த தாத்பர்யத்தின் அவகாஹநத்தின் பொருட்டு நிமமநம் பண்ணுகிறார் :—

8-ஆ. இதி கீதார்த்தஸங்க்ரஹ:.

இதி - இவ்வாறாக, [அதாவது - மதாந்தரஸ்தர்களால் தங்கள் புத்தியினால் உத்ப்ரேக்ஷிதமானபடியன்றிக்கே, நம்மால் சொல்லப்பட்ட இம்மாதிரியாகவே என்று தாத்பர்யம்.] கீதார்த்தஸங்க்ரஹ: - கீதா ஶாஸ்த்ரார்த்தத்தின் ஸங்க்ரஹமானது, ['ஸங்க்ராஹ்ய: ஸங்க்ரஹ:'—முமுக்ஷுக்களால் ஸங்க்ரஹிக்கத்தகுந்தது; இது தொக்கு நிற்கின்றது.] பரம புருஷனுடைய விபூதித்வயங்களையும் ஸ்வயோக மாஹாத்ம்யத்தாலே ஸாக்ஷாத்கரித்த நாதமுனிகளுடைய நியோகாநுவர்த்தியான ராமமிஶ்ரருடைய ஸகாஶத்தில் பஹு ஶாஸ்த்ரங்களை அறிந்த நம்மால் அநேகம் தடவை ஶ்ருதமான கீதார்த்தத்தின் இந்த ஸமுதாய ஸங்க்ரஹமானது முமுக்ஷுக்களுக்கு ஸங்க்ராஹ்யதமம் என்று தாத்பர்யம்.
கூஉ.

ஸம்ஜிதோப்ஜநிவாஸேந ராமதாயாவ்யஸமுநிநா ।
ப்ரகாஶிதோயம் கீதார்த்தஸங்க்ரஹஸ்ய ப்ரபஞ்சிதா ॥

(முற்றிற்று.)

---

இஞ்சிமேடு. ரங்கநாதாசாரியர்.

ஸ்ரீ:.

# ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ.

(தொடர்ச்சி.)

8-ஏ. தமத்புதம் பாலகமம்புஜேக்ஷணம் சதுர்புஜம் ஶங்ககதாத்யுதாயுதம் - ஸ்ரீவத்ஸலக்ஷ்மம் கலஶோபிகௌஸ்துபம் பீதாம்பரம் ஸாந்த்ரபயோதஸௌபகம் ॥ மஹார்ஹவைடூர்யகிரீட குண்டலத்விஷா பரிஷ்வக்த ஸஹஸ்ரகுந்தலம் - உத்தாமகாஞ்ச்யங்கதகங்கணாதிபிர் விரோசமானம் வஸுதேவ ஐக்ஷத ॥

உதாயுதம் - அன்றிக்கே, "கோலார்ந்த நெடுஞ் சார்ங்கம் கூனற் சங்கம் கொலையாழி கொடுந்தண்டு கொற்ற வொள்வாள், காலார்ந்த கதிக் கருடனென்னும் வென்றிக் கடும்பறவை யிவையனைத்தும் புறஞ்சூழ் காப்ப" என்றும், "கனங்கு சக்கரக்கை, எய்வண்ண வெஞ்சிலை" என்றும், "யுதாஜிதம்" என்றும் சொல்லுகிறபடியே ஶத்ரு நிரஸநத்தையே ஸ்வபாவமாயுள்ளவைகளாதலால் இவன் தன்னாலும் அடக்கவொண்ணாதபடி எப்பொழுதும் சீறிக் கிளம்பிக் கொண்டிருக்கின்றன என்றாகவுமாம். அன்றிக்கே, பகவானிடத்தில் ப்ரேமாதிஶயத்தினால் "கலங்கிச் சோராத காதற்பெருஞ் சுழிப்பால் தொல்லை மாலையொன்றும், பாராதவனைப் பல்லாண்டு" என்று காப்பிட்டாற்போலவும், "காலோ ஹ்யயம் ஸம்ப்ரதி ஶத்ருராஜ்யம் ததிஹாநு டிதன" என்று துர்யோதனன் தனது ஸபாமண்டபத்தில் பொய்யாஸநமிட்டால் தன் வீட்டில் தன் கையினால் போடப்பட்ட படுக்கையில் ஶங்கையால் அடுத்தடுத்து ஸ்ரீ விதுரர் தொட்டுப்பார்த்தாற்போலவும், "ஆங்காரவாரமது கேட்டழுமிழும், பூங்காரவணையான்" என்கிறபடியே ஶத்ருக்கள் எட்டிப்பார்க்க ஸம்பாவனை கூட

இல்லாத அப்ராக்ருத தேசத்தில் நித்ய ஸூரிகள் பகவதநுபவத்தாலுண்டான ஆநந்தம் உந்மஸ்தகமாய் "ஏதத்ஸாமகா3யந்நாஸ்தே", "கேளாத பழமறையின் கீதம்" என்று சொல்லப்படுகிற த்வநியைக் கேட்டு, தேசத்தின் மஹிமையையும் த்வநி விசேஷத்தையும் ஆலோசிக்காமல் விஷாக்நியைக்கக்கிக்கொண்டிருப்பதுபோலவும் இங்கு இந்தத் திவ்யாயுதங்கள் சீறிக்கொண்டிருக்கின்றன என்றாகவுமாம். அப்ராக்ருத தேசமாகிற அவ்விடத்திலேயே அப்படி விஷாக்நியைக் கக்கிக்கொண்டிருந்தால், கம்ஸன்பட்டணமாய் அதிலும் அவனுடைய காராக்ருஹமாய்த் தந்தை தாய் காலில் விலங்காய் எழும் பூண்டுகளெல்லாம் அஸுராவேசங்கொண்டு கிளம்புகிற தாய்ப் பிள்ளைகளும் ராமலக்ஷ்மணர்களைப் போலன்றிக்கே தீம்பிலே கைவளர்ந்து போருகிறவர்களா யிருக்குமிடத்தில் அந்தத் திவ்யாயுதங்கள் சீறிக்கொண்டிருக்கும் என்பதைச் சொல்லவும் வேணுமோ? ஆகையால், "இடங்கை வலம்புரி நின்றார்ப்ப வெரிகாணடங்கா ரொடுங்க வைத்த தாழி" என்றும், "ஆழியெழச் சங்கும் வில்லுமெழ" என்றும் மஹாபலி யஜ்ஞ வாடத்தில் பட்டதெல்லாம் படுகிறார்க ளென்றாகவுமாம்.

இப்படி அஹங்கார தத்வமாகிய ஶங்கத்தையும், அதற்குக் காரணமான மஹத் தத்வமாகிய ஶார்ங்கத்தையும் சொல்லி, அதற்கும் காரணமான ப்ராக்ருதி தத்வமாகிய ஸ்ரீவத்ஸத்தைச் சொல்லுகிறார்:—ஸ்ரீவத்ஸவக்ஷம் - ஸ்ரீவத்ஸம் என்கிற மறுவையுடைய. "இருளன்ன மாமேனி" என்கிறபடியே கறுத்த திருமேனியை வெளுப்பென்று சொல்லும்படி மிகுந்த கருமையை யுடைய மறுவைத் தரித்தவனென்று ஆகும்.

பிறகு ஜீவதத்வமாகிய கௌஸ்துபத்தைச் சொல்லுகிறார்:—கண்டே2ஶோபி4 கௌஸ்துப4ம் - திருக்கழுத்தில் ப்ரகாசிக்கிற கௌஸ்துபத்தையுடைய. "ந தத்ர ஸூர்யோ பா4தி ந சந்த்3ர தாரகம்", "தி3வி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய", "தேஜஸாம் ராஶி மூர்ஜிதம்" என்றும், "சோதிவடிவுமலியும் சுடரொளி மூர்த்தி" என்றும், "பகலோன் பகல்விளக்காகப் பரஞ்சுடர்தோன்றியதே" என்றும் சொல்லுகிறபடியே ஸூர்யன் முதலான தேஜஸ்ஸுக்களெல்லாம் ஒளியற்று நிற்கும்படியாக நிரவதிக தேஜோமயமான திவ்ய மங்கள விக்ரஹத்தின் தேஜஸ்ஸை அமுக்கித் தான் ப்ரகாசிக்கக்கடவ கௌஸ்துபத்தைத் திருக்கழுத்தில் தரித்துக்கொண்ட என்று ஆகவுமாம். அன்றிக்கே, கண்டே2ஶோபி4 - கழுத்தினால் ப்ரகாசிக்கிற என்று ஆகவுமாம் அப்பொழுது "ஸூஷாயஸ்யெ ரயிமதம் நிஜகாந்திஸமேதா:" என்கிறபடியே திவ்யாவயவங்களின் ஸௌந்தர்யம் ஆபரணங்களுக்கும் அழகைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறபடியால், ஸர்வ ரத்நங்களுக்கும் உத்க்ருஷ்டமான கௌஸ்துபத்துக்கும் ஶோபையைக் கொடுக்கக்கூடிய திருக்கழுத்தையுடையவனென்றதாயிற்று.



பீதாம்பரம் - மஞ்சள்நிறமுள்ள வஸ்த்ரத்தைத் தரித்த. "அரைச்சிவந்த வாடையின்மேல் சென்றதாமென சிந்தனையே" என்கிறபடியே பார்ப்பவர் மநஸ்ஸை அபஹரிக்கிறதாயும், "படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின் பைம்பொற், கடிச்சோதி கலந்ததுவோ" என்று கண்டார்களுடைய மயக்கும்படி திருமேனிக்குப் பரபாகமான நிறத்தையுடைய பீதாம்பரத்தை யுடையவனென்னுதல். அன்றிக்கே, "மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு வீங்கிருள்வா யென்தன் வீதியூடே, பொன்னொத்த வாடை குக்கூடலிட்டுப் போகின்றபோது நான்கண்டு நின்றேன்" என்கிறபடியே மின்னல் நிறமுள்ள பெண்களை அணைத்துக்கொண்டு ஶோப வீதியோடே காடாந்தகாரத்திலே செல்லும்போது கறுத்த நிறமுள்ள தனது திருமேனி விஜாதீய வர்ணமாயிருப்பதால் அவர்களுக்குத் தெரிந்துவிடு மாகையால் அப்படி அவர்கள் தெரிந்துகொள்ளாம லிருக்கும்படி முக்காடிட்டுப் புறப்படுவதற்குத் தகுதியாய், ஸ்வர்ணவர்ணைகளான அவர்கள்நிறத்துக்கு ஸஜாதீயமான பொன்னிற வாடையுடையவனென்னுதல் ஆகவுமாம்.

இனி, திருக்கண்கள், ஶங்க சக்ரம் தொடக்கமான திவ்யாயுதங்கள், கௌஸ்துபம், பீதாம்பரம் முதலிய திவ்யாபரணங்கள் இவைக

ளெல்லாவற்றிற்கும் நிறம் கொடுக்கவற்றாய், இவைகளால் அபே க்ஷைபறத் தானே ஆகர்ஷகமாக நிற்கும் திருமேனியின் அஸாதா ரண ஶோபையைப் பேசுகிறார்:—ஸாந்த்ரபயோத ஸந்நிபம்- நிருண்ட மேகம்போன்ற காந்தியை யுடைய. "இலங்கொளி நீர் பெரும்பெறவும் மண்டியுண்ட, பெருவயிற்ற கருமுகிலே உயர்வண் ணம்" என்றும், "ஆழியுட் புக்கு முகுந்து கொடார்த்தேறி" என் றும் சொல்லுகிறபடியே ஸமுத்ரஜலத்தை முழுமையும் தனா காளைக் குடித்து மேலெழும்பச் சக்தியற்று ஆகாஶாவகாஶம் முழு மையும் பரந்திடக்கும்படியான தொரு மேகமுண்டாகில் - அத ற்கு ஸமமாகச் சொல்லத்தக்க தேஜஸ காந்தியை யுடைய என்று அர்த்தம். இவ்விடத்தில் 'காந்தி' என்று சொல்லவேண்டியிருக்க 'ஸந்நிபம்' என்று பொதுவாய் அநேகார்த்தத்தைச் சொல்லு கிற பதத்தை ப்ரயோகித்ததன் அபிப்ராயம்—"ந்ரூஷ ஸவஸி ஸம்ஸாகமேவமக்ஷ்ரீராவவஃ," "தவிந ந்ரூஷெ வாரா வரெ," "அஞ்சனக்குன்றம் நின்ற தொப்பக் கண்டு கொண் டல்லல் தீர்ந்தேனே", "காரார் கருமுகிலைக் கண்டு கொண்டு களித்தேனே" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ஸர்வ தாபங் களும் நீங்கும்படி இருக்கிறபடியையும், கண்டவர் கண்குளிரும் படி இருக்கிறபடியையும், "ஸகலலோக ஶரண்யாய" "நா னாவித விஶேஷாஶேஷலோக ஶரண்ய" என்கிறபடியே நீசோச்ச விஶேஷமற எல்லாருடைய அபீஷ்டங்களையும் கொடுக் கிறபடியையும், அவர்களிடமிருந்து ப்ரத்யுபகாரம் முதலிய அபே க்ஷைபறத் தன்பேருக்காகக் கொடுக்கும்படியையும், அப்படிக்கொ டுக்கப் பெற்றால் நிறம் பெற்றும் கொடுக்கப் பெறாவிடில் நிறம் வாடியு மிருக்கிறபடியையும் ப்ரகாஶப்படுத்துதல்.

இதற்கு மேல், ஸர்வேஶ்வரத்வத்தை ப்ரமாணங்கள் அபே க்ஷைபறத் தானே காட்டுகிற திருவபிஷேகத்தைப் பேசுகிறார்:— உத்தமோத்தம வைடூர்ய கிரீட குண்டல த்விஷா பரிஷ்க்ருத ஸஹஸ்ர குந்தலம்; உத்தமோத்தம - மிகவும் உத்தமமான. இது



வைடூர்யங்களுக்கும் விஶேஷணமாகலாம், கிரீடத்துக்கும் விஶேஷ ணமாகலாம். கிரீடத்துக்கு விஶேஷணமாகும் பொழுது "தேவ ஶாஸ்த்ரஸம உத்யத் ஸஹஸ்ராம்ஶு ஸத்ருஶ ப்ரபயா ஶிரஸா வியந்தஃ கிரீடஃ - ஸகலஜ்யோதிம்ஷி ஸம்பவ ஸஹஸ்ர தேஜோ நிகிலபுவந நாதஸ்ய தே நிதிமம் தயிஸ்யம்" என் றும், "ஆதிராஜ்யமதிகம் ஸர்வநாதா ஶேஷ தே விஶாலய நிர்க்ஷேணஸஃ" என்றும் சொல்லுகிறபடியே உபய விபூதிக ளுக்கும் இவனே நாயகன் என்பதை ப்ரத்யக்ஷத்திலே காட்டக் கூடியதாயும், "வாழ்த்திய வாயராய் வானோர் மணி மகுடம், தாழ்த்தி வணங்கத் தழும்பாமே" என்று சொல்லுகிறபடியே ஸர்வதேவதைகளாலும் ஶிரஸ்ஸால் வஹிக்கக்கூடிய திருவடி களையுடைய யாதொரு பகவானுண்டோ அவராலே தன் ஶிரஸ் ஸால் வஹிக்கக்கூடியதாயும், பரதேவதா விஷயமான ஸம்ஶயங் களையும் தானே போக்கடிக்கக்கூடிய தாயும் உள்ள இம்மாதிரி யான மஹிமையை யுடையது அந்தக் கிரீடம் என்பதைக் காட் டுகிறது. மற்றொரு பக்ஷத்தில் மஹார்ஹங்களான வைடூர்யங்களை யுடைய கிரீடமென்று அர்த்தம். இப்படி "கதிராயிரமிரவி கலந் தெரித்தாலொத்த நீண்முடியன்" என்கிறபடி ஆயிரம் கிரணங் களுடன் கூடிய ஆயிரம் ஸூர்யர்கள் ஒரே காலத்தில் உதித் தாற் போலிருக்கிற கிரீடத்தினுடையவும், குண்டல - "வ்ருஷ்ணி த்வலஸஹஸ்ரதேவ த்விதி ஶம்ஸநீயா ஸம்ஸ்பர்ஶயீ ஸகரிகா விவியாத்விஹாராஸ" என்கிறபடியே அநேக விதமாக ப்ரகாஶி க்கிற திவ்ய மகர குண்டலங்களுடையவு மான, த்விஷா - காந்தி களோடு, பரிஷ்க்ருத - இடையிடையே கலந்துநிற்கிற, ஸஹஸ்ர குந்தலம் - சுருண்ட திருக்குழல்களை யுடைய என்றபடி. "கொ ள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ் சுருளின், உள்கொ ண்ட நீல நன்னீர்த் தழைகொல்" என்று சொல்லுகிறபடியே லோகங்களை யடங்க வ்யாபரித்து நிற்கிற ப்ரளயகாலாந்தகா

த்தைப் பன்னி அலாராம்ஸங்களைக் கழித்து ஒருசுருட்டாகச் சுருட்டி அதில் மேல்பாகத்தில் கொஞ்சம் அழுக்குத்தட்டு மாகையால் உள்பாகத்திலிருந்து இழுத்த நூல்களின் ஸமூஹ மென்று சொல்லும்படியும், பகவானுடைய திருமேனியும் வெளுப்பு என்று சொல்லத்தக்க கருமையை யுடையதாயும், அலகலகாகப் பிரித்தெண்ணலாம் படியும், "திரண்டெழு தழை மழை முகில்வண்ணன் செங்கமல மலர் சூழ் வண்டினம் போலே, சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த முகத்தான்," "செங்கமலப்பூவில் தேனுண்ணும் வண்டே போல், பங்கிகள் வந்துன்பவளவாய் மொய்ப்ப" என்று சொல்லுகிறபடியே ஸஹஸ்ர தளமுள்ள கமலத்தைச் சுற்றிலும் அதிலிருக்கும் தேனைக் குடிப்பதற்காக மொய்த்துக் கொண்டிருக்கும் வண்டுகளென்று சொல்லும்படியு மன்றோ நிற்கின்றன பகவானுடைய திருக்குழல்கள்?

இப்படி திவ்யாபரணங்களில் தலையான கிரீடத்தைப் பேசி மற்றையாபரணங்கள் அநேகங்களாகையால் மொத்தமாய்ப் பேசுகிறார்:— உதாரகாஞ்சீ அங்கத கங்கணாதிபி: விப்ராஜமானம்; காஞ்சீ - அரைநாண்வடம், அங்கத - தோள்வளை, கங்கண - முன்கைவளை, ஆதிபி: - என்று இவை முதலிய ஆபரணங்களாலே. இங்கு 'ஆதி' ஶப்தம் அநேக விதமான ஆபரணங்களைச் சொல்லுகின்றது. "ஸம்ஶ்லிஷ்டாங்கௌ ஹேமஜை:" என்கிறபடியே தேஜோமயமான திருமேனியில் நீரிலே நீரைச் சொரிந்தாற்போலிருக்கையாலே தனித்து அநுபவிக்க முடியாமையும், "பலபலவேயாபரணம்" என்கிறபடியே எண்ணிறந்த ஜாதியங்களாயும் ஒவ்வொரு ஜாதியத்திலும் வைரம் பச்சை நீலம் சிவப்பு முத்துக்கள் என்கிற பேதங்களிருக்கிறபடியால் பிரித்துச் சொலமுடியாமையும் இங்கு விவக்ஷிதங்களாகின்றன. இங்கே "உதார" என்று ஒரு விஶேஷண மிருக்கிறது. அதற்கு 'ஶலாக்யங்களான



என்று அர்த்தம். அதாவது - பகவானுடைய திருமேனி ஸம்பந்தத்தாலே 'காந்த்யதிஶயமுள்ள என்றாயிற்று. அன்றிக்கே, "ஸ்வோசித விவித விசித்ராநந்தாஶ்சர்ய நித்ய நிரவத்யாபரிமித திவ்ய பூஷண:" என்கிற சூர்ணிகையில் சொன்ன விஶேஷணங்களெல்லாம் சுருங்க விவக்ஷித்த தாகவுமாம்.*

விப்ராஜமானம் - மிகவும். ப்ரகாஶிக்கிற. அதாவது - இவையன்றிக்கே யிருந்தாலும் அநாபரண ஸௌந்தர்யமாய் அதன்மேலே ஆபரணங்களாலும் விளங்குகிற என்று அர்த்தம். அன்றிக்கே, குருவிக்குப் பனங்காய் கட்டியதுபோ லிராமல், 'அவைகளுக்குத்தான் இந்தத் திருமேனியால் ஶோபையோ? இதற்குத்தான் அவைகளால் அலங்காரமோ?' என்று விவேகிக்க முடியாமல் ப்ரகாஶிக்கிற என்றாகவுமாம்.

வஸுதேவ வீக்ஷித - இப்படியிருந்த குழந்தையை ஸ்ரீ வஸுதேவர் கண்டு கொண்டார். "பெண்ணுலாஞ் சடையினானும் பிரமனும் முன்னைக்காண்பா, னெண்ணிலா வூழிவூழி தவஞ்செய்தார் வெள்கி நிற்ப" என்கிறபடியே ப்ரஹ்ம ருத்ராதிகள் கண்ணுக்கும் தெரியாத விஷயத்தை ஸ்ரீ வஸுதேவர் பார்த்தார் என்று ஸ்ரீ வஸுதேவருடைய பாக்யத்தை மஹர்ஷி கொண்டாடுகிறார்.

சே. நரஸிம்ஹமாசாரியர்.

---

* [இதன் விஸ்தாரத்தை, தாத்பர்ய சந்த்ரிகையிலும், அதற்கு அடியேனால் எழுதப்பட்டிருக்கும் தமிழ்மொழிபெயர்ப்பிலும்;

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

ஸ்ரீவேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

ஸ்ரீராமன் ப்ராயோபவேஶ விஷயமாக அடியேன் ஸம்ஶயித்துச் செய்திருந்த ப்ரஶ்நத்திற்கு ஸ்ரீ. உ.ஹ. வே. நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி ஸாதித்திருக்கும் ஸமாதாநத்தை உத்தேஶித்து அதிக ஸந்துஷ்டனாய், ஸ்ரீ ஸ்வாமி எழுதியிருக்கும் விஷயத்தில் இன்னும் சில ஸந்தேஹங்கள் வருவதால் தத்ய ஸ்வாமியைப் பத்ரிகாமூலமாய் ப்ரஶ்நம் செய்கிறேன். ஆசார்ய ஸ்ரீஸூக்தியில் மிதஜ்ஞனான அடியேன்போல்வாருடைய ஸம்ஶயத்திற்கு ஸ்வாமியைப் போன்ற ஜ்ஞாதாக்கள் ஸம்ஶய நிரஸநம் செய்வது ஸம்பாவிதந்தானே. ஆனால், ஒரு விஜ்ஞாபநம் மாத்ரம் பூர்வாங்கமாகச் செய்யவேண்டுவது உண்டு: ஸதாசார்ய கடாக்ஷிதனான அடியேனை ஸ்ரீ ஸூக்தியில் அவிஶ்வஸ்தனென்று திருவுள்ளம்பற்ற வேண்டாம். இதன் ஹேதுவைப் பின்பு எழுதுகிறேன்.

2. ‘ஸ்ரீ பரதன் அநுஷ்டித்தது வழிமறித்தது, ஶாஸ்த்ரீய ப்ராயோபவேஶமன்று’ என்பதற்கு த்ருஷ்டாந்தஸ்தமான வாஸுகாஹாதி ஶப்தம் ப்ரமாணமாகுமோ? “ஸம்ஜஜ்ஞும் ப்ராஞ்ஜலிம் க்ருஶா” என்கிற ஶ்லோகத்தைப் பார்த்தால் ஸ்ரீராமனும் ஏக பார்ஶ்வ ஶயநம் பண்ணினதாக அர்த்தமாகிறதே! திருப்புல்லாணியிலும் தெற்கே ஶிரஸ்ஸும் கிழக்கே திருமுகமுமாக ஸ்ரீராமஶயநமிருந்தால் ப்ரதிஶயநத்துக்கு விருத்தமோ? தவிரவும், “ஶாயநம்” என்றால் அஶாஸ்த்ரீயமான மறைவாசத்தான் இருக்க வேணுமோ? ஶாஸ்த்ரீய கார்யத்திற்கு லௌகிக த்ருஷ்டாந்தம் கூடாதோ? வழிமறிக்கத் தர்ப்பாஸ்தரணமும் வேணுமோ? “உபஸ்த்ருணாஸ்து ஶாரதே,” “ஸமுபவிஶ்யாஸநே” என்றும் ஸாரதி விளம்பிக்க, பரதன் தானே தர்ப்பாஸ்தரணம் செய்து கொண்டதாய் இருக்கிறதே! “விஸிஷ்ட ப்ரத்யவேஶநே” என்பதிலிருக்கும் ‘விஸி’ என்னும்



பதத்தைக் கவனிக்க வேண்டாமோ? மேலும், “ஶாஸநம் வ்ரதம்” என்கிற ஸ்ரீராமன் வாக்யத்திலுள்ள ‘வ்ரத’ ஶப்தார்த்தமும் “ஶரணஸ்ய ஶதம்யேடிகம்” என்கிற இடத்தில் மூன்று வ்யாக்யாநங்களிலுமுள்ள “க்ஷத்ரியாவிஹித வ்ரதத்வேஶ ந ப்ராயஶ்சித்தாயத்தும்” என்கிற வாக்யமும், மூன்றுவதாகிற திலகமென்னும் வ்யாக்யாநத்திலுள்ள “வாஸ்து ஶஸ்த்வ வ்ரதத்வே வேஶ யஜ்ஞாஹுரோபலக்ஷணம்” என்கிற வாக்யமும் ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளத்துக்குப் பொருந்துமோ? கேவல கார்யத்துக்கு ப்ராயஶ்சித்தம் வேணுமோ? தவிரவும், வாநரப்ராயோப வேஶாதிகளிலும் ப்ராங்முகத்வம் தர்ப்பாஸ்தரணம் முதலியவைகளிருப்ப தையும் கடாக்ஷித்திருக்கும் ஸ்வாமிக்குப் பரதனுடையது அஶாஸ்த்ரீயமென்று தோன்றுமோ? அத்யாத்ம ராமாயணத்திலும் இவ்விடங்களில் தர்ப்பாஸ் தரண ப்ராயோபவேஶாதி ஶப்தங்கள் இருக்கின்றனவே!

3. ஸேனை முதலிய ராஜாங்கங்களுடன் கூடியிருந்தபடியால் ஸ்ரீபரதனை ஸ்ரீராமன் அபிஷிக்தனாக எண்ணினார் என்று ஸ்ரீ ஸ்வாமி எழுதியிருப்பது கொஞ்சம் சிந்த்யம். பரதன் ஸ்ரீராமனிடம் வரும்போது “ஜடிலம்சீர வஸநம்” என்றும், “கஷிஷ்வஸ்த்ர ஸாத்தாநம்” “ஸவத்ஸ்யவாஸ ஹஸ்தம்” “ப்ரஸாதம் கதமஹேஸ்வி” என்றும் 104-வது ஸர்க்கம் முதலாகவுள்ள அநேகமான பரதவாக்யத்தைக் கேட்ட ஸ்ரீராமனுக்கு, ஸேனை முதலியவைகளைப் பார்த்ததனால் ஜடை மரவுரி முதலியவைகளைத் தரித்துக்கொண்டிருந்த பரதனிடம் மறுபடியும் அபிஷிக்தபுத்தி வருமோ? தஶரதர் ராஜ்யம் கொடுத்ததைக் கொண்டு பரதன் அபிஷிக்த ப்ராயனானால் பரதன் கொடுத்ததைக் கொண்டு ஸ்ரீராமனும் அபிஷிக்த ப்ராயனாகக்கூடாதோ? ஸ்ரீராமன் ராஜ்யத்தை அங்கீகரிக்க வில்லையே என்றால், பரதன் மாத்ரம் அங்கீகரித்தாரோ? ப்ரத்யுத அயோத்யா காண்டம் 112-வது ஸர்க்கத்தையும், மற்றைஸர்க்கங்களையும் பார்த்தால், ஸ்ரீ பரதன் ஜடை முதலியவைகளைத் தரித்துக்கொண்டவராயும் பல மூலாஶியாயு மிருந்து கொண்டு ஸ்ரீபாதுகைக்கு அபிஷேகம் பண்ணிவைத்துக் குடை முதலியவைகளை ஸமர்ப்பித்துத் தாம் அதற்கு வேலைக்காரராக இருந்ததை வெளியிடும் அநேக வாக்யங்கள் ஸ்ரீராமனைக்காட்டிலும் பரதனுக்கு முநிவ்ருத்தி அதிகமென்று போதிக்க வில்லையோ? ஸேநாதிக ளிருப்பதே மறுபடியும் பரதனிடம் அபிஷிக்த புத்திக்கு ஹேதுவானால், தமக்கும் ஸேநாதிகள் இருந்தமையால் தாம் ப்ராயோபவேஶம் செய்யும் பொழுது தம்மிடத்திலும் அபிஷிக்த புத்தி வரலாமே. தவிரவும், “நத்வ உத்யஸ்ய வஸி ஜஸ்நாம்” என்றுதானே இருக்கிறது? ‘தத்ரயாபாணாம்’ என்றும் இருக்கிறதோ?

4. முதலில் அடியேன் ஸந்தேஹித்து ப்ரஸ்னம் செய்ததாவது - 'அப்யுபேத்ய வாதத்தைத் தவிர வேறு ஸமாதானம் உண்டா? அப்படி ஏதாவது இருந்தால் அதை எழுத வேணும்' என்பது தான். இவ்விதம் ஸந்தேஹம் வந்ததற்குக் காரணத்தை விஜ்ஞாபனம் செய்துகொள்ளுகிறேன். ஸ்ரீரங்கத்தில் துரீயாஸ்ரமஸ்தரான ஸ்ரீ. உ. வே. வேதாந்த ராமாநுஜஸ்வாமி கொஞ்சகாலத்துக்கு முன் ப்ரக்ருத விஷயத்தைப்பற்றிப் பின் வருமாறு நிகமனம் செய்திருக்கிறார்:— "விபீஷணன் ஸரணாகதி செய்யச் சொன்னார்; ஸ்ரீராமன் ப்ராயோபவேஸம் செய்தார். ஸ்ரீராமன் செய்தது இன்னது என்று விபீஷணனுக்குத் தெரியாது. அபயப்ரதான ஸாரத்தில் விபீஷண புத்திப்படியும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் யதாவஸ்தித அநுஷ்டானப் படியும் ஸ்ரீ தேஸிகன் அருளிச்செய்திருக்கிறபடியால் ஸ்ரீஸூக்திகளில் பரஸ்பரவிரோத மில்லை. இதுதான் என்னுடைய அபிப்ராயம்" ஸ்ரீ. உ. வே. காறக்குறிச்சி ஐவாசார்யர் ஸ்வாமியோ இதே விஷயத்தைப்பற்றிப் பின் வருமாறு ஸாதித்திருக்கிறார்:—"இந்தத் தர்ப்பாஸ்தரணம் முதலியவைகளோடு விஸிஷ்டமாயும் விலக்ஷணமாயு மிருக்கிற ப்ரபத்தி வேறு, மோக்ஷார்த்த ப்ரபத்தி வேறு. மோக்ஷார்த்த ப்ரபத்திக்குத்தான் அங்க பஞ்சகநியமம் வேண்டும்; வேறு ப்ரபத்திகளுக்கு மற்றைப் புதியஅங்கங்களும் சேரலாம்; உள்ள அங்கங்களுக்கு லோபமும் நேரலாம். இது நிக்ஷேபரக்ஷை என்னும் க்ரந்தத்திலிருந்து ஏற்படுகிறது." இப்படி இரண்டு பண்டித ரத்னங்கள் தம் தம் திருவுள்ளமாய்ப் பேதித்து ஸாதித்திருக்கிறபடியால், இந்த விஷயத்தில் அடியேனுக்கு ஸம்ஸயம் ஜநித்து, ஸ்வாமியைப் போன்றவர்களிடமிருந்து ஸம்ஸய நிவாரணத்தை எதிர்பார்த்தவனாகக்கொண்டு பத்ரிகையில் ப்ரஸ்னம் செய்யத் துணிந்தேனே தவிர ஸ்ரீஸூக்தி விருத்த மென்கிற எண்ணத்தினால் ப்ரவ்ருத்திக்க வில்லை. "நிக்ஷேபரக்ஷை" க்ரந்தத்திலிருந்து ஸ்ரீகாறக்குறிச்சி ஸ்வாமி ஸாதித்திருக்கிறபடி ஏற்படுவதாக அடியேனுக்குத் தெரியவில்லை. ஸஒ°.

5. ஸ்ரீராமன் உபவாஸ மிருந்ததற்கு ப்ரமாணம்:—ஸ்ரீ நிகமாந்த மஹாதேஸிகன் தமது திவ்ய ஸூக்தியில், ஆறு நாள் உபவாஸத்தோடு கூடின ப்ரஹ்மதத்தாநுஷ்டானத்துடன் ஸ்ரீராமன் ப்ரதிஸயநத்தையும் சேர்த்து இரண்டும் ப்ரதிஸயநம் என்கையாலும், அங்கமான உபவாஸத்தை ப்ரஹ்மதத்தன் அநுஷ்டிப்பது அநுசித மாகையாலும் அந்த அங்கக் குறைவாக ஸ்ரீராமன் அநுஷ்டித்திருக்க மாட்டார் என்கிற அநுமானம்தான். ப்ரதிஸயந பக்ஷத்திலும் 'விப்ரவச' என்கிற ஸப்தத்திற்கு இந்த அர்த்தத்தை ஸ்ரீ ஸ்வாமியும் அங்கீகரிக்கவேண்டியது அவஸ்யம்தானே. அடியேனுக்கும் அந்தப் பதமே ப்ரமாணம்.

6. நான் எழுதின வைஸிஷ்ட்யத்தை விகல்பித்துக்கொண்டு அதிகமாக ஸ்வாமி உபக்யஸித்திருப்பது ஸ்வாமிக்கு உசிதம்தானோ? ப்ரதிஸயந பக்ஷத்தி



னும் 'த்ஸா_ நாவஸீய_ வத_ஸோ நஃ' என்று அர்த்தம் செய்வது தான் ஸ்வாமிக்குத் திருவுள்ளமோ? அப்படியானால் கேவலஸயநமே ப்ராயோபவேஸமாக ப்ரஸக்தியாதோ? அந்தப் பக்ஷத்தில் தர்ப்பாஸ்தராதிகள் அங்கமென்றால், 'ஒரே வாக்யத்தில் ப்ரதிபந்நமான தர்ப்பாஸ்தரணாதிகள் ஒரு பக்ஷத்தில் அங்கம், பக்ஷாந்தரத்தில் ப்ரமாணாந்தர விரோதம் வருகிறபடியால் அங்கமன்று' என்று சொல்லவேண்டிவருவதால் அப்படிச் சொல்வது ஸ்வரஸமாகுமா? என்று அடியேன் ப்ரஸ்னம் செய்திருந்தேன். அந்த அஸ்வாரஸ்யத்துக்கு ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்திருக்கும் விஷயங்களில் ஸமர்த்தநம் இருப்பதாய் அடியேனுக்குத் தெரியவில்லை.

7. ஆகையால், பரதன் செய்தது ஸாஸ்த்ரீயமென்றே தோன்றுகிறது. ப்ரத்யுத வேணுமானாலும், ஸ்ரீராமன் அநுஷ்டித்ததை ஸாஹஸ்ரூஉயாந த்ரூராதெ ரவைரக்ஷணாதி விஸிஷ்டமாயிருப்பதனால் விலக்ஷண ப்ரதிஸயநமென்று சொல்லலாமோ? என்கிற ஸங்கை ஜநிக்கிறது என்று சொல்லலாம். ஸ்ரீ ஸ்வாமி அடியேன்பேரில் க்ருபை கூர்ந்து இந்த ஸங்கைகளுக்குப் பரிஹாரத்தை ஸப்ரமாணமான ஸூக்திகளால் அநுக்ரஹிப்பார் என்று ப்ரதீக்ஷித்து இருக்கிறேன்.

ஜ்ஞாநஹீநவரேண்யனான அடியேனுடைய லிகிதங்களில் இருக்கும் ந்யூநாதிரேகங்களைப்பற்றி க்ஷமை கொள்ளவேண்டுமென்று பண்டிதர்களை ப்ரார்த்திக்கிறேன்.

கண்கொடுத்தவனிதம்,<br>கார்த்திகைமீ 18௳. } புத்தங்கோட்டகம் ந. ஸ்ரீநிவாஸதாஸஃ.

(2)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

1. வேதாந்த தீபிகை 8-வது ஸஞ்சிகையில் ஸ்ரீ ராகவன் கணையாழி விஷயமாகச் செய்யப்பட்ட முக்ய ஸங்கையாவது - அது ஸ்ரீ ராகவன் கையில் கணையாழி இருக்கவே இல்லை என்கிற ஸந்தேஹத்தின் பொருட்டல்ல; வக்ய வ்ருத்தியாக வந்த ஸ்ரீ ராகவன் கைக்கு அந்தக் கணையாழி எந்த ஸந்தர்ப்பத்தில் கிடைத்திருக்கக்கூடும் என்பதைப் பற்றித்தான். அதற்கு அத்யாத்ம ராமாயணத்திலுள்ள ஓர் ஸமாதானத்தைச் சொல்லி, 'ஸ்ரீ ராமாயணத்தில் ஸ்புடதரமான ப்ரமாணமொன்றும் காணப்படவில்லை, ஸ்ரீ ராகவன் கையில் கணையாழி இருந்ததில் ஆக்ஷேபமே இல்லை' என்று 9-வது ஸஞ்சிகையில் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி ஸாதித்திருப்பது ஸமாதானமாகுமோ? அப்படி ஸாதிக்காமல் இந்த விஷயத்தை உபக்யாஸக்ரமேண உபக்ரமித்துக் கணையாழி வ்ருத்தாந்தம் முழுவதையும் தெளிவாய்த் தெரிவிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

ii. 9-வது ஸஞ்சிகையில் ப்ராயோபவேஸ விஷயமாக ஒரு ப்ரஶ்நம் கேட்கப்பட்டிருக்கிறது. தஸரத வாக்யத்திற்குப் பிறகு அபிஷிக்தரா யிருந்த பரதன் விஷயத்தில், ராஜ்யார்ஹமானவைகளை நீக்கித் தாபஸவேஷத்தோடு உள்ளவராயும் "யதி₂ ஸௌஸாவ நாயா-ய ஸம்ஹவாய ப₂மெய-ம" என்கிறபடி அவதீர்ணராயும் எழுந்தருளிய ஸ்ரீ ராகவன் "ந த்யஜேயம் கதஞ்சந" என்று நிஷேதித்தது உண்மையே ஆயினும், "ராமோ த்விர் நாபிபா₄ஷதே" என்கிற மஹர்ஷி வாக்யத்தையும், "அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந ராகவ:" என்கிற வாக்யத்தையும் அதிக்ரமித்து ஸ்ரீ ராகவன் ப்ராயோபவேஸமே செய்தார் என்பதான ஸம்ஸயம் எப்படி ஜவிக்கக்கூடியதோ?

கண்டனூர் 18—11—11. } மாடபூசி. வெங்கடாசாரியன்.

[இந்தக் கடிதத்தின் இரண்டாவது பாகத்தினுடைய அபிப்ராயம் இன்னது என்று ஸ்புடமாக ஏற்படவில்லை; ஸ்ரீ. வேங்கடாசார்யர் தம்முடைய கருத்தைத் தெளிவாக வெளியிட்டால் ஸமாதாநம் சொல்பவர்களுக்கு ஸௌகர்யமாக இருக்கும்.

பத்ராதிபர்.]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 5 - JAN 1912 MADRAS.

ஸ்ரீ:

# பிரிவுகளின் மாஸ அறிக்கை.

## சென்னை - சைதாப்பேட்டைப் பிரிவு.

### (1)

சென்ற ஐப்பசிமீ 13உ ஞாயிற்றுக் கிழமை பகல் 4-மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் ஷை பிரிவின் வருஷாந்தச் சங்கம் சேர்ந்தது. ஸ்ரீ. டி. ராஜகோபாலா சாரியர் அக்ராஸநாதிபதியாக இருந்தார். அப்பொழுது ஷை பிரிவின் மானேஜிங் கமிட்டியாரால் கொண்டுவரப்பட்ட 1911-வது வருஷத்திய வருஷாந்த அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. பிறகு நாளது வருஷத்துக்காகச் சென்ற வருஷத்தி லிருந்த கமிட்டிமெம்பர்களையே கமிட்டியாராகவும், ஸ்ரீ. வி. ராகவாசாரியர் ஸ்வாமியைப் பொது நிர்வாஹக ஸபையில் இந்தப் பிரிவின் ப்ரதிநிதியாகவும் நியமித்துவிட்டு ஸங்கம் கலைந்தது.

### (2)

சென்ற கார்த்திகைமீ 25உ ஞாயிற்றுக்கிழமை பகல் 4-மணிக்கு ஷை ஸ்ரீ அஹோபில மடத்திலேயே இந்த வருஷத்திய இரண்டாவது கூட்டம் சேர்ந்தது. ஸ்ரீ. வி. ராகவாசாரியர் பி. எ., பி. எல்., அக்ராஸநாதிபதியாக இருந்தார். அப்பொழுது ஸ்ரீ. தி. வெங்கடராம ஐயங்கார் ராஜவிஸ்வாஸத்தைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்தார். ராஜவிஸ்வாஸமென்றால் என்னவென்பதை விளக்கினபிறகு, இந்தத்தேஸவாஸிகளான அனைவரும் எப்பொழுதும் மிகுந்த ராஜவிஸ்வாஸத்துடன் கூடினவர்களென்று ஹிந்துதேஸ சரித்ரத்தைக்கொண்டும் அவர்கள் கொண்டாடிவரும் மதக்கொள்கைகளைக்கொண்டும் நிரூபித்துவிட்டு, அப்படிப்பட்ட விஸ்வாஸத்திற்கு நம்முடைய அரசரும் அவருடைய ப்ரதிநிதிகளாக இங்கு ராஜ்யபரிபாலநஞ் செய்துவரும் ப்ரபுக்களும் அத்யந்தம் தகுந்த பாத்ரமென்று அவர்கள் இந்தத் தேஸத்துக்குச் செய்திருக்கும் அநேக நன்மைகளைக்கொண்டு உபபாதித்து, ஸ்ரீ. வெங்கடராம ஐயங்கார் தமது உபந்யாஸத்தை முடித்தார். முடித்தவுடன், அவர் அந்தக் காலம் டில்லியில் 5-வது ஜார்ஜு மஹாராஜனுக்கு முடிசூட்டுங் காலமாக இருந்தபடியால், அவரது செங்கோலின் சிறப்பைப்பற்றித் தாம் இயற்றியிருந்த சில பாடல்களைப் பாடி அவற்றின் அர்த்தத்தை விவரித்தார். ஸபாத்யக்ஷரான ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியரும் அந்தக் காலத்துக்கு அநுகுண

மாகத் தாம் இயற்றியிருந்த "சக்ரவர்த்யஷ்டகம்" என்னும் 8 - ஸம்ஸ்க்ருத ஸ்லோகங்களை வாசித்து அர்த்தம் சொல்லி அங்கு வந்திருந்த எல்லாருக்கும் அதிதமான ஆநந்தத்தை உண்டுபண்ணினார். இவை இரண்டும் அடுத்த பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு அடுத்து வருகின்ற மார்கழி மாதத்தில் டோமங்கலத்தில் நடக்கும் ஸ்ரீ ஸபையின் மஹா ஸங்கத்துக்கு, பின் கண்டிருக்கும் ஸ்வாமிகள் இத்தப்பிரிவின் ப்ரதிநிதிகளாக ஏற்படுத்தப் பட்டார்கள் :—ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர், வி. ராகவாசாரியர், எஸ். வாஸுதேவாசாரியர், வி. துரைசாமி ஐயங்கார், தி. வெங்கடராம ஐயங்கார், எஸ். ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஆர். நரஸிம்மாசாரியர். பிறகு உபந்யாஸம்செய்த ஸ்ரீ. தி. வெங்கடராம ஐயங்காருக்கும், அக்ராஸநாதிபதியாக இருந்த ஸ்ரீ. வி. ராகவாசாரியருக்கும் அங்குச் சேர்ந்திருந்தவர்கள் தங்கள் க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரிக்கவே கூட்டம் கலைந்தது.

மயிலாப்பூர்
கார்த்திகைமீ 2வ. } காரியதரிசி
(சென்னை சைதாப்பேட்டைப் பிரிவு.)

---

## (1) மாட்சிமை தங்கிய
## 5 - வது. ஜார்ஜு மன்னரின்
# முடிச்சூட்டகவல்.

### செங்கோற் சிறப்பு.

நீர்கடல் சூழ்ந்த ஞானிலந் தன்னில்
மடவீர் கற்புங் கணவர் வாழ்க்கையும்
காபொறுங் சிறந்த நன்மைகள் பெருகும்
சீர்வளம் புவிமேல் நித்தமும் பெருகும்
சந்ததி வகையுஞ் சதிரா யோங்கும்
பல்வளம் பிறவும் பாரிற் பலிக்கும்
தொல்குலச் செருக் துணையாய்த் தொடரும்
கல்வி வகையுங் காட்டுஞ் சுவழி
வேதிய ரொழுக்கமும் விலகா தொளிரும்
சாதியுங் குலமுந் தனையிற் குலவிடும்
சூதும் வாதும் சூழா தகலும்
வாதம் வழக்கும் வகையிற் குறையும்
கப்பலின் பொருள்கள் கரையின் மலியும்
தானியம் மெங்குந் தாமாய்க் கொழிக்கும்
மாதமும் மாரி வளமுறப் பொழியும்
காலிகள் மேய்விடங் கனமா மெங்கும்
பயிர்த்தொழி லெங்கும் பலிக்குந் தினமும்
ஆயுட் பெருக்கமு மறிவின் முதிர்ச்சியும்
காயந் திடமாம் கனவைத் தியமும்
நன்கொடை சிறக்கும் ஞானில மெங்கும்
மன்னவர் செங்கோல் வளமே காரணம்
மற்றொன் றில்லை மதித்துக் காண்மின்
ஜம்புத் தீவில் ஜார்ஜா மரசர்
பாரத வருடம் பகரும் பிரிவில்
பரத கண்டப் பழம்பதி யாகும்
அத்தினா புரியி லழகா யிப்போ
மன்னர்கள் மன்னர் மாமுடி சூடும்
இந்நாட் சுகதிலைக் கிணைமுன் புண்டோ
இராம னாண்ட விப்பா ரதனில்
பூமன் னகப் போந்தா ரிவரும்
சுகமும் பெருகும் சூதுகள் குறையும்
அசோக னுக்ப ராண்ட விடத்தில்
மேரியா மன்னையின் மிகுசெல்வ மாகும்
ஜார்ஜா மன்னரை ஜகமீ திப்போ
போற்றுமின் புகழ்மின் புதுவழி யாக்கி
நம்மை யவரும் நலமுற வைப்பர்
மங்கையர் சீரும் வளமா யுயரும்
பலபேர் தம்மனம் பரமனை நாடிக்
கோரும் பலனெலாங் கூடிடு நிச்சயம்
கபடம் விலகுங் கலித்துய ரொழியும்
மூன்று காரணமு மொருவழி முதிர்ந்தால்
தோன்றுஞ் சுகமும் சொல்லிது நிச்சயம்
பாரின் மாந்தர்காள் பரமன் கருணைக்
காகா யாகு மாசரா லனைத்தும்
பலிப்பது நிச்சயம் பண்டைநாள் வழக்கம்
சொன்னவன் வேதியன் சோணாட் டுதித்தவன்
இப்போ சென்னையா மிக்நகர் தன்னில்
நுங்கம் பாக்கம் நூலுணர் வேதியர்
வீதியுள் வாச வேங்கட ராமன்
தமிழுக் குழைப்போன் தன்னு ளெல்லாம்
பார்ப்போர் கேட்போர் பதம்பெற லாமே.

### வாழி.

வாழி வேதியர் நான்மறை வர்க்கமும்
வாழி மாமனு நீதியின் மார்க்கமும்
வாழி மங்கையர் கற்பதன் மாட்சியும்
வாழி யாங்கிலந் தீந்தமிழ் மாண்பதும்
வாழி மேழியின் செல்வமு மண்ணிசை
வாழி கோத்திர நாற்குல மாண்பதும்
வாழி மேரியா மன்னையின் வாழ்க்கையும்
வாழி நாற்றவர் மாண்புறு வர்க்கமும்
வாழி ஜார்ஜெனு மன்னர்செங் கோலுமே.

சென்னைநகர் நுங்கம்பாக்கம் 9-12-11. } தி. வெங்கடராம ஐயங்கார், தமிழ்ப்பண்டிதர்.

---

### (2) சக்ரவர்த்யஷ்டகம்.

கெஷமாய ஸவபூஜமதாமாஷயிம் மஹாஸம் ஸஞ்சிய்ய ஸா
ரதமிஷம் ஸாவநம் வரவிஷ்டம் - ஜார்ஜ் செளரி ஸம்ஜ்ஞகமவாஷ
ஸமஸ வெஷம் தவுகுரவதிர் மியாநம் விரமது ஜீயாஸ ॥ 1.

யஸ்ய ப்ரஜாவந வியா ஜவ வீக்ஷமாணோ தெவமாஷமதி
ஸவிதா நிவிடூஷவி ஷெஷ - யஷாரதீஜநமணேஷா ஜயா
ஜந்யவிஷ்ம் தவுகுரவதிர் மியாநம் விரமது ஜீயாஸ ॥ 2.

மாதெந்ய மயஹீவதிஷிராத மஹாஹிஷெக ஸவதி ஶா
ஷிநி வாரெ கிஷ ஸஷிநாஜ் - மீயரா ஹிஷெகமஹமஷ்ய ஸம
ஸ்ரீதெ யாஃ தவுகுரவதிர் மியாநம் விரமது ஜீயாஸ ॥ 3.

டீஷம் வஷம் நிஜமவாஸ்ய மாரொ நியெமாஷ்யா ஸாவி
ராஜ்யஸநம் வரிவிஷ்ய நமநம் - யொமாரிவ ஷமகாம் வரி
தம் ஸிஷெவெ தம் நாவிகம் நரவதிம் பஸா ஸாவயாமீ ॥ 4.

தஸ்ய நாரபுவமாணரீஷவயஃப்ரஸாவெ ஷாஸ்ய்ாம
ஷியாம் காமாஷிநீரிவ ரீதஸா நோஃ - வெரமா ப்ரஜாவஸா
கராணாமிவ மீதிஜநாஷாம் ராஜ்ஞீம் ஸஜெம ஸாவிராய
வ செளரி ஸம்ஜ்ஞாம் ॥ 5.



யஸீக்ஷணம் ஸபூர்தவஷந்நிமம் ப்ரஜாநாம் யதாஜ்ஸீ
ஸாரதீவ ஶஸ்யஜாதீ - யத்ராஉவம்கஜநிவீயிதமஹிர
த்ராஃ ஸாவா வஸம்தி நிதராம் க்ருதக்ருத்யபாவம் ॥ 6.

யாதீ தயாவ ஸாதாரவாமிதெயம் ஸாவெஃ
கொரா வரிதெஃ வரிவிஸவாவர - ஸம்ப்ராவ்ய யக்ஷ
ஸெளாரஸயாம்ஸநாநி வாதாம் ஸமய்யதி தெநஜக
நம் ப்ரமொதாஸ ॥ 7.

தஸெஷ ப்ரஜாஸித நிவிஷ்ட யிஷெ நிதாஸம் தீநாநகம்
வந வியாஸா விசக்ஷணாய - ஸ்ரீ சக்ரவதிர் மியாநாய ஸாதீ
வந்மயாரா ரொமஷ்மந்ஜவி ஶமந் ஸாஶிஃ ஸஷெயாஸ ॥ 8.

மயிலாப்பூர், கார்த்திகைமீ 27வ. } டி. ராஜகோபாலாசாரியர்.

---

## ஸ்ரீ அஹோபிலம் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் சொத்து ஸம்பத்தங்களான சில ரிக்கார்டுகள்.

### ஓபளாபுரம்.

1899-வது வருஷம் நவம்பர்மீ 29-ல் யாடகியில் ஸ்ரீ அஹோபிலம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமியார் டிரஸ்டியாரான ஏஜெண்டு ராஜகோபாலா சாரியர் முன்னிலையிலும், யாடகி ஸப்மாஜிஸ்ட்ரேட் வாஸுதேவராவ் முன்னிலையிலும், தாடவர்த்தி போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமசந்திராசாரியர் முன்னிலையிலும், தருணபாபல்லே திருமலரெட்டி, அஹோபிலம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமியாருடைய ஸர்வமான்யமாகிய ஓபளாபுரம் குடியானவர்களில் முக்கியர்களான சிலபேர் எழுதிவைத்த கைபீயது.

(i) ஷை ஓபளாபுரம் கிராமமானது பூர்வம் இந்தத்தேசங்களை ஆண்ட தேசப்ரபுக்கள் ஸ்ரீ அஹோபிலம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமியார்க்கு நித்யப்படித்தன தளிகை தீபாராதந வகைரா செலவுகளுக்காகக் கொடுக்கப்பட்டது என்கிற விஷயம், இதுவரையில் எங்கள் எல்லோர்க்கும் நன்றாய்த்தெரியும்.

(2) ஷை ஸ்ரீ அஹோபிலம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்வாமியின் தேவஸ்தானம் ஆதீன மிராசு தர்மகர்த்ருத்வம் ஸ்ரீ அஹோபிலம் ஸ்வாமியாராகிய ஸ்ரீ ஶடகோபஸ்வாமிகளது என்கிற சங்கதியும் தெரியும்.

(3) ஷை ஓபளாபுரம் கிராமத்தையும் குண்டாலகிராமத்தையும் இன்னுஞ்சில கிராமங்களில் மானியம் வகைராக்களையும் ப்ரக்ருதம் ஓபளாபுரத்தில் இருக்கும் உக்களம் மங்கபதி ஆசாரியர் சேஷாசாரியர் அநுபவித்துக்கொண்டு ஸ்ரீ ஸந்நிதிக்கு ஷை ரொக்கத்தைச் செலுத்திவருவதாக எங்களுடன் இதுவரைக்கும் அவர் சொல்லிக்கொண்டுவந்ததும், ஷை ஶடகோபமடத்தார் தம்மை இவ்விடத்திற்கு விசாரணைக் கர்த்தாவாக நியமித்திருக்கிறார் என்று அவர் சொல்லிக்கொண்டு வந்ததும் ஆகிய அவர்வார்த்தைகளை நம்பி அவரிடம் ஸந்நிதிக்கு இந்தக் கிராமத்திலிருந்து அடையத்தக்க ரொக்கத்தைச் செலுத்தி வருகிறோம். இப்பொழுது, ஷை அஹோபில மடாதிபதியான ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ரமஹாதேசிகன், திருப்பதி சேட்லூர் ராஜகோபாலாசாரியரை ஏஜெண்டாக நியமித்தருளியிருக்கிறார். இவரும் எழுதிக்கொடுத்து ரிஜிஸ்டர்செய்து வைத்துக் கொடுத்தபடியாலும், குத்திதாலூகா தாசில்தாரும், குத்தி டிப்டிகலெக்டரும் இவரை மடம் ஏஜெண்டென்று இவருக்கு எழுதிய உத்தரவு வகைராக்களைக் காண்பித்தபடியாலும், இவர் ஏஜெண்டேதவிர, ஷை மங்கபதி ஆசாரியராகிய சேஷாசாரியருக்கும் ஷை மடத்திற்கும் எவ்வித ஸம்பந்தமும் இல்லையென்றும், இதுவும் தவிர ஷை கிராமங்களை அக்கிரமமாய் இதுவரையில் எத்தனை வருஷங்கள் அநுபவித்திருந்தபோதிலும் இந்தத் தர்மத்துக்காக விடப்பட்ட கிராமங்களாகையால் இவற்றை வசப்படுத்திக்கொள்வதற்குக் காலதோஷம் வகைராக்கள் எவையும் இல்லை யென்று தீர்மானவகைராக்கள் ஏஜெண்டால் கேட்டிருப்பதாலும், இனி குண்டால கிராமத்தில் இருக்கும் குடியானவர்களாகிய நாங்கள் பெரிய நன்செய் சிறியநன்செய்வகைராக்களை ஒப்புக்கொண்டிருக்கிற பிரகாரம் நாங்களும் எங்கள் கிராமத்திலிருக்கும் குடிகளும் அநுபவிக்கிற பூமிகளுக்கு நீங்கள் தயார்செய்து கொடுக்கிற பட்டாக்களைப் பெற்றுக்கொண்டு முச்சலிக்கா எழுதிக்கொடுத்து ரொக்கம் வகைராக்களை உங்களுக்குச் செலுத்தி ரசீது வாங்கிக்கொள்ள இஷ்டப்பட்டிருக்கிறோம் என்று இந்தப் பெரிய மனுஷ்யர் முன்னிலையில் ஒப்புக்கொண்டோம். வாசிக்கும்பொழுதும் இருந்தோம். சரியாயும் இருக்கிறது.

பூசாரி - சுப்பன்னவுக்காக ராமன்ன,
முஸலிரேட்டி கையொப்பம்.
நாகம். ராமன்ன கையொப்பம்.
சந்திராயா கையொப்பம்.
ராமன்ன ஒப்பிதம்.
(Sd.) C. VASUDEVA ROW.
RAMACHANDRIAH.
திருபல்லே - கோன - திருமலரேட்டி ஒப்பிதம்.

ஸ்ரீ:.

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

स्वस्ति श्री [illegible] राजेन्द्रो राजेन्द्रस्य च [illegible] ।
हिताय जगतः श्रीशः स्वांशेन [illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

சென்ற கார்த்திகை மாஸம் 27உ மங்களவாரத்தில், இங்கிலாந்து தேஶத்து ராஜாவாகிய ஐந்தாவது ஜார்ஜுக்கு, நமது தேஶமாகிற பாரத கண்டத்தில் பஹுகாலமாக ப்ரஸித்தியை அடைந்திருக்கும் டில்லி யென்னும் பட்டணத்தில், நமது தேஶத்துச் சக்ரவர்த்தியாக மூர்த்தாபிஷேக மஹோத்ஸவம் நடந்தது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. இவ்விதமாக இவ்விட

ஐந்தாவது ஜார்ஜின் பட்டாபிஷேகம்.

த்தில் வந்து அவர் பட்டாபிஷேகத்தை நடத்திக்கொள்ள வேணுமென்பது இந்தத் தேஶவாஸிகளான ஸகல ஜனங்களுடைய கோரிக்கை. இந்த விருப்பத்தைப் பூர்த்திசெய்யாம லிருப்பது அநுசிதமென்றும், அப்படிப் பூர்த்திசெய்வதில் எவ்விதமான ஶ்ரமம் தமக்கு நேர்ந்தாலும் அதைப் பாராட்டாம லிருப்பதே தமது தர்மமென்றும் த்ருடமாக உணர்ந்து அவர் அநேக ஆயிரம் மைல்கள் விஸ்தீர்ணமுள்ள ஸமுத்ரத்தைத் தாண்டி இங்கு வந்து நம்முடைய இஷ்ட பூர்த்தியைச் செய்தது, ப்ரஜைகளாகிற நம்மிடத்தில் அவர் வைத்திருக்கும் அளவற்ற ப்ரீதியை நன்கு விளக்குகின்றது. நம்முடைய ஸந்தோஷத்தை இம்மாதிரியாகக் கவனிக்கும் அவரிடத்தில் நாம் எப்படி விஶ்வஸிக்காம லிருப்பது ஸாத்யம்?

விஶ்வாஸமென்பது - ஹ்ருதயத்தின் ஓர் பாவம். ஸூர்யனைக்கண்டால் தாமரைப்புஷ்பம் மலர்வதுபோல; நம்மை நேசிக்கும் ஒருவருடைய ஸாந்நித்யத்தில் நம்முடைய ஹ்ருதயம் மகிழ்ந்து மலரும். நம்மைக் கொஞ்சமேனும் ஆதரிக்காமல் மஹத்தான ஔதாஸீந்யத்தை வஹிக்கும் ஒருவரிடம் நாம் ப்ரீதிவைப்பதென்பது மநுஷ்ய தர்மத்துக்கு விருத்தமே. ஈஶ்வரன் விஷயத்திலும் நாம் அவ்வளவு ஆவலுடன் அவனை நாடுவதற்குக் காரணம் முழுவதும் நம்மிடத்தில் அவன் வைத்திருக்கும் வாத்ஸல்யமே. நமக்கு நேரும் துக்கங்களைப் பொறுக்காமல் அவைகளை நிவ்ருத்தி செய்யும் உபாயங்களைத் தேடுவதையே முக்கியமான நோக்கமாக வைத்திருக்கும் அந்த ஈஶ்வரனுடைய கல்யாண குணங்களே நமக்கு ஆகர்ஷகங்களாகின்றன. அம்மாதிரியான குணங்கள் எங்கு எங்கு இருக்கின்றனவோ அங்கங்கு நாம் ப்ரீதி பூர்வகமாக நாடுவது நமக்கு ஸஹஜம்.

ராஜா கொடுத்த வரங்கள்.

இந்த மஹாராஜனிடத்தில் அம்மாதிரியான குணாவிர்பாவமிருக்கின்றது என்பதற்கு அநேக ஹேதுக்களுண்டு. முற் கூறியபடி நம்முடைய கோரிக்கைக்கு இணங்கி இந்தப் பட்டாபிஷேகத்தைச் செய்துகொள்ள அவர் இவ்வளவு தூரம் வந்ததே ஓர் முக்கிய



ஹேது. இவர் யுவராஜனாக இருந்த காலத்திலேயே நமது தேஶத்தைப் பார்க்கவேணுமென்கிற ஓர் ஆவலும், இந்தியர்களாகிய நம்முடன் பரிசயத்தைச் செய்துகொள்வதில் ஓர் ஆஸக்தியுங் கொண்டவராக இருந்தார். முந்தி இவர் இந்தத் தேஶத்துக்கு வந்தபொழுது இவருடைய மனக்கூறுகளைத் தெரிந்துகொள்ள அவகாஶங்களை உடைத்தாயிருந்த அநேகர்கள் இவருக்கு நம்மிடத்தில் விலக்ஷணமான ஓர் விஶ்வாஸமிருக்கின்றது என்பதை வெளியிட்டிருக்கிறார்கள். இப்பொழுது ஸர்வ ப்ரத்யக்ஷமாக அந்த விஶ்வாஸத்தை, தாம் பட்டாபிஷேகம் செய்துகொண்டதற்கு அடையாளமாக, இவரே நேரில் அளித்த வரன்களினால் ப்ரகாஶிப்பித்திருக்கிறார். கைதிகளை விடுதலைசெய்வது, வ்யபதிஷ்டர்களாக இருக்கும் அநேக ஜனங்களுக்குப் பட்டங்களைக் கொடுப்பது முதலான ஸாமாந்ய வரங்களை ஏராளமாகக் கொடுத்ததுடன், விஶேஷித்துப் பாலர்களின் வித்யாப்யாஸாபிவ்ருத்திக்காக ஐம்பது லக்ஷம் ரூபாய் கொடுத்ததும், நமது தேஶத்துப் பாஷைகளில் ப்ராவீண்யத்தை ஸம்பாதித்திருக்கும் வித்வான்களுக்கு ஸம்பாவனாரூபமாக வார்ஷிகமான சில ஸம்மானங்களை ஏற்பாடு செய்ததும், சில ராஜதானிகளுக்குக் கவர்னர்கள் ஏற்படுத்தினதுமான சிறந்த சில அநுகூலங்களை நம்முடைய நன்மையைக் கருதியே இவர் மஹத்தான ஔதார்யத்துடன் செய்திருக்கிறார். ஶ்லாக்யமான இவைகளெல்லாவற்றையும் ஜனங்கள் அல்பமென்று எண்ணும்படியாகவும், ந்யாய்யமான மார்க்கத்தில் தமக்கு இருக்கும் நோக்கத்தை எல்லாருக்கும் ஸ்புடமாகத் தெரியும்படியாகவும் இவர் மற்றும் ஒரு அநுகூலம் செய்திருப்பதை நாம் விஶேஷித்துக் கவனிக்கவேணும். வரனென்று இந்த அநுகூலத்தை நாம் த்ருடமாகச் சொல்லலாம்.

பங்காளத்தை ஒன்று செய்தது.

நமது தேஶத்தில் கங்காதீரத்தில் பங்காளமென்று ஒரு ராஜதானி உண்டு. அதில் முக்கியமாகப் பங்காளிகள் என்று சொல்லப்படும் ஹிந்துஸ்தானி பாஷை பேசும் இந்தியர்கள் வஸிக்கிறார்கள். இங்கிலீஷ்காரர்கள் ராஜ்யம் ஆரம்பித்தது முதல் அந்த ராஜதானி முழுவ

னும், நமது சென்னைராஜதானிபோலவே ஒன்றாக இருந்தும் ஒரு கவர்னர் பரிபாலநத்துக்கு உள்பட்டும் இருந்து வந்தது. கொஞ்ச காலத்துக்கு முன் ராஜப்ரதிநிதியாக 'கர்ஸந்' என்னும் ப்ரபு இந்தத் தேசத்தின் ராஜ்ய பாரத்தை வஹித்து வந்த காலத்தில், ஏதோ சில காரணங்களை மனத்தில் வைத்துக்கொண்டு அந்த ராஜதானியை இரண்டாகப் பிரித்து, கீழ்ப்பாகத்துக்கு ஒரு கவர்ண்மெண்டையும், கல்கத்தாவை முக்கிய பட்டணமாக வுடைய மற்றொரு பாகத்துக்கு மற்றொரு கவர்ண்மெண்டையும் அந்த ப்ரபு ஏற்பாடு செய்தார். இப்படிச் செய்ததில், அந்தராஜதானியில் வஸித்திருந்த பங்காளிகள் ஒருவருக்கும் அபிமதமில்லை. இந்த விபாகத்தால் தங்களுக்குப் பெருத்த தீங்கு உண்டாகுமென்று அவர்கள் பயந்தார்கள். தங்களுக்கு பஹுகாலமாக இருக்கும் பெருமையைக் குறைக்கவேணுமென்று எண்ணியே இந்த ப்ரபு இம்மாதிரியான கார்யத்தைச் செய்துவிட்டாரென்கிற எண்ணமும் அவர்களுக்கு உண்டு. அவர்களுள் அத்யந்தம் வ்யபதிஷ்டர்களாகவும் ராஜாங்கத்தால் பஹுமதிக்கப் பட்டவர்களாகவுமிருந்த அநேகர் மிகுந்த மர்யாதையுடன் 'இப்படிச் செய்வதுநீதியன்று' என்று அந்த ப்ரபுவுக்குப் பலமுறை அநேக உபபத்திகளைக்கொண்டு விவரித்துச் சொன்னார்கள். பல விடங்களில் அநேக ஸங்கங்கள் இதற்காகச் சேர்ந்து இந்த விபாகத்தை மாற்றிவிட வேணுமென்று முறையிட்டன. ஆபால வ்ருத்தம் அந்தத் தேசத்தில் ஏதோ தங்களுக்குப் பெருத்த ஆபத்து வந்துவிட்டது என்றே எண்ணிற்று. இங்கிலாந்திலிருக்கும் இந்தத் தேசத்திய முக்கிய மந்த்ரியினிடம் தெரிவித்துக் கொண்டதும் தவிர, அநேக பங்காளிகள், இதம்பரமாக இங்கிலாந்துக்குப்போய் அங்கிருக்கும் ஜநங்கள் எல்லாருக்கும் இதன் அநீதியை நன்றாக உணரும்படி எவ்வளவோ ஶ்ரமப்பட்டுப் பலவிடங்களில் பல தடவைகளில் உபந்யாஸமும் செய்தார்கள். என்ன செய்தும் பலன் கிடைக்கவில்லை. மந்த்ரிகளில் சிலர் இது பிசகு என்று உணர்ந்தும் 'நடந்தது நடந்ததுதான்; இனி அதை மாற்ற முடியாது' என்று சொல்லிவிட்டார். பங்காளிகளும், மிகுந்த அத்ருப்தியுடன், செய்



யக் கூடியது வேறு ஒன்றுமில்லாததால் தங்கள் தேசத்தை விபாகிக்கும்படி ராஜாஜ்ஞை பிறந்த தினத்தை ஓர் பெரிய துக்க தினமாகக் கொண்டாடிக்கொண்டு தங்களுக்கு நேர்ந்திருக்கும் தீமையைப் பகவான்தான் நிவ்ருத்தி செய்யவேணுமென்று ஸதா தைவத்தையே ப்ரார்த்தித்து வந்தார்கள். அந்தத் தைவம் நமது சக்ரவர்த்தி மனத்தில் இப்பொழுது ப்ரவேஶித்து பங்காளிகள் பட்டுக் கொண்டிருந்த கஷ்டத்தை நிவ்ருத்தி செய்துவிட்டது. சக்ரவர்த்தி அளித்த வரங்களில் 'பங்காளம் முன்போல ஒரே ராஜதானியாக இருக்கக்கடவது' என்பது ஒன்று; இம்மாதிரியாகச் செய்வது ஸாமாந்ய ஜநங்களால் ஸாத்யமோ? வைஷம்ய நைர்க்ருண்யங்களால் தொடப்படாத ஹ்ருதயமன்றோ இதற்குத் தேவை? சிறிதேனும் பக்ஷபாதம், பிடிவாதம் முதலிய தோஷங்கள் அந்த ஹ்ருதயத்தை ஸ்பர்ஶித்திருக்கும் பக்ஷத்தில் இம்மாதிரியான தர்ம ஸம்ஸ்தாபநம் செய்வதென்பதற்கு ப்ரஸக்தியே நேரிடாது. ஆக்ரஹத்தை விட ந்யாயமே பெரிதென்றும், ப்ரஜைகளின் ஆநுகூல்யத்தைத் தேடுவதே தமது தர்மமென்றும், பஹுஜந இஷ்டத்துக்கு விரோதம் செய்வது தைவத்துக்கு ஸம்மதமாகாது என்றும் எண்ணுகிறவர் நமது சக்ரவர்த்தி யென்பதை விளக்க வேறு என்ன ஹேதுக்கள் வேணும்? இப்படி அந்தரங்கத்திலிருந்து பயப்படுகிற ராஜாவை விஶ்வஸிக்காமல் யாராவது இருந்தானேயானால் அவன் மநுஷ்ய கோஷ்டியிலே சேர்த்தகாதவனென்றே உறுதியாக நாம் சொல்லலாம். இவ்விதமாக ந்யாயமான மார்க்கத்திலேயே நடந்துகொண்டு ஸகல ப்ரஜைகளுக்கும் எப்பொழுதும் க்ஷேமத்தைச் செய்யும்படி த்ருடமான ஸத்புத்தியையும் தீர்க்காயுஸ்ஸையும் நல்ல ஆரோக்யத்தையும் இந்த நமது சக்ரவர்த்திக்குப் பகவாந் கொடுத்து அநுக்ரஹிக்க வேண்டுமென்று நாம் நிரம்பவும் ப்ரார்த்திக்கிறோம்.

---

ஸ்ரீ ஸபையின் இரண்டாவது மஹா ஸங்கம்.

இந்த டிஸம்பர் மாஸம் 28, 29, 30 தேதிகளில் சிதம்பரத்தில் ஸ்ரீ ஶிஷ்யஸபையாரது இரண்டாவது வருஷாந்தச் சங்கம் நடைபெற்றுவரும். திருக்குடந்தை காலேஜ் பண்டிதராக இருந்து பஹு காலம் அதில் வாசித்த வித்யார்த்திகளுக்கு

ஸம்ஸ்க்ருத பாஷையை உபதேசித்துக் கொண்டும், தமது ஆர்ஜவ ஸ்வபாவத்தாலும் ஸுத்த சரித்ரத்தாலும் தம்மிடம் அணுகின எல்லாருக்கும் ஓர் விசேஷித்த நன்னடத்தையை உண்டுபண்ணிக்கொண்டும் அத்யந்தம் பாப பீருவாக எழுந்தருளியிருக்கும் மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ. உஸ பெருகவாழ்ந்தான் வித்வான் ரங்காசாரியர் ஸ்வாமி இந்த ஸபையின் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்து வருவார். சிறந்த வித்வத் ரத்நங்களும் உபந்யாஸங்களைச் செய்யப் போவதாகத் தெரியவருகிறது. இம்மாதிரியான ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியைத் தண்டன் ஸமர்ப்பித்துக்கொள்வதே பெருத்த ஓர் ஸுக்ருத விசேஷத்தின் பலமாக இருக்கவேணும். இந்தப் பாக்யத்தை எல்லாருக்கும் ஸம்பாதித்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த ஸபையார் செய்யும் ப்ரயத்நத்துக்கு யாதொரு விக்நமும் வராமல் பகவாந் நிஷ்பத்தியை ஸம்பாதித்து வைக்க வேணுமென்று ஸதா ப்ரார்த்தித்து வருகிறோம்.

---

**ஸ்ரீ அஹோபிலம் ந்ருஸிம்ஹனுடைய சொத்துக்கள்.**

சென்ற ஸஞ்சிகையில், ஸ்ரீ அஹோபிலம் லக்ஷ்மீந்ருஸிம்ஹனைச் சேர்ந்த சொத்துக்களிற் சில ஸரியாகப் பரிபாலநஞ் செய்யப்படாம லிருப்பதைப் பற்றி எழுதியிருந்தோம். ஓபளாபுரம் என்னும் க்ராமத்தில் நிலத்தை அநுபவித்துவரும்ஜநங்களிற் சில முக்கியமானவர் அந்த க்ராமஸம்பந்தமாக ஸ்ரீ ஸந்நிதிக்கு இருக்கும் ஸ்வாம்பத்தை ரிக்கார்டு மூலமாக ஒத்துக்கொண்டதாகவும், அப்படி ரிக்கார்டு இருக்கையிலும் அந்த க்ராமத்தை ஸ்வாதீநஞ் செய்துகொள்ள ஸ்ரீ ஸந்நிதியைப் பராமர்சித்துவரும் ஒருவரும் எவ்விதமான ப்ரயத்நமுஞ் செய்யவில்லையென்றும் எழுதியிருந்தோம். அந்த ரிக்கார்டு இந்த ஸஞ்சிகையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மற்றொரு பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது. 'பெருத்த வருமானத்தைக் கொடுக்கக்கூடிய குண்டாலா க்ராமத்திலுள்ள ஈச்சஞ் செடிகள் கோர்ட்டு ஜப்தியில் 13 - வருஷகாலமாக இருக்கின்றன என்று எழுதி



யிருந்தோமே; அதன் விவரத்தைச் சற்றுப் பார்ப்போம். அந்த க்ராமம் ஸ்ரீ அஹோபிலம் லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்காக விடப்பட்டது என்பது ரிக்கார்டு மூலமாக ஏற்படுகிறது. குத்தகை ஒப்புக்கொண்ட வழியிலோ வேறு எவ்விதத்தாலோ அந்த ஈச்சஞ் செடிகள் அந்த க்ராம வாஸிகளான சிலருடைய அநுபவத்தில் கொஞ்சகாலமாக இருந்து வந்தன. 1898 - ம் வருஷத்தில் அந்தச் செடிகளின் அநுபவத்தைப்பற்றி இடிகா ராமப்பா என்னும் ஒருவருக்கும் சேஷாசார்லு மங்கபதிசார்லு முதலிய சிலருக்கும் ஓர் விவாதம் ஏற்பட்டுக் கலஹம் நேரிடும்போ லிருந்த படியால், குத்தி போலீஸ் இன்ஸ்பெக்டர் அவ்விடத்திய டிபுடி மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்த ஸமாசாரத்தைத் தெரிவிக்க, க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 145 - வது ஸெக்ஷன்படி, அந்த மாஜிஸ்ட்ரேட் இரண்டுகக்ஷிக்காரர்களையும் தமது கோர்ட்டில் ஆஜர் ஆகும்படியாகவும், தங்கள் தங்கள் பாத்யத்தை ஸப்ரமாணமாக ஸ்தாபித்துக்கொள்ளும்படியாகவும் உத்தரவு செய்தார். அந்தக் காலத்தில் ஸ்ரீ அஹோபில மடமும் இதில் ஸம்பந்தப்பட்டது என்று அந்த மாஜிஸ்ட்ரேட் தெரிந்துகொண்டு அப்பொழுது அவ்விடத்தில் ஸ்ரீ மடத்துக்கு ஏஜெண்டாக இருந்த ஸ்ரீ. நல்லான் சக்ரவர்த்தி—கோபாலாசாரியருக்கும் ஷை உத்தரவின் நகல் ஒன்றை அனுப்பினர். அந்த உத்தரவுக்கு இணங்கி எல்லாரும் எழுத்துமூலமாகத் தங்கள் தங்கள் பாத்யத்தைப்பற்றித் தாங்கள் தாங்கள் சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொண்டார்கள். ஸ்ரீ. கோபாலாசார்யரும் ஏதோ சொல்லிக்கொண்டதாகத் தெரியவருகிறது. இவை யெல்லாவற்றையும் பரிசோதித்தும் அவரவர்கள் சித்தஞ்செய்த ஸாக்ஷிகளை விசாரித்தும் அந்த வருஷம் நவம்பர்மீ 8உ யில் அந்த மாஜிஸ்ட்ரேட் ப்ரக்ருத ஸர்க்கார் ஜப்தி ஸம்பந்தமான உத்தரவைச் செய்திருக்கிறார். அந்த உத்தரவாவது -'ஸாக்ஷ்யமொன்றும் ஒருவருடைய பாத்யத்தையும் நிராக்ஷேபமாக ஸ்தாபிக்கவில்லை; ஸிவில் கோர்ட்டுகளில் இந்தச் சொத்து இன்னாருக்குச் சொந்தமென்று நிர்ணயம் செய்யப்படும்வரையில் 146 - வது ஸெக்ஷன்படி ஸர்க்கார் ஜப்தியில் வைக்கப்படவேண்டும்' என்பதுதான். ஸ்ரீ மடத்து ஏஜெண்டு செ

ய்துகொண்ட மனுவைப்பற்றி, '1882-ம் வருஷம் முதல் இந்தச் சொத்து அவருடைய அநுபவத்திலில்லையென்று ஏற்படுகிறபடியால், அவருடைய பாத்யத்தைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லக்கூடியதில்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஸாக்ஷ்யமாகச் சித்தஞ்செய்யப்பட்ட ரிக்கார்டுகளிலிருந்து, குண்டாலா க்ராமம் ஸ்ரீ அஹோபிலம் நரஸிம்ஹஸ்வாமி பெயரால் 1862-ம் வருஷத்தில் ஹிஸ்ஸா ஶ்ரோத்ரியமாக உறுதி செய்யப்பட்டிருக்கிறதென்று தாம் தெரிந்துகொண்டதாக மாஜிஸ்ட்ரேட் எழுதியிருக்கிறார். இவையெல்லாவற்றையும் பார்க்கும்பொழுது அந்த க்ராமம் ஸ்ரீ மடத்தைச் சேர்ந்தது என்பதில் ஸந்தேஹமில்லையென்றும், ஸரியான பரிபாலநம் செய்யாமல் அநேக வருஷ காலமாக் கைதவறிப் போய்விட்டது என்றும், பிறகு ஒரு காலத்திலாவது தவறின அந்தச் சொத்தைத் திரும்பி அடைய ஒருவிதமான ப்ரய்த்நமும் ஸ்ரீ மடத்தாற் செய்யப்படவில்லையென்றும் வ்யக்தமாகிறது. 'இந்த மாதிரி இன்னும் எவ்வளவு சொத்துக்கள் அந்யாக்ராந்தமாகப் போயிருக்கின்றனவோ?' என்கிற ஶங்கை இந்த ஸ்திதியை உணரும் எல்லாருடைய மநஸ்ஸிலும் உண்டாகும். தகுந்த மானேஜர் ஒருவர் இருந்திருந்தால் இவ்விதமான நஷ்டம் ஏற்பட்டிருக்குமா? இதை ஸ்ரீ அழகியசிங்கர் பர்யாலோசித்து இது ஸம்பந்தமாக நாம் செய்யும் விஜ்ஞாபநத்தை அங்கீகரித்து இப்பொழுதாவது தகுந்த வ்யவஸ்தை செய்யத் திருவுள்ளம்பற்றுவரென்று ப்ரத்யாஶையுடன் இதை எழுதத் துணிந்தோம்.

---

# ஸ்ரீ அகோபில மட சிஷ்ய சபை.

ஸ்ரீ அஹோபில மடத்து ஸம்ப்ரதாயம் அபிவ்ருத்தமாகும்பொருட்டும், அதுமூலமாக ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்யும்பொருட்டும், ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை என்னும் ஓர் ஸபை சென்ற ஸாதாரண௵ சித்திரைமீ முதல் ஏற்பட்டு நடந்து வருகின்றது. அதைப் பற்றிய சில விதிகள் கீழே சொல்லப்பட்டிருக்கின்றன :—

1. மடத்தின் சிஷ்யர்கள் எல்லாரும் இதிற் கூறப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கத்தாராகச் சேரலாம்.

2. சபையின் அங்கத்தாராகச் சேர விருப்ப முள்ளவர்கள் விதிகளில் காட்டியிருக்கிற மாதிரிப்படி மனுச் செய்து கொள்ள வேணும். மனுதாரர், அந்த மனுவைத் தாம் வசிக்கும் பிரிவின் காரியதரிசிக்கு ஒரு வருஷக் கட்டணத்தொகையுடன் அனுப்பவேண்டும்.

3. முதல் வகுப்பு அங்கத்தாராகச் சேர்வதற்கு ஒரு வருஷச் சந்தா ரூபாய் 5. இரண்டாவது வகுப்பு அங்கத்தாராக ஒரு வருஷச் சந்தா ரூ. 1.

4. அங்கத்தார்களில் யாராவது எப்பொழுதாவது ஒரே தடவையில் மொத்தமாய் ரூபாய் 50 அல்லது ரூபாய் 10 கட்டிவிட்டால், அவர்கள் ஜீவதசை வரையில் முறையே 1-வது அல்லது 2-வது அங்கத்தாராக ஏற்படுத்தப்படுவார்கள். அவர்கள் பிறகு வருஷச்சந்தாத் தொகை கட்டவேண்டியதில்லை.

5. கீழே சொன்ன 1-வது விதியின்படி அங்கத்தினராக வரக்கூடாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாராயிருந்தாலும் வருஷம் சந்தாவாக ரூபாய் 8 செலுத்தி விட்டால், அவர்கள் அபிமானிகளாக (Associates) நியமிக்கப்படுவார்கள். சபையில் அபிப்ராயம் கொடுக்கவும், வேறுவேலைகளில் மாறவும், கார்யநிர்வாக சங்கத்தின் அங்கத்தாராக இருக்கவும் இவர்களுக்கு அதிகாரமில்லை.

6. கீழே காட்டிய விதியின்படி சபையிற் சேரத்தக்கவர்கள் தங்களைச் சேர்த்துக் கொள்ளும்படி சபையின் பொதுக்காரியதரிசிக்கு நேராக மனு அனுப்பிக்கொள்ளலாம்.

7. ஒரு வருஷத்திற்குள் எப்பொழுதாவது அங்கத்தார்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம். ஆனால், முழு வருஷச் சந்தாத்தொகையைக் கட்டிவிடவேண்டும்.

8. ஒவ்வொரு வருஷத்திலும் அக்டோபர்மீ முதல்தேதிமுதல் அடுத்த செப்டம்பர்மீ 30உ முடிவு வரையிலுள்ள காலமே, சபையின் வருஷம்.

இன்னும் சபையின் மற்ற விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற விருப்பமுள்ளவர்கள், சபையின் பொதுக்காரியதரிசியாகிய சித்தூர், வக்கீல் ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் அகப்படும் புஸ்தகங்கள்.

1. "ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்."—ஸ்ரீ வித்வான் இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன் ... 0 4 0
2. "த்ராவிட வேத தாத்பர்யம்."—ஸ்ரீ எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் இயற்றப்பட்டது (தமிழ்) ... ... 0 4 0
3. "ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்."—ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம் ... ... ... ... 0 3 0

வேண்டுமவர்கள் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கேஶவப் பெருமாள் ஸந்நிதித்தெருவு 11-நெ. க்ருஹத்தில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஸ்ரீ:

## [illegible]

### [illegible]

இப்போது நூதனமாக பெருகவாழ்ந்தான் ஸ்ரீ. உ.வே. வித்வான் க்ருஷ்ணமாசார்யரால் இயற்றப்பட்டு கும்பகோணம் ஶாரதா விலாஸ அச்சுக்கூடத்தில் அச்சுப்பதிப்பிக்கப்பட்டிருக்கிற இந்த க்ரந்தம் ஸரளமான பதங்கள் அடங்கினதென்றும், வித்யார்த்திகளுக்கு லகுவாக பாஷா ஜ்ஞாநத்தை உண்டுபண்ணக்கூடியதென்றும் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 4. வேண்டுமவர்கள், தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி கோபால ஸமுத்ரத்தெருவில் இருக்கும் பெருகவாழ்ந்தான் வித்வான் க்ருஷ்ணமாசார்யருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---


# பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழ்கண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. |
|---|---|---|---|---|
| 5 | ,, | 2½ | ,, | 6 முதல் 8 வரை |
| 5 | ,, | 3 | ,, | 7 ,, 9 ,, |
| 6 | ,, | 2½ | ,, | 8 ,, 9 ,, |
| 6 | ,, | 3 | ,, | 9 ,, 12 ,, |
| 7 | ,, | 3 | ,, | 10 ,, 13 ,, |
| 8 | ,, | 3 | ,, | 12 ,, 15 ,, |
| 9 | ,, | 3 | ,, | 14 ,, 16 ,, |
| 10-12 | ,, | 3 | ,, | 15 ,, 20 ,, |
| 15-16-18 | ,, | 2½-3, சேலைகள் | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஸாதா, நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

### பீதாம்பர பட்டுச்சேலைகள்.

16 முழம் நீளம் 2½-அகலம் விளிம்பு முந்தி ஜரிகை பூவேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். நயம் சேலை 1-க்கு ரூ. 30 முதல் 200 வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30 வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ 35 முதல் 301 வரை. மட்டம் ரூ. 25 முதல் 30 வரை.

### ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகைபூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ. 2 முதல் ரூ. 15 வரை கிடைக்கும்.

### பட்டுதுப்பட்டாக்கள்.

6 முதல் நீளம் 2½ முதல் அகலம்; விளிம்பு முந்தி ஜரிகைவேலைகளும் உடலில் ஜரிகைபூக்கள்போட்டது. மட்டம் ரூ. 7 முதல் 15 வரை. நயம் 15 முதல் 50 வரை.

### காஷ்மீர் சால்வைகள்.

கம்பிளி (Woolen) காஷ்மீர் சால்வைகள் 6 முழம் நீளம், 2½-அகலம். விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் மூலையில் மாங்காய் போட்டது. மட்டம் ரூ. 9 முதல் 15 வரை. நயம் 15 முதல் 100 வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்:—மனேஜர்

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

வேதுகயம்! வேதுககம்!!

நாகரிக மெடிகல் ஹால் மயிலாப்பூர்.

மதராஸ்.

ஆயுர்வேத பூஷணம்.
பண்டிட். U. ராமநாதசாஸ்திரி.
அழகான கலரும் அளவிலாத ருசியும்
அடங்காதவாஸனையும் கூடிய சில மருந்துகள்.

(1) ஆனந்தப் பற்பொடி.

பற்பொடிக்கு வேண்டிய எல்லாக்குணமும் இதில் குடிகொண்டு இருப்பதால், இதனால் உண்டாகும் ஆச்சரியகரமான சுகத்தை அளவிட முடியாது. தந்தத்தில் உண்டான ஈறு, ரத்தம் வருதல், சொத்தை, ஆட்டம், நாற்றம் முதலான எல்லா விகாரங்களும் பறந்தோடும். பல்தேய்த்த வுடனே பற்களைச் சங்கம்போல் வெளுக்கக்காணலாம். பல்தேய்த்தபிறகுகூட வெகுநேரம்வரை யில் வாய்க்குள் சுகந்தமானவாசனை வீசிக்கொண்டே இருக்கும். இதற்கு மகாகனவான்களான அநேகம் ஜட்ஜிகள் முதலான பிரபுக்களால் அபாரமான ஸர்டிபிகேட்டுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வளவு ப்ரஸித்தி பெற்ற இதற்கு விலையும் ரொம்பவும் ஸ்வல்பம்.

டப்பி 1-க்கு ரூபா. 0—2—6.
டஜன் 1-க்கு ரூபா. 1—8—0.

(2). சிரேஷ்டமான ஸிரப்புகள்.

ரோஜாபுஷ்பம் - ஆரஞ்சுபழம் - எலுமிச்சம்பழம் - பாதம் கொட்டை, பேயன் வாழைப்பழம் முதலான ஷர்பத்துக்கள் எக்காலத்திலும் கெடாமல் இருக்கும்படி கையினால் தொடாமல் யந்திரத்தினால் செய்யப்படுகின்றன. இதைப் பார்த்த வுடனே வாஸனையாலும், ருசியாலும், அந்தந்த வஸ்துவின் ஸ்வரூபத்தை அந்தந்தப்படி பரீக்ஷித்துக்கொள்ளலாம். இது, தாதுபுஷ்டிக்கு வெயிற்காலத்திலும் மழைக்காலத்திலும் காலபேதம் இராமல் பனிக்காக உபயோகிக்கக் கூடியது. இவைகளின் ருசியும் குணமும் அநந்தம். எல்லா ஸிரப்புகளுக்கும் விலை ஒன்றுதான்.

¼-வீசை கொண்ட சீசா 1-க்கு ரூபா. 1—0—0.

அநேக பேபர்களிலும் விளம்பரம் இருப்பதால், ஆர்டர் கடிதத்தில் இந்தப் பத்திரிகையைக் குறித்துக்காட்டி எழுதவேண்டும்.

சாஸ்திரீயமான எந்த ஔஷதமும் ஷை மருந்துஷாப்பில் விற்பனைக்குத் தயாராக இருக்கும். இவைகளுக்கு V. P. பிரத்தியேகம்.

ஸ்ரீ:.
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 1.] விரோதிக்ருத்ஸு தைமீ. [ஸஞ்சிகை 12.

## ஆர்ய ஸஞ்ஜீவநம்.

(தொடர்ச்சி.)

இவைகளில் தத்வஜ்ஞாந மென்பது அதிதுர்லபம். ஐகமத்யமும் உத்யோகமும் ஶ்ரமஸாத்யமா யிருந்தாலும், துர்லப மென்று வ்யவஹரிக்கத் தக்கவையல்ல. தத்வஜ்ஞாநம், பரம்பரா ப்ராப்த ஸம்ஸ்காரம் ஜந்மாந்தர ஸுக்ருதம் ஸதாசார்யாநுக்ரஹம் இவைகள் முதலான பலஹேதுக்கள் சேர்ந்து ஸம்பவிக்கத்தக்கது; ஐகமத்யமும் உத்யோகமும் நம்முடைய தாத்காலிகமான த்ருடாபிஸந்தியால் ஸாதிக்கக்கூடியன. தத்வஜ்ஞாநமில்லாமல் மீதி இரண்டு குணங்கள்மாத்திரம் பொருந்தியிருப்பது, ப்ராணயோக மில்லாத ஶரீரத்தின் அங்கஸௌஷ்டவத்துக்கு ஒப்பாகும். இதற்குத் திருஷ்டாந்தமாக, இக்காலத்திலுள்ள அந்ய தேஶத்தினர் அநேகர் ஐகமத்யத்திலும் உத்யோகத்திலும் வெகு சிறந்தவராயிருந்தும் தத்வதர்ஶந மில்லாததனால் தங்களுடைய ஶக்தி முழுவதையும் அர்த்தமாகிற ம்ருக த்ருஷ்ணையைக் கைப்பற்றுவதிலேயே செலவழித்து அதையே பரமபுருஷார்த்தமாக நம்பி மேன்மேலும் து:கத்தையே வ்ருத்திசெய்து கொள்வதை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். இவர்களில் அநேக புத்திமான்களுக்கு நிஜாநுபவத்தினாலும் யுக்தியினாலும் அர்த்தம் பரம புருஷார்த்த மன்றென்று ஏற்பட்டிருந்தபோதிலும் முன்னே

சொன்னபடி பரம்பராப்ராப்த ஸம்ஸ்காரம், ஸதாசார்யாநுக்ரஹம் முதலான ஸாமக்ரீ ஸம்பத்தி யில்லாமையால் பரமபுருஷார்த்தத்தின் ஸ்வரூபம் இன்னதென்று விசதமாக அறியும் ஜ்ஞாநமு மில்லை; அதை ஸாதிப்பதற்கு உபாயம் இன்ன திக்கிலிருக்கிறதென்றும் ஏற்படவில்லை. நமக்கோ வென்றால், இந்தத் துஸ்திதி கிடையாது. நமது ப்ரதமகூடஸ்தர்களான வ்யாஸ பராசர போதாயநாதி மஹர்ஷிகள் பகவத்ப்ரஸாதத்தால் தத்வத்தைக் கரதலாமலகம்போலக் கண்டறிந்து அதை எல்லோரும் தெரிந்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு விசத விசதமாகவும் பஹுப்ரகாரமாகவும் க்ரந்தங்களில் ப்ரகாசிப்பித்ததுடன், ஸதாசார்ய பரம்பரையையும் ப்ரவ்ருத்திப்பித்தார்கள். பிறகு சிலக்ஷோபங்களால் அவ்வாசார்ய பரம்பரையில் விச்சேதம் நேரிட்டு ஜ்ஞாந தீபத்துக்கு மாலிந்யமுண்டான காலத்தில், பரமகாருணிகனை ஸ்ரீயஃபதி, சடகோப நாதமுனி யாமுந ராமாநுஜ தேசிகாத்யவதாரங்க ளெடுத்துத் தத்வஜ்ஞ ஸம்ப்ரதாயத்தை மறுபடியும் நிலைநிறுத்தி நமக்கு உஜ்ஜீவந மார்க்கத்தைக் காண்பித்திருக்கிறார். இப்படிக்கு ஒப்பில்லாத ஜ்ஞாநத்தைக் குலதநமாகப் பாத்யம் கொண்டாடும் நாம் அந்தத் தநத்தைக் கைப்பற்றாமலும் அதை வ்ருத்திசெய்யாமலும் அதன் ப்ரயோஜநத்தை இதரர்களுக்குப் புகட்டி எல்லோரையும் உஜ்ஜீவிக்கச் செய்ய வேண்டியதாகிய நமதுகடமையைச் செலுத்தாமலும் நிருத்ஸாஹிகளாகவும் நிருத்யமர்களாகவும் வீண்காலம் கழித்தால் நம்முடையநிலைமை நிரம்பவும் சோச்யமாயிருப்பதில் என்ன ஆச்சர்யம்? லோகமுழுவதும் வரம்பற்றுத் தர்மஸ்வரூபமே யறியாமல் பர்யாகுலமா யிருப்பதில்தான் என்ன ஆச்சர்யம்?

இப்போது இருக்கும் ஸ்திதியில் நாம் தத்வ தர்சிகளாகவும் அதற்கு அநுகுணமான சீலவ்ருத்த ஸம்பந்நர்களாகவு மிருந்த பெரியோர்களின் வம்சஸ்தர்கள் என்று மாத்திரம் சொல்லிக்கொள்ளலாமே யொழிய, அதற்கு மேற்பட்டு அக்குணங்கள் நம்மிடத்திலும் பொருந்தி யிருக்கின்றன வென்று சொல்லிக்கொள்ள இடமில்லை. நம்முடைய கர்மவிபாகத்தால் நமக்கு ஜ்ஞாநலேசம் ஏற்பட்டிருப்பதுடன் அதற்கு அநுகுணமாகவே சீலவ்ருத்தங்களின் சைதில்யமும் ஏற்பட்டிருக்கிறது. அதுகாரணமாகவே ஐகமத்யஹாநியும் உத்யோகக்குறைவும் நேர்ந்திருக்கின்றன.



'நமது ஆசார்யர்களுடைய க்ரந்தங்களை நம்மில் பலர் இன்னும் பரிசயம் பண்ணிக்கொண்டிருக்கும்போது நாம் தத்வதர்சிகளல்லவென்று எப்படிச் சொல்லக்கூடும்? நம்மில் அநேகர் சிஷ்டர்களாய் வைதிகாநுஷ்டாநத்தைக் கைவிடாமலிருக்க, நமக்கு சீலவ்ருத்தங்களில்லையென்று சொல்வது யுக்தமா?' என்று ஆக்ஷேபமுண்டாகலாம். ஆனால், இக்காலத்தில் நமது ஆசார்யக்ரந்தங்களைப் பரிசயம்பண்ணுவதும் சிஷ்டாசாரத்தை யநுவர்த்திப்பதும் நாளுக்குநாள் குறைவுபட்டுக்கொண்டே வருகிறதென்று அப்படி ஆக்ஷேபிக்கிறவர்களே ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். மேலும், கேவலம் க்ரந்தபரிசயத்தாலாவது, அநுஷ்டாநத்தாலாவது மாத்திரம் தத்வஜ்ஞாநம் உண்டாகுமென்று நினைப்பது சரியல்ல. க்ரந்தாவலோகநத்தால் வாக்யார்த்தஜ்ஞாநம்மாத்திர முண்டாகிறது. அப்படிக்கு ஏற்படும் வாக்யார்த்த ஜ்ஞாநத்தை நம்முடைய அநுபவத்துடன் ஸம்வாதம்பண்ணி நிஷ்கர்ஷித்தாலொழிய அந்த ஜ்ஞாநம் நம்முடைய புத்திக்கு வசப்படுகிறதில்லை. புத்திக்கு வசப்படாதவரையில் அதை ஜ்ஞாநமென்று வ்யவஹரிக்கவே யோக்யதையில்லை. கிளிப்பிள்ளை கற்றுக்கொள்வதுபோல சப்தாநுபூர்வியை ஜ்ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஒப்பிக்கலாமேதவிர, அதன் ஸாராம்சத்தை யறிந்து அதனால் புத்திவிகாஸமுண்டாக மார்க்க மிராது. அநுபவத்தைக்கொண்டு அநவரதம் யுக்திகளால் அநுசிந்தநம்பண்ணி வாக்யார்த்தஜ்ஞாநத்தை நம் புத்திக்கு வசமாக்கிக்கொண்டபிறகுகூட அதனோடுநிற்பது கார்யகாரியாகமாட்டாது. நம்முடைய புத்திக்கு வசப்பட்ட அந்த ஜ்ஞாநவிஷயத்தை ஏகாக்ரமாய்த் த்யாநம்பண்ணிக்கொண்டே அப்படிப்பட்ட த்யாநத்தினால் நமது ஆத்மாமுழுதும் ஸம்ஸ்கரிக்கப்பட்டு அந்த ஸம்ஸ்காரத்தின் பலம் நம்முடைய நடை உடை பாவனை வ்யவஹாரம் எல்லாவற்றிலும் நாம் அறியாமலே வெளியாகவேண்டும். இந்தப் பரிபாக மடைந்தவர்களிடத்தில் இப்போது பலவாறாக லோகத்திற் காணப்படும் தோஷங்கள் இருக்கமாட்டா. முதலில் அவர்களுக்கு "[illegible]" என்கிற வேறுபாடு இராது. புத்தி சக்தியிலோ, வித்யையிலோ அர்த்தத்திலோ தங்களுக்கு உண்மையில் எவ்வளவு அதிகாரமோ அதற்குமே லிருப்பதாக அவர்கள் நடிக்கமாட்டார்கள். இவ்விதமான கபடநடநத்தால்தான் இக்காலத்தி

லெல்லாம் மேற்பூச்சாகவும் உண்மை இங்கிருக்கிறதென்று அறிய முடியாமலும் இருக்கிறது. இந்த ஸ்திதியினால் நமக்கு ஸம்பவிக்கும் பரிபவங்களைத் தினந்தோறும் அநுபவிக்கிறோம். இந்த அயதார்த்தபாவனை நாம் ஒழிக்கவேண்டிய பாபங்களில் முதன்மையானது. கண்களுக்குத் திமிரரோகம்போல ஆத்மாவுக்கு இது மோஹத்தை யுண்டாக்கி ஒருவனை ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் அடித்துவிடுகிறது. ஒருவன் தனது ஶரீரத்தின் ப்ரமாணம் எவ்வளவோ அதைவிட அநேகமடங்கு உயரமாகத் தன்னை நினைத்து ஸமுத்ரத்தில் இறங்கினால் என்ன கதியாவனோ, அவ்விதமாகவே தன் யோக்யதைக்கு மேற்பட்டுத் தன்னை உயர்த்திக்கொண்டு கர்வப்படுகிறவன் லோகத்தில் ஸர்வப்ரகாரமாகவும் பரிபவத்தையடைந்து தனது நாஶத்துக்குத் தானே காரணமாகிறான். இதேமாதிரி ஒருவன் தனக்கு ஏதோ விஶேஷாகாரமிருப்பதாக ப்ரமித்துக்கொண்டு ஸாமாந்ய தர்மங்களைக் கைவிடுகிறான். தான் வித்யையில் சிறந்தவனென்றாவது, ஸத்குலப்ரஸூதனென்றாவது, ஸதாசார்யனை அடுத்தவனென்றாவது ஒரு அம்ஶத்தைச் சொல்லிக்கொண்டு தான் ஸத்யம், ஶௌசம், தபஸ், க்ருணை முதலிய ஸாமாந்யதர்மங்களைக் கவனிக்கவேண்டியதில்லையென்றும், அவைகளைக் கவனிக்காததனால் தனக்கு லோபமில்லையென்றும் எண்ணுகிறான். இதுவும், ஒரு பெரிய ப்ராந்தி. ஸாமாந்ய தர்மங்களைப் பரிபாலநம் பண்ணுகிறவனுக்குத்தான் விஶேஷாகாரத்துக்கு அதிகாரம் ஸித்திக்குமே யொழிய ஸாமாந்ய தர்மங்களைக் கைவிட்டவனுக்கல்ல. ஸாமாந்ய தர்மாநுஷ்டாநம், ஒரு கட்டடத்துக்கு அஸ்திவாரஸ்தாநத்தி லிருக்கிறது. விஶேஷாம்ஶங்களெல்லாம் ஸௌத ஸ்தாநீயமானவை. இதை நாம் உணர்ந்து ஸாமாந்யதர்மங்களைக் கைவிடாது காப்பாற்ற வேண்டியது அவசியம். நாம்செய்யும் அதர்மங்களைப் பிறர் கண் மறைவில் செய்வதனால் நாம் அவைகளைச் செய்யாதவர்கள்போலாகிறோமென்றும், நாம் செய்யும் நல்ல காரியங்களை எல்லாரும் அறியும்படி செய்தாலொழியச் செய்யாததற்கு ஸமாநமென்றும், ஓர் எண்ணம் லோகத்தில் குடிகொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், தத்வஜ்ஞாந மில்லாததுதான். வெளியில் செய்தாலும் மறைவில் செய்தாலும் நம்முடைய காரியங்களின் பலம் நம்முடையதேயன்றி வேறல்லவென்று ஶாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. நமக்கும் யுக்தி



யாலும் அநுபவத்தாலும் இதன் உண்மை தெளிவாகிறது. இப்போது டைப்ரைடிங் (Type-writing) யந்த்ரம் ஒன்று ஏற்பட்டிருப்பதை எல்லாரும் பார்த்திருக்கலாம். அதில் வெளியில் அமைக்கப்பட்டிருக்கும் பொத்தானில் ஒன்றை விரலால் அழுத்தினவுடன் பின்புறத்தில் சுருளாக வைக்கப்பட்டிருக்கும் காகிதத்தில் அந்தப் பொத்தானுக்குச் சரியான அக்ஷரம் பதிகிறது. இதேமாதிரி நாம் எந்தக்கார்யம் செய்தாலும் அதற்கு அநுகுணமான ஸம்ஸ்காரம் நம்முடைய அந்தராத்மாவில் பதிவாகிறது. அதுதான் நம்முடன் ஶாஶ்வதமாயிருந்து நம்முடைய பாவியான யோகக்ஷேமங்களுக்குக் காரணமாகிறது. ஆகையால், நம்முடைய ஸ்வய நன்மையை உத்தேசித்தே ஸர்வப்ரகாரமாயும் நாம் ருஜுமார்க்கத்தில் நடக்கவேண்டுமேயொழிய அந்ருஜுமார்க்கத்தைச் சிந்திக்கவே கூடாது. இவைகளெல்லாம் எல்லோருக்கும் ஏற்கனவே தெரிந்திருக்கும் விஷயமேதவிர நூதனமல்ல. ஜ்ஞாநத்துக்கு அநுஷ்டாநமே பலம். புத்திகோசரமான வாக்யார்த்தஜ்ஞாநம் கிடைப்பது ஸாதாரணம். ஸ்வதஸ்ஸித்தமாய் அமைந்ததுபோலிருக்கும் அநுஷ்டாநத்துக்கு வேண்டிய ஸம்ஸ்காரம், பஹுப்ரயத்ந ஸாத்யம். அதைத்தான் எல்லா ஆஸ்திகர்களும் அடைய முயற்சி செய்யவேண்டும். அதுதான் உண்மையில் கார்யகாரி; அதை ஸம்பாதித்துக்கொள்ள நமது பெரியோர்கள் காண்பித்திருக்கும் அநேக உபாயங்களில் ஒன்று ஸுகரமாகத் தோன்றுகிறது; அதாவது - யஜமானன் கண்ணெதிரில் வேலைசெய்யும் ப்ருத்யன் எப்போதும் ஒழுங்கு தவறாமல் ஜாக்கிரதையாக வேலை செய்வதைப் பார்க்கிறோம்; அல்லது, ஒரு ப்ருத்யனுடன் யஜமானன் குமாஸ்தா ஒருவன் கூடவேயிருந்து அவன் செய்யும் காரியங்களை யெல்லாம் ஒன்றும் விடாமல் ஒரு புஸ்தகத்தில் அப்போதைக்கப்போது பதிந்து யஜமானனுக்குக் காண்பிக்கிறதா யிருந்தால், அப்போது அந்த ப்ருத்யன் ஸரியாக வேலை செய்வான். அதேமாதிரி நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஸர்வஸாக்ஷியான ஸ்ரீ புண்டரீகாக்ஷன் விஶத விஶதமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறா னென்றும், நம்முடைய அந்தராத்மாவாகிய பகவத் ஸேவகன் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் பதிவு செய்துகொண்டு நாம் கடைசியாகக் கூலி பெறவேண்டிய காலத்தில் நம்முடைய யஜமானனாகிய ஸர்வேஶ்வரனுக்குக் காண்பிக்கிறா

னென்றும் நாம் அநவரத சிந்தனத்தால் ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரமாக உணர்ந்தால் நமக்கு அநவதாத கர்மஸ்பர்சமே நேராது என்பதற்கு ஸந்தேஹமில்லை. அப்படிப்பட்ட தசையை யடைந்தவர்கள் தான் ஆர்ஜவ முடையவர்களென்று வ்யவஹரிக்க யோக்யதை யுள்ளவர்க ளாவார்கள்.

தத்வஜ்ஞாநமும் அதன் பலமாகிய ஆர்ஜவமும் ஸித்தித்தால், ஐகமத்யம் தானே ஏற்படும்; ஏனென்றால், ஐகமத்யத்துக்கு விரோதிகளான அஸூயை, கலஹம் முதலியவற்றுக் கெல்லாம் முக்கியமான வேர் அநார்ஜவம். பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு லோகம் முழுவதும் அஸ்தமித்துவிட்டதாக எண்ணிக் கொள்வதுபோல ஒவ்வொருவனும் ப்ரபஞ்சமே தனக்குள் அடங்கியிருப்பதாக நினைத்துத் தன்னைத் தவிர எல்லாவற்றையும் ஹேயதா புத்தியுடன் பார்ப்பதுதான் ஸர்வபேதத்துக்கும் காரணம். லோகம் மஹத்தென்றும், நாம் அதில் ஒரு அணுவென்றும், நம்மைப்போன்ற அணுக்களின் ஸங்காதத்தால் மாத்திரம் நமக்குப் பரஸ்பராநுகூல்யமேயொழியப் பேதத்தால் நாசம் தவிர வேறில்லையென்றும் நாம் செவ்வையாக உணர்ந்து அதே ப்ரகாரம் எந்தெந்தக் கார்யங்கள் ஐகமத்யத்துக்கு ஸஹாயமோ அவைகளையே மேன்மேலும் கைக்கொள்ளவும், ப்ரதிகூலங்களை வர்ஜநம் பண்ணவும் நாம் விடாமல் முயற்சி செய்ய வேண்டும். வஸ்து ஸ்திதியை நன்றாகப் பரிசீலநம் பண்ணும் பக்ஷத்தில், இப்போது நமது தேசத்திலிருக்கும் பேதங்களும், அதை யநுஸரித்த த்வேஷங்களும் ஏற்பட ந்யாயமே இல்லை. ஸ்ருஷ்டிக்கப்பட்ட எந்தப் பதார்த்தமும் வீணல்லவென்பது, ஸ்ருஷ்டியின் ரஹஸ்யம். ஆகையால், ஒவ்வொரு மநுஷ்யனுக்கும் ஒரு அஸாதாரண சக்தியும் அதற்கேற்ற உபயோகமும் இருந்துகொண்டே இருக்கிறது. ஒருவன் கூர்மையான புத்தி யுள்ளவனா யிருந்தால், மற்றொருவன் தேஹ பலத்தில் சிறந்தவனா யிருக்கிறான். இன்னு மொருவன் நல்ல உத்ஸாஹியா யிருக்கிறான். ஆகையால், ஒருவனுக்கு ஒரு குண மிருப்பதாலேயே தன்னை இதரர்களைவிட உயர்ந்தவனாக நினைத்துக் கொள்ள இடமில்லை. ஏனெனில், இவனிட மில்லாத அநேக குணங்கள் பிறரிடம் இருக்கின்றன. லோகத்துக்கு எல்லாருடைய குணங்களும் எல்லாருடைய சக்திகளும் அவச்யமா யிருக்கின்றன; ஆகையால், லோகம் ஒழுங்காகவும் அவ்யாகுலமாகவும் நடக்க



வேண்டியதற்கு அவனவன் தன்தன் அதிகாரத்தைத் தெரிந்துகொண்டு அதற்கு அநுகுணமான ஸ்தாநத்திலிருந்து அதற்குத் தகுந்த க்ருத்யத்தைச் செய்யவேணும். இதுதான் லோகமர்யாதை யென்பது. இது தவறினால்தான், அவ்யவஸ்தையும் ஸர்வ புருஷார்த்த ஹாநியும் நேரிடுகின்றன. அவனவனுக்குத் தகுந்த ஸ்தாநத்தி லிருந்து அந்தந்த க்ருத்யத்தைச் செய்வதுதான் கௌரவம். அதுதான் ச்ரேயஸ்கரம். அப்படிச் செய்வதால், ஏற்றம் குறைவு ஒன்றும் கிடையாது. அயலானுடைய அதிகாரத்தைத் தன்னுடையதாக ப்ரமிப்பதுதான், அச்ரேயஸ்கரமும் அகௌரவமு மானது. இதைத்தான் "ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் - ஸ்வதர்மே நிதநம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ:" என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார். ஒரு கட்டடம் ஸ்திரமாயிருக்கும்படி கட்டவேண்டுமானால், செங்கல் வேண்டிய விடத்தில் செங்கல்லும், கருங்கல் வேண்டிய விடத்தில் கருங்கல்லும், சுண்ணாம்பு வேண்டிய விடத்தில் சுண்ணாம்பும், மரம் வேண்டிய இடத்தில் மரமும், இன்னும் எந்தெந்த ஸாமான்கள் எந்தெந்த இடத்தில் தேவையோ அந்தந்த ஸாமான்களை அந்தந்த இடத்திலும் உபயோகப்படுத்தினால் ப்ரயோஜநப்படுமே யொழிய, மரத்தால் சுவரும், சேற்றினால் தூணும், சுண்ணாம்பினால் ஜன்னலும் வேலைசெய்தால் உபயோகப்படாது. அதேமாதிரி ஜநஸமுதாயத்திலும் ராஜ்ய நிர்வாஹம் செய்யத்தகுந்தவர்கள் அந்தந்த வேலையைச் செய்யவேண்டும்; புத்திஜீவிகள் தங்கள் வேலையையே நடத்தவேண்டும்; கைத்தொழிலாளிகள் கைத்தொழிலையே கவனிக்கவேண்டும்; இவ்விதமே இதரர்களும் அவரவர் வேலையை நடத்தவேண்டும்; ஒருவர் வேலைக்கு மற்றொருவர் ஆசைப்படுவதால்தான் ஸகல அநர்த்தமு முண்டாகிறது. இப்படி ஒவ்வொருவரும் தம்தமக்குரிய வேலையைச் செய்வதில் உத்கர்ஷாபகர்ஷபாவத்தை ஆரோபணம் பண்ணிக் கொள்ளக் கூடாது. அப்படிச்செய்தால் சரீரத்தில் வயிற்றுக்கும் இதர அவயவங்களுக்கும் கலஹம் நேரிட்டதாகக் கதையில் கேள்விப்பட்டிருக்கிறபடி எல்லோருக்கும் ஹாநியே பலமாகும். இந்தத் தத்வத்தை ஒவ்வொருவரும் யதாவத்தாய் உணர்ந்தால், நம்மில் ஐகமத்யத்துக்குக் குறைவு நேரிட இடமில்லை.

நம்மில் ஐகமத்யம் இல்லாததைப்பற்றி நமது ஆசார்யன் ஸ்ரீ
நிகமாந்த மஹாதேசிகனே ஶோசித்திருப்பதாகத் தெரிகிறது;
இல்லாவிட்டால், "ஆவாத்வருஷ ஜநவாயிதிடிஶ_ுதெ ஸ்ந்நாஶா
ஸநீயவோநிவக்ஷ ஹெ தா: । ஆவாதஶாஞ்ஜியே ராநுவா
நாஸ்ரீயாநந்நாநந்வொஜநந் ஸஜஹாஸஸுயா" என்று
ஸ்வாமி ஸாதித்தருள நேர்ந்திராது. இதுவரையில் நம்முடைய
கர்மபலம் பலீயஸ்ஸாயிருந்தாலும் இனியாவது அவிதத வாக்
கான அம்மஹானுடைய ஆஶம்ஸை ஸித்தித்து நம் ஐகமத்யம்
த்ருடப்படுமென்று நம்புகிறேன். எல்லாரும் ஏகமதிகளாயிருந்து
பொதுநன்மையை விரும்பினால் அதற்காக வேண்டிய ஸர்வ
யத்நங்களும் ஸ்வரஸமாகவே செய்யப்படு மென்பதற்கு என்ன
ஸந்தேஹம்? ஸர்வஜநங்களுக்கும் ஸாதாரணமான பொதுவிஷயம்
நம்முடையதல்லாததுபோல அதை ஒருபேதபுத்தியுடன் பார்த்
தால் மாத்திரம் அதில் நமக்கு ப்ரவ்ருத்தி யுண்டாகமாட்டாதே
யொழிய அது எல்லாருடையதுமாக இருப்பதினாலேயே நம்மு
டையதும்தான்; நம்முடைய யோகக்ஷேமமும் ஸமுதாயத்தின்
யோகக்ஷேமமும் வேறில்லை யென்று நாம் எண்ணும்பக்ஷத்தில்
நாமெல்லோரும் பொதுநன்மைக்குப் பாடுபடுவது நமக்கு ஸஹஜ
மாயிருக்கும். அப்படி இடைவிடாது ஸமுதாயத்தின் யோக
க்ஷேமங்களை மேன்மேலும் வ்ருத்திசெய்வதில் முயற்சியெடுத்துக்
கொள்வதுதான் உத்யோகமென்று முன்னமே கூறப்பட்டது.
எந்தத்தேசத்து ஜனங்கள் அவ்வித முயற்சியில் பின்னிடையாம
லிருக்கிறார்களோ அந்தத்தேசத்தில் எல்லாவிதஸௌக்யங்களும்
நிறைந்திருப்பதைக் காண்கிறோம். அவ்வித முயற்சி எங்கே
குறைவு படுகிறதோ அந்நாட்டில் ஜனங்களுக்கு எல்லாவிதத்தி
லும் ஸௌக்யக்குறைவு ஏற்படுவதையும் பார்க்கிறோம். பலப்ரா
ப்திவரையில் பின்வாங்காமல் ப்ரயத்நம் செய்வதே விடாமுயற்சி;
எந்தக் கார்யமும் விடாமுயற்சியால் ஸித்திக்காமல் போகா
தென்பதற்கு அநேக உதாஹரணங்களை நாம் பார்த்து மிருக்கி
றோம், கேட்டு மிருக்கிறோம். பெரியகாரியங்களை ஆரம்பிப்ப
தில் மாத்திரம் ஒன்றும் விசேஷமில்லை. சிறுகார்யமாயிருந்தா
லும் அதைக் குறைவன்றிச் செய்துமுடிப்பதுதான் ஶ்லாக்யம்.
எந்தக் காரியத்துக்கும் அதற்குத் தகுந்த அதிகாரிகள் ப்ரவ்ருத்
தித்து விடாமுயற்சியோடு பாடுபடும் பக்ஷத்தில் பலோதயத்



துக்கு ஸந்தேஹ மில்லை. ஆகையால், நம்முடைய அபிவ்ருத்தி
நம்முடைய கையிலேயேதா னிருக்கிறது என்பதும், பராபே
க்ஷையால் அதற்கு அநாவஶ்யமான விளம்பமே யொழிய உண்
மையில் ஒன்றும் ஸஹாயமில்லை யென்பதும் ஸ்பஷ்டமாயிருக்கின்
றன. இவ்விதமான குறைவுகளை யெல்லாம் போக்கி நமதுதேசத்
துக்கு ஶாஶ்வதமான க்ஷேமத்தைத் தேடுவதற்கு உபாயமென்ன
வென்று ஆலோசிக்க இப்போது அவஸரம் நேரிட்டிருக்கிறது.
முற்கூறியபடி இது விஷயத்தில் ப்ரதமோபாயம் என்ன வென்
றால், இவ்விதக் குறைவுகள் நம்மிடத்தி லிருக்கின்றன வென்கிற
உணர்ச்சியையும், அவைகளைப் போக்கிக்கொள்ள வேண்டியது
அத்யவஶ்யமான வேலை யென்கிற அபிஸந்தியையும் ஒவ்வொரு
மனத்திலும் ரூடமாக ஆக்கவேண்டியதுதான். அதற்கு இவ்வித
மான ஸபைகள் சேர்ந்து, அடிக்கடி பெரியோர்களின் மஹிமை
யையும் நம்முடைய இக்கால நிலைமையையும் தெளிவாய் எடு
த்து உபந்யஸித்துப் பிறர் வ்ருத்தி யடைந்திருக்கும் ப்ரகாரத்தை
யும் அவர்களுடைய சரித்திரங்களையும் சர்ச்சித்து அவைகளில்
ஹேயோபாதேயாம்ஶங்களை நிர்ணயித்து அவ்வித நிர்ணயங்க
ளைக்கொண்டு நாம் நடக்கவேண்டிய மார்க்கத்தைச் சீர்ப்படுத்
திக்கொள்ள வேண்டும். இத்தேசம் விபுலமாயும் பஹுப்ரகார
மாயு முள்ள தாகையால், இதுவிஷயத்தில் முதலெடுப்பில் இத்
தேசம் முழுவதும் வ்யாபிக்கக்கூடிய ஆரம்பம் செய்வது துர்நிர்
வாஹமா யிருக்கு மென்று கண்டு ஸர்வதர்ஶநங்களுக்கும்
ஶிரோபூஷமான நமதுஸம்ப்ரதாயத்தில் ஈடுபட்டவர்களுக்கு மேற்
சொல்லிய ஆர்ஜவாதி குணங்களை வ்ருத்தி பண்ணி நம்முடைய
ஸமுதாயத்தின் யோகக்ஷேமத்துக்கு வேண்டிய காரியங்களைச்
செய்வதற்காக இந்த ஸ்ரீவிஶிஷ்டாத்வைத ப்ரவசந ஸபை ஆரம்
பம் செய்யப்பட்டிருக்கிறது. நம்மை வ்ருத்தி செய்துகொண்டு
நமதுமுன்னோர்களுடைய பெயரைச் சொல்லிக்கொள்ள யோக்ய
தை யுடையவர்களாகச் செய்துகொள்ள வேண்டு மென்கிற
ஆஸ்தை நம்மில் அநேக மநஸ்விகளுடைய ஹ்ருதயத்தில் குடி
கொண்டிருக்கிற தென்பதற்கு ஸந்தேஹ மில்லை. ஆனால், அவா

வர்கள் பரஸ்பர ஸமாகமம் இல்லாமல் ஒருவரை யொருவர் தெரிந்துகொள்ளவே ஸந்தர்ப்பம் நேரிடாமல் பலஇடங்களில் தனித்தனியே தத்கால ஸ்திதியைப்பற்றித் துக்கித்துக்கொண்டு மாத்திரம் இருப்பதால் கார்யஸாதகமில்லை யென்று நினைத்தே, மநஸ்வி ஸமாகமத்துக்காக, இந்த ஸபை ஏற்படுத்தப்பட்டது. அவ்வித ஸமாகமம் ஸபலமாகும் விஷயத்தில் ஆசார்ய கடாக்ஷ பூர்வமாய்ப் பகவத்க்ருபை பெறுவதற்கு இந்தத் திவ்ய தேசத்தில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் கண்டருளும் மஹோத்ஸவத்துக்கு ஸமமான ஸந்தர்ப்பம் வாய்ப்பது அரிது. இவ்விதம் நம்மை நாம் சீர்ப்படுத்திக்கொள்வதற்காகவே ஏற்பட்டிருக்கும் இந்த ஸபையில் நம் ஸம்ப்ரதாயஸ்தர்கள் எல்லோரும் சேர்ந்து ஆர்ஜவம், ஐகமத்யம் இவைகளால் அநுப்ராணிதமான உத்யோகத்தைக் கைவிடாமல் இந்த ஸபையின் பரமோத்தேசமான நம்ஸமுதாயத்தின் சாஸ்வதமான அபிவ்ருத்தியை ஸம்பாதிப்போ மென்று நம்புகிறேன்.

இச்சபையின் அபிப்ராயம் இருவகைப்பட்டது; அதாவது- விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணுவதும், விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயஸ்தர்களின் அபிவ்ருத்தியைத் தேடுவதும். முதல் அபிப்ராயத்தை நிறைவேற்றுவதற்காக இச்சபை நடத்துவதாய் உத்தேசித்திருக்கும் காரியங்கள் என்னவென்றால், இப்போது கிடைக்கும் நம்முடைய க்ரந்தங்கள் எல்லாவற்றையும் சேர்த்து அவைகளைச் செவ்வையாய்ப் பரிசோதித்து ஸரியான ப்ரதிகள் எழுதிவைப்பது, அவைகளை க்ரமேண அச்சிடுவது, குறிப்பிட்ட காலங்களில் வித்வத் ஸதஸ்ஸுகள் ஏற்படுத்தி ஸம்ப்ரதாய விஷயங்களைச் சர்ச்சிப்பது, வித்வான்களால் உபந்யாஸங்கள் செய்வித்து அவற்றின் மூலமாகத் தத்வங்களை எல்லோருக்கும் விசதமாக்குவது, புதிதாக க்ரந்தங்கள் வ்யாக்யாநங்கள் முதலியவை யாராவது வித்வான்கள் எழுதும் பக்ஷத்தில் அவைகளைப் பரிசீலநம் பண்ணி அவ்வித்வான்களுக்குத் தகுந்த ஸம்மாநம் பண்ணுவதுடன் அந்தக்கிரந்தங்களை ப்ரசுரப் படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வது முதலியன.



இரண்டாவதுஅபிப்ராயத்தை நிறைவேற்றுவதற்காகச் செய்ய வேண்டிய காரியங்கள் என்னவென்றால்: — நம்முடைய ஸமுதாயத்துக்குள் ஒற்றுமை யுண்டாக்க வேண்டியதற்குத் தகுந்த மார்க்கங்களைத் தேடுவது, [அதாவது - அடிக்கடி நமது ஸம்ப்ரதாயஸ்தர்களின் ஸபைகள் கூட்டி அவைகளில் நமக்கு ஐகமத்யத்தாலுண்டாகும் லாபத்தையும் பேதத்தால் விளையும் தீங்குகளையும் பலமுறை தெளிவாக எடுத்துப்பேசி நம்மவர்கள் எல்லோர் மனத்திலும் ஐகமத்யத்தை வேரூன்றச்செய்வது], நம்முடைய பொது நன்மைக்கு அவஸ்யமான ஏற்பாடுகளைச் செய்வது, [அதாவது - நம்மில் தீனர்களாகவும் அஸக்தர்களாகவு மிருப்பவர்களுக்கு ஜீவனம் கல்பிப்பது, ஸக்தர்களாகவும் வ்ருத்தி யில்லாதவர்களாகவு மிருப்பவர்களுக்கு வ்ருத்தி கல்பிப்பது, அநாதர்களாயிருக்கும் பாலகாதிகளுடைய ஸம்வர்த்தநத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்வது] முதலிய பலவகையான காரியங்கள்.

மேற்கூறியவை தவிர ஒரு முக்யமான கார்யம் இச்சபையின் நோக்கிலுள்ளது; அதாவது - நம்முடையபாலர்களுக்கு க்ரமமான வித்யாப்யாஸத்துக்கு மார்க்கம் ஏற்படுத்துவது; இது முன்சொல்லப்பட்ட எல்லாவற்றையும்விட ஸ்ரமஸாத்யமானது. ஆனாலும், இதுவே அவை யெல்லாவற்றையும்விட ப்ரதாநமானதாகவும் இருக்கிறது. இதுவிஷயத்தில் நாம் தகுந்த முயற்சி யெடுத்துக்கொண்டு பிள்ளைகளுடைய வித்யா விஷயத்தில் இப்போது ஏற்பட்டிருக்கும் பலவித மாறுதல்களை ஒருவாறாகப் பரிஷ்கரித்து நம்பிள்ளைகள் வித்யை, ஸீலம், தநம் இவ்வ யெல்லாம் நிறைந்தவர்களாவதற்குத் தக்க உபாயம் தேடினாலொழிய இதர விதமாக நாம் செய்யும் ப்ரயத்நங்க ளெல்லாம் வ்யர்த்தமாகும். ஏனென்றால், புருஷாயுஸ் பரிமிதமா யிருப்பதால் நாம் இப்போது செய்யும் ஸதாரம்பங்களை யெல்லாம் நம்முடைய காலத்துக்குப்பின்பும் விடாது நிறைவேற்றத்தகுந்த ஸக்தியும் ஆஸ்தையு முள்ள ஸஜ்ஜந பரம்பரை இருந்தாலொழிய ஏராளமான த்ரவ்யத்தை ஸம்பாதித்த ஒருவன், தனது குமாரனுக்கு

அதைக் காப்பாற்றவும் வ்ருத்தி செய்யவும் மார்க்கம் கல்பிக்காமல் காலஞ்சென்றுவிட்டால் அக்குமாரன் சிறிதுகாலத்திற்குள் எல்லாச் சொத்தையும் இழந்து தன்தந்தையின் ஸ்ரமத்தை வீணாக்குவது போல, நமக்குப் பின்வருபவர்கள் நம் முயற்சியையெல்லாம் நிஷ்பலமாக்கிவிடுவார்களென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

இந்தக் காலத்தில் நமது பிள்ளைகளுக்கு வித்யை கற்பிப்பதைப்போலக் கடினமான கார்யம் ஒன்றுமில்லை. இவ்விஷயத்தில் சரியான தீர்மானத்துக்கு ஒருவரும் வராமலே அவரவர்க்குத் தோன்றியதையெல்லாம் மார்க்கமாக நினைத்து மேன்மேலும் காலுஷ்யத்தை உண்டாக்கி வருவதைப் பார்க்கிறோம். இதனாலேயே, ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களான நாம் பஹுவ்யாகுலமாயிருக்கிற இந்த அவஶ்யமான விஷயத்தைக்குறித்துத் தீர்க்கமாய்ப் பராமர்சித்து நம் ஆசார்யநுக்ரஹாவலம்பத்தால் ஒரு நிஷ்பத்தி ஏற்படுத்தி லோகத்துக்கு மார்க்கதர்ஶநம் செய்யவேண்டியது நம்முடைய கடமையாயிருக்கிறது.

இவ்வகையான ஸதபிஸந்திகளையுடைய இந்த ஸபை பகவத்க்ருபையாலும் ஆசார்யாநுக்ரஹத்தாலும் ஆஸ்திக ஸஹாயத்தாலும் உபர்யுபரி வ்ருத்தி யடைந்து மேற்கூறிய அபிப்ராயங்களை ஸாதிக்கும் பக்ஷத்தில், நம் தேஶத்துக்கு "ஆர்யபூமி" என்கிற நாமதேயம் அந்வர்த்தமாகும்; நாமும் ஆர்யர்களென்கிற வ்யபதேஶத்துக்கு அர்ஹர்களாவோமென்கிறதற்கு ஸந்தேஹமில்லை.

ஆகையால், "ஆர்ய ஸஞ்ஜீவநத்துக்கு" ப்ரதமோபாயமாகிய இந்த ஸபையை எல்லா ஆஸ்திகர்களும் தேஶாபிமாநிகளும் ஸம்பூர்ணமான அபிவ்ருத்தி யடையச் செய்யவேண்டியது தங்கள் கடமையாக நினைத்துத் தகுந்த யத்நம் செய்யவேண்டுமென்று பலமுறை ப்ரார்த்திக்கிறேன்.

தி. ஈ. சடகோபாசாரியர்.

ஸ்ரீ:

## ஸாங்க்ய தர்ஶநம். (II)

இனி மூலப்ராக்ருதியினின்றும் மற்றைத் தத்வங்கள் உண்
டாகும் க்ரமத்தை விவரிக்கிறோம்:—ப்ருக்ருதியினின்று மஹாந்
என்னும் புத்தி உண்டாகின்றது. இது, த்ரவ்யரூபமா யுள்ளது.
புருஷன் ஸந்நிதாநத்தினால் இதற்குச் சைதந்ய முண்டாகி, 'நாம்
இது செய்யவேணும், இது செய்யக்கூடாது' என்கிற நிஶ்சயத்
துக்கு ஹேதுவாய், அத்யவஸாயம் அல்லது நிஶ்சயம் என்கிற பெய
ரை யுடையதாகிறது. இது ஜ்ஞாநரூபமா யுள்ளதாகிலும், இதைக்
குணமாகக்கொண்ட மஹாந் என்னும் த்ரவ்யத்துக்கு 'புத்தி'
என்கிற பெயர் ஏற்பட்டிருக்கிறது. இந்தப்புத்தி, ப்ருகிருதியின்
விகாரமானதனால், ப்ருக்ருதியின் குணங்கள் இதிலும் உள்ளன.
அதில் ஸத்வகுணத்தின் கார்யமாக இந்த மஹாநுக்குத் தர்மம்,
ஜ்ஞாநம், வைராக்யம், ஐஶ்வர்யம் என்கிற நான்கு ஸ்வபாவங்
கள் ஏற்பட்டிருக்கின்றன. தர்மமாவது - இஹ பர லோகங்
களில் க்ஷேமத்துக்குக் காரணமான யாக தாநாதிகளாலும்,
யோகத்தினாலும் உண்டாகும் ஓர் தன்மை. ஜ்ஞாநமாவது - குணங்
களையும் புருஷனையும் பிரித்துஅறியுந் தன்மை. வைராக்யமாவது -
விஷயங்களில் ஆசையில்லாம லிருத்தல். இது, நாலுபடிகளை
யுடைத்தாய், நாலுவிதமாய் இருக்கும். அவைகளுக்கு முறையே
முயலுதல் (யதமாநம்), பிரித்தல் (வ்யதிரேகம்), ஒன்றில் நிறுத்
தல் (ஏகேந்த்ரியம்), வஶ்யம் செய்தல் (வஶீகாரம்) என்று
பெயர்கள்.

யதமாந ஸம்ஜ்ஞை என்னும் முயலுதலாவது, ஶப்தாதி
விஷயங்களில் இந்திரியங்கள் ப்ரவர்த்திக்காமல் அவைகளையடக்க,
அந்த இந்திரியங்களை ப்ரவர்த்திப்பிக்கின்ற மநஸ்ஸிலுள்ள கஷா
யங்க ளென்னும் அழுக்குகளை அற்றுப்போகும்படி காய்ச்ச யத்நம்
செய்வதுதான். வ்யதிரேகஸம்ஜ்ஞை என்னும் பிரித்தலாவது,
மனத்தின் மேற்சொல்லிய கஷாயங்களில் பக்வமானவைகளையும்

[அதாவது - செவ்வையாய்த் தஹிக்கப்பட்டவைகளையும்,] அப்படி பக்வமாகாதவைகளையும் பிரித்தறிவதுதான். அப்படிப்பிரித்த பிறகு பக்வ மாகாதவைகளையும் பசநம் செய்ய யத்நம் செய்ய வேண்டியது. ஏகேந்த்ரியஸம்ஜ்ஞை அல்லது ஒன்றில் நிறுத்தலாவது-கஷாயங்கள் பக்வமாய் இந்திரியங்களை ப்ரவர்த்திப்பிக்க மகஸ் அசக்தமாயிருந்தாலும், அதில் பூர்வவாஸனைகள் அற்றுப்போகாமல் விஷயங்களையும் இந்திரிய வ்யாபாரங்களையும் மறக்காமல் த்யாநம் செய்வதுதான். மநஸ்ஸை விட்டு ஆசைகள் விலகாமலிப்பது, இந்த அவஸ்தையின் ஸ்வபாவம். வஶீகாரஸம்ஜ்ஞை என்னும் வஶ்யம் செய்தலாவது, விஷயங்கள் ஸந்நிதியிலும் அவைகள் ஸம்பந்தமான வாஸனைகளெல்லாம் அற்று, மனம் நிறுத்தின நிலையில் நிற்கக்கூடிய அவஸ்தை. இந்த நான்கு விதமான அவஸ்தைகள் ஒன்றுக்குமேல் ஒன்று விசேஷமுள்ளதாய்க் கடைசி அவஸ்தை கைவல்யத்துக்குக் காரணமாயுள்ளது என்று ஸாங்க்ய யோக ஶாஸ்த்ரங்களின் கொள்கை.

இப்படி நான்கு விதமான அவஸ்தைகளும், வைராக்யத்தின் படிகளாய்ச் சொல்லப்படுகின்றன; இந்த நான்கு அவஸ்தைகளுமே ஜ்ஞாந நிஷ்டையின் அவஸ்தைகளாகப் பகவத்கீதை ௨-ம் அத்தியாயத்தில் ௫௫ - முதல் ௫௮ - வரையிலுள்ள ஶ்லோகங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவைகளில் வஶீகார ஸம்ஜ்ஞை என்னும் அவஸ்தை விஷயமாய், “த்ருஷ்டாநுஶ்ரவிகவிஷயவித்ருஷ்ணஸ்ய வஶீகார ஸம்ஜ்ஞா வைராக்யம்” என்று பகவான் பதஞ்ஜலியும் யோக ஸூத்ரம் செய்திருக்கிறார். ஐஶ்வர்யம் என்பது - புத்தியின் நான்காவது ஸாத்விக தர்மம். இது, அணிமா முதலான எட்டு விதங்களுள்ளது. அவைகளில் அணிமாவாவது - கல்லிலும் நுழையக்கூடிய ஸூக்ஷ்மமான தன்மை. லகிமாவாவது - கனமில்லாமல் ஸூர்யகிரணங்களையும் பற்றிக்கொண்டு செல்லக்கூடிய ஶக்தி. மஹிமா வாவது - தன்னைப் பெருக்கச் செய்யும் ஶக்தி. ப்ராப்தியாவது - இருந்த இடத்திலிருந்து வெகுதூரத்திலிருக்கும் வஸ்துக்களை அடையும் சக்தி. ப்ராகாம்யமாவது - தன்னிச்சைக்குத் தடையில்லாமை. வஶித்வமாவது - தன் வசத்தில் எதையும் அடக்குதல். ஈஶித்வமாவது - எதையும் ஸ்ருஷ்டிக்கும். வல்லமை.



ஸத்யஸங்கல்பதையாவது - எந்த வஸ்துவையும் தன்னிஷ்டப்படி நடக்கச்செய்யும் ஶக்தி; இந்தச்சக்திகளுக்குப் பொதுவாய் ஐஶ்வர்யம் என்று பெயர். இவைகள் எல்லாம் யோகமஹிமையால் புத்திக்கு ஸித்திக்கும் என்று யோகஶாஸ்த்ரத்தில் சொல்லப் படுகிறது. இப்படியே புத்திக்குத் தாமஸ குணத்தின் பலமாக நான்கு குணங்கள் உண்டு; அவைகளாவன - அதர்மமும், அஜ்ஞாநமும், விஷயங்களில் ஆசையும், தன்னிஷ்டங்கள் நிறைவேறாத தைந்யமுமே; இவைகளை இனி விவரிக்கவேண்டியதில்லை.

இப்படி ஸாங்க்யர்கள் ப்ருக்ருதியை மூலகாரணமாகச்சொல்லுமிடத்தில், வேதாந்திகள் “மஹாநு - அவ்யக்தே லீயதே, அவ்யக்தம் அக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம: பரே தேவ ஏகீபவதி” என்கிற ஶ்ருதிவாக்யத்தால் ப்ருக்ருதி என்னும் அவ்யக்தத்துக்குமுன் இரண்டு ஸூக்ஷ்மாவஸ்தைகளை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், இவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் பிந்நமான ப்ருக்ருதியின் அவஸ்தைக ளானபடியால், இரண்டு ஸம்ப்ரதாயத்துக்கும் விரோதமில்லை. “ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி” என்கிற கீதாவசநமும் இந்த அவஸ்தைகளின் உட்பிரிவுகளைக் கவனிக்காமல் பொதுவாய் ப்ரதாநத்தை உத்தேசித்துச் செய்யப்பட்ட ப்ரயோகந்தான். ஸாங்க்யர்கள் ப்ராக்ருதி, புருஷன் ஸந்நிதாநத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு, தானே உலகத்தை ஸ்ருஷ்டிக்கச் சக்தியுள்ளதென்றும், விலக்ஷணமான சேதநமாகிய ஈஶ்வரனுடைய அதிஷ்டாநத்தை அபேக்ஷிக்கிறதில்லையென்றும் சொல்லுகிறார்கள். வேதாந்திகளோ ப்ருக்ருதி அசித் ஆகையால், ஈஶ்வரனால், அதிஷ்டிதமாகியே மாறுதல்களை யடைந்து, பூதங்களாயும் ஶரீரங்களாயும் மாறி, விவிதமான ஜகத்ஸ்ருஷ்டியைச் செய்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தில் இரண்டு தர்ஶநங்களுக்கும் உள்ள வித்தியாஸம் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் பல விடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. அவைகளில் முக்கியமாய் ஸாங்க்யமதநிரஸநத்துக்காக ஏற்பட்டது, ௨-ம் அத்தியாம் ௨-வது பாதத்தில் ௧ - முதல் ௯ - வரையில் உள்ள ஸூத்ரங்கள். அவைகளின் கருத்தை ஒரு ஸம்வாதமாக எடுத்துச் சொல்வோம்.

இங்கு ஸாங்க்யன் சொல்வது : மஹாந் முதல் பூதங்கள்வரை யிலுள்ள பற்பலவிதமான குணங்களையுடைய த்ரவ்யங்களுக்கு ஒருகாரணவஸ்து வேண்டும். அந்த வஸ்துவுக்கு வேறுகாரணந் தேடுவது, அநவஸ்தையை உண்டாக்கும் ஆகையால், தானே காரணமாய்ப் பலவிதமாக மாறும் சக்தியை யுடைத்தானதாய், தான் ஒரே ரூபமுடையதாய், ஒருவஸ்துவை ஒப்புக்கொள்ள வேணும். அந்த வஸ்துதான், ப்ரக்ருதி அல்லது ப்ரதாநம் என்னப்படும். அதில், மூன்று குணங்களும் ஸமமாய் ஒன்றை ஒன்று அதிகரிக்காமல் அசைவற்று நிற்கின்றன.

வேதாந்தி : அப்படிப்பட்ட காரணவஸ்து ஒன்று இருந்தாலும், அது லோகஸ்ருஷ்டிக்கு ஹேதுவாகமாட்டாது; ஏனென்றால், அசேதநமான ஒவ்வொரு பொருளும் அதன்குணங்களையும் உபயோகங்களையும் அறிந்து ஒரு சேதநனால் ஏவப்பட்டே கார்யங்களைச்செய்யச் சக்தியுள்ளதாய்க் காண்கிறோம்; இதற்கு உதாரணம் - மரம், வாச்சி, கத்தி முதலானவை. அப்படி சேதநஸம்பந்தமில்லாத ஒன்றும் கார்யங்கள் செய்வதாகக் காணோம். மேலும், மூன்றுகுணங்களையுடைத்தான ப்ரதாநத்தை உலகத்துக்கு ஒரே காரணமாகவும் சொல்வது சரியன்று. அன்றியும், மூன்றுகுணங்களும் ப்ரதாநத்தில் ஸமமாயிருக்கின்றன வென்றாலும், அவைகளில் ஏற்றத்தாழ்வு உண்டாக ஒருகாரணமு மில்லாமல், லோகஸ்ருஷ்டி ஆரம்பித்ததற்கே காரணம் ஏற்படாது. ஆகையால், ப்ரதாநம் மாத்திரம் உலகத்துக்குக் காரணமென்பது கூடாது.

ஸாங்க்யன் : சேதந ஸம்பந்த மில்லாமலும், உலகத்தில் மாறுதல்கள் காண்கிறோம் : இதற்குப் பாலும் நீரும் உதாரணங்கள்; பால் கொஞ்சம் கொஞ்சமாய் மாறித் தயிராகுவதும், ஜலம் மேகத்தினின்று ஒரே ஆகாரமாய்க் கீழே இறங்கினாலும் இளநீராகவும், பதனியாகவும், மாம்பழம் விளாம்பழம் புளிவேம்பு முதலானவஸ்துக்களில் வெவ்வேறுரஸமுள்ள வஸ்துவாகவும் மாறுகிறதைக் காண்கிறோம்; இவைகளில் அந்தந்தரஸம் கூட்டுவாரை அறியோம். இப்படியே ப்ரதாநமும் தானே பரிணாமத்தை வஸ்துஸ்வபாவத்தால் அடைகிறது; புருஷன் ஸாக்ஷித்வம்தவிர வேறு உதவியை அபேக்ஷிக்கிறதில்லை.



வேதாந்தி : மேற் சொன்ன உதாஹரணங்களும் ஸதுஸித் தாந்தத்தை ஸ்தாபிக்கின்றன. பால், நீர் முதலானவைகளும் பர ப்ரஹ்மமாகிய சேதநனால் அதிஷ்டிதமாகியே அந்த அந்தப் பரிணாமங்களை அடைகின்றன. இதையே ச்ருதிகள், "யஃப்ஸு திஷ்டந்" "யோऽப்ஸு திஷ்டந்" என்கிற வாக்யங்களால் எங்கும் ப்ரஹ்மம் இருந்து நியமநம் செய்கிறதென்று சொல்லுகின்றன. மேலும், ஸத்யஸங்கல்பனான ஈச்வரனால் ஏவப்படாமல் ப்ரக்ருதிக்கு மாறுதல் ஸ்வபாவமாகில் க்ஷணப்பொழுதும் ஸ்ருஷ்டி, ப்ரளயம் யில்லாம லிருக்க நியாயமில்லை. ஆகையால், ஸ்ருஷ்டி, ப்ரளயம் என்கிற சாஸ்த்ரந்யாய ஸித்தமான அவஸ்தைகள் ஏற்படமாட்டா.

ஸாங்க்யன் : ஈச்வரனான சேதநனை அதிஷ்டாதாவாக ஒப்புக்கொண்டாலும், அவனைப் பரிபூர்ணகாமனாக [அதாவது - எவ்விதத்திலும் குறைவில்லாதவனாயும் ஆநந்தத்தால் நிறைந்தவனாயும்] நீங்கள் சொல்வதனால், அவனுக்கு ஜகத்ஸ்ருஷ்டியால் ஆகவேண்டியதென்ன? ஒன்றுமில்லை யாகையாலும், ஸுகதுக்கங்களைக் கலந்து கொடுப்பதால் கருணையற்றவனென்கிற பெயர்மாத்திரம் மிஞ்சுவதாலும், ஈச்வரன் இருந்தும் ஸ்ருஷ்டி உண்டாகக் காரணமில்லை. ஆகையால், இத்ததோஷம் இரண்டு பக்கத்துக்கும் ஸமாநம்.

வேதாந்தி : இது சரியல்ல; பரிபூர்ண காமனுக்கும் விளையாட்டாகச் சில ப்ரவர்த்திகள் உண்டாகலாம்; மஹாராஜர்களும் விளையாட்டுக்காகப் பந்து முதலானவைகளை ஆடவில்லையா? அப்படியே ப்ரஹ்மமும் ப்ரக்ருதியின் பரிணாமரூபமான ஸ்ருஷ்டி ப்ரளயங்களைக் காணவிரும்புவது ஸஹஜம்; ஜநங்களுக்கு ஸுகதுக்காநுபவங்கள் பேதிப்பதும், தங்கள் தங்கள் கர்மங்களின் ஸ்வபாவ பேதங்களாலே யொழிய ஈச்வரன்தயைக்குறைவினா லல்ல.

ஸாங்க்யன் : ஆனால், ஸ்ருஷ்டி ப்ரளயங்களுக்குச் சேதநர்கள் கர்மபேதங்களே போதுமான காரணங்கள்; ஈச்வரனாகிய வேறொரு சேதநன் எதற்கு? அவரவர்கள் புண்யபாபாநுகுணமாக ப்ருக்ருதியே மாறி அவர்களுக்குத் தகுந்த பலத்தைக் கொடுக்கட்டும். ஆகையால், ஸ்ருஷ்டியும் ப்ரளயமும் மோக்ஷமும் ப்ருக்ருதியாலே ஆகக்கூடியவைதான்.

**வேதாந்தி :** இது, புண்யபாபங்களின் ஸ்வரூபங்களை அறியா
மல் பிதற்றும் வார்த்தை. இது, புண்யம், இது பாபம் என்பது
ஶாஸ்த்ரத்தாலேயே அறியத்தக்கது. ஶாஸ்த்ரம், வேதரூபமா
யுள்ளது. அது, சில கர்மங்களைப் புண்யமென்றும், அதனால் ஈஶ்
வரப்ரீதியும் அதின் பலமாய் ஸுகமும் உண்டாகு மென்றும்
சொல்லுகிறது. மற்றவைகளைப் பாபமென்றும், அதனால் பகவானு
க்கு அப்ரீதியும், அதன் பலமாய்த் தண்டனையாகிய துக்கமும்
உண்டாகுமென்றும் விதிக்கிறது. இப்படி பகவான் கர்மங்களைப்
பிரித்து, அவைகளை அநுஷ்டிக்கத்தகுந்த சரீரத்தையும் இந்திரி
யங்களையும் சேதநர்களுக்குக் கொடுத்து, பொதுவாய் அவைகளை
நல்லதிலும் கெட்டதிலும் செலுத்தச் சக்தியையும், கெட்டவழி
யில் செல்லாமல் அடக்கச் சக்தியையும் கொடுத்திருக்கிறார். சேத
நர்கள் ஸ்வேச்சையாய் இரண்டுவிதமான கர்மங்களையும் செய்வ
தனால், அதற்கு அநுகுணமான பலத்தை ஈஶ்வரன் கொடுக்கிறார்.
தன் கட்டளையை மீறுகிறவர்களிடத்தில் செய்யும் தண்டமானது,
ஒரு ப்ரபுவுக்கும் தோஷமாகாது. மேலும், பகவான் இதரப்ரபுக்
கள்போல வல்லாமல் கெட்டமார்க்கங்களிலிருந்து திரும்ப யத்ந
ப்படும் சேதநனையும் ப்ரீதியுடன் நன்குமதித்து, அவனுக்கு
நல்ல வழியில் செல்ல த்ருடமான புத்தியைக் கொடுத்து, அதன்
மூலமாய் அவனைக் காப்பாற்றுகிறார். ஆகையால், பகவானுக்குப்
பக்ஷபாதமும் தயையின்மையும் ஆகிற தோஷங்கள் சொல்லமுடி
யாது ; அவரைவிட்டுப் பிரதாநத்தைக் காரணமாகவும் சொல்ல
முடியாது.

**ஸாங்க்யன் :** சேதநாதிஷ்டாநமில்லாமல் வஸ்துக்களுக்குப்
பரிணாமசக்தி யுண்டென்பதற்கு மற்றும் த்ருஷ்டாந்தங்களுண்டு;
பசுக்கள் தின்னும் புல் பாலாய் மாறுவது பசுக்கள் இஷ்டத்தினா
லேயோ? வஸ்து ஸ்வபாவந்தானே? அப்படியே ப்ரதாநமும்
மாறுதலடையட்டுமே? பரமபுருஷன் எதற்கு?

**வேதாந்தி :** இங்கும் பரமபுருஷனுடைய அதிஷ்டாநத்தினா
லேயே மாறுதல் சொல்லவேண்டும். இல்லாவிட்டால், காளைமாடு
தின்னும் புற்களும் பாலாகவேண்டுமே? அப்படியாகாததும்,
பசுக்களிடத்தில் பால் சுரப்பதும், பகவானிச்சையால்தான்.



**ஸாங்க்யன் :** நாங்களும் அத்யந்தமாய்ச் சேதநன் ஸம்பந்த
மில்லாமல், ப்ரக்ருதியின் செயல்கள் உண்டாவதாய்ச் சொல்ல
வில்லை. புருஷனாகிய ஜீவன் ஸந்நிதாநத்தினால் அவனிஷ்டமும்
செய்கையும் இல்லாமல் ப்ரக்ருதிக்கு விகாரங்கள் உண்டாகின்
றன. இதற்கும் இரண்டு த்ருஷ்டாந்தங்கள் உண்டு. கண்ணு
ள்ள முடவன் காலுள்ள பொட்டையனை ஏறிச்சென்றால், இரு
வரும் வழிபோகவில்லையா? தனிமையில்செல்ல அசக்தர்களான
வருக்கும் சலநமுண்டாவதுபோல, ஜ்ஞாநமில்லாத ப்ரதாநமும்
விகாரமில்லாத சேதநனும் சேர்ந்து லோகஸ்ருஷ்டி உண்டாகி
றது. மேலும், காந்தக்கல் இரும்பை இழுப்பதும், அசேதநங்
கள் ஸ்வபாவமாய்ச் சலிப்பதற்குத் த்ருஷ்டாந்தம்.

**வேதாந்தி :** இந்தத் த்ருஷ்டாந்தங்களும் அநுகூலங்களல்ல.
நொண்டிக்குப் பார்க்கும் சக்தியிருப்பதால், அது வியாபாரத்து
க்கு ஹேதுவாகிறது. அப்படிப் புருஷனுக்கு ஒரு விகாரத்தை
யும் நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. காந்தமும், இரும்புக்குச் சமீ
பத்தில் கொண்டுவரப்படவேணும். புருஷனோ, அசைவற்றவன்
என்கிறீர்கள். ஸாந்நித்யம் இல்லையோ வென்றால், அது எப்
பொழுதும் இருப்பதால் எப்பொழுதும் ஸம்ஸாரமும், புருஷன்
நித்ய முக்தனாகையால் எப்போதும் மோக்ஷமும் என்கிற விரோ
தங்கள் ஸம்பவிக்கும். இன்னும் சில விரோதங்களும் இந்த
ஸாங்க்ய ஶாஸ்த்ரத்தில் தோன்றுகின்றன ; அவையாவன :—
ப்ரக்ருதியே ஸம்ஸாரத்துக்கும் மோக்ஷத்துக்கும் காரணமென்கி
றீர்கள் ; புருஷன். கேவலம் ஸாக்ஷியென்றும், விகாரமில்லாதவ
னென்றும் சொல்லி, ப்ரக்ருதியின் சேஷ்டைகள் புருஷனை மோ
ஹிக்கின்றன வென்றும் அவைகளை அவன் பார்க்கிறவனாயும்
சொல்லுகிறீர்கள். புருஷனுக்குத் தான் செய்வதாயும் அனுப
விப்பதாயும் வரும் தோற்றங்கள் ப்ரமங்களானாலும் அவைகளும்
நிர்விகாரனான ஶுத்த சைதந்ய ரூபனாகிய புருஷனுக்குச் சொல்
வது ஸித்தாந்த விரோதம். இந்தக்காரணங்களினால், ஸாங்க்ய
தர்ஶநம் ஸங்கதமன்று.

மேல் விவரித்த ஸம்வாதத்தால் ஸாங்க்யத்தில் ப்ரஹ்மத்
தை ஒப்புக்கொள்ளாத பாகத்தை மாத்திரம் வேதாந்திகள் ஆக்ஷே

பிக்கிறார்களே தவிர, மற்றைப் பாகங்களில் ஸாங்க்யத்தின் ப்ரக்ரியைகள் வேதாந்தத்துக்கும் அநேகமாய் ஸமானந்தான் என்பது விளங்கும். முன்னே, புத்தி என்னும் மஹானின் உத்பத்தியையும் அதன் ஸ்வபாவங்களையும் பற்றிச் சொன்னோம். இனி மற்றைத் தத்வங்களின் உத்பத்தியை விவரிக்கிறோம். மஹானினின்றும் அஹங்காரம் உண்டாகின்றது. அஹங்காரமாவது, அபிமானம் அல்லது 'நான்' என்றும் 'எனது' என்றும் உண்டாகும் எண்ணங்களுக்குக் காரணமான த்ரவ்யம். இந்திரியங்களாலும் மனஸினாலும் அறியப்பட்ட விஷயங்களைத் தன்னுடையதென்று நிஸ்சயிக்கிற மநோவ்யாபாரத்துக்கு இந்த அஹங்காரம் ஏதுவாகிறது. இதிலிருந்து இரண்டு விதமான ஸ்ருஷ்டிகளுண்டாகின்றன. அதாவது - ௧௧ - இந்திரியங்களும், ௫ - தந்மாத்ரைகளும். இவைகளில் இந்திரியங்கள் ஸாத்விகாஹங்காரத்தினிடம் உண்டானவை. பூதாதி என்னும் தாமஸாஹங்காரத்தினிடம் ஐந்து தந்மாத்திரைகள் உண்டாகின்றன. ௧௧ - இந்திரியங்களாவன - கண்முதலான ௫ - ஜ்ஞாநேந்திரியங்களும், வாக்கு முதலான ௫ - கர்மேந்த்ரியங்களும், மனஸ்ஸும்; 'இந்த்ரம்' என்றால் ஆத்மா; அதற்கு அடையாளங்களாகையால், இந்த்ரியமென்று இவைகளுக்குப் பெயர். இரண்டு விதமான இந்த்ரியங்களின் ஸ்வபாவமும் மநஸ்ஸுக்கு உண்டு. சிலர் மநஸ்ஸை அந்தஃகரணமென்றும், சிலர் மஹாந், அஹங்காரம், மநஸ் இந்தமூன்றையும் சேர்த்து அந்தஃ கரணமென்றும் சொல்வார்கள். ஜீவனுள்ள சரீரங்களிலெல்லாம் இந்த மூன்று அந்தஃகரணங்களும் இருந்து ப்ராணன் முதலான ஐந்துவித காற்றுப்போன்ற வ்யாபாரத்தினால் சரீரத்தைத் தரிக்கின்றன.

அஹங்காரத்தின் தாமஸ பாகத்திலிருந்து தந்மாத்திரைகளுண்டாகின்றனவென்று முன்சொன்னோம்; அவைகளாவன - ஆகாஶ தந்மாத்ரம், வாயு தந்மாத்ரம், தேஜஸ்தந்மாத்ரம், ஜலதந்மாத்ரம், ப்ருதிவீதந்மாத்ரம்; இந்த ஐந்திலிருந்தும் ஐந்து பூதங்களும் உண்டாகின்றன. வேதாந்திகள் ஐந்துபூத ஸூக்ஷ்மங்களும் முதலில் தனியாய் உண்டாகி, பிறகு ஒவ்வொன்றிலும் 4 - பாகமும், மற்றவைகளில் ஒவ்வொரு பாகமும் சேர்ந்து, பூதங்களாகின்றனவென்று சொல்லுகிறார்கள். இதற்குப் பஞ்சீகரண



மென்று பெயர். ஸாங்க்யர்களோ, ஆகாஶ தந்மாத்ரையினின்று ஆகாஶமும், ஆகாஶவாயுதந்மாத்ரைகளிலிருந்து வாயுவும், இப்படியே மூன்று, நாலு, ஐந்து தந்மாத்திரைகளின் சேர்க்கையினால் மற்றைப் பூதங்களும் உண்டாகின்றனவென்று சொல்லுகிறார்கள். தந்மாத்ரங்கள் விஶேஷமில்லாதவைகள். அதாவது - பூதங்களில் உண்டாகும் சாந்தம், கோரம், மூடம் என்னும் மூன்று விதமாய்க் குணக்ருதமான ஸ்வபாவங்களில்லை. தந்மாத்ரங்கள்வரையிலுள்ள ப்ருக்ருதி விகாரங்கள் ஸூக்ஷ்மங்களாயும், அப்ரத்யக்ஷங்களாயும் உள்ளனவென்று முன்பேசொன்னோம். பூதங்கள் ஐந்தென்பதும், அவைகள் ஒவ்வொன்றும் மற்ற பூதங்களின் ஸம்பந்தம் பெற்றவைகளென்பதும், அவைகளுக்கு ஶப்தம், ஸ்பர்ஶம், ரூபம், ரஸம், கந்தம் என்பவை முறையே குணங்களென்பதும் தெரிந்த விஷயங்கள்.

இந்தப் பூதங்களின் சேர்க்கையால் உண்டாகும் வஸ்துக்களில், ஶரீரங்கள் முக்யமானவை. இவை - ஸூக்ஷ்மம் அல்லது லிங்கசரீரமென்றும், ஸ்தூலசரீரமென்றும் இருவகைப்படும். ஸூக்ஷ்ம சரீரம் - அநாதியாய், ப்ரதி புருஷம் ஒவ்வொன்றாய், முக்திவரையில் தொடர்ந்ததாய், ப்ரளயத்திலும் ஸ்தாயியாய், தந்மாத்ரைகளால் அமைந்ததாய், ஆனால் ஶாந்தம் முதலான வாஸனைகளுள்ளதாய்ச் சொல்லப்படுகிறது. புருஷன் ஒரு ஜந்மம் முடிந்து மற்ற ஜந்மமெடுக்கும்போது இதுவே தொடருகிறது. இந்தச் சரீரத்துக்கு ஸ்தூல சரீர பரிக்ரஹமில்லாமல் ஸுகதுக்காநுபவமில்லை. நரகாதிஸ்தானங்களிலும் அநுகுணமாக ஸ்தூலசரீரமுண்டு. புருஷன் என்னும் பதம், புரி - ஸ்தூல சரீரத்தில், ஶேதே - இருக்கிறான் என்கிற வ்யுத்பத்தியால், ஸ்தூல சரீரத்திலுள்ள ஸூக்ஷ்மசரீரத்துடன் கூடின சேதநனைக் குறிக்கிறது. நாடகத்தில் ஒரே நடன் பல வேஷங்களைத் தரிப்பதுபோல இந்த ஸூக்ஷ்மசரீரத்துடன் கூடிய புருஷன் கர்மாநுகுணமாகப் பல வேஷங்களைத் தரிக்கிறான். இதை, "புருஷார்த்தஹேதுகமிதம் நிமித்தநைமித்திகப்ரஸங்கேந । ப்ரக்ருதேர்விபுத்வயோகாந்நடவத்வ்யவதிஷ்டதே லிங்கம்" என்று காரிகை (42) சொல்லுகிறது. இதையே "[illegible]

ஸிஸ்ருக்ஷு: ப்ரஜா நிரூபணாஹ்ராம்” என்னும் வேதாந்தஸூத்ரம்-(௩, ௧, ௧.) சொல்லுகிறது.

எல்லா ஸித்தாந்தங்களுக்கும் பொதுவா யிருக்கும் அர்த்தத்தைப் பின்வரும் காரிகை சொல்லுகின்றது,

“தர்மேண கமநமூர்த்வம், கமநமதஸ்தாத் பவத்யதர்மேண।
ஜ்ஞாநேந சாபவர்கோ விபர்யயாதிஷ்யதே பந்த:”

(கா, ௪௪)

தர்மத்தினால் ஸ்வர்க்காதி லோகங்களிற் செல்லுதலும் அதர்மத்தினால் நரகலோகங்களிற்செல்லுதலும் உண்டாகின்றன. ஜ்ஞாநத்தினால் மோக்ஷமும், அஜ்ஞாநத்தினால் ஸம்ஸாரபந்தமும் உண்டாகின்றன.

இனி, இந்த ஸாங்க்ய சாஸ்த்ரப்படி விபர்யயம், அசக்தி, துஷ்டி, சித்தி என்கிற பந்தத்துக்குக் காரணமான பாவங்களையும், அவைகளில் விபர்யயத்தின் ரு - பேதங்களையும், அசக்தியின் 28 - பேதங்களையும், துஷ்டியின் கூ - பேதங்களையும், சித்தியின் அ - பேதங்களையும் விவரித்தால் மிகவும் இந்த வ்யாஸம் விஸ்தரிக்கு மானதாலும், அந்த விவரம் விசேஷமாய் வேதாந்தமறிய விரும்புவோருக்கு அநாவச்யமாகையாலும், இதனுடன் ஸாங்க்ய தர்சநத்தின் ப்ரகாரங்களைச் சொல்லி முடிக்கிறோம்.

டி. ராஜகோபாலாசாரியர்.

162434 ... 600 008.

# வார்த்தாமாலை.

## முதல் வார்த்தை.

எம்பெருமானார் திருநாட்டுக்கெழுந்தருளுகிறபோது ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருந்த முதலிகளுடைய ஆர்த்தியைக் கண்டருளி, எம்பெருமானார் இவர்களை அழைத்து, “என்னுடைய வியோகத்தில் தேஹத்யாகம் பண்ணினாருண்டாகில் ஆளவந்தார் ஸ்ரீபாதமே; என்னோடு அவர்களுக்கு ஸம்பந்தமில்லை” என்று அருளிச்செய்ய, முதலிகளும் அதைக்கேட்டு மிகவும் சோகார்த்தராய், “இனி எங்களுக்குச்செய்ய அடுப்பது எது?” என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானார், பின்வருமாறு அருளிச்செய்தார்:—“ஒருவன் ப்ரபந்நனானால் அவனுடைய ஆத்மயாத்ரை பகவததீநையாகையாலே அதில் அவனுக்கு அந்வயமில்லை; உண்டென்றிருந்தானாகில் ஆத்மஸமர்ப்பணம் பொய்யா மித்தனை. தேஹயாத்ரை கர்மாதீநமாகையாலே அதுக்குக் கரையவேண்டா; கரைந்தானாகில் நாஸ்திகனுமித்தனை. ஆகையால், உபயயாத்ரையையும் கொண்டு இவனுக்குக் கார்யமில்லை. ஆனால், மநோவாக்காயங்களாகிற த்ரிவிதகரணங்களையுங் கொண்டு வேண்டிற்றுச்செய்து திரிய அமையுமோ வென்னில், அது இவனுக்கு ஸ்வரூபமன்று. உபாயாம்சத்தில் அந்வயமில்லாவிட்டால், ப்ராப்யமான கைங்கர்யத்திலே இவற்றை அந்வயிக்குமித்தனை. அதில் இவனுக்கு இங்கிருந்த நாள் பண்ணலாம் கைங்கரியம் ஐந்து உண்டு:—அவையாவன - ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்; அதுக்கு யோக்யதை யில்லையாகில், அருளிச்செயலைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல்; அதுக்கு யோக்யதை யில்லையாகில் உகந்தருளின திவ்யதேசங்களுக்கு அமுதுபடி சாத்துப்படி திருவிளக்குத் திருமாலைகளை யுண்டாக்குதல்; அதுக்கு யோக்யதை யில்லையாகில் த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தாநம் பண்ணுதல்; அதுக்கு யோக்யதை யில்லையாகில் என்னுடையவன் என்று அபிமாநிப்பானொரு ஸ்ரீ

வைஷ்ணவனுடைய அபிமாநத்திலே ஒதுங்கி வர்த்தித்தல் செய்ய லாம்."

---

## இரண்டாம் வார்த்தை.

ஆழ்வான் அந்திமதஶையிலே விடாயிலே நாக்கொட்டி எம்பெருமானார் திருவடிகளைப் பிடிக்க, இவர் அப்போது ஆழ்வான் செவியிலே த்வயத்தை அருளிச்செய்ய, "இப்பேறு நமக்கு வருகை அரிது! நாம் என்செய்யக் கடவோம்?" என்று அப்போது ஸேவித்திருந்த முதலிகள் கலங்க, இவர்கள் அபிப்ராயத்தைத் திருவுள்ளம்பற்றி, "ஆழ்வான்ப்ரக்ருதி யறியீர்களோ? இவ்வவஸ்தையில் இவருக்கு இது கர்ப்பூரத்தையும் கண்டசர்க்கரையையுமிட்ட மாத்ரமன்றோ? நாம் இது உபாயத்துக்குப் பரிகாரமாகச் செய்தோமல்லோம்" என்று அருளிச்செய்ய, முதலிகள் தெளிந்து நிர்ப்பரரானார்கள்.

---

## மூன்றாம் வார்த்தை.

கேவல ப்ராஹ்மணனுக்கும் கேவல ஶூத்ரனுக்கு முள்ள எல்லை பாகவத ப்ராஹ்மணனுக்கும் பாகவத ஶூத்ரனுக்குங் கொள்ளவேணு மென்றும், இவர்களை ஸமரென்கிற ஶாஸ்த்ரங்களும் பரம புருஷார்த்த ஸாம்யாதிகளாலே யென்றும் கிடாம்பி அப்புள்ளார் அருளிச்செய்தார்.

---

## நான்காம் வார்த்தை

து꞉காதிகளுக்குக் காரணமான ப்ராரப்த கர்ம விஶேஷத்தை ஸங்க்ஷிப்தமான கபாதிகளைப்போலே துணையாகக்கொண்டு பித்ராதிகளைப்போலே ஶிக்ஷகனை ஈஶ்வரன் சில கடிந ப்ரக்ருதிகளுக்குப் பண்ணுகிற அநுக்ரஹவிஶேஷமென்று அநுஸந்திக்கை உசிதம். ஒரு வ்யாதி விஶேஷத்தை யுண்டோ வென்று ராஜா கேட்க அவரும் ஒரு உபாத்யாய ருண்டென்று பட்டர் அருளிச்செய்தார்.

வி. ராகவாசார்யர்.

ஸ்ரீ꞉.

# கஜேந்த்ரவரதன்.

நமது பூர்வாசார்யர்களில் அந்யதமரான ஸ்ரீ பராஶர பட்டர் எம்பெருமானுடைய கல்யாண குணங்களைப் பலவிதமாக அநுபவித்து வருகையில், கஜேந்த்ராழ்வானுடைய ஸம்ரக்ஷண அவஸரத்தைப் பின்வருமாறு நாலு ஶ்லோகங்களால் பரமபோக்யமாக அநுபவிக்கிறார்.

(1) தீவ்யத்ஸஹஸ்ரம் பத்மஜஹ்ருஸ்யராணகிஸலயே
ஸம்வஹமஜ்ஞாத்யாஸவஹநாத்ய
ஸுத்யஸ்யாதஸஹோர்மம் ஸபதி
ஸுவபத்ம வக்ஷஸீ விஷ்ணோ꞉ ।
ஆக்ஷிப்யேஸ்யாஸ்ய ஸுக்ஷ்யா꞉
ஸ்தகஸ ககத்தம் கதிஹ்வோர்த்வம்கார
தேவ꞉ ஸ்ரீரங்கயாத்ர மஜவதிவக்ஷிதே
வ்யாக்ஷஷ꞉ ஸ்தாக வந்தநாத꞉ ॥

"ஸதத நாமவாஸ꞉ ஸ்ரீதாஸ" என்கிறபடி பகவத் கைங்கர்ய லக்ஷ்மியால் ஸம்பந்நனாக இருக்கும் ஸ்ரீ கஜேந்த்ராழ்வான், ஒரு ஸமயத்தில் ஒரு தாமரைமடுவில் இழிந்து, அங்கு இருந்த தாமரைப் பூக்களைப் பறித்து விளையாடிக்கொண் டிருக்கையில், அங்கு பலவத்தரான ஒரு நீர்ப்புழுவாலே இழுப்புண்டு, "மஜ க்ஷுத்தே தீரே க்ராஹ க்ஷுத்தே ஜலே" என்கிறபடி ஆயிரம் வருஷம் அதனுடன் யுத்தம் பண்ணி, தன்னுடைய யத்நம் நிஷ்ப்ரயோஜந மாகப் போய்த் தனக்குப் பரமமான ஆபத்து வந்தவுடன் இன்னது செய்கிறது என்று தெரியாமல் மநஸ்ஸால் பகவானை நினைத்துப் பூர்வஜந்ம ஜ்ஞாந பலத்தால்

வாக்கினாலும் "நாராயணாவோ மணிவண்ணா நாகணையாய், வாராய் என்னாரிடரை நீக்காய்" என்கிறபடி கதறிக்கூப்பிட்டான்; அந்த ஸமயத்தில், ஸ்ரீ பகவாந் திருவநந்தாழ்வானுடைய திருமேனியாகிற படுக்கையில் பிராட்டிமாருடன் ஒரு சேர்த்தியில் எழுந்தருளியிருந்த தாகவும், கஜேந்த்ராழ்வானுடைய கோஷம் திருச்செவிகளில் விழுந்தவுடன் மிகுந்த பரபரப்புடன் தமது திருவடிகளைப் பிடியாநின்றுள்ள பிராட்டிமார் திருக்கைகளில்நின்று அவைகளைப் பலாத்கரித்து இழுத்தும், அநந்தனுடைய உடலாகிற படுக்கையை அப்போதே விட்டும், திருக்கண்களை மலர விழித்தும், பெரியபிராட்டியார் மார்பி லிருக்கும் குங்குமக் குழம்பில் நின்று தமது திருமார்பைப் பேர்த்தும், இப்படிப் பகவாந் வ்யாகுலரான தாகவும் சொல்லி, அப்படி வ்யாகுலராவது எம்பெருமானுக்கு ஆபந்நர்களிடத்தி லிருக்கும் வாத்ஸல்யாதிஶயத்தைக் காட்டுகிறபடியால், அவ்விதமான வ்யாகுலரான பெரிய பெருமாளே தமக்கு ஶரணமென்று ஸ்ரீ பட்டர் கொண்டாடுகிறார்.

**அந்வயம் :—** गजपतिव्यसने सति, [illegible]

(2) [illegible]

இப்படி பகவாந் அதிவ்யாகுலராய் எழுந்தருளும்பொழுது, ஸ்ரீ ஸேனைமுதலியார் கைகொடுக்க, அதைப் பிடித்துக்கொள்ளாமலும், அங்கு இருப்பவரால் ஸமர்ப்பிக்கப்பட்ட மணிமயமான திருவடி நிலைகளை அங்கீகரியாமலும், அந்தஃபுரத்தி லுள்ளார் 'இது என்ன வ்யாகுலதை?' என்று கைநெரிக்கவும், வாஹநத்துக்கு வேண்டிய ஜேணம் முதலிய அலங்காரங்களைத் தரித்துக் கொள்ளுதற்கும் முந்தியே பெரியதிருவடியின்மேலேறி த்வரித்தும் எழுந்தருளுகிற பெரியபெருமாளுடைய பரபரப்புக்குத் தோற்றோமென்கிறார்.



**அந்வயம் :—** [illegible] मणिपादुकं, [illegible] किं किमिति [illegible] यथातथा [illegible] नमः ॥

(3) यं पश्यन् [illegible]
[illegible]
हुङ्कार [illegible]
तं तार्क्ष्यं [illegible]
[illegible]
[illegible]
[illegible] श्रीरङ्गबन्धो [illegible]
[illegible] ॥

ஹே ஸ்ரீரங்க பந்தோ! இதற்கு முந்தி அநேக ஸமயங்களில் பெரியதிருவடியின் வேகத்தை நிரூபித்து மகிழ்ந்து, 'ஸகல ஜகத்தையும் நிர்வஹிக்கும் நம்முடைய மநஸ் தான் மிக்க வேகமுற்றது என்று நினைத்திருந்தோம்; இதன் வேகத்தைப் பார்த்தால், அது அத்யந்தம் ம்ருதுவென்றே சொல்லவேணும்' என்று தேவரீர் நிஸ்சயித்திருக்கச் செய்தேயும், இப்பொழுது கஜேந்த்ராழ்வானுடைய கூப்பாடு உஜ்ஜ்ரும்பிப்பதை ஸஹியாமல், அப்படிப்பட்ட பெரியதிருவடியின் வேகத்தையும் போதாது என்று எண்ணி, ஹுங்காரத்தாலும் திருக்கைகளால் தட்டுதலாலும் திருவடிகளால் உறைக்க உதைத்தலாலும் அவரையும் மருட்டி, அதுவும் போதாமல் அந்தப் பெரியதிருவடியைத் தேவரீரே

இரண்டு திருவடிகளாலும் இடுக்கிக்கொண்டு விளம்பி ஓடினீரே! இது என்ன ஆச்சர்யம்? ஒரு பயஹேதுவைக் கண்டு நடுங்கி ஓடு கிறவனுடைய அவஸ்தை கூட இப்படி இராதே! ஆர்த்தனொரு வன் ஆச்ரயித்து விட்டால் இவ்வளவு பரபரப்பு வேணுமோ?

அன்வயம்:—ஹே ஶ்ரீரங்கபங்கஜேஶ! தேவ! [ஜந: ஸர்வ:] யம் தாத்ருஶம் ஸம்ப்ரேக்ஷ்ய [யஸ்ய] வேஷம் நிரீக்ஷ்ய [illegible] ஶங்காராம் [illegible] ஸ்வஸம் [illegible], தம் தாத்ருஶம் [தத்] பங்கஜேஶ: ப்ரஹ்ருஷ்டே ஜ்யம் [illegible] ஸமா[illegible]; கிம் [illegible]; [அஹோ] [illegible] ஶரணம் [illegible].

(4) ஶ்ரீரங்கேஶய ஶரணம் த்வமஸி வாத்யா
வ்யாலோலத்கமலதடாகதாண்டவேந ।
ஸ்ரஸ்தாபூஷாம்பரவிபர்யயம் பயாதோ
[illegible] ॥

ஹே ஸ்வாமிந்! அப்படி ஓடுங்காலத்தில் உம்முடைய வேஷத்தைப் பார்த்த எல்லாரும் சிரித்தே யிருப்பார்கள். பெருங்காற்றால் அலைக்கப்பட்ட தாமரைத்தடாகம் என்ன பாடு படுமோ அந்தப் பாட்டுடன் இன்ன இன்ன ஆபரணங்களை இன்ன இன்ன இடத்தில் தரித்துக்கொள்ள வேணுமென்பதை மறந்து கழுத்தில் அணிந்துகொள்வதைக் காலிலும், காலி லிருக்கவேண்டியதைத் தலையிலும் வ்யுத்க்ரமமாகத் தரித்து வஸ்த்ரம் போனது தெரியாமல் ஓடினது மன்றி, 'ஐயோ விளம்பித்துவிட்டேனே!' என்று பலவாறாகத் தன்னைக் கர்ஹித்துக்கொண்டீரே! இது என்ன வாத்ஸல்யம்? அப்படிப்பட்ட நீரே நமக்கு ஶரணம்.

அன்வயம்:—ஹே ஶ்ரீரங்கேஶய! [illegible] [illegible] வாத்யா வ்யாலோலத்கமலதடாகதாண்டவேந ஸ்ரஸ்தாபூஷாம்பரம் [illegible] 'விலம்பி' இதி [illegible]; [தாத்ருஶ:] த்வமேவ நஶ் ஶரணம் அஸி.

பத்ராதிபர்.

# ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபையின்

## இரண்டாவது மஹாஸங்கம்.

சென்ற மார்கழிமீ 13, 14, 15 - தேதிகளில், தஞ்சாவூர் ஜில்லா நீடாமங்கலம் ராஜா ஸத்ரத்தில் ஷை ஸபையின் இரண்டாவது மஹாஸங்கம் சேர்ந்தது. மஹாமஹோபாத்யாயர் பெருகவாழ்ந்தான் ஸ்ரீ. உ.ஸ. ரங்காசார்யர் ஸ்வாமி அக்ராஸநாதிபதியாக எழுந்தருளியிருந்தார். ஸங்கத்தில் உபந்யாஸம் செய்வதாக அங்கீகரித்திருந்த வித்வாங்களும், இன்னும் ஸபையின் ஹிதத்தைத் தேடுமவர்களான ஆஸ்திகர்களில் அநேகரும், நாநாதேஶங்களிலிருந்து வந்திருந்தார்கள். ஸபையின் உபஸபாத்யக்ஷரான வேலாமூர் ஸ்ரீ. உ.ஸ. க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமியும், தஞ்சாவூர்ப் பிரிவின் ஸபாத்யக்ஷரான ஸ்ரீ. உ.ஸ. டி. கோதண்டராம ஐயங்கார் ஸ்வாமியும் மஹாஸங்கம் நல்ல பரிநிஷ்பத்தியை அடைவதற்கு வேண்டியவையான ஏற்பாடுகள் எல்லாவற்றையும் ஒருகுறைவு மன்றியில் செய்திருந்தார்கள். ஸங்கம் சேர்வதற்கு 3 - தினங்கள் முன்னமேயே ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. உ.ஸ. டி. ராஜகோபாலாசார்யரும், கார்யதர்ஶி ஸ்ரீ. உ.ஸ. வி. ராஜகோபாலா சார்யரும், ஸ்ரீ. உ.ஸ. டி. கோதண்டராம ஐயங்காருடன்கூட நீடாமங்கலம் போயிருந்து பூர்வ ஸம்விதாநங்களை க்ருப்திகரமாக நடத்திவைத்தார்கள்.

இந்த மாதிரி ஸங்கம் சேர்வதையும், ஶிஷ்யர்கள் ஒன்றுசேர்ந்து ஸ்ரீ மடத்தின் விஷயங்களைப் பற்றிப் பர்யாலோசிப்பதையும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் முதலில் விஜ்ஞாபநம் செய்து, அவருடைய அநுக்ரஹத்தைப் பெற்றுப் பிறகு சேர்வது உசிதம் என்று எண்ணி, ஸபாத்யக்ஷரும் இன்னும் சிலரும், டிபுடி கலெக்டர் ஸ்ரீ. உ.ஸ. டி. ரங்கஸ்வாமி ஐயங்காரை யும் தமிழ்ப்பண்டிதர் தி. வெங்கடராம ஐயங்காரையும் ப்ரார்த்திக்க, அவர்கள் அதைத் திருவுள்ளம் பற்றி 13 - ம் தேதி மத்யாஹ்நத்துக்கு மேல் ராஜமன்னார் ஸந்நிதிக்குப் போய் ஸ்ரீ அழகியசிங்கரைத் தண்டன்ஸமர்ப்பித்துத் தாங்கள் வந்திருக்கும் கார்யத்தை விண்ணப்பம் செய்தார்கள்,

ஸ்ரீ ஸ்வாமியும் அவர்களை நிராகரிக்காமல் தமது ப்ரதி நிதியாக ஸ்ரீ மடத்திலிருந்து ஒரு ஸ்வாமியை மஹாஸங்கத்துக்கு அனுப்புவதாக நியமித்ததாக அவர்கள் திரும்பி வந்து ஸமாசாரம் சொல்ல எல்லாரும் ஸந்தோஷம் அடைந்து ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் மிகுந்த க்ருதஜ்ஞதையுடன்கூடினவர்களாக ஆனார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ அந்தமாதிரி ப்ரதிநிதியாக ஒருவரும் ஸங்கத்துக்கு வரவில்லை.

13-தேதி காலை 7-மணி முதல் கூட்டம்சேர ஆரம்பித்தது. 12-மணிக்குத் ததியாராதநம் நடந்த பிறகு 1-மணிக்கு ஸங்கம் உபகரமித்து, 511-வது பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் க்ரமப்படி ஸகல உபந்யாஸங்களும் மற்றவைகளும் நடைபெற்றன. ஸ்ரீ. உ.ஸ. வே. க்ருஷ்ணமாசார்யரின் ஸ்வாகத விஷயகமான உபந்யாஸமும், ஸபாத்யக்ஷரின் ஸ்ரீ அஹோபிலமட விஷயகமான உபந்யாஸமும், இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

அக்ராஸநாதிபதி, இந்தமாதிரி ஸபை சேர்வதன் நன்மையைப்பற்றியும், அடிக்கடி ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் மடத்தின் அபிவ்ருத்திக்கு ஹேதுவாக இருக்கும் சீர்திருத்தங்களைப்பற்றி விஜ்ஞாபநம் செய்து கொள்வதன் ஔசித்யத்தைப் பற்றியும், ஜ்ஞாநத்தை வ்ருத்தி செய்து பரவச் செய்யும்பொருட்டுத் தகுந்தவித்வான்களைப் பலவிடங்களில் ஸ்ரீ அழகியசிங்கர் நியமிக்க வேணு மென்பதைப் பற்றி நாம் ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபநம் செய்ய வேண்டியதன் ஆவஶ்யகதையைப் பற்றியும் ஸங்க்ரஹமாகவும் எல்லாருடைய மனத்திலும் நன்றாகப் பதியும்படியாகவும் எடுத்துச்சொல்லி மஹா ஸங்கத்தை உபக்ரமித்தார். பிறகு ஸபாத்யக்ஷர், அநேக முக்கிய விஷயங்கள் அடங்கியதான தம்முடைய உபந்யாஸத்தைப் படிக்க, அதைக் கேட்டு அங்கு வந்திருந்த எல்லாரும் ஆநந்தத்தை அடைந்தார்கள். சென்னை பட்டணம் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. உ.ஸ. தி. வெங்கடராம ஐயங்கார் ஸ்வாமி அந்த ஸமயத்துக்கு அநுரூபமாக அவர் எழுதிக்கொண்டு வந்திருந்த "ஸ்ரீ அஹோபில மடத்தின் ஶிஷ்ய வர்க்கத்தாருக்கு ஒரு விநய விண்ணப்பம்" என்னும் செய்யுள் ரூபமான க்ருதியைப் படித்தார். அது மற்றொரு பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

பிறகு வித்வாந் ஸ்ரீ. உ.ஸ. ஶதாவதாநம் ஸ்ரீநிவாஸாசார்யர் "ப்ரபத்தி" வித்யையைப்பற்றி ஓர் சிறந்த உபந்யாஸம் செய்தார். அது முடிந்தவுடனே சற்று நேரம் விராம மிருந்தது. பிறகு எல்லாரும் ஒன்றுசேர்ந்து வித்வான் ஸ்ரீ. உ.ஸ. சேட்லூர் நரஸிம்ஹமா சார்யரால் செய்யப்பட்ட

OFFICE 1 FEB 1912 MADR



"கர்மயோக" த்தைப்பற்றிய உபந்யாஸத்தைக் கேட்டு மிகுந்த ஆநந்தத்தை அடைந்தார்கள். இராத்திரி ததியாராதநம் ஆனவுடன் ஸ்ரீ. உ.ஸ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்ரீ பாகவதத்தில் ருக்மிணீ கல்யாண கட்டத்தைப் பாராயணம் செய்து அதன் அர்த்தத்தை எடுத்து உரைத்தார். அவர் அர்த்தம் சொன்ன மாதிரியும், திவ்ய ப்ரபந்தத்திலிருந்து அங்கங்கே அநுகுணமான பாசுரங்களைச் சொல்லி அவைகளை விவரித்த மாதிரியும் அத்யாஶ்சர்யமாகவே இருந்தன.

மறுநாள் 14-ம் தேதி காலை 8-மணிக்கு எக்ஸிக்யுடிவ் போர்டாரின் மீட்டிங் நடந்தது. அதற்குப் பிறகு அங்கத்தினர்களின் ஸங்கம் நடந்தது. இவைகளில் நடைபெற்ற விஷயங்கள் 514-516-வது பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. மத்யாஹ்நம் 2-30-மணிக்கு வித்வாந் ஸ்ரீ. உ.ஸ. வாஜபேயம் வீரராகவாசார்யர் ஸ்வாமி "அவதார ரஹஸ்ய" த்தைப்பற்றி உபந்யாஸம் செய்தார். உத்தேசம் இரண்டு மணி ஸாவகாஶம் இந்த உபந்யாஸம் நடந்தது. பண்டித பாமர ஸாமாந்யமாக எல்லாருக்கும் அத்யந்தம் ரஞ்ஜகமாக இருந்ததுடன் கூடக் கூடமான அநேகவிஷயங்கள் அடங்கியதாகவும் இந்த உபந்யாஸம் இருந்ததைப்பற்றி எல்லாரும் மிகவும் ஶ்லாகித்தார்கள்.

இதற்குப்பிறகு, கனம் பொருந்திய வி. க்ருஷ்ணஸ்வாமி ஐயர் காலம் சென்றுவிட்டதாகத் தெரியவந்ததைப்பற்றி மிகுந்த வருத்தத்துடன் ஸபாத்யக்ஷர் சில வார்த்தைகளைப் பேசி, அவருடைய சிறந்த குணங்களையும் இன்னும் கொஞ்சகாலம் அவர் ஜீவித்திருக்கும் பக்ஷத்தில் அவரால் ஜநங்களுக்கு நேரக்கூடிய நன்மைகளையும் ஸம்ஸ்க்ருத பாஷா விஷயமாகவும் ஹிந்து தேஶத்திய வைத்ய ஶாஸ்த்ர விஷய மாகவும் அவர் செய்திருக்கும் உபகாரங்களையும் பலவாறாகப் புகழ்ந்து, இந்த ஸபையார் இது விஷயமாக க்ருஷ்ணஸ்வாமி ஐயருடைய ஸம்நிஹித பந்துக்களைத் துக்க ப்ரஶ்நம் செய்வதாகத் தாம் அவருடைய தம்பியாருக்குத் தந்திகொடுக்கும்படி ஸபையார் அநுமதி கொடுக்கவேண்டு மென்று கேட்டார். அங்கு வந்திருந்தவர்களில் சிலர் ஸபாத்யக்ஷர் சொன்னது எல்லாவற்றையும் ஆமோதித்ததன் பேரில், அந்தமாதிரி அநுமதி கொடுப்பதாகத் தீர்மானம் செய்யப்பட்டது. தீர்மானம் செய்யுங்காலத்தில் தங்களுக்கு இருக்கும் துக்கத்தைக் காண்பிக்கும்படி ஒரு சிஹ்நமாக எல்லாரும் எழுந்திருந்து நின்றார்கள்.

இரவில் 9-மணிக்குமேல் ஸ்ரீ. உ.ஸ. எம். கே. தாதாசார்யர் "ஸேதுபந்தநம்" என்னும் ஓர் ஹரிகதை செய்தார். ஏராளமான கூட்டம் சேர்ந்தது. இந்தக் கதையைக் கேட்டு ஆநந்திக்காதவர் ஒருவரும் இல்லை.

மறுதினம் 15-ம் தேதி காலை 9-மணிக்கு வித்வான் ஸ்ரீ. உ.ஸ. புத்தகோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் "பகவத் விஷய" த்தைப்பற்றியும், வித்வான் ஸ்ரீ. உ.ஸ. திருப்புல்லாணி ரகுபதி ஐயங்கார் "அர்ச்சாவதார வைபவ"த்தைப் பற்றியும் உபந்யாஸம் செய்தார்கள். இரண்டும், மிகவும் சிறந்தவைகளாகவே இருந்தன.

மத்யாஹ்நம் 2-மணிக்கு வித்வான் ஸ்ரீ. உ.ஸ. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் "உபநிஷத்துக்களும், ப்ரஹ்ம ஸூத்ரங்களும்" என்னும் விஷயத்தைப்பற்றி அதிரஞ்ஜகமாக ஓர் உபந்யாஸம் செய்தார். "லக்ஷ்மீதத்வம்" என்னும் விஷயத்தைப்பற்றி, எக்ஸிக்யுடிவ் போர்டாரின் வேண்டுகோளின் பேரில் திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ. உ.ஸ. திருவேங்கடாசார்யர் ஓர் உபந்யாஸம் செய்வதாக ஒப்புக்கொண்டிருந்தார். தமக்கு வரக்கூடாமல் சில அனனுகூல்யங்கள் ஏற்பட்டுவிட்டபடியால், அவர் அந்த உபந்யாஸத்தை எழுதி அனுப்பி யிருந்தார். அதைப் படிக்க அவகாசம் மிதமாக இருந்தபடியால், பிந்தி ஸ்ரீ வேதாந்ததீபிகை ஸஞ்சிகைகளில் அதை அச்சிட்டு எல்லாருக்கும் தெரியும்படி ப்ரசுரம்செய்துவிடுகிறது என்று தீர்மானம் செய்யப்பட்டது.

கடைசியில், தம்முடைய வார்த்தகத்தையும் அசக்தியையும் பாராட்டாமல் மிகுந்த உத்ஸாஹத்துடன் எழுந்தருளி அக்ராஸநாதிபதியாக இருந்து அநுக்ரஹித்த மஹா மஹோபாத்யாயர் ஸ்ரீ. உ.ஸ. ரங்காசார்யர் ஸ்வாமி விஷயமாகவும், தங்களுடைய பரிஸ்ரமத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் மிகுந்த க்ருபையுடன் எழுந்தருளி ஜ்ஞாந ஜநகங்களான உபந்யாஸங்களைச் செய்த ஸ்வாமிகள் விஷயமாகவும், மஹாஸங்கத்திற்காகவே வந்திருந்த எல்லா ஜநங்களுக்கும் ஒருவகைக் குறைவும் வராமல் தகுந்த ஏற்பாடுகள்செய்த ஸ்ரீ. உ.ஸ. வே. க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ. உ.ஸ. டி. கோதண்டராம ஐயங்கார் என்ற இரண்டு ஸ்வாமிகள் விஷயமாகவும், ஸதஸ் சேர்வதற்கு ஸமீசீநமான ஸ்தலமாகிற ராஜாஸத்ரத்தை உபயோகித்துக் கொள்ளும்படி அநுமதிகொடுத்த டிஸ்ட்ரிக்ட்டு போர்டு ப்ரெஸிடெண்டு ப்ரபு விஷயமாகவும், ஸபையாருக்கு உண்டாயிருந்த க்ருதஜ்ஞதையை ஸ்ரீ. உ.ஸ. திருப்புல்லாணி ரகுபதி ஐயங்கார் ஸ்வாமி ஓர் சிறிய உபந்யாஸ ரூபமாக ஆவிஷ்கரித்தவுடன் மஹாஸங்கம் கலைந்தது.

---

## ஸங்கத்தின் விஷயஸூசிகை.

(தஞ்சாவூர் ஜில்லா நீடாமங்கலத்தில் 1911-ம் வருஷம் டிஸம்பர் மீ 28, 29, 30உ களில் நடைபெற்றது.)

மஹாமஹோபாத்யாயர் பெருகவாழ்ந்தான் உ. ஸ்ரீ. ரங்காசார்யர் ஸ்வாமி - அக்ராஸநாதிபதி.

### மார்கழி மீ 13உ வியாழக்கிழமை

பகல் 1-மணி: i. நல்வரவளித்தல்:
ஸ்ரீ. உப. வே. க்ருஷ்ணமாசார்யர் பி.எ., தஞ்சாவூர்.
ii. அக்ராஸநாதிபதியின் உபக்ரமம்.
iii. "அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்": ஸ்ரீ ஶிஷ்யஸபாத்யக்ஷர் ஸ்ரீ உப. டி. ராஜகோபாலாசார்யர், எம். எ., பி. எல். சென்னை.

2-30-மணி: i. "ப்ரபத்தி": வித்வான் ஸ்ரீ. உப. ஶதாவதானம் ஸ்ரீநிவாஸாசார்யர்.
ii. "கர்மயோகம்" வித்வான் ஸ்ரீ. உப. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர்.

இரவு 8-மணி: ஸ்ரீ பாகவதம்: ருக்மிணீ கல்யாணம்: வித்வான் ஸ்ரீ. உப. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர்.

### மார்கழி மீ 14உ வெள்ளிக்கிழமை.

காலை 9-மணி: ஸபை அங்கத்தினர்களின் மீடிங்.
பகல் 2-30-மணி: "அவதார ரஹஸ்யம்" வித்வான் ஸ்ரீ. உப. வாஜபேயம் வீரராகவதாதாசார்யர்.
இரவு 9-மணி: ஹரிகதை: ஶரணாகதி பக்ஷம். ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்யர், பி. எ.

### மார்கழி மீ 15உ சனிக்கிழமை.

காலை 9-மணி: i. "பகவத்விஷயம்": வித்வான் ஸ்ரீ. உப. புத்தகோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.
ii. "அர்ச்சாவதார வைபவம்": வித்வான் ஸ்ரீ. உப. திருப்புல்லாணி ரகுபதி ஐயங்கார்.

பகல் 2-மணி: i. "உபநிஷத்துக்களும், ப்ரஹ்ம ஸூத்ரங்களும்": வித்வான் ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர்.
ii. "அக்ராஸநாதிபதியின் உபஸம்ஹாரம்."

ஸ்ரீ:.

# ஸ்ரீ அஹோபில மடத்தின் சிஷ்யவர்க்கத்தா ரெல்லார்க்கும் ஒருவிநய விண்ணப்பம்.

☛ இது, நீடாமங்கலத்தில் 28 - 12 - 11 ல் ஸ்ரீ அகோபில மடத்தின் சிஷ்யர்கள் கூடிய 2 - வது வருஷாந்த மகாஸங்கத்தில் படிக்கப்பெற்றது.

அழகிய சிங்கரி ஞரா தனைக்காம்
அகோபில மடத்திற் கணியாஞ் சிஷர்காள்
ஆஸ்தான நிலைதா னகனில மோங்கச்
சிற்சில மொழிகள் சிறியேன் புகல்வன்
செவிசாய்த் திவைகளைச் செம்மையாக் கருத
வேண்டுகின் றேனுமை விரும்பிக் கேண்மின்
மனிதராய்ப் பிறத்தல் மண்மே லரிதாம்
ஆத்திகத் தன்மை யதனினு மரிதாம்
தெய்வானு பூதியைச் சீடர்க் கருளும்
ஆசான் கடாக்ஷம் அதனினு மரிதே
மனைவி மக்களோ டில்லறம் வகித்தே
மாநிலம் பழியா மறுவிலா வழியில்
நமக்காம் யாத்திரை நாமிவண் காப்பதும்
மறுமைப் பயனை வழியா லடைய
உபய வேதத் துச்சிப் பொருளை
ஆசான் தொட்டுக் காட்டு மதன்படி
அனுதின முணர்ந்தே யன்பைக் காத்தலும்
முக்கிய நமக்கெலாம் முதுமொழி சான்றும்
கலியின் கொடுமையுங் கால கதியும்
நம்மை நலியினும் நாமவைக் கஞ்சா
தொழுக்கம் போற்றுத லுத்தம தருமம்
இயன்ற மட்டி லிந்நிலை யுணர்ந்தே
உள்ள முறைசெய லீகையு முதவி
ஆரா தனையை யாளுதல் கடமை
காலமு மிடமும் நிலையொடு கருதிச்
சாதன வளமும் தரித்து நோக்கிக்
காரியம் புரிந்தாற் கைமேற் பலமாம்
திருத்த வழிகளைச் செப்புத லெளிதாம்
அந்நெறி வாய்க்க வல்லும் பகலும்
பாடு படுபவர் பரமராம் நம்முள்
குடும்பச் சித்திரம் கூடிடி லொழிக்கப்
பலநா ளாவதைப் பார்ப்போ மாமெலாம்
ஆஸ்தான மேற்றே யளவிலாக் குடும்பத்
தவர்களை யாளுத லெளியதொன் றல்ல
ஆதிவண் சடகோப ராதியா மெதிகள்
அழகிய சிங்கரி ஞரா தனையை
ஐந்நூறு ருண்டிற் கதிகமாக் காத்தனர்
முப்பத் தொன்பதாம் பட்டம் முதிரவே
உத்தமர் வாய்த்ததும் ஒருவினைப் பயனும்
அவர்க்கு நேர்ந்த நோயையு மனுகா
தகற்றிய பரம னருளுவன் சுகநிலை
தக்ஷிண துவாரகை தன்னில் விளங்கும்
பராங்குச யதிவரர் பாதம் பணிந்தே
இக்கால நிலையை இனிதுற விளக்கி
அநுஜ்ஞை பெற்றே யழகிய சிங்கர்க்
காள்களாய் நின்றே யனுதின முழைத்தல்
நமக்கெலாம் பொறுப்பா நானில மீதில்
ஒன்பதா நேர்ந்த வுத்தமர் தம்பால்
நற்பல னுதிக்கும் நம்புமின் காரணம்
உத்தமர் தன்மைக் * கோன்பதை நம்மவர்
அறிகுறி யாக வமைத்தனர் கேண்மின்
ஒன்று லனேகர் தன்னு லுயரினும்
இலக்ஷம் விதமாய் விகற்பம் ஏறினும்
ஒன்பது தன்னிலை மாறு தொளிரும்
முப்பத் தொன்பதில் முன்னுறக் காணலாம்
சற்சனர் காரியஞ் சாத்திய மாகச்
சிற்சில காலஞ் செல்லுதல் நியமமாம்
அழகிய சிங்கரின் அடிமலர் நிதமும்
பணியும் பாக்கியம் பாரினிற் பெற்ற
சிலருட் சிறியன் விண்ணப்ப மிதுவே.

தில்லையம்பூர் ஸோமயாஜி
தி. வேங்கடராம ஐயங்கார்,

* [illegible] ॥

## எக்ஸிக்யுடிவ் போர்டாரின் மீடிங்.

சென்ற மார்கழிமாத்தில் நீடாமங்கலத்தில் நடந்த ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் மஹாஸங்க ஸம்பந்தமாக ஷை போர்டாரின் கூட்டம் இரண்டுதடவை நடந்தது. ஸபாத்யக்ஷர் அக்ராஸநாதிபதியாக இருந்தார். 14 - ம் தேதியில் காலை 8 - மணிக்கு நடந்த முதல் கூட்டத்தில் பின் குறித்திருக்கும் அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள் :—

| | | |
|---|---|---|
| 1. ஸ்ரீமாந். | வே. க்ருஷ்ணமாசார்யர், | தஞ்சாவூர். |
| 2. ,, | வி. ராகவாசார்யர், | சென்னை. |
| 3. ,, | எஸ். வாஸுதேவாசார்யர், | ,, |
| 4. ,, | எஸ். ராஜகோபாலாசார்யர், | கூடலூர். |
| 5. ,, | டி. கோதண்டராம ஐயங்கார், | தஞ்சாவூர். |
| 6. ,, | எஸ். க்ருஷ்ணமாசார்யர், | கும்பகோணம். |
| 7. ,, | டி. ரங்கஸாமி ஐயங்கார், | திருச்சி. |
| 8. ,, | எஸ். டி. க்ருஷ்ண ஐயங்கார், | மதுரை. |
| 9. ,, | ஸி. ராஜகோபாலாசார்யர், | சித்தூர். |

இந்தக் கூட்டத்தில் முக்கியமாக நடத்தப்பட்ட கார்யங்களாவன :—

1. ஸ்ரீ ஶிஷ்ய ஸபையின் பொதுக் கார்யதர்ஶி ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசார்யர் 1910, 1911 - வது வருஷங்களின் வருஷாந்த அறிக்கையைப் படித்தார். சில மாறுதல்களுடன் இந்த அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. இது 518 - வது பக்கத்தில் ப்ரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது.

2. பிரிவுகளின் அறிக்கைகளில் சில படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

3. அன்றையதினமே அடுத்து நடக்கப்போகும் அங்கத்தினர்கள் மீட்டிங்கில் இன்ன இன்ன விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யவேணுமென்று நிர்த்தாரணம் செய்யப்பட்டது.

இரண்டாவது மீட்டிங், ஸபையின் மஹாஸங்கம் முடிந்தவுடன் 15வ ஸாயம் 3 - மணிக்கு நடந்தது. அப்பொழுது ஸபை விதிகளின் 18 - வது விதிப்படிக்கு எக்ஸிக்யுடிவ் போர்டுக்கு வேண்டிய அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டார்கள்: அதற்குப் பிறகு, மஹாஸங்கத்தில் செய்த தீர்மானங்களை எவ்விதமாக ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்துகொள்வது என்பதைப்பற்றிக் கொஞ்சம் ஆலோசனை நடந்தது. முடிவாக ஸபாத்யக்ஷரும் இன்னும் சிலரும் நேரில் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதிக்குப் போய் ஸ்ரீ அழகியசிங்கரைத் தண்டன் ஸமர்ப்பித்து விஜ்ஞாபநங்களைச் செய்து கொள்ளுகிறது என்று தீர்மானம் செய்யப்பட்டது. ஸ்ரீ. உ.வே. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் ஸ்வாமி ஸபையின் கௌரவ அங்கத்தினராக ஏற்படுத்தப்பட்டார்.

---



## 1912-ம் ஸ்ரீ நிர்வாஹக ஸபையின் அங்கத்தினர்

(இவர்களில் முதல் மூவரும் நீடாமங்கலத்தில் 29-12-11-ல் கூடிய ஸ்ரீ ஶிஷ்ய ஸபையின் மஹாஸங்கத்தாலும், மற்றவர்கள் 16, 17, 18 - வது விதிகளின்படிக்கும் நியமிக்கப்பட்டார்கள்.)

| | | |
|---|---|---|
| ஸபாத்யக்ஷர் :— | ஸ்ரீ. | டி. ராஜகோபாலாசார்யர் எம்,ஏ., பி. எல்., சென்னை. |
| உபஸபாத்யக்ஷர் :— | ,, | வே. க்ருஷ்ணமாசார்யர் பி.ஏ., தஞ்சாவூர். |
| கார்யதர்ஶி :— | ,, | ஸி. ராஜகோபாலாசார்யர் பி.ஏ., பி.எல், சித்தூர். |
| மற்றவர்கள் :— | ,, | வி. ராகவாசார்யர் பி.ஏ., பி.எல்., சென்னை. |
| ,, | ,, | எஸ். வாஸுதேவாசார்யர் பி.ஏ, எல்.டி.,சென்னை. |
| ,, | ,, | டி. கோதண்டராம ஐயங்கார் பி.ஏ., எம்.எல்., தஞ்சாவூர். |
| ,, | ,, | எஸ். க்ருஷ்ணமாசார்யர், தஞ்சாவூர். |
| ,, | ,, | எஸ். ராஜகோபாலாசார்யர் பி.ஏ.,பி.எல்.,கடலூர். |
| ,, | ,, | எஸ். டி. க்ருஷ்ண ஐயங்கார் பி.ஏ.,பி.எல்.,மதுரை. |
| ,, | ,, | பி. என். க்ருஷ்ணஸாமி ஐயங்கார் பி.ஏ., பி.எல்., கோயம்புத்தூர். |
| ,, | ,, | பி. கே. கருடாசார்யர், பி.ஏ., பெங்களூர். |
| ,, | ,, | டி. ரங்கஸ்வாமி ஐயங்கார் எம்,ஏ., திருச்சி. |
| ,, | ,, | எம். ஆர். தேஶிகாசார்யர், திருச்சி. |
| ,, | ,, | எஸ். ஆராவமுது ஐயங்கார், திருக்குடந்தை. |
| ,, | ,, | க்ருஷ்ண ஐயங்கார், கோமல். |
| ,, | ,, | ஆர். நரஸிம்ஹமாசார்யர், பி.ஏ., சென்னை. |
| ,, | ,, | பி. டி. ஶேஷாத்ரியாசார்யர், பாலூர். |
| ,, | ,, | ஸி. துரைஸ்வாமி ஐயங்கார், சென்னை. |

## 14-ம் தேதி காலையில் நடந்த சிஷ்ய ஸபையின் அங்கத்தினர்களுடைய மீடிங்.

சென்ற மார்கழி மாஸம் 14-ம் தேதி காலை 9-மணிக்கு நீடாமங்கலம் ராஜா ஸத்ரத்தில் ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய ஸபை அங்கத்தினர்களின் ஸங்கம் சேர்ந்தது. ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர், அக்ராஸநாதிபதியாக இருந்தார். முதலில் எக்ஸிக்யுடிவ் போர்டாரின் 1910-11-வருஷங்களின் அறிக்கை, பொதுக் கார்யதர்ஸியால் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ மடத்தின் அபிவ்ருத்திக்கு ஹேதுவான சில சீர்திருத்தங்களைச் செய்துவைக்கவேணுமென்று ஸ்ரீ அழகியசிங்கரை அங்கத்தினர் எல்லாரும் ப்ரார்த்திப்பதாகச் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. அந்தத் தீர்மானங்கள் எல்லாம் 521-வது பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

தீர்மானங்கள் எல்லாம் செய்யப்பட்ட பிறகு ஸபாத்யக்ஷர் ஸ்ரீ வேதாந்த தீபிகை யென்னும் ஸபையின் பத்ரிகையைப்பற்றி அங்குச் சேர்ந்திருந்த அங்கத்தினர்களுக்கு ஓர் விஜ்ஞாபநம் செய்தார். இந்தப் பத்ரிகை ஆரம்பித்து ஏறக்குறைய ஒரு வருஷகாலம் ஆகிவிட்டது என்றும், இந்த ஒரு வருஷத்துக்குள் பலவிடங்களில் அது பரவி அநேகம் வித்வான்களுடைய பரிதோஷத்தை ஸம்பாதித்ததுடன்கூட அங்கங்கு விக்ரயிக்கப்பட்டு உசிதமான த்ரவ்யார்ஜநத்தையும் செய்து வைத்திருக்கிறது என்றும், ஆரம்பகாலத்தில் பத்ரிகையை எவ்வளவு பக்கங்களுக்குள் அடக்குவதாக ஆலோசிக்கப்பட்டதோ அவ்வளவு பக்கங்களுக்குள் அடக்கக்கூடாமல் ஏராளமான விஷய ப்ரதாநங்கள் வந்துகொண்டிருந்தபடியால் வ்ரவரப் பத்ரிகை அபிவ்ருத்தமாகிக் கொண்டு வருகிறது என்றும், அநேகம் பெயருக்கு அத்யந்தம் உபகாரகமாக இருக்கும் இந்தப்பத்ரிகையை இன்னும் த்ருப்திகரமாக நடத்தும்பொருட்டுக் கொஞ்சம் த்ரவ்ய ஸஹாயம் அபேக்ஷிதமாக இருக்கிறது என்றும், அந்த த்ரவ்ய ஸஹாயத்தை அங்கத்தினர்கள் யதாஶக்தி செய்யவேணு மென்று எக்ஸிக்யுடிவ் போர்டார் கேட்டுக்கொள்ளுகிறாரென்றும் ஸபாத்யக்ஷர் விவரித்துச் சொல்ல, அங்கு வந்திருந்தவர்களில் அநேகர் அதன் ஔசித்யத்தை ஆலோசித்து ஸஹாயம் செய்வதாக அங்கீகரித்தார்கள். அப்படி ஒப்புக்கொண்டவர்களின் பெயரும் தொகையும் கீழ்க் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் சிலர் புதிய சந்தாதாரர்களாக வருஷச்சந்தாவைக் கொடுத்து அப்பொழுதே சேர்ந்தார்கள். அதற்குப் பிறகு ஸங்கம் கலைந்தது.



i. த்ரவ்ய ஸஹாயம் செய்வதாக ஒப்புக்கொண்டவர்களின் பெயர் :—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | ஸ்ரீ. | டி. ராஜகோபாலாசார்யர், சென்னை. | ரூ. | 50 | 0 | 0 |
| (2) | ,, | வே. க்ருஷ்ணமாசார்யர், தஞ்சாவூர். | ,, | 50 | 0 | 0 |
| (3) | ,, | எஸ். டி. க்ருஷ்ண ஐயங்கார், மதுரை. | ,, | 50 | 0 | 0 |
| (4) | ,, | டி. கோதண்ட ராம ஐயங்கார், தஞ்சாவூர் | ,, | 25 | 0 | 0 |
| (5) | ,, | பள்ளிப்பேட் திருவேங்கடாசார்யர், மதுராந்தகம். | ,, | 20 | 0 | 0 |
| (6) | ,, | எம். ஆர். தேசிகாசார்யர், கோம்பூர். | ,, | 20 | 0 | 0 |
| (7) | ,, | எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார், கோம்பூர். | ,, | 10 | 0 | 0 |
| (8) | ,, | எஸ். ஆராவமுது ஐயங்கார், திருக்குடந்தை. | ,, | 10 | 0 | 0 |
| (9) | ,, | டி. ரங்கஸாமி ஐயங்கார், அரியலூர். | ,, | 10 | 0 | 0 |
| (10) | ,, | எஸ். தேஶிகாசாரியர், சென்னை. | ,, | 5 | 0 | 0 |
| | | | ஆக. ரூ. | 250 | 0 | 0 |

ii. அந்தஇடத்திலேயே பணத்தைச்செலுத்தி ஸஹாயம்செய்தவர்கள்:—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | ஸ்ரீ. | ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கூடலூர். | ரூ. | 10 | 0 | 0 |
| (2) | ,, | எஸ். ராஜகோபாலாசாரியர், ,, | ,, | 10 | 0 | 0 |
| (3) | ,, | டி. இ. சடகோபாசாரியர், ,, | ,, | 5 | 0 | 0 |
| (4) | ,, | ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கண்கொடுத்தவணிதம் | ,, | 2 | 0 | 0 |
| (5) | ,, | ராமஸ்வாமி ஐயங்கார், எருக்காட்டூர் | ,, | 2 | 0 | 0 |
| | | | ஆக. ரூ. | 29 | 0 | 0 |

iii. ஏற்கெனவே ஸஹாயம்செய்திருக்கிறவர்களின் பெயர் :—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | ஸ்ரீ. | வி. ராஜகோபாலாசார்யர், சித்தூர். | ரூ. | 50 | 0 | 0 |
| (2) | ,, | வி. ராகவாசாரியர், சென்னை. | ,, | 25 | 0 | 0 |
| | | | ஆக. ரூ. | 75 | 0 | 0 |

## நிர்வாஹக ஸங்கத்தினரின் 1910, 1911 வருஷங்களின் அறிக்கை.

(14 - ம் தேதி காலையில் நடந்த ஶிஷ்யஸபை அங்கத்தினர்களின் மீடிங்கில் அங்கீகரிக்கப்பட்டது.)

மகாப்ரஸித்தியடைந்த ஸ்ரீ அஹோபிலமடத்தின் மேன்மை வ்ருத்தியாகவேண்டுமென்றும், ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்கள் மிகுதியாயும் நானாதேசத்திலும் வசிப்பதால் அவர்கள் ஒன்றுசேர்ந்து ஹிதவ்யாபாரங்களைப்பற்றிச் சர்ச்சிக்க மார்க்க முண்டாகவேண்டுமென்றும், ஷெயாருக்குள் ஐக்யமும் விஶ்வாஸமும் அதிகரிக்க வேண்டுமென்றும் உத்தேசித்து ஷெயாரில் தெரிந்தவரையில் வெகுபெயருக்குப் பத்திரிகா மூலமாய்த் தெரிவித்ததில், சுமார் 100-ஸ்வாமிகள் ஸபை சேரவேணு மென்று நிச்சயித்துச் சென்ற 1910ஹு மார்ச்சுமீ 27௳யில் திருவல்லிக்கேணியிலே இவ்விஷயத்தில் முக்கிய ப்ரவ்ருத்தியும் அதிக ஊக்கமும் உள்ள ரெஜிஸ்ட்ரேஷன் இன்ஸ்பெக்டர் ம-௱-௱-ஸ்ரீ வி. ராகவாசாரியர் திருமாளிகையில் ஸபை சேர்ந்ததும், தமிழ் தெலுங்கு கன்னடம் முதலிய பாஷைகளில் ஷெ விஷயங்களை ப்ரசுரம் செய்ததும், கொஞ்ச காலம் சென்ற பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனியில் நோவு சாத்திக்கொண்டிருந்த பொழுது ஸபையின் ஆதரணையில் நரஸிம்ஹபுரம் காஞ்சீபுரம் பெங்களூர் முதலிய இடங்களில் ஸ்ரீ ஶிஷ்யர்கள் கூட்டங்கள்கூடி ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் விஜ்ஞாபன பத்ரிகைகள் ஸமர்ப்பித்ததும் அனைத்தும் தெரிந்த விஷயம். பிறகு ஸ்ரீ ந்ருஸிம்ஹமன் கடாக்ஷத்தால் சென்னை, பெங்களூர், தஞ்சாவூர், கூடலூர் இந்த இடங்களில் பிரிவுகள் ஏற்பட்டதால் ஸ்ரீ ஸந்நிதி விஷயத்தில் ஸ்ரீ ஶிஷ்யர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நேரில் சர்ச்சிப்பது அவசியம் என்று ஆலோசித்துச் சென்ற மார்கழிமீ த்தில் தஞ்சாவூருக்கு அடுத்த வெண்ணாற்றங்கரையில் ஓர் மஹாஸபை சேர்ந்ததும், அங்கே செய்த தீர்மானங்களை ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாப்திசெய்ததும், அனைத்தும் ப்ரசுரம் செய்யப்பட்டு எல்லாருக்கும் நன்றாகத் தெரிந்திருக்குமே.

அந்த மஹாஸங்கத்தில் அங்கத்தினர் எல்லாரும் கலந்து ஸபையை நடத்துவதற்கு விதிகளை ஏற்பாடு செய்தார்கள். அதுமுதல் [அதாவது - 1911ஹு ஜனவரி 1௳ முதல்] அந்தவிதிகளே ஆசாரத்துக்கு வந்து அநுஷ்டிக்கப்படுகின்றன. ஸபையின் முக்கிய வ்ருத்தாந்தங்களை அப்போதைக்கப்போது ப்ரசுரம் செய்வதற்கும், பிரிவுகளுக்கு ஒன்றுக்கொன்று சேர்க்கை உண்டாக்குவதற்கும், ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸித்தாந்தம் தழைப்பதற்கும் அநுகூலமாய் ஸபை நிர்வாஹக ஸங்கத்தினுடைய நன்முயற்சி



யால் ஸ்ரீ வேதாந்த தீபிகை என்னும் பத்ரிகை சென்ற மாசிமீ ஸ்தாபிக்கப்பட்டு அதுமுதல் நடந்துவருகின்றது.

இந்தஸபைக்கு அதனுடைய பிரிவுகளின் வ்யாபாரங்களே முக்கியமாயுள்ளவை.

பிரிவுகளில் முக்கியமானது சென்னைப்பிரிவு. இதில் 9 - மாஸமாக நடந்த வ்ருத்தாந்தங்கள் மிக்க ஆநந்தத்தைக் கொடுக்கத்தக்கவை. மாஸத்துக்கு ஒருதடவை சிறந்த உபந்யாஸம் செய்யப்பட்டது. அங்கத்தினரில் அநேகர் வந்து தவறாமல் கேட்டு ஆநந்தித்தார்கள். விதிகளில் 26 - வது விதிப்படி பொதுச் சபைக்குச் சேரவேண்டிய தொகையும், காலத்தில் அனுப்பப்பட்டது. இந்த மாதிரியாக இன்னும் சில பிரிவுகளில் வ்யாபாரங்கள் நடந்தால் ஸபைக்குத் தற்காலம் போதுமானது. வேதாந்ததீபிகை 11 - வது ஸஞ்சிகையில் ப்ரசுரமாகியிருக்கும் சென்னைப் பிரிவின் அறிக்கை இதனுடன் படிக்கப்பட்டது.

தஞ்சாவூர்ப்பிரிவிலும் நம்முடைய காரியதரிசி திருக்குடந்தை உ, ஸ்ரீ. எஸ். கிருஷ்ணமாசார்யரின் விடாமுயற்சியால் அதிக அங்கத்தினர்களடங்கிய ஓர் பிரிவு ஏற்பட்டு, ஷெ பிரிவின் ஆதரணையில் திருக்குடந்தையில் ஸ்ரீ ஆதிவண்ஶடகோபஸ்வாமி உத்ஸவத்தில் ஓர் பெரிய வித்வத்ஸதஸ் நடத்தப்பட்டது. இம்மாதிரியாகவே ப்ரதி ஸம்வத்ஸரமும் நடத்திவந்து அவர் நம்முடைய க்ருதஜ்ஞதைக்குப் பாத்திரமாவர் என்று நம்புகிறோம். இந்தப் பிரிவிலிருந்து பொது ஸபைக்கு 26 - வது விதிப்படி ரூபா 80—0—0 வரவு. இந்தப்பிரிவும் சென்னைப்பிரிவுமே ஸபைக்கு முக்கிய ஆதாரங்கள்.

கூடலூர்ப் பிரிவில் உபய ஸ்ரீ. எஸ். ராஜகோபாலாசாரியருடைய பரிஶ்ரமத்தால் சென்ற 1 - 7 - 11 - ல் நடந்த ஸங்கத்தில் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. அது, வேதாந்த தீபிகையில் ப்ரசுரமாயிருக்கிறது. இதில் அதிக அங்கத்தினர் இல்லாவிடினும் வ்யாபாரங்கள் ஸரிவர நடந்துவருகின்றன. இது அபிவிருத்தி யடையுமென்று நம்புகிறோம்.

மதுரையில் சென்ற வைகாசிமீ த்தில் ஸபாத்யக்ஷரும் இன்னும் சிலரும் போய் நம்முடைய மதுரைக் காரியதர்சி மஹாஶ்ரத்தாளுவான உபய ஸ்ரீ. கிருஷ்ணய்யங்காருடைய முயற்சியால் ஸ்ரீ அழகர் வைகை நதிக்கு எழுந்தருளும் உத்ஸவகாலத்தில் உபய. ஸ்ரீ. திருப்புல்லாணி ரகுபதி ஐயங்கார் ஸ்வாமியைக்கொண்டு உபந்யாஸங்களைச் செய்வித்தார்கள். இப்படியே ப்ரதி வருஷமும் நடத்த வேண்டியது அவசியம். மதுரைப் பிரிவும் சீக்கிரத்தில் ப்ரபலமாக ஏற்படும் என்று நம்புகிறோம்.

கோயம்புத்தூரில் ஸபையின்பிரிவு ஒன்று ஏற்பட்டு த்ருப்திகரமாக நடந்துகொண்டிருந்தபொழுது அகஸ்மாத்தாய்ப் பிளேக் வியாபித்து அதிக

சித்ததால் வ்யாபாரங்களுக்குக் கொஞ்சம் அநுகூலக்குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், உபய. ஸ்ரீ. காரியதரிசி பி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் மிக்கஆவலுடன் க்ஷேமத்தை எதிர்பார்த்திருக்கிறார்.

பெங்களூரில் ஒரு பெரியகூட்டம்கூடி உபஸபை ஏற்பட்டு, ஸ்ரீ ஸந்நிதிக்கு விஜ்ஞப்திகள் அனுப்புவிக்கப்பட்டு ப்ருந்தாவந விஷயமாகவும் பல விஷயங்கள் வெளியிடப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கரும் தகுந்தஏற்பாடுசெய்திருக்கிறதாகத் தெரியவருகிறது. அந்த வேலை சீக்கிரம் பூர்த்தியாகுமென்று நம்புகிறோம். பெங்களூர் கார்யதர்சி உபய. ஸ்ரீ - கருடாசாரியர் ஊக்கமாக இருப்பதால், சீக்கிரம் அதுவும் வ்ருத்தியாகும்.

வட ஆற்காடு, திருநெல்வேலி, நெல்லூர் இவ்விடங்களில் பிரிவுகள் ஸரியாக இன்னும் ஏற்படவில்லை. வட ஆற்காட்டில் அநேகர் ஸபையை நேரிலேசேர்ந்திருப்பதாகக் கார்யதர்சியிடமிருந்து தெரியவருகிறது.

திருப்பதியில் ஓர் உபஸபைமாத்திரம் ஏற்பட்டிருக்கிறதே தவிர வ்யாபாரங்கள் நடந்துவருவதாகத் தெரியவில்லை.

திருக்குறுங்குடியிலும் அதேமாதிரியாகத்தான் ஓர் உபஸபை இருக்கிறது. அதனுடைய வ்யாபாரங்களும் தெரியவில்லை.

இந்தச்சபைக்கு முக்கிய ப்ராணாதாரமான ஸ்ரீ வேதாந்த தீபிகையைப் பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டியது அவசியம். அந்தப் பத்திரிகை ஆரம்பித்து 10 - மாஸமே ஆனபோதிலும் அதனால் இந்தச் சபைக்கும், பொதுவாக ஸித்தாந்தத்துக்கும் பெரிய உபகாரம் உண்டாகியிருக்கிறது. அது எல்லாவிஷயத்திலும் த்ருப்திகரமாகவே நடந்துவருகின்றது. இப்போது சுமார் 300 - பெயர்கள் சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். இந்த ப்ரயத்நத்தைத் தலைக்கட்டும்படி செய்வது ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவருக்கும் அவஸ்யமான கர்த்தவ்யம். ஆஸ்திகர்கள் எல்லோரும் எவ்விதத்தாலாவது முயற்சி செய்து நீடூழிகாலம் இந்தப்பத்ரிகை நடந்துவரத் தகுந்தஏற்பாடுகள் செய்யவேணும். அதைவிட வேறு பரமோபகாரம் நமது ஸித்தாந்தத்துக்கு ப்ரக்ருதம் செய்ய முடியாது. இதுவரையில் இதில் அநந்யப்ரயோஜநமாகப் பரிஸ்ரமப்படுகிறவர்களுக்கு நாம் வந்தநம் அளிக்கவேணும்.

நிர்வாஹக ஸங்கத்தினரால் சித்தூர் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஆடிடராக நியமிக்கப்பட்டு, அவர் ஸபையின் கணக்குகளைப் பரிசோதித்து ஓர் அறிக்கை [ரிபோர்ட்] அனுப்பியிருக்கிறார். அது இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பிரிவுகளுக்குப் பண்டிதர்களை யனுப்பி உபந்யஸித்துவருவது அத்யாவஸ்யகம். அந்த விதமான செலவுகள் செய்ய ஸபையில் த்ரவ்யம் இல்லாததால்



அவ்வகை வியாபாரம் சென்ற வருஷத்தில் நடத்தப்படவில்லை. வருகிற ஸம்வத்ஸரம் தகுந்த ஏற்பாடுகள் இந்த விஷயமாகச் செய்வது நம்முடைய முக்கியமான கர்த்தவ்யம். இல்லாவிடில் பிரிவுகள் மேன்மேல் வ்ருத்தியடைவது துர்லபம். க்ருஸிஹமனுடைய அநுக்ரஹத்தால் ஸரியானபண்டிதர் ஏற்படுத்தப்பட்டுக் காரியங்கள் முழுவதும் ஸரிவரநடந்துவருமென்று நம்புகிறோம்.

சித்தூர், 25 - 1 - 12.

ஸி. ராஜகோபாலன்,
கார்யதர்சி.

வரவு செலவு கணக்கு.

(1910ஸு ஜனவரி 15உ முதல் 1911ஸு செப்டம்பர் 30உ வரையில்.)

| நம்பர். | விவரம். | தொகை. | | | நம்பர். | விவரம். | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | முதல்வகுப்பு அங்கத்தினராலும் விசேஷவசூல் மூலமாயும் ... | 286 | 0 | 0 | 1. | நரஸிம்மபுரம், தஞ்சாவூர் சபைகள் செலவு ... | 181 | | 6 |
| 2. | இரண்டாவது வகுப்பு அங்கத்தினரால் வசூல் ... | 54 | 0 | 0 | 2. | காகிதம் அச்சுக்கூலி வகையரா ... | 97 | 14 | 9 |
| 3. | வருஷாந்த சபைக்காக விசேஷவசூல்- | 34 | 10 | 2 | 3. | தபால்செலவு ... | 81 | 10 | 3 |
| 4. | பிரிவுகளிலிருந்து 26-வது விதிப்படி வரவு. | 111 | 9 | 4 | 4. | ரயில்செலவுவகைரா | 83 | | 6 |
| | | | | | 5. | ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி படம் ... | 12 | 15 | 0 |
| | | | | | 6. | தக்திச்செலவுகள் ... | 10 | — | 6 |
| | | | | | | | 467 | 10 | 6 |
| | | | | | | கையிருப்பு. ... | 18 | — | 0 |
| | ஆக மொத்தம் ரு. | 486 | 3 | 6 | | ஆகமொத்தம் ரு. | 486 | | 6 |

இந்தக் கணக்குகள், என்னால் பரிசோதிக்கப்பட்டன.

வி. கிருஷ்ணசாமி அய்யர்,
ஆடிட்டர்.
5-12-11.

ஸி. ராஜகோபாலாசாரியன்,
காரியதரிசி.
15-12-11,

(தஞ்சாவூர் ஜில்லா நீடாமங்கலத்தில் 29—12—11 - ல் சேர்ந்த ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹாஸங்கத்தால் இவைகள் செய்யப்பட்டன.)

(1) ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாவதற்காக ஸ்ரீ அழகிய சிங்கர் ஸபையின் போஷகராக எழுந்தருளியிருந்து அநுக்ரஹிக்கவேணும்.

(2) ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்குச் சொந்தமான சொத்துக்கள் ஏராளமாகப் பல விடங்களில் பரவியிருக்கிறபடியால் அவைகள் அன்யாக்ராந்தங்களாகப் போகாமல் இருக்கும்பொருட்டும், க்ரமமாக வரக்கூடிய வருமானங்கள் ஸரிவர வசூலாகி ஸ்ரீ ஸந்நிதிக்குச் சேரும்பொருட்டும் தகுந்த யோக்யதையுள்ள ஒரு மானேஜர் ஸ்வாமியை, ஸ்ரீ ஸந்நிதி வைதிக காரியங்களைப் பார்த்துவர வேண்டியவரான ஸ்ரீ கார்யம் ஸ்வாமியைத் தவிர்த்து, தகுந்த சம்பளத்தில் நியமநம்செய்ய ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபைசெய்யவேணும்.

(3) ஸ்ரீ ஸந்நிதி ஏற்பட்ட உத்தேஶங்களில் அத்யந்தம் முக்கியமானது ஆத்மோஜ்ஜீவநத்துக்கு ப்ரதாந ஹேதுவாக இருக்கும் க்ரந்த காலக்ஷேபமானபடியால், அந்த க்ரந்தகாலக்ஷேபம் நன்றாக நடந்து நமது ஸித்தாந்தம் தழைத்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளம் பூர்த்தியாகும்பொருட்டு, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கும் இடத்தில் எப்பொழுதும் இரண்டு வித்வாங்களையும், இதர முக்கிய ஸ்தலங்களில் ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தின் பேரில் அங்கங்கு இருக்கும் ஶிஷ்யர்களுக்கு க்ரந்த சதுஷ்டயங்கள் சிந்தனை செய்துவைக்கும்பொருட்டும் அடிக்கடி உபந்யாஸம் முதலியவைகளைச் செய்யும்பொருட்டும் அங்கங்கே தகுந்த வித்வாங்களையும் உசிதமான ஸம்மாநத்தின்பேரில் நியமநம் செய்ய ஸ்ரீ அழகிய சிங்கர் க்ருபை செய்யவேணும்.

(4) ஸ்ரீ மடத்தின் அபிவ்ருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் 'ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை' என்னும் இந்த ஸபையின் முக்கிய உத்தேஶங்களையும், அடிக்கடி பலவிடங்களில் ஸபை ஸம்பந்தமாக நடத்தப்படும் கார்யங்களையும் ஸகலருக்கும் தெரிவிக்கும்பொருட்டும், நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ப்ரதாநமாக இருக்கும் சில அம்ஶங்களைத் தகுந்த வித்வாங்களைக்கொண்டு எல்லாருக்கும் ஸுகமாகப் போதமாகும்படி விவரிக்கும் பொருட்டும், இப்பொழுது ஸபையின் நிர்வாஹக ஸங்கத்தாரால் நடத்தப்பட்டுவரும் 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' என்னும் பத்ரிகைக்கு த்ரவ்ய ஸஹாயமும் வேறு ஸஹாயமும் செய்ய ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபை செய்யவேணும்.

(5) இந்தத் தீர்மானங்கள் எல்லாவற்றையும் நமது ஸபாத்யக்ஷரான ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர் ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபநம் செய்ய வேணுமென்று எல்லாரும் ப்ரார்த்திக்கிறதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீ:.

## நீடாமங்கலத்திற் சேர்ந்த ஸ்ரீ ஶிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹாஸங்கத்தில் ஸ்ரீ வே. க்ருஷ்ணமாசாரியரால் சொல்லப்பட்ட ஸ்வாகதம்.

[illegible]
[illegible]
[illegible]

ஸப்யர்களுக்கு விஜ்ஞாபகம் :—

இன்றையதினம் இவ்விடத்திற் சேர்ந்திருக்கிற மஹநீயர்களுக்கு ஸ்வாகதம் சொல்லும்படி அடியேனுக்கு நேர்ந்தது அடியேனுடைய பாக்யவிஶேஷமே. இந்த மஹாஸபையின்முன்னே அடியேன் செய்துகொள்ளும் விஜ்ஞாபகங்களை ஸப்யர்களெல்லாரும் ஸாதரர்களாகவும் பத்த சித்தர்களாகவும் கேட்டு வாசகாதி தோஷங்களை க்ஷமித்து அடியேனை க்ருதார்த்தனாகச் செய்யவேணுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

இந்தச் சபையின் உத்பத்தியைப் பற்றின ஸகல விஷயமும் சென்ற ஸம்வத்ஸரத்தில் மஹாஸங்கத்திற் செய்யப்பட்ட உபந்யாஸங்களாலும் "ஸ்ரீ வேதாந்ததீபிகை" என்னும் இந்தச் சபையின் பத்ரிகையாலும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியால், இப்பொழுது அதைப்பற்றிச் சொல்லத்தொடங்குவது புநருக்திதோஷத்துக்கு ஆஸ்பதமாகும். இந்தக் கலியுகத்தில் தர்மங்களை நிலைநிறுத்தும்பொருட்டுப் பகவான் இந்தஸபைரூபமாக அவதரித்திருக்கிறார் என்று புராணாதிகளிலிருந்தும் ஸ்ரீ வேதாந்ததேஶிகனுடைய திவ்ய ஸூக்திகளிலிருந்தும் சில அம்ஶங்களை அநுஸந்தாநம் செய்து சென்ற வருஷத்திய மஹாஸங்கத்தில் ஸ்ரீ. திருப்புல்லாணி ரகுபதி ஐயங்கார் ஸ்வாமி விஶேஷ உத்ஸாஹத்துடன் உபந்யஸித்து, இந்த ஸபை நன்றாக ஸ்தாபிக்கப்பட்டு அபிவ்ருத்தமாகவேணுமென்கிற கருத்தை நமக்கு த்ருடப்

படுத்தினானன்றோ? அந்தக்காலத்தில் அந்த ஸ்வாமியினுடையவும் இன்னும் இதர மஹநீயர்களுடையவுமான உபந்யாஸங்களைக்கேட்டு நாமே ஸபைகூடி ஆலோசித்து நமக்கு இருக்கும் குறைகளையும் உத்தேஶங்களையும் நம்முடைய அழகியசிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்துகொள்ளும்பொருட்டு வெண்ணாற்றங்கரையிலிருந்து புறப்பட்டுத் தஞ்சாவூரில் ரையிலேறி ஸுந்தரப்பெருமாள்கோயிலில் இழிந்து மூன்றாறு தாண்டி ஸ்ரீ க்ருஷ்ணபுரத்துக்கு விடைகொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் அநேக விஷயங்களைப்பற்றி முறையிட்டுக்கொண்டோமே. அவைகளை அத்யாதரத்துடன் செவிசார்த்தி, நமக்கு உண்டாயிருந்த உத்ஸாஹத்துக்கு அநுகுணமாக நம்முடைய குறைகளைத் தீர்ப்பதான வார்த்தைகளை ஸ்ரீ அழகியசிங்கர் திருவாக்கு மலரவில்லையே என்றும், நாம் இவ்வளவு ஶ்ரமப்பட்டு ஸபை சேர்ந்து உபந்யாஸாதிகளை நடத்தி அரை மைல்கூட நடக்க ஶக்தியில்லாதவர்களையும் நாலு ஐந்து மைல் நடக்கும்படியாகச்செய்து இன்னும் இந்த மாதிரியாக நாம் அநுபவித்த கஷ்டங்களுக்குப் பரிஹாரம் த்ருப்தியாகக் கிடைக்கவில்லையே என்றும், துக்கித்து அதிகேதத்துடன் ஒரு ராத்ரி அரண்யவாஸம் பண்ணினது போல அவ்விடத்தில் வஸித்திருந்தோம். பிறகு ஏதோ காரணத்தால் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு மனம் கொஞ்சம் இளகி மறுநாள் உதயத்தில் சிலரைத் தம்மிடம் வரும்படி நியமித்ததன்பேரில் சிலர் போய் அங்குச் சொல்லப்பட்ட சில உபசாரவார்த்தைகளை நம்மிடம் வந்து சொல்ல, அவைகளைச் சிலர் நம்பியும் சிலர் நம்பாமலும் மிகுந்த அஸந்துஷ்டியுடன் நாம் எல்லாரும் நம்முடைய க்ராமங்களுக்குத் திரும்பிப் போனோம்.,,

'இவ்வளவு ஶ்ரமப்பட்டும் நம்முடைய கஷ்டங்கள் தீரவில்லையே! மேற்கொண்டு செய்யவேண்டிய ப்ரயத்நங்களைச் செய்யாமல் விட்டு விடலாமா? கார்யங்களெல்லாம் பகவதாயத்தங்களென்று நினைத்துப் புருஷப்ரயத்நத்தை நிறுத்திவிடலாமா?' என்பதான சில அம்ஶங்களை ஆலோசிக்குமளவில் ஸ்ரீ கீதாசார்யன் அருளிச்செய்த "கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந" என்கிற வாக்யம் ஜ்ஞாபகத்துக்கு வருகிறது. அதை அநுஸரித்தே நாம் நடந்து வரவேணும். நம்மால் கூடிய மட்டில் நாம் ப்ரயத்நங்களைச் செய்துகொண்டு வரவேண்டியதுதான். அது தான் நம்முடைய கடமை. பலம் ஈஶ்வராதீநமானபடியால் அதை நாம் எதிர் பார்க்கக் கூடாது. பலப்ராப்தியானது "கர்மணா ஸ்வவ்யவஸிதாநு கடாக்ஷவிடம்பை: ஶ்ராவணேயஹயேஶை:" என்கிறபடி நம்முடையபக்தி ஶ்ரத்தை முதலியவைகளைப் பொறுத்தது. ஸக்ருதாவ்ருத்தி



ப்ரபத்தி செய்தாலும் போதுமென்கிற வாக்யங்களெல்லாம் அநந்ய பக்தி ஶ்ரத்தாபரங்களாகவே அநுஸந்திக்க வேண்டியவை போல, நம்முடைய இதர க்ருத்யங்களிலும் பூயோபூய: ப்ரயத்நங்கள் செய்யவேணுமென்பது அத்யந் தம் அவஶ்யம்.

நம்முடைய உத்தேஶங்கள் முழுவதும் கைகூடி வரவில்லையென்று நாம் சொல்லமுடியாது. "ஸத்ஜநாதிஷ்வஜா" என்கிற பிருதுடன் கூடிய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் முதலில் அநிஷ்ட நிவாரணம்செய்தே பிறகு இஷ்டப்ராப்தியை ஸாதித்துக் கொடுப்பன். இது வரையில் நமக்குக் கிடைத் திருக்கும் அநிஷ்ட நிவாரண ரூபமான பலத்தைக்கொண்டே நாம் ஸந்தோ ஷத்தை அடையவேணும். இவ்வளவு சீக்ரத்தில் இவ்வளவு பலங் கிடைத் தது வரப்போகிற பெருத்த ஶுபங்களை ஸூசிப்பிக்கிறது. இந்த ஶுப ஸூசகமான ஈஶ்வர க்ருத்யந்தான் நம்முடைய உத்ஸாஹத்துக்குப் பலத்தை யும் தைர்யத்தையும் உண்டுபண்ணிக் காலக்ரமேண நம்முடைய எல்லா உத் தேஶங்களுக்கும் ஸமீசீந நிஷ்பத்தியை விளைவிக்கப்போகிறது என்கிற அபிநிவேஶத்தைக் கொண்டே இந்த வருஷமும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ னைத்தொடர்ந்து இந்த நீடாமங்கலத்தில் ஸபைகூட நிஶ்சயித்தோம். அந்த ஸபைக்கு வஸிஷ்ட வாமதேவாதிகளைப்போல இவ்விடம் எழுந்தருளியிருக் கும் ஜ்ஞாந ஶீல வயோ வ்ருத்தர்களான ஸ்ரீமாந் மஹாமஹோபாத்யாயர் பெருகவாழ்ந்தான் ரங்காசார்யர் ஸ்வாமி முதலான பாகவதோத்தமர்களு க்கு ஸ்வாகதம் சொல்வதான பாக்யம் அடியேனுக்கு நேர்ந்ததற்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய பூர்ண கடாக்ஷமே முக்ய காரணமென்று நம்புகிறேன். ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்ய வர்க்கங்களுக்கு உண்டாகியிருக்கும் இப்படிப்பட்ட உத் ஸாஹத்துக்கும் காரண பூதமான பகவாந் இந்தச் சபைக்கு ஸகல ஶ்ரே யஸ்ஸையும் கொடுத்து உத்தரோத்தரம் அபிவ்ருத்தியைச் செய்து லோகங் களை உஜ்ஜீவிக்கச் செய்யவேணுமென்று ஸதா ப்ரார்த்திக்கிறேன்.

வேலாமூர். க்ருஷ்ணமாசார்யர்.

# புதிய க்ரந்தங்களின் விமர்ஶம்.

## ஸ்ரீ பகவத் கீதை.

(சிந்தாத்ரிபேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்தநீ ஸபையாரால் ப்ரசுரம் செய்யப்பெற்றது. ஸஞ்சிகை 1 - க்கு விலை அணா 6.)

இதில் ஸ்ரீ பகவத்கீதா ஶ்லோகங்களும், ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹ ஶ்லோகங்களும், இவைகளின் பதவுரையும், ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யம் தாத்பர்ய சந்த்ரிகை கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை இவைகளுடைய தமிழ் மொழிபெயர்ப்பும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டுக்களும், அவைகளின் பொழிப்புரையும் அடங்கி யிருக்கின்றன. மாதம் 1 - க்கு 8-பாரம் கொண்ட ஸஞ்சிகை வீதம் வெளியிடப்பெற்று, முதலிரண்டு ஸஞ்சிகைகள் இதுவரையில் வெளிவந்திருக்கின்றன. இதன் மொழிபெயர்ப்பு முழுவதும் உபயவேதாந்த பாரங்கதரான திருவஹீந்த்ரபுரம் வித்வாந் சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர் ஸ்வாமியாற் செய்யப்பட்டு வருகிறபடியால், இதில் ஆசார்யர்களின் திருவுள்ளம் ஸரியாக வெளியிடப்படும் என்பதற்கு ஸந்தேஹமே இல்லை. அந்த ஸ்வாமியின் பெயரே இந்தப் புஸ்தகத்தின் ஸாதுத்வத்தை ப்ரகாஶப்படுத்தப் போதுமானது. ஸ்ரீகீதாபாஷ்யமும் அதன் அர்த்தத்தை வெளிப்படுத்தும் தாத்பர்ய சந்த்ரிகையும் லளிதமான நடையில் எழுதப்பட்டிருந்தபோதிலும், அவைகளில் அடங்கியிருக்கும் அர்த்தங்களை நமது ஸித்தாந்தத்திற்கு விரோதமின்றிக்கே எல்லாருக்கும் ஸுகமாகப் போதமாகும் படிக்கும் தமிழில் எடுத்து எழுத, இந்த ஸ்வாமியிடத்திலிருக்கும் யோக்யதையைப் போன்ற யோக்யதையை யுடையவர்களே ஶக்தர்கள். அம்மாதிரியான ஶக்தி இந்தப் புஸ்தகத்தில் பூர்ணமாக ஆவிஷ்கரிக்கப்பட் டிருக்கின்றது என்பது, இந்தப் புஸ்தகத்தை நிதாநமாகப் பராமர்ஶித்த நம்முடைய த்ருடமான அபிப்ராயம். ஆனால், மஹார்க்ஷமான ரத்நத்திற்குத் துல்யமாக இருக்கும் இந்த க்ருதியை வெளியிடுகிறதான பாரத்தை வஹித்துவரும் ஸ்வாமிகள் இன்னும் கொஞ்சம் பர்யாலோசனையையும் பரிஶ்ரமத்தையும் எடுத்துக்கொண்டு, எப்படி ப்ரகாஶப்படுத்தினால் இது ஶோபித்துத் தெரியுமோ அந்தமாதிரி ப்ரகாஶிப்பித்து வரும் பக்ஷத்தில் ரமணீயதரமாக இருந்திருக்கும். மூலம் பாஷ்யம் சந்த்ரிகை முதலியவைகள் எங்கே முடிகிறது என்றும், அவைகளின் தொடர்ச்சி மறுபடியும் எவ்விடத்தில் உபக்ரமிக்கிறது என்றும் பார்த்த மாத்ரத்தில் விஶதமாக விளங்கும்படியாக, ஒரு அத்யாயம் முடிந்து மற்றொரு அத்யாயம் ஆரம்பிக்கும இடத்தில் அத்யாயாரம்பத்தை ஸூசிப்பிக்கக்கூடிய சிஹ்நங்களுடன் தெளிவாகவும் அத்யந்தம் த்ருஷ்டிப்ரியமாகவும் அச்சிடுவது நலம். அடுத்த ஸஞ்சிகை முதலாவது நாம் குறித்திருக்கும் வழியில் கொஞ்சம் சீர்திருத்தம் ஏற்படுமென்று நம்புகிறோம். மற்றைப்படி இந்த க்ரந்தத்தின் புகழ்ச்சியைப்பற்றி நாம் சொல்லக்கூடிய அம்ஶம் ஒன்றுமில்லை. ஆஸ்திக ஶிரோமணிகள் எல்லாரும் இதை வாங்கிப் படித்து ஆநந்திப்பார்கள் என்று நம்புகிறோம். மதராஸ், சிந்தாத்ரிப்பேட்டை, 84 - அக்ரஹாரம் வீதி, ஸத் ஸம்ப்ரதாய வர்த்தநீ ஸபை கார்யதர்ஶிகளுக்கு எழுதி இந்தப் புஸ்தகத்தை வேண்டுமவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ஹயக்ரீவ ஸ்வாமினே நம:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீ ஶிஷ்யஸபையின் இரண்டாவது மஹாஸங்கம்.

சென்ற மார்கழி மாஸம் 13 - 14 - 15 - தேதிகளில் தஞ்சாவூர் ஜில்லா நீடாமங்கலத்திலிருக்கும் ராஜா ஸத்ரமென்னும் விஶாலமான ஒரு ஸ்தலத்தில் ஸ்ரீ ஶிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹாஸங்கம் சேர்ந்தது. சிறந்த வித்வாங்களும் இதர ஆஸ்திக ஶிரோமணிகளுமாக அநேக ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்திருந்தார்கள். விஶேஷித்த உபந்யாஸங்கள் நடந்தன. சென்ற வருஷத்திற்போலவே இந்த வருஷத்திலும் மஹாஸங்கம் ஸர்வ விதத்திலும் பரமமான நிஷ்பத்தியை அடைந்தது என்றே சொல்லலாம். வந்திருந்தவர்களில் ஒருவருக்குக்கூட எவ்விதமான குறைவுமன்றி அத்யந்தம் த்ருப்தியைக் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்தும், ததீயாராதநாதிகளை அத்புதமமாக நடத்திவைத்தும், ஸந்நிவேஶாதிகளை ரமணீயங்களாக முதல் மஹாஸங்கத்திற்போலவே இப்பொழுதும் வ்யவஸ்தை செய்தும், ஸ்ரீ உ. வே. க்ருஷ்ணமாசார்யரும் ஸ்ரீ. டி. கோதண்டராம ஐயங்காருமே எல்லாருடைய க்ருதஜ்ஞதைக்கும் ஏகபாத்ரமாக ஆனார்கள். இவர்களுடைய நன்முயற்சி இல்லாவிடில் இந்த மஹாஸங்கம் நடந்து இருக்காது; நடந்து இருந்த போதிலும் இந்த மாதிரியான பூர்த்தி துர்லபமாகவே இருந்திருக்கும்.

இந்த மஹாஸங்கத்தில் நடைபெற்ற சில விஷயங்களைப் பற்றி விசாரிப்போம். மஹாஸங்கத்துக்கு விஶேஷித்த சிறப்பை ஸம்பாதித்துக்கொடுத்த அம்ஶங்களில் முதன்மையாகச் சொல்லக்கடவது அதன் அக்ராஸநாதிபதியின் வாய்ப்பே. வயஸ்ஸிலும், ஜ்ஞாநத்திலும், குணங்களிலும் ஸ்ரீ. உ. வே.. ரங்காசார்யர் ஸ்வாமியைக் காட்டிலும் சிறந்தவர் இந்த ப்ராந்தத்தில் ஒருவரும் இல்லை. அவருக்கு ஸபை விஷயங்களில் ஶ்ரத்தையையும், அதன் அபிவ்ருத்தியில் உத்ஸாஹத்தையும் உண்டுபண்ணி, அவருடைய

ஹார்த்தமான அநுக்ரஹத்திற்கு ஸபையைப் பாத்ரமாக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் செய்தது பெருந்த ஒரு ஶுப ஸூசகம். உபந்யாஸம் நடந்த காலங்களிலும் ஸப்யர்கள் ஒன்று சேர்ந்து முக்கியமான சிலவிஷயங்களைப்பற்றிப் பர்யாலோசனைகளைச் செய்த காலங்களிலும் அந்த ஸ்வாமி ஸந்நிஹிதராக எழுந்தருளியிருந்ததே அங்கு வந்திருந்தவர்கள் எல்லாருக்கும் ஓர் பெரிய பலத்தைக் கொடுத்தது. ஆர்ஜவத்தில் ப்ரவ்ருத்தியும் விஷயங்களில் கௌரவபுத்தியை முன்னிட்ட ஶ்ரத்தையும் அவருடைய ஸாமீப்யத்தாலேயே எல்லாருக்கும் உண்டாயிற்று என்று சொல்லலாம். இவ்விதமாக மஹத்தான உபகாரத்தைச் செய்யும் அந்த ஸ்வாமி இன்னும் பஹுகாலம் எழுந்தருளியிருந்து எல்லாரையும் ஸந்மார்க்க ப்ரவர்த்தநத்தால் அநுக்ரஹிக்க வேணுமென்று பகவானை நாம் ப்ரார்த்திக்கிறோம்.

**மகாஸங்கமும், ஸ்ரீ ஸ்வாமியும்.**

ஸங்கம் சேர்வதற்கு முன்னமேயே ஸ்ரீ அழகிய சிங்கரிடம் விஜ்ஞாபநம் செய்து ஸங்கத்தை உபக்ரமிப்பது தான் தங்களுடைய தர்மமென்று எண்ணி ஸபாத்யக்ஷரும் இன்னும் சிலருமாக ஆலோசித்துத் தகுந்த மநுஷ்யர்களை ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதிக்கு அனுப்பினதாகவும், ஸ்ரீ ஸ்வாமியும் வந்தவர்களை நிராகரிக்காமல் ஸங்கத்தின் ஸாதுத்வாங்கீகாரத்தை த்யோதிப்பிக்கக்கூடிய பதிலைச் சொன்னதாகவும் தெரியவருகிறது. ஸ்ரீ ஸ்வாமியின் அபிப்ராயம் எவ்விதமாக இருந்தாலும், தங்களுடைய தர்மத்தை அநுஷ்டிக்க வேணுமென்று இந்த ஸபையார் இந்த மாதிரி நடந்துகொண்டது மிகவும் ஶ்லாகநீயமே. 'சென்ற வருஷத்தில் ஸ்வாமி நம்முடைய ப்ரயத்நங்களை அவ்வளவாக அநுமோதிக்கவில்லையே!' என்கிற காரணத்தால் அப்படி விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டியது அநாவஶ்யம் என்று சிலர் நினைக்கலாம். அப்படி நினைப்பது ஸரியன்று. நமக்கு ஆசார்யராகவும் மடத்தின் நிர்வாஹகராகவும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் விஜ்ஞாபநம் செய்யாமல் மடத்தின் அபிவ்ருத்தி ஸம்பாதகங்களான இவ்வித ப்ரவ்ருத்திகளில் நாம் முயலுவது ந்யாய்யமன்று.



அவர் நம்முடைய முயற்சியை அநாதரித்தாலும், நம்மை அஹித கோஷ்டியிற் சேர்த்தாலும், நம்முடைய விஜ்ஞாபநங்களைக் கொஞ்சங்கூடக் கவனிக்காமலிருந்தாலும் நம்முடைய ப்ரயத்நம் ஸாதுவென்கிற புத்தி நமக்கு இருக்கும் வரையில், நாம் செய்யவேண்டிய ஸகல கார்யங்களையும் அவரிடத்தில் ஶேஷத்வாநுஸந்தாந புரஸ்ஸரமாகவே செய்துவருவதுதான் ஶிஷ்யர்களான நமக்கு லக்ஷணம். நாம் செய்வது அவருக்குத் தாத்காலிகமாகக் கொஞ்சம் ஆயாஸத்தை ஜநிப்பித்தாலும் நிஷ்பத்தியில் அநுகூலமாக இருப்பதால் ஒருவிதமான தோஷத்தையும் ஆவஹிக்காது.

ப்ரக்ருதமான இந்த மஹாஸங்கத்தில் ஸ்ரீ ஸ்வாமியினுடைய ஆதரவு நமக்கு அதிகமாக கிடைக்கவில்லை என்பது உண்மையே. ஸங்கம் ஆரம்பிக்கும் முன்னமேயே அவரிடம் ஸவிநயமாக விஜ்ஞாபநம் செய்தும், அவர் நாம் ஏதோ மஹத்தான அகார்யத்தில் ப்ரவ்ருத்திக்கிறதாகவே திருவுள்ளம் பற்றியிருக்கிறார். மடத்தின் ப்ரதிநிதியாக ஒருவரை அனுப்புவதாகத் திருவாய் மலர்ந்தருளினவர் அந்த மாதிரி அநுஷ்டிக்கவில்லை. மஹாஸங்கம் முடிந்த பிறகு, ஸங்கத்தின் தீர்மானங்களை விஜ்ஞாபநம் செய்துகொள்ளப்போனவர்களிடத்திலும் நமக்கு த்ருப்தியை ஜநிப்பிக்கும்படி ஸ்வாமி கடாக்ஷிக்கவில்லை; அவஸர ப்ரதீக்ஷகர்களாக இரண்டு தினம் அவர்கள் காத்திருந்தும், ஸங்கத்தைப்பற்றி விஜ்ஞாபநம் செய்துகொள்ள அவகாஶமே கிடைக்காமல் போய்விட்டது. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய கைங்கர்யத்திற்கு ஸம்பந்தமில்லாத வ்யாபாரங்களில் வ்யாப்ருதர்போலவும், அதற்கு விருத்தமான சிந்தைகளால் உபருத்தர்போலவும் ஸதா கிந்நராக எழுந்தருளியிருந்தாரே ஒழிய, 'நம்முடைய ஆராத்ய தேவதா கடாக்ஷத்தை எதிர் பார்த்து இவர்கள் வந்திருக்கிறார்கள்; இவர்களுடைய விஜ்ஞாபநத்துக்குச் செவிகொடுக்கவேணும்' என்கிற எண்ணம் அவருடைய மநஸ்ஸில் தோன்றினதாகவே ஏற்படவில்லை. எவ்விதமான ஔதாஸீந்யத்தை ஸ்வாமி வஹித்தாலும் அவருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்ட இந்த ஶிஷ்யர்கள் அவைகளை விட்டு அகல்வதாக எண்ணம் கொண்டவர்களல்லர்; எவ்விதத்தாலாவது தங்களுடைய உத்தேஶங்களை ஸாதித்துக்கொள்வதாக

த்ருடமாக நம்பியிருக்கிறார்கள். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷ பலத்தால் அந்த நம்பிக்கை நிறைவேறவேணும். "விஷாணைகோத்க்ஷிப்த ப்ருதிவீ ப்ரஶமந ஹ்ருத்பத்ம ப்ரஹ்மதமயாமணீந்த்ர ஸம்ஷதே: - நவரத்நாராதிக்ஷதஜபடௌக பராஹ்வஸ்தபாஹ்வஸ்தயோ ஸம்யே ஷம்ரித தமஸ பாம்ஸ்வஸ்ம்பவது ந:" என்று ஸ்ரீ பட்டருடன் நாமும், ஸ்ரீ ந்ருஸிம்ஹனை உத்தேஶித்து நமது விரோதியான பாபத்தை இப்போதே நிரஸிக்கவேணுமென்று ப்ரார்த்திப்போம்.

**ஸ்ரீ வேதாந்த தீபிகை.**

14 - ம் தேதி காலையில் நடந்த அங்கத்தினர்களுடைய கூட்டத்தில் அநேக விஷயங்களைப்பற்றிப் பர்யாலோசித்த பிறகு கடைசியில் இந்த வேதாந்த தீபிகை என்னும் பத்ரிகையைப் பற்றியும் ஒரு அம்ஶம் ஆலோசிக்கப்பட்டது. அங்கு நடந்த ஆலோசனையிலிருந்து, இந்தப் பத்ரிகையை ஒரு உபயுக்த பதார்த்தமாகவே பெரியோர்கள் அங்கீகரித்திருக்கிறார்களென்று தெரிந்துகொள்ள மிகுந்த ஸந்தோஷம் அடைந்தோம். க்ருபையாலும் ப்ரீதி விஶேஷத்தாலும் மஹான்கள் இதை ஒரு பொருளாக எண்ணினதே நமக்கு க்ருதார்த்ததையை உண்டுபண்ணுகிறது. ஸபாத்யக்ஷர் இந்தப்பத்ரிகை விஷயமான சென்ற வருஷத்தின் ஸ்திதியைப் பற்றிக் கொஞ்சம் பேசி, இதன் அபிவ்ருத்தி கிஞ்சித் த்ரவ்ய ஸஹாயத்தைப் பொறுத்திருக்கிறது என்று எடுத்துச்சொல்ல, அங்கு எழுந்தருளியிருந்தவர்களில் அநேகர் தாங்கள் அப்படிப் பட்ட ஸஹாயத்தை யதாஶக்தி செய்வதாக அவ்விடத்திலேயே மிகுந்த ப்ரீதியுடன் ஒப்புக்கொண்டார்கள். அப்படி ஒப்புக் கொண்ட மஹான்களுடைய பெயர் இந்த ஸஞ்சிகையில் மற்றொரு இடத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிப் பத்ரிகைக்கு அபேக்ஷிதமான தார்ட்யத்தை அவர்கள் சீக்கிரத்தில் உண்டுபண்ணவேணுமென்று மிகுந்த நன்றியறிவுடன் ப்ரார்த்திக்கிறோம். ஸங்கத்தில் நடந்த உபந்யாஸங்களைப்பற்றியும், அங்கத்தினர்களாற் செய்யப்பட்ட தீர்மானங்களைப்பற்றியும், இந்த ஸஞ்சிகையில் அவகாஶமில்லாததால் அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

---

[ஸ்ரீவேதாந்த தீபிகையின் தை மாஸத்து ஸஞ்சிகையினுடைய அநுபந்தம்.]

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமதே பராங்குஶ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:.

விஹிதவ்யதிஷங்கபங்கஸாம்யம்
ப்ரியமந்த்ர்யு பரஸ்ய யஸ்ய பாஸ: ।
காருண்யநிதிமாமதேகவேத்யம்
ந்ருஹரிம் தம் கமலாவாஸம் ப்ரபத்யே ।
விஸ்ருஜதி யஸ்ய கருணாகலயா ப்ரயதா:
வீக்ஷதி தஜ்ஜமஹதா ஸ்ஹஹாத்த ஸம ।
தமேவ விசித்ரபுநபதநாய பாம்ஸே
க்ருதக்ருத்யதி ந: பஸிஷ்டோ நிதராம் ஸுஶக்த: ।

---

**ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும் ***

**இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸமாஜத்துக்கு விஜ்ஞாபநம்.**

சென்றவருஷம் மார்கழிமாஸத்தில், தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில் இதுபோன்ற மஹாஸங்க ஆரம்பத்தில் சிலவிஷயங்களை விஜ்ஞாபநம் செய்தேன். இந்த வருஷத்திலும் அதேமாதிரி யாகச் சிலவிஜ்ஞாபநங்கள் செய்ய ஸ்ரீ அஹோபிலமடம் ஶிஷ்ய

* இது, நாளது வருஷம் மார்கழிமீ 18உ யில் நடந்த ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹா ஸங்கத்தில் ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

ஸபையின் கார்ய நிர்வாஹகர்கள் என்னை நியமித்திருப்பதால், அதை அநுஸரித்து நான் விஜ்ஞாபநம் செய்வதைச் செவிகொடுத்து என்னை அநுக்ரஹிக்கும்படி எல்லாரையும் ப்ரார்த்திக்கிறேன்.

## ராஜ பக்தி.

இந்த வருஷம் இந்தப் பரதகண்டத்துக்கு இதம் ப்ரதமமான ஒரு பெரியபாக்யம் நேர்ந்தது; அதாவது - நம்முடைய சக்ரவர்த்தியும், அவர் பார்யையும், சீமையில் க்ரமமான பட்டாபிஷேகத்தை யடைந்தும் அதில் த்ருப்தி யடையாமல் இந்தத் தேசத்தில் யுதிஷ்டிரர் முதலான மஹநீய சக்ரவர்த்திகள் ஆண்டு பட்டாபிஷேகமஹோத்ஸவம் கண்டு மகிழ்ந்த ஹஸ்திநாபுரமென்னும் டில்லிநகரில் தங்களுக்கும் பட்டாபிஷேகம் ஆகவேண்டுமென்றும், அதன் மூலமாய் இந்தத் தேசத்தில் ஸகல ப்ரஜைகளும் ஆநந்தமடையவேண்டுமென்றும் எண்ணங்கொண்டு அந்த மநோரதத்தைச் சென்ற டிசம்பர்மீ 12உ. யில் பூர்த்தி செய்தார்கள். அந்தக் காலத்தில் அங்குச்சேர்ந்த மஹாஸபையும் அதன் வ்ருத்தாந்தங்களும் பாக்கியசாலிகளான சிலருக்கு நேத்ர கோசரமாயும், இதரர்களான நமக்கெல்லாம் பத்ரிகா மூலமாய் ச்ரோத்ரகோசரமாயுமிருக்கிறபடியால், அதை நான் விஸ்தரிக்க வேண்டுவதில்லை. டில்லியில் பட்டாபிஷேக காலத்தில் நமது சக்ரவர்த்தி கருணையுடன் செய்வித்த உத்கோஷணமும், அதைத் தொடர்ந்துசெய்த வரப்பிரதானங்களும், இப்பொழுதைக்கு 6 - வருஷங்களுக்குமுன் யுவராஜராக இவர்வந்திருந்தகாலத்தில் இந்தத்தேசத்து ப்ரஜைகளிடத்தில் ஜாதிபேதம் வர்ணபேத மில்லாமல் ஸமமாய்த் தமக்கு உண்டாகும் ப்ரீதியும் கருணையும் அளவற்றனவென்று சொன்ன ஸம்பாஷிதமும், இந்தத் தேசத்தில் ஒருவருக்கும் மறக்க இடமில்லை. இப்படிப் பரமோதாரர்களாகவும் ஜமக்மாங்யர்களாகவும் இருக்கும் நமது ராஜாவும் ராஜ்ஞியும் சிரகாலம் ப்ரஜாபாலநம் செய்யவேணுமென்று நாமெல்லோரும் பகவானை ப்ரார்த்திக்க வேணும். மாந்தாதா முதலான பூர்விகராஜர்களும் நம் சக்ரவர்த்தியைப்போல அவ்வளவு விஸ்தாரமான பூமியில், ஏகசக்ராதிபத்யம் செய்தார்களென்று சொல்ல முடியாது. அதர்மிஷ்டர்களும் க்ரூரர்களுமான பல க்ஷுத்ரராஜர்களால் நிர்ந்தரம் பீடிக்கப்பட்ட இந்தப் பரதகண்டம் இப்போது ஏறக்குறைய 150 - வருஷமாய் அடைந்திருக்கும் உபசாந்திக்கும் க்ஷேமத்துக்கும்-நமக்குத் தைவ ஸங்கல்பிதமாக அமைந்திருக்கும் ராஜவம்சத்தின் தர்மசிந்தையும் கருணையும் ஸமதர்சித்வமுமே முக்கியமான காரணங்கள். இந்தக் குணங்கள் பூர்ணமாயிருக்கும் நம் சக்ரவர்த்தியிடத்திலும், அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கும் ராஜபுருஷர்களிடத்திலும், நமக்கு அஸ்கலிதமான பக்தி யிருக்கவேணுமென்று இந்த வைதிகஸதஸ்ஸுக்குச் சொல்லவேண்டியதில்லை.

“பரோக்ஷா தேவதா: ஸர்வா ராஜா ப்ரத்யக்ஷதேவதா ।
ராஜா மாதா பிதா சைவ ராஜா [illegible] ।
ராஜா ஸத்யம் ச தர்மஶ்ச ராஜா ஹிதகரோ ந்ருணாம் ।
ராஜைவ [illegible] லோகஸ்ய [illegible] ॥

இந்த்ராநிலயமார்க்காணாமக்நேஶ்ச வருணஸ்ய ச ।
சந்த்ரவித்தேஶயோஶ்சைவ மாத்ரா நிர்ஹ்ருத்ய ஶாஶ்வதீ: ।
ரக்ஷார்த்தமஸ்ய ஸர்வஸ்ய ராஜாநமஸ்ருஜத் ப்ரபு: ।
மஹதீ தேவதா ஹ்யேஷா நரரூபேண திஷ்டதி ॥”

என்று நம் சாஸ்த்ரங்கள் உத்கோஷிப்பதால், நமக்கு ராஜபக்தி ஆஜந்மஸித்தமென்றும், வர்ணபேதத்தாலாவது ஜாதிபேதத்தாலாவது ப்ராஹ்மணர்களுக்கு ராஜாக்களிடத்தில் அநாதரமும் அவிச்வாஸமும் உண்டாகுமென்று சொல்லுகிறவர்கள் அத்யந்தம் அநாதரணீயரென்றும் நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

“யஸ்ய ப்ரஸாதே பத்மாஸ்தே விஜயஶ்ச பராக்ரமே ।
ம்ருத்யுஶ்ச வஸதி க்ரோதே ஸர்வதேஜோமயோ ஹி ஸ: ॥

யஸ்து தம் த்வேஷ்டி ஸம்மோஹாத் ஸ விநஶ்யத்யஸம்ஶயம் ।
தஸ்ய ஹ்யாஶு விநாஶாய ராஜா ப்ரகுருதே மந: ॥”

என்று மறுவும்,

“ராஜ்ஞோऽதிக்ஷேப்த்ருவக்த்ராணாம் [illegible] ।
[illegible] ॥”

என்று யாஜ்ஞவல்க்யயோகியும் ஸ்மரித்திருப்பதால், நம் ஶாஸ்த்ரங்களைக் கற்றறிந்தவர்கள், ராஜத்ரோஹத்தையும் ராஜாபராதத்தையும் ஸ்வப்நத்திலும் செய்யார்கள். ஆகையால், ராஜபக்தி-ஶாஸ்த்ர ஸம்மதமாயும், ஹிதகரமாயும், பரமோபகாரிகளான ராஜாக்களிடத்தில் க்ருதஜ்ஞதாவிஷ்கரணரூபமான ப்ரத்யுபகாரமாயும் உள்ளது. விஶேஷித்து, மருகாந்தாரத்தில் தாஹத்தினாலும் ஶ்ரமத்தினாலும் திகைத்த ஒரு வழிப்போக்கனுக்கு மதுரமான பாநீயம் கிடைத்தாற்போல, பேரால் மாத்திரம் ராஜாக்களாய் ப்ரக்ருதிரஞ்ஜநமே தெரியாத துஷ்ட பூபாலர்களால் வருத்தமடைந்திருந்த பாரதீயர்களான நமக்கு, ராஜதந்த்ரத்தில் ப்ரவீணர்களும் பரம ஸாத்விகர்களுமான மந்த்ரிகளையுடைய நம் சக்ரவர்த்தியிடத்தில் பூர்ணகௌரவம் இருக்கவேண்டியது அவஶ்யம். “ராஜா நம் தைவதம் பரம்” என்கிறபடி தைவத்தினிடத்திலும் ஆசார்யனிடத்திலும்போல உசிதவிஷயங்களில் ராஜாவினிடத்திலும் நமக்குப் பூஜ்யதாபுத்தி ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. சில துர்ப்புத்திகளால் ஏற்படும் ராஜத்ரோஹத்தையும் அவர்களுக்கு விதிக்கப்படும் அநுகுணமான தண்டத்தையும் ஆலோசித்து, ஶிஷ்டாசாரப்ராப்தமான தைவநமஸ்காரம்போல ராஜபக்தியை விவரிப்பதும் ஸமயோசிதமென்று அதை முன்னிட்டு இதர வக்தவ்யங்களை உபந்யஸிக்க ப்ரயத்நப்பட்டேன்.

## ஸ்ரீ அஹோபிலமடம் சிஷ்யஸபை.

இன்றையதினம் “ஸ்ரீ அஹோபிலமடம் ஶிஷ்யர்கள் ஸபை” என்கிற பெயரால் ஏற்பட்டிருக்கும் ஸங்கத்துக்கு இரண்டாவது வருஷ பூர்த்தி உண்டாயிருப்பதனால், அதன் நிமித்தமாக இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளுக்கு முதலில் இந்த ஸபையின் உத்தேசங்களைப்பற்றிக் கொஞ்சம் விவரிக்கிறேன். இந்த ஸபை ஏற்பட்டு 2 - வருஷகாலமாகியும் நமது ஸம்ப்ரதாயஸ்தர்களான சிலருக்கு இந்த ஸபை ஆவஶ்யக மென்பதும், இது க்ரமமாய் ஆதரிக்கப் பெற்று வ்ருத்திக்கு வந்தால் பலவிதமாய் அபேக்ஷித விஷயங்களில் அநுகூல முண்டாகு மென்பதும் நன்றாய் புலப்படவில்லை. நம் ஸபையின் உத்தேஶங்களை அவர்கள் கவனித்து, ஸபை ஸம்பந்தமான உபந்யாஸங்களையும் ப்ருவ்ருத்திகளையும் பராமர்ஶிப்பார்களானால், இந்த ஸபையின் நன்மைகளை எல்லோரும் ஒப்புக்கொள்வது ஶ்ரமப்படாது. இந்த ஸபைக்குச் சென்னபட்டணம், கூடலூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, நெல்லூர், மைஸூர் முதலான இடங்களில் பிரிவுகள் ஏற்பட்டு, அந்தப் பிரிவுகளின் அங்கத்தினர்கள், கார்யதர்ஶிகளை ஏற்படுத்திக்கொண்டு ஸங்கங்கள் கூடி உபந்யாஸம் முதலானவைகளைச் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு பிரிவிலும் இன்னும் பலபெயர்கள் சேர்ந்து அடிக்கடி பெரிய ஸங்கங்கள் கூடி மடத்தின் அபிவ்ருத்திக்கும் ஸம்ப்ரதாயவ்ருத்திக்கும் உரிய கார்யங்களை விஶேஷ உத்ஸாஹத்துடன் செய்துவந்தால் நிரம்பவும் ப்ரஶஸ்திக்கு இடமாகும். ஸபை அங்கத்தார்களுக்கு வருஷச் சந்தா ரூ. 1 - ஆகக் குறைத்து ஏற்படுத்தி யிருப்பதும், எல்லாரும் அங்கமிக்க வேணுமென்கிற உத்தேஶத்தால்தான்.

## வேதாந்ததீபிகை.

இந்த ஸபையின் கார்யங்களில் ‘வேதாந்த தீபிகை’ என்கிற பத்ரிகையை ப்ரகாஶம் செய்துவருவதை நிரம்பவும் முக்கியமான கார்யமாக எண்ணிவருகிறோம். ஸ்ரீமான் எஸ். வாஸுதேவாசார்யர் பி. ஏ., எல். டி. பத்ராதிபராயிருந்து அதை நடத்திவரும் மாதிரியும், காலவிளம்ப மில்லாமலும் பிழைக ளில்லாமலும் மாதந்தோறும் அதை வெளிப்படுத்திவரும் க்ரமங்களும் எல்லாருக்கும் ஹ்ருதயங்கமமா யிருக்கின்றபடியால், அந்தவிஷயத்தில் எல்லாரும் அவருக்கு க்ருதஜ்ஞர்களா யிருப்பார்களென்று நம்புகிறேன். விஶேஷமாய் ஸம்ப்ரதாய பரிசய மில்லாதவர்களுக்கும் உபயோகப்படவேண்டியதற்காக இந்தப் பத்ரிகை ஏற்படுத்தப்பட்டு வருஷச் சந்தா ரூ. 2-க்குத் தபால்சார்ஜு உள்படக் கொடுக்கப்படுகிறது. இதை வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்கள் விஶேஷமாய் ஆதரித்தால், பஹுபெயர்களுக்கு ஜ்ஞாந ஜநகமான இந்தப் பத்ரிகை இன்னும் நன்றாக நடத்தப்படும். நமது பண்டிதர்கள் இந்தப் பத்ரிகைக்கு விஷய ப்ரதாநம் செய்வார்களானால், அது பெரிய உபகாரமாகவும், இதை வாசிக்கும் பல பாகவதர்கள்விஷயத்தில் அநுகூலமான கைங்கர்யமாகவும் இருக்கும். இங்க்லீஷ் பாஷையிலும், தமிழ் தெலுங்கு பாஷைகளிலும் எவ்வளவோ மாஸிக பத்ரிகைகள் ஏற்பட்டிருக்கின்றன. நமது பத்ரிகைபோல ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கு என்று ஏற்பட்டு ஸலிதமான தமிழில் ஸம்ப்ரதாய

விரோதமில்லாமல் ஸூக்ஷ்மமான அர்த்தங்களை எடுத்துக்காட்ட வேறொரு பத்ரிகையும் இல்லை. இப்படிப்பட்ட பத்ரிகைக்கு விஷய ப்ரதாநம் பண்ண எவ்வளவோ யோக்யர்க ளிருந்தும், இதில், அவர்கள் ஶ்ரத்தையைக் காட்டாம லிருப்பது துக்ககரமா யிருக்கின்றது. மந்த்ரோபதேஶங்களும் ரஹஸ்யோபதேஶங்களும் ஆசார்ய முகமா யிருந்தாலும் விஷய ஶோதநத்துக்குச் சர்ச்சை அவஶ்யமாகையால், "ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி" என்றும், "ஸங்கோஷாயம் விஶ்வஸதி ஶாஸ்த்ரே ஸந்தேஹாஸ் ஸத்ஸம்ப்ரதாயாத் த்ருடீகரோதி" என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வாதிகாரமான ப்ரபத்தி முதலியவைகளுக்கு அநுகூலமான ஜ்ஞாந ஸம்பாதநத்தை உத்தேஶித்து அவரவர்கள் ஸௌகர்யமான காலங்களில் விஷயங்களை எளிதாய்த் தெரிந்து கொள்வதற்கு இப்படிப்பட்ட பத்ரிகை நிரம்பவும் அநுகூலமா யிருக்கும். உத்தமாதிகாரிகளும் மத்யமாதிகாரிகளும் க்ருபை செய்து விஷயங்களை லளிதமாய் எழுதிப் பத்ரிகைக்கு அனுப்பினால் இதரர்களுக்குப் பெரிய உபகாரமாகும். பத்ரிகையின் சந்தாதாரர்கள் வ்ருத்தியாகும்பக்ஷத்தில், விஷய ப்ரதாநம் செய்யும் வித்வான்களுக்கு உசிதமான ப்ரயோஜநமும் க்ரமஶ: ஏற்படுத்தப்படும். ஶ்ரத்தாளுக்களான ஒவ்வொருவரும் இந்த விஷயத்தில் கொஞ்சம் ஶ்ரமம் வஹிக்கவேணு மென்று நிரம்பவும் ப்ரார்த்திக்கிறேன்.

## ஐகமத்யம் ஆவஶ்யகம்.

இந்தத் தேசத்தில் தெற்கு ஜில்லாக்களிலும், வடக்கு ஜில்லாக்களிலும், மைசூர் ஹைதராபாத் காசி முதலான தூரதேஶங்களிலும் மடத்தில் அந்வயமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸத் ஶூத்ரர்களும் ஏறக்குறைய 15000-பெயர் இருக்கலாம். இவர்களெல்லாரும் தேஶபேதம், வர்ணபேதம், குலபேதம், ஶாகாபேதம் முதலான பலபேதங்களால் பிந்நாபிப்ராயங்களுள்ளவர்களானாலும், ஒருவிஷயத்தில் நிஸ்ஸந்தேஹமாய் ஸமாநமான எண்ணத்தைக் கொண்டவர்களாகச் சொல்லவேணும்; அதாவது - ஸ்ரீ அஹோபிலமடத்தின் கார்யங்கள் சரிவர நிர்வஹிக்கப்பட வேண்டு மென்பதும், அதன்மூலமாய்த் தங்களுக்குப் பஞ்சஸம்ஸ்காரம் ஜ்ஞாநோபதேஶம் முதலான ஆமுஷ்மிக ஸாதநங்கள் ஸுலபமாகக் கிடைக்கவேணுமென்பதும் தான். இந்த அபிஸந்திக்கு அவர்கள் ஆஸ்திகதையே காரணமேயொழிய த்ரவ்யத்திலும் கீர்த்தியிலும் கௌரவத்திலும் ஆசையால் மடத்தின் வ்ருத்தியை அபேக்ஷிக்கிறார்களென்று சொல்வது ஸாத்யமில்லை. இந்த அபிஸந்தி சரிவர நிறைவேறுவதற்கு, அவர்கள் ப்ரயத்நமும் ஐகமத்யமும் அவஶ்யம் இருக்கவேணும். ஸாமாந்யமான ஸாத்யத்தை விரும்புகிற பலபெயர்கள் ஒரு ஸமாஜமாய்ச் சேர்ந்து ஒருவரோடொருவர் கலந்து ஆலோசனைகளைச்செய்து "ஸங்கே ஶக்தி: கலௌ யுகே" என்கிற ந்யாயத்தை அநுஸரிப்பது, லோகத்தில் அநுபவஸித்தமா யிருக்கிறது. இந்த ஔசித்யத்தை நினைத்துத்தான் இந்த ஸபை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், ஸமவாயங்களிலும் பிந்நாபிப்ராயங்களும் மாத்ஸர்யங்களும் ஏற்படக் கூடாதோ வென்றால், அப்படிக் கெல்லாம் நேரிடாமல், இந்த ஸபையிற் சேர்ந்தவர்களுடைய ஆஸ்திக்ய புத்தியும் ஸத்குணங்களுமே அவர்களைக் காப்பாற்றவேணும். மேலும், "மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:" என்கிறபடியே இப்படிப்பட்ட ஸமவாயங்களில் பெரும்பாலாருடைய அபிப்ராயத்தையே இதரர்கள் அநுவர்த்திப்பதும் வழக்கமாயிருக்கிறது. அப்படி அபிப்ராயபேதங்கள் ஏற்படும் விஷயங்கள் காதாசித்கமாயும், ஏகாபிப்ராயமாய்ச் செய்யக்கூடிய கார்யங்கள் பஹுளமாயும் அநேகம் இருக்கும். ஆகையால், நமக்கு ஐகமத்யம் நேரிடாதோ வென்கிற பயத்தால் ஸபையில் மந்தோத்ஸாஹர்களாய் நாம் இருக்கவேண்டியதில்லை. மடத்தின் அபிவ்ருத்தியில் தாத்பர்ய மிருந்தால் இந்த ஸபையிற் சேர்ந்து அதன் கார்யங்களின் யுக்தாயுக்தங்களைத் தங்கள் ஶக்தியாற் சீர்திருத்திப் பொது அபிஸந்தியை நிறைவேற்றுவதே விவேகிகளுக்கு உசிதம். இதுவரையில் இந்த ஸபையில் ப்ரவ்ருத்தித்தவர்களின் செய்கைகள் தோஷாஸ்பதங்களாகத் தோன்றவில்லை. ஏதாவது அம்ஶத்தில் ஸ்கலந மிருந்தாலும் அது க்ஷமிக்கக் கூடியதே யொழிய அதுகாரணமாய் உத்வேகப்படுவதும் ந்யாய்யமன்று. பொதுவான கார்யங்களில் நாம் செய்யக்கூடியது என்னவென்று விரக்தர்களாய் ஒதுங்கி யிருப்பது நம் தேஶத்தவர்களுக்கு இதுவரையில் ஸஹஜமாய் இருந்தது வாஸ்தவம்தான். ஆனால், இந்த அபக்யாதி பலவிஷயங்களில் கொஞ்சம்கொஞ்சமாக மறைந்து வருவதுபோல, நம் மடத்தின் விஷயங்களிலும் அது சீக்ரத்தில் நீங்கவேணு மென்று நாம் எல்லோரும் உத்யோகப்பட

வேண்டும். "ந ஹி ஜ்ஞாநவதாம் [illegible] ஶோபதே [illegible]"

என்கிற ந்யாயம் அநிவார்யமான தேஶோபப்லவாதிகளில் உபயோகிக்க வேணுமே யொழிய இந்த மாதிரியான ப்ரயத்ந ஸாத்யமான அம்ஶங்களில் உபயோகிக்கக் கூடாது. இந்த மடத்து விஷயங்களில் தைவாநுகூல்யத்தையும், ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபையையும் முன்னிட்டு நம்முடைய ஏகமுகமான ப்ரயத்நங்களினுல் பலிக்கக்கூடிய பாகங்கள் அநேக மிருக்கின்றன. இவைகளைக் கொஞ்சம் விஶேஷித்துக் கவனிப்போம்: ஶிஷ்யர்களான நமக்கு ஆத்மோஜ்ஜீவநோபாயங்களில் ஶ்ரத்தை யிருந்தால் ஆசார்யன் இருக்கும் இடத்தைத் தேடிப்போய் ஜ்ஞாநாபேக்ஷையைத் தெரிவிப்பது ஸ்வதர்மம். அப்படி நாம் செய்யுங் காலத்தில், ஸ்ரீ அழகிய சிங்கர் அநாதரவாகவாவது, நம்மிடத்தில் ஏதோ சிலகாரணங்களினுல் அப்ரீதராகவாவது, ஜ்ஞாநோபதேஶாதிகளுக்கு அஶக்தராகவாவது இருந்தால், அது நம்முடைய உத்ஸாஹத்துக்கு நிரம்பவும் ஶைதில்யத்தைக் கொடுக்கும். ஆனுல், ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருமேனி அஶக்தியா யிருந்தாலும் க்ருபை உண்டாயிருந்தால், மேற்சொன்ன இந்தக் குறைவுகள் ஏற்படக் கொஞ்சமேனும் ந்யாய மில்லை. ஸம்யக் உபஸந்நர்களான ஶிஷ்யர்களிடத்தில் ஆசார்யர்கள் அநாதரம் பண்ணுவது அவர்களுக்கு ஸ்வரூப விருத்தம். தௌம்யாதிகளைப்போல விஶேஷ ஶிஷ்ய பரீக்ஷை பண்ணுவதும் இந்த யுகத்தில் ந்யாய்யமன்று.

## ராஜஸந்யாஸத்தின் ஸ்வரூபம்.

மேலும், ஸாதாரண ஸந்யாஸிகளைப்போ லில்லாமல், இந்த ஆஸ்தாநத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸந்யாஸிகள் ஶிஷ்யாநுகூல்யத்தையே எப்பொழுதும் செய்யவேண்டியவர்கள். அதை உத்தேஶித்தே அவர்களுக்குச் சில நூதந தர்மங்கள்; ஶாஸ்த்ர ஸித்தங்களா யில்லாமலிருந்தும், அநுஷ்டாந ஸித்தங்களாயும் ஔசித்ய ஸித்தங்களாயும் எற்பட்டிருக்கின்றன. யதிதர்மங்களில்

"ஏக ஏவ சரேந்நித்யம் ஸித்த்யர்த்தமஸஹாயக:"

என்று பரிசாரக பரிச்சதங்களும்,

"ஏகராத்ரம் வஸேத் க்ராமே நகரே பஞ்சராத்ரகம்"

என்றும்,



"அஷ்டௌ மாஸாந் விஹார: ஸ்யாத் யதீநாம் ஸம்யதாத்மநாம்"

என்றும் ஒரே இடத்தில் சிரகாலவாஸமும்,

"த்ரிதண்டம் குண்டிகாம் கந்தாம் பாதுகே சாஜிநாஸநம் ।
கௌபீநாச்சாதநம் வாஸ: ஷடேதாநி பரிக்ரஹேத் ॥"

என்று இதர பரிக்ரஹங்களும்,

"ஆஸநம் பாத்ரலோபஶ்ச ஸஞ்சய: ஶிஷ்யஸங்க்ரஹ: ।
திவாஸ்வாபஶ்ச யாநம் ச யதீநாம் பதநாநி ஷட் ॥"

என்று தநஸஞ்சய ஶிஷ்ய ஸங்க்ரஹ யாநாதிகளும் ஸ்ம்ருதிகளில் நிஷேதிக்கப்பட்டிருக்கையிலும், ஶிஷ்யர்களுடைய ஆநுகூல்யத்தை உத்தேஶித்தே, சத்ர சாமராதி பரிச்சதங்களும் யாநாதிகளும் ஶிஷ்யார்ப்பண பரிக்ரஹங்களும் த்ரவ்ய பூமி பரிபாலந க்ருத்யங்களும் ராஜயதிகளுக்கு ஶிஷ்ட ஸம்மதங்களாய் வழங்கிவருகின்றன.

## மடத்தின் ஏற்பாடுகள் இருக்கவேண்டிய விதம்.

இந்த அம்ஶங்கள் தவிர மற்ற விஷயங்களில் யதிஸாமாந்ய தர்மங்கள் ஸ்ரீ அழகிய சிங்கர்களுக்கும் ஸமாநம். ஶிஷ்யார்ப்பிதங்களான த்ரவ்யங்களை ஶிஷ்யார்த்தம் உபயோகிப்பதும், யதாஶக்தி ஸஞ்சாரங்கள் செய்து ஶிஷ்யர்களை அநுக்ரஹிப்பதும், தங்களால் அஸாத்யமான த்ரவ்ய பூமி பரிபாலநாதி லௌகிக வ்யவஹாரங்களில் அநுகூலர்களாகவும் ஸமர்த்தர்களாகவு முள்ள கார்யஸ்தர்களை நியமித்து நடத்துவதும் உசிதம். இந்த அம்ஶங்களை ஸ்ரீ அழகிய சிங்கர் கவனிக்காதவரையில், த்ரவ்ய நாஶமும் தர்மலோபமும் லோகாபவாதமும் ஸித்திக்கும். கணக்குகள் வைப்பதில் ஸாமர்த்யமும் தேர்ச்சியு முள்ள ஒரு ஸ்ரீகார்யக்காரரை நியமித்து அவர்மூலமாய்க் கணக்கு முதலியவைகளை ஸ்ரீ அழகியசிங்கர் பராமர்ஶித்துவந்தால், வரும்படிகள் க்ரமமாய் வஸூல் செய்யப்படுகின்றனவா வென்கிற விஷயமும், வ்யயங்கள் உசிதமாய் ஏற்படுகின்றனவா வென்பதும், ஸ்ரீ அழகிய சிங்கருக்கும் ஶிஷ்ய வர்க்கத்துக்கும் நன்ருய்த் தெரிவதுடன், ராஜாதிகாரிகளான ந்யாயாதி

காரிகள் முன்னிலையில் ஏதாவது ஸமயங்களில் கணக்குகள் அனுப்
பப்பட்டால் ‘க்ரமமாய் வைக்கப்பட்டிருக்கின்றன’ என்று அவர்
கள் ப்ரலாபிக்கவும் ஹேதுவாகும். முன்பு ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழ
கியசிங்கர்காலத்திலும், பிறகு ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கர்
காலத்திலும் நிரம்பவும் தர்ம்யமான ஒரு வழக்கம் மடத்தில் ஏற்
பட்டிருந்தது; அதாவது - ஒவ்வொருநாளும் காலையில் ஶிஷ்யர்கள்
சேர்ந்திருக்கும் காலத்தில் முதல்நாள் கணக்குக்கள் பூர்த்தியாகப்
படிக்கப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கராலும் மற்றவர்களாலும் கேட்கப்
பட்டுவந்தன. இந்த வழக்கம் பிந்தி நின்றுவிட்டதாகத் தெரியவரு
கிறது. அதை ஸ்ரீ அழகியசிங்கர் மறுபடியும் அநுஷ்டாநத்துக்குக்
கொண்டுவந்தால், மடத்துக்கு ஹிதகரமாயும் ஶிஷ்யர்களுக்கு ப்ரீதி
கரமாயும் இருக்கும். ருஜூபுத்திகளாயும் விரக்தர்களாயும் உள்ள
அழகியசிங்கர்களுக்கு இப்படிச் செய்வதில் யாதொரு அஸௌ
கர்யமு மில்லை. முன்காலத்தில் ஸ்ரீ அழகியசிங்கர்கள் விஶேஷமாய்
ஸஞ்சாரங்கள் செய்து ஶிஷ்யப்ரீதிகரமான ஸம்பாஷணாதி ப்ரவ்ரு
த்திகளினால் விஶேஷ த்ரவ்யங்களைச் சேர்த்து மடத்தின் தினச்செ
லவுகளை நடத்திவந்தார்கள். அஶக்தியால் ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்
சாரங்கள் செய்யக்கூடாத நிலைமையில் எழுந்தருளியிருக்கும் கால
ங்களில் ஶிஷ்யர்கள் விஶேஷமாய் வந்து ஸேவித்து உசிதமான
ஸமர்ப்பணங்களைச் செய்தால் அப்போதைக்கப்போது வ்யயங்கள்
மூலதநங்களைக் குறைக்காமல் வரும்படிகளிலிருந்து ஆகிவரும்.
அப்படி அவர்கள் செய்வதற்கு, ஸந்நிதியில் தகுந்த அதிகாரிகளைக்
கொண்டு க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபாதிகளும் அடிக்கடி வித்வத்
கோஷ்டிகளும் நடத்திவரப்பட வேண்டும். ஶிஷ்யார்ப்பணங்கள்
சரிவர விநியோகிக்கப்படும் என்கிற நம்பிக்கைக்குக் கொஞ்சமே
னும் ஶைதில்யம் வரக்கூடாது.

## கட்டடங்களின் ஜீர்ணோத்தாரணம்.

மேலும், பல இடங்களிலு மிருக்கும் மடத்தின் கட்டடங்கள்,
ஜீர்ணமாய்ப் புதிப்பித்தலை அபேக்ஷிக்கின்றன. இப்போது ஸ்ரீ அழ
கியசிங்கர் ராஜமன்னார்ஸந்நிதி மடத்தைப் புதிப்பித்ததும், மேலைக்
கோட்டையில் ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன்
ப்ருந்தாவநத்தைப் புதுப்பிக்க த்ரவ்ய ஸஹாயம் நியமித்திருப்ப
தும், நமக்கு நிரம்பவும் ஆஹ்லாதத்தைக்கொடுக்கின்றன. மேற்சொ



ன்ன ப்ருந்தாவந விஷயமாய் மைசூரில் ப்ரௌடர்களான ஶிஷ்யர்
களும் ஸ்ரீ ஶிஷ்யஸபையும் செய்துவந்த ப்ரயத்நம் ஸ்ரீ அழகிய
சிங்கர் க்ருபையால் ஸபலமான விஷயத்தில், இந்த ஸபையார்
மிகவும் க்ருதஜ்ஞர்களா யிருக்கிறார்கள். ப்ருந்தாவநக் கட்டட
வேலை சீக்ரத்தில் முடிந்து, யதாக்ரமம் அங்கே செல்வப்பிள்ளை
உத்ஸவங்களைக் கண்டருளி, இந்தமாதிரி ஸதஸ் ஒன்று அவ்விடத்
திற்சேர்ந்து நாமெல்லோரும் க்ருதார்த்தர்களாகவேணு மென்று
ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸதா ப்ரார்த்திக்கவேணும். இந்தமா
திரி வேலைசெய்து பராமர்ஶிக்க வேண்டிய கட்டடங்கள் பஹூ
வாய்ப் பலவிடங்களிலும் இருக்கின்றனவென்பது ஸுப்ரஸித்தம்.
அவைகளின் ஸ்திதியை ஸ்ரீ அழகிய சிங்கர் தகுந்தவர்களைக் கொ
ண்டு அறிந்து, அவர்கள் விஜ்ஞாபநம் பண்ணும் மார்க்கங்களைச்
செவிகொடுத்து அநுஸரித்து யதாஶக்தி கட்டடங்களைப் புதுப்
பிக்கச் செய்வது உசிதம். ஸ்ரீ அஹோபிலத்திலேயே ஸந்நிதிகள்
சிதிலமா யிருப்பதும், பூமிகளில் சில அந்யாக்ராந்தமா யிருப்பதும்,
வரும்படிகள் சரிவர வசூல் செய்யப்படாம லிருப்பதும் சென்ற
மாஸத்திய வேதாந்ததீபிகைபத்ரிகையில் பத்ராதிபர் விவரித்திருக்
ததை எல்லாரும் அறிந்திருக்கலாம். அப்படி நமது ஸம்ப்ரதாயத்
துக்கு மூலபூதமான ஸ்தலத்தின் துரவஸ்தை, விஶ்வாஸிகளான
ஶிஷ்யர்களில் யாருக்குத்தான் விஶேஷமான துக்கத்தை உண்டு
பண்ணவில்லை? கட்டட வேலைகள் த்ரவ்ய ஸாத்யமான போதிலும்,
ஸ்ரீ அழகிய சிங்கருக்கு அதில் அபிநிவேஶ மிருந்தால், அங்கங்கே
ஏற்பட்டிருக்கும் பூமி வரும்படிகளை அங்கங்கே உசிதமாய் உப
யோகப்படுத்தி ஶிஷ்யர்களால் அபிமாநமாய்ச் செய்யப்படும் உபகா
ரங்களையும் சேர்த்துக்கொண்டு, அந்த வேலைகளை காலடைவில்
செய்து முடிக்கலாம். இது விஷயத்தில் ஶிஷ்யர்களின் ப்ரயத்நம்
விஶேஷமாய் வேணும். பலவிடங்களிலிருக்கும் பூமிகள் கட்டடங்
களின், விஷயங்களைப்பற்றி அந்தந்த இடங்களில் ப்ரபுக்களாக
இருக்கும் ஶிஷ்யர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் பத்ரிகை
மூலமாயும் நேரிலும் அடிக்கடி விஜ்ஞாபநம் செய்யவேணும்.
இந்த ஸபையின் பத்ரிகையாகிய வேதாந்ததீபிகைக்கும் இது ஸம்
பந்தமான விஷயங்களை எழுதி அனுப்பினால், அவைகளும் பத்ரி
கையில் ப்ரசுரஞ் செய்யப்பெற்று ஸ்ரீஅழகிய சிங்கர் திருவுள்
ளத்தில் படும்படி அடிக்கடி ப்ரார்த்திக்கப்படும்.

## மடத்தின் அபிவிருத்திக்கு ஏற்ற மற்றைக்காரியங்கள்.

சிஷ்யர்கள் விசேஷமாய்க் கூடியிருக்கும் ஒவ்வொரு முக்கியமான நகரத்திலும், க்ராமத்திலும், மடத்துக்குச் சொந்தமான க்ருஹம், கட்டடங்கள், பூமி இவைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் ந்ருஸிம்ஹன் விக்ரஹமும் ஆசார்யாதிகள் விக்ரஹமும் ஆராதநத்துக்கு எழுந்தருளப்பண்ணித் தகுந்த ஆராதகர்களைக்கொண்டு உத்ஸவங்கள் செய்துவந்தால் சிஷ்யர்களுக்குப் பக்தி வ்ருத்தியும் உத்ஸாஹமும் அதிகமாகும். அந்த இடங்களில் சிலவேளைகளில் தகுந்த வித்வான்களைக்கொண்டு ஸதஸ்ஸுகள் சேர்ப்பதும் உபந்யாஸங்கள் செய்விப்பதும் ஸ்ரீ அழகிய சிங்கர் மடத்தின் ஏற்பாடாகத் திருவுள்ளம்பற்றி நடத்திவந்தால், நமது ஸித்தாந்தங்களுக்கு விசேஷமான ப்ராசுர்யம் உண்டாகும். இப்படிப்பட்ட மடத்தின் அபிவ்ருத்திக்கு அநுகூலமான கார்யங்களை நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து நிர்ணயித்து நம்முடைய அபிப்ராயங்களை ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்யவேண்டியது அவச்யம். நாம் சொல்லும் விஷயங்கள் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்தில் ஸ்வயமாய்ப் பட்டிருந்தாலும், அதிக த்ரவ்ய வ்யயம் உண்டாகும் என்பது முதலான காரணங்களினால் அவ் விஷயத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் உதாஸீநமாயிருக்க ஸம்பவிக்கலாம். இந்தக் கார்யங்களில் பஹுவான சிஷ்யஸமூஹத்துக்கு அபிநிவேசமிருக்கிறதென்பது ஏற்பட்டால், அப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர் அவர்கள்மநோரதத்தை ஸபலமாக்கத் திருவுள்ளம் பற்றலாம். ஆகையால், மடத்தின் கார்யங்களில் எவ்வளவு ந்யூநாதிரேகங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவ்வளவையும் ஸங்கோசமில்லாமல் ஸந்நிதியில் தெரிவிப்பது சிஷ்யர்களின் முக்கிய கடமையென்றும், அப்படி நாம் ஹிதபுத்தியாற் செய்யும் விண்ணப்பங்களை அழகியசிங்கர் அநாதரம் செய்தாலும் அந்யதாவாய் எண்ணினாலும் அதனால் நமக்கு யாதொரு கௌரவஹாநியும் அபசாரமும் கிடையாது என்றும் அடியேனுக்குத் தோன்றுகிறது. "யத்நே க்ருதே யதி ந ஸித்யதி கோऽத்ர தோஷ:" என்கிற ந்யாயம் நமக்கும் உண்டு. மேலும், ஸ்வப்ரயோஜநம் ஒன்றையும் உத்தேசிக்காமல் பொதுவான கார்யத்தை நாம் ஒன்று சேர்ந்து ஆலோசித்து அதுவிஷயமாக நாம் செய்யும் விண்ணப்பங்களை மடத்துக்கு விரோதிகளான சிலர்



அநுசிதங்களென்று சொல்லி ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளத்தை மயங்கும்படி செய்தாலும், அந்த மயக்கம் நீடித்திராதென்றும், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் மடத்தின்அபிவ்ருத்தியை ஸங்கல்பிப்பனென்றும் நாம் நிச்சயமாய் நம்பவேணும்.

## சில ஆக்ஷேபங்கள்.

ஆனால், சிலர், நாம் இந்த விஷயங்களைப்பற்றி ஸபைசேருவதும், ஸ்ரீ அழகிய சிங்கரால் செய்யப்படும் வ்யாபாரங்களிலும் உதாஸீநமாய் இருக்கும் விஷயங்களிலும் யுக்தாயுக்த விசாரம் பண்ணுவதும், அது விஷயமாய்ப் பத்ரிகை முதலானவைகளை ஏற்படுத்தித் தோஷாவிஷ்கரணங்கள்செய்து ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்தைக் கலக்குவதும் அநுசிதமென்றும், அபசாரமென்றும் சொல்லுகிறார்கள். மேலும், ஆசார்யன் எதை விதித்தாலும் நிராக்ஷேபமாய் அப்யுபகமம் செய்வதும், ஏதாவது மடத்தின் கார்யங்களில் ஹாநிகள் ஏற்பட்டால் அது விஷயத்தில் மௌநமாயிருந்து தனக்கு ப்ரதிபத்தி குறைந்தால் விலகி விடுவதும் சிஷ்யதர்மமேயொழிய, கர்த்தவ்யங்களை எடுத்துச்சொல்லி நிர்ப்பந்திப்பது சிஷ்யர்களுக்கு அநுசிதமென்றும் சொல்லுகிறார்கள். அன்றியும், ப்ராசீநமாய் மடத்தில் அந்வயமிருந்தாலும் அநுஸ்யூதமாயிராமல் நடுவில் மடத்தில் அந்வயம் தவறிப்போனவர்கள் ஸாக்ஷாத்தாக இப்போதிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் ஸம்ஸ்காரம் மந்த்ரோபதேசம் க்ரந்தோபதேசம் முதலானவைகளில் ஒன்றுமில்லாமலிருந்தும் தாங்கள் மடத்துசிஷ்யர்கள் என்றும், மடத்தின் ஹிதங்களைச் சொல்லப் பாத்யப்பட்டவர்களென்றும் சொல்லிக்கொள்வது அந்யாயமென்றும் சொல்லுகிறார்கள். எப்படியிருந்தாலும், முன்புள்ள ஸ்ரீ அழகியசிங்கர்கள்காலத்தில் ஏற்படாத புதிதான ஒரு மார்க்கத்தை இப்போது அவலம்பித்து, ஸபையின் ஆரம்பத்துக்குமுன் ஸ்ரீ அழகிய சிங்கரின் ஹஸ்தமுத்ரா பூர்வகமான அநுமதியைப் பெறாமல் ஸபைகளை நடத்துவதும், அவைகளின் நிர்ணயங்களை அங்கீகரிக்கும்படி ஸ்ரீ அழகிய சிங்கரைப் பலபெயர் கூடிக்கேட்பதும் அத்யந்தாநுசிதமென்றும் சொல்லுகிறார்கள்.

## ஆக்ஷேப ஸமாதாநம்.

இந்த ஆக்ஷேபங்களின் ஸ்வரூபங்களை விசாரித்துப் பார்த்தால், அவைகள் யுக்தமான ஆக்ஷேபங்களல்லவென்றும், ஸுலப

மாய் ஸமாதேயங்க ளென்றும் நன்றாய் விளங்கும். ஶாஸ்த்ர
விஹிதங்களான ஆசார்ய ஶிஷ்ய பாவங்களை நான் ஒருவிதத்தா
லும் நிராகரிக்க வில்லை. ஆனால், வஸ்துஸ்திதியில் இந்தக்காலத்
தில் பூர்வகாலீநமான ஶிஷ்ய தர்மங்களை எதிர்பார்க்க முடியா
தென்று முன்பே விஜ்ஞாபநம் செய்தேன். ஜ்ஞாநக்குறைவினா
லும் ஶக்திக்குறைவினாலும் இந்தக் காலங்களில் ஶிஷ்யர்கள் முன்
போலப் பரீக்ஷைகளுக்கு உட்படுவது ஶ்ரமமாகும். ஆமுஷ்மிக
கார்யங்களில் காலபலத்தினால் ஶ்ரத்தை நிரம்பவும் குறைந்திருக்
கும் ஸ்திதியில், க்ருஹஸ்தர்களாகவும் ஸந்யாஸிகளாகவு மிருக்
கின்ற ஆசார்யர்கள் கொஞ்சமேனும் ஜ்ஞாந ஸம்பாதநத்தில்
ஶ்ரத்தையைக் காட்டும் ஶிஷ்யர்களைத் தவிரவிடாது கருணையுடன்
கைப்பற்றி அவர்களுக்கு ஸாதரமாய் உபதேஶித்து அவர்கள் ஶ்ர
த்தையையும் ஜ்ஞாநத்தையும் வ்ருத்தி செய்யவேணு மென்பது
காலாநுகுணமான தர்மமாகத் தோன்றுகிறது. அப்படிக்கன்றி,
ஶிஷ்யர்களுக்குக் குணபூர்த்தி யில்லையென்று அவர்களை இப்பொ
ழுது இருக்கும் ஆசார்யர்கள் உபேக்ஷித்தால், இது அத்யந்தம்
ஸம்ப்ரதாய லோபத்துக்கே ஹேதுவாகும். விஶேஷித்து மடத்
தில் பூர்விகர்களான அழகியசிங்கர்கள்காலத்தில் அந்வயித்த
அநேக ஸ்ரீவைஷ்ணவ குடும்பங்கள், சிலவருஷங்களாய் ஆஸ்தா
நத்தில் ஸ்வாமிகள் எழுந்தருளி யிராத காரணத்தாலும், சில
காலங்களில் எழுந்தருளி யிருந்த அழகிய சிங்கர்கள் ஸஞ்சாரா
திகளில்லாம லிருந்ததனாலும், இன்னும் பல காரணங்களினாலும்,
ஸாக்ஷாத் அந்வயத்தை எந்த விதத்திலாவது ஒருஸ்வாமியிடத்
திலும் செய்யாமலிருக்க ஸம்பவித்திருக்கிறது. இதனால், அவர்களை
மடத்து ஶிஷ்யர்களல்ல ரென்று சொல்ல முடியாது. ஏனென்
றால், அவர்களுக்கு அந்தந்த க்ராமங்களில் ஸந்நிதி ஸம்ப்ரதாய
ஸ்தர்கள் என்கிற வ்யவஹாரம் குறையாமலே இருந்து வருகி
றது. மடத்திலிருந்து ஸ்ரீமுகங்களும், அவர்களை ஶிஷ்யவர்க்கத்
தில் சேர்த்து இப்போதும் அனுப்பப்பட்டு வருகின்றன. அவ
ரவர்கள் க்ருஹங்களில் விவாஹாதி காலங்களில் ஸ்ரீ ஆதிவண்
ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் ஸம்பாவனையையும், அவர்கள்
தாங்களாவது தங்கள்பெரியவர்களாவது அந்வயித்த அழகிய
சிங்கர்களை உத்தேஶித்த ஸம்பாவனையையும் செய்து வருகிறார்கள்.
மடத்து ஶிஷ்யர்கள் என்கிறதற்கு ப்ரதி நியதமான அநுஷ்டா



நங்களையும் அநுஷ்டித்து வருகிறார்கள். இந்தக்காரணங்களினால்,
அவர்களை மடத்துஶிஷ்யர்க ளென்றே சொல்லவேணும். மேலும்,
இந்த அஹோபிலமட ஶிஷ்யஸபை என்னும் ஸங்கத்தில் சேர்ந்
தவர்கள் ஆரம்பித்தது முதல் இது வரையிலும் இப்பொழுது
ஆஸ்தாநத்தி லெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீஅழகியசிங்கர் விஷய
த்தில் பூர்ணமான பக்தியும் விஶ்வாஸமு முள்ளவர்களென்று
நிஶ்சயமாய்ச் சொல்லலாம். இந்த அழகிய சிங்கர் ஆஸ்தாநத்
துக்கு எழுந்தருளினது விஶேஷமாய் ஶிஷ்யர்களுக்குப் பிந்தித்
தான் தெரியுமானாலும், திருக்குடந்தை அழகிய சிங்கர் நியமநத்தை
யும், இந்த அழகிய சிங்கருடைய பூர்வாஶ்ரமத்தின் ஜ்ஞாநாநுஷ்
டாந வைபவங்களையும் அறிந்து, ஸபையாரெல்லாரும் இந்த அழ
கிய சிங்கரிடத்தில் விஶேஷ ப்ரதிபத்தி யுள்ளவர்களாகவே இருக்
கிறார்கள். இதை நேரில் பலதடவைகளில் விஜ்ஞாபநம் செய்
திருப்பதுடன், “வேதாந்ததீபிகை” என்னும் பத்ரிகையிலும் பல
ஸஞ்சிகைகளில் வ்யக்தமாய்த் தெரிவித்திருக்கிறார்கள். இதனால்,
இவர்கள் ஹிதபுத்தியுள்ள ஶிஷ்யர்கள் என்றும், இவர்களது விஜ்ஞா
பநங்கள் ஸ்ரீ அழகியசிங்கரால் ஆதரணீயங்க ளென்றும் ஏற்படுகி
றது. இப்படி இவர்கள் செய்யும் விஜ்ஞாபநங்கள் ஸ்வார்த்தமா
யில்லாமலும், ஸ்ரீ அழகிய சிங்கர் விஷயத்தில் தோஷாவிஷ்கர
ணஞ் செய்யவேணு மென்கிற எண்ணத்தினால் ஏற்பட்டனவல்லா
மலுமாயிருப்பதனால், இந்த விஜ்ஞாபநங்கள் அவஶ்யம் ஸ்ரீ அழகிய
சிங்கரால் கவனிக்கப்படவேணும். விஜ்ஞாபநங்கள் செய்யும் ஶிஷ்
யர்கள் சிலபெயர்களா யிருந்தாலும் பஹுதூரங்களான ஸ்தலங்
களில் இருக்கும் எல்லா ஶிஷ்யர்களுக்கும் அபிமாந பாத்ரமான
மடத்தின் அபிவ்ருத்தியைக் குறித்துச் செய்யப்படுவதால், அவை
களை எல்லாரும் சேர்ந்து செய்ததாகவே ஸ்ரீ அழகிய சிங்கர் திரு
வுள்ளத்தில் எண்ண வேணும். எல்லா ஶிஷ்யர்களும் ஏககாலத்தில்
சேர்வதும், ஸ்வகர்த்தவ்யங்களைத் தெரிந்துகொண்டு ஸாக்ஷாத்
தாய் விஜ்ஞாபநம் செய்வதும் ஶ்ரம மாகையால், பத்ரிகை முத
லானவைகள் ஏற்படுத்துகிறதும் ஸமாஜங்கள் சேர்வதுமான உபா
யங்களை, இதரவிஷயங்களில் லோகத்தில் நடந்துவருவதுபோ
லவே, மடத்து விஷயத்திலும் நடத்தி வருவது ஶ்லாகைக்கு
ஆஸ்பதமே யொழிய நிந்த்யமாக மாட்டாது. ஶிஷ்யதத்தமாய்
ஶிஷ்யார்த்தமும் ஸம்ப்ரதாய வ்ருத்த்யர்த்தமுமாய் உபயோகிக்கப்

படவேண்டிய த்ரவ்யங்கள் பஹுவாயிருந்தும், அவைகள் ஸத்விநியோகப்படவேண்டிய விஷயத்தில் ஶிஷ்யர்கள் எடுத்துக்கொள்ளும் ஶ்ரமத்தை அநுமோதித்து ஸ்ரீ அழகிய சிங்கர் அவர்களுடன் கலந்து ஏற்பாடுகள் செய்யாதவரையில், இந்தச் சொத்துகள் இன்னும் பரிபாலநஹீநமாய் நஷ்டமடைந்து மடத்துக்குக் குறைவும் ஸம்ப்ரதாயத்துக்கு மாலிந்யமும் அதிகரிக்கும். இந்தத் தாவஸ்தை மேன்மேல் வ்ருத்தியாகாமலிருக்க வேணுமென்றே ஹிதருசிகளான ஶிஷ்யர்கள் சேர்ந்து இந்த ஸபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் தத்வத்தை நன்றாக அறிந்து ஸ்ரீ அழகிய சிங்கரும் இதர ஶிஷ்யர்களும் இந்த ஸபையை ஆதரித்து அநுக்ரஹிக்கும் படிக்கும், மடத்தின் வ்ருத்தி வரவர ஸ்திரீக்ருதமாகும் படிக்கும், நாமெல்லோரும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்க வேணும்.

## ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்தல்.

இந்த ஸ்ரீமத் அஹோபிலமடத்தின் அபிவ்ருத்தியில் நமக்கு விஶேஷமாய் ஆஸ்தையிருந்தாலும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் நம்மிடத்தில் குறைவுபடாமல் பரவி ஸ்ரீமத் ராமாநுஜ ஸித்தாந்தம் இந்தத்தேஶத்தில் விஶேஷமாய் விஸ்தரித்து வ்ருத்தியடைய வேண்டுமென்பதும், நமக்கு முக்கியமான கோரிக்கைதான். நாம் மடத்து ஶிஷ்யர்கள் என்கிற விஶேஷதர்மத்தைக் காட்டிலும் பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயிகள் என்கிற ஸாமாந்யதர்மத்தை நன்றாகப் பாவித்துப் பரமோபகாரிகளான பகவாந் ராமாநுஜன், வேதாந்த தேஶிகன் முதலான ஆசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் க்ரந்தங்களை நிரந்தரமாய் ஸேவிக்க வேண்டும். மேலும், உபாதி விஶேஷங்களினால் ஏற்பட்டிருக்கும் பேதங்களைப் பெரிதாய் எண்ணாமல் ஸயூத்யர்களிடத்தில் ஸௌஹார்த்தத்தையும் நிர்மாத்ஸர்யத்தையும் அவலம்பித்து அவர்களுடன் கலந்து பொதுவான ஹிதப்ரவ்ருத்திகளில் யதாஶக்தி அந்வயிக்க வேண்டியதும் நிரம்பவும் ஆவஶ்யகமாயிருக்கிறது. ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன், "ராஜகுமாரோபலாளநம் போலே பாகவத கைங்கர்யம் பகவானுக்கு அபிமதமாயிருக்கையால் ஶேஷபூதனான இவன் செய்யும் கிஞ்சித்காரங்களில் பாகவத கைங்கர்யம் ப்ரதாநமாயிற்று" என்று புருஷார்த்தகாஷ்டாதிகாரத்தில் அநுக்ரஹித்திருக்கிறார். இந்தப்



பாகவதத்வஶேஷம் ஸ்வாபாவிக மென்றும், முக்ததஶையிலும் அநுவ்ருத்திக்கிறதென்றும் அருளிச்செய்திருக்கிறார். இப்படி நம் ஆசார்யர் அநுக்ரஹித்தது ஸஹ்ருதய மென்பது,

"கர்மாவலம்பகா꞉ கேசித் கேசித் ஜ்ஞாநாவலம்பகா꞉ ।
வயம் து ஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பகா꞉ ॥"

என்கிற ஶ்லோகத்தை அநுக்ரஹித்த அவஸரத்தில் அவர் சித்தவ்ருத்தியை நாம் ஆலோசித்துப் பார்த்தால் நிஸ்ஸம்ஶயமாய் விளங்கும். ஸ்த்ரீ ஶூத்ரர்கள் விஷயத்திலும் பாகவதத்வமுண்டாகில் மாந்யத்வம் உண்டென்பதை "இவர்களை ஸஜாதீயரோடு ஒக்க நினைத்து அவஜ்ஞை பண்ணினபோது நரகமாம்" என்று ஸாதித்து, "வைஷ்ணவேஷு ந ஜாத்யாதி ஸ்தாநம் ஜாதிஸம்மதம்" என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் நிஷ்கர்ஷித்தார். இதர ஸித்தாந்திகளான அத்வைதிகள் த்வைதிகள் விஷயத்திலும், ஸமாநந்யாயத்தால் நம்முடைய வருத்தி த்வேஷ ரஹிதமாயும் ஸௌஹார்த்தத்தோடு கூடினதாயும் இருக்கவேணும். எல்லா ஸித்தாந்திகளும் வைதிக மார்க்கத்தை அவலம்பித்து ஐஹிக ஸுகங்களை ஹேயங்களாய் எண்ணி ஸ்வர்க்காதி பலங்களையும் அஸாரங்களாய் ஒப்புக்கொண்டு நித்யமான மோக்ஷத்தை விரும்புகிறார்கள். நமது ஆசார்யர்கள் செய்திருக்கும் நிர்ணயங்களில் நமக்குப் பூர்ணமான ப்ரதிபத்தி உண்டாயிருந்தும், அபிப்ராய பேதங்கள் ஏற்படுவது மநுஷ்யதர்ம மென்பதையும், தந்நிமித்தமாய் நாம் இதரமதஸ்தர்களை இழிவாக நினைப்பது அநுசிதமென்பதையும் ஜ்ஞாபகத்தில் வைக்கவேணும்.

## வைதிகஸம்ப்ரதாயாபிவ்ருத்தி.

இந்த ஹிந்துமதம் என்று வ்யவஹரிக்கப்படும் பொதுவான வைதிக ஸம்ப்ரதாயத்துக்கு இப்பொழுது நிரம்பவும் மாலிந்யம் ஏற்பட்டிருக்கிறதுஎன்பது எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். இதற்குக்காரண மென்னவென்று விசாரித்தால், இரண்டு காரணங்கள் ப்ரதாநங்களாய்த் தோற்றுகின்றன; முதலாவது – வைதிகஶாஸ்த்ரங்களை அப்யஸிக்கக் கொஞ்சமேனும் ஸாவகாஶ மில்லாமல் லௌகிக வ்யாபாரங்களில் காலத்தைச் செலவழிக்கும் பாஷாந்த

ரத்தில் தேர்ச்சியும் வ்யாபகதையுமுள்ள அநேகர், இந்த ஸம்ப்ரதாயம் ப்ராசீநமான காலங்களின் ஸ்திதியை அநுஸரித்து ஏற்பட்டதேயொழிய இப்போது அதன் விதிகள் அநுஷ்டாநத்துக்கு அர்ஹங்களல்லவென்று நினைக்கிறார்கள். இரண்டாவது - இந்த வைதிக ஶாஸ்த்ரங்களை நிக்ஷேபமாய் வைத்து ரக்ஷிக்கும் பண்டிதர்களும் இதரர்களும் வித்யாநுகுணமாய் ராஜாக்களாலும் ப்ரபுக்களாலும் ஸம்மானிக்கப்படாமல் வ்ருத்திலோபங்களை அடைந்து தங்கள் ஶாஸ்த்ர ப்ரவர்த்தநத்தில் நிருத்ஸாஹர்களாயிருக்கிறார்கள். இந்த இரண்டு அம்ஶங்களின் தத்வத்தையும் நாம் நன்றாக விசாரிப்போம். நமது ஶாஸ்த்ரங்களிற் சில, யுகதர்மங்களையும் தேஶதர்மங்களையும் வர்ணதர்மங்களையும் பிரித்து உபதேஶிக்கின்றன. சில மந்வாதி ஸ்ம்ருதிகள் அவைகளை வ்யக்தமாய்ப் பிரிக்காமல் உபதேஶிக்கின்றன. ஆகிலும், அவைகளில் காலாநுகுணமாய் உபாதேயாநுபாதேயாம்ஶங்களை ப்ராசீந நிபந்தநக்காரர்கள் பிரித்து வ்யவஸ்தை செய்திருக்கிறார்கள். இப்படி வ்யவஸ்தை செய்வதனால்தான் ஒன்றுக்கும் அப்ராமாண்யம் சொல்லாமல் நிர்வஹித்து வருகிறார்கள். இதனால், நம் ஶாஸ்த்ரங்களில் அநேக அம்ஶங்கள் ஶிஷ்டர்கள் ஸம்மதித்தே இந்தக்காலத்தில் அநுஷ்டாநத்துக்கு வராமல் மாறிவிட்டன. இதற்கு உதாஹரணங்களான விதவை, அவிதவை விஷயங்களில் நியோகமும், ப்ராஹ்மணர்களின் மாம்ஸ போஜநமும், அஸவர்ண விவாஹமும், தத்தோத்தரர்களைப் புத்ரராய்ப் பரிக்ரஹிப்பதும், ப்ராஹ்மணாதிகளுக்கு ஶூத்ரர்கள் பாகம் செய்வதும், ப்ராஹ்மாஸுர விவாஹங்களைத்தவிர மற்றைய விவாஹங்களை அநுஷ்டிப்பதும், தாயவிஷயங்களில் விஷமவிபாகங்களும், ஸ்த்ரீகளுக்கு நிரிந்த்ரியர்கள் என்று தநாதிகார மில்லாமலிருந்ததும் முதலான பல விஷயங்கள் இப்போது மாறி யிருப்பதால், நமதுபூர்விகர்களான ருஷிகளும் ஆசார்யர்களும் காலாநுகுணமாய் விதிகள் மாறுவதை ஒப்புக்கொண்டவர்களென்றே தெரியவருகிறது. ஆகையால், நமது ஶாஸ்த்ரங்கள் நிஶ்சலங்களான விலங்குகள் போலப் பூட்டப்பட்டிருக்கின்றன வென்றும், அவைகளை நிஶ்ஶேஷமாய் உடைத்தெறிவதே நாம் செய்யவேண்டிய க்ருத்யமென்றும் எண்ணுகிறவர்கள் நிரம்பவும் ஸாஹஸிகர்கள் என்றும், காலதர்மத்தினால் தர்மங்கள் மாறுவது நம் தேஶத்தில் வழக்கமென்னும் ஸூக்ஷ்மத்தை அறியாதவர்கள் என்றும் நாம் சொல்லலாம். நம் ஶாஸ்த்ர



த்தில் ஶிஷ்டாசாரத்தை வேத துல்யமான ப்ரமாணமாய் எடுத்ததன் தாத்பர்யமும், அல்பஜ்ஞர்களான சிலர் தங்கள் அபிஸந்தியால் தர்மங்களை மாற்றிவிடுவது அநுசிதமென்றும், ஹாநிகர மில்லாமல் பஹுஜநாநுகூலமான மாறுதல்கள் ஶிஷ்ட ஸம்மதமேயாகும் என்றும் நினைத்துத்தான். நமக்கு இதரதேஶங்களில் விபரீத ஆசாரங்கள் கேவலம் அநுஷ்டிக்கப்படுகின்றன வென்கிற ஒரு விஷயத்தை மாத்ரம் அவலம்பித்து ஆபாததஃ அநர்த்தாவஹமாய்த் தோன்றும் நம் ஆசாரங்களை உடனே மாற்றவேண்டுமென்று ஆக்ரஹம் வைப்பவர்கள் 'இதரதேஶங்களின் ஆசாரங்கள் அத்யந்தம் ஸுகஹேதுக்களா வென்றும், அப்படிக் கில்லாமல் அங்கே பாதகங்களேற்பட்டிருந்தால் இப்போதில்லாத தோஷங்களை இந்தத் தேஶத்துக்கும் கொண்டுவருவது நமக்கு லாபகரமா என்றும் ஆலோசிக்கவேணும். காந்தர்வ விவாஹம் ஸர்வஶ்லாக்ய மென்று இதரதேஶங்களில் ப்ரஸித்தி இருந்தும் அதன் அநுஷ்டாநக்ரமத்தில் எவ்வளவோ பேதங்கள் அங்கங்கே ஏற்பட்டிருக்கின்றன. சில தேஶங்களில் வராந்வேஷணத்தில் வதூவரர்களுக்குப் பந்துக்களினால் ஒரு நிர்ப்பந்தமும் ஏற்படக்கூடாதென்றும், நிரம்பவும் அயுக்தமான ஸம்பந்தங்கள் செய்கிறதாயிருந்தாலும் ப்ராப்த யௌவநர்களாய் வ்யவஹாரதஶையை அடைந்த பாலிகா பாலர்கள் யதேச்சமாய்ச் செய்யும்படி அநுமதிப்பதே மாதாபிதாக்களுக்குத் தர்மமென்றும் எண்ணுகிறார்கள். சிலர், புத்ரபுத்ரிகளின் ஆத்யந்திகமான ஸுகத்தைப் பெரிதாய்எண்ணி வதூவரர்களை யதேச்சமாய் விவாஹத்துக்குமுன் நெருங்காமலும், பித்ருக்களால் அநுமதிக்கப் பட்டபிறகுதான் ஸல்லாபாதிகளே ஏற்படவேண்டுமென்றும் நிர்ப்பந்திக்கிறார்கள். ஶீக்ரமாய் இந்த்ரிய வ்ருத்தி ஏற்பட்டுக் காமவிகாரங்கள் பால்யத்திலேயே ப்ரபலிக்கக்கூடிய உஷ்ணபூமிகளில் நிர்ப்பந்தங்கள் அதிகமாயும், விவாஹகாலம் 14, 15 - வயதுகளிலேயே ஏற்பட்டு வருவதாயும் தெரிகிறது. 20 - வயதுக்கு மேலாகியும் கந்யகைகளுக்கு மந்மத வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தி யுண்டாகாத ஶீதள தேஶங்களில் விளம்பித்து விவாஹங்கள் நடக்கின்றன. ஆகிலும், அந்தத் தேஶங்களிலும் 30 - வயதுக்கு மேலாகியும் அநுரூபனா யில்லாமலிருந்தாலும் புருஷனென்பதால் பஹுமாந்யனா ஒருவன் லபிக்காமல், ஸ்த்ரீகள் பரிதபித்து நஷ்டஸுகர்களாய் வ்யர்த்த ஜந்மாக்களாய்த் தங்களை நினைத்துத் துக்கிப்பவர்கள் பல லக்ஷங்கள்

இருக்கிறார்கள். இரண்டொரு தேசங்களின் ஸ்த்ரீபாஹுள்யத்தாலே ஸங்கம் ஸங்கமாய் ஸ்த்ரீகளை ஒருவரே விவாஹம் செய்வது ஏற்பட்டிருக்கிறது. மேலும், பொதுவாய் இதர தேசங்களில் விவாஹம் அநித்யமாய்ப் பத்நீ பர்த்தாக்களானவர்கள் சில ஸமயங்களில் 'டிவோர்ஸ்' என்று சொல்லப்படும் ஸம்பந்த விமோசநத்தை யடைந்து பரஸ்பர நிர்ப்பந்த மில்லாமல் புநர்ப்பூக்களாய் ப்ரத்யேக மிதரர்களை விவாஹம் செய்கிறார்கள். இதிலும் பிந்நதேசங்களில் பிந்நக்ரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர், ஒரு விவாஹமானால் அது ஆப்ரயாணம் அநுவர்த்திக்க வேண்டிய பந்தமென்றும், அதை விடுவிக்க வ்யவஹாரம் ஸம்மதித்தாலும் மதம் ஸம்மதிக்காதென்றும் ஊர்ஜிதமா யிருக்கிறார்கள். சிலர், அநிவார்யமாய் ஸ்த்ரீகளுக்குத் துப்சரணைகள் நேர்ந்தால் விவாஹபந்தம் விமோசிக்க வேண்டியதுதா னென்றும், ஆனால் ஸாதாரணமாய் அது ஹேயமான கார்யமென்றும், அப்படிப் பிரிந்தவர்கள் லோகநிந்த்யர்களென்றும், அபாங்தேயர்கள் என்றும் எண்ணி அநுஷ்டிக்கிறார்கள். சிலர், விவாஹ ஸம்பந்தம் என்பது ஒருவித ஸம்ஸ்காரமும் அல்லவென்றும், அது பாஸ்பராப்யுபகமம் அல்லது 'காண்ட்ராக்ட்டு' என்றும், யதேஷ்டம் ஸங்கேதித்த காலங்களில் பரித்யாஜ்யமென்றும், அப்படிச் செய்வதனால் தோஷங்களில்லையென்றும் சட்டம் செய்துகொண் டிருக்கிறார்கள். இன்னும் சில ஸ்வைரசிரோமணிகள், லோக ஸங்கேதத்தினால் ஏற்படும் பர்த்ருபார்யா பாவங்கள் நிர்நிபந்தநமென்றும், எங்கே ருசிக்கிறதோ அங்கு மிதுநீ கரணமே அநிந்த்யமான விவேகிகளின் ப்ரவ்ருத்தியென்றும் ஸாதிக்கிறார்கள். இப்படி வெகுதூரம் பரஸ்பர பிந்நமான ஆசாரங்களில் எதை ஸுகரம் என்றும், பரிக்ராஹ்யமென்றும் நாம் எண்ணுகிறது? நமக்குப் பரிசிதர்களாயும் நம்மால் ஸம்பாவ்யர்களாயு முள்ள ஆங்கிலர்கள் அநுஷ்டாநம் ப்ராயேண மத்யஸ்தமாயும் ஸுகரமாயு மிருந்தாலும், நமது தேசத்தில் அந்த ஆசாரங்களை அநுஷ்டித்தால் ஏகாந்தமாய் ஸுகமுண்டாகும் என்று சொல்ல முடியாது. மேலும், நமது சாஸ்த்ரங்கள் ஒன்றிலும் ச்ரத்தையும் கௌரவ புத்தியும் இல்லாமல், அவைகளிலும் ப்ராஹ்மணர்க ளிடத்திலும் ப்ரத்வேஷத்தையே கொண்டாடும் சிலர், நமக்கு அநுஷ்டாந விஷயங்களிற் சொல்லும் சீர்திருத்தங்கள் நமக்கு எப்படி அநுகூலங்களாகத் தோன்றும்? அவைகளை நாம் அநுசிதங்களாய் எண்ணினால் அப்படிச் செய்வது பிடிவாதத்தினால் ஏற்பட்டதென்றும், அதற்கு அநுகுணமாய்ச் சட்டங்களை ராஜா மாற்றவேண்டுமென்றும், அப்படிச் செய்ய ஸம்மதிக்காதவர்கள் ராஜப்ரீதி யில்லாதவர்கள் என்றும் ஸாதிப்பது புத்தி வ்யாமோஹத்துக்குக் காரணமேயன்றி விவேகிக்ருத்யமல்ல. இப்படிச் சொல்லுகிறவர்கள் தங்கள் அபிப்ராயங்களைத் தங்கள் ஸஜாதீயர்களுக்குப் போதித்துத் தாங்கள் ச்லாக்யமென்று அபிமாநிக்கும் திருத்தங்களை அநுஷ்டாந பர்யந்தமாய்ச் செய்வதே உசிதம். மேலும், மதவிஷயங்களிலும் ஆசார விஷயங்களிலும் தாங்கள் ப்ரவேசிக்கிறதில்லையென்கிற நமது ராஜாக்களின் கொள்கையை மாற்றுவது அநர்த்தகரமாய் முடியும். விசேஷ காரணங்களைக் கொண்டு ஏதோ சில விஷயங்களில் அவர்கள் ப்ரவேசித்திருப்பதால் எல்லா விஷயங்களிலும் அவர்கள் விதிகளைச் செய்யலாமென்று நாம் ஒப்புக்கொண்டாலும், அதிகாரிகள் அதை ஒருகாலும் அங்கீகரிக்க மாட்டார்கள். ஆகையால், நம் ஆசாரங்களில் அவச்யமான சீர்திருத்தங்கள் நம்மில் பஹுஜந ஸம்மதமாயும் நம் சாஸ்த்ரங்களுக்கு அத்யந்த விருத்தங்க ளில்லாதவைகளாயும் நம்மாலேயே க்ரமச: ஏற்படுத்தக்கூடியவைகளாயு மிருக்க வேணும். இப்படிப்பட்ட சீர்திருத்தங்களை அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவருவதில், ஆமுஷ்மிக க்ஷேமத்தையே ப்ரபலமாய் எண்ணும் நமது மதத்துக்கு மூலதநமான கொள்கையைக் கைவிடக்கூடாது. நம்முடைய சாஸ்த்ர விதிகளில் அநேகம் த்ருஷ்ட பலமாயும், அநேகம் அத்ருஷ்ட பலமாயும், சில உபயபலமாயு மிருக்கின்றன.



"அத்யந்தமலிந: காயோ நவச்சித்ரஸமந்வித: ।
ஸ்ரவத்யேஷ திவாராத்ரம் ப்ராத:ஸ்நாநம் விசோதநம் ।
ப்ராத:ஸ்நாநம் ப்ரசம்ஸந்தி த்ருஷ்டாத்ருஷ்டகரம் ஹி தத் ॥"

என்று தக்ஷஸ்ம்ருதியில் ஸ்நாநத்தின் த்ருஷ்டபலத்தையும்,

"நிரோதாஜ்ஜாயதே வாயு: வாயோரக்நி: ப்ரஜாயதே ।
அக்நேராப: ப்ரஜாயந்தே ததோऽந்த: சுத்த்யதே த்ரிபி: ॥"

என்று அத்ரிஸ்ம்ருதியில் ப்ராணாயாமத்தின் த்ருஷ்டபலத்தையும் ஸ்ம்ருதிகள் சொல்லுகின்றன. இன்னும் அநேகஸ்ம்ருதிவாக்யங்களால் ப்ராயஶ்சித்தாதிகளில் த்ருஷ்டாத்ருஷ்ட பலங்களை ஊஹிக்கலாம். இவைகளை அறிந்து அவஶ்யமான மாறுதல்களை நாம் செய்வது ஶாஸ்த்ர ஸம்மதமேயாகும். இது விஷயத்தில் விஶேஷமாய்ச் சொல்ல இப்போது ப்ரக்ருதமில்லை.

## பண்டிதர்களின் பெருமை.

நமது ஶாஸ்த்ரங்களை இதம்பரமாய் அப்யஸித்து அவைகளை மநஸ்ஸில் தரித்து இதரர்களுக்கு உபதேஶிக்கும் நமது தேஶத்திய பண்டிதர்களிடத்தில் இந்தக்காலத்தில் விஶேஷமாய் ப்ரீதி குறைந்துவருவதும் நமது வைதிக ஸம்ப்ரதாயத்தின் ஹாநிக்கு ஒரு காரணமென்று சொன்னேன். ஒவ்வொரு ஶாஸ்த்ரத்தையும் அநேக வர்ஷங்கள் பரிஶ்ரமப்பட்டு அப்யஸித்து க்ரந்தாபேக்ஷையில்லாமல் விஷயஸ்பூர்த்தியுடன் உபதேஶிக்க ஶக்தியுள்ள நமது வித்வாங்களைப்போல ஒருதேஶத்திலும் பண்டிதர்களில்லையென்று நிஶ்சயமாய்ச் சொல்லலாம். இப்போது இருக்கும் எல்லாக் கோஶங்களும் இல்லாமல் லுப்தமாய்ப் போனாலும் நமது பண்டிதர்களின் மநநதாரணங்களைக்கொண்டு ப்ராயேண வேதங்களையும் வேதாங்கங்களையும் இதரஶாஸ்த்ரங்களையும் நமது தேஶத்தில் புதுப்பிக்கலாம். இப்படிப்பட்ட உத்தமோபகாரிகளைப் பாஷாந்தரஜ்ஞாநமுள்ளவர்களைப் போலப் பூகோள ககோளாதி ஆதுநிக வ்ருத்தாந்தங்களை யதாவத்தாய் அறியாதவர்களென்று குறைவாய் நினைப்பது நிரம்பவும் அநுசிதம். ஶப்த ஶாஸ்த்ரத்திலும் ஜ்யோதிர்வித்யையிலும் வைத்யத்திலும் நமது தேஶத்தில் அடைந்திருக்கிற ப்ராவீண்யம் மிகவும் அதிஶயமுள்ளதென்று அந்தந்த விஷயங்களை அறிந்த பாஶ்சாத்ய வித்வாங்கள் விஶேஷமாய் மெச்சிக்கொள்ளுகிறார்கள். ஆத்யாத்மிக வித்யையான வேதாந்தத்திலும் நமது ஆசார்யர்களின் நிஷ்கர்ஷங்கள் இதர தேஶங்களில் பஹுஶ்லாக்யங்களாய் வ்யவஹரிக்கப்பட்டு வருகின்றன. இப்படி இவ்வளவு க்யாதிக்கும் ஹேதுவான நமது வித்யாப்ரவர்த்தந ஸம்ப்ரதாயத்துக்கு நிக்ஷேபபூதர்களான வித்வாங்களுக்கு விஶேஷமான கௌரவம் ஏற்படவேண்டியது அவஶ்யமாயிருக்க, அவஶ்யமாய் எண்ணப்படும் சீர்திருத்தங்களுக்கு அவர்களே ப்ரதிபந்திகளாயிருக்கிறார்களென்றும், அவர்களை அபேக்ஷிக்காமல் சீர்திருத்தங்கள் ஸாத்யதமங்கள் என்றும் எண்ணுவது சரியல்ல. ஆப்தர்களான நமது வைதிகர்களை நாம் நிராகரித்தால், அவர்களைப் பூஜ்யர்களாய்ப் பாவிக்கும் ஸாதாரண ஜநங்களுக்கு யுக்தமாய்த் தோன்றும் சீர்திருத்தங்களும் விருத்தமாய்க் காணப்படும். ஆகையால், எந்த எந்தச் சீர்திருத்தங்கள் அவஶ்யமாகத்தோன்றினாலும், இந்தத் தேஶத்து ப்ராசீந வித்யாநிஷ்டர்களான பண்டிதர்களின் உதவியைக்கொண்டே க்ரமமாய்ச் செய்துவரப்பட்டால்தான் அவைகள் ஸபலமாகுமென்று நிஶ்சயமாய்ச் சொல்லலாம்.



## உபஸம்ஹாரம்.

இப்படி மடத்தின் விஷயமாயும், பொதுவாய் நமது ஸம்ப்ரதாயத்தின் விஷயமாயும், பல விஷயங்களை, வித்வாங்கள் நிறைந்த இந்த ஸதஸ்ஸில் அஜ்ஞாத ஜ்ஞாபநம் செய்வதுபோல நினைத்து உபந்யஸித்துத் தேவரீர்கள் காலத்தை உபயோகித்ததற்கு அடியேன் அபராதத்தை க்ஷமிக்கவேணும். என்னுடைய வாக்யங்களை ப்ரீதியுடன் இதுவரையில் செவிகொடுத்து அநுக்ரஹித்ததற்காகவும் நான் நிரம்பவும் க்ருதஜ்ஞனாயிருக்கிறேன்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---

ஶுபமஸ்து

---

162434
600 008.